SL
Ov6:65m 211,
N04
N04.10-12
16.14058

DECEMBER, 1915 Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கோள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - FEB 1916
MADRAS.

Vol. XII No. 12] டிசம்பர்மீ 1915 [விலை பை 3

பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 91 |
| புது அத்தியக்ஷாவர்கள் வருகை ... ... | 92 |
| குருமார் கான்பெரன்ஸ் ... ... ... | 93 |
| சங்கீத ஆராய்ச்சிக் குறிப்புகள் ... ... | 95 |
| சிங்கரேணி மிஷன் ... ... ... | 96 |
| பளியர் மிஷன் கடிதம் ... ... ... | 97 |
| சுவிசேஷ பிரபல்ய அழைப்பு ... ... | 99 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

இன்னோர் கிறிஸ்மஸ்! சந்தோஷ தினம்! மகிழ்ச்சி நாள்! நண்பர் யாவருக்கும் கிறிஸ்மஸ் வந்தனம் தந்தனம். இச்சுபதினம் சந்தோஷமும் பாக்கியமும் நிறைந்த நாளாக இருக்கக் கர்த்தர் அருள்புரிவாராக. இந்நாள் **கிறிஸ்மஸ்.** நற்செய்தியை அறிவிக்கும் நாள்! நாம் தனது காரியம் ஒன்றையே கவனித்து, சும்மா இருந்தால், குற்றம் நமதுமேல் சுமருமல்லவா? கிறிஸ்துவும் தமக்குப் பிரியமாய் நடவாமல், தேவமகிமையைத் துறந்து, தம்மை வெறுத்து அடிமையின் ரூபம் எடுத்து, மனுஷ தேகமாகிய கூடாரத்தில் நம்முடன் வாசம்பண்ணினார். என்ன விந்தை! இவ்வன்பை தியானிக்கும் நாம் இயேசுபெருமானின் சாயலுக்குள்ளாவோமாக. மற்றவர்களும் இயேசுவின் அன்பை அறியவும், நம்மைப்போல் சந்தோஷங் கொண்டாடவும் நம்மாலியன்றதைச் செய்வதல்லவோ தகுதி.

**நமது புது அத்தியக்ஷாவர்கள்.** நாளது டிசம்பர்மீ 8உயாகிய தங்களுடைய 46-ம் பிறந்தநாளில் நமது புது அத்தியக்ஷாவர்களாகிய மகாகனம்: E. H. M. உவாலர் பிஷப் அவர்கள் அம்மாளவர்களுடன் தங்கள் அத்தியக்ஷாதீனம் வந்துசேர்ந்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்களுக்கு வாழ்த்துதல் அளிக்கிறோம். அவர்கள் முன் வடஇந்தியாவில் மிஷனெரியாக 16 வருஷம் தேவ ஊழியஞ்செய்து, பின்னால் இரண்டு வருஷம் சி. எம். எஸ். தாய்ச்சங்கத்தில் இந்திய செக்ரத்தெரியாயிருந்தார்கள். முதல் முதல் இந்தியாவில் அவர்களிறங்கின நாளும் ஓர் டிசம்பர்மீ 8உயே. கர்த்தர் அவர்களை ஒன்பதாயிரம் மைல் கடல்தரை பிரயாணங்களில் சுகமாய்க்காப்பாற்றி நமது மத்தியில் கொண்டுவந்ததற்காக ஸ்தோத்திரம் செலுத்துவதுடன், அவர்களையும் அம்மாளவர்களையும் தமது வல்ல ஆவியினால் கர்த்தர் சம்பூரணமாய் நிரப்பி, இவ்வத்தியக்ஷாதீனத்துக்கு ஆசீர்வாதமாகத் தமது கிருபையின் கரத்தினால் உபயோகித்துவரும்படி ஊக்கமாய் எப்போதும் ஜெபிக்க நண்பரை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**விசேஷ பிரசங்கம்.** கிறிஸ்மஸ் தினத்தன்று அத்தியக்ஷாதீனத்திலுள்ள சகல சபைகளிலும் வழக்கமான விசேஷ ஆராதனை நடத்துவதுடன், சுவிசேஷ பிரபல்ய விஷயமாய் விசேஷித்த பிரசங்கம் செய்து, சபையாரனைவரும் தங்களைச் சுற்றிலுமுள்ள புறமதஸ்தருக்கு உற்சாகமாயும் ஊக்கத்தோடும் கிறிஸ்துவைக்கூறி அறிவிப்பதற்கு ஏவி எழுப்பிவிடும்படி மகாகனம்: அத்தியக்ஷாவர்கள் குருமாரைக் கேட்டிருக்கிறார்கள். புது வருஷத்தில் சுவிசேஷப் படைமுயற்சி யொன்று திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்தில் நடத்தும்படி ஒழுங்குகள் நடைபெறும்.

**விசேஷ ஜெபநாள்,** உலகத்தின்கண்ணுள்ள இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த சபைகள் யாவும் 1916-ம்வூ ஜனுவரிமீ 2உயை இப்போது நடைபெறும் பயங்கரமான யுத்த சம்பந்தமாய் மன்றாட்டு விண்ணப்பநாளாகக் கொண்டாடும்படி தீர்மானித்திருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள சபைகள் யாவிலும் ஜனுவரிமீ 2உயாகிய ஞாயிறு விசேஷ ஜெபதினமாகக் கொண்டாடும்படி குருமாருக்கு மகாகனம்: அத்தியக்ஷாவர்கள் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். யுத்த சம்பந்தமாக முன்னதாகவே தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இரு ஜெபமுறைகளில் ஏதாவது ஒன்றை குருமார் தங்கள் இஷ்டம்போல ஆராதனைகளில் உபயோகிக்கலாமென்று ஆஞ்ஞாபித்திருக்கிறார்கள். யுத்தம் ஓயவும், நிலையான சமாதானம் ஸ்தாபிக்கப்படவும், உயிர், சுகம், பொருள் நஷ்டமடைந்து, துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கும் குடும்பங்களுக்கு தேவன் ஆறுதல் கட்டளையிடவும் கர்த்தரை நோக்கி ஊக்கமாய் ஜெபித்துவருவது தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடைய கடமையே.

161408

**செலவுக்கான கையிருப்பு.** செலவுக்கான கையிருப்பு நிதி விஷயமாய் நண்பர் காட்டிவரும் உற்சாகம் நன்றியறிதலான விஷயமே. சபைகள் வாக்குக்கொடுத்திருக்கும் தொகைகள் கைக்கு வந்து சேருமானால், நம் விருப்பம் சித்திபெற்றது என்பதற்குச் சந்தேகமில்லை. பெரிய தொகைகளுக்கும் சிறிய தொகைகளுக்கும் ஆங்காங்கு கொடுத்திருக்கும் வாக்கை நிறைவேற்றத்தக்கதாக கர்த்தர் நம் நண்பருக்கு வழிவகைகளைக் கட்டளையிடும்படி கருத்தாய் ஜெபித்துவர ஞாபகப்படுத்துகிறோம். ஜெபமே பெலன், ஜெபமே ஜெயம். காரியம் வாய்க்கும்வரை விசுவாசத்துடன் விடாப்பிடியாய் விண்ணப்பஞ்செய்வோமாக. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிற நமது சபாநாயகர் நம்முடன் இருக்கிறார். வழக்கமான வருஷாந்தரக் காணிக்கைக்கு அட்டியில்லாதபடி, இந்தப் பண்டு ஜனுவரி௴ 15௳ முடிவுக்கு வரும். ஆதலால் இம்முயற்சியில் பங்கு பெற்றுக்கொள்ளவும், தங்கள் கணக்கின் பலன் பெருகவும் விரும்பும் யாவரும் சீக்கிரம் தங்கள் காணிக்கைகளை அனுப்பிவிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சங்கத்துக்கு வழக்கமாய் வரும் காணிக்கையில் இற்றைவரை இவ்விசேஷ முயற்சிநிமித்தம் குறைவு காணப்படவில்லையென்று அறிந்து கர்த்தரைத் துதிக்கிறோம். உலகத்தின் பாதிப் பாகம் யுத்தத்தின் பயங்கரங்களால் திகிலடைந்துகொண்டிருக்கையில், கர்த்தர் கிருபையாய் நமக்கு சுகமும் பாதுகாப்பும் கட்டளையிட்டிருக்கிறார். அவருக்கு நன்றியறிதலான காணிக்கையை அவருடைய கரத்திலிருந்து—பெற்ற—பொருட்களினால் படைப்பது தகுதியே. தவிரவும், பளியர் மிஷனிலிருந்தும், தெலுங்குகோட்டியிலிருந்தும் எங்களுக்கு வந்து, உதவிசெய்யுங்கள் என்ற சத்தம் வந்துகொண்டேயிருக்கிறது. அறுப்புக்கு வயல் நிலங்கள் விளைந்துகிடக்கிறது. அறுக்கவேண்டியதுதான் தேவை. மனுஷரும் பொருட்சகாயமும்வேண்டும்.

**சட்ட மாறுதல்.** மிஷனெரி ஊழியத்தின் வாழ்வும் விருத்தியும் குருமார் கையிலிருக்கிறது' என்பது அநுபவசாட்சி. எங்கெங்கே குருமார் மிஷனெரி சிந்தையினால் நிறைந்து உழைக்கிறார்களோ, அச்சபைகள் யாவும் மிஷனெரி ஆவியினால் அனல் மூண்டு, உள்ளக்கனிவுடன் புறதேச மிஷன் ஊழியத்தை ஊக்கமான ஜெபத்தினாலும், உள்ளான அநுதாபத்தினாலும், உற்சாக பொருளுதவியினாலும் தாங்கிவருகின்றன. அக்றோபர்௴ காரியநிர்வாக சபையார் சட்டங்களில் பின்கண்ட மாறுதல் ஏகசம்மதமாய்ச் செய்திருக்கிறார்கள். 'சங்கத்தின் போதுபண்டுக்கு வருஷத்தில் தங்கள் பெயரால் ரூ 10 அல்லது தங்கள் பாஸ்டரேட்டின்பேரால் ரூ 100 காணிக்கையனுப்பும் குருமாரனைவரும் காரியகர்த்தா சபையின் அங்கங்களாயிருப்பார்கள்.' பணவிஷயத்தை ஒரு நிபந்தனையாகவைப்பது நல்லதல்லவென்றாலும், எஸ். பி. ஜி., சி. எம். எஸ். தாய்ச்சங்கத்து சட்ட விதிகளில் இது ஒன்றாயிருப்பதால், இச்சட்டத்தை நாமும் இப்போது ஏற்படுத்தலாயிற்று. சில வருஷப்பரீக்ஷைக்குப்பின் இச்சட்டத்தின் பிரயோஜனம் நம் நாட்டுக்குப் பொருந்தாவிட்டால், மாற்றிக்கொள்ளலாம்.

## புது அத்தியக்ஷரவர்கள் வருகை.

மகாகனம் உவாலர் அத்தியக்ஷரவர்கள் தங்கள் அத்தியக்ஷாதீனத்திற்கு வந்தவுடன் பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்தில் ஸ்தோத்திர ஆராதனை நடந்தது. 9௳ வியாழனாகிய மறுநாள் காலை 8-மணிக்கு பரி. நற்கருணை ஆராதனையும் பிரசங்கமும் இருந்தது. எஸ். பி. ஜி., சி. எம். எஸ். மிஷன்களைச் சேர்ந்த குருமாரில் சுமார் எழுபது பேர் தங்கள் பிரதமகுருவைச் சந்திக்க வந்திருந்தார்கள். மகாகனம் அத்தியக்ஷரவர்கள் தெரிந்துகொண்ட வசனம்: என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் (யோவா. 15: 4). பிரசங்கத்தின் பொருளை சில வார்த்தைகளில் வரைவோம். கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமுள்ள ஐக்யம் பல உவமானங்களினால் வேதாகமத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுடன் பூரண ஐக்யமாய், இணைபிரியா சம்பந்தமாயிருப்பது இன்றியமையா அவசியம் தேவை. சபையானது கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இந்த சரீரத்தில் ஒரு இடமுண்டு. ஒவ்வொரு அவயமும் தன் வேலையை நடப்பிக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவன் தவறிப்போனால், துன்பம் அனுபவித்தால், சரீரம் முழுமையும் பாடுபடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோமாக. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயமாதலால், ஒவ்வொருவருக்காகவும் எப்போதும் ஜெபித்து, அவர்கள் நல்வாழ்வுக்காகக் கவலைப்படுவது நமதுபேரில் விழுந்த கடமை.

இவ்வித ஐக்யம் முதலாவது நமது சாக்கிரமெந்துகளினால் பிரத்தியக்ஷமாய்க் காட்டப்படுகிறது. பரி. ஞானஸ்நானத்தினால் நாம் கிறிஸ்துவின் அவயமாக இணைக்கப்படுகிறோம். பரி. நற்கருணையில் இவ்வைக்கியம் நிலைபெற்று வளர்ந்துவருகிறது. விசுவாசத்தினால் கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, அவருடைய திரு ரத்தத்தைப் பானம்பண்ணுவதினால் கிறிஸ்து நமக்குள்ளும் நாம் அவருக்குள்ளும் நிலைத்திருக்கிறோம்.

இரண்டாவது, ஆவியில்லாத சரீரம் செத்ததென்று அறிவோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நம்மை இணைத்துக்கொண்டிருக்கிறவர் பரிசுத்த ஆவியானவர். கிறிஸ்துவானவர் அவரை நமக்கு வாக்களித்திருக்கிறார். நாம் அதிகக் கனி கொடுக்கத்தக்கதாக அந்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கும்படி ஜெபித்து வருவோமாக. அவர் மூலமாய்த் தலையாகிய கிறிஸ்துவில் நாம் நிலைத்திராவிட்டால், நம்மால் ஒன்றுஞ் செய்யமுடியாது, வல்லமையும் சக்தியும் கிஞ்சித்தேனும் நம்மில் காணப்படமாட்டாது. நம்முடைய டிஸ்ரிக்கிட்களிலோ, நமது பாஸ்டரேட்டுகளிலோ, தனித்தனி சபைகளிலோ நம்முடைய ஊழியங்கள் சித்தியாய் நடந்தேறவேண்டுமானால், நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கவேண்டும்.

11-மணிக்கு குருமாருக்கு விருந்து அளிக்கப்பட்டது. பின்னர் 2½-மணிக்கு சுவிசேஷ படைமுயற்சி சம்பந்தமாய்க் குருமார் கான்பெரன்ஸ் கூட்டம் நடந்தது. மாலை ஆறு மணிக்கு குருமாரும் சபையாரும் மகாகனம் அத்தியக்ஷரவர்களுக்கு வந்தனோபசார பத்திரம் அளித்தார்கள். கனம் சங்கை கலெக்டர் துரையவர்கள் பீடம்வகித்தார்கள். மகாகனம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் அத்தியக்ஷாதீன சார்ஜ் எடுத்த காலத்திற்கும் இப்போதுக்கும் நமது சபைகளின் விருத்தி பின்வருமாறு கண்டிருந்தது. அப்போது பரி. ஞானஸ்நான தீக்ஷைபெற்றவர்கள் 82,000, இப்போது 101,444 ஜனங்கள். பரி. நற்கருணை சேர்ந்தவர்கள் 23,000, தற்காலத்திலோ 28,818. அப்பொழுது கிறிஸ்தவர்களின் காணிக்கை ரூ. 75,000. 1914-ல் கிறிஸ்தவர் கொடுத்திருக்கும் காணிக்கை ரூ. 116.817.

"திருநெல்வேலி கிறிஸ்தவர்கள் நமது ராஜதானியின் சகல பாகங்களிலுமாத்திரமல்ல, இலங்கை, பர்மா, சிங்கப்பூர், வடஇந்தியா முதலிய நாலா இடங்களிலும் நல்ல வேலை செய்து வருகிறதைப் பார்க்கலாம். அருந்திறமையுடன் சர்க்கார் உத்தியோகமும் பலர் வகித்துவருவது சந்தோஷகரமான விஷயமே. நாசரேத் கைத்தொழிற்சாலைகளும், சேரா டக்கர் பெண்களின் கல்லூரியும், கபோதிகள், செவிட்டூமையரின் பரோபகார சாலைகளும் திருநெல்வேலியின் மகிமையான சாதனங்கள். தவிரவும், இந்தியரே நடத்திவரும் தோர்ணக்கல் மிஷன் ஊழியம் அவர்களுடைய திறமைக்கும் அநுபவத்திற்கும் அத்தாக்ஷியல்லவா? தோர்ணக்கல் அத்தியக்ஷர் திருநெல்வேலி நாட்டார்தான் என்பது திருநெல்வேலிக்குப் பெருமையே" என கலெக்டர் துரையவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் பகர்ந்தார்கள்.

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் தாங்கள் முன் வட இந்தியாவில் மிஷனெரியாக 18 வருஷம் உழைத்திருப்பதாகவும், இங்கும் பல வருஷங்களாகக் கர்த்தரின் ஊழியத்தைச் செய்வதற்குக் கர்த்தர் தமது கிருபைகளை அவர்களுக்கு சம்பூரணமாய் அருளும்படி எல்லோரும் ஊக்கமாய் எந்நாளும் ஜெபித்துவரும்படி விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள்.

## நடபடி ஆகம் ஆராய்ச்சிக் குறிப்புகள்.

இது மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களால் தமிழ்ச் சபையில் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையை விர்த்திபண்ணும் நோக்கமாக எழுதப்பட்டது. இந்திய மிஷனெரி சங்கம் இந்நூலைப் பிரசுரித்திருக்கிறது. முதல் பாகத்தை தென் இந்திய ஐக்ய சபையார் தங்களுக்கு இசைய சில விஷயங்களைத் தவிர்த்து அச்சிட, நாளது வருஷத்தில் சுமார் 3,000 பிரதிகள் செலவாகியிருக்கின்றன. வகுப்பு வகுப்புகளாகச் சேர்ந்து, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இப்புஸ்தக உதவியுடன நடபடி ஆகமத்தைப் படித்துவருகிறார்கள். திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்திலுள்ள கிறிஸ்தவர்கள் முழுப் புஸ்தகத்தையும் அவர்கள் இயற்றியபடியே உபயோகித்து வேத ஆராய்ச்சி செய்வது எத்தனை மாட்சிமையாயிருக்கும்! நமது சபைகளும் சுவிசேஷ பிரபல்ய முயற்சிக்குத் தங்களை ஆயத்தம்செய்துகொண்டு உன்னத பெலன் பெறவும், சுவிசேஷத்தை ஏற்றபிரகாரம் புறமதஸ்தருக்கு அறிவிக்கவும் இந்நூல் மெத்த உதவியாயிருக்கும். சி. எம். எஸ். ஜில்லா ஆலோசனை சங்கத்தார் இப்புஸ்தகத்தைதேவவூழியருக்கு பாதிக்கிரயத்துக்கு கொடுக்கிறார்கள். கிரயம் அணா 6. இந்திய மிஷனெரி சங்க செக்ரற்றெரியிடமிருந்து பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

## குருமார் கான்பெரன்ஸ்.

நாளது௴ 9௳ பகல் 2½-மணிக்கு நூற்றாண்டு மண்டபத்தில்கூடின எஸ். பி ஜி, சி. எம். எஸ். குருமார் சபையில் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பீடம்வகிக்க, சுவிசேஷபடைமுயற்சி சம்பந்தமான கான்பெரன்ஸ் நடைபெற்றது. மிஷனெரி வித்தானியார் பிரார்த்தனைசெய்து, கூட்டம் ஆரம்பித்தது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பின்வருமாறு பேசினார்கள்:—

என் சிநேகிதரும், உடன் ஊழியருமானவர்களே!

நான் உங்கள் சிநேகிதனாகவும், உங்களுக்கு உதவிசெய்கிறவனாகவும் உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன்; எச்சமயத்திலும் எவ்விஷயத்திலும் உங்கள் மனதிலுள்ள கவலைகளை, உங்கள் வேலைகளிலுள்ள கஷ்டங்களை கர்த்தருக்குள் உங்கள் தகப்பனாகிய என்னிடத்தில் தாராளமாய்ச் சொல்லலாம். பாளையங்கோட்டைக்கு வருங்கால், தாமதிப்பதற்கு இடமில்லையென்றால், என் பங்களாவில் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பேன்.

இரண்டு விஷயங்களை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள விரும்புகிறேன். சபையானது ஒருமைப்பாட்டின் ஸ்தானம் என்பது ஒன்று. சபை ஜெபத்துக்கு ஸ்தானம் என்பது மற்றொன்று. மற்றவர்கள்பேரில் குற்றம் கண்டுபிடிப்பதும், ஒருவரைப்பற்றி மற்றொருவரிடத்தில் குறைவாய்ப் பேசுவதும் மனுஷருக்கு இயற்கை. குற்றஞ்சாட்டப்படுகிறவர்களுக்காக ஜெபிப்பதோ வருத்தமான காரியம். நானும் உங்களைப்போலொத்த மனுஷன்தான். குறைகள் காணப்படலாம். ஆகையால் எனக்காக நாடோறும் ஊக்கமாய் ஜெபிக்கும்படி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொருவருக்காகவும் அத்தியக்ஷாதீனத்தின் சகல ஊழியங்களுக்காகவும் எப்போதும் ஜெபம் அவசியம். ஒவ்வொரு நாளும் மற்றவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுடைய குறைகளைப் பாராட்டாதிருங்கள். அத்தியக்ஷாதீனத்தின் ஒவ்வொரு குருமாருடைய ஸ்தானங்களையும் ஊழியங்களையும் நினைத்து, குருமார், சபையார் யாவரும் குறிப்பிட்ட நாளில் அதே காரியத்திற்காக ஜெபித்துவரத்தக்கதாக மாதத்தினசரி ஜெப ஒழுங்கு ஒன்று சீக்கிரம் தயார்செய்வோம். விண்ணப்ப மன்றாட்டு சபையின் ஐக்கியத்தை வளர்க்கும்.

நாம் யாவரும் ஒரே சபையின் அவயவங்கள். ஒரே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். ஒரே திருப்பந்தியில் புசிக்கிறோம். ஒரே தேவனுக்காக உழைக்கிறவர்களாக இருக்கிறோம். ஆவியானவரின் வரங்களில் வித்தியாசம் உண்டு. அப்படியே அபிப்பிராயங்களிலும் வித்தியாசமிருக்கலாம். என்றாலும் ஒவ்வொருவரும் தங்களுடைய வெவ்வேறான வரங்களைத் தேவனுடைய ஊழியத்திற்காக உபயோகிப்பதே வரங்களின் நோக்கம். மற்றவர்களுக்கு என்ன வரம் இருக்கிறது, என்ன வரம் இல்லை என்று பார்ப்பது சரியல்ல. நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். நாம் பொதுவாக ஒப்புக்கொள்ளும் விஷயங்கள் பலவுண்டு. அவைகளைப் பெரிதாக எண்ணி, ஆவியின் ஒற்றுமையைக் காத்துக்கொள்வோமாக. நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருக்

தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிறார். இவ்வத்தியக்ஷாதீனத்திலுள்ள யாவரும் அன்பினால் இணைக்கப்பட்டு உழைப்போமானால், பெரிய காரியங்களைச் செய்யக்கூடும்.

இப்போது நடக்கும் பயங்கரமான யுத்தத்தை அறிவோம். அதை நமக்கு ஓர் ஆசீர்வாதமாகவும் விசேஷமான சமயமாகவும் ஆக்கிக்கொள்வது நமது கடமை. இக்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள மிஷனெரி சங்கங்களும் சபைகளும் அதிகக் கவலையாயிருக்கின்றன. எல்லாம் யுத்தத்துக்கே. 3000 மாணாக்கருள்ள ஆக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளில் சுமார் 500 பேர் மாத்திரம் இருக்கிறார்கள் மிஷனெரி ஊழியத்திற்காக அழைப்பதற்கு வருஷத்தில் இருமுறை நான் அக்கலாசாலைகளுக்குப் போவதுண்டு யுத்தத்தினால் இரண்டொருவர் தவிர மிஷனெரிகளாவதற்கு ஆள்களில்லை. தவிரவும், ஒவ்வொரு நாளும் 750 கோடி ரூபாய் யுத்தத்தில் செலவாகிறது. இங்கிலாந்திலுள்ள சகல மிஷனெரி சங்கங்களுக்கும் வருஷமுழுவதும் சேகரமாகும் காணிக்கை சுமார் இத்தொகைக்கு வரும். மனுஷரைப் போலவே பொருள் யுத்தத்திற்கு வேண்டியதாயிருக்கிறது இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு அல்லவா? இச்சம்பவத்தின் அழைப்பு என்ன? இந்தியாவிலுள்ள சபைகள் இங்கிலாந்து முதலிய புறதேச உதவியை எதிர்நோக்காமல், சுய ஆதரவுக்கும், சுய அரசாட்சிக்கும், சுய விருத்திக்கும் இப்போதே வர்த்திக்கும்படி கர்த்தர் பலவந்தம் செய்கிறார் என்று சொல்லாமல்லவா? இப்பயங்கரமான யுத்த சம்பவத்தை ஆசீர்வாதமாகப் பாராட்டி, இச்சமயத்துக்குத் தக்கதாக சபைகள் எழும்பி, தங்கள் வல்லமையை அணிந்துகொண்டு, ஊக்கமாய் ஜெபிக்கவும், சபை ஊழியங்களைத் தங்கள் பொருட்களினால் உற்சாகமாய்த் தாங்கவும், ஆத்திரத்துடன் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் சர்வ ஜாக்கிரதையாய் இருப்பதே கடமை. அப்படியானால் ஐரோப்பாவின் யுத்தம் நமக்கு ஆசீர்வாதமே.

உலகத்தின் கண்ணுள்ள மிஷன் ஸ்தானங்களெங்கும் பெரிய உணர்ச்சி இக்காலம் உண்டாயிருக்கிறதைப் பார்க்கிறோம். புறமதஸ்தர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மிகுந்த தாபந்தம் காட்டுகிறார்கள். கிறிஸ்தவர்களிலும் பலர் அனல் மூண்டு, கிறிஸ்துவைப் புறமதஸ்தருக்கு அறிவிக்க உற்சாகங் காட்டுகிறார்கள். நமது அத்தியக்ஷாதீனத்து சபைகளிலும் காணப்படும் வைராக்கிய வாஞ்சையும் உற்சாகமும் அதிக உபயோகத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். ஒவ்வொரு மிஷன் டிஸ்டிரிக்டு, பாஸ்டரேட்டு, சபை—இவைகளின் தன்மையும் வேலையும் வித்தியாசமாக இருக்கலாம். இன்னோர் மிஷனில் கையாடுகிற முறை நமது அத்தியக்ஷாதீனத்துக்குப் பொருந்தாததாயிருக்கலாம். என்றாலும், ஜெபத்தினாலும் வேத ஆராய்ச்சியினாலும் கிறிஸ்தவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு, தேவனுடைய இராஜ்யத்திற்குள் மற்றவர்களைக் கொண்டுவரும்படியாக விசேஷ முயற்சி செய்யவேண்டும்.

மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பவர்களைப்பற்றியும், பிரசங்கிக்கும் பொருளைப்பற்றியும் இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பிரசங்கிப்பது ஒரு கடமையென்றதினாலல்ல, ஆவியானவரால் நிறைந்து, வைராக்கிய அனல் மூண்டு, கிறிஸ்துவைப்பற்றிப் பேசாமல் இருக்கமுடியாது என்பதினால், கிறிஸ்தவர்கள் புறமதஸ்தர்களுக்குப் பிரசங்கிக்கப்போகிறவர்களாயிருக்கவேண்டும். அன்றியும், புறமதஸ்தருடைய அபிப்பிராயங்களையும் மார்க்கக் கோட்பாடுகளின் தன்மையும் அறிந்திருப்பது மாத்திரம் போதாது; புறமதஸ்தர் அறியும்படி நாங்கள் சொல்லவேண்டியது என்னவென்பதைத் திட்டமாய் எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அப்போதனை நமது விசுவாசப்பிரமாணத்தில் திட்டமாய்க் கண்டிருக்கிறது. ஒரே தேவன்; ஒரே தேவனான இயேசு, மனுஷருக்காக மரித்து, உயிர்த்து, மீட்பைச் சம்பாதித்தவர்; ஒரே ஆவியானவர், அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வாசம்பண்ணி, அதை அனல்மூட்டிவிடுகிறவர் என்பது. இச்சத்தியங்களைக் கிறிஸ்தவர்கள் நன்றாயும் திட்டமாயும் அறிந்திருப்பது அவசியம். தாங்கள் ஏன் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்களென்பதற்குச் சரியான மாறுத்தரம் கொடுக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும்.

ஜனுவரியீ 2உ யுத்தத்தின் நிமித்தம் மன்றாட்டு நாளாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சபைகள் யாவும் விண்ணப்ப நாளாக வருஷத்தின் முதல் ஞாயிறை ஆசரிக்கும்படி ஒழுங்கு செய்யுங்கள். கடைசியாக அத்தியக்ஷாதீன முழுவதிலும் சுவிசேஷப் பிரசங்க வேலையினால் திட்டமான பலன் காணப்படும்படி முன்னிலும் அதிகமாக சபைகள் யாவும் உழைப்பதற்கு குருமார் அனல்மூட்டிவிட வேண்டும் என்றார்கள்.

அப்பால் கனம் R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள் சீனாவிலும், தென்னிந்தியா ஐக்கிய சபைகளிலும், பாளையங்கோட்டைப் பட்டணத்திலும் சுவிசேஷ படைமுயற்சியினால் உண்டாயிருக்கும் மிகுந்த பலனை எடுத்துக்காட்டினார்கள்.

பின்னர் கனம் S. G. மதுரம் ஐயரவர்கள் சுவிசேஷ முயற்சி சித்தியாய் புது வருஷத்தில் நடப்பதற்குச் செய்ய வேண்டிய வழிவகைகளைச் சுருக்கமாய் விவரித்தார்கள். அவைகளாவன:—அத்தியக்ஷாதீனம் முழுவதுக்கும் ஒரு மத்திய கமிட்டி ஒன்றும் பல கிளைக் கமிட்டிகளும் ஒழுங்குசெய்தல்; வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் சபைகள்தோறும் ஏற்படுத்துவது; மாதாந்தரக் கூட்டங்களில் ஊழியருக்கு சுவிசேஷ பிரபல்ய சம்பந்தமாய் விசேஷ போதனைக் கூட்டங்கள் வைப்பது; அத்தியக்ஷாதீனத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் சுவிசேஷ ஊழியத்திற்கேற்ற குறிப்புகள் எழுதுவது; சுவிசேஷ படைமுயற்சி ஒழுங்கு, முறைகளைத் திட்டமாய்க் காட்டும் புஸ்தகம் ஒன்று பிரசுரிப்பது என்ற பலவிஷயங்களைப்பற்றிப் பேசினார்கள்.

கொஞ்சநேரம் குருமார் தம்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டனர். பின்கண்ட இரு தீர்மானங்கள் கூட்டத்தின் பயனெனலாம். (1) அத்தியக்ஷாதீனம் முழுவதிலுமுள்ள சபைகள் ஒன்றுசேர்ந்து ஏகமாக சுவிசேஷப் பிரபல்லிய வேலையில் முயற்சி யெடுக்கவேண்டும். (2) கிறிஸ்மஸ் தினத்தில் சுவிசேஷ ஊழியத்தைப்பற்றி விசேஷித்த பிரசங்கம் செய்யவேண்டும்.



## 32-ம் சங்கீதம்.

பச்சாதாப சங்கீதங்களில் இது இரண்டாவது. தாவீது பாவத்தில் விழுந்தெழுந்த சந்தர்ப்பமாய் இதைப் பாடியிருக்கலாம். பத்சேபாளை அவன் எடுத்துக்கொண்டபின் ஒரு வருஷமாய் அப்பாவத்தை அவன் அறிக்கையிடவுமில்லை, மன்னிப்பு பெறவுமில்லை. தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்து அவனிடத்தில் பேசினபின்தான், "நான் பாவஞ்செய்தேன்" என்று உண்மையை உத்தமமாய் ஒப்புக்கொண்டான்.

நாத்தான் உடனே: "கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்" என்று சொல்லி, தேவன்பைக் கூறினான் (2 சாமு. 12: 13). 51-ம் சங்கீதம் இச்சமயத்தில் எழுதப்பட்டது. தாவீது தன் பாவத்தை அறிக்கையிட்டு இரக்கத்திற்காகக் கெஞ்சும் விண்ணப்பம் அது. அச்சங்கீதம் 12, 13-ம் வசனத்தில் "உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்; அப்பொழுது, பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்" என்று சொன்னான். அத்தீர்மானத்தை நிறைவேற்றுவது 32-ம் சங்கீதத்தில். இதில் தன் அநுபவ சாட்சியை தாவீது மற்றவர்களுக்குச் சொல்லி, பாதகருக்குத் தேவனுடைய வழிகளை உபதேசிக்கிறான். பாவமன்னிப்பின் பாக்கியம் இச்சங்கீதத்தின் பொருள்.

இச்சங்கீதத்தை இரண்டு பங்காக வகுக்கலாம்;—(1) அநுபவ சாட்சி வா. 1-5. (2) அநுபவ போதனை வா. 6-11,

(1) அநுபவ சாட்சி வா. 1—5.

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,
எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.
எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ
எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்.

நான் பேசாதிருந்தபொழுது,
நாள்முழுவதும் நானிட்ட கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.

ஏனெனில், இரவும் பகலும் உம்முடைய கை என்மேல் பாரமாயிருந்தது!

உஷ்ணகால வறட்சியினால் வறண்டுபோகிறதுபோல, என் சாரம் வறண்டுபோயிற்று!

என் பாவத்தை நான் உம்மிடத்தில் ஒத்துக்கொண்டேன்;
என் அக்கிரமத்தை நான் மறைக்கவில்லை;
என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்.
தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்!

பாவத்துக்கு மூன்று பேர், மன்னிப்புக்கு மூன்று பேர், அறிக்கைக்கு மூன்று பேர். பாவமாவது என்ன? (1) அது மீறுதல்; அதாவது எல்லை தாண்டிப்போகுதல், தேவன் நமக்கு நியமித்திருக்கிற கட்டளைகளைக் கடந்துசெல்லுதல். (2) அது பாவம்; அதாவது அடையவேண்டிய லக்கை அடையாமற்போகுதல்; நம்மைப்பற்றின தேவ சித்தத்தை அவமாக்குதல். (3) அது அக்கிரமம்; அதாவது துன்மார்க்கத்திற்கும் ஹீனத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்தல். எபிரேயு பாஷையில் வழங்கும் பதங்களுக்கு இதே அர்த்தமாம்.

மன்னிப்பையும் மூன்று வார்த்தைகளால் வர்ணிக்கிறார்:—(1) அது மன்னிப்பு, அதாவது தேவ கட்டளையை மீறுவதினால் வந்த பாரத்தை நீக்குதல். (2) அது மூடுதல், அதாவது, பாவத்தினால் வந்த குறைவையும் நஷ்டத்தையும் தேவனுக்கும் மனுஷனுக்கு முன்பாக மறைக்குதல்; (3) அது எண்ணாமலிருத்தல், அதாவது, அக்கிரமத்தினாலுண்டான கறையையும் சடலையும் குலைத்துப்போடுதல். தேவன் மன்னிக்கும்போது இவ்வாறே மன்னிக்கிறார்.

இவ்வித மன்னிப்பைப் பெறுவதற்கு பாவி செய்யும் அறிக்கையையும் மூன்று விதமாய்ப் பேசியிருக்கிறது. (1) அது ஒத்துக்கொள்ளுதல், (2) மறைக்காமலிருத்தல், (3) அறிக்கையிடுதல். அறிக்கையிடுவேன் என்ற சொல் வாயிலிருந்து பிறக்கவே, தேவன்பு பிரளயமாய்ப் பாய்ந்து சென்றதாம்:—"அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்! "கெட்ட குமாரனுடைய தகப்பன் செய்தது இதுதான். பரி. லூக். 15: 18, 19 பார்க்க.

(2) அநுபவ போதனை வா. 6—11.

வா. 6. பக்தனுக்கு ஓர் ஆலோசனை:—
ஆகையால் உம்மை கண்டுகொள்ளத்தக்க சமயத்தில்
பக்தன் எவனும் உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணுவானாக!
அப்பொழுது; மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும், அது அவனை அணுகாது.

வா. 7. தேவனை நோக்கி ஜெபம்:—
நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்;
என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காப்பீர்;
ரட்சண்ய பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்!

வா. 8. தேவ உத்தரவு:—
"நான் உனக்குப் போதித்து, நீ போகவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்,
உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

வா. 9—11. சங்கீதக்காரன் உபதேசம்:—
புத்தியில்லாத குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப்போலவுமிருக்காதே.
வாரினாலும் கடிவாளத்தினாலும் அவற்றை வாய் கட்டவேண்டும்.
மற்றப்படி, அவை உன் கிட்டச் சேரா!
துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு.
கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.

நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்! செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்களெல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள்!

சங்கீதக்காரன் கற்பிக்கும் போதனையை நாமும் கற்றுக்கொள்வோமாக. நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள்ளிராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கைவிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்குக் கர்த்தர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். அவருடைய மன்னிப்பைப் பெற்றபின், அவரால் பூரணமாய் நடத்தப்பட இடம் கொடுப்போமாக. அவர் கடிவாளத்தை இழுக்கவும் அடிக்கவும் இடங்கொடாதிருப்போமாக. அதன் முடிவு வேதனையே. கர்த்தரை நம்பி, அவரது திருமுகத்தை ஓயாமல் நோக்கி, அவர் கண்ணின் நோக்கத்தை அறிந்து, அதற்குக் கீழ்ப்படியும்போது, கிருபை நம்மைச் சூழ்ந்துகொள்ளும்; சந்தோஷமும் ஆனந்தமும் நம் பங்காகும்.

## சிங்கரேனி மிஷன்.

மகாகனம் சென்னை அத்தியக்ஷர்வர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இம்மிஷன் ஆரம்பமாகி ஏறக்குறைய ஐந்துவருடமாகிறது. திருநெல்வேலி நாட்டிலிருந்து வந்த கனம் D. S. டேவிட் ஐயரவர்கள் மேல்பார்வைக்குள், நாலு ஊழியரால் இவ்வேலை நடைபெற்றுவருகிறது. இதின் முக்கிய ஸ்தானம் சிங்கரேனி காலியரிஸ். இதன் பழைய பேர் எலாந்து, இதற்கும் தோர்ணக்கல்லுக்கும் 15 மைல் தூரம். இம்மிஷன் வேலையை (1) எலாந்து தாலுகா வேலை, (2) பால்வன்சா தாலுகா வேலை, (3) பாக்கால் தாலுகா வேலை, (4) எலாந்துபட்டண வேலை,—என நாலு பிரிவாகப் பிரிக்கலாம்.

முதலாவது, எலாந்து தாலுகா வேலை. இத்தாலுகாவில் Mr. A. ஞானமணி குடும்பத்துடன் வெங்கட்டாபுரத்திலிருந்து வேலை நடப்பித்துவருகிறார்கள். வெங்கட்டாபுரம் எலாந்திலிருந்து தென்கிழக்காய் 12 மைல் தூரத்திலிருக்கிறது. அவர்கள் மேற்பார்வைக்குள் ஆறு கிராமங்களுண்டு. அவற்றில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 63, ஆயத்தக்காரர் 92. ஆக மொத்தக் கிறிஸ்தவர்கள் 155. இவர்களில் வெங்கட்டாபுரம் கிறிஸ்தவர்கள் தெலுங்கு பாட்டுகள் நேர்த்தியாய்ப் பாடுவார்கள். ஆராதனைக்கு ஒழுங்காய் வருவார்கள். ஓய்வுநாளில் வேலை செய்யார்கள். இரண்டொருவர் தவிர, மற்றவர்களெல்லாரும் குடியை முற்றிலுமாய் விட்டுவிட்டார்கள். மதுவிலக்கு சங்கச் சட்டப்படி பிரமாணம் செய்து, தாங்கள் குடியாமலிருப்பதுமல்ல, மற்றவர்களும் குடிவெறியை நிறுத்தும்படி ஏற்ற பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். வாலிபரில் மூவர் வாசிப்புக் கற்றுக்கொண்டார்கள். மூன்று பையன்கள் தோர்ணக்கல் போர்டிங் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படித்துவருகிறார்கள். அநேகர் திடப்படுத்தலுக்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏசுதாசன் என்ற ஒருவன் அந்தக் கிராமத்தில் ஊழியர் இல்லாத சமயத்தில் ஜெபம் முதலியவை நடத்துவான்.

இரண்டாவது, பால்வன்சா வேலை. இத்தாலுகாவில் Mr. D. ஆபிரகாம் குடும்பத்துடன் ராச்செரு என்ற ஊரில் இருந்து வேலை நடப்பித்துவருகிறார்கள். இது எலாந்திலிருந்து 35 மைல் தூரம். வழிநெடுகிலும் அடர்ந்த காடே. துஷ்ட மிருகங்களின் பயமும் உண்டு. ஐந்து கிராமங்களில் வேலை நடக்கிறது. ஞானஸ்நானம் பெற்றவர்கள் 81 பேரும், ஆயத்தக்காரர் 393 பேருமாக 474 மொத்தக் கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். முதலாவதாக மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷர்வர்கள் கடந்த வருஷம் டிசம்பர் மாசத்தில் 20 பேருக்கு ராச்செருவில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அப்பால் மற்றவர்களுக்கு கனம் டேவிட் ஐயரவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். எத்தனையோ கிராமங்களிலிருந்து ஜனங்கள் வந்து, எங்கள் ஊர்களுக்கு வாருங்கள் என்பதாய்க் கூப்பிடுகிறார்கள். ஊழியர்கள் குறைவால் போகமுடியவில்லை. ராச்செரு என்ற கிராமத்தில் ஜனங்கள் மொத்தமாய்க் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்துவிடவே, அவ்வட்டத்து பெரிய குடித்தனக்காரர் அவர்களில் அநேகரைத் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள். அச்செய்தியை உபாத்தியாயர் கனம் ஐயரவர்களுக்குத் தெரிவிக்கவே, இவ்விடமிருந்து ஜெபத்துடன் மிகுந்த கவலையோடு போனார்கள். புலிபோல் நின்ற அவர்கள் எவ்வளவோ சாந்தமாயும் மரியாதையாயும் வந்து, அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, இனித் துன்பப்படுத்தமாட்டோம் என்று வாக்குக்கொடுத்து, இப்போ கூடியமட்டும் நல்ல சமாதானமாயிருக்கிறார்கள்.

மூன்றாவது, பாக்கால் வேலை. இத்தாலுகா நிஜாம் வேட்டையாடும் பந்தோபஸ்து காடுகள். துஷ்ட மிருகங்கள் ஏராளம். ஒரு மிருகத்தையும் சர்க்கார் உத்தரவில்லாமல் சுடக்கூடாது. அடர்ந்த காடு. இத்தாலுகாவில் Mr. A. டேவிட் குடும்பத்துடன் கோறுபுரம் என்ற கிராமத்திலிருந்து வேலைசெய்துகொண்டு வருகிறார்கள். இதற்கும் எலாந்துக்கும் ரெயில் மூலமாய் 45 மைலும், கால்நடையாய் 8 மைலுமாக 53 மைல் தூரம். 11 கிராமங்களில் 48 ஞானஸ்நானம் பெற்றவர்களும் 135 ஆயத்தக்காரருமாகிய 183 கிறிஸ்தவர்களுண்டு. இவர்கள் மிகவும் ஏழைகள். எத்தனையோ துன்பங்களிருந்தாலும், அநேகர் தைரியமாய் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்திருக்கிறார்கள். கனம் ஐயரவர்கள் அம்மாளுடன் இக்கஷ்டமான பாகங்களுக்கு ஊருராய்ப் போய், ஞானஸ்நானம் கொடுத்துவந்தார்கள். கோறுபுரம் என்ற கிராமத்திலுள்ளவர்களுக்கு அவர்கள் ஞானஸ்நானம் பெற்றவுடன், விஷவியாதியால் கொடிய நஷ்டம் நேரிட்டும், அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்கள் விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்படுவதற்கே அது தேவ கிருபையால் காரணமாயிற்று. மோதுகாபுரமென்ற கிராமத்திலிருந்து தோர்ணககல் போர்டிங் பள்ளிக்கூடத்தில் இரண்டு பிள்ளைகள் வந்து படிக்கிறார்கள். அவர்களுடைய தகப்பன் முதலாவது மார்க்கத்துக்கு வந்தபோதிலும், அவனுடைய மனைவி ஊழியர் தன் வீட்டுக்கு வரக்கூடாதென்று தடுத்தவள், தூஷித்தவள். இப்போது மிகுந்த சந்தோஷத்துடன் தன் பிள்ளைகளைப் படிக்க அனுப்பியிருக்கிறாள். அதற்கும் தோர்ணக்கல்



லுக்கும் 42 மைல் தூரம். இப்பாகத்தில் ஞானஸ்நானம்பெற்றவர்களில் சிலர் மாத்திரம் குடியை முற்றிலும் விட்டிருக்கிறார்கள். லிங்கபுரம் என்ற ஒரு கிராமத்தில் ஒரு வாலிபன் வாசிக்கப் படித்து, அவனே அவ்வூரில் ஜெபமும் நடத்திவருகிறான்.

நாலாவது, எலாந்து பட்டண வேலை. சிங்கரேனி காலியரிஸ் என மறு பெயர்கொண்ட எலாந்தில் ஏறக்குறைய 20 ஆயிரம் ஜனங்கள் நிலக்கரிக் கேணிகளில் வேலைசெய்கிறார்கள். இந்தியாவின் நாலா பாஷைக்காரரையும் இங்கு காணலாம். இங்கே ஒரு தமிழ்ச் சபையும், பள்ளிக்கூடமும், தெலுங்குச் சபையும் உண்டு. மொத்தக் கிறிஸ்தவர்கள் 143 பேர். இம்மிஷன் ஆரம்பத்திற்குமுன் இத்தமிழ்ச் சபை எஸ். பி. ஜி. மிஷன் கீழிருந்தது. இப்போது இம்மிஷனுக்கு அச்சபையும் கையளிக்கப்பட்டிருக்கிறது. சபையாரில் அநேகர் நிலக்கரி கேணிகளில் வேலைபார்க்கும் உத்தியோகஸ்தரே. இச்சபையோடு அனுமக்குண்டா என்ற ஊரின் சபையும் சேரும். இவர்களும் ரெயில்வே உத்தியோகஸ்தரே. எலாந்தில் ஒரு நேர்த்தியான ஆலயம் உண்டு. அதிலேயே தமிழ் ஆராதனை நடக்கும். சபையார் எல்லாரும் நிலக்கரி ஆபீசில் வேலைபார்க்கிறவர்களானபடியால், ஆராதனைக்கு அவ்வளவு ஒழுங்காய் வரமாட்டார்கள். நிலக்கரிக் கேணி வேலை இரவும் பகலும் ஓய்வுநாளிலுங்கூட நடக்கும். பண்டிகை முதலிய விசேஷ ஆராதனைகளுக்கு எல்லாரும் வருவார்கள். கனம் டேவிட் ஐயரவர்கள் இருப்பது இங்கேயே. தெலுங்கு சபையார் நிலக்கரி கேணிகளில் வேலைசெய்கிற சாதாரண ஜனங்களே. அவர்கள் கூடியமட்டும் ஒழுங்காய் ஜெபத்துக்கு வந்து, ஆண்களும் பெண்களும் சேர்ந்து, இன்பமாய்ப் பாட்டுப் பாடுவார்கள். அவர்கள் குடியிருப்பின் சமீபத்தில் அவர்களுக்கென்று ஒரு சின்னக் கோவிலும் உண்டு.

பள்ளிக்கூட வேலை. தெலுங்கு, துலுக்கு, தமிழ் என மூன்று பிராஞ்சாக நடக்கிறது. ஏழு உபாத்திமார் வேலை செய்கிறார்கள். 100 பிள்ளைகளுக்குமேல் படிக்கிறார்கள். ஏறக்குறைய அனைவரும் புறமதஸ்தரே. சிலர் ரோமான் சபையைச் சேர்ந்தவர்கள். தினந்தோறும் முதலாவது ஒரு மணிநேரம் வேதபாடம் படித்துவருகிறார்கள். துலுக்கப் பிள்ளைகளும் ஜெபத்துக்கு வணக்கமாய் தொப்பி கழற்றி, கண்மூடி, கிரமமாய் ஆமென் சொல்லுவார்கள். பள்ளிக்கூட வேலையினாலே இப்பட்டணத்தில் ஆண்டவருடைய வசனம் உயர்ந்த வகுப்பார் மத்தியில் சாட்சியாகக் கூறி அறிவிக்கப்பட்டுவருகிறது.

கனம் மதுரம் ஐயரவர்கள் கல்குத்தாவுக்குப் போகும் வழியில் இவ்விடம் வந்து, மூன்று நாள் எங்கள் மத்தியில் பின்னிட்டார்கள். தெலுங்கு சபைக்குப் போய், அவர்களுக்கு நேர்த்தியாக இயேசுவை நம்பி, விசுவாசித்துப் பிடிக்கவேண்டும் என்பதாய் அந்த ஜனங்களுக்கு எடுத்துக்காட்டினார்கள். ரொம்ப எழுப்புதலாய்ப்பேசி முடியவே, அந்தச் சபையில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து நேர்த்தியாய்ப் பாட்டுப்பாடினார்கள். தமிழிலும் எவ்வளவோ எழுப்புதலாயும், அருமையாயும் எங்களுக்கு ஆண்டவருடைய ராஜ்ய வருகையைக் குறித்துப் பேசினார்கள். ஒருநாள் தெலுங்கருடைய ஒரு குடிசைக்குப் போய், அங்கு அவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம் செய்து, கடைசியாய் கனம் ஐயரவர்கள் அவர்களில் ஒருவனுக்கு விபூதி பூசுவது தப்பிதம், உத்திராக்ஷம் போடக்கூடாது எனச் சொல்லி, நீ உன் உத்ராக்ஷத்தைக் கழற்றி இயேசு சுவாமியை நம்பினதற்கு அடையாளமாய்க் கொடுத்துவிடு எனவே, சந்தோஷமாய்த் தான் சிறு பையனாயிருக்கும்போது, அவனுடைய குருவால் போடப்பட்ட அவ்வுத்திராக்ஷத்தைக் கழற்றி, கனம் மதுரம் ஐயரவர்களிடம் கொடுத்துவிட்டான். அவனுடன் சேர்ந்த மற்றவர்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவன் முற்றுமுடிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஒப்பில்லாத அன்பைக் கண்டுகொள்ள அவனுக்காகவும் அவனுடன் சேர்ந்தவர்களுக்காகவும் ஜெபிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதுவரை உங்கள் சகோதரராகிய எங்களுக்காகவும் இவ்விடம் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துவருகிற உங்களெல்லாருக்கும் நன்றி சொல்லுகிறோம். இன்னும் நாங்களும் தெலுங்கு ஊழியரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு உத்தம ஊழியம் செய்யவும், இங்குள்ள சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்படவும், இவ்விடம் வேலைக்கு நேரிடும் பற்பல தடைகள் நீங்கவும், எங்கும் திருவசனம் செல்லத்தக்கதான வாசல் திறக்கப்படவும் ஊக்கமாய் ஜெபிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

G. ஏசுதாசன்.

## பளியர் மிஷன் கடிதம்.

கர்த்தருடைய கிருபையால் (1) தெற்குப்பளியக்குடி, (2) அணைக்கரை என்ற மிஷன் ஸ்டேஷன, (3) கோம்பைப் பளியம், (4) வண்ணாத்திப்பாறை, (5) பெரியாத்து மன்னுக்குடி—இத்தனை இடங்களில் நமது மிஷனுக்கு கிறிஸ்தவர்களும் மார்க்க ஆராய்ச்சிக்காரர்களுமுண்டு. இப்பாகத்தில் பரி. ஞானஸ்நானம் பெற்றவர்கள் 119. பரி. இராப்போஜனம் பெற்றவர்கள் 7. பரி. ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்பட்டிருக்கிறவர்கள் 43. கிறிஸ்துமார்க்கத்தை ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பவர்கள் 97.

மார்க்க ஆராய்ச்சிக்காரர் பெரும்பாலும் மன்னுக்குடியிற்றான். மன்னுக்கள் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ள ஆசைபூண்டிருக்கிறார்கள். அவர்களுடன் குடியிருந்து சரியான போதனை செய்தால், ஏராளமான மன்னுக்கள் சீக்கிரம் கிறிஸ்துவின் தொண்டர்களாவார்கள். வண்டமெட்டு டிவிஷனில் பற்பல இடங்களில் கிட்டத்தட்ட 2,000 மன்னுக்களுண்டு. அவர்களுள் பெரியாத்துக்குடி மன்னுக்களுக்குள்தான் கொஞ்சம் வேலை நடந்துவருகிறது. மூன்றும் வருஷம் நாங்களிருந்த இடத்துக்கும் மன்னுக்குடிக்கும் 9 மைல். அதனால் நான் மாசத்துக்கோர் தடவை போய், 10 நாளிருந்து மார்க்க போதனை செய்துவந்தேன். இப்போது நமது மிஷன் ஸ்டேஷனுக்கும் ஷெ மன்னுக்குடிக்கும் கிட்

டத்தட்ட 25 மைலுள்ள காட்டுப் பாதையும், ஏற்றமும் இறக்கமுமுள்ளதும், பற்பல சங்கடங்களுள்ளதுமாயிருப்பதாலும், இவ்விடத்து வேலையே சரியாயிருப்பதாலும் முன்போல அவ்விடம் போகக்கூடுகிறதில்லை. சிற்சில சமையங்களிற் என் தலையைக் காண்கிற ஏழை ஜனங்கள் தங்களுக்குள் குடியிருந்து வேலைசெய்கிற ஓர் ஆள் வேண்டுமென்று என்னைத் தொந்தரவுசெய்கிறார்கள். கனம் கார் ஐயரவர்களிடமும் இதைப் பற்றி அவர்கள் கருத்தாய் வேண்டிக்கொண்டார்கள். மன்னுக்களெல்லாரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதாலும், சன்மார்க்கம், குணவிஷயங்களில் பளியர்களைவிட மேலானவர்களாயிருப்பதாலும், அவர்கள் தலைவனும், அவன் குடியிருக்கிற பெரியாத்துக்குடி மன்னுக்களும் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ள ஆசைபூண்டு தங்களுக்குப் போதனைசெய்ய ஓர் ஆள் தங்கள் மத்தியில் குடியிருக்க வேண்டுமென்று ஆசையுடன் கேட்பதாலும், ஓர் ஊழியனை அவ்விடம் அனுப்பி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்பக்ஷத்தில் பளியக்குடி அறுப்பைவிட மன்னுக்குடி அறுப்பு ஏராளமாயும் மிக்க சுலபமாயுமிருக்கும்.

இந்த வண்டமெட்டு டிவிஷனில் வடக்குக்குடி, தெற்குக்குடி என்ற இரு பளியக்குடிகள்தானுண்டு. வடக்குப் பளியக்குடியிலுள்ள பாதி ஜனங்கள் பரி. ஞானஸ்நானம் பெற்றவர்கள். மற்றவர்கள் தங்களைப் பெரிய ஜாதிகள் என்று நினைத்து, கிறிஸ்துமார்க்கத்துக்கு முற்றிலும் விரோதிகளாயிருக்கிறார்கள். முன் நான் போனால் என்னைப் பறையனாகப் பாவித்து, தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமல் அலாதியாய்க் கட்டியிருந்த குடிசையில் வைத்து, கிறிஸ்துமார்க்கத்துக்கு எதிர்த்து தூஷித்து நின்ற தெற்குக்குடிப் பளியர்களுக்குள் இப்போது பெருத்த அசைவு காணப்பட்டிருக்கிறது. சில மாசங்களுக்கு முன்னே நானும் Mrs. டேவிட்டும் அவ்விடம் போய், சிலநாள் பின்னிட்டு அவர்களுக்குப் புத்தி சொல்லி, வியாதிஸ்தர்களுக்கு ஜெபமும் மருந்தும் கொடுத்துவந்தோம். இப்போது நான் அடிக்கடி அவர்களைப் பார்த்து, புத்திசொல்லி வருகிறேன். அவர்களில் சிலரும் அடிக்கடி இங்கு வந்து வியாதியஸ்தர்களைக் கொண்டு வந்து சுகப்படுத்திப் போகிறார்கள். அவர்களில் சில குடும்பங்கள் மிஷன் நிலத்தில் தங்கள் வெள்ளாண்மைகளை அறுத்தவுடனே வந்து குடியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்களில் சிலர் மனம்மாறி கிறிஸ்துமார்க்கத்தை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

பள்ளிக்கூட வேலை Mrs. டேவிட்டால் மிஷன் ஸ்டேஷனில் நடந்துவருகிறது. மற்றவிடங்களில் பள்ளிக்கூட வேலை நடந்துவர வழியில்லை. இப்போது படிக்கிற பிள்ளைகளின் மொத்தம் 35. அதில் பதினொருவர் வாசிக்கூடியவர்கள்.

இதுவரைக்கும் பளியருக்கு 19 ஏக்கர் விருத்திசெய்து நெல் விதைத்திருக்கிறது. குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் வீதம் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறது. நிலம் நல்ல தொங்காடம் கொடாததாலும், புது நிலமாயிருப்பதாலும் மிருகஜீவாதிகள் அழிவு கொஞ்சமிருப்பதாலும், இவ்வருஷம் வெள்ளாண்மை நன்றாயில்லை. அடுத்த வருஷம் நிலம் நல்ல சாகுபடிக்கு வந்துவிடும், நிறைய பலனும் கிடைக்கும். அத்துடன் வாணம், வெடிக்கட்டை உண்டாக்கி விளக்குப்போட்டு, அடுத்த வருஷத்து வெள்ளாண்மைகளுக்கு மிருகாதிகளைத் துரத்த யோசித்திருக்கிறோம். அடுத்த வருஷம் மிஷனுக்கென்று அலாதியாய் எள்ளு, மிளகு செடி போடுவதற்காக 3 ஏக்கர் நிலம் இப்போது வெட்டித் திருத்திப்போட்டிருக்கிறேன். இன்னமும் 7 ஏக்கர் வெட்டித் திருத்தப்போகிறேன். டை 10 ஏக்கரும் நஞ்சை நிலம். மிஷனுக்கு வெட்டினதும் வெட்டப்போகிறதும் புஞ்சை நிலம். இவ்விடத்தில் நஞ்சை வரும்படியைவிட புஞ்சை வரும்படி அதிகமானதால், மிஷனுக்கு முதலாவது புஞ்சை சாகுபடிதான் செய்யப்போகிறேன். ஆனால் பட்டாக் கிடைக்குமுன்னே மிஷனுக்கென்று வெள்ளாண்மை செய்யக்கூடாதென்று D. F. O. தடுத்திருப்பதால், மிஷனுக்கு வெள்ளாண்மைசெய்ய வழியில்லை. அதினால்தான் மிஷனுக்கென்று அலாதியாய் இதுவரைக்கும் ஒன்றும் விதைக்கவில்லை. பட்டா நமக்குக் கிடைக்கும்பக்ஷத்தில் மிஷனுக்கென்று அலாதியாய் செய்யப்போகிற வெள்ளாண்மையும், பளியர் மாருவில் மிஷனுக்கென்று ஓர் பாகமும் சேர்ந்து, சமீபகாலத்தில் இம்மிஷன்களுவாய் சுயஆதரவுக்கு வந்துவிடுமென்று நம்பலாம். பட்டா இதுவரைக்கும் கிடையாததே சுயஆதரவுக்குக் தடை.

A. டேவிட்.

---

## சுவிசேஷப் படைமுயற்சி.

சுவிசேஷ படைமுயற்சியென்பது நூதனமான சுவிசேஷ ஊழியத்தைக் குறிக்காமல், அவ்வூழியம் சித்திபெறக் கையாடும் ஓர் புது முறையைக் குறிக்கிறது. மேலும் இக்காலம் புறமதஸ்தர்க்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் விதைப்புக் காலமல்ல, ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டுவந்து சேர்க்கவேண்டிய அறுப்புக்காலம் என்று சொல்லவேண்டும். கிறிஸ்து சபையானது ஓர் சபையாக சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தைத் தகுந்த ஆயத்தத்தோடும், மிகுந்த ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும் நடத்தி, திட்டமான பலன் நோக்கமாக வைத்து உழைப்பதே இப்படை முயற்சியின் நோக்கம். இவ்வூழியத்தினால் எதிர்நோக்கும் பலன் கிடைக்கத்தக்கதாக கிறிஸ்தவர்களுக்குள் ஜெபசிந்தையும் வேத ஆராய்ச்சியும் அதிகப்படுவது இன்றியமையா அவசியம். கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு, ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர்களோடு சேர்ந்தும் தனித்தனியாயும் இந்துக்களைக் கண்டுபேசி, அவர்களோடு பழகி சிநேக சம்பந்தமுண்டாக்கி, தூய நடக்கையினாலும் சிலுவையில் உலக இரட்சிப்புக்காக தம் ஜீவனைக் கொடுத்த இயேசுபெருமானை உயர்த்திக் காட்டுவதினாலும் கிறிஸ்துவுக்கென்று சாட்சி கொடுத்து, ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண திவ்விய வைராக்கியத்தினால் ஏவப்படவேண்டும். ஆகவே, ஜெபக்கூட்டங்களும், வேத ஆராய்ச்சி வகுப்புகளும், புறமதஸ்தருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் திட்டமான ஒழுங்குகளும் விசேஷ ஏற்பாடுகளும் ஒவ்வொரு சபையிலும் அதிக உற்சாகமாய் நடத்தப்படுவது அகத்தியம். இது சுவிசேஷ ஊழியத்தின் சித்திக்கு ரகசியமாகும்.



## சுவிசேஷ பிரபல்ய அழைப்பு.

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக்கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரி. 3: 18.)*

பிரியமான சகோதரரே!

1. இயேசுக்கிறிஸ்து உண்மையுள்ள சாக்ஷியாயிருக்கிறார். தேவனுக்கு முன்பாக அவர் நம்மை இராஜாக்களும் ஆசாரியருமாக ஆக்குகிறார் (வெளிப்படுதல் 1: 5, 6). ஒரு ஆசாரியனுடைய வேலை கடவுளிடம் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசுகிறதும், ஜனங்களுக்காகப் பலிசெலுத்துகிறதுமாயிருக்கிறது. குணப்பட்ட ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனும் கடவுளுக்காக மற்றவர்களிடம் பரிந்துபேசுகிற ஸ்தானபதியாயிருக்கிறான் ஜீவனாயிருக்கிற கிறிஸ்து நம்மில் நிலைத்து வசிக்கும்போது, பரிசுத்த ஆவியின் பலத்தினால் நாம் மெய்யான ஞானவுயிரடைந்து, ஆத்தும வளர்ச்சியடைகிறோம். அப்போது நாம் மற்றவர்களுக்கு தேவ கிருபையை முன்னிட்டு ஞான ஜீவியத்தை ஊட்டுவது நம்முடைய கடமையாகயிருக்கிறது.

2. சில நாட்களாய் நாம் இப்பட்டணத்தில் நடத்திவரும் ஆத்ம ஆதாய முயற்சியில் படை சோர்ந்து போகாது, இடைவிடாமல் துயர்ந்தேர்ச்சியாய் உற்சாகமாயும் ஊக்கமாயும் உழைத்துவரவேண்டுமென்ற விருப்பத்துடன் இக்கடிதம் எழுதலானேன். இம்மட்டும் கடவுள் நம்மோடிருந்து, நமது முயற்சியை ஆசீர்வதித்து வந்திருப்பதற்காக நாம் அத்தியந்த ஸ்தோத்திரம் செலுத்துவோமாக. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

3. வேதாகமத்தை வாசித்துவரத் தீர்மானித்திருக்கிற இந்துக்களான அநேகருக்குப் போதுமான உதவி ஒத்தாசை செய்யவேண்டியது நமது பொறுப்பு. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னாலியன்ற உதவிபுரிய வேண்டியது தன்னுடைய கடமையென உணரவேண்டும். நம்முடைய அஜாக்கிரதை மூலமாய் அவர்களில் யாரேனும் தன் தீர்மானத்தை நிறைவேற்ற ஏதுவில்லாமற்போனால், அவ்வாத்தும உத்தரவாத விஷயமாய்க் கடவுள் நம்மைப்பற்றி எப்படிச் சித்தங்கொள்வாரென்பதைக் கவனிக்கவேண்டியதல்லவா? மிஷனில் சம்பளம் பெற்று சுவிசேஷ பிரசங்க ஊழியத்தைச் சிலர் நடத்திவருகிறார்கள். மற்றகிறிஸ்தவர்களில் அநேகர் இப்பிரசங்க ஊழியப்பொறுப்பு தங்கள் சொந்தக் கடமையென உணராதிருக்கலாம். நானும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது என்னுடைய கடமையல்லவென்று அநேகவருஷக் காலமாய் நினைத்திருந்தேன். அந்த எண்ணம் இப்போ சில காலமாய் மாறி, சுவிசேஷத்தைக் கூறியறிவிப்பதும், ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதும் என்னுடைய கடமைகளிலொன்றென உணருகிறேன். சுவிசேஷ நற்செய்தியைப் பிறருக்குக் கூறியறிவிப்பதினால், அறிவிப்பவர்களுக்கே மிகுந்த ஆசீர்வாதமுண்டாகிறது. 'எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்' (நீதி. 11: 25.) அதாவது, எவன் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பிறருக்குக் கொண்டுபோகிறானோ அவன் ஆசீர்வதிக்கப்படுகிறான் என்பது அதின் கருத்து. என் அனுபவமும் அதற்கு ஒத்திருக்கிறது; அதின் பலாபலன்களையும் நான் அடைந்துவந்திருக்கிறேன்.

4. இவ்வூழியத்தைச்செய்ய நான் ஏவப்பட்ட காரணம். சுமார் 20 வருஷங்களாய், வேனிற்கால வசதிக்காக இரண்டு மூன்று மாதமாய் நான் கொடைக்கானலுக்குப் போய், அங்கு வசித்துவருவது வழக்கம். பல மிஷன்களைச் சேர்ந்த 500 மிஷனரிமாருக்குமேல் வேனல் வசதிக்காக வருஷாவருஷம் அங்கு கூடிவருவதுண்டு அவர்களிலனேகர் மகா பிரபலஸ்தராகவும், வித்வான்களாகவும், விசேஷித்த பிரசங்கிகளாகவும், ஆவியில் அனல்கொண்ட தேவ பக்தர்களாகவுமிருப்பார்கள். அப்படிப்பட்ட தேவ ஊழியர் சிலர் ஒன்றுகூடி ஏற்பாடுசெய்து, அங்கே வந்திருக்கிற மிஷனெரிமாருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பிரயோஜனமாக 3 முதல் 5 நாள் வரை ஆவிக்குரிய கூட்டம் (Spiritual Convention) நடத்துவார்கள். அதின் நோக்கம்: கூடுகிற ஒவ்வொரு ஆத்துமாவும் ஆவியின் அனல்மூண்டு, சீர்திருந்தி, வளர்ந்து பிறர் பிரயோஜனார்த்தமாய் ஊழியஞ் செய்யவேண்டுமென்பதே. அதில் அநேகம் எழுப்புதலான பிரசங்கங்களும், ஊக்கமான ஜெபமும், பரவசமடையத்தக்க பாட்டுகளும் நடைபெறும். அப்படிப்பட்ட கூட்டங்களுக்கு என்னால் கூடிய அளவு தப்பாமற்போய்க் கவனமாய்க் கேட்பேன். அதே மாதிரியாய் மிஷன் அபிவிர்த்திக்கென்று அநேக ஆலோசனைக்கூட்டங்கள் (Conference) நடந்தேறும். அவைகளுக்கும் நான் தப்பாமற்போய்க் கவனமாய்க் கேட்பேன். அவ்வாவிக்குரிய கூட்டங்களின் மூலமாய் நான் அறிந்த நூதன விசேஷித்த வற்புறுத்தப்பட்ட சத்தியம் ஒன்றே. அதாவது, சுவிசேஷ நற்செய்தியைக்கூறி அறிவிப்பது குணப்பட்ட ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனின் கடமையென்பதே. இதற்கு வேதாதாரங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பிதா என்னை அனுப்பினதுபோல நான் உங்களை அனுப்புகிறேன் (யோவான் 20. 21.) நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல், நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (யோவான் 17. 18.) நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களைக் கூறியறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாய் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2. 9) இவைகளை நான் தற்சோதனைபண்ணி, நன்றாய் ஆலோசித்துப் பார்த்ததில், அதிற்கண்ட கருத்து உண்மையானதுதான், விசுவாசிக்க வேண்டியதுதான், எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்யவேண்டியதுதான் என்று பட்டது. அதற்குரிய சுருக்க முகாந்தரங்களாவன: (a) ஒவ்வொரு கிறிஸ்தவனும் குணப்பட்ட பரிசுத்த ஜீவியமுடையவனாயிருக்கவேண்டும். (b) அந்தக் குணப்பட்ட பரிசுத்த ஜீவிய நிலைமை, குன்றாது, மழுங்காது அபிவிர்த்தியடைகிறதாயும், மரணபரியந்தம் கிறிஸ்துவில் தரித்திருக்கிற ஜீவியமாயுமிருக்கவேண்டும். (c) இந்த

இரண்டும் மெய்யாயிருக்கும்போது, அந்தக் கிறிஸ்தவனிடத்தில் பொங்கிவடிகிற ஜீவியமிருக்கும். அதாவது குற்றாலம் அணையில் சோனாமாரியாய் மழை பெய்யும்போது அதிலிருக்கும் சுனை பொங்கித் ததும்பி வழிந்தோடுகிறதுபோலவும், அந்த ஜலம் ஓடுகிற ஆறு பாயுமிடமெல்லாம் இருபக்கமும் பயிர்களும், மிருகங்களும், மனுஷரும் செழித்திருப்பதுபோலவும் மெய்க் கிறிஸ்தவனும் பிறருக்கு ஆசீர்வாதத்தை அறிவிக்கக் கருவியாயிருப்பான். கிறிஸ்துநாதர் சென்ற இடமெல்லாம் அப்படியே இருந்தது. அவன் நீர்க்காலின் ஓரமாக நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலை உதிராத மரத்தைப்போலிருக்கிறான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். இப்படிச் செய்வதற்கு ஓர் பொது நியாயம்: கல்வியிற்றேர்ந்த பெற்றோர், தங்கள் பிள்ளைகள் அறிமுகத்தோர் கல்வியில் தேரும்பொருட்டு ஏவுகிறார்கள். திரண்ட சம்பத்துள்ள உத்தமர்கள் தானதர்மஞ்செய்ய தங்கள் திரவியத்தை செலவிடுகிறார்கள். அதுபோல ஞான சம்பத்தை அடைந்திருக்கிறவர்கள் பிறர் பிரயோஜனார்த்தமாய் அதை உபயோகிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

5. பிரசங்கத்துக்குப்போகும்போது இருக்கவேண்டிய லக்ஷணம். நம்முடைய ஊழியம் ஜெபத்தின்பேரில் அஸ்திபாரம் போடப்பட்டதாயிருக்கவேண்டும். ஜெபத்தின் மூலமாய் நாம் கடவுளைப் பிரார்த்திப்பதினின்று அவரே நாம் பிரசங்கிக்கவேண்டிய இடம், சமயம், பொருள் முதலியவற்றை நமக்கு அருளுகிறவராக இருக்கவேண்டும். என்னையல்லாமல், உங்களால் ஒன்றும் முடியாது என்று கிறிஸ்து பெருமான் திருவுளம்பற்றியிருப்பதைக் கருத்தில் வைத்தவர்களாய், நமது கல்வித்திறமை, சாதுரியம் முதலிய மனோவல்லமையின்பேரில் மாத்திரம் முற்றிலும் சாராமல், கடவுளுடைய ஆவியின் வல்லமையின்பேரில் சார்ந்து, மற்ற வரங்களை உபகரணங்களாக உபயோகித்து, தேவ ஊழிய வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும். 'பலத்தினாலும் பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினால் எல்லாம் ஆகும்.'

மேலும், இந்துக்களிடம் பேசவேண்டிய விஷயத்திலும் வெகு ஜாக்கிரதையாய் நம்மை ஆயத்தஞ்செய்துகொள்ள வேண்டும். வேதாகமத்தை வாசிப்பதுடன் அதற்கு அநுசரணையாயிருக்கப்பட்ட இந்துமார்க்க நூல்களையும்யாதொரு துவேஷமின்றி வாசித்து, கிறிஸ்தவ சத்தியங்களுக்கும் இந்துமதக் கோட்பாடுகளுக்குமுள்ள தாரதம்மியங்களை வெகு நுட்பமாய்க் கற்றறியவேண்டும். தெய்வம், ஆன்மா, பாவம், இரக்ஷிப்பு, நித்ய ஜீவன் ஆகிய பல விசேஷித்த விஷயங்களைப்பற்றி இரு சமயங்களும் போதிப்பதென்னவென்றும், கிறிஸ்து சமயத்தில் காணப்படும் சிரேஷ்டமென்னவென்றும் எடுத்துக்காட்டக்கூடியவர்களா யிருக்கவேண்டும். சில சத்தியங்கள் பொதுவாயிருக்கின்றன. அப்படியிருப்பதை நாம் ஒத்துக்கொள்ளலாம். அது கிறிஸ்துமார்க்கத்தில் மாத்திரம் இருக்கிறதென்று வற்புறுத்திச் சொல்லவேண்டாம். முக்கியமாய் வித்தியாசமானவைகளாவன:—(a) கடவுள் ஒருவரென்றொப்புக்கொண்டாலும், அவருக்கு விக்ரக ஆராதனையே கூடாது என்பது கிறிஸ்துமார்க்க சித்தாந்தம். (b) கிறிஸ்து பகவானின் பாடுகளினால் பாவம் இலவசமாய் மன்னிக்கப்படுவது. (c) அவரை ஏற்றுக்கொண்டு, அவரடிச்சுவடுகளில் நடக்கும்போது, குணமாறுதலடைந்து மறுரூபப்பட்டு பரம குணங்களால் அலங்கரிக்கப்படுவோமென்பது. அதுவே, அவர் முன்மாதிரியைப் பின்பற்றுவதாம். ஓர் பாத்திரம் ஏதாவது ஒரு பதார்த்தத்தினால் நிறைந்திருக்கும்போது, இன்னொரு பதார்த்தம் அதில் வைக்கக்கூடாததுபோல் ஒருவர் மனசிற்கொண்டிருக்கிற கொள்கை தப்பென்று அறிந்தாலொழிய, இன்னொரு கொள்கையின் உண்மையை தன் மனசில் அறிந்துகொள்ளமாட்டார். ஆனால் எவ்வித மார்க்க அறிவும் ஆராய்ச்சியுமில்லாத ஒருவனுக்கு இந்துமார்க்கத்தைப்பற்றி யாதொன்றுமே பேசாது, கிறிஸ்துவைப்பற்றி மாத்திரம் பேசினால் போதுமானது. கொஞ்சம் அறிந்தவர்களுக்கு இந்து சமயத்தில் நிழலாட்டம்போல் காணப்படும் பல சத்தியங்கள் எவ்வாறு கிறிஸ்துவிலும், அவரது கிரியையிலும் நிறைவேறி பூரணமடைகிறது என்று விஸ்தரித்துக் காட்டக்கூடியவர்களா யிருப்பது உசிதம்.

நண்பர்களே! நாம் ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகரும் ஊழியக்காரருமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அத்தாக்ஷியாக சிலுவை அடையாளத்தைப் பெறவில்லையா? திடப்படுத்தல் பெற்றபோது நாம் சேவகராயும் ஊழியக்காரராயுமிருக்கும் விஷயத்தை உறுதிப்படுத்தவில்லையா? போர்வீரரின் ஜோலியென்ன? இராஜ்யத்தைக் காப்பாற்றுவது மாத்திரந்தானா, இராஜ்யத்தை ஜெயிப்பதுமல்லவா? கிறிஸ்து இயேசுவாகிய நமது பரம ராஜாவுக்கு ராஜ்யத்தை ஜெயிப்பதென்றால், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதுதானே. அவ்வூழியத்தைச் செய்துவராவிடில், ஞானஸ்நானத்தில் நாம் செய்த பிரதிக்கினையை அலக்ஷியம்பண்ணுகிறவர்களாகவும், அவர் நாம் செய்யும்படி எதிர்பார்ப்பதை வியர்த்தமாக்குகிறவர்களாகவும் காணப்படுவோமல்லவா? வெட்கம், கூச்சம், வழக்கமின்மை ஆகிய இவற்றினிமித்தம் நம்மில் யாரேனும் கிறிஸ்துவைப் பற்றி அறிவிப்பதில் பின்வாங்கி நின்றால், "என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதரோடேகூட வரும்போது வெட்கப்படுவார்" (மாற்கு 8: 38) என்று இரக்ஷகர் திருவுளம்பற்றுவதை வாசித்துத் தியானிக்கட்டும். கோழைத்தனத்தினால் யாரும் பின்வாங்கினால், "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்ற வாக்குத்தத்தத்தை ஞாபகப்படுத்துகிறேன். "ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவன் ஞானமுள்ளவன்" என்று நீதிமொழியில் கண்டிருக்கிற ஞானிகளின் வரிசையில் காணப்படத்தக்கதாய், "உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற கட்டளையை சகல கிறிஸ்தவர்களும் உணர்ந்து, தேவ ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்துவருவோமாக. அதைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக.

A. S. அப்பாசாமி.



## கிறிஸ்துவின் மனுஷாவதார இரகசியம்.

இராகம்: இந்துஸ்தானி. (இம்மனார்க்குன்னருள் ஈ பரவாசா).

பல்லவி.

மனுஷ அவதார மான ஜென்மிப்பே—உன்
மனுஷீக தன்மையை நீ காண்பிப்பாயே.

சரணங்கள்.

1. எங்குமேயிருக்கின்றாய் எப்பொழுதுமே மாறாய்
இங்கே நீ யிருக்கையில் யார் இருந்தார் பரத்தில்—மனு.

2. அங்குமிங்குமுனது அதிசய சந்நிதி
எங்கும் நிறைந்திருந்த தெப்போதுமே நிச்சயம்—மனு.

3. உன்னிலே மாறுதல் ஒருக்காலுமுண்டாகாதே
உனது தெய்வதன்மையோ டெனது தன்மையணிந்தாய்

4. மெய்யான தேவன் நீ மெய்யான மனுடன் நீ [தாய்
மெய்ஜோதியை நான் பார்க்க மனுஷீகத்தை நீ போர்த்

5. மத்யான சூரிய மகிமையைக் காணக்கூடா
மனுஷன் எப்படி உனின் மகிமையைக் காணக்கூடும்.—

6. மனுஷீக மேகத்தால் மறைத்தாய் தேவதன்மையை
மகிபன் மகிமை காண மனக்கண் கூசாதிப்போத—

7. கிருபாசமுத்திரா கிருபையாய் நீ யிரங்கித்
திருமுகத்தை மறைத்துத் தெரிவித்தாயுன் தன்மையை.

8. என்னை உன்னைப்போலாக்க என் தன்மை நீ யணிந்தாய்
என்னைப்போல் நீ பேசினாய் என் கிரியை நீ செய்தாய்.

9. உன்னிலே நான் பிழைக்க உனக்குள்ளாக மரிக்க
உன் தன்மையே தரிக்க உவந்து அருள் செய்வாயே.—

J. S. C.

## The Working Balance Fund

### செலவுக்கான கையிருப்பு நிதி.

உமது கரத்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| முன் ஒப்புக்கொண்ட தொகை ... | ... | ...2039 | 14 | 6 |
| கனம் A. சவரிமுத்து ஐயரவர்கள், | ஆள்வானேரி ... | 5 | 0 | 0 |
| ,, ஆக் ஜான் ,, ... | டோனாவூர் ... | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ ஜான் ஐசக் ,, ... | பாளையங்கோட்டை | 10 | 0 | 0 |
| ,, S. ஜேசுதாஸ் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, J. D. ஆபிரகாம் ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, ஜான் ஜோசப் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, J. S. பொன்னையா... | ,, ... | 1 | 15 | 0 |
| ,, S. சாமுவேல் (2. வரவு) | ,, ... | 1 | 0 | 0 |
| ,, M. D. தாமஸ் ... | ,, ... | 5 | 0 | 0 |
| Mrs. ஐசக் டேவிட் அம்மாள் | ,, ... | 3 | 0 | 0 |
| ,, J. புண்ணியம் அம்மாள் | S. T. காலேஜ் ... | 1 | 8 | 0 |
| Miss. J. ஆனந்தநாதன் ... | ,, ... | 2 | 0 | 0 |
| மக-ா.ா ஸ்ரீ சா. பாலையா (4. வரவு) | திருநெல்வேலி ... | 5 | 0 | 0 |
| ,, எட்வார்ட் தாமஸ் ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, G. யோசுவா ... | ,, ... | 3 | 0 | 0 |
| Mrs. டேயர் அம்மாள் (3 வரவு) | செவல் ... | 4 | 0 | 0 |
| கனகமணி அம்மாள் ... | ,, ... | 1 | 0 | 0 |
| சபை | கண்டிதத்தான்குளம் ... | 15 | 0 | 0 |
| சுவிசேஷமுத்து அம்மாள் ... | ,, ... | 1 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ யோவான் ... ... | ,, ... | 1 | 1 | 0 |
| சபை ... | ஓமநல்லூர் ... | 5 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ A. வேதமுத்து | டோனாவூர் ... | 2 | 0 | 0 |
| ,, ஞானமாணிக்கம் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, மோசஸ் பால் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, ரத்னம் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, ஜேசுதாசன் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, முத்தையா ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, அருள்தாஸ் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, L. ஏசுதாஸ் ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, சான்போர்ட் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, ஆபிரகாம் கோல்ப்... | ,, ... | 1 | 0 | 0 |
| Mrs. ஆபிரகாம் அம்மாள் ... | ,, ... | 0 | 8 | 0 |
| பாஸ்டரேட்டு ... | பண்ணைவிளை ... | 21 | 11 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ V. ஆசீர்வாதம் (2. வரவு) | ,, ... | 5 | 0 | 0 |
| ,, ஐசக் முத்தையா ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, S. சுவாமிதாஸ் ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, J. தேவதாஸ் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, சாமு. டேவிட் ... | ஏரல் ... | 3 | 0 | 0 |
| ,, தா. பாக்கியநாதன் | மெஞ்ஞானபுரம்... | 40 | 0 | 0 |
| ,, மோ. சாமுவேல் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, S. இஸ்ரவேல் (3-வரவு) | திருச்செந்தூர் ... | 10 | 0 | 0 |
| ,, A. ஞானமுத்து ... | கலியாணிபுரம் ... | 20 | 0 | 0 |
| ,, A. சாந்தப்பா ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, P. அந்தோணிமுத்து | ,, ... | 5 | 0 | 0 |
| ,, N. யோசேப்பு ... | மைலப்பபுரம்... | 5 | 0 | 0 |
| ,, J. V. தங்கசாமி ... | ஆவுடையனூர்... | 3 | 0 | 0 |
| ,, ஜான் சாமுவேல் ... | சுரண்டை ... | 15 | 0 | 0 |
| ,, M. ஜான் சாமுவேல் | ,, ... | 12 | 8 | 0 |
| ,, V. யாக்கோபு ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, D. ஞானக்கண் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, G. அப்பாத்துரை... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, K. பாண்டியன் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, பென் அல்பெட் ... | ,, ... | 5 | 0 | 0 |
| போர்டிங் பள்ளிக்கூடம் ... | ,, ... | 10 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. ஜேக்கப் ... | சிவந்திபுரம் ... | 10 | 0 | 0 |
| ,, வேதநாயகம் ... | பரங்குன்றபுரம் ... | 2 | 0 | 0 |
| ,, தானியேல் ... | ராஜகோபாலபேரி... | 1 | 0 | 0 |
| ,, வேதநாயகம் ... | வீரகேரளம்... | 10 | 0 | 0 |
| ,, கி. மு. | அதிசயபுரம்... | 1 | 8 | 0 |
| ,, மோசஸ் ... | ,, ... | 1 | 8 | 0 |
| லீதியாள் அம்மாள் ... | ,, ... | 0 | 8 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. T. பூரல் | பிளாரன்ஸ்தோட்டம் ... | 1 | 0 | 0 |
| ,, S. ஜெபஞானம் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, J. பொன்னுசாமி... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, A. R. தானியேல் ... | சாக்ஷியாபுரம்... | 5 | 0 | 0 |
| ,, S. எட்வார்ட் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, M. துரைசாமி ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, M. தானியேல் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, A. ஜேசுதாஸ் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, G. தேவதாசன் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, A. பூவையா ... | சாத்தூர் ... | 3 | 0 | 0 |
| ,, A. சந்தோஷம் ... | சிரிவில்லிபுத்தூர் ... | 3 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, V. ஞானமுத்து ... | கோவில்பட்டி ... | 20 | 0 | 0 |
| ,, ஜெயசிங் அன்பு ... | சங்கரன்கோவில் ... | 15 | 0 | 0 |
| ,, P. சீனிவாசகம் (1 வரவு) | ,, ... | 5 | 0 | 0 |
| ,, S. D. லாசரஸ் ... | நாசரேத் ... | 5 | 0 | 0 |
| ,, A. ஆசீர்வாதம் ... | தூத்துக்குடி ... | 3 | 0 | 0 |
| ,, D. துரைபாண்டியன் | ,, ... | 2 | 8 | 0 |
| ,, P. கோவிற்பிள்ளை ... | மதுரை ... | 5 | 0 | 0 |
| Mrs. கிரேஸ் துரைசாமி | அருப்புக்கோட்டை ... | 5 | 0 | 0 |
| ,, Giles ... | தனுஷ்கோடி ... | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ S. P. டேவிட் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, A. வேதமுத்து ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, V, தேவதாசன் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, S. சாமுவேல் ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, J. சாமுவேல் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, C. E. சாமுவேல் ... | ,, ... | 3 | 0 | 0 |
| ,, J. W. போர்பேங்க் | ,, ... | 10 | 0 | 0 |
| ,, C. தாமிஸ் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, W. சவரிமுத்து ... | ,, ... | 2 | 0 | 0 |
| ,, J. A. வார்டன் ... | ,, ... | 1 | 0 | 0 |
| தாழ்ந்தவரவு ... | ,, ... | 0 | 4 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ வேத ஜேசுதாஸ் ... | எல்லாபட்டி ... | 10 | 0 | 0 |
| ,, ஆர்தர் C. W. ஜேசுதாஸ் | ,, ... | 5 | 0 | 0 |
| ,, ஜாக் சாமுவேல் ... | ,, ... | 5 | 0 | 0 |
| ,, ஐசக் ... | ,, ... | 1 | 0 | 0 |
| ,, G. A. கோவிற்பிள்ளை | திருச்சி ... | 5 | 0 | 0 |
| Mrs. A. தேவநேசம் அம்மாள் (2 வரவு) | சேலம் ... | 7 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ A. B. சாமுவேல் (3 வரவு) | திருவண்ணாமலை | 1 | 0 | 0 |
| ,, J. D. பொன்னையா | காஞ்சீவரம் ... | 5 | 0 | 0 |
| ,, ஜெயராஸ் டானியேல் | சைதாப்பேட்டை ... | 3 | 0 | 0 |
| ,, D. ஞானப்பிரகாசம் | மதிராஸ் ... | 3 | 0 | 0 |
| ,, E. டாசன் ... | போளூர் ... | 32 | 0 | 0 |
| ,, G. M. உல்லியம் | கோயம்புத்தூர் ... | 2 | 0 | 0 |
| ,, J. S. ஆசீர்வாதம் (2 வரவு) | மேட்டுப்பாளையம் | 5 | 0 | 0 |
| ,, பேபி C. B. T. டாசன் | பூனா ... | 2 | 0 | 0 |
| ,, S. சாமுவேல் | இலங்கை ... | 10 | 0 | 0 |
| 'கிறிஸ்மஸ் சுயவெறுப்பு' | தலசெஸ்வெல்லா ... | 10 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ A. C. டேவிட் | பர்மா ... | 15 | 0 | 0 |
| Mrs. M. தர்மராஜ் | ,, ... | 10 | 0 | 0 |
| காரிகேன் மூலமாய்: — | | | | |
| S. P. ராஜேந்திரம் | C. M. S. ஹைஸ்கூல் ... | 1 | 4 | 0 |
| உல்லியம் அலெக்சாந்தர் | ,, ... | 1 | 0 | 0 |
| A. ரத்னசாமி | ,, ... | 1 | 0 | 0 |
| | | 2603 | 9 | 6 |

## நமது பத்திரிகை.

புது வருஷத்துடன் நமது பத்திரிகையின் வடிவம் மாறும். 16 பக்கங்களுள்ள ஓர் புஸ்தகமாக வெளியேறும். சந்தா விலை இதினால் அதிகரிக்கப்படவில்லை. தமிழ்ச் சபையில் வாசிக்கத்தெரிந்த ஒவ்வொரு குடும்பத்திலும் இப்பத்திரிகை பிரவேசிக்கவேண்டுமென்பதே சங்கத்தின் அபேக்ஷை. ஆகவே விலை சுளுவு. காரியங்களை அறியாவிட்டால், ஜனங்கள் எப்படி மிஷனெரி ஊழியத்தில் அநுதாபம்கொள்வார்கள்? அநுதாபங்கொள்ளாவிட்டால், ஜனங்கள் எப்படி சுவிசேஷ ஊழியத்திற்காக ஜெபிப்பார்கள், உழைப்பார்கள், கொடுப்பார்கள்? ஆகையினால் குருமார், தேவ ஊழியர், நண்பர் யாவரும் நம் பத்திரிகையை ஜனங்கள் வாங்கி வாசிக்கும்படி தகுந்த முயற்சி யெடுக்கும்படி அன்பாய் மன்றாடுகிறோம்.

பத்திரிகைக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அச்சடிப்பு, காகிதம் தபாற்கூலி முதலியவைகளுக்கு முன்பணம் வேண்டும். பத்திராதிபர், மானேஜர் முதலியவர்கள் தங்களுடைய மற்றும் சங்க சம்பந்தமான ஹானரேரி ஊழியங்களுடன் இதையும் பார்த்து வருகிறார்கள். சந்தாப்பாக்கி விஷயமான கடிதப் போக்கு வரவும் செலவும் இல்லாதபடி பத்திரிகை நேயர் பார்த்துக்கொள்வார்களாக.

## ஜெபவிஷயங்கள்.

1. சுவிசேஷ வேலையை யிட்டு தெலுங்கு சபைகளும் ஆசாமிகளும் காட்டும் ஆசைக்காகவும் செய்து வரும் பிரயத்தனத்திற்காகவும் துதி.

2. தேவ ஊழியருக்குள் வளர்ந்தோங்கிவரும் ஐக்கியோணியத்திற்காகவும் துதி.

3. புல்லூரிலும் அப்பா பாளையத்திலும் புதிதாய் ஞானஸ்நானம் பெறப்போகும் 13 பேருக்காகவும் 32 பேர்களுக்காகவும், தெட்லபாட்டில் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்பட்டுவருகிறவர்களுக்காகவும் ஜெபம்.

4. தங்களுடைய ஊரிலுள்ள ஒருவனுக்கு நன்றாய்ப் படிப்பித்து, பின்பு அவன் சபையைப் பார்த்துக்கொள்ளவும் அதிலுள்ள ஆசாமி பக்கத்துக் கிராமங்களில் போய் தேவ ஊழியம் செய்யவும் சபையார் பிரயத்தனித்து வருகிறார்கள். அதில் அவர்கள் முன்செல்லவும் ஜெபம்.

5. நாளதுமீ 29உ நடக்கப்போகும் ஜெசவு சாட்சியில் நமது கிறிஸ்தவர்களுக்குள் பயன் உண்டாகும்படி ஜெபம்.

6. போர்டிங் பள்ளிப்பிள்ளைகளை ஆதரிப்போர் கிடைக்கும்படியாகவும், கிராமங்களில் நடமாடும் ஜுரம் நீங்கவும் ஜெபம்.

7. வியாதியாய் அனுமக்கொண்டா ஆஸ்பத்திரியிலிருக்கும் ஸ்தேவான் என்னும் போர்டிங் பையனுக்காகவும் ஜெபம்.

8. பளியர், மன்னுக்களுக்குள் சுவிசேஷ ஊழியமும் பள்ளிக்கூட வேலையும் நடத்துவதற்குத் திறமையான உபாத்தியாரும் உபாத்தியாயினியும் கிடைக்கும்படி ஜெபம்.

9. நமது புது அத்தியக்ஷரவர்களுக்கும் அம்மாளவர்களுக்கும் கர்த்தர் தமது உத்தம ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும் சம்பூரணமாய் அநுக்கிரகிக்கும்படியாக ஜெபம்.

10. மார்ச்சு மாசம் நடக்கும் உதவிக்குருப் பட்டாபிஷேகத்திற்காக ஆயத்தப்படும் கனம். ஜான் சீனிவாசக மிஷனெரி அவர்களுக்காகவும், மிஷனெரி ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கும் கனம். ஜான் சாமுவேல் ஆசிரியரவர்களுக்காகவும் ஜெபம்.

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும். மானேஜர்: மக-ா-ா-ஸ்ரீ V. சாமுவேல் அவர்கள், B. A. பாளையங்கோட்டை.

Editor: The Secretary I. M. S. T.

Printed at the Darling Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

NOVEMBER, 1915 Registered No. M.481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 20 DEC 1915 MADRAS.

Vol. XII No. 11] நவம்பர்மீ 1915 [விலை பை 3

பொருளடக்கம்


| | |
|---|---|
| புறமதஸ்தரை ஆதாயம்பண்ணுவது எப்படி? ... | 83 |
| தோர்ணக்கல் அத்தியக்ஷாதீன ஊழியர் பாடக்கூட்டம் | 84 |
| சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... | 85 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... | 86 |
| ஸ்திரீகள் எவ்வாறு உதவிசெய்யலாம்? ... ... | 88 |


## புறமதஸ்தரை ஆதாயம்பண்ணுவது எப்படி?

(கனம் எடி துரையவர்கள் நாளதுமீ 12உ செய்த ஓர் பிரசங்கம்).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புறமதஸ்தர்களுக்கு அறிவிக்கிறவர்கள் செய்யவேண்டிய நாலு காரியங்கள் 2 கொரி. 4. 2-ல் வருகிறது. அவையாவன:—

(1) **தன் சொந்த ஜீவியத்தில் பரிசுத்தமுள்ளவனாயிருக்க வேண்டும்.** "வெட்கமான அந்தரங்க காரியங்களை வெறுத்து." மனுஷர் முன்பாக வெளியே யோக்கியமாய் நடக்கிறது மாத்திரம் போதாது, தனித்த ஜீவியத்தில் மிகுந்த பரிசுத்தமாய் ஜீவிப்பது அவசியம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் போதிக்கிற எவரும் தன்னைத்தானே சோதித்துப் பார்த்து, தனனிடத்தில் காணப்படுகிற சகல குறைவுகளையும் இயேசுகிறிஸ்துவின் கிருபையை முன்னிட்டு பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினாலே சரிப்படுத்திக்கொண்டு, பின் இந்த பரிசுத்த ஊழியத்தை ஆரம்பிக்கவேண்டும்.

(2) **சுவிசேஷ சத்தியத்தை மாத்திரம் வெளிப்படுத்த வேண்டும்.** "சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே." புறமதஸ்தர்களுடைய மார்க்கங்களை நியாயதோரணையினால் கண்டனம்செய்து, அவைகளிலுள்ள குற்றங்குறைகளைக் காட்டுவதினால் பிரயோஜனமுண்டாகிறதில்லை. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை உயர்த்துகிறதினாலே மாத்திரம் ஊழியத்தில் பலன் கிடைக்கும். ஒரு காலேஜில் நான் கிறிஸ்துவைப்பற்றி மாத்திரம் பேசிக் கூட்டங்களை நடத்தினேன். பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். ஒருநாள் அந்தக் காலேஜிலுள்ள அநேகர் என்னிடம் வந்து, "கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி மாத்திரம் பேசுகிறீர்களே தவிர, மற்ற மார்க்கங்களைக் குறித்து ஒன்றும் சொல்லுகிறீர்களில்லை. அவைகளைப் பற்றியும் பேசுங்கள்" என்றார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, மற்ற மார்க்கங்களைக்குறித்தும் பேசினேன். அந்தக் கூட்டம் முடிந்ததும் பலர் ஆக்ஷேபனைகளைச் சொன்னார்கள். அவைகளுக்குப் போந்த மாறுத்திரம் சொல்லி ஜெயமுமடைந்தேன்.

இந்துக்களோ தங்களுடைய மார்க்கங்களுக்கு அநுசரணையாக பல தாள்ப்பிரதிகளை எழுதிப் பிரசுரிக்கவும், குதர்க்கங்கள் பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள். ஐயோ! என்ன பரிதாபம்! தர்க்கம் செய்ததில் நான் அவர்களை மேற்கொண்டபோதிலும், ஆத்துமாக்கள் ஒருவரையும் அந்தக் காலேஜில் நான் அதன்பின் ஆதாயம்பண்ணக் கூடாமற்போயிற்று. மிகுந்த வெட்கத்தோடும், துக்கத்தோடும், தலைகவிழ்ந்தவனாக அடுத்த காலேஜில் போய்க் கூட்டங்கள் நடத்தினேன. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பிரசங்கித்தேன். அநேகரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம்பண்ணிக்கொண்டேன். இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று பரி. பவுல் சொல்லுகிறார் (1 கொரி. 2: 2). ஞானம் உள்ளே வந்தால், அஞ்ஞானம் தானே நீங்கும். ஒளிக்கு இடங்கொடுத்தால் இருள் வெளியேறிவிடுமல்லவா!

(3) **ஒவ்வொருவருடைய மனச்சாட்சியிலும் படும்படி மனதுக்கும் சித்தத்துக்கும் நேராய்ப் பேசவேண்டும்.** "எல்லாருடைய மனச்சாட்சிக்கும்." பல காரியங்களைப் பலவிதமாய் பேசுவதினால் காரியம் ஆகாது. கர்த்தராகிய இயேசுவின் ஜீவிய சரிதையைச் சொல்வதினால் மனசில் உணர்வுண்டாகும். சொல்வதிலும் வித்தியாசம் உண்டு. மனதைக் கவர்ந்துகொள்ளத்தக்கதாகப் பேசுவதே காரியம். திருஷ்டாந்தரமாக, நடந்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுகிறேன். மேற்கே மலையாள தேசத்திலுள்ள ஓர் இந்து பிராமணனிடம் ஒரு கிறிஸ்தவ உபதேசியார் கிறிஸ்துவைக் குறித்துப் பேசினார். பேசும்போது கோப முகத்தோடு பேசினார். இருவருக்கும் நடந்த மார்க்க தர்க்கத்தில் உபதேசியாரே அந்தப் பிராமணனை மேற்கொண்டார். ஆனால் கிறிஸ்துவுக்கென்று ஆதாயம்பண்ணக்கூடாமல் தவறிப்போனார். அவர் பேசின கோபமும், அன்பற்றதுமான வார்த்தைகளை அம்மனுஷன் மனதில் வைத்துக்கொண்டு, 'நான் கிறிஸ்துமார்க்கத்தைப் பகைக்கிறேன். அதை நான் சகிக்கமுடியாது, அது கெட்ட மார்க்கம்' என்று சொன்னான். அதே மனுஷனிடத்தில் இன்னொரு கிறிஸ்தவ உபதேசியார் வந்து, மிகுந்த தாழ்மையோடும், அன்போடும் கிறிஸ்துவைக் குறித்துக் கனிவாய்ப் பேசினார். அந்த அன்புள்ள வார்த்தைகள் அவனுடைய மனதைத் தொட்டது. அவன், கிறிஸ்தவனாக தன்னை அறிக்கைசெய்து பின் ஞானதீட்சை பெற்றான். கிறிஸ்துமார்க்கத்தில் அவன் சேர்ந்துகொண்டதற்குக் காரணத்தை மற்றவர்கள் விசாரித்தபோது, "நான் கிறிஸ்துவையும் கிறிஸ்துமார்க்கத்தையும் நேசிக்கிறேன்" என்று சொன்னான்.

(4) **தேவனுடைய பார்வையில்** இந்த ஊழியத்தைச் **செய்யவேண்டும். "தேவனுக்கு முன்பாக."** இது சுவிசேஷ ஊழியம் மனுஷருக்கென்றும், மனுஷபுகழ்ச்சியை விரும்பியும் செய்யவே கூடாது. கர்த்தராகிய இயேசுவைப்பற்றிப் பேசும்போது கர்த்தர் பார்க்கிறார் என்ற எண்ணத்தோடே கிறிஸ்துவைப் பிரசங்கிப்போமானால், அநேகரை நீதிக்குள்ளாக்கி, மகிமையிலே நக்ஷத்திரங்களைப்போலப் பிரகாசிப்போம் இருண்ட இந்தியா இயேசுவுக்கு சொந்தமாக நீ உன் ஜெபத்தினாலும், பொருளினாலும், உழைப்பினாலும் ஊழியஞ்செய்யமாட்டாயா?

## தோர்ணக்கல் அத்தியக்ஷாதீன ஊழியர் வருஷாந்தர பாடக்கூட்டம்.

கிராம ஊழியர் அங்கங்கே தனித்தனியாய் வருஷமுழுவதும் வேலைசெய்து, ஆவியிலும் சரீரத்திலும் இளைத்துப் போவது யாவருமறிந்த விஷயம். பொதுவாய் வாசிக்க நூல்களில்லாமைபற்றி, அவர்கள் அறிவுதேறவும் வழியிருக்கிறதில்லை, பக்திக்குரிய சகவாசமில்லாததினால் ஆத்ம ஜீவன் பெலன் கொள்ளவும் எதுவுண்டாகிறதில்லை. 20 வருஷத்துக்கு முன் வேலைசெய்த முறையை இப்பவும் உபயோகிப்பதே நலம்.

இதை நிவிர்த்திக்கும் நோக்கமாய் தமிழ் நாட்டில் பல பல பிரயத்தனங்கள் செய்கிறார்கள். அறிவில் ஊழியர் விருத்தியடையத்தக்கதாக வேதாகம பரீக்ஷைகளுண்டு. ஆத்ம ஜீவன் உற்சாகமடைவதற்கு கன்வென்ஷன்களுமுண்டு. ஊழிய முறைகளை மாற்றுவதற்காக கான்பரன்ஸ் முதலிய ஆலோசனைக் கூட்டங்கள் நடப்பதுண்டு.

தெலுங்கு ஊழியர் சாதாரணமாய் அறிவிலும் ஜீவியத்திலும் தமிழ் நாட்டு ஊழியருக்குக் குறைவானவர்களே. இவர்களுக்கும் பரீக்ஷை உண்டு, ஆனால் பரீக்ஷைக்கு ஆயத்தம்செய்ய வியாக்கியான நூல் முதலான சாதனங்களில்லை. நூல்களிருந்தாலும் அவற்றைக் கிரஹித்துக்கொள்ளும் மனோபலமும் அவர்களில் மிச்சமானவர்களுக்கில்லை. நாளது வருஷம் உயர்ந்த வகுப்புக்கு மீகா, எபேசியர் பாடங்கள். தாழ்ந்த வகுப்புக்கு **எஸ்றா, நெகேமியா, II தீமோத்தேயு, தீத்து** பாடங்கள். ஆகவே இவைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், படிப்பு மகா கொஞ்சமாகையால், போதனாசக்தி எம்மாத்திரமுமில்லை. சபைகளுக்குப் போதிக்க வேண்டியதெப்படியென்றும் கற்றுக்கொடுக்கவேண்டியதிருக்கிறது.

இக்குறைகளை நிவிர்த்தி செய்வதற்காக பாட வாரம் ஒன்று வருஷந்தோறும் ஒழுங்குசெய்து நடத்துகிறோம். இவ்வாறு நடைபெற்று இது மூன்றாம் வருஷம். ஒருவாரம் முழுவதும் ஊழியர் அனைவரும் வந்து, பிரசங்கம் கேட்டு பாடம் படிக்கிறார்கள். தினசரி ஒழுங்கைக் காட்டினால் கூட்டத்தின் விபரம் வாசிப்போருக்கு நன்கு விளங்கும்:—

| | | |
|---|---|---|
| காலை | $7\frac{1}{2}$—9 | காலைஜெபம், பிரசங்கம் |
| | $9\frac{1}{4}$—$10\frac{1}{4}$ | எபேசியர் நிருபப்பாடம் (எல்லாருக்கும்) |
| | $10\frac{1}{2}$—$11\frac{1}{2}$ | பழைய ஏற்பாட்டின் பாடங்கள் (அந்தந்த வகுப் பின்படி) |
| மாலை | 2—3 | பொது நன்மை விஷயங்கள் பேரில் ஆலோசனை. உதா: மதுபான விலக்கு, கோஆப்பரேட்டிவ் சங்கம், சுவிசேஷ பிரபல்யம் |
| | $3\frac{1}{4}$—$4\frac{1}{4}$ | பரிசுத்த நற்கருணையின் பேரில் பாடங்கள் |
| | $4\frac{1}{2}$—$5\frac{1}{2}$ | புதிய ஏற்பாட்டின் பாடங்கள் (அந்தந்த வகுப் பின்படி) |
| | 7—$8\frac{1}{2}$ | மாலை ஜெபம், பிரசங்கம் |
| | 2—4 | ஸ்திரீகளுக்கு விசேஷித்த கூட்டங்கள் |

காலை மாலை பிரசங்கங்கள் ஆவிக்குரிய எழுப்புதலுக்கேற்றவை. எபேசியர் பாடம் உயர்ந்த வகுப்பு ஊழியருக்குப்பாடமாயினும், எல்லாரும்சேர்ந்து படிக்கத்தக்கதாக ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் சேர்த்தெடுத்தேன். பழைய புதிய ஏற்பாட்டுப் பாடங்கள் அந்தந்த பரீக்ஷைக்குப் போகிறவர்களுக்குப் பற்பல குருமார் எடுத்தார்கள். மீகா கனம் D. S. டேவிட் ஐயரவர்கள் கற்பித்தார்கள். பரி. நற்கருணைப் பாடங்கள் ஊழியருக்காக நடத்தப்பட்டது. (முதலாம் வருஷம் பரி. ஞானஸ்நானத்திற்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தும் விதத்தைப் படிப்பித்தோம். இரண்டாம் வருஷம் திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்தும் முறையைச் சொன்னோம்.)

நாளது வருஷத்தில் முதல் முதலாக ஏகபோஜனம் ஏற்பாடு செய்தோம். முந்தின வருஷங்களில் ஊழியர் பத்துப் பன்னிரண்டு பேர் சேர்ந்து, ஒவ்வோர் ஸ்தலங்களில் சமைப்பார்கள். இவ்வருஷம் சில தவசுப்பிள்ளைகளை ஏற்படுத்தி, எல்லாருக்கும் ஒரே போஜனமாக ஏற்பாடு செய்தோம். கம்மாமேட்டு போர்ட்டிங் பாடசாலை உபாத்திமார் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்து, சகலத்தையும் நேர்த்தியாயும் திருப்தியாயும் நிறைவேற்றினார்கள். நமது தமிழ் ஊழியர் அனைவரும் மிகுந்த சுயவெறுப்புடன் அவர்களுக்குப் போந்த உதவி செய்தார்கள். தினசரி போஜனம் செய்தவர்கள் தொகை 220.

கூட்டங்களினால் மிகுந்த நன்மை உண்டு, கர்த்தருக்கே ஸ்தோத்திரம்! இரண்டொன்றை மாத்திரம் சொல்வோம்

[1] **மதுவிலக்கு.** கடைசி நாளில் 45 பேர் மதுவிலக்குச் சங்கத்தில் சேர்ந்தார்கள். இவ்ர்கள் புதிதாய் வேலைக்கு வந்தவர்களும் ஸ்திரிகளுமே. மற்ற ஊழியர் போன வருஷம் சேர்ந்தார்கள்.

[2] **சுவிசேஷவேலை.** அடுத்த பன்னிரண்டு மாசங்களுக்குள் இவ்வத்தியக்ஷ மண்டலத்தின் கிறிஸ்தவ கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று மைல் சுற்றளவுக்குள்ளடங்கிய சகல கிராமங்களிலும் சபையாரைக்கொண்டு சுயாதீன சுவிசேஷ வேலை நடத்துவோம் என்று ஊழியர் பிரதிக்கினைபண்ணிப் போயிருக்கிறார்கள். இதைப்பற்றிய ரிப்போர்ட் அடுத்த வருஷம் வரும்.

[3] **சுவிசேஷப்பண்டிகை.** இது தவிர, வருஷத்திற்கோர் ஞாயிறில் கிறிஸ்தவர்களனைவரும் அயல் கிராமங்களுக்குச் சென்று பிரசங்கம் செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தேசத்தில் கால இயற்கைக்கு ஏற்றபடி 1916௵ ஈஸ்தர் பண்டிகைக்கடுத்த பூரண சந்திரனுக்கு முன் வரும் ஞாயிறை ஏற்பாடு செய்யும்படி கேட்டிருக்கிறார்கள்.

[4] **தூரஸ்தலசுவிசேஷ வேலை.** சமீபத்தில் மாத்திரமல்ல, தூர இடங்களிலும் சுவிசேஷ வேலை செய்யும்படி தீர்மானித்தார்கள். கம்மா மேட்டு ஊழியர் இது விஷயத்திற்கென்று சில வருஷங்களாய்ப் பணம் சம்பாதித்திருந்தார்கள். தோர்ணக்கல் தெலுங்கு சபையாரும் அவ்வாறே போன வருஷம் முதல் சேகரித்திருந்தார்கள். இது முதல் எல்லா மிஷன்களும்கூடி, ஒரு டையாசீசன் கமிட்டி ஏற்படுத்தி, அத்தியக்ஷ மண்டலத்தில் யாதாமொருதூர இடத்தில் சுவிசேஷ வேலை நடத்தும்படி தீர்மானித்திருக்கிறார்கள். தற்சமயம் கையிருப்பு சுமார் ரூ. 800.

இவைகள் மகா பெரிய தீர்மானங்கள் என்று நண்பர் உணருவார்களென்பதற்கையமில்லை. இவ்வித ஐக்கிய முயற்சிகளைக் கெடுப்பதற்குச் சாத்தானுமாயோபாயதந்திரம் செய்யாமல் விடான். ஆகையால் நண்பர் யாவரும் இவ்வித நற்சிந்தையைத் தமது ஜனங்களுக் கனுக்கிரகித்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, இந்நூதன முயற்சிகள் சித்தி பெறும்படி தினந்தோறும் ஜெபிக்க அன்பாயும் ஊக்கத்தோடும் மன்றாடுகிறேன்.

உங்கள் உடன் ஊழியன்,
**வி. எஸ். தோர்ணக்கல்.**



## 24-ம் சங்கீதம்.

தாவீது ராஜா எபூசியர்மேல் யுத்தம்பண்ணி, எருசலேமைப் பிடிக்க யத்தனம்பண்ணினான். அதின் தென்கோடி மலையிலுள்ள சீயோன் கோட்டை அக்காலத்தில் எவராலும் பிடிப்பதற்கரிய கோட்டையென்றெண்ணப்பட்டது. "குருடரும் சப்பாணிகளுங்கூட உன்னைத் தடுத்துவிடக்கூடும்" என்று தாவீதின் மனுஷரே தாவீதுக்குச் சொன்னார்கள் (2 சாமு. 5: 6). ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்துவிட்டான் (5: 7). இது தன் சுயபலத்தினாலானதல்லவென்று தாவீது உணர்ந்து, இந்நகரம் இனி தேவனுடைய நகரமாகும், இம்மலை இனி தேவன் வாசம்பண்ணும் மலையாகவேண்டியது, தேவ சமூகத்துக்கடையாளமாகிய கர்த்தருடைய பெட்டி இனி இங்கே வரவேண்டுமென்று தீர்மானித்தான். பெட்டிக்காக ஓர் கூடாரத்தைப் போட்டு (6: 7), அங்கே அதைக் கொண்டுவரும்படி ஒழுங்குபண்ணினான். சகல கெம்பீரத்தோடும் அதைக்கொண்டுவரும்போது, ஊசா அசைந்த பெட்டியைப் பிடித்ததினிமித்தம் செத்தான் (2 சாமு. 6: 5—7). தாவீது பயந்தான். பெலிஸ்தியரிடத்தில் இது போனபோது தாகோன் விக்ரகம் பட்டபாடு தாவீதுக்குத் தெரியும். பெத்ஷிமேசின் மனுஷர் இதை அலக்ஷியம்பண்ணினதினால் தேவ சிக்ஷையடைந்து, "இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத் தக்கவன் யார்?" என்றதைத் தாவீது கேள்வியுற்றிருந்தான் (1 சாமு. 6: 20). இச்சமையத்தில் ஊசா விழுந்ததினால் தாவீது: "கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவதெப்படி?" என்று சொல்லி, மூன்று மாசம் ஓபேத் ஏதோமின் வீட்டில் வைத்துவிட்டான். மூன்று மாசத்திற்குப் பின் தைரியங்கொண்டு, அதிக பயபக்தியுடன் அதைச் சீயோன் மலைக்குக் கொண்டுவந்தான், நடனத்தோடும், கெம்பீரத்தோடும், எக்காளத்தோடும் பெட்டியைக் கொண்டு வரும் சமயத்தில் பாடும்படி தாவீது இச்சங்கீதத்தைக் கட்டியிருக்கவேண்டுமென்று அனுமானிக்கலாம்.

பாடகர் பவிஞ்சு பவிஞ்சாய், கேள்வியும் உத்தரவுமாகப் பாடும்படி இதை அமைத்திருக்கிறது.

பல்லவி. (எல்லாரும் சேர்ந்து)

பூமியும் அதின் நிறைவும் யெகோவாவுக்கே உரியது,
உலகமும் அதின் குடிகளும் அவருக்கே சொந்தம்,
அவரே அதைக் கடல்களுக்குமேலாக அஸ்திபாரப்படுத்தினார்
அவரே அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்.

யூதபக்தன் இவ்வாறு பாடினது ஆச்சரியம்! தாங்கள் மாத்திரம் எகோவாவுக்குச் சொந்தமானவர்கள் என்று எண்ணின அவர்களுக்கு பூமியின் ஜனங்கள் யாவரும் தேவனுக்குச் சொந்தம் என்று கண்டுகொள்வது வெகு பிரயாசமாயிருந்தது. மகா ராஜாவின் பர்வதத்தில் வாசம்பண்ண வருகிறவர் யாரென்றால், பூமியனைத்துக்கும் ராஜாவான தேவாதி தேவன். பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ண வருகிறவர் இவரேயாகில், அவரோடு அப்பர்வதத்துக்கு ஏறத் தகுந்தவர்கள் யார்?

**கேள்வி.** (ஒருவன்மாத்திரம்)

கர்த்தருடைய பர்வதத்தில் ஏறத்தக்கவன் யார்?
அவர் பரிசுத்த சமூகத்தில் நிற்கத்தக்கவன் யார்?

இதுதான் மனசில் வந்த கேள்வி. தன்னைப் பரீக்ஷித்தவனாய்ப் பின் குறிப்புகளை வரைகிறான்.

**உத்தரவு.** (வேறொருவன்):—

சுத்தக் கைகளுடையவன்,
தூய இருதயமுள்ளவன்,
தன் ஆத்துமாவை மாயைக்கு உயர்த்தியிராதவன்,
கபடாய் ஆணையிட்டிராதவன்.

இப்படிப்பட்டவன் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் தன் இரட்சிப்பின் தேவனிடத்திலிருந்து நீதியையும் பெறுவான்.

இருதய பரிசுத்தம், உள்ளத்தில் உண்மை இவைகளே அவசியம். இவற்றிலிருந்து கிரியையும் வார்த்தைகளும் சுத்தமானதாய் வெளிப்படவேண்டும். இப்படிப்பட்டவன் கர்த்தரே தன் ஆசீர்வாதம் என்றும், கர்த்தரே தன் நீதி என்றும் காண்பான். அவருடைய நீதியினால் மூடப்பட்டவனாய், அவரோடுகூடப் பரிசுத்த பர்வதத்தில் அவன் வாசம்பண்ணக்கூடும்.

இதுவே அவரைத் தேடி விசாரிக்கிற சந்ததி
இதுவே அவர் முகத்தை நாடுகிற யாக்கோபு.

கர்த்தரை மெய்யாய்த் தேடுகிறவர்களும், யாக்கோபைப் போல அவரை முகமுகமாய்க் காணக்கூடியவர்களும் இவர்களே. (பேனியேல்=தேவ முகம்) ஆதி. 32: 30.

இவ்வாறு பாடி, பாடகர் கோட்டை வாசல்முன் நிற்கிறார்கள். கதவுகள் மேலிருந்து கீழே வந்து மூடுகிறவைகள். திறக்கும்போது அவைகள் உயர இழுத்துக்கொள்ளப்படும். ஆகவே அவைகள் உயர்ந்து திறந்து தங்கள் ராஜாவை ஏற்றுக்கொள்ளும்படி. அழைக்கப்படுகின்றன:—

**அழைப்பு.** (ஒருவன் மாத்திரம்):—

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்
பூர்வ கதவுகளே, உயருங்கள்.
மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்!

**கேள்வி.** (கோட்டைக்குள் நிற்கும் ஒருவன்):—

யார் இந்த மகிமையின் ராஜா?

**உத்தரவு.** (பாடகர் யாவரும்):—

அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள யெகோவா!
அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள யெகோவா!

**அழைப்பு.** (திரும்பவும் ஒருவன் மாத்திரம்):—

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்,
பூர்வ கதவுகளே, உயருங்கள்
மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்!

**கேள்வி.** (கோட்டைக்குள் நிற்கும் ஒருவன்):—

*யார் இந்த மகிமையின் ராஜா?*

**உத்தரவு** (பாடகர்கள் யாவரும்):—

*அவர் சேனைகளின் யெகோவா!*
*அவரே மகிமையின் ராஜா!*

இச்சங்கீதம் பரத்துக்கேறின திருநாளில் வாசிக்கும்படி குறித்திருக்கிறது. பூமியையும் அதின் குடிகளையும் சுதந்தரித்துக்கொண்டு, வெற்றிவேந்தராய் இயேசுமகா ராஜா விண்ணேறின சம்பவத்தைத் தியானித்துப் பாட இது ஏற்றதே. அவர் பரலோகம் சென்றபோது விண்ணுலகின் வாசல்கள் திறக்கும்படி தூதர்களெல்லாம் கூப்பிட்டாற்போல் நினைத்துக்கொள்ளலாம். உடன்படிக்கை பெட்டி இருக்குமிடத்தில் வாசம்பண்ணுகிறவர்கள் எப்படியோ, அப்படியே தங்கள் இருதயத்திலும் மனதிலும் பரலோகத்துக்கேறி, அவரோடே இடைவிடாமல் வாசமாயிருக்க விரும்புகிறவன் சுத்த மனசு, சுத்தப் பேச்சு, சுத்தக் கைகள், சுத்த இருதயம் உள்ளவனாய், கிறிஸ்துவின் நீதியை அணிந்துகொள்ளவேண்டும். கபடற்ற உத்தம இஸ்ரவேலன் இவனே. இவனே இயேசுநாதருக்குள் பரலோகத்தில் வாசம்பண்ணுகிறவன்.

## சுருக்கஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது ஒரே பேரான குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்து பரமண்டலத்திற்கு எழுந்தருளிப்போனதை விசுவாசிக்கிற நாங்கள் இருதயத்திலும் மனதிலும் அவ்விடத்துக்கேறி, அவரோடே இடைவிடாமல் வாசமாயிருக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

சில தினங்களாகக் கடந்த மாதத்திற்குமுன் மழையும் வெள்ளமுமிருந்த காலம். சுமார் 50 மைல் கால்நடையாகவே, மிதியடி உபயோகிக்கவும் வழியில்லாமல், சிலவேளை மழைக்குள்ளகப்பட்டும், இந்துக்கள் மத்தியில் மத்திபமாக வேலை செய்யக்கூடியதாயினும், சபை நடுவில் வேலை செய்ய சமயம் கிடைத்தது.

இவ்வருஷம் காலமழை பிந்தினபோதிலும், பின்மாரிக்குக் குறைவில்லை. நெற்பயிர் கம்மியாயினும் மற்ற விளைவு அவ்வளவு மோசமில்லை. தற்கால பனியிற் விளையவேண்டிய மஞ்சள், சோளத்தின் பலன் எதிர்காலத்தில் தெரியும். பனிக்காலம் ஆரம்பித்து விட்டது.

முதலில் நான் சந்தித்த கிராமம் ஸ்ரீராமகிரி. இங்கு மூன்று தினங்களிருந்தேன். இந்நாட்களில் ஜனங்கள் ஈரத்தில் குந்திக்கொண்டே ஜெபத்திற்கிருந்தார்கள். ஈரமாயினும் ஜெபத்திற்கு வந்தார்கள். ஒருநாள் கனத்த மழையில் வழக்கமாய் ஜெபிக்கும் புளியமரத்தின்கீழ் சகதியானதால், ஒவ்வொரு வீடாய் ஜெபம் நடத்தப்பட்டது. திருநெல்வேலி ஒரு பரோபகாரியின் சகாயத்தால் இங்கு ஒரு ஜெபஸ்தலம் கட்டும்படி, மகாகனம் அத்தியட்சரவர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். இவ்வுபகாரிக்கு நன்றிசொல்லி, கர்த்தரைத் துதிக்கிறோம். இவ்வாறு ஜெபஸ்தலமில்லாது வெட்டவெளி ஆராதனை நடக்கும் ஸ்தலங்கள் அதிகமிருப்பது நம் நண்பருக்கு ஏற்கனவே தெரியும் என நினைக்கிறேன்.

இதன்பின் பொட்லாடா என்ற கிராமத்திற்குப் புறப்பட்டேன். வெறும் சாப்பாடு மாத்திரம் தயார்செய்து, உதயம் மழைக்குப் பயந்து துரிதமாய் நடந்தோம். இடையில் மழைபிடித்த தாமதத்தாலும், கூலி மனிதன் எப்போதும் போகும் வண்டிப்பாதையை விட்டு, குறுக்கு வழியாய்க் கூட்டிக்கொண்டுபோகிறேன் என்று காட்டுக்குள் வழியின்றி அலைந்ததாலும் காலதாமதமாகிவிட்டது. தாங்கமுடியாத பசி, தூற்றல். ஆகவே ஒரு ஆற்றுக்குள்ளிருந்து குடையும் பிடித்து சாப்பிட ஆரம்பிக்கவே, வேலைக்காரப் பையன், ஐயா (கூரா லேதே என்றான்) குழம்பு முதலியது இல்லையே என்றான். சற்று புன்னகையோடு பால், பழம், பஞ்சதாரை (சீனி) எடுத்து கரை என்றேன். மூன்றுமில்லையே என்றான். உப்பு, புளி, மிளகு வத்தல் எடுத்துக் கரைத்து தயாரித்து, பசி ருசியறியாததால் நன்றாய்ச் சாப்பிட்டு, ஊர்போய்ச் சேர்ந்தேன்.

இவைகளெல்லாவற்றையும் ஊருக்குள் வந்த சந்தோஷத்தில் மறந்துநிற்கையில், தங்குதற்கும் இடமில்லை என்றாயிற்று. உபாத்தியார் வீட்டில் அவர் மனைவிக்கு குழந்தை பிறந்து கொஞ்சநாளானதால், ஊருக்கு வெளியே சுமார் ஒரு மைலுக்குள் ஒரு தோட்டத்தின் குடிசைக்குள்ளிருந்தோம். மேடான ஸ்தலம். ஒழிந்த குடிசையானாலும், தனித்த அமரிக்கையான இடம், முன்னுக்கு ஒரு கிணறு, அதற்கும் சற்றப்பால் ஒரு பெரிய குளம், எங்கும் வெள்ளம் புரண்டோடினது. இதில் இரண்டு நாளிருந்தேன். அக்கம்பக்கத்து தேவ ஊழியருடன் ஜெபத்தில் பின்னிட்டு, அவர்களுடன் வேதம் வாசித்து, பாடம் படிப்பித்து, சமீப கிராமத்தில் புறமதஸ்தருக்குள் வேலையும் செய்யப்பட்டது.

இந்நூதன சபையார் இதற்கு இரண்டு மாசத்திற்கு முன், புதிதாக பரி: ஞானஸ்நானத்தால் மந்தையிற் சேர்க்கப்பட்டவர்கள்.

இங்கு ஒரு பிரசவ ஸ்தோத்திர ஆராதனை முதலாவதாக நடத்தப்பட்டது. அவ்வூரிலும், அக்கம்பக்கங்களிலும், பிரசவ சமயம் சம்பவித்த பிராணாவஸ்தையைக் காட்டி, இப்படிப்பட்ட அபாயம் ஏதுமின்றி சுகபிரசவமும், ஒரு பிள்ளையையும் கொடுத்த கர்த்தரைத் துதிக்க ஏவி, காணிக்கையும் 14 அணா (ஆலி 1 ரூ.) செலுத்தப்பட்டது.

அப்பால் மாட்டேடு என்ற கிராமம். இதுவரை இச்சபையில் இரண்டு குடும்பத்தார் மாத்திரம் மகாகனம் டோர்னக்கல் அத்தியட்சரவர்கள் சந்நிப்பில் பரி. ஞானஸ்நானம் பெற்றவர்கள். இப்போ மூன்று குடும்பத்தார் பதினாறு ஆத்துமாக்கள் பரி: ஞானதீட்சையால் கிறிஸ்துவின் மந்தைக்குள்ளானார்கள். முதலில் இவர்களை பரீட்சித்தபோதிருந்ததைவிட ஆராதனை சமயம் பரி: ஞானஸ்நானமுறை விஸ்தரிப்புடன் போதனை கேட்டபோது உற்சாகமாய்க் காணப்பட்டார்கள். இவர்கள் தவிர, இரண்டு வாலிபர் மார்க்கப்பற்றுள்ளவர்கள். பரி: ஞானஸ்நானத்திற்காக ஆயத்தப்பட்டிருந்தபோதிலும், இந்துக்களான தங்கள் பெற்றோர் இந்துக் கலியாணஞ்செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்துவதால் தற்சமயம் தடைப்பட்டது.



பூப்பாரம் கிராமம். சபையில் கொஞ்சம் விர்த்தி காணப்படுகிறது. பிள்ளைகள் விஷயமாய் வேதபாடம் கற்பிக்கப்பட்டிருந்தது. 4, 5 வயசுப் பிள்ளைகள் விசுவாசப் பிரமாணம் பத்துக் கற்பனைச் சுருக்கம், பாவ அறிக்கை, கர்த்தருடைய ஜெபம், சிற்றறிஞர் குறிப்பிடத்தில் சில வினாக்கள் சொன்னார்கள். ஆகிலும் கிறிஸ்துவின் சரித்திரம் அவ்வளவாய்த் தெரியவில்லை. நான் அவர்களுக்கு கொஞ்சநேரம் கிறிஸ்துவின் பாலிய சரித்திரம் படிப்பித்து, சாயங்காலம், சிறுவர் ஆராதனை ஒன்று வைத்து உற்சாகப்படுத்தினேன். இச்சின்னச் சந்ததியை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. பெரியோர் சிலர் உணர்வுடையவர்களாயிருக்கிறார்கள்.

இதன்பின் திரும்ப பொட்லாடா வந்தேன். மழை பெய்துகொண்டே இருந்தது. இதில் மேலே சொன்ன தோட்டத்தில் இருந்து, சாயங்காலம் போக யோசித்தபோது ஆற்றில் பெரும்வெள்ளம் வந்துவிட்டது. இன்னம் கொஞ்சம் தாமதித்தால், ஆற்றைக் கடக்க முடியாதெனக் கண்டு, ஆற்றைத் தாண்டினோம். பாலம், தோணி முதலிய சாதனம் கிடையாது. நீந்திக் கரையேறினோம். இந்தப் பிரயாணத்தில் இன்னம் மூன்று ஊர் போகத் தீர்மானித்தும், ஓயாத மழையால் சமீபமான (7 மைல்) ஒரு ஊரையாவது பார்த்துப்போகப் பிரயத்தனித்தும், மாலை மயங்கி, வழிதெரியாமல் சகதி, முள்ளுக்குள் இருட்டிவிட்டதாலும், போக யோசித்த ஊரில் தங்க ஸ்தலமில்லாததாலும், திரும்ப முதலில் வந்த ஸ்ரீராமகிரி வந்தேன். இரவு பகல் மழையானதால், ஒருநாள் தாமதித்து, மறுநாள் 9 மைல் கேசமுத்திரம் வந்து, புகைவண்டி மார்க்கமாய் மானுக்கோட்டை வந்துசேர்ந்தேன். ஸ்ரீராமகிரி சபையில் சற்று முக்கியஸ்தனான மத்தேயு என்பவன், தன் மகன் (மானுக்கோட்டை) வீட்டுக்கு வந்தபோது நீ கிறிஸ்தவனாயிருப்பதால், வீட்டுக்கு வெளியே வைத்து, இலையில் சாப்பாடு கொடுப்போம் என்பதினிமித்தம்; ஜெபத்துக்கு வராமல் சற்று ஒழுங்கீனமாக வருகிறான். இவனுக்காக ஜெபிக்கக் கேட்கிறேன்.

**சபையின் நற்செய்திகள்.** பொட்லாடாவில் பரி: ஞானஸ்நானம் பெற்ற ஒரு வாலிபனுடைய மனைவியை இந்துக்களான பெற்றோர் தங்கள் வீட்டில் வைத்துக்கொண்டு விடமாட்டோமென்றபோது-"என் மனைவி போனாலும் கிறிஸ்துமார்க்கத்தை விடேன்" என்று ஸ்திர மனசுடனிருக்கிறான். பெண்ணின் பெற்றோர், மகளை சீக்கிரம் புருஷன் வீட்டிற்குஅனுப்ப ஜெபிப்போமாக.

ஸ்ரீராமகிரி பீர்நாய்க் ஈசாக்கு மனைவி இறந்து சுமார் ஒரு வருஷம் மூன்று மாதமாகியும், இந்துக் கல்யாணஞ்செய்யப் பெண் பேசி பந்துக்கள் முயற்சித்தும், உடன்படவில்லை. இதுவரை பல இடங்களிலும் கிறிஸ்தவப் பெண்ணுக்குப் பிரயத்தனித்தும் இன்னமும் கிடைக்கவில்லை. கர்த்தர் அவனுக்கு ஒரு ஏற்ற துணையைக் கட்டளையிடுவாராக!

ஷைபூரில் ஆபிரகாம் (வயசு 57) வயிற்றளைச்சலால் மரணத்தறுவாயிலிருக்கையில், இந்துக்களும் பந்துக்களும்: நீ முன் ஆராதித்த பிசாசு கோபத்தினால் உன் வயிற்றுக்குள் புகுந்து, மிதித்து உன் குடலைக் கசக்குவதால், இந்த ரத்தபேதி வந்திருக்கிறது. அதற்கு நீ சாந்தி செய்தால் வியாதி தீரும் என்க, ஷையான் மனைவி, மகள், மருமகன் (இந்துக்கள்) அவ்வாறு செய்ய எத்தனித்துக்கொண்டிருந்தபோது, பரி: ஞானஸ்நான சமயம் செய்த பிரமாணங்களை நினைப்பூட்டி ஜெபஞ்செய்தால், இது சுகமாகும் என்று ஷையூர் உபாத்தியார் ஜெபிக்க, படிப்படியாய் சுகமாகி இப்போது ஸ்திரமாயிருக்கிறான். பிரார்த்தனைக்கு ஒழுங்காய் எல்லாரும் வருகிறார்கள்.

இவ்வியாதி சமயம் திருநெல்வேலி நண்பர் அனுப்பிய மாத்திரைகள் உபயோகிக்கப்பட்டது. கடந்த ஆறு மாசமாக, தட்டிப்பல்லியில் கிறிஸ்தவர்களாகக் கோரி இருக்கிறவர்கள் நாளது வரை ஸ்திரமாயிருந்து பாடங்கள் படித்து வருகிறார்கள். பிள்ளைகளில் சிலரும், பெரியவர்களில் சிலரும் இராப்பாடம் படிக்கிறார்கள். இவர்களுக்கு அற்பசொற்பத் துன்பங்களுமுண்டு.

**ஊழியர் வருஷாந்தரக் கூட்டம்.** அக்றோபர் மாதம் 18௳ முதல் 25௳ வரை டோர்ணக்கல் அத்தியட்ச மண்டல ஆதீனத்தின்கீழ் உள்ள சமஸ்த தேவ ஊழியருக்கென்று நடத்தப்பட்ட கூட்டங்கள் நம் ஜெபத்திற்கு உத்தரவாக எவ்வித தடையுமின்றி, வெகு நன்றாய் நடைபெற்றது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மகாகனம் அத்தியட்சரவர்களால் இதற்கு முன்னில்லாதபிரகாரமாய், நவீன ஆழ்ந்த கருத்துடன் மிகத்தெளிவாய் எபேசியர் நிருபம் விபரிக்கப்பட்டதுடன், பரி: நற்கருணையைப் பற்றிய ஆதியோடந்தமான விபரங்கள் வெகு சவிஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டது.

சென்னைபட்டணம் அத்தியட்சரம்மாளவர்கள் ஐதிராபாத்துக்கு வந்திருந்த காலத்தில் இரண்டு தினங்கள் பின்னிட்டு, (கோ-ஆப்பரேற்றிவ் Co. operative Society) கூட்டுத்தொழில் செய்யும் ஒரு சமாஜத்தை பொருட் பாடப்போங்காய் விளக்கிக் காட்டி ஸ்திரப்படுத்திவிட்டார்கள். அவர்களுக்கு நன்றிசொல்லுகிறோம்.

பூர்வகாலத்தில் நடந்த வண்ணம் இந்த ஒருவாரக் கூட்டங்களில் நானாவித ஸ்திதியுள்ளவர்களும் எவ்வித பேதமின்றி ஒன்றாய்ச் சாப்பிட்டார்கள். ஆதிச்சபையின் அன்பின் விருந்து கொண்டாடல் எவ்விதம் என்பது இதில் பரிஷ்காரமாயிற்று.

தெலுங்குநாட்டுச் சகோதரருக்கு, திருநெல்வேலி நாட்டுச் சகோதரர் ஒருநாள் அன்பின் விருந்தளித்து, ஐக்கிய பந்தியில் சாப்பிட்டுச் சந்தோஷித்தோம். சகல கனமும் புகழும் கர்த்தருக்கே உண்டாவதாக. ஆமென்.

டேவிட் தேவசகாயம்.

---

## ஸ்திரீகள் எவ்வாறு உதவிசெய்யலாம்?

கர்த்தருக்குள் என் அன்பான சகோதரிகளே, தாய்மாரே, நம்முடைய அருமைப் பிள்ளையாகிய "இந்திய மிஷனெரி சங்கம்" கஷ்டத்திலிருக்கிறதை ஒவ்வொரு மாசமும் பத்திரிகையில் வாசிக்கிறோம். வாசிக்கிறதுமாத்திரம் போதுமா? ஏதாவது பரிகாரமும் செய்யவேண்டுமே. கிணற்றில் விழுந்த குள்ளநரியை ஒரு கயிறு கொண்டுவந்து தூக்கிவிடாமல், வெறுமனே உருக்கத்தை மாத்திரம் காட்டின ஓநாயைப்போல நாமும் போய்விடாமல், அல்லது குற்றுயிராய்க் காட்டில் கிடந்த மனுஷனைக் கண்ட ஆசாரியனும், லேவியனும் பக்கமாய் விலகிப்போனதுபோல நாமும போய்விடாமல், நமக்கு மாதிரியாய்க் காட்டப்பட்டிருக்கிற நல்ல சமாரியன்போல் உதவிசெய்யவேண்டுமெல்லவா? இதற்காக நாம் யாவரும் கர்த்தர் கையில் நம்மை ஒப்புவிப்போமாக.

I. ஸ்திரீகள் யாவருக்கும் ஒரே மனம் இருக்கவேண்டும்?

புதியேற்பாட்டுக் காலத்தில் "தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த அநேகம் ஸ்திரீகளும்" என்று ஓர் அருமையான வசனம் லூக்கா 8: 3ல் வாசிக்கிறோம். இக்காலத்தில் நம்மைக்குறித்து அப்படிச் சொல்லப்படவேண்டாமா? நாமும் அவ்வசனத்துக்குப் பாத்தியப்படவேண்டாமா? புருஷர் வேலைசெய்கிறார்களே, அது போதாதா என்று வீண்வார்த்தைகள் பேசிக்கொண்டு, மௌனமாய் இருக்கக்கூடாது; குற்றம் நமதுமேலும் சுமரும்.

ஓர் வியாழன் இரவு நமது சங்கத்துக்காக சோவிலில் ஜெபம்செய்துவிட்டு, வீட்டில் வந்து: ஆண்டவரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், ஓர் நூதன எண்ணம் என் மனதில் தென்பட்டது. கர்த்தருடைய பெரிதான இரக்கத்தால் கொஞ்சகுறையக் கிறிஸ்மஸ் கொண்டாடும் தினத்துக்கு சமீபித்துவிட்டோம். சுவாமிக்கு ஸ்தோத்திரம். இந்த வருஷம் ஸ்திரீகளால் ஆண்டவருடைய வேலை தாங்கப்படவேண்டுமே. என்ன செய்யலாம்? நன்றாய் யோசித்துப்பாருங்கள். திருநெல்வேலி நாட்டிலும், சென்னை ராஜதானியின் இதர பாகங்களிலும், பர்மா, இலங்கையிலும் அநேக குடும்பங்களில் ஸ்திதிபந்தரான பெண்கள் உண்டு. அவர்கள் எல்லாரும் கிறிஸ்மஸ் தினத்துக்கென்று அவரவர் நிலைமைக்குத் தகுந்தபடியே ரூபாய் பத்தோ, பதினைந்தோ, இருபதோ, ஐம்பதோ, இன்னும் 100 ரூபாய் வரையுங்கூடச் செலவுசெய்து, விலையுயர்ந்த பட்டு வஸ்திரங்களும், துணிகளும் வாங்கத் தயாராயிருப்பார்களென்று நம்புகிறேன்.

என் உடன் சகோதரிகளே, நமது பிள்ளையின் அவசரத்துக்கு உதவாமலும், அதின் மன்றாட்டுச் சத்தத்துக்கு உங்கள் காதை அடைத்துக்கொள்ளாமலுமிராமல், சுவாமி தமது ஆவியானவரைக்கொண்டு பேசும் இச்சமயத்தில் நீங்கள் புடவை முதலிய சந்தோஷத்துக்குச் செலவு செய்யும் பணங்களை மட்டுப்படுத்தி, நமது சங்கத்துக்குக் கொடுக்கும்படி உங்களை அன்பாய்க் கேட்கிறேன்.

'கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்.'
'வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.'

மேலும் கிறிஸ்துவின் கல்வாரி அன்பையும், அவர் பிறப்பின் அன்பையும்; நாம் ருசித்திருப்போமானால், அந்தக் கிறிஸ்மஸ் தினத்தன்று விலையுயர்ந்த வஸ்திரங்களோடு ஆலயத்துக்குப் போய்,

"சேலையுமின்றித் துணியுமின்றிச்
சிலிர்த்துப் படுத்திருந்தார்—நம் யேசு
சிலிர்த்துப் படுத்திருந்தார்
கோலா கோலக் கந்தை மூடிக்
குளிரை அநுபவித்த"

இந்தப் பரிசுத்த பாலகனைப் போய்ப் பார்க்கவும் மனம் வருமா? அந்தத் தினம் மெய்யாகவே சந்தோஷ தினந்தான். ஆனால் அதை ஆவிக்குரிய சந்தோஷ நாள் ஆக்கிக்கொள்வோம்.

ஓர் கிறிஸ்மஸ் தினத்தன்றுதான் ஆண்டவர் என்னை உயிர்ப்பித்தார். "உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு,"(அப். 4: 30) என்கிற இந்த வார்த்தைகள் மூலமாகத்தான் ஆவியானவர் என் இருதயத்தில் ஓர் விசேஷித்த பாடம் படிப்பித்தார். எப்படியென்றால் இந்தப் பரிசுத்த பாலகனைப் பார்க்கும்படி நானும் உணர்வில்லாமல், பரிசுத்த சிந்தையில்லாமல், உலக சிந்தையுள்ளவளாய்ப்போனேனே என்று உணர்ந்தேன்.

பண்டிகை காலத்தில் ஓர் ஸ்திரீ கோடிவஸ்திரத்துக்காகத் தன் புருஷனைத் தொந்தரைசெய்ய, புருஷன் இந்த மாசம் பணம் இல்லை, பின்னால் பார்த்துக்கொள்ளலாம், போன கிறிஸ்மஸ் நாளுக்காக நான் வாங்கிக்கொடுத்த புடவை இருக்குதல்லவா? அதை உபயோகி என்று சொன்னாலும், "இல்லை, இல்லை, அவள் இவள் கோடிவஸ்திரங்களோடு வரும்போது நான் மாத்திரம் பழைய வஸ்திரத்தோடு வந்தால் நாலுபேர் சிரிக்கமாட்டார்களா? கோடி இல்லாமல் நான் கோவிலுக்கு வரமாட்டேன்" என்று சாப்பிடாமல் அழுது வாதாட, கடைசியாய்ப் புருஷன் தன் மனைவியைப் பிரியப்படுத்தக் கடையில் போய், அடுத்த மாசச் சம்பளத்தில் பணம் தருகிறேன் என்று, கடனாகப் புடவை வாங்கிக் கொடுத்தார். ஐயோ! இந்தப் பாலகன் பிறந்த நாள் கடன்படும் நாளா? நம்முடைய பாவக் கடன்களைத் தீர்க்கவல்லவா இப்பாலகன் பூமியில் உதித்தார். அப்படியிருக்க புது நகைகளும் புது வஸ்திரங்களும் இந்த நாளுக்கு வேண்டுமோ? இல்லை. இந்தப் பரிசுத்த புதுப் பாலகன் அந்தப் புது நாளில் புது இருதயம்தான் விரும்புகிறார், கேட்கிறார். இச்சையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவோமாக. "கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரி. 3: 17).

II. ஸ்திரீகளுக்குப் புதுமாதிரிக் காணிக்கை கொடுக்கும் மனம் வேண்டும்.

"எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5: 17).
காணிக்கை கொடுக்கும் வகையும் புதிதாயின.
"நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5).
காணிக்கை கொடுக்கும் முறையையும் புதிதாக்குகிறேன்.
இப்படி நாம் இவைகளை அர்த்தப்படுத்தக்கூடாதா?



நமது மிஷனெரி சங்கத்துக்கு காணிக்கை ஏதாவது கொடுங்கள் என்று வீடுகளிற் போய்த் தாய்மாரிடம் கேட்டால், சிலர்: முன்னே சிற்சில வியாபாரம் நடந்தது, கொடுத்தேன், இப்போ வரும்படி ஒன்றுமில்லையே என்பார்கள். ஆனால் சிறு தேட்டுத் தேடி விசேஷ தினங்களுக்கென்று உடுத்த பட்டுச் சேலை பெட்டிக்குள் சேரும். இந்தச் சிறு தேட்டுகள் ஆண்டவருடைய பெட்டிக்குள் வர இன்னும் எவ்வளவு காலம் செல்லும்? நாம் உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, நமது அருமைப் பிள்ளையாகிய சங்கம் கஷ்டமடைந்து குளிரால் வாடப்போடலாமா? கூடாது. நம்மை ஐசுவரியவான்களாக்க இயேசு பாலகன் தரித்திரன் ஆனரே. நம்முடைய ஐசுவரியம் அவருடையது.

பொன்னாபரணங்களை அணிந்து, விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் . . . . . (1 பேதுரு 3: 3) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். தாய்மாரே, திருநெல்வேலியின் தேவனுடைய பிள்ளைகளே, சுவாமி நமக்கு ஐசுவரியம், பொருள் தந்திருக்கிறார். நாமோ அவற்றைப் பிரயோஜனப்படுத்தும் வகை தெரியாமல் தட்டோலப்படுகிறோம். மிகுதியான பணங்களைத் தட்டானுக்கும், உயர்ந்த வஸ்திரங்களைப் பூச்சிகளுக்கும் என் இரையாகக் கொடுக்கிறோம்? தட்டானும் பூச்சிகளும் தின்னும் இரையைத் தெலுங்குநாட்டுப் பிள்ளைகள் சாப்பிட்டுத் திருப்தியடையட்டுமேன்! ஆண்டவருக்குக் கொடுக்கப் படிப்போமாக. இயேசுவின் பாதம் உட்கார்ந்து அந்தப் பரம உபாத்தியாரிடம் சொல்லித்தர கேட்போமானால், அவர் தெளிவாய்ச் சொல்லித்தருவார்.

நாங்கள் இருந்த ஓர் இடத்தில் வாலிபப் பெண்கள் ஏற்கனவே தாங்கள் தினம் செய்யும் கூலி வேலைகளில் கொஞ்சம் பணம் மீதம் பிடித்து, தவச உற்சவ தினத்தில் 8 அணா, 10 அணா, 12 அணா, சுமார் ஒரு ரூபாய்வரை கிரயமுள்ள வளையல்களை வாங்கிக் கையிற் போட்டுக்கொண்டு, பந்தலில் கூட்டங்கள் முடியும்வரை ஒருவருக்கொருவர் இந்த வளையல்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதை நான் கவனித்து, அந்தப் பிள்ளைகளைக் கூப்பிட்டு, தவச உற்சவத்தில் எவ்வளவு காணிக்கை போட்டீர்கள் என்று கேட்டேன். பிள்ளைகள் முறையே 3 பைஸ், 6 பைஸ் என்று சொன்னார்கள். உடனே நான் துக்கப்பட்டு, வளையல்காரனுக்கு மாத்திரம் பன்னிரண்டு அணா, சுவாமிக்கு மாத்திரம் மூன்று பைஸ். இது எவ்வளவு தப்பிதம். நமக்காகப் பாடுபட்ட ஆண்டவருக்குத்தான் நாம் அதிகமாய்க் கொடுக்கவேண்டும். அம்மாள்மாரே! வளையல்காரன் மோசம் போக்குவான். மேலும் வளையல்கள் சீக்கிரம் உடைந்துபோகும். இந்தப் பணங்களை ஆண்டவருக்குக் கொடுத்தால், அவர் பத்திரமாய் வைத்திருந்து நமக்கே மறுபடியும் தருவார். அவர் உண்மையுள்ளவர் என்று சொன்னேன். சில பிள்ளைகள் நான் சொல்லியவைகளை ஒப்புக்கொண்டு, அடுத்த தவச உற்சவ தினத்தில் வளையல்கள் வாங்க வைத்திருந்த பணங்களை என்னுடைய இந்திய மிஷனெரி சங்க காணிக்கைப் பெட்டிக்குள் போட்டார்கள். சுவாமிக்கே ஸ்தோத்திரம். இது ஓர் புதுமாதிரிக் காணிக்கை அல்லவா?

அதுபோலவே இக்காலத்திலும் கிறிஸ்மஸ் உடுப்புகள் வாங்கவும், பண்டிகைக் கொண்டாட்டங்கள் செய்யவும் வைத்திருக்கும் பணத்தை அல்லது ஓர் பாகத்தை மிஷனெரி ஊழியத்துக்குக் கொடுங்கள். வட்டியும், முதலுமாய்ப் பெற்றுக்கொள்வீர்கள்.

சகோதரிகளே, இந்த வருஷம் தயவுசெய்து ஒருவராவது துணிகளில் அதிகச் செலவு செய்யாதபடி கர்த்தரின் நாமத்தினாலே உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். சீர்மை தேசத்துப் பிள்ளைகள் காப்பியில் போடும் சீனியின் கிரயத்தை மிச்சம்பண்ணியும், ஊமைப் பிள்ளைகள் தாங்கள் சாப்பிடும் இறைச்சியின் கிரயத்தை மிச்சம்பண்ணியும், தங்களை ஒறுக்கும்போது, தாய்மாராகிய நாம் நம்மை ஏன் ஒறுக்கக்கூடாது? சுவாமியுடைய அருள்பெற்ற பிள்ளைகளுக்கு இது ஒரு கண்டிப்பான முறையாய்த் தோன்றமாட்டாதென்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிக்கும் ஆண்டவர் நம்மையும் உடுத்துவிப்பார். நாம் நமது ஆபரணங்களையும், இருப்பு வஸ்திரங்களையும், கிறிஸ்மஸ் உடுப்புப் பணங்களையும் ஆண்டவர் வேலைக்குக் கொடுப்போமானால், அவர் ரட்சிப்பின் வஸ்திரங்களை நமக்கு உடுத்தி, நீதியின் சால்வையை நமக்குத் தரிப்பிப்பார் (ஏசாயா. 61: 10).

இப்பத்திரிகையை வாசிக்கும் சகோதரிகள் யாவருடைய இருதயங்களையும் கர்த்தர் எவி எழுப்பிவிடுவாராக. சகோதரிகளாகிய நமதுமேல் சுவாமி தமது ஆவியை ஊற்றும்பொழுது கர்த்தருடைய வேலைக்குப் பணம் தடையின்றி வரும். கஷ்டம் நீங்கிவிடும்.

"எங்களுக்கல்ல கர்த்தாவே, எங்களுக்கல்ல
உமது நாமத்துக்கே மகிமை வரப்பண்ணும்" சங். 115: 1.

ஓர் சகோதரி.

# The Working Balance Fund

## செலவுக்கான கையிருப்பு நிதி.

உமது கரத்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முன் ஒப்புக்கொண்ட தொகை | | ... | 1513 | 4 | 6 |
| கனம். ஜேம்ஸ் டாஸ் ஐயரவர்கள் | இலங்கை | ... | 13 | 0 | 0 |
| ,, V. J. டேயர் ,, | (2 வரவு) செவல் | ... | 5 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ A. சுவி | பர்மா | ... | 30 | 0 | 0 |
| ,, N. A. சாமுவேல் | ,, | ... | 20 | 0 | 0 |
| ,, G. M. ராஜேந்திரம் | மலேயா F.M.S | ... | 1 | 4 | 0 |
| ,, C. சாமுவேல் | ,, | ... | 1 | 12 | 0 |
| ,, G. M. ரா. உண்டிபெட்டி | ,, | ... | 1 | 2 | 0 |
| ,, C. V. மாணிக்கம் (கைலாசபுரம்) | ,, | ... | 10 | 0 | 0 |
| ,, P. A. எபநேசர் ,, | ,, | ... | 5 | 0 | 0 |
| ,, G. P. ஆபிரகாம் ,, | ,, | ... | 5 | 0 | 0 |
| ,, G. துரைசாமி | ,, | ... | 1 | 12 | 0 |
| ,, G. சற்குணம் (கைலாசபுரம்) | இலங்கை | ... | 10 | 0 | 9 |
| ,, R. டேனியல் | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, Y. சாலொமோன் | ,, | ... | 2 | 0 | 0 |
| ,, A. P. பொன்னையா | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, A. P. டேனியல்ஸ் | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, S. சந்தனம் | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, T. ஆரோன் | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, J. தேவதாசன் | ,, | ... | 1 | 0 | 0 |
| ,, M. ஏசுதாசன் | ,, | ... | 3 | 0 | 0 |
| ,, G. T. அந்திப்பாஸ் | ,, | ... | 1 | 0 | 0 |
| ஓர் நண்பர் | ,, | ... | 1 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ S. ஏசுதாசன் | ,, | ... | 5 | 0 | 0 |
| ,, A. அருளானந்தம் (3 வரவு) | கும்பகோணம் | ... | 50 | 0 | 0 |
| ,, P. ரத்னமையா | நாகபட்டணம் | ... | 3 | 0 | 0 |
| ,, Y. குருபாதம் & Sons | ,, | ... | 3 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| தாழ்ந்த வரவு | ,, | 0 | 8 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ Dr. A. மதுரம் | திருச்சி | 6 | 0 | 0 |
| ,, A. B. சாமுவேல் | திருவண்ணாமலை | 2 | 0 | 0 |
| ,, V. வேதமணி | ,, | 2 | 0 | 0 |
| ,, N. P. தாமஸ் | கின்னத்துகடாவு | 2 | 0 | 0 |
| ,, J. S. ஆசீர்வாதம் (1 வரவு) | மேட்டுபாளையம் | 5 | 0 | 0 |
| ,, சா. P. ஏசுவடியான் | ஈக்காடு | 5 | 0 | 0 |
| Mrs. J. S. கொர்நேலியஸ் (2 வரவு) | அவனாசி | 20 | 0 | 0 |
| ,, தேவநேசம் அம்மாள் (1 வரவு) | சேலம் | 5 | 0 | 0 |
| ,, D. ஞானப்பிரகாசம் | மதிராஸ் | 5 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ I. J. அய்யாதுரை | தோர்ணக்கல் | 7 | 0 | 0 |
| ,, வேத ஏசுதாஸ் (2 வரவு) | எல்லாபட்டி | 2 | 8 | 0 |
| ,, J. ராஜமனுவேல் | ,, | 2 | 8 | 0 |
| ,, மாணிக்கமுத்தையா மூலமாய் | மதுரை | 21 | 0 | 0 |
| ,, G. டேனியல் | முணர் | 25 | 0 | 0 |
| ,, A. தேவதாசன் | ,, | 10 | 0 | 0 |
| ,, G. மனுவேல் | ,, | 10 | 0 | 0 |
| ,, ஆபிரகாம் ஜாண் | ,, | 5 | 0 | 0 |
| ,, S. ஏசுதாசன் | ,, | 5 | 0 | 0 |
| ,, L. E. சிரோமணி | ,, | 5 | 0 | 0 |
| ,, I. வேதமுத்து | ,, | 5 | 0 | 0 |
| ,, M. P. யோசுவா | ,, | 2 | 0 | 0 |
| ,, S. அரிவானந்தம் | ,, | 1 | 8 | 0 |
| ,, A. டேவிட் | ,, | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ,, | 1 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ V. சாமுவேல் (2 வரவு) | பாளையங்கோ | 8 | 0 | 0 |
| ,, J. D. B. டேவிட் (1 வரவு) | ,, | 10 | 0 | 0 |
| ,, ஜாண் பேசிங்கர் | ,, | 5 | 0 | 0 |
| Miss Joy. சாலொமோன் | ,, | 10 | 0 | 0 |
| A. தேவநேசம் அம்மாள் | எப்பத்தா பாடசாலை | 4 | 0 | 0 |
| மரியசுந்தரி அம்மாள் | ,, | 3 | 0 | 0 |
| நவமணி அம்மாள் | ,, | 3 | 0 | 0 |
| F. ரஞ்சிதம் அம்மாள் | ,, | 2 | 0 | 0 |
| J. தேவநேசம் அம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| V. கோயிற்பிள்ளை அம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| ஜீவரத்தினம் அம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| S. ஞானரத்தினம் அம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ,, | 0 | 8 | 0 |
| பாடசாலைப் பிள்ளைகள் | ,, | 1 | 8 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ D. எபனேசர் | ,, | 2 | 0 | 0 |
| ,, S. சாமுவேல் | ,, | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. சற்குணர் (2 வரவு) | திருநெல்வேலி | 5 | 0 | 0 |
| ,, S. பாலையா (3 வரவு) | ,, | 5 | 0 | 0 |
| பாஸ்றறேற்று சபைகள் | ,, | 10 | 0 | 0 |
| ஷை | உக்கிரமன்கோட்டை | 18 | 0 | 0 |
| ஷை | நாஞ்சாங்குளம் | 9 | 0 | 0 |
| ஷை | மணற்காடு | 7 | 8 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ ஞா. சாமிக்கண் | செவ்வல் | 2 | 0 | 0 |
| ,, M. ஜான் | திடியூர் | 3 | 0 | 0 |
| ,, R. S. யோசேப்பு | ,, | 5 | 0 | 0 |
| ,, G. போவாஸ் | ,, | 1 | 0 | 0 |
| Mrs. டேயர் (2 வரவு) | செவல் | 4 | 0 | 0 |
| தருமக்கண் முத்தம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| மலைச்செங்குளம் சபை | ,, | 3 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ V. ஆசீர்வாதம் B. B. S. | பண்ணைவிளை | 5 | 0 | 0 |
| ,, I. முத்தையா | ,, | 2 | 0 | 0 |
| ,, சுவாமிதாஸ் | ,, | 1 | 0 | 0 |
| Mrs. J. அல்பெட் | நல்லூர் | 10 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ V. ஞானமுத்து | கோவில்பட்டி | 5 | 0 | 0 |
| ,, A. தர்மராஜ் | சங்கரன்கோவில் | 5 | 0 | 0 |

**கார்டுகள் மூலமாய்:—**

| | | | | |
|---|---|---|---|---|
| ,, M. ஏசுதாசன் | சி. எம். காலேஜ் | 2 | 0 | 0 |
| ,, P. ராஜ்நாயகம் | ,, | 5 | 8 | 0 |
| ,, J. செல்லையா | ,, | 8 | 0 | 0 |
| ,, ஜேம்ஸ் அந்தோணி | ஹாஸ்டல் | 1 | 0 | 0 |
| ,, ஏசு. சாமுவேல் | ,, | 1 | 0 | 0 |
| S. P. | ,, | 4 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ,, | 1 | 12 | 0 |
| J. அற்புதம் | பாளையங்கோட்டை H. S. | 1 | 0 | 0 |
| செக். நார்மல் மாணாக்கிகள் | S. T. காலேஜ் | 5 | 0 | 0 |
| டார்லிங் அன்பு | ,, | 2 | 0 | 0 |
| | | 2039 | 14 | 6 |

## ஜெப விஷயங்கள்.

1. புதிதாய்த் தோர்ணக்கல் போர்டிங் பள்ளிக்கூடத்திற்கு 2 உபாத்திமார் கிடைத்ததற்காகவும் துதி.

2. கம்மாமெட்டில் நடந்த கூட்டங்களினால் உண்டான தேவ ஆசீர்வாதங்களுக்காகவும் துதி.

3. டில்லூர், கார்லா முதலிய சபைகளில் காணப்படும் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சைக்காகவும் துதி.

4. சிறுபிள்ளைகளுக்குள் நடத்தப்படும் பாலிய ஐக்கிய சங்க வேலைக்காகவும் சிலுவேரில் கடந்த வாரம் நடந்த மனமகிழ்ச்சிப் பண்டிகைக்காகவும் துதி, ஜெபம்.

5. புதிதாய்ப் போர்டிங் பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கிற பிள்ளைகளுக்காகவும் ஜெபம்.

6. ஒவ்வோர் கிராமத்திற்குச் சுற்றிலும் 3 மைலுக்குட்பட்ட கிராமங்களில் சுவிசேஷ பிரபல்ய வேலைசெய்யும்படி சபையார் ஒவ்வொருவரும் முயற்சிசெய்கிற இந்தக் காலத்தில் தேவ ஆவியானவர் வல்லமையாய்க் கிரியைசெய்யும்படியாகவும் ஜெபம்.

7. 'தோர்ணக்கல் மிஷனுக்கு ஓர் மிஷனெரியாகத் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கும் Mr. ஜாண் சாமுவேல் அவர்களுக்காகவும் அவர்களுடைய குடும்பத்திற்காகவும்;

8. 'செலவுக்கான கையிருப்பு நிதி' குறித்த காலத்திற்குள் கைகூடி வரத்தக்கதாக உற்சாகமான காணிக்கை படைக்கப்படவும் ஜெபம்.

## நமது பத்திரிகை.

"வர்த்தமானி" பத்திரிகைக்கு சந்தா பாக்கி வைத்திருக்கும் நண்பர் தயவுசெய்து உடனே சந்தாவை அனுப்பிவிக்க அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

Printed at the Darling Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

OCTOBER, 1915. Registered No. M.481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK 20 DEC 1915 MADRAS

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XII No. 10] அக்டோபர் 1915 [விலை பை 3

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 73
மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களின் கடிதம் 73
சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... 75
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... 76
கனம் பிரசிடென்று அவர்கள் செய்தி ... ... 78
புறமதஸ்தருக்குச் சுவிசேஷப் பிரசங்கம் ... 79

## பத்திராதிபர் குறிப்புகள்.

**தோர்ணக்கல் யுத்த பண்டு.**

நமது சங்க சம்பந்தமாய் உண்டாயிருக்கும் பணக் குறைவை நன்குணர்ந்த ஓர் சர்க்கார் உத்தியோகஸ்தர் "தோர்ணக்கல் யுத்த பண்டு" என்னும் ஓர் பிரபந்தம் எழுதி, இக்குறைவு நீங்கத்தக்கதாக நண்பர் யாவரும் விசேஷித்த காணிக்கை படைக்கும்படி நம்பத்திரிகை வாயிலாய் ஏவி எழுப்பினதை அறிவோம். பின்னால் சி. எம். எஸ். தாய்ச் சங்கத்தாரின் மிஷனெரி பத்திரிகை ஒன்றை வாசித்தபோது, சீமையிலும் சி. எம். எஸ். சங்க வருமானக் குறைவை நிவிர்த்திக்கும் நோக்கமாக "யுத்த பண்டு" ஒன்று ஆரம்பித்து, சபையின் பல அங்கங்கள் அதற்கு உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து வரும்படி அழைத்திருப்பதைப் பார்த்தோம். தம்முடைய வேலை விஷயமாய் கர்த்தர் எவ்வாறு ஒரே சிந்தையை பற்பல தேசங்களிலுமுள்ள தம்முடைய பிள்ளைகளின் மனதில் ஏககாலத்தில் எழுப்பி வருகிறாரென்று அறிந்து கர்த்தரைத் துதிக்கிறோம். இது நமது விசுவாசம் பலப்படுவதற்கு ஓர் யத்தனமே. "செலவுக்கான கையிருப்பு நிதி" விஷயமாய் ஜெபித்துவரும் நண்பர் தளராது ஜெபிக்கவும், காணிக்கை சேகரிக்கும் சிநேகிதரும் ஊழியரும் அதிகத் தைரியத்துடன் முயற்சிக்கவும் ஞாபகப்படுத்துகிறோம். இந்த இரண்டரை மாசங்களிலும் இந்நிதி விஷயமாய் வந்திருக்கும் காணிக்கைகளுக்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாளது மாச 10உவரை வரவு ரூ. 1513—4—6.

## மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களின் கடிதம்.

கர்த்தருக்குள் அருமையான சகோதரரே,

சுமார் 4½ மாசக்காலமாய் திருநெல்வேலியில் வேலை செய்து தோர்ணக்கல்லுக்குத் திரும்பிவிட்டேன். நான் அங்கு வந்திருந்த காலத்தில் என் சரீரசுகத்திற்காகவும் வேலைக்காகவும் ஜெபித்த நண்பர் எல்லோருக்கும் என் முழு இருதயத்தோடும் நன்றி சொல்லுகிறேன்.

திருநெல்வேலியில் நான் கர்த்தருடைய பரிசுத்த பணிவிடையை நடப்பித்த காலத்தில் இந்திய மிஷனெரி சங்க விஷயமாய் அதிக வேலைசெய்யச் சமயம் கிடைக்கவில்லை. என் வேலையின் தன்மையினால் அப்படியாயிற்று. ஆனால் ஜில்லா முழுவதையும் சுற்றிப்பார்த்து, சபைகளைக் கவனிக்கும்படி கிடைத்த சலாக்கியத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறேன்.

இந்திய மிஷனெரி சங்க விஷயமாய் விசேஷித்த முயற்சி எடுத்துக்கொள்ளும் சில இடங்களைப் பாராதது எனக்குப் பெரிய துக்கம். ஆனாலும் நான் பார்த்த அநேக இடங்களில் இதுவிஷயமாய்க் கண்ட அநுதாபத்திற்காக சந்தோஷிக்கிறேன். சபையார் அன்பாய் எனக்கு அளித்த வந்தனோபசாரப் பத்திரிகைகள் பலவற்றில் தாங்கள் இந்திய மிஷனெரி சங்கத்திற்காக ஜெபித்து உதவிசெய்வதாகவும், இனி முன்னிலும் அதிகமாய் உதவிசெய்வதாகவும் சொன்னது என் உள்ளம் களிக்கச்செய்தது. சிரிவில்லிபுத்தூரில் இவ்வித வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்து முடியவே, மக-ா-ா-ஸ்ரீ A. பெரியநாயகம் B. A. தலைமை ஆசிரியரவர்கள், தாங்களும் அந்தப் பாஸ்றறேற்றுகளும் இனி தோர்ணக்கல்லில் ஓர் பையனை ஆதரிப்பதாக வாக்களித்தார்கள். அவ்வாறே செய்ய ஆரம்பித்தும்விட்டார்கள். உக்கிரமன்கோட்டையில் கனம் V. தானியேல் ஐயரவர்கள் குமாரத்தியின் முயற்சியால் அச்சபையின் வாலிபப் பெண்கள் தோர்ணக்கல் ஆலய விளக்குக்சென்று பல காலமாய்ச் சம்பாதித்திருந்த ரூபாய் இருபத்தைந்தை வந்தனோபசாரப் பத்திரிகையுடன் கையளித்தார்கள். இவைகளுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சில இடங்களில் சங்கத்தைப்பற்றிய வாஞ்சை இன்னும் சரியாய் உண்டாகவில்லையென்றும் கண்டு துக்கப்பட்

டேன். விசேஷமாய், தெற்கேயுள்ள எஸ். பி. ஜி. சபைகளில் பொதுவாக ஜனங்கள் இச்சங்கத்தைத் தங்கள் சொந்தச் சங்கமாகப் பாவித்து, அதற்காக ஜெபித்து, அதற்காக ஆசையுடன் காணிக்கை கொடுக்கும் நிலைமைக்கு இன்னம் வரவில்லை என்று தோன்றிற்று. எல்லாச் சபைகளும் காணிக்கை கொடுத்துவந்தபோதிலும், கொடுக்கவேண்டிய பிரகாரம் இன்னும் கொடுக்கவில்லை என்று கண்டேன். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானியும் இன்னும் சரியாய் இச்சபைகளில் பிரசித்தமாகவில்லை. இக்குறையை நிவிர்த்தியாக்கும்படி குருமார் முயற்சிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலிச் சபையின் மகத்துவத்தை நினைத்து ஆனந்தங்கொள்ளுகிறேன். சபையின் தொகையைப் பார்த்தாலும், சபையாரின் ஸ்திதியைக் கவனித்தாலும், ஊழியரின் திறமையை நோக்கினாலும், இதைப்போலொத்த சபை இந்து தேசமெங்கும் கிடையாதென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வளவு தொகைப் பெருக்கமும், ஜனத்திரட்சியும், நல்ல ஸ்திதியும், மார்க்க பக்தியுமுள்ள சபைக்குத் தீராத அவசரம் சுயவெறுப்புள்ள அன்பே. ஏராளமான கிறிஸ்தவர்கள் கூடிய சபைகளும், அலங்காரமான ஆலயங்களும், நிலைமைக்குத் தகுந்த ஐசுவரியமும், நாகரீகமும் அறிவுமுள்ள இந்தச் சபை பிரிவினைகளாலும் அவபக்தியினாலும் சீர்கெட்டுப்போகாதிருக்கவேண்டுமானால், சுயவெறுப்புள்ள ஊழியமே மருந்து. இவ்வளவு காலமும் தேவாசீர்வாதத்தைத் தாராளமாய்ப் பெற்றுவந்திருக்கிற இச்சபைகள் இனிமேலும் தேவ அருள்பெற்று வளர்ந்தோங்கவேண்டுமானால், மற்றவர்களுக்கு இந்த நன்மையைக் கொடுக்கும்படி எழுந்திருந்து முயற்சிக்க வேண்டியது அவசியம். மற்றப்படி ஆவிக்குரிய உயிரற்று தேவாசீர்வாதமற்றுப்போவது கூடியகாரியம்.

இவ்வேலை இரண்டு விதமுள்ளது. முதலாவது திருநெல்வேலியிலேயே சுவிசேஷ பிரசங்கம். இரண்டாவது தூரதேசத்தில் நடக்கும் மிஷனெரி வேலை.

(1) திருநெல்வேலியிலுள்ள ஒவ்வொரு சபையும் பிரசங்கிக்கும் சபையாகவேண்டும். ஓய்வுநாள்தோறும் பிரசங்க வேலைசெய்யாத சபை இருக்கப்படாது. அவ்வித சபை சபையல்ல என்பது ஜனங்கள் மனதில் படவேண்டும். தென் திருநெல்வேலியில் திரளான கிறிஸ்தவர்களிருக்கும் சபைகளுக்குச் சமீபமாக பஞ்சமர் வசிக்கும் சேரிகள் வேண்டிய மட்டும் உண்டு. இந்த ஜனங்களுக்கு இடைவிடாமல் பிரசங்கித்து, அவர்களைச் சபையில் சேர்க்கும்படி முயற்சித்து, அவர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைத்துப் படிக்கும்படி ஏற்ற பிரயாசம் எடுத்துக்கொள்ளுவது சபையார் கடமை. இவ்வித ஊழியத்தை அவமதிப்பார்களானால், சபையார் ஒருபோதும் எவ்விஷயத்திலும் தேறமாட்டார்கள். எவ்வளவு அறிவு இருந்தபோதிலும், எத்தனை ஐசுவரியம் இருந்தபோதிலும், எப்பேர்ப்பட்ட ஆலயமிருந்தபோதிலும், கிட்ட இருக்கும் எளியவர்களையும், அவமதிக்கப்பட்டவர்களையும் திருச்சபைக்குள் சேர்க்கும்படி ஓர் சபையார் முயற்சிக்காதபக்ஷத்தில் இச்சிலாக்கியங்கள் அச்சபைக்கு ஜீவனாக மாட்டா! பக்கத்துப் பஞ்சமர் இரத்தப்பழி அச்சபையின் பேரிலேயே இருக்கும் என்பதை நினைத்துக்கொள்வோமாக. மேலும், நாம் காணும் சிறியவர்களாகிய இந்தச் சகோதரரை ஒரு கையால் தொட்டு, பிடித்து நம்மோடுகூட உயர்த்திக் கொள்ளவில்லையானால், நாம் காணாத தேவனை நமது மறுகை எட்டிப்பிடிக்கலாம் என்று நினைக்கக்கூடாது. கிறிஸ்தவர்களாகிய நாம் புறமதஸ்தராகிய நமது சகோதரருக்குக் காவலாளிகள்தான். அவர்களையல்லாமல் நாம் பூரணராகமுடியாது!

(2) இத்தனை ஏராளமான கிறிஸ்தவர்கள் இருக்கும் திருநெல்வேலி சபைக்கு இந்தியா முழுவதைப்பற்றிய உத்தரவாதமும் உண்டு. திருநெல்வேலியையும் தமிழ்நாட்டையும் இவ்வாறு ஆசீர்வதித்த தேவன், இச்சபையை இந்துதேசத்திற்கு ரக்ஷிப்பாகத் தெரிந்திருக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. இதுகாரியத்தைப்பற்றி ஏனோதானோ என்றிருப்போமாகில், குற்றம் நமதுபேரில் சுமரும். இந்துதேசத்தில் சுவிசேஷம் பிரபல்யமாகாத பாகங்களுக்கு திருநெல்வேலி செய்யவேண்டிய கடமையைச் செய்வதற்கு இந்திய மிஷனெரி சங்கம் ஏற்பட்டது. இச்சங்கம் திருநெல்வேலி சபைக்கு ஓர் கிருபையின் யத்தனமாக அருளப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி சுயநயமுள்ளதும், லௌகிக சிந்தை நிறைந்ததும், தேவ அன்பற்றதுமான சபையாய்ப் போய்விடக்கூடாது என்று சித்தங்கொண்ட தேவன், இச்சங்கத்தை ஸ்தாபிக்கும்படி தமது பிள்ளைகளை ஏவினாரென்று எண்ணலாம். திருநெல்வேலியையும் அதின் பிள்ளைகளையும் கைவிட்டுவிடாமல், இகபர ஆசீர்வாதங்களை இடைவிடாமல் அருளிச்செய்ய ஆசைகொண்ட ஆண்டவர் அவ்வாசீர்வாதத்திற்கு அவர்கள் பாத்திரராகத்தக்கதாக இதை நியமித்தார் என்கலாம்.

காரியம் இப்படியானால், இச்சங்கத்தை வெறுக்கிறவர்கள் தங்கள் சபையின நல்வாழ்வை வெறுக்கிறார்கள். இதற்குச் சபையின் பணம் போனால், நஷ்டமாகிவிடுமென்றெண்ணுகிற ஊழியரே சபையை உள்ளபடி நஷ்டப்படுத்துகிறார்கள். வெளியே உள்ளவர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையை நன்குணர்ந்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்காகத் தங்களை வெறுப்பதினால் ஜனங்களுக்கு வரக்கூடிய தேவாசீர்வாதம் வராதபடி தடுக்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களே.

ஆகையால், சகோதரரே, உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் இச்சங்கத்திற்காக உழைக்கும்படி உங்களை மன்றாடுகிறேன். இதற்காக நீங்கள் மற்றவர்களை ஜெபிக்கப்பண்ணும்போதும், மற்றவர்கள் இதற்காக சுயவெறுப்புடன் காணிக்கை கொடுக்கும்படி ஏவும்போதும், இச்சங்கத்திற்குக் காணிக்கைகளைச் சேகரிக்கும்போதும்—ஜனங்களுக்கு மெய்யாய் நன்மைசெய்கிறீர்கள் என்றறிந்துகொள்ளுங்கள். இச்சங்கமும் இவ்வூழியமும் திருநெல்வேலிச் சபைக்கு இன்றியமையா அவசியம்.

கர்த்தர்தாமே உங்களனைவரோடும்கூட இருப்பாராக.

வி. எஸ். தோர்ணக்கல்.



## 23-ம் சங்கீதம்.

சங்கீதங்களெல்லாவற்றிலும் மகா சிரேஷ்டமான கீதம் இதுவே. இதின் இங்கித வாசகங்களையே சிறியோர், முதல் முதல் பாடம்பண்ணுகிறார்கள். இதின் அமிர்த மொழிகளையே பக்தர் மரணப்படுக்கையில் சொல்லித் தங்கள் கண்களை மூடுகிறார்கள். "தேவப்பிதா என்தன் மேய்ப்பனல்லோ; சிறுமைத் தாழ்ச்சியடைகிலனே" என்ற கீர்த்தனையைப்போல தேசமெங்கும் எச்சமயத்திலும் பாடப்படும் கீர்த்தனை வேறொன்றுண்டோ?

இளைஞனாயிருந்தபோது பெத்லகேமில் ஆடுமேய்த்த தன் அநுபவத்தை வைத்து, பிற்காலத்தில் தாவீது பாடின கீதமாயிருக்கவேண்டும். புத்திஹீனனையும், தவறிப்போகிறவனையும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத் திராணியற்றவனையும், சத்துருக்களால் சூழப்பட்டவனையுமிருக்கும் தனக்கு தேவன் எவ்வளவு அன்பையும் பராமரிப்பையும் காண்பிக்கிறார் என்று உணர்ந்த தாவீது, இவ்வன்பு ஒரு மேய்ப்பன் தன் பெலவீன ஆடுகளைப் பராமரித்துக் காப்பாற்றும் அன்புபோன்றதல்லவா என்று நினைவுகூர்ந்தவனாய் இவ்வலங்கார கீதத்தைப் பாடுகிறான். தான் மேய்த்த ஆடுகளில் ஒன்று: "தாவீது என் மேய்ப்பன்; எனக்குக் குறைவில்லை" என்று எவ்வாறு உண்மையாய்ச் சொல்லக்கூடுமோ அவ்வாறே பலவீன ஆடுபோன்ற தாவீது தன் தேவனைப்பற்றிச் சொல்லுகிறான்.

"நானே நல்ல மேய்ப்பன்" என்று திருவாய்மலர்ந்தருளின கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது ஆடுகளாகிய நமக்குப் பாராட்டும் அன்பும், அருளும் கிருபைகளும் இதில் உவமையாகக் கூறப்படுகிறதென்று நினைத்து நாம் இதைப் படிக்கத்தகும். கர்த்தராகிய இயேசு நமது நல்ல மேய்ப்பர். அவரே தமது ஆடுகளுக்காக ஜீவனையும் கொடுத்தார். அவர்களுக்கு ஒரு குறைச்சலுமில்லாதபடி செய்கிறவரும் அவரே. அவர்களுக்கு இளைப்பாறுதல் கொடுக்கிறவர் அவர். அவர்கள் உள்ளும் புறமும் சென்று, மேய்ச்சல் கண்டடையும்படி செய்கிறவர் அவர். அவர்கள் மரண நிழலில் நடக்கும்போதும், கூட இருக்கிறார். சத்துருக்கள் மத்தியில் அவர்களோடு போஜனம்பண்ணுகிறார். அவர்களுக்கு திவ்ய ஞானாகாரம் அருளுகிறார். தமது ஆவியால் அவர்களை அபிஷேகம்பண்ணுகிறார். ஜீவத்தண்ணீருள்ள நதிகள் அவர்கள் உள்ளத்திலிருந்து வழிந்து, மற்றவர்களுக்குப் பாயும்படி செய்கிறார். கிருபையினாலும் இரக்கங்களினாலும் அவர்களை முடிசூட்டுகிறார். அவருடைய சமுக பிரசன்னத்தை இவ்வுலகத்திலும் அருளுகிறார், நித்தியத்திலும் அருளுகிறார். அவருடைய திருச்சமுக வாசஸ்தலத்திலே சதாகாலமும் வாழ்ந்து சுகிப்பதே விசுவாசியின் பங்கு.

இச்சங்கீதத்தைப் பொருள்படி இரண்டு சரணமாகப் பிரிக்கலாம்.

### I. யெகோவா மேய்ப்பர்.

யெகோவா என் மேய்ப்பர், எனக்குக் குறைவில்லை.<br>
பசும் புற்றரையில் அவர் என்னை மடக்குகிறார்;<br>
மூசிப்பாறும் தண்ணீர்களண்டையில் அவர் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்;<br>
(இவ்வாறு) அவர் என் ஆத்துமாவைப் புதுப்பித்து,<br>
தமது நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.<br>
ஆம்! நான் மரண நிழலின் பள்ளத்தாக்கிலே நடந்தாலுங் கூட, எத்தீங்குக்கும் நான் பயப்படேன்;<br>
ஏனெனில் தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்;<br>
உமது தடியும் உமது கோலும் என்னை ஆறுதல்படுத்தும்.

கர்த்தராகிய இயேசு நமது மேய்ப்பராயிருக்கிறதால், நமக்குக் குறைவின்றிக் கிடைப்பது எவை?

(1) **இளைப்பாறுதல்** மத். 11: 28. வெயிலில் நடந்து, கால் நொந்து வேதனைப்படும் ஆடுகளுக்குப் பசும்புற்றரை கிடைப்பதுபோல, இவ்வுலகத்தின் தொல்லை, துன்பங்கள் மத்தியிலிருக்கும் நமக்கு இயேசுநாதர் இளைப்பாறுதலை அருளுகிறார்.

(2) **ஞானாகாரம்.** பசிக்குப் புல்லும், தாகத்துக்கு மூசிப்பாறும் நீரும் இருக்குமாப்போல, அருள்நாதரும் தமது பிள்ளைகளைத் தமது திருவசனத்துக்கும் ஜெபத்தியானத்துக்கும் வழி நடத்துகிறார். தமது வசனத்தை அவர்களுக்கு விஸ்தரித்து, அவர்கள் இருதயம் கொழுந்துவிட்டெரியும்படி செய்கிறார்.

(3) **புது உயிர்.** மூசிப்பாறின ஆடுகள் புதுஉயிரடைந்து, மீதியான நடை நடக்க பெலன்கொள்ளுமாப்போல நமது ரக்ஷா பெருமானும் களைத்து, இளைத்து, தவித்துப்போகும் நமக்கு புது ஜீவனும் புதுபெலனும் அப்போதைக்கப்போது அருளுகிறார்.

(4) **பரிசுத்த நடக்கை.** இவ்வாறு பெறும் புது பெலத்தைக்கொண்டு, மனுஷருக்கு முன்பாக உத்தமமும் நீதியுமான பாதையிலே நடக்க அவர் அருள்புரிகிறார்.

(5) **திருச்சமுகம்.** எப்பேர்ப்பட்ட பாதையில் ஆடுகள் போனாலும் மேய்ப்பன் கூடச் செல்லுவான். ஒவ்வோர் சமயத்தில் அபாயமும் மோசமும் நிறைந்த இருண்ட பள்ளத்தாக்கிலும்கூட இருப்பவன் மேய்ப்பன். அப்படியே ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் அபாயம் நிறைந்துள்ள இடத்திலும், மரணம் நிழலிடும் சமயத்திலும் "இதோ . . . . சகல நாட்களிலும் உங்களோடேகூட இருக்கிறேன்" என்று வாக்கருளின இரட்சகர் கூடவே இருக்கிறார். அப்படியானால் நமக்கென்ன குறை?

(6) **ஆறுதல். "தடி"** என்பது பலஸ்தீனா தேசத்தின் மேய்ப்பர் துஷ்ட மிருகங்கள்மேல் எறியும்படி வைத்துக்கொள்ளும் கனத்த தடிக்கம்பு. இவ்வித தடி மேய்ப்பன் கையிலிருக்கையில் ஆட்டுக்குப் பயமேன்? **கோல்** என்பது கொளுக்கி உள்ள மேய்ப்பனுடைய ஊன்று கம்பு. ஆடு வழி விலகிப்போகும்போது, அதை வழிமறிக்கத்தக்க கோல் மேய்ப்பன் கரத்திலிருக்குங்கால், ஆட்டுக்குப் பயமேன்? சத்துருவை ஜெயிக்கும் வல்லமையும், நம்மைத் தீமையினின்று விலக்கிக் காக்கும் தயாளமும் அருள்நாதரிடமும் இருப்பதால், எவ்வித அபாய சோதனை நடுவில் நடக்க நேரிட்டாலும், தைரியமுள்ளவர்களாயிருக்கக்கூடும்.

II. யெகோவா விருந்தளிக்கிறவர்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துகிறீர்.

என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணியிருக்கிறீர்.

என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் மாத்திரம் என்னைத் தொடரும் (R. V. Margin).

நான் கர்த்தருடைய வீட்டிலே சதாகாலமும் நிலைத்திருப்பேன்.

அருள்நாதர் தம்மை நம்பும் பக்தருக்கு அருளும் கிருபைகளை வேறு உபமானத்தால் விவரிக்கிறார்.

(1). **பந்தி.** மேய்ப்பன் தன் கோலால் சில வேளைகளில் மரத்தின் கிளைகளைத் தாழ்த்தி, ஆடுகள் மேய்ச்சலைக் கண்டடையும்படி செய்கிறதுபோல, இயேசு சுவாமி தமது தாசருக்கு வானத்தின் ஆகாரமும், ஜீவ அப்பமுமாகிய தம்மை அவர்கள் ஆத்ம சத்துருக்கள் நடுவில் அவர்களுக்கு ஈகிறார். திருப்பந்தியாகிய பரிசுத்த நற்கருணையில் விசுவாசிகளுக்கு அவர் தம்மை ஆகாரமாகவும் ஜீவனாகவும் அருளி, சகல சத்துருக்களையும் ஜெயிக்க அவர்களைப் பலப்படுத்துகிறார். மீட்ட ஆட்டைத் தம் அதிதியாக்கிக்கொண்டார்.

(2) **தைலாபிஷேகம்.** விருந்தளிக்கிற ஒருவன் பலப்படுத்தும் போஜனம் மாத்திரமல்ல, முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயும் கொடுக்கிறதுபோல, இயேசுநாதர் தம்மை ஆகாரமாகக் கொடுக்கிறதோடு, தமது ஆவியின் அபிஷேகத்தையும் தந்திருக்கிறார். "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது (1 யோ. 2: 27).

(3) **வழிந்தோடும் ஜீவன்.** ஆகாரத்தையும் தைலாபிஷேகத்தையும் தேவையானமட்டும் தருகிறார். மற்றவர்களுக்கும் வழிந்து பாய்ந்தோடும்படி சம்பூரணமாய்த் தருகிறார். இயேசு சுவாமி அருளும் ஜீவன் பூரண ஜீவன், வழிந்தோடும் ஜீவன். என்ன கிருபை!

(4) **மெய்ப் பாக்கியம்.** "நன்மையும் கிருபையும் மாத்திரம் என்னைத் தொடரும்." என்ன துன்பம் நேரிட்டாலும் எந்தக் கஷ்டம் வந்து பீடித்தாலும், சகலமும் நன்மையும் கிருபையும் நிறைந்ததாகவேயிருக்கும் என்று பக்தன் காண்கிறான். மெய்ப் பாக்கியத்துக்கு இரகசியம் இதே.

(5) **தேவ சமுக சஞ்சாரம்.** இனி என்ன? இன்றும், என்றும் யெகோவாவின் ஆலயத்தில் வாசம்பண்ணி, அவர் திருமுகத்தைத் தரிசித்து வாழுவேன் என்று சங்கீதக்காரன் பாடுகிறான். இப்பூலோகத்தில் இயேசு சுவாமியின் சமுகத்தில் வாசம்பண்ணுகிற பக்தன் பரலோக பாக்கியத்தை இங்கே ஆரம்பித்துவிடுகிறான்.

கர்த்தராகிய இயேசுவே, நீரே என் மேய்ப்பர்,
எனக்குக் குறை யாது?

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

கடந்த மாதம் புல்லூர், மேடுதப்பல்லி, சௌட்டப்பல்லி, பாபோஜிகூடம், உல்லிப்பல்லி, அப்பாய்பாளையம், தம்மாய்கூடம், பீரோல், சிலிவேரு, தேவுனி சங்கேத முதலிய இடங்களிலுள்ள சபைகளைச் சந்தித்து வந்தேன். சிலதினங்களாக வீட்டைவிட்டு வெளியே வேலைசெய்யக்கூடாதபடி ஓயாத மழையும் வெள்ளமுமாயிருந்ததினால், சபைகளிலாவது இதரமதஸ்தருக்குள்ளாவது அதிக வேலை செய்ய வழியில்லாமற் போயிற்று. புல்லூர், மேடிதப்பல்லிக்குப் போயிருந்த தினங்கள் மழையில்லாமல் கடும் வெயிலெரித்தது. குளங்களில் தண்ணீரில்லை. ஜூனில் மழை ஆரம்பிக்கும். ஆகஸ்ற்று மத்தியான அக்காலம் வரையும் சரியான மழை பெய்யவில்லையே; குழங்களில் தண்ணீரில்லாததால், வயல் விதைக்கவில்லையே; பாவின நெல் நாற்றுகளும் பட்டுப்போகிறதே; காட்டுப்பயிரும் வாடிவதங்குகிறதே; கூலிவேலை கொடுப்பாரில்லையே; அகவிலை உயர்ந்துபோகிறதே; தானிய தவசங்களுள்ள தனவான்கள் பட்டறைகளைத் திறவோம், காலநிலை தீர்மானிக்கப்படுமட்டும் தானியங்களை கட்டி நிறுத்துவோம் என்கிறார்களே; ஏழைகளாகிய நாங்கள் எப்படிப் பிழைப்போம் என்று முறைப்பாடு செய்துகொண்டிருக்கும் காலமாயிருந்தது. ஜனங்கள் கூடி, கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தி, தங்கள் மீறுதல்களை ஒப்புக்கொண்டு, நல்ல தீர்மானம்பண்ணி, கர்த்தர் கிருபையாக இறங்கி மழையைக் கட்டளையிடும்படி வேண்டிக்கொண்டார்கள். ஜெபம் முடிந்து வெளியே வரவே, மழையின் சிறுதுளிகள் அவர்கள் மேல் விழுந்தது. நம்பிக்கையுடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். சாயந்தரம் மழை நன்றாய், பெய்தது. காட்டுப்பயிர்கள் தப்பிக்கொண்டதென்று சந்தோஷித்தார்கள். அடுத்தநாள் நான் பாபோஜிகூடம், உல்லிப்பல்லி, அப்பாய் பாளையத்துக்குப் போய், மீளவும் நான்காம் நாளில் திரும்பிவந்தேன். குளங்களெல்லாம் நிரம்பப் பெருகியிருந்தது. இச்சமயத்தில் கர்த்தர் இரங்கி மழையைக் கட்டளையிட்டிராவிட்டால், ஜனங்கள் கொடிய பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு மகாசங்கடப்படவேண்டியிருந்திருக்கும். ஜனங்களுக்கும் கர்த்தர்பேரிலிருந்த விசுவாசம் பலப்படுவதற்கும் ஏதுவாயிற்று. மழை பெய்து குளம் பெருகினபின் ஒரு ஓய்வுநாளில், இந்து ஸ்திரீயன கூட்டு நடுகைக்காரி கிறிஸ்தவர்களை நடுகைக்கு வர அழைத்தபோது, உன் தாத்தா செத்துக்கிடந்தாலும் இன்று வரமாட்டோம் என்று தீர்க்கமாய்ச் சொல்லிவிட்டார்களாம்.

மேடிதப்பல்லியிலுள்ள ஒட்டர்கள் அந்த ஊர் துரைக்கு ஒரு கிணற்றைத் தூர்வை எடுத்துக்கொடுக்கத் தாமதித்தைப் பற்றி, துரை கோபம்கொண்டு, அவர்கள் வேலையில்லாதிருந்தும் அதிகச் சம்பிரமமாய் ஜீவிக்கிறார்கள். ஆதலால் களவு செய்து பிழைக்கிறவர்களாயிருக்கவேண்டுமென்று சொல்ல, சில சாட்சிகளை ஏற்படுத்தி, போலீஸாரை அனுசரித்து நைஒட்டர்களை நன்னடக்கை ஜாமீன் கொடுக்கும்படி அனுமக்கொண்டா ஜெயிலில் அடைத்துவைத்திருக்கிறது. இவர்களெல்லாரும் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்று விரும்பியும், முற்றும் குடிவெறியில் மூழ்கினவர்களாயிருந்ததால் அதை விட்டுவிடுவது சாத்தியமாகுமட்டும் அவர்களைச் சேர்த்துக்



5. பக்தன் யாக்கோபு போராடியே
விக்கினத்தில் தற்காக்கப்பட்டான்
எக்காலமும் ஜெபமே செய்வோர்
தக்க பலனும் பெற்றுக்கொள்வார்.

---

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, நமது சங்கத்தின் கமிற்றிமார் ஓர் மிஷனெரியைத் தெலுங்குநாட்டுக்கு அனுப்பும்படி தீர்மானித்து,

**ஓர் புது மிஷனேரி.** சரண்டை போர்டிங் ஸ்கூல் தலைமை ஆசிரியராகிய Mr. ஜான் சாமுவேல் அவர்களை ஏக சம்மதமாய் மிஷனெரி வேலைக்கு அங்கிகாரஞ்செய்திருக்கிறார்கள். இவர்கள் எவ். ஏ. பரீக்ஷை தேறினவர்கள். அவர்களுடைய மனைவி சேராடக்கர் காலேஜில் மெற்றிரிகியுலேஷன் பரீக்ஷை பாசானவர்கள். இருவரும் சுவிசேஷ ஊழியத்தில் அநுகூலமான வேலைசெய்து, நற்சாட்சிபெற்றவர்கள். கர்த்தர் அவர்களை இவ்வூழியத்திற்கென்றும் தமது ஆவியினால் அபிஷேகம் செய்தருளுவாராக.

நம் தேசத்தில் ஒரு மணி நேரத்தில் 1000 பேர் ரக்ஷா பெருமானின் அன்பை அறியாது நித்தியத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். என்ன பரிதாபம். "இந்தியாவை கிரீடமாக அணியத் தகுந்தவர் இயேசு பகவானே.

**இந்தியா.** அவரையன்றி, வேறெவராவது அதைப் பெறமாட்டார்கள்" என்று ஒரு இந்து முக்யஸ்தன் கூறுகிறார். "நம் தேசம் கிறிஸ்துவுக்குச் சொந்தமாக எவ்வளவு காலம் பிடிக்கும்? இந்தியா தம்முடையதாகும்படி சிலுவைநாதர் இன்னும் எவ்வளவு காலம் காத்து நிற்கவேண்டும்? என்று ஒருவர் கேட்கிறார். கிறிஸ்தவர்கள் தங்கள் உத்தரவாதத்தை உணராததே இந்தியாவில் இயேசுவின் ராஜ்யம் விருத்தியாவதற்கு இருக்கும் பெரிய தடையென்று இன்னொருவர் எழுதுகிறார். "கிறிஸ்தவனெவ்வொருவனும் தான் ஒரு மிஷனெரியென்ற சத்தியத்தை உணர்ந்தவனாய் ஜீவிக்கவும் உழைக்கவும் வேண்டு"மென்று **தூளோவர்** என்னும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை வித்யாபாரகர் பாளையங்கோட்டை கிறிஸ்தவர்களை ஏவிஎழுப்பிவிட்டனர்.

"விடியற்காலங்களிலும் இராத்திரி வேளைகளிலும் நேரப்பட பரிசுத்தவான்கள் ஜெபத்திலும் மன்றாட்டிலும் தரித்திராததே சுவிசேஷ ஊழியம் தாமதமாயும் தளர்வோடும் நடக்கிறதற்குக் காரணம்."

---

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும்.

**மானேஜர்:** மக-ா-ா-ஸ்ரீ V. சாமுவேல் அவர்கள், B. A. பாளையங்கோட்டை.

**Editor:** The Secretary I. M. S. T.

## The Working Balance Fund

### செலவுக்கான கையிருப்பு நிதி.

உமது கரத்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| முன் ஒப்புக்கொண்ட தொகை | ... | ...848 | 1 | 0 |
| கனம் J. H. பட்டர்பிரான் ஐயரவர்கள்; | பாளையங்கோட்டை | 25 | 0 | 0 |
| ,, P. வேதமுத்து ,, | யாக்கோபுபுரம் ... | 2 | 0 | 0 |
| ,, J. விஸ்வாசம் ,, | தஞ்சாவூர் ... | 1 | 0 | 0 |
| ,, T. S. உவிற்றன் ,, | நாகபட்டணம் ... | 2 | 0 | 0 |
| ,, D. பாக்கியநாதன் ,, | சாயர்புரம் ... | 45 | 0 | 0 |
| ,, Y. மனுவேல் ஐயரவர்கள் ... | முக்குப்பீறி | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ G. கோவிற்பிள்ளை | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, நல். பா. மோசே | ஷை ... | 2 | 0 | 0 |
| ,, க. பாக்யநாதன் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, க. வெள்ளையா | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, சு. தா. மோசே | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, கு. யோசேப்பு | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, க. சு. துரைபாண்டியன் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, தாழ்ந்த வரவு | ஷை ... | 4 | 10 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ G. M. பாலையா | அகப்பைகுளம் ... | 1 | 0 | 0 |
| ,, M. யோசேப்பு | ஷை ... | 1 | 0 | 0 |
| பரமாயி அம்மாள் | ஷை ... | 2 | 0 | 0 |
| மா. மரியம்மாள் | ஷை ... | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ஷை ... | 4 | 10 | 6 |
| மக-ா-ா-ஸ்ரீ ஆபிரகாம் | வாளையடி ... | 1 | 8 | 0 |
| ,, S. V. M. பொன்னையா | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, M. திரவியம் | ஷை ... | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ஷை ... | 1 | 12 | 0 |
| சபையார் | வகுத்தான்குப்பம் ... | 1 | 3 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ பி. ஈசாக்கு | ஒய்யான்குடி ... | 1 | 0 | 0 |
| ,, கோ. ஏசுவடியான் | ஷை ... | 1 | 0 | 0 |
| சபையார் | ஷை ... | 15 | 2 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ N. ஐசக் | குளித்தலை ... | 10 | 0 | 0 |
| ,, Dr. மதுரம் | திருச்சி ... | 20 | 0 | 0 |
| ,, A. G. பிச்சமுத்து | தஞ்சாவூர் ... | 3 | 0 | 0 |
| ,, W. லாமெக் | ஷை ... | 3 | 0 | 0 |
| ,, A. சௌந்திரபாண்டியன் | ஷை ... | 3 | 0 | 0 |
| ,, V. தேவதாசன் | ஷை ... | 2 | 0 | 0 |
| ,, A. J. செல்வ பாண்டியன் | ஷை ... | 2 | 0 | 0 |
| ,, A. குணபாண்டியன் | ஷை ... | 2 | 0 | 0 |
| ,, V. மோசஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, உல்லியம்தாஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, E. P. ராஜய்யா | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, S. A. இஸ்ரவேல் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, S. டேனியல் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, M. ஏசுதாசன் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, M. சாமுவேல் ராஜ | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, E. A. ஹாரீஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| ,, J. G. மனோமணி | ஷை ... | 1 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| Mrs. G. D. எட்வார்ட் | தஞ்சாவூர் ... | 2 | 0 | 0 |
| " P. துரைபாண்டியன் | ஷை ... | 1 | 0 | 0 |
| " W. நவமணி | ஷை ... | 1 | 0 | 0 |
| " A. C. பால் | ஷை ... | 1 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ ராவ் சாகிப் ஆபிரகாம் பண்டிதர் | ... | 20 | 0 | 0 |
| " J. B. டேவிட் | அரந்தாங்கி ... | 5 | 0 | 0 |
| " D. P. ஏசுதாசன் | ஷை ... | 5 | 0 | 0 |
| " A. அருளானந்தம் 2-வரவு | கும்பகோணம் | 25 | 0 | 0 |
| " K. கருப்புசாமி | நாகபட்டணம் ... | 3 | 0 | 0 |
| " I. உல்லியம்ஸ் | ஷை ... | 3 | 0 | 0 |
| " S. ஜான் | ஷை ... | 1 | 0 | 0 |
| " S. A. S. தங்கமுத்து | ஷை ... | 1 | 0 | 0 |
| " A. தெய்வநாயகம் | ஷை ... | 2 | 0 | 0 |
| " S. ஞானக்கண் | ஷை ... | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ஷை ... | 0 | 4 | 0 |
| Mrs. G. பொன்னுசாமி | சேலம் ... | 1 | 2 | 0 |
| " J. S. தேவதாஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| " ஏசுதாஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| " S. அமிர்தநாயகம் | ஷை ... | 1 | 0 | 0 |
| " A. ஞானபுதம் | ஷை ... | 1 | 0 | 0 |
| " S. சவரிமுத்து | ஷை ... | 1 | 0 | 0 |
| " D. மனுவேல் | ஷை ... | 1 | 0 | 0 |
| " A. ஜான் | ஷை ... | 1 | 0 | 0 |
| " திரவியம் | ஷை ... | 1 | 0 | 0 |
| " துரைராஜ் | ஷை ... | 1 | 0 | 0 |
| தாழ்ந்த வரவு | ஷை ... | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ N. P. தாமஸ் | இன்னத்துக்கடாவு ... | 1 | 0 | 0 |
| " A. தேவதாசன் | விரதாச்சலம் ... | 30 | 0 | 0 |
| " A. V. தாமஸ் | உதகமண்டலம் ... | 5 | 0 | 0 |
| Mrs. கொர்நேலியஸ் | ஆவணசி ... | 20 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ V. அப்பாத்துரை | மசூலிபட்டணம் ... | 5 | 0 | 0 |
| " பால் துரைசாமி & இந்திய கிறிஸ்தவர்கள் | குண்டக்கல் ... | 70 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. T. பால் | கல்துருட்டி ... | 2 | 0 | 0 |
| " A. V. வேதக்கண் | ரங்கூன் ... | 10 | 0 | 0 |
| " M. A. ராயப்பன் | பர்மா ... | 1 | 0 | 0 |
| " G. மாணிக்கம் | ராமநாதபுரம் ... | 1 | 0 | 0 |
| " V. M. சாமுவேல் | இலங்கை ... | 5 | 0 | 0 |
| " ஆசிர். ஜெசுதாஸ் | ஷை ... | 5 | 0 | 0 |
| " G. மனுவேல் | இலங்கை ... | 1 | 0 | 0 |
| " P. பரமானந்தம் | ஷை ... | 1 | 0 | 0 |
| " D. தேவதாஸ் | ஷை ... | 1 | 0 | 0 |
| " G. ஜெயமணி | கைலாசபுரம் ... | 12 | 0 | 0 |
| " M. தேவசகாயம் | ஷை ... | 25 | 0 | 0 |
| M. அன்பம்மாள் | சிவகாசி ... | 5 | 0 | 0 |
| நக்ஷத்திரக் கூட்டம் | ஷை ... | 2 | 0 | 0 |
| ஹாஸ்டல் &c. | ஸ்ரீவில்லிப்புத்தூர் ... | 2 | 0 | 0 |
| Mrs. A. ஜேக்கப் | பாளையங்கோட்டை... | 5 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ பாலையா சாமுவேல் | சாகுபுரம் ... | 20 | 0 | 0 |
| " மிக்கேயல் | ஆழ்வார்குறிச்சி ... | 10 | 0 | 0 |
| " M. D. ஏசுதாஸ் | தென்காசி ... | 2 | 0 | 0 |
| " சபை | பேர்ப்பிலான்குளம் ... | 12 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. முத்தையா | பேர்ப்பிலான்குளம் ... | 7 | 0 | 0 |
| " A. ஞானமணி | ஷை ... | 1 | 0 | 0 |
| " V. K. துரைராஜ் | நாங்குனேரி ... | 10 | 0 | 0 |
| சபை | வள்ளியம்மைபுரம் ... | 3 | 8 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ S. இஸ்ரவேல் 2-வரவு | திருச்சந்தூர் ... | 10 | 0 | 0 |
| " A. D. துரைசாமி | சமாரியா ... | 1 | 0 | 0 |
| Mrs. அருளப்பன் & தாய்மார் | சுவிசேஷபுரம் ... | 3 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ T. சாமுவேல் | C. M. காலேஜ் ... | 6 | 0 | 0 |
| " S. வேதநாயகம் | C. M. ஹாஸ்டல் ... | 3 | 0 | 0 |
| போர்டிங் பையன்கள் | சுரண்டை ... | 5 | 0 | 0 |
| Miss J. சாலொமோன் 1-வரவு | S. T. காலேஜ் ... | 10 | 0 | 0 |
| Mrs. R. டேவிட் | ஷை ... | 5 | 0 | 0 |
| எஸ்தர் அம்மாள் | ஷை ... | 5 | 0 | 0 |
| Miss. J. A. டேவிட் | ஷை ... | 3 | 0 | 0 |
| A. மேரி அம்மாள் | ஷை ... | 3 | 0 | 0 |
| S. பொன்னம்மாள் | ஷை ... | 2 | 0 | 0 |
| Y. மரியம்மாள் | ஷை ... | 3 | 0 | 0 |
| P. தேவநேசம் அம்மாள் | ஷை ... | 2 | 0 | 0 |
| J. அன்னாள் அம்மாள் | ஷை ... | 2 | 0 | 0 |
| V. தங்கம்மாள் | ஷை ... | 1 | 10 | 0 |
| P. தேவசுந்தரம் அம்மாள் | ஷை ... | 1 | 0 | 0 |
| A. தேவநேசம் அம்மாள் | ஷை ... | 1 | 0 | 0 |
| J. நேசம் அம்மாள் | ஷை ... | 1 | 0 | 0 |
| நார்மல் சீனியர் வகுப்பு | ஷை ... | 2 | 0 | 0 |
| Mrs. D. ஜேம்ஸ் | ஷை ... | 2 | 0 | 0 |

## கார்டுகள் மூலமாய்

### சேரா டக்கர் காலேஜ், பாளையங்கோட்டை.

| | | | |
|---|---|---|---|
| செக்கண்டெரி ஸ்கூல் | 16 | 15 | 0 |
| 7-ம் ஸ்டாண்டார்டு | 4 | 12 | 0 |
| செக்கண்டெரி நார்மல் மாணுக்கர் | 6 | 0 | 0 |
| நார்மல் ஜூனியர் வகுப்பு | 4 | 0 | 0 |

### ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.

| | | | |
|---|---|---|---|
| A. பிரடெரிக் | 8 | 0 | 0 |
| J. G. கோயிற்பிள்ளை | 2 | 0 | 0 |
| A. D. ஜான்சன் | 2 | 0 | 0 |
| A. தேவதாசன் | 1 | 0 | 0 |
| கிறிஸ்தோபர் | 2 | 0 | 0 |
| எட்வார்ட் ராஜ் | 2 | 0 | 0 |
| A. சோவிற்பிள்ளை | 2 | 0 | 0 |
| H. P. துரை | 2 | 0 | 0 |
| S. தெய்வநாயகம் | 1 | 4 | 0 |
| G. D. விக்டர் | 2 | 0 | 0 |
| D. செல்லையா | 2 | 0 | 0 |
| மொத்தம் ரூ. | 1513 | 4 | 6 |

Printed at the Darling Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.



கொள்ள மனமற்றவனுய், சாத்திபப்பட்ட பண்டார வெங்கையாவையும் அவன் குடும்பத்தாரையும் மாத்திரம் கிறிஸ்தவர்களாக ஒப்புக்கொண்டிருந்தேன். இவன் அதிக ஆசையும் அனலுமுள்ளவன். ஆராதனை ஜெபங்களுக்குத்தப்பான். பிள்ளைகளும் நமது கிராமப்பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கிறுர்கள். பிடித்துக்கொண்டுபோய் அடைபட்டிருக்கிறவர்களில் இவனும் ஒருவன். கிறிஸ்தவனுன சிலமாதங்களுக்குள்ளேயே இவ்விதச் சங்கடம் வந்தது பெரிய சோதனையே. இவனுக்காகவும் இவன் வீட்டாருக்காகவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவனை ஜாமீன் கொடுத்தாலும் விடுவித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

தோர்ணக்கல்லுக்குச் சமீபமாயிருக்கிற புல்லூர் என்ற ஊரில் ஒரு சிறு சபை நமக்கிருக்கிறதென்பதை முன்னதாகவே உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இந்த ஊரில் நிலையாக ஒரு உபாத்தியாரும் ஏற்படுத்தவில்லை. நமது தோர்ணக்கல் பயிற்சிப்பட்சாலையில் சிலகாலம் படித்து, இப்போது கைத்தொழில் சாலையில் நெசவு படித்துக்கொண்டிருக்கும் பொப்பிலி காலேபின் முயற்சியால் இந்தச்சபை யுண்டானது. இது எவ்விதமாய்ச் சேர்க்கப்பட்டதென்பதை முன்னுல் எழுதியிருப்பதால் மறுபடியும் எடுத்துரைப்பது அவசியமில்லை. இந்த ஊர் சபையார் கூடி ஜெபிப்பதற்கு போதுமான ஒரு சிறு ஜெப அறை தங்கள் சொந்த முயற்சியால் கட்டியிருக்கிறுர்கள். மிஷனிலிருந்து கம்புகளுக்கு 2 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. செடி குளைகளை வைத்து தட்டிகள் கட்டி சுவருக்குப் பதிலாக அமைத்து,மண்ணைப்பூசி வெள்ளை அடித்து வைத்திருக்கிறுர்கள். வீட்டுக் கூரைக்குவேண்டிய கம்பம்புல் தட்டை கிடையாததால், அது இந்த வருஷ அறுப்பில் சம்பாதித்துக்கொள்ளுமட்டும், இலைகள் குளைகளைப்போட்டு ஒழுகாப் பறையாய்க் கட்டியிருக்கிறுர்கள். அந்தக்கட்டடத்தில் அவர்கள் ஜெபம் நடத்துகிற முதல் நாளில் நானும் கூட இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதால், அந்தநாளில் அங்கேபோயிருந்தேன். காயிதத்திஞல் சிலபூக்கள் செய்து, அவர்கள் திராணிக்குத்தக்கதாய் அலங்கரித்திருந்தார்கள். 1½ விரல் அகலம், 1 ஜாண் நீளத்தில் ஒரு இரும்புப்பட்டை, அக்கோவிலுக்குள் தொங்கவிடப்பட்டிருந்தது. அதுதான் அவர்கள் கோவில் மணி. ஒரு சிறு இரும்புகொண்டை ஆணியைக்கொண்டு ஜெபத்துக்கு மணியடித்து, அது முதலாம் மணி என்பதற்கு ஒருதட்டு கடைசியில் தட்டப்பட்டது. இவ்வாறு முதலாம் மணி யடித்து சில நிமிஷங்களுக்குள்ளாக சபையார் ஒருவர் பின் ஒருவராய் கோவில் முன் வந்து கூடினுர்கள். இரண்டாம் மணியடிக்கப்பட்டது. உடனே சகலரும் சத்தமின்றியமைதியாய் ஜெபஸ்தலத்திலுள்வந்து, மரியாதையாய் முழங்கால் ஊன்றி ஜெபித்துவிட்டு உட்கார்ந்தார்கள். இன்ன கீர்த்தனையைப் பாடவென்று சொல்லவே, ஜனங்களெல்லாரும் ஏகோபித்து உற்சாகமாயும், நன்றுயும் பாடினுர்கள். ஜெபத்தை நடப்பித்து, ஜெபத்தின் அருமையைக்குறித்து அவர்களுக்குச்சொல்லி, அவர்களெல்லாரும் ஜெபம்பண்ணவேண்டுமென்றும், எப்படி ஜெபிக்கிறதென்றும் அவர்களுக்குப் படிப்பித்தேன். தாங்கள் ஜெபம் பண்ணிக்கொண்டுவருவதாய் அவர்களில் சிலர் சொன்னுர்கள். அவர்களும் மற்றவர்களும் அதுமுதற்கொண்டு தங்கள் வாஞ்சை, விருப்பங்களை ஆண்டவருக்குத் தெரிவிப்பதாய் ஒப்புக்கொண்டார்கள். இவர்களுக்கு நிலையான உபாத்தியாயர் ஏற்படுத்தப்பட்டிராதபோதிலும், முன்சொல்லியிருக்கும் காலேபே சனிக்கிழமைகளில் தன் வேலை முடிந்தபின் அங்குபோய் அன்று ராத்திரியும் ஞாயிற்றுக்கிழமையுமாக இருந்து, அவர்களோடு ஜெபித்து, பாட்டும் பாடமும் படிக்குக்கொடுத்துவருகிறுன். அவன் படித்துக்கொடுக்கக்கூடிய சக்தி கொஞ்சமானபோதிலும், அவனுடைய மாதிரியும், ஆண்டவர்பேரிலுள்ளபற்றும், தேவஊழிய வாஞ்சையும், தேவசபையின் சம்பந்தமாயுள்ள ஊக்கமான முயற்சியும் அந்த ஜனங்கள் நடுவில் அதிகமாய்க் கிரியை செய்திருக்கிறது. அவனுக்கு சபையின் மேலிருக்கும் பற்று வியக்கப்படத்தக்கது. அந்த சபையில் முதலில் கிறிஸ்தவனுன ராமையா என்பவனுடைய விசுவாசமும், கர்த்தர்பேரில் இருக்கும் பற்றும் மிகவும் சந்தோஷமான விஷயமே. அவன் சபைக்குறிய எல்லா விஷயத்திலும் காலேபுக்கு வலதுகைபோல் நின்று, உதவிசெய்துவருவதே அந்தச்சபையின் சீருக்கு முக்கிய ஆதாரம். மெண்டம் முத்தையா என்றவன் தன் நிலத்தில் விதை விதைக்கப்போகுமுன் இந்த ராமையா அங்கே போய்ச் சேர்ந்ததால், இவன் அவனைப்பார்த்து: ஜெபம் பண்ணுமல் ஒன்றையும் செய்ய ஆரம்பிக்காதே; விதையை விதைக்குமுன் ஜெபம் பண்ணி விதை, அப்போது ஈசாக்குக்குப்போல் நூறு மடங்காக விளையுமென்றுசொல்லவே, முத்தையா ஜெபம் பண்ணி விதைத்தானும்; இந்தச்சபையார் ஞானஸ்நானம் பெற மிகுந்த வாஞ்சையைக் காட்டுகிறுர்கள். என்றுலும் பாடத்தில் சற்று குறைவிருப்பதிஞல் பாடத்தைசீக்கிரம் சரிபடுத்தச்சொல்லியிருக்கிறேன். இவர்களுக்கு சீக்கிரத்தில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதாயிருக்கும். இவர்களுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவ ஊழியராக அநுகூலமான வேலையை நடப்பிப்பதற்கு ஏதுவாய் தினம் தினம் எவ்வளவு நேரம் வேலைசெய்கிறுேமோ, அவ்வளவு நேரமாவது ஜெபத்தில் பின்னிடவேண்டுமென்று சபையில் ஊழியஞ்செய்கிற சிலரால் தீர்மானம் செய்துகொள்ளப்பட்டது. ஒரு ஊரில் போய், தேவ ஊழியக் கூட்டமாக இரண்டு மூன்று இடங்களில் உத்தேசம் இரண்டு மணி நேரம் சுவிசேஷ பிரசங்கம் செய்தபிற்பாடு, அவ்வூருக்கு வெளியேயிருக்கிற ஒரு மரத்தின் நிழலில் எல்லாருமாகப் போய்க் கூடி, ஒருவர்பின் ஒருவராக ஜெபம்செய்தோம். அப்போது பண்ணப்பட்ட ஜெபங்கள் தங்களுடைய இருதயத்தை திறந்து தேவசந்நிதானத்தில் ஊற்றுவதுபோலிருந்தது. மிகுந்த பயபக்தி அங்கிருந்த எல்லாரையும் ஆண்டது. உத்தேசம் இரண்டு மணிநேரத்துக்கதிகம் இவ்வாறு ஜெபித்தபின், அவரவருடைய இஷ்டப்படி தனித்தனிமையாகவும் கூட்டம் கூட்டமாகவும் ஜெபத்தில், தியானத்தில், பக்திக்குரிய சம்பாஷணையில், அல்லது மற்றெந்த அவசியமான விஷயத்திலாலும் பின்னிட்டு, அரை மணி நேரத்துக்குப்பின் ஊருக்குள் வந்துசேரவேண்டுமென்று சொல்லப்பட்டது. அவ்வாறு தனித்தனிமையாகவும், கூட்டம் கூட்டமாகவும், பற்பல இடங்களுக்குப் போய், அரை மணி நேரம் பின்னிட்டு பின் குறிக்கப்பட்ட இடம் வந்துசேர்ந்தார்கள். தேவ ஊழியரில் சிலர் என்னேடு பேசிக்கொண்டிருந்தபோது, அந்த நாள் கூட்டங்கள் தங்களை

மிகவும் ஆவியில் அனல் மூட்டி எவினதென்றும் இது தங்கள் ஊழியகாலத்திலுண்டான அருமையான தினமென்றும் சொன்னார்கள். தேவ ஊழியர் எல்லாரும் இதுமுதல் இந்த முறையைக் கையாடிவருவோம் என்றும் சொன்னார்கள். ஊழியர் யாவரும் மிகுந்த எழுப்புதல் அடைந்திருப்பதாய்த் துலங்கினது.

இந்த மாதம் 13உ முதல் 17உ வரைக்கு தேவ ஊழியரும் நானும் உல்லிப்பல்லியில் போயிருந்து, சபைகளிலும் சுற்றுப்புறங்களிலுள்ள இதர மதஸ்தர் மத்தியிலும் சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தோம். இதினிடையில் மறுபடியுமதிகமாக மழைபெய்து, ஆறுகளில் பிரவாகம் அதிகமானதினாலும், தோர்ணக்கல்லில் விஷபேதி நடப்பதினால் இந்த ஊரிலிருந்து போவதாய்த் தெளிவாகும் ஒருவரையும் மற்ற ஊருக்குள் வரவிடார்களாதலாலும், இப்போது நானசைந்துதிரியக்கூடாதபடி இடுப்பில் பலமான வாய்வுப்பிடி பிடித்துக்கொண்டதாலும், முந்தின தீர்மானப்படி அவர்களோடு கூட கலந்து ஊழியஞ் செய்யக்கூடாதிருப்பதையிட்டு மிகவும் துக்கப்படுகிறேன். என்றாலும் தேவ ஊழியரான பலர் உல்லிப்பல்லியில் கூடி, நல்ல ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

இந்த வருஷ முழுவதிலும் தங்கள் தங்கள் சபைகளிலும் சுற்றுக் கிராமங்களிலுள்ள புறமதஸ்தருக்குள்ளுமிருந்து இவ்வளவு பேரையாகிலும் புதிதாய் மார்க்கத்தில் சேர்க்க, இவ்வளவு பேரை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்த, இத்தனை பேரை பள்ளிப்பிள்ளைகளாகச் சேர்க்க, இத்தனை தொகை காணிக்கையை அதிகப்படுத்த முயற்சிப்போமென்று உபாத்திமார் அவரவர் தீர்மானம் செய்துகொண்டு ஊழியம்செய்துவருகிறார்கள். கடந்த மாதக் கூட்டத்தில் இந்த வருஷத்தில் இதுவரையும் புதிதாக கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்திருப்பவர்கள் 120 பேர். இது நாம் கோரிக்கொண்ட தொகையின் வீதாசாரத்துக்கு வந்தெட்டாததால், முன்னிலும் அதிக முயற்சியாய் உழைக்கவேண்டுமெனத் தீர்மானம்செய்துகொண்டு போயிருக்கிறார்கள்.

தேவ ஊழியரில் காணப்படும் எழுப்புதலுக்காக கர்த்தரை பணிவுடன் துதித்து, இப்படிப் பலவாறாகச் செய்யப்படும் முயற்சிகளில் கர்த்தர் தமது ஆசீர்வாதத்தைப் பொழிந்து அநுகூலமடையச் செய்வதால், பெலவீனமான தமது ஊழியக்காரரை உற்சாகப்படுத்தி பலப்படுத்தும்படியாக அவரை நோக்கிப் பிரார்த்திப்போமாக.

சிறு பிள்ளைகள் சம்பந்தமாய் செய்யப்படும் வேலைக்கும், மதுபான விலக்கு சம்பந்தமாய்ச் செய்யப்படும் வேலைக்கும் இரண்டு உபாத்திமாரை செக்ரெற்றெரிமாராக ஏற்படுத்தியிருப்பதுமல்லாமல், ஒவ்வொரு வேலையின் சம்பந்தமாயும், வாரத்தின் ஒவ்வொரு நாள் உபாத்திமார் தங்கள் தங்கள் சபையில், விசேஷித்த ஜெபம், போதனை, பிரயத்தனம் செய்துவரவேண்டுமென்றும் தீர்மானித்து, அவ்விதமாக நடைபெற்று வருகிறது. இவைகளைப்பற்றி கர்த்தருக்குச் சித்தமானால் இன்னொரு தடவையில் எழுதுவேன்.

எங்களை உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள்.

எஸ். பாக்கியநாதன்.

## வருஷாந்தக் கூட்டத்தில் சொன்ன கனம் பிரசிடென்டு அவர்கள் செய்தி.

(தொடர்ச்சி)

நண்பர்களே!

கிறிஸ்துபகவானிடம் காணப்பட்ட பல சிறந்த லக்ஷணங்கள் அவருடைய தொண்டர்களாகிய அப்போஸ்தலர்களிடமும் விளங்கின. ஜனங்கள் பேதுருவையும் யோவானையும் கண்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள் என்று அறிந்துகொண்டார்கள் என்று சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம். பூர்வகாலத்தில் நடந்ததுபோல தற்காலத்திலும் நடக்கவேண்டுமே. சிரேஷ்ட குருவாகிய அத்தியக்ஷர் தொடங்கி கனிஷ்ட குருவாகிய உதவி குருவரையுள்ள சகல தேவ ஊழியக்காரரும் கிறிஸ்துவின் மாட்சிமையான சாயலை அணிந்துகொள்ளவேண்டும். அவரிடம் சிறந்துவிளங்கிய தேவதா பக்தி, பிறர் சிநேகம், பொறையுடைமை ஒவ்வொரு குருவினிடமும் போதகனிடமும் வெளிப்படவேண்டுமே. "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கிறிஸ்து திருவுளம்பற்றியதுபோல ஒவ்வொரு குருவும் தன்னை அடுக்கும் சீஷரைப்பார்த்துச் சொல்லவும் அவர்களும் அவ்வார்த்தைகளின் மூலமாய் குருவினிடம் விசுவாசம் வைக்கக்கூடியதாயுமிருக்கவேண்டும்.

பரிசுத்தமும், அன்பும், சத்தியமும் வாய்ந்த ஓர் உத்தம கிறிஸ்தவ குருவைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர் ஸ்ரீமான் H. A. கிருஷ்ணபிள்ளைதான். பட்டம்பெற்ற குரு அல்ல. ஆனால், தம்முடைய இரக்ஷாபெருமானின் திவ்ய நாமத்தைப் பிறருக்கு அறிவிக்கவேண்டுமென்ற வாஞ்சையால் நிரப்பப்பட்டு, கூடியமட்டும் அதே வேலையாயிருந்தார் என்னலாம். அவருடைய உபதேசமொழிகளைவிட அவருடைய ஜெபதப நல்லொழுக்க சீலங்கள் மேன்மையாயிருந்தன. ஜலத்தில் பூரண சந்திரன பிரதிவிம்பித்துக் காணப்படுவதுபோல, அவரில் கிறிஸ்துபகவான் பிரதிவிம்பித்துக் காணப்பட்டார் என்று சொல்லத்தகும். அவர் இயற்றிய பல அரிய நூல்களினாலும் தீர்க்கமாய்க் காண்பித்த முன்மாதிரியினாலும் மரித்தும் இன்னும் பேசுகிறார். பட்டம்பெறாத கிறிஸ்தவன் இப்படி வேலைசெய்தால், பட்டம்பெற்றவர்கள் எவ்வளவு செய்யவேண்டும்? குருமாரல்லாத கிறிஸ்தவர்களுக்கு இவர் ஓர் சிறந்த முன்மாதிரி. அவர்கள்போதனாமிர்தத்தை அருந்தி, அவர்கள் முன்மாதிரியினால் கவரப்பட்டு, கிறிஸ்துபகவானை ஏற்றுக்கொண்டு, அவர் மந்தையிற்சேர்ந்தவர்கள் அநேகர். அதில் நான் ஒருவன். இவ்வண்ணம் மற்றவர்களை இரக்ஷிப்பின் பாதையில் வழிநடத்தும் சத்துவமற்று, போதகரும் குருமாருமாயிருப்போர் இயேசுஇரக்ஷகர் திருவுளம்பற்றுகிறபடி குருடருக்கு வழிகாட்டும் குருடராயிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்)



## புறமதஸ்தருக்குச் சுவிசேஷப் பிரசங்கம்.

(கனம் லார்சன் போதகர் செய்த ஓர் பிரசங்கத்தின் சாரம்)

### I. செய்யவேண்டிய வேலை.

புறமதஸ்தருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பிரசங்கி, தான் செய்யும் வேலையில் எதைப்பற்றிப் பிரசங்கிக்கக்கூடாது, எதைப் பிரசங்கிக்கவேண்டும், என்ன பயனுண்டாகப் பிரசங்கஞ் செய்யவேண்டுமெனறறியவேண்டியது மிக முக்கியமான காரியம்.

மதத்துக்குரிய கோட்பாடுகளையாவது தாற்பரியங்களையாவது பிரசங்கிக்கக்கூடாது. மதக்கோட்பாடுகளும் தாற்பரியங்களும் இரட்சிப்புக்கு வழி நடத்தமாட்டாது. அவைகள் சுவிசேஷ செய்தியை ஏற்றுக்கொள்ளுவதற்கு இருக்கும் தடைகளையும் நீக்கமாட்டாது. இரட்சிப்பின் சமாதானம் சந்தோஷம் முதலியவற்றைப் பெறுவதற்கு அவைகள் வழியும் ஆகா. மதத்துக்குரிய ஆசாரங்களையாவது வணக்க முறைகளையாவது காட்டவும் வேண்டாம். அவைகளும் இரட்சிப்புக்கு வழிநடத்தாது.

கிறிஸ்துவை, சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையே காட்டவேண்டும். கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தைச் சொல்லி, கிறிஸ்துவின் மகிமையைக் காட்டுவதே செய்யவேண்டிய வேலை. இதுவே இரட்சகர் செய்த வேலை. பிதாவின் மகிமையை விளங்கச்செய்தார். "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" என்றார் (யோவா. 17: 4). அவ்விதமாக கடவுளின் மகிமையை தங்கள் வார்த்தையிலும் ஜீவியத்திலும் காட்டுவதே கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய வேலை இற்றலி தேசத்திலுள்ள மைலன் என்னும் பட்டணத்தில் மிகச் சிறந்த அத்தியக்ஷ தேவாலயம் ஒன்றிருக்கிறது. அவ்வாலயத்திற்கு சித்திரம் தீர்ந்த அலங்காரமான கண்ணாடி சன்னல்கள் உண்டு அவ்வாலயத்தினுட் சென்று, சித்திரந்தீர்ந்த அக்கண்ணாடி ஜன்னல்களைப் பார்ப்பது மிகுந்த வியப்பையும் பயபக்தியான சிந்தையையும் உண்டாக்குவதாயிருக்கும். ஆயினும் அக்கண்ணாடிகளில் வரைந்திருக்கும் சித்திரங்களை மாத்திரம் பார்க்கக்கூடுமேயொழிய ஆலயத்திற்கு வெளியேயுள்ள செழிப்பான சமபூமியையும் அதின் அழகையும் அந்தக் கண்ணாடிகளின் வழியாய்ப் பார்க்க முடியாது. அச்சன்னல்களில் சித்திரம் தீராத சாதாரணக் கண்ணாடியிருக்குமானால், வெளியேயுள்ள சமபூமியின் அலங்காரம் அதின் வழியாய்த் தெளிவாய்த் தெரியக்கூடும். கிறிஸ்தவன் தன் சுயமகிமையைக் காட்டும் சித்திரக்கண்ணாடியாயிராமல், கிறிஸ்துவின் மகிமையைக் காட்டும் சாதாரணக் கண்ணாடியாயிருக்கவேண்டும். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5: 16).

சுவிசேஷப் பிரசங்கி செய்யும் வேலையின் பயன் என்ன? கேட்போருக்குள் பாவ உணர்வும், கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசமும் உண்டாகவேண்டியதே. தன் நடக்கையைப்பற்றியும் தான் செய்த காரியங்களைப்பற்றியும் விசனப்படுவதும் வெட்கப்படுவதும் பாவ உணர்வு அல்ல விசனம், வெட்கம்- இவை இரண்டும் மாத்திரம் பாவ உணர்வாக மாட்டாது. விசனம், வெட்கம் என்பவற்றோடு தன் பாவக் குறைவை நீக்குவதற்குரிய வழி எது என்றறிய விரும்பும் வாஞ்சையும் சேர்ந்தால்தான் பாவ உணர்வாகும்.

பாவ உணர்வு எப்படி உண்டாகும்? குற்றத்தை எடுத்துக்காட்டுவதினால் பாவ உணர்வு உண்டாகாது. விசனம், வெட்கம், வாஞ்சை இம்மூன்றும் பொருந்திய பாவ உணர்வையுண்டாக்குவதற்கு புத்திமதி ஏற்றதல்ல. ஆதலால் இந்துக்களுக்குப் போதிக்க விரும்பும் பிரசங்கி அவர்களுடைய வணக்க முறைமைகளைப்பற்றியாவது, தெய்வங்களைப்பற்றியாவது குற்றத்தை எடுத்துக் காட்டுவதும் அவர்களுக்குப் புத்திமதி சொல்லுவதும் சுவிசேஷப் பிரசங்கமல்ல. அவ்விதமாய்ப் பாவ உணர்வு உண்டாகாது. "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்; நீர் என்னை விட்டுப் போகவேண்டும்" என்று சொன்ன பேதுருவைப்போல கர்த்தரின் மகிமையைக் காண்பதினாலேயே பாவ உணர்வு உண்டாகும். பேதுருவைப்போல நான் பாவியான மனுஷன்; சுவாமியின் சந்நிதானத்தில் நிற்க நான் பாத்திரனல்ல என்ற உணர்வே பாவ உணர்வின் சாரம். கிறிஸ்துவின் மகிமையைக் கண்டாலொழிய பாவ உணர்வு உண்டாகாது.

விசுவாசம் எப்படியுண்டாகும்? மறுரூப மலையின் அடிவாரத்தில் தன் மகனுக்காக இயேசு சுவாமியினிடம் விண்ணப்பம்பண்ணிநின்ற மனிதனுக்கு தன் மகனின் ரோகம் தீரவேண்டும் என்ற ஆவலும், மறுரூப மலையிலிருந்து இறங்கிவந்த ஆண்டவரை முகமுகமாய்ப் பார்த்ததுமே விசுவாசத்தையுண்டாக்கிற்று. ஆவல், கிறிஸ்துவை முகமுகமாய்க் காணல் இவையிரண்டுமே விசுவாசத்துக்குக் காரணம்.

ஆகவே, புறமதஸ்தருக்குப் பாவ உணர்வும் விசுவாசமும் உண்டாகவேண்டுமானால், அவர்கள் கிறிஸ்துவை முகமுகமாய்க் காணச்செய்யவேண்டும். அதாவது கிறிஸ்துவைப்பற்றியே, அவரது ஜீவிய சரித்திரத்தைப் பற்றியே நாம் அவர்களுக்குப் பிரசங்கிக்கவேண்டும். இது தவிர வேறே பிரசங்கம் அவசியமில்லை. மதத்துக்குரிய கோட்பாடுகளும் தாற்பரியங்களுமாவது, வணக்க முறைமைகளுமாவது எடுத்துக் காட்டப்படவேண்டியதில்லை. இரட்சகரின் மகிமையைக் கண்டாலொழிய, பாவ உணர்வும் விசுவாசமும் உண்டாகாது. கிறிஸ்துவின் மகிமையைக் காட்டுவதே நாம் செய்யவேண்டிய வேலை.

"சுவிசேஷ வேலை செய்யும்படி ஒரு தலைமுறையாரை நாம் பயிற்றுவிப்போமானால், ஒரு தலைமுறையில் உலகத்திலுள்ள யாவருக்கும் சுவிசேஷத்தை கொடுக்கக்கூடும்."

மாட் சாஸ்திரியார்.

இங்கிலாந்து உவேல்ஸ் தேசங்களிலுள்ள கிளைச்சங்கங்களிலிருந்து சி. எம். எஸ். சங்கத்திற்கு வந்திருக்கும் காணிக்கையில் ஒவ்வொரு ஒன்பது பவுனுக்கும் ஒரு பவுண் பிள்ளைகளின் காணிக்கையாம். ஒரு பிள்ளைகளும் பையன் அல்லது பெண் மிஷனெரி மிஷனேரி ஊழியமும். மாரைப்பற்றியும் அவர்களுடைய வேலையைப் பற்றியும் படியாவிட்டால், எப்படி மிஷனெரி ஊழிய விஷயமாய் ஜெபிக்க, அல்லது உழைக்க, அல்லது கொடுக்கக்கூடும் என்று பன்னிரண்டு பிராயமுள்ள ஓர் பிள்ளை எழுதினது. இது வாஸ்தவமல்லவா? பதினொரு வயதான இன்னோர் பிள்ளை: நாம் நம்முடைய கால் அணுக்களை மிஷனெரி ஊழியத்திற்குக் காணிக்கையாகக் கொடுக்கலாம். ஆனால் ஜெபமோ இதைவிட வெகு தீவிரமாய்க் கிரியைசெய்துவிடும் என்று சொன்னதாம். சிறுபிராயமுதலே நமது பிள்ளைகளை மிஷனெரி ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், அவைகளைப்பற்றி அறியவும், மிஷனெரி வேலை செய்யவும், அதற்குக் காணிக்கை படைக்கவும் பழக்குவித்தால், எத்தனை மாட்சிமையாயிருக்கும்! இன்னும் பத்து அல்லது பதினைந்து வருஷத்தில் மிஷனெரி ஊழியம் எத்தனை சிறப்பாய் முன்னேறிச் செல்லுமென்பதற்கு ஆக்ஷேபனையுண்டோ? பிள்ளைகளே நமது நம்பிக்கையானதால், பிள்ளைகள் மிஷனெரி ஊழிய சம்பந்தமாய் அதிகக் கரிசனைகொள்ளும்படி முயற்சிப்பது பள்ளிக்கூடங்களில் வேலைசெய்யும் தேவ ஊழியர்மேல் விழுந்த கடமையே.

யுத்தம் மிகவும் பயங்கரமானது. ஆனால் ஜெர்மனியர் செய்யும் போர் மகா பயங்கரமானது. மருந்து கூண்டுகள் வெடிக்கும்போது விஷவாயுகளும் நெருப்பு ஜலவஸ்துகளும் எழும்பும்படி செய்து, ஆங்கிலேய யுத்தமும் போர்வீரரும் அவர்களோடு ஐக்யப் மிஷனேரி வேலையும். பட்டவர்களும் மூச்சுமுட்டி மடியவும், கண்சேதப்பட்டு நயனப்பார்வையற்று, மறுபடியும் யுத்தத்துக்கு வராது நின்றுகொள்ளவும் தக்கதான மிலேச்சருக்கடுத்த கொடிய தீய வழக்கங்களைக் கையாடுகிறார்கள். நல்ல சுகதேகிகளான ஆயிரக்கணக்கான வாலிபர் தங்கள் வாழ்நாட்களைக் கபோதிகளாகப் பின்னிட வேண்டியதிருக்கிறது. லக்ஷக்கணக்கான ரூபாய் இவர்கள் ஸ்திதியை முன்னுக்குக் கொண்டுவருவதற்காக ஸ்தாபிக்கும் பரோபகாரசாலைகளுக்கு வேண்டியதிருக்கிறது. ஆகவே, மிஷனெரி ஊழியத்துக்கு வேண்டிய பணம் குறைவுபடலாம். இந்திய கிறிஸ்தவர் இவைகளை நன்குணர்ந்து, சபை விஷயமான செலவுகளைத் தாங்களே முன்னிலும் அதிகமாய்த் தாங்கத்தக்கதாக உற்சாகமாய்க் காணிக்கை கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாம் இதுவரை பெற்றுவரும் ஆசீர்வாதங்களுக்கு கைமாறாக, நமக்கு அனுப்பும் பணம்முழுவதும் அல்லது மிச்சமான பாகம் நிறுத்திக்கொள்ளத்தக்கதாக நாமே நமது அவசியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டால் எத்தனை நன்மையாயிருக்கும்! தாய்ச் கமிற்றிமாருக்கு (எஸ். பி. ஜி.; சி. எம். எஸ்.) இச்செய்கை எத்தனை சந்தோஷம் விளைவிக்கும்!

## ஜெபவிஷயங்கள்

1. சபைகளில் நடத்தப்பட்டு வரும் ஊழியத்திற்காகவும், விசேஷமாய் வாரந்தோறும் பிள்ளைகள் சம்பந்தமாயும் மதுவிலக்குச் சம்பந்தமாயும் நடத்தப்படும் கூட்டங்களுக்காகவும்;
2. பயிற்சிசாலையில் படித்துவரும் 4 பையன்களுக்காகவும்;
3. போர்டிங் பாடசாலைகளில் இன்னும் அதிகப் பையன்களும், பெண்களும் வந்து படிக்கவும்.
4. உதவி குருபட்டத்திற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் Mr. J. ஸ்ரீனிவாசகம் அவர்களுக்காகவும்.
5. விஷ வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்காகவும் அவ்வியாதி சீக்கிரம் நீக்கவும்;
6. அக்டோபர் மாதம் 18உ முதல் இந்த அத்தியட்சாதீனத்திலுள்ள ஊழியருக்கெல்லாம், கம்மாமெட்டில் நடத்தப்படப்போகிற வேனிற்கால பள்ளிக்கூடத்திற்காகவும், அதை நடத்துகிறவர்களுக்காகவும்;
7. இன்னும் பள்ளிக்கூடத்திற்கு தேவையான 2 தெலுங்கு உபாத்திமார் கிடைக்கவும்;
8. தோர்ணக்கல் மிஷனுக்கு ஓர் மிஷனெரியாகத் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கும் Mr. ஜாண் சாமுவேல் அவர்களுக்காகவும் அவர்களுடைய குடும்பத்திற்காகவும்;
9. 'செலவுக்கான கையிருப்பு நிதி' குறித்த காலத்திற்குள் கைகூடி வரத்தக்கதாய் உற்சாகமான காணிக்கை படைக்கப்படவும்;
10. திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷராக நவம்பர் 28உ கல்குத்தாவில் அத்தியக்ஷாபிஷேகம் பெறும் கனோன் உவாலர் ஐயரவர்களுக்காகவும் ஜெபம்.

---

## ஜெபக்கூட்டத்தின் ஆரம்பத்திலாவது இடையிலாவது பாடத்தக்க பாட்டு.

(இரா. Blessed assurance, Jesus is Mine &c.)

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா!
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்.

பல்லவி. ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்.

2. ஊக்கத்துடனே ஒர்முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தையெல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர்.

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
*வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்.

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்.
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசிமட்டும் காத்திருப்போம்.

* புதிதானதாக்கும்; or அழகானதாக்கும்.

Printed at the Darling Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

SEPTEMBER, 1915 Registered No. M.481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 20 DEC 1915 MADRAS.

Vol. XII No. 9] செப்டெம்பர் 1915 [விலை பை 3

பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 65 |
| தேவ மதிப்பு ... ... ... ... ... | 66 |
| சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... | 67 |
| தேயோப்பிலு கண்ட தரிசனம் ... ... ... | 67 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... | 70 |
| கனம் பிரசிடென்று அவர்கள் செய்தி ... ... | 71 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

தென் இந்திய ஐக்ய சபைகள் ஓர் சபையாக சுவிசேஷ பிரபல்ய ஊழியம் இதுவரையில்லாத பிரகாரம் ஊக்கமாய் நடத்தக் கருதி, நாளது வருஷ ஆரம்பமுதல் விசேஷித்த முயற்சிகளெடுத்து வருகின்றன. கிறிஸ்தவர்கள் தேவனோடு நெருங்கி, இன்பசகவாசம் செய்து தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், தனி ஆள் சம்பாஷணைகளினாலும் கூட்டப்பிரசங்கங்களினாலும் கிறிஸ்துமார்க்கத்தைத் தெளிவாயும் திட்டமாயும் புறமதஸ்தருக்குப் பிரசங்கிக்கவும் ஏதுவாகப் பல விசேஷித்த கூட்டங்கள் ஒழுங்குசெய்து நடத்தப்பட்டு வருகின்றன. பிரக்யாதைப்பெற்ற பிரசங்கிமாரும் உபந்நியாசம் செய்ய ஏற்பாடுகள் உண்டு. மதுரை, வேலூர் பட்டணங்களில் முதலில் போர் நடத்தவும், அப்பால் கிராமங்களுக்குப் போகவும் தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள். இச்சபைகளின் சிறந்த மாதிரியைப் பின்பற்றி, பாளையங்கோட்டை பட்டணத்திலும் சுவிசேஷ படைமுயற்சி செய்வதற்கு ஒழுங்குகள் இப்போது தயாராகின்றன. ஐரோப்பியரும் இந்தியரும், புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும், தேவ ஊழியரும் சபையாரும் ஏகமனதுடன் ஒரே நோக்கமாய் சுவிசேஷ ஊழியம் கல்வி அறிவுள்ள புறமதஸ்தருக்குள் நடத்துவார்கள். கனம் லார்சன் போதகரவர்களும், எடிதுரையவர்களும் செப்டெம்பர், நவம்பர் மாசங்களில் முறையே கூட்டம் வைப்பார்கள். இப்படைமுயற்சியைக் கர்த்தர் ஆசீர்வதிக்கவும், இதினால் பாளையங்கோட்டை கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் ஒன்றாய் இணைக்கப்பட்டவர்களாகப் புறமதஸ்தருக்குமுன் தங்களை விளங்கச்செய்யவும், சுவிசேஷ பிரபல்ய ஊழியங்களில் அதிகக் கரிசனை கொள்ளவும் கர்த்தர் அருள்புரிவாராக. அருள்நாதரின் ஆத்ம வருத்தத்தின் பலனாக இந்து குடும்பங்கள் இப்பட்டணத்தில் கிறிஸ்துவின் பாதாரவிந்தமடையும்படி கர்த்தர் அனுக்கிரகஞ் செய்ய ஊக்கமாய் ஜெபித்துவரக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**சுவிசேஷ பிரபல்ய முயற்சி.**

கடந்த நாலு மாசங்களில் திருநெல்வேலி சபைக்குக் கிடைத்த ஓர் பெரிய சலாக்கியம் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் விஜயமே. குருமாருக்கும் சபையாருக்கும், பெரியோருக்கும் சிறியோருக்கும் கர்த்தர் அவர்களைப் பெரிய ஆசீர்வாதமாக உபயோகிக்கச் சித்தங்கொண்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்களுடைய ஓயாத ஊழியமும், வசப்படுத்தும் போதனைகளும், மலர்ந்த முகமும், இன்ப சப்பாஷணையும் தேவ ஊழியர் யாவருக்கும் சிறந்த மாதிரியே. இச்சமயம் அவர்கள் போதித்த சத்தியங்கள் இரண்டு என்கலாம்: (1). கிறிஸ்து சபையின் ஆராதனைகளும், பரி. ஞானஸ்நானம், பரி. இராப்போஜனமாகிய சாக்ரமெந்துகளும், திடப்படுத்தல் முதலிய நியமங்களும் தேவகிருபையளிக்கும் யத்தனங்களாக மிகவும் பரிஷ்காரமாய் விளக்கிக்காட்டி, அவைகளினால் வரக்கூடிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறத்தக்கதாகக் கிறிஸ்தவர்கள் அவைகளை அனுஷ்டிக்க ஏவினார்கள். தேவனோடு இன்பசகவாசஞ்செய்வதற்கு அவைகள் ஏற்ற சாதனங்களெனப் போதித்தார்கள். (2). புறமதஸ்தரைக் கிறிஸ்துவண்டை நடத்துவதே ஒவ்வொரு கிறிஸ்தவனின் பிரதம கடமையென்று திடப்படுத்தல் ஆராதனைகளிலும், குருமாருக்கோ, சபையாருக்கோ நடத்தின கன்வென்ஷன் கூட்டங்களிலும் திட்டமாய்ப் போதித்து, சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தை முதல் வேலையாக யாவரும் நடத்தவேண்டுமென்று ஏவி எழுப்பிவிட்டார்கள். ஊழியத்தில் தேவனோடு ஐக்யமாகும் கிறிஸ்தவர்களுக்குள் தீமைகள் தலைகாட்டுவது அரிது எனப் பகர்ந்தார்கள். அவர்களுக்காக ஜெபித்துவந்த நண்பர், கர்த்தர் அவர்களைத் திருநெல்வேலி சபைக்கு ஆசீர்வாதமாக உபயோகித்ததை நினைத்து துதி செலுத்தவும், இன்னும் தம்முடைய அளவற்ற கிருபைகளை அவர்கள்மீது அருளும்படி ஜெபித்துவரவும் மறவாதிருப்போமாக.

**தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள்.**

## தேவ மதிப்பு.

'என் சொந்தம், என்னுடையது, என் பொருள்' இவைகளில் என்ன வல்லமை இருக்கின்றது! எவ்வளவாய் மனுஷரை அவை மயக்கிவிடுகின்றன! வயது செல்லச் செல்ல, அவற்றின் பற்று ஜனங்களை மிகவும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிறதல்லவா? மனுஷன் உலகத்திற்குள் பிறந்தவண்ணமாகவே, அதை விடுகிறான். என்றாலும், சுபாவ மனுஷனின் ஆசை மாறுகிறதில்லை. என்ன பரிதாபம்!! இதின் இரகசியமென்ன? பொருளைத் தனக்கென்று குவிக்கிறவன் உலகத்தாருக்கு முன்பாகப் பெரியவன், கண்யவான். கர்த்தரோ மனுஷன் பார்க்கிறபடி பார்க்கிறதில்லை. தன் பொருளைக் கர்த்தருக்கென்று கொடுக்கிறவனே தேவனுக்கு முன்பாகப் பெரியவன். தன் களஞ்சியத்தைப் பெரிதாகக் கட்டி, பொருட்களைச் சேர்த்து வைக்கும்படி தனக்குள்ளே சிந்தனை செய்துகொண்ட ஐசுவரியவானை இயேசு ஸ்வாமி "மதிகேடன்" என்று அழைக்கிறாரே. காரணம் என்ன? அவன் தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்தான் (லூக். 12: 17—21). உலகத்தின் மதிப்புக்கும் ஆண்டவரின் மதிப்புக்கும் என்ன வித்தியாசம்! ஒருவனுக்கு எவ்வளவு ஆஸ்தி உண்டு என்பதை மனுஷன் பார்க்கிறான். அவன் தன் பொருளை எப்படி உபயோகிக்கிறான் என்பதைக் கர்த்தர் கவனிக்கிறார். ஆகவே, நமது பொருட்களை ஆண்டவருக்கென்றும் அவர்நிமித்தம் பிறருக்கென்றும் செலவிடுவதல்லவோ தகுதி.

'தனக்கு மிஞ்சி, தானம்' என்பது உலக வழக்கச் சொல். 'எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பது ஆண்டவரின் வாக்கு. என் மனைவி, என் பிள்ளை, என் ஜனம், என் ஆலயம் என்று மனுஷர் பேசுவது இயற்கை. வேதமோ, முதலாவது தேவனுடைய மனுஷனுக்கு ஒரு சிறு அடை, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் என்று போதிக்கிறது (1 இரா. 17: 13—16). தவிரவும், ஒருவன் எதாமொரு நன்கொடையளிக்கும்போது, அவன் **எவ்வளவு** கொடுத்தான் என்பதை மனுஷர் கேட்கிறார்கள். அவன் **எப்படிக்** கொடுத்தான் என்பதை தேவன் ஆராய்கிறார். கொடுக்கப்படும் **பணத்தையும்** அதின் **தொகையையும்** உலகம் கவனிக்கிறது. கொடுக்கும் **மனுஷனையும்** அவன் நோக்கத்தையும் அவர் கவனிக்கிறார். "ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்." ஆனால் "அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்" (மாற். 12: 41, 44). அவர்களுடைய ஈகையினால் அவர்களுக்கு வருத்தம் ஒன்றுமில்லை. இதைக் கொடுத்ததினால் அவர்களுக்குக் கஷ்டம் யாதொன்றுமில்லை. தேவன்பேரில் அவர்களுக்கிருக்கும் அன்பை இதினால் அவர்கள் காட்டியதாகச் சொல்ல இடமில்லை. ஏனெனில் அதைக் கொடுப்பது அவர்களுக்கு இலேசு. விதவையோ இரண்டு காசைப் போட்டாள். தன் வறுமையிலிருந்து அதைக் கொடுத்தாள். தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாவற்றையும் போட்டுவிட்டாள். அதைக் கொடுத்தது அவளுக்கு வருத்தம். அதன்பின் அவளிடத்தில் யாதொன்றும் இருக்கவில்லை. இருந்த எல்லாவற்றையும் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டாள். கிறிஸ்துவின் மதிப்புக்கும் நமது மதிப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்! எவ்வளவை ஒருவன் **கொடுக்கிறான்** என்று நாம் பார்க்கிறோம். எவ்வளவை அவன் **வைத்துக்கொள்ளுகிறான்** என்று கிறிஸ்துநாதர் பார்க்கிறார். நாம் ஒருவனுடைய ஈகையைக் கவனிக்கிறோம். அருள்நாதரோ அந்த ஈகை சுயவெறுப்புடன் உண்டானதோ என்று கேட்கிறார். கர்த்தரின் உரைகல்லால் சோதிக்குங்கால், நமது காணிக்கைகள் எத்தன்மையன? நம்மை வெறுத்துக் கொடுக்கிறோமா என்று விசாரிப்பது அவசியமே.

'இவன் ஏழை, இவன் பாடு கஷ்டம், இத்தரித்திரன் எப்படி கொடுக்கக்கூடும்' என்று உலகம் சொல்லுகிறது. "கொடிய தரித்திரமுடையவர்களும், தங்கள் திராணிக்கு மிஞ்சி கொடுக்கக்கூடுமென்பது தேவ சாட்சி (2 கொரி. 8: 2, 3). ஒரு மனுஷன் என்ன சம்பளம் வாங்குகிறான், ஒருவனுக்கு என்ன உத்யோகம் அளிக்கப்பட்டிருக்கிறது, என்ன தயை பெற்றிருக்கிறான் என்பது உலகத்தாரின் கேள்வி. கர்த்தரோ, "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்றுரைக்கிறார். தேவன் கெட்டுப்போன உலகத்தை மீட்கும்படி தமது சொந்தக் குமாரனை உலகத்திற்குக் கொடுத்திருக்கிறார். என்ன ஆச்சரியம்! எத்தனை போன்பு! அவருடைய சுபாவத்திற்குப் பங்காளியாகவேண்டுமோ? அவரோடு ஐக்யமாகப் பிரியமா? அவரைப் போல கொடுப்போமாக. கெட்டுப்போன மாந்தருக்கு சுவிசேஷ ஒளியைக் கொடுப்போமாக. புறமதஸ்தர் ரக்ஷாபெருமானின் பாதமடையும்படி முயற்சிக்கும் ஊழியங்களுக்கு சுயவெறுப்புடன் உதாரமாய் ஈவோமாக. நமது நேரத்தைக் கொடுத்து, மற்றவர்களுக்காக விண்ணப்பம் செய்வோமாக. ஒருவராவது நான் ஏழை, எதுவும் செய்வதற்குத் திராணியில்லையென்று சொல்ல இடமில்லை. மெய்தான்; சிலர் ஐந்து தாலந்து பெற்றிருக்கிறார்கள். சிலருக்கு இரண்டு; சிலருக்கு ஒன்றுமாத்திரந்தான். என்றாலும், எல்லோரும் தாலந்து பெற்றிருக்கிறோம். ஒரு தாலந்தென்றால், அதைச் சரியாய் உபயோகிப்போமாக. உலகம் தொகையை மதிக்கிறது. நம் எஜமானோ உபயோகித்த விதத்தைக் கவனிக்கிறார். ஆகவே, நமது சபையார் தரித்திராயிருப்பது தேவ வேலை நடந்தேறுவதற்குத் தடையாயிருக்கிறதென்று நாம் எண்ணாமல், அவர்கள் தேவ கிருபையைப் பெறாமல், அதற்கு அபாத்திராயிருப்பதே மிகுதியான காணிக்கை சேகரிக்கப்படுவதற்குத் தடையாயிருக்கிறதென்று எண்ணுவோமாக. ஒரு வருஷத்தில், நான் ஒன்றுங் கொடுக்கக்கூடாத ஏழை என்று போக்குச் சொல்லிக்கொண்டிருந்த ஒருவன் மறு வருஷத்தில் சுமார் ரூ. 30 சுவிசேஷ ஊழியத்திற்காகக் கொடுத்ததாக அறிந்தோம். இது எப்படியாயிற்று? ஒரு வருஷத்துக்குள் ஐசுவரியம் உண்டாகிவிடவில்லை. கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் தன்னை ஒப்புவித்துவிட்டது தான் காரணம். மிகுந்த கஷ்டமென்றபோதிலும், மிகுந்த சந்தோஷத்துடன் தன் சம்பாத்தியத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு பாகத்தைப் பிடித்துவைத்தான். அது வருஷ இறுதியில் அத்தொகையாயிற்றாம். அவனுக்கே ஆச்சரியமாயிருந்ததாம். நாமும் புறதேச மிஷன் வேலையை நடத்துவதற்கு நமது தரித்திரம் தடையல்ல. தேவ சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய மனமற்றிருப்பதுதான் தடை. தன்னை ஜீவபலியாக ஏற்றுக்கொள்ளும்படி தன் ஆண்டவரைக் கெஞ்சாதவன் சுகந்த வாசனையான பலியாக தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி அவருடைய தாசனைக் கேட்பது கூடியதோ? ஆதலால் தேவ ஊழியரே, ஓர் சபையில் காணிக்கை விஷயமாய்க் குறைவு உண்டானால் தரித்திரமல்ல, தேவ கிருபையைச் சரியாய்ப் பெறாததே என்று அறிந்துகொள்ளுவோமாக. வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று அருள்நாதர் மொழிந்த சத்தியத்தை நமது ஜனங்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்துவோமாக. சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். சகோதரனே, இதுவரையும் நீ தேவனிடத்தில் வட்டிக்குக் கொடுத்திருக்கிறது எவ்வளவு? தேவனுடைய பாங்கில் உனக்கு எவ்வளவு கிடக்கிறது? தேவனுக்காகவும் அவருடைய ராஜ்யத்திற்காகவும் எவ்வளவு நம்மை வெறுத்திருக்கிறோமோ அதுதான் நித்தியகாலமாய் நம் ஆஸ்தி. இதுவே தேவ மதிப்பு.



## 20-ம் சங்கீதம்

20-ம் 21-ம் சங்கீதங்களுக்கு "ராஜா வாழ்த்து கீதங்கள்" என்று பேரிடலாம். 20-ம் சங்கீதம், யுத்தத்திற்குப் புறப்படுமுன் ராஜா காணிக்கைகளையும் பலிகளையும்செலுத்தி, ஜெயத்திற்காக தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணும் சமயத்தில், ஜனங்களும் பாடகரும் நின்று ராஜாவை வாழ்த்திப் பாடும் கீதம். ஒருவேளை தாவீது சீரியரோடும் அம்மோனியரோடும் யுத்தத்திற்குப் போனசமயத்தில், யாராவது பாடினதாயிருந்தாலும் இருக்கலாம். (2 சாமு. 8: 4, 10, 18). இந்த சங்கீதத்தில் இரண்டு சரணங்களுண்டு. ஒவ்வொரு சரணத்திலும் எட்டு வரியும் அதன் முடிவில் மூன்று வரிகளடங்கிய ஒரு பல்லவியும் உண்டு.

1. ராஜா பலிசெலுத்திக்கொண்டிருக்கும்போது ஜனங்கள் வெளியேநின்று பாடுவது:—

ஆபத்துநாளில் கர்த்தர் உமக்குச் செவிகொடுப்பாராக!
யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக!
அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசை அனுப்புவாராக!
சீயோனிலிருந்து உம்மைப் பலப்படுத்துவாராக!
உமது காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்தருளுவாராக!
உமது சர்வாங்கத் தகனப்பலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக!
உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளுவாராக!
உமது ஆலோசனையை எல்லாம் நிறைவேற்றுவாராக!

பல்லவி

நாங்கள் உமது ரட்சிப்பினால் கெம்பீரித்து மகிழுவோம்.
எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்.
உமதுவேண்டுதல்களையெல்லாம்கர்த்தர் நிறைவேற்றுவாராக.

அதாவது, உமக்குக் கிடைக்கும் ஜெயத்தினால் நாங்கள் கெம்பீரித்து மகிழ்வோம் என்பதாம். ஜனங்கள் இவ்வாறு ஏகமாய்த் தங்கள் நல்விருப்பத்தைக் காட்டி ஜெபிக்கிறார்கள்.

2. பலிகள் செலுத்தப்பட்டு முடிந்தாயிற்று. அப்பால் பாடகரில் ஒருவன் முன்னுக்குவந்து, நம்பிக்கையோடு தேவன் அப்பலியை ஏற்றுக்கொண்டாரென்றும், ஜனங்கள் செய்த ஜெபத்திற்கு உத்தரவு அருளினார் என்றும் தைரியஞ்சொல்லிப் பாடுகிறான்.

கர்த்தர் தாம் அபிஷேகம்பண்ணின ராஜாவை இரட்சிக்கிறார் என்று இப்பொழுது நான் அறிந்திருக்கிறேன்.

தமது பரிசுத்த வானத்திலிருந்து, அவருடைய ஜெபத்தைக்கேட்டு, தமது வலதுகரத்தின் இரட்சண்ய பராக்கிரமத்தை விளங்கப்பண்ணுவார்.

சிலர் ரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்.

நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய பேரையே சொல்லுவோம்.

அவர்கள் குனிந்து விழுந்தார்கள்.
நாங்களோ எழுந்து, நிமிர்ந்து நிற்கிறோம்.

பல்லவி

கர்த்தாவே! ராஜாவை ரட்சியும்!
நாங்கள் கூப்பிடுகிற நாளிலே
தேவரீர் எங்களுக்குச் செவிகொடுப்பீராக.

"God Save the King" என்ற ராஜா வாழ்த்துக் கீதத்தில் வரும் முதல் வாசகம், இச்சங்கீதத்திலிருந்தே எடுக்கப்பட்டது. "கர்த்தாவே! ராஜாவை ரட்சியும்," "நாங்கள் வேண்டிக்கொள்ளும்போது இரக்கமாய் கேளும்" என்று ஜெபபுஸ்தகத்தில் வரும் விண்ணப்பங்களுக்கும் மூலவாக்கியம் இதுதான்.

இஸ்ரவேலின் ராஜாக்கள், தங்களுக்கு இரதங்களையும் குதிரைகளையும் சேர்க்கக்கூடாதென்பது தேவகட்டளை. (உபா. 17: 16). கானான்தேசமும் குதிரைப்பட்டாளத்திற்கு ஏற்ற தேசமல்ல. ஆகவே, ஜனங்களும் ராஜாவும் ஏகோவாவின்பேரிலே சார்ந்து, அவர் நாமத்தையே போற்றி, அவரையே நோக்கிக் கையெடுப்பது அவசியமாயிற்று. இரதங்களைக்குறித்தும், குதிரைகளைக்குறித்தும், சீரியரும், எகிப்தியரும் மேன்மைபாராட்டக்கூடும். இஸ்ரவேலருக்கோ, இரதமுமில்லை, குதிரைகளுமில்லை. ஏகோவா மாத்திரமே உண்டு. அவர் இருக்கும்போது, வேறு குறை உண்டோ?

அவர்கள் குனிந்து விழுந்தார்கள்!
நாங்களோ எழுந்து, நிமிர்ந்து நிற்கிறோம்!

இப்படிப்பட்ட நம்பிக்கையை நாங்கள் கொண்டிருக்கிறபடியால், கர்த்தாவே! ராஜாவை ரட்சியும்! நாங்கள் கூப்பிடுகிற நாளிலே, ராஜாதி ராஜாவாகிய நீர், எங்களுக்குச் செவிகொடுத்திரங்குவீராக என்று ஜனங்கள் பாடுகிறார்கள்.

இது ராஜா பட்டத்துக்கு வந்த தினத்தில், வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற சங்கீதங்களில் ஒன்று. எக்காலத்திலும், விசேஷமாய் யுத்தகாலத்திலும், நமது ராஜாங்கத்திற்காகவும் சக்கரவர்த்தியவர்களுக்காகவும் செய்யும் ஜெபமாக இதைப் பாடலாம்.

## தேயோப்பிலு கண்ட தரிசனம்.

இந்திய மிஷனெரி சங்கத்தாராகிய நமக்கு ஒரு சகோதரனுண்டு; அவன் பெயர் தேவப்பிரியன் என்றருத்தங்கொள்ளும் தேயோப்பிலு. அவன் யார் என்றால்:— எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்" (சங். 32: 1-2) என்பதாகத் தாவீது சொல்லும் பாக்கியவான்களில் தேயோப்பிலுவும் ஒருவன். பின்னும் அவன் யார் என்று கேட்டால்:—ஒரு பரிசேயன் வீட்டில் ஆண்டவர் பந்தியிருந்ததை ஒரு பாவியான ஸ்திரீ அறிந்து, ஒரு பரணியில் பரிமள தைலங் கொண்டுவந்து, அவருடைய பாதங்களினருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரால்

களைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமள தைலம் பூசினாள் (லூக். 7: 37—38) என்று வாசிக்கிறோமே அந்த அம்மணியின் கோத்திரத்தில் தோன்றினவன் தேயோப்பிலு. அவனுடைய அநேகம் பாவங்கள் மன்னிக்கப்பட்டபடியால், அவன் ஆண்டவரிடத்தில் அதிக அன்புள்ளவனாயிருந்தான். ஆண்டவர் சிலுவையில் தொங்கின பாவனையாகத் தன் மனக்கண்முன் நிறுத்தி, அவரை தியானிப்பது அவனுக்கு அதிகப் பிரியமான தியானம். இப்படித் தியானித்துக்கொண்டிருக்கும்போது, சில சமயங்களில் அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் ஓடும்; சில சமயங்களில் ஆனந்த சந்தோஷங்கொள்வான். நமது சகோதரனுக்கு அனந்தம் ஆபத்துகள், விபத்துகள், மோசங்கள் எப்போதும் நேரிடுவதுண்டு. அந்தச் சமயங்களிலெல்லாம் அவன் சிலுவைநாதரைத் தியானித்து, இவர் என் ஆண்டவரும், மீட்பரும், பிதாவுமாக இருக்கும்போது, நான் யாருக்குப் பயப்படுவேன், மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லி, வைராக்கிய பக்தனுக்குரிய வீரத்துவம் காண்பிப்பான்.

இந்த சகோதரன் கண்ட ஒரு தரிசனம் மகா அருமையானது. இந்திய மிஷனெரி சங்கத்துக்கு நேரிட்டிருக்கும் பணக்கஷ்ட விஷயமாய் ஒருநாள் இவன் சிலுவைத் தியானம் செய்துகொண்டிருக்கையில், திடீரென்று யாக்கோபின் சரித்திரம் இவன் மனதில் தோன்றவே, இவன் தன் சகோதரரைப் பார்த்து, நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லை; யாக்கோபின் புத்திரர் தங்கள் குடும்பம் பஞ்சத்தால் அழியாதபடி எகிப்திலிருந்த தங்கள் சகோதரனாகிய யோசேப்பிடம் போனதுபோல, நாமும் எலிசாவைச் சுற்றியிருந்த அக்கினிமயமான இரதங்களிலும் குதிரைகளிலும் ஏறிக்கொண்டு, கிருபாசனத்தைக் கிட்டிச் சேர்ந்தால் மாத்திரம் நம்முடைய சங்கத்தின் பணக்கஷ்டம் நீங்கும் என்று சொல்லி, கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானான். இப்படியாக நம்முடைய சகோதரன் விசுவாசத்தின் செட்டைகளால் அதிவேகமாய்ப் பறந்துசென்று, தெய்வலோகத்திலிருக்கும் கிருபாசனத்தைக் கிட்டிச்சேர்ந்தான். அங்கே ஒரு சிங்காசனத்தின்மேல் நம்முடைய சபாநாயகர் வீற்றிருந்தார். அவருடைய சிரசின்மேல் "சேனைகளுடைய கர்த்தருடைய சேனையின் அதிபதி" (யோசு. 5: 14) என்னும் நாமம் வரையப்பட்டிருந்தது. அவருடைய வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர், இரத்தசாட்சிகள் முதலான பக்தர் புடைசூழ்ந்துநின்றார்கள். காபிரியேல், மிகாவேல் முதலான பரிசுத்த தூதர்கள் தெய்வ துந்துமி முழக்கினார்கள். அவர்கள் பாடிய கீதங்களாவன:—

## தெய்வ துந்துமி.

1. உம்முடைய ராஜ்ஜியம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்ஜியம்; உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது (சங். 145: 13).

2. கர்த்தர் இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் தயையும் சத்தியமுமுள்ள தேவன்; ஆயிரம் தலைமுறைக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர் (யாத். 34: 6—7).

3. நம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் (உபா. 7: 9).

என்பதாகத் தூதரின் துந்துமி முழங்கிக்கொண்டிருந்தபோது, சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் முன்பாகப் பேச்சு மூச்சற்றவனாய்த் தேயோப்பிலு கீழே விழுந்தான். அப்போது நம்முடைய பிராணநாதர் அவனைப் பார்த்துத் திருவாய் மலர்ந்தருளிய

## திருவாக்கு

1. நானே உன் தேவனாகிய கர்த்தர் (எண். 15: 41).
2. நானே உன் பங்கும் சுதந்தரமுமானவர் (எண். 18: 20).
3. நானே உன் ஜீவனும் தீர்க்காயுசுமானவர் (உபா. 30: 20).

என்பதே. இந்தத் திருவாக்குப் பிறந்த மாத்திரத்தில் தேயோப்பிலு உயிரடைந்தான். காபிரியேல் அவன் கிட்டச் சேர்ந்து, அவனுடைய இருகரங்களையும் பிடித்துத் தூக்கிவிட்டான். தேயோப்பிலு எழுந்திருந்து, தன்னுடைய கரங்களைக் குவித்து, சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரை வணங்கிநின்றான். அப்போது நம் ஜீவநாயகர் அவனைப் பார்த்து:—

உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன், என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் (யாத். 33: 12—19).

என்றார் உடனே மோசே, ஆரோன், மிரியாம் என்னும் மூவரும் சிங்காசனத்துக்குமுன் வந்து ஆண்டவரைத் துதித்துப் பாடினார்கள். அவர்கள் பாடின கீதம் என்னவென்றால்:—

1. அநாதி தேவனே எங்களுக்கு அடைக்கலம், அவருடைய நித்திய புயங்கள் எங்களுக்கு ஆதாரம்; எங்களுக்குச் சகாயம் செய்யும் கேடகமும், எங்களுக்கு மகிமைபொருந்திய பட்டயமும் அவரே (உபா. 33: 27, 29).

2. நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? (உபா. 4: 7).

இப்படி அவர்கள் பாடினவுடனே, சங்கீதக்காரனாகிய தாவீது கீதவாத்தியங்களுடன் ஆண்டவருக்குமுன் வந்து நின்று:—

1. கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது (சங். 144: 15).

2. கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷனுடைய ஆத்துமா நன்மையில் தங்கும்; அவன் சந்ததி பூமியை சுதந்தரித்துக்கொள்ளும் (சங். 25: 13).

3. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34: 10).

4. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் (சங். 46: 7).

5. உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் (சங். 18: 29).



என்று பாடினான். இப்படியாக விண்ணோரின் கீதங்களைக் கேட்டு, தேயோப்பிலு தைரியங்கொண்டு, கிருபாசனத்தைக் கிட்டிச்சேர்ந்து தன் விண்ணப்பத்தை ஏறெடுத்தான்.

## தேயோப்பிலுவின் மனு.

"இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடு பேசத் துணிந்தேன் (ஆதி. 18: 27). என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது (சங். 141: 4). மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? (சங். 8: 4). நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர் (சங். 22: 10). கர்த்தாவே என்னைக் கைவிடாதேயும்; என் தேவனே எனக்குத் தூரமாயிராதேயும்; என் இரட்சகராகிய ஆண்டவரே எனக்குச் சகாயம் செய்யத் தீவிரியும் (சங். 38: 21-22). என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும் (சங். 27: 12). என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் (சங். 56: 8). உம்முடைய ஏழைகளின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும் (சங். 74: 19). இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும் (சங். 108: 12" என்று விண்ணப்பம் செய்தான். ஆண்டவர் அவனை அருட்கண்ணால் நோக்கிப்பார்த்துச் சொல்லுகிறார்:—

## தெய்வ வாக்கு.

"நீ ஏன் கலங்குகிறாய், ஏன் உனக்குள் தியங்குகிறாய், தேவனை நோக்கிக் காத்திரு (சங். 42: 5). கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார் (சங். 55: 22). ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங். 50: 15). நான் உன்னை மறந்தால், என வலதுகை தன் தொழிலை மறப்பதாக" (சங். 137: 4) என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே தெய்வ துந்துமி மறுபடியும் முழங்கிற்று:

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய்த் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்குக் கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக, ஆமென் 1 தீமோ. 1: 17.

என்று தூதர்கள் பாடினார்கள். தேயோப்பிலு ஆண்டவர் பாதத்தை அஞ்சலி செய்து, ஒரு கேள்வி கேட்டான்:—

## கேள்வி.

ஆண்டவரே, அடியேன் மறுபடியும் பேசத் துணிந்தேன். தேவரீருடைய கட்டளையின்படி உம்முடைய பிள்ளைகள் இந்திய மிஷனெரி சங்கத்தை ஸ்தாபித்தார்கள்; அந்தச் சங்கம் கடந்த வருஷக்காலமாய் நாளுக்குநாள் விருத்தியடைந்து வந்திருக்கிறது; அப்படியிருக்க, இப்போது அதற்குப் பணக் கஷ்டம் நேரிடுவானேன் என்று கேட்டான்.

## விடை.

தேயோப்பிலு கேட்ட கேள்வியைப்பற்றித் தெய்வ சபையார் ஆலோசனை செய்தார்கள். அப்போது லாபான் எழுந்திருந்து,

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது ஆதி. 24: 50.

என்றான். மோசேமுனி எழுந்து, கிருபாசனத்தில் வீற்றிருக்கிறவரை வணங்கித் தேயோப்பிலுவைப் பார்த்து:

உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார் உபா. 13: 3.

என்றான். தாவீது ராஜனும் அதை அனுசரித்து,

கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார் சங். 11: 5.

என்றான். அப்போது கர்த்தர் தேயோப்பிலுவே என்றார். "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" (1 சாமு 3: 9). என்றான். அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து, திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களாகிய என் பிள்ளைகளுக்கு நீ சொல்லவேண்டியதென்னவென்றால்:—

இந்தியாமுழுவதிலும் திருநெல்வேலியை நான் எனக்கு அருமையான ஜில்லாவாகத் தெரிந்துகொண்டேன்; அதின் பிள்ளைகளை ஆத்துமப்பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் ஆசீர்வதித்திருக்கிறேன்; அவர்களில் ஒருவர் தெலுங்குநாட்டில் கர்த்தருடைய யுத்தத்தை முன்னின்று நடத்தும்படியாக இங்கிலாந்து திருச்சபையின் முதல் இந்திய அத்தியக்ஷராகவும் அபிஷேகம் செய்தேன். இப்போதும் உங்களைச் சோதித்தறியும்படி இந்தப் பணக் கஷ்டம் நேரிட்டிருக்கிறது. உங்களுடைய செல்வம் எனக்கு வேண்டியதாயிராமல், தோர்ணக்கல் மிஷனிலிருக்கும் சிறியவர்களாகிய என் சகோதரருக்கும் நான் என் முழுப்பிரியத்தையும் வைத்திருக்கும் இந்திய மிஷனெரி சங்கத்துக்குமே வேண்டியது. தோர்ணக்கல் மிஷனிலுள்ள என் சகோதரருக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் அதன் பலனை அடையாமற்போவதில்லை. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று சொல்வாயாக. மேலும், உன் சகோதரர் ஒவ்வொருவரையும் பார்த்து, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று நான் கேட்டதாகச் சொல் என்றார்.

அப்போது தேயோப்பிலு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரைப் பணிந்துகொண்டு, "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது" (சங் 119: 71), "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" (சங். 121: 2) என்றான். அப்போது சிலுவைநாதர் அவனைப் பார்த்து:—

வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன் யாத். 23: 20.

உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை உபா. 31: 6.

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் சங். 115: 15.

என்றார். உடனே தேயோப்பிலு விழித்துக்கொண்டு, இது தெய்வ தரிசனம் என்றறிந்தான்.

கர்த்தருக்குள் அருமையான சகோதரரே, கிறுவைநாதர் நம்மைப் பார்த்து:—

"யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறயா"

என்று கேட்கிறார். இதற்கு நாம் ஒவ்வொருவரும் உத்தரவு சொல்லக்கடவோம்.

J. S. C.

## தேலுங்குநாட்டுக் கடிதம்.

### I.

திருநெல்வேலியிலிருந்து போன செப்டெம்பர்மாதம் நான் திரும்பிவந்தவுடன், திருப்பணிவிடைக்காக படிக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டது, அதற்கென்று மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் தங்கள் அத்தியக்ஷாதீனத்தில் குறித்திருக்கும் பாடங்களை நான் படித்து வருகிறேன். அவைகளாவன:—

I. பொதுவான வேதபாடம்:—
 1. பழைய ஏற்பாட்டுச் சரித்திரம்.
 2. புதிய ஏற்பாட்டுச் சரித்திரம்.

II. விசேஷமான வேதபாடம்:
 1. ஏசாயா 1—39 அதிகாரங்கள்.
 2. சங்கீதம் 1, 2, 6, 8, 15, 19, 21, 22, 23, 24, 32, 38, 39, 40, 45, 47, 48, 51, 54, 57; 67, 68, 69, 71, 72, 73, 84, 85, 88, 89, 90, 91, 95, 98, 100, 102, 103, 104, 107, 108, 110, 111, 113—118, 120—134, 137, 143, 145.
 3. அப்போஸ்தலருடைய நடபடிகள்.
 4. 1 கொரிந்தியர்.

III. ஜெபபுஸ்தகம்.

IV. திருச்சபைசரித்திரம்: முதல் நான்கு நூற்றாண்டு.

V. உபதேசம்:
 1. வேதசித்தாந்த பிரமாணம்: முதல் 5 பிரமாணங்கள்.
 2. விசுவாசப்பிரமாண விளக்கம்: முதல் நாலு உபதேசங்கள்.
 3. பரி. ஞானஸ்நானம், பரி. ராப்போஜனம், திடப்படுத்தல், பரி. விவாகம், திருச்சபை, திருப்பணிவிடைகள் முதலியவைகளைப் பற்றிய உபதேசம்.

முக்கியமாய் வேதாகமத்திலிருந்து அதிகப்பாடம் குறித்திருப்பது எனக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கிறது. நான் இவைகளை ஒரு வருஷம் வாசிக்கவும் மகாகனம் அத்தியட்சரவர்களே எனக்குப் படித்துக்கொடுப்பதாகவும் சொன்னார்கள். அப்படியே அவர்கள் வீட்டில் காலை 8 மணி முதல் 12 மணி வரையும், மாலை 2 மணி முதல் 5 மணி வரையும் படித்து வருகிறேன். ஆரம்பத்தில் மகாகனம் அத்தியக்ஷரவர்களே எல்லாப் பாடங்களும் படித்துக்கொடுத்து வந்தார்கள். அவர்கள் வெளியே போகிற நாட்களில் பாடங்களைக் குறிப்பிட்டு படிக்கச்சொல்லி, திரும்பிய பின்னர் பரீட்சை வைப்பார்கள். முக்கியமாய் ஏசாயாவின் புஸ்தகம், ஜெபபுஸ்தகம் இவைகளைத் தாங்களே வாய்மொழியாயும் நோட்டு எழுதிப்போட்டும் படித்துக் கொடுத்தார்கள். நான்கு சுவிசேஷங்களையும் சேர்த்துப் படிக்கத்தக்கதாகவும், உள்ளான கருத்தை யறியத்தக்கதாகவும் விளக்கிக் கொடுத்தார்கள். அப்போஸ்தலர் நடபடிபுஸ்தகத்தை அவர்கள் முன்னமே எல்லாருக்கும் மூன்று வருஷத்திற்குமுன் பாடமாக சனிக்கிழமை தோறும் படித்துக்கொடுத்திருந்தார்கள். அவர்கள் இப்பொழுது பிரசுரித்திருக்கும் புஸ்தகமும் மிகுந்த பிரயோஜனமாயிருக்கிறது. இவ்வாகமத்திலும் அடிக்கடி பரீட்சை வைத்து, தெரியாததைப் படித்துக்கொடுத்தார்கள். அவர்கள் திருநெல்வேலிக்கு வந்துவிட்டபோது, எனக்குப் படித்துக்கொடுக்க வழியில்லாமற் போய்விட்டது. சுமார் இரண்டு மாதம் சிங்கரேனிக்கு கனம் டேவிட் ஐயரவர்களிடம் போய்ப்படித்தேன். அவர்கள் திருச்சபைச்சரித்திரம், விசுவாசப்பிரமாண விளக்கம், வேதசித்தாந்தப் பிரமாணம், சங்கீதங்கள் முதலான பாடங்கள் படித்துக்கொடுத்தார்கள். எனக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. இப்பொழுது அத்தியக்ஷரவர்கள் தோர்ணக்கல்லுக்கு வந்துவிட்டபடியால், இனி அவர்களிடமிருந்தே படித்துவருவேன். இன்னும் ஏசாயாவின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் சில அதிகாரங்களும், ஜெபபுஸ்தகத்தில் கொஞ்சப்பாகமும், 1 கொரிந்தியரும் பாக்கியாயிருக்கிறது. இவைகளை பிஷப் அவர்கள் படித்துத்தருவார்கள். ஆரம்பமுதல் 1 வருஷம் பூராவும் அவர்கள் விருப்பப்படி அவர்களிடமிருந்தே வாசித்திருப்பேனானால்; நான் எவ்வளவோ பிரயோஜனம் அடைந்திருக்கக்கூடும்! திருநெல்வேலிக்குப் போனதால், அவர்கள் உதவி கிடைக்கவில்லை. இந்தத்தேவ பணிவிடையை நன்றாய் நிறைவேற்றுவதற்கு நான் தகுந்த அறிவும் பூரணபக்குவமும் அடையத்தக்கதாக கர்த்தர் கிருபை அருளும்படி எனக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜான் ஸ்ரீனிவாசகம்.

### II.

கடந்த மாசப்பத்திரிகையில் கைத்தொழில்சாலையைப் பற்றிச் சற்று வாசித்திருப்பீர்கள். தச்சு, நெசவு வேலைக்கென்று புதிதாய்க் கட்டின கட்டடத்தில் வேலை ஆரம்பித்து விட்டோம்.

நான் கடந்த வருஷங்களில் தச்சுவேலையையும் கட்டடவேலைகளையும் செய்துவந்தேன். நானது வருஷமுதல் நமது போர்டிங் பையன்களுக்கு காலையும் மாலையும் படிப்பித்து வருகிறேன்.

தோமாஸ் என்பவரை உங்களில் அனேகர் பார்த்திருக்கலாம். அவர் இரண்டு வருஷங்களுக்கு முன் பாளையங்கோட்டைக்கு வந்து, வருஷாந்தரக் கூட்டத்தில் தமது சாட்சி சொன்னார். நமது கைத்தொழில் சாலையில் தச்சுவேலை படித்து, அவ்வேலையினால் தன் பிழைப்புக்கு மாசம் சுமார்



ரூ. 10 சம்பாதித்துக்கொண்டு, தோர்ணக்கல் ஒட்டர், எருக்கலருக்குள் ஒவ்வொருநாளும் ஜெபம் ஆராதனை நடத்தி வருகிறார். இவருக்கு கிறிஸ்துமார்க்கத்தினிமித்தம் போலீஸ்காரரால் சிலதுன்பங்கள் நடந்தும், அவைகளனைத்தையும் கிறிஸ்துவுக்கென்று பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு வேலை செய்கிறார். கடந்த மாசம் வந்த துன்பத்தில் தனக்குப்பட்ட அடியினால் சுமார் ஒரு மாசம் தன் பிழைப்புக்கு வேலைசெய்ய எழுந்திருக்க முடியாமலிருந்தும், கஷ்டத்தோடு தன் வேதனையைச் சகித்துக்கொண்டிருக்கிறார். மற்றமாசங்களில் ரூ. 9, 10 வேலைசெய்து சம்பாதித்தார். போன மாசம் ரூ. 2-10-0 வேலைசெய்து சம்பாதிக்கக்கூடியதாயிருந்தது. எருக்கல குலத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்களில், தேவஊழியர் இவர் ஒருவரே. அவருக்கும் அடிக்கடி இப்பேர்ப்பட்ட துன்பங்கள் வருகிறது. அவருக்காகவும் அவரைச் சேர்ந்தவர்களுக்காகவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போர்டிங் பள்ளிக்கூடத்துப் பையன்களில் வீரபத்தினி சுதர்ஷி, சிலுக்கப்பத்தினி லூக்கா என்ற இருவர் நானது வருஷமுதல் ஒவ்வொருநாளும் இரண்டு மணி நேரம் வேதபாடம் படித்துக்கொண்டு, மீதியான நேரங்களில் தச்சுவேலை படித்துவருகிறார்கள். இவர்கள் இப்பொழுது மேசை, மடக்கு நாற்காலி, கட்டில் முதலிய சாமான்கள் தானாய்ச் செய்துகொள்வார்கள். வெளியே வேலைக்குப் போகிறதானால், இவர்கள் நாள் ஒன்றுக்கு 4 அணா, 5 அணா வரை சம்பாதிக்கக்கூடும். இவர்களும் மேலே காட்டிய தோமாஸ் என்பவரைப்போல் தங்கள் சரீர பிழைப்புக்காக தச்சுவேலை செய்துகொண்டு, ஆண்டவர் ஊழியம் செய்வார்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறோம்.

மற்ற போர்டிங் பையன்களில் முதலாம் இரண்டாம் வகுப்புப் பையன்கள் (11 பேர்) காலை $10\frac{1}{2}$ மணியிலிருந்து 12 மணி வரையும் தச்சுவேலை கற்றுவருகிறார்கள். சாயந்தரம் 3 மணியிலிருந்து 5 மணி வரை 3-ம், 4-ம் வகுப்புப் பையன்கள் (11 பேர்) கற்றுவருகிறார்கள். இவர்களில் இருவர் கம்மாமெற்று மிஷன் பையன்கள். அம்மிஷன் இவர்களை ஆதரிக்கிறது. அம்மிஷன் ஊழியராவார்கள். இவர்களில் ஒருவன் அதிகப் புத்திக்கூர்மையுள்ள பையன். இவர்கள் தச்சுவேலைக்கு வந்து சுமார் இரண்டுமாசமாகிறது. ஒருவன் சின்னக்கட்டில், சின்ன சாதிக்காய்ப் பெட்டிகள் செய்வான். மற்றும் பையன்களில் சிலர் வெளி ஆர்டர் வேலைகளில் சிலதைத் தாங்களே செய்தும் பெரிய வேலைகளில் Mr. தேவதாசுக்குச் சகாயம் செய்தும், கற்றும் வருகிறார்கள்.

நமது தச்சுவேலை பள்ளிக்கூடத்திற்கு ரெயில்வே உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் மேசை, நாற்காலி, அல்மேரா, மெத்தைக்கட்டில் முதலியவைகள் செய்யும்படி ஆர்டர் வந்து கொண்டேயிருக்கிறது. மேலும் இந்த இடங்களில் வேலைக்கு ஏற்ற நாட்டுத்தேக்கு முதலிய மரங்கள் மிகுதியாய் வளருகிறதாலும், நாற்காலி, மேசை, அல்மேரா, மெத்தைக்கட்டில் முதலிய இங்கிலீஷ் சாமான்கள் செய்யக்கூடிய தச்சுசாலையாக இந்தப்பாகத்தில் இதுஒன்றேஇருக்கிறபடியினாலும்நாளுக்கு நாள் ரெயில்வே உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் ஆர்டர் வந்துகொண்டிருக்கிறபடியினாலும், நமது தொழிற்சாலை முக்கியமானதாகும் என்பதற்கு ஆக்ஷேபனையில்லை.

பையன்களுக்குப் படிப்பிப்பதில் Mr. தேவதாஸ் எனக்கு உதவி செய்வதோடு, வரும் வேலைகளை முற்றிலும் மேற்பார்த்து வருகிறார். அவருடைய வேலையும் பிரயாசமும் மிஷனுக்கு அதிகப் பிரயோஜனம். இவர் கனம் சுவேன்சன் அம்மாள் கல்விச்சாலையின் ஓய்வுநாள் பள்ளிக்கூட வேலையின் பலனாக குலமாணிக்கபுரம் தச்சாசாரி வாலிபரிலிருந்து கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர் என்பது அனேகருக்குத் தெரிந்திருக்கலாம்.

கைத்தொழில் படிக்கிற பையன்களுக்கும் படிப்பிக்கிற எங்களுக்கும் தேவகிருபை எப்பொழுதும் அருளப்படும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

K. முத்துசாமி.

## வருஷாந்தக் கூட்டத்தில் சொன்ன கனம். பிரசிடேன்று அவர்கள் செய்தி.

நண்பர்களே!

கருணை வள்ளலாகிய எம்பெருமான் இன்னொரு வருஷம் பூராவும் நமது அருமைச் சங்கத்தின்மீது தமது உன்னத ஆசீர்வாதங்களைப் பொழிந்து, அதின் 12-வது வருஷோற்சவத்தையும் கொண்டாடும்படியாக நமக்குக் கிருபையளித்திருக்கிறார். அவருக்கே சகல கனமும் மகிமையும் ஸ்தோத்திரமும் சதாகாலமும் உண்டாவதாக!

நான் இந்தவிசை ஒரு உத்தம குரு யாரென்றும் ஒரு உத்தம சிஷ்யன் யாரென்றும், அவர்களுக்கு இருக்கவேண்டிய சம்பந்தா சம்பந்தம் யாதென்றும் சுருக்கமாய் விளக்கிக் காண்பிக்க விரும்புகிறேன்.

நம் டோர்ணக்கல் மிஷனுக்குப் பிரதானியாயிருந்தவர்கள் விசேஷ அபிஷேகம்பெற்று. இன்று இக்கூட்டத்தில் பீடம்வகிப்பதினாலும் இந்தியர்களால் அமைந்த நமது மிஷன் இந்துக்களின் குரு சிஷ்ய பாரம்பரைகளுக்குமேற்பட்டதாக இருக்கவேண்டுமென்ற பேராவல் எனக்கு உண்டாயிருப்பதாலும், நம் மிஷனில் வேலைபார்ப்பவர்களும் மற்ற மிஷன்களில் வேலைபார்ப்பவர்களும் இக்கருத்தை ஆராய்ந்தறிந்து, இதை நன்குமதித்து இதன்படி நடந்தேறச்செய்ய நான் விரும்புவதாலும் இப்பொருளடங்கிய விஷயத்தைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல வாஞ்சையுள்ளவனாயிருக்கிறேன்.

2 தீமோத்தேயு 3: 16-ல் 'தேவனுடைய மனுஷன் தேறினவனுக்வும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும்' இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். தேவனுடைய மனுஷனிடத்தில் காணப்படவேண்டிய நற்செய்கைகள் எவை எவை என்று சற்று ஆராய்வோம். பிதாவினிடத்திலுள்ள திவ்ய லக்ஷணங்கள் கிறிஸ்து பகவானிடத்தில் விளங்கின. கிறிஸ்து பகவானிடத்தில் காணப்பட்ட நற்குண நற்செய்கைகள் அவ

ருடைய நாமத்தைப் பிரசங்கிக்கிற ஒவ்வொரு உத்தம குருவினிடத்திலும் ஒவ்வொரு உத்தம போதகனிடத்திலும் தெளிவாய்க் காணப்படவேண்டும். பிஷப்மாரிடமும் குருமாரிடமும் பொருந்தியுள்ள சிறந்த குணங்கள் அவர்கள் உபதேசத்தை உட்கொள்ளும் சிஷ்யரிடமும், அதாவது சபையார் யாவரிடமும், குணப்பட்ட கிறிஸ்தவர்களிடமும் காணப்படுவது அவசியம் 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரணசற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்' என்று அருமை இரக்ஷகரும் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறாரே.

பரமபிதாவினிடத்திலுள்ள சகல சிரேஷ்ட லக்ஷணங்களும் கிறிஸ்துபகவானிடத்தில் அமைந்திருந்தன. நாம் மனுஷன் ஒருவனைப் பாராவிட்டாலும் அவனுடைய படத்தைப் பார்த்து, அவனுடைய சாயல் இன்னவிதமாய்த்தானிருக்கும் என்று யூகிப்பதுபோல, கடவுளைக் கண்ணாரக் காணாவிடினும், கிறிஸ்துநாதரின் லக்ஷணங்களைக் கண்டு, கடவுளுடைய குணகுணங்களும் இன்னவிதமாய்த்தானிருக்கும் என்று அறிகிறோம். கிறிஸ்துபகவானிடத்தில் காணப்பட்ட லக்ஷணங்களாகிய அன்பு, பொறுமை, சாந்தம், சந்தோஷம், சமாதானம் முதலிய சற்குணங்களே பிதாவாகிய தேவனிடத்திலும் காணப்படும் என்று அறிகிறோம். 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று கிறிஸ்துநாதருளிய திருவாக்கே இதற்குப் போந்த ஆதாரமாகும்.

[இன்னும் வரும்.]

## The Working Balance Fund

### செலவுக்கான கையிருப்பு நிதி.

உமது கரத்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| முன் ஒப்புக்கொண்ட தொகை ... | ... | 206 | 6 | 0 |
| கனம் J. அல்பர்ட் ஐயரவர்கள் ... | நல்லூர் ... | 30 | 0 | 0 |
| ,, V. J. டேயர் ,, 1 வரவு | செவல் ... | 5 | 0 | 0 |
| ,, J. B. ஞானஒளிவு ,, ... | நாகபட்டணம் ... | 10 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ | | | | |
| ,, A. பொன்னையா ... | பாளையங்கோ. ... | 5 | 0 | 0 |
| அருமைநாயகம் ... | டிை ... | 3 | 0 | 0 |
| ,, V. சாமுவேல் 1 வரவு ... | டிை ... | 7 | 0 | 0 |
| ,, M. கோவிற்பிள்ளை ... | திருச்சி ... | 100 | 0 | 0 |
| ,, J. D. டேவிட் ... | கர்நூல் ... | 10 | 0 | 0 |
| ,, J. M. பொன்னுசாமி ... | நாகபட்டணம் ... | 15 | 0 | 0 |
| ,, J. S. தேவதாஸ் ... | சேலம் ... | 40 | 0 | 0 |
| ,, S. J. ஏசுதாசன் ... | கல்லாறு ... | 5 | 0 | 0 |
| ,, S. இஸ்ரவேல் 1 வரவு ... | திருச்செந்தூர் ... | 5 | 0 | 0 |
| ,, A. அருளானந்தம் ,, ... | கும்பகோணம் ... | 25 | 0 | 0 |
| ,, P. A. சாமுவேல் ... | ஸ்ரீவில்லிபுத்தூர் ... | 1 | 0 | 0 |
| ,, A. மனுவேல் ... | நாசரேத் ... | 5 | 0 | 0 |
| ,, Y. ஆபிரகாம் ... | பர்மா ... | 10 | 0 | 0 |
| ,, J. V. தாமஸ் ... | பகமலை ... | 5 | 0 | 0 |
| ,, S. V. தேவதாசன் ... | நெல்லூர் ... | 100 | 0 | 0 |
| ,, P. அப்பாசாமி ... | சென்னை ... | 25 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ | | | | |
| M. திரவியம் ... | வாளையடி ... | 13 | 0 | 0 |
| ,, R. ஐசக் ... | நூரூர் ... | 5 | 0 | 0 |
| ,, J. வெற்றிவேல் ... | செவல் ... | 6 | 0 | 0 |
| ,, V. வெற்றிவேல் ... | டிை ... | 3 | 0 | 0 |
| ,, M. ஆபிரகாம் ... | டிை ... | 3 | 8 | 0 |
| ,, ஆ. கோவிற்பிள்ளை ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, மோ. சுவாமிக்கண் ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, தா. ஏனோக்கு ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, கோவிற்பிள்ளை ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, சா. பேரின்பம் ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, ஈ. ஐயப்பன் ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, வி. தாசன் ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, பி. பாலையா ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, பி. யாக்கோபு ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, அ. ஞா. கோவிற்பிள்ளை ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, ஆ. சு. பொன்னையா ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, ராஜன்துரை ... | டிை ... | 1 | 0 | 0 |
| ,, துரைசாமி ... | டிை ... | 1 | 0 | 0 |
| ,, S. ஜெபமணி 1 வரவு ... | திருநெல்வேலி ... | 5 | 0 | 0 |
| ,, S. பாலையா 2 வரவு ... | டிை ... | 5 | 0 | 0 |
| சீனியர் நார்மல் வகுப்பு ... | S. T. காலேஜ் ... | 8 | 0 | 0 |
| Miss. தங்கம் டேனியல் ... | டிை ... | 5 | 0 | 0 |
| ,, A. வேதமுத்து 1 வரவு ... | டிை ... | 2 | 0 | 0 |
| தையல் வகுப்பு ... | எப்பத்தா சாலை | 2 | 9 | 0 |
| D. சாரா அம்மாள் ... | டிை ... | 2 | 0 | 0 |
| மக-ா-ா-ஸ்ரீ | | | | |
| ராஜநாயகம் ... | டிை ... | 1 | 8 | 0 |
| ,, A. மதுரம் ... | டிை ... | 3 | 0 | 0 |
| Mrs. A. மதுரம் ... | டிை ... | 1 | 0 | 0 |
| ,, டேயர் ... | செவல் ... | 4 | 0 | 0 |
| ,, அருமைநாயகம் ... | பாளையங்கோ. ... | 1 | 0 | 0 |
| தலகெல்வெல்லா சபை ... | இலங்கை ... | 15 | 0 | 0 |
| P. S. ... | ... ... | 100 | 0 | 0 |

கார்டுகள் மூலமாய்:—

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| மக-ா-ா-ஸ்ரீ | | | | |
| ,, M. தேவசகாயம் ... | C. M. ஹாஸ்டல் | 4 | 0 | 0 |
| ,, S. V. தானியேல் ... | டிை ... | 4 | 0 | 0 |
| ,, J. அம்புரோஸ் ... | டிை ... | 8 | 0 | 0 |
| ,, தாமஸ் ஜெல் ... | டிை ... | 4 | 0 | 0 |
| ,, B. A. ஞானசிகாமணி ... | டிை ... | 2 | 8 | 0 |
| ,, A. சௌந்திரபாண்டியன் ... | டிை ... | 3 | 0 | 0 |
| ,, J. அந்தோனி ... | சி. எம். காலேஜ் | 2 | 0 | 0 |
| ,, A. சாமுவேல் ... | டிை ... | 2 | 0 | 0 |
| டார்லிங் அன்பு ... | S. T. காலேஜ் ... | 2 | 0 | 0 |

* * * * *

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும்.
மானேஜர்: மக-ா-ா-ஸ்ரீ V. சாமுவேல் அவர்கள், B. A. பாளையங்கோட்டை.

Editor: The Secretary I. M. S. T.

Printed at the Darling Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

1065

AUGUST, 1915 Registered No. M.481 9

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR ... 20 DEC 1915 MADRAS

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XII No. 8] ஆகஸ்ற்றுமீ 1915 [விலை பை 3

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 57
தோர்ணக்கல் யுத்த பண்டு ... ... ... 58
சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... 59
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... 62
பன்னிரண்டாவது வருஷாந்தக் கூட்டம் ... ... 63
பொக்கிஷ கமிற்றிமார் விஞ்ஞாபனம் ... ... 64

## பத்திராதிபர் குறிப்புகள்.

**செலவுக்கான கையிருப்பு.** மாதா மாத செலவுக்குப் பர்த்தியாக ரூ. 6,000 உடனே சேர்க்கவேண்டுமென்று நமது சங்க காரியகர்த்தா சபையார் தீர்மானஞ்செய்திருக்கிறார்கள். இத்தொகை டிசம்பர் மாசத்துக்குள் சேகரமாகும்படி விசேஷித்த முயற்சி நடந்துவருகிறது. காரிய நிர்வாக சபை அங்கங்களுக்கும், குருமாருக்கும், சங்க நண்பருக்கும் விசேஷித்த அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த விசேஷ காணிக்கையினால் வழக்கமாயுள்ள வருஷாந்தர வரவில் குறைவு நேரிடாதபடி பார்ப்பது யாவர்பேரிலும் விழுந்த கடமையே. இந்த விசேஷ நோக்கத்திற்காக வரும் காணிக்கைகள் மாதா மாதம் "வர்த்தமானி" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**ஜெபம்.** தேவனுக்காகப் பெரிய காரியங்கள் விசேஷித்த பிரார்த்தனையினால் நடந்தேறுகின்றன என்பது தேவனுடைய பிள்ளைகளின் அநுபவ சாட்சி. வழக்கமான வருஷாந்தர காணிக்கையில் கம்மியுண்டாகாமல், செலவுக்கான கையிருப்புத் தொகை சீக்கிரமாய்ச் சேகரிக்கப்படவேண்டுமானால், விசேஷித்த ஜெபம் இன்றியமையா அவசியம். "நான் செய்யவேண்டிய வேலை மிகவும் அதிகம். அதிகாலை முதல் படுக்கைக்குப் போகும்வரை வேலைசெய்யவேண்டியதிருக்கிறது. ஆகையினால் முதல் மூன்று மணி நேரத்தையும் ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் பின்னிடுகிறேன்" என்று மார்ட்டின் லூதர் சொன்னார். சங்கத்திற்காகச் செய்யவேண்டிய வேலை அதிகமாதலால், குருமாரும், சங்கக் கமிற்றி மெம்பரும், சங்கத்திற்காக உழைக்கிற யாவரும் அதிக நேரம் மன்றாட்டில் செலவிடுவோமாக. அப்படியே சபையாரும் ஊக்கமாய் ஜெபிக்க ஏவி எழுப்புவோமாக.

**உழைப்போர் தேவை.** சங்கத்தின் அவசியம் இன்னதென்று மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் கடந்த மாச சஞ்சிகையில் எழுதிய நிருபத்தினாலும் இந்த மாசம் பிரசுரித்திருக்கும் பொக்கிஷ காரிய கர்த்தா சபையார் விஞ்ஞாபனத்தினாலும் பரிஷ்காரமாய்த் தெரியவரும். இது விஷயமாய் உழைப்போர் தேவை. பெரிய தொகையோ, சிற்சிறு தொகைகளோ, இவைகளைச் சேகரிப்போர் வேண்டும். ஒவ்வொரு சபையிலும், பட்டணத்திலும், நம் சங்கத்தின் அவசியங்களை உணர்ந்து, விசேஷ காணிக்கை சேகரிக்கும்படி தங்களை ஒப்புக்கொடுக்கும் சேனையார் தேவை. யார் இந்த பரிசுத்த ஊழியத்தைச் சுதாவாய் எடுத்துக்கொள்வார்? அதினால் வரும் ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்? இவ்வூழியத்தை எடுத்துக்கொள்ளும்போது, சிரமம், கஷ்டம் நேரிடும். சிலர் அநுதாபம் காட்டாமல், குதாவிடை செய்யலாம். உற்சாகம் தளர்ந்துபோகாதிருக்கவேண்டுமானால், உழைப்போர் யாவரும் உன்னத அக்கினியினால் அனல்மூட்டப்படவேண்டியதவசியம். ஆகையினால் இவ்வேலையை மனப்பூர்வமாய் தங்கள்மீது ஏற்றுக்கொள்ளும் யாவரும் கர்த்தரோடு இன்ப சகவாசஞ்செய்து, அவருடைய பெலனில் மாத்திரம் சார்ந்து இவ்வூழியத்தை ஆரம்பித்து நடத்திவர ஆலோசனை சொல்லுகிறோம். கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

**கர்த்தரின் சகாயம்.** இந்த முயற்சியில் கர்த்தருடைய சகாயமிருக்கிறதென்பதற்குப் பல அத்தாக்ஷிகளுண்டு. பொக்கிஷ காரியநிர்வாக சபையின் விஞ்ஞாபனத்தைப் பார்த்தவுடனே ஒரு சகோதரர் ரூ. 50 விசேஷ நன்கொடையாக அனுப்பினதுமன்றி, நம் பத்திரிகைக்கும் கைமேல் ஒரு கடிதம் வரைந்து அனுப்பியிருக்கிறார். அதை அடுத்த பக்கம் பார்க்கலாம். அந்நிருபத்தை சபையாருக்கு வாசித்துக் காட்ட தேவ ஊழியரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஒரு சர்க்கிளில் ரூ. 250 விசேஷ காணிக்கையாகச் சேர்த்து அனுப்பும்படி குருவானவருக்கு கடிதம் எழுதியிருந்தது. அவர்கள்: ஜனங்களிடத்தில் பேசினேன். சபையார் மிகுந்த உற்சாகம் காட்டுகிறார்கள். கர்த்தர் நம்மோடிருக்கிறார். விசுவாசத்தோடு முயற்சிப்போம் என்று மாறுத்தரம் அனுப்பியிருக்கிறார்கள்.

## தோர்ணக்கல் யுத்த பண்டு.

தெலுங்குநாட்டில் நைஜாம் ராஜ்ஜியத்தில் தோர்ணக்கல் மிஷனில் கர்த்தருடைய யுத்தம் கடந்த 13 வருஷங்களாக நடந்துவருகின்றது. திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களில் சிலர் அந்நிய நாட்டில் சிலுவைக்கொடியை நாட்ட வேண்டுமென்று ஆவியானவரால் கட்டளைபெற்று, இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்கள். இவர்கள் நாளுக்குநாள் ஜெயமடைந்து, 46 கிராமங்களில் சிலுவைக்கொடியை நாட்டியிருக்கிறார்கள். இந்த யுத்த செலவுக்குவேண்டிய திரவியமெல்லாம் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். இந்த சலாக்கியம் நம்முடைய முன்னோருக்குக் கிடைக்கவில்லை. சென்ற வருஷத்தில் இந்த யுத்த செலவுக்காக வந்த வரவு ரூ. 12,124. இது முந்தின வருஷத்தின் வரவைவிட ரூ. 3532 கம்மி. இதைப் பார்க்கும்போது 12 வருஷகாலமாய் முன்னேறிவந்த நாம் 13-ம் வருஷத்தில் சற்று பின்வாங்கினதுபோல் தோன்றுகிறது. பொக்கிஷ சங்கத்தார் இதைப் பார்த்து சற்று மலைகின்றார்கள். மாம்சம் பெலவீனமானது. நம்முடைய விசுவாசத்தின் பெலத்தைப் பரீட்சிக்கும்படி இந்தக் குறைவு உண்டானதே யல்லாமல் மற்றப்படியல்ல. பக்தர்களும் மனிதரானபடியால், அவர்களும் அவிசுவாசத்துக்குட்படுகிறார்கள். கர்த்தரை முகமுகமாய்த் தரிசித்த மோசேமுதலாய், இஸ்ரவேலில் 6 லட்சம் காலாட்களுக்கு ஒரு மாச முழுவதும் புசிக்கும்படி மாம்சம் கொடுப்பேன் என்று ஆண்டவர் சொன்னபோது, சமுத்திரத்தின் மச்சங்களை எல்லாம் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா என்று அவிசுவாசங்கொண்டார். அன்று மோசேக்கு அவர் சொன்ன உத்தரவுதான் இன்று மலைத்து நிற்கும் நமக்கும் சொல்லுகிறார்:—'கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய்.' விசுவாசிப்பவர்களுக்கு எல்லாம் கைகூடும்; இது வெறும் வசனமல்ல; அநுபவ சாட்சிபெற்ற சத்தியம்.

இப்போதிருக்கும் பணக்கஷ்டத்தினால் தெலுங்குநாட்டில் நடக்கும் கர்த்தருடைய யுத்தம் பின்வாங்கவேண்டியதில்லை. அப்படிச் செய்தால் அது தேவநாம மகிமைக்குக் குறைவும், திருநெல்வேலியின் பிள்ளைகளுக்கு அவமானமும், சத்துருவுக்கு சந்தோஷமுமாகும். பாதாளத்தின் பூதகணங்கள் தாண்டவமாடுவார்கள். இதைக் கண்ணுற்றுப்பார்ப்பதைப்பார்க்கிலும், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகிய நாம் அறுப்புண்டுபோவது நலம். கடந்த 50 வருஷக்காலமாய் தேவன் நம்மை எவ்வளவோ மேன்மைப்படுத்தியிருக்கிறார். இது சத்தியம் என்று ஒப்புக்கொள்ளாத சகோதரனுண்டோ? சிலுவைக்கொடியல்லவோ நமக்கு இந்த மேன்மையெல்லாம் கொடுத்தது. சிலுவைக்கொடியல்லவோ நம்முடைய பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் ஆயிரம் தலைமுறைவரைக்கும் உயர்த்தப்போகிறது. அந்தக் கொடியை உறுதியாய்ப் பிடித்த குடும்பம் ஏதாவது தாழ்த்தப்பட்டதுண்டோ? அதை விட்டவர்கள் நாசமடைந்ததை நாம் நமது கண்ணாலும் பார்த்திருக்கிறோம். ஆகையால் சிலுவையை உயர்த்த, நாமும் நம் பின்சந்ததியாரும் மென்மேலும் மேன்மையடைவோம். அதை நெகிழவிட்டால் நாசமாவோம். இது சத்தியம்.

இந்த யுத்த செலவுக்காக இந்த வருஷம் ரூ. 25,000 (அதாவது வழக்கமான காணிக்கை ரூ. 15,000; செலவுக்கான கையிருப்புத் தொகை ரூ. 6000; ஞாபகார்த்த ஆலய பண்டிலிருந்து செலவுசெய்ததை நிரப்புவதற்கு ரூ. 3000) வேண்டியதாயிருக்கிறது. இந்தத் தொகையைப் பார்த்து நாம் மோசேயைப்போல் மலைக்கவேண்டியதில்லை. கடந்த ஒருவருஷ காலமாய் லக்ஷக்கணக்கான ஜனங்கள் போர்முனையில் நம் சக்கிரவர்த்திக்காகத் தங்கள் பிராணனைப் பலிகொடுக்கிறார்கள். நம்முடைய தாழ்மையில் நம்மை நினைத்து, நம்மை மேன்மைப்படுத்தும்படி, தம்முடைய ஜீவனை நமக்காகப் பலிகொடுத்த இரட்சகருக்கென்று, திருநெல்வேலியின் பிள்ளைகளாகிய நாம், நம்முடைய ஜீவனையும் கொடுக்கக் கடன்பட்டவர்களாயிருக்கும்போது, அவர் நமக்குக் கொடுத்திருக்கும் பொக்கிஷத்தைத் திறந்து, அனனியா சப்பீராளைப்போல் அல்ல, மனப்பூர்வமாய் உற்சாகமாய்க் கொடுப்பது பெரிய காரியமா?

ஆகையால் அருள்நாதரின் திருச்சிலுவையினால் மேன்மையடைந்த அருமையான சகோதரரே! உங்கள் பொக்கிஷங்களைப் பூச்சியும் துருவும் கெடுக்காதிருக்கும்படியாகவும், திருடர் கன்னமிட்டுத் திருடாதிருக்கும்படியாகவும், அர்பத்நட் பேங்கைப்போன்ற அழிந்துபோகும் பேங்குகளில் அல்ல, அழியாத நித்தியமான திருச்சிலுவைப் பேங்கில் போடுங்கள். பணக்கஷ்டத்தால் கர்த்தருடைய வேலை குந்தகமாகாதபடி, நம்முடையபேராலும், நம்முடைய மனைவிமக்கள் ஒவ்வொருவருடைய பேராலும் நம்முடைய சகோதரர் திருச்சிலுவை யுத்தத்தை நடத்தும்படி, லோபத்தனமாயல்ல, தாராளமான மனதோடு நம்முடைய காணிக்கைகளைப் பாளையங்கோட்டையிலிருக்கும் இந்திய மிஷனெரி சங்கத்தின் பொக்கிஷதாருக்காவது செக்ரட்டெரிக்காவது உடனே அனுப்புவோமாக. பணக்கஷ்டத்தைப்பற்றி மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் எழுதியிருக்கும் அனுதாபமான நிருபத்தை வாசித்தபின்பும், நாம் செவிகொடாமல் போவோமானால், பயங்கரமான அந்தக் கடைசி நியாயத்தீர்ப்புநாளிலே, சர்வ லோக நியாயாதிபதியானவர், சர்வ ஜனங்களுக்கு முன்பாக 'நான்பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்' என்று சொல்வாரா? இவ்வார்த்தைகள் நம் ஒவ்வொருவருடைய மனதிலும் இருதயத்திலும் தொனித்துக்கொண்டிருக்கும்படி ஆவியானவர் கிருபைசெய்வாராக.

அவனேசி,
1—8—15. } J. S. C.

### நோட்டீஸ்

மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இயற்றிய 'அப்போஸ்தலர் நடபடி ஆகம ஆராய்ச்சிக் குறிப்புகள்' மிஷனெரி பாடவகுப்புகளில் உபயோகிக்கத்தக்கது. விலை அணா 6.

பாளையங்கோட்டை இந்திய மிஷனெரி சங்க ஆபீசிலிருந்து புஸ்தகம் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.



## 22-ம் சங்கீதம்.

இதற்கு சிலுவை கீதம் என்று பேரிடலாம். இச்சங்கீதத்தின் ஆரம்ப வாசகத்தை நமது கர்த்தர் சிலுவையிலிருந்து சொன்னதினால், இக்கீதத்தையே அவர் அச்சமயத்தில் தியானித்துக்கொண்டிருந்தாரோவென்று எண்ணத்தக்கதாயிருக்கிறது. யாரால், எச்சமயத்தில் இது எழுதப்பட்டது என்று திட்டமாய்க் கண்டுகொள்ள வழியில்லை. தாவீதோ, அவனுக்குப் பின்காலத்திலுள்ள ஓர் பக்தனோ கொடிய துன்பத்தின் மத்தியிலிருந்து தேவனை நோக்கிச் செய்யும் பரிதாப முறைப்பாடும், அவ்வித முறைப்பாட்டிற்கு உத்தரவாக உண்டான விடுதலையும் இக்கீதத்தில் அடங்கியிருக்கிறது. சிறையிருப்பிலிருந்த யூத ஜாதியின்பேரால் எரேமியாவோ, எசேக்கியேலோ பாடினதாக நினைப்பாருமுளர். யார் எவ்வித சந்தர்ப்பத்தில் இதை எழுதினபோதிலும், இவ்வுலகின் கண்ணுள்ள எப்பேர்ப்பட்ட மனுஷனைப் பார்க்கிலும் கொடிய பாடுகளையும் வேதனைகளையும் அநுபவித்த எம்பெருமான் இயேசுநாதர்க்கே இவ்வார்த்தைகள் பூரணமாய்ச் செல்லும் என்பது திட்டம். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்"? என்று கார் இருள் நடுவில் சிலுவையிலிருந்து கூப்பிட்டவர் அவரே. மனுஷரால் நிந்திக்கப்பட்டவரும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டவரும் அவரே (வா. 6). "என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால், இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" (மத். 27: 43) என்று வேறே யாரைப்பற்றிச் சொல்லப்பட்டது? "என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்" (வா. 17) என்றும், "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்" என்றும் உண்மையாய்ச் சொல்லக் கூடியவர் அவர்தானல்லவா? மேலும், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலல்லவா பூமியின் எல்லைகளெல்லாம் தேவனிடத்தில் திரும்பவும், ஜாதிகள் அவரைச் சேவிக்கவும் வாசல் திறவுண்டது! ஆதலால், இச்சங்கீதம் இயேசுநாதரில் பெற்ற நிறைவேறுதலை நினைத்து, அருள்நாதர் சிலுவையில் தொங்கின சமயத்தில் பாடின பிரலாப ஒப்பாரியாகவும், தீர்க்கதரிசனமாகவும் இதைப் பாவித்து வாசிப்பது நலம். இந்தக் கருத்தாகவே, பெரிய வெள்ளிக்கிழமையில் இதை வாசிக்கும்படி குறித்திருக்கிறது.

இச்சங்கீதத்தைப் பின்வரு முறையாய்ப் பிரித்தெழுதலாம்

I. முறைப்பாடு வா. 1, 2.

"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டிருக்கிறீர்?
எனக்கு உதவிசெய்யாமலும், நான் கதறும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?
என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன்; உத்தரவு இல்லை.
இரவிலும் கூப்பிடுகிறேன்; நான் சும்மாயிருக்கவில்லை."

தேவன் கைவிட்டதுபோலவும், உதவிசெய்யாததுபோலவும், உத்தரவு கொடாமல் தூரமாய்ப் போய்விட்டதுபோலவும் சங்கீதக்காரனுக்குக் காணப்படுகிறது. அது அவனுக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் தேவனுக்கும் அவனுக்குமுள்ள பாசமும் அன்பும் நீங்கவில்லை. தேவனை இன்னும் என் தேவன் என்றழைக்கிறான். "ஏன் கைவிட்டீர்"? என்று சொன்னபோதிலும், அதைத் தேவனைப் பார்த்துச் சொல்லுகிறானேயன்றி, தேவன் கைவிட்டார் என்று மற்றவர்களிடத்தில் முறைப்பாடு பண்ணவில்லை. இவ்வித ஐக்கிய விண்ணப்பத்துக்கு மறுமொழி வராமற் போகவே போகாது. இவ்வார்த்தைகளையே அருமை ரக்ஷகரும் சிலுவையிலிருந்து சொன்னார். உலகத்தின் பாவத்தைச் சுமந்தவராய்த் தொங்கும்போது, காரிருளின் நடுவிலிருந்து இதே கூக்குரலிட்டார். "என் தேவனே. என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" அவரடைந்த வேதனை எத்தனை அகோரமானது என்பதற்கும், தேவன் அவருக்கு எத்தனை சமீபமாக இருந்தார் என்பதற்கும் இவ்வார்த்தைகள் சாட்சி. உலகத்தின் துன்பங்களும், கஷ்டங்களும், உபத்திரவங்களும் காரிருள் போல வந்து மூடும்போது, அவ்விருளை ஊடுருத்து: என் தேவனே! என் தேவனே! என்று சொல்லக் கற்றுக்கொண்டவன் பாக்கியவான்.

II. முகாந்தரங்கள் வா. 3—10.

தேவன் தன் விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்காமலிருப்பதைப்பற்றி ஆச்சரியப்பட்ட சங்கீதக்காரன், அவர் தனக்குச் செவிகொடுக்கவேண்டுமென்பதற்குத் தன் முகாந்தரங்களை ஒவ்வொன்றாய்ச் சொல்லி மன்றாடுகிறான்.

1. பூர்வகாலத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அருளின கிருபைகளை நியாயமாக எடுத்துக் கூறுகிறன் வா. 3—5

நீர் பரிபூரண அன்பின் சொரூபியல்லவா? இஸ்ரவேலருக்கு தேவரீர் பாராட்டியிருக்கும் தயவும் அன்பும் எத்தனை அனந்தம்! அவர்கள் துதிஸ்தோத்திரப் பலியின் சுகந்த வாசனையின் மத்தியில் நீர் வாசம்பண்ணுகிறவராச்சுதே. அந்தக் கிருபையை அடியேனுக்கும் பாராட்டுமேன் என்கிறான்.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிறவரே!
நீரோ பரிசுத்தராயிருக்கிறீர். [கள்.
உம்மிடத்தில் எங்கள் பிதாக்கள் நம்பிக்கை வைத்தார்
உம்மை நோக்கிக் கூப்பிட்டார்கள்; விடுவிக்கப்பட்டார்
உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். [கள்.
அவர்கள் வெட்கப்பட்டுப்போகவில்லை.

2. தன் நிர்ப்பந்த ஸ்திதியை விரித்துரைக்கிறன் வா. 6—8.

நானோ ஒரு புழு: மனுஷனல்ல.
மனுஷரால் நிந்திக்கப்பட்டவன், ஜனங்களால் அவமதிக்கப்பட்டவன்.
என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.
உதட்டைப் பிதுக்குகிறார்கள்; தலையைத் துலுக்குகிறார்கள்;

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் அவனை விடுவிக்கட்டும்.
அவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, அவர் அவனை மீட்டு விடட்டும் என்கிறார்கள்.

எருசலேமின் துன்மார்க்கர் இப்படியே இயேசுநாதரைத் தூஷித்தார்களே.

3. **தன் ஆயுள்காலமெல்லாம் தேவன் தன்னை ஆதரித்துவந்த இரக்கத்தை அவருக்கு நினைப்பூட்டுகிறன் வா. 9, 10.**

என்னைக் கர்ப்பத்திலிருந்தெடுத்தவர் நீரே.
என் தாயின் மார்பில் நானிருக்கையில், என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினவர் நீரே.
கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டு, உமது சார்பிலேயே விழுந்தேன்.
என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல் என் தேவன் நீரே.

4. **சத்துருக்களுடைய நோஷ்டத்தையும், சரீரத்தின் வேதனையையும் வர்ணிக்கிறன் வா. 11—21.**

சத்துருக்கள் மாம்ச பலமும், மூர்க்கமும், குரூரமும் உள்ளவர்களானதால், அவர்களை காளை, எருது, சிங்கம், நாய் என்று அழைக்கிறான். யோர்தானுக்கப்புறத்திலுள்ள பாசான் தேசத்துப் புல்வெளிகளில் மேயும் ரிஷபம் மகா பெரிதும் பலமுமுள்ளவைகளானதால், சத்துருக்களை அவைகளுக்கு ஒப்பிட்டிருக்கின்றது.

“அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது.
பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து
பீறிக் கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல [கொண்டது
என்மேல் தங்கள் வாயை ஆவென்று திறக்கிறார்கள்!
தண்ணீரைப்போல ஊற்றப்படுகிறேன்!
என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது!
என் இருதயம் மெழுகுபோலாயிற்று!
என் குடல்களின் நடுவே அது உருகிப்போயிற்று!
என் பெலன் ஓட்டைப்போல காய்ந்திருக்கிறது!
என் நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொள்ளுகிறது!
மரணத்தூளிலே நீர் என்னைப் போடுகிறீர்!
நாய்களோ என்னைச் சூழ்ந்திருக்கின்றன!
பொல்லாப்புச் செய்கிறவர்களின் கூட்டம், என்னை வளைந்திருக்கிறது!
என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள்!
என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்!
அவர்கள் என்மேல் கண் உருட்டிப் பார்க்கிறார்கள்!
என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள்!
என் அங்கியின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்!
ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்!
என் சகாயமே, எனக்கு உதவிசெய்யத் தீவிரியும்!
என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும்,
எனக்கு அருமையானதை நாய்களின் வல்லமைக்கும் தப்புவியும்.
சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை ரட்சியும்.”

கல்வாரியில் கூடின கும்புக்கு இவ்வர்ணிப்பு எவ்வளவு பொருந்தினது! சத்துருக்களின் பரியாசத்தையும், கொடூர வதையையும், அகினாலுண்டான சரீர வேதனையையும் எவ்வளவு நன்றாய்ச் சொல்லியிருக்கிறது! ஆனால் இவ்விடத்தில் மாறுதல் உண்டாகிறது. ரட்சியும்! என்று கூப்பிட்டவன் திடீரென்று துதிக்க ஆரம்பிக்கிறான்.

“காட்டெருதின் கொம்புகளிலிருக்கும்போது
கர்த்தாவே, நீர் உத்தரவு கொடுத்தீர்!”

சத்துருக்களின் குரூரத்தை வர்ணித்த சங்கீதக்காரனுக்குத் திடீரென்று நம்பிக்கை பிறக்கவே, அவன் ஜெபம் துதியாக மாறிவிட்டது. நான் காட்டெருதின் கொம்புகளிலிருக்கிறேன், எனக்கு உத்தரவு கொடும் என்று ஜெபிக்க வாயெடுத்த பக்தன் விசுவாசத்தினால் அனல்மூண்டு, தேவ சகாயத்தைப் பெற்றுக்கொண்டவன்போல உத்தரவு கொடுத்தீர் என்று துதியிலே முடித்துவிட்டான். காட்டெருதினால் பீறுண்டு, அதின் கொம்புகளில் தொங்குகிறவன் தப்புவானோ? ஆனாலும் அவ்வித நிலைமையிலிருந்தே சங்கீதக்காரனுக்கு உத்தரவு வந்ததாம். கல்வாரி மலைமேல் யூதர்கள் இயேசுவைக் கொன்றுவிட்டோம் என்று நினைத்த சமயத்தில், இரட்சகர் மன்றாட்டைக் கேட்ட பிதா, தமது பலத்த சத்துவத்தினால் அவரை உயிரோடெழுப்பினாரே.

III. **விடுவிக்கப்பட்ட பக்தன் பாடும் துதியும், அதினால் வரும் பலனும் வா. 22—31.**

(1) தன் விடுதலையை நன்றியறிதலோடு நினைத்து, தேவனைப் பாடி, அவருக்குத் தன் பொருத்தனைகளைச் செலுத்தி சந்தோஷிக்கிறான். முதல் 21 வாக்கியங்களுக்கும் “உத்தரவில்லை” (வா. 2) என்பது பொருள். பிந்தின வாக்கியங்களுக்கு “நீர் எனக்கு உத்தரவு கொடுத்தீர்” என்பது பொருள் (வா. 21).

ஆகையால் உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவிப்பேன்.
சபை நடுவில் உம்மைத் துதிப்பேன். [கள்.
கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்
யாக்கோபின் சந்ததியாரே, நீங்களெல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்.
இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்களெல்லாரும் அவர்மேல் பயபக்தியாயிருங்கள்.
ஏனெனில் உபத்திரவப்படுகிறவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணவும் அருவருக்கவுமில்லை.
தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்கவுமில்லை.
அவரை நோக்கி அவன் கூப்பிட்டபோது அவர் கேட்டருளினார்.
மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்.
அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். [கள்.
உபத்திரவப்பட்டவர்கள் புசித்துத் திருப்தியடைவார்
கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்.
உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழ்வதாக.



எபிரேயர் நிருப ஆக்கியோன் இப்பாகத்தின் ஆரம்ப வாசகத்தை அருள்நாதர் சொன்னதாகப் பாவிக்கிறார். “இநி னிமித்தம் அவர்களைச் சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்று சொல்லியிருக்கிறார்” என்கிறார் (எபி. 2: 11, 12). மரித்தோரிலிருந்து தம்மை எழுப்பின பிதாவை அவர் துதித்து, தமது சகோதரருக்கு, அதாவது மீட்கப்பட்ட தமது சபைக்கு தேவ வல்லமையை அறிவிப்பேன் என்று சொல்லுகிறார். அவர் செலுத்தும் ஸ்தோத்திர பலியிலே அவர்களும் கூடச் சேர்ந்து புசித்துத் திருப்தியடையும்படி அவர்களைக் கூப்பிடுகிறார். இப்போஜன பலியில் பங்கு பெறுவதினால், அவர்கள் ஆத்துமா நீடூழிகாலம் வாழ்வதாக என்கிறார்.

லேவி. 7: 15-ல் “சமாதான பலியாகிய ஸ்தோத்திர பலி”யைச் செலுத்தினபின், அதை ஓர் பரிசுத்த போஜனமாக அனைவரும் கலந்து புசிப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. அதைத்தான் சங்கீதக்காரன் இங்கே நினைத்துப் பேசுகிறான். அருள்நாதர் தாமே “ஸ்தோத்திரம்பண்ணி” ஏற்படுத்தின ஸ்தோத்திர பலியாகிய பரிசுத்த நற்கருணைக்கு இவ்வசனங்கள் பொருந்தும். அந்த ரட்சகரோடு ஆவிக்குரிய ஐக்கியத்தை அடைந்து, ஞானப்பிரகாரமாக அதிலே அவரை ஆகாரமாகப் புசித்துத் திருப்தியடைந்து, அவரைத் துதித்து வாழுகிறவர்கள் பாக்கியவான்களே. “என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது” என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான். நானும் அவனில் நிலைத்திருக்கிறேன். என்னை புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (பரி. யோவா. 6 55—58).

(2) **துதியின் பலன் வா. 27—31.**

துதிஸ்தோத்திர பலியில் பங்குபெறும்படி தன் சகோதரரை அழைத்த சங்கீதக்காரன், இப்போது சர்வ பூமியும் இந்த நற்செய்தியைக் கேட்கும்போது தேவனிடமாய்த் திரும்பி, இந்த பலி போஜனத்தைப் புசித்து திருப்தியடைய வருவார்கள் என்கிறார். கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷமாகிய நற்செய்தியைக் கேட்டு, சகலத்தினரும் தேவனிடத்திற்குத் திரும்பி, அவரருளிய இரட்சிப்பினால் சந்தோஷிக்கும் காட்சியை இங்கே தீர்க்கதரிசனமாகக் காணலாம்.

பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்.
புறஜாதிகளின் வம்சங்களெல்லாம் உமக்கு முன்பாகத் தொழுதுகொள்ளும்.
ஏனெனில் ராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.
பூமியின் கொழுத்தவர்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள்.
புழுதியில் இறங்கப் போகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாகப் பணிந்து விழுவார்கள்.
தன் ஆத்துமாவை உயிரோடே காக்க சக்தியற்றவனும் பணிவான்.
ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; [படும்
அடுத்த தலைமுறைக்கும் கர்த்தரைப்பற்றிச் சொல்லப்
அவர்கள் வந்து, அவரே இதைச் செய்து முடித்திருக்கிறார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கும் அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

இயேசுபெருமானில் விளங்கிய தேவ அன்பை பூலோகத்தார் கேள்வியுற்று, தேவனை நினைத்து, அவரைத் தொழுதுகொள்ள வருவார்களாம். கல்வாரியின் சரிதையினால் புறஜாதியாரான பெரியவர்களும் சிறியவர்களும் கொழுப்பைப் புசிக்கும் ஐசுவரியவான்களும்; சாப்பாடு கிடையாமல் கஷ்டப்படும் தரித்திரரும் (வா. 29). கிறிஸ்துவில் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிற இந்த இரட்சணிய விருந்தைப் புசித்துப் போற்றுவார்களாம். ஒரு தலைமுறை அவரைச் சேவிக்கக் கையெடுக்கும். அந்தத் தலைமுறையார் அதை இரண்டாம் தலைமுறையாரான தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுவார்கள் (வா. 30). அந்த இரண்டாம் தலைமுறையார் அவர்களுக்குப் பிறக்கும் மூன்றும் தலைமுறையாருக்கு இதை அறிவிப்பார்கள் என்கிறார். எதை? “அவரே இதைச் செய்து முடித்திருக்கிறார்” என்ற செய்தியை. கல்வாரியில் நிறைவேற்றி முடித்த இரட்சண்ய கிரியையை விவரித்து, விவரித்து, தலைமுறை தலைமுறையாய் தேவனைக் கொண்டாடுவோர்களாம்.

இயேசு ரட்சகருடைய மரணத்தினாலன்றி வேறே யாருடைய மரணத்தினால் இவ்வித பலன் உண்டாகக்கூடும்? “அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்.” “அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிடுவார்.”

“என் தேவனே! என் தேவனே!” என்று கதறின தேவ குமாரன் ஆயத்தம் பண்ணியிருக்கும் இரட்சண்ய விருந்தில் பூலோகத்தாரெல்லாரும் பங்குபெற்று மகிழத்தக்கதாக நாமும் போய், சாட்சி சொல்லுவோமாக.

ஜெபம்:

1. குறித்த வேளையுண்டா?
2. நேரப்பட ஜெபிக்கும் அப்பியாசமுண்டா?
3. திட்டமான பொருள் வைத்து ஜெபிக்கும் வழக்கமுண்டா?
4. ஆத்திரம், அக்கறை காணப்படுகிறதுண்டா?
5. மாறுத்திரத்திற்காக எப்போதும் எதிர்நோக்கிக் கொண்டிருப்பது வாடிக்கையா?
6. ஸ்தோத்திரம் ஜெபத்தின் ஓர் அங்கமா?
7. “ஆவியில்” ஜெபம்பண்ணுகிறோமா?

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

விடுமுறை. போர்டிங் ஸ்கூல் பிள்ளைகள் உஷ்ணகால விடுமுறைக்குத் தங்கள் தங்கள் கிராமங்களுக்கு ஒரு மாதம் போய்வந்தார்கள். சிலர் மூன்று நாள் பிரயாணம்வரை போகவேண்டியவர்கள். அந்த நாட்களில் சில பையன்கள் அங்கங்கே செய்த வேலைகளைக்குறித்து உற்சாகமான சமாச்சாரம் வந்தது. நாலைந்து பையன்கள் தங்கள் கிராமத்திலுள்ள பையன்களுக்கு தெலுங்கு அக்ஷரம், வாசிப்பு சொல்லிக்கொடுத்தார்கள். சில பையன்கள் கர்த்தருடைய ஜெபம் கற்பித்தார்கள். தங்கள் பெற்றோருக்கும் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் சில பெண்பிள்ளைகள் கர்த்தருடைய ஜெபம் சொல்லிக்கொடுத்தார்கள். உபாத்திமாருடைய பிள்ளைகள் தங்கள் தகப்பனோடுடன் சேர்ந்தும், பிரத்தியேகமாகவும் அற்பசொற்ப வேலைகள் செய்ததாகத் தெரிகிறது. ஒரு பையனுடைய வேலையைப்பற்றி கனம். பாக்கியநாதன் ஐயரவர்கள் மிகவும் மெச்சிப் பேசினார்கள். பெண்பிள்ளைப் பிள்ளைகளில் இரண்டுபேருக்கு விவாகம் ஆனது. அவர்கள் போயிருக்கும் சபைகளில் அவர்கள் நன்மாதிரி காட்டவும் ஆசீர்வாதமுள்ளவர்களாய் விளங்கவும் அவர்களுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிள்ளைகள் வரவு. வேனிற்கால விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போது, புதிதாய்ச்சேர விரும்பிக் கொண்டுவரப்பட்டவர்கள் 13 பேர். இவர்களில் 10 பேர் மாத்திரம் சேர்க்கப்பட்டார்கள். அதில் 4 பேர் கம்மாமேட்டு மிஷனால் ஆதரிக்கப்பட்டு, நெசவு, தச்சு முதலிய தொழில் கற்றுக்கொள்ளும்படியனுப்பப்பட்டிருக்கிறார்கள். நமது பையன்களில் 3 பேர் ஐந்தாம் வகுப்பு படிக்கும்படியாக கம்மாமேட்டுப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவர்களைக்குறித்து அந்த ஸ்கூல் ஹெட்மாஸ்தர் 'உங்கள் பிள்ளைகள் எல்லா விஷயத்திலும், எங்கள் பிள்ளைகளைவிட ஐந்தாம் வகுப்புக்குத் தகுதியாயிருக்கிறார்கள்' என்று எழுதினார். ஆகவே, இப்போதிருக்கும் பையன்களின் மொத்தம் 29; பெண்களின் மொத்தம் 22. பதிமூன்றுபேருக்கு இன்னும் ஆதரிப்போர் தேவை. இந்தச் சிறியவர்களைக்குறித்து நமது நீசக்கோலத்தை எடுத்த இரட்சகர்: 'மிகவும் சிறியவராகிய என சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்று சொல்லும் அருள் மொழிகள் உங்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் ஆகவேண்டாமா? இதன்றியும், தாழ்ந்த வகுப்பினரென்று அவமதிக்கப்படும் மாதிக குலத்தவரில் நாலு பிள்ளைகள் சிங்கரேனி மிஷனிலிருந்து நமது போர்டிங்சாலைக்கு இந்த வாரம் வருவார்கள். மேல் வகுப்பினரென்போரும் கீழ்க்குலத்தவரென்போரும் கலந்து, ஏக ஐக்யமாய் கிறிஸ்துவின் பிள்ளைகளாய் ஒருவரையொருவர் நன்கு மதித்து அந்யோந்யத்திலும் அன்பிலும் வளர அவர்களுக்காகவும் எங்களுக்காகவும் ஜெபிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோமாஸ் துன்பம். இந்தத் தோமாஸை சிலர் பார்த்திருக்கலாம். அநேகர் இவனைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். இவன் எருக்கலா குலத்தைச்சேர்ந்தவன். மிஷன் கைத்தொழில்சாலையில் தச்சுவேலை கற்று, இப்போது அதினால் ஜீவனம் சம்பாதித்துக்கொள்ளுகிறான். பக்கத்திலுள்ள ஒட்டர்குலச் சபையாருக்குள் சம்பளமில்லாமல் வேலையும் செய்துவருகிறான். பயணச் சீட்டு இல்லாமல் வந்த ஒருவன் நிமித்தம் போலீசார் இவனையழைப்பித்து, தங்கள் அறைக்குள் விட்டு கதவைச் சாத்தி, நலியப்புடைத்து அனுப்பிவிட்டார்கள். அவன் முதுகிலும் பின் புஜங்களிலும் பலமான அடிகள், கையில் காயங்கள். ஆனாலும் போலீசாருக்கு விரோதமாய்ச் சாட்சிகள் எழும்பிவரமாட்டாததாலும், பிரியாது செய்வதனால் பணமும் காலமும் வியர்த்தமாவதாலும், தாலுக்கா அதிகாரி முதலிய பெரியவர்களுக்குக் காரியத்தைத் தெரிவித்து, தேவசகாயத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். அநியாயமாய்த் துன்பப்பட்டவனுக்குப் பொறுமையையும் அதனாலுண்டாகும் தைரியத்தையும் அநுக்கிரகிக்க கர்த்தரை மன்றாடுவோமாக.

பயிற்சிசாலை. நமது பாடசாலையில் கற்ற மூன்று பேரை தேவ ஊழியத்திற்கென்று பயிற்றுவிப்பது நலமென்று தோன்றினபடியால், அவர்களுக்கு ஓர் வகுப்பு நடக்கிறது. ஏற்றகாலத்தில் பிரயோஜனமான ஊழியராய் எழும்பும்படி அவர்களுக்காகப் பிரார்த்திக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நரம்புச்சிலந்தி. இதென்னவென்று நீங்கள் நினைக்கலாம். ஏனென்றால் அவ்விடங்களில் இந்தப் பேர் அபூர்வம். இவ்விடங்களில் இது நூதனமல்ல. இது ஒருவகைப் புண். காலில் உண்டாகும். நமது பள்ளிக்கூடத்திற்கு 13 கிராமங்களிலிருந்து பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். ஆனாலும் இவ்வியாதி வராத ஊர் கிடையாது. பிள்ளைகளில் 9 குடும்பத்தாருக்கு வம்சபாரம்பரியமாய் வந்துகொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. லீவிற்குப்பின் 2 பையன்களும் ஓர் பெண்பிள்ளைப் பிள்ளையும் வெகுவாய்ச் சங்கடப்பட்டு, தெய்வகடாட்சத்தால் சுகமாகிவருகிறார்கள். இதன் வேதனையும் துர்நாற்றமும் மிகக் கொடியது.

தொழிற்சாலைக் கட்டடம். இது முடிவாகிவிட்டது. சீக்கிரத்திற்குள் இதில் தச்சுவேலையும் நெசவுவேலையும் நடக்கும். இந்தப் புதுக் கட்டடத்தில் நாலு தரிகள் போடுவதற்குரிய இடமும், அவைகளின் பணிமுட்டுகளும், செய்யப்படும் துணிகள் வைக்கும் ஓர் அறையும் ஒருபக்கத்தில் உண்டு. மறுபக்கத்தில் பையன்கள் தச்சுவேலை செய்கிற இடமும், தச்சுவேலைச் சாமான்கள் முதலியவைகள் வைக்கும் ஓர் அறையும் உண்டு. இந்தத் தாலுகாவிலுள்ள கிறிஸ்தவர்களின் நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு இது அநுகூலமாயிருக்குமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. தற்சமயம் ஒரு கைத்தரியினால் சம்பாதிப்பது மாதம் ஒன்றிற்கு 5 ரூபாய் முதல் 7 ரூபாய்க்குமேல் வருகிறதில்லை. இனி புதுமாதிரி நாடா அமைக்கப்பட்ட தரியினால் ஒரு தரி வைத்துக்கொண்டு ஒருவன் மாதம் ஒன்றிற்கு குறைந்தபக்ஷம் 10 ரூபாய் முதல் 14 ரூபாய் வரை சம்பாதிக்கக்கூடும். இவ்வகைத் தரிகளின் விலை 30 ரூபாய் முதல் 45 ரூபாய் வரையடக்கும். இவ்விடங்களில் சுயாதீனப் பிரசங்கிகளாய் அல்லது ஊழியர்களாய் இருக்க விரும்புவோருக்கு ஒரு தரியும் நூலுக்காகப் பத்துப் பதினைந்து ரூபாய் முதலுமிருந்தால் போதும் என்றெண்ணுகிறேன். பனைநாரினால் கட்டின கட்டில்களையே பார்த்தவர்களுக்கு நூலினால் செய்த நாடாக் கட்டின கட்டில்கள் நூதனமாயிருக்கும். இவ்விடங்களில் இவ்வகை நாடாக்கள் அதிகம் தேவை. பிள்ளைகள் இதைக் கற்றுக்கொள்வது நெசவுக்கு அநுகூலமாயும் தங்களுக்கு நன்மையாயுமிருக்குமென்று அறிந்து இதையும் புதிதாக ஏற்படுத்தியிருக்கிறோம். கம்பளத்துக்காக ஓர்காலத்தில் பிரவசித்திபெற்ற வாரங்கல் இங்கேயிருந்து அதிகத் தூரமில்லை. சிறிதுகாலங்களுக்கு முன் நமது பள்ளிக்கூடங்களைப் பார்க்க வந்த இவ்விடத்து சர்க்கார் உத்தியோகஸ்தர் 'ஒருகாலத்தில் பிரவசித்திபெற்ற வாரங்கல் கம்பள நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வது உங்களுக்கு லாபகரமாகவும், பெரும்பேராகவும், கிறிஸ்தவர்களுக்கு அநுகூலமாகவுமிருக்குமென்று' ஆலோசனை சொன்னார். S. V. S.



## பன்னிரண்டாவது வருஷாந்தரக் கூட்டம்.

மாலை ஆறு மணிக்கு வருஷாந்தரக் கூட்டம் ஆரம்பித்தது. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பீடம் வகித்தார்கள். கனம்: V. J. டேயர் ஐயரவர்கள் வருஷாந்தரப் பிரசங்கம் செய்தார்கள். "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி. 2: 4) என்பது அவர்கள் தெரிந்துகொண்ட வசனம்.

முதலாவது, நமது பிரமாண்டமான தேசத்தின் பரிதாப நிலைமையை வெகு தெளிவாய் எடுத்துக் காட்டினார்கள். நூற்றுக்கு ஒருவன் மாத்திரம் கிறிஸ்துவின் அன்பை அறிந்திருக்க, 99 பேர் அதை அறியாதவர்களாக ஜீவிப்பது என்ன பரிதாபம்! திருநெல்வேலி சீமையில் பன்னிரண்டு பேருக்கு ஒருவன் கிறிஸ்தவனானதால், திருநெல்வேலி சபையின் உத்தரவாதம் எத்தனை பெரிது! ஆப்பிரிக்காவின் வட பாகத்திலுள்ள பூர்வ கிறிஸ்து சபை, சவக்கடல், மலையாள சூரியானி சபையின் கடந்தகால ஜீவியம் முதலிய திருஷ்டாந்தங்களைக் கொண்டு, தமிழ்ச் சபையானது சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தில் கரிசனைகொள்ளவேண்டிய அளவு கரிசனையெடுக்கத் தவறுமானால், அதற்கு வரவேண்டிய ஆசீர்வாதமும் குறைவுபடும். ஆதலால் சபையின் குருமார் தேவ ஊழியர் விசேஷ முயற்சியெடுத்து மிஷனெரி ஊழியத்தில் கைகொடுக்கவேண்டுமென்று ஏவினார்கள்.

இரண்டாவது, மிஷனெரி வேலை சம்பந்தமாய் நமது சபைகளில் காணப்படும் அசதிக்குக் காரணம்: கோடிக்கணக்கான புறமதஸ்தருக்கும் அநேக இந்து ஆலயங்களுக்கு முன்பாக கிறிஸ்தவர்க ளெம்மாத்திரம், அவர்களுடைய முயற்சியினால் இப்பெரிய தேசம் கிறிஸ்துவினண்டை வந்துவிடுமாவென்ற அவிசுவாசமும், கர்த்தர் கொடுத்திருக்கும் ஆஸ்திபாஸ்தியோ, சுகம் சௌக்கியமோ யாவும் எனக்கும் என் பிள்ளைகளுக்குமென்ற சுயநயமும், புறமதஸ்தரான இந்துக்கள் மகமதியரின் நிர்ப்பந்தமான மார்க்க ஸ்திதி, விக்கிரக வணக்கத்தின் கொடும் பாதகம் இவைகளைச் சரியாய் உணராததால், அவர்கள்மீது அநுதாபமின்மை என்பவைகளே எனப் பரிஷ்காரமாய்க் காட்டினார்கள்.

மூன்றாவது, எவ்வாறு மிஷனெரி வேலையில் கைகொடுத்து, நமது அருமையான சங்க ஊழியங்கள் விர்த்தியாகவும் ரிப்போர்ட்டில் கண்ட பணக்குறைவு நிவர்த்தியடையவும் உதவிபுரியலாமென்று காட்டினார்கள். ஊக்கமான விண்ணப்பம் செய்வதினால் எல்லோரும் உதவிசெய்யலாமென்றும், ஜெபமே சங்கத்தின் பெலனானதால், தனித்தும், சபையாகக் கூடியும் ஜெப தூபம் எழும்பும்படி விசேஷ முயற்சி ஒவ்வொரு சபையிலும் நடக்கவேண்டுமென்றும் பகர்ந்தார்கள். திராணிக்குத்தக்கதாக கிரமமான ஈகையினால் உதவி செய்யும்படி அழைத்தார்கள். கலியாண சந்தோஷங்கள் கொண்டாடும் சமயங்களிலும், நிலங்களை வாங்கும்போதும், புது வீடு கட்டும் காலத்திலும் ஸ்தோத்திரக் காணிக்கை படைக்கும்படியாகவும், 'உவில்' என்னும் மரணசாதனம் எழுதுங்கால், இந்திய மிஷனெரி சங்கத்திற்கென்று ஓர் பாகம் சொத்துகளிலும் இருப்புத் தொகைகளிலும் எழுதி வைக்கவும் ஆலோசனை சொன்னார்கள். தவிரவும், பிள்ளைகளை மிஷனெரி ஊழியத்திற்குப் படைக்கும்படியாகவும் ஏவி எழுப்பினார்கள்.

## பொக்கிஷ கமிற்றிமார் விஞ்ஞாபனம்.

பிரியமுள்ள ஐயா,

திருநெல்வேலி நாட்டுக் கிறிஸ்தவர்களும், மிஷனெரி வேலையை நேசிக்கிறவர்களும், மிகுந்த மனோற்சாகமாய் இந்திய மிஷனெரி சங்கத்தை நேசித்து, அதைப் பரிபாலித்து வருவது மிகவும் நன்றியறிதலான விஷயமே. சங்கத்தின் வேலையில் காணப்படும் ஆச்சரியமான வளர்ச்சி, கர்த்தர் நம்மோடிருந்து, நமது மூலமாய்க் கிரியைசெய்து வருகிறாரென்பதற்குப் போந்த அத்தாட்சியல்லவா? திருநெல்வேலி சபையின் பெலவீனமான இந்த முயற்சியில் கர்த்தர் தமது முத்திரையைப் பதித்திருக்கிறாரென்பதும், தனித்தனியாக அநேக ஆத்துமாக்களுக்கும், மொத்தமாகப் பல சபைகளுக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் சாதனமாக நமது சங்கத்தை கர்த்தர் உபயோகித்து வருகிறாரென்பதும் எவரும் மறுக்கக்கூடாத விஷயங்களே.

சங்கத்தின் வேலை எவ்வளவாய் விருத்தியாகிவருகிறதோ அதே அளவாய் செலவும் அதிகரித்துவருவது இயற்கை. ஆகவே, செலவுக்குத் தக்கதாக வருமானமும் விர்த்தியாக வேண்டியது இன்றியமையா அவசியமென்று யாவரும் ஒப்புக்கொள்ளுவோம். தற்சமயம் மாதச் செலவு ரூ. 1000-க்கு அதிகமாகிறது. ஆனால் 31—3—15ல் கையிருப்போ ஒருவாறு சொல்லவேண்டுமானால், பூச்சியந்தான். மேலும், நமது சங்கவருமானத்தின் மிகுதியான பாகம் வருஷந்தோறும் மார்ச்சு மாதத்தின் கடைசி மூன்று வாரங்களில்தான் பொக்கிஷதார்வசம் வருகிறது. இதனால் மாதந்தோறும் நேரிடும் செலவுகளுக்குப் பணம் சரிபண்ணுவது சங்கத்தின் உத்தியோகஸ்தர்களுக்கு மிகுந்த கஷ்டமும் கவலையுமாயிருந்து வருகிறது.

தெலுங்குநாட்டிலும் பளியர் மிஷனிலும், வேலை இன்னமும் மிக்க அசத்தியம் விருத்தியாகவேண்டியதிருக்கிறது.

கிறிஸ்துமார்க்க சத்தியங்களைக் கற்றுக்கொள்ளவும், சபையில் சேர்க்கப்படவும் ஜனங்கள் அநேகர் ஆவலாய்க் காத்திருக்கிறார்கள். போதுமான ஊழியரில்லாததால், அவர்களை ஏற்றுக்கொள்ள மார்க்கமில்லை. திறந்த வாசல் நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நல்ல சமயத்தை நாம் தவறவிட்டுவிட்டால், வாசல் அடைபட்டுப்போகலாமே. ஆதலால் நமது மேலிருக்கும் உத்தரவாதம் மிகவும் பெரிது. மிஷனெரி ஊழியம் செய்வதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, புறப்பட்டுப்போக, ஆட்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களை அனுப்புவதற்கோ பணம் இல்லை. கர்த்தர் ஆட்களைக் கட்டளையிட்டிருப்பதால், பணமும் அனுப்புவார் என்று திட்டமாய் நம்புகிறோம்.

மாதாமாதம் செல்லும் செலவுக்குப் பர்த்தியாக (Working balance) ரூ. 6000 உடனே சேகரிக்கவேண்டுமென்றும், இந்த வருஷத்தின் கடைசிக்குள்ளாக தெலுங்கு நாட்டிற்கு இன்னும் ஒரு மிஷனெரியையாவது அனுப்பவேண்டுமென்றும் நமது சங்க காரியக்கர்த்தா சபையார் நாளது ஜுலைமீ 14உ கூடிய கம்மிற்றிக் கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். அதின்பேரில் வரப்போகிற ஆறு மாசங்களுக்குள் செலவுக்கான கையிருப்புத் தொகையாக (Working balance) ரூ. 6000 விசேஷ முயற்சி யெடுத்து சேகரிக்கவேண்டுமென்று தீர்மானித்து, சங்க நண்பருக்கு இந்த அழைப்பை அனுப்புகிறோம்.

நமது சங்கத்தின் அவசியங்களையும் கிறிஸ்தவர்களின் கடமையையும் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பரிஷ்காரமாய் நன்குணர்த்தி, ஓர் கடிதம் நம் பத்திரிகையில் கடந்த மாசம் எழுதியிருந்ததை வாசித்திருக்கிறீர்கள். இப்போதிருக்கும் பெரிய அவசரத்தை உணர்ந்து, சங்க ஊழியத்தில் கைகொடுத்து ஊக்கமாய் உதவிபுரிய கர்த்தருடைய நாமத்தினால் உங்களை அழைக்கிறோம்.

(1) எங்களோடு ஒருமைப்பட்டு, சங்கத்தின் அவசியங்களை கர்த்தர் முன் நிறுத்தி, நாம் கோரியிருக்கும் காரியம் கைகூடும் வரை நாடோறும் விடாப்பிடியாய் கர்த்தருடைய பாதமடைந்து, போராட்டமாய் பிரார்த்திப்பது எவருக்கும் கூடிய காரியமல்லவா? இப்படி ஜெபிக்கிறவர்கள் தேவை.

(2) அப்போதைக்கப்போது வேண்டும் செலவுக்குப் பர்த்தியாக சேகரிக்கும் நிதிக்கு விசேஷ நன்கொடைகள் தேவை. விசேஷித்த கஷ்டகாலத்தில் விசேஷித்த ஈகை தகுதியே. தமது ராஜ்ய விர்த்திக்காக நமது ஆத்திரம் எவ்வளவு, நம்மை வெறுத்து நாம் கொடுக்கக்கூடிய காணிக்கை எவ்வளவு என்று நம்மைப் பரீட்சித்துப்பார்க்க கர்த்தர் இந்தக்கஷ்டத்தை நமது சங்கத்துக்குக் கட்டளையிட்டிருக்கிறாராக்கும். நாம் எழும்பி, நமது கர்த்தருக்காகக் கொடுப்போமாக. நான் உனக்காக என் உயிரைத் தத்தஞ்செய்தேன்; நீ எனக்காக இப்போது செய்வதென்னவென்று கர்த்தர் கேட்கிறார். "இப்போதும் உங்களில் இன்றையத்தினம் கர்த்தருக்குத் தன் காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்?" (1 நாளா. 29: 5) என்ற சப்தம் நமது காதுகளில் தொனிக்கிறது.

(3) விசேஷ நன்கொடைகளினால் நமது வருஷாந்தரக் காணிக்கை குறைந்துவிடக்கூடாது. வருஷாந்தரம் வரும் தொகை குறைந்துபோனால், விசேஷக்காணிக்கையின் பயன் ஒன்றுமில்லையே. நாளது வருஷம் கூட அனுப்பும்படி தீர்மானித்திருக்கும் மிஷனெரியை அனுப்புவதற்கு வருமானம் அதிகரிக்கவேண்டும். ஆகையினால் வழக்கமாய் சங்கத்திற்குக் காணிக்கை அனுப்பும் நண்பர் உற்சாகமாய்க் கூட்டி காணிக்கை அனுப்பவும், இதுவரை திட்டமாய் யாதொன்றும் கொடாதவர்கள் தங்கள் நிமித்தமாகவும் கர்த்தரின் வேலையின் அவசியத்தினிமித்தமாகவும் காணிக்கை படைக்கவும் அழைக்கிறோம். "நீ ஆசீர்வாதமாயிரு, நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்பது தேவவாக்கு.

விசேஷ நன்கொடை விஷயமான காணிக்கை உடனே வேண்டும் காலதாமதம் ஏற்காது, அவசரம் அதிகம். என்றாலும், செலுத்த விரும்புந்தொகையை ஒரே மொத்தமாகச் செலுத்த வகையில்லாதவர்கள், அத்தொகையை மாதாமாதம், அல்லது இரண்டு மூன்று தடவையாக அனுப்புவது மெத்த நலம்.

கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்.
விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும்.

இப்படிக்கு,
எஜமானின் ஊழியத்தில் உங்கள் உடன் பங்காளிகளான,
இ. மி. ச. பொக்கிஷ காரிய நிர்வாக சபையார்.

## The Working Balance Fund
## செலவுக்கான கையிருப்பு நிதி

வரவு. ஆகஸ்ற்றுமீ 2உ—13உ.

உமது கரத்திலே வாங்கி, உமக்குக் கொடுத்தோம்.

| மக-ள-ள-ஸ்ரீ | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| ,, J. S. கொர்நேலியஸ் | அவனூர் | ... | 50 | 0 | 0 |
| ,, துரைசாமி | அம்பாசமுத்திரம் | ... | 5 | 0 | 0 |
| ,, G. சாமுவேல் | திருநெல்வேலி | ... | 10 | 0 | 0 |
| ,, J. அன்புடையான் | பாளையங்கோட்டை | ... | 50 | 0 | 0 |
| ,, S. பாலையா (1-வரவு) | திருநெல்வேலி | ... | 5 | 0 | 0 |
| ,, G. தேவதாசன் | பாளையங்கோட்டை | ... | 30 | 0 | 0 |
| ,, வேத ஜெகடாஸ் | எல்லாபட்டி | ... | 10 | 0 | 0 |
| ,, J. ராஜ மனுவேல் | ,, | ... | 5 | 0 | 0 |
| ,, ஆபிர. கோயில்பிள்ளை | ,, | ... | 1 | 8 | 0 |
| ,, V. S. செல்லையா | சேலம் | ... | 25 | 0 | 0 |
| G. R. சாமுவேல் அம்மாள் | காண்டை | ... | 15 | 0 | 0 |

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும்.
மானேஜர்: மக-ள-ள-ஸ்ரீ V. சாமுவேல் அவர்கள், B. A. பாளையங்கோட்டை.
Editor: The Secretary I. M. S. T.
PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

1064

JULY, 1915 Registered No. M.481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 20 DEC 1915 MADRAS.

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XII. No. 7] ஜுலைமீ 1915 [விலை பை 3

CONTENTS

Editorial Notes ... ... ... ... 49
From the Telugu Field ... ... ... ... 50
Studies in the Psalms ... ... ... ... 51
Confirmation: Its purpose in the Anglican Church 52
From the Lord Bishop of Dornakal ... ... 55

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 49
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... 50
சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... 51
திடப்படுத்தல் ... ... ... ... 52
தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நிருபம் ... ... 55

## பத்திராதிபர் குறிப்புகள்.

**அத்தியக்ஷரவர்கள் நிருபம்.** மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் எழுதும் ஓர் அன்பான நிருபம் இச்சஞ்சிகையின் கடைசி பக்கங்களில் காணலாம். தங்களுடைய இடைவிடாத வேலையின் மத்தியில் தாங்கள் எப்போதும் நேசித்துவரும் திருநெல்வேலி சபையையும் அதின் மிஷனெரி ஊழியத்தையும் நினைத்து, இந்த நிருபம் வரைந்திருக்கிறார்கள். யாவரும் கவனமாய் வாசிக்க அன்பாய் அழைக்கிறோம். குருமாரும் தேவ ஊழியரும் ஓய்வுநாள் ஆராதனை ஒன்றில் இந்நிருபத்தை ஆலயத்தில் ஜனங்களுக்குப் படித்துக்காட்ட அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

**போக்கிஷ ஸ்திதி.** 1914—15-ம் வருஷ வரவு ரூ 12,124—0—11. இத்தொகை முந்தின வருஷத்தைப் பார்க்கிலும் ரூ. 3532-6-2 குறைவு. சர்க்கிள் சர்க்கிள்களாகவும் சபை சபைகளாகவும் பார்த்தால், சபைகள் அநேகம் மிஷனெரி ஊழிய காணிக்கைகளில் மிகவும் குறைந்து காணப்படுகின்றன வென்பது துக்கமான விஷயமே. இப்போது வேண்டியது:—(1) கோவில் கட்டட பண்டுக்குக் கொடுக்கவேண்டிய கடனை நீக்க ரூ. 3371—5—0. (2) மாசா மாசச் செலவுகளைச் சரிபண்ண கையிருப்பு பொக்கிஷமாக (Working Balance) ரூ. 6,000. (3) நாளது வருஷம் வேலையை விர்த்திபண்ண ரூ. 3,000. தேவாலயம் முடிவுபெற இன்னும் ரூ. 8,000. இத்தொகைகளைக் காணவே, ஜென்ம சுபாபமுள்ள மனுஷன்: என்ன பெரிய தொகை!! திருநெல்வேலியின் பிள்ளைகள் இத்தொகை சரிபண்ணுவது கூடிய காரியமா? என்கலாம். தேவனால் எல்லாம் கூடும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும். நமது சர்வவல்லமையுள்ள தேவனை சரியானபிரகாரம் கணக்கில் வைத்து, நண்பர் யாவரும் முயற்சி செய்வது மெய்யானால், இத்தொகை எம்மாத்திரம்!! ஒரே சபை தன் ஆலயங் கட்டுவதற்கு ரூ. 5000, 10,000 சேர்த்து, சிறப்பான ஆலயம் கட்டிமுடிக்கக் கர்த்தர் கிருபை அளிக்கிறாரே. திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள சபைகள் யாவும், பர்மா, இலங்கை, சிங்கப்பூர், திருச்சி, சேலம், சென்னை, கோயம்புத்தூர் முதலிய பல இடங்களிலுமுள்ள நெல்லையின் பிள்ளைகளும் ஏகமாய் எழும்பி, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடுப்பது நிசமானால், இக்குறைவு நீங்குவது எத்தனை சுலபமாயிருக்கும்! இப்போது நான் செய்யவேண்டியது என்னவென்று இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தற்சோதனை செய்யவும், தங்களால் இயன்றதைச் செய்ய உடனே ஆரம்பிக்கவும் கர்த்தர் கிருபை கட்டளையிடுவாராக.

**நன்றியறிதலான விஷயங்கள்.** சங்கம் பணவிஷயமாய்ச் சற்று கஷ்டமான ஸ்திதியிலிருக்கிறதென்பதை அறியவே, சிலர் ஒன்றுகூடி நாடோறும் ஜெபிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒருவர் தம் குடும்ப சாட்பாகு விஷயங்களில் சிலவற்றை வெறுத்து, மாசம் ஏழு அல்லது எட்டு ரூபாய் காணிக்கை படைக்கத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். இன்னொருவர் சங்கத்தின் பணக்கஷ்டம் நீங்கும் வரைக்கும் தாம் வழக்கமாய்க் கொடுக்கும் காணிக்கையுடன் மாதம் ரூபாய் மூன்று கூடக்கொடுக்க வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நமது அருமையான சங்கம் மகா ஊக்கமான ஜெபத்தினால் உற்பத்தியானது அநேக உத்தமரின் ஓயாத விண்ணப்பத்தினால் வளர்ந்தேறினது. இன்னும் ஜெபமே பெலன்.

### தெலுங்குநாட்டுக் கடிதம்.

**தோர்ணாக்கல் போர்டிங் பாடசாலைகள்.** 1. போர்டிங் ஆண்பாடசாலை: உபாத்திமார் 2. போர்டிங் பையன்கள் 23. மற்றப் பையன்கள் 3. போர்டிங் பெண்பாடசாலை: உபாத்தினிமார் 3. போர்டிங் பெண்கள் 17.

**வகுப்புகள்.** தற்சமயத்தில் பையன்களுக்கு நான்காம் வகுப்பு வரையிலும், பெண்பிள்ளைகளுக்கு மூன்றும் வகுப்பு வரையிலும் பாடங்கள் நடக்கின்றன. சென்னை ராஜதானியிலுள்ள பள்ளிக்கூடங்களில் என்னென்ன பாடங்களோ அவ்வாறான பாடங்களே கற்பிக்கப்படுகின்றன. சத்ய வேதம் காலை மாலை இரண்டு வேளைகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது. இவர்கள் பொதுவாக மந்த புத்தியுள்ளவர்களான தால், இவர்கள் மனதில் பதிப்பிக்கிறது மிகவும் கஷ்டமே.

சரியான உபாத்திமார் கிடைக்காததினாலும், தற்சமயம் பயிற்சிசாலை வகுப்பு இல்லாததினாலும் நான் வேதபாடமும் இங்கிலீஷ் பாடமும், பொருள் பாடமும் கற்பித்துவருகிறேன்.

**வெளிப்பிரசங்கம்.** ஓய்வுநாட்களில் மாலைதோறும் சுற்றிலுமுள்ள வெளியூர்களுக்குப் போய், தேவவசனத்தைக் கூறியறிவிக்கிறோம். பையன்களுக்குப் பாட்டுப் பாடுவது மிகவும் பிரீதி அவர்கள் பாட்டுகளை ஜனங்கள் நன்றாய்க் கேட்கிறார்கள். இந்த வருஷத்தில் போய் அறிவித்த கிராமங்கள் 7. லம்பாடி தண்டாக்கள் 8. ஒவ்வொன்றிற்கும் இரண்டு முறையும், சிலவிடங்களுக்கு அதற்கு அதிகமாகவும் போயிருக்கிறோம். முன்னே பிரசங்கிகளைக் கண்டு ஓடிப்போனவர்கள் இப்போது அமைதலாய் உட்கார்ந்து திருவசனத்தைக் கேட்கிறார்கள். முன் தூரத்தினவர்கள் இப்போது சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

**தச்சுவேலை.** பையன்களில் இரண்டு பேர் வேதபாடம் கற்கும் வகுப்பில் சேர்ந்து வேதபாடங்கள் கற்று, பின்பு போய் தச்சுவேலை செய்யப் பழகிவருகிறார்கள். எல்லாப் பையன்களும் தச்சுவேலை தினம் 1½-மணி நேரம் பழகுகிறார்கள். தச்சுவேலை பழகுகிற இவர்கள் ஓர் காலத்தில் சுயாதீனப் பிரசங்கிகளாய் வரவேண்டுமென்பது எங்கள் நோக்கம்.

**நெசவு வேலை.** கட்டடக் குறைவினால் தறிகள் அதிகம் போட வகையில்லாமற்போயிற்று. ஆனாலும் இரண்டு பேர் Fly Shuttle மாட்டிய தறியில் வேலைபழகி, நாளொன்றுக்கு 10 முழம்வரை நெய்யக் கற்றிருக்கிறார்கள். புதுக்கட்டடம் தயாராகி,இன்னும் இரண்டொருதறிகள் போட்டதும்பையன்கள் இரண்டுபேரைப் பழக்கி, ஸ்வாதீன ஊழியர்களாய்வரச் செய்யவேண்டுமென்ற நோக்கமுள்ளவர்களாயிருக்கிறோம்.

**பிள்ளைகளில் காணப்படும் மாறுதல்கள்.** பையன்கள், பெண்பிள்ளைகளிடத்தில் இயற்கையான அநேக குறைவுகளுண்டு. முக்கியமாய் திருட்டு, பொய், தூஷணம், சண்டையிடுதல் முதலியன. தேவ ஒத்தாசையினால் அநேகர் இவைகளுக்கு முற்றிலும் அந்நியர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லத்தகும். இவர்கள் தங்கள் விடுமுறைக்கு கிராமங்களுக்குப் போய்வந்தபின் இவர்களிடம் காணப்படும் நற்காரியங்கள் ஸ்திரமானவைகளோ அல்லவோ என்று சொல்லக்கூடும் என்று எண்ணுகிறேன். இவர்கள் வீட்டுக்குப் போகும்போது சுருட்டுப் பிடித்தல், கள் குடித்தல், ஓய்வுநாள் மீறுதல், தேவவசனத்தை மறந்துபோதல், ஜெபத்தில் குன்றிப்போதல் முதலிய சோதனைகள் இவர்களுக்கு நேரிடக்கூடியவைகள். தனி ஜெபத்தில் சிலர் தேறிவருகிறார்கள் என்று தேவனுக்கு மகிமையுண்டாகச் சொல்லக்கூடும்.

**பிள்ளைகளுக்கு நேரிட்ட வியாதிகள்.** காய்ச்சல், வயிற்றோட்டம், சிரங்கு முதலிய நோய்களால் பிள்ளைகளில் சிலர் அதிகக் கஷ்டப்பட்டார்கள். தேவகிருபையினால் கனம் ஞானயுதம் பண்டிதரவர்கள், ராவ் சாஹிப் எம். ஆபிரகாம் பண்டிதரவர்கள், கனம் தானியேல் ஐயரவர்கள், டாக்டர் மதுரம் முதலிய கனவான்கள் அன்பாய் அனுப்பிய மருந்துகள் அதிக உபயோகமுள்ளவைகளாயிருந்தன. அல்லாமலும் கம்மாமேட்டிலுள்ள கனம் லாங்மேர் அம்மாளவர்கள் அனுப்பிய மருந்துகளும் அதிக உதவியாயிருந்தன. கர்த்தர் அருளிய சரீர சுகத்திற்காக அவரைத் துதிப்போமாக.

**பள்ளிக்கூடத்துக்குத் தேவையானவைகள்.** இந்தப் பிள்ளைகளை மிகவும் அன்பாயும் கிரமமாயும் நடத்தும் உபாத்திமார், உபாத்திச்சிமார் தேவை. அங்கே வேலைசெய்ய எங்களையும், மற்ற ஊழியர்களையும் தமது அருளினால் நிரப்பும்படி எங்களுக்காக ஜெபிப்போர் தேவை. இன்னும் தேவனுடைய நாமத்திற்கு மகிமையாகவும் சபைக்குத் தூணாகவும் பயிற்றுவிக்கப்பட ஆண், பெண்களை ஆதரிப்போர் தேவை. பெண்பிள்ளைகளுக்கென்று ஓர் தனித்த கட்டடமும் தேவை. பையன்களில் சிலர் தாங்கள் நெசவு வேலை அல்லது தச்சுவேலை கற்று சம்பளம் பெறுமலே மிஷன் ஊழியர்களாவோம் என்று தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள். கர்த்தர் இவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற சகாயம்புரிய ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எருக்கலா வகுப்பைச் சேர்ந்த இரண்டு பையன்கள் இருக்கிறார்கள். அவர்களையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்து ஆதரிக்கும் கனவான்கள் எழும்பவும் ஜெபிக்கக் கேட்கிறோம்.

ஊழியர் நாளுக்கு நாள் அதிகரிப்பதினாலும், பள்ளிக்கூடப் பிள்ளைகள் அதிகமாவதினாலும், சரியான நாட்டு வைத்தியர்கள் அரிதாயிருப்பதினாலும், இவ்விடத்தில் ஓர் ஆஸ்பத்திரி நமக்கு நன்மையாகவும் தேவனுடைய திருநாமத்திற்கு மகிமையாகவும் விளங்கும் என்று நம்ப ஏதுவுண்டு.

**புது முயற்சிகள்.** இரண்டு விஷயங்கள் சபைக்கும் பிள்ளைகளுக்கும் அதிக அநுகூலமானவைகள். மதுபான விலக்குச் சங்கம். இதில் ஆண், பெண்கள் உற்சாகமாய் சேர்ந்து, தாங்கள் மதுபானத்தை முற்றிலும் விட்டுவிடுவோமென்றும், தங்களாலானமட்டும் மற்றவர்களும் விட்டுவிட பிரயாசப்படுவோமென்றும் தீர்மானம்செய்திருக்கிறார்கள். நமது அருமை அத்தியக்ஷரவர்கள் நன்முயற்சியால், தெலுங்கு வேதாகம பால்ய ஐக்ய சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு அன்றாடகப் பாடங்கள் எழுதப்படுகின்றன. பிள்ளைகள் இதைக் கருத்தாய் வாசித்துப் படித்துவருகிறார்கள்.

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே." S. V. S.



### 21-ம் சங்கீதம்.

இதற்கும் 20-ம் சங்கீதத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. முந்தினது, யுத்தத்தில் ஜெயம் கிடைக்கும்படி ராஜாவுக்காகச் செய்யும் ஜெபம். இது, பெற்ற ஜெயத்திற்காகத் துதி. "உமது மனவிருப்பத்தின்படி, தேவன் உமக்குத் தந்தருளுவாராக" (20: 4) என்று அங்கே சங்கீதக்காரன் ராஜாவை வாழ்த்தினான். இங்கே, "அவருடைய மனவிருப்பத்தின்படி, நீர் அவருக்குத் தந்தருளினீரே" என்று தேவனைத் துதிக்கிறான். "பொற்கிரீடம்" என்று 3-ம் வாக்கியத்தில் கண்டிருப்பது 2 சாமு 12: 30-ல் சொல்லியிருக்கும் கிரீடத்தைக் குறிக்கலாம் என்று சொல்வாருமுளர்.

தாவீதின் ஜெயத்தைப்பற்றி, இக்கீதம் முதல் முதல் பாடப்பட்டிருந்தபோதிலும், மேசியாவின் ஜெயத்தைப் பாடித் துதிக்கும் கீதமாக இது பூர்வகாலமுதல் எண்ணப்பட்டது. யூதா வியாக்கியானிகள் "ராஜா" என்று வரும் இடங்களில், "மேசியா ராஜா" என்று வைத்து வாசிப்பதுண்டு.

அவ்வாறு நாமும் இதை அர்த்தம்பண்ணக்கூடும். மரணத்தை வென்ற இயேசுராஜா, ஜெயகெம்பீரமாய்ப் பரலோகம் சென்று, மகிமையினாலும் கனத்தினாலும் பிதாவினால் முடிசூட்டப்பட்டவராய், நித்திய பிரதான ஆசாரியராக, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்ததை நினைத்து, நாமும் தேவனைத் துதித்து, அவருடைய சத்துருக்களனைவரையும் அவர் தமக்குக் கீழ்ப்படுத்தும் நாள் சீக்கிரமாய் வரவேண்டுமென்று ஜெபிக்கும் கீதமாக இதைப் பாடலாம். இந்த நோக்கமாகவே, இதைப் பரத்துக்கேறின திருநாளுக்கேற்ற விசேஷ சங்கீதமாகத் திருச்சபை குறித்திருக்கிறது.

இக்கீதத்தில் 12 வரிகளுள்ள இரண்டு சரணங்களும், ஒவ்வொரு சரணத்தையும் சேர்ந்த இரண்டு வரியுள்ள ஓர் பல்லவியும் உண்டு.

**1-ம் சரணம்.—"தேவனை நோக்கிச் சொல்லிய துதி."**

கர்த்தாவே, உம்முடைய வல்லமையினாலே, ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்!
நீர் அளித்த ரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்!
அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளினீர்!
அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர்.
நன்மையான ஆசீர்வாதங்களோடு, நீர் அவருக்கு எதிர்கொண்டுவருகிறீர்!
அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்!
அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார்: நீர் அதை அவருக்குக் கொடுத்தீர்!
என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசையும் அளித்தீர்!
நீர் தந்த இரட்சிப்பினால், அவர்பெற்ற மகிமை பெரிது!
மேன்மையையும், மகத்துவத்தையும் அவருக்கருளினீர்!
அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்!
உமது சமுகத்தின் மகிழ்ச்சியினால் அவரைப் பூரிப்பாக்குகிறீர்!

### பல்லவி.

ஏனெனில், ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறதினால்
உன்னதமானவருடைய தயவினால் அவர் அசைக்கப்படார்.

இவ்வசனங்கள் பூரணமாய்ச் சொல்லக்கூடியது இயேசு ராஜாவுக்கே. மேன்மையையும் மகத்துவத்தையும் அணிந்தவராய், தமது ஜனத்தை நித்திய காலமாய் ஆசீர்வதிக்கும்படி, என்றென்றைக்கும் உயிரோடிருக்கும் ராஜா வேறே யார்? அவர் பெற்ற ஜெயமே, ஜெயம்.

"பிதாவே, என்னை மகிமைப்படுத்தும்" என்று அவர் பண்ணின விண்ணப்பத்திற்கு உத்தரமாக, தேவன் அவரை எல்லாவற்றிற்குமேலாக உயர்த்தி, எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

**2-ம் சரணம்.—"ராஜாவை நோக்கிச் சொல்லிய வாழ்த்து."**

உமது கை உமது சத்துருக்கள் எல்லாரையும் கண்டுபிடிக்கும்.
உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிற யாவரையும் கண்டுபிடிக்கும்.
உமது கோபத்தின் நாளிலே, நீர் அவர்களை அக்கினிசூளை போலாக்குவீர்.
கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்.
அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.
அவர்கள் கனியைப் பூமியிலிராதபடி நீர் அழித்துப்போடுவீர்.
அவர்கள் சந்ததியை, மனுப்புத்திரரிலிராதபடி ஒழியப்பண்ணுவீர்.
அவர்கள் உமக்கு விரோதமாய், பொல்லாங்கு நினைத்தார்களே.
தீவினையை அவர்கள் எத்தனம்பண்ணினார்கள்.
அதை நிறைவேற்ற அவர்களால் ஆகாதே போகும்.
ஏனெனில், அவர்கள் முகத்திற்கு நேரே உம்முடைய அம்புகளை நாணேற்றிவிடுவீர்.
அவர்கள் முதுகுகாட்டி, ஓடும்படி செய்வீர்.

### பல்லவி.

கர்த்தாவே, உம்முடைய பெலத்திலே நீர் உயர்ந்திரும்!
உம்முடைய வல்லமையை நாங்கள் பாடிக் கீர்த்தனம்பண்ணுவோம்!

இதைச் சொல்லும்போது, இவ்வார்த்தைகளை வேறுவிதமாய், இயேசு மகாராஜாவுக்கென்று அர்த்தம்பண்ணவேண்டும். அவருடைய ராஜ்யத்தையும், சபையையும் எதிர்க்கும் அவருடைய சகல சத்துருக்களையும் அவர் ஜெயித்து, புறமதஸ்தரான ஜாதிகளைத் தமது பாதாரவிந்தம் சேரப்பண்ணுவார் என்ற நம்பிக்கையோடு, தேவ வல்லமையைப் புகழ்ந்து, கர்த்தர் தமது பராக்கிரமத்துடன் எழுந்து, மகிமை விளங்கப்பண்ணும்போது, நாங்கள் உம்முடைய வல்லமையைப் புகழ்ந்து துதிப்போம் என்று வியாக்கியானம் பண்ணலாம்.

இயேசு ராஜாவே, உமது சத்துருக்களைக் கண்டிபிடியும். உமது சபையை எதிர்க்கும் சாத்தானின் சகல தந்திரங்களையும் ஒழியப்பண்ணும். நீர் மீட்ட ஜனங்களை விடுதலைபண்ணும்! உமது பராக்கிரமம் பலமாய் விளங்குவதாக! அப்பொழுது நாங்களும் உமது வல்லமையைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுவோம்.

---

## திடப்படுத்தல்: அதின் நோக்கமும் பலிதமும்.

திடப்படுத்தல் ஆங்கிலேய சபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கம், அதைச் சரியாய் அனுசரிக்கும்போது உண்டாகும் பிரயோஜனம் முதலியவைகளில் இரண்டு விஷயங்களைப் போன சஞ்சிகையில் கவனித்தோம். இன்னும் சில குறிப்புகளை இப்போது கவனிப்போம்.

3. குழந்தை ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்களுக்குப் பால்ய பிராயத்தில் கிடைத்த இச்சலாக்கியத்தை நன்குணர்ந்து, தாங்களே சுதாவாய்த் தங்களை ஆண்டவருக்கு ஒப்பளிக்க இது நல்ல ஏற்பாடாயிருக்கிறது.

குழந்தைகள் சிறுவராயிருக்கும்போது, அவர்கள் ஞானத்தாய் தகப்பன்மார் செய்த பிரதிக்கினைகளை அவர்கள் பெரியவர்களாகும்போது, அவர்கள் உறுதிப்படுத்தலே திடப்படுத்தல் என்று சொல்வாரனேகர் உளர். இது திடப்படுத்தல் அல்ல. பிள்ளைகள் தங்கள் பிரதிக்கினைகளைத் திடப்படுத்துகிறபொழுது, அவர்கள் திடப்படுகிறார்கள் என்று சொல்லக்கூடுமேயன்றி, அவர்கள் திடப்படுத்தலைப் பெறுகிறார்கள் என்று சொல்லத்தகாதே. ஞானஸ்நான பிரதிக்கினைகளை அவர்கள் உறுதிப்படுத்துவது திடப்படுத்தலுக்குமுன் அவர்கள் செய்யும் சுயபிரதிஷ்டையேயன்றி திடப்படுத்தல் அல்ல. அத்தியக்ஷர் கேள்வியும், பிள்ளைகள் உத்தரவும் திடப்படுத்தலோடு சேர்ந்த இன்றியமையா அம்சமாக பூர்வமுதல் இருந்ததில்லையே.

ஆகிலும், ஆங்கிலேய சபை சீர்திருத்தல் காலத்தில் இவைகளைச் சேர்த்தது தேவ நடத்துதல்தான். இதின் பிரயோஜனம் மிகுதி. மூன்றைச் சொல்லுவோம்.

(i) சிறுபிள்ளைகளுக்கு ஞானபோதனை குரு போதிக்க வேண்டியது இதினால் கட்டாயமாகிறது.

1603-ம் ஆண்டு 61-வது கனோனில் 'திடப்படுத்தலைப் பற்றி ஜெபபுஸ்தகத்தில் கட்டளையிட்டிருக்கிறயாவும் சரிவர நடந்தேறத்தக்கதாக ஜெபபுஸ்தக ஞானோபதேசவினாவிடையிலுள்ளபடி தங்கள் விசுவாசத்தைப்பற்றி உத்தரவு சொல்லத்தக்கவர்களையேயன்றி, வேறொருவரையும் அத்தியக்ஷர் கைவைக்கும்படி கொண்டுவராமலிருக்க சபை விசாரணை செய்யும் குருமார் யாவரும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்' என்று கண்டிருக்கிறது.

மேலும் சாக்கிரமெந்துக்களைப்பற்றிய ஹோமிலி பிரசங்கத்தில், 'மார்க்க சித்தாந்தங்களைப் பிள்ளைகள் படித்திருக்கிறார்களா என்று பரீக்ஷிப்பதற்கும், கிறிஸ்து சபையில் போதனையும் ஆறுதலும், பக்திவிருத்தியும் உண்டாவதற்கும் திடப்படுத்தல் ஏதுவாயிருக்கிறபடியால், இதை ஆங்கிலேய சபை வைத்துக்கொண்டது' என்று சொல்லியிருக்கிறது. ஆகவே சிறுவர் போதனை திருச்சபையின் ஓர் கட்டாயமான ஏற்பாடாகிறது.

தற்கால பாலியர் சங்கம், வாலிபர் கூட்டம் முதலியன ஏற்பட்டு, பிள்ளைகளைப் பக்தியில் வளர்ப்பதற்கு உதவி செய்தபோதிலும், சபையின் குரு செய்யவேண்டிய பணிவிடையை அவை செய்யமாட்டா. இவைகளை நம்பி, சிறுவருக்குத் திருச்சபை நியமித்திருக்கும் ஞானபோதனையைப் புகட்டாமலிருக்கக் குருமாருக்குச் சோதனை வரலாம். அவ்விதச் சோதனைக்கு ஒருபோதும் இடம்கொடுக்கக்கூடாது. இக்கூட்டங்கள் குரு செய்யவேண்டிய வேலைக்கு இணையாகமாட்டாது.

ஞானோபதேசத்தின் கடைசியிலுள்ள ரூபிரிக்கை இங்கே வரைவோம்:—

'ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாட்களிலும், மாலை ஜெப ஒழுங்கில் இரண்டாம் பாடம் வாசித்தபின்பு, அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் அனுப்பப்படும் பிள்ளைகளில் தாம் எத்தனைபேரைத் தெரிந்துகொள்ளுகிறாரோ, அத்தனைபேருக்கும் இந்த ஞானோபதேச வினாவிடையில் ஒரு பங்கைப் போதித்து, அதிலே அவர்களைச் சோதிக்கவேண்டும்.'

இவ்வித போதனை நடக்கவில்லையானால், பிள்ளைகள் தாங்கள் பெற்றிருக்கும் ஞானஸ்நானத்தைப்பற்றி அறிவது கூடாத காரியம்.

மேலும், பாடம் படிப்பிக்கும் குருவானவர் பிள்ளைகள் செய்யும் ஜெபத்திலிருந்தும் அவர்கள் நாட்டம் ஆசையிலிருந்தும், அவர்களுடைய ஆத்தும ஸ்திதியை அறிந்துகொள்ளக் கூடும். இத்துடன் குருவானவர் அவர்களோடு தனிச் சம்பாஷணையும் செய்வாரானால், அவர்களுடைய வாஸ்தவமான ஆத்தும நிலையை அறிந்து, அவரவர் நிலைமைக்கேற்ற ஆலோசனை சொல்லி, இவ்விதமாய் அவர்களுடைய சொந்த ஞான மேய்ப்பனாவதற்கு வழி உண்டாகும்.

(ii) பிள்ளைகளுடைய மகா முக்கியமான பிராயத்தில் அவர்கள் தங்களைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணுவதற்கு திடப்படுத்தல் அவர்களை ஏவும் ஓர் தூண்டுகோலாயிருக்கிறது.

பிள்ளைகள் தங்கள் ஆத்துமாவைக்குறித்தும் மார்க்க சம்பந்தமான கடமைகளைக் குறித்தும் 13 வயசுக்கும் 19 வயசுக்குமிடையில் மகா கருத்துள்ளவர்களாயிருப்பார்களென்று தேகதர்ம சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அநேக பக்தர்கள் தங்கள் இருதயத்தைக் கடவுளுக்கு நேராகத் திருப்பினது இந்த வயசிலேயே. திடப்படுத்தலுக்குப் பிள்ளைகள் சாதாரணமாய் வரும் வயசு இதே. இப்படிப்பட்ட பிராயத்தில் பிள்ளைகள் தங்களைத் தேவனுக்குப் பிரதிஷ்டைபண்ணும்படி ஏவுகின்ற ஓர் சபை ஆசாரம் இருப்பது எவ்வளவு பிரயோஜனம்!

மேலும், நமது தேசத்தில் குழந்தைப் பிராயத்தைவிட்டு, பிள்ளைகள் புருஷராகவும் ஸ்திரீகளாகவும் பக்குவமடையும் வயசு: ஆண்களுக்கு 16, பெண்களுக்கு 14 என்று சொல்லலாம். உலக சோதனைகளை அவர்கள் உணரும் வயசு இதே. சரீர இச்சைகளுக்கு அவர்களைத் தூண்டிவிடும் சோதனைகளைப் பார்க்க அவர்கள் கண்கள் திறக்கப்படுவது இந்த வயசிலேயே. ஆகவே இப்படிப்பட்ட பக்குவப் பிராயத்தில், உலகத்தின் பாவ சோதனைகளில் அவர்கள் விழுந்து, சிக்கி, அமிழ்ந்துபோகுமுன், மாம்சத்தின் போராட்டத்தில் அவர்கள் அபஜெயமடைந்து சோர்ந்துபோகுமுன், பரமதகப்பனுக்கு நேராகத் தங்கள் இருதயத்தை உயர்த்தி, அதை அவருக்குப் படைக்கச் சமயம் கிடைப்பது எவ்வளவு லாபம்! இதினிமித்தம் திடப்படுத்தலுக்குப் "பிராயமாகும் காலத்தைப் பரிசுத்தப்படுத்தும் நியமம்" என்றும் அழைப்பதுண்டு.

(iii) சபையின் பிள்ளைகள் பிராயமாகும் காலத்தில் சபையாரெல்லாரும் கூடி, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களைத் தைரியப்படுத்துவதற்குத் திடப்படுத்தல் உதவியாயிருக்கிறது.



பிள்ளைகள் பிறக்கும்போதும், பள்ளிக்குப் போகும்போதும், பிராயமாகும்போதும் இனத்தார், சுற்றத்தாரை வரவழைத்து, விருந்தளித்து, சந்துஷ்டி கொண்டாடுவது நமது தேசத்து ஜனங்கள் வழக்கம். கிறிஸ்தவர்களுக்குள்ளுங்கூட கிராமங்களில் இது அங்கங்கே இன்னம் நடந்துவருகிறது. இதற்குப் பதிலாக, பிள்ளைகள் பக்குவமடையும் வயசு வரும் காலத்தில் அவர்களுக்கு விசேஷித்த ஞானபோதனை சொல்லித்தந்து, அவர்கள் ஆத்தும ஸ்திதியைப்பற்றிச் சம்பாஷித்து, அவர்களைத் தேவனுடைய நாமத்தினால் ஆசீர்வதிப்பது எவ்வளவு சிறந்த ஒழுங்கு! இந்தப் பிராயத்தில் அநுதாபம், அன்பு, சிநேகம், இவைகளே பாலியருக்கு மகா முக்கியமாய்த் தேவையென்று வாலிபர் சுபாவத்தையும் தேகக்கூர்பாட்டையும் ஆராய்ச்சிசெய்த வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். திடப்படுத்தலில் இவ்வித அன்பும் அநுதாபமும் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்படி ஆங்கிலேய சபை ஏற்பாடு செய்கிறது. தங்கள் சபையின் பிள்ளைகளுக்கு வயசு வந்தவுடனே, குருவானவர் அவர்களுக்கென்று விசேஷித்த கூட்டம் வைப்பதும், அவர்கள் நிமித்தம் சபையின் சிரேஷ்ட குருவும் கர்த்தருக்குள் அவர்கள் ஞானப்பிதாவுமாகிய அத்தியக்ஷரை வரவழைப்பதும், அவர்கள் விஷயமாய் ஜெபிக்க சபையாரனைவரும் கூடுவதும், திருச்சபையின் பிரதிநிதியாக அத்தியக்ஷர் தேவநாமத்தினாலே ஒவ்வொருவர் பேரிலும் தமது கையை வைத்து ஆசீர்வதிப்பதும், பரிசுத்த ஆவியின் சகாயத்தையும் பெலனையும் அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபிப்பதும் அந்தப் பிராயத்துக்கும் அவர்கள் வயதுக்கும் ஏற்றபடி அவர்களைச் சந்தோஷிப்பித்து தைரியப்படுத்துவதற்கு எத்தனை உசித முறை!

4. ஆங்கிலேய சபையில் பூரண அங்கங்களாக விரும்புகிறவர்களுக்குத் திடப்படுத்தல் வாசலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திடப்படுத்தல் ஆராதனைக் கிரமத்தின் இறுதியிலுள்ள ரூபிரிக்கில்: "திடப்படுத்தலைப் பெற்றிருக்கிறவர்களையும் அதைப் பெறுவதற்கு ஆசையாயும் ஆயத்தமாயும் இருக்கிறவர்களையும் அல்லாமல், மற்றவர்களைப் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேர்க்கக்கூடாது" என்று கண்டிருக்கிறது. திடப்படுத்தல் பெற ஆசித்து ஆயத்தமாயிருந்தபோதிலும், அபாயகரமான வியாதியினாலோ, அல்லது அத்தியக்ஷர் வரத் தடைப்பட்டதினாலோ, அதைப் பெறக்கூடாமற்போனவர்கள் தவிர, மற்றவர்கள் திடப்படுத்தல் பெற்றாலன்றி நற்கருணைக்காரராகக் கூடாது என்பதே இதன் அர்த்தம். ஆகவே ஆங்கிலேய சபையில் அங்கங்களாகி, அதில் நிலையான நற்கருணைக்காரராயிருக்கும்படி விரும்புகிறவர்கள் திடப்படுத்தல் பெறவேண்டுமென்பதே சட்டம்.

சற்றே யோசித்துப் பார்த்தால் இதின் நியாயம் விளங்கும்.—

(1) திடப்படுத்தலினால் சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரும் அத்தியக்ஷரால் ஒப்புக்கொள்ளப்படுகிறார்கள் என்று முந்தின அத்தியாயத்தில் சொன்னோம். அத்தியக்ஷர் அநுமதியின்றி, சபையின் பூரண ஐக்கியத்தில் ஒருவரும் சேர்க்கப்படுவதுமில்லை. அதிலிருந்து ஒருவரும் தள்ளப்படுவதுமில்லை என்பது ஏற்பாடு. இது சபையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் நிலைப்படுத்துகிறது. ஆகவே, திடப்படுத்தலில் அத்தியக்ஷரால் அங்கீகரிக்கப்படாமல் சபையின் பூரண ஐக்கியத்தில் எவரையும் சேர்ப்பது நியாயமல்லவே.

(2) மேலும், ஆங்கிலேய சபையின் போதனையைக் கற்று அறிந்துகொள்ளாமலிருக்கிறவர்கள் அச்சபையின் பூரண அங்கமாகிறதினால் என்ன பிரயோஜனம்? சபையில் சேருகிறவர்கள் அதின் போதனையைக் கற்று ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று அத்தியக்ஷரால் பரீக்ஷிக்கப்பட்டபின் மாத்திரம் முழு அங்கங்களாக இடம்பெறுவது நியாயமே.

(3) ஞானஸ்நானத்தின் கிருபை, திடப்படுத்தலில் பூரணப்படுகிறது என்ற கொள்கைக்கிசைவாக, ஞானஸ்நானத்தில் செய்த பிரமாணங்களை ஒருவன் சுதாவாய் ஒப்புக்கொண்டு, தன்னைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணி, இவ்விதமாய்ப் பெந்தெகொஸ்தே ஆவியின் தேற்றரவை நிச்சயமாய் அறியாதிருக்கும்போது, கர்த்தருடைய திருவிருந்தின் ஐக்கியத்துக்குப் போவது நியாயமல்லவே. பெந்தெகொஸ்தேவாரத்தில் பங்குபெற்ற பின்னர் மாத்திரம் அப்பம் பிட்பதில் பங்குபெறுவது நியாயமான ஏற்பாடல்லவோ.

(4) இராப்போஜனத்துக்குத் தன் அங்கங்களைச் சேர்க்குமுன்னதாக, சகல சபைகளும் அந்தந்தச் சபையின் ஏற்பாட்டுக்கேற்ற பிரமாண உடன்படிக்கைகளை வாங்குவது இயற்கையாயிருக்கிறது. அமெரிக்கன் மிஷன், லுத்தரன் மிஷன், ப்ரீசர்ச்சு மிஷன் இவைகளைச் சேர்ந்த சபைகளுக்கெல்லாம் இது வழக்கமாயிருக்க, அவ்வித உடன்படிக்கை செய்யாதவன், ஆங்கிலேய சபையின் பூரண அங்கமாவதெப்படி? அவ்வித உடன்படிக்கையைத் திடப்படுத்தலில் செய்தவர்கள் மாத்திரம் நமது சபையின் ஐக்கியத்தில் சேர்க்கப்படுவது நியாயமே.

(5) பற்பல சபைகளும், பற்பலவிதமாய்ப் பட்டம் பெற்ற குருமாரும், பற்பல முறையான சாக்கிரமெந்துக்களும் நமது தேசத்திலிருக்க, ஒரு சபையைச் சேர்ந்தவர்கள்

சுளுவாயும் இரகசியமாயும் தங்கள் சபையைவிட்டு, இன்னொர் சபையைச் சேர்ந்துகொள்ளப் பார்ப்பது ஒழுங்கீனத்துக்கும் குழப்பத்துக்கும் வழிநடத்துமல்லவோ? அங்கிலேய சபை விஷயமாய் இவ்வித குழப்பங்களை நிறுத்துவதற்காகவே, இந்தப் பிரமாணம் விதிக்கப்பட்டது. மற்றச் சபைகளில் ஞானஸ்நானம் பெற்று, அங்கே பரி. இராப்போஜனமும் சேர்ந்து, அச்சபையில்லாத ஓரிடத்தில் வேலை விஷயமாய்த் தங்கும் ஒருவர், அங்கே அங்கிலேய சபையைச் சேர்ந்த ஓர் ஆலயமாத்திரம் இருக்குமானால், அவ்விடத்தில் தங்கும் காலத்தில், கிறிஸ்துவின் சரீர இரத்தமாகிய சாக்கிரமெந்தில் பங்குபெறவேண்டுமென்று ஆசித்து, அங்கே கர்த்தருடைய பந்திக்குப் போவதைப்பற்றி இவ்விதி பேசுகிறதில்லை. அங்கிலேய சபை ஐக்கியத்தில் நிலையாய்ச் சேர்ந்து, அதில் ஓர் பூரண அங்கமாக விரும்புகிறவர்களுக்கே இது விதி. அப்படிப்பட்டவர்கள் அங்கிலேய சபை உபதேசத்தையும், அதின் ஏற்பாட்டையும் ஒப்புக்கொண்டோமென்பதற்கு அடையாளமாகத் திடப்படுத்தலுக்கு வருவது யுக்தமே.

(6) நற்கருணை சேர்ந்தவன் சபையின் பூரண அங்கமாகிறான். அங்கிலேய ஐக்கியத்தைச் சேராத புரோட்டெஸ்டாண்டு சபைகள் (உதா. அமெரிக்கன் மிஷன், லண்டன் மிஷன் முதலியவற்றைச் சேர்ந்த சபைகள்) நற்கருணை சேர்ந்தவர்களை உட்சபையைச் சேர்ந்தவர்கள் என்றழைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களே சபை விஷயமான எந்த ஆலோசனைக் கூட்டங்களிலும், சம்மதச் சீட்டுக் கொடுக்கும் பாத்தியதை உடையவர்கள்.

அங்கிலேய சபையிலும் இவ்வித வித்தியாசம் பாராட்டப்படுகிறது. ராப்போஜனக்காரர் மாத்திரம் சபையின் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளுகிறவர்கள். இவர்கள் மாத்திரம் சபையின் பூரண அங்கங்கள். அப்படியானால் அவர்களுக்குரிய விசேஷித்த உத்தரவாதமும் உண்டு. திருச்சபையானது ராஜரீகமான ஆசாரியக் கூட்டம் (1 பேது. 2: 9) என்றால், இவர்களே அந்த ஆசாரியர். கர்த்தருடைய ஆலயமாகிய சபையில் அவருக்குப் பணிவிடைசெய்வதும், அவருடைய நாமம் பரிசுத்தப்படும்படி முயற்சிப்பதும், உலகத்தின் இரட்சிப்புக்காக விண்ணப்பம்பண்ணுவதும் இவர்கள் மேல் விழுந்த கடமை, இது இவர்களுக்கருளப்படும் சலாக்கியம்! இவ்வித சலாக்கியங்களை அநுபவித்து, உத்தரவாதத்தை நிறைவேற்றுமுன், இதற்கென்று பிரதிஷ்டைபண்ணப்படுவது எவ்வளவு பிரயோஜனமான ஒழுங்கு! இதை நினைத்தே, பரி. அகுஸ்தீன் சுமார் கி. பி. 400-ல் "அபிஷேகம் ஆசாரியரைப் பிரதிஷ்டை செய்வதற்கடையாளமாகையால், திடப்படுத்தலில் செய்யும் தைலாபிஷேகம் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் "ராஜரீக ஆசாரியக் கூட்டத்தைச் சேர்ந்தவனென்பதற்கு அடையாளம்" என்கிறார்.

திடப்படுத்தலானது "சபை அங்கங்களின் பட்டாபிஷேகம்" என்று சொல்லப்படுவதுண்டு. அதிலே கிறிஸ்துவின் ஊழியத்திற்கென்று திருச்சபையானது ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரையும் பிரதிஷ்டைசெய்கிறது. ஞானஸ்நானத்தில் செய்த வாக்குகளைப் பிள்ளைகள் ஸ்திரப்படுத்தும்போது, ஞானஸ்நானத்தில் சொல்லப்பட்ட பிரதிஷ்டை வார்த்தைகளை சபை புதுப்பித்து ஞாபகப்படுத்துகிறதென்று சொல்லலாம். திடப்படுத்தல் பெறுகிறவன் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அது முதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும், உலகத்துக்கும், பிசாசுக்கும் விரோதமாகத் தைரியமாய்ப் போர்செய்து மரணபரியந்தம், கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு(ரியு)மாய் நிலைத்திருக்கவேண்டுமென்று ஞாபகப்படுத்தப்படுகிறான். இந்த நோக்கத்துடனேயே கிரேக்குச் சபைகளிலும் ரோமைச் சபைகளிலும் திடப்படுத்தலில் சிலுவை அடையாளத்தை வரைகிறார்கள். கிறிஸ்துவின் போர்ச் சேவகனுசத் தீங்கனுபவிக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக ரோமைச் சபையில் அத்தியக்ஷர் கன்னத்தில் ஓர் சிறு அடி கொடுக்கிறார். பூர்வமுதல் திடப்படுத்தலின ஞானக் கருத்தில் இதுவும் ஒன்றென்பது இதினால் தெளிவாயிருக்கிறது. ஆகவே, சபையின் ஊழியத்தைச் செய்ய ஆரம்பிக்கும் அங்கங்கள் பகிரங்கமாய் வந்து தங்களைப் பிரதிஷ்டைபண்ணி, அவ்வேலைக்கென்று பட்டம் பெறுவதுபோல கைகளை வைத்து அபிஷேகம் பெறுவது எவ்வளவு உத்தமம்! அவ்வாறு அவர்கள் பிரதிஷ்டைபண்ணப்படவேண்டும் என்று கட்டளையிட்டிருப்பது நியாயந்தானே.

திடப்படுத்தல் அங்கிலேய சபையில் நடத்தப்படும் முறையைக் கவனித்தால், அதின் நோக்கமும் பலன்களும் இவைகளே. இப்பலன்கள் தவறாமல் ஓர் சபையில் உண்டாகவேண்டுமானால், தகுந்த ஆயத்தம் அவசியம். ஆயத்தம் குருவானவரின் கையிலிருக்கிறது. எங்கே சேகர குருவானவர் தமது உத்தரவாதத்தை உணர்ந்து, இதை சிறுவருக்கு தான் செய்யும் மகா முக்கியமான ஊழியமாக எண்ணி, ஜெபத்தோடும் விவேகத்தோடும் ஜாக்கிரதையாய்ப் பிள்ளைகளை ஆயத்தம்பண்ணுகிறாரோ, அங்கே ஆவிக்குரிய பலன்கள் நிச்சயமாய் உண்டாகும். குரு அஜாக்கிரதைக்காரராயும், அநுதாபமற்றவராயும், லௌகீக அலுவல்காரராயுமிருப்பாராகில், திடப்படுத்தல் பிரயோஜனமற்ற ஓர் வெறும் சடங்காசாரமாய்ப் போகும். அப்படி ஆகிவிடாதபடி ஜாக்கிரதையாயிருப்போமாக.

---

## மனுஷாவதார ரகசியம்.

கிறிஸ்துவானவர்,

(1) சகல உலகங்களுமுண்டாவதற்கு முன்னே தமது பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்.

(2) உலகத்தோற்றத்துக்கு முன் அடிக்கப்பட்ட தேவாட்டுக்குட்டி.

(3) நேற்றும் இன்றும் என்றும் மாறாமலிருக்கும் தேவனை மனுஷனுக்கு வெளிப்படுத்துகிறவர்.

அருள்நாதர் மனுஷவதாரம் எடுத்து, பூமியில் வசித்த காலத்தில் ஓயாமல் நன்மைசெய்கிறவராகச் சுற்றித்திரிந்தார். பிறருக்காக ஊழியஞ்செய்வதே அவருடைய ஜோலியாயிருந்தது. ஊழியம் அன்புக்கு அத்தாக்ஷி. கஷ்டம், சாவு அல்லவா ஊழியம்? அப்படியானால், திருஅவதாரத்தின் போதனையென்ன? தேவனைப்பற்றிய வெளிப்படுத்தல் யாதாவாயிருக்கலாம்? தேவனுடைய சாயலின்படியே மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான் என்பதின் கருத்து என்ன?

---



## மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நிருபம்.

கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே,

இந்திய மிஷனெரி சங்கம்பணவிஷயமாய்ச் சற்று கஷ்டமான ஸ்திதியிலிருக்கிறதென்பதை உங்களுக்குத் தெரிவிக்கும்படி இதை எழுதலானேன்.

சடந்த வருஷ வரவு முந்தின வருஷத்தைப்பார்க்கிலும் ரூ. 3532—6—2 குறைவு. ஏப்பிரல் 1௳ கையிருப்பு ரூ 1784—15—9½. தோர்ணக்கல் தேவாலயக் கட்டடவகைக்கு இன்னும் செல்லாகவேண்டியது ரூ. 3371—5—0 ஆக நாளது தேதியில் கடன் ரூ 1586—2—2½. கமிற்றிமார் வேலையைக் குறைப்பதற்கும் மிஷனெரிமாரை அனுப்பாமல் நிறுத்துவதற்கும் ஆலோசனை செய்வது நியாயமே. காரியம் இப்படியிருக்கிறபடியால், இந்திய மிஷனெரி சங்கத்தின் நண்பர் அனைவரும் சங்கத்தின் ஸ்திதியை அறிந்து, அதின் விஷயமாய் விசேஷித்த முயற்சி எடுத்துக்கொள்ளவும், ஊக்கமான ஜெபம்பண்ணவும் இந்நிருபத்தின் மூலமாய் அழைக்கிறேன்.

இச்சங்கம் நடைபெற்றுவந்திருக்கும் பன்னிரண்டு வருஷங்களிலும், கர்த்தர் இதை எவ்வளவு ஆச்சரியமானவிதமாய் ஆசீர்வதித்துவந்திருக்கிறார் என்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயமே. 'வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.' இத்தேசத்துத் திருச்சபைக்கு மகிமையாகவும், இந்நாட்டின் பிள்ளைகளுக்கு ஆசீர்வாத சாதனமாகவும், தெலுங்கு நாட்டின் ஏராளமான ஜனங்களுக்கு இரட்சிப்பாகவும் கர்த்தர் இச்சங்கத்தை இதுவரையும் அதிசயமாய் உபயோகித்துவந்திருக்கிறார். அவருக்கே சகல கனமும் துதியும் புகழும் உண்டாவதாக!

இப்பொழுது பணம் குறைந்ததென்றால், இனிச் செய்யவேண்டியதென்ன? தெலுங்குநாட்டில் நடக்கும் வேலையைக் குறைத்து, இங்கேயிருந்து நீங்கள் அனுப்பியிருக்கும் நாலு மிஷனெரிமாரையும் திரும்ப வரவழைப்போமா? அது கூடாத காரியம்! தேவ நாமத்துக்கு அது மகிமையாகுமோ! அல்லது கர்த்தர் நமக்குத் தந்திருக்கும் சபைகளில் நாம் வைத்திருக்கும் 40 தெலுங்கு ஊழியரையும் நீக்கிவிட்டு, பரிசுத்த ஞானஸ்நானத்துக்கும் திடப்படுத்தலுக்கும் ஆயத்தம்பண்ணும் வேலையை நிறுத்திவிடுவோமா?—50, 80, 100 வருஷமாய் தேவ ஊழியருடைய திருப்பணிவிடையைத் தாராளமாய்ப் பெற்றனுபவித்திருக்கும் நீங்கள் அவ்வித ஆலோசனை சொல்லமாட்டீர்களென்று நம்புகிறேன். கிறிஸ்துமார்க்கத்துக்கு இதுவரை வந்திருக்கும் கிராமங்களைச் சரிவர போதிப்பதற்கு முதலாய் ஊழியர் போதாமலிருக்கிறார்களே! அல்லது, போர்டிங் பாடசாலையை அடைத்துவிட்டு, அதில் தற்சமயம் பயிற்சியடையும் பிள்ளைகளைத் தம் தம் கிராமங்களுக்கு அனுப்பிவிடலாமோ?—கூடாதே. அப்படிச் செய்வதினால் எவ்வளவு பண நஷ்டம்! எத்தனை பிற்கால ஊழியர் நஷ்டம்! மிஷன் பாடசாலைகளில் கல்விகற்று அறிவடைந்து, சபை ஊழியத்திலும் சர்க்கார் ஊழியத்திலும் சிறப்பாய் வேலைபார்த்துவரும் எவருக்காவது அப்படி நாங்கள் செய்வதைப்பார்க்க மனம் சகிக்குமோ? அல்ல, அல்ல. கர்த்தர் அங்கு நடத்தும் வேலையைக் குறைப்பதற்கு நீங்களும் சம்மதிக்கமாட்டீர்கள், நாங்களும் சகிக்கமாட்டோம். மேலும் கர்த்தருடைய வேலையில், இச்சமயத்தில் பின்வாங்குவோமானால், தேவநாமத்துக்கு அது எவ்வளவு அவமானம்! திருநெல்வேலிச் சபைக்கு எத்தனை அவகீர்த்தி! சத்துருவுக்கு எவ்வளவு சந்தோஷம்! இந்த 12 வருஷக்காலமாய் இத்தனை சபைகளையும், ஊழியரையும், பிள்ளைகளையும் கர்த்தர் நமக்குத் தந்தது நாம் அவர்களை இவ்வாறு இடையில் கைவிடுவதற்காகவா? ஒருபோதும் இல்லையே. நாம் முன்னேறிச்செல்லவேண்டுமென்பதே தேவசித்தம். நமது கூடார இடத்தை விசாலமாக்கி, நமது வாசஸ்தலங்களின் திரைகளை நாம் விரிக்கவேண்டுமென்பதே தேவதீர்மானம்! நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பதே தேவகட்டளை. உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடே இருக்கிறேன் என்பதே தேவவாக்கு. ஆகவே, தேவசித்தத்துக்கும், தீர்மானத்துக்கும், கட்டளைக்கும் இசைந்து முன்னேறிச்செல்லவேண்டியதே நமது கடமை. அவர் வாக்கு நமக்கு இருக்கிறது. அவர் நிச்சயமாகவே துணைபுரிவார்!

### இப்போது வேண்டியதேன்ன?

1. மாசா மாசம் செலவுகளைச் சரிபண்ண கையிருப்புப் பொக்கிஷமாக் ரூ. 6000 தேவை.

2. தற்சமயம் கோவில் கட்ட பண்டுக்குக் கொடுக்க வேண்டிய கடனை நீக்க ரூ. 1586-5-2½ தேவை.

3 தேவாலயம் முடிவுபெற இன்னும் ரூ. 8,000 தேவை.

4. நாளது வருஷம்கூட ஒரு மிஷனெரியை அனுப்பவும், புதுப்பிள்ளைகளைச் சேர்க்கவும், பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டவும் முந்தின வருஷத்தைப்பார்க்கிலும் பொதுக் காணிக்கையில்கூட ரூ.3000 அதாவதுகூட 1/5 தேவை.

### இவற்றை ஆகப்பண்ணக்கூடிய முறை என்ன?

1. ஜெபம். இந்தச் சங்கம் மகா ஊக்கமான ஜெபத்தினால் உற்பத்தியானது. அநேக உத்தமரின் ஓயாத விண்ணப்பத்தினால் வளர்ந்தேறினது. பல பக்தர் கண்ணீரினால் தேவவல்லமை பெற்று விளங்கினது. ஒருவேளை இப்போது பலர் குளிர்ந்தபோனோமோ? தற்சமயம் கர்த்தர் அனுப்பியிருக்கும் இந்தப் பணக்கஷ்டம் நம்மை அவர் பாதாரவிந்தத்துக்கு அழைக்கும்படி அவர் ஊதும் எக்காளமல்லவா? பக்தரே அவர் பாதத்தைத் திரும்பவும் பிடிப்பீர்களா? இதுமுதல், இக்குறைகள் நீங்கும்பரியந்தம், தினந்தோறும் இவ்விஷயங்களுக்காகப் போராட்டமாய் ஜெபிப்பீர்களா? இதை உணரும் இருவர் அல்லது பலர் ஓரிடத்திலிருப்பார்களாகில், அவர்களெல்லாரும் தினந்தோறும் கால்மணி நேரம் கூடி, ஏகமனதாய் கர்த்தருடைய சமுகத்தில் முழங்காலில் நின்று மன்றாடுவீர்களா? நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு இரக்கம் செய்யுமளவும் நம்முடைய கண்களை அவருக்கு நேராகவே ஏறெடுப்பீர்களா? வெள்ளியும் அவருடையது, பொன்னும் அவருடையது. பணத்தைக் கொடுக்கும்படி

மனதை ஏவுகிறவர் அவரே. தமது லயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கத்தக்கதாகத் தங்கள் தசமபாகங்களைச் செலுத்துகிறவர்களுக்கு வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமல்போகுமட்டும் இகபர ஆசீர்வாதங்களைப் பொழிகிறவர் அவரே. அவர் இரங்கித் தமது பிள்ளைகள் இருதயத்தைத் திறந்து, தமது ஜனங்களையும் ஊழியரையும் எங்கும் ஏவி எழுப்பி அனல்மூட்டிவிடும்படி கருத்தாய் தினந்தோறும் ஜெபிப்போமா?

2. சுயவெறுப்பு. ஐரோப்பாவின் அகோர யுத்த காட்சியைப் பார்க்கிறோம். லக்ஷக்கணக்கான வாலிபர் தேசாபிமானத்தினால் வைராக்கியங்கொண்டு தங்கள் பிராணனைச் சந்தோஷமாய்ப் போர்முகத்தில் பலி கொடுக்கிறார்கள்! ஆயிரக்கணக்கான பெற்றோர் தங்கள் அருமையான பிள்ளைகளையும், எண்ணிறந்த மனைவிகள் தங்கள் நேச கணவர்களையும், ஏராளமான வாலிபர் தங்கள் உத்தியோகத்தையும் கலாசாலைக் கல்விகளையும் சரீரத்தின் உறுப்புகளையும் தங்கள் தேசத்துக்காக இழக்கக்கொடுத்து அதினிமித்தம் பெருமை பாராட்டுகிறார்கள்! அநேகமாயிரம் ஐசுவரியவான்கள் தங்கள் சரீரசவுக்கியங்களை வெறுத்துத்தள்ளி, எளிமையான போஜனம் புசித்து, மிதமான பிழைப்பை நடத்தி, தங்கள் பொக்கிஷங்களைத் தேசத்தின் சுயாதீனத்துக்காக மனோற்சாகமாய்ச் செலவிடுகிறார்கள். இதெல்லாம் நமக்கு ஒன்றுமில்லையா? இவ்வித ஆச்சரியமான சுயவெறுப்பைக் கண்ணால் காணும் நாம், இக்காலத்தில் நம்மை வெறுக்காமலிருப்பது பாவமாகுமல்லவோ? இப்படிப்பட்ட காலத்தில் கர்த்தர் நமக்கு நல்ல மழையையும் வெள்ளாண்மையையும் கொடுத்திருக்க, அவருடைய ராஜ்ஜியத்தின் வேலை பணக்குறைவினால் பின்வாங்குவது தேவனுக்கேற்குமா? இக்காலத்தில் நம்மை முன்னிலும் அதிகமாய் வெறுத்து நமது செலவுகளை இன்னும்சற்று சுருக்கி, வீண் உல்லாச சம்பவங்களை நிறுத்தி, கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் அபிவிருத்திக்கென்றும் அவருடைய சபையின் நல்வாழ்வுக்கென்றும் கொடுக்கவேண்டியது நமது கடமையல்லவா? தேவாவியானவர் இதை நமது இருதயங்களில் பதித்தருளுவாராக!

3. முயற்சி. விசேஷித்த கஷ்டகாலத்தில், விசேஷித்த ஜெபம் அவசியம், விசேஷித்த சுயவெறுப்பு அவசியம், விசேஷித்த முயற்சியும் அவசியம். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானியை வாசிக்காத சபைகள் அதை வாசிக்கும்படி செய்யவேண்டியதிருக்கிறது. மாசத்திற்கோர் முறையாவது இவ்வேலைக்காக ஜெபிக்காத சபைகளிருக்குமானால் அவைகளில் இந்திய மிஷனெரி சங்க ஜெபக்கூட்டத்தை ஆரம்பிக்கவேண்டியதிருக்கிறது. மாசா மாசம் காணிக்கை அற்பமாயாகிலும் கொடுக்காத கிராமங்களில் மாசாந்தரக் கூட்டம் வைத்து, ஜனங்கள் காணிக்கை கொடுக்க ஒழுங்குசெய்ய வேண்டியதிருக்கிறது. இன்னம் ஒரு சந்தாவாகிலும் கொடுக்காத கிறிஸ்தவக் குடும்பங்களில் இந்தக் கடமையையும் சலாக்கியத்தையும் புகட்டவேண்டியதிருக்கிறது. லக்ஷம் கிறிஸ்தவர்கள் திருநெல்வேலியிலிருக்க, குடும்பத்துக்கு மாசம் ஒரு அணா வீதாசாரம் போட்டாலும் ரூ. 15,000 வரவேண்டியது. கடந்த வருஷத்தில் திருநெல்வேலிக்குள்ளிருந்து வந்த தொகை ரூ. 6,000—0—0 மாத்திரம்தான். ஒவ்வொரு சபையிலும் மாசம் குடும்பத்துக்கோர் அணாவீதம் கொடுக்கும்படி பிரயத்தனம் செய்தால், சந்தா இருமடங்காகும். இதைச் செய்வதற்கு கர்த்தர் பக்ஷத்தில் உதவிக்கு வருகிறவர்கள் யார்?

திருநெல்வேலிக்கு வெளியேயிருக்கும் பல இடங்களிலும் இச்சங்கத்தை ஆதரிக்கும் கிளைச்சங்கங்கள் உண்டாயிருக்கின்றன. அதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! சென்னை, பர்மா, இலங்கை, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் இல்லாதது திருச்சபை அங்கங்கள் இந்திய மிஷனெரிச் சங்கத்தைத் தங்கள் புறதேச மிஷனெரி ஊழியமாக சுவீகரித்து அதற்குக் காணிக்கை சேகரிக்கிறார்கள். சகோதரரே, நீங்களும் சற்று விசேஷமாய் எழும்பி முயற்சி செய்வீர்களா? மேலே கண்ட நாலு விஷயங்களுக்கும் கர்த்தர்நிமித்தம் விசேஷ நன்கொடைகளுக்காகப் பிரயாசப்படுவீர்களா? தமிழ் சபைகளைக் கர்த்தர் தெலுங்குநாட்டுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி அழைத்து உபயோகித்துவருகிறார். இவ்வுன்னத சலாக்கியத்தில் தமிழ்நாடனைத்தும் பங்குபெற்றுக்கொள்ளுவது நியாயந்தானே.

மேலும், சேகரிக்கும் காணிக்கைகளை மாசா மாசம் பொக்கிஷதாருக்கு அனுப்புவதும் அவசியம். செலவு மாசந்தோறும் வருகிறது. வரவும் மாசந்தோறும் வரவேண்டும். பொதுப் பொக்கிஷத்துக்கென்று இதற்குமுன் கொடுத்திருக்கிறவர்கள் $^{1}/_{5}$ ஆவது கூட்டிக்கொடுக்கவும், நாளது வருஷத்தில் விசேஷ காணிக்கையாக மேலே காட்டிய மற்ற மூன்று விஷயங்களுக்கும் கொடுக்கவும் சபையாரை ஏவவேண்டியதிருக்கிறது.

இவ்வித முயற்சிசெய்யத் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்கள் யார்? குருமாரும் ஊழியரும் இவ்வேலையில் முந்திக்கொள்வீர்களா? கர்த்தருடைய ஆவியானவர்தாமே உங்களெல்லாரையும் ஏவி எழுப்பி இவ்விசேஷ முயற்சிசெய்ய நடத்தியருளுவாராக!

4. ஈகை. ஜெபிக்கிற நாமே முதலாவது கொடுக்கவும்வேண்டும். முயற்சிசெய்யும் நாமே சுயவெறுப்பை ஆரம்பிக்கவேண்டும். கொடு என்று சொல்லுகிறவர்களே தங்களாலானமட்டும் முதல் முதல் கொடுக்கவேண்டும். நமது சுயவெறுப்பையும் ஈகையையும் பார்க்கும் ஜனங்கள் தாங்களும் அவ்வாறு செய்ய ஏவப்படுவார்கள்.

ஆகையால் கொடுப்போமாக. உதாரத்துவமாய்க் கொடுப்போமாக. சுயவெறுப்புடன் கொடுப்போமாக. கொடுக்கிறதை உடனே கொடுப்போமாக. உடனே கொடுக்கிறவன் இரண்டு மடங்கு கொடுப்பதற்குச் சரி. "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (பரி. லூக். 6: 38). "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாருமுண்டு. உதார குணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி. 11: 25).

இதை வாசிக்கிற கிறிஸ்துவுக்குள்ளான என் நண்பரே, நீங்கள் என்ன உதவி செய்வீர்கள்? இன்றுமுதல் இக்கஷ்டம் தீரும்படி ஊக்கமாய் ஜெபிப்பீர்களா? இன்றுமுதல் விசேஷித்தவிதமாய் ஏதாவதொன்றை வெறுத்து, அதிலிருந்து இவ்விஷயத்திற்கு உதவிபுரிவீர்களா? மற்றவர்களும் கொடுக்கும்படி விசேஷித்த முயற்சிசெய்வீர்களா?

தேவாவியானவர் தாமே இவ்வெல்லா விஷயங்களையும் செய்ய உங்களை ஏவி நடத்துவாராக!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

பாளையங்கோட்டை, } உங்கள் உடன் ஊழியன்
ஜூலை 6௳, 1915. } V. S. தோர்ணக்கல்.

PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

JUNE, 1915 Registered No. M.481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR ... 7 - DEC 1915

Vol. XII. No. 6] ஜூன்மீ 1915 [விலை பை 3

CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 41 |
| The Power Room ... ... ... ... | 41 |
| Studies in the Psalms ... ... ... ... | 43 |
| The Confirmation: Its Use ... ... ... | 44 |
| From the Telugu Field ... ... ... ... | 47 |
| Fancy Sale ... ... ... ... ... | 48 |


பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 41 |
| எஞ்சின் அறை ... ... ... ... | 41 |
| சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... | 43 |
| திடப்படுத்தல் ... ... ... ... | 44 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 47 |
| நன்கொடை சாமான் விற்பனை ... ... ... | 48 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

நாளது ஜூலைமீ 15௳ வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு பாளையங்கோட்டை நூற்றாண்டு சபா மண்டபத்தில் நமது சங்கத்தின் வருஷாந்தக் கூட்டம் நடைபெறும்.

**வருஷாந்தக் கூட்டம்.** கனம். V. J. டேயர் ஐயரவர்கள் உபந்நியாசஞ் செய்வார்கள். மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பீடம் வகிப்பார்கள். சபையாரும் தேவ ஊழியரும் கூட்டத்துக்கு வரும்படி அன்பாய் அழைக்கிறோம். அன்று பகல் 2-மணிக்கு சங்க மெம்பர்களின் பொதுக் கூட்டம் நடக்கும். அதில் நாளது வருஷத்துக் காரியகர்த்தா சபை தெரிந்துகொள்ளுதல் நடத்தப்படும். மிஷனெரி ஊழியமே சபையின் நல்வாழ்வுக்கு ஆதாரமானதாலும் சபை இவ்வுலகின்கண் வைக்கப்பட்டிருப்பதின் ஒரே நோக்கம் புறமதஸ்தரை கிறிஸ்துவினண்டை கொண்டு வருவதற்கானதாலும், மிஷனெரி ஊழியசம்பந்தமான இக்கூட்டத்திற்கு ஜனங்கள் வந்து உற்சாகமடையும்படி தேவ ஊழியர் சபைகளில் முயற்சிக்கக் கோருகிறோம். தவிரவும், அக்கூட்டத்தில் தேவாசீர்வாதம் அமர்ந்திருக்கும்படி நண்பர் ஜெபித்துவரவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இயற்றிய மிஷனேரிமார் நடபடிகள் அல்லது "அப்போஸ்தலர் நடபடி ஆகம ஆராய்ச்சிக் குறிப்புகள்" என்ற புஸ்தகம் நம் சங்கத்தால் பிரசுரிக்கப்பட்டு தயாராகியிருக்கிறது.

**மிஷனேரிமார் நடபடிகள்.** தமிழ்ச் சபைகளில், விசேஷமாய் திருநெல்வேலி சபையில், சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையை எழுப்பிவிடுவதற்காகவும், திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்க வேலையில் ஜனங்கள் ஊக்கமான கரிசனைகொள்ளும்படி ஏவுவதற்காகவும், சுதேசிகள் சுயதேச மிஷன வேலைகள் நடத்தும் இக்காலத்தில் சுவிசேஷ வேலை, சபை வேலை இவைகளில் கவனித்துக்கொள்ளவேண்டிய மூலபாடங்களை இப்பூர்வ திருச்சபைச் சரித்திரப் புஸ்தகத்திலிருந்து கண்டுகொள்ளும் நோக்கமாகவும் ஷெ பாடக் குறிப்புகள் எழுதப்பட்டன. பரி. பவுல் அப்போஸ்தலன் பிரயாணத்தை விளக்கும் படம் ஒன்றும் புஸ்தகத்தில் அமைத்திருக்கிறது. திருநெல்வேலி சி. எம். எஸ். கவுன்சல் சம்பந்தமான ஊழியருக்கு கவுன்சலார் இப்புஸ்தகத்தைப் பாதிக் கிரயத்துக்குக் கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். இப்புஸ்தகம் விலை அணா 6. பாளையங்கோட்டை இந்திய மிஷனெரி சங்க ஆபீசிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். திருச்சபையின் தலைவராகிய கர்த்தர் தாமே இப்புஸ்தகத்தை தமது திருச்சபையின் பக்திவிருத்திக்கென்று கிருபையாய் உபயோகித்தருளுவாராக.

## எஞ்சின் அறை

சென்னைநகர் வீதிகளில் எவரும் காணும் ஓர் விநோத காட்சி உண்டு. முப்பது நாற்பது ஜனங்களை ஏற்றிய பிரமாண்டமான வண்டிகள் நீராவி, குதிரை முதலிய எந்த ஏதுவுமன்றி, இரும்புத் தண்டவாளங்கள்மீது விரைந்தோடுவதே அக்காட்சி. இப்பார வண்டிகளை வீதிகளில் ஓட்டும் சக்தியையோ எவரும் கண்ணால் காணமுடியாது. வண்டிகளுக்கு மேலே ஸ்தம்பங்களில் மாட்டியிருக்கும் கம்பியில் மின்சார சக்தி சென்று, வண்டியினின்று புறப்பட்டு அக்கம்பியைத் தொடும் ஓர் நீண்ட கையின்மூலமாய் வண்டிக்குள் பிரவேசித்து, அதை அசைத்துவிடுகிறது. வண்டிகள் ஓடுவது மின்சார சக்தியினாலேயே. கம்பிகளுக்கு மின்சார சக்தி எங்கிருந்து வருகிறதென அறியவேண்டுமென்றாலோ, பட்டணத்

தின் ஓர் மூலைக்குப் போகவேண்டியதவசியம். அங்கே ஓர் சிறு அறையில் பெரிய ஓர் எஞ்சின் மின்சார சக்தியை உண்டாக்கிக்கொண்டிருக்கக் காணலாம். இந்த அறைக்கு "எஞ்சின் அறை" என்றும், இங்கிலீஷில் "சக்தி அறை" என்றும் பெயர். இங்கிருந்து கம்பிகள் மூலமாய் மின்சார சக்தி பட்டணத்தின் நாலு திசைகளுக்கும் செல்லுகிறது. வீதிகள் தோறும் அங்குமிங்கும் இடைந்து முழங்கிப் பாய்கின்ற வண்டிகளில் விளங்கும் வல்லமைக்குக் காரணம் இந்த எஞ்சின் அறையே.

மிஷனெரி ஊழியத்துக்கும் எஞ்சின் அறை இன்றியமையா அவசியம். உலகத்தின் நாலு திசைகளுக்கும் மிஷனெரிமாரை அனுப்பி, வருஷா வருஷம் சுமார் நான்கு லக்ஷம் பவுனைச் செலவிடும் சர்ச்சு மிஷன் சங்கத்தாரின் ஆபீஸ் ஒழுங்குகளைப் பற்றிய ஓர் விசேஷமுண்டு. வருஷத்துக்கு 256 கமிற்றிக் கூட்டங்கள் கூடும் கமிற்றி அறைகளுக்கு "ஜெப அறைகள்" என்று பேரிட்டிருக்கிறார்கள். ஏனெனில் இவ்வறைகள் ஜெபஸ்தோத்திரங்களால் பரிசுத்தம் பண்ணப்படும் அறைகளாம். தினந்தோறும் காலை பத்து மணிக்கு ஆபீஸ் வேலை ஆரம்பமாகுமுன் ஆபீஸில் வேலை செய்யும் காரியதரிசிகள், லிகிதர்கள் யாவரும் பத்து நிமிஷத்துக்கு பெரிய கமிற்றி அறையில் கூடி, அந்தத் தினத்திற்குரிய மிஷனெரி பொருளுக்காக விண்ணப்பம் பண்ணி, அப்பால் தம் தம் மேஜைக்கேகுவார்கள். 1903-ல் பணக்குறைவு நேரிட்டபோது, மதியம் பன்னிரண்டு மணிக்கு ஆபீஸிலுள்ள சகலரும் இவ்வறையில் கூடி கால்மணி நேரம் பலர் ஊக்கமாய்ப் பிரார்த்தித்துப் போவார்களாம். அவ்வாண்டில்தான் முன்பின் ஒருகாலத்திலும் வராதவண்ணம் 407,000 பவுன் வரவு வந்தது! இவை எல்லாவற்றிலும் விசேஷமானது வியாழக்கிழமை ஜெபக்கூட்டமே. வாரந்தோறும் சராசரி 50, 60 பேர் மாலை 4-மணிக்கும் 5-மணிக்குமிடையில் கூடி, பற்பல விஷயங்களுக்காக திட்டமாக ஜெபிப்பதுண்டு. பலர் ரெயில் மார்க்கமாய் வெகுதூரம் பிரயாணம்பண்ணி இக்கூட்டத்திற்கு வருவதுண்டு. மிஷன் வர்த்தமானங்களில் மகா முக்கியமானவை முதல் முதல் கூறப்படுகிறது இங்கு தான். ஆரம்பிக்கும் புதுவேலையோ, பொருள் சேகரிப்பதற்கு ஏற்படும் புது முறையோ, கஷ்டங்கள் நடுவில் கிடைக்கும் சித்தியோ யாவும் முதலாவது இக்கூட்டத்திலேயே பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. இந்நாளின் ஜெபங்களுக்குக் கர்த்தர் அருளிச்செய்திருக்கும் ஆசீர்வாதங்களும் கணக்கிலடங்கா. ஒரு மிஷனெரி துஷ்டமிருகங்களுக்குள் அகப்பட்டு, குற்றுயிராய் விடப்பட்டு வெகுபாடுபட்டார். திடீரென்று ஓர் தினத்தில் வைத்தியர் எதிர்பாராவண்ணம் அவருக்கு ஆரோக்கியம் பிறந்துவிட்டது. காரணமென்னவென்று விசாரிக்கையில், ஒரே காரணமட்டும் தென்பட்டது. மிஷனெரியினுடைய அபாய செய்தியடங்கிய கடிதம் லண்டன் மாநகர் போய்ச் சேர்ந்திருக்கக்கூடிய தினத்திற்கு அடுத்த வியாழன்தான் சுகம்பிறந்த தினம். அன்றைய தினத்தில் அவர் பெயரைச் சொல்லி, விசேஷ விண்ணப்பம் செய்திருந்ததாக பிற்பாடு தெரியவந்தது. இவ்வித அதிசய சம்பவங்கள் அனந்தம் உண்டு. ஜெப அறை சக்தி அறை.

தெலுங்குநாட்டில் மிஷன் வேலை நாமும் நடத்துகிறோமே சக்தி அனுப்பிக்கொண்டிருக்கும் எஞ்சின் அறைகள் உண்டா? தனிமையாகவும் கூட்டம் கூட்டமாகவும் உன்னத வல்லமையை இறங்கச்செய்யும் முழங்கால் எஞ்சின்கள் உண்டா? முழங்கால் பெலன் அதிகமானால் மிஷன் வேலை அதிகமாகும். ஜெபத்தில் போராடுகிறவர்கள் பெருகினால்தான் தெலுங்குநாட்டில் போர்புரிகிறவர்கள் ஜெயமடைவார்கள். சோர்ந்துபோகாமல் ஜெபிக்கிறோமா? அசதியடையாமல் ஆண்டவரை அலட்டுகிறோமா? தேவபக்தரே, எழும்புங்கள், ஜெபியுங்கள். சக்தி தேவை!

பதிமூன்றுவது ஆண்டை ஆரம்பித்திருக்கிறோம். கடந்த பன்னிரண்டு வருஷங்களிலும் கர்த்தர் ஆச்சரியமான விதமாய் ஆசீர்வாதமளித்திருக்கிறார். ஒரு கிறிஸ்தவர்களுமில்லாத சாலுகாவில் கர்த்தர் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை அநுக்கிரகித்திருக்கிறார். குடிவெறி மிகுந்த தேசத்தில் இன்ப கீதம் காதுகளில் தொனிக்கிறது. பரி. பவுலைப் போல கையினால் சொந்த வேலை செய்து, சம்பளமில்லாமல் சுவிசேஷ வேலை செய்யும் ஊழியரைக் கட்டளையிட்டிருக்கிறார். நமது மிஷன் ஸ்தானத்தின் பெயரால் ஒரு அத்தியக்ஷாதீனம் ஏற்படவும் அதற்குநமது சங்க முதல் காரியதரிசியும் மிஷனெரியும் அத்தியக்ஷராக நியமனமும் புரிந்திருக்கிறார். இந்த முதல் இந்திய அத்தியக்ஷரையும் அவரது திருப்பணிவிடைகளையும் கர்த்தர் தமது கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக ஆசீர்வதித்து வருகிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக. ஆகிலும், தற்சமயம் பொருள் குறைவினால் நமது சங்க ஊழியங்கள் விர்த்தியாகவேண்டிய அளவு விர்த்தியாக மார்க்கமில்லை. இக்குறைவு நீங்கவேண்டுமாகில் எஞ்சின் அறைகள் ஏராளமாய் வேண்டும்!

இதை வாசிக்கிற நண்பரே, நாம் இதுமுதல் தினந்தோறும் இச்சங்கத்தின் வேலைக்காக விண்ணப்பம்பண்ணுவோமா? மத்தியானம் பன்னிரண்டு மணிக்கும் ஒரு மணிக்கும் இடையில் பத்து நிமிஷம் ஜெபத்தில் ஏகமாய்ப் போராடுவோமா? எங்கே இருந்தாலும், எந்த வேலையைச் செய்தாலும் குறித்த இந்நேரத்தில் தெலுங்குநாட்டு மிஷனுக்காகவும், மிஷனெரிமாருக்காகவும், புதுக் கிறிஸ்தவர்களுக்காகவும், அத்தாலுகா முழுமைக்காகவும் வேண்டுதல் செய்வோமா?

மேலும், சில சபைகளில் வியாழக்கிழமைகளிலும் சில சபைகளில் வெள்ளிக்கிழமைகளிலும் ஓர் மிஷனெரி ஜெபக்கூட்டம் ஆரம்பித்ததுண்டு. இவை சித்தியாய் நடந்தேறப் பிரயாசப்படுவோமா? ஏகமாய் ஆலயத்துக்கு வந்து பிரசங்கம் கேட்க அல்ல, பிரசங்கம் செய்ய அல்ல, முழங்காலில் நின்று போராடுவதற்குக் கூடுவோமா? இந்திய மிஷனெரி சங்கத்திற்காகக் காணிக்கை கொடுக்கும் ஒவ்வொரு சபையிலும் இவ்வித ஜெபக்கூட்டம் மாத்திரம் வாரந்தோறும் நடக்குமானால், நாடேசத்தில் நடைபெறும் மிஷன் வேலையில் விளங்கக்கூடிய வல்லமையை யார்தான் அளவிடக்கூடும்? சகோதரரே, சகோதரிகளே, ஜெபிக்கமாட்டீர்களா?



## 19-ம் சங்கீதம்

இவ்வலங்கார சங்கீதம் இரண்டு பாகங்களுடையது. இரண்டிற்கும் அடிவேறு, அசைவேறு, பொருள்வேறு. ஒருவேளை இதில் இருசங்கீதங்களைச் சேர்த்துக் கட்டியிருக்கிறதோ என்று நினைப்பாரும் உளர்.

வாக். 1—6. இப்பிரபஞ்சத்தில் விளங்கும் தேவ மகிமை வர்ணிப்பு.

வாக். 7-14. வேதாகமத்தில் விளங்கும் தேவ நீதி, பரிசுத்தத்தின் விவரிப்பு.

முதலாம் பாகம் இயல் வேதத்தின் மகிமையைப்பற்றியும், இரண்டாம் பாகம் அருள் வேதத்தின் அருமையைப் பற்றியும் புகழ்ந்து பாடுகிறது.

I. முதல் பாகத்தில் ஆறு வரிகளுள்ள இரண்டு சரணங்கள் இருக்கின்றன.

(1) வானங்கள் தேவனுடைய மகிமையை விளம்புகிறது,
ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது,
பகலுக்குப்பகல் வார்த்தைகளைப் பொழிகிறது.
இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.
பேச்சுமில்லை! வார்த்தையுமில்லை! அவைகளின் சத்தம் கேட்கப்படுவதில்லை!
ஆகிலும் அவைகளின் எல்லை பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும் செல்லுகிறது.

இச்சரணத்தில் சங்கீதக்காரன் ஆகாயத்தில் தோன்றும் கணக்கற்ற வானஜோதிகள் எவ்வாறு தங்கள் சிருஷ்டிகரின் மகிமைப் பிரதாபத்தை விவரிக்கின்றன என்று மனோராஜ்யம் பண்ணிப் பாடுகிறார். அவைகள் எல்லாம் ஏகவாக்காய், நாங்கள் தேவனுடைய கரத்தின் கிரியைகள் என்று சாட்சி பகருகின்றனவாம். இச்சாட்சி ஓயாமல் இரவு பகலாய் தொனிக்கிறதாம். சத்தமோ இல்லையாம். பேச்சு மூச்சொன்றுமில்லாமலே இச்செய்தி பிரசுரமாகிறதாம். ஆகாய மண்டலத்தில், மௌனமாய்த் தம்தம் பாதையில் ஓடும் இச்ஜோதிகள் தேவமகிமைக்குக் கொடுக்கும் சாட்சி, பூமியின் கடையாந்தரங்களிலும் செல்லுமாம். அவற்றைக்கண்ணுற்று, தேவமகத்துவத்தை உணரக்கூடாத இடம் எங்குமில்லை.

(2) சூரியனுக்கும் அவைகளில் ஒரு கூடாரத்தை ஸ்தாபித்திருக்கிறார்,
அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருக்கிறது
பராக்கிரம சாலியைப்போலத் தன் பாதையில் ஓட மகிழுகிறது
அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்படுகிறது.
அவைகளின் மறு முனைவரைக்கும் சுற்றி யோடுகிறது.
அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.

வானஜோதிகளில் சிரேஷ்டமானது சூரியனே. ஆகையால் இவ்விரண்டாம் சரணத்தில், சங்கீதக்காரன் சூரியன் எவ்வாறு தேவமகிமையை வெளிப்படுத்துகிறதென்று பாடுகிறார். வல்லமையும் ஜோதியுமுடைய சூரியன், தன் கதிர்களால் பயிர்பச்சைகளுக்கும், ஜீவஜெந்துக்களுக்கும் ஜீவனையும் சந்தோஷத்தையும் அளித்து, ஆரவாரத்தோடு வானங்களில் செல்லும்போது, என்னைச் சிருஷ்டித்த தேவன் எவ்வளவு மேன்மையும் வல்லமையும் பொருந்தியவராயிருக்க வேண்டுமென்று சொல்லுகிறதாம்.

II. இரண்டாம் பாகத்திற்கு அடிவேறு, அசைவேறு பொருள்வேறு என்று சொன்னோம். இதில் வெவ்வேறு நீளமான பலஅடிகளடங்கிய இரண்டு சரணங்களுண்டு. முதல் சரணத்தில் அருள் வேதத்தின் மாட்சிமை மகா அலங்காரமாய் வர்ணிக்கப்படுகிறது. இப்பூலோகத்தைப் புதிப்பித்து, பிரகாசிப்பித்து, சந்தோஷிப்பிக்கும் சூரியனைத் தியானித்த கவிஞன், மானிடர் இருதயத்தைப் புதிப்பித்து, பிரகாசிப்பித்து, சந்தோஷிப்பிக்கும் தேவவசனத்தை இதில் புகழ்ந்து போற்றுகிறார்.

ஆறு வரியில் இவ்வருள் வேதத்தின் ஒவ்வோர் தன்மையையும், அது மனுஷனுடைய இருதயத்தில் செய்யும் ஒவ்வோர் கிரியையையும் விவரிக்கிறார்.

(1) கர்த்தருடைய வேதம் உத்தமம். (அது) ஆத்துமாவைப் புதுப்பிக்கும்.
கர்த்தருடைய சாட்சி சத்தியம். (அது) பேதையை ஞானியாக்கும்.
கர்த்தருடைய கட்டளைகள் செம்மை. (அது) இருதயத்தை சந்தோஷிப்பிக்கும்.
கர்த்தருடைய கற்பனை தூய்மை. (அது) கண்களைப் பிரகாசிப்பிக்கும்.
கர்த்தருடைய பயம் சுத்தம். (அது) என்றைக்கும் நிலைக்கும்.
கர்த்தருடைய நியாயங்கள் உண்மை. அவைகள் முற்றிலும் என்றும் விளங்கும்.
(அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கவை.
தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமானவை.)

கர்த்தருடைய வசனம் தித்திக்கும் தேன் என்பது நிசம் தான். ஆகிலும் அது இருதயத்தை ஊடுருவிப்பாயும் கட்கம் என்பதும் சத்தியமே. ஆகவே வேதத்தின் மகத்துவத்தையும், யெகோவா கற்பனைகளின் தூய்மையையும் கொண்டாடின சங்கீதக்காரன், தன் இருதயத்தில் குத்துண்டவனாய், தன்னை ஆராய்ந்து பார்த்து, தேவ இரக்கத்திற்காகக் கெஞ்சி, தன்னைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணுகிறான்.

(2) அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப் படுகிறேன்.
அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு.
தன் பிழைகளைக் கண்டுகொள்ளத்தக்கவன் யார்?
மறைந்திருக்கும் குற்றங்களை எனக்கு மன்னித்தருளும்.
துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்.
அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்.
அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்திற்கு நீங்கலாயிருப்பேன்.

என்கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, (மும் என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியான உமது சமுகத்தில் அங்கீகாரமாவதாக!

பரிசுத்த தேவவசனத்தில் தன் சாயலைக்கண்ட சங்கீதக்காரன், தன் நீச நிலைமையை உணர்ந்து, தேவசகாயத்திற்காக கெஞ்சுகிறான். முதலாவது, தான் அறியாமலிருந்தாலும், தேவன் மாத்திரம் கண்டிருக்கக்கூடிய பிழைகள் உண்டு என்று ஒத்துக்கொள்ளுகிறான். தன் பெலவீனத்தினால் தவறி, மற்றவர்களுக்கு மாத்திரமல்ல, தனக்கே மறைந்திருக்கும் பாவங்களும் இருக்கும் என்று ஒத்துக்கொண்டு, அவைகளை மன்னிக்கக் கேட்கிறான். பகிரங்கமாய் தைரியம் கொண்டு செய்யும் துணிகரப்பாவங்கள் என்னை ஆண்டுகொள்ள விடாதிரும் என்று மன்றாடுகிறான். இவ்வாறு தேவனால் காக்கப்படுவதுண்டானால், அவரைவிட்டு விலகிப்போகும் பெரும் பாதகத்திற்கு தான் நீங்கிக்கொள்வேன் என்கிறான். இவ்வாறு, நொறுங்குண்ட இருதயத்தைக் கர்த்தருக்குப் படைத்த, இந்த என் ஜெப தூபப் பலியையும், என் நொறுங்குண்ட இருதயத்தையும் அங்கீகரித்தருளும்—என் கன்மலையே, என் மீட்பரே, என் யெகோவாவே என்று உருக்கமாய்க் கெஞ்சுகிறான்.

கிறிஸ்மஸ் தினத்திற்கு இச்சங்கீதம் எத்தனை தகுதியானது! "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், பிதாக்களுக்கு திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்த் திருவுளம்பற்றினார்." (எபி. 1: 1.) இயற்கைப்பொருளில் தமது மகிமைப்பிரதாபத்தையும், வேதாகமத்தில் தமது பரிசுத்தத்தையும், நீதியையும் வெளிப்படுத்தின தேவன், குமாரனில் தமது அன்பையும், பரிசுத்தத்தையும், மகிமையையும், வல்லமையையும் பரிபூரணமாய் வெளிப்படுத்திவிட்டார். பழைய ஏற்பாட்டு ஆகமங்களைத் தியானித்தவன் தன்னைத் தாழ்த்தி, இரக்கத்திற்காகக் கெஞ்சினதுண்டானால், தேவகுமாரனுடைய மனுஷாவதாரத்தைத் தியானிக்கும் நாம் எத்தனை அதிகமாய் நம்மைத்தாழ்த்தி, அவருக்கு நம்மைப் பிரதிஷ்டை பண்ணக் கடமைப்பட்டிருக்கிறோம்!

ஆண்டவர் வேதம் குறைவற்றததினால்,
ஆத்துமம் உயிரடையும்.

## அங்கிலேய சபையில் திடப்படுத்தல் ஆசரிக்கப்படும் நோக்கமும் அதின் பலிதமும்.

திருச்சபையின் பற்பல பூர்வ கிளைகளிலும் திடப்படுத்தல் எவ்வாறு ஆசரிக்கப்படுகிறதென்று முந்தின சஞ்சிகையில் கூறினோம். அங்கிலேய சபை ரோமை அதிகாரத்தினின்று சுயாதீனமானபோது, அப்போஸ்தலர் காலத்து வழக்கத்துக்கேற்க, திடப்படுத்தல் முறைமையை எவ்வாறு சீர்திருத்திக்கொண்டதென்றும் கவனித்தோம். திடப்படுதல் இரட்சிப்புக்கு இன்றியமையாத ஓர் சாக்கிரமெந்து என்று சொல்லக்கூடாவிட்டாலும், சபையின் பக்தி விருத்திக்கு அநுகூலமாக பூர்வகாலமுதல் வழங்கி வந்திருக்கும் ஓர் பரிசுத்த சடங்காசாரம் என்று சொல்லத்தகுமென்றும் சொன்னோம்.

திடப்படுதல் அங்கிலேய சபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கமும், அதைச்சரியாய் அனுசரிக்கும்போது உண்டாகும் பிரயோசனமும் எவையென்று இப்போது பார்ப்போம்.

1. சபையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு இது அநுகூலமான ஓர் ஏற்பாடாயிருக்கிறது.

ஒரே விசுவாசமும், ஒரே கர்த்தரும், ஒரே பிதாவும் கிறிஸ்தவர்களெல்லாரையும் ஆவிக்குரிய பிரகாரமாய் இணைத்தபோதிலும், வெளியரங்கமான ஐக்கியத்துக்கு வெளியரங்கமான ஓர் கட்டு அவசியம். ஆதிச்சபையில் பன்னிரண்டு அப்போஸ்தலரே, கிறிஸ்தவர்களனைவரையும் சேர்த்து இணைக்கும் கட்டாயிருந்தார்கள், விசுவாசிகள் எல்லாரும் "அப்போஸ்தலருடைய உபதேசத்தில்" நிலைத்திருக்கவேண்டியதாயிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் குணப்பட்ட மூவாயிரம்பேரும் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2 43) என்று சொல்லியிருக்கிறது. மேலும், அப்போஸ்தலரல்லாதவர்கள் மூலமாய் சபை ஓரிடத்தில் உண்டாகும் பக்ஷத்தில் அப்போஸ்தலர்களாவது, அவர்களால் அனுப்பப்படும் பிரதிநிதிகளாவதுபோய், அவர்கள் கிறிதுவின் உபதேசத்தில் சரியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்களா வென்று பார்த்து, குறைவானவைகளை நிறைவாக்கி, அவர்களை ஒப்புக்கொள்ளுவது பூர்வ சபை வழக்கமென்று தோன்றுகிறது. இப்பிரமாணத்துக்கிசைய, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பு பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து சபையை உண்டாக்கினதைக்கேள்விப்பட்ட அப்போஸ்தலர் பரி. பேதுருவையும் பரி. யோவானையும் அங்கே அனுப்பினார்களென்றும், சமாரியர் பெந்தெகொஸ்தே ஆவியானவரில் பங்கு பெறவில்லை என்று அப்போஸ்தலர் இருவரும் கண்டவே, அவர்களுக்குப் போதித்து, அவர்கள்மேல் கைகளை வைத்து ஜெபம்பண்ணினார்கள் என்றும் வாசிக்கிறோம். (அப் 8: 14-17). அதேவிதமாக சிதறப்பட்டவர்கள் அந்தியோகியா பட்டணத்துக்குப்போய் பிரசங்கித்து, அங்கே சபையை ஸ்தாபித்தபோது எருசலேமிலுள்ள சபையார் இதைக் குறித்துக் கேள்விப்பட்டு, பர்னபாவை அனுப்பினதாக வாசிக்கிறோம். "அவன் அவர்களிடத்தில்போய்ச்சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டு சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னானென்று பார்க்கிறோம் (அப் 11:22, 23). உண்டாகும் சகல சபைகளும் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கிறார்களா வென்று கவனித்துக்கொள்ள இது ஏதுவாயிற்று. அப்போஸ்தலராவது அவர்களால்அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாவது எல்லாச் சபைகளையும் சந்தித்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. அவ்வாறு சந்தித்த காலத்தில் கைகளை வைத்து, ஆவியின் அருளுக்காக ஜெபித்து வந்தார்கள் என்று அநுமானிக்க இடமுண்டு. அப்போஸ்தலர் காலத்துக்குப் பின் சபை ஒழுங்கு ஸ்திரமாகவே, அத்தியக்ஷரே இவ்வேலையைச் செய்துவந்ததாகத் தோன்றுகின்றது. சபையின் ஒருமைப்பாட்டிற்கு அத்தியக்ஷர் அவசியமானவர் என்பது பரி. யோவான் மரித்து 20 வருஷங்களுக்குள்ளாக தெளிவான உபதேசமாயிற்று. அது முதல் இந்நாள் வரைக்கும் சபையின் ஒருமைப்பாட்டுக்கு அத்தியக்ஷர் அடையாளமாகவும் அவசியமாகவுமிருக்கிறார். ஆகவே, பரிசுத்த ராப்போஜனம் பெற்று, சபையில் பூரண அங்கங்களாக விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் விசுவாசத்தைப்பற்றி பரீக்ஷிக்கப்படவும், அதைப்பற்றி சபைக்குமுன் பகிரங்க சாட்சிகொடுக்கவும் அத்தியக்ஷர் முன் வருவது அது முதல் சபையின் பொதுவான ஏற்பாடாயிருக்கிறது. எந்தக் கிராமத்திலானாலும் தேசத்தின் எந்த மூலையிலானாலும், எத்தேசத்தானும் பாஷைக்காரனும் பூரண அங்கமாகும்படி விரும்பினால், அக்கண்டத்தின் சிரேஷ்ட குருவினால் பரீக்ஷிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்படுவது சபையின் ஒருமைப்பாட்டை எத்தனை தெளிவாய்க் காட்டுகிறது! "தற்காலத்தில் திடப்படுத்தலினாலுண்டாகும் கைகண்ட பிரயோஜனம் யாதெனில், சபையின் ராப்போஜனக்காரரை வரையும், இது சபையின் முதலாளியாகிய அத்தியக்ஷரோடு சம்பந்தப்படுத்துகிறது" என்று ஹார்னக் என்னும் ஓர் பேர்போன வேத சாஸ்திரி சொல்லுகிறார்.

1603-ம் வருஷத்தின் 60-ம் கனோன் சட்டத்தில்: ஞானஸ்நானம் பெற்று, கிஸ்துமத ஞானோபதேச வினாவிடையிலடங்கிய போதனையை அடைந்திருக்கும் பிள்ளைகள்மேல் அத்தியக்ஷர் கைகளைவைத்து ஜெபித்து, அவர்களை ஆசீர்வதித்துத் திடப்படுத்தல் கொடுப்பது அப்போஸ்தலர் காலமுதல் தொடர்ந்தேர்ச்சியாய் தேவனுடைய சபையில் நடைபெற்று வந்திருக்கும் ஓர் பக்தி விநயமான பூர்வ உசித வழக்கமாயிருக்கிறபடியாலும், பூர்வ காலங்களில், அத்தியக்ஷர் மூன்று வருஷத்துக்கோர்முறை சபை சந்திப்புக்குப் போகும்போது இத்திருநியமத்தை நடப்பிப்பது சபையில் சகஜமாயிருப்பதாலும், அத்தியக்ஷர்களாவது, அவர்கள் உப அத்தியக்ஷர்களாவது இவ்வழக்கத்தை ஆசரிக்க ஜாக்ரதையாயிருக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறோம்" என்றிருக்கிறது. ஆகவே, திடப்படுத்தல் மூலமாய் சபை அத்தியக்ஷருக்குட்பட்ட ஒரே சபை என்று ரூபகாரப்படுகிறது.

2. பரிசுத்த ஆவியானவரின் சகாயத்தை முக்கியமாய்த் தேடுவதற்கும், பெற்றுக்கொள்ளுவதற்கும் திடப்படுத்தல் ஏற்ற ஓர் ஏற்பாடாயிருக்கிறது.

மனுஷர் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியை வேதாகமத்தில் இரண்டு விதமாய்ப் பேசப்படுகிறது. இருதயத்தைச் சுத்திகரித்து கிறிஸ்துவின் ஜீவனை இருதயத்தில் நாட்டுவது ஒன்று. அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தில் வாசம் பண்ணுவது மற்றொன்று. ஒன்று மறு ஜனனம் உண்டாகச்செய்வது. மற்றது பரிசுத்தம் உண்டாகச் செய்வது. மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய்த் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் இவ்வாறு பரிசுத்த ஆவியின் ஆரம்ப கிரியை நடக்கப் பெற்றவர்களாயிருக்கிறார்கள். விசுவாசிகள் குடும்பத்திலுள்ள பிள்ளைகளும், புறமதங்களிலிருந்து மெய்யாய்க் குணப்பட்டுச் சபையில் சேருகிறவர்களும் மறு ஜனனமடைந்து, புத்திர சுவிகாரசலாக்கியம் அடைந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் ஒரு விதமாய்க் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருக்கிறார்கள், ஏனெனில் "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோ. 8: 9).

ஆவியானவர் செய்யும் மற்றக்கிரியை பெந்தெகொஸ்தே நாளில் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டது. அதென்னவென்றால், விசுவாசிகளின உள்ளத்தில் ஆவியானவர் வாசம பண்ணி, அதைப் பெலப்படுத்தி, கிறிஸ்துவின் சுபாவத்தை அதில் சிருஷ்டிப்பதேயாம். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்........அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனைஅவர் உங்களுக்குத் தந்தருளுவார் அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள் இருப்பார்" என்பதே அருள்நாதர் வாக்கு (யோவா. 14: 15). தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காக வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" (சங் 68: 18.) என்பது இதைக்குறிக்கும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் சீஷர்மேல் இறங்கினபோது, இவ்வாக்குத்தத்தங்கள் நிறைவேறின. கிறிஸ்துவின் ஆவியானவர் சீஷர் உள்ளத்தில் வாசம்பண்ண வந்தார்.

பெந்தெகொஸ்தே தினத்திற்கு அப்பால், விசுவாசிகள் எல்லாரும் இந்த ஆசீர்வாதத்தைப் பெறக்கூடியவர்கள். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று தம்மை விசுவாக்கிறவர்கள் அடையப்போகிற பரிசுத்த ஆவியைக் குறித்து இயேசுநாதர் திருவுளம் பற்றினார் (பரி. யோவா 7: 38, 39).

ஆகவே, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெறும்போது இவ்விரண்டு கிரியையையும் நடப்பிக்க வல்லவரான ஆவியானவரைப் பெறுகிறார்கள். ஆவியானவர் பிரிக்கப்படக்கூடாதவர் ஓர் உள்ளத்தில் வரும்போது அரைகுறையாயல்ல, பூரணமாய் வருகிறார். ஓர் ஆத்துமாவைச் சுத்திகரித்து, உயிர்ப்பித்து, கிறிஸ்துவின் ஜீவனை அதில் நாட்டும்படியாக மாத்திரமல்ல, அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமாவில் என்றென்றைக்கும் வாசம்பண்ணி, கிறிஸ்துவின் சாயலை அதில் உருவாக்குவதற்காகவும் வருகிறார். மனுஷனுடைய அறிவீனத்தாலும், விசுவாசக் குறைவினாலும், ஆசையின்மையினாலும், கீழ்ப்படியாமையினாலும் ஆவியின் கிரியை அவன் உள்ளத்தில் தடைபட்டுக் குறைவாகிறதேயொழிய, ஆவியானவரோ சம்பூரண ஆசீர்வாதங்களுடனே அவன் இருதயத்தில் எப்போதும் வாசம்பண்ணுகிறார் என்று சொல்லுவதே நியாயம்.

இவ்விரண்டு கிரியையையும் நடப்பிக்கும்படி ஆவியானவர் ஞானஸ்நானம் பெற்றிருப்பவர்கள் உள்ளத்தில் வந்திருக்கிறார் என்பது உண்மையானாலும், இவ்விரண்டு கிரியையையும் எல்லாருடைய உள்ளத்திலும் நடப்பிக்க அவர் உடனே இடம் பெறுகிறதில்லை. இவ்வித ஓர் பெரிய ஆசீர்வாதம் பெந்தெகொஸ்தே நாளில் சபையின் மேல் இறங்கினது என்ற அறிவு முதலாய் சமாரிய கிறிஸ்தவர்களுக்கு இல்லாதிருந்தது என்று தோன்றுகிறதே. பரி. பேதுருவும் பரி.

போவானும் அவர்களுக்கு இந்த அறிவைப்புகட்டி, இவ்வார்த்தையை நிச்சயப்படுத்தும்படி, அவர்கள்மேல் கைகளை வைத்து ஜெபித்தபோதே அவர்களும் இவ்வாசீர்வாதத்தில் பங்குள்ளவர்களானார்களே.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் உள்ளத்தில் வாசம்பண்ணும்படி அருளப்பட்டிருக்கிறார் என்ற சத்தியத்தை வற்புறுத்தி, விசுவாசிகளுக்கு நிச்சயப்படுத்தும்படிக்காகவே, கைகளை வைக்கும் சடங்காசாரம் பூர்வமுதல் அநுசரிக்கப்பட்டது.

இந்த அறிவும் நிச்சயமும் கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் அவசியமாதலால், கைகளை வைக்கும் சடங்கு எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இன்றியமையா அவசியமான சடங்காக எண்ணப்பட்டதென்று தோன்றுகிறது. வெகு சீக்கிரத்துக்குள்ளாக "மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" (எபி 6: 2.) என்பவைகளைப்போலவே, "கைகளை வைக்குதல் என்பதும் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஓர் மூலாதாரமான அஸ்திபாரம் போல எண்ணப்பட்டது. இதற்கடுத்த காலத்தில் திடப்படுத்தலானது, ஞானஸ்நானத்தைப் பூரணமாக்குதல் என்று பேசப்பட்டது. அதாவது திடப்படுத்தலில்லாமல் ஞானஸ்நானம் பூரணமாகவில்லை என்பது சபை சித்தாந்தம். இதினாலே மூன்றும் நூற்றாண்டின் மத்திக்குள்ளாக சர்வலோக சபைகளிலும், கைகளை வைக்குதல் அல்லது தைலாபிஷேக சடங்கு ஞானஸ்நானத்தோடேயே நிறைவேற்றப்பட்டது. தைலம் பரிசுத்த ஆவியானவருக்கு குறிப்பு. உயிர்ப்பிக்கும் ஆவியானவர் வாசம்பண்ணுகிறவராகவும் வந்திறங்குகிறார் என்பதைக் காட்டும்படி பூர்வ சபையிலும், நாளது வரை கிரேக்க ரூசியானிச்சபைகளிலும் ஞானஸ்நானங் கொடுக்கும்போதே பிள்ளைகளுக்குத் தைலாபிஷேகமும் செய்தார்கள். பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தில் அவர்களுக்கும் பங்குண்டு என்பதை இது அடையாளரூபமாக நிச்சயப்படுத்திற்று. இன்றுவரை இந்த நிச்சயத்தை அருளும்படியாகவே, திடப்படுத்தல் பூர்வமுதல் இன்று வரை ஆசரிக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்தவர்கள் ஓர் திட்டமான சமயத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றதாகப் பேசும் வேதவாக்கியங்கள், கைகளை வைத்ததினால் அவர்களுக்கருளப்பட்ட பெந்தெகொஸ்தே ஆவியின் பங்கைக் குறிப்பதாக வியாக்கியானிகள் எண்ணுகிறார்கள். 1 யோவான் 2:20ஐ உவெஸ்காட் அத்தியக்ஷர் வியாக்கியானப் படுத்தும்போது இவ்வாறு எழுதுகிறார். "நீங்கள் அவராலே அபிஷேகம் பெற்றீர்கள்" என்று அப்போஸ்தலன் உபமான முறையாகச் சொல்லுவதின் பொருள்: "நீங்கள் அவராலே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றீர்கள்"—என்பதே. அந்தக்கிறிஸ்தவர்கள் ஏதோ ஓர் திட்டமான காலத்தில் இவ்வபிஷேகத்தைப் பெற்றதாக அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். அப்போஸ்தலர் நடபடியைக் கவனிக்குங்கால், இத்திட்டமான காலம் அவர்கள் மேல் கைகள் வைக்கப்பட்ட சமயமென விளங்கும் என்கிறார்.

காலஞ்சென்ற கான்தர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷர் பென்சன்: "தேற்றரவாளனாகிய ஆவியானவர் தம்மை விசுவாசிக்கும் பக்தருடைய உள்ளத்தில் வாசம் பண்ணுவார் என்று இயேசுநாதர் சொன்ன வாக்குத்தத்தம் கைகளை வைக்கும் சமயத்தில் அந்தந்த விசுவாசிகளுக்கு நிறைவேறுகிறது என்ற அபிப்பிராயம் பூர்வசபையில் யாவருக்கும் பொதுவாயிருந்ததென்பதற்குப் போந்த அத்தாக்ஷி உண்டு. பன்னிருவர்மேல் அவர் முதல்முதல் இறங்கினபோது, வெளி அடையாளங்களுடன் வந்தார். அப்பால் வரவர கிறிஸ்தவர்களனைவருக்கும் வெளி அடையாளம் யாதுமின்றியே, அவர் அருளப்பட்டார் என்று தமது பிரதம சந்திப்புப் பிரசங்கத்தில் சொல்லுகிறார்.

இதற்கு மாறாகச் சிலர் பற்பல பாஷை பேசும் வரம், தீர்க்கதரிசன வரம் முதலிய ஆவியின் அற்புதவரங்களை அளிக்கும்படிக்கே, கைகளை வைக்கும் சடங்கு அப்போஸ்தலர் காலத்தில் அநுசரிக்கப்பட்டது என்று சொல்லுகிறார்கள். வேதாகமத்தையும் பூர்வசபைப் பிரபந்தங்களையும் நோக்கின், அவ்வாறல்லவென்று விளங்கும். சமாரியா கிறிஸ்தவர்களைப்போய்ச் சந்தித்த அப்போஸ்தலர் ஆவியின் அற்புதவரங்களை அளிப்பதற்காகவே எருசலேமிலிருந்து புறப்பட்டுப் போனார்கள் என்று சொல்லத்தகுமா? அவர்களுக்கு அவ்வித வரம் ஏதாகிலும் அளிக்கப்பட்டதாகச் சொல்லப்படவில்லையே. மேலும், எபி. 6. 2ல் சொல்லியபடி, கைகளை வைக்குதல் சபையின் மூலாச்சாரங்களில் ஒன்றாக எண்ணப்பட்டு, எல்லாருக்கும் செய்யப்பட்டதானால், எல்லாக்கிறிஸ்தவர்களும் இவ்வித அற்புத வரங்களைப் பெற்றிருந்ததாகச் சொல்லவேண்டுமே. அவ்வாறு அநுமானிக்க எவ்வித ஆதாரமுமில்லையே. மேலும், திருச்சபையில் ஆவியின் வரங்கள் நின்றுபோன பிற்பாடுங்கூட, கைகளை வைக்கும் சடங்கு நடந்திருக்க, இவ்வற்புதங்களுக்காகத் திடப்படுத்தல் செய்யப்பட்டது என்று சொல்வது சரியாகுமா? நான்காம் நூற்றாண்டிலிருந்த பரி. அகுஸ்தீன் "ஆரம்பநாட்களில் தேவாவியானவர் விசுவாசிகளனைவர் மேலும் இறங்கினபோது, ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே அவர்கள் வெவ்வேறு பாஷைகளைப் பேசினார்கள். அந்தக்காலத்துக்கு அவ்வித அடையாளங்கள் ஏற்றவைதான். ஆனால் பிற்காலத்திலோ அவ்வடையாளம் நீக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்படி நாங்கள் கைகளை வைக்கிறபோது, அவர்கள் பற்பல பாஷைகளைப் பேசாமலிருக்கிறதினால், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையென்று சொல்லும் இடும்புக்காரர் யாரும் உண்டோ" என்கிறார். இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளிலுங்கூட ஆவியின் அற்புதவரங்களைப் பெற்றவர்கள் சிலர் இருந்தார்களென்று தோன்றுகிறது. ஆனாலும் அக்காலத்துப் பிரபந்தங்களைப் படிக்கும்போது, இவ்வித வரங்களைப் பெற்றவர்கள் மகா சொற்பமென்றும், ஆவியானவர் மனுஷர் உள்ளத்தில் வாசம்பண்ணி, பரிசுத்த நடக்கையை உண்டுபண்ணுவதையே அதிகமதிகமாய் வற்புறுத்திப் பேசினார்களென்றும் தெரிகிறது. புறமதஸ்தர் முதலாய் அக்காலத்தில் சிலருக்கிருந்த அற்புதவரங்களையல்ல, கிறிஸ்தவர்களெல்லாரிடத்திலும் காணப்பட்ட உத்தம நடக்கையையே விசேஷித்துப் பேசுவதாகக் காண்கிறோம் கி. பி. 350ல் எருசலேம் அத்தியக்ஷராயிருந்த சிரில் என்பவர் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்குச் செய்யும் பிரசங்கத்தில் "ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களே, இயேசுநாதர் யோர்தானிலிருந்து கரையேறினவுடன், பரிசுத்த ஆவியைப் பெற்றது போல, நீங்களும் ஞானஸ்நானத் தொட்டியிலிருந்து வெளியேறினவுடனே, பரிசுத்த ஆவிக்கு அடையாளமாயிருக்கும் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டீர்கள். அவரே உங்களில் சுத்த எண்ணங்களை எழுப்புகிறவர். அவரே விலக்கப்பட்ட அசுசியான காட்சிகளைப் பார்க்காதபடி உங்கள் கண்களைத் தடுக்கிறவர். அவரே லௌகீக சிந்தை உங்களை ஆட்கொள்ளாதபடி காக்கிறவர். துன்பநேரத்தில் தைரியத்தையும் பெலனையும் கட்டளையிடுகிறவர் அவரே. விசுவாசிகளுள்ளிருந்து ஓயாமல் கிரியை செய்கிறவரும் அவரே என்று சொல்லுகிறார்.



இச்சாட்சிகளையெல்லாம், நிதானமாய் ஆலோசிக்கும்போது, ஆவியின் அற்புத வரங்களைக் கொடுப்பதற்கல்ல, ஆவியானவர் விசுவாசியின் இருதயத்தில் வந்து வாசம் பண்ணுகிறார் என்ற சத்தியத்தைப் பரிஷ்காரமாய்க் காட்டி, நிச்சயப்படுத்தும் அடையாளமாகவே, பூர்வமுதல் திடப்படுத்தல் ஆசாரம் நடைபெற்று வந்திருக்கிறதென்று சொல்லலாம்.

இதே நோக்கத்துடனேயே, அங்கிலேய சபையும் திடப்படுத்தல் முறைமையை ஆசரித்துவருகிறது. கைகளை வைக்குமுன் அத்தியக்ஷர் செய்யும் ஜெபம் இது: "ஜலத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் உமது அடியாராகிய இவர்களை மறுபடியும் ஜெனிப்பிக்கக் கிருபை கூர்ந்த கர்த்தாவே, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினால் இவர்களைப் பலப்படுத்தி, உமது கிருபையின் பற்பல வரப்பிரசாதங்களை இவர்களுக்குள்ளே தினந்தோறும் பெருகச்செய்யும். ஞானத்தையும் விவேகத்தையும் அருளும் ஆவியையும், தேவரீருக்குப் பயப்படுகிற பரிசுத்த பயத்தை அருளும் ஆவியையும் இப்பொழுதும், எப்பொழுதும் இவர்களுக்கு நிறைவாய்க் கொடுத்தருளும்." என்பதே.

சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரும் பெந்தெகொஸ்தே ஆவியானவரில், தங்களுக்குப் பங்குண்டு என்பதை அறிந்து, நிச்சயங்கொண்டு, அவருடைய பலத்தினால் தினம் தினம் பாவசோதனைகளை ஜெயித்து, கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியத்தில் வளரும் இரகசியத்தைக் கண்டுகொள்ளுவதற்காக, அப்போஸ்தலர் செய்தபடி கைகளை வைத்து ஆசீர்வதித்து ஜெபிக்கிறோம். அங்கிலேய சபையில் திடப்படுத்தல் நியமத்தை அநுஷ்டிக்கும் ஓர் முக்கிய நோக்கம் இதுவே.

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

மே மாச உஷ்ணத்தின் கடுமையை என்னவென்று சொல்ல!! அதிலும் தெலுங்குநாட்டின் காங்கை கொடிது. வேலை ஒருபக்கத்திலும் உஷ்ணம் மறுபக்கத்திலும் நின்றபோதிலும், கடந்த மாச மத்தியில் சுமார் 70 மைல் பிரயாணஞ்செய்துவந்தேன். பிரயாண ஆரம்பத்தில் ஒரு பகல் திக்காற்றை அநுபவித்தேன். இப்படியிருந்தால் பிரயாணத்தை எப்படி முடிக்கவென்றும் நினைத்தேன். ஆகிலும் இரக்கங்களின் பிதா தமது கரத்தின் நிழலாலே வேலை முடிவுவரை காத்துவந்தார். ஊடே ஊடே மேக மந்தாரத்தையும் சிறு சிறு தூறலையும் கட்டளையிட்டார். ஒருநாள் மழையில் நாங்களும் எங்கள் சாமான்களும் நனையும்படியாயிற்று. ஒரு ஆற்றங்கரையில் போய், எல்லாவற்றையும் உலரவைத்தோம். நனைந்த அரிசியை உலையிலிட்டு, சமையலுக்கு முற்பட்டு நிற்கையில், தீப்பெட்டி எப்படியோ தப்பிப்போயிற்று. காட்டுக்குள் நெருப்புக்கு என்னசெய்கிறதென்ற எண்ணம் வந்து மறைந்தது. எங்கள் நாட்டாரிடம் சாதாரணமாய் நெருப்பு இல்லாமலிராது. தீ வாயிலுமிருக்கும், கையிலுமிருக்கும். போதாக்குறைக்கு வழிநெடுக ஊடே ஊடே மரங்களில் அக்கினி பற்றவைத்து, அவை மாசக்கணக்காய் எரியும். தீ வாயில எப்படி? சுருட்டுக்குடிப்பதாலேயே. ஆகிலும் எங்கள் அதிஷ்டம் இரண்டொரு சிறுவர் எதிர்ப்பட்டும் அவர்களிடம் நெருப்பு இல்லை. கால தாமதமாகிறதுடன், பசி ஒருபக்கத்தில் நெருக்கினது. நெருப்பு இல்லாமல் தீராதென்று, பக்கத்துக் கிராமத்திலிருந்து தருவித்து, காரியத்தை ஒப்பேற்றி திரும்பப் பிரயாணப்பட்டோம். காரியம் இவ்வாறாயினும் வேலை தடையின்றி நடந்தேறினது.

ஸ்ரீராமகிரி என்ற கிராமத்தில், இரவு ஒருபகல் பின்னிட்டேன். இரவு சபையாரிடம் வேதபாடங் கேட்டு, படிப்பித்து, ஆராதனை நடத்தி, அதன்பின் பள்ளிப்பிள்ளைகளைப் பரீட்சை செய்தேன். பகலில் ஜனங்கள் கூலி வேலைக்குப் போய்விட்டதால், வீடுகளில் இருந்தவர்களிடம் புத்திசொல்லி ஜெபித்தேன். மொத்தத்தில் முந்தின தடவைக்கு சபை பள்ளிக்கூட விர்த்தி குறைவாகக் காணப்பட்டதைப்பற்றி உபாத்தியாயரிடம் ஜெபித்து புத்திசொல்லி புறப்பட்டேன்.

**புஜன்னபேட்டை.** முந்தின முறை பரி: ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படும்படி போதித்து, படிப்பித்து, இதுவரை அவர்கள் பரி: ஞானஸ்நானத்தைப் பாராததால், அவர்களுக்கு மாதிரியாக ஷையூர் உபாத்தியார் குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுத்துவந்தேன். இச்சமயமும் அவர்கள் திருப்தியாகக் காணப்படாததால், அடுத்தமுறை ஆயத்தமாயிருக்கும்படி சொன்னேன். இவர்கள் இதற்குமுன்னிருந்ததைவிட ஜெபத்துக்கு வருவதில் சற்று உற்சாகம் காட்டினார்கள்.

**போட்லாடா.** இதில் 10 பேர் பரி: ஞானஸ்நானத்தினால் கர்த்தருடைய மந்தையில் சேர்க்கப்பட்டார்கள். இவர்களது அறிவு குறைவாகக் காணப்பட்டாலும் இவர்களது விசுவாசம் நன்றாயிருந்தது. வாஞ்சையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். ஜெபத்திற்குக் கிரமமாக வந்திருந்தார்கள். இவர்கள் விசுவாசம் பலப்படுத்தப்பட்டு, இந்த ஆரம்பம் ஸ்திரமாயிருக்க ஜெபிப்போமாக.

இங்கு கண்தெரியாத ஒரு பெண்பிள்ளை இருக்கிறது. வயசு 13. நல்ல பிள்ளை. பாளையங்கோட்டையில் ஸ்தாபித்திருக்கிற தரிசனமனை பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி கேட்டதில் தாய்க்கு இஷ்டமில்லை.

**பெரிய முப்பாரம்.** இவ்வூராரைப்பற்றி பலதடவையும் பத்திரிகையில் வாசித்திருக்கிறோம். இவர்கள் மிஷனிலி

ருந்து பொருளுதவி சர்க்கார் சம்பந்தமான பிரார்சு முதலிய வற்றை அதிகமாக நாடுகிறார்கள். இவர்கள் உவெஸ்லி மிஷனிலிருந்து நமக்குக் கிடைத்தவர்கள். இவர்கள் கிறிஸ்து மார்க்கத்தின் உள்ளான சாரத்தை அறிந்து கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்படி கர்த்தரிடம் ஊக்கமாய் மன்றாட வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜெயபுரம். இங்கு ஒரு குடும்பத்தார் 6 பேர் பரி: ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆயத்தமாயிருந்த இன்னும் 2 குடும்பத்தாரில் முக்கியஸ்தர் அயல் கிராமத்திற்குப் போய் விட்டார்கள். அவ்வீட்டின் பெண்கள் எங்கள் எல்லாருக்கும் ஞானஸ்நானம்பெற ஆசைதான். வீட்டின் முக்கியஸ்தர்கள் வந்தபின் பெறுகிறோம் என்றார்கள்.

மோறுகலகூடம். இதில் ஒரு குடும்பத்தார் 8 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவ்வூரார் ஒருகாலத்தில் மார்க்க ஆசையற்றவர்களாயிருந்தவர்கள். இப்போ மார்க்கத்தில் வந்து, கிரமமாகக் காணப்படுகிறார்கள்.

சபைகளிலும் ஊழியர்களிலும் காணப்படுகிற லாப நஷ்டங்களை நினைத்து, தேவசமுகத்தில் மன்றாடுவோமாக.

டேவிட் தேவசகாயம்.

## நன்கொடை ஜாமான் விற்பனை 1915.

கடந்த வருஷத்தில் நடந்ததுபோல நாளது வருஷத்திலும் இந்திய மிஷனெரி சங்கத்திற்காக ஓர் ஜாமான் விற்பனை (Fancy Sale) ஜூலை 15ௗ வியாழக்கிழமை நடத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. சாதாரண சட்டைகள், பாவாடைகள், ரவிக்கைகள், பூத்தையல்கள், தைத்த கைலேஞ்சுகள், மேசைத் துப்பட்டிகள், கம்பிளி நூலினால் செய்யப்பட்டவைகள், ஞானஸ்நான உடுப்புகள், கிண்ணிப் பெட்டிகள், பாய்கள், விசிறிகள், நார்க்கயிறுகள், தோண்டிப்பட்டைகள், கருப்புக்கட்டி, பலகார முதலிய தின்பண்டங்கள் முதலியன எளிதில் விலையாகக்கூடும். நண்பர் யாவரும் இதுவிஷயத்தில் உதவிசெய்யும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஏற்கனவே தையல் வகைகள், மூதன ஜாமான்கள் ஆயத்தம்பண்ணும்படி ஞாபகப்படுத்துகிறோம்.

## இந்திய மிஷனெரி சங்கக் கிளைச் சங்கங்கள்.

தோர்ணக்கல் மிஷனில் கிராம ஆலயங்கள் கட்டும்படியாகத் திருச்சிறுப்பள்ளியிலிருக்கும் சகோதரர் ரூ. 905-ம், கோயம்புத்தூரிலிருக்கும் சகோதரர் ரூ. 218-ம் வாக்களித்திருப்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜூன் 1ௗ கிளைச்சங்கம் ஒன்று கோயம்புத்தூரில் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதற்காகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மற்றும் இடங்களிலுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் ஒருமனப் பட்டவர்களாய்த் தங்களுடைய ஆண்டவரின் நாம மகிமைக்கென்று இத்தன்மைய முயற்சிகளைக் கையாடும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். திருச்சிறுப்பள்ளியிலும் சீக்கிரம் ஓர் கிளைச்சங்கம் ஸ்தாபகமாவும் அங்குள்ள சகோதரர் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்க ஊழியங்களில் அதிக அபிமானங்கொண்டு, தங்கள் ஜெபங்களினாலும், கிரமமான உற்சாகக் காணிக்கைகளினாலும் சங்கத்தைத் தாங்கவும் கர்த்தர் கிருபை புரிவாராக. ஐயமே பேலன். J. S. C.

## ஜெப ஸ்தோத்ர விஷயங்கள்

1. தெலுங்கு நாட்டில் நடந்திருக்கும் பரி. ஞானஸ்நானங்களுக்காகவும், திருநெல்வேலியில் மகா கனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நடப்பித்துவரும் திடப்படுத்தல் ஆராதனைகளுக்காகவும் ஸ்தோத்திரம்.

2. சென்னை, கோயம்புத்தூர் முதலிய பட்டணங்களில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கிளைச் சங்கங்களுக்காக ஸ்தோத்திரம்.

3. ஜூலை 15ௗ நடக்கும் வருஷாந்தரக் கூட்டம், நன்கொடை ஜாமான் விற்பனை முதலியவைகளில் தேவாசீர்வாதம் அமர்ந்திருக்கும்படி ஜெபம்.

4. ஜூலை 11ௗ பாளையங்கோட்டை பரி. திருத்துவ ஆலயத்தில் மகா கனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நடத்தும் குருப்பட்டாபிஷேக ஆராதனைக்காக ஜெபம்.

5. சங்க வேலைவிருத்திக்குத் தக்கதாக உற்சாகமான காணிக்கைகள் நண்பர் படைக்கும்படியாகவும், தேவ ஊழியர் அதிக உற்சாகமாய் மிஷனெரி ஊழிய சம்பந்தமாய் உழைக்கவும் ஜெபம்.

அன்புக்கு அத்தாக்ஷி கொடையாம். தேவன் அன்புகூர்ந்து, தம்மேக குமாரனை ஈந்தார் (யோவா. 3: 16.). சகோதரனே, சகோதரியே! நீ குணப்படாத உலகத்தின் மீது அன்புகூர்ந்து வருகிறாயென்பதற்கு அத்தாக்ஷியாக சுவிசேஷ பிரபல்ய வேலைக்காகக் கொடுத்திருப்பது எவ்வளவு?

"கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில், மிகுந்த பலனைக் கொடுக்கும்" யோவா. 12: 24.). மிகுந்த பலனைக்கொடுக்கும்படி நிலத்தில் விழுந்து சாக எனக்குப் பிரியந்தானா?

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும்.

Editor: The Secretary I. M. S, T.

PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

MAY, 1915

Registered No. M.84

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR ... 7 - DEC 1915 ... MADRAS

Vol. XII. No. 5] மேமீ 1915 [விலை பை. 3

CONTENTS

Editorial Notes ... ... ... ... 33
Studies in the Psalms ... ... ... ... 35
The Confirmation: Its Use ... ... ... 36
From the Telugu Field ... ... ... ... 39
Casting in all ... ... ... ... 40

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 33
சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... 35
திடப்படுத்தல் ... ... ... ... 36
தெலுங்குநாட்டுக்கடிதம் ... ... ... ... 39
எல்லாவற்றையும் போட்டுவிட்டாள் ... ... 40

## பத்திராதிபர் குறிப்புகள்.

இந்நாட்களில் அருள்நாதரின் பரமேறுதலையும் பரிசுத்த ஆவிமானவர் சபையின்மீது ஊற்றப்பட்ட சிறந்த சம்பவத்தையும் தியானிக்கும் சலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

**பரிசுத்த ஆவியின் திருநாள்.**

சிலுவை நாதர் பாத்துக் கெழுந்தருளு முன் தம் சீஷரைப்பார்த்து: மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் (லூக். 24: 47, 43.). பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தம் எனக்குச்சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப். 1: 8.) இயேசுபெருமானின் உயிர்த்தெழுதலுக்குப்பின்னான சரித்திரத்தை நான்கு சுவிசேஷங்களிலும் நடபடி ஆகமத்திலும் கவனிக்குங்கால், உயிர்த்தெழுந்த ரக்ஷாபெருமானின் ஜீவன் சகல மனுஷரிலும் வெளிப்படத்தக்கதாக அவருடைய அடியார்கள் அவரைக்குறித்து சாட்சி பகரவேண்டுமென்ற ஒரே சத்தியம் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கடமையைச் சரியாய் நிறைவேற்றுவதற்குப் பெலனாகவே ஆவியானவர் வாக்களிக்கப்பட்டிருக்கிறார். அவ்வாறே இங்கிலாந்து திருச்சபையும் "எல்லாத் தேசத்தாருக்கும் சுவிசேஷத்தை விடாமுயற்சியாய்ப் பிரசங்கிக்கத்தக்கதாக ஆவியானவர் அருளப்பட்டதாக" ஞாபகப்படுத்தி, கர்த்தரைப் புகழ்ந்து துதித்துவருகிறது. (பரிசுத்த ஆவியின் திருநாளுக்குரிய விசேஷ முகவுரை). பிதாவின் வலது பாரிசத்தில் பரிந்துபேசி நிற்கும் கிறிஸ்துவானவர்: இந்தத்தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளை நான் கொண்டுவர வேண்டும் என்கிறார் இவ்வூழியத்திற்குத்தம் தொண்டரையே நோக்குகிறார். "ஆண்டவர் வசனம் தந்தார். அதைப்பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி." (சங். 68: 11). இவைகளை நினைத்து, புறமதஸ்தர் சிலுவைக்கொடியின் கீழ் வரத்தக்கதாக அதிகமாய் உழைப்போமாக. அதிக அக்கறையுடன் மன்றாடுவோமாக.

நமது சங்க ஆரம்பமுதல் புறதேச மிஷன் வேலையில் அதிக அநுதாபங்காட்டி வந்ததுமன்றி, நமது சங்கத்தின் கமிற்றி மெம்பர்களில் ஒருவராகவும் பிரதி முதலாளியாயும் நல் ஆலோசனை கொடுத்துவந்த கனம் ஜி. ஜே. ஆர்தர் வக்கீல் அவர்கள் நாளது மீ 1ௗ சனிக்கிழமை மதியம் கர்த்தருடைய ராஜ்யமடைந்தார்கள். அவர்களுடையமரணம் தமிழ்ச் சபைக்கு ஓர் பெரிய நஷ்டமே. தன்னை ஆட்கொண்ட பரம எஜமானின் சித்தம் எதுவென அறியவும், அதையே நடப்பிக்கவும் எப்போதும் சாவதானமுள்ளவர்களாயிருந்தார்கள். "கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன் என்று காணப்படும்படிக்கும், அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்யத்தையும் அறிகிறதற்கும் அவருக்காக எல்லாவற்றையும்" நஷ்டமென்று விட்டார்கள், குப்பையுமாக எண்ணினார்கள். ஆகவே வக்கீல் உத்தியோகத்தையும் அதற்குரிய மேன்மையையும் துறந்து, சுவிசேஷப்பிரசங்கியாகச் சம்பளமின்றி, கர்த்தருடைய கரங்களையே தங்கள் சரீர சவரக்ஷணைக்கு எப்போதும் நோக்கினவர்களாய், கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக கர்த்தருக்கென்று உழைத்து வந்தார்கள். தமிழ் நாட்டு வாலிபருக்கு ஓர் சிறந்த மாதிரி! இவர்கள் இயற்றிய "பரிபூரண ஜீவன்" என்னும் நூலின் விற்பனை லாபத்தை தாங்கள் நேசித்து வந்த இந்திய மிஷனெரி சங்கத்திற்கே காணிக்கையாகப் படைத்தார்கள். தந்தையரை இழந்த பிள்ளைகளையும் மற்றும் இனஜனத்தாரையும் கர்த்தர் ஆறுதல்படுத்த ஜெபிப்போமாக.

சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின் கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாகத் தைரியமாய்ப் போர்செய்து, மரண

**கிறிஸ்துவின் சேவகம்**

பரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் ஊழியக்காரனுமாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக பரி. ஞானஸ்நானத்தில் சிலுவையின் அடையாளம் நெற்றியில் வரையப் பெற்றோம். பரமஎஜமானின் சேவகத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வாறு பேரெழுதப்பட்டிருப்பதை பெற்றோரும் குருமாரும் மற்றும் தேவஊழியரும் அடிக்கடி பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்திவருவது எத்தனை மாட்சிமையாயிருக்கும்! இயேசுக்கிறிஸ்துவுக்கு நல்லபோர்ச்சேவகனாய்த் தீங்கனுபவிக்க கர்த்தருடைய வசனம் போதிக்கிறது. (2 தீமோ. 2: 3—5)

பிள்ளைகள் பகுத்தறிவுக்கு வரும் பிராயம் ஓர் விசேஷித்த சமயமாக நம் சபை மதித்து, அக்காலத்தில் பிள்ளைகள் தங்களைச் சமூலமாய்க் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்வதற்கு ஏவி எழுப்பிவிடும்நோக்கமாக "திடப்

**திடப்படுத்தல் நியமம்.**

படுத்தல்" நியமத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதில் வாலிபரும் வாலிபப் பெண்பிள்ளைகளும் தங்கள் ஜீவியத்தின் நோக்கமெதுவென அறிந்துகொள்வதுமன்றி, இயேசுமகராஜாவின் கொடியின் கீழ் தாங்களே சேவகராமர்ந்து, வாக்குப்பண்ணிக்கொள்ளுகிறார்கள். இப்பிரமாணத்தைச் சரியாய் நிறைவேற்றுவதற்கு வேண்டிய உன்னத பெலன் அருளும் தேவாவியானவருக்காகச் சபையாரும் அத்தியக்ஷரும் ஜெபிக்கிறார்கள். கர்த்தருடைய திருப்பந்தி, திருவசனமுதலிய ஞானாமிர்த திரவியங்களைத் திட்டவட்டமாய்க் கையாடி, தேவனோடு ஐக்கியமாவதினால் கிறிஸ்தவன் பிசாசின் சகல சோதனைகளையும் ஜெயித்து, கிறிஸ்துவுக்காக உத்தம சாட்சி பகருகிறவனாகிறான். திருச்சபையின் போதனை எத்தனை சிறந்தது!!

நம் சபைகளில் காணப்படுகிற குறைவுகளுக்குக் காரணம் போதனை அசட்டையென்கலாமா? ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவே, கிறிஸ்து சபை உலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது, ஆகவே, அதின் ஒவ்வொரு அங்கத்

**திட்டமான போதனை.**

தின் கடமை புறமதஸ்தரை கிறிஸ்துவின் மந்தையினண்டை கொண்டுவருவதே. இச்சத்தியத்தை "திடப்படுத்தல்" அடையும் சமயத்தில் முன் நிறுத்தி, பரி நற்போஜனம் பெறும் கிறிஸ்தவனொவ்வொருவனுடைய மனதிலாவது அழுந்தப்பதிக்கப்படுமானால், நமது சபையில் என்ன மாறுதல் காணப்படும்! உலோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டியின் இரத்தம் 'அநேகருக்காகச் சிந்தப்பட்டது மெய்யானால், அதைப் பானம்பண்ணி, கிறிஸ்துவோடு ஐக்கியமாகும் கிறிஸ்தவன் மற்றவர்களுக்காகக் கவலைப்படாதிருப்பது கூடியதா? கிறிஸ்துவின் சரீரம் பிட்கப்பட்டிருக்க, அவரின் சரீரமாகிய சபை தன்னை மற்றவர்களின் ரக்ஷிப்புக்காக ஒப்புக்கொடுக்கவும், கஷ்டங்கள் அநுபவிக்கவும் பின்வாங்கி நிற்பது தகுதியா? கிறிஸ்து சபையின் முதல் கடமை புறமதஸ்தரைக் கிறிஸ்து சபைக்குள் கொண்டுவருவதென்று நமது சபையின் அத்தியக்ஷர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க, சபையார் இதுவிஷயத்தில் அதிகக் கரிசனை இன்னும் எடுக்காதிருப்பதற்குக்காரண மென்னவாயிருக்கலாம். குருமாரும் மற்றும் ஊழியரும் நம் சபையின் நியமங்களின் கருத்தைத் திட்டவட்டமாய் அறியாதிருப்பதோ? அல்லது நியமங்களை ஏளனம் செய்து விடுவதோ? காரியம் எதுவானாலும் சரி, பிள்ளைகளும் பெரியோரும் சபையின் நியமங்களையும் அவைகளிலடங்கிய ஞானபோதனைகளையும் சரிவர அறிவது மிகவும் அவசியமே. "திடப்படுத்தல் நியமத்"தின்பேரில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இயற்றிய மூன்று நான்கு பாடங்கள் பத்திரிகையில் பிரசுரமாகும். தமிழ்க்கிறிஸ்தவர்களுக்கு இவை பிரயோஜனமாயிருக்கக் கர்த்தர் அருள்புரிவாராக.

நாளது மார்ச்சுமீ 31வ-யோடு முடிகிற வருஷ இறுதியில் நமது சங்கக்கையிருப்புத்தொகை மிகவும் சொற்பம் என்பது நண்பருக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் மாசாமாசம் செலவு சுமார் ரூ. 10000 (ஆயிரம்). மாசந்

**சங்கப் பொக்கிஷம்.**

தோறும் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான தொகை காணிக்கையாகப் படைக்கப்பட்டாலன்றி, வேலை சரிவர நடந்துவருவதற்குக் கஷ்டம் நேரிடலாம். இதுவரை நமது அவசியங்களையெல்லாம் கர்த்தர் தமது மிகுந்த கிருபையின் ஐசுவரியத்தின்படியே வழிவகைகளைக் கட்டளையிட்டிருக்கிறார். இப்போதும் நமது கண்கள் அவரையே நோக்குகிறது. நண்பரும் தேவஊழியரும் தாங்கள் சேகரிக்கக்கூடிய காணிக்கைகளை அப்போதைப்போது அனுப்பிவித்தால் மெத்த உதவியாயிருக்கும். திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்தில் சுமார் 80 குருமார் உண்டு. ஒவ்வொருவரும் நாலும் எண்கைக்குள்ளான உபதேசிமாரும், உபாத்திமாரும் சேர்ந்து மாசம் ரூ. 10 கிரமமாய் அனுப்பிவிப்போமென்று முயற்சித்தால், புறமதஸ்தருக்குள் நமது சங்கம் நடத்தும் கர்த்தருடையவேலை அட்டியின்றி நடந்துவரும். தவிரவும், பர்மா, இலங்கை, சென்னை, திருச்சி, மூனார் முதலிய இடங்களிலுள்ள நண்பர் தங்கள் வருஷாந்தரக்காணிக்கைகளை வருஷ இறுதியில் அனுப்புவதற்குப்பதிலாக ஏற்கனவே அல்லது மூன்று மாசத்திற்கொருமுறை அனுப்பிவித்தால், மெத்த உதவியாயிருக்கும். நண்பரனைவரும் இது விஷயத்தை நினைத்து ஊக்கமாய் ஜெபிக்க விரும்பி வேண்டிக்கொள்ளுகிறோம். ஜெபமே பெலன். சங்கத்திற்காக ஊக்கமாய் ஜெபிக்கிறவர்கள் தேவை. ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் கர்த்தர் தமது சபையில் கட்டளையிடுவாராக.

தேவனோடு ஐக்கியத்தைக் காப்பாற்றுவதெப்படி?

1. வேத ஆராய்ச்சியினால்,
2. ஜெபத் தியானத்தால்,
3. பரி. நற்கருணையைக் கிரமமாய் அநுஷ்டிப்பதால்,
4. தேவனுக்காக வேலை செய்வதினாலுமே.



## 16 ம் சங்கீதம்.

இவ்வருமையான சங்கீதம் என்ன சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டதோ என்று திட்டமாய்ச்சொல்ல ஏதுவில்லை. சவுல் தாவீதைப் பின்தொடர்ந்து, 1 சாமு. 26: 19.ல் கண்டபடி "நீ போய் அந்நிய தேவர்களைச் சேவி" என்று சொன்னாற்போல, "கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடி" அவனைத் துரத்தின காலத்தில், தாவீது பாடின பாட்டாயிருந்தாலும் இருக்கலாம்.

இச்சங்கீதத்திற்கு எட்டெட்டு வரியுள்ள மூன்று சரணங்கள் உண்டு. (1) வாக். 1—4; (2) வாக். 5—8; (3) வாக். 9—11. எபிரேயு தெளிவாயில்லாமைபற்றி, பலவாறாய் பாஷாந்தரம் செய்யப்பட்டிருக்கும் வாக்கியங்கள் பலவுள. புதுத்திருப்புதல் இங்கிலீஷ் வேதாகமத்தில் கண்டபடி திருப்பி, கீழே சரணம்சரணமாக அச்சிட்டிருக்கிறோம்.

(1) வாக். 1—4.

தேவனே, என்னைக்காப்பாற்றும்; உம்மை நம்பியிருக்கிறேன்.
நான்கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர்;
உம்மைப்பார்க்கிலும் எனக்கு நன்மை ஒன்றுமில்லை என்றும்,
பூமியிலுள்ள பரிசுத்தவான்களைக் குறித்து:
நான் என் முழுப்பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்கள் அவர்களே என்றும் சொன்னேன்.
கர்த்தரை விட்டு அந்நிய தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்,
அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தவுமாட்டேன்,
அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்

சங்கீதக்காரனுக்குத் தேவன் பேரிலுள்ள பிரியத்தை இவ்வாறு வர்ணிக்கிறான். கர்த்தரே என் எஜமான்; அவரே என் நன்மை; அவருடைய பக்தரே என் பிரிய தோழர்; அந்நிய தேவர்களைச் சேவிப்பது துன்பம், சேவிப்பவர்களோடு சகவாசம் பண்ணுவது வெறுப்பு, அவர்கள் பேரை உச்சரிப்பதுங்கூட தோஷம் என்று பாடுகிறார். கர்த்தரைத் தன் ஆண்டவராகக்கொள்ளும் பக்தன் கர்த்தருடைய தாசரை மாத்திரம் தன் தோழராக்குவான். "கர்த்தரே என் சகவாசம்" என்பது இச்சரணத்தின் பொருள்.

(2) வாக். 5—8.

கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்:
என் பங்கைத் தேவரீர் காப்பாற்றுகிறீர்.
நேர்த்தியான இடங்களில் எனக்குச் சீட்டு விழுந்தது,
ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்குண்டு.
எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்;
ஆம், இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் எனக்குப் போதிக்கும்.
கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்,
அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

சத்துருக்கள் எத்தனையாய்த் துன்பப்படுத்தி கர்த்தருடைய பர்வதத்தை விட்டும், அவர் சமூகம் விளங்கும் கூடாரத்தைவிட்டும் அவனைத் துரத்தியபோதிலும், சங்கீதக்காரன் அதை ஊடுருவிப்பார்த்தவனாய் "கர்த்தாவே நீர் என் பங்கல்லவா? உம்மை என்னைவிட்டுத் துரத்த யாரால் ஆகும்? இவ்வித சம்பந்தத்தைக் காப்பாற்றுகிறவரும் நீரல்லவா? தேசத்தைப் பங்குவைக்கும்படி சீட்டுப்போடும்போது, சிரேஷ்டமான இடங்கள் ஒருவனுக்கு விழுவதுபோல, நீரே எனக்குப் பங்காக விழுந்திருக்கிறீர். உம்மைத் துதிப்பேன். நீரே எனக்கு ஆலோசனைக்காரர். நீரே என் போதகர். உமது திருச்சமுகம் அடியேனைவிட்டு நீங்குமோ? எனக்கு உதவி செய்ய, நீரே என் வலது பாரிசத்தில் நிற்கையில் எனக்குப் பயமேன்? என்கிறான். உலகமெல்லாம் விரோதித்தபோதிலும், கர்த்தரைத் தன் பங்காகத் தெரிந்துகொண்டு, அவருடைய சமுகத்தில் களிகூர்ந்து மகிழுகிறவனே பாக்கியவான். இச்சரணத்தின் பொருள்: "கர்த்தரே என் பங்கு" என்பதாம்.

(3) வாக். 9—11.

ஆகையால் என் இருதயம் பூரிக்கிறது;
என் மகிமை களிகூருகிறது;
என் மாம்சமும் சுகமாய்த் தங்கும்; ஏனெனில்,
என் ஆத்துமாவை நீர் பாதாளத்திற்கு ஒப்புக்கொடீர்;
உமது பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்;
ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரிவிப்பீர்;
உமது சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்,
உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு:

யேகோவா தன் பங்காயிருக்கிறதினால், சங்கீதக்காரனுக்குண்டாகும் நம்பிக்கையும் அந்நம்பிக்கையினாலுண்டாகும் சந்தோஷமும் இச்சரணத்தில் கொண்டாடப்படுகிறது. தேவரீர் என் பங்காயிருக்க, என் இருதயம் பூரிக்காதோ? எனக்குக் கெடுதி மோசம் வருமென்றாவது, என் ஜீவனைப் பாதாளம் எடுத்து விழுங்க நீர் ஒப்புக்கொடுத்துவிடுவீர் என்றாவது, என்னை அழிவின் குழிமூடிவிட பார்த்துக்கொண்டிருப்பீர் என்றாவது நான் நினைக்கலாமோ? உமது திருமுகத்தரிசனமே ஜீவன். அதை நான் அநுபவிக்கும் வழியை நீரே எனக்குக் காட்டுகிறீர். உமது சமுகப்பிரசன்ன ஆனந்தம் பரிபூரணமன்றோ? அதுவே இன்பம்! பேரின்பம்!! நித்திய பேரின்பம்!!! உம்மோடு இவ்வித நெருங்கிய ஐக்கியத்தைத் தேவரீர் அடியேனுக்கருளுகிறது மெய்யானால், அது போதாதா? இவ்வைக்கியம் எந்நாளும் நீங்காதிருக்க, நீர் காத்துக்கொள்ள வல்லவர் என்று சங்கீதக்காரன் அகமகிழ்ந்து பாடுகிறான். "கர்த்தரே என் சந்தோஷம்" என்பது இச்சரணத்தின் பொருள்.

இயேசு சுவாமியின் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாக பரி. பேதுரு பெந்தெகொஸ்தே நாளிலும் (அப். 2: 25-28), பரி. பவுல் பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலும் (அப். 13: 35), இவ்வசனங்களை எடுத்துக்கூறினார்கள். தேவனோடு ஞான ஐக்கியத்தை அனுபவிக்கும் மனுஷன் ஒருபோதும் அழிந்துபோவதில்லை. தாவீது மரித்துப்போனதினால், ஒருவேளை இவ்வசனம் நிறைவேறவில்லையே என்று நாம் நினைக்க ஏதுவிருந்தபோதிலும், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் இது நிறைவேறுகிறது. அவர் மெய்யாகவே அழிவைக்காணவில்லை என்கிறார்கள்.

மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதற்பலனான அவ ரைப்போலவே, அவரது பக்தரும் எழுந்திருப்பார்கள். ஏனெ னில்; "தேவன் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள் ளோரின் தேவனாயிருக்கிறார். எல்லாரும் அவருக்குப் பிழைத் திருக்கிறார்களே" (பரி. லூக். 20: 38).

நித்திய பேரின்பத்தை இயேசுசுவாமியின் சமுகத்தில் சதாகாலமும் அனுபவிக்கவிரும்புகிறாயா? இப்போது அவரை உன் சகவாசமாகவும், உன் பங்காகவும், உன் சந்தோஷமாக வும் தெரிந்துகொள். அவர் நடத்துவார். அவர் காப்பார்!

என் பங்கு, வீதம், சுவாமி;
என் பாத்ரப் பங்கும் அவரே;
என்னுடைய வீதம் அவரால்
என்றென்றும் காக்கப்படும்.

## திடப்படுத்தல்.

திடப்படுத்தல் என்பது திருச்சபையில் பூர்வமுதல் அநுசரித்து வரும் ஓர் நியமத்துக்குப் பேர். கி. பி. சுமார் 400-ம் வருஷம் முதல் இப்பெயர் பல தேசங்களிலுமுள்ள கிறிஸ்து சபையில் வழங்கிவந்ததாக அறியலாம்.[1] இப்பெய ரினால் குறிக்கப்பட்ட சடங்கோ, ஆதிமுதல் திருச்சபையில் இருந்தே வந்திருக்கிறது. ஆரம்பமுதலே ஞானஸ்நானம் பெற்றவர்களனைவரும் திடப்படுத்தலும் பெற்றார்கள் என்ப தற்குப் போந்த அத்தாக்ஷி உண்டு. கைகளை வைக்குதல், தைலாபிஷேகம் செய்தல், பரிசுத்த ஆவியின் அருளுக்காக ஜெபித்தல்-இவைகளே திடப்படுதலில் அடங்கிய முக்கிய ஆசாரங்கள்.

பூர்வ திருச்சபை ஆசாரங்களையும், முறைகளையும் நன்கு மதிக்கும் சபைகளிலெல்லாம் திடப்படுத்தல் உண்டு. மலையாளத்திலுள்ள சூரியானிச் சபைகளும், ரோமன் சபை யும், அங்கிலேய சபையும் தங்கள் தங்கள் ஏற்பாட்டின்பிரகா ரம் நம் தேசத்தில் திடப்படுத்தலை ஆசரிக்கிறார்கள்.

சூரியானி சபைகளில்;

ஞானஸ்நானம் கொடுக்கும்போதே திடப்படுத்தலும் கொடுப்பார்கள்.

குருவானவரே திடப்படுத்தல் கொடுப்பார். முக்கிய சடங்கு: தைலாபிஷேகம் செய்தல்.

பரிசுத்த எண்ணெயினால் நெற்றியிலும் மார்பிலும் சிலு வையடையாளமிடுவார்

பரிசுத்த ஆவியின் வரத்திற்காகவும் ஜெபம் செய்வார்.

ஆனால் ஓர் அத்தியக்ஷரால் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த எண்ணெயைக் கொண்டு மாத்திரம் குருவானவர் அபிஷேகம் செய்யலாம்.

ரோமான் சபையில்,

அத்தியக்ஷர் மாத்திரம் திடப்படுத்தல் கொடுப்பார்.

வயது வந்த பிள்ளைகளுக்கு மாத்திரம் கொடுப்பார்.

ஏழு வயதுக்கு முன் கொடுக்கிறதில்லை.

பெற விரும்புவோர் அனைவர்மேலும் கைகளை விரிப் பார்.

பரிசுத்த ஆவியின் ஏழுவரங்களும் அருளப்பட ஜெபிப் பார்.

எண்ணெயினால் நெற்றியில் சிலுவையடையாளம் வரை வார்.

கன்னத்தில் ஓர் சிறு அடிகொடுப்பார்.

அங்கிலேய சபையில்,

அத்தியக்ஷர் மாத்திரம் திடப்படுத்தல் கொடுக்கலாம்.

பகுத்தறியும் வயசு வந்தவர்களுக்கு மாத்திரம் கொடுக் கலாம்.

தைலாபிஷேகமும் சிலுவையடையாளமும் இல்லை.

ஒவ்வொருவர் மேலும் அத்தியக்ஷர் தமது கரங்களைவைப் பார்.

பரிசுத்த ஆவியின் ஏழுவரங்களும் அருளப்பட ஜெ பிப்பார்.

மேலே காட்டிய மூன்று சபை முறைகளையும் கவனிக் குங்கால், மூன்றுக்கும் பொதுவான சிலவிஷயங்கள் உண் டென்று காணலாம்.

அவையாவன:—

1. ஞானஸ்நானத்துக்கும் திடப்படுத்தலுக்கும் சம்பந்தம்.

ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரம் திடப்படுத்தப் படுகிறார்கள்.

2. அத்தியக்ஷருக்கும் திடப்படுத்தல் பெறுகிறவர்களுக் கும் சம்பந்தம்.

அத்தியக்ஷரால், அல்லது அத்தியக்ஷர் ஆசீர்வதித்த எண்ணெயால் மாத்திரம் திடப்படுத்தல் கொடுக்கப்படு கிறது.

3. வெளியரங்கமான ஆசாரம்.

ஆசீர்வதிக்கும் முறையாக அல்லது அபிஷேகிக்கும் முறையாக கைகள் வைக்கப்படுகின்றன.

4. ஜெபம்.

பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் அருளப்பட ஜெபம் சொல்லப்படுகிறது.

இவைகளே திடப்படுத்தலிலடங்கிய முக்கிய அம்சங்கள். இது பற்பல தேசங்களில் பற்பல சபைகளில் பற்பல சடங் காசாரங்களுடன் வழங்கிவரப்பெற்றது

இவ்வாறு நடைபெற்றுவரும் இப்பூர்வ சடங்காசாரத் திற்கு வேத ஆதாரம் ஏதேனும் உண்டோ என்று கவனிப் பது நல்லது. புதிய ஏற்பாட்டைப் படித்தால், ஆதிச்சபையில் இவ்வழக்கம் தோன்றினதற்கு மூலம் அப்போஸ்தலர் நட படிப் புஸ்தகத்திலிருப்பதாகக் காணலாம்.

(i) அப். 8: 14-17. "சமாரியர் தேவ வசனத்தை ஏற் றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் கேள் விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத் திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்



களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக்கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர் கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்".

(1) சமாரியா கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத் தினால், ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் அதுபோதுமென்றி ராமல், எருசலேமிலிருந்த அப்போஸ்தலர் அவர்களைத் திடப் படுத்துகிறார்கள்.

(2) ஏழுபேரில் ஒருவரான்பிலிப்பு பரிசுத்த ஞானஸ்நா னம் கொடுத்தபோதிலும், அவர்கள்மேல் கைகளை வைத்துத் திடப்படுத்தினது அப்போஸ்தலரே.

(3) திடப்படுத்துவதற்கு அவர்கள் கையாடின சடங்கா சாரம்: கைகளை வைக்குதல்.

(4) இச்சடங்காசாரத்துடன் பரிசுத்த ஆவிக்காக ஜெபம் பண்ணுகிறார்கள். சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகி றார்கள்.

(ii.) அப். 19. 1-7. "பவுல் மேடான தேசங்கள் வழியாய் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர் களா என்று கேட்டான். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார் கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞா னஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம்பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப் பின் வருகிறவரா கிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றார்கள். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறைய பன்னிரண்டு பேராயிருந் தார்கள்.

இவ்வாசகத்தை உற்றாராய்ந்தால், இங்கும் அதே நான்கு குறிப்புகளைக் கவனிக்கலாம்.

1. ஞானஸ்நானம் பெற்றபோதே பரிசுத்த ஆவியையும் அவர்கள் பெற்றிருக்கவேண்டும் என்று பரி. பவுல் எதிர் பார்க்கிறார். பரிசுத்த ஆவியை அவர்கள் பெறவில்லைஎன்று கண்டபோது அவர்கள் இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நா னமும் பெறவில்லை என்று அநுமானிக்கிறார். முதலாவது ஞானஸ்நானம் கொடுத்து அப்பால் பரிசுத்த ஆவியைப்பற் றியும் போதிக்கிறார்.

2. அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார் என் பது தெளிவாயில்லை. ஆனால் சாதாரணமாய் பரி. பவுல் கொடுக்கவில்லை என்று 1 கொரி 1: 14-17லிருந்து அநுமா னிக்கலாம். "அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.... .....பவுல் கைகளை வைத்தான்". ஞானஸ்நானம் யார் கொடுத்தபோதிலும், பரி. பவுலே திடப்படுத்தினார் என்று பார்க்கிறோம்.

3. பரி. பவுல் கையாடின் முறை கைகளை வைக்குதலே

4. பரிசுத்த ஆவி அவர்களனைவர்மேலும் வந்தார்.

(3) எபி. 6: 1, 2. "கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசு வாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்கு தல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்துபோவோமாக".

திருச்சபையின் ஒழுங்குகளிலும், மூலோபதேசங்களி லும் இது ஒன்றாக எண்ணப்பட்டதாக இவ்வசனத்தினால் அறியலாம். திடப்படுத்தல் அப்போஸ்தலரால் ஆரம்பிக்கப் பட்டதென்பதற்கு இதே போந்த சாட்சி யென்று கல்வீன் என்பவர் சொல்லுகிறார்.

திடப்படுத்தல் என்னும் சடங்காசாரத்தைப் பற்றி புதிய ஏற்பாட்டில் திட்டமாய்ச் சொல்லியிருக்கும் பாகங் கள் இவைகளே. ஞானஸ்நானம் பெற்றதுபோல, விசுவா சிகள் பரிசுத்த ஆவியையும் திட்டமான ஓர் சமயத்தில் பெற் றதாகச் சொல்லும் வாக்கியங்கள் பலவுள. உதா. ரோ. 5:5; 8:15; 2 கொரி. 1: 21. 22; 5: 5; 1 யோ. 2: 20, 27; 3: 24 யாக் 4: 5; எபே 1: 13; 4: 30. நடபடிகள் 8: 17ஐப் பார்க் கும்போது இது அப்போஸ்தலர் கைகளை வைத்து ஜெபித்த சமயத்திலேயே சாதாரணமாய் நடந்ததாகத்தோன்றுகிறது. 2 தீமோ 1. 6ல் "நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்குஉண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" என்று பரி. பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது, தீமோத்தேயு திடப் படுத்தல் பெற்ற சமயத்தையே குறிப்பிடுகிறார் என்று நினைக் கலாம்.

இவ்வாறு புதிய ஏற்பாட்டு ஆதாரங்களைப் படித்தால், ஞானஸ்நானத்தோடு கூட பரிசுத்த ஆவிக்காக கைகளை வைத்து ஜெபிப்பது அப்போஸ்தலர் காலத்தில் ஸ்தாபிக்கப் பட்ட ஓர் வழக்கமாயிருந்ததென்று அனுமானிக்கலாம். எண் ணெயால் அபிஷேகம் பண்ணுவது அப்போஸ்தலர் காலத்தில் திடப்படுத்தல் முறைமையில் சேர்ந்த ஓர் சடங்காயிருந்த தாகத்தோன்றவில்லை. பரி யோவான் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளிலிருந்து (1. யோவா .2: 20 27) இச்சடங்கு பின்னால் சபையில் தோன்றியிருக்கவேண்டும் என்று உவெஸ்ட்காட் அத்தியக்ஷர் கூறுகின்றார்.

அப்போஸ்தலர் காலத்தை அடுத்த பின்னான காலத்தின் வழக்கத்தையறிய போதுமான நூல்களில்லை. கி. பி. 150-க்கு முன் யெழுதப்பட்ட நூல்களொன்றும் இல்லை ஆனால் கி. பி. 300-ம் வருஷத்திற்குள்ளாக ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமுள்ள சபைகளனைத்தும் திடப்படுத்தலைச் சாதாரணமாய்க் கைக்கொண்டுவந்தன என்பதற்குத் தெளிவான அத்தாக்ஷிகளுண்டு.

கி. பி. 193-ல் வட ஆப்பிரிக்காவிலிருந்த தேர்தூல்லியன் என்பவர் ஸ்நானத்திலிருந்து கிறிஸ்தவர்களாக நாங்கள் வெளியேறினபின் எங்களுக்குப் பரிசுத்த தைலாபிஷேகம் செய்கிறார்கள். அப்பால் எங்கள்மேல் கையைவைத்து பரிசுத்த ஆவிக்காக வேண்டிக்கொண்டு ஆசீர்வதிக்கிறார்கள். ஆத்துமா பாவக்கறையிலிருந்து கழுவப்படும்படி சரீரம் கழுவப்படுகிறது. ஆத்துமாபிரதிஷ்டை பண்ணப்படும்படி சரீரம் அபிஷேகம் பெறுகிறது. ஆத்துமா பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப்படும்படியாக சரீரத்தின்மேல் கைகள் வைக்கப்படுகிறது" என்றெழுதுகிறார்.

இதே காலத்தில் பிரான்ஸ் தேசத்திலிருந்த ஐரேனியஸ் என்றவரும் இதே சாட்சி கொடுத்திருக்கிறார்.

கி. பி. 250ல் கார்தேஜ் நகர் அத்தியக்ஷராயிருந்த சிப்பிரியன் என்பவர் ஞானஸ்நானத்தில் பாவமன்னிப்பும் மறுஜனனமும் உண்டாகிறதென்றும், பரிசுத்த ஆவியின் வரமின்றி மறு ஜெனனம் பூரணப்படுகிறதில்லையென்றும், பரிசுத்த ஆவியின் வரம் கைகளை வைக்குதலினால் கிடைக்குமென்றும் பல நிருபங்களிலும் தெளிவாய்ச்சொல்லுகிறார். ஞானஸ்நானத்திற்கும் திடப்படுத்தலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருந்தபோதிலும், இரண்டும் வெவ்வேறான சடங்குகளாகப் பாவித்துப் பேசுகிறார். பரிசுத்த ஆவிக்காகச்செய்யும் ஜெபமும், நெற்றியின்மேலிடும் சிலுவையடையாளமும், கைகளை வைக்குதலும், சமாதான முத்தமும் இம்முறையில் சேர்ந்தவைகளாயிருந்ததென்று தோன்றுகிறது.

கி. பி. 350—430ல் பரி. அகுஸ்தீன் அபிஷேகம் ஆசாரியரைப் பிரதிஷ்டை செய்வதற்கடையாளமாகையால், திடப்படுத்தலில் செய்யும் தைலாபிஷேகம் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் "ராஜரீக ஆசாரியக்" கூட்டத்தைச் சேர்ந்தவனென்பதற்கடையாளம் என்கிறார். மேலும் அப்போஸ்தலராவது, அத்தியக்ஷர்களாவது பரிசுத்த ஆவியை அளிக்கிறதில்லையென்றும், தேவனை நோக்கி ஜெபிப்பதே அவர்கள் செய்வதென்றும் வற்புறுத்திப் பேசுகிறார்.

கி. பி. 342—420. அதே சமயத்திலிருந்த ஜெரோம் என்பவருடைய நூல்களைப் பார்வையிடும்போதும், திடப்படுத்தல் சாதாரணமாய்ச் சபைகளெங்கும் ஆசரிக்கப்பட்டதென்றும், கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் எழுவரங்களுக்காகவும் ஜெபம் செய்யப்பட்டதென்றும், பரிசுத்த எண்ணெயினால் நெற்றியில் சிலுவையடையாளமிட்டு, அபிஷேகம் பண்ணுவது திடப்படுத்தலோடு சேர்ந்த ஓர் சடங்காயிருந்ததென்றுங் காண்கிறோம். பரிசுத்த ஆவியின் எழு வரங்களுக்காகவும் செய்யப்பட்ட ஜெபம் நமது ஜெப புஸ்தகத்திலிருக்கும் ஜெபமே.

சீர்திருத்தல் காலம் வரைக்கும் அபிஷேகம், கைகளை வைக்குதல், பரிசுத்த ஆவிக்காக ஜெபம் இம்மூன்றும் திருச்சபையெங்கும் திடப்படுத்தல் முறையின் முக்கிய அம்சங்களாயிருந்தன. போதுமான அத்தியக்ஷர் இல்லாத கஷ்டத்தினாலோ, வேறே ஏது காரணத்தையிட்டோ, கிரேக்க சபையினர், கைகளை வைக்குதலைத் தள்ளிவிட்டு, அத்தியக்ஷர் ஆசீர்வதித்த எண்ணெயினால், குருவானவர் அபிஷேகம் பண்ணுவதைத் திடப்படுத்தல் ஆசாரமாக்கிக்கொண்டார்கள்.

ரோமைச் சபை. எல்லாபேரிலும் கையை உயர்த்தி, அத்தியக்ஷர் ஜெபிப்பது கரங்களை வைக்குதலுக்குச்சரி என்று ஏற்படுத்தி, அபிஷேகத்தையும் பரிசுத்த ஆவிக்காக ஜெபத்தையும் திடப்படுத்தல் சடங்கின் முக்கியகுறிப்புகளாக நியமித்துக்கொண்டார்கள்.

இங்கிலாந்து திருச்சபை ரோமை அதிகாரத்தை விட்டுப்பிரிந்து சுயாதீனமானபோது, மற்றும் அநேக வீண சடங்காசாரங்களையும் தப்பு உபதேசங்களையும் தள்ளினதுபோல திடப்படுத்தலைத் தள்ளிவிடாமல், அப்போஸ்தலர் சபை பழக்கத்திற்கு இசைவாய் இதை மாற்றினார்கள். அக்காலத்தில் செய்யப்பட்ட மாறுதல்களாவன:—

1. இடையில்தோன்றின ஆசாரமாகிய எண்ணெய் அபிஷேகம், சிலுவையடையாளமிடுதல் இவை அகற்றப்பட்டன.

2. கைகளை வைக்குதலும் ஜெபிப்பதுமே திடப்படுத்தலின் பிரதான அம்சங்களாயின.

3. சபையின் பிரதான குருவாகிய அத்தியக்ஷருக்கும் நற்கருணைக்காரர் ஒவ்வொருவருக்கும் நடப்படுதல் மூலமாய் பூர்வமுதல்-அபிஷேகத்தின் மூலமாயாகிலும் சரி, அபிஷேகத்தில் உபயோகித்தஎண்ணெயின் மூலமாயாகிலும் சரி-சம்பந்தமுண்டாயிருந்ததுபோல இனிமேலும் அத்தியக்ஷரே இம்முறையைக் கையாடும்படி நியமித்தார்கள்.

4. அப்போஸ்தலர் செய்தது போல, அத்தியக்ஷர் "ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் தமது கையை வைக்க வேண்டும்" என்று ஏற்படுத்தினார்கள். (ரூபிரிக் பார்க்க).

5. பரிசுத்த ஆவியின் வரத்திற்காக திருச்சபையின் ஜெபத்தையும் ஆசீர்வாதத்தையும் பெறுகிறவர்கள் அதற்காக ஏற்றபடி ஆயத்தப்படத்தக்கதாக "திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் அதினாலே பக்தி விருத்தி அடையும்படி விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துகற்பனைகளையும் பாடமாக்கி, ஞானஉபதேச வினாவிடையில் அடங்கியிருக்கிற கேள்விகளுக்கு உத்தரவு சொல்லுகிறவர்களே யல்லாமல், மற்றவர்கள் திடப்படுத்தலைப் பெறக்கூடாதென்று கட்டளையிட்டார்கள்.

6. ஞானஸ்நானத்தில்அருளப்பட்ட ஆவியின் வரம் இங்கே பூரணப்படுகிறபடியால், ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்ட வாக்குகள் புதுப்பிக்கப்பட்டு, ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் என்று நியமித்தார்கள்

திடப்படுத்தலின் சரித்திரத்தை இம்மட்டும் சவிஸ்தாரமாய்க் கூறினோம். இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்திருக்கிற நாம் ஆசரித்து வரும் இம் முறை எவ்வளவு பூர்வ அதிகாரமுள்ளதென்று கண்டோம். கிறிஸ்துவுக்குப்பின் 16 நூற்றாண்டுகளாக உலகமெங்குமுள்ள கிறிஸ்து சபை அனுசரித்து வந்த இப்பரிசுத்த ஆசாரத்தை சீர்திருத்தல் காலத்தில் நமது சபை தள்ளிவிடாமலிருந்தது தேவச் செயலே. அநேக சதாப்தங்களாகக் கூடிய பலவித சடங்காசாரங்களையும் அதை விட்டகற்றி, சகல மார்க்காசாரங்களுக்கும் ஊற்றும் உறைவிடமுமான பரிசுத்த சுவிசேஷத்தைக் கொண்டு அதையும் சுத்திகரித்து, அப்போஸ்தலர் காலத்து கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாத காரணமாயிருந்த இவ்வாச்சாரம் எக்காலத்துக்கிறிஸ்தவர்களுக்கும் பக்தி விருத்திக் கேதுவாயிருக்கத்தக்கதாக அதைச் சபையில் நிலைநிறுத்தினதற்காக சபாநாயகரைத் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.



லூத்தரன் சபையார் திடப்படுத்தலை ஆசரிக்கிறார்கள். ஆனால் குருவானவரே கைகளை வைத்து, ஆசீர்வதித்துத் திடப்படுத்துகிறார். ஆராதனையில் பரிசுத்த ஆவிக்காகச்செய்யும் ஜெபம் அத்தனை பிரதானமாக விளங்கவில்லை. கேள்விகளில்: வேத வசனத்தைச் சுத்தமாய்ப்போதித்து, பரிசுத்த ஞான திரவியங்களைச் சரியாய்ப் பரிமாறுகிற சுவிசேஷ லூத்தரன் சபையில் உன் மரணபரியந்தம் நிலைத்திருந்து, கர்த்தருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்ய வாக்குக்கொடுக்கிறாயா? என்பது ஒன்று. ஆகையால் லூத்தரன் சபையாருடைய திடப்படுத்தலை அப்போஸ்தல சபை திடப்படுத்தல் என்று சொல்ல ஏதுவில்லை. அந்தத் திடப்படுத்தலை நாம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆனால் திடப்படுத்தலின் அவசியத்திற்கும் அதின் பூர்வ ஏற்பாட்டிற்கும் அவர்கள் சாட்சியாயிருக்கிறார்கள். லூத்தரன் சபை அத்தியக்ஷர் ஒழுங்கை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் திடப்படுத்தலும் கிரமத்திற்கு வந்துவிடும் என்பதற்கையமில்லை.

தமிழ் நாட்டில் அமெரிக்கன் மிஷன்கள், லண்டன் மிஷன், உவெஸ்லியன் மிஷன், பாப்றிஸ்து மிஷன்கள், ப்ரீ சர்ச்சுமிஷன் முதலிய மிஷன்களில் திடப்படுத்தல் இல்லை. இம்மிஷன்களை அனுப்பின சபைகள் இங்கிலாந்து சபை ஐக்கியத்தை விட்டு நீங்கிக்கொண்டு, அத்தியக்ஷர் முறையை விட்டு விட்டபோது, திடப்படுத்தலையும் தள்ளிவிட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் தள்ளிவிட்டது அவர்களுக்கு நஷ்டம் என்றெண்ணுகிறோம். ஆகிலும் திடப்படுத்தல் என்னும் நியமமும், அத்தியக்ஷர் கைகளை வைத்து ஜெபிக்குதலும் இல்லாதபடியால், பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு அருளப்படவில்லை என்று நாம் சொல்வது சரியல்ல. நடபடி புஸ்தகத்திலுங்கூட அப்போஸ்தலர் கைகளை வைத்து ஜெபிக்கும்போது மாத்திரம் ஆவியானவர் இறங்கினதாகச் சொல்லப்படவில்லையே. பெந்தெகொஸ்தே நாளிலும், அதற்கப்பால் மேலறையிலும், கொர்நேலியுவின் வீட்டிலும், சவுலுக்கு தமஸ்கு பட்டணத்திலும் வேறு விதமாயும் ஆவியானவர் வந்தாரே. இதை நினைத்தவர்களாய், மற்றவர்களை நாம் நியாயம் தீர்க்காதிருப்போமாக. அப்போஸ்தலரால் ஆரம்பிக்கப்பட்டு, திருச்சபையில் 19 நூற்றாண்டுகளாக பலபல விதமாய் ஆசரிக்கப்பட்டு, தேவ கிருபையில் நமது சபையில் வழங்கிவரும் இப்பரிசுத்த ஆசாரம் நமது ஜனங்களுக்கு மிகுந்த ஆவிக்குரிய நன்மைகளை விளைவிக்கும் சாதனமாக இருக்கும்படி கருத்தாயிருப்போமாக.

## தெலுங்குநாட்டுக் கடிதம்

கடந்த ஜனுவரிமீ 13உ தோணகல் ஆற்றில் சபையின் சிறப்பும் பெரிதுமான கூட்டத்தின் மத்தியில் மகாகனம் தோர்ணக்கல், சென்னை அத்தியக்ஷர்களால் 55 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதென்று முன் ஒரு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன்பின் 3 தடவைகளாய் தேவுனி சங்கீஷா குளத்திலும் தோணக்கல் கோவிலுக்குப்பக்கத்திலிருக்கும் ஒரு தண்ணீர்த் தொட்டியிலுமாய் 29 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். இவர்களில் மிச்சமானபேர் ஒட்டர் எருக்கல ஜாதியிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள். இன்னும் 25 பேர் கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற மாதத்தில் ஞானஸ்நானம் பெற ஆயத்தப்படுகிறார்கள். இவர்களெல்லாரையும் நினைத்து ஜெபிக்கக்கேட்கிறேன். இந்த ஜனங்கள் சாதாரணமாய் அநேகக்கஷ்டவேலை செய்கிறவர்கள். அதிகமாய்ச் சம்பாதிக்கிறவர்கள். சிலவேளைகளில் தினசரி தலைக்கட்டுக்கு சிலரூபாய்கள் வீதாச்சாரப் படிகூட சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். எப்படிச் சம்பாதிக்கிறார்களோ அவ்விதமாகவே பணத்தைச் செலவிட்டழிக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். பணம் வந்தால் பானை பெரிது; பணமுடியுமட்டும் பன்றியடிப்புக்கு முடிவிராது. கள்ளுக்கும் சாராயத்துக்குமோ கணக்கிராது. இப்படிச் செலவழிப்பதால், அவர்களுடைய பெரும் சம்பாத்தியத்துக்கும் மிகுதியாய்ச் செலவிட்டு, வறுமைப்படுவதாலோ, அல்லது ஜாதித்தொழிலாய்க்கொண்டோ திருடவும் கொள்ளையிடவும் ஏற்படுகிற ஜனங்கள். இவர்களுக்குள்ளிருந்து கிறிஸ்தவர்களாய் வந்திருக்கும் இச்சனங்களில் சிலர் கட்டோடே மதுபானத்தை நீக்கியிருக்கிறார்கள். பலர் அதிகமாயும் அடிக்கடியும் குடியாதபடி தடுத்தும் இன்னும் சிலர் படிப்படியாய் நிறுத்தியும் வருகிறார்கள். இவர்கள் யாவரும் முற்றாய்க்குடிவெறியை நிறுத்திவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இவர்களுக்காக ஜெபிக்கக் கேட்கிறேன்.

தேவுனி சங்கீஷாவில் கிறிஸ்தவர்களாயிருக்கும் 41 பேரைத்தவிர, ஒரு துலுக்கமதத்தைச்சேர்ந்த பெரிய மனுஷியும் அவளுடைய மகளும், மார்க்கத்தில் சேராத பெற்றோரான ஒட்டரில் சிலரின் பிள்ளைகளும் ஜெபத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இதுவுமன்றி, அவ்வொட்டர்கள் யாவரும் (உத்தேசம் 50 பேர்) மார்க்கத்துக்குவர கிட்டத்தட்ட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எப்படியும் சீக்கிரமாய் வந்துவிடுவார்களென்று நம்புகிறேன். மூலக்கலப்பல்லியிலும் சிலவீட்டார் வர ஆயத்தமாயிருக்கிறார்கள். இவர்களுக்கு அவ்வூர்க் கர்ணமே பெரியதடை. தாசில்தார் பஞ்சரிலிருந்து சில ஒட்டர்கள் மார்க்கத்தில் சேருகிறோம் என்று வந்தார்கள். விசாரித்தபின், அவர்கள் வந்த நோக்கம் நல்லதல்லாததாலும், அவர்கள் ஒரு பாகத்தார் முன்வந்து போனவர்களானதாலும், பின்னால் பார்த்துக்கொள்ளுவோம் என்று சொல்லியனுப்பிவிட்டேன்.

S. P.

## "எல்லாம் போட்டு விட்டாள்"

லூக். 21·4.

இந்த மாது சிரோன்மணி யார்? ஒரு ஏழை விதவை. ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியில் தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதை ஆண்டவர் பார்த்தார். அப்பொது அதில் ஒரு ஏழை விதவை இரண்டு காசு போட்டாள். அதைப் பார்த்த ஆண்டவர் எல்லாரைப்பார்க்கிலும் அவள் அதிகமாய்ப்போட்டாள்; அவர்கள் எல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார். இந்த ஏழை விதவை எல்லாம் போட்டு விட்டாள்; ஆயக்காரனாகிய சகேயு தன் ஆஸ்திகளில் பாதியைக்கொடுத்தான்; யூதர்கள் தங்கள் வரத்திலெல்லாம் பத்திலொன்று கொடுத்தார்கள். நாம் கொடுக்கவேண்டிய காணிக்கை எவ்வளவென்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறதைப் பார்ப்போமாக.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறதென்னவென்றால்:—உங்கள் தான தர்மமானது லோபத்தனமாய்க்கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கவேண்டும்; சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்; இந்தத் தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே, சம்பூர்ணபலனுள்ளதாயும் இருக்கும் என்கிறார். ஆகையால் நாம் உற்சாகமாய்க் கொடுப்போமாக.

அதே அப்போஸ்தலன் வேறோர் இடத்தில், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் என்றும்; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே, ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே என்றும் சொல்லுகிறார்.

நமக்காகத் தம்மை வெறுமையாக்கி தம்முடைய தலை சாய்க்கமுதலாய் இடமில்லாமல் நம்மைத் தரித்திரராக்கிக் கொண்ட தேவகுமாரனுடைய நாமம் மகிமைப்படவும் அவருடைய ராஜ்யம் விர்த்தியாகவும் நாம் எவ்வளவு காணிக்கை படைக்கவேண்டுமென்று, தேவாவியானவர் தாமே நம் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வெளிப்படுத்துவாராக. தோர்ணக்கல் மிஷனில் பல அவசியங்கள் உள. வட பாகத்தில் சுவிசேஷ ஊழியஞ்செய்ய ஓர் மிஷனெரி தேவை. சாதாரண செலவுகளுக்குப்போதாத பொருட் சகாயம் வேண்டும். நாம் வாக்களித்திருக்கும் பெரிய ஆலயம் சீக்கிரம் கட்டப்படவேண்டியது. அருள் நாதர் நான் உனக்காக என் ஜீவனைக்கொடுத்தேன், நீ எனக்காகச் செய்கிறதென்னவென்று கேட்கிறார். நாம் கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நம்மால் இயன்றதை உடனே செய்வோமாக.

J. S. C.

---

## தேவை.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்கு ஓர் லிகிதர் (clerk) தேவை. ஸ்கூல் பைனல் (School Final) பரீக்ஷையில் நல்லமார்க்குப் பெற்றவரும், இங்கிலீஷிலும் தமிழிலும் நல்ல கையெழுத்து எழுதக்கூடியவரும், கணக்குப்பார்க்க லாயக்குள்ளவரும், டைப், ஷார்ட்ஹாண்டு (Type-writing & Short hand) பயிலுவதற்குத் திறமையுள்ளவருமாயிருக்கவேண்டும். சம்பளம் முதலியவை திறமைக்குத் தக்கதாயிருக்கும். மகாகனம் அத்தியக்ஷரவர்களை பாளையங்கோட்டையில் முகருபில் பார்த்து, நியமுகம் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்பிளிக்கேஷன்கள் ஜூன்௴ 15௳ வரை பெற்றுக்கொள்ளப்படும்.

---

இந்திய மிஷனெரி சங்கத்திற்காக ஊக்கமாய் ஜெபித்துவரும் நண்பரில் ஒருவரை கடந்த மாசம் 28௳ மரணத்தினால் இழந்துவிட்டோம். அவர்கள் சுமார் 27 வருஷங்களாய் திருநெல்வேலிப் பட்டணத்திலும் அதைச்சுற்றிலுமுள்ள பட்டிதொட்டிகளிலும் அரும் பிரயாசத்துடன் சுவிசேஷ வேலைசெய்து, பலர் கிறிஸ்துவின் அன்பை அறியும்படி வழி நடத்துவதற்குக் கர்த்தரின் கரங்களில் கருவியாயிருந்ததுமன்றி, காலேஜ் ஹாஸ்டல் மாணவரின் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு உத்தம துணையாகவுமிருந்தார்கள். இவர்கள் கிராமப் பள்ளிக்கூடத்தில் முதலாய் நல்ல கல்வி பயிலாதவர்களானபோதிலும், கர்த்தருக்கு தங்களை மனப்பூர்வமாய்ப் பிரதிஷ்டை செய்து, அவருக்கென்றே உழைத்து வந்ததால், கர்த்தர் அவர்களை வல்லமையாய் உபயோகித்தார், கற்றோரும் மற்றோரும் அருமைபெருமையுடன் போற்றிவந்தார்கள். கிராமாந்திரங்களிலிருக்கும் வாலிபருக்கும் பட்டணவாசிகளுக்கும் சிறந்த மாதிரியே! துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகளுக்கு கர்த்தர் தம் பிரசன்னத்தால் ஆறுதல் கட்டளையிடுவாராக.

**பி.டி.எஸ். சாமுவேல் உபதேசியார்.**

---

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும்.

Editor: The Secretary I. M. S. T.

PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

APRIL, 1915 Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR O. MADRAS 7 - DEC 1915

Vol. XII. No. 4] ஏப்பிரல்௴ 1915 [விலை பை 3

CONTENTS

| | |
|---|---|
| Editorial Notes | 25 |
| An old parable in a new garb | 26 |
| Studies in the Psalms | 27 |
| From the Singerani Mission | 28 |
| I must abide in your's house | 30 |
| Which is first? | 31 |

பொருளடக்கம்

| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் | 25 |
| புது ஆடை பூண்ட ஓர் பழைய உவமை | 26 |
| சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் | 27 |
| சிங்கரேனி மிஷன் | 28 |
| இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் | 39 |
| முதலாவது எது? | 31 |

## பத்திராதிபர் குறிப்புகள்.

**சங்கசம்பந்தமாக 12-வது வருஷ கணக்கு.**

மார்ச்சு௴ 31௳யோடு முடிவான சங்கத்தின் பனிரண்டாவது வருஷத்திற்கு வந்திருக்கும் மொத்தக் காணிக்கை ரூ 13,000. இது கடந்த வருஷ வரவைப்பார்க்கிலும் சுமார் ரூ 3,100 குறைவு. வருஷத்தில் மொத்தச் செலவு ரூ 13,250. செலவைவிட வரவு சுமார் ரூ 250 கம்மி. பதினோராவது வருஷம் ஓர் விசேஷித்த வருஷம். எப்படியெனில், பத்தாவது வருஷத்தைப் பார்க்கிலும் அந்த வருஷம் ஜாஸ்தி வரவு ரூ 4,250. பெரு வெள்ளக் கஷ்டத்தினாலும் யுத்தப்பலனான ஏற்றுமதி குறைவினாலும் பல சபைகளில் கஷ்டம் உண்டாகியிருந்தபோதிலும், ஜனங்கள் இவ்வளவு உற்சாகமாய் மிஷனெரி ஊழியத்திற்குக் கைகொடுத்துதவிபுரிந்திருப்பதை யறிந்து கர்த்தருக்கு முழு மனதோடு துதி செலுத்துகிறோம். அன்ரூமரே என்னும் பக்தன் மிஷனெரி ஊழியத்தின் திறவுகோல் குருமார் கையிலிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவ்வாறே ஓர் குருவானவரின் ஊழியத்தை அவரது சபையார் புறமதஸ்தரைகிறிஸ்து ரக்ஷகரைப்பற்றி அறியும் அறிவுக்குக் கொண்டுவருவதிலிருந்தும் புறதேச மிஷனெரி ஊழியத்திற்கு ஜனங்கள் மனப்பூர்வமாய்க் காணிக்கை படைப்பதிலிருந்தும் ஒருவாறு அளக்கலாமென்று இன்னொரு பக்தன் கூறுகிறார். குருமார் ஒவ்வொருவரும் இந்த அளவைவைத்து, தங்களைப் பரிசோதனை செய்வார்களானால் எத்தனை மாட்சிமையாயிருக்கும்!! நமது சங்கத்தின் பெலன் ஜெபம். நண்பர் யாவரும் அதிக ஊக்கமாய் ஜெபித்துவர அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

**நன்கொடை சாமான்.**

கடந்த சில வருஷங்களாக நடந்து வருவதுபோல, நாளது வருஷத்திலும் நமது சங்க வருஷாந்தரக்கூட்டத்தினத்தன்று நன்கொடை ஜாமான் விற்பனை (Fancy Sale) நடத்தப்படும். இதினால் கிடைக்கும் பணத்தைக்கொண்டு, தோர்ணக்கல்லில் நாலு பிள்ளைகளை ஆதரித்துவருகிறோம். அப்பிள்ளைகளை இன்னும் ஆதரிக்கவும், கூடுமானால் இன்னும் சில பிள்ளைகளின் செலவைத்தாங்கவும் விற்பனையினால் இடமுண்டாகத் தக்கதாக முயற்சிப்போமாக. சாதாரணச்சட்டைகள், பாவாடை ரவிக்கைகள், கைலேஞ்சுகள் ஞானஸ்நான உடுப்புகள், கிண்ணிப்பெட்டிகள், பாய்கள் விசிறிகள், நார்க்கயிறுகள், கருப்புக்கட்டி, பலகாரம், காய் கனிகள் முதலிய சாமான்களை ஏற்கனவே ஆயத்தப்படுத்தும்படி நண்பருக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

---

கடந்த ஐந்து வருஷங்களாகப் பத்திரிகையின் மானேஜராகவிருந்து, அருந்திறமையுடன் பத்திரிகையின் விர்த்திக்காக உழைத்து, சுய ஆதரவு நிலைமைக்குப் பத்திரிகையைக் கொண்டுவந்திருக்கும் கனம் V. S. சாலிசன் அவர்கள் விஷஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, நாளது௴ 17௳ சனிக்கிழமை பகல் ஒரு மணிக்குத் தங்கள் ஜீவ ஓட்டத்தைக் கர்த்தருக்குள் முடித்தார்கள். "உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு. அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்." "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப்பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக" துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் மற்றும் இனஜன பந்துக்களுக்குக் கர்த்தர் ஆறுதல் கட்டளையிடப்பிரார்த்திப்போமாக.

**பத்திரிகை மானேஜர்.**

"இன்றைக்கு உன் வீட்டில் நான் தங்கவேண்டும்" என்ற தலைப்பின் கீழ்வரும் பிரபந்தம் சர்க்கார் உத்தியோகம் வகித்துவரும் நம் நண்பரில் ஒருவர் எழுதியது. நமது

**கிராம ஆலயங்கள்.**

அருமையான சங்கத்தின் காரியம் தங்களது சொந்தக்காரியம்போல இவர்கள் எப்போதும் பாராட்டி வருகிறார்கள் என்பது நன்றியறிதலான விஷயமே. இவர்கள் அநுதாபம் நாளுக்கு நாள் விருத்தியாகிவருகிறது. தம் சிநேகிதர், மற்றும் கிறிஸ்தவருக்குச் சங்க விஷயங்களை அதிக அபிமானத்துடன் எடுத்துக்காட்டி வருகிறார்கள். மற்றும் இடங்களுக்குப்போய், கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்றுவரும் உத்தியோகஸ்தர் மிஷனெரி ஊழியத்தில் அக்கரைகொள்ளும்படி அடிக்கடி அனல் மூட்டிவிடுவதுண்டு. கடந்தமீ இவர்கள் திருச்சிறுப்பள்ளியில் செய்த ஊழியத்தின் பலனாக கிராம ஆலயங்கள் கட்டுவதற்கென்று மூன்று சகோதரர் தனித்தனியே ரூ 300 வாக்கு அருளினதுமன்றி, ஒருவர் தம் காணிக்கையைப் படைத்திருப்பதாகவும் அறிந்து கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். இவர்களுடைய சிறந்தமாதிரி மற்றும் சகோதரரையும் ஆட்கொள்ளுவதாக. நீ ஆசீர்வாதமாயிரு, நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்ற வாக்குத்தத்தம் நெல்லையின் பிள்ளைகளின் இருதயத்தில் ஆழமாய்ப்பதிய கர்த்தர் அநுக்கிரகம் புரிவாராக.

---

## புதுஆடை பூண்ட ஓர் பழைய உவமை.

அமெரிக்கா ஐக்ய மாகாணத்திலுள்ள அத்திய பரிபாலன சபையைச் சேர்ந்த மெம்பர்கள் ஒரு கோடியே 2½ லட்சம் பேர். இந்தச் சபையைச் சேர்ந்த புறதேச மிஷன்கள் 28. இவை உலகத்தின் நாலு பாகங்களிலும் சிதறியிருக்கின்றன. இந்த 28 மிஷன் பாகங்களிலுமுள்ள புறமதஸ்தர் பத்து கோடி ஜனங்கள். இத்தனை ஏராளமான ஜனங்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்பது அச்சங்கத்தாரின் பேராவல். ஆகவே, புறதேச மிஷன் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, அவ்வேலையைக் கண்காணிக்கவும் நடத்தவும் காரியதரிசிகளை நியமித்தார்கள். பின்னர் அவர்கள் சபையாரைப் பார்த்து: பிறதேச மிஷன் வேலைக்காக ஜெபியுங்கள்; மிஷனெரிமார் ஆதரிக்கப்படுவதற்காகப் பண உதவி புரியுங்கள். உலகத்தின் நாலு பாகங்களிலும் சுவிசேஷ வேலை செய்யும்படி அநுகூலமான கதவு திறக்கப்பட்டிருக்கிறது. நமது மிஷனெரிமார் பலதேசங்களுக்கும் போய் தங்களை இவ்வூழியத்துக்கென்று பிரதிஷ்டை செய்து வேலை நடப்பிக்கிறார்கள். அவர்களை ஆதரிப்பது நமது கடமை. ஆகையால் நீங்கள் உங்கள் "பணத்தினால் அவ்வேலையைத் தாங்குங்கள்" என்று கேட்டார்கள். அவர்களோ ஒருமனப்பட்டவர்களாய், பற்பல சாக்குப்போக்குச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஒருவன்: நான் புதிதாய் ஒரு வீட்டுக்கு நிலம் வாங்கியிருக்கிறேன், எனக்கு மன்னிக்கவேண்டும் என்றான்.

இன்னொருவன்: நான் ஒரு ருட்சவண்டி வாங்கினேன். எனக்கு மன்னிக்கவேண்டும். தவிரவும், என் குடும்பத்திலும் உதவி பெறவேண்டியவர்கள் பலரிருக்கிறார்கள் என்றான்.

மற்றொருவன்: நான் இப்போதான் விவாகம் செய்தேன்; என் செலவுக்குப் போதுமானதுதானிருக்கிறது; எனக்கு மன்னிக்கவேண்டும் என்றான்.

இன்னொருவன்: நான் பல சங்கங்களுக்கும் உதவி செய்கிறேன். புறதேச மிஷன் வேலையைப் பார்க்கிலும் அவைகள் தான் அதிக முக்கியமென்றெண்ணுகிறேன் என்றான்.

வேறொருவன்: நமது சபையில் போதுமான பணமிருக்கிறது; அதைக் கொண்டே நடத்தலாம். என்னால் கொடுக்கமுடியாது என்றான்.

இன்னொருவன்: நமது சபையில் புது ஆலயங்கட்டினதில் இன்னும் கடனிருக்கிறது. அதைக் கொடுத்துப்போட்டல்லவா மற்றவைகளுக்குக் கொடுப்பதைப்பற்றி யோசிக்கவேண்டும் அதன்பின் நமக்கு நேர்த்தியான ஒரு கீதவாத்தியப் பெட்டியும் இன்னும் சிலகாரியங்களும் வாங்கவேண்டும். இவைகளெல்லாம் தீர்ந்தபின் தருகிறேன் என்றான்.

ஒருவன்: நமது குருமார் மற்றும் தேவ ஊழியர் ஆதரவுக்கே போந்த பணமில்லையே. ஆதலால் புறமதஸ்தரைப் பற்றி இப்போது யோசிக்க இடமில்லை என்றான்.

மற்றொருவன்: நம்முடைய சொந்தத் தேசத்திலே ஏராளமான அஞ்ஞானிகளிருக்கிறார்கள். இவர்களைக் குணப்படுத்தும்படி வேலைசெய்யவேண்டியதுதான் மிகவும் அவசியம். இவர்களை விட்டுவிட்டு கடலுக்கப்புறத்திலுள்ள அஞ்ஞானிகளைக் குணப்படுத்துவது எனக்கு நியாயமாய்த் தோன்றவில்லை என்றான்.

இப்படியாக எல்லாரும் போக்குச்சொல்ல ஆரம்பிக்கவே, காரியதரிசிகள் யாதும் செய்ய ஏலாமல், இதைப்பற்றிச் சங்கத்துக்கு அறிக்கை செய்தார்கள். ஆண்டவர் இதைக் கேள்விப்பட்டு, அவர்களைப் பார்த்து: நீங்கள் திரும்பி, வீடுகளுக்கும், கடைகளுக்கும், ஆபீசுகளுக்கும்போய், அவர்களுக்கிருக்கும் செல்வமெல்லாம் என்னுடையது. என்னுடைய ராஜ்ஜியத்தைப் பிரஸ்தாபிக்கவே அதை செலவழிக்கவேண்டும். அதற்கு வேண்டிய பணம் கொடுக்கும்படி சொல்லுங்கள் என்று அனுப்பினார்.

காரியதரிசிகள் போய் பணஞ்சேகரித்ததில், சபையார் ஒவ்வொருவரும் சராசரி வாரத்துக்கு ஒரு அணா மாத்திரம் கொடுத்ததாகவும், அவர்கள் அவ்வளவுதான் கொடுக்கக்கூடுமென்று நினைக்கிறதாகவும், இவ்வளவு வருமானத்தைக் கொண்டு வேலையை நடத்தமுடியாதென்றும் சொன்னார்கள்.

ஆண்டவர் மிகுந்த கோபமூண்டவராகி, என் சீஷர் என்று பேர் தரித்தும், என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து என் சுவிசேஷத்தைச் சர்வ சிருஷ்டிக்கும் அறுப்ப மனமற்றவர்களெல்லாரும் என்னுடைய சந்தோஷத்தை இழந்துபோகிறதுமல்லாமல், ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து அழைக்கப்பட்டிருக்கும் குணப்பட்ட தேவனுடைய பிள்ளைகளோடு சந்தோஷமடையாமலும் பங்குபெறாமலும் போவார்கள். அன்றியும், என் சகோதரரில் ஒருவனுக்கு எவைகளைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று அனுப்பினார்.

திருநெல்வேலி சபை புறதேச மிஷன் வேலை ஆரம்பித்து நடத்திவரும் இக்காலத்தில் நம்மிலும் இச்சாக்குப் போக்குச் சொல்லும் கிறிஸ்தவர்களில்லையா?

---



## சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள்.

### சங்கீதம் 15.

உடன்படிக்கைப் பெட்டி தாவீதின் நகரத்திற்குக் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பமாய் இச்சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம். அந்தச் சரித்திரத்தை 2 சாமுவேல் 6-ம் அதிகாரத்தில் காணலாம். கர்த்தருடைய பெட்டியைத் துணிந்து தொட்ட ஊசா தேவனால் அடிபட்டு மாண்டான். இதைக் கண்டதாவீது தன்னிடத்தில் அதைக் கொண்டுவரப் பயந்து, மூன்று மாதமளவும் அதை ஓபேத் ஏதோமின் வீட்டிலேயே வைத்து விட்டான். அப்பால் தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டாரனைவரையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது கேள்விப்பட்டபோது, தைரியமடைந்து, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டு, மிகுந்த ஆரவாரத்துடன் பெட்டியை அங்கிருந்து எடுத்து, தாவீதின் நகரத்தில் அதற்கென்று அவன் சமர்ப்பித்திருந்த கூடாரத்துக்குள் அதைக்கொண்டு வந்து வைத்தான். அச்சமயத்தில் அவன் மனதில் வந்த எண்ணத்தை இச்சங்கீதம் காட்டுகிறது என்று நினைக்கலாம்.

கர்த்தர் தமது திருச்சன்னிதானத்தை இங்கே எழுந்தருளப் பண்ணுவாரே. அவருக்குச் சமீபமாயிருக்கிறவர்கள் எப்பேர்ப்பட்ட பயபக்தியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று தாவீது இச்சங்கீதத்தில் தியானிக்கிறான்.

இப்பாடலின் அமைப்பு சுளுவு.

I. கேள்வி. வா 1.

"கர்த்தாவே, உம்முடைய கூடாரத்தில் அதிதியாகத் தக்கவன் யார்?" "உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணத்தக்கவன் யார்?"

இதுவே தாவீதின் கேள்வி. கூரையின் நிழலில் வந்தவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேரிடாமல் பார்த்துக்கொள்ளுவது வீட்டுக்காரன் கடமை. விருந்தாடி வந்தவன் அடைக்கலம் புகுந்தவனுக்குச் சமானம். கர்த்தாவே, உமது கூடாரத்தின் பாதுகாப்பில் வரத்தக்கவன் யார்? நீர் வாசம் பண்ணும் பர்வதத்தில் உம்மோடுகூட வசிக்கத் தக்கவன் யார்?

II. உத்தரவு. வா. 2—5.

யூதமார்க்கத்துக்கும் மற்றும் சகல மதங்களுக்குமுள்ள பேதம் இவ்வுத்தரவில் வெளிப்படுகிறது. நம்தேசத்தில் சன்னதித் தெருக்களில் தாசிகள் வாசம்பண்ணுவதைப் பார்க்கலாம். கோயில் பூனை தேவர்க்கஞ்சாது என்பது பழமொழி. பரிசுத்த யேகோவா சந்நிதியில் வாசம்பண்ண விரும்புகிறவனோ மனுஷருக்கு முன்பாகப் பரிசுத்த நடக்கையுள்ளவனாயிருப்பதவசியம். "அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்". (1 யோவா 2:6).

பத்து வரிகளில் பத்து நூறு குணங்களைச் சங்கீதக்காரன் விவரிக்கிறார்:—

1. "உத்தமனாய் நடந்து நீதியை நடப்பிக்கிறவன்"

தேவ சன்னிதியிலிருக்க விரும்புகிறவனுடைய பாதங்கள் உத்தம மார்க்கத்தில் நடக்கவேண்டும். அவன் கரங்கள் நீதியையும் நியாயத்தையும் நடப்பிக்கவேண்டும்.

2. "உள்ளத்தில் சத்தியத்தைப் பேசுகிறவன்".

வாயில் உண்மையையும் உள்ளத்தில் பொய்மையும் வைத்துக்கொண்டிருப்பவனல்ல, உள்ளத்திலும் உதட்டிலும் உண்மை பேசுகிறவனே சத்தியபரனான தேவனுடைய திருச் சமுகத்தில் தங்கக் கூடும்.

3. "தன் நாவினால் புறங்கூறாதவன்".

பிறனைப்பற்றி அவதூறு பேசுகிறவன் தேவ சமுகத்தில் வசிக்க முடியாது. தேவனோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறவன் தன் நாவை அடக்கவேண்டும்.

4. "தன் சிநேகிதனுக்குத் தீங்கு செய்யாதவன்".

தன்னோடு பழகுகிற கூட்டாளியை மோசம்பண்ணுகிறவன் தேவனுக்குச் சிநேகிதனாயிருக்கமாட்டான்.

5. "தன் அயலானுக்கு விரோதமான நிந்தைப் பேச்சை எடுக்காதவன்.

தேவ சமுகத்தை நாடுகிறவன் செவியும் பரிசுத்தமாய் இருக்கும். தன் அயலானைப் பற்றி நிந்தையான வார்த்தைகளை மற்றவர்கள் பேசும்போது, அவைகள் அவன் செவியில் ஏறாது. செவிக்கும் அவன் பூட்டுப்போடவேண்டியவன்.

6, 7, "ஆகாதவனைத் தன் பார்வையில் தீழ்ப்பாய் எண்ணுகிறவன்". "கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறவன்."

தெய்வ சந்நிதியில் வசிக்கிறவன் மனுஷரை மதிக்கிற மதிப்பில் பேதம் உண்டு. தேவ பயம் எங்கே இல்லையோ, எவன் ஆகாதவனோ, எவன் கள்ளநாணயம் போன்றவனோ, எவன் உண்மையாய்க் கர்த்தரை நேசிக்காதவனோ அவனை மெய்ப்பக்தன் மதிக்கமாட்டான். மனுஷருடைய லௌகீக ஸ்திதி அவனுக்குக் காரியமல்ல, தேவ அன்பே காரியம். எப்பேர்ப்பட்ட ஏழையாயிருந்தாலும், ஒருவன் கர்த்தருக்குப் பயப்பட்டு, அவர் வழிகளில் நடக்கிறவனானால், அவனையே பக்தன் மதிப்பான். கர்த்தருக்குப் பயப்படும் பயமற்ற மனுஷரைத் தன் தோழராக்குகிறவன் கர்த்தருக்குத் தோழனாயிருப்பது கூடாத காரியம்.

8. "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறவன்."

வாக்கு மாறுகிறவன் பொய் சொல்லாத தேவனோடு சஞ்சரிக்க முடியாது. தன் வாய் பதறிசொன்ன வாக்கினால் ஒருவேளை தனக்கு நஷ்டம் வருவதானாலும், தன் வார்த்தையை நிறைவேற்றுகிறவனே, தேவனுடைய கூடாரத்தில் தங்கப் பாத்திரன்.

9, 10. தன் பணத்தை வட்டிக்குக் கொடாதவன்."

"குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காதவன்."

பண விஷயத்தில் உத்தமமாயிராதவன் தேவனோடு ஐக்கியமாயிருப்பது அசாத்தியம். தன் சகோதரனுடைய அவசியத்தைக்கண்டு, இஷ்டம்போல வட்டியை அதிகரித்து, இவ்வாறு தனக்கு லாபம் சம்பாதிக்கிறவனாவது, தன் வருமா

னத்தை அதிகரிக்க ஆசிக்கிறவனாவது தேவ சகவாசத்தைச் சம்பாதித்துக்கொள்ள மாட்டான். பிறனை நஷ்டப்படுத்தி, அல்லது பிறனுடைய நியாயத்தைக் கெடுத்து ஐசுவரியவானாகிறவன் தேவனிடத்தில் ஐசுவரியவானாகக்கூடாது.

III. முடிவுரை.

"இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை."

இவ்வாறு தன் நடக்கையைச் செவ்வைப்படுத்துகிறவன ஒருநாளும் தேவ சமுகத்தை விட்டு அசையமாட்டான்.

தேவ சகவாசத்தைத் தேடுகிற கிறிஸ்தவனே, உன் ஜீவியத்தை ஆராய்ந்து பார்! தேவசமுகத்தில் வாசம் பண்ண நீ தகுந்தவன் தானா? தேவசமுக பிரசன்னம் உனக்கு வேண்டுமானால், உன் நடக்கையைச் சீர்ப்படுத்து. "அவர் ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்."

---

## சிங்கரேணி மிஷன்.

இம்மிஷன்வேலை மூன்று தாலூகாக்களில் நடக்கிறது· திருநெல்வேலி நாட்டிலிருந்து வந்த நால்வரில் இருவர் பாக்கல் தாலூகாவிலும், எல்லாந்து தாலுகாவில் ஒருவரும், பாலவன்சா தாலுகாவில் ஒருவரும், 9 தெலுங்கு ஆஜாமிகளும் இம்மிஷன் வேலையை நடப்பித்து வருகிறோம் நானும் Mr. A. தாவீதும் வேலைசெய்யும் பாக்கல்தாலூகா மரங்களடர்ந்த காடு. அங்கே துஷ்டமிருகங்கள் ஏராளமாயுண்டு. இதே நிஜாம் வேட்டையாடும் சிக்காரி காடு. நாங்கள் பல தடவைகளில் துஷ்ட மிருகங்கள் மத்தியில் அகப்பட்டு, ஆண்டவருடைய கிருபையால் காக்கப்பட்டிருக்கிறோம். ஒரு நாள் என் வீட்டுக்குச் சமீபமாய் ஒரு கரடி வந்து சத்தம் போட்டது. நானும் மற்றவர்களும் சத்தம்போட ஓடிப்போய்விட்டது. அதே ஊரில் ஒரு தாய் ஒரு பிள்ளையைத்தன் முன்வைத்து படுத்து நித்திரை செய்யும்போது, அவளுக்குத் தெரியாமலே இரவு 12 மணிக்கு ஒரு கழுதைப்புலிவந்து பிள்ளையைத் தூக்கிக்கொண்டுபோய் தின்றுவிட்டது. இன்னொரு நாள் நானும் என்னுடன் வேலை செய்யும் ஒரு தெலுங்கு உபாத்தியாயரும் கடுவாய் எங்களுக்கு எதிராக வரக்கண்டு, பயந்து சத்தம் போட, அது கொஞ்சநேரம் நின்று, எங்களைப் பார்த்து அப்பால் ஆண்டவருடைய கிருபையால் மெதுவாய் விலகிப்போனது.

பாக்கல் தாலூகாவின் மேற்பாகம் ஒரு மூலை தவிர, மற்றப் பாகம் முழுவதும் மூன்று வருஷத்திற்கு முன் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிச் சற்றென்கிலும் கேள்விப்படாத பாகமே. அங்குபோய் எவரும் சுவிசேஷத்தை அறிவித்திருப்பதில்லை. கிறிஸ்து மார்க்கமே அறிவிக்கப்படாத தேசத்தின் ஜனங்களின் நிலைமை எப்படியிருக்குமென்பது நமக்குத் தெரியாத விஷயமல்ல. இங்குள்ள ஜனங்கள் விக்கிரக ஆராதனை, பேய் வணக்கம், கள் குடி, விபசாரம் இவைகளில் முழுகிப் போயிருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் விசேஷமாய் ஏழை ஜனங்கள் மத்தியில் மூன்று வருஷமாக சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறோம். திருநெல்வேலி நாட்டின் தென்பாகங்களில் பனைகள் ஏராளமாயிருப்பதுபோல் இந்த பாக்கல்த் தாலுகாவின் சில பாகங்களில் பனைகள் விஸ்தாரமாயுண்டு. கள் மாத்திரம் இத்தேசத்தார் இறக்கி உபயோகிக்கிறார்களேயன்றி, பதனீர் இறக்க அறியார்கள். நுங்கு, கிழங்கு இவைகளில் இவர்களுக்குப்பிரியமில்லை. எங்கு பார்த்தாலும் சாயந்திரம் மூன்று மணி முதல் இரவு பத்துமணி வரையும் கள் குடியும் சண்டை கூக்குரலுமே கேட்கலாம். கொஞ்சம் குறைய இரண்டொரு ஜாதியார் தவிர, மற்றவர்களெல்லாரும் கள் சாதாரணமாய் உபயோகிப்பார்கள். இத்தேசத்தில் குடி வெட்கமான காரிமல்ல. ஆண், பெண், பிள்ளைகளெல்லாரும் சேர்ந்து, போஜனம்போல அருந்துவார்கள். உயர்ந்த ஜாதியாருக்குள்ளேயும் இந்தத்தீய வழக்கம் உண்டானால், தாழ்ந்தவர்கள் என்னப்பட்டவர்கள் காரியம் எப்படியிருக்குமென்று அனுமானித்துக்கொள்வது வருத்தமல்ல.

பாக்கல் தாலுகாவில் சந்திராப்பேட்டை என்ற ஒரு ஊரில் இராமுடு என்ற ஒரு மாதிகன் கிராமமுனிசிபுக்கு வெட்டியான் வேலை செய்துவருகிறான். அவன் முதலாவது கிறிஸ்துமார்க்கத்துக்கு நான் குடும்ப சகிதம் வருகிறேன்; எனக்கு வந்து வேதம் படித்துத்தாருங்கள் என்றான். அவன் கலியாணம் கட்டிக்கொடுத்த பிள்ளைகள் தவிர அவன் மனைவி, 3 பிள்ளைகள் ஆக 5 பேர் வந்து படித்தார்கள். ஆனால் அவன் மனைவி சில நாளைக்குப்பிறகு ஏது காரணத்தாலோ வரமாட்டேன் என்று எங்களைத் திட்டித்திமிறி பேசினாள். என்வீட்டு முன் நிற்க வேண்டாமென்று துரத்துவாள். அவள் தவிர மற்ற நாலுபேர்களும் எங்களிடம் பாடம் படிப்பார்கள். அவன் நிலத்தில் நாங்கள் ஒரு சிறு கூடாரம் அடித்து, இரவு அவன் வீட்டில் ஜெபம் படிப்புகள் நடத்தியும், பகலில் மற்ற கிராமங்களுக்குப்போய் பிரசங்கம் செய்தும் வருவோம். இந்த இராமுடு வீட்டாரைப் பார்க்கும்படி மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் அத்தியக்ஷாபிஷேகம் பெறுமுன் வந்து, நாங்கள் அடித்திருந்த அந்தக் கூடாரத்தில் தங்கிக்கொண்டு, எங்களோடு மற்றக் கிராமங்களுக்குப் போய் பிரசங்கித்து, பகலில் எங்களுக்குச் சங்கீதங்களில் பாடம் படித்துக்கொடுத்து, இரவு ஷை இராமுடு வீட்டில் ஜெபம் செய்துகொடுத்து வந்தார்கள். மூன்று நாள் அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் ஜெபம் செய்யவேண்டிய விதத்தைப் படித்துக்கொடுத்து, இரவு அவனை ஜெபம் செய்யச் சொன்னார்கள். அவன் செய்த ஜெபமாவது:—

"ஆகாயத்திலிருக்கிற தகப்பனே, நீர் தகப்பன், நான் பிள்ளை; என்னைக்காப்பாற்றவேண்டியது உம்முடையகடமை, என் வருத்தத்தை நீக்கும். என் பெண்சாதி காய்ச்சலைச்சுகமாக்கும். புலி, கரடி எங்களை மோசம் போக்காதபடி காப்பாற்றும். என் பாவத்தை மன்னியும். என்னை மோக்ஷத்தில் சேர்த்துக்கொள்ளும். இனிபாவம் செய்யாதபடி காப்பாற்றும். எங்களைப்போல இந்த ஊராரெல்லாரையும் கிராமமுனிசிபு, தாசில்தாரும உம்மைத் தகப்பனென்று வணங்கச்செய்யும்" ஆமென் என்று ஜெபித்தான். நாங்களும் மகாகனம்: அத்தியக்ஷரவர்களும் மிகவும் சந்தோஷத்துடன் ஆண்டவருக்கும் ஸ்தோத்திரம் செலுத்தினோம். அப்பால் அத்தியக்ஷரவர்கள் மற்றக்கிராமங்களுக்கும் போய்ச்சுவிசேஷத்தை அறிவித்து விட்டு தோர்ணக்கல்லுக்குத் திரும்பினார்கள்.



### பாக்கல் தாலுகா ஞானஸ்நானம் 17-3-1915.

நானும் Mr. A. டேவிடும் கனம் D. S. தாவீது ஐயரவர்களை ஞானஸ்நானத்துக்கு அழைத்தோம். ஐயரவர்களும் அம்மாளவர்களும் பாக்கல் தாலுகாவுக்கு ஞானஸ்நானத்துக்கு வந்து சேர்ந்தார்கள். எலாந்திலிருந்து நெற்கொண்டா 50மைல் தூரம். காலை 8மணிக்கு ரெயில்வண்டியேறி, மதியம் 12 மணிக்கு நெற்கொண்டா வந்து இறங்கினார்கள். ஒரு மாட்டு வண்டி பிடித்து ஏறினார்கள். இத்தேசத்து வண்டிகளுக்கு கூண்டிராது. என் கட்டாயத்தின் பேரில் இரண்டு மாரை வைத்துக்கட்டி, கிழிந்துபோன அழுக்கான இரண்டு ஈத்தம்பாயை மேலே போட்டுக்கொண்டு வந்தான். வண்டிக்குள் குனிந்துகொண்டுதானிருந்தார்கள். ஒன்று காளை, ஒன்று பசு. ஒரு மணிக்கு 2 மைல் போகும். 8 மைலுக்கு அப்பாலிருக்கிற கோனாபுரம் சாயந்திரம் 6 மணிக்கு வந்து சேர்ந்தோம். இந்தக் கோனாபுரத்தில் Mr. A. டேவிட் இருந்து வேலை செய்கிறார்கள். உடனே தாகம் தீர்த்துக்கொண்டு, ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தியிருந்த சபையைப் பார்க்க கனம் ஐயரவர்களும் அம்மாளவர்களும் புறப்பட்டார்கள். அந்த ஊரில் ஒரு சிறு ஜெபவீடு உண்டு. இந்த ஊரில் ஞானஸ்நானம்பெற்றவர்களில் தூட என்றுபேருள்ள ஒருவன் கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்ததினிமித்தம் சிலர் விரோதம் வைத்து, இவன் வீட்டைத் தீக்கொளுத்திப்போட்டார்கள். தெய்வச்செயலாய் இவன் குடும்பத்தோடு காக்கப்பட்டான். ஜாமான் எல்லாம் நஷ்டம். அவன் பெண்சாதி சிறு தேட்டுகள் எல்லாம் போய்விட்டது. இவன் அந்த ஊர் பெரிய மாதிகனுடைய மகன். ரெம்பப் பொல்லாதவன். ஜெபத்துக்கு வரமாட்டான். அவனுடைய வீடு தீப்படவே அவனுக்குள் மாறுதலுண்டாகி, ஜெபத்துக்கு வந்து பாடம் படித்துச் சந்தோஷமாய் ஞானஸ்நானம் பெற்றான். ஜலத்தில் முக்கி ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் ஒரு தாய் கனம் ஐயரவர்களைப் பார்த்து: நான் பெரியவள், நீங்கள் இந்தத் தண்ணீருக்குள் முக்கி, கள் குடிக்கக்கூடாது, பொய் சொல்லக்கூடாது, பேய் பிசாசுகளைக் கும்பிடக்கூடாது, என்று ஆணை வாங்குகிறீர்கள். நான் தவறிப் போகாமல் நடந்துகொள்ளுவேன். என் பிள்ளைகள் தவறிப்போவார்களே, அவர்களுக்காகப்பயப்படுகிறேன். தவறிப்போனால் தேவ தண்டனை வருமே என்றாள். உடனே அவள் மகனில் ஒரு பெரியபையன் "அம்மா உன் காரியத்தை நீ பார்த்துக்கொள், எங்களுக்காக நீ கவலைப்படவேண்டாம். நீ தவறிப்போவாய் என்று நான் பயப்படுகிறேன்" என்றான். கனம் ஐயரவர்களுக்கும் அம்மாளவர்களுக்கும் எங்களுக்கும் ஆச்சரியமாயிருந்தது. கோனாபுரத்தில் 11 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மோதுகாபுரம்.—இவ்விடத்தில் 19 பேருக்கு சந்திராபேட்டை குளத்தில் காலை 8 மணிக்கு ஜலத்தில் முக்கி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. மேலே சொல்லப்பட்ட இராமுடும் அவன் பெண்சாதி அக்கியும் அந்தச் சமயத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்கள் பாடம் சொன்னதையும் சந்தோஷமாய் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்பட்டு நிற்கிறதையும், முன் இந்த இராமுடு பெண்சாதி எங்களைப் பேசி துரத்தின விஷயங்களையும் நினைத்து தியானித்துக்கொண்டு நின்றேன். ஒரு பெரிய ஆலமரத்தடியில் குளக்கரை அலை கற் படிக்கட்டில் ஜனங்கள் வரிசையாய் நிற்க, கனம் ஐயரவர்கள் தண்ணீருக்குள் இறங்கி, ஒவ்வொருவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். குளத்தில் தாமரைப் பூக்கள் நிறைந்தும், பெரிய பெரிய மீன்கள் துள்ளி விளையாடிக்கொண்டும், பட்சிகள் கூட்டம் கூட்டமாய் வந்து பாடிக்கொண்டுமிருந்தது. மனதுக்கு சந்தோஷத்தை உண்டாக்கிற்று. இந்த விசேஷத்தைப்பார்க்கச் சில இந்துக்கள் வந்திருந்தார்கள். அத்துடன் ஒரு முதலையும் ஞானஸ்நானம் கொடுக்கிற இடத்துக்குச்சமீபமாய் இருந்த பாறையில் வந்து படுத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. ஞானஸ்நானம் முடியவும் தண்ணீருக்குள் போய்விட்டது. மோதுகாபுரம பெரிய மாதிகன் பெண்சாதி ஞானஸ்நானம் பெறும்போது, தன் புருஷனிடம் நான் வயலறுப்புக்கும் சோளத் தோட்டத்துக்கும் போகும்போது, களவு செய்வேனே, இனிமேல் செய்யக்கூடாதல்லவா? தண்ணீரில் முக்கி ஆணை வாங்கியிருக்கிறார்களே என்று சொன்னாள். அந்தக்குறிப்பைக் கனம் ஐயரவர்கள் கண்டு, அவள் என்ன சொல்லுகிறாளென்று கேட்க, அவள் புருஷன் திட்டமாய்ச்சொல்ல, ஐயரவர்கள் அது நிசமே, அப்படிச்செய்யக்கூடாது என்று சொல்ல, புருஷனும் பெண்சாதியும் அதற்கு சம்மதித்து சந்தோஷமாய் ஞானஸ்நானம் பெற்றார்கள். நாங்கள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போகிறவர்கள் என்று பயந்தவர்கள் ஞானஸ்நானம் பெறவே, எங்கே கூப்பிட்டாலும் உங்களோடே வருகிறோம் என்றும், எங்கள் பிள்ளைகளைத் தோர்ணக்கல் பள்ளிக்கூடத்தில் வைத்துப் படித்துக் கொடுங்கள் என்பதாயும் சொல்லுகிறார்கள். ஷை இராமுடு தன் பிள்ளைகள் மூன்று பேரையும், தன் மகளையும் தன் மருமகளையும் ஐயரவர்களுக்கு ஒப்புக்கொடுத்து, இவர்களை படிக்க வையுங்கள் என்பதாய் தன் மனைவியுடன் சேர்ந்து சொன்னான்.

எல்லாய்கூடம்.—இது மரங்களடர்ந்த சோலை. காடுகளுக்கு மத்தியில் இருக்கிறது. இந்த ஊரில் கடந்த நவம்பர்ீ முதல் ஊழியத்தை ஆரம்பித்து, 5 மாதம் அவர்களுக்கு ஞானஸ்நான பாடமும் படித்துக்கொடுத்தேன். அநேக பாட்டுகள் பாடுவார்கள். நான் கின்னரம் வாசிக்கும்போது உற்சாகமாய் இசைந்து பாடுவார்கள். கனம் ஐயரவர்கள் பாடம் சோதிக்க, 17 பேர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மறு நாள் பகல் 12 மணிக்கு ஊருக்கு அப்பாலிருக்கும் ஒரு குளத்தில் முங்கி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று சபையார் கேட்டுக்கொண்டார்கள். நடுமதியம் 6 பர்லாங்கு தூரத்திலிருக்கும் குளத்துக்கு ஜெபவீட்டிலிருந்து பாடிக்கொண்டு போனோம். ஆணை பிரமாணம் வாங்கும்போது, அநேக இந்துக்கள் வந்து கரையில் அமைதியாய் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஷை இந்துக்களே ஒருவருக்கொருவர் இவர்கள் குரு, கள்

குடிக்கக்கூடாது, பொய் சொல்லக்கூடாது, பேய் பிசாசுகளைக் கும்பிடக்கூடாது என்று தண்ணீருக்குள் முக்கி ஆணை பிரமாணம் வாங்குகிறார்கள். இனிமேல் இந்த ஜனங்கள் முன் செய்த மாதிரி செய்யமாட்டார்களா என்று பேசிக்கொண்டார்கள். ஞானஸ்நானம் பெற்ற ஜனங்களும் எங்களைப்பிடித்த சைத்தான் இன்றே போய்விட்டது. இன்று முதல் நாங்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்று குளித்து முழுகி வேஷ்டி துவைத்து, அவரவர் தம் தம் வீடுகளுக்குச் சந்தோஷமாய்த் திரும்பினார்கள்.

ஆண்டவருடைய கிருபையால் இம்மூன்று கிராமங்களிலும் 47 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிற வேறு சில ஊர்களுமுண்டு. இந்த ஜனங்கள் மறுபடி தங்கள் பாவ வழிக்குத் திரும்பாமல் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, மற்றவருக்கு நன்மாதிரி காட்ட இவர்களுக்காகவும், இத்தேசத்தில் வேலை நடப்பிக்கும் எங்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்க அன்பாய்க்கோரும்

பால் ராயப்பன்.

---

## "இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்"

லூக்கா 19: 5.

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது (சங். 33: 12). இந்த பாக்கியத்துக்கு ஆபிரகாமின் சந்ததியாரே முதலில் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஆபிரகாம் தன்னுடைய ஒரே குமாரன் என்று பாராமல், ஈசாக்கைக் கர்த்தருக்கென்று மோரியாமலையில் பலியிடக் கிஞ்சித்தேனும் மனங்கோணாத பக்தனாயிருந்தபடியால், அவன் விசுவாசிகளின் தகப்பன் என்னும் பெயர் பெற்றான். கர்த்தரைத் தெய்வமாகக்கொண்டவர்கள் தங்கள் பிள்ளைகளை முதலாய்த் தத்தம் செய்யப் பின்வாங்கமாட்டார்கள். பெத்தேலில் தெய்வ தரிசனங்கண்ட யாக்கோபு தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவேன் என்று சொன்னான். அதே பிரகாரமாக அவன் சந்ததியாரான இஸ்ரவேலர் தங்கள் வரத்திலெல்லாம் பத்திலொன்றை தேவனுக்குச் செலுத்தினார்கள். எருசலேமின் தேவாலயத்தைக் கட்டும் விஷயமாய் தாவீது ராஜா சாலொமோனைப் பார்த்து: இது ஒரு மனுஷனுக்கல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை, நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு, தேவனாகிய கர்த்தர் உன்னோடிருப்பார், நீ அதை முடித்துத் தீருமட்டும் அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார் என்றான். அப்படியே அவன் சபையாரைப் பார்த்துக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமுள்ளவர்கள் யார் என்று கேட்டபோது, இஸ்ரவேல் ஜனங்கள் மனப்பூர்வமாய்ப் பொன்னையும், தங்கக்காசையும், வெள்ளியையும், வெண்கலத்தையும், இரும்பையும், ரத்தினங்களையும் உற்சாகமாய்க் கொடுத்தார்கள். அப்போது தாவீது ராஜா கர்த்தரை நோக்கி: உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு நாங்கள் சவுதரித்திருக்கிற இந்தப்பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது; உமது ஜனத்தின் இருதயத்திலுண்டான இந்தச் சிந்தையையும் நினைவையும் என்றைக்கும் காத்து, அவர்கள் இருதயத்தை உமக்கு நேராக்கியருளும் என்று ஜெபித்தான். இப்படி அவர்கள் கொடுப்பதற்குக் காரணம் என்னவென்றால், கர்த்தர் தம்மில் அன்புகூர்ந்து தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்று விசுவாசித்தார்கள். அப்படி விசுவாசியாதவர்கள் தங்களுக்கென்றும் தங்கள் பிள்ளைகளுக்கென்றும் ஆஸ்தியைச் சேர்த்துவைப்பார்களேயன்றி, கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் அதைச் செலவிடமாட்டார்கள்.

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த தேவகுமாரன், தம்மைப் பார்க்கும்படி காட்டத்திமரத்தில் ஏறியிருந்த சகேயுவைப் பார்த்து: நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்று சொன்னபோது, சகேயு ஆனந்த பரவசங்கொண்டு, ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் என்றான். கர்த்தரைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டவர்கள் சகேயுவைப்போல் உற்சாகமாய்க் கொடுப்பார்கள். தன் சிறுவயது முதல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு வந்த தலைவன் ஆண்டவரைப்பார்த்து: நல்லபோதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, அவர் அவனைப்பார்த்து: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவுண்டு, உனக்குண்டானவைகளை எல்லாம் விற்றுத் தரித்திரருக்குக்கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷமுண்டாகியிருக்கும் என்றார். தங்களுக்கென்று பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கிறவர்கள் சன்மார்க்க ஜீவியம் செய்கிறவர்களாயிருந்தபோதிலும், அவர்கள் குறைவுள்ளவர்கள்தான். மதிகேடனே என்று ஆண்டவர் அழைத்த ஐசுவரியவானிடம் காணப்பட்ட குற்றம் என்னவெனில், அவன் தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச்சேர்த்து வைத்தான் என்பதே.

இஸ்ரவேலின் தேவனாகிய பரிசுத்தர் புறஜாதிகளில் ஆயக்காரரும் பாவிகளுமாக எண்ணப்பட்ட நம்மை இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் உண்டாகும் ஞானஸ்நானத்தால் கிறிஸ்துவின் அவயவமும் தேவபுத்திரரும் பரலோக ராஜ்ஜியத்துக்குச் சுதந்தரவாளிகளுமாக்கினார். ஒருவன் உலகத்தில் அகப்படக்கூடிய பொக்கிஷங்களை எல்லாம் ஸ்தோத்திரக் காணிக்கையாகச் செலுத்தினாலும், தேவன் அவனைக் கிறிஸ்துவின் அவயவமும் தேவனுடைய பிள்ளையுமாக்கின பேரன்புக்கு அது ஈடாகுமோ?

கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறது. மனுமக்களை அவர் இரண்டு பிரிவாகப் பிரித்து, வலது புறத்திலுள்ளவர்களைப்பார்த்து: வாருங்கள், என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்; பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்



கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன் என்னை விசாரித்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

இந்தப் பரம ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கவேண்டுமென்று விரும்பாத சகோதரன், சகோதரியுண்டோ? இல்லையே. அப்படியானால் சகோதரரே, இன்றைக்கே கர்த்தரின் வார்த்தைக்குச் செவிகொடுங்கள். தோர்ணக்கல் மிஷனில் 46 கிராமங்களில் கர்த்தர் ஏழை ஜனங்களை ஞானஸ்நானத்தின் மூலமாய்த் தேவபுத்திரராக்கியிருக்கிறார். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களுக்கு நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பதாக இயேசுவானவர் திருவுளம் பற்றுகிறார். இவர்களுக்கென்று இன்னும் ஒரு ஆலயமும் கட்டப்படவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன் தோர்ணக்கல்லில் கட்டும்படி தீர்மானம் செய்யப்பட்ட ஞாபகார்த்த ஆலயத்துக்கு வேண்டிய ரூ. 15,000 இன்னும் சேகரிக்கப்படவில்லை. இந்த மூன்று வருஷங்களில் நம்மில் எத்தனையோ சகோதரர் தங்களுடைய குமாரத்திகளுக்கு ரூ. 1000, 1500, 2000 வரை வரதக்ஷணையாகக்கொடுத்து கலியாணஞ்செய்து வைத்திருக்கிறார்கள். நல்லகாரியந்தான், தேவன் நம்மை இவ்விதமாய் ஆசீர்வதித்திருக்கக் கர்த்தருடைய ஆலயத்துக்கென்று கொடுப்பதற்கு மாத்திரம் நாம் பின்வாங்குவானேன்? கர்த்தர் நமக்குச் சொந்தமான பிதாவும் நாம் அவருக்குச் சொந்தமான புத்திரருமானால், நாம் அப்படிப் பின்வாங்கமாட்டோம். கற்களை அப்பமாக மாற்றக்கூடியவர் நம்முடைய கல்லான இருதயத்தையும் மாற்றுவாராக.

தூரதேசம் போன பிரபுவினிடம் 10 ராத்தலும் 5 ராத்தலும் பெற்றுக்கொண்ட ஊழியக்காரர் அவற்றால் வேறே 10 ராத்தலும், 5 ராத்தலும் சம்பாதித்துத் தங்கள் எஜமானிடம் கொடுத்தார்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தாலந்துகளின் ஆதாயம் நம்முடைய ஆண்டவரைச் சேர்ந்ததல்லவோ? அன்றன்றுள்ள ஆகாரமே நமக்குத் தேவையானது. கொஞ்சத்தில் உண்மையாயிருப்போமானால் அநேக ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்று பொய்யுரையாததேவன் வாக்களித்திருக்கிறார். இந்த தெய்வ வாக்கை நம்புவோமானால், அநேக ஆசீர்வாதங்களைப் பெறுவோம். இதை நம்பமாட்டோம் என்றால், நாம் அனுபவிக்கவேண்டுமென்று தேவன் சித்தமாயிருக்கிற அநேக ஆசீர்வாதங்களை இழந்துபோவோம்.

நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. அவருடைய பிள்ளைகள் தோர்ணக்கல் மிஷனில் தேவனை ஆராதிக்க ஆலயங்களில்லை; அவருடைய ஊழியக்காரர் தங்கும்படியான வீடுகளில்லை. நமக்கோ வீடுகளும் வயல்களும் ஆபரணங்களுமுண்டு. சகேயுவைப் பார்த்துச் சொன்னபிரகாரம் தேவன் நம்மைப்பார்த்து: இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டுமென்று சொல்லுகிறார். இது எவ்வளவு மேன்மையும் மகத்துவமுமான சிலாக்கியம்! தேவகுமாரன், பாவிகளின் நேசர் ஆயக்காரரும் பாவிகளுமான நம்முடைய வீட்டில் தங்க விரும்புகிறார். நாமும் சகேயுவைப்போல ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் என்போமானால், தேவன் சகேயுவின் வீட்டை ஆசீர்வதித்த வண்ணமாய் நம்மைப் பார்த்தும், இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்ததென்று சொல்லுவார். தோர்ணக்கல் மிஷன் கிராமங்களில் ரூ. 300-க்கு ஒரு ஆலயமும், ரூ. 200-க்கு தேவ ஊழியர் தங்கும் ஒரு வீடும் கட்டப்படக்கூடும்.

கர்த்தருக்குள் அருமையான சகோதரனே, சகோதரியே, நீ ஞானஸ்நானத்தின் மூலமாய்க் கிறிஸ்துவின் அவயவமும் தேவனுடைய பிள்ளையுமானாய், உன் ஆஸ்திகளையும் நகைகளையும் யாருக்கென்று வைத்திருக்கிறாய்? சங்கீதக்காரனைப்போல் கர்த்தருடைய வீட்டைக்குறித்துண்டான வைராக்கியம் உன்னைப் பட்சிக்கவேண்டாமோ? கட்டிவைத்திருந்த கழுதைக்குட்டியைச் சீஷர்கள் அவிழ்த்து, ஆண்டவருக்கு வாகனமாக்கினதினாலல்லவோ கழுதைக்குட்டிக்கு மேன்மையுண்டாயிற்று. நீ கட்டிவைத்திருக்கும் கழுதைக்குட்டியாகிய பணத்தையும் நகையையும் ஆண்டவருக்கு வேண்டுமென்று தேவ ஊழியர் கேட்கும்போது எதிர் நியாயம் கூறாதே. உனக்குண்டானவற்றை எல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாகியிருக்கும் என்று தலைவனைப்பார்த்துச் சொன்ன கர்த்தர் நம்மைப் பார்த்தும் சொல்லுகிறார். உன் குடும்பத்தைக்குறித்து நீ கவலைப்படவேண்டாம். ஆயிரம் தலைமுறைவரைக்கும் இரக்கம் செய்வேன் என்ற தேவன் பொய்யுரையாதவர். முதலாவது தேவனுடைய ராஜ்யத்துக்கானவற்றைத் தேடு; உனக்கு யாதொரு நன்மையும் குறைவுபடாது. பக்தன் யோசுவாவைப்போல் நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்று நாம் ஒவ்வொருவரும் தீர்மானஞ் செய்வோமானால், எவ்வளவு பாக்கியவான்களாயிருப்போம்!

இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். (சங். 72 18--19.)

J. S. C.

---

ஐரோப்பாவில் தற்சமயம் நடந்துவரும் பயங்கரமான யுத்தத்தின் பலனாக உலகமெங்கும் உறுதியும் நிலைவரமுமான சமாதானம் ஸ்தாபகமாகத்தக்க ஏற்பாடுகள் நடைபெறவும், சுயநயம், யுத்தப்பிரியம், போட்டிக்கம், அதிகாரப்பிரியம் இவைகளுக்குப்பதிலாக தேசத்திற்குத்தேசம் பக்ஷம், சகோதர சிநேகம், ஒருமைப்பாடு முதலிய திவ்விய குணங்கள் காணப்படத்தக்கதாக பற்பல ஜாதியாரும் தங்கள் பட்டயங்களை அரிவாள்களாகவும் தங்கள் ஈட்டிகளை மண்வெட்டிகளாகவும் அடித்துக்கொள்ளும் ஓர் புதிய யுகந்தோன்ற வேண்டுமென்றும் இவ்வுபத்திரவங்கள் சீக்கிரம் முடிவு பெற வேண்டுமென்றும் ஜெபிக்க அழைப்புப் பெற்றிருக்கிறோம்.

## முதலாவது எது?

"முதலாவது; எனக்கு ஒரு சிறு அடை ....................
பின்பு: உனக்கும் உன் குமாரனுக்கும்" (1 இரா. 17:13)

இது என்ன நியாயம்? தேசத்திலே பஞ்சம், கலயத்தில் மா கொஞ்சம். தாயும் மகனும் பிழைக்கப்போகிறது இன்னும் இரண்டொரு நாள் மாத்திரம். இப்படி இருக்க, முதலாவது சாப்பிடவேண்டியது யார்? தூரதேசத்துப் பரதேசியோ, வீட்டுப்பிள்ளையோ? இயற்கை நியாயத்தின்படி பிள்ளைகளே முதலில் திருப்தி அடையவேண்டும், மீதம் இருக்குமாகில், பரதேசிக்கு ஈவது தர்மம். தீர்க்கதரிசியோ இவ்வொழுங்கை மாற்றி, நியாய விரோதமாக கட்டளை கொடுக்கிறான். முதலாவது தேவகட்டளைப்படி தனக்கு சிறிய அடைகொடுக்கவேண்டுமாம். பிற்பாடு அவ்வேழைக்குடும்பம் சாப்பிடவேண்டுமாம்.

நியாயமோ தெளிவாயிருக்கிறது. முதலாவது தீர்க்கதரிசிக்குக் கொடுப்பதே அந்த ஏழைக்கைம்பெண்ணும் அவள் மகனும் பஞ்சத்தில் பிழைக்க வழி. 'தனக்குப்போய்த்தானம்' என்று நினைத்து, அந்த விதவை அன்றயத்தினத்தில் தன்காரியக்குட்டியாயிருந்திருப்பாளாகில், அடுத்தநாளில் செத்திருப்பாள். ஆகவே, தீர்க்கதரிசிக்கு முதல் அடையைக்கொடுக்கச் சம்மதித்த இவள் தனக்கும் தன் பாலகனுக்குமே பெரிய க்ஷேமத்தைத் தேடிக்கொண்டாள்.

இந்தப்பாடம் இக்காலத்தில் நமக்கு எவ்வளவு அவசியம்! நாமும் நமது பிள்ளைகளும் க்ஷேமமாயிருப்பதற்கு வழி செய்தபின்பு கடவுளுக்கு கொடுக்கலாமென்று நினைக்கிறவர்கள் இல்லையா? முதலாவது நானும் என் பிள்ளைகளும்; பிற்பாடு மீதம் இருந்தால், சங்கப்பணம், போதகர் தாபரிப்பு, தூரதேசத்து மிஷன் என்று நினைக்கிறோம் அல்லவா? இயற்கை நியாயம் இதுவே. தேவ ஒழுங்கோ வேறு: அவரோ முதலாவது எனக்குக்கொடு, அப்பால் நீயும் உன் பிள்ளைகளும் சாப்பிடலாம் என்றார். அவருக்கு முதலாவது கொடுப்பதினால் நஷ்டம் அல்ல, லாபமே வரும். அவரது காருண்ணியத்தினால் நாமும் நமது பிள்ளைகளும் தேவாசீர்வாதம் பெற்று வாழ்வதற்கு இதுவே உத்தம வழி.

தேவனுக்குக் கொடுப்பதற்கு பயப்படவேண்டாம். இருக்கிற கொஞ்சத்தையுங்கொடுத்துவிட்டால், நாம் பிழைப்பது எப்படி என்று எண்ணவேண்டாம். முதலாவது கர்த்தருக்குக்கொடு. சிறிய அடையை அல்ல, பெரிய அடையைக் கொடு. உன்னையும் உன் பிள்ளையையும் பிழைப்பூட்டுவது அவர்மேல் விழுந்த கடமை. முதலாவது அவருக்குக் கொடுப்பாயாகில், பானையில் மா செலவழிந்து போகவும் மாட்டாது, கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் மாட்டாது.

.. தேவ ஊழியக்காரருக்கும் இந்தப் பாடம் அவசரம். சுதேசசபை ஆதரவுச்சங்கம், புறதேசமிஷன் சங்கம் என்ற இரண்டு விஷயத்திற்கும் பணம் அவசியமே. எத்தனையோ தேவ ஊழியர் இயற்கையின்படி நியாயம்பேசித் தப்பிப்போகிறார்கள்! முதலாவது சபையின் சுய ஆதரவு, முதலாவது போதகர் தாபரிப்பு, முதலாவது நமது ஆலயக்கட்டுமானம், பிற்பாடு தூரதேச மிஷன் என்று சகல நியாயதோரணைகளோடும் வாதிக்கிறவர்கள் இல்லையா? இது ஒரு வகையான சுயநயம் என்பதை மறந்துபோகிறார்கள். நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் முதலாவது கவனிப்பதினால் அல்ல, தேவ கட்டளைப்படி நமக்கு வெளியே உலகமெங்கும் இருக்கிற சர்வ சிருஷ்டியையும் கவனிப்பதினாலேயே நாமும் நமது பிள்ளைகளும் உத்தமமும் நிலைமையுமான ஆத்துமக்ஷேமம் அடைவோமென்பதை மறந்துபோகிறோம். ஊமைச்சுற்றிலும் இருளிலிருக்கிறவர்களுக்காக நமது சபையார் மனப்பூர்வமாய்க்கொடுப்பதினாலேயே, நமது சுய ஆதரவும் நமது சபையின் மற்றச் சொந்தக்காரியாதிகளும் சரிவர நடக்கும் என்பதை மறந்துபோகிறோம். சரேப்தா ஊர்க் கைம்பெண்ணை நினைத்துக்கொள்ளுவோமாக. முதலாவது தூரதேசத்திற்கு கர்த்தரால் அனுப்பப்பட்டிருக்கும் ஊழியக்காரருக்குப் போஜனம்கொடுக்க வருத்தப்படாதிருப்போமாக. புறதேச மிஷனுக்குக்கொடுக்கும்படி ஜனங்களை ஏவுவோமாக அவர்கள் அப்படி உதாரத்துவமாய்க் கொடுப்பதைப் பார்க்கும்போது சந்தோஷம் கொள்ளுவோமாக. இவ்வாறு தெலுங்கு நாட்டு மிஷனுக்குக்கொடுத்தால், சபை வருமானம் குறைந்துபோகும் என்று அவிசுவாசப்படாதிருப்போமாக. அப்படிக்கொடுப்பதினாலேயே நமது சபைகளுக்கும் சபையின் பிள்ளைகளுக்கும் அவசியமான தேவாசீர்வாதம் வேண்டியமட்டும் கிடைக்கும். முதலாவது பிறர். பிற்பாடு நாம்.

---

மத்தியஸ்தமன்றாட்டு சுயநயத்திற்கு ராஜ ஔஷதமாயிருப்பதுபோல, ஸ்தோத்திரஞ் செலுத்துதல் அவநம்பிக்கைக்கு ராஜ ஔஷதமாயிருக்கிறது.

"மிஷனெரி ஊழியம் மேன்மையான ஊழியம் என்பது மட்டுமல்ல, அதுவே திருச்சபையின் மகா முக்கியவேலை. அதற்காகவே திருச்சபை பூலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது". கந்தர்புரி பிரதம அத்தியக்ஷர்.

தனது காரியமாயல்ல, பிறர் விஷயமாய் எவ்வளவு செலவு செய்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். ஹட்சன் தேயிலர்.

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும். வர்த்தமானி சந்தா மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

Editor: The Secretary I. M. S. T.

PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

MARCH, 1915 Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

"நீங்கள் போய் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

OFFICE OF THE REGISTRAR OF ... 7- DEC 1915 MADRAS
161408

Vol. XII. No. 3] மார்ச்சுமீ 1915 [விலை பை 3

CONTENTS

Editorial Notes ... ... ... ... 17
Studies in the Psalms ... ... ... ... 18
From the Telugu Field ... ... ... 19
Welcome address to the Lord Bishop of Madras 20
The Acts of the Missionaries ... ... ... 22

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 17
சங்கீத ஆராய்ச்சிப் பாடங்கள் ... ... ... 18
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... ... 19
மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களுக்கு வந்தனோபசாரம் ... ... ... ... ... 20
மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... 22

## பத்திராதிபர் குறிப்புகள்

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்பது ஈஸ்தர் பண்டிகை. திருவாசகம். இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்பது முன்தூதனின் சாட்சியம். இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்ற சத்தியம் மரண புண்ணிய ஞாபகத் திருப்பந்தியில் சேரும்போதெல்லாம் நமது காதுகளில் தொனிக்கும் வார்த்தைகளே. சிலுவைநாதரின் புண்ணியங்களைத் தியானிக்கும் இக்காலங்களில் நாம் அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாற கர்த்தர் அருள்புரிவாராக. தம்மை மறந்த தெய்வீக அன்பு நம்மில் ஜொலித்து விளங்குவதாக. அவருடைய அன்பில் மூழ்கி, அவருடைய அன்பை அறியாமலும் உணராமலும் ஜீவித்துவரும் கோடிக்கணக்கான ஜனங்களை நினைத்து, நம் எஜமானைப்போல அவர்களுக்காக ஊக்கமாய்ப் பரிந்துபேசும் மன்றாட்டில் பழகுவோமாக. எனக்காகத் தம் ஜீவனைக் கொடுத்த நாயனுக்கு என்ன பதில் செய்வேன் என்று ஒவ்வொருவரும் இக்காலத்தில் சிந்திக்க கர்த்தர் அருள்புரிவாராக.

நாளது மார்ச்சுமீ 31உயோடு சங்கத்தின் பன்னிரண்டாவது வருஷக் கணக்குகள் முடிவுபெறவேண்டியது. ஏப்ரல்மீ 8உக்கு முன் பொக்கிஷதார் கைக்கு வந்துசேரும் காணிக்கைகள் தான் ஷை வருஷக்கணக் வருஷக் கணக்கு. கில் சேரும். இம்மாசத்தின் கடைசி வாரம் அருள்நாதரின் பாடுகளைத் தியானிக்கும் பரிசுத்த வாரமானதால், ஒரு வாரத்திற்குப்பின் கணக்குகளை முடிக்கத் தீர்மானித்திருக்கிறது. தங்கள் பெயரால் வருஷக் காணிக்கை அனுப்பும் நண்பரும், சபைகளில் காணிக்கை சேகரித்து சங்கத்துக்குப் பேருதவி புரிந்து வரும் குருமாரும் தேவ ஊழியரும் காணிக்கைகளை ஏற்கனவே அனுப்புவிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். வேலை விருத்திக்கு மிஷனெரிமாரும் ஊழியரும் இன்றியமையா அவசியம். ஆட்கள் போக ஆயத்தமாயிருக்கிறார்கள். வழிவகைகளோ போந்த அளவு இல்லை. இவைகளைக் கவனித்து, நண்பர் அதிக உற்சாகமாய் சங்கத்திற்காக உழைக்கவும் உதாரமாய்க் காணிக்கை படைக்கவும் ஜெபிக்கவும் கர்த்தருடைய நாமத்தினால் அழைக்கிறோம்.

நமது சங்கத்தின் அறிக்கை ஜூலைமீ வருஷாந்தரக் கூட்டத்துக்குமுன் வெளியாகவேண்டுமென்பது அநேகருடைய வேண்டுகோளாகிறது. இதற்கு ஓர் பெரிய தடை இனவழி ஜாபிதாக்கள் சரியான காலத் பன்னிரண்டாவது தில் வராதது. ஆகையினால் சபைகளில் அறிக்கை. காணிக்கை சேகரித்திருக்கும் தேவ ஊழியர் இந்த ஜாபிதாவை ஏப்ரல்மீ 15உக்குள் சேர்ந்துசேரித்து அனுப்பிவிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இனவழி ஜாபிதா தயார்செய்வதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்:—(1) ஜாபிதாவில் கண்ட மொத்தத் தொகையும் சங்கத்திற்காக அனுப்பியிருக்கும் காணிக்கைத் தொகையும் ஒன்றுபோல இருக்கவேண்டும். (2) புருஷரில் வருஷத்துக்கு ரூபாய் ஒன்றும், ஸ்திரீகளில் வருஷத்துக்கு

அறு எட்டும், பிள்ளைகளில் அறு நான்கும் அல்லது இத்தொகைகளுக்கு அதிகமாகவும் காணிக்கை செலுத்தியிருக்கும் பெயர்கள் மாத்திரம் குறிப்பிடப்படவேண்டும். மற்றதைத் தாழ்ந்த வரவில் மொத்தமாய்க் குறிப்பிடவேண்டும். (3) தமிழில் ஒரு பக்கம் மாத்திரம் எழுதியிருக்கவேண்டும்.

---

## 8-ம் சங்கீதம்

இவ்வலங்கார கீதத்திற்கு "தேவநாமசங்கீர்த்தனம்" என்று பேரிடலாம். இது இளைஞன் தாவீது பெத்லெகேமின் மலைச்சரிவுகளில் ஆடு மேய்த்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்த கண்ணாய், இரவில் படுத்துக்கிடக்குங்கால் தியானித்த தியானமாய் இருந்தாலும் இருக்கலாம். "சேனைகளின் கர்த்தருடைய நாமத்திலே" (1 சாமு. 17:45) சென்று தன்னைக்கொண்டு, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்த கோலியாத்தைத் தேவன் அடக்கின ஆச்சரிய கிரியையும் ஞாபகத்திலிருந்திருக்கக்கூடும், அல்லது இளமைப் பிராயத்தின் அநுபவங்களை மனதில் வைத்து, தாவீது பிற்காலத்தில் இதைப் பாடியுமிருக்கலாம்.

பூமியில் விளங்கும் தேவநாமத்தின் மகத்துவம் இக்கீர்த்தனையின் பொருள்.

### (1) பல்லவி.

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே,
உமது நாமம் பூமி எங்கும் எவ்வளவு மேன்மையுள்ளது!

### (2) அநுபல்லவி.

உம்முடைய மகத்துவத்தை வானங்களிலே அமைத்து வைத்
பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, [தீர்!
தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம்
குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்.

தேவன் தமது மகிமையை வானஜோதிகளிலும், தமது வல்லமையைப் பலவீன மனுஷனிலும் விளங்கப்பண்ணச் சித்தங்கொண்டார். இவ்விரண்டு விஷயங்களும் சங்கீதக்காரனுடைய இளம்பிராய அனுபவத்திலுள்ளவைகள். மீதியான வாசகங்களில் இதைச்சற்று விஸ்தாரமாய்த் தியானிக்கிறேன்.

### (3) தியானசாரங்கள்.

#### (i) வானஜோதிகளின் தியானம் (வா. 3, 4.)

உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும்,
நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நக்ஷத்திரங்களையும் நான் பார்க்
மனுஷனை நீர் நினைக்கிறதற்கு அவன் யார்? [கும்போது,
மனுப்புத்திரனை நீர் விசாரிக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்,
[என்கிறேன்.

வானத்தை அண்ணாந்துபார்த்து, அங்கே பிரகாசித்திலங்கும் ஜோதிகளின் மகிமையை நினைக்கும்போது, அவைகளின் சிருஷ்டிகர்த்தாவை நோக்கி, ஆ! தேவனே! நீர் எவ்வளவு பெரியவர்! நான் எவ்வளவு அற்பன்! என்று சங்கீதக்காரன் அதிசயப்படுகிறான். ஆகிலும் அதிலும் பெரிய அச்சரியம் வேறொன்றுண்டு.

#### (ii) மனுஷ ஜாதியின் தியானம் (வா. 5—8.)

தேவனைப்பார்க்கிலும் அவனைச்சற்றே சிறியவனாக்கினீர்!
மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடி சூட்டினீர்!
உமது கரத்தின் கிரியைகளின்மேல் அவனுக்கு ஆளுகை தந்
சகலத்தையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்! [தீர்!

ஆடுமாடுகளெல்லாவற்றையும்
காட்டு மிருகங்களையும்
ஆகாயத்துப் பறவைகளையும்
சமுத்திரத்து மச்சங்களையும்
சமுத்திரத்தின் பாதைகளில் செல்லுகிறவைகளையும்—
(சகலத்தையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்!)

அற்ப மனுஷனுக்கு நீர் அளித்திருக்கும் வல்லமையும் ஆளுகையும் எத்தனை ஆச்சரியம்! அவன் மூலமாய் நீர் விளங்கச்செய்யும் பெலனும் வல்லமையும் எவ்வளவு அதிகம்! என்கிறான்.

மானிடஜாதியின் மகிமையைப் புகழும் இவ்வசனம் நிறைவேறியிருக்கிறதாவென்று எபிரேய நிருப ஆக்கியோன் விசாரித்து (எபி. 2: 8), "இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக்காணோம்" என்று தீர்க்கிறார். மனுஷனுடைய சரீர பெலவீனத்தையும், ஆத்தும பலட்சியத்தையும் நினைக்கும்போது; அல்லது மனுஷன் சிருஷ்டிப்பொருளை ஆளுகிறதற்குப் பதிலாக சிருஷ்டிப்பொருள் அவனை ஆளுகிறதைப் பார்க்கும்போது; அல்லது பாவத்துக்கு அடிமைப்பட்ட அவன் மகிமையினாலும் கனத்தினாலுமல்ல, அவமானத்தினாலும் வெட்கத்தினாலும் முடிசூட்டப்பட்டிருப்பதைக் காணும்போது—எபிரேயர் நிருப ஆக்கியோன் தீர்ப்பு நிஜம் என்று நாமும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். ஆகிலும் பூரணமனுஷனான ஒருவர் "மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்." (எபி. 2: 9.) "தேவன் சகலத்தையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினாரே" (1 கொரி. 15: 27). மனுஷர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்த இயேசு, மரணத்தை உத்தரித்ததினிமித்தம் தேவபலத்தால் உயர்த்தப்பட்டு, மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக்கிறார்! மானிடதேகத்தைத் தரித்தவருக்கு என்ன மகிமை!

அவர் மகிமையும் வல்லமையும் அவரடியாருக்குமுண்டு. தலையின் மகிமை சரீரத்துக்குமுண்டே. அவரிடத்தில் ஜீவன் உண்டு. அந்த ஜீவன் சகலத்தையும் கீழ்ப்படுத்தும் ஜீவன். அவரை நம்பும் அடியாரனைவருக்கும் அந்த ஜீவனில் பங்குண்டு. அவருக்குள் நாமும் அனைத்தையும் கீழ்ப்படுத்துவோம். பெலவீனரும் அற்பீனருமாகிய நாம், இயேசுக்கிறிஸ்துவினால் தேவனுக்குத் துதியும் பெலனும் உண்டாக ஜீவிக்கலாம், உழைக்கலாம்! அற்பமான நீசப்பாவிக்குக் கிறிஸ்து இயேசுவினால் தேவன் எவ்வளவு மேன்மையை அளித்திருக்கிறார்:

பல்லவி. வா. 9. எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே!
உமது நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்
மையுள்ளது!



## தேலுங்குநாட்டுக் கடிதம்

கல்குத்தாவிலிருந்து திரும்பும் வழியில், மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களும் துரைசானியவர்களும மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களின் விருந்தினர்களாய் வந்தார்கள். அச்சமையத்தில் அவர்களைச் சந்தோஷமாகவும் கண்ணியமாகவும் ஏற்றுக்கொள்ள தகுந்த ஆயத்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டன. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவாகளின் காம்பவுண்டில் நாலு கூடாரங்கள் போடப்பட்டன. பிஷப் அவர்கள் வீட்டிலிருந்து ரயில்வே ஸ்டேஷன் காம்பவுண்டு வரைக்கும பாதை செவ்வைபண்ணப்பட்டு, தண்ணீர் தெளிக்கப்பட்டது. முக்கியமான இடங்களிலெல்லாம் 'சென்னை அத்தியக்ஷரவர்கள் வாழ்க' என எழுதப்பட்டு, கொடிகள் பறக்கவிடப்பட்டன. ரெயில் வண்டி ஸ்டேஷனுக்கு வருமுன்னாகவே, மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களும், அம்மாளவர்களும், மிஷனெரிமார், ஊழியர் அனைவரும் நல்வரவு கூற மாலைகளுடன் அங்கே ஆயத்தமாயிருந்தார்கள். சென்னை அத்தியக்ஷரவர்களும் துரைசானி அம்மாளும், அங்கே வந்திருந்த அனைவருடனும் முகமலர்ச்சியோடும் இனிய வார்த்தைகளோடும் பேசினார்கள். சிங்கரேனி கனம் D. S. தாவீது ஐயரவர்களும் கனம் S. பாக்கியநாதன் ஐயரவர்களும் அவர்களுக்கு மாலையிட்டு, நல்வரவு கூறியபின்னர், தம்பூர், மேளவாத்தியங்களுடன், கிராம உபாத்திமார் பாட்டுகள் பாடி, ஸ்டேஷனுக்கு வெளியே வர, போர்டிங் பையன்கள் கொடிகள் பிடித்து, பாடிக்கொண்டு வண்டிக்கு முன்னாகச் சென்றார்கள். பிஷப் அவர்கள் வீட்டினருகில் ஸ்திரீகள் குழந்தைகள் ஒழுங்காக நின்று மரியாதைசெய்தார்கள். கூடாரம் வரை சேர்ந்தபின் விடைபெற்று எல்லாரும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

**சந்திப்பு.** அன்று சாயங்காலம் 6-மணிக்கு சபையாரும் ஊழியரும் ஒன்றுகூடி, அவர்களைக் கண்டுகொண்டார்கள். பெரியவர்களுக்கு மாலை போட்டபின் கனம் D. S. தாவீது ஐயரவர்கள் வந்தனோபசாரம் படித்தார்கள்.

**மகாகனம் சென்னை அத்தியக்ஷரவாகள் மறுமொழி.**—நான் எட்டு வருஷங்களுக்குமுன் முதலாவதாக இங்கே வந்தபோது, இந்தச் சபை இவ்வளவு சீக்கிரமாய் விருத்தியாகும் என்று எண்ணவில்லை. இரண்டு வருஷங்களுக்குமுன் வந்தபோது உங்களுக்கு உங்கள் பிஷப் அவர்களை இட்டுக்கொண்டு வந்தேன். இப்போது நான் உங்கள் பிஷப் அல்ல. ஆனாலும் நீங்கள் காட்டும் அன்புக்காகவும், மரியாதைக்காகவும மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். தச்சுவேலையிலிருந்து எங்களுக்குக் கொடுத்த பொருள்களுக்காக மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

**கனம் அம்மாளவர்கள் சொன்ன மொழி.**—'நாங்கள் உங்கள் மத்தியில் அந்நியர்கள். ஆயினும் நீங்கள் காட்டிய அன்புக்காக மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அங்கே உங்களைச் சுற்றிலும் பிரகாசிக்கிற சின்ன தீபங்களைப் போல் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் பிஷப் அவர்கள் ஒரு மாதத்திற்குமுன் பட்டணத்திற்கு வந்தபோது ஒட்டர்கள் சேரி ஒன்றிற்கு அவர்களை அழைத்துக்கொண்டுபோனோம். அங்கே காலை 8-மணிக்கு ஒரு பெரிய மனிதன் வீட்டின்முன் படுத்துக்கொண்டிருந்தான். அவன் நித்திரை செய்தவனுமல்ல, வியாதியஸ்தனுமல்ல. ஆனால் குடித்து மயங்கிக் கிடந்தவன். அவன் மனைவியினிடத்தில் பேசினபோது, நல்ல மாளிகைவீடு கிடைத்தாலுந்தானென்ன, நல்ல பஞ்சாமிர்தம் கிடைத்தாலுமென்ன, குடியை விடவேமாட்டேன் என்று சொன்னாள். ஆகையால் அப்பேர்ப்பட்ட ஜனங்களின் மத்தியில் வேலைசெய்கிற தோர்ணக்கல் ஊழியருக்கு வேலை கஷ்டமானதுதான் என்றும், தெலுங்கு தேசத்திலிருந்து தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கு ஈன ஜனங்களுக்கு சீக்கிரத்தில் ஓர் மிஷன் அனுப்பவேண்டுமென்றும் சொன்னார்கள்.

**கனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பதில்.**- தங்கள் சிநேகிதர்' என்று அத்தியக்ஷரவர்கள் சொன்னதும், தாங்கள் 'அந்நியர்' என்று அம்மாளவர்கள் சொன்னதும் சரியல்ல. தோர்ணக்கல் அத்தியக்ஷரை 'கர்த்தருக்குள் சங்கை பொருந்திய தகப்பன்' என்று அழைப்பது வாஸ்தவமானால், மகாகனம சென்னை அத்தியக்ஷரவர்களை 'கர்த்தருக்குள் சங்கைபொருந்திய தாத்தா' என்று தோர்ணக்கல் டயோஸீஸிலுள்ளவர்கள் சொல்வது நியாயம் என்றார்கள். இவைகளைக் கேட்டதும் கூடிவந்திருந்த சபையார் ஏகமாய் கைகொட்டி ஆம் என்று மகிழ்ந்தனர். மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் ஜெபம்செய்து ஆசீர்வாதம் கூற கூட்டம் கலைந்தது.

**இரண்டாம் நாள்.**—காலை எட்டரை மணிக்கு இங்கிலீஷ் தெரிந்தவர்களுக்கு நற்கருணை ஆராதனை சென்னை அத்தியக்ஷரவர்களால் கொடுக்கப்பட்டது.

**ஆற்றில் ஞானஸ்நானம்.**—தோர்ணக்கல்லுக்கு மேற்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் கிருஷ்ணா நதியின் உபநதியோடு கலக்கும் சிற்றாறு ஒன்று ஓடுகிறது. இங்கே சுற்றிலும் 4 மைல் முதல் 9 மைல் தூரம் வரையிலுள்ள கிராமங்களில், ஞானஸ்நானம் பெறுகிறதற்கு யோக்கியதையுள்ளவர்களாக அங்கீகாரம் பெற்றவர்கள் சாயங்காலம் 3-மணிக்கு வந்து ஆயத்தமாய்க் காத்திருந்தார்கள். சில சிறு பிள்ளைகளும் வியாதியாயிருந்த இரண்டொருவருந்தவிர மற்றெல்லாரும் ஆற்றில் முழுகி ஞானஸ்நானம் பெறுவதையே விரும்பினார்கள். பெரும்பாதையுள்ள துறையில் பல தேவதைகள் உள்ள புளியமரத்தினடியில், தங்கள் பழைய ஜீவியத்தையும் ஸ்பாவத்தையும் அறிந்தவர்கள் முன்னிலையில், தாங்கள் பசாசு, பாவம், உலகத்தை வெறுத்து, மெய்யான ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க சம்மதித்து, புது ஜீவனுள்ள மார்க்கத்தில் நடப்போம என்று அவர்கள் தீர்மானம் செய்துகொண்ட விஷயத்தைப் பார்ப்பது எவ்வளவு சந்தோஷகரமான செய்தி. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களின் கேள்விக்கு அவர்கள் தீர்க்கமாகவும் முகமலர்ச்சியோடும் விடைசொன்னது அவர்களில் வாசமாயிருக்கும் தேவாவியின் பலமேயன்றி வேறெது? ஞானஸ்நானம்பெற்ற பெரியோர் 39. பிள்ளைகள் 18. இதனாலுண்டான புதிய சபை

கள் மூன்று. கிறிஸ்தவ குடும்பங்கள் 21. தேவுனிசங்கீஷ் தவிர, மற்றச் சபைகளிலுள்ளவர்கள் எல்லாரும் 2 வருஷ முதல் 6 வருஷங்கள் வரையிலும் போதனை பெற்று, பரீட்சிக்கப்பட்டு, அப்பால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். நமது பயிற்சிசாலையிலிருந்து அனுப்பப்பட்ட உபாத்திமாரால் கற்பிக்கப்பட்டவர்கள்.

ஆச்சையா தாவீது என்பவன் சில மாதங்களுக்குமுன் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்களின் கூட்டத்திலிருந்தான். அப்போது ஞானஸ்நானம் பெறுபவர்களின் பேரை கனம் பாக்கியநாதன் ஐயரவர்கள் எழுதியபோது தன் பேரை எழுதவேண்டாமென்றான். என்னவென்று விசாரிக்க, அன்று தன் கோழியை காட்டுப்பூனை பிடித்துக்கொண்டது, சகுனம் நன்றாயில்லை என்று சொன்னான். என்றாலும், அவன் படித்துக்கொண்டுவந்த விதமும், ஜீவியத்தில் காணப்பட்ட மாறுதலும் ஆச்சரியமாயிருந்தது. இரண்டு மாதங்களுக்குமுன் மறுபடியும் பேர் எழுதும் சமயத்தில் தன் பெண்சாதியை அயலூருக்கு அனுப்பிவிட்டான். காரியத்தை விசாரிக்க, அவனுக்கு இன்னோர் மனைவி உண்டென்றும், அவளையும் அழைத்துவரவேண்டுமென்று அவளை அனுப்பியிருந்தான் என்று தெரியவந்தது. "ஞானஸ்நானம் பெறாவிட்டாலும், இந்தச் சடலம் அழிந்துபோகும்வரை கிறிஸ்துவை விடமாட்டேன்" என்று சொன்னான். ஐயரவர்கள் இரண்டு மனைவிகள் கிறிஸ்துவுக்குப் பிரியமில்லை என்று எடுத்துக்காட்டியபின், அன்றைக்கே ஒரே மனைவியுடையவனாயிருக்கவும், எல்லாவற்றிற்கும் அதிகமாய்க் கிறிஸ்துவையே நேசிக்கவும் தீர்மானம்செய்துகொண்டான்.

சாயங்காலம் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் வீட்டில் கூட்டம்.—சாயங்காலம் 5½-மணிக்கு தமிழ் ஊழியர்களுக்கு தேயிலை பானம் கொடுக்கப்பட்டது. அச்சமயத்தில் மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களும் அம்மாளவர்களும் ஒவ்வொருவருடன் தனிமையாய்ப் பேசினதுமன்றி, மொத்தமாகவும் தேவஊழிய விஷயங்களைக்குறித்தும் ஆலோசனை வார்த்தைகள் பேசினார்கள்.

'தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இன்றுசெய்த முறை இந்த இடத்து ஜனங்களுக்கு மிகவும் ஏற்றது எப்படியென்றால், எவ்வளவு உரத்த சத்தமாயும் கருத்தோடும் வாசித்தாலும், இந்த ஜனங்களுக்கு ஏறாது. ஆனால் அத்தியக்ஷரவர்கள் செய்தபடி அவற்றை அவர்கள் வழங்கும் சாதாரண பாஷையில் சொல்லும்பொழுது ஜனங்கள் எவ்வளவு உணர்வோடும் உற்சாகத்தோடும் கேட்கிறார்கள்! வட இந்தியாவின் ஓர் கிராமத்தில் பாடம் வாசிக்கிறவர் முன்னதாகவே குறிக்கப்பட்ட வேதாகம பாகத்தை வாசித்து ஆராதனை சமையத்தில் கதை ரூபமாய் அதைச் சொல்லி வினவுகிறார். அங்கேயும் அந்த ஜனங்கள் உணர்வோடும் ஜாக்கிரதையோடும் தேவவசனத்தைக் கேட்கிறார்கள். அம்மாளவர்கள் சிங்கரேணி மிஷன் ஊழியத்திற்கு வேண்டிய ஆட்களும் பொருள்சகாயமும் கிடைக்கும்படி ஜெபிக்கக் கேட்டுக்கொண்டார்கள்.

மூன்றாம் நாள்.—ஜெப அறையில் ஊழியர் அனைவருக்கும் பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் பிரசங்கம்செய்தார்கள். ஆராதனைக்குப்பின் கனம் அத்தியக்ஷரவர்களும் அம்மாளவர்களும் தச்சுப்பட்டறை, நெசவுசாலை, பள்ளிக்கூடங்களைச் சுற்றிப்பார்த்து சந்தோஷப்பட்டார்கள். நெசவுசாலையில் நெய்த புடவை ஒன்றை விலைக்கு வாங்கினார்கள்.

ஞாபகார்த்த அத்தியக்ஷர் ஆலய அஸ்திபாரம்.—சாயங்காலம் 3½-மணிக்கு சபையாரும் ஊழியரும் அத்தியக்ஷரவர்கள் பங்களாவினின்று புறப்பட்டு, பாடிக்கொண்டு, அஸ்திவாரம்போடுமிடத்துக்கு வந்துசேர்ந்தார்கள். இதற்கென்று ஏற்கனவே அச்சிடப்பட்ட புஸ்தகத்தின்படி ஆராதனை நடந்தது. கம்மாமேடு, சிங்கரேணி முதலிய இடங்களிலிருந்து மிஷனெரிகளும் தேவ ஊழியர்களும் வந்தார்கள். அப்போது சென்னை அத்தியக்ஷரவர்கள் சொன்னது:—'முதலாவது 3 வருஷங்களுக்குமுன் தோர்ணக்கல்லில் உயிருள்ள சபைக்கு அசையாத அஸ்திபாரம் போட்டேன். இரண்டு வருஷங்களுக்குமுன் ஓர் அத்தியக்ஷாதீனத்திற்கு நிலையான ஓர் அஸ்திபாரம் போட்டேன். சபையின் வளர்ச்சிக்கும் நாளுக்குநாள் ஊன்றக் கட்டப்படுவதற்கும் இது அதிக அநுகூலமாயிருந்துவருகிறதற்காகச் சந்தோஷப்படுகிறேன். இப்போதும் இந்தச் சபைக்கு ஓர் கல்லால் கட்டப்படும் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடும் சலாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது'

இப்படியாக ஞாபகார்த்த ஆலய அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது. 'கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற தொகை இன்னும் வரவில்லை. ஆனாலும் நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிகொண்டுவந்து ஆலயத்தைக் கட்டுங்கள். நான் அதில் பிரியமாயிருப்பேன். அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் உரைப்பதுபோல் கேட்கிறதில்லையா?

எஸ். வி. சுவாமிதாஸ்.

---

## வந்தனோபசாரப் பத்திரிகை

மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களுக்கும், அம்மாளவர்களுக்கும் கொடுத்த வந்தனோபசாரப் பத்திரிகை.—

மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களுக்கும் அம்மாளவர்களுக்கும், திருநெல்வேலி இந்திய மிஷன், சிங்கரேணி மிஷன் சபையாரும், ஊழியரும், மிஷனெரிமாரும் தாங்கள் எங்கள் மத்தியில் வந்திருக்கும் இச்சமையத்தில் மிகவும் சந்தோஷமாய் நல்வரவு கூறுகிறோம்.

1906-ம் வருஷம் தாங்கள் கொடுத்த ஞானஸ்நானத்துக்குச் சாக்ஷிகளாய் கூடிவந்திருந்த எங்களுக்கு தோர்ணக்கல் மிஷன் முதல் கிறிஸ்தவர்களைச் சபையில் சேர்த்து, மிஷனை ஸ்தாபித்து எட்டு வருஷம் ஆனதுபோல் தோன்றுகிறதில்லை. தேவனுடைய ஆச்சரியமான கிருபையால் இன்றைக்கு சபைகளுள்ள 46 கிராமங்களும், கிறிஸ்தவ போதனைபெறும் 850 மெம்பர்களும், ஞானஸ்நானம்பெற்ற 700 கிறிஸ்தவ அங்கங்களும், சிங்கரேணி மிஷன் பலனாக எல்லாந்து, பாக்கால் தாலுகாக்களில் கிறிஸ்தவ போதனை பெறும் 414 ஆட்களும் உண்டு. இந்த இரண்டு மிஷன் சம்பந்தமாயும் குருப்பட்டம்பெற்ற 3 மிஷனெரிகளும், பட்டம்பெறாத 10 தமிழ் ஊழியரும், 43 தெலுங்கு ஊழியர்களும் வேலைசெய்கிறார்கள். இவர்கள் சபை சம்பந்தமாயும், சுவிசேஷ பிரபல்லிய விஷயமாயும், பள்ளிக்கூட சம்பந்தமாகவும் ஊழியம் நடப்பித்து வருகிறார்கள்.



இப்பிராந்தியங்களில் மிஷன்வேலையாரம்பமான காலமுதல், அருமை அத்தியக்ஷரவர்களும் அம்மாளவர்களும் தோர்ணக்கல் மிஷன் ஊழியத்துக்கு காட்டிவரும் அநுதாபத்திற்காகவும் சகாயத்துக்காகவும் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். தங்கள் முயற்சியால், விசேஷமாய் பான் ஆங்கிலிக்கன் கிரான்று கிடைத்தது. இதினால் பையன்கள் பள்ளிக்கூடம், பயிற்சிசாலை மாணாக்கர் வீடுகள், மேடுதபல்லியில் மிஷனெரி பங்களாமுதலியன கட்டப்பட்டன. இஃதன்றியும் தச்சு, நெசவுசாலைப் பணிமுட்டுகளும், கட்டடங்கள் கட்ட ஆரோக்கியமும் விஸ்தாரமுமான நிலமும் கிடைத்தது தங்கள் பேருதவியே. அம்மாளவர்களின் பிரயாசத்தால் தோர்ணக்கல்லில் மிஷனெரிக்கு வீடுகட்ட பொருள் உதவியும் மிஷனெரிகளின் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளமும் பெற்றுக்கொண்டதற்காகவும் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

இந்த மிஷனில் தாங்கள் இரண்டுபேருக்கு குருப்பட்டம் கொடுத்ததுமல்லாமல், தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனமாகவும், விசேஷமாய் முதல் இந்திய அத்தியக்ஷ ஸ்தானமாக இருக்கும் சலாக்கியத்தையும் பாக்கியத்தையும் நாங்கள் பெற காரணமாயிருந்தீர்கள் சிங்கரேணி மிஷனை அமைத்து அதற்குச் சகாயம் செய்துவருகிறீர்கள். இதின்பலனாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான ரட்சிப்பின் செய்தி, அறிவிக்கப்படாத சுற்றுப்புறங்களுக்குக் கொண்டுபோகப்படுகிறது. கனம் அம்மாளவர்கள் இந்த மிஷனுக்கு செகரெற்றரியாகச் செய்துவரும் நன்மை மிகவும் அளவிறந்தது. இன்னும் சென்னை அத்தியக்ஷ மண்டலத்தில், குழந்தைப் பருவத்திலுள்ள இந்த மிஷன்களுக்காகச் செய்துவரும் மன்றாட்டும், இந்த டயஸீஸின் வேலைக்காரச் செய்துவரும் ஜெபமும் ஓர் பெரிய உதவியே.

இரண்டு வருஷங்களுக்குமுன் தாங்கள் எங்களைச் சந்தித்தபோது இதைச் சுயாதீனமுள்ள ஓர் பிரத்தியேகமான அத்தியக்ஷ மண்டலமாக ஸ்தாபித்து, ஓர் இந்திய பிஷப் அவர்களை நியமித்ததற்காகவும் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். தேவ ஒத்தாசையினால் சபைகள் விருத்தியடைந்து வருகின்றன என்பது அடியிற்காட்டிய விபரங்களினால் தெரிகிறது:—

| வருஷம். | குருமார். | பட்டம் பெறாத ஊழியர். | மொத்தக் கிறிஸ்தவர்கள். | ஞானஸ்நானக்காரர். |
|---|---|---|---|---|
| 1912 | 6 | 172 | 8318 | 4704 |
| 1914 | 11 | 215 | 8819 | 5002 |

கடந்த இரண்டு வருஷங்களில் தெலுங்கு ஊழியர் ஆவிக்குரிய ஜீவனில் பெருகவும், குழந்தைப்பருவத்திலுள்ள சபைகள் கிறிஸ்துவின் சத்தியோபதேசங்களை அறியவும், குருமார் ஞானவளர்ச்சியிலும் அறிவிலும் தேறவும், சபைகள் மதுபானத்தை விலக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன என்று கர்த்தருக்கு மகிமையுண்டாகத் தெரிவிக்கிறோம். இந்த அத்தியக்ஷ மண்டலத்திலுள்ள நாலு சபைகளும் இத்தன்மையான பற்பல கட்டுகளினால் இணைக்கப்பட்டு, சபையில் ஞானஜீவன் உண்டாகச் செய்யப்படும் ஏதுக்களுக்காக ஒன்றுபோல முயற்சிப்பதினால் வரும் ஆசீர்வாதத்தையும் உதவியையும் அடைய ஆரம்பித்திருக்கின்றன.

திருநெல்வேலிச் சபையார் முன்போலவே தோர்ணக்கல் மிஷன் வேலையை உற்சாகமாய்த் தாங்கிவருகிறார்கள். சென்னை, திருவாங்கூர், ரங்கூன், கொழும்பு, சிங்கப்பூர், அத்தியக்ஷமண்டலங்களிலிருந்தும் உதவி வந்துகொண்டிருக்கின்றன. போன வருஷம் சேகரமான தொகை ரூ. 16,186—13—0. இதில் ரூ. 2285—12—6. திருநெல்வேலிக்கு வெளியேயிருந்து வந்தன. மனோற்சாக காணிக்கையின்மேல் சார்ந்திருக்கும் சங்கமாகிய இதற்கும் மகா நெருக்கமும் கவலையுமான காலந்தான். தாங்கள் செய்யவேண்டியதைச் சந்தோஷமாய்ச் செய்யவும், வழக்கமான வேலை நடந்தேறவும் தேவன் தமது பிள்ளைகளின் இருதயத்தை இளகப்பண்ணுவார் என்று சந்தேகமற நம்புகிறோம். தோர்ணக்கல்லில் ஆலயம் கட்டுவதற்கு கமிற்றிமார் 150,00 ரூபாய் சேகரிக்கப்போகிறார்கள். இதற்கென்று இந்த நாள்வரை சேகரமான தொகை ரூ 6000. பாளையங்கோட்டைக் கமிற்றிமார் வேண்டுகோளின்படி மேற்படி ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடத் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். 8 வருஷங்களுக்குமுன் தாங்கள் ஸ்தாபித்த சபைக்கு ஓர் ஆலயத்தையும் தாங்களே அஸ்திபாரம்போடுவது மிகவும் ஏற்றதே.

இங்கே நடக்கும் பற்பல வேலைகளைக் குறித்தும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். போர்டிங் ஸ்கூலில் 23 பையன்களும், 17 பெண்பிள்ளைகளும் படிக்கிறார்கள். பையன்களுக்கு 5-ம் வகுப்புவரையிலும், பெண்பிள்ளைப் பிள்ளைகளுக்கு நான்காம் வகுப்புவரையிலும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மசூலி பட்டணத்திலுள்ள நோபில் காலேஜைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களில் அநுசரிக்கப்படும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தினம் இரண்டு வேளைகளில் வேத பாடங்களும் படித்து, இரண்டு மணி நேரம் தச்சுவேலையும் பழகுகிறார்கள். நெசவுசாலையில் கைத் தறி இப்போதுதான் ஏற்படுத்தியிருக்கிறது. கம்மாமேட்டில் ஓர் பெரிய லோயர் செக்கண்டரி பாடசாலை உண்டாகுமென்று எதிர்பார்ப்பதால், இந்த நெசவுசாலையே இந்த டயோஸீஸ்க்கு முக்கிய தொழில்சாலையாகும் என்று நம்புகிறோம். இந்த வருஷம் டிரேயினிங் ஸ்கூல் நடக்கவில்லை. இந்த மிஷனிலுள்ள 30 உபாத்திமாரில் 14 பேரும், உபாத்திமார் மனைவிகளில் 7 பேரும் இங்கேயே பயின்றவர்கள். வைட்ஹெட் என்டோமென்று தொகையினால் வாங்கப்பட்ட நிலத்தைப் பயிர்செய்து, இருஉபாத்திமார் சபைவேலைசெய்து

வருகிறார்கள். ஒருவன் தச்சவேலை செய்து பணம் சம்பாதித்து, கர்த்தருடைய ஊழியம்செய்கிறான்.

கடைசியாக, தங்களுக்கும் அம்மாளவர்களுக்கும் எங்களைப் பார்க்க வந்ததற்காகவும் மிகவும் நன்றிசொல்லுகிறோம். இந்தியாவில் கிறிஸ்துவின் இராஜ்யம் மேன்மையடைவதற்காக தாங்கள் செய்யும் எல்லா முயற்சிகளிலும் தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்கள் தங்கியிருக்கவும், தங்களுக்குக் கடவுள் தீர்க்காயுளையும் பெலனையும் அருளவும் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,
தேவனுக்குள் சங்கைபிதாவின் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள்,
தோர்ணக்கல் மிஷன் அங்கங்கள்
சிங்கரேணி மிஷன் அங்கங்கள்.

---

## மிஷனேரிமார் நடபடிகள்

அப். 23: 12—28: 31.

### III. ரோம அதிபதிகள்முன் சாட்சி.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், பரி. ஸ்தேவானுக்கும் மரணாக்கினை விதித்த சனகரீம் சங்கத்தார் பரி. பவுலையும் கொன்றிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ரோம ராஜ்ய அதிகாரமோ அவ்வித வன்கொலையை இச்சமயத்தில் தடுத்தது. ஆகிலும், யூதரில் நாற்பதுபேர் பவுலைக் கொல்லும்படி சபதம்பண்ணிக்கொண்டு, பிரதான ஆசாரியர்களோடும், மூப்பர்களோடும் சதியோசனைசெய்து, மோசடியாய் அவரைத் திரும்பவும் சங்கத்திற்குக் கொண்டுவரும்படி யத்தனம்பண்ணினார்கள். இந்தச் சர்ப்பனை ரோமச் சேனாபதியின் காதுகளில் விழுந்தபோது, இவ்வித மோசத்தினின்று பவுலைத் தப்புவிக்கும்படி இரவிலேயே நூற்றுக் கதிபதிகள் வசமாய் அவரைச் செசரியாவுக்கு அனுப்பிவிட்டான்.

தேவாலயத்தில் பிடிபட்டு ஐந்து நாளைக்குப்பின்பு செசரியாவில் தேசாதிபதியின்முன் விசாரணை நடந்தது. அப்போஸ்தலனுக்கு விரோதமாய் யூதர் சொன்ன குற்றம் மூன்று:—(1) தேச சட்டத்திற்கு விரோதமாகக் கலகம் எழுப்புகிறவன் என்பது, (2) யூதப்பிரமாணத்திற்கு விரோதமாக மதபேதம் உண்டாக்குகிறவன் என்பது, (3) தேவாலயப்பிரமாணத்திற்கு விரோதமாக அதைத் தீட்டுப்படுத்தினவன் என்பது. பரம எஜமான்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களும் இவைப்போன்றவைதான். (1) அவர் ஜனங்களுக்குள்ளே கலகம் உண்டாக்கித் தன்னை இராயன் என்று சொல்லுகிறவரென்றும், (2) யூதப்பிரமாணத்துக்கு விரோதமாகத் தேவதூஷணஞ் சொன்னவரென்றும், (3) தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடுவேனென்று தேவாலயத்திற்கு விரோதமாய்ப் பேசினவரென்றும் குற்றம்சாட்டினார்களே. இதற்குப் பரி. பவுல் 24: 10—21-ல் விடைபகருகிறார். முதற் குற்றத்தை மறுக்கிறார். (வ. 14—17). மூன்றாங் குற்றம் சுத்தப் பொய் என்று சாதிக்கிறார். (வச. 18—20). ரோம அதிபதியினிடம தன் சகல நியாயங்களையும் சவிஸ்தாரமாய்ச் சொல்வது அவசரமென்று அப்போஸ்தலன் நினைக்கவில்லை. பேலிக்ஸ்க்கும் காரியம் நன்றாய் விளங்காததாகத் தோன்றுகிறது. ஆகையால் விசாரணையைக் கடத்திவைத்துக் கண்டிப்பில்லாத காவலில் வைத்தான்.

ஆயினும் ரோம அதிபதியினிடம் சொல்லவேண்டிய சாட்சியை அப்போஸ்தலன் சொல்லாமல்விடவில்லை. யாக்கோபைக் கொன்ற ஏரோது அகிரிப்பாவின் குமாரத்தியும், 26-ம் அதிகாரத்தில் சொல்லப்படும் அகிரிப்பாவின் சகோதரியும், எமசாவின் ராஜாவாகிய அசிசஸ் என்பவன் மனைவியுமாகிய துருசில்லாளை பேலிக்ஸ் மனைவியாக வைத்துக்கொண்டிருந்தான். இவள் யூத ஸ்திரீயானதால், பவுலைப் பார்க்கவும், அவர் வசனத்தைக் கேட்கவும் ஆசைப்பட்டதாகத் தோன்றுகிறது. பீஸன் கைப்பிரதியில் அவ்வாறே கண்டிருக்கிறது. அவளைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பேலிக்ஸ் அப்போஸ்தலனை வரவழைத்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை அவன் சொல்லக்கேட்டான். இவ்வித சமயத்தை அப்போஸ்தலன் வீணே போக்குகிறவரல்லவே. முன்னொரு சமயத்தில் ஓர் ஏரோதுவினிடத்தில் பேசின யோவான்ஸ்நானகனைப்போல, இயேசுநாதரைப்பற்றிக் கேட்க விரும்பின அவர்களுக்கு அப்போஸ்தலனும் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசினார். பிலிப்பிப் பட்டணத்து காவற்கூடத்தில் சிறைச்சாலைக்காரனைத் திருச்சபையில் சேர்த்த அப்போஸ்தலன், செசரியாவின் சிறைச்சாலையில் பேலிக்ஸைக் குணப்படுத்தலாமென்று ஆசித்தாராக்கும்! பேலிக்ஸோ மிஞ்சிவிட்டான். அப்போஸ்தலன் பாவத்தைக் கண்டித்துணர்த்தினபோது, பேலிக்ஸ் பயந்து நடுங்கினபோதிலும், சரீர இச்சையும், பண ஆசையும் மனந்திரும்பவிடாமல் அவனைப் பிடித்துக்கொண்டது.

பரிசுத்த பவுல் செசரியாவிலே இரண்டு வருஷம் காவல்பண்ணப்பட்டிருந்தார். அவ்விரண்டு வருஷங்களிலும் அப்போஸ்தலனும் அவரோடிருந்தவர்களும் சும்மா இருக்கவில்லை. எப்படியும் பரி. லூக்கா தன் சுவிசேஷத்தை இக்காலத்திலேயே எழுதி முடித்திருக்கவேண்டும். நடபடி புஸ்தகத்தின் முதல் பன்னிரண்டு அதிகார சம்பவங்களையும் பரி. லூக்கா விசாரித்தறிந்திருக்கக்கூடும்.

இரண்டு வருஷம் முடிந்தபின்பு பேலிக்ஸ் போக, பெஸ்து வந்தான். இவன் பேலிக்ஸைப் பார்க்கிலும் கொஞ்சம் நல்ல மனுஷன். ஆகிலும் யூதருடைய பிரியத்தைச் சம்பாதிக்க இஷ்டமுள்ளவனாய், அவர்கள் சதியோசனையை அறியாமல், எருசலேமிலே நியாயம் தீர்க்கப்பட உனக்குச் சம்மதமாவென்று அப்போஸ்தலனைக் கேட்டான். அப்பொழுதான் அப்போஸ்தலன் தன குற்றமின்மையைச் சாதித்து, யூதருடைய கைகளினின்று விடுதலைபெறத்தக்கதாக “இராயருக்கு அபயமிடுகிறேன்” என்றார். ரோமாபுரிக்குப் போவது இவ்வாறு காயமாயிற்று.

பெஸ்து இதை ஒப்புக்கொண்டபோதிலும், பரிசுத்த பவுலை இராயனுக்கு அனுப்பும்பொழுது எழுதவேண்டிய



தின்னதென்று அறியாமலிருந்தபடியால், இன்னும் கொஞ்சநாள் அவரைக் காவலில் வைத்தான். புது நியாயாதிபதிக்கு பேட்டி கொடுக்க அகிரிப்பா ராஜா வந்தபோது, அவன் முன்பாக அப்போஸ்தலனைக் கொண்டுவந்து நிறுத்தினான். இவ்விதமாய் அப்போஸ்தலன் ரோம அதிபதியின் முன்பாகவும், யூத ராஜா முன்பாகவும் சாட்சி கொடுக்கச் சமயம் பெற்றார்.

இந்த அகிரிப்பா யாக்கோபைக் கொன்ற (அதி. 12) அகிரிப்பாவின் குமாரன், துருசில்லாளின் சகோதரன். மற்ற ஏரோதுகளைப் பார்க்கிலும் ஒருவாறு யோக்கியன். ஏரோது அந்திப்பா முன்பாக இயேசுநாதர் வாய்திறக்கவில்லை. துருசில்லாள் முன் பரி. பவுலும்கூட தமது விசுவாசத்தைத் தெரிவிக்கவில்லை. அகிரிப்பாவினிடத்திலோ தமது குணப்படுதலைக் குறித்தும், தமது ஊழியத்தின் மூல ரகசியத்தைக் குறித்தும் வெகு தெளிவாய் எடுத்துரைத்தார். அவர் பிரசங்கத்தைப் பின்வருமாறு பிரிக்கலாம்:—

அதி. 26: 1—3. முகவுரை
4—11. யூதமார்க்க ஜீவியம்
12—18. பரம தரிசனமும், குணப்படுதலும்
19—23. அதின் பலனாக பிற்கால ஊழியம்

பரி. பவுல் இங்கே கொடுத்த சாட்சியின் சுருக்கம் இதுதான்:—யூத மதத்தில் வைராக்கிய புருஷனான நான், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் அவரால் யூதருக்கும் புறஜாதிகளுக்கும் இரட்சிப்பு வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும் சாட்சியாக அறிவிப்பதே என்பேரில் சொல்லப்படத்தக்க குற்றம். ஆகிலும், வானத்திலிருந்து தோன்றின தேவதரிசனமே என்னை இவ்வாறு மாற்றினது என்றார். தரிசனமென்ற பேச்சு பெஸ்துவுக்கு விளங்கவில்லை. பவுல் அதிக ஞானத்தினால் பிதற்றுகிறதாகக் கண்டித்தான். அப்போஸ்தலனோ இதுவே சமயமென்றெண்ணி, அகிரிப்பாவோடு நேரில் சம்பாஷித்து, அவனை உணர்த்த ஆரம்பித்தார்.

“இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார், ஆகையால் தைரியமாய் அவருக்குமுன்பாகப் பேசுகிறேன். இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன், இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல. அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? என்றார். இப்படி நேரில் கேட்ட கேள்விக்கு அகிரிப்பா ஒன்றும் பேசாமலிருந்தான். பரி. பவுலோ அப்படி அவனை விட்டுவிடாமல், விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்று அவனுக்காக உத்தரவு சொல்லிக்கொண்டார். இதைக் கேட்ட அகிரிப்பா, ஒருவேளை புன்சிரிப்போடு, “நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்” என்றான். இவ்வசனத்தைச் சரியானபடி திருப்பினால் ‘இவ்வளவு சுளுவாய் என்னைக் கிறிஸ்தவனாக்கப்பார்க்கிறாயே’ என்றிருக்கவேண்டும். அதற்குப் பரி. பவுல், ‘சுளுவாயானாலும் சரி, வலுவாயானாலும் சரி, நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், இந்தக் கட்டுகள் தவிர என்னைப்போலிருக்கும்படி தேவன் தயைசெய்யவேண்டுமென்று வாஞ்சிக்கிறேன்’ என்றார். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண என்ன வாஞ்சை! சாட்சி சொல்ல என்ன தைரியம்!

‘இந்த மனுஷன் மரணத்துக்காவது, கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை’ என்ற தீர்ப்பைப் பெற்று, அப்போஸ்தலன் ரோமாபுரிக்கு இராயனிடத்தில் அனுப்பப்பட்டார்.

### IV. ரோமாபுரியில் சாட்சி 27: 1—28: 31.

‘ரோமாபுரியிலும் நீ என்னைக் குறித்து சாட்சிகொடுக்கவேண்டும்’ என்ற தேவவாக்கு எத்தனை விபரீதமாய் நிறைவேறுகிறது! ரோமராஜ்யத்தின் பிரதான நகரில் கிறிஸ்துவுக்காகச் சாட்சி சொல்லவேண்டுமென்று விரும்பின தாசன் சர்க்கார் செலவில் பிரயாணம் செய்யவேண்டுமென்பது தேவ தீர்மானமாக்கும்!

கடற்பிரயாணத்தையாவது, கப்பற்சேதத்தையாவது, கப்பலிலும் மெலித்தாவிலும் பரி. பவுல் அளித்த சாட்சியையாவது இங்கே விஸ்தரிப்பது அவசியமில்லை. ரோமாபுரியில் அவர் கொடுத்த சாட்சியை மாத்திரம் சொல்லி, இப்பாடங்களை முடிப்போம்.

இவ்வளவு காலம் செய்த வழக்கத்தின்படி ரோமாபுரியிலும் முதல் முதல் யூதர்களுக்குச் சாட்சி சொல்லுகிறார். தான் கைதியாயிருக்கும் காரணத்தை விவரித்து, அப்பால் பழைய ஏற்பாட்டு ஆகமங்களிலிருந்து, இயேசுவுக்கடுத்த விசேஷங்களைச் சாட்சியாக அறிவித்தார். “சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள்” (28: 24). அப்பால் அப்போஸ்தலன் தேவ தீர்மானத்தை அவர்களுக்கு விவரித்து, தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்படுகிறதென்று சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டார்.

இது நடந்தபின்பு, அப்போஸ்தலன் இரண்டு வருஷமுழுவதும் ரோமாபுரியில் தங்கி, தடையில்லாமல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தார். இதுதான் நடபடி புஸ்தகத்தின் கடைசி வாக்கியம். புஸ்தகத்தின் ஆரம்பத்திற்கும் முடிவுக்கும் எவ்வளவோ பேதம்! ‘இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்’ என்ற கேள்வி இந்நூலின் ஆரம்பத்தில் வருகிறது (1: 6). ராஜ்யம் திரும்பக் கொடுக்கப்பட்டாயிற்று என்று நூலின் முடிவில் பார்க்கிறோம். ஆகிலும், இஸ்ரவேலருக்கல்ல, புறஜாதியாருக்கே அது கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதரால் தள்ளப்பட்டு, புறஜாதியாரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது; புறஜாதியாரின் அப்போஸ்தலன் யாதொரு தடையுமின்றி, புறஜாதியார் ராஜ்யத்தின் தலைநகரில் திருச்சபைக்கடுத்தவைகளைப் போதிக்க சமயம் பெற்றார்!

வாடகைக்கு எடுத்த ரோம வீட்டிலிருந்து அப்போஸ்தலன் எழுதின நாலு நிருபங்கள் நமக்கிருக்கின்றன. இவைகளிலிருந்து இவ்விரண்டு வருஷ சரித்திரத்தை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். தீமோத்தேயு, அரிஸ்தர்க்கு, யுஸ்து, மாற்கு, தேமா, லூக்கா என்பவர்கள் அப்போஸ்தலனோடு கூட இருந்ததாகத் தெரிகிறது. பரி. பவுல் ஓர் போர்ச்சேவகனோடு சேர்த்துச் சங்கிலியிடப்பட்டார். அவருடைய

செலவுக்காக பிலிப்பியிலிருந்து எப்பாபிரோதீத்து மூலமாய் கொஞ்சம் சகாயம் வந்தது (பிலி. 4: 18). பிலிப்பியருக்கு நன்றியறிதலாகவும், அவர்களுக்குள் காணப்பட்ட கசுறிபேதங்களை எச்சரிக்கவுமாக பிலிப்பியர் நிருபத்தை எழுதினார். அவரோடேகூட நாள்தோறும் சங்கிலி மாட்டப்பட்ட இராயஅரமனைப் பட்டாளத்தைச் சேர்ந்த போர்ச்சேவகர் பலர் விசுவாசிகளானார்கள் (பிலி. 4: 22). மேலும், கொலோசேயிலிருந்து எப்பாபிரா வந்தான். கொலோசேயிலுள்ள ஓர் கிறிஸ்தவனாகு பிலேமோன் வீட்டிலிருந்து தப்பி ஓடிவந்த ஒநேசிமுவும் பரி. பவுலினிடத்தில் வந்துசேர்ந்து, அவரால் குணப்படுத்தப்பட்டான். அப்போஸ்தலன் ஒநேசிமுவை அவன் எஜமானிடத்தில் திரும்ப அனுப்பி, அவன் கையில் சிபார்சுக் கடிதம் ஒன்று கொடுத்தார். இதுவே பிலேமோன் நிருபம். எபேசியர் நிருபம், கொலோசேயர் நிருபம் இதே சமயம் எழுதப்பட்டு, தீகுக்கு மூலமாய் ஆசியாவின் சபைகளுக்கு அனுப்பப்பட்டன.

நடபடி புஸ்தகம் இவ்விடத்தில் முடிவடைகிறது. ஒருவேளை பரி. லூக்காவுடைய நோக்கத்திற்கு இதுபோதும் என்று நினைத்தாரோ, அல்லது மீதியான சம்பவத்தை வேறொரு பிரபந்தத்தில் எழுத நினைத்தாரோ தெரியவில்லை.

மீதியான சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லுவோம். இரண்டு வருஷத்திற்குப்பின் அப்போஸ்தலன் விடுதலையடைந்து, மேற்கே பிரயாணம் போய், பரி. கிளெமெந்து சொல்லுகிறபடியும், ரோமர் 15: 28-ல் அப்போஸ்தலன் ஆசித்தபடியும் ஸ்பானியாவுக்குப் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து திரும்பி, கிரேத்தாத்தீவில் வந்திறங்கி, தீத்துவோடேகூட அங்கே சிலகாலம் பின்னிட்டார். தீத்துவை அங்கே நிறுத்தி புறப்பட்டதாகத் தெரிகிறது (தீத்து 1: 5). அங்கிருந்து ஆசியாவுக்குப் போனார். இச்சமயத்திலேயே எபேசுவில் பிகெல்லு, எர்மோகேனே என்பவர்கள் அப்போஸ்தலனை விட்டு விலகினார்களென்றும் (1 தீமோ. 1: 15), கன்னானாகிய அலெக்சாந்தர் தீமைசெய்தான் (2 தீமோ. 4: 14) என்றும், ஒநேசிப்போரு அவருக்குப் பற்பல உதவிசெய்தான் என்றும் (2 தீமோ. 1: 18) அனுமானிக்கலாம். அப்பால் எபேசுவில் தீமோத்தேயுவை வைத்துவிட்டு, மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டார் (1 தீமோ. 1: 3) போகிற வழியில் கடற்கரைப் பட்டணமாகிய மிலேத்துவில் துரோப்பீமுவை வியாதியினிமித்தம் விட்டுவிடவேண்டியதாயிற்று (2 தீமோ. 4: 20). துரோவாவில் கார்ப்பு வீட்டில் சில சாமான்களையும் விட்டுவிட்டார் என்று தோன்றுகிறது (2 தீமோ. 4: 14). மக்கெதோனியாவிலிருந்து எபேசுவில் தாம் விட்டுவந்த தீமோத்தேயுவுக்கு முதலாம் தீமோத்தேயு நிருபம் எழுதினார். அங்கிருந்து சேனா, அப்பொல்லோ என்பவர்கள் மூலமாய் கிரேத்தாவில் அவர் விட்டுவந்த தீத்துவுக்கு தீத்து நிருபம் எழுதி அனுப்பினார் (தீத். 3: 13). அதற்குக் கொஞ்சக் காலத்திற்குப்பின், தீத்துவின் ஸ்தானத்திலிருக்க அர்த்தேமாவை கிரேத்தாவிக்கு அனுப்பி, தீத்துவை நிக்கொப்போலிக்கு தம்மைச் சந்திக்க வரவழைத்தார் (தீத்து 3: 12). கொரிந்துவிலிருந்தபோது; எப்படியும் கிரெஸ்கே, தேமா, எராஸ்து இவர்கள் கூட இருந்ததாகத் தோன்றுகிறது. இங்கிருந்து தேமா தெசலோனிக்கே பட்டணத்திற்குப் போய்விட்டான் (2 தீமோ. 4: 10). எராஸ்து கொரிந்து பட்டணத்திலேயே இருந்துவிட்டான் (2 தீமோ. 4: 20).

கி. பி. 64 ஜூலை 19-ம் தேதியில் ரோமாபுரி அக்கினி சேதமடைந்தது. நேரோ தன்பேரிலுள்ள சமுசயத்தை நீக்குவதற்காக கிறிஸ்தவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களுக்குள் விசேஷித்த மிஷனெரியாயிருந்த பவுலைப் பிடிக்க ஏற்பாடுபண்ணினான். இவ்வாறு இரண்டாந்தரம் பவுல் கைதியாக ரோமாபுரிக்குக் கொண்டுவரப்பட்டார். ஆனாலும் இச்சமயத்தில் பவுல் தன்னைத் தப்புவித்துக்கொள்வது லேசாயிருந்திருக்கும். ரோமாபுரி அக்கினிச் சேதமடைந்தபொழுது, அப்போஸ்தலன் அங்கிருக்கவில்லையென்று வெகு லேசாய் ரூபித்திருக்கக்கூடும். 'நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ........ கர்த்தர் எனக்குத் துணைநின்று என்னைப் பலப்படுத்தினார். சிங்கத்தின் வாயிலிருந்தும் இரட்சிக்கப்பட்டேன் என்று இதைக் குறித்து எழுதுகிறார் (2 தீமோ. 4: 16, 17).

### ஜெப விஷயங்கள்

1. புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்காக துதி.

2. தோர்ணக்கல் ஆலயத்திற்காக பணம் சேர்க்கும்படி ஜனங்கள் காட்டும் உற்சாகத்திற்காகவும் துதி.

3. சேர்ப்பின் பண்டிகைகளுக்காக துதி. தோர்ணக்கல் (பெப்ருவரி), மேடிதப்பல்லி (மார். 10உ), முப்பாரம் (12உ), கிரிராமகிரி (15உ).

1. மாறுக்கோட்டை லாக்கா, பொட்லாடா, ஜெயாரம் என்ற இடங்களில் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களுக்காக ஜெபம்.

2. பர்வதகிரி, ஜல்லிப்பல்லி, மன்னேகூடத்தில் புதிதாய் கிறிஸ்தவர்களாகி இருக்கிறவர்களுக்காக ஜெபம்.

3. பள்ளிக்கூடங்களுக்காகவும் கைத்தொழில் கற்கிறவர்களுக்காகவும் ஜெபம்.

4, தெலுங்கு ஊழியருக்காக ஜெபம்.

5. கல்கத்தாவில் மார்ச்சு 13—23 வரை கூடும் அத்தியட்சர் மகா சபைக்காகவும் ஜெபம்.

6. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் ஏப்ரல் 10உ முதல் ஜூலை மத்திவரை திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷாதீனத்தில் நடப்பிக்கும் திடப்படுத்தல் ஆராதனை, குருப்பட்டாபிஷேக முதலிய திருப்பணிவிடைகளில் கர்த்தருடைய ஆசீர்வாதம் பெருக்கமாய் அமர்ந்திருக்கவும் ஜெபம்.

7. சங்கத்தின் வேலைவிர்த்திக்குப் போந்த அளவு காணிக்கை உதாரமாய்ப் படைக்கப்படும்படி ஜெபம்.

தனிப்பிரதி வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி அணா 3. 9 பிரதிகள் அரை அணா தபாற்கூலியில் போகும். வர்த்தமானி சந்தா மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மானேஜர்: மக-௱-௱-ஸ்ரீ V. S. காலிசன் அவர்கள்,
பாளையங்கோட்டை.

Editor: The Secretary I. M. S. T.

PRINTED AT THE DARLING PRESS, PALAMCOTTAH AND PUBLISHED BY THE INDIAN MISSIONARY SOCIETY OF TINNEVELLY.

AUGUST, 1914. Registered No. M. 481

# The Missionary Intelligencer

OFFICE OF REGISTRAR 29 SEP 1914 MADRAS.

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 8] ஆகஸ்ற்று 1914 [விலை பை 3

## CONTENTS

Editorial Notes ... ... ... ... 57
Our Burma Branch ... ... ... ... 57
From the Telugu Field ... ... ... 58
Singaranei Mission News ... ... ... 61
The Acts of the Missionaries ... ... ... 62

## பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 57
நமது பர்மா கிளைச்சங்கம் ... ... .. 57
தெலுங்கு நாட்டுக் கடிதம் ... ... ... 58
சிங்கரேனி மிஷன் வர்த்தமானம் ... ... 61
மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... 62

## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது சங்கத்தின் பலத்த கிளை ஒன்று பர்மாவிலிருப்பதை நமது நேயர் அறிவார்கள். திருநெல்வேலி நாட்டாரான நமது சகோதரர்தான் அதன் அங்கங்கள். அவர்கள் யாவரும் இந்திய மிஷனெரி சங்கத்தின் விஷயமாய் விசேஷித்த சிரத்தையெடுத்து அதிக உதவிபுரிந்துவருகிறார்கள். ஷை சங்கத்தார் கூடிய ஓர் கூட்டத்தின் நடபடிகள் இதற்குப் பின்னாலே வரைகிறோம். கர்த்தர் தாமே கடலுக்கப்புறத்திலுள்ள நமது சகோதரரை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

நமது பளியர் மிஷனிருக்கும் மலைநாட்டில் இப்போது பெருங்காற்றும், ஓயாத பெருமழையும் கடுங்குளிரும், எங்கும் ஏகமயமான மஞ்சக்கூட்டமுமிருக்கிறது. Mr. V. டேவிட் பிரசங்கியார் அவர்களுக்கும், அவர்கள் அம்மாளுக்கும் நல்ல சுகமில்லை. மழைகாலம் ஓய்ந்தவுடன் நமது மிஷன் நிலம் பளியர் குடியேற்றமாகிவிடும் என்று நம்புகிறோம். குடியேற்றமானதின்பின் நமது பளியர் மிஷன் ஊழியம் முன்னிலும் அதிகத் திட்டமாயும் ஒழுங்காயும் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். பளியர் மிஷனையும் நமது ஜெபங்களில் மறவாதிருப்போமாக.

பத்திரிகை சந்தாதார் ஒவ்வொருவருக்கும் கால் அணா செலவழித்துத் தனித்தனியே ஞாபகக்கார்டு அனுப்புவது நமது சங்கத்துக்கு வீண்செலவானதால், நமது பத்திரிகை நேயருக்குள் சந்தா பாக்கிவைத்திருப்போர் அனைவரும் தம் சந்தாவை உடனே அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

## இந்திய மிஷனரி சங்கத்தின் பர்மா கிளைச்சங்கம்.

இச்சங்கத்தின் பரிபாலனத்துக்குள்பட்டதாய் பரி: காபிரியேல் பள்ளிக்கூடக் கட்டடத்தில் ஜூலை 4உயாகிய சனிக்கிழமையன்று சாயங்காலம் $8\frac{1}{2}$ மணிக்கு ஓர் கீதாராதனையொன்று ஏற்பாடாகி நடைபெற்றது. பட்டாளத்திலுள்ள கிறிஸ்து ஆலய குருவாகிய கனம் சீலி ஐயர் அவர்கள் அச்சமயம் பீடம் வகித்தார்கள். ரங்கூன் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் வேறு ஜோலிகளினிமித்தம் சரியான நேரம் வாக்கூடாவிட்டாலும் கொஞ்சநேரமாயினும் வாக்குச்சொன்னபடி வந்து சேர்ந்தார்கள்.

இச்சமையத்திற்கென்று கட்டடம் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மழைநேரமாயிருந்தும் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே ஜனங்கள் ஏராளமாய் கூடிவந்தார்கள். சரியாய் $8\frac{1}{2}$ மணிக்கு கனம் சீலி ஐயரவர்கள் பீடம் வகிக்கவும், கனம் சாமுவேல் B. A. அவர்கள் ஜெபிக்கக் கூட்டம் ஆரம்பித்தது. குறிக்கப்பட்ட விஷயங்களெல்லாம் ஒவ்வொன்றாய் நடந்தேறியது. பாடகர் கூட்டத்துப் பெண்கள் பாடிய பாட்டுகளையும், ஆண்களில் நால்வர் பாடிய பாட்டுகளையும் Mr. ஜேம்ஸ் பால் தனியே பாடின பாட்டையும் அதிகப் பிரியமாய் கேட்டதுமன்றி மறுபடியும் மறுபடியும் பாடச்சொன்னார்கள். சங்கை: முத்துசாமி அவர்கள் பிள்ளைகளாகிய லில்லி, சாராநாத்தான் என்பவர்கள் அபிநயத்துடன் பாராமல் ஒப்புவித்த பாடங்கள் மனதில் அழுந்தப் பதியக்கூடியதும் ஆரவாரத்தோடு ஆர்ப்பரிக்கிறதற்கேதுவாயுமிருந்தது. இடையில் 20 நிமிஷம்போல் லேசானபக்ஷணங்கள் பரிமாறப்பட்டது. அது முடியவும் மகா கனம் அத்தியக்ஷரவர்கள்

விஜயம்செய்தார்கள். உடனே கனம் ஜெ. எம் டேவிட் B. A. அவர்கள் நம் சங்கத்தின் ஆரம்பம், தற்காலவேலைஸ்திதி, சங்கத்தின் அவசியம் முதலியவற்றைப்பற்றி ஓர் பிரபந்தம் எழுதி வாசித்து, இந்தியாவின் சுவிசேஷ பிரபல்ய சம்பந்தமாய் அதின் மக்களுக்கே இருக்கப்பட்ட உத்தரவாதம் இன்னதென்று இந்திய கிறிஸ்தவர்கள் மனதில் நன்றாய் படும்படி செய்தார்கள். மேலும், கூடிவந்தவர்களனைவருக்கும் பர்மாவிலுள்ள எல்லாருக்கும் இந்த சங்கத்தைப்பற்றிய தெளிவான அறிவுண்டாகும் நோக்கமாய்த்தான் இந்த கோராதனை நடைபெறுவதாயும் விவரித்தார்கள், இதுவே தந்திர சமயம் என்றெண்ணிக் கூடிவந்திருந்த இந்திய கிறிஸ்தவர்களெல்லாரையும் பார்த்து வந்த சங்கத்தை சார்ந்திருந்தபோதிலும் இது போன்ற ஓர் பொதுவான காரியத்தில் எல்லாரும் உதவிசெய்ய வருந்தியழைத்தார்கள். பிஷப்பவர்கள் அப்பால் சில உற்சாகமான வார்த்தைகள் பகர்ந்து சங்கத்துக்குக் கைகொடுத்துதவிசெய்தார்கள். ஆனால் நம் துரதிஷ்டம் அவர்கள் கூட்டம் முடியுமட்டும் இருக்கக்கூடாமற் போயிற்று. அப்பால் குறிக்கப்பட்ட விஷயங்களில் பாக்கியானவை நடந்தேறிய பின்னர், கனம் சிலி ஐயரவர்கள் சில முடிவுரை வாசகங்கள் சொல்லி ஆசீர்வாதம் கூறக் கூட்டம் முடிந்தது. இதன் பின் தலத்து காரியதரிசி கனம் சிலி ஐயர் அவர்கள் சங்கத்தின் பேரில் வைத்த பக்ஷத்துக்காகவும் அனுதாபத்திற்காகவும் மாத்திரமல்லாமல் சொற்பகாலம் மட்டும் இருக்கையில் பீடம் வகிக்கும்படி கேட்டதற்கிசைந்து உற்சாகமாய் வந்ததற்காகவும் நன்றியைத் தெரிவித்தார்.

நடைபெற்ற விஷயங்களில் பாட்டு சம்பந்தமாயுள்ளவையெல்லாம் கனம் சாமு A. துரை அவர்கள் கையில் விடப்பட்டிருந்தபடியால் சித்தியுடன் நடைபெற அவர்கள் மிகுந்த பிரயாசையெடுத்துக்கொண்டார்கள். பொதுவான மேற்பார்வையெல்லாம் Messrs. பீற்றர், லூயி, ஜேம்ஸ் பால் என்பவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது.

பர்மாவில் கிளைச்சங்கம் ஸ்தாபகமாகி இவ்வளவு காலத்துக்கிடையில் இவ்வித கோராதனை இப்போதான் முதல் தடவையாக நடந்தேறியபடியால், கூட்டத்துக்கு வந்தவர்களெல்லார் மனதிலும் ஓர் நிலையான நல்லெண்ணம் உண்டாயிருப்பது மாத்திரமல்ல, இந்திய கிறிஸ்தவர்களெல்லாரிடத்திலும் முன்னிலும் அதிக அனுதாபத்தையும் உற்சாகமான உதவி புரியும் எண்ணத்தையும் உண்டாக்குவதற்கு இக்கூட்டம் ஏதுவாயிருந்ததென்று நம்ப இடமுண்டு.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

இந்த மாதக் கடிதத்துக்கு என் டைரியில் நான் எழுதியிருப்பதை இருக்கிறபடியே எழுதுவது உத்தமமாயிருக்குமென்று நம்புகிறேன்.

காரிளா:—இந்த இடத்துக்கு இப்படி யோசேப்பென்னும் அப்பியாசசாலை மாணாக்கனையும், தச்சுவேலை உபாத்தியாரான Mr R. E. தேவதாசனவர்களையும் கூட்டிக்கொண்டுபோனேன். சபையாருக்கு ஜெபம் நடத்தி புத்திமதி சொல்லி, அவர்களுக்குக் கிரமமாய்ப் படிப்பித்துவரும் பாடத்தில் கேள்வி கேட்டேன். மரணமடைந்த சிலரைக் கர்த்தர் உயிர்ப்பித்தார் என்ற பாட்டு வசனத்திலடங்கிய சரித்திரங்களில் கேள்வி கேட்டேன். பாடம் திருப்தியாயில்லை. உபாத்தியாரைக் கண்டித்தேன். படிப்பிக்கவேண்டிய வழியைக் காட்டினேன். சபையாரையும் எச்சரித்தேன். உபதேசியார் தன் மனதைச் சபையின் வேலையின்மேல் வைத்திருப்பதாய்த் துலங்கவில்லை. தெலுங்குப் பாடமும் கைநெகிழப்பட்ட ஸ்திதியிலிருப்பதால் உபதேசியார் பல ஊருக்குப் போவதால் இடையூறுகளிருந்தபோதிலும், உபதேசியார் மனைவியை அதைச் சிறத்தையுடன் பார்க்கச்சொன்னேன். இவர்களிருவரும் இவ்விடத்தைவிட்டு வேறு இடங்களில் வேலைபார்க்க நோக்கமாயிருப்பது இக்குறைவுக்குக் காரணமாயிருக்குமோ என்றெண்ணுகிறேன்.

பூநகப்பாடு: 4-6-14. காலை.—சபையின் தொகை 11. உத்தேசம் 20 தினங்களுக்குமுன் ஒரு பையன் இச்சபையில் வைசூரியினால் மரித்துப்போனான். ஜனங்களுக்கு ஜெபம் நடத்தியபோது அந்த ஊர் கிராமமுனிசீபும் பக்கத்தில் வந்துட்கார்ந்திருந்தார். வைசூரிநோயுள்ளவர்களாயிருந்த ஒரு தாயும் பிள்ளையுந்தவிர மற்றெல்லாரும் ஜெபத்துக்கிருந்தார்கள். புத்தி சொல்லி ஜெபித்தேன். உபாத்தியார் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். 5 பேர் படிக்கத்தக்க பிள்ளைகள், மற்றவர்களும் சிலர் படிக்கலாம். 3 தினங்களுக்கு ஒருநாள் சங்கீஷா உபாத்தியாரை இவ்விடத்துக்கு வந்து படிப்பிக்கும்படி சொன்னேன். காலியாயிருக்கும் ஒரு சின்னக் குடிசையை எங்களுடைய உபயோகத்துக்கென்று வைத்துவைக்க ஒப்புக்கொண்டதால், அதில் நானாவது உபாத்தியாராவது தங்கியிருப்பதற்கும் இடைஞ்சலிருக்கமாட்டாது. சபையில் பலருக்கு காப்புச்சிலந்தியிருக்கிறது. தண்ணீர் மகா கேவலம்.

சிலுக்கோடு: 4-6-14. மதியம். இவ்விடத்தில் இருக்க ஒரு சிறு குடிசைகூட இல்லை. சபையின் தொகை 29. வெயிலும் காற்றும் அகோரமாயிருந்ததால், ஜனங்கள் பின்னப்பட்ட தட்டிகளைக்கொண்டடைத்தார்கள். காற்றுப் பிடித்துத்தள்ளிவிட்டது. வெயிலுக்கும் ஒதுக்காயில்லை. என்றாலும் ஜனங்கள் காட்டிய அருமையை நான் பெருமையாய் மதித்ததாயிருக்கும்பொருட்டு கிட்டத்தட்ட ஒருமணிநேரம் அவ்விடத்திலே குடையைப் பிடித்துக்கொண்டிருந்த ஜனங்களோடு பல காரியங்களையுங் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன். பிற்பாடு என்னால் அங்கிருக்கமுடியாததானதால், அதைவிட்டுச் சற்றப்பால் போய் ஒரு ஆலமரத்தினடியிற்போய் உட்கார்ந்தேன்.

பிற்பாடு சற்று பொழுதுசாய்ந்தபின் மறுபடியும் பழைய இடத்துக்கு வந்து ஜனங்களுக்கு ஜெபம் நடத்தி புத்திசொன்னேன. கிறிஸ்தவர்களாக அவர்கள் நடக்கவேண்டிய காரியத்தைச் சொன்னேன். 4 பேர் வேலைக்கு எங்கேயோ போய்விட்டார்கள். அவர்கள் தவிர மற்றெல்லாரும் ஜெபத்துக்கு வந்திருந்தார்கள். சங்கீஷா உபாத்தியார் 3 தினங்களுக்கு ஒருமுறை இவ்விடத்தில் வந்து ஜெபம் செய்து பாடம் படிக்க ஒழுங்கு செய்தேன். உபாத்தியார் வந்து தங்கியிருந்து படிப்பிக்கத்தக்கதாக ஒரு சிறு வீடு கட்டிக்கொடுப்பதாய் ஜனங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அநேக இந்துக்களும் வந்து கூடியபோது அவர்களுக்கும் புத்திசொன்னேன்.

இந்த ஊர் துரை என்னைப் பார்க்கவந்தார். இவர் சிலி வேரு துரைக்கு இனத்தான். என்னிடம் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்த பிற்பாடு தன் வீட்டுக்கு என்னைக் கூட்டிக்கொண்டுபோய், "இந்த ஊரில் எருக்கல ஜாதியாரான யாவரையும் ஒட்ட ஜாதியிலிருந்து இதற்கு முன்னதாகவே கிறிஸ்தவர்களாகியிருப்பவர்களையும் கிறிஸ்துமார்க்கத்தில் வைத்துக்கொள்வது எனக்குச் சந்தோஷமே. இவர்கள் களவு முதலிய சல்லித்தனத்துக்குப் போகிறவர்களல்ல. என்றாலும் இப்போது புதிதாய் மார்க்கத்தில் சேருவதாய்ச் சொல்லும் தம்பிச்செட்டி ருத்துடு என்பவனையும் அவன் குடும்பத்தாரையும் மார்க்கத்தில் சேர்க்கக்கூடாது. அவர்கள் துஷ்டர்." என்று சொன்னார். நான் அந்த ருத்துடுவிடம் "ஜனத்துடனிரு. படிப்பிக்கப்படும் பாடத்தையும் படித்துக்கொண்டிரு. நான் உன் காரியாதிகளைத் திட்டமாய் அறிந்தபின்னால் உன் பேரை ரெஜிஸ்தரில் பதிவுசெய்வதையிட்டு யோசிப்பேன்" என்றேன்.

தேனி சங்கீஷா 4-6-14. சாயந்தரம். சபையின் தொகை 34 இவ்வூர் கிறிஸ்தவர்களுக்குள் ஒரு விவாகத்துக்கு அழைக்கப்பட்ட சம்பந்தமாய்ப் பிரிவினையுண்டாகி, அது வளர்ந்து வரவரப் பெரிதானது. இவர்கள் குடியிருப்பது ஒன்றுக்கொன்று சற்று தூரமான இரண்டு இடங்கள். உபாத்தியாருக்கு ஜனங்கள் கூடி, கட்டிக்கொடுத்த ஒரு சின்ன வீடிருக்கும் இடத்தில் ஜனங்களுக்கு ஜெபம் நடத்தப்பட்டுவருகிறது, முற்சொல்லிய பிரிவினையின் ஏதுவால், ஜனங்கள் ஒரே இடத்தில் கூடி ஜெபிப்பதற்கு மனமற்ற குணங்காட்டினார்கள். சில தினங்களுக்கு முன்னதாக நான் இருந்த ஊருக்குப் போயிருக்கையில், இருபக்ஷத்தாரும் என்னிடத்தில் வந்திருந்தார்கள். பிரிவினை சாத்தானால் விளைகிறது. கர்த்தராகிய கிறிஸ்து சமாதானக் கர்த்தர். சமாதானமும் ஐக்கியமுமாயிருப்பதே கிறிஸ்தவர்களின் சிறந்த சுதந்தரம். பிரிவினையே கேடு. அது விசாலித்துப் பெருகி பெரும் நஷ்டத்தையுண்டாக்கும் என்று பல திருஷ்டாந்தங்களைச் சொல்லி கண்டித்துணர்த்தினேன். இச்சமயம் அவர்களின் பிரிவினை தணிந்து, அவர்கள் ஒற்றுமையும் ஐக்கியமுமடைந்துவருகிறார்களென்றறிந்து சந்தோஷப்பட்டேன். முன் 10 நாட்களுக்கு முன்னதாக நான் இந்த ஊருக்கு வந்திருக்கையில் உபாத்தியார் இருக்கவும் ஜெபம் நடத்தவும் ஒரு சாலைமட்டும் போட்டிருந்தார்கள். இது மழைகாலத்துக்கு முற்றும் உதவாததால், ஒரு சிறு வீடு கட்டிக்கொடுக்கும்படி மரத்துக்கும் தட்டைக்கும் ஏற்பாடு செய்து, மற்றவைகளைத் தாங்களே கூடிச்செய்துகொடுக்க வேண்டுமென்று சொன்னேன். சபையார் கூடி சுற்றுச்சுவருள்ள ஒரு சிறு வீடமைத்து உபாத்தியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வீட்டின் முன்னதாகவே சபையாருக்கு ஜெபம் நடத்தினேன். வீட்டின் முன் பள்ளமும் குழியுமாய்க் கிடந்தது. சபையார் அதைச் சுத்தம் செய்யும்படி சொன்னேன், உடனே சுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள்.

'மரணமடைந்த சிலரைக் கர்த்தர் உயிர்ப்பித்தார்' என்ற கிறிஸ்துவின் சரித்திரக்கோர்வைக் கீர்த்தனையின் வசனத்தின் சம்பந்த சரித்திரத்தைச் சபையாருக்குப் படிப்பித்திருப்பதாய் உபாத்தியார் சொன்னார். அதில் கேள்விகள் கேட்டேன். கூடியமட்டும் நன்றாய்ச் சொன்னார்கள். என்றாலும் புதுக் கிறிஸ்தவர்களுடைய தன்மைக்கும் அறிவுக்கும் தக்கதாய் பயத்துடனும் திக்கித்திக்கியும் சில தப்புகளுடனும் சொன்னார்கள். உபாத்தியார் மிகவும் பிரயாசப்பட்டுப் படிப்பித்திருப்பதாய்த் துலங்கினது. ஜனங்களுக்கு இனிமேல் சற்று தைரியத்துடன் பதில் சொல்லத்தக்கதாய் அவர்களை உற்சாகப்படுத்தினதுடன் படிப்பிக்கப்படும் பாடங்களை மறந்துபோகாதபடி செய்துகொள்ளவேண்டிய விஷயத்தையிட்டு சில ஆலோசனைகள் சொன்னேன். இவைகளில் ஒன்றென்னவென்றால், தாங்கள் கற்றவைகளைத் தாங்கள் அறிந்திருக்கும் அளவில் பிறருக்குச் சொல்லிவரவேண்டுமென்பதே. இதைச் சொல்லுகையில், இவர்களுக்குள் சிவராத்திரி வெங்கையா, 'ஐயா நான் ஒன்றும் ஒருவருக்கும் சொல்லியிருப்பதில்லையே, நான் சிறுவனல்லவா, நானும் சொல்லவேண்டுமோ' என்றான். 'ஆம், நீயும் கர்த்தராகிய இயேசுவைக்குறித்து உனக்குத் தெரிந்தமட்டும் சொல்லவேண்டியது; அப்படிச் சொல்லும்போது இயேசுவுக்குச் சந்தோஷமும், ஆனந்தமும், உனக்கு ஆனந்தமும் ஆசீர்வாதமும், கேட்போருக்கு நன்மையுமுண்டாகுமென்று சொன்னேன். 'ஐயா, நான் பையனானதால் என் வார்த்தைகளைக் கேட்கமாட்டார்களே என்றான். சொல்வது நமது கடமை. செவிகொடுக்கச்செய்பவர் கர்த்தர். அவர்கள் கேட்டாலும் சரி, அவமதித்தாலும் சரி, நாம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிதீரவேண்டும் என்றேன். இனிமேல் சொல்லுகிறேன் என்றான்.

முன் இவர்கள் உபாத்தியாருடன் சேர்ந்து ஊருக்குப் போய் சுவிசேஷ பிரசங்கவேலையில் தங்கள் பாட்டுகளினால் உதவி செய்தவர்கள். இப்போதோ அவ்விஷயத்தில் தளர்ச்சியடைந்திருப்பதாய்த் துலங்கினது. வேலையின் கஷ்டத்தை ஓர் காரணமாய்ச் சொன்னார்கள். இது ஒருவாறு சத்தியமானாலும், இவர்கள் இது விஷயத்தில் குளிர்ந்து போயிருக்கிறார்களென்பதும் சத்தியமே. இவர்களைக் கண்டித்துணர்த்தினேன். உபாத்தியார் சபையின் ஆவிக்குரிய அபிவிருத்திக்கு ஏதுவான இம்முறையைக் கைநெகிழ விடாதபடி ஜாக்கிரதையாயிருக்க எச்சரித்தேன். இரவில் ஊருக்குள் சுவிசேஷவேலை நடத்த யோசித்தும் மழையினால் தடைப்பட்டது.

ஜெபஸ்தலத்தில் ஜெபம் செய்யுமுன் சபையார் வீடுகளைப் போய்ச்சந்தித்தேன். தண்டுகேலாரமுகு முதலியவர்கள் வசிக்கும் பக்கத்தில் தக்ஷண ஒட்டர்களான 10-குடும்பத்தார் புதிதாய்வந்து குடியேறியிருக்கிறார்கள். ஒருதேவதை யிருக்கிறதாயும், அதைக் கொண்டுபோய் அடுத்தவருஷம் தங்கள் தேசத்தில் விட்டு விட்டு, வந்து மார்க்கத்தில் சேருவதாயும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கிருபையால் இவர்களைச் சபையிலிழுத்துக்கொள்ள முயல வேண்டும் இவர்களும் சேர்ந்தால் உத்தேசம் 100-பேர் இச்சபையின் தொகையாகும். அப்படியானால் ஒரு உபாத்தியாருக்குச் சபைவேலையும் பள்ளிக்கூடவேலையும் போதுமானதாயிருக்கும்.

இவர்களுக்குள் ஒருவாலிபன் தான் கிறிஸ்தவனாவேன் என்று சொன்னான். நமது கிறிஸ்தவர்கள் தங்களுடன் கூட்டிக்கொண்டு வந்தார்கள். பெற்றோர் முதலியவர்கள் கிறிஸ்தவர்களானவர்கள் தங்கள் பையனைக் கிறிஸ்தவனாக்க முயன்றார்கள் என்று குற்றஞ்சாட்டி பஞ்சாயத்துப் பேசினார்கள். அவர்களுக்குள் ஒருவன், உன்மகன் சின்னப்பிள்ளையா? தூக்கிக் கொண்டு போனார்களா? அவன் தகுந்த புத்தியுள்ளவன் தானே. அவன் தன் சுய இஷ்டப்பிரகாரம் போயிருக்க, பிறர்மேல் குற்றஞ் சாட்டிப் பிரயோஜனம் என்னவென்று பேசியதால் பஞ்சாயத்து முடிந்து போயிற்று. இந்த வாலிபனைக்கொண்டே அச்சனங்களை ஆதாயம் செய்யவேண்டியதென்றெண்ணுகிறேன்.

இராத்திரி யெல்லாம் தொடுத்தமழைக்கு உபாத்தியாருக்குக்கட்டிய சின்னவீடேபுகலாயிற்று. அல்லது எங்கள்கதி அகதியாயிருந்திருக்கும். அவ்வீட்டின் ஆதரவில் ஆனந்தம் அடைந்தோம். இவ்விதமான ஒரு குடிசையானாலும் சபைகளிருக்கும் ஒவ்வொரு ஊர்களிலும் ஏற்பாடாகுமானால் மிஷனெரிமார் திண்டாடவேண்டியிராது. மிஷனெரிமார் போயிராத சமயத்தில் அக்குடிசைகளை உபாத்திமார் தங்களின் தனிவாசிப்பு, தியானம், படிப்பு ஜெபங்களுக்கு உபயோகிக்கத்தகும்.

இவ்வூரில் சிலர் ஞானஸ்நானம் பெறுவதற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மகாகனம். அத்தியட்சரவர்கள் திரும்பி வந்தபின் இவர்களை ஆற்றுக்குக் கொண்டுபோய் ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்றும், அதுமட்டும்திட்டமாய் அவர்களை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்த வேண்டுமென்றும் உபாத்தியாருக்குச் சொன்னேன்.

நான் வீட்டிலுட்கார்ந்து கொண்டிருக்கையிலேயே மாடுகள் வந்து வீட்டுக்கூரையைப் பிடித்திழுத்தன. நான் உபாத்தியாரைப்பார்த்து கொஞ்சம் சாணம் எடுத்துக்கரைத்து கூரையில் மாட்டுக்கு எட்டுமளவு தெளித்து வைத்தால் மாடுகள் கூரையை பிடுங்கமாட்டாதே; இவ்வேலையைச் சபையார் செய்யுமட்டும் காத்திராமல், நீரே இதைச்செய்து முடித்துவிட்டால் உத்தமமல்லவா என்றேன். பிற்பாடு தோர்டேழகூடத்துக்குப் புறப்பட்டுப்போனேன். உபாத்தியார் கொஞ்சத்தூரம் என்னோடுவந்தவர் பின்னால்யாதும் சொல்லாமல் வீட்டுக்குத்திரும்பிப் போய்விட்டார். மறுபடியும் கொஞ்சத் தூரத்தில் என்னை சந்தித்தார். எங்கே போயிருந்தீர் என்றேன். ஐயா, திரும்பிப் போய் கூரைக்குச் சாணம் கலக்கித்தெளித்து விட்டுவந்தேன் என்றார்.

தோர்டேழகூடம். 5—6—1914. மதியம் நான் அன்று மதியம் அவ்வூருக்குவருவதாய்ச் சொல்லியிருந்ததால், சபையார் வேலைக்குப்போகாமல் கிறத்தி எனக்காக காத்திருந்தார்கள் மதியம் சாப்பிட்டவுடன் சபையார் வீடுகளுக்குப் போய் ஜெபம் நடத்தினேன். இவர்களிலும் முன் ஞானஸ்நானம் பெற்றவர்கள்போக இன்னும் சிலர் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாகிறார்கள்.

என்னாரம். 5—6—1914. சாயந்திரம். இச்சபையின் தொகை 17. இந்தச்சனங்கள் பொதுவாக மார்க்கத்தில் அவ்வளவு உற்சாகமுள்ளவர்களா யிருந்ததில்லை. இப்போதோ மிகவும் உற்சாகம் காட்டுகிறார்கள். முந்தினதடவை நான் இங்கே வந்திருந்தபோது, இவ்விடத்தில் நானாவது உபாத்தியாராவது உட்கார்ந்தால் வேலை நன்றாய் நடக்க ஏதுவில்லை யென்றும் படிப்பு நன்றாய் நடக்க வேண்டுமென்றால், ஒரு சிறுகுடிசையாவது சீக்கிரம் கட்டிமுடிக்கவேண்டுமென்று சொன்னேன். நிலத்துக்குப் பட்டயவிடம் (கிராமமுனிசீபு) உத்தரவு கொடுத்தால் அப்படியே கட்டிமுடிப்போம் என்றார்கள். நான் அப்படியே பட்டயவிடம்போய் உத்தரவு வாங்கிக்கொடுத்து வந்தேன். இந்தவிசை நான் அவ்வூருக்குப்போகையில் அவர்கள் தாங்கள் சொல்லியிருந்தபடி ஒரு சிறுகுடிசைகட்டி வைத்திருந்தார்கள். சுவர்மட்டும் முற்றும் முடிவாகவில்லை. அவரையும் கட்டிமுடிப்பதாகச் சொன்னார்கள். இந்தக்குடிசையிலேயே அவர்களுடன் ஜெபம்செய்து பாடமுபதேசித்தேன. தோர்டேழகூடம் உபாத்தியாரே இவ்வூர்ச்சபையையும் பார்த்துவருகிறார். இவர் தோர்ணக்கல் பயிற்சிசாலையிலிருந்து இம்மாசம் தான் உபாத்தியாராக அனுப்பப்பட்டிருக்கிறார். தேவுனி சங்கிஷா, பூருகப்பாடு, சிலுக்கோடு இம்மூன்று சபைகளையும் பார்க்கும் உபாத்தியாரும் இவ்வாறே புதிதாய் உபாத்தியாரானவர்.

கார்லா. 10—6—1914. இவ்விடத்துக்குச் சிக்கலாக்கோட்டையில் உபதேசியாருடன் போனேன். கார்லாவில் ஏழை ஜனங்களுக்கு ஒரு விருந்தானதாலும் ஜாகிர்தாருடைய சாமான்களைச் சுமக்கவேண்டியதும் காக்கவேண்டியதுமான வேலை ஜனங்களுக் கிருந்ததினாலும், ஜனங்களில் 6 பேர் மட்டும் ஜெபத்துக்கு வந்திருந்தார்கள். இதன் முன் இவ்விடத்துக்கு வந்திருக்கையில் பாடமகேட்டுச் சரியாய் ஒப்புவிக்காமற்போனதால், சபையாரையும் உபாத்தியாரையும் கண்டிக்கவேண்டியதாயிருந்த அதே பாடத்தில் கேள்விகள் கேட்டேன். கூடியமட்டும் நன்றாய்ச்சொன்ன விஷயம் சந்தோஷமாயிருந்தது. முன் இவர்களையும் உபாத்தியாரையும் கண்டித்த காரியம் பலிதப்பட்டிருந்தது.

சா. மு. பாக்கியநாதன்.

---



## சிங்கரேனி மிஷன் ஊழியம்

தெலுங்கு நாட்டில் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி திருநெல்வேலியிலிருந்து வந்த நாலு பேர்களில் இரண்டு பேரும் தெலுங்கு ஊழியர்களில் இருபேரும் பாக்கால் தாலுகாவிலும்; ஒருவர் ஒரு தெலுங்கு ஊழியரோடு பாலவன்ஷா தாலுகாவிலும், ஒருவர் எல்லாந்து தாலுகாவிலும் சுவிசேஷ ஊழியத்தைப் பார்த்துவருகிறோம்.

அங்கங்கே வீடுகட்டி நாங்கள் குடும்பங்களோடிருந்து ஊழியத்தை நடப்பிக்கிறதற்குச் சரியான இடங்கள் கிடையாததினால் இன்னும் மூவர் தோர்ணக்கல்லிலும், ஒருவர் சிங்கரேனியிலுமிருந்துகொண்டு மாசத்தில் 20 நாட்கள் ஊழியத்தை நடப்பித்துவருகிறோம்.

இப்போது சிங்கரேனி சூப்பிரன்டென்று மிஷனெரி கனம்: D S. டேவிட் ஐயரவர்களுக்கு சிங்கரேனி காலிரீசில் ஒரு பங்களா கட்டப்படுகிறது. அது சீக்கிரத்தில் முடிவாகும்.

பாக்கால் தாலுகாவில் 9 கிராமங்களில் 200 பேர்களும், பாலவன்ஷா தாலுகாவில் 2 கிராமங்களில் 100 ஜனங்களும், எல்லாந்து தாலுகாவில் 3 கிராமங்களில் 100 ஜனங்களும், ஆயத்தச் சபையாராகச் சேர்க்கப்பட்டு படிப்பிக்கப்பட்டுவருகிறார்கள்.

இந்த ஆயத்த சபையாருக்குப் படிப்பிக்கிற விதம்: மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் I. M. S. ஊழியர்களுக்கும், கம்மாமேட்டு C. M. S. ஊழியர்களுக்கும், S. G. I. (சிங்கரேனி) மிஷன் ஊழியர்களுக்கும் மாதிரிப்பாடம் படிப்பித்துக் காட்டினதும், ஒவ்வொரு தெலுங்கு ஊழியர் கையிலுமிருக்கத்தக்கதாக அந்த மாதிரிப்பாடத்தை ஒரு சின்ன புஸ்தகமாக அச்சடித்துக் கொடுத்திருக்கிறதுமான முறைப்படியும் போதிக்கப்பட்டுவருகிறது.

இந்தப் பாடத்தின் விபரம் சுருக்கமாய்ப் பின் காட்டப்பட்டிருக்கிறது.

(1) சிருஷ்டி கர்த்தா, கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய அற்புதம், பாடு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் இவைகளடங்கிய 15 கவிகளுள்ள தெலுங்குப்பாட்டு ஒன்றிருக்கிறது. இந்தப் பாட்டின் ஒவ்வொரு கவியையும் வரிசையாய் ஜனங்களுக்கு மனப்பாடமாய்ப் படிப்பித்து விளக்கிக் காட்டவே, ஜனங்கள் இன்பமாயும் ஆசையாயும் பாட்டைப்பாடி அந்தப் பாட்டை மனதில் வைக்கிறதோடு மேற்காட்டிய முறையாக சிருஷ்டி கர்த்தாவைப்பற்றியும், கிறிஸ்துவின் சரித்திரமெல்லாவற்றையும், ஜனங்களறிந்து இலேசாயும் கோர்வையாயும் இலேசாய் அறிவதுடன் மனதில் பதித்துக் கொள்ளத்தக்கதாயுமிருக்கின்றது.

இவைகளோடு பரிசுத்தாவியானவரைப்பற்றியும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றியும் படிப்பிக்கப்படுகிறது.

(2) ஜனங்களுக்கு கர்த்தருடைய ஜெபத்தையாவது, விசுவாசப்பிரமாணத்தையாவது, மனப்பாடமாய்ப் படிப்பிக்காமல் அவர்களே தங்கள் சொந்த வார்த்தைகளாலே இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் தங்கள் கஷ்டங்களைச் சொல்லவும், தமக்களுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டியவைகளுக்காகக் கேட்கவும், இவ்விதமாய் எப்பொழுதும் எந்த இடங்களிலும் ஜெபிக்கவும் பழக்கப்படுகிறார்கள். இவைகளைப்பற்றிப் போதித்தவுடனே அல்லது 2, 3, தினங்களுக்குள் இலேசாய் ஜெபிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

(3) கர்த்தருடைய ஜெபம், விசுவாசப்பிரமாணம், ஒவ்வொருநாளும் ஜெப ஆராதனையில் ஜெபம் நடத்துகிறவர் பின்னாலே ஜனங்கள் எல்லாரும் சொல்லிக்கொண்டுவரவே, ஜனங்களுக்கு இவைகளும் கஷ்டமில்லாமல் வந்துவிடுகிறது. இவைகள் ஜனங்களின் மனதுக்கு வந்தபின் அர்த்தம், வியாக்கியானம் போதிக்கப்படுகிறது.

(4) ஞானஸ்நானத்தைப்பற்றியும், ஆராதனைக் கிரமங்களைப்பற்றியும் அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது.

நாலு மாசத்திற்குமுன்னாக கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்த எல்லாந்து தாலுகாவிலுள்ள வெங்கிட்டாபுரம், சீமலப்பாடு, என்ற இடங்களில் 50 ஜனங்களுக்கு மேற்காட்டிய முறையைக் கையாடிப் போதிக்கப்பட்டு கர்த்தருடைய பெரிதான கிருபையால் அடுத்த மாசம் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இவர்கள் மாலவ ஜாதியார் (பறையர்). இவர்களில் சிலர் நெசவுவேலை செய்கிறவர்கள். சிலர் கூலிவேலை செய்கிறவர்கள். 4 வாலிபர்கள் தெலுங்கு முதற்பாடப் புஸ்தகமும், 6 பையன்களும் ஒரு ஸ்திரீயும் தெலுங்கு பாலர் புஸ்தகமும் படிக்கிறார்கள்.

ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும், தெலுங்கு கீர்த்தனைப் பாட்டுகளை ஆசையோடு நேர்த்தியாய்ப் பாடுவார்கள். இவர்கள் ஓய்வுநாளாகிய பரிசுத்த நாளில் வேலைக்குப் போகமாட்டார்கள். ஓய்வுநாட்களில் வேலைக்குப்போகிறவர்களைக் கவனிக்கவும், ஜெபத்துக்கு வராதவர்களைக் கவனிக்கவும், கள் குடிக்கிறவர்கள், சண்டைபோடுகிறவர்கள், கெட்டவார்த்தைகள் பேசுகிறவர்கள் ஆகிய இவர்களைக் கவனிக்கவும், வழக்கு முதலியவைகளைத் தீர்க்கவும், அவர்களில் மூவர் சபை மெம்பராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஓய்வுநாட்கள்தோறும் 4½-மணிக்கு வாலிபர்களும், பிள்ளைகளும், அடுத்த கிராமங்களுக்கு என்னோடு பிரசங்கத்துக்கு வந்து பாட்டுப்பாடுவார்கள். அவர்களிடத்தில் வந்துபோகிற அவர்களுடைய இனஜனத்தாருக்கு கிறிஸ்துவைப்பற்றி தங்களுக்குத் தெரிந்தமட்டும் ஆசையோடும், ஊக்கத்தோடும் சொல்லி நீங்களும் கிறிஸ்துமார்க்கத்துக்கு வாருங்கள் என்று சொல்லுவார்கள். இவர்கள் இனத்தார்களில் அநேகர் எங்கள் ஊர்களுக்கும் வாருங்கள், கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிப் போதியுங்கள், நாங்களும் மார்க்கத்துக்கு வருகிறோம் என்று சொல்லி அடிக்கடி வந்து அழைக்கிறார்கள். அவர்களிடம் போய் அவர்கள் ஊரிலிருந்து ஊழியம்பார்க்க ஊழியர்களில்லாததால் தடைபடுகிறது.

அறப்பு மிகுதி; வேலையாட்களோ கொஞ்சம். ஆகையால் இதை வாசிக்கிற எல்லாரும் அறப்புக்கு வேலையாட்களை எஜமான் அனுப்பும்படியும், ஆயத்தச் சபையிலிருக்கிறவர்களுக்காகவும், விசேஷமாய் அடுத்த மாசம் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுகிற வெங்கட்டாபுரம், சேலப்பாடு ஜனங்களை மனதில் வைத்துக்கொண்டு இவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திலும் அன்பிலும் ஸ்திரமாய் உறுதிப்படவும், ஞானஸ்நானத்தில் பரிசுத்தாவியைப் பெற்று எல்லாத் தாலுகாவிலுள்ள அக்கியர்களை அருள்நாதரின் பாதத்திற்கு இழுத்துக்கொண்டு வருகிறவர்களாகவும், மற்றவர்களுக்கு மாதிரியாயிருக்கவும், ஜெபித்துவரும்படி வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்

15-7-14. ஏ. ஞானமணி.

## மிஷனெரிமார் நடபடிகள்.

### ஆசியா சபை ஸ்தாபனம். அப் 18: 17—19: 20.

கொரிந்துவிலிருந்து பரி. பவுல் புறப்பட்டவுடனே, அவர்கண் ஆசியாவின் மேற்சென்றது. அங்கே போகும்படி வெகுகாலமாய் அவருக்கு ஆசையிருந்ததுண்டு. கலாத்தியா மாகாணத்திற்குப் போகுமுன், ஆசியாவுக்குப்போக எத்தனித்து, சுகவீனத்தினால் தடுக்கப்பட்டு, கலாத்தியாவில் பிரவேசித்தார். (கலா 4: 13). இரண்டாம் பிரயாணத்தில் திரும்பவும் அங்கே போக நினைத்தபோது "ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டார்." (அப் 16: 6) இப்போதோ, ஆசியாவில் பிரசங்கிப்பது தேவசித்தமென்று அப்போஸ்தலன் கண்டாற்போல் தோன்றுகிறது. ஆசியா நாட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட சரித்திரத்தை இங்கே வாசிக்கிறோம்.

இந்தப்பாகத்தை நான்கு பிரிவாக வகுக்கலாம்

(1) 18: 18—23. எபேசு பயணம்.
(2). 18: 24—28. எபேசுவில் ஆயத்த வேலை
(3). 19: 1—10. ஆசியா சபை ஸ்தாபனம்
(4). 19: 11—20. எபேசு சபை புது உயிர்

### 1. எபேசு பயணம். 18: 18—23.

அகாயா மாகாணத்தை விட்டுப் புறப்பட்ட அப்போஸ்தலன் ஆசியா மாகாணத்தில் சபையை ஸ்தாபிக்கும்படி ஆரம்பிக்கு முன் எருசலேமுக்கும் அந்தியோகியாவுக்கும் போய்த் திரும்பவேண்டுமென்று எண்ணங்கொண்டார். ஒன்றரை வருஷம் கொரிந்துவில் தங்கினபின் சற்று இளைப்பாறுதல் வேண்டுமென்று எண்ணினாரோ? இவ்வளவு காலமும் மற்றவர்களுக்காக வேலை செய்தபின் சிறிது காலம் தனித்திருந்து, தேவனுக்குத் தன் பொருத்தனைகளைச் செலுத்தி ஞான முசிப்பாறுதலடைந்தபின்பே, ஓர் புது மாகாணத்தில் பொறுப்பான வேலையைச் செய்யவேண்டுமென்று ஆசித்தாரோ? எருசலேமிலுள்ள தாய்ச் சபைக்கும், தான் ஸ்தாபிக்கும் புதுச் சபைகளுக்கும் சம்பந்தத்தையும் ஐக்கியத்தையும் உண்டாக்க வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டாரோ? அந்தியோகியாவிலுள்ள சபைக்குப்போய் அவர்களுடைய சந்தோஷத்திலும் ஜெபத்திலும் தைரியமடைய விரும்பினாரோ? எப்படியிருந்தாலும் சரி. ஆசியா மாகாணத்தின் நெடுங்கால வேலையில் பிரவேசிக்குமுன்னதாக தாய்ச் சங்கங்களுக்குப்போய் வருவது நலம் என்று கண்டு அவ்வாறு தீர்மானஞ்செய்து கொண்டார். ஆவிக்குரிய வேலையை ஓயாமற் செய்கிறவர்களுக்குங்கூட ஞான முசிப்பாறுதல் தேவை. மற்றவர்களுக்கு இடைவிடாமல் கொடுக்கிறவர்கள் உட்கொள்ள வேண்டியதவசியம்.

இத்தீர்மானத்தைக் கட்டாயம் நிறைவேற்றுவதற்குதவியாக நசரேய பொருத்தனை செய்துகொண்டு, கப்பலேறுமுன் தலைமயிர் கத்தரித்துக்கொண்டு, எருசலேமில் பொருத்தனையைச் செலுத்துந்தீர்க்குமளவும் முடிவளர்க்க ஆரம்பித்தார். கப்பல் எபேசுவின் வழியாய்ச் செல்லும்போது அங்கே தாம் நின்றுபோவதற்குச் சோதனை நேரிடாதபடி இப்படிச் செய்தாரென்று தோன்றுகிறது. அவ்வித சோதனையும் நேரிட்டது. எபேசு பட்டணம் சேர்ந்து ஓய்வுநாளில் ஜெப ஆலயத்துக்குப் போய் யூதருடன் சம்பாஷணைசெய்யவே, இன்னும் சிலகாலம் தங்களுடனே தங்கியிருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். பரி. பவுல் சம்மதியாமல், தமது பொருத்தனையையும் தீர்மானத்தையும் காரணமாகச் சொல்லி அவ்விடம் விட்டுப் புறப்பட்டார்.

இதிலிருந்து திரும்பவும், அப்போஸ்தலன் எபேசுவுக்கு வந்தது வரைக்குமுள்ள சரித்திரத்திற்கு பரி. லூக்கா மூன்று வாக்கியங்கள் மாத்திரம் செலவிடுகிறார். பரி. பவுல் எருசலேமில் சேர்ந்து, அங்கு தமது பொருத்தனையை நிறைவேற்றின விபரத்தையாவது, அந்தியோகியாவில் சபையார் அவரை ஏற்றுக்கொண்ட விதத்தையாவது, கலாத்தியா சபைகள் இக்காலத்திலிருந்த ஸ்திதியையாவது கிஞ்சித்தேனும் பரி. லூக்கா இங்கு விவரிக்கவில்லை. தமது நோக்கத்துக்கு அவையெல்லாம் அவசியமல்ல என்று விட்டு விட்டார்.

வா. 22. "பவுல் எருசலேமைவிட்டுப் புறப்பட்டு, செசரியாபட்டணத்துக்குவந்து, எருசலேமுக்குப் போய் சபையைச் சந்தித்து, அந்தியோகியாவுக்குப் போனான்."

வா. 23. 'அங்கே சிலகாலஞ் சஞ்சரித்தபின்பு, புறப்பட்டு கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்'.

வா. 1. 'அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலிருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய் எபேசுவுக்கு வந்தான்.'

### 2. எபேசுவில் ஆயத்த வேலை. 18: 24—28.

அப்போஸ்தலனாகிய பரி. பவுல் எபேசுவில் செய்த வேலையை வர்ணிக்கு முன்னதாக அங்கே மற்றவர்கள் செய்த ஆரம்பவேலையைப் பரி. லூக்கா சுருக்கமாய் எழுதுகிறார். அப்பொல்லோ அலெக்சாந்திரியா பட்டணத்து வித்தியாசாலைகளில் கல்வி கற்ற ஓர் யூதன். சாதுரியவான், வேதாகமங்களில் வல்லவன். கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்திருந்தான். தான் செய்ததைத் திட்டமாய்ப் போதிக்கக்கூடிய அறிவுள்ளவன்



(வா. 25) இப்படிப்பட்டவன் எபேசுவுக்கு வந்தபோது, தனக்குத் தெரிந்ததை ஜனங்களுக்குத் தைரியமாய்ப் பிரசங்கித்துக்கொண்டிருந்தான். ஆக்கிலலாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பிரசங்கத்தைக்கேட்டு அவன் உபதேசத்தின் குறையைக் கண்டு, பரிசுத்த ஆவியைப் பற்றியும், கிறிஸ்து சபையைப்பற்றியும் அவனுக்குத் திட்டமாய் உபதேசித்தார்கள். அப்பொல்லோ அதன்பின் அகாயா நாட்டிற்குப் போனான். ஒரு பீஸன் கைப்பிரதியில் 'அவனோடு எபேசுவில் தங்கின கொரிந்தியரில் சிலர் அவன் பேசக்கேட்டபோது, தங்களோடு கொரிந்துவுக்கு வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்' என்றிருக்கிறது. சாதுரியத்தை விரும்பும் கொரிந்தியருக்குப் பிரசங்கிக்க அப்பொல்லோ ஏற்றவன் என்று அவர்கள் நினைத்து அழைத்தார்கள் போலும் இவ்வாறு அப்பொல்லோ கொரிந்துவுக்குப் போய் துவக்கத்தில் விசுவாசிகளுக்கு மிகவும் உதவியாயிருந்தான். சிறிது காலத்திற்குப் பிற்பாடோ, இதினால் கொரிந்து சபைக்குத் தீமை விளைந்ததென்று அறிவோம், அதைப் பின்னால் பார்ப்போம்.

### 3 ஆசியாசபை ஸ்தாபனம். 19: 1—10.

அப்பொல்லோ இவ்விதமாய் எபேசுவை விட்டுப்புறப்பட்டு கொரிந்துவுக்கு போனபின், பரி பவுல் எபேசு வந்து சேர்ந்தார்.

எபேசு ஆசியா மாகாணத்துக்குத் தலைநகர். அப்போஸ்தலன் இதுவரை வேலைசெய்த எந்த மாகாணத்தைப் பார்க்கிலும் ஆசியா செழிப்பும், ஜனப்பெருக்கமும், செல்வமுமுள்ளது. இது சின்ன ஆசியாவின் மேல்பாகத்துக்குச் சரி. ரோமர் ஆசியாக் கண்டத்தில் முதல் முதல் இதையே கண்டபடியால் இதையே "ஆசியா" என்றழைத்தார்கள். எபேசு, ஸ்மிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை பிலதெல்பியா, லவோதிக்கேயா, கொலோசே, ஈராப்போலி முதலிய பெரிய பட்டணங்கள் இம்மாகாணத்திலே இருந்தன. இம்மாகாணத்துக்கு எபேசு தலைநகர். ஆசியா மாகாணத்தின் தேசாதிபதி இங்கே வசிப்பான்.

மதசம்பந்தமாயும் எபேசு விசேஷமானது. பட்டணத்துக்கு ஒரு மைல் தூரத்தில் உலகத்தின் அதிசயங்களில் ஒன்றாகிய தியானாள் கோவில் இருந்தது. முன் அங்கிருந்த பூர்வகோவில் கி. மு. 356ல் அக்கினி வாதையினால் அழிக்கப்பட்டபின் இது கட்டப்பட்டது. பட்டணத்து ஸ்திரீகள் தங்கள் ஆபரணங்களை விற்று இக்கோவில் கட்டுமானத்திற்கு நன்கொடையளித்தார்கள். ராஜாக்கள் ஒவ்வோர் சிங்காரத்தூண்களைச் சமர்ப்பித்தார்கள். வேலை வெகு சீக்கிரம் முடிந்தது. கோவில் 418 அடி நீளம் 210 அடி அகலமுள்ளது. 56 அடி உயரமுள்ள 100 சித்திரந்தீர்த்த கற்றூண்கள் தளவரிசையைத் தாங்கினது. கிறிஸ்து மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னுங்கூட இந்தக்கோவில் வெகு காலம் நின்றது. கி. பி. 262ல் அழிக்கப்பட்டது. அதின் தூண்கள், சிலைகள் பல கொன்ஸ்தந்திநோபிள் நகரைச்சிறப்பிக்கக் கொண்டுபோகப்பட்டன.

பரி. பவுலின் காலத்தில் தியானாள் கோவிலும் வணக்கமும் உலகப்பிரசித்தமானதுமாயிருந்தது. கோவிற் சிரேஷ்ட பூசாரி பட்டணத்தில் ஓர் முக்கிய உத்தியோகஸ்தனாக எண்ணப்பட்டான். சந்நியாசிகளும், கன்னியாஸ்திரீகளுமான ஏராளமானபேர் கோவில் வேலையில் அவனுக்குக் கீழ் இருந்தார்கள். இதுபோக தியானாள் தேவியின் சிறு பிரதிமைகளைச் செய்து பிழைக்கும் தொழிலாளர் கணக்கற்றவர்கள் உண்டு. புண்ணியயாத்திரைக்கு வருகிறவர்கள் வெள்ளியினாலும், தங்கத்தினாலும் செய்யப்பட்ட இச்சிலைகளை வாங்கிக் காணிக்கையாகப் படைப்பார்கள். பணம் குவியல் குவியலாய் வரும். இக்காணிக்கைகளினால் கோவில் நிறைந்தது. தியானாள் கோவிலே எபேசுவின் கஜனு—எபேசுவின் நவீன பொருட் காட்சிசாலை என்று சொல்லப்படுவதுண்டு. இத்துடன் வீண்பக்தியும், குறிசொல்லுதலும், பில்லிசூனியம் பார்க்குதலும் பெருகினது. "எபேசு மந்திரம்" என்று பேர்கொண்ட மந்திர தந்திரங்கள் பிரபலமாயிற்று. அத்தேனே தர்க்கசாஸ்திரத்தில் சிரேஷ்டமானது. கொரிந்து துன்மார்க்கத்திற்குப் பேர் வாங்கினது. எபேசுவோ மூடப்பக்திக்கு உறைவிடம்.

அஞ்ஞான இருள் நிறைந்த இப்பட்டணத்துக்கு இப்பொழுது பரி. பவுல் வந்தார். வரவும் சீஷர் சிலரை அங்கே கண்டுபிடித்தார். எபேசுவைப் போலொத்த ஓர் பெரிய பட்டணத்தில் இவ்வாறு சிலர் அதிக அறிவற்றவர்களாயிருந்தது ஆச்சரியமல்ல. அப்போஸ்தலன் அவர்கள் காரியாதிகளைக்கவனிக்கவே, அவர்களிடத்தில் பல குறைகளைக் கண்டார் கிறிஸ்துவுக்குள்ளான சந்தோஷம் அவர்களில் காணப்படவில்லையோ? அன்பு, சமாதானம், இச்சையடக்கம் முதலிய ஆவியின் கனிகளில் குறைவுள்ளவர்களாயிருந்தார்களோ? துதி, ஸ்தோத்திரகீதம் அவர்கள் உதடுகளினின்று புறப்படவில்லையோ? எப்படியோ அவர்களில் ஆவியானவரின் கிரியை தோன்றவில்லையென்று கண்டார்.

இதற்குக்காரணம் யாதென்று கண்டுகொள்ளும்படி, அவர்களைப் பார்த்து "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" என்றார்கள் தெளிவாய்ப் பாஷாந்தரம் செய்தால் "பரிசுத்த ஆவி அருளப்படுகிறார் என்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" என்றார்கள். பரிசுத்த ஆவியை யாவரும் பெறும் காலம் வந்துவிட்டதென்று அவர்கள் அறியவில்லை. அப்பொழுது பரி. பவுல் அப்படியானால் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்களென்று கேட்டார். அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது அப்போஸ்தலன், யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டான் என்று சொன்னார். அப்பால், பரி. பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்.

இச்சம்பவத்திலிருந்து எழும்பும் சில காரியங்களைக் கவனித்துக்கொள்ளவேண்டும்:—

(1) ஒருவன் ஞானஸ்நானம் பெறும் சமயமே, அவன் விசுவாசியாகும் சமயம் என்று அப்போஸ்தலன் எண்ணினதாகத் தெரிகிறது.

பூர்வ அப்போஸ்தல திருச்சபையில் ஞானஸ்நானம் பெறாத ஓர் மனுஷனை "விசுவாசி" என்று ஒருவரும் எண்ணுகிறதுமில்லை, அழைக்கிறதுமில்லை ஒருவனை விசுவாசியாகும் சமயம் ஓர் திட்டமான சமயம். கிறிஸ்து மார்க்கத்தில், நாளடைவில் நம்பிக்கை வைக்கிறதும், கிறிஸ்துநாதரை விசுவாசிக்கிறேனென்று வெகுநாளாய்ச் சொல்லிக்கொள்வதும் விசுவாசியாவதாக எவரும் ஒப்புக்கொள்ளமாட்டாரகளென்று தோன்றுகிறது. இயேசுரக்ஷகரைப் பற்றிக்கொள்ளுகிற ஒருவன் அவர் ஏற்படுத்தின பரிசுத்த ஞானஸ்நானத்தைப்பெற்று, திருச்சபையில் சேரும் சமயத்திலேயே விசுவாசியாகிறான். அவனை "விசுவாசி" என்று அதற்குப்பிற்பாடுதான் சொல்லக்கூடும்.

(2) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போதே, பெந்தேகொஸ்தே ஆவியின் வரத்துக்கும் பங்குள்ளவனாவது கூடிய காரியம் என்று அப்போஸ்தலன் நினைத்ததாகக் காண்கிறோம்.

நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்ற கேள்விக்கு அவர்கள் இல்லை என்பதாக மறுமொழி பகர்ந்தபோது, அப்படியானால், நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்கிறார். அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தின் ஒழுங்கின்படி கிரமமான ஞானஸ்நானம் பெற்றிருந்தால், பரிசுத்த ஆவியின் வரத்தையும் அறிந்திருப்பார்களே என்று அவர் நினைத்ததாகத் தெரிகிறது. நமது ஞானோபதேச வினாவிடை சொல்லுகிறபடி, ஞானஸ்நானத்தினால் ஒருவன் தேவனுடைய ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளியும், கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயுமாவது நிச்சயமானால், பரிசுத்த ஆவியின் சம்பூரண வரத்துக்கும் அவன் பங்காளியாகிறான் என்பது நிசமே. போதனையில்லாததாலும், ஆயத்தமில்லாததாலும் ஒருவன் அவரை அறியாமலும் அநுபவியாமலும் போகலாம். ஆனால் அவன் அவருடைய சம்பூரண கிருபைக்குச் சுதந்தரவாளியாயிருக்கிறான் என்பது மெய்.

3 பெந்தேகொஸ்தே ஆவியின் கிருபையைப் பெறுவதற்கு, ஞானஸ்நானத்தோடுகூட, "கைகளை வைக்குதல்" என்ற ஆசாரமும் கையாடப்பட்டதென்று காண்கிறோம்.

எபேசுவின் சீஷர் கிறிஸ்துமார்க்க ஞானஸ்நானம் பெற்றபின், "பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்". "அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்ட அப்போஸ்தலன் அவர்கள் கிரமமான கிறிஸ்தவ ஞானஸ்நானம் பெற்றவுடன் பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வந்திறங்குவார் என்று எதிர்நோக்காமல், ஞானஸ்நானம் பெற்றவர்கள்மேல் கைகளை வைத்து ஜெபித்து, அவர்கள் ஞானஸ்நானத்தைப் பூரணமாக்கினார் என்று தோன்றுகிறது. கைகளை வைக்குதல் ஞானஸ்நானத்தைப் பூரணமாக்குகிற ஆசாரம் என்பது இச்சம்பவத்தினால் ரூபகாரமாகிறது. ஞானஸ்நானத்தைப்பற்றி அவர் கேட்டபோதே, அதோடு கூடச்சேர்ந்த "கைகளை வைக்குதலை" யும் நினைத்தே கேட்டிருந்தார் என்று இதிலிருந்து அநுமானிக்கலாம்.

(4) கைகளை வைக்குதல் அப்போஸ்தலர் முதலிய விசேஷித்த ஊழியரால் மாத்திரம் செய்யப்பட்டதென்று இதினால் தெளிவாகிறது.

"அதைக்கேட்டபோது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்" (வா. 5, 6) கைகளை வைத்தது பரி பவுல் என்று விசேஷித்துச்சொல்லுவதைக் கவனிக்கும்போது, பரி. பவுல் தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லையென்று தோன்றுகிறது. எங்கும் அவர் செய்கிறதுபோல இங்கும், பரி. பவுல் ஞானஸ்நானம் கொடுக்காமல், அவரோடிருந்தவர்களே கொடுத்தார்களென்று நிதானிக்கலாம. கைகளை வைத்து ஆசீர்வதித்து பரிசுத்த ஆவிக்காக ஜெபித்ததோ அப்போஸ்தலனே. இதே பிரகாரமாக சமாரியாவிலும் எழுபேரில் ஒருவனாகிய பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தபோதிலும், பரி பேதுரு, பரி. யோவான் என்ற அப்போஸ்தலரே கைகளை வைத்தார்கள் என்று அறிவோம். மற்றவர்கள் இவ்வாறு செய்யும்படி ஆசிப்பதும், கைகளை வைக்கும் உத்தியோகத்தைத் தங்கள் சுய பிரயாசத்தினால் சம்பாதித்துக்கொள்ளும்படி நினைப்பதும் பாவமாகிறதென்று மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய திருஷ்டாந்தத்தினால் அறிவோமே. இது காரணத்தைப்பற்றியே தற்காலத்திலும் அத்தியக்ஷர்கள் மாத்திரமே நடப்படுத்தலைக் கொடுக்க அதிகாரமுடையவர்களாயிருக்கிறார்கள்.

ஞானஸ்நானம், திடப்படுத்தல், பரிசுத்த ஆவியின் ஈவு இவைகளுக்குள்ள சம்பந்தம் இப்பாகத்தில் தெளிவாய்க்காணப்படுகிறது. பரிசுத்த ஞானஸ்நானம் அவசியமென்பதும், இயேசுவின் நாமத்தில் அல்லது திரியேக தேவனுடைய நாமத்தில் கொடுக்கும் ஞானஸ்நானமே சரியான ஞானஸ்நானம் என்பதும், அப்போஸ்தல அதிகாரம் பெற்றவர்கள் கைகளை வைத்து, ஆசீர்வதித்து ஜெபிக்கும்போது அவ்வித ஞானஸ்நானம் பூரணப்படுகிறது என்பதும், அவ்வித ஞானஸ்நானத்தினால் விசுவாசி பரிசுத்த ஆவியின் வரத்திற்குப் பங்காளியாகிறான் என்பதும் எபேசுவின் சம்பவத்திலிருந்து தெளிவாகிறது. இவ்வாறு ஆரம்பித்த எபேசு கிறிஸ்தவர்களுக்கு, அப்போஸ்தலன் சிறிதுகாலத்துக்குப்பின் எழுதின நிருபத்தில் "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்றும் "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்றும் எழுதுகிறார். நாமும் போதிக்கவேண்டிய போதனை இதுவே. (எபே. 4; 30; 5: 18).

பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைப்பற்றித் தெளிவாய்ப்போதிக்கவேண்டியது நமது கடமை. அவர்கள் திடப்படுத்தப்படும் காலத்தில் மெய்யாகவே பெந்தேகொஸ்தே ஆவியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்களை ஆயத்தப்படுத்தவேண்டும. தேவ ஊழியர் அவ்வாறு செய்யத் தவறும்போது, அப்போஸ்தலர் காலத்து பரிசுத்த ஆசாரங்களை நாம் உபயோகித்தபோதிலும் அவைகளை வீணாக்குகிறவர்களாகிறோம். அப்படிச்செய்யாதபடி ஜாக்கிரதையாயிருப்போமாக.

(இன்னும் வரும்)

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

JULY, 1914. Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 7] ஜூலைமீ 1914 [விலை பை 3

23 SEP 1914

CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 49 |
| The Late Bishop Williams ... ... ... | 50 |
| The Acts of the Missionaries ... ... ... | 52 |
| Home Missioner's Letter ... ... ... | 55 |


பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 49 |
| காலஞ்சென்ற நமது அத்தியக்ஷரவர்கள் ... ... | 50 |
| மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... | 52 |
| உள்நாட்டு ஊழியரின் கடிதம் ... ... | 55 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது சங்கத்தின் பரிபாலனரும், இப்பகுதியிலுள்ள தேவ திருச்சபையின் தலைவரும், கிறிஸ்துவுக்குள் சங்கை பொருந்திய நமது அருமைத் தகப்பனுமான மகாகனம்:

அத்தியக்ஷரவர்களின் மரணம்.

உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்களை இழந்து துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறோம். அவர் கள் ஜூன்மீ 30உ குன்னூர் ரெயில்வே ஸ்டேஷனில் திடீரென தேகவியோகமான துக்கசெய்தி திருநெல்வேலிக் கிறிஸ்தவர் அனைவருக்கும் மிக்க மனத்துயரையும் கொடிய சஞ்சலத்தையும் விளைவித்திருக்கிறது. காலஞ்சென்ற அருமை அத்தியக்ஷரவர்கள் திருநெல்வேலிச் சபையின் தலைவராயிருந்த காலம் ஒன்பது வருஷம்தான். இக்காலத்தில் நமதுபேரில் அவர்களிடம் விளங்கிய ஆசைக்கும் அன்புக்கும் அளவில்லை. திருச்சபை முறைப்படிப் பேருக்கு மாத்திரமல்ல உள்ளபடியே உத்தம தகப்பனாய் விளங்கினார்கள். வேனிற் காலத்தில் சுகத்துக்காக நீலகிரி மலைக்கு சேருவதற்குமுன் பாளையங்கோட்டையில் வீடுவீடாய் வந்து, ஆள்ஆளாய்ச் சந்தித்து விடை பெற்றுப்போனார்கள். அவர்கள் திருநெல்வேலிக்குத் திரும்பிவரமாட்டார்கள் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. கர்த்தரின் அழைப்பு அவ்வளவு சடுதியாய் வந்து பரம இளைப்பாறுதலுக்குட்பிரவேசித்தார்கள். "ஆம் பிதாவே, இப்படிச்செய்வது உம்முடையதிருவுளத்திற்குப் பிரியமாயிருந்தது". நமது அத்தியக்ஷரவர்களுக்கு திருநெல்வேலி கிறிஸ்தவர்களைப்பற்றிப் பெரிய எண்ணமுண்டு. அவர்களைப் பற்றிய கரிசனையும் அதிகம். தங்களுடைய அத்தியக்ஷாதீனத்திற்கு வெளியே பிரயாணஞ்செய்ய நேரிடுகையிலும் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களைத்தேடி விசாரித்து அவர்களுடைய சுகக்ஷேமங்களை அறிந்து இங்கு வந்து நமக்குத் தெரிவித்தார்கள். அவர்களுடைய அன்பு விஷத்தெரியா பிள்ளைகளின் அன்பைப்போலொத்ததாய் கபடற்ற—மாயமற்ற அன்பாயிருந்தது. அவர்களுடைய அமரிக்கையும் சாந்தமும் யாவருக்கும் எப்போதும் பிரத்தியட்சமாயிருந்தது. அவர்களுடைய பெருந்தன்மையையும் ஈகைக்குணத்தையும் அறியாதவர்கள் இந்த ஜில்லாவிலும், ராஜதானியிலும் கிடையாது. திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுக்குள் அவர்களிடம் எவ்விதமான உதவியும் பெறாதவர்கள் மிகவும் சொற்பம். நமது ஜில்லாவில் அவர்களிடம் பணஉதவி பெற்றுக்கொள்ளா ஆண் பெண் பாடசாலைகள் இல்லை. பாடசாலைதோறும் பீஸ் உதவி பெற்று வந்த பல மாணவர் உண்டு. தேவாலயக் கட்டுமானம் முதலிய நன்முயற்சி அனைத்திற்கும் தாராளமாய் உதவிபுரிந்து வந்தார்கள் இந்திய மிஷனெரி சங்கம் அவர்களுக்கு மகா அருமையாயிருந்தது. இச்சங்கத்தை தங்கள் அத்தியக்ஷாதீனத்தின் மிஷனெரி ஊழியமாக எண்ணி, எல்லாக் குருமாரும் இச்சங்கத்தை நன்குமதிக்கவும், இதற்குக் கைகொடுக்கவும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஏவி வந்தார்கள். நமது பத்திரிகையின் மூலமாய் இந்திய மிஷனெரி சங்கத்தின் அவயவங்களுக்கும், திருநெல்வேலிக்கிறிஸ்தவர் அனைவருக்கும் நவ வருட வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் கூறிவந்தார்கள். தோர்ணக்கல் அத்தியக்ஷ ஆலயம் திருநெல்வேலித் திருச்சபையால் கட்டப்படவேண்டுமென்பது அவர்கள் இருதயத்தின் பேர் வாஞ்சை. அவர்களுடைய மரணம் நம்மெல்லாருக்கும் பெரிய நஷ்டமாயிருப்பதுடன், தம் பர்த்தாவை இழந்து தனித்துவிடப்பட்டிருக்கும் மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் அம்மாளவர்களுக்கு எவ்வளவோ ஆயாசத்தையும் மனவியாகுலத்

தையும் உண்டாக்கியிருக்கிறது. மாம்சத்தின்படி சந்தான மற்று, இயற்கையில் பெலன் குன்றி, வயோதிபமாயிருக்கும அருமை அம்மாளவர்களுக்கு அத்தியக்ஷரவர்களின் மரணம் ஆராத்துயரத்தையும் மிஞ்சினகவலையையும் உண்டாக்கக்கூடியது இயல்புதான். ஆதலால், கருணாகரர் தாமே கணவனை இழந்து துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் அத்தியக்ஷர் அம்மாளவர்களுக்குத் தமது உன்னத சமுகத்தையும் சகாயத்தையும் கடாட்சித்தருளும்படி கருத்தாய் கிருபாசனத்தின் முன் கெஞ்சுவோமாக.

**வருஷாந்தக் கூட்டம்.** நமது சங்கத்தின் வருஷாந்தக்கூட்டம் இம்மாதம் 9-ம் தேதி இரவு சி. எம். எஸ். சதாப்தமண்டபத்தில் நடந்தது. கனம்: கார் ஐயரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்தார்கள். கடந்த வருஷத்தின் அறிக்கை கனம்: டேயர் ஐயரவர்களால் வாசிக்கப்பட்டது. கனம்: உயிலன் ஐயரவர்கள் வருஷாந்தப் பிரசங்கம் செய்தார்கள். நமது மிஷனெரிமாரில் ஒருவராகிய கனம்: சீனிவாசகம் அவர்களும் பேசினார்கள். அன்று காலையிலும் மாலையிலும் தோர்ணக்கல் பாடசாலை ஆதரவுக்கென்று நண்பர் அனுப்பிய 'பலவிநோத பொருள் விற்பனை' நடந்தது. மநியம் நாளது வருஷத்துக் கமிற்றிமெம்பர்கள் சீட்டின்பேரில் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

---

## காலஞ்சென்ற நமது அருமை அத்தியக்ஷரவர்கள்.

மதுரை, திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தின் பிரதான குருவாகிய மகாகனம்: ஆர்தர் அக்சிலன் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் எம். ஏ., டீ. டீ. பிரிட்டீஷ் தீவுகளில் ஒன்றாகிய ஐர்லாண்டின் வடபாகத்தைச் சேர்ந்தவர்கள். 1846-ம்௵ நவம்பர்மாசத்தில் பிறந்து இளமைபிராயத்தில் மரகதமணியென்று போற்றப்படும் ஐர்லாண்டு தீவிலேயேபக்தியுள்ள பெற்றோரால் வளர்க்கப்பட்டவர்கள். பின்னர், கல்விபயிலும்படி இத்தீவின் பிரதான நகரியாகிய டப்ளின் நகரத்தில் கல்விக் குறைவிடமாய் விளங்கிய திரித்துவ கலாசாலையை அடைந்து பட்டதாரியானதின்பின், 1870-ம் ௵ குருப்பட்டம் பெற்று சீமை தேசத்திலேயே ஆறுவருஷம் பிரும்லீயென்றவிடத்திலும், நாலுவருஷம் பென்ஜி ஊரிலும் தேவத்திருப்பணிவிடையை மிகச் சுறுசுறுப்பாய் நிறைவேற்றி வந்தார்கள். அப்பால் அவர்களுடைய ஆயுள் முடிவுபரியந்தம் உத்தம கூட்டாளியாயும், மகா சிறந்த அன்பும் பட்சத்துடன் சாந்தப் பெருமாட்டியாயும் விளங்கிய அருமை அம்மாளவர்களை மணம்புரிந்தார்கள். 1880-ம் ௵ அக்டோபர் ௴ இந்தியாவிலுள்ள ஐரோப்பிய கிறிஸ்தவருக்கு ஊழியம்செய்யும் சேப்ளனாக அங்கீகாரம் பெற்று சிலகாலம் மதுரையிலும், இரண்டு வருஷம் சென்னை அத்தியக்ஷர் தேவாலயத்தின் உதவி சேப்ளனாகவுமிருந்தார்கள். சென்னையிலிருக்கையில் அத்தியக்ஷர் ஆலய சபையார் இவர்களது சிறந்த குணாதிசயங்களையும், இன்பமான பிரசங்கங்களையும் நன்குமதித்துத் திரள்கூட்டமாய் ஆலயத்துக்கு வருவது வழக்கமாயிருந்தது. இதன்பின் நமது இராஜதானியில் தானே பெல்லாரி, வெல்லூர் திரிச்சினாப்பள்ளி, பங்களூர், உதகமண்டலம், போலாரம் முதலிய இடங்களில் இராணுவ உத்தியோகஸ்தர், சிவில் அதிகாரிகள், அங்கிலேயர், அங்கிலேய இந்தியர் மத்தியில் வியக்கப்படும்வண்ணம் கர்த்தருடைய ஊழியத்தை நடப்பித்து வந்ததுமன்றி இவ்விடங்களிலுள்ள இந்திய கிறிஸ்தவர்களுடன் பழகி அவர்களுக்கும் பல நன்மைகள் புரிந்துவந்தார்கள். இதன் மத்தியில் 1881-ம் ௵ அங்கிலேய சிவில் உத்தியோகஸ்தருக்கு நடத்தப்படும் தமிழ் பரீட்சையில் மிக்கப் புகழுடன் தேறியதும் கர்த்தர் திருநெல்வேலிச் சபையின்சம்பந்தமாய் இவர்களைப்பற்றிக்கொண்டிருந்த நோக்கம் நிறைவேறவேண்டியே யென்று சொல்லத்தேவையில்லை. அவர்கள் திருநெல்வேலியில் கால் மிதித்ததுமுதல், கிறிஸ்தவர்களுக்குள் ஏழைகள், தாழ்ந்த அந்தஸ்துள்ளோர், அநாத ஸ்திரீகள்—பிள்ளைகளின் அவசரங்களை அறிந்து, அவர்களுக்கு உதவிபுரிய சாத்தியமாயிருந்த ஓர் முக்கிய சாதானம் அவர்களுக்குத் தமிழ் பாஷையிலிருந்த தேர்ச்சியே. 1895-ம் வருஷம் மறுபடியும் சென்னை அத்தியக்ஷர் ஆலயத்தின் குருவாகி, தங்கள் வேலையுடன் 'சென்னை அத்தியக்ஷாதீன ரெக்கார்ட்' என்ற பத்திரிகைக்கு நாலுவருஷம் பத்திராதிபராயிருந்து வெகு திறமையுடன் நடத்திவந்தார்கள். அப்பால் 1900-ம் ௵ சென்னை அத்தியக்ஷாதீனத்தின் உபாத்தியக்ஷ குருவாகவும், பிரதிகாருமாக நியமுகம் பெற்று ஐந்து வருஷம் இவ்வூழியத்தைச் செய்து வந்தார்கள். இப்பதிவியிலிருக்கையில் தான், மகாகனம்: மோர்லி அத்தியக்ஷரவர்களின் ஸ்தானத்தில், இந்தியா இலங்கை மாகாணத்தின் அத்தியக்ஷ சபையார் இவர்களைத் திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷாதீனத்தின் பிரதான குருவாகத் தெரிந்துகொண்டார்கள். ஆனதுபற்றி, சர்க்கார் உத்தியோகத்தைவிட்டு நீங்கிப் பென்ஷன் பெற்று 1905-ம் ௵ பெப்ருவரி ௴ 2௳ சென்னை பரி.ஜியார்ஜ் அத்தியக்ஷாலயத்தில் நமது சபைகளின் பிரதான மேய்ப்பனாய் பிரதிஷ்டை பண்ணப்பட்டு இங்கு வந்து சேர்ந்தார்கள். அபிஷேக ஆராதனைக்குக் கூடின இந்திய, அங்கிலேய சிநேகிதரின் திரள்கூட்டமும், அச்சமயம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விலையுயர்ந்த வெகுமதிகளும் ஏராளமான சோபனோபசார பத்திரங்களும் சகலத்திறாளுக்கும் அவர்கள் பேரிலிருந்த அன்புக்கு அத்தாட்சியாயிருந்தது.

அவர்கள் அத்தியக்ஷராக பதிமூவாயிரம் பேருக்குத் திடப்படுத்தலும், சுமார் நாற்பது பேருக்குக் குருப்பட்டமும் கொடுத்ததுமன்றி, நூற்றுக்கணக்கான தேவாலயங்களையும் கல்லறைத் தோட்டங்களையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் படிப்படியாய் விருத்தியடைந்ததையும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மிச்சமான சபைகள் சுய ஆதாரவடைந்து சுய அரசாட்சியின்பேரில் அபேட்சை காட்டினதையும், திருநெல்வேலியின் இந்திய குருமாரும் லே மெம்பர்களும் கவுன்சில்களிலும், கமிற்றிகளிலும் மற்றும் விஷயங்களிலும் அங்கிலேய மிஷனெரிமாருக்கு வியக்கப்படத்தக்க உதவி புரிந்ததையும், திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர் சர்க்காரில் உயர்தர உத்தியோகங்களுக்கு உயர்த்தப்பட்டதுமன்றி கண்ய கௌரதைப் பட்டங்கள் அளிக்கப்பட்டதையும், எல்லாவற்றிற்கும் மேலாக திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர் ஒருவர் முதல் இந்திய அத்தியக்ஷராகத் தெரிந்தெடுக்கப்பட்டு திறமையாய் தேவ ஊழியம் நடத்திவருவதையும் காலஞ்சென்ற மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்களின் ஜீவிய விருத்தாந்த ஆசிரியரும், சரித்திரக்காரரும் எழுதாமல் விடார்.

அத்தியக்ஷரவர்களின் அருமை பெருமையான நற்குணங்களில் சிலவற்றைப் பத்திராதிபர் குறிப்புகளில் கூறினோம். அவைகளை விஸ்தாரமாய் எடுத்துரைப்பது அவசரமன்று என்று நினைக்கிறோம். அத்தியக்ஷரவர்கள் நமதுமத்தியில் வாசம் பண்ணினார்கள். கலியாண வீடுகளுக்குமாத்திரமல்ல துக்க வீடுகளுக்கும் வந்தார்கள். வியாதியஸ்தரான ஐசுவரியவான்களையும் ஏழைகளையும் ஒன்றுபோல சந்தித்தார்கள். தரித்திரருக்கு இரங்கினார்கள். மாணாக்கருக்கு பீஸ் உதவி புரிந்தார்கள். வாலிபர் உத்தியோகம் பெறசிபார்சு கடிதம் கொடுத்தார்கள். திருநெல்வேலிக் கிறிஸ்தவரின் வாழ்வின்பேரில் எப்போதும் கருத்தாயிருந்தார்கள். இவ்விதமாய் நமது இன்பதுன்பங்களில் பங்குபெற்றார்கள். அத்தியக்ஷரவர்களின் இத்தகைய செய்கைகளைத் திருநெல்வேலி கிறிஸ்தவர் யாவரும் அறிவோமே. ஆதலால் அவைகளை விஸ்தாரமாய்ச் சொல்லாது விடுகிறோம். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழிப்போல் அவர்கள் இருதயத்தில் மறைந்திருந்த அன்பும் அனுதாபமும் முகத்தில் பிரதிவிம்பித்தது. சிநேகிதனா சமஅல்லது உயர்ந்த அந்தஸ்துள்ளோருக்குள் சம்பாதிப்பது உலகவழக்கம். இவர்களுக்கோ சகலத்திறாளுக்குள்ளும் எவ்வித அந்தஸ்துள்ளோருக்குள்ளும் சிநேகிதர் உண்டு. சிறுபிள்ளைகளின் பேரில் அவர்களுக்கு விசேஷித்த பிரீதி. இச்சிறு சிநேகிதர் பேரிலுள்ள பேர் அன்பின்பேரில் அவர்களைச் சந்தோஷப்படுத்த அவர்கள் கையாடின பல முறைகளையும் இங்கு சொல்லத் தேவையில்லை.

அருமை அத்தியக்ஷரவர்களுக்கு சில விசேஷித்த வரங்களும் வாய்ந்திருந்தது. சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் ஒருவருடைய மனமும் நோகாமல் காரியாதிகளை நடப்பிப்பதே அவர்களுக்குப் பிரியமும் இயல்புமாயிருந்தது. இவ்விதமும் ஓர் வரமே. அத்தியக்ஷரவர்களுக்கு பிரசங்கவரமும் ஆவியிருந்தது என்று ஆங்கிலம் வாசித்தயாவரும் அறிவார்கள். அயலானர்களுடைய பாஷை நடையும் பேச்சு நளினமும் விசேஷம் பொருந்தியது. ஐர்லாண்டு தேசத்தாருக்குப் பொது இலட்சணமாயுள்ள சாதுரியமும் சமயோசித வார்த்தையும் அவர்களுக்குமுண்டு. சித்திரம் வரைதலில் அவர்களுக்கு சுவையிருந்ததுமன்றி இராகக்கியானமும் அவர்களுக்குண்டு.

இவ்வித வரங்கள் வாய்ந்து இத்திசையிலுள்ள தேவ சபையை விசாரித்து வருகையில் தேவ அழைப்புத்திடீரெனவந்தது. கடந்த எப்பிரல் மாசம் வழக்கம்போல் அத்தியக்ஷரவர்கள் அம்மாளவர்களுடன் சுகத்துக்காக நீலகிரி மலைக்குப் போனார்கள். மலைக்குப் போவதற்கு முன்னும் குறுக்குப்பிடி உபத்திரவத்தால் சிலகாலம் வருந்தியது நம்மில் சிலர் அறிவோம். மலைக்குப்போனபின்னும் அவர்கள் அப்பாகத்தில் மகாகனம்: சென்னை அத்தியக்ஷரவர்களுக்குப்பதிலாக திடப்படுத்தல், தேவாலயப் பிரதிஷ்டை முதலிய வைபவங்களை நடத்திவந்ததுமன்றி சிநேகிதரையும் சந்தித்து வந்தார்கள். திருநெல்வேலியிலிருந்து நெடும் பயணம்செய்து மலைக்குப் போய்ச் சேர்ந்த அதே நாளில் தானே, நமது சங்கத்தின் பிரசிடென்று அவர்களைப் பார்க்கப்போனார்களாம். அவர்களைப்போல வயோதிபரான நமது பிரசிடென்ற் அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, பிரயாணப்பட்டுவந்த நாளிலேயே பிரயாண இளைப்பையும் களைப்பையும் கவனியாது பார்க்க வந்துவிட்டீர்களே என்று வினவ, எவ்வித ஸ்திதியிலும் மேய்ப்பன் ஆட்டைத் தேடித் திரிவது கடமையல்லவா என்று விடை பகர்ந்தார்களாம். இவ்விதமாய் தங்கள்பலவீனத்தைத் தங்கள்தேகத்தில் சுமந்து, படிப்படியாய் பெலன் குன்றி, சிலநாள் வியாதியாயிருந்து, வைத்தியரின் ஆலோசனையைக் கேட்கவே, அவர்கள் சிறந்த வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் அடையும்படி உடனே சென்னப்பட்டணத்திற்குப் போகும்படி ஆலோசனை சொன்னதின்பேரில், ஜூலை ௴ 30௳ மதியம் $1\frac{1}{2}$ மணிக்கு அம்மாளவர்களுடன் சி. எம். எஸ். உதவி செக்ரற்றேரியாகிய கனம் லாங்டேல் சிமித் ஐயரவர்களையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு பட்டணம் போக, குன்னூர் றெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ஸ்டேஷன் மேடையில் நிற்கையில் நிற்கக்கூடாமல் சமீபத்தில் நின்ற ஓர் துரைசானியின் உதவியினால் அங்கு கிடந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து சில நிமிஷங்களுக்குள் 68 வயதுள்ளவர்களாய் ஜீவித்துப்போனார்கள். மறுநாள் சாயரக்ஷை கிளன்வியூ ஓட்டலில் புறமதஸ்தரான பல இந்திய கனவான்கள் அவர்கள் சரீரத்தைப் பார்த்ததின்பின், உயர்ந்த அந்தஸ்துள்ள அனேக அங்கிலேயரும் இந்திய கிறிஸ்தவரும் மகா பக்தியினயமாய் பின்செல்லவும், லாரென்ஸ் ஞாபகப்பாடசாலை வாத்தியக்காரர் வாத்தியங்களை ஒலிக்கவும், அவர்களுடைய தேகம் குன்னூர் சகல பரிசுத்தவான்களின் தேவாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு அடக்க ஆராதனை நடந்தது. ஆலய ஆராதனைக்குத் திரள் கூட்டமாய்க் கூடிவந்திருந்த அநேக இந்தியர் கண்ணீர் சிந்தினார்கள். ஆராதனை முடிந்ததின்பின், அத்தியக்ஷரவர்களோடு படித்து ஏககாலத்தில் கல்விப்பட்டம் பெற்றவர்களும் சென்னை அத்தியக்ஷாதீனத்தின் ரிஜிஸ்தாருமான A. ரோலண்டஸன் துரையவர்களும், மாட்சிமைதங்கிய கவர்ணர்பிரபுவின் பிரதிநிதியாய் வந்திருந்த கேவண்டிஸ் துரையவர்களும், பின்னும் இரண்டொருஉயர்குலதுரைமக்கள் பெட்டியின்பக்கமாய் வரவும், பெருங்கூட்டம் பின் தொடர்ந்துசெல்லவும், அவர்களுடைய தேகம் மகா கண்யத்தோடு புலிமலைக் கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டு போகப்பட்டு, இந்தியரும் அங்கிலேயருமான குருக்களால் ஆராதனையின் மீதிப்பாகம் வாசிக்கப்பட்டு க்ஷேமிக்கப்பட்டது. 'தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களின் நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்."

---

# மிஷனெரிமார் நடபடிகள்

## கோரிந்து சபை ஸ்தாபனம். அப். 18: 1—17.

அத்தேனேயை விட்டு, பரி. பவுல் 50 மைல் பிரயாணம் பண்ணி, அகாயா மாகாணத்தின் தலைநகராகிய கோரிந்து வந்து சேர்ந்தார்.

கோரிந்து ரோம ராஜ்யத்தில் இரண்டாவது பட்டணம். பெருத்த வியாபார ஸ்தலம். சகல ஜாதிகளும் வந்து கூடுமிடம். கி மு 46-ம் வருஷத்தில் ஜூலியஸ் சீசர் கட்டின பட்டணம். இரு கடலுக்கும் மத்தியிலுள்ள பூசந்தியில் ஆசியாவிலிருந்து ரோமாபுரிக்குப் போகும் மார்க்கத்தில் இருந்தபடியால், ஜனத்தொகையிலும், வியாபாரத்திலும், ஐசுவரியத்திலும் மகா சிரேஷ்ட ஸ்தலமானது. அப்படியே துன்மார்க்கத்திலும் கொரிந்து பேர் வாங்கினது. ரோமராஜ்யத்தில் கொரிந்தைப்போல அவ்வளவு துன்மார்க்கம் நிறைந்த பட்டணம் எதுவுமில்லை. உலகப்பிரசித்தமான ஓர் பந்தய ஓட்டம் இரண்டு வருஷத்துக் கோர் முறை இங்கு நடக்கும். அக்காலத்தில் காணப்படும் உல்லாசத்திற்கும் சிற்றின்பத்திற்கும் கணக்கு வழக்கில்லை. பட்டணத்தார் வணங்கும் தேவதை அப்பாபிரோதித்து (அல்லது வீனஸ்) என்னும் மோகினி தேவதை. இக்காம தேவதையைப் பூஜை செய்யும் கன்னிகைகள் தங்கள் சரீரத்தையும் கற்பையும் விற்றுப்போடுவார்கள். ஆயிரம் தேவ தாசிகள் கோவிலைச் சுற்றிலும் வசித்து வந்தார்கள். கோவில் வணக்கம் என்றால் வேசித்தனம், பெரும் தீண்டி, குடிவெறி, நாடகம் அசங்கியமான விளையாட்டுகள் இவைகளே. கடல்மார்க்கமாய் வருகிறவர்கள் முதல் முதல் காணும் காட்சி பேர்போன ஓர் தாசிக்கு நகரத்தார் சமர்ப்பித்திருக்கும் ஓர் சமாதியே. பூர்வ நூல்களில் கொரிந்தியன் என்ற வார்த்தைக்கே குடிகாரன், துன்மார்க்கன், போக்கிரி என்ற அர்த்தமுண்டாயிற்று. விபசாரக்காரர், பொருளாசைக்காரர், விக்கிரகாராதனைக்காரரோடு கலந்திருக்கக்கூடாது என்று கொரிந்து கிறிஸ்தவன் ஒருவன் நினைக்கும் பக்ஷத்தில் அவன் உலகத்தையே விட்டுப்போக வேண்டியதாயிருக்குமானால், பட்டணம் எப்பேர்ப்பட்ட பட்டணமாயிருந்திருக்கவேண்டும்!

இவ்வித பட்டணத்துக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் எவ்வளவு அவசியம்! பரி. பவுல் இங்கு செய்த வேலையினால், இப்பட்டணத்திலுங்கூட அகாத படுகுழியில் கிடந்த பலர் சுவிசேஷத்தினால் மறு ரூபமாக்கப்பட்டார்கள் என்று காண்கிறோம் 1 கொரி 6: 9-11ல் ஓர் பயங்கர ஜாபிதாவைச்சொல்லி, உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆகிலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கபட்டீர்கள்'' என்கிறார்.

கொரிந்துவின் வேலையை மூன்று பிரிவாக வகுக்கலாம்:-

(1) பிரிஸ்கில்லா வீட்டிலிருந்து செய்த வேலை. வா. 1-8.
(2) யுஸ்துவின் வீட்டிலிருந்து செய்த வேலை. வா. 9-11.
(3) கொரிந்துவை விட்டுவிட ஏதுவாயிருந்த காரணம். வா. 12-18.

### 1. பிரிஸ்கில்லா வீட்டிலிருந்து செய்தவேலை. வா. 1-8.

அத்தேனேயிலிருந்து அப்போஸ்தலன் துக்கத்தோடே புறப்பட்டார். ஜனங்கள் கர்வம் பிடித்த கடினநெஞ்சர். பரி பவுல் அவர்களுக்கேற்க சாதுரியமாயும் நியாயதோரணைகளுடனும், நயவசனிப்பாயும், உலக ஞானத்தோடும் பிரசங்கித்த போதிலும் பலனோ மகா சொற்பம். ஆகவே அங்கிருந்து புறப்பட்டு கொரிந்துவுக்கு வந்தபோது, தமது பிரசங்க விஷயமாய் சில தீர்மானங்கள் செய்து கொண்டுவந்தார். இதை 1 கொரிந்தியர் 2: 1-5ல் தெளிவாய்க்காணலாம். "சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, (அத்தேனேயிலிருந்து வந்தபோது) தேவனுடைய இரகசியத்தை (அத்தேனேயில் செய்தது போல) சிறந்த வசனிப்போடாவது, ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத்தீர்மானித்திருந்தேன்'' என்கிறார். சுவிசேஷ பிரசங்கிகளுக்கு இது அவசியமான எச்சரிப்பு. நாமும் எவர் மத்தியில் பிரசங்கிக்க நேரிட்டாலும், யாருக்கு சாட்சி சொல்ல அழைக்கப்பட்டாலும், வெட்கப்படாமல், இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் ஜனங்களுக்குள்ளே அறிவியாதிருக்கத் தீர்மானித்துக் கொள்ளுவோமாக.

வழக்கம்போல அப்போஸ்தலன் முதல் முதல் யூதருக்குள் தன் வேலையை ஆரம்பித்தார். ரோமாபுரியிலிருந்து வந்து கூடார வேலை செய்து பிழைக்கும் ஓர் வீட்டார் அங்கிருந்தார்கள். அவர்களுடன் தங்கி, தமது ஜீவனார்த்தத்திற்காக அவர்களோடு சேர்ந்து கைத்தொழில் செய்துகொண்டு யூதருடைய ஓய்வு நாட்களில் ஜெப ஆலயங்களில் மார்க்க சம்பாஷணை நடத்தினார். இவ்வாறு பிரிஸ்கில்லா வீட்டிலிருந்து வேலை செய்தாலும், அத்தேனேயைப்பற்றினதுக்கம், மக்கெதோனியா சபைகளைப்பற்றிய கவலை, சீலாவும் தீமோத்தேயும் கூட இல்லாத கஷ்டம் இவைகளால் பரி. பவுல் நெருக்கப்பட்டார். "நான் பலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும், உங்களிடத்தில் இருந்தேன்'' என்கிறார். (1 கொரி 2:3) சிறிது பலன் காணப்பட்டதுண்டு. ஸ்தேவான் வீட்டார் முதல் முதல் கிறிஸ்தவர்களானார்கள். "ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள்'' என்று 1கொரி 16: 15ல் சொல்லுகிறார். மேலும், "ஜெப ஆலயத் தலைவனான கிறிஸ்புவும் தன் வீட்டார் அனைவரோடுங்கூட கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான்''. கிறிஸ்துவினிமித்தம் இவன் தன் வேலையையும் விட்டுவிட வேண்டியதாயிற்று. இவனுக்குப் பதிலாக, யூதர் சொஸ்தேனேயை (18: 17) நியமித்துக்கொண்டார்கள். காயுவும விசுவாசியானான். சீலாவும் தீமோத்தேயும் கூட இராதபடியால், பவுல் தாமே இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் "நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் நான் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்; ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்தேன்'' என்று நிருபத்தில் எழுதுகிறார். (1: 15).

அத்தேனேயிலிருந்து தெசலோனிக்கேக்குத் திருப்பியனுப்பப்பட்ட சீலாவும், தீமோத்தேயும் இப்போது [illegible]வந்து தெசலோனிக்கே சபையைப்பற்றி [illegible] சொன்னார்கள். அச்சமயத்தில் தெசலோனிக்கேய[illegible]முதினை நிருபத்தில் 'தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும், அன்பையுங் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது போல, நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்களென்பதைக் குறித்தும் எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே, சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும், உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே, உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம். நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.'' (1 தெச. 3: 6-8) என்கிறார். இந்தச் சந்தோஷத்தினால் "பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்''. (அப். 18: 5). அவர்களோ கர்த்தராகிய இயேசுவைத்



தூஷித்து எதிர்த்தார்கள். இனி இவர்கள் நடுவில் செய்யத்தக்க வேலை தமக்கில்லையென்றறிந்து, தன்வஸ்திரங்களை உதறி, உங்கள் இரத்தப்பழிக்கு நான் சுத்தமாயிருக்கிறேன் என்று சொல்லி, ஜெப ஆலயத்தை விட்டெழுந்து, தெருவைக்கடந்து எதிரே சமீபமாயிருந்த புறஜாதியானான யுஸ்து வீட்டுக்குப் போனார். யூதர் நடுவில்செய்த ஊழியம் இம்மட்டில் முடிந்தது.

பரி லூக்கா சொல்லாத இன்னொரு சம்பவம் இங்கே வரவேண்டியது. சீலாவும் தீமோத்தேயும் வந்தவுடன் தெசலோனிக்கேயரைத் தைரியப்படுத்தவும், தங்களுக்கு அருமையானவர்களை இழக்கக் கொடுத்திருந்த சிலரை ஆறுதல்படுத்தவும் அவர்களுக்கு ஒரு நிருபம் எழுதினார். இதுவே 1 தெசலோனிக்கேயர். "பவுலும் சீலாவும் (சில்வானும்) தீமோத்தேயும்'' சேர்ந்து எழுதுவதாகச் சொல்லுகிறார். ஆகவே இதை எழுதும்போது அவர்களிருவரும் கூட இருந்தார்கள் என்று தெரிகிறது. "இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து வந்து'' என்றெழுதுவதைக் கவனிக்குங்கால், அவர்கள் வந்து சேர்ந்தவுடன் அப்போஸ்தலன் அந்நிருபத்தை எழுதினார் என்று அனுமானிக்கலாம்.

பரி. லூக்கா இதைக்குறித்து யாதொன்றும் நடபடிப் புஸ்தகத்தில் எழுதவில்லை. இதைப்பற்றி மாத்திரமல்ல, வேறெந்த நிருபத்தைபபற்றியும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இதற்கு பல காரணங்களுண்டு. பரி. லூக்கா அப்போஸ்தலர் நடபடிகளின் ஆகமத்தை எழுதும்போது, பரி. பவுலின் நிருபங்கள் விசேஷித்த தேவ அதிகாரமுள்ள நூல்களாக சபையில் எண்ணப்படவில்லை. ஒவ்வோர் சபை, தங்கள் தங்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களை அருமைபெருமையாய் வைத்துப் படித்திருப்பார்கள் என்பதற்கையமில்லை. ஆனாலும், பழைய ஏற்பாட்டு ஆகமங்களுக்கு இணையாய் இவைகளையும் வேதாகம நூல்களாகச் சேர்க்கும் வழக்கம் இன்னம் [illegible]. ஆகவே இந்நிருபங்களை நாம் மதிக்கிறதுபோல பரி. லூக்கா மதிக்கவில்லை. மேலும் கடிதம் எழுதுவதை ஓர் பெரும் வேலையாக எண்ண யாருக்குத்தான் மனம் வரும்? சபையை ஸ்தாபிக்கும் வேலை பெரிய வேலை என்று யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஓர் சபையைத் தைரியப்படுத்தும்படி எழுதும் கடிதமும் விசேஷமாகுமோ? அப்போஸ்தலன் தெசலோனிக்கேயருக்கு ஓர் கடிதத்தை எழுதும்போது, திருச்சபைக்கு எக்காலத்துக்கும் திவ்ய அதிகாரம் பொருந்திய ஒன்றை எழுதுவதாக, கூட இருந்தவர்களில் யார்தான் அநுமானித்திருக்கக்கூடும்? பரி. பவுல் தானும் அவ்வாறு நினைத்திருப்பாரோ? அவருங்கூட அப்படிப்பட்ட எண்ணத்துடன் நிருபங்களை எழுதவில்லையென்பதற்குப் போந்த அத்தாக்ஷி உண்டு.

ஆகிலும் அந்த எண்ணமுடையவர் ஒருவர் உண்டு. அது பரிசுத்த ஆவியானவரே. பரி. பவுல் சாதாரணமாய்ச் செய்த இவ்வேலையினால் கிறிஸ்து சபைக்கு எக்காலத்துக்குமுரிய உபதேசங்களும், போதனைகளும் உண்டாகும்படி அனைத்தையும் ஆண்டு நடத்தினவர் அவரே.

தேவ ஊழியர் செய்யும் வேலையில் இன்னது அற்பம், இன்னது விசேஷம் என்பதில்லை. நாம் அற்பமாய் நினைக்கிற ஊழியத்தின் மூலமாய் பெருத்த நன்மை திருச்சபைக்கு விளையலாம். நாம் பெரிதாய் நினைக்கிற பணிவிடைகள் நம்மோடேயே மறந்துபோகப்படலாம். பரிசுத்த ஆவியினால் நிறைந்து நின்று வைராக்கியம் பாராட்டுகிறோம் என்று நாமும் நம்மோடிருக்கிறவர்களும் எண்ணும் சமயத்திலல்ல, நாமும் பிறரும் கவனியாமல் போகும் சின்னஞ்சிறிய ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவருடைய நிலையான ஆசீர்வாதம் தங்கலாம். 'பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு' செய்த பிரசங்கம் நமக்குத் தெரியாது. அச்சமயத்தில் அவர் ஸ்தாபித்த சபை இப்போது இல்லை. சாதாரணமாய் உட்கார்ந்து எழுதின ஓர் கடுதாசி நித்திய பலிதமுள்ளதாகிவிட்டது!.

நமது சாதாரண கடமைகளை ஜாக்கிரதையாய்ச் செய்வோமாக! தேவ ஊழியன் தான் செய்யும் சகல வேலைகளிலும் ஒரே ஆவியினால் ஆண்டு நடத்தப்படவேண்டியதவசியம். தேவமனுஷன் எங்கும் தேவ மனுஷன்! எப்பொழுதும் தேவ மனுஷன்! பிரசங்கப்பீடத்திலும், தனி அறையிலும், சபை ஆலோசனைச் சங்கத்திலும், சொந்தக் குடும்பத்தின் மத்தியிலும், பிறர் காரியத்திலும், சொந்தக் காரியத்திலும், பிரசங்கித்தாலும், கடிதமெழுதினாலும்—எல்லா சமயங்களிலும் பரிசுத்த ஆவியானவருடைய ஆளுகைக்கு அடங்கி, அவர் நடத்துதலுக்குக் கீழ்ப்படிவது கடமை. சாதாரணமாய் ஓர் அந்நியனை உபசரிக்கும்போது, தெரியாமல் தேவதூதனை உபசரிப்பது கூடிய காரியம். சாதாரணமாய் ஓர் கைதியை நியாயந்தீர்க்கும் போது, உலக ரக்ஷகனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுவது கூடிய காரியம்! சாதாரணமாக எழுதின ஓர் காயிதம் வேதத்தின் ஓர் ஆகமமாகிவிட்டதே. ஆவிக்குரிய ஜீவியம்—ஊழியம் வேறு, லௌகீக ஜீவியம்—ஊழியம் வேறு என்றெண்ணாதிருப்போமாக. தேவமனுஷனுக்கு எல்லாம் ஒன்றே. உலகக் காரியங்களில் அற்பமாய்த் தோன்றுகிறதின் மூலமாய், தேவனுக்கு மகிமை அல்லது அவமானம் உண்டாகக்கூடும். பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு அனைத்தையும் உட்படுத்தினால் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நமது சகல கிரியைகள் மூலமாயும் பாய்ந்தோடும். ஜாக்கிரதையில்லாமல், ஜெபமின்றி, சுயேச்சையாய்ச் செய்யும் ஊழியத்தின் மூலமாய் நஷ்டமும், அபஜெயமும் விளையக்கூடும். பள்ளிக்கூட வேலை, ஆஸ்பத்திரி வேலை, எழுத்துவேலை, ஆபீஸ் வேலை, கோர்ட் வேலை, சர்க்கார் வேலை, விவசாயம், தச்சு, நெசவு முதலிய கைத்தொழில் வேலை—இவைகளைச் செய்யும் தேவனுடைய பிள்ளைகளே, 'நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' (1 கொரி. 10: 31). அப்பொழுது உங்கள் கிரியைகளனைத்தினின்றும் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் பாயும்.

### (2) யுஸ்துவின் வீட்டிலிருந்து செய்த வேலை. வா. 9—11.

சீலாவும் தீமோத்தேயும் வந்தபின் வைராக்கியத்துடன் சாட்சி பகர்ந்த அப்போதலன் திரும்பவும் அதைரியப்பட்டதாகத் தெரிகிறது. யூதர் துன்பம் ஒரு காரணம். கிரேக்கர் கர்வம் மற்றொரு காரணம். யுஸ்து வீட்டுக்கு வந்த பின்னுங்கூட யூதர் அவரைத் துன்பப்படுத்தினதாக அனுமானிக்கலாம். 1 தெச. 2: 16-ல் 'அந்த யூதர்கள் மனுஷர் யாவருக்கும் விரோதிகளாயிருந்து, புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடை பண்ணுகிறார்கள்' என்றெழுதும்போது, கொரிந்துவில் தமக்கு நடந்ததையும் மனதில் வைத்து எழுதியிருக்கலாம். 2 தெச. 3: 2-ல் 'துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கு எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்' என்கிறார். மேலும் விசுவாசித்த கொரிந்தியரான கிறிஸ்தவர்களும் கிரேக்கர் இயற்கைப்படி, பரி. பவுலினிடத்தில் ஞானஸ்நானத்தைத் தேடினார்கள் என்று தோன்றுகிறது (1 கொரி. 1: 22). சாதுரிய வார்த்தைகளையும், பலமுள்ள ஞான ஆகாரத்தையும் அவரிடத்தில் எதிர்பார்த்தார்கள். அவரோ அவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்று எண்ணி பாலைக்குடிக்கக் கொடுக்கவேண்டியதாயிற்று (1 கொரி. 3: 1, 2). அப்படிச் செய்யும் போது அவர் பேச்சில் கல்லாதவரென்று குறை கூறினார்கள். இதெல்லாம் அப்போஸ்தலனுக்கு மனவேதனையாயிருந்தது.

இப்படிப்பட்ட சமயத்தில் கர்த்தர் தமது தாசனைப் பலப்படுத்துவதற்குத் தரிசனமளித்தார். 'இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி, நீ பயப்படாமல் பேசு. மவுனமாயிராதே. நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி, ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்களுண்டு என்றார்' (அப். 18: 9, 10). சிற்பாசாரி தளர்ந்தபோது, எஜமான் கைகொடுக்கிறார். தீமை உன்னை அணுகாது என்று வாக்களிக்கிறார். என் கட்டளைப்படி பூமியின் கடையாந்தரங்களில் எனக்கு சாட்சி கொடுக்கும்படி வந்திருக்கிறாயே; என் வாக்குத்தத்தத்தின்படி, இதோ நான் உன்னோடேகூட இருக்கிறேன். இவ்விடத்தில் அநேக ஜனங்கள் எனக்குண்டு என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்த தைரியத்தைப் பெற்ற அப்போஸ்தலன் ஒன்றரை வருஷக்காலம் அங்கேயே வேலை செய்வதற்கு உட்கார்ந்தார்.

கர்த்தருடைய மேகம் முன்செல்லும்போது, தாசன் பின்பற்ற வேண்டியதுதானே. கர்த்தர் வாசலைத் திறந்தருளும்போது, ஊழியன் உட்பிரவேசிக்காமலிருக்கலாமா? எஜமான் அறுப்புக்கு விளைந்திருக்கும் வயல் நிலங்களைக் காட்டும்போது, வேலையாள் அறுப்பது கடமையல்லவா? இந்த நெடுங்கால வேலையைப்பற்றி பரி. லூக்கா தமது வழக்கப்படி ஒன்றும் சொல்லவில்லை. கொரிந்தியர் நிருபங்களிலிருந்து அநேக காரியங்களை அறியலாம். பிரசங்கத்தின் பலனாக கொரிந்து பட்டணத்தாரான அநேகர் கிறிஸ்தவர்களானார்கள். அவர்களில் 'ஞானிகள் அநேகரில்லை; வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை,' மிச்சமான பேர் உலகத்தில் அற்பமாயெண்ணப்பட்டவர்களே (1: 26—28). கிறிஸ்பு, ஸ்தேவான், காயு, குலோவேயாள்—முதலிய சிலர் மாத்திரம் ஸ்திதிபந்தர். கிறிஸ்தவர்களில் பலர் அப்போஸ்தலரோடேகூட 'உடன் வேலையாட்களாய்ப் பிரயாசப்பட்டார்கள்' (1 கொரி. 16: 18). இதினால், நிருபத்தில் காண்கிறபடி 'அகாயா நாடெங்கும்' சபைகள் உண்டாயிற்று (2 கொரி. 1: 1). இதில் கெங்கிரேயா ஊர் சபையைப்பற்றி ரோமர் நிருபத்தில் ஓர் குறிப்பு இருக்கிறது. அதற்கு பெபேயாள் என்ற ஓர் சகோதரி ஊழியக்காரியாயிருந்தாளாம் (ரோ. 16: 1).

சபையில் ஆவியின் வரங்கள் பல காணப்பட்டன. பற்பல பாஷைபேசும் வரமும், அற்புதங்களைச் செய்யும் வரமும், குணமாக்கும் வரமும், பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரமும், தீர்க்கதரிசனம் சொல்லும் வரமும் பலருக்கும் அருளப்பட்டிருந்தது. பரி. பவுலின் பிரசங்கம் ஆவியினாலும் பெலத்தினாலும் இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டது (2: 5).

அப்போஸ்தலன் அவர்களுக்குள் போதித்த விஷயங்களைப் பற்றியும் நிருபத்தில் பல குறிப்புகளைக் காணலாம். கிறிஸ்துநாதரின் மரணம், உயிர்த்தெழுதல், தரிசனங்கள். இவை யாவற்றையும் சொல்லிக் கொடுத்திருந்தார். (15: 1-3). சபை கூடுதலைப்பற்றியும் ஆராதனை நடத்துவதைப் பற்றியும் ஏற்பாடு செய்திருந்தார் (14: 23, 34). விசேஷமாக பரி. நற்கருணை ஆசரிக்கும் விதம், பிரதிஷ்டை செய்யும் வார்த்தைகள், அதற்கு ஆயத்தப்படவேண்டிய அவசியம் இவைகளைத் திட்டவட்டமாக அவர்களுக்கு ஒப்புவித்திருந்தார் (11: 23). இவைகளெல்லாவற்றையும் பழைய ஏற்பாட்டு ஆகமங்களிலிருந்து திருஷ்டாந்தப்படுத்திப் புகட்டியிருந்தார் (10: 1—11). 'நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும்,' சம்பூரணமுள்ளவர்களாக்கப் பட்டிருக்கிறீர்களென்று அப்போஸ்தலன் அவர்களைப் பார்த்து உண்மையாய்ச் சொல்லக்கூடும். அவ்வளவு பரிபூரணமாய் அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்!

தென்னிந்தியாவில் முக்கியமாய் தெலுங்குநாட்டில் மிஷனெரிமார் செய்யும் வேலையும் இவ்விதமானதே. சுவிசேஷத்தை அங்கீகரித்திருக்கும் ஜனங்களில் மிச்சமானவர்கள் ஸ்திதி, அவர்கள் பூர்வ வணக்கம், அவர்களைச் சுற்றிலும் காணப்படும் பாவம் இவை இங்கும் அங்கும் ஒன்றுபோலதான். அறிவீனத்திலும், குடிவெறியிலும், துன்மார்க்கத்திலும், விக்கிரகாராதனையிலும் மூழ்கிக் கிடந்த ஜனங்களை இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்குவது சின்ன வேலையல்ல. இவ்விதவேலைக்கு தெய்வீக அருளும் பரிசுத்த ஆவியின் வரமும், விசேஷித்த ஞானமும், மிகுந்த விவேகமும் தேவை. 'எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்' 'எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்' என்று அப்போஸ்தலன் கொரிந்துவிலிருந்து திரும்பவும் திரும்பவும் மற்ற சபைகளுக்கெழுதிக் கேட்டதுபோல (1 தெச. 5: 25; 2 தெச. 3: 2). தற்கால மிஷனெரிமாரும் கேட்கிறார்கள். 'எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்'!

(3) கொரிந்துவை விட்டுப் புறப்பட நேரிட்ட காரணம். வ. 12—17.

ஒன்றரை வருஷ இறுதியில் அப்போஸ்தலன் எழுதின ஓர் பத்திரிகை உண்டு. தெசலோனிக்கேயருக்கு முதலாவது எழுதின நிருபத்தைச் சிலர் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டார்கள் என்று அப்போஸ்தலன் கேள்விப்படவே, 2 தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதினார். துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் அவருக்கு விரோதமாய் எழும்பியிருந்தார்களென்று அதிலிருந்து அறியலாம் (2. தெச. 3: 2). யூதர் எழும்பி பரி. பவுலை நியாயாசனத்துக்கு முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். நியாயாதிபதியின் பேர் கல்லியோன், இவன் செனக்கா என்ற பேர்போன ஞானியின் சகோதரன். சாத்வீக சுபாவமுள்ள நற்குணத்தான் என்று பேர் பெற்றிருந்தவன். பிரியாதைக் கேட்கவே, கல்லியோன் இது தன்னைபடுத்த விஷயமல்லவென்று தள்ளிவிட்டான். பிரியாது கொண்டுவந்தவர்களில் முக்கியஸ்தனைப் பிடித்து, கிரேக்கர் அவன் எதிரில் அடிகொடுத்தபோது, கல்லியோன் அவன் அடிபடவேண்டியது நியாயந்தான் என்றாற்போல் பேசாமலிருந்துகொண்டான். இவ்வாறு ரோமை நியாயாதிபதி பரி. பவுலை யூதருடைய அநியாயத்திற்குத் தப்புவித்தான். ஆனாலும் புறப்படவேண்டிய காலம் ஆகிவிட்டது. என்பதற்கு இது அடையாளமாயிற்று. அகாயாவில் சபை ஸ்தாபிக்கப்பட்டாயிற்று.

கொரிந்துவில் பரி. பவுலுக்குண்டானதுபோல, அதைரியமும், பயமும், சோர்பும் எப்பேர்ப்பட்ட ஊழியக்காரனுக்கும் உண்டாகக்கூடியதுதான். புறமதஸ்தர் துன்பங்களும், கிறிஸ்தவர்களுடைய குறைகளும் தேவ ஊழியனை நெருக்கும்போது, "இதோ உலகத்தின் கடைசிபரியந்தம், சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்ற வாக்கை உணராமல், சோர்ந்துபோவது இயற்கைதான். அப்படிப்பட்ட நேரங்களில் அருமை ரட்சகர் அதிக சமீபமாய் வருகிறார். தம்மைக் கூட இருக்கிறவராக காண்பிக்கிறார். தமது ஊழியக்காரனைத் தைரியப்படுத்துவதற்கு விசேஷித்த ஆவியின் கிரியைகளை நடப்பிக்கிறார். ஊழியன் பலவீனனாயிருக்கும் சமயத்திலேயே, மிகுந்த பலமுள்ள பலிதங்கள் உண்டாகச்செய்கிறார். "அருமை ரட்சகா, கருணாகரா, சகல நாட்களிலும் கூட இருக்கிறேன் என்று வாக்களித்த தயாநிதி! நாங்களும் உமது வேலையில் சோர்ந்துபோகும் சமயங்களுண்டு. கலங்கித் திகைக்கும் நாட்களுமுண்டு. கிருபையாயிரும் சுவாமி. "நான் உன்னோடு கூட இருக்கிறேன்" என்று சொல்லி அடியாரையும் தேற்றியருளும். எங்கள் பெலவீனத்தில் உமது பெலனை



விளங்கச்செய்யும். ஆவியின் மகத்துவமான கிரியைகளைக் காண்பித்து, உம்மை உயிரோடிருக்கிறவராக விளங்கப்பண்ணியருளும்". ஆமென்.

## உள்நாட்டு ஊழியர் கடிதம்.

சாக்ஷிபாபுரம் தவசோற்சவம். கடந்த ஜூன் 10௳ முதல் 12௳ வரை சாக்ஷிபாபுரத்தில் நடந்த தவசோற்சவத்துக்கு ஒருவரும் அழையாமலே தேவ நடத்துதலின்படி போய் கனம். சங்கின் முதலாளி, காரியதரிசி மற்றும் குருமார் கமிற்றி மெம்பர்களால் அன்பாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கு கூடிவந்த திரள்கூட்டமான சபையாருக்கும் ஊழியருக்கும் "கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்" என்ற வாக்கியத்தைக்கொண்டு இந்திய மிஷனெரி சங்கத்துக்குக் கர்த்தர் தாமே கடந்த 11 வருஷங்களாகச் செய்து வந்திருக்கும் நன்மைகளை எடுத்துக்காட்டி நாம் கர்த்தருக்குத் துதிசெலுத்துவதுமல்லாமல் இன்னும் பெரியகாரியங்களைக் கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்க்கவும், கர்த்தருக்கென்று இன்னும் பெரிய காரியங்களை முயற்சிக்கவும் வேண்டுமென்றும விவரித்துக் காட்டிப்பின்னர், ஆசாமிகளுக்கு மட்டும் நடந்த ஓர் கூட்டத்தில் நம் சங்கத்துக்கு அவர்கள் ஒவ்வொருவருடைய உதவியும் ஜெபத்தோடுகூடிய திட்டவட்டமான முயற்சியும் அவசியமென்று காண்பித்தபோது அவர்கள் எல்லாரும் ஆவலோடு தங்கள் சபைகளை நான் தனித்தனிமையாய் சந்தித்து எவியெழுப்பிவிடக் கேட்டதின் பேரில் கர்த்தருக்கு சித்தமானால் கூடிய சீக்கிரம் அப்படி செய்ய வாக்குப்பண்ணினேன். இது மட்டும் ஒரு முயற்சியும் எடுக்காத சிலரும் முயற்சி எடுப்பதாய் வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே அவர்களில் விருப்பத்தையுண்டுபண்ணின தேவன் அவ்விருப்பத்தைக் கிரியையாகவும் மாறப்பண்ணுவாராக. அப்பால் சிவகாசி கனம். J. D. சாமுவேல் ஐயர் அவர்களும் மெம்பர்களும் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி ஞாயிறு அவர்களோடு பின்னிட்டு, காலை சிவகாசியில் பரி. நற்கருணை ஆராதனையிலும், மாலை சாக்ஷிபாபுரம் பரி. நற்கருணை ஆராதனையிலும் ஊழியம்செய்து அவசரமாய் கனம். கார் ஐயர் அவர்களோடு பளியர் மிஷன் ஊழியத்துக்குப் போகப் பிரயாண ஆயத்தம்செய்ய உடனே திரும்பிவிட்டேன். சிவகாசி கனம். ஐயர் அவர்கள் நம் சங்கத்துக்கென்று திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்ய தயவாய் வாக்குப்பண்ணியிருக்கிறார்கள்.

பளியர் மிஷன் சந்திப்பு. பளியர் மிஷனை சந்திக்க முன் சென்ற சுதேச குருமார் அவ்வளவு சுகத்தோடு திரும்பி வாராததால் கனம். செக்ரற்றேரி அவர்கள் என்னையும் அனுப்ப சற்று யோசித்துக்கொண்டிருந்தும், கனம் கார் ஐயர் அவர்கள் தன்னோடு நானும் போவது நலமாயிருக்குமென்று சொன்னதால் அதுவே தேவ அழைப்பென்று எண்ணி 18௳ வியாழக்கிழமை மதியம் பாளையங்கோட்டைவிட்டுப் புறப்பட்டு கனம். ஐயர் அவர்கள் சாமான்களோடும் எங்கள் சாமான்களோடும் லாசருவும் நானும் திருமங்கலத்தில் இறங்கி, தபால் வண்டியேறி ஒரே பிரயாணமாய். இரண்டு இரவும் ஒரு பகலும் தபால் வண்டியில்பிரயாணம்பண்ணி, உத்தேசம் 70 மைல் போவதற்குள் 5 தபால் வண்டிகளில் சாமான்கள் மாற்றியும், ஒரு ஆற்றில் வெள்ளம் வந்தமையால் தோணியில் ஆற்றைக் கடந்தும், தேவகிருபையால் கம்பம் சனி காலை 11 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். திருமங்கலம் கனம். தோமாஸ் ஐயர் அவர்களும், உசிலம்பட்டி மக-ா-ா-ஸ்ரீ வேதநாயகத்தேவர் அவர்களும், கம்பம் பாரஸ்ற் ரேஞ்சு ஆபீசர் மக-ா-ா-ஸ்ரீ வேலாயுத நாயர் அவர்களும் பாராட்டின அன்பு, சகாயம், உபசாரனை முதலியவற்றிற்காக அதிக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். கம்பத்தில் சனி ஞாயிறு பின்னிட்டு மலையேற ஆயத்தம்செய்துகொண்டதுமன்றி, காலஞ்சென்ற கனம். ரெனியூஸ்ஐயர் அவர்களால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டு தற்சமயம் அமெரிக்கன் மிஷன் கனம். ஈசாக்கு ஐயர் அவர்கள்மேல் விசாரணைக்குள் இருக்கும் சபையில் அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி ஞாயிறு காலை ஆராதனையில் பிரசங்கித்தேன். ஷை ஐயர் அவர்கள் நம் பளியர் மிஷன் சம்பந்தமாய் உபதேசியார் அவர்களுக்கும் சபையாருக்கும் அனுதாபம் காட்டிக் கூடிய உதவி செய்து வருகிறார்கள். நாங்கள் 3 நாள் கஷ்டத்தோடு செய்த பயணத்தை கனம். கார் ஐயர் அவர்கள் வெகு பிரயாசத்தோடேனென்றாலும் வெகு தீவிரமாய் திங்கள் காலை பாளையங்கோட்டைவிட்டுப் புறப்பட்டு சாயங்காலம் $5\frac{1}{2}$ மணிக்குள் முடித்து களைத்தும் தவித்தும் கம்பம் வந்து சேர்ந்தார்கள். வழியில் அவர்கள் குதிரை வண்டியில் ஓர் சங்கடம் நேரிட்டு 3 மணி நேரம் தாயாமாடாவிட்டால் $2\frac{1}{2}$ மணிக்கே வந்து சேர்ந்திருப்பார்கள். மக-ா-ா-ஸ்ரீ வேலாயுத நாயர் அவர்கள் கனம். ஐயர் அவர்களுக்கு பழைய சினேகிதரானதால் அவர்களுக்கும், மக-ா-ா-ஸ்ரீ பாக்கியநாதன் ரேஞ்சர் அவர்களுக்கும் எனக்கும் சேர்த்து, அன்றிரவு ஓர் நேர்த்தியான விருந்தளித்தார்கள். மறுநாள் காலை செவ்வாய் 7 மணிக்குப் பிரயாண ஆயத்தத்திலிருந்த 9 பளியக் கிறிஸ்தவர்களையும், அவர்கள் உபதேசியார் விருந்தினர் நால்வரையும் சேர்த்து, விருந்தளித்த மக-ா-ா-ஸ்ரீ வேலாயுத நாயர் அவர்கள் வீட்டின் முகப்பில் கனம். கார் ஐயர் அவர்கள் ஓர் படம் பிடித்தபின், ஜெபத்தோடு மலைப்பளியர் குடியிருப்புக்குப் புறப்பட்டோம்.

காலை 8 மணிக்குப்போல் கம்பம் பாரஸ்ற் பங்களாவை விட்டு தரையில் 5 மைலும் மலையில் 5 மைலும் ஆக 10 மைல் தூரம் போக $2\frac{1}{2}$ மணி ஆகிவிட்டது. நான் மலையேறி வழக்கமில்லாதவராயும் முதல் $2\frac{1}{2}$ மைல் தூரம் முட்டேற்றமானதாலும், பாதி தூரம்போல் கனம் கார் ஐயர் அவர்கள் குடையின் ஓர் நுனியை நான் கெட்டியாய் பிடித்துக்கொள்ளச்செய்து, மற்றோர் நுனியை அவர்கள் கக்கத்தில் வைத்துக்கொண்டு, என்னைப் பின்னாலிழுத்துக்கொண்டே போய்விட்டார்கள். பளிய சபையார் ஆவலோடு எங்களுக்கெதிர்கொண்டு வந்து, தங்கள் மேளவாத்தியங்கள் நாகசுரங்களோடு அழைத்துக்கொண்டு போய், அவர்கள் கையாலே தானே சிறப்பாய் அமைத்திருந்த ஆலயத்துக்குள் உட்கார வைத்து அவர்களில் ஒருவனாகிய ஐபரைக்கொண்டு, கனம் கார் ஐயர் அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கச் செய்தார்கள். கம்பம் பாரஸ்ற் பள்ளிக்கூடத்தின் போதகாசிரியராகிய மக-ா-ா-ஸ்ரீ பாக்கியநாதன் B. A. ரேஞ்சர் அவர்கள் நம்பளியர் வேலையில் அதிக கரிசனையுள்ளவர்களாதலால் எங்களோடுகூடவே வந்து பரி. ஞானஸ்நானம், நற்கருணை ஆராதனைக்கிருந்துவிட்டு உடனே திரும்ப வேண்டியதிருந்ததால், காலதாமதம் பண்ணாமல் கொஞ்சம் தேயிலை பானம் அருந்தி களைப்பாறினவுடன் 4 மணிக்கே பரி. ஞானஸ்நான ஆராதனையை ஆரம்பித்தோம். பருவம் கடந்த 65 பேரும் குழந்தைகளும் பாலருமான 39 பேரும் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருந்தார்கள. கனம். கார் ஐயர் அவர்களும் நானும் அவர்களைப் பூரணமாய் பரிக்ஷித்து அவர்கள் விசுவாச உறுதியைப்பற்றி பூரண திருப்தியுண்டானதின் பேரில்தான் 104 பேருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தோம். அவர்கள் கேள்விகளுக்கு உத்தரவுசொன்ன தெளிவைக் கவனித்தால் பழையகிறிஸ்தவர்களும் படிப்பாளிகளான கிறிஸ்தவர்களும் ஆச்சரியப்படவும் வெட்கப்படவும் ஏதுவுண்டு. மலைப்பளியரான அவர்களை இப்படி ஆயத்தப்படுத்த அவர்களுக்குள் உழைத்திருக்கிற உபதேசியாரும் மனைவியும் எவ்

வளவு பிரயாசை யெடுத்திருக்கக் கூடுமென்பதை எவரும் எளிதில் கிரகித்துக்கொள்ளலாம. அந்த அருமையான ஆராதனையில் எங்களுக்கு ஆனந்தக் கண்ணீர் பொங்கினது. 4 பாலியப் பிள்ளைகள் மததேயு சுவிசேஷம் முழுமையிலும் நாங்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் உத்தரவு சொல்லத்தக்க அவ்வளவு நேர்த்தியாய் போதிக்கப்பட்டிருந்தார்கள். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

அவர்களுக்கிடப்பட்ட சில ஞானஸ்நானப் பெயர்கள் இதை வாசிக்கும் சிலருக்கு வெகு விநோதமாயிருக்கும். அவையாவன: குஞ்சு, ஸ்ற்றேப்னி, ஐயர், தாளை, வாழை, கஸ்தூரி, லாம், தகம், பொன்னு, நாசி, வெள்ளை காங்கில், மல்லி, தொந்த ஐயா, அம்பலசிக், கபினி, வீராக்ஷி. இவற்றில் சில அவர்கள் பழைய பெயர்கள்தான். ஞானஸ்நான ஆராதனை முடிந்தவுடன் பரி. நற்கருணை ஆராதனை வைத்து பழைய நற்கருணைக்காரரான நாங்கள் 5 பேரும் புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களில் தகுதியுள்ளவர்களான இருவரும் அந்தப் பரிசுத்த பந்தியை யாசரித்தோம். மறுநாள் காலை பளியரில் பலர் திருவாங்கூர் பாரஸ்ற்காரருடைய ஹிம்சைக்குப் பயந்து பல இடங்களில் சிதறியிருக்கிறவர்களை 3 குடிகளில் போய் பார்த்து அவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தோம். 3 குடிகளில் அவர்களுக்காக ஜெபித்தோம். கனம். கார் ஐயர் அவர்களே இவர்களிடத்தில் எவ்வளவோ அன்பாயும் உருக்கமாயும் பிரசங்கித்தாலும், அவர்கள் பூசாரியான ஒருவன் ஒரே பிடியாய் நீங்கள் என்னசொன்னாலும் வேதத்துக்கு வரவே மாட்டோம்; உங்கள் மார்க்கம் உங்களுக்கு; எங்கள் மார்க்கம் எங்களுக்கு என்று சாதித்துவிட்டான். மழையிலும் குளிரிலும் 2 நாள் அலைந்ததில் எனக்குச் சற்று காய்ச்சல் குளிர் இருந்ததால் மறுநாள் கனம் கார் ஐயர் அவர்களும் உபதேசியாருமே 8 மைலுக்கப்பாலுள்ள மன்னுக்களைப் போய்ப் பார்த்து அவர்கள் அவசியத்தையும், ஓர் ஊழியக்காரனுக்காக அவர்கள் காட்டும் தாபந்தத்தையும் பார்த்து பிரசங்கித்து ஜெபித்துத் திரும்பினார்கள். சர்வேயனையும் கண்டு நம் சபையாருக்கு ஜாரியாகியிருக்கிற நிலத்தை சீக்கிரத்தில் அளந்துகொடுக்க ஏற்பாடு செய்ததுடன், நம் சபையார் திருவாங்கூர் பாரஸ்ற் காரரால் படுகிற உபத்திரவங்களையும் திட்டமாய் விசாரித்தறிந்து கர்த்தருக்குள் பொறுமையாயும் நம்பிக்கையாயும் ஜெபிக்கும்படி போதித்து, தங்களால் கூடிய சகாயமும் செய்வதாய் வாக்குப் பண்ணினது அவர்களுக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருந்தது. அவர்களோடிருந்த 3 நாட்களிலும் மாலை ஆராதனை வைத்துப் பிரசங்கித்தோம். ஒரு தடவை "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுங்கள்" என்ற வாக்கியத்திலிருந்து காலையில் தேவசமுகத்தைத் தேடுவதின் அவசியத்தைப்பற்றிச் சொன்னபோது, பலர் காலை ஜெபம் பண்ணாமல் வெளியேறுவதில்லை யென்று சொன்னதைக் கேட்டது, கிறிஸ்துவுக்குள் குழந்தைகளும் காட்டு ஜனங்களுமான இவர்களின் விசுவாச வளர்ச்சிக்குப்போந்த ஆதாரமாய்க் காணப்பட்டது. இவர்களுக்காக நாம் யாவரும் விசேஷமாய் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கனம் கார் ஐயர் அவர்கள் ஊழியரையும் சபையாரையும் வைத்து ஓர் படமும், ஊழியரைத் தனியாயும், பளியர் குழந்தையை முதுகில் பொட்டணம்போல் கட்டிப் போட்டுக்கொண்டு வேலைசெய்யும் பாவனையான படம் ஒன்று தனிமையாயும் எடுத்திருக்கிறார்கள். ஒருவேளை நம் வருஷாந்த அறிக்கைப் பத்திரத்தில் வெளியாகலாம். இவ்வாறு பளியருக்குள் கர்த்தர் செய்திருக்கும் பெரிய காரியங்களைக் கண்டு களிகூர்ந்து அவருக்கே துதிசெலுத்தி வெள்ளிமதியம் மலையிலிருந்து இறங்கி தளம் வந்து சேர்ந்தோம். அங்கு நம் அன்பர் ஸ்ரீமான் பாக்கியநாதன் ரேஞ்சர் அவர்கள், களைப்பாயிருக்கிற எங்களுக்கு தேயிலை பானங்களும் கம்பம் வரைத் திராமனுக்கும் எங்களுக்கும் 2 வண்டிகளும் தயாராய் வைத்திருந்து, கம்பம் பாரஸ்ற் பங்களாவுக்குக்கொண்டுவந்து, அன்றிரவு கம்பம் ரேஞ்சர் அவர்கள் செய்தபடியே இவர்கள் எங்களுக்கு நேர்த்தியான ஓர் இராவிருந்தும், சாமான்களை மலையிலிருந்து, கொண்டுவந்த பளியக்கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் பிரியம்போல் வேறே விருந்தும் அளித்தனர். இந்தப்பிரயாணம் முழுவதும் கர்த்தர் பாராட்டின கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவரால் ஏவப்பட்டு அன்பு பாராட்டின சிநேகிதருக்கு நன்றியறிதலும் சொல்லுகிறோம். கனம் கார் ஐயரவர்கள் சனிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு மாலை 5 மணி பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். அலைச்சலினால் அவர்களுக்குக் காலில் புண்ணுண்டாகி நோவதிகமிருந்தும் ஓர் வேலையும் பாக்கியின்றி முடித்துவிட்டார்கள். நாங்கள் சனி முழுவதும் தபால் வண்டியில் பெரியகுளத்துக்குப் பிரயாணம் செய்து ஞாயிறு கனம்: மாசிலாமணி ஐயர் அவர்கள் விருப்பப்படி பெரியகுளம் அமெரிக்கன் மிஷன் சபையில் ஊழியம் செய்து திங்கள் காலை அம்மையநாய்க்கனூரில் 10 மணிக்கு ரெயில் ஏறி சாயங்காலம் பாளையங்கோட்டை கர்த்தருடைய கிருபையால் சுகமாய் வந்து சேர்ந்தோம். மலைப்பளியர் ஊழியம் கஷ்டம் தானென்றாலும் அங்கு பார்த்த காக்ஷிக்கு அவையெல்லாம் ஒன்றுமல்ல என்கலாம். நம் உபதேசியார் அவர்களும் குடும்பமும் இந்த கஷ்டங்களெல்லாவற்றின் மத்தியிலும் வேலையின்பேரிலுள்ள அன்பினால் தங்களை முழுவதும் பளியருக்கென்று தத்தம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்காகவும் அதிகமாய் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## In Memoriam.

1. சஞ்சலந் தயாபம் வந்து
மிஞ்சவே மனது நொந்து
வஞ்சகினை மாற்ற வந்த
மாறுவேலையா!
தஞ்சின பிஷப் Williams
தூர தேசமாண்டாயோ!

2. எப்போது காண்போமுனை
ஏழை முகம் பார்ப்பாயே!
தப்பாதிரப்போருனை
சாருந்தனை மறவார்
அப்பா குணசாலி நீ
ஆண்டவர் பாதம் போனாய்.

3. தவச உத்சவம் போனாய்
சிறுவர் சங்கமும் போனாய்
நலமான கூட்ட மெங்கும்
நாடி, ஓடியே போவாய
இவர் போலினி மேல்யாரே
சபை சந்திப்புக்கு போவார்?

4. தோர்ணக்கல் மிஷனில்
தீராத வாஞ்சையுற்றாய்
பேரான சேவைசெய்ய
போனாய் ஸ்நானங் கொடுத்தாய்
நேராய் நெம்லேலி சபை
பூராப் பொறுப்பிதென்றாய்

5. அள்ளியள்ளி யிறைக்கும்
அன்பான அஸ்தமெங்கே?
வெள்ளி நாதத்தொனியின்
விஸ்தாரம் போனதெங்கே?
உள்ளங் களியச் செய்யும்
உச்சித பக்ஷமெங்கே?

6. சாப்ளனுமானாய் பின்னே
ஆர்ச் டீக்கனுமானாய்
இப்பாங்கு பாண்டிநாட்டின்
நல்ல பிஷப்புமானாய்
தப்பாது யேசுநாதன்
பாதம் அடைந்தனையோ!

1—7—14. G. Srinivasam.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

JUNE, 1914. Registered No. M. 481

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1914


# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 6] ஜூன்மீ 1914 [விலை பை 3


## திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்.

ஆபீஸ் விலாசம்:

அடைக்கலபுரம், பாளையங்கோட்டை.

மக-ா-ா-ஸ்ரீ. அப்பாசாமி அவர்கள், முதலாளி.
Mr. ஜே. அன்புடையான், B.A., L.T. காரியதரிசி.
,, ஜி. தேவதாஸ், B.A., L.T. பொக்கிஷதார்.
,, வி. சாமுவேல், B.A. பொக்கிஷ காரியதரிசி.
,, செல்வநாயகம், உழைப்போர் ஐக்ய காரியதரிசி.
,, வி. எஸ். காலிஸன், பத்திரிகை மானேஜர்.

சங்கத்தின் பொதுவிஷயமான சகல கடிதங்களும் நடபடிக்கைகளும் காரியதரிசிக்கும், காணிக்கை நன்கொடை மணியாடர் முதலியவை பொக்கிஷதாருக்கும், பத்திரிகை விஷயமான கடிதங்கள், பிரபந்தங்கள், சந்தா முதலியவை பத்திரிகை மானேஜருக்கும் அனுப்பப்படவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா 3 அணா. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும். பத்திரிகையின் சந்தா எப்போதும் முன்பணமாக அனுப்பப்படவேண்டும்.

## CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 41 |
| Missionary Meditation ... ... ... | 42 |
| From the Telugu Field ... ... ... | 43 |
| The Acts of the Missionaries ... ... ... | 45 |
| Missionary Work ... ... ... ... | 47 |


## பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 41 |
| மிஷனெரி தியானம் ... ... ... | 42 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 43 |
| மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... | 45 |
| சுவிசேஷ பிரபல்யம் ... ... ... | 47 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

எப்பிரல்மாசப் பத்திரிகையில் நமது சங்கத்தின் 1913—1914 வருஷ வரவைக் கூறினோம். இச்சஞ்சிகையில் ஷை வருஷச் செலவைத் தெரிவிக்கிறோம்.

**செலவு, 1913—1914.** சென்ற வருஷத்தில் தோர்ணக்கல் மிஷனுக்கு வருஷாந்த செலவுக்கென்று அனுப்பியது ரூ. 9406-14-0. ஷை மிஷனுக்கு ஆலயக் கட்டுமானத்திற்கு விசேஷ செலவு ரூ. 1750-0-0. பளியர் மிஷனுக்குச் செல்லானது ரூ. 1629-15-0. உள்நாட்டு ஊழியத்தின் சம்பந்தமாயுள்ள செலவு ரூ. 952-2-0. நானாவிதச் செலவு ரூ. 1243-3-0. ஆகமொத்தம் ரூ. 14982-2-10. மேலே கண்ட விபரங்களின் மூலமாய் நமது சங்கத்தின் செலவு படிப்படியாய் அதிகரித்து வருகிறதாகத் தெரிகிறது. எனினும், நமது மிஷன்களின் வேலை விருத்தியடைய ஏராளமான பணம் இன்னும் தேவை. பணக்குறைவினாலேயே தடைபட்டிருக்கிற சில ஊழியங்கள் நமதிரு மிஷன்களிலுமுண்டு. ஆதலின், தற்காலம் தோர்ணக்கல், பளியர் மிஷன்களில் நடைபெற்று வரும் ஊழியங்களின்பேரில் சுயதிருப்தியுற்றிராமல் கர்த்தருடைய ஜனங்கள் பெரிய காரியங்களை எதிர்பார்க்கவும் அதற்கென்று கிரியை நடப்பிக்கவும் கேட்கிறோம். தோர்ணக்கல் மிஷனுக்கு மிஷனெரிமார் இன்னும் அனுப்பப்பட வேண்டியதிருக்கிறது. பளியர் மிஷனில் குடியேற்றம், கோவில்—பள்ளிக்கூடம்—மிஷனெரிமார் வீடு முதலியவைகளின் கட்டுமானச் செலவும் ஜாஸ்தியாய்ச் செல்லும். இவ்வருஷத்தில் தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயத்தையும் கட்டிமுடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 'உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார்; அவர்களெல்லாரும் ஏகமாய் கூடி உன்னிடத்தில் வருகிறார்கள். நீ அவர்களெல்லாரையும் ஆபரணமாகத் தரித்து, மணமகள் அணிந்துகொள்வதுபோல, நீ அவர்களை அணிந்துகொள்வாய் என்று, என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.'

சங்கூன் துறைமுக வைத்தியராகிய Dr. முத்துசாமி அவர்கள் மனையாளும் நம் சங்க அன்பருமாகிய சங்கை: அம்பாயி முத்துசாமி அம்மாள் அவர்கள் சென்ற மேமீ 11உ மறுமைக்குப் பிரவேசித்த செய்தியை

சங்கை: முத்துசாமி அம்மாள்.

மிகுந்த துக்கத்துடன் தெரிவிக்கிறோம். இவர்கள் ஓர் சிறந்த மாதாவும் மனையாளுமாய் விளங்கினவர்கள். நம் உபகாரியர் அவர்களைச் சந்தித்தபோது அவர்களிடத்தில் விளங்கிய உத்தம பக்தியையும் அவர்கள் பிள்ளைகளை வளர்த்திருந்த பக்திக்குரிய முறையையும் வியந்து அநேக சபைகளில் திருஷ்டாந்தமாய் எடுத்துக்கூற நேரிட்டதுண்டு. அவர்கள் கடைமகன் 4 வயது பிராயமுள்ள பிள்ளை அனேக வேதவாக்கியங்களையும், பாடல்களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒப்பித்துரைத்து நம் உபகாரியரை அதிசயிக்கச்செய்தான். ஞாபகார்த்த ஆலயத்துக்கென்று முன் பணமாக ரூ. 50-ம் நம் சங்கத்துக்கென்று மாதாந்த திட்டப்பணமும் சுயமாய் அருமை அம்மாள் ஒழுங்காய் கொடுத்து வந்ததுமன்றி தர்ம காரியத்துக்கென்று அவர்களிடம் சென்ற வெறுக்காது இல்லையென்று அவர்கள் சொன்ன காலமில்லை. அவர்கள் மரணம் அவர்களுக்கு ஆதாயம்தான். என்றாலும் அவர்கள் அருமைப் பர்த்தாவுக்கும், விட்டுப்போயிருக்கும் 5 பிள்ளைகளுக்கும், ரங்கூன் சபைக்கும் மற்றுமவர்கள் சிநேகிதரனைவருக்கும் பெருநஷ்டமே. அவர்களடக்கத்திற்கு வந்திருந்த பல சிநேகிதர் இனத்தாரின் கூட்டமும் அநுதாப காகிதமும் அவர்களது உத்தம குணத்திற்குப் போதுமான சாக்ஷியாகும். சகல ஆறுதல்களின் தேவன் தாமே அவர்கள் விட்டுப்போயிருக்கும் கணவனையும் பிள்ளைகளையும் ஆற்றித் தேற்றுவதுடன் அவர்கள் கல்யாணியைப் பின்பற்றும் சிறந்த மாதாக்களையும் மனையாட்டிகளையும் நம் தமிழ் சபைகளின் வாழ்வுக்கும் தேவநாமம் மகிமைக்கும் ஏதுவாக மென்மேலும் எழுப்பி வருவாராக.

———

## மிஷனெரி பிரயாணம்

மாரி. மத்தேயு 8: 5—13.

இருதநாதரே! நீர் வியந்துபேசிய நூற்றுக்கதிபதியின் மகாபெரிய விசுவாசத்தைப் பலமுறை சிந்தித்து வந்திருக்கிறேன். இவ்விசுவாசி உம்மை நாடிய நோக்கத்தை இன்று என் மனதின் கண்ணால் நோக்குகையில் அந்நோக்கமும் மிகச் சிறந்து விளங்குகிறதே!! இப்பூவின் கண் புவனை இரட்சகராய் நீர் திரிந்து அலைகையில் உம்மிடத்தில் நன்மை பெறும்படி வந்த பலருண்டு. சிலர் தங்களுக்காகவும், சிலர் தங்கள் பிள்ளைகள் உறவின்முறையாருக்காகவும், இன்னும் சிலர் தங்களைப்போலொத்த நிலையிலுள்ள சிநேகிதருக்காகவும் வேண்டிக்கொண்டார்கள். இவனோ தன் அந்தஸ்துக்கு மிகத் தாழ்ந்த தன் வேலைக்காரனுக்காக உம்மை வேண்டிக்கொண்டான். எங்கள் தேசத்திலே இழிகுலத்தார், நீசப்பாளவர்கள் என்று எண்ணப்படுகிற எண்ணிறந்த ஜனங்கள் உண்டு. இவர்களுக்காகக் கவலைப்படுகிறவர்களும், பரம ஆசனத்தை நோக்கி நிற்கிறவர்களும் எத்தனை சொற்பம், ஸ்வாமி!! எங்கள் நிமித்தம் பரலோக மகிமையைத் துறந்து பூலோகம் வந்த இயேசுவே! இருண்ட இந்தியாவுக்கு இரங்கியருளும்; இதன் ஈனஜாதியார் என்று எண்ணிக்கையற்ற எண்ணிறந்த கோடிகளுக்கு உமது இரட்சிப்பு சமீபமாயிருப்பதாக.

இந்த நூற்றுக்கதிபதி தன் வேலைக்காரனுக்காகக் கவலைப்படவேனேன்? இயேசுநாதா, நீர் சொன்ன உவமைப்படியும், அதன் போதனைப்படியும் அவன் வேலைக்காரனே அவனுக்குப் பிறன். அவனே அவன் சகோதரனுக்கும் இரக்கத்துக்கும் முதலாவது உரியவன். எங்களுக்குப் பிறர் யார்? எங்கள் வேலையாட்கள்—உழவர்—பண்ணைக்காரரும் எங்கள் கிராமங்களைச் சுற்றிலுமுள்ள பட்டிகளிலும் சேரிகளிலுமுள்ள ஈனஜாதியாருந்தானே. என் இயேசுவே! இவர்கள் இரட்சிப்பை அடையும்படி நாங்கள் செய்ததென்ன? சுவிசேஷ பண்டிகை தினத்தில் போய் பிரசங்கித்தோம். சிலர் டௌடணைமி நாட்களிலும் சுவிசேஷ நற்செய்தியைக் கூறிவருகிறார்கள். மிகச் சொற்பப்பேர் ஓய்வுநாள் சாயாட்சைகளில் புறமதஸ்தரைக் கண்டுபேசுகிறார்கள். இந்தியாவில் அற்பசொற்ப கிறிஸ்தவர்கள் இருக்கும் பல பாகங்களில் இழிகுலத்தார் என்று எண்ணப்படுகிறவர்கள் கும்பல் கும்பலாய் உமது மந்தையைச் சேருகையில் எங்கள் பாகங்களில் இவ்வித அசைவுகள் பரிதாபமாய்க் காணப்படாமலிருப்பதின் காரணம் என்ன? எங்கள் சேரிகள் அசைக்கப்படாப் பர்வதங்களா? அல்லது பலமில்லை, பிரசங்கிமாரில்லை என்று சும்மாயிருக்கிறோமா? அல்லது தாழ்ந்த ஜாதியாரென்று எண்ணப்படுகிறவர்கள் கிறிஸ்தவர்களானால் எங்கள் அந்தஸ்துக்குப் பங்கம் நேரிடுமென்று கவலையற்றிருக்கிறோமா? கர்த்தாவே, எங்கள் அபலார் இரட்சிப்படைய எங்களை உயிர்ப்பித்தருளும்.

பின்னும் கவனிக்கில், அவ்வேலைக்காரன், அவனுக்கு மிகப்பிரியமானவன். அருமை இயேசுவே, எங்கள் தேசத்து ஜனங்கள், எங்களுக்குப் பிரியமானவர்கள்தானே. எங்கள் மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமான இந்தேசத்தவரான எல்லா ஜனங்களும், இரட்சிப்படையும்படி எங்களைச் சந்தித்து உயிர்ப்பித்தருளும் ஸ்வாமி.

நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனுடைய நிலைமையை நோக்குகையிலும் நானும் என் நாட்டாரும் உணர்வடையாமல்போவது கூடாத காரியம். ஐயோ! அவன் திமிர்வாதரோகி. நடக்க ஏலாதவன், வேதனைப்பிணி கொண்டவன். தன்னை இரட்சித்துக்கொள்ளச் சக்தியற்றவன். ஆ! என்ன கேவலஸ்திதி. இந்தியாவின் எண்ணிறந்த கோடிகளும் இந்த ஸ்திதியில்தானேயிருக்கிறார்கள். தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ளச் சக்தியற்றவர்கள். வேதனைப்பிணி கொண்டவர்கள் போலிருக்கிறார்களே! திமிர்வாதரோகிக்கு உணர்ச்சியுமில்லையாமே. வியாதியின் கொடுமையே அவனுக்குத் தெரியாது. ஆ! இது என்ன நம்பிக்கையற்ற ஸ்திதி. இத்தேசத்து ஜனங்கள் ஓர்காலத்தில், மார்க்க வைராக்கியர். ஆத்ம விஷயங்களில் வெகு சிரத்தை எடுத்தவர்கள். தற்கால ஸ்திதியைப் பொதுவாய்க் கவனிக்கையில் மார்க்க ஆராய்ச்சியின்பேரிலுள்ள தவனம் குறைந்து, உலக அறிவு நாகரீகம் முதலியவைகளின் பேரில் மாத்திரம் நாட்டம்மேலிடுவதைக் காண்கிறேன். இவ்வித நன்மைகளை மாத்திரம், அளிப்பதற்குப் படிப்பாளிகளான உயர்ந்த அந்தஸ்துள்ளோர் கூட்டங்கள் கூடி, சங்கங்கள் ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ஸ்வாமி, இக்காலத்தில் உமது ஜனங்கள் மவுனமாயிருந்தால், இந்தியாவின் ஜனங்களுக்குள்ளே மார்க்க விஷயத்தைப்பற்றிய திமிர்வாதம் தொடங்கிவிடும். எங்கள் தேசத்தார் ஆத்தும இரட்சிப்பைக்குறித்து நிர்விசாரிகளாகி ஆத்தும மரணத்தின் வேதனைக்கும் அவஸ்தைக்கும், உள்ளாகிவிடுவார்களே. ஆதலால் ஸ்வாமி,



இந்தியாவையும் இரட்சியும்
இந்த மிஷனெரி—சங்கத்தையும் ஆசீர்வதித்தருளும்.
இந்தியாவையும் இரட்சியும்.
சுவிசேஷ வழியம் பெருகவே,
சுந்தரக்குமரன் திரு—இரத்தத்தில் உற்பத்தியான
சுவிசேஷ வழியம் பெருகவே.

இவ்வேலைக்காரன் குணமான விதத்தைக் கவனிக்கையிலும், நானும் என் நாட்டாரும் சும்மாயிருக்கலாமோ, இவன் குணமடைய மற்றவர்கள் தானே கவலைப்பட்டார்கள். மற்றவர்கள் தானே பிரயாசப்பட்டார்கள். மற்றவர்கள் தானே தங்களைத் தாழ்த்தி தங்கள் விசுவாசத்தைக் காண்பித்தார்கள். ஆ! அந்த நூற்றுக்கதிபதி தன் அந்தஸ்துக்குத் தாழ்ந்த தன் அயலான் குணமடையச்செய்த பிரயத்தனம் ஒவ்வொன்றும் எனக்குப் போதனையாயும், மாதிரியாகவும் இருக்கிறதே. அவன் தன் வேலைக்காரன் குணமடையும் வழிவகைகளை விசாரித்தான். இயேசுவின் வல்லமையை விசுவாசித்தான். இயேசுவை அழைத்துவர ஆட்களை அனுப்பினான். தன் வேலைக்காரனுக்காக வேண்டிக்கொண்டான். தன்னையே தாழ்த்தினான். மாரி. மத்தேயு சொல்லியபடி, தானே போனான். இயேசுவே! இந்தியாவின் ஈன ஜாதியார் என்று எண்ணப்பட்டோர், தாழ்ந்த ஜாதியாரான என் அபலார், எனக்கு மிகப் பிரியமான என் சுயதேசத்தார் இரட்சிப்படைய நான் என்ன செய்யவேண்டும்? இன்னும் அறியவேண்டிய வழிவகைகள் உண்டா? அல்லது உமது வல்லமையை ஏற்றபடி விசுவாசித்து ஜெபிக்கவேண்டுமோ? விசுவாசத்தோடு ஜெபிக்கிறேன் சுவாமி; என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும் அல்லது ஆட்களை அனுப்பவேண்டுமோ? அல்லது நானே போகவேண்டுமோ?—எப்படியும்,

இத்தேசம் மீட்டருளும் தேவா
சத்துருவை நிக்ரம் செய் யோவா

1. மெய் தேவமறியாது பொய்த்தெய்வந் தொழுகைகள்
செய்த்தவறு யாவும் நீக்கிடும் ஆச்சரியக் கிருபையால்— இத்.
2. புவி ஞானம் பெருகிடும், புல்லறிவாகினும்
மெய்ஞ்ஞானமும் மீட்பும் காணோர் மேலோகத்தை நாடிட— இத்.
3. திவ்விய ஊக்கம் புகழ் உத்தம மனதுடன்
சத்தியஞ்சபுள்ளோர்கள் யாவரும் பக்தியுடன் செய்திட— இத்.

———

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

நாங்கள் தோர்ணக்கல்லுக்கு வந்து சேர்ந்து சுமார் நாலு மாதங்களாகின்றன. மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷாவர்களும், இங்கேயுள்ள மிஷனெரிமார் அனைவரும் எங்களை அன்போடு ஏற்றுக்கொண்டு, எங்களுக்கு இந்த இடமும், பாஷையும் நூதனமானபடியால் தேவ ஒத்தாசையை முன்னிட்டு எங்களுக்குவேண்டிய உதவிகள் புரிந்துவருகிறார்கள். இவர்களுக்கும், எங்களை ஜெபத்தோடு தேவ கிருபைக்கும் நடத்துதலுக்கும் ஒப்புவித்து வழியனுப்பிய நீலகிரி சபையாருக்கும், சிறப்பூர் சபையாருக்கும், பாளையங்கோட்டை சபையாருக்கும் சமிற்றிக்கும் எங்கள் வந்தனம் சொல்லுகிறோம்.

இந்த மிஷன் அபிவிருத்தியைக் கருதின நண்பர்களில் சிலர் நாங்கள் இங்குவந்த பின்னும் வருமுன்னும் கேட்டுக்கொண்டபடியே இந்த ஊரைப்பற்றியும் இங்கே நடக்கும் வேலையைப்பற்றியும் சுருக்கமாய் எழுத விரும்புகிறேன்.

இந்த ஊர் பாளையங்கோட்டையிலிருந்து கிட்டத்தட்ட நேர்வடக்கே மூன்று நாள் பிரயாண தூரத்திலிருக்கிறது. பெரும்பான்மையோர் தெலுங்கே பேசுவார்கள். சிலர்மாத்திரம் இந்துஸ்தானி பேசுகிறார்கள். சுமார் 500 வீடுகள் வரை உண்டு. இதில் ரயில்வேக் கட்டடங்கள், போலீஸ்காரர் வீடுகள் கடைகள் பாதிக்கு வரலாம். மற்றவைகளில் இடையர் வகுப்பாரே அதிகம். நமது மிஷன் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னும், இதிலிருந்து 16 மைல் தூரத்திலுள்ள சிங்கரேணி நிலக்கரி கேணிகள் விருத்தியாவதற்குமுன்னும், இங்கே சில குடிசைகள் மாத்திரம் காணப்பட்டனவாம். கழுதைப்புலி, நரி, முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கும் காடுகள் இதைச் சுற்றிலும் இருந்தன.

ரயில்வே ஸ்டேஷனுக்கு சுமார் 50 கெஜதூரத்தில் நமது பழைய மிஷன் காம்பவுண்டு வலதுகைபுறமாக இருக்கிறது. ஆண்பெண் போர்டிங்பாடசாலைகளும் இங்கேதான் இருக்கின்றன. மிஷனெரிமாருக்கு வீடுகள் இல்லாதபடியால் பள்ளிக்கூடக் கட்டட அறைகளில் வசித்து வருகிறார்கள். பையன்கள் விவசாயமும் கற்றுக்கொள்ளுவதற்காக நெல், சோளம் பயிர் செய்வதற்கு ஏற்ற நிலம் இதில் உண்டு. அன்றியும் தச்சு, நெசவு, முதலிய கைத்தொழில்களும் இங்கே கற்றுக்கொடுக்கப்படுகிறது. இப்போதுதான் இங்கே ஓர் ஜெபஸ்தானமும் கட்டி முடிவாகிறது. இதுவரை பற்பல அறைகள் சேர்ந்துள்ள கட்டடத்தில் ஆராதனை நடந்தபடியால், குருவானவர் சபையார் முகத்தைப்பார்த்து போதிக்கவும் சபையார் ஒழுங்காய் கவனிக்கவும் இடமில்லாமற் போயிற்று. இந்தக் காம்பவுண்டுக்கு ஒரு புறத்தில் கடைவீதியும் வீடுகளும் உண்டு மறுபுறத்தில் புதிதாய் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருக்கும் பதினொரு ஒட்டர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்களையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். இந்த இடத்தை நாம் வாங்குமுன் வெட்டிய இரண்டு கல்ல கிணறுகளும்; கனம். பாக்கியநாதன் ஐயரவர்கள் தோண்டிய நாலு ஊற்றுகளும் இங்கே உண்டு.

ரயில்வே ஸ்டேஷனுக்கு சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் நமது புதிய காம்பவுண்டு இடதுபுறமாயிருக்கிறது. இதை யொட்டியே மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பங்களாவும் காம்பவுண்டு நிலமும் உண்டு. இங்கே பான் ஆங்லிக்கன் தாங் ஆபரிங் (Pan Anglican Thank Offering) நன்கொடை நிதியினால் ஓர் மிஷனெரி வீடும், பயிற்சிசாலை மாணாக்கர் வீடுகள் 12-ம் கட்டியிருக்கிறார்கள். இது சற்று மேடான நிலம். அருகில் ஓர் சிறிய தனிக்குன்று ஒன்றுண்டு. அன்றியும் இந்த ஜில்லாவின் எல்லாப் பாகங்களிலும் உள்ளபடியே இங்கேயும் விசாலமாய் வெகுதூரம் பரவியிருக்கும் பாறைகளையும், உயர்ந்து பற்பல ரூபங்களாய்க் காணப்படும் பரும்புகளையும் காணலாம். ஆகையால் உபயோகத்துக்கு வரக்கூடிய நிலம் மிகச் சொற்பமே. தண்ணீருக்காக வேண்டி கடந்த வருஷம் மிகுந்த பிரயாசம் எடுத்து ஓர் கிணறு தோண்டினார்கள். அதில் மழைகாலத்தில் தண்ணீர் உண்டேயொழிய வெயில் காலத்தில் தண்ணீர் கிடைக்கக்கூடியதல்ல. இன்னும் கொஞ்சப்பிரயாசமும் பணமும் செலவுசெய்து பாறையை உடைத்து தகுதியான சுவர்கள் கட்டவேண்டியதாயிருக்கிறது. அப்படியானால் நல்ல தண்ணீர் கிடைக்குமென்றெதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காம்பவுண்டிலேயே குன்றுக்கருகில் தோர்ணக்கல் அத்தியக்ஷாலயம் கட்டவேண்டுமென்று யோசனை. இதற்கு வேண்டிய தொகை முழுவதும் தாமதமின்றி கிடைக்கும்படி ஜெபிக்கக் கேட்கிறோம். நமது சுவிசேஷ வேலை ஆரம்பித்த பின்னும் அடர்ந்த காடாக இருந்து துஷ்ட மிருக சஞ்சாரமுள்ள இந்த இடத்தில் கர்த்தரைச் சேவிக்கிறவர்கள் வசிக்கும் ஸ்தானம் உண்டாகவும் திருநெல்வேலிச் சபையின் ஞாபகார்த்த ஆலயம் எழும்பவும் இதுவே இந்தியாவில் முதல் இந்திய அத்தியக்ஷாலயமாகவும் சித்தம் கொண்ட தேவ தயவுள்ள ஆலோசனை இன்று நமது கண்களுக்கு பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறதில்லையா? இந்த நல்ல வேலைக்கு யாவரும் கைகொடுக்கும் மனதை தேவன் எழுப்புவாராக.

இந்தக் குன்றுக்கு மறுபுறத்தில் லம்பாடிகள் என்ற ஓர் வகை ஜாதியார் வசிக்கிறார்கள். இவர்கள் பூர்வத்தில் தானியம் பொதிமாடுகளின் மீது ஏற்றி கடற்கரை ஜில்லாக்களுடன் வியாபாரப்போக்குச் செய்தவர்கள்போலும். இவர்கள் சிறுசிறு பட்டிகளில் வசிக்கிறார்கள். சில பட்டிகள் சேர்ந்து ஓர் லம்பாடித்தண்டா ஆகும். தண்டா ஒன்றுக்கு ஓர் தலைவன் இருப்பான். ஸ்திரீகளின் நடை உடை பாவனை நாடகப் பெண்கள் போல் தோன்றும்; புஜங்களிலிருந்து மணிக்கட்டுவரை அணிந்திருக்கும் மரவளையல்களும், கால்களில் தரித்திருக்கும் பித்தளை வளையல்களும், இடுப்பில் குஞ்சம் குஞ்சமாய்த் தொங்கும் கொடிகளும் ஒலிக்க நடப்பார்கள். காது குத்தாமல் கொண்டையின் ஓரங்கள் காதை மறைக்கவிட்டு காதுக்கருகில் தொங்கும்படி கண்ணாடி பதித்த கம்மல்கள் போட்டிருப்பார்கள். தங்கள் ரவுக்கை போன்ற சட்டையிலும் பாவாடைகளிலும் இடைக்கிடையே கண்ணாடி பதித்திருக்கிறார்கள். தங்கள் நிலங்களில் சோளம், கம்பு, ஆமணக்கு, புகையிலை பயிர் செய்து காலம் கழித்து வருகிறார்கள். சிலர் ஆடுமாடுகளும் வளர்க்கிறார்கள். வீடுகள் இரண்டு பக்கம் அல்லது ஒரு பக்கம் திறப்பாயுள்ள குடிசைகள்தான். தங்கள் விளைவுகளை தங்கள் வீட்டு முற்றத்தில் பள்ளம் தோண்டி புதைத்தாயினும் செடி கொடிகளினால் செய்யப்பட்ட குலுக்கைகளில் நிறத்தியாயினும் வைப்பார்கள். பாதுகாப்புக்கு நாய்களும் வளர்க்கிறார்கள். இவர்கள் இயற்கையில் முரடராயிருக்கவேண்டியதென்றாலும் கள்ளுக்குடிப்பதினாலும், புகையிலை அதிகமாய் உபயோகிப்பதினாலும் கோழைகளாயிருக்கிறார்கள். இவர்களைப்பற்றி இன்னும் சொன்னால் விரியுமாதலால் இவர்களுக்குள் நடத்தப்படும் வேலையைப்பற்றி கொஞ்சமாத்திரம் சொல்லுகிறேன். இங்கே 'நல்ல சமாரித்தன்' கூட்டத்தார் ஓய்வுநாட்கள்தோறும் அவர்களைச் சந்தித்து மேளம், ஜாலர், முதலியவைகளை பிடித்துக்கொண்டும், தஞ்சாவூர் ராவுசாகிப் ஆபிரகாம் பண்டிதரவர்கள் மருந்துகளை எடுத்துக்கொண்டும், பட்டிகள் பட்டிகளாய்ப்போய் மருந்துகள் இலவசமாகக் கொடுத்தும், பாட்டுப்பாடியும், போதனைகள் செய்தும் திரும்புவார்கள் இப்போது அவர்கள் சற்று உட்கார்ந்து போதனைகளைக் கேட்கப் படித்திருக்கிறார்கள். தேவ ஆவியின் ஒத்தாசையினால் இந்தப் போதனைகள் ஏற்ற காலத்தில் பலன்தரும் என்று நம்புகிறோம்.

நான் இப்போது தெலுங்கு மூன்றும் வாசகப் புஸ்தகம் படிக்கிறேன். அதுவன்றியும் சுவிசேஷ ஆகமங்களையும் சரித்திராகமங்களையும் தாராளமாய் வாசிக்கவும், கொஞ்சம் கொஞ்சம் தெலுங்கிலே பேசவும் கற்றிருக்கிறேன். இந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ளும்படி எங்களுக்காக ஜெபித்த யாவருக்கும் நன்றி சொல்லுகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சற்று தெலுங்கு கற்றபின் எப்பிரல் மாதத்தில் 4 பிரசங்கங்களுக்குப் போனேன். நமது போர்டிங் பையன்களும் அதில் பேசினார்கள். அவர்கள் பாடிய பாட்டை ஜனங்கள் அமைதியாய் நின்று கேட்டார்கள். ஜனங்கள் கும்பல் கும்பலாய் வந்து ஆவலாய்க் கேட்டார்கள். மாலை மயங்கிவிட்டபடியால் பயந்து 'ஐயா பகல்வேளையில் வந்து சொல்லுங்கள்' என்று ஓர் இடத்தில் சொன்னார்கள். இன்னோர் இடத்தில் இருட்டானவரை கேட்டதுமல்லாமல் நாங்கள் அந்த இடத்தைவிட்டு வெகுதூரம் போகும்வரை சில ஜனங்கள் தங்கள் இடத்திலேயே அமரிக்கையாய் நின்றுபோனதாகத் தெரிந்தது. இதெல்லாம் ஜனங்களின் ஆசையையும் நமக்கிருக்கவேண்டிய அக்கறையையும் நமக்கு உணர்த்துகிறதில்லையா? மிகவும் தாழ்ந்தவர்கள் என்றெண்ணப்படும் ஜாதியார் இந்த ஜில்லாவின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒன்றுக்கதிகமாயிருப்பதாகத் தோன்றுகிறது. இவர்களுக்குள்ளேதான் நம்முடைய வேலை அதிகமாயிருக்கிறது. இவர்கள் மார்ச்சுமுதல் ஜூன் வரை கொடிய உஷ்ணமுள்ள இந்தப் பிரதேசத்தில் வாசஞ்செய்துவந்தினாலும். தலைமுறை தலைமுறையாய் ஒடுக்கப்பட்டு அடிமைகள்போலிருந்ததினாலும், சுருட்டுப் பிடித்தல் குடிவெறி முதலிய துர்ப்பழக்கங்களுக்கு இடங்கொடுத்ததினாலும், சோம்பல்தனம், திருட்டுத்தனம் முதலிய துற்குணங்கள் இவர்களை முற்றுமாய்



ஆண்டுவந்திருக்கிறது. இவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல போந்த அத்தாட்சிகள் உண்டு.

இந்தவூரிலுள்ளவர்களையும் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தவேண்டும் என்ற நோக்கமாய் எப்பிரல்மாசம் முதல் ஓர் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. இதில் மகம்மதியப்பிள்ளைகள் 12 பேரும், இந்துப்பிள்ளைகள் 25 பேரும் படிக்கிறார்கள் இதில் தெலுங்கு, இந்துஸ்தானி இங்கிலீஷ் பாஷைகள் சற்சமயம் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் காலம் போகப்போக தமிழ்ப் பாஷையும் ஏற்படுத்தபடவேண்டியதாகலாம். தினம் தினம் முதலாவது வேதபாடம் நடத்தப்படும். எல்லாரும் படிக்கிறார்கள்.

நமது கிறிஸ்தவர்கள் கைத்தொழிலையும் கற்று சுய போஷிகர்களாயும் சுயபிரசங்கிகளாயும் வரவேண்டும் என்ற நோக்கமாய் நெசவுதொழிலும் கற்பிக்கப்பட ஏற்பாடாகியிருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால் பிள்ளைகள் ரஜா முடிந்து ஜூன்மீ குப்பு ஆரம்பிக்கும்போவது நெசவுத்தொழிலும் கிரமமாகக் கற்பிக்கப்படும்.

மேய்மாத உஷ்ணத்தைக் குறித்து அறியும்படி இரண்டொரு உதாரணங்கள் சொல்லுகிறேன். எங்கள் வீட்டிலிருக்கும் நாய் காலை 8-மணிக்குப்பின் வெளியே போகாமல் வேட்டையாடி இளைத்தாற்போல் கட்டிலின்கீழ் படுத்துக்கொண்டு இளைக்கும். பகலில் 10-மணி முதல் ராத்திரி 10-மணி வரை படுக்கைகள் முதலியவை சுடும். இந்த உஷ்ணத்தின் மத்தியிலும் தேவன் தமது கிருபைகளை தமது பிள்ளைகளுக்கு விளங்கப்பண்ணுகிறார். இந்தக்காலத்திலும் அநேக மைல்கள் பிரயாணம்போய்ச் செய்ய வேலைகளும் வந்து நேரிடுகின்றன. இவையெல்லாவற்றிலும் தேவனுடைய தயவுள்ள கரம் அவர் பிள்ளைகள்மேல் இருந்துவந்திருக்கிறதற்காக அவரை ஸ்துதிப்போமாக.

எஸ். வி. சுவாமிதாஸ்.

---

## மிஷனெரிமார் நடபடிகள்.

அகாயா நாட்டுச் சபைஸ்தாபனம். அப். 17: 16-18: 17.

பரி. பவுல் பெரோயாவை விட்டுப் புறப்பட்டு, அத்தேனே சேர்ந்தபோது, ஓர் புது மாகாணத்தில் பிரவேசித்தார். பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரோயா பட்டணங்கள் மக்கெதோனியா மாகாணத்திலுள்ளவை. அத்தேனே, கொரிந்து, என்பவை அகாயா மாகாணத்தைச் சேர்ந்த பட்டணங்கள்.

பெரோயா சபையை ஸ்திரப்படுத்தும்படி சீலாவையும் தீமோத்தேயுவையும் வைத்துவிட்டு, பரி. பவுல் புறப்பட்டு ஒண்டியாய் அத்தேனே வந்துசேர்ந்தார். அத்தேனே வரைக்கும் அவரைக் கொண்டுபோய்விடும்படி வந்த பெரோயர் மூலமாய் சீலாவும், தீமோத்தேயும், அதிசீக்கிரமாய்த் தன்னிடத்திற்கு வரும்படி செய்தியனுப்பினார் (அப். 18: 15). 15-ம் வாக்கியத்திற்கும் 16-ம் வாக்கியத்திற்கும் இடையில் நடந்த சில சம்பவங்களை பரி. லூக்கா சொல்லவில்லை. 1 தெசலோனிக்கேயரைப் பார்த்தால் சரித்திரத்தைத் தொகுப்பாய் எடுத்தெழுதக்கூடும். பரி. பவுல் கேட்டுக்கொண்டபடி, தீமோத்தேயுவும், சீலாவும் அத்தேனேக்கு வந்தார்கள். ஆனால் தெசலோனிக்கே சபையைப்பற்றி கலக்கமான செய்திகொண்டு வந்தார்கள். ஆகவே அத்தேனேயில் தனியாய் விடப்பட்டாலும் காரியமில்லையென்றெண்ணி, தீமோத்தேயுவையும், சீலாவையும் உடனே திரும்ப தெசலோனிக்கேக்கு அனுப்பிவிட்டார் (1 தெச. 3: 1). பவுல் கொரிந்துவுக்குப் போனபின்பே இருவரும் 'மக்கேதோனியாவிலிருந்து வந்து சேர்ந்தார்கள்' (அப். 18: 5). அத்தேனேயிலோ பவுல் தனிமையாய் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார் (அப். 18: 16).

பூர்வ காலத்தில் கல்விக் குறைவிடம் அத்தேனே. இதுவே சிற்பசாஸ்திரம், தத்துவசாஸ்திரம், கிரேக்கமத ஞானமனைத்துக்கும் ஜனனஸ்தலம். பெரிக்கிலீஸ், டெமாஸ்தினீஸ், சோபாக்கிளிஸ், இயூரிப்பிடீஸ், சோக்கிரத்தீஸ், பிளேற்றோ, அரிஸ்றாட்டில் முதலிய லோகப்பிரசித்தமான ஞானிகளுடைய சாதுரிய உபந்நியாசங்களும், தத்துவ சாஸ்திர கலைஞ்ஞானமும், நீதிசாஸ்திர விதிகளும் வெளியானது அத்தேனேயிலேயே பரி. பவுலின் காலத்தில் முதலாய் அத்தேனேயை சித்திரசாலை, கல்விக் களஞ்சியம், விக்கிரகநிவாசம் என்று சொல்லலாம் அத்தேனே நகரின் மாளிகைகள் கட்டடங்களின் அலங்காரம் இம்மட்டென்றல்ல. சித்திரந் தீர்ந்த பிரதிமைகளையும், விசித்திர சிலைகளையும் வீதிகளில் எங்கே திரும்பினாலும் காணலாம். அத்தேனே கலாசாலையைப்போல பேர்போன வித்யாசாலை பூலோகத்தில் எங்கும் கிடையாது. 'கம்பன் வீட்டுக்கொள்ளியும் கவிபாடும்' என்றதுபோல, அத்தேனே பட்டணத்தாரெல்லாரும் அங்கே தங்குகிற அந்நியருங்கூட நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை' (அப். 17: 21). 'மேலும், பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்தது' (அப். 17: 16). விக்கிரகங்களுக்கும், பலிப்பீடங்களுக்கும், திருவிழாக்களுக்கும் கணக்கில்லையென்று சரித்திரக்காரர் அத்தேனேயைப்பற்றிச் சாட்சி பகர்ந்திருக்கிறார்கள்.

இவ்வித பட்டணத்தில் பரி. பவுல் இப்போது கால் மிதித்தார். அத்தேனேயின் தத்துவ சாஸ்திரத்தினால் அவர் பயந்துபோகவுமில்லை அதின் கலைஞ்ஞானத்தையும், சிற்பவேலைகளையும் பார்த்து மயங்கிவிடவுமில்லை. 'அந்தப்பட்டணம்' விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து' சாட்சிசொல்ல ஆரம்பித்தார்.

இந்துதேசத்தைச் சுற்றிப்பார்க்க வரும் அங்கிலேய பிரயாணிகள் பலர், இந்துதேசத்தின் பூர்வ நாகரீகத்தையும், தேசமெங்கும் சிதறியிருக்கும் மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், யாத்திரை ஸ்தலங்களில் தோன்றும் தேவதா பக்தியையும், பூர்வ காவியங்களையும், சாஸ்திர நூல்களையும் காணும்போது இப்பேர்ப்பட்ட ஜனத்துக்குக் கிறிஸ்துமதம் ஏன் என்கிறார்களாம். பரி. பவுலின் ஆவி அவர்களுக்கில்லாதிருப்பதே

அவர்கள் இவ்வாறு பேசுவதற்குக் காரணம் மிகுவெளிமையாகிய நாம் இவ்வித வைராக்யத்தை ஒருபோதும் இழந்து போகாதிருப்போமாக.

அநேக சாஸ்திரிகளும், ஞானவான் பேர்களும் கலாசாலைகளுமுள்ள இப்பட்டணத்தில் இரண்டு விசேஷித்த வகுப்பு ஞானிகளிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஸ்தோயிக்கர், எப்பிக்கூரர். ஸ்தோயிக்கர்-சன்மார்க்கநெறி, நியாயம், விதி என்பவைகளை ஸ்தாபிக்கிறவர்கள். உலகம் கடவுளானவர் டானதென்றும், மனுஷாத்மா பரமாத்மாவின் அம்சமென்றும், பரமாத்மாவுடன் சேர்ந்துபோவதே மனுஷாத்மாவுக்கும் சர்வலோகத்திற்கும் முடிவு என்றும் போதித்தார்கள். எப்பிக்கூரர் பாக்யமே விசேஷம் என்ற கொள்கைக்காரர். உலகக் கவலைகளைப் பெரிது பாராட்டாமல், இன்று என்னப்படுவதையும், இன்பமனுபவிப்பதே கடமை என்போர். சுமது சுகத்தையும் சந்தோஷத்தையும் தேடவேண்டுமேதவிர, வேறொன்றைப் பற்றியும் கவலையில்லையென்று சாதித்தார்கள். தேவர்கள் உண்டென்றும் அவர்கள் தாங்களே பேரின்பத்தை அநுபவிக்கும் ஆசையுள்ளவர்களேதவிர, இப்பாழுலகின் துன்பத்தையும் துக்கத்தையும் கவனிக்கிறவர்களுமல்ல, இதின் காரியாதிகளில் தலையிடுகிறவர்களுமல்ல என்றார்கள். ஜடப்பொருள் நித்தியமென்றும், உலகம் தானாய் ஜடப்பொருளினின்று தோன்றியதென்றும் சாதித்தார்கள். மனுஷன் மரிக்கும்போது அவன் சரீரமும் ஆத்துமாவும் பஞ்சபூதங்களுடன் சேர்ந்துபோவதால் மரணத்தோடே மனுஷனுடைய வாழ்க்கை முடிந்துபோகிறது என்றும் போதித்தார்கள்.

இவ்விதகொள்கைகளும், பரி. பவுலின் பிரசங்கத்திற்கும் எவ்வளவு பேதாபேதங்கள் உண்டென்பதைச் சற்றே உற்றுப்பார்த்தால் கண்டுகொள்ளலாம். அப்போஸ்தலரோடு இவர்களில் சிலர் வாக்குவாதம்பண்ணினார்கள். இவர் வருத்தின இயேசு, உயிர்த்தெழுதல் என்னும் பதங்கள் சில புதுத் தேவர்களின் நாமதேயங்களோவென்று எண்ணினார்கள். இதைக் குறித்து மேலும் தொடர்ந்து பேசுவதற்கு அரியோப்பாகுஸ் என்னும் சங்கத்தின் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

தமிழில் "மார்ஸ் மேடை" என்று இருப்பிலிருக்கிற வார்த்தைக்கு மூலபதம் அரியோப்பாகுஸ். அத்தேனே பட்டணத்தின் அதிகாரிகள் இச்சங்கத்தாரே. இவர்களை பட்டணத்துத் தர்மகர்த்தாக்கள் எனலாம். இச்சங்கத்தின் நடுவில் பரி. பவுல் நின்று அவர்களுக்குச் சமயோசித பிரசங்கஞ்செய்தார், அவர்கள் மனங்கொண்டு கேட்கத்தக்கதாக, சொல்லலங்காரம், நடையலங்காரத்துடனே சாதாரிய மொழிகளை உபயோகித்து, கவிஞர் வாசகங்களை மேற்கோளாக எடுத்துக்கூறி இரு வகுப்பார் உபதேசங்களையும் கண்டிக்கும் சத்தியங்களை நேமமாய்ச் சொன்னார். பிரசங்கத்தை பின்வருமாறு வகுக்கலாம்:—

1. முகவுரை. வா. 22, 23.

அத்தேனேயில் தாம் கண்ட காட்சி, இதன் விஷயமாய் அவர் அவர்களைப் புகழும் புகழ்ச்சி, கேட்போருக்கும் பிரசங்கிக்குமுள்ள சம்பந்தம்.

"அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

2 தேவதன்மை. வா. 21—29.

(a) இப்பிரபஞ்சத்திற்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தம், (வா. 21. 25). அவர் இப்பிரபஞ்ச சிருஷ்டிகர்த்தா. அப்படியானால் அவர் கர்ப்பகிரகங்களுக்குள் வாசம்பண்ணுகிறவரல்ல. மனுஷருடைய நைவேத்திய போஜனபான பலிகளைத் தின்று பிழைக்கிறவருமல்ல. சகல ஜீவனுள்ளவைகளையும் பரிபாலிக்கிறவர் அவர்.

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானதுபோல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை."

(b) மனுஷனுக்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தம் (வா. 26—29). அத்தேனர் தங்கள் முற்பிதாக்கள் அத்தேனே மண்ணிலிருந்து உதித்தவர்களென்றும், கிரேக்கரான தாங்கள் மற்ற ஜாதிகளுக்கு மேலானவர்களென்றும் பெருமை பாராட்டுகிறவர்களானால், மனுஷ ஜாதியான சகலமானபேர்களுக்கும், சிருஷ்டி கர்த்தா அவரே என்றும், அவர்களனைவரையும் அவரே ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கினார் என்றும் காட்டுகிறார். அவர்களைப் பரிபாலிக்கிறவரும், அவர்கள் சுகதுக்கங்களையும் காலப்பொழுதுகளையும், தேசம் பாஷைகளையும் ஏற்படுத்தி ஆண்டு நடத்துகிறவரும் அவர் தான். இதெல்லாம் அவர் நடப்பித்து வருகிறதேனென்றால், மானிடர் தம்மைக் கண்டுபிடித்துத் தம்மைத் தொழுதுகொள்ளுவதற்காகவே. கடவுளானவர் ஆகாயத்தின் உச்சியில் தூர சும்மாயிருக்கவில்லை நம் ஒவ்வொருவருக்கும் சமீபமாயிருக்கிறார். அவரில் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்: அவரே நமது பிதா; நாம் அவர் சந்ததி. அப்படியிருக்க, நமது கைவேலைப் பொருட்களைத் தெய்வமென்று போற்றுவது எவ்வளவு மதியீனம் என்கிறார்.

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் நிர்ணயிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச்செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார்



என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது."

3. முடிவுரை. வா. 30, 31,

சிருஷ்டி கர்த்தராகிய தேவன் நியாயாதிபதி. மனுஷனைத் தங்கள் தங்கள் இஷ்டம்போல பிழைக்கவிட்டு, அவர் எங்கேயோ போய்விட்டார் என்பது தப்பு. அறியாமையைப் பொறுத்துக்கொண்டிருந்தார். ஆனால் இப்போதோ தம்மைப் பரிபூரணமாய் உலகத்துக்கு வெளிப்படுத்திவிட்டதால் எல்லாரும் விக்கிரகாராதனையைவிட்டு மனந்திரும்பவேண்டும் என்று கட்டளையிடுகிறார். ஓர்நாள் வரும். அப்போது நியாயத்தீர்ப்பு இருக்கும். உயிரோடெழுந்த கர்த்தரே நியாயாதிபதி. அவருடைய உயிர்த்தெழுதலே இது நடக்கும் என்பதற்கு நிச்சயமான அத்தாட்சி என்கிறார்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தவர். இப்பொழுதோ, மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே, அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்."

பிரசங்கத்தின் பலன் சொற்பமே. மரித்த ஒருவர் உயிர்த்தெழுந்தார் என்பது சிலருக்கு இகழ்ச்சிக்கிடமாயிற்று. சிலர் இன்னும் நன்றாய்க் கேளாமல், குற்றங்குறை சொல்லலாகாதென்றார்கள். போதும் என்று அப்போஸ்தலனும் சங்கத்தை விட்டு வெளியேறினார். இரண்டொருவர் விசுவாசித்தார்கள் ஒருவன் அரியோபாகஸ் அவயவங்களிலொருவன். ஆனாலும் சபை ஸ்தாபிக்க அங்கு இடமில்லாதபடியால் அத்தேனேயை விட்டு பரி. பவுல் புறப்பட்டார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கும் உலக கர்வத்துக்கும் பொருத்தமே கிடையாது. குல கர்வம், ஜாதி கர்வம், தேச கர்வம், வித்யா கர்வம், புத்தி கர்வம், பக்தி கர்வம் இவைகள் செழிக்குமிடத்தில் நாசரேத்தூராலும், சிலுவைநாதருமான மனுஷ குமாரனுடைய நற்செய்தி முளைப்பது அசாத்தியம். அத்தேனேயில் அன்று அது எவ்வாறு உண்மையோ, அவ்வாறே இன்றும் அது இந்தியாவிலும் உண்மையே.

## ஜெபவிஷயம்

நமது உள்நாட்டு ஊழியரும், கனம்: கார் ஐயரவர்களும் பனியர் மிஷன் சபைகளைச் சந்தித்து, கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அவர்களுக்குப் பரிசுத்த ஞானஸ்நானம் இராப்போஜனம் என்னும் சாக்கிரமெந்துகளை கொடுக்கும்படி போயிருக்கிறார்கள். ஊழியங்கள், ஊழியர்கள், கிறிஸ்தவர்களுக்காக ஜெபம்.

## சுவிசேஷ பிரபல்யம்.

லண்டன் பட்டணத்தையடுத்த ஓர் சபையில் 18ஆம் குருவாயிருந்த கனம். கனோன் R. C. ஜாய்ன்ற் ஐயரவர்கள் (Rev. Canon R. C. Joynt) சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தின் பேரில் கொடுத்த சாக்ஷியம்:—எந்த வகையிலும் செல்வவான்கள் என்று சொல்லக்கூடாத 5000 பேருக்கும் குறைந்துள்ள தன் சபையிலிருந்து புறதேச சுவிசேஷ பிரபல்யத்துக்கென்று மட்டும் உற்சாகமாய் 1913ஆம் சேகரமான காணிக்கை 3020 பவுண். இவ்வகை ஊழியத்துக்கென்று சபையை எவி எழுப்பிவிடும்படி கையாடின யத்தனங்கள் பின்வருபவைதான் என்று சுருக்கமாய் சொல்கிறார். அவையான:-(1) ஆவியின் அனல், (2) மத்யஸ்த மன்றாட்டு, (3) போதனை, (4) ஒழுங்கான ஏற்பாடு, (5) பிரத்தியேகப்படுத்தும் முறை.

(1) ஆவியின் அனலாவது என்ன? சபையின் பரிசுத்தமான இப்பணிவிடைக்கென்று தேவாவியானவர் சபையின் போதகரை உத்தமமான வைராக்கியத்தினால் எவி எழுப்பிவிட்டால் மட்டும் சுவிசேஷ பிரபல்யத்தைப்பற்றிய கரிசனை ஜனங்களைப் பற்றிப்பிடித்து மந்தையின் மனச்சாக்ஷியை கிரியை செய்யும்படி எவிவிடும் என்பதுதான் அவர் கருத்து. சபையின் போதகர்தான் முக்கிய காரணம். அவரது உள்ளத்தில் மூர்த்தி அனல் மூண்டு தன் சொந்த ஜீவியத்தினால் தன் ஜனங்களின் வைராக்கியத்தையும் அனல் மூட்டிவிடவேண்டும்.

(2) மத்தியஸ்த மன்றாட்டைப்பற்றி அவர் சொல்வது என்னவென்றால், ஜெபத்தின் பலனாகவன்றி ஒரு வருஷத்துக்குள் எளியவர்களிடமிருந்து 3000 பவுண் வேறெவ்வகையிலும் சுவிசேஷ ஊழியத்துக்கென்று வரக்கூடாதென்பதே. சுவிசேஷபிரபல்யத்தை யனுசரியாத ஜெபக்கூட்டம் ஒன்றும் கிடையாது. ஜனங்கள் தங்களை யறியாமலே சுவிசேஷ ஊழியம் சபை வேலையின் முக்கியமான பாகமென்றும், சபையின் எவ்வகையான தீராத அவசியத்தோடும் சேர்த்துக் கிருபாசனத்தின் முன் இரக்காகவும் கட்டாயம் விண்ணப்பம் செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் உணரும்படி எவிவிடுகிறது. அப்படிப்பட்ட மன்றாட்டு தெளிவும் திட்டமுமாயிருக்கவேண்டுமென்றும்.

(3) போதனை அவசியம். விறகன்றியில் நெருப்பு எரியாது. சுவிசேஷ பிரபல்ய ஊழியம் குன்றாதபடி நடைபெறும் சுவிசேஷ பிரபல்ய விசேஷங்களைப்பற்றிய அறிவு வேண்டும். ஆகவே சுவிசேஷ பிரபல்ய பத்திரிகைகளை ஆண்கள், பெண்கள், பிள்ளைகளனைவரும் வாசிக்கச்செய்யவேண்டும். மனதைக் கவரத்தக்கதான மேலான சுவிசேஷ பிரபல்ய பத்திரிகைகளுக்குக் கணக்கில்லை. என்றாலும் அவற்றை வாசிக்கப் பண்ணுவது எளிதல்ல. தக்க லாயக்குள்ள பத்திரிகை காரியதரிசி தீராத அவசியம். சுவிசேஷ பிரபல்ய வேலையைப்பற்றிய சரித்திரங்களைப் போதகரும் நன்றாய் வாசித்தறிந்து, தன் பிரசங்கங்களை உண்மையும் நூதனமுமான பல சரித்திரங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தக்கூடியவராயுமிருக்கவேண்டும். சுவிசேஷ வேலைக்குப் போந்த பணம் சேகரிக்கவேண்

மொழுல் உத்தம பிரயாசையும், விஸ்தாரமான ஏற்பாடுகளும் அவசியம்.

(4) ஒழுங்கான ஏற்பாடுகள். கனம். கனோன் ஜாய்ன்ற் ஐயரவர்கள் தன் சபையில் கையாடும் சில முறைகளைப்பற்றிக் கூறுகிறார்கள். சுவிசேஷ ஊழியத்துக்கென்றே 8 அல்லது 9 ஞாயிறுகளை வருஷமுழுவதிலும் குறித்துவிடுகிறார்கள். இந்த ஞாயிறுகளுக்கு முன்னதாகவே குறிப்பிட்ட பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்து அத்தினங்களில் விசேஷ பிரசங்கங்கள் செய்து விசேஷ காணிக்கையும் சேகரிக்கிறார்கள். மேலும் வருஷத்துக்கு 5 அல்லது 6 தடவைகளில் சுவிசேஷவேலைக்கென்றே விஞேதஜாமான்கள் விற்பனை ஏற்படுத்துகிறார்கள். போன வருஷத்தில்மட்டும் அப்படிப்பட்ட ஜாமான் விற்பனைகளால் வந்த வருமானம் 650 பவுண். இளைஞரின் சுவிசேஷ பிரபல்ய சங்கம், சேர்ப்போரின் சங்கம் (Gleaners Union) முதலான கூட்டங்களை சேர்ந்த சபையின் சுவிசேஷ பிரபல்ய ஆவியினுல் வைராக்கியங்கொண்ட பலர் எழும்பி இதற்கென்று ஜெபக்கூட்டங்கள் வைத்தும் பணம் சேகரித்தும் உதவி செய்கிறார்கள். சுவிசேஷ வேலைக்கென்று பணம் சேகரித்து அனுப்பும் சேர்க்கமாய், வேதவாசிப்புக்கூட்டம், தாய்மார் கூட்டம் முதலிய பல கூட்டத்தார் பல உபாயங்களைக் கையாடுகிறார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒருவ்ணாமட்டும் உத்தரவாதியாகுவதில் கண்டிப்பாயிருக்கிறார்கள்.

(5) பிரத்தியேகப்படுத்தும் முறை, குறிப்பிட்ட இடங்கள் அல்லது குறிப்பிட்ட அவசியங்களுக்கென்று பணங்களை சேர்ப்பதுதான். கனோன் ஜாய்ன்ற் ஐயரவர்களின் சபைமட்டும் 7 புறதேச ஊழியரை ஆதரிக்கிறது. தகுதியானபடி திட்டமாய் இப்படிப் பிரத்தியேகப்படுத்தும் முறையைக் கையாடுங்கால், தெளிவான மத்யஸ்த மன்றாட்டையும், மனப்பூர்வமான காணிக்கையையும் அதிக பலமாய் விர்த்திபண்ணுவதற்கு இது நல்ல முறை என்பதுதான் கனம். ஜாய்ன்ற் ஐயர் அவர்களின் எண்ணம்.

சந்தா வரவு (1914 ஜனுவரிமீ).

| | | | | |
|---|---|---|---|---|
| Rev. G. ஏசுவடியான் | ... நாங்கூர் | ... 0 | 6 | |
| ,, K. B. அருளானந்தம் | ... நல்லம்மாள்புரம் | ... 1 | 8 | 0 |
| ,, John அருளானந்தம் | ... சுவிசேஷபுரம் | ... 2 | 12 | 0 |
| ,, D. பவுல | ... புதியம்புத்தூர் | ... 3 | 0 | 0 |
| ,, J. அல்பர்ட் | ... நல்லூர் | ... 9 | 12 | 0 |
| ,, J. Bunyan | ... சென்னை | ... 1 | 8 | 0 |
| ,, P. J. Harris | ... மெஞ்ஞானபுரம் | ... 41 | 6 | 0 |
| ,, V. J. Daro | ... சாத்தன்குளம் | ... 8 | 15 | 0 |
| ,, S. வேதமுத்து | ... உதகமண்டலம் | ... 2 | 12 | 0 |
| Mr. D. D. சாக்கு | ... இலங்கை | ... 0 | 6 | 0 |
| ,, Z. பவுல் | ... பர்மா | ... 0 | 6 | 0 |
| ,, A. மனுவேல் | ... நாசரேத் | ... 0 | 12 | 0 |
| ,, மணி | ... ரங்கூன் | ... 0 | 6 | 0 |
| ,, அன்புடையான் | ... மதுரை | ... 0 | 8 | 0 |
| ,, J. சீனிவாசகம் | ... திருவண்ணாமலை | ... 0 | 6 | 0 |
| ,, தாவீது பணிக்கர் | ... விருதுபட்டி | ... 1 | 5 | 0 |
| ,, P. ஆபிரகாம் | ... இலங்கை | ... 2 | 10 | 0 |
| ,, A. வேதநாயகம் | ... Dhully | ... 1 | 8 | 0 |
| Mr. A. வேதநாயகம் | ... நாகலாபுரம் | ... 0 | 15 | 0 |
| ,, J. சுவாமிதாஸ் | ... பூனா | ... 1 | 2 | 0 |
| ,, S. T. பாலசுந்தரம் | ... ... | ... 1 | 14 | 0 |
| ,, ஞானப்பிரகாசம் | ... மூக்குப்பீறி | ... 0 | 6 | 0 |
| ,, N. ஞானையா | ... Naseby | ... 1 | 6 | 0 |
| ,, S. V. சாமுவேல் | ... சேதுவாய்க்கால் | ... 0 | 6 | 0 |
| ,, P. சாமுவேல் | ... சாயர்புரம் | ... 0 | 8 | 0 |
| ,, D. தேவதாசன் | ... Kolpatana | ... 0 | 6 | 0 |
| Dr. சீனிவாசகம் | ... பீஜுங் | ... 3 | 0 | 0 |
| Dr. இஸ்றவேல் | ... திருச்செந்தூர் | ... 0 | 6 | 0 |
| Rao. Sahib J. G. சுவாமிதாஸ் | ... ... | ... 0 | 12 | 0 |
| Mrs. சத்திய யோசேப்பு | ... சென்னை | ... 1 | 0 | 0 |
| செவல் | ... ... | ... 3 | 9 | 0 |
| பாளையங்கோட்டை | ... ... | ... 2 | 7 | 0 |

(பெப்ருவரிமீ).

| | | | | |
|---|---|---|---|---|
| Rev. S. சத்தியநாதன் | ... குலசேகரன்பட்டணம் | ... 0 | 9 | 0 |
| V. ஆபிரகாம் | ... தூத்துக்குடி | ... 3 | 0 | 0 |
| Mr. ஜோசையா டேவிட் | ... இலங்கை | ... 0 | 6 | 0 |
| ,, P. D. ஜான் | ... இலங்கை | ... 0 | 6 | 0 |
| ,, J. சீனிவாசகம் | ... திருவண்ணாமலை | ... 0 | 15 | 0 |
| ,, V. டேவிட் | ... பசுமலை | ... 2 | 15 | 0 |
| ,, தாவீது ஜெயதுரை | ... பர்மா | ... 0 | 6 | 0 |
| ,, A. D. துரைசாமி | ... சமாரியா | ... 0 | 6 | 0 |
| ,, A. பெருமெபற்றுன் | ... விசாகப்பட்டணம் | ... 1 | 8 | 0 |
| ,, S. J. யோசேப்பு | ... எல்லைப்பட்டி | ... 1 | 4 | 0 |
| ,, ஜான் சாலொமோன் | ... பங்களூர் | ... 1 | 2 | 0 |
| ,, M. Y. தானியேல் | ... சென்னை | ... 0 | 12 | 0 |
| ,, V. P. சாமுவேல் | ... இடையன்குடி | ... 0 | 12 | 0 |
| ,, J. S. பேதுரு | ... ரங்கூன் | ... 1 | 2 | 0 |
| Mrs. தேவசகாயம் | ... கோயம்புத்தூர் | ... 1 | 2 | 0 |

(மார்ச்சுமீ.)

| | | | | |
|---|---|---|---|---|
| Mr. N. வேதநாயகம் | ... கட்டளூர்பட்டி | ... 3 | 0 | 0 |
| ,, D. தேவதாசன் | ... Kolpatana | ... 1 | 4 | 0 |
| ,, S. இரப் | ... பாளையங்கோட்டை | ... 0 | 6 | 0 |
| ,, G. பொன்னையா | ... கோயம்புத்தூர் | ... 3 | 0 | 0 |
| ,, Alfred John | ... இலங்கை | ... 0 | 6 | 0 |
| ,, D. துரைப்பாண்டியன் | ... தூத்துக்குடி | ... 0 | 12 | 0 |
| ,, G. M. ராஜேந்திரம் | ... F. M. S. | ... 0 | 6 | 0 |
| ,, N. S. தவமணி | ... ஒடக்கரை | ... 2 | 0 | 0 |
| ,, G. P. ஆபிரகாம் | ... F. M. S. | ... 1 | 8 | 0 |
| ,, G. சாந்தப்பா | ... பங்களூர் | ... 1 | 7 | 0 |
| ,, J. யோசுவா | ... பர்மா | ... 1 | 8 | 0 |
| ,, யாக்கோபு | ... பண்டாரவிளை | ... 2 | 1 | 0 |
| ,, ஆ. சாமுவேல் நாடார் | ... தூத்துக்குடி | ... 0 | 12 | 0 |
| ,, பாக்கியநாதன் | ... உடையார்பேட்டை | ... 0 | 6 | 0 |
| ,, பால் துரைசாமி | ... குண்டக்கல் | ... 0 | 12 | 0 |
| ,, J. ஜெபஞானம் | ... தூத்துக்குடி | ... 0 | 6 | 0 |
| Rev. M. ஆசீர்வாதம் | ... பண்ணிகுளம் | ... 6 | 2 | 0 |
| ,, S. மாசில்லாமணி | ... கும்பகோணம் | ... 0 | 6 | 0 |
| Miss தங்கம் அம்மாள் | ... S. T. C. | ... 3 | 0 | 0 |
| Mrs. தேவப்பிரகாசம் | ... தென்காசி | ... 0 | 6 | 0 |
| ஆத்திச்சப்பேரி | | ... 1 | 6 | 0 |
| சமாதானபுரம் | | ... 3 | 9 | 0 |
| கல்லம்மாள்புரம் | | ... 2 | 4 | 0 |
| ஆறுமுகனேரி | | ... 6 | 8 | 0 |
| ஆனைக்குளம் | | ... 1 | 5 | 0 |

Printed at the C M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

MAY, 1914. Registered No. M. 481

REGISTRAR OF BOOKS 1914

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 5] மேமீ 1914 [விலை பை 3

CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 33 |
| Conversion (Continued) ... ... ... | 34 |
| The Acts of the Missionaries ... ... ... | 35 |
| Animism in Tinnevelly ... ... ... | 37 |
| Home Missioner's Letter ... ... ... | 38 |
| From the Telugu Field ... ... ... | 40 |


பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 33 |
| குணப்படுதல் (தொடர்ச்சி) ... ... ... | 34 |
| மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... | 35 |
| ஆவேச வணக்கம் ... ... ... ... | 37 |
| உள்நாட்டு ஊழியரின் கடிதம் ... ... ... | 38 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 40 |


## பத்திராதிபர் குறிப்புகள்

"திருநெல்வேலி நாட்டில் ஆவேச வணக்கம்" என்ற பொருளின்பேரில் கனம்: கார் ஐயரவர்கள் நாளது மாச "இந்திய வாலிபர்" என்னும் ஆங்கிலேய பத்திரிகைக்கு எழுதியிருப்பதின் சுருக்கத்தை இச்சஞ்சிகை ஆவேச வணக்கம். யின் ஓர் பாகத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் சொல்லிய திருஷ்டாந்தங்கள் யாவும் அவர்கள் முகருபில் திட்டமாய்ப் பார்த்தும், நன்றாய் விசாரணைசெய்து காரிய உண்மையையறிந்த விஷயங்களாம். வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை கருக்கல் நேரம் வெளியே போக ஜனங்கள் பயப்படுவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதும் தெரிந்த முதுமொழியே. இவை எதைக் குறிப்பிடுகின்றன? ஆவேச அச்சம் அறியாமலே ஜனங்களைப் பற்றிக்கொண்டிருப்பது இதற்கு காரணமோ? ஜீவனுள்ள தேவன்மேலுள்ள உறுதியான விசுவாசமே சகல பயத்தையும் நீக்கும் மாற்று.

சென்னை "சர்ச்சு ஆவ் ஸ்காட்லாந்து" மிஷனில் பல்லாண்டுகளாக நல்ல ஊழியஞ்செய்து, தங்களுடைய வயோதிப நாட்களை தன் பரம எஜமானுக்காக சுதாவாய் சுவிசேஷ ஊழியஞ்செய்து கழித்துவந்த கனம்: கனம்: V. சாமுவேல் V. சாமுவேல் ஆசிரியரவர்கள் நாளது ஆசிரியரவர்கள் எப்ரல்மீ 20ௗ திங்கட்கிழமை கர்த்தருடைய ராஜ்யமடைந்தார்கள். இவர்கள் நல்லூர் மக-ா-ா-ஸ்ரீ T. சிமியோன் விசாரணை உபாத்தியாயரவர்கள் மருமகன். ஜெப விசுவாச ஜீவியத்திற்கு நமக்கு ஓர் சிறந்த மாதிரியாய் சென்னையில் தங்களுடைய அந்தியகாலத்தில் விளங்கினார்கள். புறமதஸ்தர் இரட்சிப்பில் அதிக கரிசனைகொண்டார்கள். இந்துக்களோடு அடிக்கடி தனி சம்பாஷணைசெய்து ரக்ஷாபெருமானின் அன்பை அறிவித்துவந்ததுமன்றி, தன் பொருட்கள் யாவற்றையும் 'வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது' என்ற சர்வவல்லவர் ராஜ்ய விருத்தி விஷயமாய்ச் செலவிடப்படும்படி தானமளித்துவிட்டார்கள். இச்செய்கையை சிலர் பைத்தியமென்று குறைகூறினபோதிலும், அவர்கள் அதைக் குறித்து ஓர்காலமும் மனவருத்தப்படாமல், தன்னை மீட்ட நாயகனைப் போற்றிப்புகழ்ந்து அவருக்குள் மனஅமரிக்கையாய் ஜீவித்துவந்தார்கள். திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் அவர்களுக்கு மிகவும் அருமையானது. நாளது வருஷ சங்க "வைஸ் பிரசிடென்று"களில் அவர்களும் ஒருவர். தாங்கள் நேசித்துவந்த அருள்நாதரிடம் முகமுகமாய் சம்பாஷணை செய்யப் போய்விட்டதால், சாவு அவர்களுக்கு ஆதாயமே அவர்களுடைய சிறந்த மாதிரியைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் பலர் எழும்ப கர்த்தர் அருள்புரிவாராக.

## குணப்படுதல்.

(தொடர்ச்சி)

### குணப்பட்ட மனுஷனிடம் வெளியரங்கமாய் காணப்படும் பலன்கள்.

அவனுடைய பிந்திய தேக சுகம் அதிகமாய் விர்த்தியடைந்து பலவானாகிறான். ஆவிக்குரிய உயர்ந்த புஸ்தகங்களை வாசிக்கத் தொடங்குகிறான். மேலான காரியங்களையே நாடுகிறான். தேவ மகிமைக்கென்று ஊழியஞ்செய்ய முயலுகிறான். வேதாகமத்தை வாசிக்க அதிக விருப்பங்கொள்ளுகிறான். மற்றவர்களுக்குத் தான் கிறிஸ்தவனென்று காட்ட விரும்புகிறான். வேலையிலும் விளையாட்டிலும் எல்லாவற்றிலுமேதான் தேவ நாமத்தின் மகிமைக்கென்று ஜீவிக்கப் பிரயாசப்படுகிறான். தன்பாவங்களெல்லாம் அற்றுப்போயிற்றென்று எண்ணுகிறான். எந்தச் சோதனை வந்தாலும் தன்னை மேற்கொள்ளாது என்ற தைரியம் கொள்ளுகிறான். கடவுளுடைய சித்தத்துக்கு ஒத்து நடப்பதாலும் அவருடன் ஒன்றுயிருப்பதாக உணருவதாலும் இருதயத்தில் பெரும் சமாதானத்தை அனுபவிக்கிறான். மன அசுத்தத்தையெல்லாம் வெறுத்து அவனுடைய விருப்பங்களும் எண்ணங்களும் மேலானதையே நாடுகிறது.

மெய்யாய்க் குணப்பட்ட சிலருடைய மாறுதலைப்பற்றிக் கவனித்து அதிலிருந்து சொல்லக்கூடிய சாக்ஷியம்.

எனக்கு நன்றாய்த் தெரிந்த சிலர் குணப்பட்ட பிறகு வெகு சீர் அடைந்து உண்மையும் யோக்கியமுமாய் மரணபரியந்தம் ஜீவித்திருக்கிறார்கள். தேவ கிருபையைப் பெற்று முன் தாங்கள் பேசிவந்த துர்ப்பாஷை, தூஷணவார்த்தை, கெட்ட சம்பாஷணையை கட்டோடே விட்டுவிட்டார்கள். பொய் பேசும் வழக்கத்தையும் ஈரார்த்தங்கொள்ளும் மயக்கப்பேச்சையும் இருதயத்திலும் கூடப்பிறஸ்திரீகள் கவனத்தையும் அகற்றினார்கள். சாந்தம், பொறுமை, தாழ்மை யென்ற விசேஷித்த குணங்களோடு பற்றற்ற தன்மையும் பொருந்தியவர்களாய் எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்களாய் ஜீவித்தனர். கோபத்தை அகற்றி குளிர்ந்த வசனமும் மலர்ந்த முகமும் கனிந்த பக்தியும் பணிந்த நடையுமுள்ளவர்களாயிருந்தனர்.

இதற்கு மூலகாரணம், தங்களுடைய வாழ்நாள் எல்லாம் வேதவாசிப்பு, ஜெபம், சன்மார்க்க சம்பாஷணை முதலியவைகளில் பின்னிட்டு வருவதும் தாங்கள் செய்யும் உத்தியோகம் அல்லது தொழிலை தேவ பார்வையிலும் மனுஷர் பார்வையிலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கவிதமாய்ச் செய்துவருவதே.

சாஸ்திர யுக்தம். டாக்டர் ஸ்டார்பக் (Dr. Starbuck) என்பவர் அநேகருடைய குணப்படுதலின் சரித்திரத்தைக் கவனித்து ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் சில அபிப்பிராயங்கள் சாஸ்திர யுக்தமாய் குணப்படுதலுக்கு ஏற்றதென்றும், குணப்படுதலின் தன்மை யாதென்றும், குணப்பட்டவர்கள் உடனே அடையும் மாறுதல் இன்னவென்றும் அதில் உயர்ந்த சன்மார்க்க நிலையான மாறுதல் நிலைத்திருக்கிறதென்றும், அதற்கு காரணங்கள் யாதென்றும், சிலர் அப்படி நிலையாமலிருப்பதற்கு காரணமின்னவென்றும், அதற்காகத் தேவ ஊழியர் கையாடி வரும் முறைகளையும் அதின் சிலாக்கியங்களையும் எடுத்து விவரித்திருக்கிறார். இவ்வகையான பலவிதமான மாறுதல்களும் அங்கபாதி சாஸ்திரத்தை அனுசரித்தே நடந்தேறிவருகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார். அவர் புத்தகத்தில் சொல்லியிருக்கும் எண்ணங்களை பின்னால் விவரிக்கிறோம்.

குணப்படுதல், (Conversion). குணப்படுதலின் தன்மையை இரண்டுவிதமாக கவனிக்கலாம். தன்னை முற்றிலும் வெறுத்து, தேவனோடு ஒப்புரவாகி, பாவ மன்னிப்பைப் பெறுதல் ஒன்று. பாவ உணர்ச்சியின் பயங்கரத்தினால் இயற்கையாய்த் துற்செய்கையில் வெறுப்புண்டாகி நிடீரென்று காணப்படுகிற புதிய ஜீவியம் மற்றொன்று. இதை வேறுவிதமாய்ச் சொல்லில், நீதியை விரும்பி, சித்த வல்லமையின் பலத்தினால் புதிய ஜீவியமாய் ஜீவிக்க தீர்மானிக்கிறதின் தன்மையென்னலாம்.

Changes by Conversion. குணப்படுதலினால் உண்டாகிற விசேஷித்த மாறுதல்கள் மூன்று:

முதலாவது.—தன்னை வெறுத்து தன் பெருமையை நீக்கி தன்னை ஒப்புக்கொடுக்கிறான். உடனே பெரும் சமாதானம் உண்டாகிறது. தன் சுயாதீன சித்தப்படி நடவாமல், தெய்வ சித்தம் ஒவ்வொரு விஷயத்திலும் இன்னதென்று அறிந்து அதின்படி நடக்கத் தீர்மானிக்கிறான். அப்படிப்பட்ட பரிசுத்த ஜீவியத்தாலும் கடவுளுடைய சித்தத்திற்கு ஒத்து நடப்பதாலும் அவருடன் ஒன்றாயிருப்பதாக உணருகிறான்.

இரண்டாவது.—தன் பாவங்கள் மன்னிக்கப்படும் வழிவகைகளைத் தேடுகிறான். பாவங்கள் மெய்யாகவே மன்னிக்கப்பட்டதென்று உணருகிறான். இதுவரை தன்னிடமில்லாத வல்லமையை தேவ ஒத்தாசையினால் பெற்று, புதிய மனுஷனாய் ஜீவிக்க வழிபடுகிறான். பரிசுத்த ஆவியைப் பெற்றதாக அறிகிறான்.

மூன்றாவது.—மனச்சாக்ஷியிலும் விவகார ஞானத்திலும் தனக்குண்டான போராட்டம் நீங்கியபின், அவன் பகிரங்கமாய்த் தன் பாவங்களை அறிக்கையிடுகிறான். தன் இனஜன கூட்டத்தார் மதிப்பை எதிர்த்து நிற்கிற தைரிய பலமுண்டாகிறது. அவனில் சுயமாய் புதிய ஜீவன் உதயமாகிறது.

அப்படி உண்டாகிற புதிய ஜீவியத்தின் தன்மையும், வளர்ச்சியும். குணப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரேவிதமான சந்தோஷமும், சமாதானமும், மனத்திருப்தியும் உண்டாகிறது. உயர்ந்த ஜீவியத்திற்கேற்ற புது தீர்மானம் பண்ணுகிறார்கள். இப்படி உண்டாகிற புதிய ஜீவியத்தினால் பழைய துர்வழக்கங்கள் முற்றிலும் அற்றுப்போகிறது. நல்ல காரியங்கள் நடப்பிக்கிறதற்கு மிகுந்த ஆவல் உண்டாகிறது. ஜீவியத்தின் நோக்கங்களும் எண்ணங்களும் உயர்வடைகிறது. அவன் முழுவதுமாய் புதிய மனுஷனாகிறான்.

---



## மிஷனெரிமார் நடபடிகள்

### III. தெசலோனிக்கே சபை ஸ்தாபனம்

அப். 17: 1—9.

குறிசொல்லுகிற பெண் நிமித்தம் உண்டான கலகத்தினால் காவலில் வைக்கப்பட்ட அப்போஸ்தலர் விடுதலையாக்கப்பட்டு, லீதியாளிடத்திற்குப் போய் 'சகோதரரைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி' அங்கிருந்து புறப்பட்டார்கள். (அப். 16: 40). பிலிப்பியிலிருந்து, ரோமாபுரிக்கு நேராய் மக்கெதோனியா நாட்டை உருவிச் செல்லும் ராஜபாதைக்கு எக்னேஷியன் சாலை என்று பேர். இது அம்பிபோலி, அப்பொலோனியா, தெசலோனிக்கே பட்டணங்களின் வழியாய்ச் செல்லும். பிலிப்பியிலிருந்து 30 மைல் தென்மேற்காய் அம்பிபோலியும், அம்பிபோலியிலிருந்து 30 மைல் தென்மேற்காய் அப்பொலோனியாவும், அப்பொலோனியாவிலிருந்து 30 மைல் மேற்காய் தெசலோனிக்கேயும் இருக்கிறது. முந்தின இரண்டு பட்டணங்களிலும், அப்போஸ்தலர் வேலை செய்ததாகத் தோன்றவில்லை இராத்தங்கி மாத்திரமிருக்கலாம். மக்கெதோனியா மாகாணத்திற்கு தெசலோனிக்கே, தலைநகர். அங்கே ஒரு யூத குடியிருப்பும் ஜெப ஆலயமுமிருந்தது. ஆகவே அங்கே வேலை ஆரம்பித்தார்கள். பரி: பவுல் தமது வழக்கத்தின்படி முதல் முதல் யூதருக்குப் பிரசங்கித்தார். தொகுப்பாய் மூன்று ஓய்வுநாட்களில் ஜெப ஆலயத்திற்குப் போய் இயேசுவே மேசியாவென்று திருஷ்டாந்த சகிதமாய் விளக்கிக் காட்டினார். யூதரில் சிலர் மாத்திரம் விசுவாசித்தார்கள். இவர்களில் அரிஸ்தர்க்கு ஒருவன் (20: 4). யூதமத பக்தியுள்ள கிரேக்கரிலே, திரளான பேர் பரி: பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்.

4-ம் வாக்கியத்திற்கும் 5-ம் வாக்கியத்திற்கும் இடையில் அநேக சங்கதிகள் விட்டிருக்கிறதாக அனுமானிக்கலாம். அப்போஸ்தலர் தெசலோனிக்கே பட்டணத்தில் மூன்றுவாரமாத்திரம் வேலைசெய்தபின் கலகமுண்டானதென்று நினைக்கக்கூடாது. தெசலோனிக்கேயருக்கு அப்போஸ்தலன் எழுதின நிருபங்களைப் பார்க்கும்போது, அங்குள்ள கிறிஸ்தவர்களில் மிச்சமான பேர் கிரேக்கரென்று தெரிகிறது. மூன்றுவாரம் யூதருக்குப் பிரசங்கித்தபின், பிசிதியா, அந்தியோகியாவில் செய்ததுபோல, அப்போஸ்தலன் யூதரைவிட்டுத் திரும்பவும் புறஜாதியார் நடுவில் மாத்திரமே வேலைசெய்தார்கள் என்று அறியலாம். சபை உண்டான விபரத்தையாவது, அங்கே அப்போஸ்தலன் போதித்த உபதேசத்தையாவது, சபையில் ஏற்படுத்தின ஒழுங்குகளையாவது பரி: லூக்கா எழுதவில்லை. அவைகளை அறிய தெசலோனிக்கே நிருபங்களைப் படிக்கவேண்டும்.

யூதர் குடியிருந்த பாகத்தை விட்டுவிட்டு அப்போஸ்தலர் யாசோனுடைய வீட்டிலே வாசம்பண்ணியிருக்கலாம். அங்கேயே முதல் சபை உண்டாகியிருந்திருக்கவேண்டும். ஜனங்களுக்குப் பாரமாயிராதபடி மிஷனெரிமார் இரவும் பகலும் வேலைசெய்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (1 தெச. 1: 9). பிலிப்பி சபையிலிருந்து இவர்களுக்கு இரண்டொருதரம் பொருள் சகாயமும் வந்தது (பிலி. 4: 16). இவ்வாறு ஜீவனார்த்தம் செய்து சுவிசேஷ ஊழியம் நடப்பித்தார்கள். பரி. பவுலின் பிரசங்கம் அவ்விடத்தில 'வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியின் முழு நிச்சயத்தோடும் நடந்தது' (1 தெச. 1: 5). திரளானபேர் விக்கிரகங்களைவிட்டு ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு மனந்திரும்பினார்கள் (1: 9). அவர்கள் வசனத்தை ஏற்றுக்கொண்டபோது பரிசுத்த ஆவியின் வரங்களும் அவர்களுக்கு அருளப்பட்டன. பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தினால் யாவரும் நிறையப்பட்டார்கள் (1: 5). ஏற்றுக்கொண்ட அவர்களுக்குள் சுவிசேஷத்தின் 'பெலன்' ஸ்பஷ்டமாகக் காணப்பட்டது (2: 13). இன்னும் அஞ்ஞானிகளாயிருந்த இனஜனங்களே மார்க்கத்திற்கு வந்தவர்களை, உபத்திரவப்படுத்தினார்கள். துன்பங்களை சந்தோஷமாய்ச் சகிப்பதற்குசபைகளும் தேவகிருபை பெற்றன (2: 14; 3: 4). அப்போஸ்தலனுக்கும், சபையாருக்கும் மிகுந்த அன்பும் பாசமும் வளர்ந்தது. தாயும் பிள்ளையும்போலவும் (2: 7), தகப்பனும் பிள்ளையும் போலவும் (2: 12) இருந்தார்கள் கொஞ்சக்காலம் அவர்களை விட்டுப் பிரிந்திருந்தபோது, அவர்கள் முகத்தைப் பாக்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசை தமக்கிருந்ததாகச் சொல்லுகிறார் (2: 17). அவர்களைப் பார்க்க இவர் எவ்வளவு வாஞ்சை கொண்டாரோ அவ்வாறே அவர்களும் அப்போஸ்தலரைக் காண வாஞ்சையாயிருந்தார்கள் என்றும் எழுதுகிறார் (3: 6). மேலும், இச்சபையார் பிலிப்பியரைப்போல மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களானார்களென்றும் தோன்றுகிறது. 'உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் தொனித்தது' என்றும், 'தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று' என்றும் நிருபத்தில் எழுதுகிறார் (1: 7, 8).

சபையார் ஏற்றுக்கொண்டு, நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளையும் பரி. பவுல் அவர்கள் நடுவிலிருந்தபோது போதித்ததாகத் தோன்றுகிறது. 'நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்' என்றும், எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் விட்டு விலகவேண்டுமென்றும் இரண்டாம் நிருபத்தில் சொல்லுகிறார் (2 தெச. 2: 13; 3: 6). உதாரணமாக, அவர்கள் வேலை, ஆராதனை, பிரசங்கம், பரி. சாக்கிரமெந்துக்கள் இவைகள் எல்லாவற்றைப்பற்றியும், திட்டமான முறைகளை ஏற்படுத்தியிருந்தார் என்று நிதானிக்கலாம். அவர்களுக்கு அவசியமாயிருந்த சன்மார்க்க போதனையும் செய்திருந்தார். 'தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல அசுத்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடாமல் 'தேவசித்தத்திற்கேற்க, ஒவ்வொருவனும் தன்னைக் கற்புள்ளவனாகக் காத்துக்கொள்ளவேண்டும் என்று எச்சரித்தார். (1 தெச. 4: 1—8).

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும் தெளிவாய்ப் போதித்தார் என்று தோன்றுகிறது. தேவனுடைய ராஜ்யத்திற்கு

அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள் என்றும், அந்த ராஜ்யத்தினிமித்தம் அவர்கள் பாடு அநுபவித்தவர்கள் என்றும், அந்த ராஜ்யத்திற்கு அவர்கள் பாத்திரர் என்றும் பகிரங்கமாய்ப் போதித்தார். ராஜ்யம் என்ற வார்த்தை இவ்வளவு அதிகமாய் உபயோகிக்கப்பட்டதினால், சத்துருக்களுங்கூட அதைப் பிடித்துக் குற்றம் சாட்ட ஏதுவுண்டாயிற்று. இயேசு என்பவர் ஓர் ராஜா என்று இவர்கள் உபதேசித்து, உலகத்தைக் கலக்குகிறார்கள் என்று யூதர் இவர்களுக்கு விரோதமாகக் குற்றம் சாட்டினார்களே. (1 தெச. 2: 17; 2 தெச. 1: 5; 2: 8; அப். 17: 6, 7)

மேலும் உயிர்த்தெழுதலைப்பற்றியும் இரட்சகருடைய இரண்டாம் வருகையைப் பற்றியும் கிறிஸ்தவர்களுக்கிருக்க வேண்டிய நம்பிக்கையைப்பற்றியும் தெளிவாய்ப் புகட்டினார். 'இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று அவர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். (1 தெச 5: 2). மேலும் மற்ற சபைகளில் செய்ததுபோல இங்கும் சபை மூப்பர்களை ஏற்படுத்தினார். சபையாரை விசாரணை செய்வதும், அவர்களுக்குப் புத்தி சொல்வதும் அவர்கள் வேலையாயிருந்தது. அப்படிப்பட்ட மூப்பரை ஜனங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார் (1 தெச 5. 12). சபை சிக்ஷை என்பதையும் ஆரம்பித்திருந்தார். சபை முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிறவர்களைவிட்டு ஜனங்கள் விலகவேண்டுமென்றும், அப்போஸ்தலனாகிய தம்முடைய கட்டளைக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனை குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனோடே கலவாமலிருக்க வேண்டுமென்றும் கண்டிப்பான கட்டளைகள் ஏற்படுத்தியிருந்தார். (2 தெச 3: 6; 14)

தெசலோனிக்கே சபையில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட விபரம் இதே. இப்பட்டணத்தை விட்டு அப்போஸ்தலன் புறப்பட நேரிட்ட காரணத்தை மாத்திரம் பரி. லூக்கா எழுதுகிறார். யூதர் பொறாமை கொண்டு, வீணரை எழுப்பிவிட்டு, அப்போஸ்தலரைக் கஷ்டப்படுத்தினார்கள், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகள் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். உடனே இராத்திரி நேரத்தில் பவுலையும் சீலாவையும் சகோதரர் அனுப்பிவிட்டார்கள். (அப் 17. 5-9).

யூதர் இவ்வாறு செய்த இடையூறை அப்போஸ்தலன் ஒருபோதும் மறந்துபோகவில்லை இரண்டாம் நிருபத்தில் இவர்களைப்பற்றி எழுதுவது நமக்குத் தெரியுமே. "அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும் தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கு ஏற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து, தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள். அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" என்று அங்கே சொல்லுகிறார். (2: 15, 16).

"சகோதரர் இவர்களை அனுப்பிவிட்டார்கள்" (அப் 17: 10) என்ற வார்த்தைகளைப் பார்க்கும்போது உடனே போவது அப்போஸ்தலருக்கு இஷ்டமில்லாததுபோலத் தோன்றுகிறது. யாசோனுக்கும் மற்றவர்களுக்கும் நேரிடக்கூடிய துன்பத்தை நினைத்தவராய், அப்போஸ்தலன் அவர்களைவிட்டுப் புறப்பட மனமற்றிருந்திருக்கலாம். அவ்வாறே இவர்கள் புறப்பட்ட பின்பு கொடிய துன்பம் நேரிட்டது என்று நிருபத்திலும் வாசிக்கிறோம் யூதேயா தேசத்திலுள்ள சபைகள் ஆரம்பத்திலே யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே இவர்களும் தங்கள் சுய ஜனங்களால் பாடு பட்டார்கள். (2: 14).

இச்சமயத்தில் புறப்பட்ட அப்போஸ்தலர் பெரோயா பட்டணம் சேர்ந்தார்கள். தெசலோனிக்கே வேலை இவ்வாறு முடிந்தது. தெசலோனிக்கேயா சபை ஸ்தாபன சரித்திரம் தற்கால மிஷனெரிமாருக்கு அநேக பாடத்தைக் கற்றுக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறதென்று மேலே காட்டியதிலிருந்து அறிந்துகொள்ளலாம். உபத்திரவங்களைச் சகித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி புதுச்சபைகளுக்குப் போதிக்கவேண்டியது அவசியம் என்பதையும், ஆரம்பமுதலே சபையாசாரங்களையும், பக்திக்குரிய முறைமைகளையும் படிப்பிப்பதும், சபை சிக்ஷையை ஸ்தாபிப்பதும் எவ்வளவு முக்கியமென்றும் கற்றுக்கொள்வோமாக. திருச்சபை முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற கிறிஸ்தவனை மற்றவர்கள் விட்டு விலக வேண்டும், அப்படிப்பட்டவன் வெட்கப்படும்படி அவனோடு கலவாதிருக்கவேண்டும் என்ற சட்டங்களை சபையார் கவனித்து நடப்பார்களானால் எத்தனை நன்மை!

## IV. பெரோயா சபை ஸ்தாபனம் அப் 17: 10-15.

தெசலோனிக்கேயிலிருந்து அப்போஸ்தலர் எக்னேஷியன் பாதையை விட்டுத் தெற்குமுகமாய் 40 மைல் பிரயாணம் செய்து பெரோயா சேர்ந்தார்கள். பெரோயா ஓர் சிறந்த பட்டணமாக எக்காலத்திலும் பேர்பெற்றதுண்டு. வெறியா என்று பெயர் தரித்ததாய் இந்நாள்வரைக்கும் அந்தப் பட்டணமிருக்கிறது. கனம்பெற்ற உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அப்பட்டணத்தில் வசித்து வந்தார்கள். ஆகவே, பொதுவாய் அப்பட்டணத்தின் நடபடிகள் மரியாதையாயும் ஒழுக்கமாயும் நடப்பது வழக்கம். தெசலோனிக்கேயில் நடந்த வீணர் குழப்பங்கள் இங்கே நடப்பதரிது. இவ்வித சீரைப் பெற்ற பட்டணத்தில் குடியிருக்க வந்த யூதரும் அங்குள்ள மரியாதையான ஒழுக்கங்களைக் கற்றிருந்ததாகத் தோன்றுகிறது". அவர்கள் மனோவாஞ்சையாய் "வசனத்தை ஏற்றுக்கொண்டு தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்து நற்குணசாலிகளாக" விளங்கினார்கள். சிலர் விசுவாசித்தார்கள் அவர்களில் சோபத்தர் ஒருவன். (அப் 20. 4) ஆனால் தெசலோனிக்கேயாவிலுள்ள யூதர் அதை அறிந்து ஜனங்களைக் கிளப்பிவிட்டபோது, சகோதரர் பவுலை அத்தேனேக்கு அனுப்பிவிட்டார்கள். சீலாவும் தீமோத்தேயுவுமோ அங்கேயே தங்கியிருந்தார்கள் சீக்கிரமாய் சீலாவும் தீமோத்தேயுவும் தன்னிடம் வர அத்தேனேயிலிருந்து அப்போஸ்தலன் ஆள் அனுப்பினார். மக்கெதோனியா மாகாணத்தின் வேலை இவ்விதமாய் முடிந்தது. மக்கெதோனியா சபைகள் ஸ்தாபிக்கப் பட்டாயிற்று.



## ஆவேச வணக்கம்.

தென் இந்தியாவிலுள்ள பட்டி தொட்டிகளைப்போல மற்றெந்த இடங்களிலும் ஆவேச வணக்கம் அவ்வளவு சிரத்தையாய் நடக்குமோ என்பது சந்தேகம். இந்து மார்க்கத்தின் சாராம்சம் இயற்கை வணக்கம். மனுஷரை வணங்குவதும், பின்பு மரித்துப்போனவனுடைய ஆவியை வணங்குவதும் இயற்கை வணக்கத்திலிருந்து விர்த்தியாகியிருப்பது விந்தையே. இந்துமார்க்கமானது எப்படிப்பட்ட வணக்கத்தையும் தன்னோடு சேர்த்துக்கொள்ளுகிறது. பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகிய திரியேக தேவனுடைய லட்சணம் பிரமா, விஷ்ணு, சிவன் முதலியவர்களுக்கும் உண்டு என்று மாத்திரம் கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொண்டால், இந்து மார்க்கம் கிறிஸ்து மார்க்கத்தையும் தன்னோடு சேர்த்துக்கொள்ளும் ஆனால் 'நானே வழி. என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' என்று இரட்சகர் சொல்லுகிறார். ஆகவே, கிறிஸ்துமார்க்கம் இந்துமதத்தோடு இணைக்கப்பட்டுப்போவது கூடாத காரியம். பூர்வீக ஆரியர் இந்து மார்க்கத்தைத் தென் இந்தியாவுக்குக் கொண்டுவந்தபோது, முன் இந்நாட்டிலிருந்த ஆவேச வணக்கமானது அதோடு சேர்ந்துகொண்டது.

மரித்துப்போன ஒரு மனுஷனின் ஆவி, அல்லது செத்துப்போன ஒரு மிருகத்தின் ஆவியானது, குறிக்கப்பட்ட எல்லையில் எப்போதும் இருக்கிறது, அதற்கு அதிக வல்லமை உண்டு என்பதே ஆவி வணக்கத்திற்கு மூலாதாரமான காரணம். இந்த ஆவிக்கு எப்போதும் நன்மையல்ல, தீமை செய்வதே தொழில். ஆனால் சாந்தி செய்தால், தீமை செய்யாது. இயற்கையாய் மனுஷர் சாகிறபடி சாகாமல், வேறு வகையாய் செத்த மனுஷனின் ஆவிக்கும் கீர்த்திபெற்ற மனுஷனுடைய ஆவிக்கும் ஜனங்கள் பொதுவாய்ப் பயப்படுகிறார்கள். கனம். ராக்லாண்டு ஐயரவர்கள் 1859-ம் வருஷம் ஒரு இரத்த நரம்பு வெடித்து சிவகாசியில் மரணமடைந்தார்கள். அவர்கள் அந்தப் பாகத்திலுள்ள இந்துக்களுக்கு நன்றாய்த் தெரியும். துன்பத்திலும் இடுக்கணிலும் அவர்கள் மிகவும் பொறுமையாயிருப்பார்கள். என்றாலும், மரித்துப்போன அவர்களுடைய மார்க்கத்தை அங்குள்ள மனுஷர் பின்பற்றினார்களா? இல்லை. அவர்கள் ஜீவியத்தைப்பற்றியும் நடக்கையைப் பற்றியும் அந்தப் பாகம் எங்கும் பிரஸ்தாபமாயிற்று சிலர் மட்டும் கிறிஸ்தவர்களானார்கள். மிச்சமானவர்களோ கனம்: ஐயரவர்கள் நல் நடக்கையிலும் பொறுமையிலும் சிறந்தவர்கள் என்று மட்டும் சொல்லி, மரித்துப்போன அவர்களுடைய ஆவியைச் சாந்தப்படுத்தாவிட்டால், அவர்கள் ஆவி தங்களுக்கு ஏதாவது கெடுதி செய்யுமென்று நினைத்து, அவர்கள் கல்லறைக்குப் பூமாலைகளையும் மற்றும் காணிக்கைகளையும் கொண்டுபோகத் தொடங்கினார்கள். ஆகையால் ஜனங்கள் அதனிடம் போய் அதற்குக் காணிக்கை செலுத்தாதபடியும், அதைவந்து பார்ப்பதினால் அதைத் தொழும் முக்கிய ஸ்தலமாக்காதபடிக்கும், அதைச் சுற்றிலும் ஓர் உயர்ந்த சுவர் கட்டவேண்டியதாயிற்று. இன்றைக்கும் அந்தச் சுவர் இருக்கிறது.

பாளையங்கோட்டைக்குத் தென்கிழக்காய், 25 மைல் தூரத்தில் ஏரல் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அதில் கொஞ்சக்காலத்துக்குமுன் அருணாசல நாடார் என்ற ஒரு இந்து மரித்தார். அவர் நல்லவர் என்று பெயர் பெற்றவர். நாகரீக விர்த்தியில் அபேக்ஷை கொண்டவர். அந்த இடத்து யூனியனுக்கு அவர் தலைமையானவர். மூன்று அல்லது நாலு வருஷத்திற்கு முன்னே அவர் மரித்தார். மரித்தவுடன் சிலரைச் சுடுகாட்டில் கொண்டு சுடுகிறதுபோல இவரைச் சுடாமல், மண்ணில் திருவழுதி நாடான் விளையில் அடக்கம் பண்ணினார்கள். இவருடைய கல்லறை விசேஷமானது என்று சத்தம் காடெங்கும் தொனித்தது. தங்கள் வியாதி சுகமாகுமென்ற எண்ணமுடன் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அந்தக் கல்லறைக்கு யாத்திரை போனார்கள். அநேக கிறிஸ்தவர்களும் வழிதப்பி அங்கே போனது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் துக்கமானதே. இந்தக் கல்லறையைப் பற்றிய பிரஸ்தாபம் நாடெங்கும் சென்றுகொண்டேயிருக்கிறது. அதுமாத்திரமல்ல, பாளையங்கோட்டையிலிருந்து தென் கிழக்காய் 33 மைல் தூரத்தில் கீழப்பண்டாரபுரம் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே புதிதாய் கிறிஸ்தவ ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்தில் ஓர் கல்லெறி தூரத்தில் ஓர் புதிய இந்து பேய்க்கோவில் கட்டப்பட்டிருக்கிறது. காரியம் என்ன என்று விசாரித்தால், திருவேலத்தி நாடான் விளையிலிருக்கும் கல்லறையில் கொஞ்சம் மண்ணைக் கொண்டுவந்து, இந்த புதிய கோயிலில் வைத்து ஜனங்கள் வணங்குகிறார்கள் என்று தெரியவரும். கல்லறையின் மண்ணுக்கு வல்லமை உண்டென்று அந்த ஜனங்கள் மனதில் பட்டிருக்கிறது. என்ன பரிதாபம்!

பாளையங்கோட்டைக்கு வடமேற்காய் 60 மைல் தூரத்தில் செய்த்தூர் என்னும் இடத்தில் ஓர் அடைப்பு இருக்கிறது. அங்குள்ள பூசாசாரியைப் பார்த்து, இது என்ன சுவாமி என்று கேட்கும்போது அவன் அந்த ஊர் ஜமீன்தாரின் ஆவி என்று சொல்லுகிறான். தனக்கு மரியாதைசெய்து, தன்னைப்பற்றிப் பயப்படும்படியாக ஜமீன்தார் தான் உயிரோடிருக்கும்போதே அதை ஸ்தாபித்து, தான் மரித்த பின்னும் அந்த வணக்கம் நடந்துகொண்டிருக்கும்படியாகச் செய்து வைத்திருக்கிறார். என்ன ஆச்சரியம்!

சுவிசேஷபுரத்திற்குச் சமீபமாய் இரண்டு மைல் தூரத்தில் இட்டமொழி என்னும் ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கும் கடலுக்கும் ஐந்துமைல் தூரந்தான். அநேக வருஷங்களுக்குமுன் அந்தப்பக்கமாய்ப்போன ஒரு இங்கிலீஷ் கப்பல் கரைக்குச் சமீபமாய்ச் சேதமாயிற்று. அதன் மாலுமி அந்த ஊர் வழியாய் பாளையங்கோட்டைக்கு வரும்போது வியாதிப்பட்டு அங்கே மரணமடைந்தான். கப்பல் சேதமும் இவருடைய மரணமும் தங்களுக்கு ஏதாவது மோசம் செய்யுமென்று நினைத்து, ஊருக்குச் சமீபமாய் ஒரு கோவில்கட்டி அங்கே அந்த ஆவியை வணங்கி, சுருட்டையும் பிராந்தியையும் காணிக்கையாகப் படைக்கிறார்கள். இவைகளால் அந்த ஆவி சாந்தமாகும் என்ற எண்ணத்தினால் ஜனங்கள் இப்படிச் செய்கிறார்கள்.

பிரபல துஷ்டரின் ஆவிக்கும் பயந்து, ஜனங்கள் பரிகாரஞ்செலுத்தி, அவைகளை வணங்குவதும் திருநெல்வேலியில் சகஜம். பாளையங்கோட்டைக்கு கிழக்கே 13 மைல் தூரத்தில் மணல்கரை என்னும் கிராமத்தில் ஒரு சிறு கற்சொரூபம் இருக்கிறது. அதன் பெயர் பார்வதிநாததேவர் சாமி என்பது இவன் ஓர் பேர்பெற்ற மனுஷன். 63 வருஷங்களுக்கு முன் நடந்த கலகத்தில் செத்தான். அந்தப் பாகத்தில் ஜனங்களுக்குக் கொடிய துன்பமும் கொலைபாதகமும் செய்தவன். அவனுடைய ஆவியைச் சாந்திபடுத்த அதில் இன்னும் பூசை நடக்கிறது. 63 வருஷங்களுக்குப்பின் இப்போதுதான் இரண்டு குடும்பத்தார் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள்; ஒரு கிறிஸ்தவக் கோயிலும் அங்கே கட்டப்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டைக்கு தென் மேற்காய், 25 மைல் தூரத்தில் 'ஊர்க்காட்டான்' என்னும் ஓர் மனுஷன் அநேக வருஷங்களுக்கு முன்னே மகா கொடூரமாய்ச் செத்தான். கொலைபாதகத்தில் ரொம்பவும் கொடியவன். அவனுடைய ஆவிக்கு வணக்கம் செய்யப்பட்டுவருகிறது. பார்வைக்குக் கேவலமும் பயங்கரமான ஒரு பெரிய சிலை ஒன்று இருக்கிறது. அதன் மேல் எண்ணெய் வார்த்து, அந்தச் சிலை பார்வைக்கு கருப்பாயிருக்கிறது. யாதாமொரு வழக்குத் தீர்க்கவேண்டுமானால் அங்கேபோய் ஆணையிட்டு பின்பு வழக்கை முடிவுசெய்கிறார்கள். பொய்யாணையிடுகிறவனுக்கு மோசம் நேர்ந்து, அந்த ஆவிக்குச் சாந்தியுண்டாகுமென நினைக்கிறார்கள்.

சோகுளத்தில் ஒரு பறைச்சியின் ஆவியை ஜனங்கள் வணங்குகிறார்கள். என்ன காரணம்? அதிக விசேஷமில்லை இவள் முத்துக்கருப்பன், பிச்சைக்காரன் இவர்களுடைய சிலைக்குமுன் செத்திருந்தாள். இவர்கள் இருவரும் ரொம்பக் கொடூரமாய் மரித்தவர்கள். முத்துக்கருப்பன் கொலைசெய்யப்பட்டான். பிச்சைக்காரன் ஜெயிலிலிருந்து தப்பி ஓடும்போது போலீஸ்காரனால் துப்பாக்கியால் சுடப்பட்டான். அவளைக் கொன்றது அந்த இரண்டு மனுஷருடைய ஆவிதான் என்று நினைத்து அவளுடைய ஆவியை வணங்குகிறார்கள். அவள் ஒரு மரத்தின்கீழ் மரித்தாள். அந்த இடத்தில் வணக்கம் இன்னும் நடக்கிறது. அங்கே ஒரு குவியல் மண்மட்டும் கூட்டப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை அதே ஊரில் கருப்பசாமியையும் வணங்குகிறார்கள். அவன் ஒரு கலகத்தில் கொல்லப்பட்டான். அந்த வணக்கத்தில் ஆடுகிறவன் 'வேலையா' என்பவன்.

வட திருநெல்வேலியில் ஓரிடத்தில் ஒரு கழுதையின் ஆவியை வணங்குகிறார்கள். 'பிறவித் துன்பம்' என்னும் ஓர் துக் கோட்பாடே இவ்வழக்கத்துக்கு ஆதாரம். ஏன் என்று விசாரிக்கும்போது, அந்த மிருகம் பூர்வீக சொரூபத்தின் அருகில் செத்திருந்தாள் என்று சொல்லுகிறார்கள்.

இந்த ஆவேச வணக்கத்தைச் சேர்ந்த சடங்குகள் பயங்கரமானவை மாத்திரமல்ல, பார்க்கவும்கேவலமானவை. சில இடங்களில் பேயாடிகள் ஸ்திரீகள். அவர்கள் பொதுவாய்க் குடித்து, வெறித்து, சுற்றிச்சுற்றி ஆடுகிறார்கள். ஆட ஆட ஆட்டம் குடியால் அதிகரிக்கிறது. கடைசியில் அவள் வாயிலிருந்து, சுவாமியுடைய வார்த்தை வெளியாகிறது என்கிறார்கள். கிடாயைக் கொண்டுவந்து கூர்மையான கத்தியால் தலையை வெட்டி, ஆட்டின் தொண்டையிலிருந்து வரும் இரத்தத்தை பேயாடி குடித்து புத்திமாறாட்டமாகிறான். தங்கள் வியாதி சுகப்பட அல்லது தங்களுக்குத் தேவையானதைப் பற்றி யாருக்கு என்ன பலி செலுத்தவென்று வாய்க்கேள்வியாய்க் கேட்கிறார்கள். பேயாடி கேட்கிறதைக் கொண்டுவந்து செலுத்துகிறார்கள். இரண்டொரு இடத்தில் பேயாடி அந்த இடத்திலே பார்ப்பவர்கள் அதிர செத்துவிழுந்ததாகக் கேள்வி.

நரபலியைச் செலுத்துவதால் ஆவி மறை பொருளை வெளிப்படுத்தும் என்ற எண்ணமாய், ஏறக்குறைய 15 வருஷங்களுக்குமுன் சிரிவைகுண்டத்திற்குச் சமீபமான ஓரிடத்தில் 12 வயதுள்ள ஒரு சிறுவனைக் கொன்று, பின்பு அவனுடைய தலையில்லா பிரேதத்தை ஒரு பிராமணனுடைய கொல்லையில் எறிந்திருந்தது.

இப்படி சாத்தானுக்குப் பயப்படுவது சரியல்ல. நமது ஆண்டவர் சாத்தானை வென்றவர். ஆகையால் நாம் சாத்தானுக்குப் பயப்படவேண்டியதில்லை. நாம் அப்படிப்பட்ட கிரியைக்கும், தப்பெண்ணத்திற்கும், அப்படிப்பட்டவர்களின் சம்பந்தத்திற்கும் விலகி இருப்பது தேவனுக்கு மகிமை

---

## உள்நாட்டு ஊழியர் கடிதம்

தெய்வ கிருபையை முன்னிட்டு, கடந்த இரண்டு மாதங்களிலும் (மார்ச், ஏப்ரல்) S. P. G. சங்கத்தின் எல்லைக்குள்பட்ட ராதாபுரம் சேகரத்திலும், C. M. S. சங்கத்தின் பாகமான பண்ணிகுளம் சர்க்கிளிலும் நம் சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்று, பல முக்கியமான சபைகளுக்குள்ளும் புறமதஸ்தருக்குள்ளும் ஊழியம் நடப்பித்தேன்.

ஷை சேகரங்களுக்குள் வேலை ஆரம்பிக்குமுன்னர், மருதகுளம் கனம்: கிரிவித் ஐயரவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதின்பேரில் மார்ச்சுமீ 9ம், 10-ம் தேதிகளில் அவ்விடம் நடந்த ஆனந்தப் பண்டிகைக்குச் சென்று, அங்கு கூடின திரளான சபையாருக்கு ஆவிக்குரிய கூட்டமும் சுவிசேஷ பிரபல்யக் கூட்டமும் இருமுறை நடத்தியதுமன்றி, சாயங்காலம் திரள்கூட்டமான சபையார் தேவ ஊழியருடன் பக்கத்து இரு சேரிகளிலும் சுவிசேஷத்தைக் கூறி அறிவித்தோம். சபையாருடைய ஆத்திரமும் வாஞ்சையும் அவ்விரண்டு சேரியிலுள்ள ஜனங்களும் கூடிய சீக்கிரம் சபையில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதாய் அன்றுதானே வாக்குப்பண்ணும்படி எவியழுப்பிவிடக் காரணமாயிருந்தது. அந்த நாளில் அவர்கள் காட்டிய அன்பையும் வைராக்கியத்தையும் தளரவிட்டுவிடாமல் தொடர்ந்து வேலைசெய்வார்களானால் சீக்கிரத்தில் பலன் கிடைக்குமென்று நம்ப இடமுண்டு. சுவிசேஷ பிரபல்ய வேலையில் உற்சாகம் காட்டிச் சபை சபகுசாவிலும் முன்னிற்கும் என்னும் மாறாத சத்தியத்திற்கு மருதகுளம்



சபை ஓர் சிறந்த திருஷ்டாந்தமாகும். காலஞ்சென்ற கனம்: பாக்கியநாதன் உபதேசியாரவர்கள் அம்மாளும் நம் மிஷனெரி கனம்: சாமுவேல் பாக்கியநாதன் ஐயர் அவர்கள் தாயாருமான நம் சங்க நேயர் தன் மரணப் படுக்கையில் தன் மரண சாதனத்தில் நம் சங்கத்திற்கு தன் சொத்தின் ஓர் பாகத்தை எழுதி வைத்திருப்பது நாம் நன்றியறிதலோடு அவர்களை நினைவுகூறவும் பலர் அவர்கள் முன்மாதிரியைப் பின்பற்றவும் ஏதுகரமான ஓர் யத்தனமென்கலாம்.

மார்ச்சுமீ 13உ கூடங்குளம் கனம்: ஏசுதாஸ் ஐயரவர்களின் அன்பான அழைப்புப் பெற்று, 14உ காலை கூடங்குளம் போய்ச் சேர்ந்து கனம்: ஐயர் அவர்களோடு கலந்து சுற்றுப்பிரயாண ஒழுங்குசெய்து கூடங்குளத்தில் மூன்று நாள் சபையிலும் புறமதஸ்தருக்குள்ளும் ஊழியம் நடந்தது. சபையில் இந்திய மிஷனெரி சங்கத்தின் விஷயமாய் புது அறிவும் அனலும் உண்டானதுமன்றி, சபையிலுள்ள உற்சாகமடைந்த பலரோடும் கனம்: ஐயரவர்களோடும் சேர்ந்து, இரண்டு இரவுகளில் மேலூரிலும் கீழூரிலும் மத்யஸ்தானங்களில் கீதவாத்தியங்கள் பாடல்களுடன் சுவிசேஷத்தைக் கூறியறிவித்தோம். நம் சபையிலிருந்து மறுதலித்துப் போனவர்களும் மற்றவர்களும் உணர்வோடு வசனத்தைக் கேட்டதுமன்றி, திகைத்து சம்பாஷித்த சுவிசேஷ பிரசங்கியாரிடம் சிலர் நல்வாக்கு சொன்னதாகவும் அறிந்து கர்த்தரைத் துதித்தோம். பின்னும் மூன்று நாட்களில் கனம்: ஐயரவர்களுடன் காமனேரி, விஜயாபதி, ஆவுடையாபுரம், திருஅம்பலபுரம், கனகங்குளம் முதலிய சபை பள்ளிக்கூடங்களை சந்தித்து வேலைமுடித்து, அடுத்த வாரம் யாக்கோபுபுரம் பாஸ்றறேற்றைச் சந்தித்து கனம்: வேதமுத்து ஐயர் அவர்கள் தயவாய் ஒழுங்குசெய்திருந்தபடி, பண்ணையூர், யாக்கோபுபுரம், செம்பிகுளம், ஆவணாகுளம், மாடநாடான்குடி முதலிய சபைகள் பள்ளிக்கூடங்களிலும் வேலைசெய்ததுமன்றி யாக்கோபுபுரம்சபையின் சுயாதீன சுவிசேஷ பிரசங்கக்கூட்டத்தாரோடு ஓய்வுநாள் சாயங்காலம் பக்கத்துக் கிராமத்தில் கீதவாத்தியங்களுடன் பாடிச்சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தோம். திரும்பும் வழியில் ராதாபுரம் மிஷன் பள்ளிக்கூடத்தில் ஆண்களும் பெண்களுமான 70 பிள்ளைகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, தோர்ணக்கல் போர்டிங்பிள்ளைகளின்காரியத்தையும் விவரித்ததின்பேரில் இந்துக்களான அந்தப் பிள்ளைகள் சந்தோஷமாய் ஓர் உண்டியப்பெட்டி தங்கள் பள்ளிக்கூடத்தில் வைத்து வாரம்தோறும் அதில் காணிக்கை சேர்த்து அதை ஒழுங்காய் வருஷத்துக்கொருமுறையாவது இருமுறையாவது தோர்ணக்கல் பிள்ளைகளுக்கனுப்ப வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். தலைமை உபாத்தியாயர் அவர்களும், மற்ற உபாத்திமார் உபாத்திச்சியும் அதில் சிரத்தை யெடுப்பதாயும் வாக்குப்பண்ணியிருக்கிறார்கள்.

பண்ணிகுளம் சர்க்கிள் முதலாளியும் திருநெல்வேலி ஜில்லா C. M. S. ஆலோசனை சங்கத்தின் பிரதிமுதலாளிகளில் ஒருவருமான கனம். M. ஆசீர்வாதம் ஐயர் அவர்கள் கனம். காரியதரிசி அவர்களுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டபடி ஏப்ரல்மீ 6உயாகிய பரிசுத்த வாரத்தின் திங்கள் இரவு புறப்பட்டு கடம்பூர் போய், செவ்வாய் காலை பண்ணிகுளம் தவச உற்சவ ஆராதனைக்கு ஆஜராகி, ஷை கூட்டங்களில் ஓர் ஆவிக்குரிய கூட்டமும் ஓர் சுவிசேஷ பிரபல்யக் கூட்டமும் நடத்தியபின்னர் சர்க்கிளின் பல முக்கிய சபைகளை சந்தித்தேன் சுவிசேஷ பிரபல்யக் கூட்டத்தில் பீடம் வகித்த கனம். பிரதிமுதலாளியவர்கள் தங்கள் சர்க்கிளில் சுய ஆதரவுக்கு ஜனங்கள் தலைக்கு 6 அணு வீதமும் இந்திய மிஷனெரி சங்கத்துக்கோ தலைக்கு ½ பை வீதமும் காணிக்கை செலுத்தியிருப்பது எவ்வளவோ குறைவென்றும் அதிலும் சர்க்கிள் முழுவதிலும் ஆசாமிகள் தவிர தெற்குமைலோடை சபைமட்டும் உதவிசெய்திருக்க, மற்ற சபைகள் அநேகமாய் ஒன்றும் உதவிசெய்யாதிருப்பது துக்கமான காரியம் என்றும் சபையார் மனதில் பதியத்தக்கதாய் பேசினார்கள்.

பெரிய வியாழக்கிழமை இரவு தெற்குமயிலோடை சபையில் பரி. நற்கருணையும் பிரசங்கமும், பெரிய வெள்ளிக்கிழமை காலை 5-மணிக்கு ஆராதனையும் பிரசங்கமும் மதியம் 3-மணி நேர ஆராதனையும் கிறிஸ்து சிலுவையில் சொன்ன 7 வார்த்தைகளின்பேரில் பிரசங்கமும் நடத்தி, 13உ திங்கள் துரையூர் தவச உற்சவத்துக்கு சென்று, அங்கு கூடின சபையாருக்கும் தேவ ஊழியருக்கும் சுவிசேஷ பிரபல்ய வேலையின் அவசியத்தை எடுத்துக்காட்டினபின், கசவன்குன்று, செம்மபுதூர், தம்பாபிள்ளையூரணி, புங்கவர்நத்தம், பசுவந்தனை முதலிய கிராமங்களை சந்தித்து, சபை பள்ளிக்கூடங்களில் வேலைசெய்து, 18உ சனி கல்லத்திக்கிணற்றில் வந்துசேர்ந்து அன்றிரவும் ஞாயிறிலும் ஊழியம் செய்து, கடம்பூர், காளாம்பட்டி, கட்டாலங்குளம், ஜீவனூர், சவலாப்பேரி, கயற்றூர், ராஜாபுதுக்குடி, வேப்பங்குளம் முதலிய சபைகளை சந்தித்து ஊழியம் செய்தேன். பலனாக கடம்பூர் Mr. பொன்னுசாமி தேவர் அவர்கள் தான் மிஷனுக்கு வாடகைக்குவிட்டிருந்த ஓர் வீட்டின் மாச வாடகை ரூ. 1—8 ஒழுங்காய் நம் சங்கத்துக்கு காணிக்கையாக செலுத்துவதாயும், கயற்றூர் பாகவதர் மக-ா-ா-ஸ்ரீ ஐயாத்துரை பிள்ளையவர்கள் தன் பெயரால் ஓர் போர்டிங் பிள்ளையை ஆதரிப்பதாயும், பல சபைகளில் மாதந்தோறும் ஒழுங்காய் ஜெபித்து பத்திரிகை வாசித்து காணிக்கை சேர்ப்பதாயும் வாக்குப்பண்ணினார்கள். தவச உற்சவத்தில் தெற்கு மயிலோடை உபதேசியார் அவர்கள் ஓர் கோழியும் 9 குஞ்சுகளும் வாங்கி, அந்தக்குஞ்சிகளை 9 பேரிடம் கொடுத்து, இந்திய மிஷனெரி சங்கத்துக்காக வளர்த்துவிட ஒழுங்குசெய்ததுமன்றி, இன்னும் அந்தக் கோழியை இருமுறை அடைவைத்து அது பொரிக்கும் குஞ்சுகள் அனைத்தையும் அவ்வாறே சபையிலுள்ள பலரிடம் கொடுத்து நம் சங்கத்துக்கென்று வளர்க்கச்செய்து உத்தேசம் ஒரு வருஷத்தில் ஓர் கோழியைக்கொண்டு ரூ. 20 க்குக் குறையாமல் காணிக்கை சேர்த்தனுப்பக்கூடும் என்கிறார்கள். இது அநேக சபையாரும் ஊழியரும் பின்பற்றத்தக்க சுலபமான முறையன்றோ!

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

கடந்த ஏப்ரல் மாதக் கடைசியில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்களுடன் நானும் கனம். D. S. தாவீது ஐயரவர்களும் தெலுங்கு C. M. S. லாக்காவைச் சேர்ந்த எலூர் என்ற பட்டணத்துக்குப் போயிருந்தோம். அங்கு வந்துகூடிய தேச ஊழியக்காரர் முதலியவர்களுக்கு ஆவிக்குரிய கூட்டங்களும், போதனைகளும், பாடக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. நாங்களும் சில ஐரோப்பிய மிஷனெரிமாருமாக கூட்டங்களை நடத்தினோம் C. M. S. ஐச் சேர்ந்த ராகவாபுரம், பேஜ்வாடா, எல்லூர் டிஸ்டிரிக்கட்டுகளிலுள்ள தேவ ஊழியரும் அவர்கள் ஸ்திரிகளுமான உத்தேசம் 250 பேர் தினம் தினம் நடத்தப்பட்ட பலகூட்டங்களுக்கும் வந்திருந்து, படிப்பிக்கப்பட்ட பாடங்களையும் சொல்லப்பட்ட போதனைகளையும் கவனமாயும் வியக்கப்படவேண்டிய விருப்பத்துடனும் கேட்டார்கள். இக்கூட்டங்களுக்கு அவர்கள் ஏற்கனவே ஜெபத்தில் நன்றாய் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்ததாய்த் துலங்கினது. அவர்கள் பல கூட்டங்களுக்கும் கிரமமாய் வந்து கூடியும், கூட்டத்தில் காட்டிய ஒழுங்கும் அமைதலும், சொல்லப்பட்டவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கவனமும், படித்துக் கொடுக்கப்பட்டவைகளைக் கவனித்து குறிப்புகள் பண்ணிக் கொண்ட விதமும், பாடங்களைத் தாங்களே முன்னால் வாசித்து குறிப்புகள் எழுதிக்கொண்டு வரவேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளைகளை அவர்கள் ஆவலுடனும் திட்டவட்டமாயும் நிறைவேற்றிக்கொண்டுவந்த விதமும், அவர்கள் ஜெபம் செய்த மாதிரியும் மிகவும் எழுப்புதலுக்குரியதும் கவனிக்க வேண்டிய நல்வாஞ்சைக்குப் போர்ந்த அடையாளங்களாயுமிருந்தன இவ்விதமாய் ஜனங்களை நன்றாய் ஆயத்தப்படுத்தி வைப்பதில் கனம் டர்னர் ஐயரவர்கள் எடுத்திருந்த அரும்பிரயாசமும் உண்மையான வாஞ்சையும் மிகவும் வியக்கப்படத்தக்கது. இப்படி ஆயத்தப்படுத்தப்பட்டவர்கள் கூட்டங்களிலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்களித்தார்களென்பது அதிசயிக்கப்படத்தக்க காரியமன்று.

ஒவ்வொரு தினமும் காலையில் காலை ஆராதனையும் பிரசங்கமும் நடந்தது. மிஷனெரிமாரில் குறிக்கப்பட்ட யாராவது ஒருவர் பிரசங்கம் செய்தார் நான் மூன்று நாள் பிரசங்கித்தேன். பிற்பாடு கூட்டங்களுக்காகவும் மற்றும் விஷயங்களுக்காகவும் ஜெபிக்கும் மன்றாட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்பின் அதைத் தொடுத்தாற்போல் வேதம் எப்படி வாசிக்கிறது, படிக்கிறது என்பதையிட்டு அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்திலிருந்து சில மாதிரிப் பாடங்கள் மகாகனம் அத்தியட்சரவர்கள் படிப்பித்தார்கள். அதன்பின் திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்தப்படுகிறவர்களுக்குப் படிப்பிக்கப்படவேண்டிய பாடங்களையும், அவைகளைப் படிப்பிக்கவேண்டிய விதத்தைக்குறித்த பாடங்களும், சாயந்தரம் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தப்படுகிறவர்களுக்குப் படிப்பிக்கப்படவேண்டிய பாடங்களையும் படிப்பிக்கும் விதத்தையும் குறித்த பாடங்களும் மகாகனம் அத்தியட்சரவர்களால் நடத்தப்பட்டன. அதன்பின் கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பாடங்கள் கனம் D. S. தாவீது ஐயரவர்களாலும், அதன்பின் ஸ்திரீகளுக்குக் கூட்டம் ஐரோப்பிய துரைசானிமாராலும் நடத்தப்பட்டது. இவைகளுக்குப்பின் இரவில் சாயந்தர ஆராதனை நடத்தப்பட்டது, மகாகனம் அத்தியட்சரவர்கள் பிரசங்கஞ்செய்தார்கள்.

இக்கூட்டங்களைக்கொண்டு கர்த்தர் தமது ஊழியக்காரர் பலரை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார். உயிர்ப்பிக்கப்படாதிருந்த பல ஊழியர் ஆத்தும ஜீவனடைந்தார்கள். சிலர் தங்களைத் தேவ ஊழியத்துக்கென்று விசேஷித்தபிரகாரமாய்ப் பிரதிஷ்டைசெய்ய ஏவப்பட்டார்கள். தங்கள் ஊழியத்திலடைந்த அபஜெயத்தாலிளைப்படைந்து சோர்ந்துபோயிருந்த சிலர் அனல்மூட்டப்பட்டார்கள். துர்ப்பழக்கங்களடைந்த பலர் அவைகளை விட்டுவிடத் தீர்மானித்தார்கள். கடைசி நாளில் ஸ்தோத்திரக் கூட்டம் கனம் டார்னர் ஐயரவர்களால் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் கூடிய உத்தேசம் 200 பேருக்குள் கிட்டத்தட்ட யாவரும் கள் சாராயம் குடிப்பது தப்பு, விலக்கப்படவேண்டிய பாவம், அது நம்மவர்கள் மத்தியிலிருந்து நீக்கப்பட்டுப்போக சகல பிரயத்தனமும் செய்யவேண்டியதே என்றொப்புக்கொண்டதுமட்டுமல்ல, தாங்கள் அவைகளை உபயோகிக்காமல் கட்டோடே நிறுத்திப்போடுவோம் என்று ஒப்புக்கொண்டார்கள். இந்தத் தெலுங்குநாட்டில் குடிவெறியடைந்திருக்கும் விருத்தி பயங்கரப்படத்தக்கது. சகல ஜாதிகளும் வெட்கமற்று சாராயத்தை உபயோகித்துவருகிறார்கள். மால, மாதிக ஜாதியாருக்குள்ளோ பின்னே கேட்கவேண்டியதில்லை. குடிக்காத மனுஷனைக் காண்பது அபூர்வத்திலும் அபூர்வமே. அவர்களுக்குள் கள்ளில்லாத கலியாணமில்லை சாராயம் குடிக்காவிட்டால் சந்தோஷமில்லை. குற்றமென்றறியாமலும் உணராமலும் உணர்த்தப்படாமலும் குடித்துவந்த பலர் குருக்களிலுமுண்டு. அயர்ந்து நித்திரை செய்யும் பிள்ளைகளை அழ அழ எழுப்பிவைத்துக்கொண்டு அமுதுபோல கள்ளைக் குடிக்கக் கொடுக்கும் வழக்கம் சகஜம். இவ்வளவு சகஜமாய் இத்தீய பழக்கத்துக்கடிமைப்பட்டிருந்தவர்களுக்குள் இத்தனை ஏராளமான பேர் அதை ஒரு தீய பழக்கமாய் நீக்கப்படவேண்டிய கேடாகவும் ஒப்புக்கொண்டதே ஒரு பெரிய காரியம். அதை விட்டுவிட தாங்களே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டதே கர்த்தருக்குத் துதிசெலுத்தவேண்டிய ஒரு ஆச்சரிய மாறுதலுக்கு அடையாளம். ஒப்புக்கொண்டபடி நிறைவேற்றவேண்டிய கிருபையும் சக்தியும் கர்த்தர் அருளுவாராக.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்கு எழுத்து வேலையிலும் கணக்கு விஷயங்களிலும் மிகவும் உதவியாயிருந்த மைற்றர் Mr. மனுவேல் அவர்கள் ஈஸ்டர் வாரம் வெள்ளிக்கிழமை சாயந்தரம் தங்கள் ஜீவ ஓட்டத்தை முடித்தார்கள். அவர்களுடைய சகோதரன் சகோதரியான கனம் முத்து சுவாமியவர்களையும் அவர்கள் அம்மாளையும், பின்னும் அவர்களுக்குரியவர்களையும் கர்த்தர் தாமே ஆற்றித்தேற்றும்படி ஜெபிக்கக் கேட்கிறோம்.

S. பாக்கியநாதன்.

Printed at the C M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

APRIL, 1914. Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 20 JUL 1914

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 4] ஏப்ரல்மீ 1914 [விலை பை 3

## திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்.

### ஆபீஸ் விலாசம்:

**அடைக்கலபுரம், பாளையங்கோட்டை.**

மக-ள-ள-ஸ்ரீ- அப்பாசாமி அவர்கள், முதலாளி.
Mr. ஜே. அன்புடையான், B.A., L.T. காரியதரிசி.
,, ஜி. தேவதாஸ், B.A., L.T. பொக்கிஷதார்.
,, வி. சாமுவேல், B.A. பொக்கிஷ காரியதரிசி.
,, செல்வநாயகம், உழைப்போர் ஐக்ய காரியதரிசி.
,, வி. எஸ். காலிஸன், பத்திரிகை மானேஜர்.

சங்கத்தின் பொதுவிஷயமான சகல கடிதங்களும் நடபடிக்கைகளும் காரியதரிசிக்கும், காணிக்கை நன்கொடை மணியாடர் முதலியவை பொக்கிஷதாருக்கும், பத்திரிகை விஷயமான கடிதங்கள், பிரபந்தங்கள், சந்தா முதலியவை பத்திரிகை மானேஜருக்கும் அனுப்பப்படவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா 3 அணா. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும். பத்திரிகையின் சந்தா எப்போதும் முன்பணமாக அனுப்பப்படவேண்டும்.

## CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 25 |
| Missionary Meditation ... ... ... ... | 27 |
| From the Telugu Field ... ... ... | 28 |
| Home Missioner's Letter ... ... ... | 29 |
| Conversion (Continued) ... ... ... | 30 |
| Missionary News ... ... ... ... | 32 |


## பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 25 |
| மிஷனெரி தியானம் ... ... ... | 27 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 28 |
| உள்நாட்டு ஊழியரின் கடிதம் ... ... ... | 29 |
| குணப்படுதல் (தொடர்ச்சி) ... ... ... | 30 |
| மிஷனெரி வர்த்தமானம் ... ... ... | 32 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

ஈஸ்தர் பண்டிகை.

அருமை இயேசுவின்பாடு மரணங்களைப் பல நாட்களாய் தியானித்துவந்த நாம் அருள்நாதர் சாவின் கூரை ஒடித்து உயிரோடெழும்பின வெற்றியின் விசேஷத்தைக் கொண்டாடக் கிருபை பெற்றோம். இந்த வெற்றி சாமானிய வெற்றி அன்று. இப்பூலோகத்தில் பலமார்க்கங்களையும் மதக்கொள்கைகளையும் பார்க்கிறோமே. இம்மதங்களை ஸ்தாபித்தவர்களும் அவைகளின் உபதேசங்களை உற்பத்திபண்ணினவர்களும் மரித்தார்கள் — உயிரோடெழும்பினதில்லை. மகம்மது நபி மரித்தார் — உயிரோடெழும்பினாரா? புத்தன், கன்பூசியஸ், விஷ்ணு, சிவன் முதலியோர் மரித்தார்கள்—உயிரோடெழும்பினார்களா? அருமை இயேசு மாத்திரமே மரித்தும் உயிர்த்த இரட்சகராயிருக்கிறார். மரித்து மண்ணோடு மண்ணாய்க் கிடக்கிற மனுஷாட்களின் மார்க்கக் கொள்கைகளை ஊர்ஜிதப்படுத்தும்படி அவைகளின் அனுசாரிகள் எடுத்துக்கொள்ளும் பிரயாசை அற்பமா-சொற்பமா? ஆதலால், உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் இராஜாக்களுக்கு அதிபதியுமான அருமை இயேசுவைப் பிரஸ்தாபிக்கிறவர்களே! நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. மற்றெந்த மதஸ்தருக்குமில்லாத மகிமை நமக்கும் நமது நாதருக்கும் உண்டு. நாம் வழிபடும் நாயன் உயிர்த்தெழுந்த கர்த்தர் அல்லவோ?

1913—1914 வரவு.

இம்மாச சஞ்சிகையில் நமது சங்கத்தின் பொக்கிஷஸ்திதியை அறிய பேராவலுற்றிருக்கும் பெருங்கூட்டத்தாரான நமது நண்பர் "அவருடைய மகிமைபொருந்திய நாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக ஆமென்; ஆமென்" என்று ஸ்தோத்திர கீதம் பாடக் கருணைபுரிந்த கருணாகரருக்கே எந்நாளும் சகல கனமும், மகிமையும், புகழும் உண்டாவதாக. நாளது வருஷத்தில் நமது பொக்கிஷதாரிடம் வரவு சுமார் ரூ. 15,200. இத்தொகை முந்தின வருஷத்து வரவைப்பார்க்கிலும் ரூ. 3,800 ஜாஸ்தி. முந்-

தின வருஷ வரவில் தோர்ணக்கல் ஆலயக்கட்டுமான நிதி ரூ. 2,500 சேர்ந்திருந்ததுபோல், நாளது வருஷ வரவிலும் ஆலயக்கட்டுமானத்திற்கென்ற சேகரமான ரூ 3000 அடங்கியிருக்கிறது. இன்னும் விலையாக்கப்படா ஆபரணங்களும், அனுப்பப்பட்ட தொகைகளின் விபரம் பின்னாலே தெரிவிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்ட தொகைகளும் சில இருக்கின்றமையால், நமது சங்கத்தின் 1913—1914 வருஷ பொது நிதி எவ்வளவு என்றும், ஆலயக்கட்டுமான நிதி எவ்வளவு என்றும், திட்டமான தொகைகளை இம்மாச சஞ்சிகையில் தெரிவிக்கக்கூடாதிருக்கிறோம். மேலும், சென்ற வருஷத்தில் போல் நாளது வருஷமும் நமது அத்தியக்ஷரவர்களுக்கு நேரில் அனுப்பப்பட்டிருக்கும் தொகைகளும் இருக்கலாமே. ஆகவே, இவ்வருஷ வரவு நமது சங்கத்தின் அங்கங்கள் அனைவரும் கர்த்தருக்குள் களிகூர்ந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டிய விஷயமே. நாளது வருஷ செலவின் திட்டமான கணக்குகள் நமது பொக்கிஷதாரிடம் வந்து சேராதபடியால், அவைகளை இங்கு இப்போது தெரிவிக்க மார்க்கமில்லை.

**நன்கொடைகள்.**

தோர்ணக்கல் ஆலயக்கட்டுமானம் கிறிஸ்தவ சிநேகிதருக்கு மாத்திரமல்ல, புறமதஸ்தரான சில நண்பருக்கும் அதிக ஆனந்தத்தைக் கொடுத்திருக்கின்றது. அவர்களில் ஒருவர் ரூ. 22-ம், இன்னொருவர் ரூ. 20-ம், மற்றுமொருவர் ரூ. 10-ம் நன்கொடை அளித்திருக்கின்றனர். நமது நேயரில் மூவர் ஒரேதடவையில் ரூ. 100 காணிக்கை அனுப்பி ஆயுள் கால அங்கங்களாகியிருக்கின்றனர். இலங்கை நண்பர் ஒருவர் தமது அருமைக் குழந்தையின் கழுத்துக்காரையையும், திருநெல்வேலியிலுள்ள சில ஸ்திரீகள் தங்கள் ஆபரணங்களையும் காணிக்கையாகப் படைத்திருக்கின்றார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய் கொண்டுவந்தார்கள்".

**தோர்ணக்கல் ஆலயம்.**

சில வருஷங்களுக்கு முன் நாம்கட்ட யோசித்த தோர்ணக்கல் ஆலயக்கட்டடநிதி கர்த்தாவின் கிருபையால் கைகூடிவருகிறது. யூதாவின் பிரபுவும் யேகோவாவின் தாசனுமான சொருபாபேல் இரண்டாம் தேவாலயத்தைக் கட்டுகையில் "அற்பமான ஆரம்பத்தின் நாளை யார்தான் அசட்டைபண்ணலாம்?" என்று தீர்க்கதரிசி கூறினார். திருநெல்வேலிக் கிறிஸ்தவ சகோதரரே! நாம் கட்டும்படி கர்த்தருக்குள் நிச்சயித்த தோர்ணக்கல் ஆலயத்தைக்குறித்தும் இதேபிரகாரம் சொல்லலாம் அல்லவோ! நமது முதலாம் மிஷன் ஸ்தானம் ஓர் அத்தியக்ஷாதீனத்தின் சமஸ்தானமாகுமென்றும், நாம் கட்டயுத்தேசித்த தேவாலயம் அத்தியக்ஷர் தேவாயமாகுமென்றும் கனவிலும் நினைத்தோமா? "அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது". நமது மிஷன் உட்பட மூன்று மிஷன்கள் சேர்ந்துள்ள தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்தார் ரூ. 5000 கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்களின் சிநேகிதர் ரூ 5000 இவ்விஷயமாய் நன்கொடையளிக்கத் தயாராயிருக்கிறார்கள். திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களாகிய நாம் இதுவரை ஆலயக்கட்டுமானத்திற்கென்று படைத்திருக்கும் காணிக்கை சுமார் ரூ. 5000 ஆகிறது. இன்னும் ரூ. 5000 தேவை. இத்தொகை பெரிய பர்வதமோ? "பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? சொருபாபேலுக்கு முன்பாக சமபூமியாவாய். பலத்தினாலும், பராக்கிரமத்தினாலுமல்ல; என் ஆவியினாலேயே ஆகும்" என்று இஸ்ரவேலைத் தைரியப்படுத்தின கர்த்தரின் நாமம் இம்மானுவேல் அல்லவோ? அவர் தன்மை இலட்சணங்களிலும், வாக்கு வரங்களிலும், மகிமை மகத்துவங்களிலும் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆதலால், திருநெல்வேலியே! சொருபாபேலே! திடன்கொள்—சோர்ந்துபோகாதே. "பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் சொருபாபேலின் கையிலிருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது".

**நன்கொடை சாமான் விற்பனை.**

கடந்த வருஷத்தில் நடந்ததுபோல நாளது வருஷத்திலும் இந்தியமிஷனெரி சங்கத்திற்காக ஓர் நன்கொடை ஜாமான் விற்பனை (Fancy Sale) ஜூலை 9உ வியாழக்கிழமை நடத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. சாதாரணச் சட்டைகள், பாவாடைகள், ரவிக்கைகள், பூத்தையல்கள், தைத்த கைலேஞ்சுகள், மேசைத்துப்பட்டிகள், கம்பளிநூலினால் செய்யப்பட்டவைகள், ஞானஸ்நான உடுப்புகள், கிண்ணிப்பெட்டிகள், பாய்கள், விசிறிகள், நார்கயிறுகள், தோண்டிப்பட்டைகள், பழவர்க்கங்கள், கருப்புக்கட்டி, பலகார முதலிய தின்பண்டங்கள் முதலியன எளிதில் விலையாகக்கூடும். நண்பர் யாவரும், விசேஷமாய் உழைப்போர் ஐக்ய அங்கங்களும்இது விஷயத்தில் ஏற்கனவே முயற்சிபண்ணவும், உதவி செய்யவும் அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்விற்பனையில் சேகரமாகும் தொகை தோர்ணக்கல் மிஷன் போர்டிங் பாடசாலைகளிலுள்ள ஆதரிப்போர் இல்லாப் பிள்ளைகளின் ஆதரவுக்கென்று அனுப்பப்படும். "எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதலடைந்ததோ அவர்கள் எல்லாரும் (தேவாலயக்கூடாரத்திற்கு வேண்டிய) வெள்ளாட்டு மயிரைத் திரித்தார்கள்" என்று இஸ்ரவேல் பெண்களைக் குறித்து வேதபுஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது.

**காலஞ்சென்ற Mrs. தேவதாஸ் அம்மாள்.**

நமது சங்கப் பொக்கிஷதாரின் நேச மனைவி Mrs தேவதாஸ் அம்மாள் பிரசவத்திற்குப் பின்னுண்டான பெலவீனத்தால் திடீரென இம்மையின் ஓட்டத்தை முடித்தது மிகவும் துக்கமான விஷயம். இம்மாது மெற்றிக்கிலேஷன்வரை படித்து, நல்ல இங்கிலீஷ் அறிவுடையவர்களாயிருந்ததால் தம் கணவனுக்கு நமது சங்க விஷயமாயும் பல மிஷன் காரியாதிகள் விஷயமாயும் வலதுகைபோல் உதவிபுரிந்துவந்தார்கள். நல்ல குணசீலி. தாய்மார் ஜெபக்கூட்டத்திற்குத் தவறமாட்டார்கள். இவர்களின் அந்தரங்க தருமமும், அடக்க ஒழுக்கமும், மாயமற்ற தாழ்மையும் யாவரும் பின்பற்றத்தக்கது. இம்மரணத்தினால் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் நமது பொக்கிஷதாருக்கும், அவர்களின் பிள்ளைகள், இனஜன பெந்துக்களுக்கும் கர்த்தர் தாமே ஆறுதலைக் கட்டளையிட ஜெபிப்போமாக.



## மிஷனெரி தியானம்.

"இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு; ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?" யோவான் 6: 9.

மேற்கண்ட வார்த்தைகள் பரி: அந்திரேயாவினால் சொல்லப்பட்டவை. இவர் பன்னிருவரில் ஒருவராய்மட்டுமல்ல, திருச்சபை கொண்டாடும் பரிசுத்தவான்களில் முதல்வராயும், தம் சகோதரனாகிய பரி. பேதுருவை ஆண்டவரண்டை வழிநடத்தின முதல் சுவிசேஷகராயும், அவர்மூலமாய் பெந்தெகொஸ்தே சபையின் அஸ்திபார காரணராயுமிருப்பதால், நம் திருச்சபை இவரது திருநாளைச் சுவிசேஷ பிரபல்ய மத்யஸ்த மன்றாட்டு நாளாகவும் ஆசரித்துவருகிறது தகுதியே. இவர் வாயிலிருந்து பிறந்த மேற்கண்ட வார்த்தைகளிலிருந்து சுவிசேஷ பிரபல்ய முயற்சியின் சம்பந்தமாய் சில குறிப்புகளைத் தியானிக்க தேவாவி அருள்புரிவாராக.

1. **சந்தர்ப்பம்.** பரி. அந்திரேயா இவ்வார்த்தைகளைச் சொன்ன சந்தர்ப்பம் கவனிக்கப்படத்தக்கதே. இயேசு எருசலேம் பஸ்காவுக்குப் போகும் திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகி முதலாவதாக தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று பிலிப்புவினிடம் கேட்டார். அவர், "இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும் இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" என்று சந்தேக விடை பகர, அதையடுத்தாப்போல் அவர் சீஷரில் ஒருவனும் சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா இவ்வார்த்தைகளைப் பகர்ந்தார். இவரும் சற்று சந்தேகமான விடை பகர்ந்தபோதிலும் தன்னால் ஏன்றதை செய்ய ஆசைப்பட்டவர். முழுவதும் வீணென்று விட்டுவிடாமல் ஒரு பையனையும் அவன் கையிலுள்ள அப்பங்களையும் மீனையும் ஆண்டவரிடம் கொண்டுவந்துவிடுகிறார். இதுவே இவரது விசேஷ ஆவி. முன் சீமோனை ஆண்டவரிடம் கொண்டுவந்தது போலும், பின்னால் கிரேக்கரை ஆண்டவரிடம் கொண்டுவந்ததுபோலும், இப்போ அப்பமும் மீனுமுள்ள பையனை ஆண்டவரிடம் கொண்டுவந்தார். நமக்கும் சுவிசேஷ பிரபல்ய வேலையில் ஆத்திரமிருந்தால் சமையத்துக்கேற்றபடி நம்மால் இயன்றதை இவரைப்போல் செய்யலாம். இவரது வேலை ஆண்டவரிடம் கொண்டுவந்து விட்டுவிடுகிற அற்ப வேலைபோல் காணப்பட்டாலும், 5000 பேரை போஷிக்கவும் 3000, 5000 பேரை குணப்படுத்தவும், அநந்த ஞானிகளான கிரேக்கரையும் குணப்படுத்தவும் காரணமாயிருந்ததன்றோ! அவசியம் நேரிடும்போது ஆண்டவருக்கென்று செய்யும் அற்பமான வேலையும் விருதாவாய் போகமாட்டாது.

2. **சந்தேகம்.** பரி. அந்திரேயாவிடம் இந்த லக்ஷணம் காணப்பட்டது ஆச்சரியமே. தோமாதான் சந்தேகித்தவர்; பரி. அந்திரேயா அப்படிப்பட்டவரல்லவென்று நாம் சாதாரணமாய் எண்ணுவோம். என்றாலும் இவரும் நம்மைப்போல் பாடுள்ள மனுஷன்தான். "ஐந்து அப்பமும் இரண்டு மீன்களும் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?" என்கிற சந்தேக வார்த்தைகள் இக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகளான அநேகருடைய வாயிலிருந்து புறப்படுவதைக் கேட்கிறோம். விசேஷமாய் இந்திய மிஷனெரி சங்க சம்பந்தமாய் இவ்வார்த்தைகள் மிகவும் பொருத்தமுள்ளவை. உத்தேசம் இந்தப் பையனுக்கு வயது 12 என்கலாம். அப்படியே இந்திய மிஷனெரி சங்கமாகிய நம் பையனுக்கும் வயது பன்னிரண்டுதான். அன்று அப்பையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீனும் இருந்த வண்ணமே இந்திய மிஷனெரி சங்கமாகிய நம் பையனிடத்திலும் இருக்கிறது. ஐந்து மிஷனெரிமாரும், இரண்டு போர்டிங் பள்ளிக்கூடங்களுமாகிய ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு சிறு மீன்களும், வாரங்கால் ஜில்லாவிலுள்ள $1\frac{1}{2}$ லக்ஷம் அஞ்ஞான ஜனங்களைப் போஷிப்பதற்கு எம்மாத்திரம் என்றும், நம் தேசம் முழுவதுமுள்ள 33 கோடி ஜனங்களில் 32 கோடி 70 லக்ஷம் ஜனங்கள் கிறிஸ்துவாகிய ஞானாகாரத்தினால் போஷிக்கப்படுவதற்கு 30 லக்ஷம் கிறிஸ்தவர்கள் அல்லது $\frac{1}{100}$ கிறிஸ்தவ வீதாசாரம் எம்மாத்திரம் என்றும் மனுஷ பெலவீனத்தை வைத்து சந்தேகப்படுவது நியாயமும் தகுதியும்போல் காணப்படுகிறது. இயேசு சுவாமியை முகமுகமாய் கண்ட பிலிப்பும் அந்திரேயாவும் சந்தேகப்பட்டது மெய்யானால், நாம் சந்தேகப்பட்டு பயப்படுவது ஆச்சரியமல்லவே. 2,300 ஜாதியாகவும் 150 பாஷையாகவும் பிரிக்கப்பட்டு அஞ்ஞானத்திலும், அறிவீனத்திலும், அந்தர்ப்புறத்திலும், அனாப்பட்டினியிலும், அங்கவீனத்திலும் அமிழ்ந்து கிடக்கிற ஏராளமான ஜனங்கள் தவிர, நம் இந்து தேசத்தில் மட்டும் இயேசுவென்ற பெயரே கேள்விப்படாத பத்துக் கோடி ஜனங்களுக்கும், நிமிஷத்துக்கு 20 வீதம் மாதந்தோறும் நித்தியத்துக்குள் பிரவேசிக்கும் 8 லக்ஷம் ஜனங்களுக்கும் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் எம்மாத்திரம் என்கிற கேள்வி நியாயமே. இதற்கு நிவாரணம் அன்று அந்திரேயா பிலிப்பு என்பவர்களுக்குப்போல் நமக்குமிருக்கப்பட்ட மாறாத சலாக்கியமே

3. **சலாக்கியம்.** இந்த சந்தர்ப்பத்திலும், சந்தேகத்தின் மத்தியிலும் அவர்களுக்கிருந்த சலாக்கியம் "என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" என்று இயேசு சொன்ன வார்த்தைகள்தான். இதைவிடப் பெரிய சலாக்கியம் எதுதான் உண்டு. இந்தியாவின் சுவிசேஷ பிரபல்யத்துக்காகத் தவிக்கும் தேவனுடைய தாசர்களே! உங்கள் சந்தேகத்தையும், சங்கடத்தையும், அற்பமாய் காணப்படுகிற பணமோ, பொருளோ, பிள்ளைகளோ, தாலந்துகளோ அவையனைத்தையும் ஆண்டவரிடம் கொண்டுவாருங்கள். அவர் ஆசீர்வதித்து சந்தேகப்படுகிற தம் சீஷரிடம் கொடுத்துப் பங்கிடுகிறபோது இந்தியாவின் 32 கோடிக்கு மேற்பட்ட புறமதஸ்தரும் இயேசுவாட்சகராகிய ஞானாகாரத்தினால் திருப்தியாகி மீதியிருக்கச் செய்வார். நாம் நம் சலாக்கியத்தைமட்டும் உணர்ந்து இந்திய மிஷனெரி சங்கத்தையும் அதின் அவசியத்தையும் அதற்காக நம்மால் கூடியதையும் தினம் தினம் ஆண்டவர்கையில் கொடுத்து ஆசீர்வதிக்கச்சொல்ல மறவாதிருப்போமாக.

## தேலுங்குநாட்டுக் கடிதம்

கடந்த ஜனுவரி௴ மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் நம் மிஷன் ஸ்தானங்களைச் சுற்றிப்பார்க்க வந்தபோது மேடுதபல்லியில் உபாத்திமார்களும் சபையாருமாகச் சேர்ந்து பணஞ் சேகரித்து, இந்துக்கள் தங்கள் குருவுக்கு எவ்வளவோ வணக்கமாய் மரியாதை செய்கிறார்களே—நாமும் நம்முடைய குருவுக்கு எவ்வளவு சந்தோஷமாய்ச் செய்யவேண்டுமென்று தங்களுக்குத் தெரிந்தமட்டுக்கு சந்தோஷமாய் உற்சாகத்துடன் செய்தார்கள். சபையாரிலொருவன் தன் சொந்தச் செலவில் மகாகனம் அத்தியக்ஷரவர்களுக்கு நடைசாலையொன்று செய்து கோவிலுக்கு நடந்துபோகிறதற்காகத் தலைமுழுவதும் ஈத்தம் பாய் விரித்திருந்தான். பந்தலின் இருபக்கங்களிலும் தூண்களின் இடைக்கிடையே சிறு தீபஸ்தம்பங்கள் செய்து இரவில் வெளிச்சத்திற்காகத் தீபங்கள் ஏற்றிவைத்தான். சபையார் தங்களுடைய சிறு கோவிலையும் தங்களாலியன்றமட்டும் நன்றாய் அலங்கரித்து வைத்தார்கள். இவ்வித ஆசை அவர்களுக்குள் உண்டானது மிகுந்த சந்தோஷம்.

மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் மேடுதபல்லியில் பின்னிட்ட மூன்று நாட்களில், முதல்நாள் திடப்படுத்தல் ஆராதனை நடந்தது. ஆனால் அவ்விடத்தில் திடப்படுத்தலுக்கு ஆட்களில்லாததினால் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்து ஆயத்தமாகி வந்தவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. யல ரூ. [illegible] காணிக்கை [illegible]. இரண்டாம் நாள பரி. இராபபோஜனம் பரிமாறப்பட்டது. மூன்றும் நாள் பீரோலில் வெகுகாலமாக ஞானஸ்நானம்பெற இஷ்டமற்றிருந்த ஓர் குடும்பத்தாரும், இன்னும் ஒட்டர்களில் சிலரும் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்களுக்கு முன் எவ்வளவாகப் புத்திசொல்லியும், ஞானஸ்நானம் பெறும்படியாக வருந்திக் கேட்டும் அவர்கள் சம்மதிக்கவில்லை. கிறிஸ்துமார்க்கம் சேர்ந்தால் குலம் போய்விடுமென்றும், தங்களுடைய சுற்றார் கிறிஸ்தவர்களாகாததினால் விவாகம் செய்வது கஷ்டமென்றும் பயப்பட்டார்கள். மகாகனம் பிஷப் அவர்கள் வந்தபோது ஆண்கள் மாத்திரம் ஞானஸ்நானம் பெறுவதாக ஒப்புக்கொண்டுவந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் மனைவிமார்களுடன் வராதபக்ஷத்தில் ஞானஸ்நானம் கொடுக்க முடியாதென்று சொல்லப்பட்டதின்பேரில், திரும்பப்போய்ப் பெண்களையும் அழைத்துவந்து, மொத்தம் அன்று 18 பேர் கர்த்தருடைய சபையைச் சேர்ந்தார்கள்.

பீரோல் ஒட்டர்களில் ஞானஸ்நானம் பெற்ற ஒருவன் இன்னும் அதிகமாய் வாசிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டுத் தோர்ணக்கல் போகவேண்டுமென்றான். ஆனால் அங்கே போகிறதற்குச் சரியான சமயமில்லாததினால் தன் சொந்த இடத்திலேயே இருந்துகொண்டு, மேடுதபல்லிக்கு வந்து என்னிடத்தில் தினந்தோறும் படிக்கவும், அவன் அப்படி வரும்போது அன்றன்று கூலியைக் கொடுத்திடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்படியே நானிருக்குங் காலத்தில் என்னிடத்தில் படித்துவருகிறான். அவன் நன்றாய் எழுத வாசிக்கவும், வேதத்திலும் அறிவடைந்தபின் தன் சொந்த வேலையுடன் ஊராருக்குப் படித்துக்கொடுக்கிறதும், ஆராதனை நடத்துகிறதும் அவன் வேலையென்று சொல்லியிருக்கிறேன்.

மேடுதபல்லியில் சுதேச சபை ஆலோசனைச் சங்கத்தின் மெம்பரான யோபும், ஒட்டக் குலத்திலிருந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்த சாலொமோனென்னும் இருவரும் நானில்லாத காலத்தில் சபையை நடத்திவருகிறார்கள். ஆராதனை நடத்துகிறவன் சாலொமோனே. இவர்களில் சாலொமோன் இந்துக்களான தன் இனத்தாருக்கு ஒழுங்காயும் தைரியமாயும் சாட்சி சொல்லுகிறதுமாத்திரமல்ல, கிறிஸ்தவர்களுக்கும் அதிகத் தைரியமாய்ப் புத்திசொல்லி, அவர்களுடைய தப்புகளைக் கண்டித்து, ஓய்வுநாள் மீறல், குடி முதலிய இரகசிய பாவங்களைத் தடுக்கவும் ஆரம்பித்திருக்கிறான். ஓய்வுநாளில் கிணறு தோண்டும்படியாகப்போன மூவரை இரண்டு மைல்தூரம் அவர்கள் பின்னால் போய் அவர்களைக் கண்டிப்பாய் எச்சரிக்கவே, அவர்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு, அவன் பின்னால் ஜெபத்திற்கு வரச் சம்மதித்து உடனே புறப்பட்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். சபையாரில் யாராவது குற்றத்திலகப்பட்டால் அவர்களுக்குச் சிக்ஷையாகவும், திரும்பப் பாவஞ் செய்யாமலிருக்கவுமாக இராப்போஜனம் பெற்ற சபையாரெல்லாருமாகக் கூடிச்சேர்ந்து விசாரணைசெய்து ஏதாவது அபராதம் போடும் வழக்கம் ஆரம்பித்திருக்கிறது. இப்படிச் செய்வதினால் இரகசியமாய்ச் செய்யப்பட்டுவருகிற அநேக பாவங்கள் சபையார் மூலமாகவே வெளியாகிறது. மேல்பார்க்கிறவர்களுக்குத் தெரியாவிட்டாலும் சபையார் தங்களுடைய பொறுப்பை உணருகிறதினால் வெளிக்கு வராமல் போகாது. இரண்டொருவர் சற்று விபரீதமாக நடந்தபோதிலும் சபைக்கட்டுக்கிணங்குகிறார்கள் என்று சந்தோஷமாய்ச் சொல்லக்கூடும். ஜனங்களுக்குள்ளுண்டாயிருக்கும் இந்நல்ல ஆரம்பத்திற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். சபையாருக்காகவும் முக்கியமாய் சாலொமோனுக்காகவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

தவச உற்சவம்.—கடந்த வருஷங்களில் தோர்ணக்கல், மேடுதபல்லி முதலிய இரண்டு இடங்களில் மாத்திரம் தவச உற்சம் கொண்டாடப்பட்டது. இந்த வருஷம் ஒவ்வொரு பாஸ்ற்றரேற்றிலும் நடத்தப்பட்டது. மார்ச்சு௴ 12௳ தோர்ணக்கல்லில் நடந்தது. அங்கே பெண்பாடசாலைப் பிள்ளைகள் அநேக தையல் வேலைகளும், பையன்கள் தங்களுடைய பைசாக்களை மீதம் வைத்து சிறுசிறு பலகைகள் வாங்கி, மேசை, ஸ்டூல் முதலிய பல ஜாமான்கள் செய்துகொண்டுவந்தார்கள். புதிதாய் மார்க்கத்தில் சேர்ந்திருக்கும் ஒட்டர் வீட்டுக்கோர் கோழி கொண்டுவந்தார்கள். இவர்கள் சாலொமோனுக்கு நெருங்கிய பந்துக்களே. ரூ. 50-க்குமேல் காணிக்கை வந்தது

மேடுதபல்லியில் மார்ச்சு௴ 17௳ பண்டிகை நடந்தது. இவ்விடத்துக்குச் சமீபமாயுள்ள தெட்லபாடு, பீரோல், சவட்டப்பல்லி, பாபோஜிகூடம் முதலிய இடங்களிலுள்ள சபையார் வந்திருந்தார்கள். சிலர் ஸ்தோத்திரமாகத் தலைக்கு ஒவ்வொரு ரூபாயும், இன்னும் அநேகர் கோழிகளும் குஞ்சுகளுமாகவும் சிலர் தங்களுக்கு மிகுந்த கஷ்டமாயிருந்தபோதிலும் சந்தோஷமான காணிக்கைகளும் படைத்தார்கள். மொத்தம் வந்த காணிக்கை ரூ. 15.



முப்பாரத்தில் மார்ச்சு௴ 19௳ நடத்தப்பட்டது. இத்தாலுகாவிலுள்ள சபைகளிலெல்லாம் பெரியதும் சுமார் 300 கிறிஸ்தவர்களுமுள்ளதானபோதிலும் அவர்களுக்குப் படித்துக்கொடுக்கச் சரியான ஆளில்லாதபடியால் அதின் ஸ்திதி குறைவுபட்டுப்போய்விட்டது. இது ஒரு மிஷனெரி ஸ்தானமாயிருக்கவேண்டிய இடம். மேடுதபல்லிக்கு 20 மைலுக்கு அப்பாலிருக்கிறபடியால் இங்கிருந்துகொண்டே அதையும் பார்த்துக்கொள்வது மிகவும் கஷ்டமான வேலை. இவர்கள் சிறுபிராயமுதலே குடியில் பழக்குவிக்கப்பட்டிருப்பதால் இவர்கள் நடுவிலிருந்துகொண்டே தடுத்தாலொழிய இவர்கள் குடியை நிறுத்துவது மகா கஷ்டமாயிருக்கிறது நமது மிஷன் வேலை இவர்கள் நடுவில் ஆரம்பிக்குமுன் வெஸ்லியன் மிஷன்காரர் வசமிருந்ததால் மிஷனெரிமார்களிடமிருந்து ஏதாவது வாங்கித் தின்னலாமென்பதே அவர்களுடைய எண்ணமாயிருக்கிறது இவர்களை உற்சாகப்படுத்தும்படியாக அநேக பாட்டுகளும் பஜனைகளும் வைத்தோம். ஆனால் அவர்கள் ஏற்கனவே ஆயத்தப்படுத்தப்படாதபடியால் சரியான காணிக்கை வரவில்லை.

மானுக்கோட்டைப் பாஸ்ற்றரேற்றுக்கு, அவ்விடம் கிறிஸ்தவர்கள் சொற்பமானதினால் ஸ்ரீராமகிரியில் பண்டிகை கொண்டாடப்பட்டது. கனம்: தேவசகாயம் ஐயரவர்களும் உபாத்திமார்களுமாகக் கூடிச் சபையாரை முன்னதாகவே ஆயத்தப்படுத்தி வைத்திருந்ததால் ஜனங்கள் உற்சாகமாய்க் காணிக்கைகள் கொண்டுவந்தார்கள். தொகை மொத்தம் ரூ 7. எல்லா விஷயத்திலும் மிகவும் நன்றாய் நடந்தேறினது.

சபையாருக்கு இவ்விதப் பண்டிகைகளினால் ஆசீர்வாதமுண்டாகவும், முக்கியமாய் முப்பாரம் சபையார் தங்களுடைய தீயபழக்கங்களை விட்டுவிடவும், அவர்கள் ஊருக்கு இப்போது புதிதாக மாற்றப்பட்டுப் போயிருக்கிற உபாத்தியார் மூலமாக அதிக நன்மையுண்டாகவும், கர்த்தர்பேரில் அதிகப் பற்றுதலுண்டாகவும்தக்கதாக அவரைநோக்கி வேண்டிக்கொள்வோமாக!

ஜான் ஸ்ரீனிவாசகம்.

---

## உள்நாட்டு ஊழியரின் கடிதம்.

தேவகிருபையால் இவ்வருஷத்துவக்கத்தில் பண்ணைவிளை சர்க்கிள் முதலாளி கனம். S. M. தேவதாஸ் ஐயர் அவர்களின் அனுமதியின்பேரில் அவர்கள் சர்க்கிள் கமிற்றிக்கூட்டத்துக்குமுன் அவ்விடத்துக்குப்போய், ஆஜராமிகளெல்லாருக்கும் இரண்டு விசேஷித்த கூட்டங்கள் நடத்தி ஒன்றில் தேவ ஊழியத்தின் மாக்ஷிமையையும் உத்தரவாதத்தையும் உணர்த்திக்காட்டியதின்பின்னர், மறுகூட்டத்தில் இந்திய மிஷனெரி சங்க சம்பந்தமாயவர்களெல்லாருடைய கடமையு மின்னதென்பதை விவரித்து, மிஷனின் நல்வாழ்வும் உறுதியும், ஒழுங்கும் திட்டமுமான பண உதவியையும் பொறுத்திருக்கிறதென்பதை விவரித்துக்காட்டினதின்பேரில் முன்னிலும் ஒழுங்காயும் உற்சாகமாயும் உதவிசெய்வதாய் வாக்குப்பண்ணினார்கள்.

கனம்: தேவதாஸ் ஐயரவர்களும், அம்மாளவர்களும் அதிக சிரத்தையோடு நம் சங்கத்துக்காக உழைப்பதுமன்றி, என்னோடுகூடவே சில ஊர்களுக்கு அவர்களிருவரும் வந்திருந்து கூட்டங்களில் ஜெபித்து ஜனங்களை உற்சாகப்படுத்தினார்கள். சில சபைகளுக்கு அவர்கள் குமாரர் Mr J. D. ஆசீர்வாதம் கூட்வே வந்து உதவிசெய்ததற்கும் நன்றி செலுத்துகிறேன் போர்டிங் பள்ளிக்கூடம் தலைமை உபாத்தியாயர் Mr. V ஆசீர்வாதம் அவர்கள் உதவியினால் பள்ளிப்பிள்ளைகளுக்கு ஓர் கூட்டம் நடத்தியதின் பலனாக உபாத்திமாரும் பிள்ளைகளும் ஏகமனதாய் உற்சாகத்தோடு தோர்ணக்கல் போர்டிங் பள்ளிக்கூடத்தில் 2 பிள்ளைகளை ஆதரிக்க வாக்குக்கொடுக்கும்படி கர்த்தர்தாமே அவர்களை ஏவி எழுப்பினதற்காக அவருக்கு ஸ்தோத்திரம். இந்தப்பிள்ளைகளின் உற்சாகம் மிகவும் கவனிக்கப்படத்தக்கதாயிருந்தது. பண்ணைவிளை, மன்னாயன்தட்டு, ஏறல் பாஸ்ற்றரேற்றுகளின் முக்கியமான சபைகளையும் கொங்கராயகுறிச்சிப் பாஸ்ற்றரேற்றில் புதுக்குடி ஸ்ரீவைகுண்டம் சபைகளையும் மட்டும் ஜனுவரியில சந்தித்தேன் ஸ்ரீவைகுண்டம் காலஞ்சென்ற நம் சங்க நண்பர் மக-ள-ள-ஸ்ரீ பேரின்பம் அப்பாதிக்கிரி அவர்கள் வைத்திருந்த வருஷாந்தர இந்திய மிஷனெரி சங்கக்கூட்ட முறையைத் திரும்பவும் புதுப்பிக்கும்படி மக-ள-ள-ஸ்ரீ வக்கீல் நாடார் அவர்களைக் கேட்க அவர்கள் பிரயாசப்படுவதாய் வாக்குப்பண்ணினார்கள்.

பெப்ருவரி௴ துவக்கத்தில் கனம். எவான்ஸ் ஐயரவர்கள் தயவாய் ஏற்கனவே ஜெபத்தோடு ஆயத்தம்பண்ணி ஒழுங்கு செய்திருந்த விசேஷித்த மிஷன் ஊழியத்தை 8௳ முதல் 15௳ வரை தூத்துக்குடியில் நடத்தி, 15௳ யாகிய நம் சங்கத்தின் மத்யஸ்த ஞாயிறையும் பரி. நற்கருணை ஆராதனையோடு தூத்துக்குடி சபையில் ஆசரித்தோம். ஹைஸ்கூல் மாணாக்கர்களுக்கும், மேலூர் பெண்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு கூட்டங்கள் வைத்து நடத்தியதுடன், கனம். வைற் மிசியம்மாள் அவர்கள் நடத்திவரும் தாய்மார் கூட்டத்திலும் விசேஷபிரசங்கம் செய்தேன். 15௳ சாயங்காலம் சபையாரோடும் கனம். ஆபிரகாம் ஐயரவர்களோடும் மேலூர் வீதியில் சுவிசேஷ பிரசங்கவேலை செய்து மிஷனை முடித்து, இரவில் விசேஷ ஜெபக்கூட்டம் நடத்தியபின், சபையார் உழைப்போர் ஐக்கியத்தின் ஓர் கிளைச்சங்கம் ஸ்தாபித்து மாதந்தோறும் ஜெபிக்கவும் பணம் சேர்க்கவும் சம்மதித்து கனம். Fredrick ஐயரவர்களை காரியதரிசியாகவும் 7 பேரை அவர்களுக்குதவிக்காரராகவும் நியமித்தார்கள். திரும்பும் வழியில் தட்டப்பாறை, புதியம்புத்தூர், ராஜான்கோவில், கைலாசபுரம் முதலிய சபைகளையும் சந்தித்து ஊழியம் நடப்பித்தேன். கைலாசபுரம் முதலாளி கனம். தேவசகாயம் அவர்கள் ஞாபகார்த்த ஆலயத்துக்கு ரூ. 100 கொடுப்பதுடன் கர்த்தருக்குச் சித்தமானால் தோர்ணக்கல் மிஷனில் ஓர் சபைக்கு ரூ. 1000 பெறுமான ஓர் கோவில் நன்கொடையாகத் தன்பேரால் கட்டிக்கொடுக்க ஆசிப்பதாய் சொன்னார்கள். அவர்கள் மாதிரியைப் பல தனவான்களும் பின்பற்ற கர்த்தர் தாமே அருள்புரிவாராக.

## குணப்படுதல்.

(தொடர்ச்சி)

இரண்டாவது: ஆத்ம சுத்தியடைதல். ஆன்மா, விலையேறப்பெற்றது, அழிவற்றது, ஆதி நித்தியமானது, மகா மகத்துவமுள்ளது, பேரானந்தமடையக்கூடியது. தேவனை மகிமைப்படுத்தக்கூடியது. மேற்கூறிய சத்தியங்களை ஆராய்ந்தறிந்து உணர்வதுடன் ஆத்மசுத்தி பெறுவதினாலேயே ஒருவனின் குணப்படுதல் பூரணமாகிறதென்கலாம். ஆதியிலே தேவனுடைய சாயலிலே சிருஷ்டிக்கப்பட்ட ஆன்மா எவ்வித மாசு மறுவுமற்ற சுத்தஸ்படிகம்போல அதி பரிசுத்த நிலைமையிலிருந்தது. முதல் மனுஷன் தன் பகுத்தறிவென்னும் சுயாதீன சித்தத்தைத் தகாதவிஷயமாய் உபயோகித்ததினின்று அது பாவக்கறைப்பட்டு மலம் ஏறி கெட்டுப்போயிற்று. அதினின்று தொன்றுதொட்டுண்டான மானிட ஆன்மாக்கள் பாவமாகிய பாசத்திற்குட்பட்டு, முகத்தைப் பிரதிபிம்பித்துக்காட்டக்கூடாத கண்ணாடிபோல உருக்குலைந்திருக்கின்றன. ஆன்மா ஸ்படிகமான கண்ணாடியைப்போல திரும்பத் தன் ஆதி ரூபமாகிய தேவசாயலை அடைந்துகொள்ளுவதே ஆத்ம சுத்தி.

'தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டிருக்கிறீர்களே' (கொலோசேயர். 3:10) என்று ஆத்மசுத்தியடைய முயற்சித்து அவ்வழியிற் தரித்திருப்போரைப்பற்றி வேதாகமத்திற் சொல்லியிருக்கிறது. இதற்கிசைய,

அனாதி சிவரூபமாகிய ஆன்மா
தனாதி மலத்தாற்றடைப் (பன்று) நின்றது
தனாதி மலமுந் தடையற்றபோதே
யனாதி சிவரூபமாகிய வாறே.

என்று திருமந்திரம் பாடினோர் சொல்லுகிறார். இந்துக்களில் ஓர் வகுப்பினர் பாசம் அனாதியென்கிறார்கள். இதை விஸ்தரிக்கும்பொருட்டு அவர்கள் உபயோகிக்கும் திருஷ்டாந்தம் யாதெனில், பூமியினுள்ளே இருந்து வெட்டியெடுக்கப்படும் செம்பானது களிம்புள்ளதாயிருக்கிறது, அக்களிம்பு எப்போ செம்பைப்பற்றியதென்றால் அனாதியாகவே அச்செம்பினிடத்து இருக்கிறது. அவ்வாறே ஆணவ மலம் என்கின்ற ஓர் வகைப் பாசம் அனாதி நித்தியமாய் ஆன்மாவைப்பற்றிக்கொண்டிருக்கின்றது என்கிறார்கள். அவர்கள் நெல்லையும் ஓர் திருஷ்டாந்தமாகக்கூறி அரிசியைப்பற்றிக்கொண்டிருக்கும் தவிடானது, அவ்வரிசி உருவானபோதே உற்பத்தியாயிருக்கும்வண்ணம், ஆணவ மலமாகிய பாசமும் ஆன்மாவைப்போல அனாதி என்கிறார்கள்.

ஆனால், மலம் நீங்கும் முறையைப்பற்றி அவர்கள் பேசுமிடத்து அரிசியானது தீட்டப்பட தீட்டப்பட, தவிடு நீங்கி அரிசி சுத்தமாகுமாப்போல, ஆன்மா பல ஜென்மங்களாய்ப் பிறந்து பிறந்து சுத்தமாகின்றதென்றும், களிம்புள்ள செம்பைப் புளியிட்டு விளக்கியும் பற்பல புடங்கள் வைத்தும் அது ஓர் பக்குவமடைந்தபின் ரசவாதக்காரன் பரிசித்த வேதியினால் அதைத் தொடும் மாத்திரத்தில் அச்செம்பு பத்துமாற்று தங்கமாகிவிடுமாப்போல், மலமுள்ள ஆன்மாவும் பலபிறப்புகளடைந்து மலபரிபாக பக்குவம் வந்தெட்டியவுடனே அருட்சக்தியினால் தொடப்பட்டு தெய்வத்துவம் அடைகின்றது என்றும் சொல்லுகிறார்கள். அதாவது தவிட்டை இயற்கையாயுடைய அரிசி தவிடு நீங்கிய நிலைமையைப்பெறுவதுபோல அனாதியாய் மலத்தையுடைய ஆன்மா மலம் நீங்கிய நிலையையடைகிறதென்றும், களிம்புள்ள செம்பு களிம்பற்ற தங்கமாகுமாப்போல மலமுள்ள ஆன்மா நிர்மல நிலைமையடைகிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியானால், ஆணவமலம் நித்தியமல்லவே. எப்போ நித்தியமல்லவோ அப்போ அனாதியாகவுமிருக்கக்கூடாது.

மேலும், அனாதியான எந்த வஸ்துவையும், அகற்றிவிடலாமென்றெண்ணுவது இயற்கைக்கு விரோதமான விஷயம். ஆகச்சே, மலம் அனாதியென்றால் நீக்கப்படமுடியாது. மலம் நீக்கப்படக்கூடிய வஸ்துவானால் அதற்கு ஆதியிருந்திருக்கவேண்டும். மேற்கூறிய வகுப்பினர் கிறிஸ்தவர்களைப்போல் மலம் களைந்துவிடப்படக்கூடிய வஸ்துவென நம்புகிறபடியால், கிறிஸ்தவர்களைப்போலவே அவர்களும் மலம் தொடக்கமுள்ள வஸ்துவெனவும் நம்பவேண்டும். அன்றியும் ஆன்மா மலம் நீங்கித் தேவசாயலை அடையவேண்டும் என்னும்போது தெய்வத்திற்குரிய தத்துவ லக்ஷணங்களை அடையவேண்டுமென்பது கருத்தல்ல. ஸ்தூல சரீரத்திற்குரிய தத்துவங்கள் வேறு, ஆன்மாவுக்குரிய தத்துவங்கள் வேறு, தெய்வத்திற்குரிய தத்துவங்கள் வேறு. ஸ்தூலம் எவ்வண்ணம் ஆன்மாவாகமுடியாதோ அவ்வண்ணமே ஆன்மாவும் தெய்வமாகமுடியாது. அப்படியிருக்கின், ஆன்மா தேவசாயலைப் பெறுதல் யாது? 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரணசற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்' மத்தேயு. 5: 48 என்ற வசனத்தின்மூலமாய் தெய்வத்தினிடத்துள்ள சற்குணம் அடைந்தே தேவசாயலைப் பெறுதலாகும். அச்சற்குணம் அன்பே 'தேவன் அன்பாகவேயிருக்கிறார்.' இவ்வன்பே ஆன்மா இடிந்துவிட்ட தேவசாயல்.

'அன்புசிவமு மிரண்டென்பாரறிவிலார்
அன்பேசிவ மாவதாருமறிந்திலார்
அன்பேசிவ மாவதாருமறிந்தபின்
அன்பேசிவ மாயமர்ந்திருப்பாரே'

இவ்வன்பினிடத்து மெய்ஞானம், பரிசுத்தம், ஆனந்த பாக்கியமாகிய முக்குணமுண்டு

இவ்வுன்னத தேவசாயலைப் பெற்றுக்கொள்ளும் முறை யாது?

(1) மூலகாரணமாய்த் தேடவேண்டியது தேவகிருபை. ஆனால் இவனுக்குக் கிடைக்கும் இரக்ஷிப்பு இலவசம். அவனுடைய பாத்திரத் தன்மையினாலல்ல. ஆனால் அப்படிக் கிடைக்குமென்ற பற்றுதலே விசுவாசம். மேற்காட்டிய முக்கூர் பொருந்திய அன்பின் மகத்துவத்தை மனுஷன் கண்ணுற்றுப் பார்க்கப் பார்க்க, தான் எத்தனை உன்னத நிலைமையினின்று தடுமாறிவிழுந்தேனென ஏக்கமடைந்து தன்னிலுள்ள உண்மை நீதி நேர்மை முதலிய குணுகுணங்களெல்லாம் அருவருத்துத்



தள்ளத்தக்க கந்தைக்குச்சமானமாய் உணர்ந்து தன்னிலுள்ள தான் என்னும் கர்வம் தணிந்து தன்னை ஒன்றுமற்ற வெறும் பாண்டம்போல் நிதானிக்கிறேன். இந்த நிலைமையையடையும்போது தன்னிலும் வல்ல சத்துவம் அவனில் கிரியை நடப்பிக்கக்கூடிய இணக்க சுபாவமுள்ளவனாகிறான்.

(2) தீர்மானித்தல். விசுவாசம் உண்டாவதற்கு சித்தவிர்த்தி அவசியம். அந்தக் காரணமே நமது கிரியைகளுக்கு ஊற்றாயிருக்கிறது. அவ்வந்த காரணத்திற்கு சித்தவிர்த்தியே வாசல். இச்சித்தவிர்த்தியை அப்பிரயோஜனப்படுத்தியதினின்று பாவம் பிரவேசிக்கலாச்சுது. கோணலான பாதையிற் சென்ற சுயாதீனசித்தம் நேர்மையான வழியிற் செல்லவேண்டியது இன்றியமையாத அவசியம். ஆதலால், ஆன்மா, தான் இடிந்துவிட்ட சாயலை மறுபடியும் கைப்பற்றவேண்டுமென்ற உறுதியான தீர்மானம் நமது சித்தத்தின் கண் உதயமாகவேண்டும்.

(3) தேவ சந்நிதியைக் கிட்டிச்சேர்தல். இவ்வண்ணம் தீர்மானித்தபின்னர், முயற்சிக்கிறான். ஆனால், தான் வெறுமையென்றும் தன் சத்துவம் சூனியமென்றும் ஞாபகமுள்ளவனாயிருக்கின்றமையால் தன் சுயமுயற்சி பூரண பலிதமடையாதென உணர்ந்து, சர்வவல்லவரான பரிசுத்தரைக் கிட்டிச்சேர தன் மனதில் ஏவப்படுகிறான். ஓர் பிதாவைக் கோபமூட்டி அவருக்குக் கீழ்ப்படியாது இரண்டகஞ்செய்து விலகிப்போன புத்திரன் மறுபடியும் அவரை அடுத்து ஜீவிக்கவரில் தன் பிதாவின் பட்சமான குணம் அவனுக்குத் திட்டமாய் ஞாபகத்திற்கு வருவதுண்டு. அதின்மூலமாய் தன் கீழ்ப்படியாமையும் இதற்குமுன் தோன்றாதவண்ணம் தெளிவுறத் தோன்றும். அதேபோல், அன்பின் சொரூபியாகிய கடவுளிடம் அசுத்த ஆன்மா கிட்டிச்சேரச்சேர அவரது அன்பின் பெருக்கும் தன் ஆன்மாவிலுள்ள மலத்தின் பூரண அளவும் வெகு நுட்பமாய்த் தோன்றும். அப்புத்திரன் தன் பிதாவினிடம் திரும்பிவருகையில், எவ்வாறு தன் இரண்டகங்களுக்காக வெட்கமும், துக்கமும் அடைகிறானோ, அவ்வாறே கடவுளிடம் நெருங்கும் ஆன்மாவும் தன் பாப கர்மங்களுக்காக மனஸ்தாபமடைகிறது. மாய்மாலமின்றி மெய்யுணர்வோடு தகப்பனிடந் திரும்புவோன், தன் தகப்பனைச் சந்தித்த மாத்திரத்தில் தன்னை அடக்கமாட்டாது வார்த்தைகளினாலாவது, கண்ணீரினாலாவது அல்லது சாஷ்டாங்கமாய்ப் பணிகிறதினாலாவது தன் துக்கமான உணர்ச்சியை வெளிவிடுமாப்போல், உத்தம மனஸ்தாபத்தால் நிறைவுற்ற ஆன்மா கடவுளைக் கிட்டிச்சேருகையில் தன்னை அடக்கிக்கொள்ளாது அவரிடம் தான் நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும், புத்திபூர்வமாயும், அபுத்திபூர்வமாயும் நிறைவேற்றிவந்த சகல அக்கிரமங்களையும், ஆகாமியங்களையும் அறிக்கையிட்டுப் புலம்பி "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்பொழுதும் எனக்குமுன்பாக நிற்கிறது." "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து உமது கண்களுக்குமுன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்" "என் மீறுதல்கள் உமக்குமுன்பாக மிகுதியாகயிருந்து என் பாவங்கள் எனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறது. என் மீறுதல்கள் என்னோடேயிருக்கிறது, என் அக்கிரமங்களை அறிந்திருக்கிறேன். கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணி பொய் பேசி என் தேவனைவிட்டுப் பின்வாங்கினேன்; கொடுமையாகவும் கலகமாகவும் பேசினேன். கள்ள வார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து இருதயத்திலிருந்து பிறக்கப்பண்ணினேன், நியாயம் பின்னிட்டு அகன்றது; சத்தியம் வீதியிலே அடறியதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது". ஏசாயா 59: 12—14.

"கர்த்தாவே என்னைத் தண்டியும் ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு அல்ல, மட்டாய்த் தண்டியும்." எரேமியா 10: 26 என்ற வார்த்தைகளைப்போல் பல மொழிகளைச் சொரிந்து உள்ளமுருகிக் கனிந்து ஏங்கித்தவித்து நிற்கும். இது இயற்கை முறையை அனுசரித்தேயிருக்கிறது. துர்க்கந்தமுள்ள பதார்த்தம் வைக்கப்பட்ட ஓர் பாத்ரம் சுத்தியடைதற்கு காற்று அல்லது வெயில் அதின் உட்புறமெங்கும் படத்தக்கதாய் திறந்துவைக்கப்பட்டிருக்குமாப்போல் சுத்திபெற ஆசித்து நிற்கும் இருதயம் தேவசந்நிதியில் பூரணமாய்த் திறந்துவைக்கப்பட்டிருக்கும் சிந்தனையினின்று பிறந்த தோஷங்கள்மட்டுமல்ல அவ்விடத்திலுள்ள கோணலான சுபாவமுங்கூடத் தேவசந்நிதியில் வெளியிடப்படும்.

(4) பாவமன்னிப்பு. கடவுளிடம் ஒருவன் பாவங்களை அறிக்கையிட்டு நிற்கையில் மன்னிப்பை எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் பிராயச்சித்தமின்றி மன்னிப்பைத் தெய்வம் அருளுவாரோ என்பதை ஆராய்ந்தறிதல் அவசியம். தெய்வம் இரக்கம் பாராட்டும் விஷயத்தில் கருணாசமுத்திரம்போல் விளங்கினாலும், பாவத்திற்குத் தண்டனையளித்து தம் நீதியை வெளிப்படுத்தும் விஷயத்தில் பட்சிக்கிற அக்கினியைப்போலிருக்கிறார். அவரது இரக்கம் எவ்வளவு உன்னதமோ அவ்வளவு உன்னதமாகவே அவரது நீதியுமிருக்கிறது. ஆதலால், தம் நீதியை வழுவவிடாது இரக்கத்தைப் பாராட்டி மன்னிப்பு ஈவதே அவரது மகத்துவத்திற்கு ஏற்றது. மனுஷர் இவ்வுலகத்திலனுபவிக்கிற பற்பல சங்கடங்களும் உபத்ரவங்களும், தத்தம் பாவங்களுக்காகத் தெய்வத்திடமிருந்து வரும் தண்டனைகளெனத் தீர்மானித்தல் தகாது. எத்தனையோபேர் அக்கிரமங்களை நடப்பித்தும் உபத்ரவமனுபவியாது ஜீவிக்கின்றனர். இன்றுமநேகருக்குண்டாகும் சங்கடங்கள் அவரவர் கிரியைக்கு இயற்கைப்பிரமாணத்தின் மூலமாய் நேரிடும் பலனேயன்றி தெய்வநீதியின்பொருட்டு நேரும் தண்டனையென்றெண்ணக்கூடாது. கடவுள் தமது நீதியின்பொருட்டு பாபிஷ்டிகளைத் தண்டிக்கும் காலம் மறுமையேயொழிய இம்மையல்ல.. இந்த ஜென்மத்தில் அனுபவிப்பதாய் இந்துக்கள் சொல்லும் கோட்பாடு இதற்கு சற்று ஒத்திருக்கிறதென்கலாம். ஆகவே பாவத்தின் தண்டனையை மறுமையிலனுபவிப்பதென்றால் மனுஷரில் யார்தான் தப்புவார். தெய்வீகத்திலுள்ள வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளேவாசஞ்செய்து பாடுபட்டுச் சிலுவையில் பிராணத்தியாகம் செய்து, அதின்மூலமாய்த் தேவநீதி நிறைவேறலாயிற்று. மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து எவ்வித தோஷமுமற்றவராயிருந்தும் துன்பத்தை அனுபவித்தது, தம் நிமித்த

மாகவல்ல, குழந்தை ஜீவிக்கும்பொருட்டு மாதா சங்கடமனுபவிப்பதுபோல மனுக்குலத்திற்கு மாதாபோன்ற அகரே துன்பத்தை அனுபவிக்கலானார். இவ்விதமாய்க் கிறிஸ்து நீதியை நிறைவேற்றி மரித்தோரினின்றெழுந்து பரலோகத்திலிருக்கிறபடியால் அவருடைய பாடுகளின்மேல் பூரண விசுவாசம் வைத்து மன்னிப்பைக் கெஞ்சி நிற்போரே மன்னிப்பைக் கண்டறிவார். கிறிஸ்து பாடுபட்டு மரித்து உயிர்த்து பரமண்டலத்தில் வீற்றிருந்து பாவமன்னிப்பை அருளுகிறார் என்பதின் மூலமாகவே தெய்வத்தின் நீதியும் இரக்கமும் சமரசமாகி ஒன்றுக்கொன்று பங்கப்படாமல் மனந்திரும்பி நிற்கும் பாவிக்கு மன்னிப்பைக் கொண்டுவரும் முறையாயிருக்கிறது.

(5) கிறிஸ்து இயேசுவின்பேரிலுள்ள விசுவாசத்தின் மூலமாய்க் கிருபையாய் மன்னிப்புப்பெற்ற மனுஷன் பக்தரின் கூட்டத்தாரிடம் தனக்குக் கிடைத்திருக்கும் விலைமதிக்கப்படாத நன்மையை அறிக்கையிட்டு அவர்களோத் தனக்காகப் பிரார்த்திக்க விரும்பி நிற்கிறான். இவ்வண்ணம் அறிக்கையிடுவதனால் தனக்கு மனுஷரால் கிடைக்கும் அவமானத்தை ஒரு பொருட்டென்று நினையாது, பின்னர் அவனது சிந்தனை, வார்த்தை, பார்வை, நடக்கை முதலிய யாவற்றிலும் ஏக மாறுதல் உண்டாகி அவன் புதிய மனுஷனென்று யாவராலும் அங்கீகரிக்கப்படத்தக்கவனாகிறான். ஆதியில் தனக்குப் பிரியமாகத் தோன்றிய துர் விஷயங்கள் இப்போ வெறுப்பையுண்டாக்குகிறது. லோக இன்பங்களுக்கடுத்த பற்று தணிந்ததினால் எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுகிறேன் என்று சொல்லக்கூடியவனாகிறான். தனக்கும் தெய்வத்திற்குமிடையில் யாதொரு விகற்பமுமில்லையென உணர ஆரம்பித்து அவருடன் ஐக்யமடையவேண்டிய விஷயத்தில் தேர்ச்சியடைந்துகொண்டுபோகிறபடியால் 'நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்று உணரக்கூடியவனாகிறான். இனி அவன் செய்யவேண்டியது என்னவெனில், கழுவப்பட்ட பன்றி திரும்பவும் சேற்றில் விழுந்து புரளுவதுபோலிராது, மாம்சத்திற்குச் செத்து ஆவியில் உயிரடைந்த நிலைமையில் கிறிஸ்துபகவானின் கிருபையைப் பெற்று அவர் கொடுக்கிற பலத்தினால் மரணபரியந்தம் பௌத்திரமாய் யாதொரு பாவ மன்னியில் ஜீவிக்க கடமைப்பட்டிருக்கிறான்.

---

## மிஷனெரி வர்த்தமானம்.

யுகண்டா. இத்தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களின் தொகை 90,000. இங்கே 1200 கோவில்களுண்டு. இங்குள்ள 20 சிற்றரசர்கள் அல்லது தலைவர்களில் 19 பேர் கிறிஸ்தவர்கள். ஒருவர் மாத்திரம் மகம்மது மார்க்க அனுசாரி. சபையும் சுய ஆதரவின் நிலைமையிலிருக்கிறது. கிறிஸ்து மார்க்கம் இத்தேசத்தைப் பிடித்துக்கொண்டது என்பதற்கு ஐயமுண்டோ?

இந்தியா. 1911-வது வருஷ ஜனசங்கையைக் கவனிக்கையில், கிறிஸ்தவர்களின் தொகை 1881-வது வருஷத்தின் தொகையிலும் இரட்டிப்பாகத் தெரிகிறது. தற்சமயம் இந்த தேசக் கிறிஸ்தவர்களின் தொகை சுமார் 35 லட்சமாம். கடந்த பத்து வருஷத்தில் தென்னிந்தியாவில்தான் அதிகப் பெருக்கமாம். இப்பெருக்கம் தொகையில் பெரிதாய்த் தோன்றினாலும், இப்பிராந்தியங்களிலுள்ள கிறிஸ்தவர்களின் தொகை வீதாச்சாரத்தின்படி மிகச் சொற்பமே. ஏனென்றால் சொற்பக் கிறிஸ்தவர்களுள்ள ஐக்ய மாகாணங்களில், கிறிஸ்தவர்களின் தொகை கடந்த பத்து வருஷங்களில் இரட்டிப்பாயிருக்கிறது. பஞ்சாப் மாகாணத்தில் மும்மடங்காயிருக்கிறது. வங்காளத்தைச் சேர்ந்த பீகார், ஒரிசா நாடுகளில் ஒன்று ஒன்றரை ஆகியிருக்கிறது. இந்துதேசம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்களின் வீதாச்சாரத்தைப் பார்த்தாலோ, ஆயிரம் புறமதஸ்தருக்கு 12 பேர் கிறிஸ்தவர்களாம். 400 பேருக்கு அதிகமான சிற்றரசர் அல்லது தலைவர்களுள்ள இத்தேசத்தில் இன்னும் ஒருவரும் கிறிஸ்தவர்களாகவில்லை.

பாலிய மிஷனெரி. ஆர்க்கோணத்திலுள்ள ஓர் மிஷன் பள்ளிக்கூடத்தில் கொடுத்துவந்த வேத போதனையின் மூலமாய், ஆண்கள், பெண்களாக 30 பேர் அடங்கிய ஒரு குடும்பத்தார் ஞானஸ்நான தீட்சை பெற்று, தங்களின் கிறிஸ்துமார்க்க விசுவாசத்தை வெளியிட்டார்கள். இக்குடும்பத்தின் தலைவருக்கு ரெங்கசாமிபிள்ளை என்று பேர். இவர் முன் தென்னிந்தியா ரெயில்வே இன்ஜீனீரிங் டிபார்ட்டுமென்றில் ஹெட்கிளர்க்காக இருந்து பென்ஷன் பெற்றவர். ஒன்பது வயதுள்ள இவருடைய ஏக புதல்வியின் பேர் கன்னம்மாள் இவள் ஆர்க்கோணம் பெண் பாடசாலையில் 2-வது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தாள். இந்தச் சிறு பெண் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர தன் பெற்றோரிடத்தில் சொல்லியும் அவர்கள் கவனிக்கவில்லை. ஆயினும் கிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசம் அவளைவிட்டு ஒழிந்துபோகவில்லை. சடுதியில் வியாதிப்பட்டு மரணத்தருவாயிலிருக்கையில் அவருடைய பெற்றோர் அவளுக்கு கிறிஸ்தவளாக விருப்பமா என்று வினவ, தன் விருப்பத்தைப் பேசக்கூடாமையால் சைகையால் தெரிவித்தாள். பெற்றோர் குருவானவருக்குத் தெரிவித்து ஞானஸ்நானத்திற்கு ஒழுங்குபண்ணினார்கள். ஞானஸ்நானத்தின்பின், ஒரு சிலேற்று கேட்டுவாங்கி அதில் 'கர்த்தர் என்னை அழைக்கிறார்' என்று எழுதி, குருவானவர், தலைமை உபாத்திச்சி முதலியோருக்கு சலாம்செய்து, பெற்றோரை வழியனுப்பி, தான் நேசித்த அருமை யேசுவிடம் சேர்ந்தாள். இவளுடைய பரலோக பிரயாணத்தின் 2 வாரத்திற்குப்பின், அந்தப்பிள்ளையின் இன ஜனபந்துக்களாக 30 பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவின் மந்தையைச் சேர்ந்தார்கள்.

---

## ஜெப விஷயங்கள்.

1. தேவுனிசங்கோயில் புதிதாய் வந்த ஒட்டர்களுக்காகவும் அவர்களுடைய உற்சாகத்திற்காகவும் துதி;
2. தோர்ணக்கல், மெட்டபள்ளி, மூப்பாரம், சிரிராமகிரியில் நடந்தஸ்தோத்திரப்பண்டிகைக்காகவும் வந்தகாணிக்கைகளுக்காகவும் துதி;
3. சிரீராமகிரியில் புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்காக ஜெபம்.
4. புதிதாய் பள்ளிக்கூட வேலையை ஆரம்பிக்கும் Mr. சுவாமிதாஸ் அவர்களுக்காகவும் அம்மாளுக்காகவும்,
5. கொடிய வியாதியினால் சங்கடப்படும் சென்னகமலம் என்ற பேர்டிங்பிள்ளைக்காகவும்,
6. புதிதாய் ஆரம்பித்திருக்கும் செசவு வேலைக்காகவும்,
7. பள்ளிக்கூட வேலைக்கேற்ற தெலுங்கு வாத்தியார் கிடைக்கும்படியாகவும் ஜெபம்.

Printed at the C M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

MARCH, 1914 Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 4 - APR 1914 MADRAS

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்"
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 3] மார்ச்சு 1914 [விலை பை 3

## திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்.

ஆபீஸ் விலாசம்:

**அடைக்கலபுரம், பாளையங்கோட்டை.**

மக-ா-ா-ஸ்ரீ- அப்பாசாமி அவர்கள், முதலாளி.
Mr. ஜே. அன்புடையான், B.A., L.T. காரியதரிசி.
,, ஜி. தேவதாஸ், B.A., L.T. பொக்கிஷதார்.
,, வி. சாமுவேல், B.A. பொக்கிஷ காரியதரிசி.
,, செல்வநாயகம், உழைப்போர் ஐக்ய காரியதரிசி.
,, வி. எஸ். காலிஸன், பத்திரிகை மானேஜர்.

சங்கத்தின் பொதுவிஷயமான சகல கடிதங்களும் நடபடிக்கைகளும் காரியதரிசிக்கும், காணிக்கை நன்கொடை மணியாடர் முதலியவை பொக்கிஷதாருக்கும்; பத்திரிகை விஷயமான கடிதங்கள், பிரபந்தங்கள், சந்தா முதலியவை பத்திரிகை மானேஜருக்கும் அனுப்பப்படவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா 3 அணா. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும். பத்திரிகையின் சந்தா எப்போதும் முன்பணமாக அனுப்பப்படவேண்டும்.

CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 17 |
| Conversion ... ... ... ... | 19 |
| From the Telugu Field ... ... ... | 21 |
| From the Palyar Field .. ... ... | 22 |
| Missionary News ... ... ... ... | 23 |


பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 17 |
| குணப்படுதல் ... ... ... | 19 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 21 |
| பளியர்மிஷன் கடிதம் ... ... ... | 22 |
| மிஷனெரி வர்த்தமானம் ... ... ... | 23 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்கள் தோர்ணக்கல் மிஷனில் அத்தியக்ஷராகச் செய்த முதலாம் சுற்றுப்பயண விபரம் தெலுங்குநாட்டுக் கடிதத்தில் கண்டிருக்கிறது. மகம் மதியரான H. H. நிஜாம் இராஜ்யத்து அத்தியக்ஷரவர்கள் கவர்ன்மென்டார் அத்தியக்ஷரவர்களைக் சுற்றுப்பயணம். கண்யப்படுத்தியதும், சுவிசேஷம் செல்லாதபடி முன் தடையாயிருந்தத் தேசபாண்டிகள் என்னும் துரைகள் தாளமேள மெட்டுகளுடன் அவர்களை ஏற்றுக்கொண்டதும், தேவன் நமது சங்கத்துக்கும், விசேஷமாய் தோர்ணக்கல் மிஷனுக்கும் செய்திருக்கிற பெரிய தயவு அல்லவா? தடைகளை நீக்கிப்போடுகிறவர் நமக்கு முன்னே செல்லுகிறார் என்று அறிய இதிலும் தெளிவான ரூபகாரம் வேண்டுமோ? சுமார் ஆறு வருஷங்களுக்குமுன் கிராம அதிகாரிகளாலும், உயர்ந்த உத்தியோகஸ்தராலும் நமது புதுக் கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தின் குகையில் உருக்கப்படுகையில் கர்த்தரை நோக்கி மன்றாடிய தேவதாசர் இவ்வித செய்தியைக் கேள்விப்படுகையில் அகமகிழ்ந்து ஆண்டவரைத் துதிப்பது கடனே.

சென்னையிலிருந்து நண்பர் ஒருவர் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்கு ரூ. 1000 அனுப்பி தோர்ணக்கல், சிங்கரேணி மிஷன்களில் தண்ணீர் கஷ்டமுள்ள இடங்களில் கிணறு அடித்துக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறார். பர்மாவில் உத்தியோகம் செய்யும் நமது சில நன்கொடைகள். சகோதரர் சுமார் ரூ. 500 தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயம் கட்டுமானத்திற்கென்று அனுப்பியிருக்கிறார்கள். சாத்தன்குளம் சபையிலிருந்து ஒரு நேர்த்தியான மணிக்கோர்வையும் காணிக்கையாய் வந்திருக்கிறது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்

**வருஷக் கணக்கு.** நமது சங்கத்தின் வருஷாந்தக் கணக்குகள் மார்ச்சுமீ 31உயோடு முடிவாகிறதென்பதை நண்பருக்கு ஞாபகப்படுத்துகிறோம். சில சபைகளில் சேகரமாகும் காணிக்கைக்கு இனவழி ஜாபிதா ரிப்போர்ட்டில் அச்சிடப்படவேண்டுமென்ற விருப்பம் இருக்கிறதாகத் தோன்றுகிறது. இவ்வித ஜாபிதாக்களை ரிப்போர்ட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டுமானால், (1) ஜாபிதா ஏப்பிரல்மீ 15உக்குள் பொக்கிஷதாருக்கு அனுப்பப்படவேண்டும். (2) புருஷரில் ஒரு ரூபாய்க்கும் ஸ்திரீகளில் அரை ரூபாய்க்கும் குறைந்த தொகைகள் "தாழ்ந்த வரவு" என்று மொத்தமாய்க் காட்டப்படவேண்டும். (3) ஜாபிதாவில் கண்ட மொத்தத் தொகையும் பொக்கிஷதார் கொடுத்திருக்கும் ரசீதில் அல்லது ரசீதுகளில் கண்ட தொகையும் பின்னபேதமின்றி ஒத்திருக்கவேண்டும். (4) 1913ம் வரு ஏப்பிரல் 1உக்கும் 1914-ம் வரு மார்ச்சுமீ 31உக்கும் இடையில் பொக்கிஷதார் கணக்கில் சேர்ந்திருக்கும் தொகை மாத்திரம் ஜாபிதாவில் குறிப்பிடவேண்டும். (5) ஜாபிதாவைத் தெளிவாய்த் தமிழில் காகிதத்தின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதியிருக்கவேண்டும். இவைகளை நண்பர் கவனித்துக்கொள்ள அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

**தபசு நாட்கள்.** கர்த்தரின் காருண்யத்தால் இவ்வருடமும் திருச்சபையின் பச்சாதாப நாட்களாகிய லெந்தென்னும் தபசு நாட்களில் வந்திருக்கிறோம். இக்காலத்தில் நாம் விசேஷித்துச் சிந்தனை செய்யவேண்டிய பொருட்கள்:-பாவம், பாவப் பிராயச்சித்தம் என்பவைகளே. பூவின் பாவிகட்காய் கல்வாரியில் பாவப் பிராயச்சித்தம் செய்த நமது இயேசு அன்பனைப் பற்றிய தியானப் புஸ்தகங்கள் பல உள. நமது பத்திரிகை நிருபரும், நமது சங்கத்தின் சேயருமான பண்ணைவிளை கனம் தேவதாஸ் அம்மாளவர்களால் எழுதப்பட்டுள்ள "கல்வாரி தியானம்" என்ற புஸ்தகம் மிகச் சிறியதும், மகா இன்பமானதும், சொற்ப விலையுள்ளதுமானது. அதன் விலை ஒன்றேகால் அணாதான். நமது சபைகளின் ஜனங்கள் யாவரும் இதைப் போலொத்த தியானப் புஸ்தகங்களை இத்தபசு நாட்களில் வாசித்துத் தியானித்தால் நமது ஆத்ம ஜீவன் அடையும் வளர்ச்சி, புஷ்டி, ஆனந்தத்துக்கு அளவுண்டோ?

**இரண்டு மரணங்கள்.** நமது சங்கத்தின் வைராக்கியசேயரும், சி. எம். எஸ் குருவாயிருந்த கனம் M சீனிவாசகம் ஐயரவர்கள் சென்றமீ 12உ பரம அழைப்பைப் பெற்றுப் பரலோக இராஜ்யம் சேர்ந்தார்கள். அவர்கள் குருவாயிருந்த காலம் மூன்று வருஷந்தான். பாளையங்கோட்டையில் இரண்டு வருஷம் உபதேசியாராகவும் இருந்தார்கள். இக்காலங்களில் ...வர்கள் சபை ஊழியங்களை சுறுசுறுப்பாய் செய்துவந்தது ...றி, நமது சங்கத்தின் வேலையைச் சகலருக்கும் தெரிவித்து, ...த்தமானிப் பத்திரிகையையும் ஒழுங்காய் கொடுத்துவந்தார். பாளையங்கோட்டை (பள்ளிக்கூடங்கள் தவிர) சபையில், மூன்று சிநேகிதரால் கொடுக்கப்பட்ட 100 பிரதிகள் தவிர, இவர்களால் மாத்திரம் கொடுக்கப்பட்ட பிரதிகளின் தொகை 173. அவர்கள் குருவாயிருந்த மணற்காடு சபையிலும் மிகவும் ஏராளமான பத்திரிகைகள் செலவாகிவந்தது. சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானியில் எழுதப்படும் விஷயங்களும், விவரிக்கப்படும் வேலைகளும் சபை சந்திப்புக்காக வீடு வீடாய்ப் போகும்போது எந்த வீட்டாரோடும் இன்ப சம்பாஷணை செய்வதற்குப் பொருந்திய பொருட்களாய் மிகுந்த உதவிபுரிந்தன என்று சொல்லுவார்கள். கர்த்தர் அவர்களை மிகுந்த உபத்திரவத்தின் மூலமாய் தம்முடைய இராஜ்யத்தில் சேர்க்க சித்தங்கொண்டார். அவர்கள் வியாதியாயிருந்த நாலு மாசத்திலும் அவர்களிடத்தில் காணப்பட்ட விசுவாசமும், பொறுமையும் மிகவும் வியக்கப்படத்தக்கது. அருள்நாதரே அவர்கள் குடும்பத்தாரை ஆற்றித் தேற்றி அணைத்துக்கொள்ளக் கெஞ்சுவோமாக.

நமது அத்தியக்ஷரவர்கள் அம்மாளவர்களால் ஆதரிக்கப்பட்டு, சாண்டை போர்டிங்பாடசாலையில் கல்வி பயின்றுவந்த பனியப் பையன் வியாதிப்பட்டு எவ்வித சிகிச்சை செய்தும் குணமாகாமல் மறுமைக்குட் சென்றதும் துக்கப்படத்தக்க விஷயமே.

**குணப்படுதல்.** குணப்படுதல் என்னும் பொருளின்பேரில் நமது சங்கத்தின் பிரசிடென்ற் அவர்கள் எழுதிய அருமையான பிரபந்தத்தின் ஓர் பாகத்தை இம்மாசச் சஞ்சிகையில் பிரசுரிக்கிறோம். சுவிசேஷ ஊழியத்தில் கைவிட்டுக்கொள்வோரின் ஆத்மசீர் எத்தன்மையதாயிருக்கவேண்டியது என்று இப்பிரபந்தம் நன்குவிளக்கிக் காட்டுமாதலால் அனேகருக்கு மிகப் பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறோம். மேலும், இம்மாசம் வெளியாகியிருக்கும் பாகம் விசேஷமாய் புறமதஸ்தருக்குக் கிறிஸ்துமார்க்க சத்தியங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்ட மிக உதவிபுரியும் என்றும் எண்ணுகிறோம்.

**பனியர் மிஷன்.** யோசேப்பை அறியாத பார்வோன் தோன்றி யேகோவாவின் ஜனத்தை ஒடுக்கினதுபோல் இக்காலத்திலும் நமது பனியர் மிஷன் மிஷனெரிமாரை அறியாத ஓர் மலை உத்தியோகஸ்தன் தோன்றி கர்த்தாவின் தாசரான பனியரை இம்சித்து வருகிறான். இந்த மனிதன் இயற்கையில் பலவந்தனான துன்மார்க்கன். கிறிஸ்துமார்க்க விரோதி, பழிபாவத்துக்கு அஞ்சாதவன், கூலிவேலை செய்யும் கிறிஸ்தவப் பனியனை ஒய்வுநாளிலும் வேலைக்கு வரக் கட்டாயப்படுத்துகிறான். ஒய்வுநாளில் வேலைக்குப் போகாதவர்களை அடிக்கிறான்—அடைத்து வைக்கிறான்—துபாக்கி எடுத்துக் காட்டுகிறான்—மற்ற நாட்களின் கூலியையும் பிடிக்கிறான். சகோதரரே! கர்த்தரால் ஆகாதகாரியமுண்டோ? கர்த்தரை நோக்கி ஜெபிப்போம் நம்பிக்கையோடு ஜெபிப்போம். கர்த்தர் அவன் மனதை மாற்றுவார். அல்லது அனுகூலமான வேறு வழி செய்வார்.



**ஓர் இந்துப் பிரசங்கி.** இந்துமத அபிமானிகளான பல கனவான்கள், தனவான்கள், படிப்பாளிகள், பிரபுக்கள் முதலானோரின் செலவில் யோகி சீனிவாசக சுவாமி தம் பரிவாரத்துடன் ஜப்பான் தேசம் சென்று, இந்த மதக்கொள்கைகளைப் பிரசங்கிக்கப் போகிறார். சிந்தாயாத்திரையை விலக்கும் இந்துமதத்தைச் சிந்தாயாத்திரைசெய்து விருத்திபண்ண முயலுவது விந்தையிலும் விந்தையே!! பரலோகம் இகந்து பூலோகம் வந்து பாபாத்துமாக்களை மீட்கத் தம்மையே திரு அவதார பலியாகப் பிராணத்தியாகம் செய்த இயேசுபகவானின் இரட்சண்ய மார்க்கத்தைச் சுயதேசத்திலும் பரவச்செய்ய இன்னும் சிந்தனைசெய்யாத் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களான கனவான்களும், தனவான்களும், படிப்பாளிகளும் எத்தனை அனந்தம்!!

**பெரிய ஆசை.** ஆசைக்கு அளவில்லை. ஆசை ஆவலற்றவர்கள் இப்பூவுலகில் மிகச் சொற்பம். பெரிய ஆசை பெரிய சிந்தை யாவருக்குமிருப்பது அத்தியாவசியம். ஏனெனில் "பெருமையும் சிறுமையும் தான் தர வருமே." சிலர் பணத்தைச் சேர்க்க விரும்பி அதன் பேரிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்று சத்திய வேதம் சொல்லுகிறது. இன்னும் சிலர், தமக்குப் பெரும்பேர் படைக்க விரும்பி, இராஜ தந்திரிகளாயோ, அபிப்பிராயத்தைச் சாதிக்கிறவர்களாயோ, சேனைத்தலைவராயோ, வடதுருவ தென்துருவ எல்லைகளைச் சுற்றுகிறவர்களாயோ, தர்மம் செய்கிறவர்களாயோ திரிந்து அலைகிறார்கள். இவர்களால் நன்மையுமுண்டு தீமையுமுண்டு. வேறு சிலர் அறிவை அடையப் பேராவல்கொண்டு புஸ்தகங்களை வாசிப்பதும், சாஸ்திரங்களைப் பகுத்தறிவதும், நவீன இயந்திரங்களைக் கண்டுபிடிப்பதும், வியாதிகளுக்குப் புதப்புது சிகிச்சை முறைமைகளை அப்பியாசிப்பதுமாயிருக்கிறார்கள். இவர்களால் பொதுவாய் உலகத்திற்கு நன்மையே பிறக்கின்றது. ஆயினும் யாவரும் பேராவல் கொள்ளவேண்டிய ஒரு விஷயமுண்டு. அதென்னவெனில், மனுக்குலத்தில்தோன்றிய ஒவ்வொருவரும் நற்குணசீலராய் இவ்வுலகில் நடக்க பேராவல் கொண்டால், அதுவே யாவரும் மெச்சிக்கொள்ளக்கூடிய பெரிய சிந்தை. எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் நற்குணசீலராய் ஒழுகுவதுடன், ஆத்துமாக்களை அருள்நாதருக்கென்று ஆதாயம்பண்ணப் புகின் இதற்கொப்பான பெரிய சிந்தை வேறெதுவுமுண்டோ? "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்." "முத்துகளைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல" என்று சாலொமோன் ஞானியும் எழுதிவைத்தார்.

ஆத்மா ஒன்றும் ரட்சிக்காமல்
வெட்கத்தோடே, ஆண்டவா,
வெறுங் கையனாக, உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

---

## குணப்படுதல்.

குணப்படுதல். குணப்படுதலாவது மனம் மாறுதல், மறுபடியும் பிறத்தல், புது சிருஷ்டியாதல், நற்சீர்பொருந்தல் எனப் பொருள்கொள்ளும். மனுஷனுடைய மனதில் இந்நிலைமை இருவகையாய் உண்டாகிறது. ஒன்று காணக்கூடாத விஷயங்களாகிய தெய்வம், ஆன்மா முதலானவைகளைப்பற்றிய பேதமையான எண்ணங்கள் அகன்று மெய்யறிவடைதல். மற்றது அக்காரணமாய் நல்லொழுக்கம், நற்சம்பாஷணை, வேத தியானம் முதலியவை ஏற்பட்டு ஆத்ம சுத்தியடைதல். இவ்வண்ணம் சீரடைந்தோரைக் கிறிஸ்தவர்கள், குணப்பட்டவர்கள் என்பார்கள்.

கவனிப்பு: குணப்படுதல் இருவகையாய் உண்டாகிறதென்னும்போது அவை ஒன்றுக்கொன்று பேதப்பட்டவை என்று எண்ணக்கூடாது ஆத்ம சுத்தியே குணப்படுதல். அறிவு விர்த்தியானது அதற்கு நடத்தும் பெருங் கருவியாயிருக்கிறது

முதலாவது: மெய்யறிவடைதல். 'இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்' என்ற வேத வசனத்தின் பிரகாரம் நமது சம்பாஷணை ஒழுக்கம் முதலியவை உத்தமமாயிருக்க நம் இருதயத்தில் தெளிவான அபிப்பிராயங்கள் உதயமாவது இன்றியமையாத அவசியம். ஆதலால் 'சத்தியத்தை வாங்கு அதை விற்காதே' என்று ஒரு ஞானி உரைத்திருக்கிறார். எவ்விஷயத்தைப்பற்றியும் சத்தியமான கோட்பாடெதுவோ அதைத் தேடி விஜாரித்து கண்டறிந்து கண்டுபிடித்துக்கொள்ளவேண்டும். சத்தியமான அபிப்பிராயங்களை அறிந்து தெளிவடையாமல் நல்லொழுக்கத்திற்றேறி ஆத்தும சுத்திபெற முயலுதல், சொரிமணலில் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டுவதற்குச் சமானமாயிருக்கும். மனுஷன் தெளிவடைந்து மெய்யறிவு பெறவேண்டிய விஷயங்களாவன:—1. மெய்யான கடவுள் ஒருவர். 2. அந்த ஒரே கடவுளை விக்கிரகத்தின் மூலமாய் வணங்கக்கூடாது. 3. அக்கடவுள் ஏகத்துவமாயும் திரித்துவமாயுமிருத்தல். 4. அத்திரியேகத்துவத்திலுள்ள கிறிஸ்து அனாதியான தேவவஸ்து.

கவனிப்பு: ஒன்றான மெய் வேத நூல்களை வாசித்தும் கடவுள் நமக்கு அளித்திருக்கும் அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்தும் மேற்கண்ட சங்கதிகளை புத்தி பூர்வமாய் ஒத்துக்கொள்ளக்கூடியதாவென்று நிதானிக்கவேண்டும்.

(1) கடவுள் ஒருவர்.—(a) காரணமின்றிக் காரியமில்லை என்கிற பிரமாணத்தின்படி நமது பஞ்சபுலன்களாலும் நமக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்ற இவ்வுலகமும் அதிலுள்ள சமஸ்த பொருட்களும் உண்டாவதற்கு மூலகாரணரான ஒருவர் இருத்தல் வேண்டும். சூரிய சந்திராதிகளின் உதயாஸ்தமனமும், பிராணிகள் தாவரங்கள் முதலியவற்றின் தோற்றம் ஒடுக்கம் முதலியவையும் அததற்கேற்பட்ட மாறாத பிரமாணங்களுக்கமைந்து இருப்பதினால் அவையெல்லாம் ஒருவராலேயே ஏற்பட்டனபோல் தோன்றுகின்றமையாலும் கடவுள் ஒருவரே இருத்தல் வேண்டும்.

(b) வைபிளாகிய சுருதியில் 'இஸ்ரவேலே கேள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்' உபாகமம் 6: 4 'கர்த்தரே தேவன்; அவரையல்லாமல் வேறொருவருமில்லை.' உபாகமம். 6: 35. 'ஒரே தேவன் உண்டு; அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை.' மாற்கு 12: 32. இவைபோன்ற அனேக வசனங்களும் உள.

(c) தென் இந்தியாவிலுள்ள ஞானிகளிற் பலரும் இவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். திருவள்ளுவர் தாம் இயற்றிய குறளில் 'அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு' என்றும், 'தனக்குவமையில்லான் தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது' என்றும் கடவுளின் ஏகத்துவத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

'ஒருவனேயொருத்தி யொன்றென்றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்துநின்று போவது மதலாலே
தருபவனொருவன் வேண்டுந்தான் முதலீறுமாகி
மருவிடு மனாதிமுத்த சித்துரு மன்னிநின்றே'

என்று சித்தியார் பாடியிருப்பதுடன் இவைபோன்ற கருத்துள்ள ஞானவாக்கியங்கள் பல உண்டு.

(2) கடவுளை விக்கிரகத்தின் மூலமாய் வணங்கக்கூடாது. இந்துமார்க்கத்தின் அதி பூர்வ கிரந்தங்களில் விக்ரக ஆராதனை தவறு என்பதற்கு பல அத்தாக்ஷிகளிருக்கின்றன. கிறிஸ்தவ சுருதியில் கொலை களவு முதலிய பாதகங்களைப்போல் விக்ரக வணக்கமும் ஓர் மகா பாதகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது களவு செய்யாதிருப்பாயாக வென்ற பிரமாணம் கொடுக்கப்பட்ட அதே சமயம் 'மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின்கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கொப்பான ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்ரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்' என்ற கட்டளையும் கொடுக்கப்பட்டது. 'யாதொரு சிலையையும் நிறுத்தவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்' உபாகமம். 16: 22

(3) திரித்துவம். கடவுள் ஒருவராயினும் அவர் மூவராய் இருக்கிறார் என்பது கிறிஸ்துமார்க்க உபதேசம். 'ஏக தேவனைத் திரித்துவமாகவும் திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டுமென்பதும், அத்திரித்துவத்திற்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென்ற காரணநாமம் இடப்பட்டிருப்பதாயும் அம்மூவரில் ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தேவனென்றும் கர்த்தரென்றும் அறிக்கையிடவேண்டுமென்றும், அப்படியிருந்தாலும் மூன்று தேவர்கள் உண்டென்றும், மூன்று கர்த்தர்கள் உண்டென்றும் சொல்லக்கூடாதென்றும், அம்மூவரும் ஒரே தேவ தன்மையும் சமவல்லமையும், சமமகிமையும், சம நித்திய மகத்துவமுமுடையவரென்றும், சிருஷ்டிக்கப்படாதவரென்றும், அளவிடப்படாதவரென்றும், கிறிஸ்துமார்க்க சித்தாந்தமடங்கிய விசுவாசப்பிரமாணத்திற்கண்டிருக்கிறது. இவ்வுபதேசம் மனிதர் சாதாரணமாய் அறிந்துகொள்ளக் கூடாததும், உணர்ந்துகொள்ளக் கூடாததுமான ஆழ்ந்த கருத்துள்ளதுதான்.

(4) திரியேகத்துவத்திலுள்ள கிறிஸ்து அருநீ தேவன் திரித்துவத்திலுள்ள குமாரனென்னப்பட்டவரே கிறிஸ்து. மானிடரின் ஆத்ம ஈடேற்றத்தின் பொருட்டு அவர் மனுடாவதாரஞ்செய்து அக்கிரியையை நிறைவேற்ற அனுதியாகவே குறிப்பிடப்பட்டவரானதுபற்றி 'அபிஷேகம் பண்ணப்பட்டவர்' என்றர்த்தமுள்ள கிறிஸ்து என்ற நாமம் பெற்றவரானார். அவர் மனுடாவதாரம்செய்யுமுன் அவரைப்பற்றி வேதாகமத்திற் சொல்லியிருக்கும் இடங்களில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சில நாமங்களாவன:—அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு, இம்மானுவேல். இவர் பிரமாண்டபொருள் சர்வமும் சிருஷ்டிக்கப்படுவதற்குக் காரணராயிருந்தபடியால் வார்த்தையென்ற பெயரும் பெறலானார். அவர் மனுடாவதாரம்செய்த நோக்கத்தைக் குறிக்கும் பொருட்டு 'இரட்சகர்' என்றர்த்தமுள்ள இயேசு என்ற நாமமும் சூடப்பெற்றார். கிறிஸ்தவர்களின் விசுவாசப்பிரமாணத்தில் இவரைப்பற்றி 'ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்குமுன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர் (பிதாவோடே ஒரே தன்மையுடையவர்) தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்தேவனில் மெய்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர் பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்' என்று கண்டிருக்கிறது. இதற்காதாரமாக வேதாகமத்திற் காணப்படும் அனேக வசனங்களுள் சிலவற்றை இங்ஙனம் கூறுகிறோம்.

(1) "தீர்மானத்தின் விபரம் சொல்லுவேன், கர்த்தர் என்னை நோக்கி நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன்" சங்கீதம் 2: 7. இவ்வார்த்தைகள் கிறிஸ்து மனுஷாவதாரம் செய்ததற்கு சுமார் 1000 வருஷங்களுக்குமுன் தாவீதரசனால் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது

(2) "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியில் தேவனோடிருந்தார், சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று: உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" யோவான் 1: 1—3.

(3) "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் யோவான் 8: 58. ஆபிரகாம் கிறிஸ்துவின் அவதாரத்திற்கு 2000 வருஷங்களுக்குமுன் இருந்தான்.

(4) "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" (யோவான் 14: 9) என்றும், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவான் 10: 30) என்றும் கிறிஸ்துதாமே திருவுளம் பற்றியதால் அவர் தெய்வத்தில் தெய்வமானவர் என்று விளங்குகிறது.

---



## தெலுங்குநாட்டுக் கடிதம்.

தோர்ணக்கல் மிஷனில் மகாகனம் அசரியா அத்தியட்சரவர்கள் செய்த சுற்றுப்பிரயாணம்.—

சர்க்கார் சகாயம் நம் அருமை அத்தியட்சரவர்களின் பிரயாணத்தில் தேவ ஊழியம் சுளுவாய் நிறைவேற மிகவும் நல்ல ஏற்பாடுகள் நடந்தேறின. H. H. நிஜாம் இராஜ்யத்தின் முக்கிய ராஜதானிப் பட்டணத்தில் உள்ள சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களான ரெவினியூ செக்ரற்றேரி உவேக்பீல்ட் துரையவர்களும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஹங்கின்ஸ் துரையவர்களும் அனுப்பிய உத்தரவால், உவாரங்கல் ஜில்லாவிலிருந்து 2 போலீஸ் ஜவான்கள் பந்தோபஸ்துக்கு வந்ததுமன்றி மானுக்கோட்டைத் தாலுகாவிலிருந்து 2 ஜவான்களும், ஒரு பேஸ்காரும், ஆங்காங்குள்ள கிராம உத்தியோகஸ்தர்களான கிராமமுனிசீபு, கர்ணம், (போலீஸ் பட்டியால் பட்வாரி) விட்டியான், தலையாரிகளும், சில்லறை வேலைகளுக்குரிய தாழ்ந்த வேலைக்காரர்களும் தங்களால் இயன்ற ஊழியபாலனங்களை மிகவும் அன்புடனும் கண்யத்துடனும் நிறைவேற்றினர். இவர்கள் எல்லோரும் சர்க்காரின் சம்பளம் வாங்குகிறவர்களும் சிலர் மானிய நிலங்களையும் அனுபவிக்கிறவர்கள். ஓர் காலத்தில் சுமார் 10 வருஷங்களுக்கு முன் தேவ ஊழியர், கிராமங்களில் பிரவேசிக்கக் கூடாமலும் வெளியே கூடாரம் அடிக்கவிடாமலும் தண்ணீருக்குக் கிணறுகளை விலக்கினவர்களுமான இப்பிராந்தியங்களின் கிராம அதிகாரிகள் நம் மிஷன் பட்சமாய் நிற்பதைப் பார்க்கும் நாம் நம்மை இன்னமும் அவர் பாதத்தில் அதிகமாய்த் தாழ்த்தி ஜெபிக்க ஏவுகிறதல்லவா? கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

தேசப் பாண்டிகள். தேசப்பாண்டிகள் என்ற துரைகள் நம் அருமை அத்தியட்சரவர்களைத் தேச குருவென்று அவர்களிருக்கிற இடம் வந்து கண்டு பேசிப் போகிறதுமின்றி தங்கள் மதில்கள் சூழ்ந்த கோட்டை கிரஹங்களுக்குள் இட்டுக்கொண்டு பூமாலைகள் போடுவதும், சுவாசனைகள் அவர்கள் மீது கொட்டுவதும், தாள மேள மெட்டுகளுடன் பஜனை செய்து அங்கீகரிப்பதும் தேவச்செயலேயன்றி வேறென்ன? இவர்களே ஓர் காலத்தில் கிறிஸ்துமார்க்க சம்பந்தமாய் அட்டகாசம் செய்தவர்கள். இப்போது தேவனுடைய பிள்ளைகளுக்கு இவ்வாறு செய்வதை நினைத்து முன்னைவிட அதிகமாய் நம் எஜமானின் பாதம் பணிவது நமது கடமையல்லவா?

இந்திய சபை மேலே காட்டிய கண்ய வகையருக்கள் இவ்வாறு நிற்க, இந்திய சங்க சிஷர்கள் தம் சுயதேச பிரதான குருவை உபசரித்த வரலாற்றை என்னவென்று சொல்ல!! தம் ஊருக்கு சுமார் ஒரு மைல் இரண்டுமைல் எதிர்மாலைகள் உற்சாகப் பாடல்கள், மேள தாளங்களுடனும், துப்பாக்கித் தொனிகளுடனும், பாலர்கள் ஜெண்டாக்களுடனும், கூடாரம் வரை வந்து கைகூப்பிக் கர்த்தரைப் பணிந்து பிரார்த்தித்து நின்றதும் பார்ப்போரான எத்திரத்தாருக்கும் ஆச்சரியமான காட்சியே தங்களின் பிரதான குருவை அவர்களது ஊஸ்தானத்திலிருந்து பிரார்த்தனை ஸ்தலத்துக்கு போகும் மார்க்கங்களை இருபக்கங்களிலும் ரஸ்தா மோஸ்தராக சுண்ணம் அடித்த கற்களால் வரிசை படுத்தி இருந்ததும் மிக்கச் சிறப்பாயிருந்தது. இவ்வளவு இளம்பிராய சிஷர் இவ்வித நாகரீக குரு பக்திவினயம் காட்டியது ஒரு முன்னேற்றம் என்று ஐயமற சொல்லத்தக்கதே.

ஞானஸ்நானம், திடப்படுத்தல் ஞானஸ்நானம் திடப்படுத்தல் முதலியவைகளுக்கு ஆயத்தப்படுத்தப்பட்ட விசுமும் அவர்கள் நம் பிஷப் அவர்களிடம் பரீக்ஷைக்கு வந்தபோது இரண்டொரு இடம்தவிர மற்ற இடங்களிலுள்ளவர்களின் தேர்ச்சி வியக்கப்படத்தக்கதும், கர்த்தரை ஸ்தோத்தரிக்கத்தக்கதாயுமிருந்தது.

வீடு சந்திப்பு. தங்கள் பிரதான குரு வருகைக்காக தங்கள் சின்னஞ் சிறு வீடுகளை வெள்ளையடித்து செம்மண்ணிட்டு முன்னற ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். அந்தந்த ஊரில் நம் பிஷப் அவர்கள் போகும்போது தங்கள் தலைவாசல் முதல் உள்வாசல் வரை வஸ்திரங்களை விரித்தவர்களும் மாலையிட்டவர்களும் நமஸ்காரம் செய்து காணிக்கைகள் கொடுத்தவர்களும் உண்டு. சுயதேச அத்தியட்சரவர்களிடம் தாராளமாய் வெகு பக்தியுடன் தங்கள் நலாவஷ்டங்களைச் சொல்லிக்கொண்டவர்களும் ஜெபிக்கக் கேட்டவர்களும் உண்டு. தங்கள் பாலர்களை எடுத்துக் காட்ட அருமை அத்தியட்சரவர்கள் அவர்களை ஆசீர்வதித்ததும் ஜனங்களின் அன்பைக் கவர்ந்துகொள்ளத்தக்கதாயிருந்தது. 'இனம் இனத்தை அறியும்' என்ற முதுமொழி திண்ணமே. மேலே காட்டிய சன்மானம் இவர்களது முந்திய குருக்களுக்குச் செய்த சன்மானமாதலால் இது இப்பொழுது சுலப அப்பியாசமாயின.

கோடைகள் இந்தச் சுற்றுப்பிரயாணத்தில்:—

(1) இந்து மூலை தேவதைகள் நம் அத்தியட்சரவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டன.

(2) இந்து தேவஸ்தானம் இயேசுவின் நாமத்தினால் முழங்கால் ஊன்றும் ஜெபஸ்தலமாயிற்று.

(3) பிள்ளைகள் ஒப்புவிக்கப்பட்டார்கள். வலைசைபோதல் என்னும் பயத்தால் சிற்சில இடங்களில் தங்கள் பிள்ளைகளை தோர்ணக்கல்லுக்கு விடமாட்டோம் என்றோர் பிள்ளைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

(4) மங்கள சூத்திரம் (திருமங்கிலியம்) மாற்றமாக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்துமார்க்க விவாஹ மங்கிலியம் (தாலி) சூலாயுத வெங்கடேஸ்வர ரூபமுள்ளது. இப்போ சிலுவை ரூப ( † ) மங்கள சூத்திரமாக்க சர்வசம்மதமாயின. இதற்கு நம் அத்தியட்சரவர்கள் செய்யப்போகும் சுலப நியமம் வியக்கப்படத்தக்கது. இப்போது ஜனங்களின் தப்புத்தாலியை எடுக்கும்படி மகா கனம் பிஷப் அவர்கள் ( † ) சிலுவைத்தாலி முன்னதாகச் செய்து வைத்துக்கொள்ள ஏற்பாடாயின.

(5) பூமி. மாட்டேடு கர்ணம் மேது மிஷனுக்கு பள்ளிக்கூடம் ஜெபஸ்தலம் கட்டிக்கொள்ள பூமி கொடுத்ததுடன், ஷெட்டியூர் முக்கியஸ்தரின் பிள்ளைகள் இங்கிலீஷ் படிக்கவும் அதற்கென்று ஒரு மிஷன் உபாத்தியாயரும் பிரதிபலனாக நம் அத்தியட்சரவர்களிடம் கேட்டுக்கொண்டபடி கொடுக்கப்பட்

டார்கள் இது ஓர் சபை ஆதரவு நடந்தேறும் சாதனமாகத் தக்கதாக ஜெபிப்போமாக.

ஷையூர் சர்க்கார் பள்ளிக்கூடம் பார்வையிடப்பட்டு அத்தியட்சரவர்கள் இனாம் அளித்தார்கள்.

பரீட்சைகள் மிஷன் கிராமப்பள்ளிக்கூடங்கள் பரீட்சிக்கப்பட்டு தேறினவர்களுக்கு இனாம் கொடுக்கப்பட்டது.

சுயவெறுப்பு. தோர்ணக்கல் பாடசாலை ஆண்பிள்ளைகள் இரப் பிரயாணத்தில் கிறிஸ்தவ கிராமங்களில் பாட்டுகளால் ஜனங்களை உற்சாகப்படுத்தியதுடன் பெற்றோர், பிள்ளைகளிடம் தங்கள் முந்தின ஸ்திதியையும் தாங்கள் மிஷனால் பெற்ற நன்மைகளையும் சாட்சியிட்டார்கள். இது பாடசாலை போஷணை கர்த்தாக்களுக்கு உற்சாக சமாச்சாரம். ஆதலின் நம் நற்கிரியைகளுக்குப் பலனுண்டென்பதை மறவாது அதிக உற்சாகத்துடன் இன்னும் தளராது முயற்சிப்போமாக.

உற்சாக விஷயங்கள். பாபோஜிகூடம் 1907 ஏப்பிரல் 17உ நான் சுவிசேஷப் பிரசங்க ஊழியமாய் முதல் முதல் போனேன். இதுவே அவர்கள் முதலாவது கேட்ட நற்செய்தி. சுமார் 3 வருஷங்களாய் இவர்களைப்பற்றி ஒன்றுமில்லை. இதன்பின் இவர்கள் கிறிஸ்தவர்களானார்கள். 1912 ஏப்பிரல்மாசம் இச்சபையை நான் சந்தித்தபோது அவ்வளவு திருப்தியில்லை. மானது வருஷம் ஜனுவரி 14உ 35 பேர் ஞானஸ்நானம் பெற்றதுடன் 17உ சுமார் 12 மைல் நடந்து திடப்படுத்தலும் பெற்றார்கள்.

ஸ்ரீராமகிரி. இது பால்ய சபை. முதலில் கிராம அதிகாரிகளின் தன்பக்திற்காக வந்தவர்கள். 5 மாசங்களுக்கு முன் நம் பத்திரிகையில் சில பல பலவீனங்களை எழுதி ஜெபிக்கக் கேட்டிருந்தேன். அந்த ஜெபத்தின்பலனை நாளடைவில் விர்த்தி காணப்பட்டிருக்கிறது. கன்குடி மாறி வருகிறது. பேர்மாற்றம், ஓய்வுநாள் ஜெபாராதனை நடக்கேறி வருகிறது. இவர்கள் மிகுந்த ஏழைகளாயினும் காணிக்கை சேர்க்கும் விதமும், அதைப் படைக்கும் மாதிரியும் இங்கு விபரிக்க இடமில்லை. இவர்களின் யதார்த்த இருதய சுருக்கப் பிரார்த்தனையும் கேட்க வெகு இன்பமானது. அந்தோபாவின் திருநாள் காணிக்கை 1 ரூ. 13 அணா. கடந்த ஜனுவரிமீ 22உ மகா கனம் அத்தியட்சரவர்கள் பிரயாணத்தில் 37 பேர் ஞானதீட்சை பெற்று சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலே காட்டிய சம்பவங்கள் நம் ஆண்டவரின் திருவாக்கை நினைப்பூட்டுகிறதல்லவா? 'உன் ஆகாரத்தைத் தண்ணீர்களில் போடு; வெகு நாட்களுக்குப் பின் அதன் பலனைக் காண்பாய்' கடைசியாக கனம்: பிஷப் அவர்கள் புனைவண்டி மார்க்கமாய் தோர்ணக்கல் போகும் மார்க்கத்தில் மானுக்கோட்டை ஸ்டேஷனில் உள்ள சின்ன மந்தை வந்து சந்தித்துடன் சில இந்து மகமதிய சிநேகிதர்களும் விசேஷமாய் ஓர் பிராமணனும் (Mr. கோபால்ராவ்) மாலைபோட்டு உபசரித்தனர்

இதன்பின் தோர்ணக்கல்லில் திடப்படுத்தல் நடந்தது. இவ்விதமாய் 3 பே ஞானஸ்நானம் பெற்றதுடன் 33 பேர் திடப்படுத்தப்பட்டார்கள். கர்த்தருக்கே துதி. ஆமென்.

டேவிட் தேவசகாயம்.

---

## பளியர்மிஷன் கடிதம்.

கர்த்தாவின் அளவற்ற காருண்யத்தால் நாங்களும் நமது கிறிஸ்தவர்களும் சுகம். இம்மாசத்துவக்கத்தில் பளியர் தாங்களிருந்த இடத்தைவிட்டு கர்த்தாவின் சித்தத்தின்படி நமது மிஷன் நிலமிருக்கும் சித்தன்பாறைக்கு 1½ மைலுக்கு அப்பாலே குடியிறங்கியிருக்கிறார்கள். 10 நாளாய் வீடுகட்டாமல் வெட்டவெளியில் பனியில்தான பளியரோடு பளியராய்க் கிடந்தோம் எங்கள் குடியிருப்பைத் நீங்கள் பார்த்திருப்பீர்களானால் கட்டாயம் அழுதேயிருப்பீர்கள். யேசையாவின் நாமத்தின் மகிமைக்காகப் படுகிற இப்பாடு எங்களுக்கு இன்பமாகத்தானிருக்கிறது. எங்கள் நாட்டையும் வீட்டையும்விட்டு இங்கே நாங்கள் படுகிற நானாவித சம்பூரணமான துன்பத்தையும் நாங்கள் பார்க்கும்போது இயேசுமகாராஜாவின் சுத்தக் கிருபைதான் எங்களுக்கு இவ்வளவு துன்பத்தையும் சகிக்க இன்பத்தைக் கொடுத்துக்கொண்டே வருகிறது. அவருக்கே துதியுண்டாவதாக. நாங்கள் உலகத்தில் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலானோம். இயேசுஐயாதான் எங்களுக்கு ஆலோசனைக் கர்த்தா; அவர்தான் எங்கள் சிநேகிதராயிருந்து துஷ்டரின் பொல்லாப்புகளுக்கு எங்களை விலக்கிக் காத்துவருகிறார். துஷ்டரான உத்தியோகஸ்தர் இன்னும் சீறிக்கொண்டுதானிருக்கிறார் அடே! வேதம்படிக்க வேண்டாம், முழங்கால்போட்டுக் கும்பிடவேண்டாம் என்று தன்னாலானமட்டும் பளியரைப் பயமுறுத்திப் பார்க்கிறார். சாம்பலை பூசும்படி பளியரைக் கட்டாயப்படுத்துகிறார். அவர் முயற்சிகள் இயேசுவின் பிள்ளைகளிடத்தில் செல்லுகிறதில்லை. பளியர் ஸ்திரப்படுவதற்கு கர்த்தர் செய்கிற கிரியை என்று நாங்கள் அவருக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் இயேசு ஒருவரைத்தான் கும்பிடுவோம் என்று பளியர் உறுதியாயிருக்கிறார்கள். இந்த இளங்கன்றுகளான கிறிஸ்துசபையை அழிக்க விரும்புகிற இந்த துஷ்ட சவுலுக்காகக் கண்ணீரோடு ஜெபிக்கப்பிரார்த்திக்கிறேன். உங்கள் ஜெபம்தான் எங்களுக்கு அடைக்கலம், கோட்டை, ஆறுதல், பெலன். இப்போது நாங்கள் குடியிறங்கியிருக்கிற இடத்துக்கும் முன் நாங்கள் குடியிருந்த இடத்துக்கும் உத்தேசம் 7 மைல் இருக்கும். இன்னும் வீடு பள்ளிக்கூடம் கட்டவில்லை; இன்னும் வெளியில்தானிருக்கிறோம். பனியை மறைக்கிறது நாங்கள் மூடியிருக்கிற போர்வைதான்; என் மனைவிக்கு நல்ல சுகமில்லை. ஆனாலும் எங்கள் வேலை வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலுண்டானதால் அவரே தாங்கப் பெலன் கொடுத்துவருகிறார். அவருக்கே துதி. துஷ்டர் எங்களைப் பகைத்தாலும் எங்களைப்பற்றிய பயத்தையும் கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கிறார். இன்னும் வீடும் பள்ளிக்கூடமும் கட்ட உத்தேசம் ரூ. 20 போல் செல்லும். என்றாலும் கேப்பை சாப்பாட்டுக்கு இருக்கிற பளியர் சும்மா கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாத ஏழைகளுக்கு மாத்திரம் ரூ 2—4—0-க்கு இன்னும் கேப்பை வாங்கிக்கொடுத்துக் கட்டவேண்டும். நமது மிஷனுக்கு கஷ்டமுண்டாகாமலிருக்கவே நமது கிறிஸ்தவர்களுக்கும் ஆசை. இப்போது



அவர்கள் கண்டத்தில்தான் இவ்வருஷம் வெள்ளாண்மைசெய்யப்போகிறார்கள். இப்போதிருக்கிற உத்தியோகஸ்தர் நாங்கள் மாத்திரம் இங்கே இல்லாதிருந்தோமானால் இங்கேயே அடிக்கடி வந்து இந்த ஜனங்களைக் கலக்குவான். நாங்களிருப்பது அவருக்கு மகாதடையாயிருக்கிறது. நானும் ஜனங்களைத் தைரியப்படுத்தி இவரால் உங்களுக்கு ஒன்றும்செய்ய முடியாது, தைரியமாயிருங்கள்; இயேசுவாகிய அடைக்கலம் நம்மைக் காப்பாரென்று சொல்லிக்கொண்டு வருகிறேன். இப்போதும் நமது கிறிஸ்தவர்கள் நமது மிஷன் நிலத்தில் குடியிருக்க விரும்புகிறார்கள், இதற்காகத்தான் கர்த்தர் இப்படிப்பட்ட துஷ்டனைக்கொண்டு அவர்களைத் ஆயத்தம்பண்ணுகிறார் போலத் தெரிகிறது. முன் சித்தப்பன்பாறையில் நமது நிலத்தில் குடியிருந்து கண்டம் பயிரிட மனமற்ற பெரியோரும் இப்போது ஐயா, நம்முடைய நிலத்துக்கே போய்விடவேண்டும். நம் துரைக்கு எழுதி உடனே அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று என்னைத் துரிதப்படுத்துகிறார்கள். நமது நிலத்தில் எங்களுக்கு முதலாவது குடியிருக்கத் தகரத்தால் ஒரு வீடு கட்டிக்கொடுத்து ஒரு சிறு பள்ளிக்கூடமும் கட்டிவிட்டால் நமது நிலம் முழுவதும் குடியேற்றமாகிவிடும். பாரஸ்டுத் தொல்லை நீங்கும். இனங்கள் நமது மிஷன் ஏற்பாடுகளுக்கெல்லாம் கட்டுப்படுவோம் என்றும், அதற்கு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர்செய்துதருவோம் என்றும் பலமாய் நிற்கிறார்கள். முதலாவது வீடு கட்டுவதில் நாம் வேலைசெய்தல் மகா அவசியம். அப்போது குடியேற்றம் தன்னாலாகும். அவர்களை நமது நிலத்தில் குடியேற்றுவதால் அனேக நன்மையுண்டு. எங்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.

A. டேவிட்

---

## மிஷனேரி வர்த்தமானம்

சுவிசேஷத்தின் வல்லமை.—அமெரிக்காக் கண்டத்தையடுத்த தீவுகளொன்றில் ஹைடாஸ் என்னும் ரத்தப்பிரியரான ஓர் ஜாதியார் உண்டு. ஓர் காலத்தில் அந்நிய மனுஷர் அத்தீவுக்குப் போனால் உயிர்தப்பி திரும்புவது அரிது. ஆனால் ஆண்டவர் அவர்களுக்குள்ளும் தமது ஆச்சரியமான கிரியைகளை நடப்பித்திருக்கிறார். பலர் உத்தம கிறிஸ்தவர்களாகி ரக்ஷகரின் அன்பில் நிலைத்திருக்கிறார்கள். அவ்விடத்திலுள்ள மிஷனெரியொருவர் சுவிசேஷ பிரசங்க வேலை செய்த போது, மார்க்க விரோதியான ஒரு பொல்லாதவன் கூடி நின்றவர்களைப் பார்த்து "இந்த மிஷனெரி சொல்வதைக் கவனியாதேயுங்கள். தேவனே கிடையாது" என்று சொன்னான். அதைக் கேட்ட கிறிஸ்தவனொருவன் "நீ சொல்லுகிறபடி தேவன் ஒருவர் உண்டென்பதை நாங்கள் விசுவாசிக்கவில்லையானால் நீ இப்போது நிற்கிற இடத்தில் நிற்பாயா? என்பதாக விடைபகர்ந்தான்.

ஓர் இந்து கனவானின் நன்கொடை.—வட இந்தியாவிலுள்ள ஒரு இந்து கனவான் சி எம் எஸ். சங்கத்தார் பள்ளிக்கூடம் வைத்து நடத்துவதற்கென்று 13 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தையும் அதைச் சேர்ந்த கட்டடத்தையும் இனாமளித்திருக்கிறார். அதோடு, தாழ்ந்த ஜாதியார் என்று எண்ணப்படுகிறவர்களுக்குள்ளும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படும்படி அதிகமான முயற்சி எடுத்துவருகிறார், மிஷனெரி ஊழிய சம்பந்தமாக இந்துக்களும் இவ்வித உதாரத்துவமான ஈகைக் குணத்தைக் காண்பிப்பது கிறிஸ்து சபைக்குக் கர்த்தர் காண்பிக்கும் தயவென்று சொல்லலாமல்லவா?

பெரிய வேலை.—இங்கிலாந்து தேசத்திலே 76 வயதுள்ள வயோதிபனான செம்மான் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய ஜீவனார்த்தத்துக்கென்று கஷ்டத்தோடு வேலை செய்யவேண்டியதிருந்தபோதிலும், மிஷனெரி ஊழியத்தில் தனக்கிருந்த அவாவினாலே, வாரந்தோறும் புதிதாக ஒரு ஜதை ஜோடுசெய்து அதை விற்று கிரயத்தைக் காணிக்கையாகக் கொடுத்துவந்தான். இந்த மனுஷன் அதிக வியாதிப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும்போது, தன்னிடம் வந்த ஒரு ஆண்டவருடைய ஊழியக்காரனைப் பார்த்து அந்தப் பெரிய வேலை எவ்விதமாய் நடைபெற்று வருகிறது என்று கேட்டான், அதற்கு அந்த தேவ ஊழியன் "வேலை உற்சாகமாய் நடக்கிறது. ஜனங்களும் மிகுந்த உதாரத்துவமாய்க் காணிக்கை கொடுத்துவருகிறார்கள்" என்று விடை பகர்ந்தார். அதைக் கேட்ட வயோதிபன், ஆண்டவரைத் துதித்துத் தன்னுடைய அற்ப சொற்ப ஜாமான்களையும் விற்று மிஷனெரி ஊழியத்திற்கே கொடுத்துவிடும்படியாகக் கேட்டுக்கொண்டபின் தனது கைகூப்பி ஸ்தோத்திரக் கீதம்பாடி சந்தோஷத்தோடு ஜீவனை விட்டான்.

ஆண்டவருக்கென்று வீட்டிலும் வெளியிலும் உழைப்பதில் தன் காலத்தைக் கழித்துவந்த இன்னொரு அம்மாளின் சுயவெறுப்பும் கவனிக்கத்தக்கது. 55 வருஷக்காலமாக ஒரு மிஷனெரி பெட்டிவைத்து அதில் காணிக்கை சேகரித்துவந்தார்கள். அதிக ஏழையாயிருந்தாலும ஒவ்வொரு வருஷத்திலும் 30 ரூபாய்க்கு அதிகமாக அவர்கள் பெட்டியிலே காணபபடும். அதிக விருத்தாப்பியத்தினால் பணம சேகரிக்க சகதியற்றுப்போன காலத்திலும், அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளில் தூர எறிந்துவிடப்படும் காய்கறிகளைச் சேர்த்து அதை அவித்து சொற்பக் கிரயத்துக்குவிற்று தன்னுடைய மிஷனெரிப் பெட்டியில் காணிக்கை சேகரித்தார்கள்.

ராஜ சாக்ஷியங்கள்—நமது மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியவர்கள், 1910-ம் வருஷத்தில் எடின்பரோ நகரத்தில் கூடின சர்வலோக மிஷனெரி சபைக்குத் தங்கள் வாழ்த்துதல் சமாச்சாரத்தையனுப்பி, மிஷனெரி ஊழியத்தில் தங்களுக்கிருக்கும் அவாவை வெளிப்படுத்தினார்கள், உகாண்டா நாட்டிலுள்ள அத்தியக்ஷாலயம் நெருப்புக்கிரையானபோது, அங்குள்ள ராஜாவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அதுவிஷயத்தைப்பற்றியுள்ள தங்கள் அநுதாபத்தைத் தெரியப்படுத்தினது மல்லாமல், அந்தக் கிறிஸ்தவர்கள் தாங்கள் பற்றிக்கொண்ட

விசுவாசத்துக்கடையாளமாக வேறொரு ஆலயத்தைச் சமர்ப்பிக்க அவர்களை உற்சாகப்படுத்தும் வசனங்களையும் எழுதியனுப்பினார்கள். சொற்பக்காலத்துக்குமுன் நடைபெற்ற உவெஸ்லியன் மிஷனெரி சங்கத்து நூற்றாண்டு உற்சவக்கூட்டத்துக்கு கிறிஸ்து மார்க்கத்தின் சிறந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் அச்சங்கத்தார் உலக முழுவதிலும் மார்க்க சம்பந்தமாய்ச் செய்துவந்திருக்கும் ஜனோபகார ஊழியத்தைத் தாங்கள் நன்குமதிப்பதாகவும், கடந்த நூறு வருஷ ஊழியத்தினால் உண்டான பலன்களுக்காக ஆண்டவரை முழு இருதயத்தோடே ஸ்தோத்திரிப்பதாகவும் செய்தியனுப்பினார்கள்.

கடந்த நவம்பர் மாதத்தில், எடின்பரோ சர்வலோக மிஷனெரி சங்கத்தின் தொடர்ச்சியாக, ஹாலந்து தேசத்திலுள்ள ஓர் பட்டணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அத்தேசத்து அரசியால் அனுப்பப்பட்ட ஒரு செய்தி வாசிக்கப்பட்டது. அது மிஷனெரி ஊழியத்தில் நம்மை உற்சாகப்படுத்துவதற்கு ஏதுவாயிருக்குமென்று எண்ணி இங்கு வரைகிறோம். "இந்த சங்கத்தார் எடுத்துக்கொண்ட பரிசுத்த ஊழியத்தில் எனக்கிருக்கும் வாஞ்சையைத் தெரிவிக்க சமயம் கிடைத்ததற்காக நான் ஆண்டவரை ஸ்தோத்திரிக்கிறேன். அவருடைய சத்தியத்தின் பிரகாசமே உலக முழுவதிலும் கதிர்வீசி அந்தகாரத்திலும் நிர்ப்பந்தத்திலுமிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும் தேவ அன்பின் ஐசுவரியத்தினாலே எல்லா மனுஷருடைய இருதயமும் சந்தோஷிப்பிக்கப்படவும் அவரை மன்றாடுகிறேன்" என்பதே. புறதேச மிஷன் சம்பந்தமாக இப்பேர்ப்பட்ட வாஞ்சையை ராஜ்யங்களின் தலைவர்களுக்குள்ளே பார்ப்பது, மிஷனெரி சபைக்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதம் என்றே சொல்லவேண்டும்.

மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்கள்.—மசூலிப்பட்டணத்தில் மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்களுக்கு வந்தனோபசாரமளித்த ஓர் கூட்டத்தில் அவர்கள் மறுமொழி கூறிய போது அவர்களுடைய அத்தியக்ஷ ஊழியத்தின் முதல் பதின்மூன்று மாசங்களில் மகாகனம்: சென்னை அத்தியக்ஷரவர்களுக்கு உதவியாக 43 பேருக்குக் குருப்பட்டமும், சுமார் 2000 பேருக்குத் திடப்படுத்தலும் கொடுத்திருக்கிறதாகச் சொன்னார்கள்.

---

சந்தா வரவு—1913.

| | | |
|---|---|---|
| Mr. D. தர்மக்கண் | ... முன்றடைப்பு | ... 0 6 0 |
| ,, தேவகிருஷ்டி | ... மூனூர் | ... 0 6 0 |
| ,, D. ஏகவடியான் | ... ரங்கூன் | ... 0 6 0 |
| ,, முத்துசாமி | ... சியோன்மலை | ... 0 10 0 |
| ,, S. D. ஏசுதாஸ் | ... தட்டப்பாறை | ... 2 2 0 |
| ,, மிக்கேல் | ... பணகுடி | ... 0 14 0 |
| ,, P. சாமுவேல் | ... போளூர் | ... 0 12 0 |
| ,, V. ஆசீர்வாதம் | ... பண்ணைவிளை | ... 3 0 0 |
| ,, R. பரஞ்சோதி | ... பாம்பன் | ... 1 2 0 |
| ,, G. விசுவாசம் | ... சாத்தூர் | ... 1 2 0 |
| ,, J. ஞானமுத்து | ... காரேந்து | ... 0 12 0 |
| ,, G. Ponniah | ... தூத்துக்குடி | ... 0 12 0 |
| Mr. S. V. தேவதாஸ் | ... சேலம் | ... 0 12 0 |
| ,, Y. தேவநேசன் | ... சென்னை | ... 1 0 0 |
| ,, S. P. ஆபிரகாம் | ... கரிசல்குளம் | ... 0 6 0 |
| ,, R. ஈசாக்கு | ... இரப்பேறி | ... 1 0 0 |
| ,, J. M. பொன்னுசாமி | ... நாகப்பட்டணம் | ... 0 12 0 |
| ,, S. H. தேவ இரக்கம் | ... இலங்கை | ... 1 2 0 |
| ,, P. நல்லதம்பி | ... டெமடேரியா | ... 1 8 0 |
| ,, S. N. தேவதாஸ் | ... செங்கற்பட்டு | ... 1 1 0 |
| ,, மால் நாடார் | ... சாயர்புரம் | ... 2 12 0 |
| ,, S. D. ஞானமுத்து | ... சென்னை | ... 1 2 0 |
| ,, P ஜெபமணி | ... சிவகாசி | ... 8 4 0 |
| ,, சித்தர் ஆபிரகாம் | ... சென்னை | ... 0 12 0 |
| போர்டிங் பெண்பாடசாலை | ... பாளையங்கோட்டை | ... 1 0 0 |
| கால்ட்வெல் ஆஸ்டல் | ... திருச்சிராப்பள்ளி | ... 1 8 0 |
| சி. எம். எஸ். நார்மல்ஸ்கூல் | ... பாளையங்கோட்டை | ... 2 0 0 |
| அம்பலம் சபையார் | ... | ... 1 4 0 |
| சி. எம். எஸ். ஹைஸ்கூல் | ... பாளையங்கோட்டை | ... 2 8 0 |
| சி. எம். எஸ். நார்மல்ஸ்கூல் | ... ,, | ... 3 0 0 |
| Mrs. யாகேல் அம்மாள் | ... ,, | ... 0 4 0 |
| ,, S. M. தேவதாஸ் | ... பண்ணைவிளை | ... 2 0 0 |
| ,, யோனத்தான் | ... தூத்துக்குடி | ... 0 12 0 |
| ,, கொர்நேலியு | ... சென்னை | ... 1 0 0 |
| ,, D. ஞானமுத்து | ... கண்டிகைப்பேரி | ... 0 6 0 |
| Miss R. A. Williams | ... பங்களூர் | ... 4 8 0 |
| Mr. S. ஞானமுத்து | ... வாரியாகொலா | ... 0 12 0 |
| ,, A. ஆசீர்வாதம் | ... தூத்துக்குடி | ... 1 6 6 |
| ,, D. சாமுவேல் | ... புதுக்கோட்டை | ... 1 0 0 |
| ,, A. யோசேப்பு | ... சென்னை | ... 0 4 0 |
| ,, ஜேம்ஸ் டேவிட் | ... இலங்கை | ... 0 12 0 |
| ,, ஜான் கோல்போர்ட்டர் | ... செல்லாப்பெட்டி | ... 0 8 0 |
| ,, M. ஜான்பிள்ளை | ... மதுரை | ... 0 12 0 |
| ,, என்றி | ... போலாறம் | ... 0 15 0 |
| ,, பிச்சமுத்து | ... பங்களூர் | ... 1 2 0 |
| ,, S. M. தானியேல் | ... பர்மா | ... 1 0 0 |
| ,, M. தர்மராஜ் | ... ரங்கூன் | ... 1 4 0 |
| ,, Y. ஆபிரகாம் | ... பர்மா | ... 0 6 0 |
| ,, துரைராஜ் | ... | ... 0 7 0 |
| ,, A. D. ஈசாக்கு | ... கால்கசாந்தி | ... 1 8 0 |
| ,, வேதமணி | ... ஈரோடு | ... 0 8 0 |
| ,, Moses சீனிவாசகம் | ... | ... 0 12 0 |
| ,, M. யோவேல் | ... இலங்கை | ... 1 0 0 |
| ,, பொன்னுசாமி | ... பாளையங்கோட்டை | ... 5 12 0 |
| ,, S. அருமைநாயகம் | ... உவெல்லாவாட்டா | ... 2 0 0 |
| ,, H. தேவதாஸ் | ... ஈரோடு | ... 1 2 0 |
| ,, J. சுவாமிதாஸ் | ... தூத்துக்குடி | ... 0 6 0 |
| ,, P. சாமுவேல் | ... பெருமாள்குளம் | ... 1 6 0 |
| Rev. J. Albert | ... சாத்தூர் | ... 20 12 0 |
| ,, S. M. Devadoss | ... சென்னை | ... 0 6 0 |
| ,, சாந்தையா | ... மசூலிப்பட்டணம் | ... 0 9 0 |
| ,, Y. ஞானமுத்து | ... குலையன்கரிசல் | ... 3 6 0 |
| ,, S. மாசிலாமணி | ... பேர்பிலான்குளம் | ... 1 4 0 |
| ,, S. பாக்கியநாதன் | ... போட்டாய்க்கலூர் | ... 1 2 0 |
| Head Master G. B. S. | ... சாட்சியாபுரம் | ... 0 12 0 |
| S. T. C. | ... பாளையங்கோட்டை | ... 2 0 0 |
| Catechist | ... முன்றடைப்பு | ... 1 0 0 |
| கனம் ராவுசாகிப் திரவியம் நாடார் | | ... 9 0 0 |

---

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

FEBRUARY, 1914 Registered No. M. 481

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 4 APR 1914

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 2] பெப்ருவரிமீ 1914 [விலை பை 3

## திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்.

ஆபீஸ் விலாசம்:

அடைக்கலபுரம், பாளையங்கோட்டை.

மக-ா-ா-ஸ்ரீ- அப்பாசாமி அவர்கள், முதலாளி.
Mr. ஜே. அன்புடையான், B.A., L.T. காரியதரிசி.
,, ஜி. தேவதாஸ், B.A., L.T. பொக்கிஷதார்.
,, வி. சாமுவேல், B.A. பொக்கிஷ காரியதரிசி.
,, செல்வநாயகம், உழைப்போர் ஐக்ய காரியதரிசி.
,, வி. எஸ். காலிஸன், பத்திரிகை மானேஜர்.

சங்கத்தின் பொதுவிஷயமான சகல கடிதங்களும் நடபடிக்கைகளும் காரியதரிசிக்கும், காணிக்கை நன்கொடை மணியாடர் முதலியவை பொக்கிஷதாருக்கும், பத்திரிகை விஷயமான கடிதங்கள், பிரபந்தங்கள், சந்தா முதலியவை பத்திரிகை மானேஜருக்கும் அனுப்பப்படவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா 3 அணா. தபாற் கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும். பத்திரிகையின் சந்தா எப்போதும் முன்பணமாக அனுப்பப்படவேண்டும்.

CONTENTS

Editorial Notes ... ... ... ... 9
Farewell Meeting ... ... ... ... 10
The Acts of the Missionaries ... ... ... 10
Arelius Augustine ... ... ... ... 13
I. M. S. T. Sunday ... ... ... ... 15

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 9
பிரயாணோபசாரக் கூட்டம் ... ... ... 10
மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... 10
அரிலியஸ் அகுஸ்தின் ... ... ... 13
இந்திய மிஷனெரி சங்க விண்ணப்ப நாள் ... 15

## பத்திராதிபர் குறிப்புகள்.

அருள்நாதரின் கடாட்சத்தால், சென்றமீ மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்கள் நமது தோர்ணக்கல் மிஷன் முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து, பல இடங்களைச் சந்தித்து, திடப்படுத்தல், ஞானஸ்நானம் முதலிய ஆவிக்குரிய பணிவிடைகளை நிறைவேற்றித் திரும்பினார்கள். கர்த்தர் அவர்கள் செய்த வேலையை ஆசீர்வதித்து, புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்கள் இரக்ஷாபெருமானின் பேரில் உயிருள்ள விசுவாசம் வைத்து கிறிஸ்துவின் உத்தம தொண்டர்களாய் நடந்துகொள்ளவும், திடப்படுத்தலைப் பெற்றவர்கள் மெய்யாகவே பரிசுத்த ஆவியின் அருளைப் பெற்று புது ஜீவனில் வல்லமையாய்ப் பலப்படவும் ஜெபிப்போமாக. மேலும், இம்மாதம் 16உ முதல் கோட்டையத்தில் நடக்கும் அத்தியக்ஷாதீன ஆலோசனைக் கூட்டங்களுக்குப் போய், மார்ச்சுமீ முதல் வாரத்தில் எல்லூரில் குருப்பட்டாபிஷேகம் பெறப்போகிறவர்களுக்கு நாலு நாட்களாய் விசேஷித்த ஆவிக்குரிய போதனைகள் சொல்லி 8உ பட்டாபிஷேக ஆராதனை நடத்துவார்கள். திருச்சபையில் இவ்வூழியங்களுக்கென்று அவர்களைப் பிரித்தெடுத்த சபாநாயகர்தாமே அவர்களைக்கொண்டு வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கப்பிரார்த்தித்து நிற்பது திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களின் கடமையல்லவா?

**தோர்ணக்கல் அத்தியக்ஷாவர்கள்.**

**இரண்டு நன்கொடைகள்.**

மிகச் சொற்பச் சம்பளம் வாங்குகிற தேவ ஊழியர் ஒருவர் தோர்ணக்கல் ஆலயக் கட்டுமானத்திற்கென்று அநாமதேய நன்கொடையாக ரூ. 24 அனுப்பினர். இலங்கை, தல்காஸ்வலை சபை மெம்பர்கள் மாதம் ஒன்றுக்கு ஆறு சதம், எட்டுச் சதமாகச் சேகரித்து தெலுங்குநாட்டில் ஒரு பிள்ளையை ஆதரிப்பதாக வாக்குச்செய்து அப்பிள்ளையின் பேரைத் தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் அதை எனக்கு வளர்த்திடு" என்பது வேத உரை.

## பிரயாணோபசாரக் கூட்டம்.

நாம் முந்தின சஞ்சிகையில் கூறியபடி நமது வித்யா மிஷனெரியாகிய Mr. சுவாமிதாஸ் அவர்களை ஜெபத்தோடு அனுப்புவிக்கும்படி ஓர் பிரயாணோபசாரக் கூட்டம் ஜனுவரி ௴ 12௳ சி. எம். எஸ். நூற்றாண்டு மண்டபத்தில் நடந்தது. பாளையங்கோட்டை திருநெல்வேலிப் பட்டணங்களிலுள்ள நமது சங்கத்தின் மெம்பர்களும், இங்குள்ள பாடசாலைகளின் பிள்ளைகளும் கூடிவந்திருந்தார்கள். Mr சுவாமிதாஸ் நமது ஜில்லாவின் தென்பாகத்திலுள்ள பலருக்கு நன்றாய்த் தெரிந்தவர்கள். அவர்களின் பிதாவாகிய காலஞ்சென்ற கனம்: S வேதமாணிக்கம் ஐயரவர்கள் மெஞ்ஞானபுரம் சேகரத்தில் வேலை பார்த்தமையால், மெஞ்ஞானபுரம் ஹைஸ்கூலில் படிப்பிலும், பக்தியிலும், பயிற்சி அளிப்பதிலும் கீர்த்திபெற்று விளங்கின கனம்: அம்புரோஸ் ஐயரவர்களால் கல்வி கற்பிக்கப்பட்டதுடன், ஆவிக்குரிய விஷயமாய் சிறுபிராயமுதலே வெகு கரிசனையாய் வளர்க்கப்படும் பாக்கியத்தையும் பெற்று, மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறி நீலகிரியிலுள்ள மிஷன், கவர்ன்மெண்டு பாடசாலைகளில் உபாத்திமை வேலை பார்த்துவந்தவர்கள். அவர்களுடைய மனைவியும் மெஞ்ஞானபுரம் கனம்: தோமாஸ் அம்மாள் அவர்கள் பாடசாலையிலும், பின்பு பாளையங்கோட்டை சாரா டக்கர் கல்விச்சாலையிலும் சகல சன்மார்க்க ஆவிக்குரிய விஷயங்களில் நன்றாய்ப் பயிற்றுவிக்கப்பட்டு மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறியவர்கள்தான். இவர்களை வழியனுப்பும் கூட்டத்திற்கு மகாகனம்: திருநெல்வேலி அத்தியக்ஷரவர்கள் வந்திருந்து அவர்களே பீடம் வகித்தார்கள். திருநெல்வேலி Mr. தாமஸ் முதலியாரவர்கள் எசாயா 60: 1—13ஐ வாசித்தபின், கனம்: N. தேவதாஸ் ஐயரவர்கள் ஜெபம் செய்யக் கூட்டம் ஆரம்பித்தது.

நமது சங்கத்தின் முதலாளியவர்கள் ஸ்தலத்தில் இல்லாததால், கனம்: கார் ஐயரவர்கள் அவர்களுக்குப் பதிலாக முகவுரையாக சில வார்த்தைகள் பேசியபின், பரி. மத்தேயு 11: 28—30 பேரில் புறப்பட்டுப் போகும் மிஷனெரிக்கு ஆலோசனையாகவும் கூடிவந்திருந்தவர்களுக்கு எழுப்புதலாகவும் மிகவும் அருமையான போதனை செய்தார்கள். கனம்: கார் ஐயரவர்கள் தாங்களே ஒரு மிஷனெரியானபடியால், ஒரு மிஷனெரிக்கு மனப்பாரமுண்டாகிச் சோர்படையக்கூடிய பல சமயங்களையும் ஏதுக்களையும் சுட்டிக்காட்டி Mr சுவாமிதாஸ் இவ்வித அநுபோகத்துக்குள்ளாகும் சமயமெல்லாம் இளைப்படைந்து அதைரியத்துக்கிடங்கொடாமல் "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்கிற அருள்நாதரின் ஆறுதல் வசனத்தை நினைத்து, மிக உற்சாகத்தோடும் முழு நம்பிக்கையோடும் அவருடைய நுகத்தைச் சுமக்க ஏவினதுடன், நமது பரம எஜமானின் நுகம் மெதுவாயும், அவருடைய சுமை இலகுவாயுமிருக்கிறது என்பதைச் சிறந்த திருஷ்டாந்தங்களுடன் விளக்கிக்காட்டினார்கள்.

கனம்: கார் ஐயரவர்கள் இச்சமயத்தில் சொல்லிய வார்த்தைகள் சமயோசிதமாயிருந்ததுமன்றி, கூடிவந்திருந்த யாவரையும் நமது புதிய மிஷனெரியையும் அனல்மூட்டிவிட்டது என்பதற்கு ஐயமில்லை. பின்னர், கமிற்றிமாரின் அருமையான ஆலோசனைகளும், அவர்கள் நமது வித்யா மிஷனெரிக்கு ஒப்புவிக்கும் கடமைகளும் அடங்கிய பிரபந்தம் கனம்: A. சவரிமுத்து ஐயரவர்களால் தெளிவாய் வாசிக்கப்பட்டது. இப்பிரபந்தம் வாசிக்கப்படுகையில் Mr. சுவாமிதாஸ் தங்கள் ஆசனத்திலிருந்து எழும்பி மிக வணக்கமாய் அவைகளை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு மிஷனெரி ஊழியத்தின்பேரிலிருந்த வாஞ்சையையும், இவ்வூழியத்திற்குக் கர்த்தர் அவர்களை அழைத்த முறையையும் விசேஷமாய் தோர்ணக்கல் ஊழியத்தைக் கர்த்தர் சுட்டிக்காட்டிய விதத்தையும் எடுத்துக்கூறி, தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஊழியம் மிகப் பொறுப்பான ஊழியமானதால் அதைநினைத்து எப்பொழுதும் ஜெபம் செய்யும்படியாக கூடிவந்திருந்தவர்களை விரும்பிக்கேட்டுக்கொண்டார்கள். இதற்குப்பின் கனம்: பிளாஸ் ஐயரவர்கள் கூடிவந்திருந்தவர்களின் நாமத்தினாலே நமது புதிய மிஷனெரியையும் அவர்கள் குடும்பத்தையும் ஜெபத்தின்மூலமாய் அறுப்புக்கு எஜமானின் திருக்கரங்களில் மிகப் பக்திவிநயமாய் ஒப்புவித்துக் கர்த்தரின் ஆசீர்வாதம் அவர்கள் குடும்பத்தின்பேரிலும் ஊழியத்தின்பேரிலும் தங்கும்படியாகவும், அவருடைய ஆவிக்குரிய வரப்பிரசாதங்கள் திரளாய் அவர்களுக்கு அருளப்படவும் மிகவும் கருத்தாய் வேண்டிக்கொண்டார்கள். பின்னர், மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் இவ்விதப் பயணோபசாரக் கூட்டம் திருச்சபையை அனல்மூட்டிப் பெரிய ஆசீர்வாதங்களை வருவிப்பதால், இக்கூட்டத்தில் பங்கு பெறும் அபூர்வ சலாக்கியம் சாமானியமானதொன்றல்ல என்று பயன்படப் பேசினார்கள். கடைசியாக, கனம்: R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள் நமது இரு மிஷன்களிலுள்ள அவசியங்கள், ஊழியங்கள், ஊழியர்கள், புதுக்கிறிஸ்தவர்களை நினைத்து ஊக்கமாய் ஜெபிக்கவே, மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதம் கூறக் கூட்டம் முடிந்தது. கூட்டம் முடிந்தபின் சங்கத்தின் அங்கங்களில் பலர் மேடையில் ஏறி நமது புது மிஷனெரியவர்களுடன் கைகுலுக்கி அவர்களைச் சந்தோஷமாய் வழியனுப்பினார்கள்.

---

## மிஷனெரிமார் நடபடிகள்.

அப். 16: 6—17: 15.

மக்கெதோனியா மாகாணத்தில் சபை ஸ்தாபனமான விபரம் இப்பாகத்தில் கண்டிருக்கிறது. இப்பாகத்தைப் பின்வருமாறு வகுக்கலாம்.

| | |
|---|---|
| (1) மக்கெதோனியாவுக்குப் போக தேவ நடத்துதல் ... ... ... ... | 6—10 |
| (2) பிலிப்பி சபை ஸ்தாபனம் ... | 11—15 |
| பிலிப்பிப் பட்டணத்தை விட காரணமாயிருந்த சம்பவம் ... ... ... | 16—40 |
| (3) தெசலோனிக்கேயா சபை ஸ்தாபனம் ... | 17: 1—4 |
| தெசலோனிக்கேயா பட்டணத்தைவிட காரணமாயிருந்த சம்பவம் ... ... ... ... | 5—9 |
| (4) பெரோயா சபை ஸ்தாபனம் ... | 10—12 |
| பெரோயாவைவிட காரணமாயிருந்த சம்பவம் | 12—15 |



### I மக்கெதோனியாவுக்குப் போக தேவ நடத்துதல் 16: 6—10.

இதைக் குறிக்கும் வார்த்தைகள் மூன்று. 'பரிசுத்த ஆவியானவரால் தடைபண்ணப்பட்டார்கள்' (வ. 7); 'இயேசுவின் ஆவியானவர் அவர்களைப் போகவொட்டாதிருந்தார்' (புது திருத்தல் இங்கிலீஷ் வேதாகமம வ. 7); 'தேவன் எங்களை அழைத்தார்' (பு. இ. வே வ. 10).

அப்போஸ்தலர் கலாத்தியா நாட்டைக் கடக்கும்போது, ஆசியா மாகாணத்துக்குள் பிரவேசிப்பார்கள். ஆசியா மாகாணத்தின் எல்லை பிசிதிய அந்தியோகியாவிலிருந்து பத்து பதினைந்து மைலுக்குள்ளிருந்தது. ஆசியா மாகாணத்தின் முக்கிய பட்டணம் எபேசு செழிப்பும் ஜனத்திரளுமுள்ள இம்மாகாணத்தில் பிரசங்கிப்பது பரி: பவுலுக்கு இஷ்டம் அந்தியோகியாவிலிருந்து எபேசுக்குப் போகும் நேர் சாலைப்பாதையுமுண்டு; ஆனாலும் இச்சமயத்தில் அங்கு போக ஆவியானவர் தடைபண்ணினார். இதற்கடுத்த பிரயாணத்தில் இதே பாதையாய்ச் சென்று எபேசுவிலே சபை ஸ்தாபித்தார் என்று அறிவோம் (19: 1). ஆனால் இச்சமயத்தில் அவர் அங்கு போவது தேவசித்தமல்ல. எபேசுவில் பிரசங்கிக்க கிரேக்க தேசத்து அனுபவம் அப்போஸ்தலருக்கு வேண்டும் என்று தேவன் கண்டாரோ? எபேசு இன்னம் ஆயத்தமாயிருக்கவில்லையோ? வேறு யாது காரணத்தினாலேயோ தற்சமயம் அங்கு போவது தேவசித்தமல்லவென்பது தெளிவாயிற்று. வியாதி மூலமாகவோ, பிரயாணத் தடைகள் மூலமாகவோ, தரிசனத்தின் மூலமாகவோ, 'ஆசியாவில் வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு' வடதிசையாய் திரும்பி ரஸ்தா மார்க்கமாய் பித்தினியா மாகாணத்திற்குப் போக எத்தனித்தார்கள். பிற்காலத் திருச்சபைச் சரித்திரத்தில் பேர்பெற்றிலங்கின நிசேயா, நிக்கோமிதியா, கால்சிதோன் என்ற பட்டணங்கள் பித்தினியா மாகாணத்தைச் சேர்ந்தவை. ஆகிலும் பித்தினியாவில் சபையை ஸ்தாபிக்கும் ஊழியத்தை தேவன் பரி. பேதுருவுக்கென்று வைத்திருந்தார். இதற்கு சுமார் 15 வருஷங்களுக்குப் பின் எழுதப்பட்ட 1 பேதுருவில் பித்தினியா சபையின் பேர் வருகிறதைக் காணலாம் (1 பேது. 1: 1). இச்சமயத்தில் பரி. பவுல் அங்கு போவது தேவசித்தமல்ல என்பது தெளிவாயிற்று.

ஆகவே, கடற்கரைக்குப் போகும் ராஜ பாதையாய் நடந்து துரோவா துறைமுகம் சேரவேண்டியதாயிற்று. கடலுக்கப்பால் மக்கெதோனியா மாகாணமும், பிலிப்பி, தெசலோனிக்கேயா, பேரயா என்னும் பட்டணங்களும் இருந்தன. அங்கே பயணம் போவதே தேவசித்தமென்பது தரிசனத்தினால் தெளிவாயிற்று. இவ்வாறு மக்கெதோனியாவுக்குப் போக மிஷனெரிமார் நடத்தப்பட்டார்கள்.

திரியேக தேவனுடைய செயலையும், இத்தடையோடு சம்பந்தப்படுத்தி பரி லூக்கா எழுதுகிறார் வ. 6. பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலமாய் எச்சரித்திருக்கலாம் வ. 7. இயேசுநாதர் தரிசனத்தின் மூலமாய்ப் பரி. பவுலுக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். வ. 10. தேவன் வசதிக்கேடான சம்பவங்களினால் இதைத் தெரியச் செய்திருக்கலாம். எப்படியாவது ஒரு திசையில் தடை நேரிட்டது, வேறொரு திசையில் வாசல் திறந்தது.

இவ்வித தேவ நடத்துதல் அக்காலத்தில் மாத்திரமல்ல, இக்காலத்திலும் உண்டு. தேவ ஆவியானவரின் நடத்துதலைக் கவனித்து; கீழ்ப்படிதலோடு அதைப் பின்பற்ற வாஞ்சிக்கும் போது; தாம் கிரியை செய்யும் இடம் எதுவோ அங்கே, தாம் கிரியைசெய்யும் ஏற்ற காலத்தில் மிஷனெரிமாரை நடத்துவார்.

இந்திய மிஷனெரிசங்கத்தைத் தோர்ணக்கல்லுக்குநேராக நடத்தினதும் இதே பிரகாரமாக அல்லவோ? தமிழ் நாட்டில் வேலை செய்யவேண்டுமென்று சங்கத்தார் ஆலோசித்தபோதிலும், சென்னை ராஜதானிக்குள்ளிருக்கவேண்டுமென்று கமிற்றிமார் நினைத்தபோதிலும், அவற்றையெல்லாம் தடுத்து தெலுங்கு தேசத்திற்கும், நிஜாம் ராஜ்யத்திற்கும், அங்குள்ள சிற்றூராகிய தோர்ணக்கல்லுக்கும் நடத்தினார். இப்பிராந்தியங்களில் கிரியைசெய்யச் சித்தங்கொண்டிருந்தபடியால் அவ்வாறு நடத்தினார் என்று இப்பொழுது கண்டு, தேவனைத் துதிக்கிறோம். இன்னும் அவ்வாறே நடத்துவார். அவர் நடத்துதலைப் பார்க்கும்படி விழித்திருக்கும் இருதயமும், அது தோன்றும்போது அதைக் காணும் பரிசுத்த கண்களும், அது வெளிப்படும்போது அதற்குக் கீழ்ப்படியும் மனதுமே அவசியம்.

### II. பிலிப்பி சபை ஸ்தாபனம். 16: 11—15.

துரோவாவிலிருந்து நியாப்போலிக்கு 125 மைல்—தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமுள்ள தூரம். பாய்க்கப்பலானபடியால் முதல் நாள் பகலில் சாமோத்திராக்கேக்கு ஓடி அங்கே இராத்திரி நங்கூரம் போட்டு, மறுநாள் நெயாப்போலிப் பட்டணத்துக்கு நேராய் ஓடி இவ்விதமாய் இரண்டு பகலில் பிலிப்பிப் பட்டணத்திற்கு 10 மைல் தூரமான துறைமுகம் சேர்ந்தார்கள்.

பிலிப்பி மக்கெதோனியாவிலுள்ள ஓர் பெரிய பட்டணம் பற்பல சமயங்களில் ரோம போர்ச்சேவகரை இங்கு குடியேறும்படி அனுப்பினதினால் பட்டணம் முழுவதும் ரோமரால் நிறைந்ததாயிற்று. யூதர் அதிகமாய் இங்கே வந்து குடியேறவில்லை. ஆகையினால் பிலிப்பிப்பட்டணத்தில் ஜெப ஆலயமில்லை. அங்கிருந்த சில யூதர்கள் ஆற்றோரத்தில் ஒரு குடிசை போட்டு அதை ஜெப ஆலயமாக வழங்கி வந்தார்கள். இவர்கள் மூலமாய் தேவபக்தியுள்ளவர்களாக சில புறஜாதியாரும் இவர்களோடு சேர்ந்து ஜெபம்பண்ணுவது வழக்கம். இதில் ஓர் ஸ்திரீயின் பேர் சொல்லப்பட்டிருக்கிறது—லீதியாள்.

இந்த ஆற்றோர ஜெப வீட்டில் தான் சுவிசேஷ வேலை ஆரம்பித்தது. லீதியாளும் லீதியாள் வீட்டாரும் சபையைச் சேர்ந்தார்கள். அப்பால் அவள் வீட்டுக்கே சென்று அங்கே தங்கியிருந்து வேலை நடப்பித்தார்கள்.

அங்கு நடந்த வேலையைப்பற்றி பரி. லூக்கா விஸ்தாரமாய் ஒன்றும் சொல்லவில்லை. பின் சம்பவத்தையும் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தையும் பார்க்கும்போது பல விஷயங்களையும்

அனுமானித்துக் கொள்ளலாம். பரி. பவுலும் அவரோடிருந்தவர்களும் பட்டணம் முழுவதும் சென்று தெருத்தெருவாய்ப் பிரசங்கித்திருக்கவேண்டும். தாங்கள் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் என்றும், இரட்சிப்பின் வழியை அறிவிக்கிறவர்கள் என்றும் திட்டமாய்ச் சொல்லியிருக்கவேண்டும். (குறிசொல்லும் பெண் இதே வார்த்தைகளைச் சொல்லிக் கூக்குரலிட்டாள் என்று பார்க்கிறோமே. வ. 17). இந்த இரட்சிப்பை ஜனங்கள் ஏற்றுக்கொண்டால் தங்கள் ஜீவன முறையை மாற்றவேண்டுமென்றும் திட்டமாய்ச் சொன்னார்கள். குறி கேட்குதல் தகாதென்றும் அஞ்ஞான பழக்க வழக்கங்களில் பல நிறுத்தப்படவேண்டுமென்றும் சொல்லியிருப்பார்கள் (வ. 19—21 பார்க்க). மிஷனெரிமாருக்கு யூதரால் யாதொரு தடையுமில்லாததால் தாராளமாய் சுவிசேஷ பிரசங்க வேலை நடந்தது. புதிதாய்ச் சேர்ந்த தீமோத்தேயு தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல பரி. பவுலோடுகூட சுவிசேஷ ஊழியஞ்செய்தான் (பிலி. 2: 22). இந்த சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை சபையாரையும் பிடித்தது. சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் அவர்கள் அதற்கு உடன்வேலையாட்களானார்கள். (பிலி. 1: 3). எயோதியாள், சிந்திக்கேயாள், கிலெமெந்து என்பவர்கள் மிஷனெரிமாரோடு சேர்ந்து 'சுவிசேஷ விஷயத்தில் மிகவும் பிரயாசப்பட்டார்கள்' (பிலி. 4: 3). மேலும் சபையை விசாரிப்பதற்கு உத்தியோகஸ்தர்களையும் நியமித்தார் அவர்களைக் கண்காணிமார், உதவிக்காரர் என்று பிலிப்பியர் 1: 1-ல் அழைக்கிறார். கண்காணிமார் என்று இங்கு வழங்கும் பதம் 'மூப்பர்' என்ற வரிசையிலுள்ள ஊழியரையே குறிக்கும்

இவ்விடத்தில் நடந்த வேலை பரி பவுலின் உள்ளத்திற்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. பிலிப்பி சபையார் அவருடைய உள்ளத்திற்கேற்ற சிநேகிதரானார்கள். பிலிப்பி சபையைவிட்டுப் புறப்பட்டபோது அவர்கள் கொடுத்த பண உபகாரத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார் (பிலி 4: 15). தெசலோனிக்கேயிலிருந்த போதும், ரோமாபுரியில் கைதியாயிருந்தபோதும் இவர்களால் சகாயம் பெற்றார்.

நிருபத்தை வாசித்தால் கிறிஸ்தவ சந்தோஷத்தினால் நிறைந்து, கள்ள உபதேசத்தைப்பற்றிய குழப்பங்கள் யாதுமின்றி, இயேசுகிறிஸ்துவைப்பற்றும் சத்தியத்தினால் பரிமளிக்கும் சபை பிலிப்பி சபை என்று காணலாம். 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' (அதி. 1); 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது' (அதி 2); 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்' (அதி. 3). 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு' (அதி. 4). என்ற வசனங்களைமட்டும் சொன்னாலும் போதாதா? நிருப முழுவதிலுமுள்ள 104 வசனங்களுக்கு 70 வசனங்களில் அருள்நாதராகிய இயேசு சுவாமியைப்பற்றிச் சொல்லிய வார்த்தைகள் உண்டு.

ஆரம்பமுதல் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தில் பங்கெடுத்துக்கொண்ட சபையிலேயே இவ்வித ஞான பலன்கள் காணப்படுவது ஆச்சரியமல்ல. 'நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் ......... இதோ நான் ...... உங்களோடுகூட இருக்கிறேன்' என்பது இரக்ஷண்யா மூர்த்தியின் திருவாக்கல்லவா? சுவிசேஷத்தை ஆரம்பமுதல் பிரசங்கிக்க முயன்ற சபையில் அவரது திருச்சமுகம் விளங்கவேண்டியது நியாயந்தானே.

தமிழ் தேசத்தாரே, நாமும் சுவிசேஷ பிரபல்ய வேலையில் உடன் பங்காளிகளாகிக்கொள்வோமாக! மிஷனெரி வாஞ்சை நம்மைப் பற்றிப்பிடிப்பதாக! வாங்குகிறவர்களாயிராமல் கொடுப்பவர்களாவோமாக! மற்றவர்களெல்லாரும் தங்களுக்குரியவைகளையே தேடினாலும், நாமோ கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷ விருத்திக்கேற்றவைகளைத் தேடுவோமாக. கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணபரியந்தம் ஊக்கங்கொள்ளுவோமாக. அப்பொழுது கிறிஸ்து நமக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாவார். அவரது திருச்சமுகம் நம்மையும் நிரப்பும்!

வா. 16—40 வரை. பிலிப்பிப்பட்டணத்தைவிட்டுப் போக நேரிட்ட காரணம். பரி. லூக்கா ஒவ்வோர் இடத்திலும் வேலை ஆரம்பமான விபரத்தையும், வேலை நிறுத்துவதற்குக் காரணமாயிருந்த சம்பவத்தையும் மாத்திரம் சொல்லுகிறார். பிலிப்பி, தெசலோனிக்கே, பெராயா என்று மூன்று இடங்களைப்பற்றியும் அவர் முறை இதுவே.

நேரிட்ட துன்பத்திற்குக் காரணம் இரண்டு (1) ஒருவித ஆதாயம் போகும் என்பதொன்று (வா. 19). (2) ஆசார முறைகள் மாறும் என்பது மற்றொன்று (வா. 21). தற்காலத்தில் இந்தியாவில் நேரிடும் இடையூறுகளுக்கும் காரணம் இதே. கீழ் ஜாதிக்காரர் கிறிஸ்தவர்களாகிறதினால் உயர்ந்த ஜாதிக்காரருக்கு அநியாய லாபம் போய்விடும் என்பதும், ஜாதியாச்சாரம், குலாச்சாரம் கெட்டுப்போகுமென்பதுமே தற்காலத்திலும் சொல்லப்படும் ஆக்ஷேபனை. பூர்வகால முதல் இதே ஆக்ஷேபனைகள் சுவிசேஷத்திற்குக் கூறப்பட்டதென்று அறிந்து தைரியங்கொள்ளுவோமாக. (இன்னும் வரும்).

---

## அரிலியஸ் அகுஸ்தின். (தொடர்ச்சி)

### ஆயுள்கால ஊழியத்திற்கு ஆயத்தம்.

தாயார் தேகவியோகமானதின்பின் அகுஸ்தின் ஆப்பிரிக்காவிலுள்ள தம் பழைய குடியிருப்புக்கு வந்துசேர்ந்தார். உலகத்தைவிட்டுப் பிரிந்து அமரிக்கையான மனதோடு, தமது ஆச்சரியமான கிருபையினால் தமக்குச் சொந்தமாகத் தெரிந்தெடுத்து நரகத்துக்கும் சாவுக்கும் விலக்கிக் காத்த ஆண்டவரும் ரக்ஷகருமானவருக்கு ஊழியஞ்செய்ய தன் ஜீவிய முழுவதையும் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்ற ஆத்திரம் அவர் இருதயத்திலுண்டாயிற்று. பரி, அந்தோனியாரின் மாதிரிப்படியே தன் ஆஸ்தி முழுவதையும் விற்று தரித்திரருக்கு தானமிட்டுவிட்டு தினசரி போஷிப்புக்கு வேண்டியதைமட்டும் மீதி



வைத்துக்கொண்டார். அவரது சிநேகிதர் பலரும் அதே ஆவியினால் ஏவப்பட்டு அவரோடு சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் ஓர் விதமான சன்னியாசிக்கூட்டமாய் கூடி, குறைவான ஆகாரம் சாப்பிட்டு தேவகாரியத்தில் ஓய்வில்லாமல் உழைத்து, கண்டிப்பான ஜீவியம் செய்துவந்தார்கள். இக்காலத்தில்தான் அகுஸ்தின் 'பாவ அறிக்கைகள்' என்னும் புஸ்தகத்தை எழுதினார். இந்நூலில் தேவனுக்கு முன்பாக அவர் செய்யும் பாவ அறிக்கையைப் பிள்ளை தகப்பனிடம் பேசும்வண்ணமும் சிநேகிதன் சிநேகிதனோடு பேசும்வண்ணமும் எழுதியிருக்கிறது. இப்புஸ்தகத்தை வாசிக்கையில் பாவத்துக்காகத் துக்கிக்கிறதினாலும் ரக்ஷண்ய சந்தோஷத்தினாலும் அவரது கண்களில் கண்ணீர் ததும்பி நிற்கக் காண்பதுபோலும், நடுக்கத்தோடு கூடிய அவரது சத்தத்தையே கேட்பதுபோலுமிருக்கும். பரி. அகுஸ்தினது 'பாவ அறிக்கையை' வாசிக்கும் எவரும் அவரையே நேசியாமல் தீராது. கி பி 391ஆம் அகுஸ்தின் இந்த அருமையான தனிவாசத்தைவிட்டு, ஆப்பிரிக்காவின் வடபாகத்திலுள்ள ஹிப்போவில் வாசஞ்செய்த ஓர் சகோதரனைச் சந்திக்கப் போனார். அங்கு வந்து தான் வருமுன்னதாகவே தன் பரிசுத்தத்தையும் படிப்பையும் பற்றிய பிரஸ்தாபம் ஒவ்வொருவர் நாவிலும் பிறந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டார். அப்போது தான் ஹிப்போவின் சபைக்கு ஓர் குருவானவர் அவசியமாயிருந்தபடியால் கிறிஸ்து சபையில் மேலான இந்த ஊழியத்திற்கு அவரை நியமித்தார்கள். அவரோ தன் பாவ ஜீவியத்தை மிகுந்த கண்ணீரோடு சுட்டிக்காட்டி அதினால் சபையில் ஆவிக்குரிய பணிவிடை செய்யத் தான் தகுதியற்றவனும் அசக்தனுமென்றுசொல்லி அந்தஉத்தியோகம்வேண்டாமென்று மறுத்தார். என்றாலும் கூடாமற்போயிற்று ஏனென்றால் அகுஸ்தினைத் திருப்பணிவிடையில் ஏற்படுத்துவதை எல்லாரும் ஓர்கண்யமாக எண்ணினதுமன்றி, ஹிப்போவின் சபையின் பேரோடு அகுஸ்தின் பேரையும் என்றென்றைக்கும் நிலைப்படுத்திவிடவேண்டுமென்று வாஞ்சித்தார்கள். கடைசியாக அகுஸ்தின் ஜனங்களின் மன்றாட்டுக்கிணங்கி குருப்பட்டம் பெற்று சில காலத்துக்குப்பின் கி. பி. 396-ல் ஹிப்போவுக்கே அத்தியக்ஷருமானார்.

பரி: அகுஸ்தினது அத்தியக்ஷ ஊழியம்:—இத்திருப்பணிவிடையில் அவர் பிரவேசித்த நிமிஷம் முதற்கொண்டு தன் பெலன் முழுவதையும் மேலான வரங்களையும் திறமையையும் சபையின் ஊழியத்துக்கென்றே தத்தம் செய்தார். தன்னைச் சுற்றிலும் ஆசீர்வாதங்களைப் பரவச் செய்கதினால் முதல்தரமான அத்தியக்ஷராக விளங்கினார். போதகராகவும், பிரசங்கியாகவும், அவருடைய வார்த்தைகளில் ஆச்சரியமான பலனுண்டாயிற்று. கிறிஸ்தவர்களும் அஞ்ஞானிகளுமாய் திரள்கூட்டம் வெகுதூரத்திலிருந்து அவருடைய ஆலயத்தில் ஆராதனைக்கு வந்துகூடினார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரது பிரசங்கத்தில் ஓர் விசேஷ செய்தி இருந்தது. திறமையுள்ள பல வாலிபரை ஒன்றாய்ச் சேர்த்து அவர்களெல்லாரையும் சபையில் திருப்பணிவிடை செய்யும்படி தாமே ஆயத்தப்படுத்தினார். இவர்களின் தொகை அடிக்கடி பெருகுவதால் அவர்களைப் பல வகுப்பாகப் பிரிக்க நேரிட்டது. அவர்களுக்கு

வேதாகமங்களின் பொருளடக்கத்தையும், அதின் திவ்யவெளிப்படுத்தல் முதலிய சத்தியத்தையும் தெளிவாயறியப்பண்ணினதுமன்றி, ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதில் ஏழைகளையும் அறிவீனரையும் மட்டுமல்ல, உலகத்தில் ஞானிகளும் தத்துவ சாஸ்திரிகளுமெனப் பெயர்பெற்ற பெரியோரையும் எவ்வாறு போதித்து வழிநடத்த வேண்டுமென்று பயிற்றுவித்தார். இவ்வாறு வாலிபரைத் திருப்பணி விடைக்குப் பயிற்றுவித்து ஆயத்தம் செய்ததின் பலனாகத்தான் அவருடைய அதிமுக்யமான நூல்கள் எழுதப்பட்டன. பரி: அகுஸ்தின் என்பவருக்குத் தம் சீஷரிடத்தில் ஆச்சரியமான சொற்சக்தியிருந்தமையால் அவர்களெல்லோரும் அவரிடத்தில் அதிகப் பற்றுதலுள்ளவர்களாயிருந்தார்கள். வாலிபருக்குரிய எவ்வகையான வருத்தங்களையும் சரிப்படுத்துவதில் அவரைப்போல் தகுதியுள்ளவர் எவருமில்லை. அவர்களுக்குரிய துக்கங்கள் சோதனைகளின் வழியெல்லாம் அவர் தாமே சென்றிருக்கிறார். அவர்களில் அநேகரைப்போல் அவரே சந்தேகியும் பாவியுமாயிருந்ததால் அவர்களின பெலவீனங்கள் குறைவுகள் அனைத்தையும் அவர் தாமே அறிந்திருந்தார். அப்படியே அதை மேற்கொள்ளும் வகையையும் அறிந்திருந்தார். தன் ரக்ஷகரின் அன்பின் மூலமாய் அன்புகூரவும், அவரது இரக்கத்தின் மூலமாய் இரக்கம் பாராட்டவும் படித்திருந்தார். அவரது சீஷர் அவரைவிட்டுப் பிரிந்து ஆப்பிரிக்காவின் பல சபைகளுக்குள்ளும் சிதறியிருந்தபடியால் அவர்கள் வேலை செய்த இடமெல்லாம் தங்கள் எஜமானின் பெயரைப் பிரசித்தப்படுத்தினதுமல்லாமல் வரவர சபையனைத்தும் பரி: அகுஸ்தினையே தங்கள் தலைவரும் வழிகாட்டியுமாக நோக்கிப் பார்க்கத் தொடங்கிவிட்டது. மிகப் பெரிதும் செல்வாக்குமுள்ள பல சபைகள் தங்களுக்கு அவரை அத்தியக்ஷராகும்படி அழைத்தன. என்றாலும் எவ்வளவு பெரிய சோதனையிலும் அவர் மயங்கிவிடாமல், தாம் தற்சமயம் வேலை பார்த்த இடத்தில்தானே திருப்தியாயிருந்தார். அவர் ஜனங்களை நேசித்ததும் ஜனங்கள் அவரை நேசித்ததும், தன் சொந்த அத்தியக்ஷாதீனத்தில் மட்டுமல்ல அதற்கு வெளியேயும் அவருக்கிருந்த செல்வாக்கும் இவ்வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. அத்தியக்ஷராக அவர் ஜீவித்த மாதிரிவெகு சாதாரணமாயும் செளிவாயுமிருந்தது. ஏழைகளுக்கும்வறுமைப்பட்டவர்களுக்கும் உதவி செய்யும்படி அடிக்கடி ஜீவனார்த்தத்துக்குத் தீரா அவசியமானவற்றையும்கூட அவர் வெறுத்துவிட்டார். அவரை எவரும் பார்ப்பது எளிது. அவரது ஆலோசனையும் லௌகீக வைதீக விஷயங்களில் அவருடைய அனுதாபமும் உதவியும் வேண்டியவர்கள் அவரிடம் போகும்படி அவருடைய வீடு இரவும் பகலும் திறந்திருந்தது. அவருடைய ஜீவியம் முழுவதையும் திருப்பணிவிடையிலே செலவிட்டார். தேவன் அவரை ஆசீர்வதித்திருந்ததினால் அவர் பிறருக்கு ஆசீர்வாதமாயிருந்தார். அவர் ஏழைக்குத் தகப்பனும், அவசரமுள்ளவனுக்குச் சகாயரும், துக்கப்பட்டவனுக்குத் தேற்றுகிறவரும், அவரைப் பார்த்த எவருக்கும் ரக்ஷகரின் அன்பு, பக்ஷம், இரக்கம் முதலிய லக்ஷணங்களின் பிரதிமையாகவும் விளங்கினார்.

அகுஸ்தீன் விசுவாசத்துக்காகச் செய்த போராட்டம். தன் வாலிபகாலத் தோழராகிய மனிக்கேயருடன் பரி. அகுஸ்தின் எவ்வாறு நடந்துகொள்வார் என்பதை எல்லாரும் அறியக் காத்திருந்தார்கள். சீக்கிரத்தில் அவர்களுடன் வாதிக்கத் தொடங்கி அவர்களுடைய தப்பறையான போதனைகளை வார்த்தைகளினாலும் எழுத்துகளினாலும் ஓய்வில்லாமல் கண்டித்து வந்தார். உத்தம கிறிஸ்து மார்க்கத்துடன் பல அஞ்ஞான மார்க்க போதனைகளையும் எவ்வளவாய் மனிக்கேயர் கலந்துவிட்டார்கள் என்பதைத் தெளிவாய்க் காட்டினார். தேவகாரியங்களில் உலகத்திலுள்ள எவ்வகை அறிவு ஞானம் சாஸ்திரயுக்தியையும் விட, சாதாரணமான ஒரு சிறுபிள்ளைக்குரிய விசுவாசமே அவசியமென்றும், சகலமும் விசுவாசத்தையே பொறுத்தது என்றும் போதித்தார். விசுவாசத்தினால் தேவனுடைய சத்தியத்தை மனதில் ஏற்றுக்கொண்டபின்னர், அவைகளைப் புத்தியினால் கிரகித்துக்கொள்ளப் பிரயாசப்படுதல் ஓர் சிறுபிள்ளை கடற்கரையோரத்தில்நின்றுகொண்டு அளவிடப்படாத சமுத்திர ஜல மனைத்தையும் ஓர் சிப்பியைக்கொண்டு வாரி பக்கத்திலுள்ள மணலில் தோண்டியிருக்கும் ஓர் சிறு பள்ளத்தில் விட்டு அடக்கிவிடத் தன்னாலானமட்டும் பிரயாசப்படுகிறதுபோல் ஆகுமென்கிறார். அவரது கண்டிப்பும், கூர்மையும், பூரணமுமான நியாயதோரணைகளினால் மனிக்கேயருடைய கோட்பாடுகளை நிராகரித்து அவர்கள் வல்லமையை ஒரே மட்டாய் மடங்கடித்துப் புத்தியுள்ள எந்தக் கிறிஸ்தவனிடமும் அக்கோட்பாடுகள் தலைகாட்டாதபடி செய்துவிட்டார். அவரோடு வாதித்த இன்னோர் விரோதி ஐரிஷ் சந்நியாசியான பெலாகியு என்பவன். இவன் சன்மார்க்க நிலையில் பேர்பெற்று, தேவ கிருபை உதவியாயிருந்தபோதிலும் அதில்லாமலே மனிதன் தன் சொந்த பெலத்தில் தேவனுக்குப் பயந்து நல்ல ஜீவியம் செய்யக்கூடும் என்று போதித்தான். பெலேகியு கி. பி 410-ல் ரோமாபுரியில் தன் கோட்பாடுகளைப் பகிரங்கமாய்ப் பிரசங்கிக்க ஆரம்பித்து மறு வருஷத்தில் வட ஆப்பிரிக்காவுக்கும் தன் போதனையைக் கொண்டுபோனான். அங்கே பரி. அகுஸ்தின் உடனே அவனைப் பலமாய் எதிர்த்து நின்றார். தன் சொந்த அனுபவத்தைக் கொண்டும் ஆதிமனுடரின் திருஷ்டாந்தத்தைக்கொண்டும் மனுஷனுடைய துர்க்குணத்தையும் அதினின்று தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ள ஒரு மனிதனாலும் ஓர் அற்பப் பிரயத்தனமும் செய்யக்கூடாதென்பதையும் போதித்துவந்தார்.

பரி. அகுஸ்தினது ஓய்வில்லாத முயற்சியினால் பெலேகியுவின் கொள்கைகள் மேல்பாகத்தில் கார்தேஜ் நகரத்தில் கி. பி. 418-ல் கூடிய சங்கத்தாலும், கிழக்கே எபேசு பட்டணத்தில் 431-ல் கூடிய சங்கத்தாலும் கண்டிக்கப்பட்டது. மேற்காட்டிய இரண்டு விவாதங்களும் சுத்த உபதேசத்தையும் சுத்த விசுவாசத்தையும் நிலைப்படுத்துவதற்காயுண்டானவை. மூன்றாவதான முக்கிய விவாதம் சபையின் தினசரி ஜீவியத்தையும் ஒழுக்கையும் சார்ந்தது. கார்தேஜ் நகரத்தில் பேதகரோகியான ஒருவனை அத்தியக்ஷராய் நியமித்ததினிமித்தம் அநேக கிறிஸ்தவர்கள் பிரிந்துபோய் கி. பி. 313-ல் 'தோனாத்தியு' என்னும் ஒருவனைத் தங்களுக்கு அத்தியக்ஷராக நியமித்துக்கொண்டார்கள். 'தோனாத்தியர்' சாக்கிரமெந்துகளைப் பரிமாறுபவர்களின் தகுதிக்குத்தக்கதாகத்தான் அவைகள் பிரயோஜனப்படுமென்று போதித்தார்கள். சபையில் விசுவாசிகளும் உத்தமர்களுமானவர்களைத் தவிர மற்றவர்கள் இருக்கவே படாதென்றும் அவர்களைப்பற்றி நம்பிக்கையில்லையென்றும் சொன்னார்கள். சபைக்கும் ராஜாங்கத்துக்கும் சம்பந்தமே உதவாதென்றார்கள். கடைசியாக அகுஸ்தின் ஆலோசனைப்படி தோனாத்தியரை ராஜாங்கத்தார் பலவந்தமாய்ச் சபையில் சேரும்படி செய்தார்கள். இந்த விவாதத்தில் அகுஸ்தின் தலையிட்டவிதம் வேதனையோடு கவனிக்கத்தக்கது. பரி. லூக்கா 14: 23ல் 'அவர்களையும் உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா' என்ற வாக்கியத்தை அவர் தப்பர்த்தம்பண்ணிக் கள்ளப் போதகர்களைக் குணப்படுத்த பட்டயத்தைக் கையாடலாமென்று நியாயம் சொன்னார். இவ்விஷயத்தில் அவருடைய முன்மாதிரி அநேக நூற்றாண்டுகளாய் சபையில் மிகுந்த கெடுதியை விளைவித்தது. எக்காலத்திலும் சபைகளில் உபத்திரவம் செய்தவர்கள் அவரையே மாதிரியாகச் சொன்னார்கள். பரி. அகுஸ்தினிடத்தில் காணப்பட்ட இக்கொடிய தப்பிதம் தேவனுடைய பரிசுத்தவான்களும்கூட பாவமும் குறைவுமற்றவர்களல்லவென்பதையும் 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்ற கிறிஸ்துவையே ஆவிக்குரிய விஷயங்களிலெல்லாம் நமக்கு வழிகாட்டியாக வைத்துக்கொள்ளவேண்டுமென்பதையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. மனுஷர்கள் எவ்வளவுதான் பரிசுத்தமும் நன்மையும் மேன்மையுமாயிருந்தபோதிலும் தவறக்கூடியவர்களும் தப்பிப்போகச் செய்யக்கூடியவர்களுமாய்த்தானிருக்கிறார்கள்.

பரி. அகுஸ்தினது ஆசிரியத்துவம். இவர் பேர்போன நூலாசிரியர். அவரது புத்தகங்கள் வியாக்கியானங்களும், பிரசங்கங்களும் பிரபந்தங்களுமடங்கியவை. அவரது பிரபந்தங்களில் அநேகம் விசுவாசத்தைக் காக்கும்பொருட்டு எழுதப்பட்டமையால் அதிக அருமையானவை. அவரது பிரசங்கங்களில் உத்தேசம் 400 வரை நம் காலமட்டும் வந்தெட்டியிருக்கின்றன. அவைகளில் எல்லாம் ஆழ்ந்த பக்தியும் தேர்ந்த வேத அறிவும் உத்தமமான சன்மார்க்கமும் சிறந்துவிளங்குகின்றன. வேதாகம மூலபாஷைகளாகிய எபிரேயு கிரேக்குகளில் அவருக்கிருந்த குறைந்த அறிவினால் அவர் வியாக்கியானப்புஸ்தகம் எழுதுவதில் அவ்வளவு மேன்மைபெற்றவரல்ல. அகுஸ்தின் பெயரைப் பெருமைப்படுத்தின புஸ்தகங்கள் இரண்டே. அவையாவன:—'அவரது பாவ அறிக்கைகளும்' அவரது மரணத்துக்குச் சிலநாட்களுக்கு முன் எழுதிய ('De Civitate Dei') 'தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி' என்ற புத்தகங்களுமே. இதில் சர்வலோகத் திருச்சபையும் ஆவிக்குரிய ராஜ்யமாக உலகத்தில் வல்லமையாய் விளங்கும்போது உலகத்தின் ராஜ்யங்களெல்லாம் அதன் முன் பணியவேண்டுமென்றும் அவையனைத்தின்மேலும் அந்த ராஜ்யமே ஆளுகைசெய்யவேண்டுமென்றும் எழுதுகிறார்.

பரி. அகுஸ்தினின் மரணம். பரி. அகுஸ்தின் காலஞ்சென்ற வருஷத்துக்கு முந்தின வருஷத்தில் வட ஆப்பிரிக்காவின் சபை முழுவதுக்கும் ஓர் பயங்கரமான பாழ்க்கடிப்பு வந்துசேர்ந்தது. தேவன் தமது சபையையும் ஜனத்தையும் சுத்திகரிக்கும்படியான தண்டனையை யனுப்பினார். 429-ம் வருஷத்தில் வாண்டல் என்னும் ஜாதியார் ஸ்பானியாவிலிருந்து ஆப்பிரிக்காவின்மேல் படையெடுத்துவந்து கரையோரம் முழுவதையும் கொஞ்சக்காலத்துக்குள் ஜெயித்து வாண்டல் ராஜ்யமாக்கிவிட்டார்கள். வாண்டல்கள் ஆரியானிய கொள்கைக்காரரானதால் பொதுவான பரிசுத்த சபையை விரோதித்துத் தங்கள் ராஜ்யத்திலுள்ளவர்களையெல்லாம் ரத்தம் சிந்திக் கொடுமையாய் உபாதித்தார்கள். அவர்கள் தலைவனாகிய கென்சரிக் ரோமாபுரி மட்டும் படையெடுத்துப்போய் தன்னோடிருந்த கொடிய கொள்ளைக்காரரைக்கொண்டு 2 வாரத்துக்குள் அந்த நகரத்தைப் பிடித்துக் கொள்ளையாடிவிட்டான். கடைசியாக 533ல் வாண்டல்கள் ஜெயிக்கப்பட்டு வட ஆப்பிரிக்கா மறுபடியும் ரோம ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது. புசலும், கொந்தளிப்பும் கலக்கமும் நிறைந்த காலத்தில்தான் அகுஸ்தினைக் கர்த்தர் தம்மண்டை சேர்த்துக்கொண்டார். கோட்டை கொத்தளங்களுள்ள சில நகரங்களைத் தவிர தேசமனைத்தும் கென்செரிக்குச் சொந்தமாகிவிட்டது. ஹிப்போ முற்



றிக்கை போடப்பட்ட மூன்றும் மாசம் கி. பி. 430 ஆகஸ்ற் 28ல் அமரிக்கையும் ஆனந்தமுமான மரணத்தின் மூலமாய் அகுஸ்தின் தன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவருடைய தேகத்தை வாண்டல்கள் கையினின்று மீட்டு சார்டினியாவுக்குக் கொண்டுவந்து அங்கிருந்து மாவியாவுக்குக் கொண்டுபோய் 1842 வரை அங்கு அடக்கம்செய்து வைத்திருந்தார்கள். அதன்பின் மறுபடியும் ஆப்பிரிக்காவுக்குக் கொண்டுபோய்க் கடைசியாய் ஹிப்போவில் க்ஷேமித்தார்கள். 'ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும் அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நக்ஷத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும்பிரகாசிப்பார்கள்'. (தானியேல் 12: 3).

## இந்திய மிஷனெரி சங்க விண்ணப்ப நாள்

**1914-ம் ௵ பெப்ருவரி௴ 15௳, செக்சகேசிமா ஞாயிறு.**

கடந்த பதினொரு வருஷங்களாய் கருணைநிறைந்த ஆண்டவர் இந்திய மிஷனெரி சங்கத்தின் வேலையை நடப்பிக்க அருள்புரிந்ததை நினைத்து, இப்பன்னிரண்டாம் ஆண்டின் ஆரம்பத்தில் நன்றியறிந்த இருதயத்துடன் திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீன சபை அனைத்தும் இவ்வேலைக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ண தேவனுடைய நாமத்தினாலே அழைக்கிறோம்.

நாளது பெப்ருவரி௴ 15௳ இந்திய மிஷனெரி சங்க விண்ணப்ப நாள். அந்த நாளை விசேஷித்த ஸ்தோத்திர தினமாகவும் விண்ணப்ப நாளாகவும் கொண்டாடுவோமாக. நமது சங்கம் ஜெபத்திலும் உபவாசத்திலும் உற்பத்தியானது. ஜெபத்தினால் வளர்ந்தது. அன்றி தேவனே ஆரம்பமுதல் இதுவரை இச்சங்கத்தின் ஒரே அடைக்கலம், ஒரே நம்பிக்கை, ஒரே பெலன். இந்த விண்ணப்ப நாளை விசேஷித்த மன்றாட்டின் நாளாக்குவோமாக. ஜெபத்தோடும் உபவாசத்தோடும் கர்த்தரைப் பற்றிப்பிடிப்போமாக அப்பொழுது அறுப்புக்கு எஜமானான அவர் தமது அறுப்புக்கு ஏற்ற ஊழியர் யாரோ அவர்கள் இருதயத்தை அசைப்பார். தமது களஞ்சியங்களின் உக்கிராணக்காரருடைய இருதயத்தையும் திறப்பார். இதுவரை ஆதரித்த கர்த்தர் இன்னும் ஆதரிப்பார். "இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நான் இதை அனுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

பெப்ருவரி௴ 15௳யாகிய விண்ணப்பநாளில், இந்திய மிஷனெரி சங்க ஊழியங்களுக்காகத் தனிமையாகவும் சபைமொத்தமாகவும் மன்றாடும்படி சபையாரை ஏவி எழுப்பிவிடவும் ஆலயங்களில் மிஷனெரி ஊழியத்தின் கடமையைப்பற்றி பிரசங்கங்கள் செய்யவும் தேவஊழியரை அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்

A. S. அப்பாசாமி,
பிரசிடென்று.

J. அன்புடையான்,
காரியதரிசி.

G. தேவதாசன்,
பொக்கிஷதார்.

மிஷன்களுடைய அநுகூலங்களுக்கென்றும் திருச்சபையின் மிஷனெரி வேலைக்கென்றும் மத்தியஸ்த மன்றாட்டு நாளாக நியமிக்கப்பட்ட தினத்தில் வழங்கப்படவேண்டிய 'ஜெபமுறைமையை' இந்திய மிஷனெரி சங்க விண்ணப்பநாளாகிய பெப்ருவரி௴ 15௳ ஆலயங்களில் உபயோகிக்கும்படி அநுமதி கொடுக்கிறோம்.

| | காலை ஆராதனை | மாலை ஆராதனை |
|---|---|---|
| விசேஷ சங்கீதங்கள். | 45, 46, 47 | ... 67, 97, 100, 117. |
| விசேஷ பாடங்கள் | ஏசா. 49 | ... ஏசா. 61. |
| | பரி. யோவா. 4: 31—43 | ... அப். 17: 16—32. |
| திருப வாக்கியம் | எபே. 2: 11. | |
| சுவி. வாக். | பரி. யோவா. 10: 7—16. | |

A. அச்சிஸன் உல்லியம்ஸ்,
திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷர்.

## ஜெப ஸ்தோத்திர விஷயங்கள்

### i. தோர்ணக்கல் மிஷன்

I. சபை.

1. சபையில் காணப்படும் தொகை விருத்திக்காக துதி.

ஞானஸ்நானம் பெற்றவர்கள் தொகை சுமார் கால்வாசி நாளது வருஷத்தில் அதிகரித்திருக்கிறது. வடபாகத்தில் புது சபைகள் உண்டாகிறது.

2. சபைகளில் தோன்றும் பக்தி அபிவிருத்திக்காக துதி.

புது சபைகளில் ஜெப வாஞ்சை, பழைய சபைகளில் சுயாதீனம், கிருபையின் யத்தனங்கள்பேரில் ஆசை, சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை இவைகள் காணப்படுகிறது.

3. சபைகளின்மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட ஜெபம்.

குடிவெறி, ஜாதிபேதம், அஞ்ஞானம் அங்கங்கே காணப்படுகிறதுண்டு. கலியாணத்தினிமித்தம் இடறலடைந்து ஞானஸ்நானத்துக்கு வராதவர்கள் உண்டு. ஆரம்பத்தில் காணும் உற்சாகம் தளர்ந்துபோக சோதனைகள் பல உள. துன்பங்கள் உபத்திரவங்களினால் பெலப்படவேண்டியது அவசியம்.

4. பின்வாங்கிப்போனவர்களுக்காக ஜெபம்.

சில வருஷங்களாய்ப் பின்வாங்கிப்போனவர்கள் திரும்ப ஊக்கம் காட்டியிருக்கிறார்கள். எருக்கலர் பலர் பின்வாங்கிப்போனார்கள்.

II. பள்ளிக்கூடங்கள்.

1. பயிற்சிசாலைமாணவருக்குக் கட்டடம் கிடைத்ததற்காகவும்,
2. போர்டிங் பிள்ளைகளுக்குள்ள "நல்ல சமாரியர்" கூட்டத்திற்காக துதி.
3. போர்டிங் பிள்ளைகள் தொகை பெருகவும், கிராமத்தில் பிள்ளைகள் கல்வியை ஆசிக்கவும் ஜெபம்.
4. போர்டிங் பாடசாலை உபாத்திமாரும் பிள்ளைகளும் பரிசுத்த ஆவியால் நிறைந்து விளங்க ஜெபம்.
5. போர்டிங் பள்ளிக்கூடத்துக்கு திறமையும் பக்தியுமுள்ள தெலுங்கு ஆசிரியர் கிடைக்க ஜெபம்.
6. போர்டிங் பெண்பிள்ளைகளுக்கு வேண்டிய கட்டடத்திற்காகவும் ஜெபம்.

புது கம்பவுண்டில் ஒரு கட்டடம் அவசியம் தேவை.

7. கிராம சுவிசேஷ பள்ளிக்கூடங்களுக்காக ஜெபம்.

தோர்ணக்கல், மானுக்கோட்டை, மாட்டேடு என்ற இடங்களில் பள்ளிக்கூடம் வைக்கும்படி ஜனங்கள் நெருக்குகிறார்கள். மாட்டேட்டில் பள்ளிக்கூடத்திற்கும், உபாத்தியாயர் வீட்டிற்கும் வேண்டிய நிலம் இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உபாத்திமார் தேவை.

III. தெலுங்கு ஊழியர்.

1. ஊழியருடைய பக்திவிருத்திக்காக துதி.

குடி முதலிய பாவங்களிலிருந்து ஆசாமிகள் விலகியிருக்கிறார்கள் என்று நம்ப இடமுண்டு, வேதவாசிப்பு ஜெபத்திலும் தேற்சியுண்டு.

2. ஊழியர்மேல் தேவாவியின் அக்னி ஊற்றப்பட ஜெபம்.

அநேக சபைகள் இவர்களால் மாத்திரம் போதிக்கப்படுகிறது. ஊழியருக்குத் தக்கதாக சபை.

3 பயிற்சிக்கப்படுகிறவர்களுக்காக ஜெபம்.

நாலு பேர் சீக்கிரம் வேலைக்குப் போவார்கள்.

4. விவசாயம் செய்து கண்ணிய ஊழியஞ்செய்கிறவர்களுக்காக ஜெபம்.

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவும், சபைகளுக்குப் பிரயோஜனமாயிருக்கவும் ஜெபம்.

IV. புறமதஸ்தர்.

1. தாலூகாவிலுள்ள இந்துக்கள் மகம்மதியருக்காக.

ஜனத்தொகை: 1¼ லக்ஷம். இந்துக்களில் உயர்குலத்தோர் பலருடைய சிநேகத்திற்காக துதி.

சில கர்ணம், கிராமமுனிசீபு தலைகள் சுவிசேஷம், சத்தியதூதன் ஒழுங்காய் வாங்கி வாசிக்கிறார்கள்.

2. முன் மார்க்கத்தைச் சேர்ந்து மறுதலித்துப் போனவர்களுக்காக ஜெபம்.

ஏருக்கலர், ஒட்டர் பலர் பின்வாங்கிப்போனார்கள். இரண்டொரு குடும்பத்தார் விவாகத்தினிமித்தம் மறுதலித்திருக்கிறார்கள்.

3. ஞானஸ்நானம் பெற ஆயத்தப்படுகிறவர்களுக்காக.

முப்பாவரம், மாட்டேடு, கிரிராமகிரி, பாபோஜிகூடம் முதலிய இடங்களில் புதுகிறிஸ்தவர்கள் உண்டு.

V. மிஷனெரிமார்.

1. மிஷனெரிமார் அனைவரும் ஆவியினால் நிறைந்து ஊக்கமாய் வேலைசெய்ய ஜெபம்.

கனம் S. பாக்கியநாதன் ஐயரவர்கள், கனம் தேவசகாயம் ஐயரவர்கள் சபை வேலை பள்ளிக்கூடம் பார்க்கிறார்கள். Mr. சீனிவாசகம் சீக்கிரம் பட்டத்துக்குப் படிக்க வருவார்கள். Mr. முத்துசாமி கைத்தொழில் வேலை படிப்பிக்கிறார்கள்.

2. புதிதாய் வந்திருக்கும் Mr. S. V. சுவாமிதாஸ் அவர்களுக்காக ஜெபம்.

தெலுங்கு கற்கிறதற்கும், பள்ளிக்கூடங்களை நடப்பிக்கிறதற்கும் வேண்டிய ஞானத்திற்காகவும் சுகத்திற்காகவும் ஜெபம்.

VI. அத்தியக்ஷரவர்கள்.

1. கடந்த வருஷத்தின் சரீர சுகத்திற்காகவும், மற்றகிருபைகளுக்காகவும் துதி.

2. மிஷன் சம்பந்தமான சகல வேலைகளுக்கும் வேண்டிய கிருபைக்காகவும் ஜெபம்.

தோர்ணகல் சர்ச் கவுன்சல் முதலாளியாகவும், சங்க பிரதிநிதியாகவும் வேண்டிய சகல ஞானத்திற்காகவும் ஜெபம்.

3. சென்னை, தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனங்களில் நடப்பிக்கும் வேலைகளுக்காக ஜெபம்.

திடப்படுத்தல்கள், பட்டாபிஷேகம் (மார்ச்சுமீ 8உ) முதலிய சகல வேலைகளுக்காகவும் ஜெபம்.

VII. பொது.

1. தோர்ணக்கல்லில் பெண்பாடசாலைக்கு வேண்டிய கட்டடம் கைத்தொழில்சாலைக் கட்டடம், கிராமப் பள்ளிக்கூடம்—இவற்றிற்கு வேண்டிய பணம்.

2. தெலுங்கு ஊழியர் கிடைக்க ஜெபம்.

பள்ளிக்கூடத்திற்கேற்ற திறமைசாலியான உபாத்திமார் மகா அவசரம்.

3. பள்ளிக்கூடப்பிள்ளைகளை ஆதரிப்போர் தேவை.

4. சர்ச்சுக் கவுன்சல் சுவிசேஷ பிரபல்ய சங்கம்—இவற்றிற்காக ஜெபம.

5 சிங்கரேணி மிஷனுக்காக ஜெபம்.

கனம் D. S. தாவீது ஐயரவர்கள், Messrs. P. ராயப்பன், A. ஞானமணி, A. தாவீது, D. ஆபிரகாம், G. ஏசுதாசன். எல்லாந்து தமிழ்சபை, பாக்கால் எல்லாந்து தாலுகாக்களில் உண்டாகும் புது தெலுங்கு சபைகள், அவ்வேலைக்கு வேண்டிய பணம்—இவற்றிற்காக.

VIII. தெலுங்கு சபை.

தெலுங்கு சபை உயிர்ப்பிக்கப்படவும். சி. எம் எஸ்., எஸ். பி ஜீ. மிஷன்கள் வேலை விருத்தியடையவும், தேவாவியானவர் தெலுங்கு நாட்டின்மேல் ஊற்றப்படவும் ஜெபம்.

2 கோடி பேர் தெலுங்கு பேசுகிறவர்கள்.

## ii. பளியர் மிஷன்.

1. பிரிட்டிஷ் இலாகாவிலும் திருவாங்கூர் மலைகளிலுமுள்ள பளியர் மன்னர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்குக் காட்டும் வாஞ்சைக்காகவும், கிறிஸ்தவர்களானவர்களுக்குள் காணப்படும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் துதி.

2. பள்ளிக்கூடத்திற்கு திருவாங்கூர் கவர்ன்மென்றார் மாசம் சுமார் ரூ. 8. கிரான்டு கொடுப்பதாக வாக்களித்திருப்பதற்காகவும், சர்க்கார் உத்தியோகஸ்தர் பொதுவாக இவ்வூழியத்தில் காட்டும் அநுதாபத்திற்காகவும் துதி.

3. மலையில் வசித்து மன்னர்களுக்குள்ளும் பளியருக்குள்ளும் சுவிசேஷ வேலையும் பள்ளிக்கூட வேலையும் செய்துவரும் Mr. A. டேவிட் அவர்களுக்காகவும் அவர்களுடைய மனைவிக்காகவும், ஸ்ரீவில்லிப்புத்தூரில் வசித்து பிரிட்டிஷ் இலாகாவில் சுவிசேஷ ஊழியம் நடத்திவரும் Mr. மோசஸ் முத்துமாலை, Mr. மாற்கு பிரசங்கிமாருக்காகவும் ஜெபம்.

4. மலையில் வசித்து ஊழியஞ்செய்வதற்கு இன்னும் அவசியமான ஊழியருக்காகவும், கிறிஸ்தவர்களுக்கு விவாகம், பரி. நற்கருணைமுதலிய திருப்பணிவிடை செய்வதற்கு ஏற்ற ஏற்பாடுகள் சீக்கிரம் முடிவடையும்படியாகவும் ஜெபம்.

5. பளியருக்குள்ளும் தேவாவியானவர் ஊற்றப்படவும், பளியக் கிறிஸ்தவர்கள் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுத்தப்படவும், கஷ்டமான இவ்வூழியத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் அமர்ந்திருக்கும்படியாகவும் ஜெபம்.

## iii. உள்நாட்டு ஊழியம்.

1. தமிழ்ச் சபைகளும் ஊழியரும் மிஷனெரி ஆவியினால் நிரப்பப்படும்படியாகவும், மிஷனெரி ஊழியத்திற்குத் தடைகளாக விளங்கும் சகல கருவிகளும் நீக்கப்படவும் ஜெபம்.

2. ஹோம்மிஷனருக்காகவும் அவருடைய ஊழியங்களுக்காகவும், சங்க உத்தியோகஸ்தர், கமிற்றி மெம்பர்கள் யாவருக்காகவும் ஜெபம்.

3. தோர்ணக்கல் ஆலயக்கட்டுமான முயற்சி சீக்கிரம் முற்றுப்பெறவும், மிஷனெரி ஊழியத்திற்கு அவசியமான ஊழியரும் ஏதுக்களும் சம்பூரணமாய் அநுக்கிரகிக்கப்படவும் ஜெபம்.

4. திருநெல்வேலி சபையில் கர்த்தர் ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றும்படியாகவும், அதன் வாசனை நாலுதிசையிலும் கர்த்தருக்குப் புகழ்ச்சியாகப் பரவும்படியாகவும் ஜெபம்.

5. அத்தியக்ஷமார், மிஷனெரிமார் முதலிய சகல தேவ ஊழியருக்காகவும் ஜெபம்.

6. சுதேச கிறிஸ்தவர்கள் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவர்களாக விளங்கவும், நம் தேசத்திலிருக்கும் புறமதஸ்தருக்காகவும், நம்மைச் சுற்றிலுமுள்ள இந்துக்களுக்காகவும் ஜெபம்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குத் கொடுக்கப்படும்.

Printed at the C M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS · REGISTERED · 4-APR 1914 · MADRAS

JANUARY, 1914 Registered No. M. 481

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. XI. No. 1] ஜனுவரிமீ 1914 [விலை பை 3

## திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்.

ஆபீஸ் விலாசம்:

அடைக்கலபுரம், பாளையங்கோட்டை.

மக-ா-ா-ஸ்ரீ- அப்பாசாமி அவர்கள், முதலாளி.
Mr. ஜே. அன்புடையான், B.A., L.T. காரியதரிசி.
" ஜி. தேவதாஸ் B.A., L.T. பொக்கிஷதார்.
" வி. சாமுவேல், B.A. பொக்கிஷ காரியதரிசி.
" செல்வநாயகம், உழைப்போர் ஐக்ய காரியதரிசி.
" வி. எஸ். காலிசன், பத்திரிகை மானேஜர்.

சங்கத்தின் பொதுவிஷயமான சகல கடிதங்களும் நடபடிக்கைகளும் காரியதரிசிக்கும், காணிக்கை நன்கொடை மணியாடர் முதலியவை பொக்கிஷதாருக்கும், பத்திரிகை விஷயமான கடிதங்கள், பிரபந்தங்கள், சந்தா முதலியவை பத்திரிகை மானேஜருக்கும் அனுப்பப்படவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா 3 அணா. தபாற் கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும். பத்திரிகையின் சந்தா எப்போதும் முன்பணமாக அனுப்பப்படவேண்டும்.

CONTENTS


| | |
|---|---|
| Editorial Notes ... ... ... | 1 |
| A New Year Letter from the Lord Bishop of Tinnevelly ... ... ... | 3 |
| From the Telugu Field ... ... ... | 4 |
| Financial Secretary's Notes ... ... ... | 6 |
| Home Missioner's Letter ... ... ... | 6 |
| Missionary News ... ... ... | 7 |


பொருளடக்கம்


| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 1 |
| நமது அத்தியக்ஷரவர்களின் நவவருடக் கடிதம் ... | 3 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 4 |
| பொக்கிஷ காரியதரிசியின் குறிப்புகள் ... ... | 6 |
| உள்நாட்டு ஊழியரின் கடிதம் ... ... | 6 |
| மிஷனெரி வர்த்தமானம் ... ... ... | 7 |


## பத்திராதிபர் குறிப்புகள்.

**நவவருடம்.** கிர்த்தாவின் பெரிதான கிருபையினால் இன்னோர் வருஷத்தைக் காணும் சலாக்கியம் பெற்றோம். அவருக்கே கனமும் மகிமையும், துதியும் ஸ்தோத்திரமும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களிலும் உண்டாவதாக. நாம் யாவரும் காணக்கிடைத்த இப்புதுவருஷம் நம்மெல்லாருக்கும் தனித்தனியாயும், குடும்பம் குடும்பமாகவும் வைதீக லௌகீக விஷயங்களிலும், திருச்சபை மிஷனெரி ஊழியங்களிலும், இராஜாங்க-வர்த்தக-ஜனசார விஷயங்களிலும் பெரும்பாக்கியம் பயக்கும் புதுவருஷமாயிருப்பதாக. இந்திய மிஷனெரி சங்கத்தின் அவயவங்களே! திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்தின் பிள்ளைகளே! நாம் நடப்பிக்கும் மிஷனெரி ஊழியத்திலும் இவ்வருஷத்தில் கர்த்தர் பெரிய ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுவாராக. பெரிய காரியங்களை எதிர்பார்த்து பெரிய காரியங்களுக்காக ஜெபிப்போமாக. ஜெபித்துக் கிரியை நடப்பிப்போமாக. இம்மானுவேலென்ற நாமதாரி நம்மோடிருப்பார். நமது தேசம் அவருடைய இரட்சிப்பைக்காணும். நமது உள்ளங்களும் களிகூரும்.

**ஞாபகார்த்த ஆலயம்.** நமது தெலுங்குநாட்டு ஊழிய விஷயமாய் நாம் இவ்வருஷத்தில் முடித்துத் தீர்க்கவேண்டிய ஓர் விசேஷித்த கடமை நமக்குண்டு. டோர்ணக்கல் மிஷன் முழுவதிலும் இன்னமும் ஒரு ஆலயமாவது கட்டப்படவில்லை. திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களாகிய நாம் புறதேச மிஷன்கள் மூலமாய் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஞாபகார்த்தமாக நமது மிஷன் பிரதான ஸ்தானமாகிய டோர்ணக்கல்லில் ஓர் சிறந்த ஆலயம்கட்ட மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு பணம் சேகரிக்கத்துடங்கினோம். பல நண்பர்கள் இதற்கென்று உற்சாகமாய்க் காணிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இதுவரை சேர்ந்திருக்கிற ரூபாய் சுமார் மூவாயிரம். நாம் கட்டப்போகும் ஆலயம் இருபதினாயிரம் ரூபாய் பிடிக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. மீதி ரூபாய் வந்து சேர்ந்தால்தானே நாம் ஒப்புக்கொண்ட காரியம் கைகூடிவரும். ஐரோப்பிய

மிஷனெரிமார் நமக்குப் பல அலங்கார ஆலயங்களையும், உன்னத கோபுரங்களையும் கட்டித்தந்தார்கள். அவைகளில் ஒன்றுவது அத்தியக்ஷர் தேவாலயமாகும் சலாக்கியத்தை இன்னமும் பெறவில்லை. நமக்கோ ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு முன்னே ஒரு அத்தியக்ஷரையும், அவ்வத்தியக்ஷர் நமது மிஷன் ஸ்தானத்தின்பேரால் அழைக்கப்படும் சலாக்கியத்தையும் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே, நாம் செய்யவேண்டிய காரியம்மாத்திரம் பாக்கியாயிருக்கிறது. ஆதலால் இப்புதுவருஷ ஆரம்பத்தில் இவ்விசேஷித்த கடமையும் நமதுபேரிலிருக்கிறதென்று நினைவுகூறுவோமாக.

**விசேஷ ஜெபநாள்.** பெப்ருவரி௴ 24௳ பரி. மத்தியாவின் திருநாளாகிய இந்நாள் திருநெல்வேலி இந்தியமிஷனெரி சங்கத்தின்விண்ணப்பநாளாய்க் கொண்டாடப்படும்படித் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது சங்கநேயர் யாவரும் தனித் தனியாயும், கூட்டங்கூட்டமாயும் நமது ஊழியத்தில் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதம் தங்கும்படியாகவும், நமது நாட்டார் யாவரும் மிஷனெரி அனல் மூண்டு இவ்வூழியத்திற்குக் கைகொடுக்கும்படியாகவும் மகா அவாவுடன் ஜெபிக்க ஞாபகப்படுத்துகிறோம். சபைகள்தோறும் இந்நாளைக்குறித்து ஏற்கனவே தெரியப்படுத்தி சபை மொத்தமாய் நமது சங்கத்தின் வேலைக்காகவும், இந்தியாவின் இரட்சிப்புக்காகவும் மிகுந்த ஆவலுடன் ஜெபிக்கும்படி குருமார் ஒழுங்குசெய்ய அன்பாய்க் கேட்கிறோம். இவ்வருஷத்தில் இந்நாள் பௌர்ணமி தினமாதலால் இரவு ஜெபக் கூட்டங்களுக்கு வசதிக்குறைவிருக்கமாட்டாது. 22௳யாகிய முந்தின ஓய்வுநாள் நமது சங்கத்தின் வேலைகளை விஸ்தாரமாய்ப் பிரசங்கங்களில் எடுத்துரைப்பது உசிதம். ஒவ்வோர் சபையிலுமுள்ள உழைப்போர் ஐக்ய அங்கங்கள் தாங்களே முயற்சிப்பதுடன், தங்கள் குருமார் முதலிய தேவ ஊழியருக்கு உதவி செய்யவும் ஞாபகப்படுத்துகிறோம்.

இந்தவருஷ ஆரம்பமே மிஷனெரி ஊழிய சம்பந்தமாய் வெகு சிறப்புப்பெற்றுள்ளது என்று சொல்லலாம். இம்மாசத்தின் 3-ம், 4-ம், 5-ம் தேதிகளில் நமது சங்கத்தின் பரிபாலனத்திற்குட்பட்டதாய், பாளையங்கோட்டை சி. எம். எஸ். சதாப்த மண்டபத்தில் பிரதிதினமும் மாலை 5 மணி முதல் 7½-மணி வரைக்கும் படிப்பாளிகளான புறமதஸ்தருக்கு தமிழில் தெய்வ சந்நிதி

**புறமதஸ்தருக்கு விசேஷ பிரசங்கங்கள்.**

என்ற பொருளின்பேரிலும், ஆங்கிலத்தில் தற்பிரதிஷ்டை என்ற பொருளின்பேரிலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பிரசங்கங்கள் நடக்கிறதற்கு முன்னதாகவே ஒருவாரமாக நமது சங்கத்தின் பல அங்கங்கள் தினமும் ஷை சதாப்தமண்டபத்தில் கூடி இப்பிரசங்கங்கள் புறமதஸ்தருக்கு மெய்யாகவே ஆசீர்வாதமாயிருக்கும்படி ஜெபித்துவந்தார்கள். இந்தப் பிரசங்கங்களைச் செய்யும்படி பங்களூர் ஐக்ய வேத சாஸ்திரக் கல்விச்சாலைத் தலைவராகிய கனம். லார்லென் ஐயரவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் தமிழில் வித்துவான். நல்ல பக்தன். நமது தேசம் இயேசுபெருமானின் பாதம் படைக்கப்படவேண்டுமென்ற விசேஷ அவாவுள்ளவர்கள். திறமையான பிரசங்கி. ஆவிக்குரிய விஷயங்களில் போர்ந்த அநுபோகமுடையவர்கள். இந்துமதக் கொள்கைகளைத் திட்டமாய் அறிந்தவர்கள். மார்க்க சாஸ்திரங்களை நுட்பமாய் வாசித்து அவைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பேசக்கூடியவர்கள். அவர்கள் பாஷை நடையும், பேசும் முறையும் மிகவும் வியக்கப்படத்தக்கது. அவர்கள் வர உத்தேசித்த புகைக்கப்பல் பிந்திப்புறப்பட்டதால் குறித்த நேரத்தில் வரவும், முதலாம்நாள் பிரசங்கங்களைப் பண்ணவும் கூடாமற்போயிற்று. ஆயினும் இதை உத்தேசித்து நமது சங்கத்தின் பிரசிடெண்டு அவர்கள் கனம். கார் ஐயரவர்களையும், கனம் பிளாஸ் ஐயரவர்களையும் முதலாம்நாளில் இந்துக்களுக்கு விசேஷித்த பிரசங்கங்களுடன் தயாராயிருக்கக் கேட்டிருந்ததின்பேரில் கனம். கார் ஐயரவர்கள் 'தெய்வ சந்நிதி' என்ற பொருளின்பேரில் தமிழிலும் கனம். பிளாஸ் ஐயரவர்கள் 'நித்திய ஜீவன்' என்ற பொருளின் பேரில் ஆங்கிலத்திலும் மிக வல்லமையாய்ப் பிரசங்கித்தார்கள். இரண்டாம்நாள் கனம்: லார்லென் ஐயரவர்கள் வந்து சேரவே அன்றையத்தினமும் அடுத்தநாளிலும் முன் குறிப்பிட்டிருந்த பொருட்களின்பேரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசங்கம் செய்தார்கள். தினமும் இப்பிரசங்கங்களைக் கேட்கும்படி வந்த படிப்பாளிகளான புறமதஸ்தர் சுமார் நானூறுபேர். இப்பிரசங்கங்களுக்கிடையில் கனம்: அப்பாசாமியவர்கள் தங்கள் அநுபவசாட்சி பகர்ந்தார்கள். கர்த்தர் தாமே, விதைத்த விதை விருதாவாய் போகாதபடி பலன் கொடுக்க அருள்புரிவாராக.

இம்மாசத்தின் 6௳ செவ்வாய்கிழமை புறச்சாதியாருக்கு கிறிஸ்து வெளிப்பட்ட நாளாகிய பிரசன்னத்திருநாளாதலால் பாளையங்கோட்டை ஆலயத்தில் விசேஷித்த ஆராதனையும், பிரசங்கமும் இருந்தது. கனம். லார்லென் ஐயரவர்கள் பேசினார்கள். அவர்கள்

**பிரசன்னத் திருநாள்.**

இச்சமயத்தில் நன்குணர்த்தின மூன்றுகாரியங்கள் மிஷனெரி ஊழியத்தைச் செய்யும் நாம் கவனிக்கத்தக்கவை. முதலாவது: கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து அருள்நாதரைப் பணிந்துகொண்ட சம்பவம் பரி: மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரம் காட்டப்பட்டிருக்கிறது. இச்சுவிசேஷம் பூர்வீகத்தில் யூதருக்கு எழுதப்பட்டது. யூதஜாதியார் மேசியா தங்களுக்குரியவர் என்று சுயதிருப்தியுற்றிருந்தார்கள். புறச்சாதியார் இரட்சிக்கப்படுவதைக் குறித்து யூதர் முற்றிலும் கவலையற்றிருந்தார்கள் என்றே சொல்லவேண்டும். ஆயினும் இச்சம்பவம் யூதருக்கு எழுதப்பட்ட சுவிசேஷத்தில் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. நமது தேசத்தின் ஜனசங்கையைக் கவனிக்கையில், எப்பாகங்களில் கிறிஸ்தவர்கள் மிகுதியாயிருக்கிறார்களோ அப்பாகங்களில் புறமதஸ்தராயிருந்து கிறிஸ்தவர்களானவர்களின் தொகை மிகவும் சொற்பம். திருவாங்கூர், திருநெல்வேலி நாடுகள் இதற்கு நல்ல திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் மிகச் சொற்பமாயிருந்த இந்தியாவின் மற்றப்பாகங்களிலோ அனேக புறமதஸ்தர் கிறிஸ்தவராயிருக்கிறார்கள். இதன் கருத்து என்ன? யூதர் புறச்சாதியாரின் இரட்சிப்பைக்குறித்துக் கவலையற்றிருந்ததுபோல நாமும் நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஏராளமான புறமதஸ்தரின் ஆத்தும ஈடேற்றத்தைக் குறித்து நிர்விசாரம் கொண்டிருக்கிறோம் என்பதுதானே. இரண்டாவது: கர்த்தர் தமது நாமமகிமைக்கானவைகளைத் தாமே நடப்பிக்கிறார். தூரதொலையிலுள்ள சாஸ்திரிகளைத் தெரிந்துகொண்டதும், இழுத்துக்கொண்டதும் கர்த்தர். இந்து தேசத்தின் தென்கோடியிலுள்ள நமக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதும், நாம் சுவிசேஷ பாக்கிய சலாக்கியங்களுக்கு பங்காளிகளானதும் அவராலேயே. மூன்றாவது: கர்த்தர் ஒரு கருவியின் மூலமாய் சாஸ்திரிகளை இழுத்துக்கொண்டார். அந்தக்கருவி எது? திரு அவதார புருஷனின் மகிமைக்கேற்றதும், சாஸ்திரிகளை வழி நடத்தினதுமான பிரகாசமுள்ள ஓர் நட்சத்திரம்தான். இந்நாட்களில் கர்த்தர் நம்மையே ஒரு கருவியாக உபயோகிக்கிறார். ஆதலால் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிற நாம், புறமதஸ்தர் நமது நற்கிரியைக்கண்டு நம்மைப்போல கிறிஸ்துவின் தொண்டர்களாகி பரலோகத்திலிருக்கிற நமது பிதாவை மகிமைப் படுத்தும்படி நமது வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.



**நமது பத்திரிகை.**

நமது பத்திரிகைத் தனிப்பிரதியின் விலை தபாற்கூலி நீங்கலாக மூன்று அணா. சந்தாதாரில் சிலர் இரண்டு அணா வீதம் இவ்வருஷத்திற்குச் சந்தா அனுப்பியிருக்கிறார்கள். பிரதி ஒன்றுக்குப் பத்திரிகையின் விலை மூன்று அணாவென்றுத் திரும்பவும் ஞாபகப் படுத்துகிறோம். பத்திரிகை சந்தா இரண்டு மூன்று வருஷங்களாக பாக்கிவைத்திருப்போர் பலர் உண்டு. அவர்களின்பேர் நமது சங்கத்திற்குக் காணிக்கை கொடுக்கும் நண்பரின் ஜாபிதாவிலும் இல்லையாதலால் அவர்களுக்கு இம்மாச முதல் பத்திரிகை அனுப்பாது நிறுத்துகிறோம். நமது அத்தியக்ஷாதீனத்தின் குருமார் அனைவருக்கும் நமது அத்தியக்ஷரவர்களின் நவவருட நிருபமடங்கிய ஜனுவரிப் பத்திரிகையை மாதிரிப்பத்திரிகையாகப் பாவித்து அனுப்புகிறோம். குருமார், தேவ ஊழியர், உழைப்போர் ஐக்ய அங்கங்கள்முதலியோர் இவ்வருஷம் எத்தனை பிரதிகள் மாசா மாசம் அனுப்ப வேண்டுமென்று தெரிவிப்பதுடன் சந்தா, தபால்கூலியையும் முன் பணமாக அனுப்பப் பிரார்த்திக்கின்றோம்.

இந்த மாசம் 12-ம்௳ சாயந்தரம் தோர்ணக்கல் மிஷனுக்கு வித்தியா மிஷனெரியாகச் செல்லும் Mr. S. V. சுவாமிதாஸ் அவர்களுக்கு பபிரயாணோபசாரமளிக்கப்பட்டது. அதன் வரலாறு கள் அடுத்தசஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

**பிரயாணோபசாரம்.**

சுமார் இரண்டு வருஷக்காலமாய் இவ்வித மிஷனெரியில்லாக் குறைவால் நமது மிஷனுக்கு நேரிட்டிருக்கிற நஷ்டம் மிகுதி. அருள்நாதரின் அழைப்பைப்பெற்றுப் போகும் Mr. சுவாமிதாசுக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் வேண்டும் கிருபையை அளிக்க ஜெபிப்போமாக.

---

## நமது அத்தியக்ஷரவர்களின் நவவருடக் கடிதம்.

எனதருமை நண்பரே!

திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்தின் அவயவங்கள் யாவருக்கும் நவவருட வாழ்த்துதல் கூறி இந்நவவருட நிருபத்தை வரைகிறேன்.

முதலாவது இவ்வருடத்தை துதியின் சத்தத்தோடு துடங்குவோமாக. துதியே நமது முதல் தொனியாயும் உரத்ததொனியாயுமிருப்பதாக. நமது கருணாகரர் நமக்கு அளவில்லாமல் அருளிய பாக்கிய சலாக்கியங்களை நன்றியுடன் நன்குணர்ந்தவர்களாய் இன்னொருவருட வேலையை உடனே முன்னிலும் அதிக உற்சாகமாய் ஆரம்பிக்க நமது மனதின் அரையைக்கட்டி புறப்படுவோமாக. சென்றாண்டின் நன்மைகளை உணருவதும் நிகழுமாண்டின் ஊழியத்தை நடப்பிக்கத் தைரியமடைய வேண்டியதும் நமது இருதயம் தானே. கடந்த காலத்தில் மெய்யாகவே கர்த்தர் நம்மோடிருந்திருக்கிறார். திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் உண்மையாகவே மிஷனெரி ஊழியத்தில் வரவர அதிக ஊக்கம் காண்பிக்கிறார்கள் என்பதற்கு கடந்த வருஷச் சரித்திரமும் போர்ந்த அத்தாட்சியாயிருக்கிறது. ஷை வருஷத்தின் நடபடிகளையும், தொகைகளையும் கவனித்துப் பாருங்கள். அதிகக் காணிக்கை, அதிக சுயவெறுப்பு, அதிக ஆழ்ந்த அனுதாபம், மிஷனெரி ஊழியத்துக்குத் தங்களை ஒப்புவித்தவர்களின் தொகையும் முன்னிலும் அதிகமே. இவையெல்லாம் நமது ஜனங்கள் தங்கள் பேரிலுள்ள பொறுப்பை அதிகமதிகமாய் உணருகிறார்கள் என்று காட்டுகிறதல்லவா? இவ்வூழியத்திற்கு விடா முயற்சியும், ஓயா ஜெபமும் இன்றியமையா அவசரம்.

நமது அத்தியக்ஷாதீனம் எங்கும்போய் இந்திய மிஷனெரி சங்க ஊழியத்தின் விசேஷங்கள், வரலாறுகள், தற்கால அவசியங்கள் முதலியவைகளை காலாகாலத்தில் ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி மிஷனெரி முயற்சி விரிந்து வளரத்தக்கதாய் அவர்களை உற்சாகப்படுத்தும்படி ஓர் மிஷனர் ஏற்படுத்தப்பட்டிருக்கிற விஷயம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அவரை நமது அத்தியக்ஷாதீனத்திலுள்ள எல்லா குருமாரும் அன்புடன் ஏற்றுக்கொண்டு தம் தம் சபைகளில் அவருக்கு வேண்டிய உதவிசெய்ய விரும்பிக்கேட்கிறேன். நமது அத்தியக்ஷாதீனத்திலுள்ள ஒவ்வொரு சபையும் இந்திய மிஷனெரி சங்கத்தின் தாபரிப்புக்கென்று தங்கள் பொருட்களைப் படைத்து, தெலுங்கு நாட்டிலும் பளியர் மிஷனிலுமிருக்கும் நமது பிரதிநிதிகளை நினைத்து கிருபாசனத்தின் முன் தினமும் முழங்காலில் நின்று, இவ்விதமாய் இந்நற்முயற்சியில் பங்கு பெறுவது பெரிய பாக்கியம் என்று உணர நான் ஊக்கமாய் ஜெபித்து வருகிறேன்.

சென்றாண்டின் பெரிய விசேஷம் மகாகனம்: அசரியா அத்தியக்ஷரவர்கள் திருநெல்வேலிக்கு விஜயம் செய்ததே. அச்சமயத்தில் திருநெல்வேலியிலுள்ள கிறிஸ்தவர் புறமதஸ்தராகிய சகலத்திராளும் அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குக் காட்டிய பட்சத்தையும், அவர்களுக்கு அளித்த

வர்த்தனோபசாரத்தின் உற்சாகத்தையும் யாராவது கூட்டிச் சொல்ல முடியுமோ? அப்போ எங்கும் விளங்கிய சந்தோஷ தொனியும் கிளம்பின துதியின் தேமும் மிகவும் விசேஷமானதே. ஷெ. அத்தியக்ஷரவர்களின் வரவேற்பு வரலாறுகள் நமது இந்திய கிறிஸ்தவர் ஒருவரால் சிறந்த நடையில் எழுதப்பட்டு பல பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. இவ்விசேஷ வைபவத்தில் பங்குபெற்றவர்களில் யார்தான் இலேத எளிதில் மறக்கக்கூடும்.

இந்நவவருடத்தில் நாம் செய்துமுடிக்கவேண்டிய விசேஷ காரியம் ஒன்றுண்டு. நமது தயாநிதி பல்லாண்டுகளாய் நமக்குப் பாராட்டிய பற்பல தயவுகளை நன்குணர்ந்தவர்களாய் நாம் நேசித்துவரும் டோர்ணக்கல் சபைக்கும் அதன் அத்தியக்ஷரவர்களுக்கும் ஓர் ஆலயத்தைக் கட்டிக்கொடுக்க தீர்ணயம் பண்ணினோம். இவ்வாலயம் வெகு தீவிரமாய் முடியவேண்டிய ஓர் காரியம். அனேகர் இதற்கென்று உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகிலும் திருநெல்வேலி நாட்டார் சபை மொத்தமாய் கர்த்தருக்கு படைக்கும் இவ்வெளிப்படையான காணிக்கையில் எல்லாரும் பங்கு பெறுவது அவசியமல்லவா?

நமது சங்கம் திருவாங்கூர் மலைநாட்டில் நகர்ந்தலையும் பளியருக்குள் செய்யும் வேலையும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜனங்களில் அனேகர் ஞான போதனைபெற்று வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் வசதியான ஓர் இடத்தில் குடியேற்றம் ஒன்று ஸ்தாபித்து, முன்னிலும் ஒழுங்கான முறையாய் வேலை நடப்பிக்கக்கூடும் என்று நம்புகிறோம்.

கடைசியாக, கடந்துபோன காலம் திரும்ப வரவேமாட்டாதாதலால், இதுவே உசிதசமயமென்றறிந்து, இந்நவவருடத்தில் இச்சங்கவேலையில் நமது ஜெபத்தினாலும், பிரயாசத்தினாலும் நம் உற்சாகத்தைக்காட்டுவோமாக. மேலும், கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்றறிந்தும் இன்று என்னப்படுகிற இப்பொழுதே நாம் எழும்பி கிரியை நடப்பிப்போமாக,

கர்த்தருக்குள் உங்களின் பட்சமும் உண்மையுமுள்ள
திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷராகிய,
A. Acheson உல்லியம்ஸ்.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

கர்த்தர் நமக்கும் நமது சங்கத்துக்கும் செய்திருக்கும் மட்டில்லாத கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

கர்த்தர் பிறந்த பண்டிகைக்கு முந்தின தினம் சாயங்காலத்தில் மகாகனம்: தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் ஒரு விசேஷ ஆராதனை நடத்தி பண்டிகையை ஏற்றவிதமாய் ஆசரிப்பதற்கான போதனை சொன்னார்கள். மிஷன் கம்பவுண்டிலும், வீட்டின்மேலும் கட்டப்பட்ட கொடிகள் இரட்சகரின் பிறப்பு தினத்துக்குரிய சுபமகோற்சவ கொண்டாட்டத்துக்கு ஏற்ற விளம்பரமாயிருந்தது. பண்டிகை தினம் அதிகாலையில் 4 விதநாதமுள்ள நாகமணிகள் அடிக்கப்பட்டது. அது அந்த சந்தோஷ தினத்துக்கு அறிகுறியும் ஆனந்த கொண்டாட்டத்துக்கு அழைப்புமாயிருந்தது. உடனே பிள்ளைகள் முதலிய யாவரும் எழுந்து தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு புஷ்பங்களாலும் விதவிதமான தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டிலங்கிய ஜெபஸ்தலத்தில் வந்துசேர்ந்து தங்கள் இன்பமான குரலோசையுடன் கீதங்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். 4-மணிக்குப் பண்டிகை ஆராதனை திருவிருந்து கொண்டாடப்பட்டது. மகாகனம்: அத்தியட்சரவர்கள் தங்கள் முழு உடுப்புகளோடும் தீபாலங்காரம் பொருந்திய திருச்சந்நிதியில் பிரவேசித்ததும் அவர்களும் ஒரு குருவுமாக ஆராதனைகளை நடத்தியதும், சபையாரும், பிள்ளைகளும் காட்டிய உற்சாகமும், அவர்கள் பாடிய இனிய பாட்டுகளும் மனதைப் பரவசப்படுத்துபவைகளாயிருந்தன.

29௳ மகாகனம்: அத்தியட்சரவர்கள் பட்டாபிஷேகம் பெற்ற தினமானதால் அதை ஒரு பண்டிகை தினம்போல் ஆசரித்தோம். கம்பவுண்டு பல சிறுகொடிகளாலும் அத்தியட்சரவர்களை வாழ்த்தும் கொடிகளாலும், பிரிட்டிஷ் ராஜ்யக்கொடியாலும் அலங்கரிக்கப்பட்டது. அதிகாலையிலே ஆனந்த கீதமணிகள் அடிபட்டது. காலை 7-மணிக்கு கர்த்தருடைய ஐக்கிய விருந்து ஆசரிக்கப்பட்டது. கர்த்தர் தமது ஊழியத்தின் விஷயமாயும், மற்றும் சம்பந்தமாயும் நமக்கு அருளியிருக்கும் மகா கிருபைகளை உணர்த்திக்காட்டி நாம் எவ்வளவாய் கர்த்தருடைய சந்நிதியில் நம்மைத் தாழ்த்தி அவரைப் போற்றிப் புகழவேண்டியதென்பதைத் தெளிவாயும் திருஷ்டாந்தங்களுடனும் மனதில் அழுந்தத்தக்கதாய் மகாகனம்: அத்தியட்சரவர்கள் பிரசங்கித்தார்கள். அன்று விசேஷ காணிக்கையென்று கோட்டிஸ் கொடுக்கப்படாதிருந்தபோதிலும் வந்திருந்த காணிக்கையாகிய ரூ. 8—5—5. புதிதாய் அன்றஸ்திபாரம்போடப்பட்ட தோர்ணக்கல் சின்ன ஜெபவீட்டு கட்டடத்துக்காகக் கொடுக்கப்பட்டது.

சாயந்தரம் தோர்ணக்கல் அத்தியட்சாதீனத்துக்காக விசேஷ ஜெபக்கூட்டம் வைத்து துதியும் வேண்டுதலும் செய்யப்பட்டது. அதன்பின் தோர்ணக்கல் பழைய கம்பவுண்டுக்குள்ளிருப்பவர்களுக்குபயோகமாக ஒரு சின்ன ஜெபவீடு அஸ்திபாரம் போடப்பட்டது. வாலிபரும் பாலியருமான தோர்ணக்கல் கிறிஸ்தவர்கள், கடப்பாரை மண்வெட்டிகளுடன் உற்சாகமாய் வாணம்தோண்டினார்கள். மிஷனெரிமாரில் கனம். D. S. டேவிட் ஐயரவர்கள் முதல் யாவரும் பிக்காஸ்பிடித்து வாணம்தோண்டினார்கள். மிஷனெரிமார் அம்மாள்மாரும், உபாத்திமார் மனைவிகளும், போர்டிங் பெண்பிள்ளைகளும், தங்கள் இடுப்புகளிலும் தலையிலும் தோளிலும் உசாராய் தண்ணீர் சுமந்துவந்து அஸ்திபாரம் தோண்டுவதற்காய் ஊற்றினார்கள். ஆண்கள் கற்கள் சுமந்துவந்துசேர்ந்தார்கள். பாலியர் அவர்கள் கையை தங்கள் பாட்டுகளால் தாங்கி உசார்ப்படுத்திக்கொண்டு நின்றார்கள். அவர்கள் பாடிய தெலுங்குப் பாட்டுகளில் ஒன்றின் சில வசனங்களை இங்கே எழுதுகிறேன்.



ஆலயம் கட்டுவோம்
ஆலயம் தேவாலயம்
ஆலயம் நம் சொந்தம்
ஆநந்தம் கொள்வோம்.

பைசாக்கள் சிரேஷ்டமா?
பெல பலி காட்டிலும்
ஐஸ்வர்யம் கர்த்தனை
அண்டும் விஸ்வாசம்.

கல்லாறுற் சுமப்போம்
கர்த்தர் ஜெப வீட்டுக்கே
உல்லாசமாக நீர்
ஊற்றுவோம் மொண்டு.

வாணங்கள் தோண்டிட
மனதுண்டு பெலமும்
காணிடோம் யாவுக்கும்
நாங்கள் எண்ணுவோம்.
கூலியாள் வேண்டாமே
கூடிச்சுவர் கட்டுவோம்
வாலிபர் முதலியோர்
வாஞ்சை கொண்டிடில்.

தச்சர்கள் வேண்டாமே
தயார் நாம் அவ்வேலைக்கு
உற்சாகமாய்ச் செய்குவோம்
உளி, வாள் வேலை.

அஸ்திபாரம்போடும் சமயத்திலும் சில பாட்டுகள் பாடிய
பின் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் ஜெபங்கள்
செய்து அஸ்திபாரம்போட்டார்கள். 1912-ம்௵ டிசம்பர்மீ
29௳யன்று கல்கத்தாவில் தோர்ணக்கல் இந்திய மிஷனெரிமா
ரில் ஒருவருக்கு அத்தியட்ச பட்டாபிஷேகம் கொடுக்கும்
போதே மகாகனம்: மெற்றாப்போலிட்டனை சிரேஷ்ட அத்
தியட்சரவர்கள் நிசமான இந்திய சபைக்கு அஸ்திபாரம்போட்
டார்களென்று சொல்லலாமே. 1913 டிசம்பர்மீ 29௳யன்று
தோர்ணக்கல் சபையின் உபயோகத்துக்காக முதல் ஜெப ஸ்த
லத்துக்கு அஸ்திபாரம்போடப்பட்டது. இது ஒரு விசேஷ
தினமே. நமது மிஷன் முழுவதிலும் இன்னும் ஒரு ஜெபஸ்
தலமாவது கட்டப்படவில்லை. ஜனங்களே அவைகளைக் கட்
டிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கமாயிருக்கிறோம். கட்ட
ஆரம்பிக்கக் காலம்சென்றாலும் செல்லும். என்றாலும் எவ்வ
ளவு காலம் கழித்தபின்னாலும்சரி, அவரவர் தங்கள் தங்களுக்கு
வேண்டிய ஜெப ஸ்தலங்களைக் கட்டிக்கொள்வதே நியாயம்.
தோர்ணக்கல்லிலுள்ளவர்கள் இதுவரையும் மிஷன் வீட்டின்
மத்தியிலுள்ள அறையை ஜெபஸ்தலமாகக்கொண்டு, அதிலும்,
அதின் முன்னும், பக்கங்களிலுமுள்ள மூன்று அறைகளிலும்
ஜனங்கள் உட்கார ஆராதனைகள் நடத்தப்பட்டுவருகிறது. மத்தி
யில் வாசல்கள்மட்டும் திறப்பாயுள்ளவைகளான 4 அறைகளில்
ஜனங்கள் உட்கார்ந்திருப்பதும், பாடுவதும், வாசிப்பதும்,
ஜெபிப்பதும், வசனம் கேட்பதுமான விஷயம் எவ்வளவு வச
திக்கேடும் சங்கடமும் என்பது இப்படிப்பட்ட அநுபவமடைந்தவர்களுக்கே நன்றாய்த் தெரியும். இவ்வித வசதிக்கேடுகளுக்கு நிவிர்த்தி நடக்கப்போகிறதென்ற எண்ணமே ஆயாசப்பட்ட ஆவிக்கு அமிர்தம் கிட்டினாற்போலிருக்கிறது. கர்த்தரின் ஜனங்களை உற்சாகமான ஆவி இடைவிடாமற் தாங்கி, கட்டடம் சீக்கிரம் முடிவாகவும் எங்கள் ஆராதனை, ஸ்தலக்கஷ்டம் தீரவும் கர்த்தர் கிருபைசெய்வாராக.

நவவருடப்பண்டிகையும் மிகவும் சந்தோஷமாய்க்கொண்டாடினோம். கடந்தவருஷம் டிசம்பர்மீ 31௳ இரவு 11-மணிக்குத்தொடங்கின ஆராதனை அடுத்தவருஷம் ஆரம்பித்தபின்னும் நடந்துகொண்டேயிருந்தது. இப்படியாக ஒரே ஆராதனை 1913, 1914 ஆன இரண்டு வருஷங்களாக நடந்துகொண்டிருந்தது. 1913ம் வருஷத்தின் சம்பந்தமான விஷயங்களை நான் பேசினேன். மகாகனம் அத்தியக்ஷரவர்கள் லித்தானியா ஜெபம் வாசித்து புது வருஷத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டியதும் செய்யவேண்டியதுமான காரியங்களையிட்டுப்பேசி ஜெபம் செய்து ஆசீர்வாதம் கூற அதிகாலை ஆராதனை முடிந்தது.

சாயந்தரம் தோர்ணக்கல் சபையாரும் ஊழியரும் மிஷனெரிமாரும் மகாகனம் அத்தியக்ஷரவர்களுக்கு நவ வருட வாழ்த்துசொல்ல அத்தியக்ஷரவர்கள் பங்களாவிற் கூடினார்கள் சந்திப்பு மிகச்சந்தோஷமாய் நடத்தப்பட்டது. உபசாரப் பத்திரிகைகள் எழுதி வாசிக்கப்பட்டது.

அத்தியக்ஷரவர்கள் ஜனங்களுடன் சந்தோஷமாய்ப்பேசி ஜெபம் செய்தனுப்பினார்கள். பிள்ளைகளும் பெரியோரும் பாட்டுகளினால் கர்த்தரைப் போற்றிப்புகழ்ந்தார்கள். கூடின கூட்டம் ஒரு குடும்பத்திலுள்ள பலரும் கூடிய ஒரு குடும்பக் கூட்டம்போலிருந்தது.

ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருந்த 3 பேருக்கு பட்டாபிஷேகதினத்திலேயே ஆற்றில் ஞானஸ்நானம் கொடுக்கத் தீர்மானித்திருந்தும் அன்று நடந்த கூட்டங்களினால் ஞானஸ்நானம் அன்று செய்யப்படத் தடைபட்டுப்போயிற்று. அடுத்த நாள்சாயந்தரம் தோர்ணக்கல் பள்ளிப்பிள்ளைகள், பயிற்சிசாலை மாணவர், உபாத்திமார், மிஷனெரிமார், மகாகனம் அத்தியக்ஷரவர்கள் அவரவரின் குடும்பத்தாருடன் ஆற்றுக்கு, ஞானஸ்நானம் பெறவேண்டியவர்களுடன் போய், பிள்ளைகள் கொடிகள் பிடித்து நிற்க, சபையார் எழுப்புதலாகப்பாட, அத்தியக்ஷரவர்களும் நானுமாக ஞானஸ்நானத்தொட்டியாகிய ஆற்றின் நீர் ஸ்தத்துக்கு அருகில்வந்து ஆராதனையை நடத்தினோம். பின் மகாகனம் அத்தியட்சரவர்கள் ஆற்றுத்தண்ணீருக்குள் இறங்கி நின்று அம்மூவரையும் ஒருவர் ஒருவராகத் தண்ணீரில் முழுக்காட்டி ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஆராதனை மிகவும் பயபக்திக்குரியதாயும் சந்தோஷமாயுமிருந்தது.

சென்னைபட்டணத்தில் பரி. எப்பா பள்ளிக்கூடத்து முதலாளியாகிய கனம்: கார்டன் மிசியம்மாளவர்கள் தோர்ணக்கல்லைப்பார்க்கவென்று 27௳ வந்து 30௳ வரையும் இங்கிருந்து சகலத்தையும் பார்த்துப்போயிருக்கிறார்கள். அப்பாடசாலைப் பிள்ளைகள் இரண்டு வருஷமாய் பாவாடை சட்டைகள் கிறிஸ்துமஸ் இனாமாக நமது மிஷனுக்கு அனுப்புகிறார்கள்.

இத்தடவை அனுப்பின உடுப்புகளை கிராமத்து பள்ளிக்கூட பிள்ளைகளுக்குக் கொடுக்க வைத்திருக்கிறோம். அம்மாளவர்கள்மூலமாய் அப்பாடசாலைப்பிள்ளைகளுக்கு வந்தனம் சொல்லியனுப்புகிறோம்.

மேல்மருவிபட்டணத்திலிருந்து கனம்: ஸிமித் மிஸியம்மாளவர்களும் இன்னோர் மிஸியம்மாளும் தோர்ணக்கல்லிலுள்ள நமது மிஷனைப் பார்க்கவருகிறார்கள். கனம்: ஸிமித் மிஸியம்மாளவர்கள் முன் கம்மமெட்டிலிருந்தவர்கள். நமது மிஷனில் மிகவும் அநுதாபம் காட்டியவர்கள். பிள்ளைகளுக்கு இரண்டொரு தடவைகளில் கிறிஸ்மஸ் வெகுமானங்கள் அனுப்பியவர்கள்.

மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இந்த மாதம் 9உ முதல் 20 தினங்களாய் நமது மிஷனைச் சேராத கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார்கள். கர்த்தர் அவர்கள் பிரயாணத்தையும் ஊழியத்தையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாமுவேல் பாக்கியநாதன்.

## போக்கிஷ காரியதரிசியின் குறிப்புகள்

### I

1913-ம் வருஷம் ஏப்பிரல்மீ முதல் டிசம்பர்மீ முடிய சங்கத்தின் வரவு தொகைக்குரிய விபரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாளையங்கோட்டை | சர்க்கிள் | ... | 447 | 8 | 6 |
| ஆழ்வார்னேரி | ,, | ... | 83 | 11 | 4 |
| சேவல் | ,, | ... | 108 | 13 | 0 |
| டோனாவூர் | ,, | ... | 110 | 5 | 0 |
| பண்ணிகுளம் | ,, | ... | 32 | 4 | 0 |
| பன்னைவிளை | ,, | ... | 0 | 0 | 0 |
| மெஞ்ஞானபுரம் | ,, | ... | 617 | 11 | 6 |
| நாசரேத்தமாவடி | ,, | ... | 23 | 12 | 0 |
| சாத்தான்குளம் | ,, | ... | 69 | 1 | 0 |
| சுவிசேஷபுரம் | ,, | ... | 68 | 12 | 5 |
| நல்லூர் | ,, | ... | 147 | 6 | 10 |
| கரண்டை | ,, | ... | 68 | 8 | 0 |
| சாட்சியாபுரம் | ,, | ... | 70 | 0 | 6 |
| வாகைக்குளம் | ,, | ... | 50 | 11 | 9 |
| நாசரேத் சேகரம் | கல்பா | ... | 5 | 0 | 0 |
| ,, | ஆழ்வார்திருநகரி | ... | 50 | 0 | 0 |
| சாயர்புரம் | சேகரம் | ... | 0 | 0 | 0 |
| நாஸரேத்குடி | ,, | ... | 46 | 4 | 0 |
| இடையன்குடி | ,, | ... | 1 | 4 | 0 |
| கிறிஸ்தியாநகரம் | ,, | ... | 4 | 0 | 0 |
| புதியம்புத்தூர் | ,, | ... | 15 | 0 | 0 |
| மதுரைபிள்ளை | ,, | ... | 42 | 12 | 0 |
| ஐரோப்பியரால் | வரவு | ... | 69 | 0 | 0 |
| நாட்டுவிந | ,, | ... | 849 | 12 | 7 |
| அநாமதேய | ,, | ... | 18 | 0 | 0 |
| திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்தின் மொத்தவரவு | | | 2894 | 5 | 5 |
| சென்னை அத்தியக்ஷாதீனம் | | ... | 2651 | 15 | 0 |
| திருவாங்கூர் | ,, | ... | 10 | 0 | 0 |
| வடஇந்தியா | ... | ... | 37 | 0 | 0 |
| இலங்கை | ... | ... | 287 | 0 | 0 |
| பர்மா | ... | ... | 142 | 8 | 0 |
| ஆக சங்கத்தின் பொதுச்செலவுக்காக வந்த காணிக்கை மொத்தம் | | ... | 6022 | 12 | 5 |
| தோர்ணக்கல் பாடசாலை பிள்ளைகளின் ஆதரவுக்காக வரவு | | | 244 | 0 | 0 |
| ,, ஆலயத்திற்காக வரவு | | ... | 877 | 4 | 0 |
| விசேஷ நோக்கங்களுக்காக வரவு | | ... | 414 | 0 | 0 |
| விசேஷ வகைக் காணிக்கையின் மொத்தம் | | ... | 1535 | 4 | 0 |
| ஆக சங்கத்தின் மொத்த வரவு | | ... | 7558 | 0 | 5 |

### II.

தோர்ணக்கல் பாடசாலைப் பிள்ளைகளின் ஆதரவுக்காக வந்திருக்கும் தொகைக்கு விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மகா-ா-ா-ஸ்ரீ N. P. ஐசக் அவர்கள் ... | சென்னை | 21 | 0 | 0 |
| ,, M. தேவநேசன் ,, ... | மெஞ்ஞானபுரம் | 21 | 0 | 0 |
| கனம் J. V. தானியேல் ஐயரவர்கள் | கொழும்பு | 24 | 0 | 0 |
| மகா-ா-ா-ஸ்ரீ J. M. டேவிட் அவர்கள் | ரங்கூன் | 27 | 0 | 0 |
| Mrs. ஞானசுந்தரி ஏசுதாஸ் அ-ள் ... | தட்டப்பாறை | 12 | 0 | 0 |
| கனம். A. சவரிமுத்து ஐயரவர்கள் | பாளையங்கோட்டை | 24 | 0 | 0 |
| மகா-ா-ா-ஸ்ரீ D. சாமுவேல் அவர்கள் | டோனாவூர் | 8 | 0 | 0 |
| Mrs. கூக்ஸ்லி அம்மாள் ... | மெஞ்ஞானபுரம் | 12 | 0 | 0 |
| St. Mary's கல்விச்சாலை ... | சாயர்புரம் | 12 | 0 | 0 |
| பெண் போர்டிங் பாடசாலை ... | பாளையங்கோட்டை | 12 | 0 | 0 |
| ,, ,, ... | சாட்சியாபுரம் | 5 | 0 | 0 |
| ஆண் போர்டிங் பாடசாலை ... | கரண்டை | 18 | 0 | 0 |
| கனம். S. காலேப் ஐயரவர்கள் ... | சாயர்புரம் | 18 | 0 | 0 |
| மகா-ா-ா-ஸ்ரீ Y. தேவநேசன் அவர்கள் | சென்னை | 30 | 0 | 0 |
| | ரூ ... | 244 | 0 | 0 |

## உள்நாட்டு ஊழியரின் கடிதம்.

கடந்த அக்டோபர் மாசம் கூடிய கமிட்டியார் தீர்மானப்படி, டிசம்பர் மாசம் துவக்கத்தில் ரங்கூனில் நடைபெறும் ஜட்சன் நூற்றாண்டு உற்சவத்தில் நம்சங்கத்தின் அநுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் காட்டும் பிரதிநிதியாகவும், அதோடு நம்மிஷனில் அநுதாபம் உண்டாக்குமாறு பர்மா சென்னை முதலிய இடங்களில் ஊழியம் செய்யும் நோக்கமாகவும், மகாகனம்: திருநெல்வேலி அத்தியக்ஷரவர்களின் ஆசீர்வாதமும் ஜெபமும் பெற்றுக் கடந்த நவம்பர்மீ 6உ பாளையங்கோட்டையைவிட்டுப் புறப்பட்டு சென்னை போகும் வழியில், தஞ்சாவூரில் ஓர் நாள் தங்கி நமது சங்கத்தின் நண்பராகிய ராவ் சாகிப் ஆபிரகாம் பண்டிதர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் அன்பாய் விசாரித்ததின்பேரில் தோர்ணக்கல் மிஷன் விர்த்தியைப் பற்றியும், ஞாபகார்த்த ஆலயத்தின் அவசியத்தைப்பற்றியும் விபரமாய்ப் பேசிய பின்னர், மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் எழுதிய 'இந்தியாவும் சுவிசேஷ பிரபல்யமும்' என்ற புத்தகங்களில் 5 பிரதிகள் வாங்கிப் பல சிநேகிதருக்கும் கொடுக்க வாக்குப்பண்ணியதுடன், ஞாபகார்த்த ஆலயத்துக்கு வேண்டும் உதவியை அவசியமானவேளை செய்வதாயும் வாக்குப்பண்ணினார்கள். சென்னையில், வழும்பூர் பரி: யோவான் ஆலயத்தின் குருவாகிய கனம். M. ஏசுஅடியான் ஐயரவர்கள் என்னை வெகு அன்பாயும்பக்ஷமாயும் ஏற்றுக்கொண்டு, ஞாயிறு காலை ஆராதனையிலும், அடுத்தாப்போல் 'St. John's Guild' என்ற வாலிபர் சங்கத்தின் கூட்டத்திலும் இந்தியாவின் சுவிசேஷ பிரபல்ய அவசியத்தையும் அதைவிட்ட இந்தியரின் உத்தரவாதத்தையும் தோர்ணக்கல் மிஷனையும்பற்றி விபரமாய்ப்பேச



இடங்கொடுத்ததின்பேரில் Mrs. ஆபிரகாம் அம்மாள் போர்டிங் பள்ளிக்கூடத்தில் ஓர் பெண்ணை ஆதரிக்க வாக்குப்பண்ணியதுடன் சபையில் பலரும் ஒழுங்காய் ஜெபிக்கவும் உதவிசெய்யவும் வாக்குப்பண்ணினார்கள். மைலாப்பூர் கனம். வேதமுத்து ஐயரவர்கள் விருப்பப்படி, சக்லிகள் தோட்டத்திலும் அச்சபையின் டயோசிசன் மிஷனெரி இளைச்சங்கக் காரியதரிசி Mr. நக்லாண்டு அவர்கள் ஏற்படுத்திய ஓர்கூட்டத்திலும் தோர்ணைக்கல் மிஷனைப்பற்றிய ஓர் பிரசங்கம்செய்து, எற்கனவே நம் சங்கத்துக்கு உதவிசெய்கிற பலரையும் உற்சாகப்படுத்தினதுமல்லாமல், மற்றவர்களும் அவ்வாறு முன்னிற்கும்படி ஏவப்பட்டார்கள். ஒரு வாரத்துக்குள் பர்மாவுக்குப் பிரயாண ஆயத்தமும் செய்துகொண்டு, மகாகனம்: சென்னை அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதமும் ஜெபமும் பெற்று, நவம்பர்மீ 14உ சென்னையிலிருந்து கப்பலேறி, 17உ ரங்கூனில் போய்ச்சேர்ந்தேன். ரங்கூனில் நமது இளைச்சங்கத்தின் காரியதரிசியாகிய Mr. ஜேம்ஸ் பால் அவர்கள் வீட்டில்தானே வெகு அன்பாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் பாளையங்கோட்டையிலிருந்தாலும் அவர்கள் சகோதரர் Mr. ஜேம்ஸ் பீற்றர் அவர்களேனக்குவேண்டிய எல்லா வசதிகளும் செய்ததுடன், கூட்டங்கள் நடைபெறுவதற்குவேண்டிய ஒழுங்குகளும் செய்தார்கள். இங்கிருந்து அங்குபோயிருக்கும் திருநெல்வேலியின் பிள்ளைகளனைவருக்கும் இந்தியமிஷனெரி சங்கத்தின்பேரில் இருக்கும் உற்சாகமும் கரிசனையும் அதிகம். நான் போகுமுன்னதாகவே காரியதரிசியும் பல. வாலிப சகோதரரும் சேர்ந்து ஞாபகார்த்த ஆலயத்துக்காக ஓர் விஞ்ஞாபனம் தயார்செய்து வீடு வீடாய் அலைந்து திரிந்து உத்தேசம் ரூ 1200 வரை வாக்காகவும் பணமாகவும் சேர்த்திருந்தார்கள் நான் அவர்கள் வெகு நேர்த்தியாய் ஒழுங்கு செய்திருந்த 4 கூட்டங்களில் சுவிசேஷ பிரபல்ய ஆவியை விர்த்திபண்ணவும் தோர்ணக்கல் மிஷனில் அநுதாபம் உண்டாக்கவும் பிரசங்கித்ததுடன், எல்லாச் சிநேகிதரையும் பல தடவைகளிலும் வீடு வீடாய்ச் சந்தித்து ஜெபித்து உற்சாகப்படுத்திவந்தேன். உத்தேசம் ரூ 1500-க்குக் குறையாமல் பர்மாவிலிருந்து மட்டும் ஞாபகார்த்த ஆலயத்துக்கு வருமென்று எண்ணலாம். கனம்: சவி. அவர்கள் பல ஐரோப்பிய சிநேகிதரிடத்திலும் பணம் சேகரிக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கிருந்து ரங்கூனில்போய் ஸ்தாபகமாகியிருக்கிற கனம்: A V. ஜொசப், டாக்டர்: லாமேக் முதலிய சில தேவனுடைய பிள்ளைகளை அவர் சீமான்களாக்கியிருக்கிறார். அவரவர்கள் மனம் வைத்தால் 4 அல்லது 5 பேர் மட்டும் சேர்ந்து தோர்ணக்கல் ஆலயத்தைக்கட்டிமுடித்துவிடலாம்; என்றாலும் மற்றவர்களுக்கும் இந்த அருமையான ஊழியத்தில் பங்கு கொடுக்கும்படி அவர்கள் காத்திருக்கிறது போல் காணப்படுகிறது. கர்த்தனை நம்பி கூடிய சீக்கிரம் அஸ்திபாரம் போடப்படப்போகும் தோர்ணக்கல் ஆலயம் கட்டிமுடியத் தாமதமாகும்பக்ஷத்தில் இந்தச் சீமான்களே முன்னின்று அதைக் கட்டிமுடித்துவிடுவார்கள் என்று நம்ப இடமுண்டு.

ரங்கூன் மகாகனம்: லைவ் அத்தியக்ஷரவர்கள் நம் சங்கத்தின்மீது அநுதாபம் காட்டி ஞாபகார்த்த ஆலயத்துக்காக அனுப்பிய உபகாரத்துக்காக அவர்களை நேரில் கண்டு நன்றி செலுத்தி, அவர்கள் அனுமதிபெற்று ரங்கூன் எஸ். பி. ஜி. சபை விசாரணைசெய்யும் கனம்: கெம்பு ஐயரவர்கள் உத்தரவின் பேரில் எல்லா ஊழியமும் நடைபெற்றதற்காக அவர்களுக்கும், கூட்டங்கள் சித்திபெறும்படி அரும் பிரயாசையெடுத்த எல்லாச் சகோதரருக்கும், கூட்டங்களில் பீடம் வகித்து உற்சாகப்படுத்தின கனம். ஏசாயா ஐயரவர்கள், கனம்: S. சாமுவேல் அவர்கள் B. A., கனம்: S. ஞானவீரன் அவர்கள் B. A. முதலியோருக்கும் அதிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

திரும்பும் வழியில் சென்னையில் ஒரு வாரம் பின்னிட்டு கனம்: பனியன் ஐயரவர்கள் விருப்பப்படி டக்கர் கோவில் சபைக்கு 2 பிரசங்கமும், கனம்: கிளார்க் ஐயரவர்கள் விருப்பப்படி சீயோன் ஆலயத்தில் ஓர் பிரசங்கமும் செய்து, சங்க நண்பர்கள் பலரையும் வீடு வீடாய்ச் சந்தித்து ஜெபித்து நம் சங்கத்தின் அவசியத்தைத் தெளிவாய் எடுத்துக்காட்டிவந்திருக்கிறேன். எவ்வளவு பிரயாசையோடு பிரசங்கித்தாலும், எவ்வளவு எழுப்பிவிட்டாலும் தேவாவியானவர் நம் சபைகளுக்குள் மிஷனெரி ஆவியையும் சுதேச அபிமானத்தையும் உண்டாக்கினால் மட்டும் இந்திய மிஷனெரிச் சங்கம் நாளுக்கு நாள் முன்னேறிச் செல்ல இடமுண்டு. என் நாமத்தினால், அதாவது ரத்சஞ்சித்தி மீட்ட இயேசுவின் நாமத்தினால் இச்சசிறியரில் ஒருவனுக்கு, அதாவது இந்திய மிஷனெரிச் சங்கத்துக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் அதின் பலனை இழந்துபோகமாட்டான் என்பது அருள்நாதர் வாக்கு. ஏனென்றால் உங்கள் கிரியையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் 'தமது நாமத்திற்காகக்' காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.

A. சவரிமுத்து.

## மிஷனெரி வர்த்தமானம்.

சிங்கரேணி மிஷன் Mr. பவுல் ராயப்பன் எழுதுவது:—

நாங்கள் இது பரியந்தம் தோர்ணக்கல்லில் வசித்து ஒரு மாசத்தில் 20 நாள் வேலையிலும் 10 நாள் தோரணக்கல்லிலுமாக இருந்துவந்தோம். இந்தப் புதுவருஷத்தில் ஆண்டவர் ஜீவனையும் சுகத்தையும் கொடுத்தால் பாக்கல் தாலுகாவிலும் பலவன்ஜா தாலுகாவிலுமாக இருந்துகொண்டு வேலை செய்ய தீர்மானம்பண்ணி சில இடங்களில் நிலங்கள் வாங்கி இருக்கிறது. கூடிய சீக்கிரம் வீடுகள் கட்டி குடும்ப சகிதமாக வேலைக்குப் போய்விடுவோம். நானும் Mr. டேவிட்டும் பாக்கல் தாலுகாவிலும், Mr ஞானமணியும் Mr. ஆபிரகாம் டேவிட்டும் சிங்கரேணி பலவன்ஜா தாலுகாவிலும் வேலைசெய்து வருகிறோம். ஆண்டவருடைய பெரிய கிருபையால் பாக்கல் தாலுகாவில் கோனுபுரம் என்ற இடத்திலிருந்துகொண்டு கோனுபுரம், உப்புரபல்லி, லிங்காபுரம், ரங்கம்பேட்டை இந்த நாலு இடங்களிலும் நாங்களிருபேரும் படிப்பு ஜெபம் முதலா

னதுகளை நடத்திக்கொண்டு வருகிறோம் மோதுகாபுரம் என்ற ஊரில் 10 வீட்டுக்காரர் மார்க்கத்துக்கு வந்திருக்கிறார்கள். அங்கு ஒரு வீடு கட்டி ஒரு தெலுங்கு உபாத்தியாரை வைத்து நாங்கள் மேல்பார்த்துக்கொண்டு வருகிறோம். தெலுங்கு உபாத்தியாரை வைத்து வேலை நடத்தவேண்டும் என்ற நோக்கமல்ல. இன்னும் கொஞ்சம் நாளையில் அந்த ஆளை எடுத்துப்போடுவோர்கள். ஒரு ஆள் சோளபுரம் என்ற இடத்தில் வீடுகட்டி அதில் குடும்பசகிதம் இருந்துகொண்டு சோளபுரம், லிங்காபுரம், உப்புரபல்லி இந்த மூன்று இடங்களையும் பார்த்து படித்து கொடுக்கவும், ரங்கம்பேட்டையில் ஒருவர் வீடுகட்டி இருந்துகொண்டு ரங்கம்பேட்டை ஜலபருத்ரி இந்த இடங்களை பார்த்து சபைகளுக்கு படிப்பு ஜெபம் முதலானது கற்றுகொடுத்து அதில் கெட்டிக்காரனான ஒருவனை கண்டுபிடித்து அவனுக்கு விசேஷமாய் இரவும் பகலும் படித்து கொடுத்து அவசியமானால் தோர்ணக்கல் திறெயினிங் சாலைக்கு ஒரு வருஷம் அனுப்பி அப்பால் அந்த ஊர்களில்தான் சொந்த வேலையைப் பார்த்துக்கொண்டு சபைகளுக்குப்போதித்து இரவுபிள்ளைகளுக்குப்படித்துக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். அவனுக்கு சம்பளமிருக்காது. இவ்விதமாய் வேலைசெய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்கிறோம். ஆண்டவர் கிருபைதான் அதிகமாய்வேண்டும். எங்களுக்கு வேலை கஷ்டம்தான்; பகல்களில் ஆட்களை அதிகமாய் கண்டுபிடிக்க முடியாது; இரவில்தான் சபைகளை பார்த்து படித்துகொடுக்கவேண்டும். இரவு 8 மணிக்குப் போய் 10 மணி சில வேளை 11-க்கு திரும்பி வீட்டுக்கு வருவோம்; ஒரு மயில், 1½ மைல் தூரம் பக்கத்தூருக்குப் போகவேண்டும்; கையில் லாந்தர் கொண்டுபோய்ப் படித்துக்கொடுத்து வருகிறோம்; எங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

உவின்செஸ்டர் அத்தியக்ஷர்: இங்கிலாந்து தேசத்தில் திருச்சபைக் கூட்டங்கள் (Church Congress) ஒன்றில் பீடம் வகித்த உவின்செஸ்டர் அத்தியக்ஷரவர்கள் பின்வருமாறு பேசினதாக எஸ். பீ ஜீ. மிஷன் பிரதான பத்திரிகை கூறுகிறது:—நமது கூட்டத்தின் நடபடிக்கைகளில் ஒரு விஷயத்தைக் குறித்து எனக்கு மிகுந்த கிலேசமுண்டு. நமது இராஜ்யத்தார் உலகமெங்கும் செயயவேண்டிய சுவிசேஷப் பிரசங்க வேலையைக் குறித்து நமது கூட்டங்களில் பேசும்படி ஒழுங்கு செய்யப்படவில்லை வேளாவேளைகளில் அதைக்குறித்துப் பேச நேரிட்டாலும் அப்பொருளின்பேரில் திட்டமாயும் நிர்க்கமாயும் நம் அபிப்பிராயத்தை விளம்ப நமக்கு வாய்க்கவில்லை. இவ்விஷயமாய் நம்மிடத்தில் காணப்பட்ட அசட்டை மிகவும் பயங்கரமானது. ஏனென்றால் இதை நமது பரலோக ராஜாவுக்கு விரோதமான இராஜதுரோகம் என்றே சொல்லவேண்டும். மேலும் நமது செய்கையை அதர்மம் என்று சொல்லினும் பொருந்தும். பூலோகத் தீவினைகளுக்கெல்லாம் ராஜ ஔஷதமும், சகல ஆசீர்வாதங்களிலும் ஒப்பற்றதுமான சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தைப்பற்றிய அசட்டை அதர்மம் அல்லவா? இதெல்லாம் நமது சிந்தை கிறிஸ்துவின் சிந்தைக்குப் பேதப்படுகிறது என்று காட்டுகிறதல்லவா? நமது சுயதேசத்தில் நாம் செய்யவேண்டிய மிஷன்வேலையிருக்கிறது மெய்தான். ஆகிலும் அவைகளைமாத்திரம் கவனித்து பூலோகத்தின் மற்றப் பாகங்களுக்கு சுவிசேஷத்தை அனுப்பாதிருக்கிற சபைகளைத் தன்னயமுள்ள சபைகள் என்றே தீர்மானிக்கவேண்டும். நமது நாட்டார் மிஷனெரி ஊழியவிஷயமாய் அற்பசொற்ப வேலை செய்து வருகிறார்களென்றாலும், கர்த்தர் கேட்கிறதென்ன? மிஷனெரி ஊழியத்திற்கென்று இன்னும் மிகுதியான ஜெபம், ஆற்றுவாரத்துப்போலொத்த காணிக்கை, ஆயிரக்கணக்கான மிஷனெரிமார், பற்பல நிலைமையிலுள்ள தேசத்தின் ஜனங்கள் எல்லாருக்கும் சுவிசேஷ ஊழியத்தின் பேரிலுள்ள கரிசனை- இவைகளையே நமது பரம எஜமான் கேட்கிறார்.

## துதி ஸ்தோத்திர விஷயங்கள்.

1. கிரிராமகிரிபோஜன்குப்பேட்டை முதலிய இடங்களிலுள்ள புது சபைகளில் காணப்படும் ஊக்கத்திற்காகவும் உற்சாகத்திற்காகவும்.
2. தோர்ணக்கல்லில் பருவங்கடந்த ஞானஸ்நானம்பெற்ற இருவருக்காகவும் துதி.
3. ஜனுவரிமீ 9௳முதல் 25௳வரை நமது மிஷன் லாக்காவில் அத்தியக்ஷரவர்கள் செய்யும் பிரயாணத்திற்காகவும்.
4. மேடிதப்பல்லி மூப்பாரம், தோர்ணக்கல்லில் திடப்படுத்தலுக்காக ஆயத்தப்படுகிறவர்களுக்காகவும்.
5. மேடிதப்பல்லி, பாபோஜிகூடம், மூப்பாரமாட்டேடு, கிராமகிரியில் பரி. ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காகவும்.
6. பையாரத்தில் புதிதாய் உண்டாகும் சபைக்காகவும்.
7. நெசவுத்தொழில் கற்பிக்கும்படி வந்திருப்பவருக்காகவும்.
8. புதிதாய் போகும் Mr. சவரிதாஸ் அவர்களுக்காகவும் ஜெபம்.

## 1913 சந்தா வரவு. (தொடர்ச்சி)

| | | | | |
|---|---|---|---|---|
| Rev. K. P. ஞானக்கண் | சித்தூர் | 0 | 6 | 0 |
| ,, S. காலப் | சாயர்புரம் | 0 | 6 | 0 |
| ,, G. மனுவேல் | நாசரேத் | 2 | 10 | 0 |
| ,, வியாகப்பன் | அச்சம்பட்டி | 2 | 2 | 0 |
| ,, J. அருளானந்தம் | சுவிசேஷபுரம் | 1 | 10 | 0 |
| ,, விசுவாசம் | பொட்டல்பட்டி | 5 | 8 | 0 |
| ,, ஜான் கிரிபித் | மதுரகுளம் | 2 | 4 | 0 |
| ,, J. விசுவாசம் | தஞ்சை | 1 | 2 | 0 |
| ,, S. வேதமுத்து | உதகமண்டலம் | 4 | 0 | 0 |
| ,, அருள் மாணிக்கம் | இடையன்குளம் | 1 | 6 | 0 |
| ,, L. P. லாசர் | பங்களூர் | 0 | 12 | 0 |
| Mr. தேவசகாயம் | பாளையங்கோட்டை | 2 | 4 | 0 |
| ,, G. A. கோயில்பிள்ளை | திருச்சிநாப்பள்ளி | 1 | 0 | 0 |
| ,, D. சற்குணம் | டிரக்போர் | 0 | 6 | 0 |
| ,, சாக்கு தேவதாஸ் | டிக்கோயா | 0 | 12 | 0 |
| ,, S. J. ஏகநாதன் | மூனூர் | 0 | 12 | 0 |
| ,, V. A. கோயில்பிள்ளை | சாயர்புரம் | 0 | 12 | 0 |
| ,, V. சாமுவேல் | பர்மா | 1 | 0 | 0 |
| ,, ரக்லண்ட் டேவிட் | மதராஸ் | 7 | 2 | 0 |
| ,, சோவா | கரூர் | 0 | 6 | 0 |

(இன்னும் வரும்)

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

DECEMBER, 1913 Registered No. M. 481.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 - JAN 1914 MADRAS.

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 12] டிசம்பர்மீ 1913 [விலை பை 3

**CONTENTS**

Editorial Notes ... ... ... ... 93
The Fellowship in the Ministering to the Saints ... 94
Home Missioner's Letter ... ... ... 95
From the Palyar Field ... ... ... 96

**பொருளடக்கம்**

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 93
தர்ம ஊழியத்தின் பங்கு ... ... ... 94
ஹோம் மிஷனர் கடிதம் ... ... ... 95
பளியர் மிஷன் கடிதம் ... ... ... 96

## பத்திராதிபர் குறிப்புகள்.

கிறிஸ்மஸ் வாழ்த்துதல் நம் நண்பரனைவருக்கும் கூறுகின்றோம். அருள்நாதர் திரு அவதாரக் கொண்டாட்டக் காலமாகிய கிறிஸ்மஸ் பண்டிகை நாட்கள் மிகுந்த பாக்கியமும் சந்தோஷமுமான தினங்களாக இருக்கும்படி

கிறிஸ்மஸ் பண்டிகை.

கருணாகரர் தயைபுரிவாராக. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவை நன்குணர்ந்தவர்களாய், துதியின் கீதம் நம் இருதயங்களிலிருந்து எழும்புவதாக. ஐசுவரிய சம்மன்னராகிய இயேசு பெருமான் நமது நிமித்தம் தரித்திரரானார். நாம் விண்ணோராகும்படி, வானவர் பூதலம்வந்தார். நாம் தேவனுடைய சுதந்தரராகும்படி சர்வத்துக்கும் சுதந்தரர் அடிமையின் ரூபமெடுத்தார். என்ன காருண்யம்! எத்தனை பெரிய அன்பு! கிறிஸ்தவ ஜாதியாரான ஐரோப்பியர் இச்சுபதினங்களில் சிநேகிதருக்கு ஈனம் அனுப்புவதும், பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் ஏற்பாடு செய்வதும், ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்வதும் வழக்கம். மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவதில் சந்தோஷம் அடைகிறார்கள். சிறந்த சிந்தையல்லவா? நமது பளியக் கிறிஸ்தவர்களை நினைத்து, நமது அருமை கனம்: பிஷப் அம்மாளவர்கள் பல புடவைகளும், வேஷ்டிகளும், சுமுசுகளும் அவர்களுக்குக் கிறிஸ்மஸ் ஈனமாக அனுப்பியிருக்கிறார்கள். அப்படியே கனம்: லேம் ஐயரவர்களும் அதிகக்கரிசனையுடன் முயற்சிசெய்து, துணிமணிகள் பளியருக்கு ஈனமளித்திருக்கிறார்கள். பளியருக்கோ, தெலுங்கருக்கோ, ஏழைகளுக்கோ உதவியாக, நம் ஆகாரத்தைத் தண்ணீர்மேல் போடுவோமா? அநேக நாட்களுக்குப்பின் அதின் பலனைக் காண்பது திண்ணமே. ஏழுபேருக்கும் எட்டுப்பேருக்கும் பங்கிட்டுக்கொடுப்பதல்லவோ அன்பின் உறைகல்.

நமது பத்திரிகை

வர்த்தமானம் வாஞ்சையையும் வாஞ்சை வருமானத்தையும் அதிகரிக்குமென்பது ஓர் சத்தியம். சங்கத்தின் காரியாதிகளை ஜனங்களுக்குத் தெரிவித்து அனல்மூட்டும் முக்கிய சாதனங்களில் ஒன்று "சுவிசேஷபிரபல்ய வர்த்தமானி"யே. நமது சபைகளில் வாசிப்புத்தெரிந்த ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வோர் பத்திரிகை இருக்கவேண்டுமென்பது நம் வாஞ்சை. நமது அருமை சங்க ஊழியங்களை அறியவும் அதற்காக ஜெபித்துவாவும் உதவியாக நம் பத்திரிகை சபைகளிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும்படி தேவ ஊழியர் முயற்சிக்க அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். வர்த்தமானியின் வருஷ சந்தா பிரதி ஒன்றுக்கு தபால் கூலி நீங்கலாக அணு மூன்று மாத்திரம். என்றாலும், பல சபைகளும் நண்பரும் சந்தா பாக்கிவைத்திருப்பதையறிந்து மிகவும் துக்கப்படுகிறோம். சந்தா பாக்கிதாருக்கு ஞாபகக் கார்டுகளும் கடிதங்களும் அனுப்புவது அதிகச் செலவாகிறது. இதை உணர்ந்து, பத்திரிகை நேயர்கள் அனைவரும் 1914-ம் வருஷ சந்தாவை ஏற்கனவே முன்பணமாக அனுப்பிவிக்க அன்பாய் பிரார்த்திக்கிறோம். சந்தா பாக்கிதாரும் பாக்கிகளை புது வருஷத்திற்குள் தீர்த்துவிட ஞாபகப்படுத்துகிறோம். கடந்த வருஷ சந்தா பாக்கி வைத்திருப்பவர்களுக்கு ஜனுவரிமீ பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. நமது அருமை மிஷனெரி சங்க நண்பர் யாவரும் உற்சாகமாய் எழும்பி, பத்திரிகை விஷயமாயும் ஊக்கமாய் முயற்சித்து, தாங்களும் தங்கள் சபையாரும் பத்திரிகை முன்பணம் செலுத்தி வாங்கும்படி வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## 'தர்ம ஊழியத்தின் பங்கு'

சென்ற மாச சஞ்சிகையில் பணிதர் காணிக்கை கொடுப்பது தேவன் அளிக்கும் கிருபை யென்றும், காணிக்கை கொடுப்பது தரித்திரருக்குக் கிடைத்திருக்கிற ஓர் பெரிய சிலாக்கிய மென்றும், திராணிக்கு மிஞ்சி தரித்திரர் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கக்கூடும் என்ற சத்தியங்களைக் கவனித்தோம். இச்சஞ்சிகையில் இன்னோர் முக்கிய விஷயத்தை எடுத்துரைப்போம்.

காணிக்கை கொடுக்கும்படி தேவ ஊழியர்கள் ஜனங்களைக் கெஞ்சாமல், காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி ஜனங்கள் அவர்களைக் கெஞ்சவேண்டாம். தேவ கிருபையைப் பெற்ற மக்கெதோனியா நாட்டுச் சபைகளின் ஜனங்கள் அப்படியே செய்தார்களாம். 'தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்' (4 வா), இதற்குக் காரணத்தை அடுத்த வாக்கியத்தில் பார்க்கலாம். 'தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்'. இங்கே இரண்டு முகாந்தரங்கள் காட்டப்பட்டிருக்கிறது. முதலாவது அவர்கள் தங்களைத் தாமே தேவனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். பின்பு தங்களைத் தாமே பவுல் அப்போஸ்தலனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். இவ்விரண்டு காரியங்களையும் செய்ய அவர்களை ஏவுவார் ஒருவருமில்லையாம். தங்களைப்பற்றிய தேவ சித்தம் அதுதான் என்று அவர்கள் கண்டு, தங்களைத் தாமே ஒப்புக்கொடுத்துவிட்டார்களாம்.

(1) அவர்கள் தங்களைத் தாமே கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். மிகுந்த உதாரத்துவமாய் தங்கள் திராணிக்கு மிஞ்சி அவர்கள் காணிக்கை கொடுத்ததற்கு அதுதான் காரணம். அப்போஸ்தலர் காலத்தில் மாத்திரமல்ல, இக்காலத்திலும் இது நடக்கக்கூடியதும் நடந்து வருகிறதுமான காரியந்தான். கர்த்தருக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள்தான் கர்த்தருடைய ஊழியத்திற்கு வெகு உற்சாகமாய்த் தங்களுடைய தகுதிக்கு மிஞ்சி காணிக்கை கொடுப்பார்கள். அமெரிக்காவிலுள்ள ஏழையான ஒரு சபையார் மிஷனெரி வேலைக்காக ஒரு பணி கோத்துக்குள் 55,000 ரூபாய்க்கு (ஐம்பத்தையாயிரம் ரூபாய்) சமமான 22,000 டாலர்கள் (இருபத்தீராயிரம்) காணிக்கையாகக் கொடுத்தார்களாம். உலகவிஷயமான பத்திரிகைகளை நடத்துகிறவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, நீர் என்ன மந்திரம் செய்தீர் என்று அந்தச் சபை குருவானவரிடம் வந்து கேட்டார்களாம். என் ஜனங்களெல்லாரும் தங்களைக் கர்த்தராகிய இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். கர்த்தரின் மகிழ்ச்சியால் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். ஆதலால் கர்த்தருக்குக் கொடாமல், அவர்கள் தங்கள் பொருளைத் தங்களுக்கென்று பத்திரம்பண்ணி வைக்கமாட்டார்கள். இதுதான் காரணம் என்று சொன்னாராம். வருஷா வருஷம் ஏழைகளான அந்த ஜனங்கள் இப்படிப்பட்ட பெருந் தொகையையே கொடுத்துவருகிறார்களாம். ஒரு வருஷத்தில் நான் ஒன்றுங் கொடுக்க வகையற்ற தரித்திர விதவை என்று போக்குச் சொல்லிக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீ மறு வருஷத்தில் ரூ. 52½க்குச் சரியான 21 டாலர்கள் கொடுத்தாளாம். இது எப்படியாயிற்று? அவள் ஒரு வருஷத்துக்குள் ஐசுவரியமுள்ளவளாகிவிடவில்லை. கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்துக்கும் தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டதுதான் காரணம். மிகுந்த கஷ்டத்தோடு ஆனால் மிகுந்த சந்தோஷத்தோடு ஒவ்வொரு பென்னியாய்ப் பிடித்து வைத்து வந்தாள். அது வருஷக் கடைசியில் 21 டாலர்களாகிவிட்டது. தமிழ் நாட்டாரே, நாமும் பறதேச மிஷனெரி வேலையை நடத்துவதற்கு நமது தரித்திரம் தடையாயிருக்கிறதென்று எண்ணவேண்டாம். நாம் தேவசித்தத்துக்கு கீழ்ப்படியாதிருப்பதுதான் தடை. நாம் கர்த்தருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதுதான் அவருடைய சித்தம். கர்த்தருக்குத் தன்னைக் கொடாதவன் அவருடைய ஊழியத்திற்கு எப்படித் தன் பொருளைக் கொடுப்பான்? தன்னை ஜீவ பலியாக ஏற்றுக்கொள்ளும்படி தன் ஆண்டவரைக் கெஞ்சாதவன், சுகந்த வாசனையான பலியாக (பிலி. 4: 18) தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி அவருடைய தாசரை எப்படிக் கெஞ்சுவான்? ஆனால் தேவதாசரே, தமது சித்தத்தினாலே புறதேச மிஷன் வேலையை ஆரம்பிக்கச் செய்த ஆண்டவர் தங்களுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி உங்களைக் கெஞ்சுவோர்களையும் எழுப்பமாட்டாரோ?

(2) மிஷனெரி வேலையை நடத்தின தேவ ஊழியர்களுக்கும் அவர்கள் தங்களைப் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். 'தேவனுடைய சித்தத்தினாலே...பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்'. முன்பு தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது எப்படி தேவசித்தம் என்று அவர்கள் அறிந்தார்களோ அப்படியே மிஷனெரி ஊழியஞ் செய்துவந்தவர்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுப்பது தேவசித்தம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஆண்டவருக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தபடியே இவர்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். ஆண்டவருக்குத் தங்களையும் அவருடைய ஊழியர்களுக்குத் தங்கள் பணத்தையும் கொடுத்தால் போதாதா என்று அவர்கள் நினைக்கவில்லை. பணத்தை மாத்திரமல்ல, அதிலும் மேலாகத் தங்களைத்தாமே ஒப்புக்கொடுத்தார்கள். பரிசுத்த பவுலின் சரித்திரத்தைப் பார்த்தால் இது மெய்யென்று தெரியவரும். மக்கெதோனியா நாட்டுச் சபைகளிலே அவரைப்பற்றிய குறைவான எண்ணம் இருந்ததேயில்லை. மகா அருமையாய் அவர்கள் அவரை நேசித்தார்கள். அவர் எதைச் செய்யச் சொன்னாலும் அவர்கள் உடனே செய்வார்கள். அவருடைய விருப்பம் அவர்களுக்குத் தெரிந்தால் போதும், கட்டளை அவசரமேயில்லை. பரிசுத்த பவுலுக்கு உதவி செய்யும்படி அவருடனேகூட அலைந்துதிரிய தங்களுடைய சபையிலிருந்து ஆட்களை அனுப்பியிருந்தார்கள். அந்த ஆட்கள் கடலிலும் காவிலுங்கூட அவரைவிட்டுப் பிரியவில்லை. அவருடைய கஷ்ட காலத்தில் அவர் சேனாதிருக்க அந்தச் சபையார் ஆட்களையும் பணத்தையும் அவருக்கு

# Supplement to the Intelligencer.

தோர்ணக்கல் ஆலயத்திற்காக நாளது அக்டோபர்மீ 31உ முடிய வந்த காணிக்கை விபரம்.

| | 1911—12 | 1912—13 | 1913—14 | மொத்தம். ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| **பாளையங்கோட்டை சர்க்கிள்** | | | | |
| பாளையங்கோட்டை. | | | | |
| Mr. J. அன்பு அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| „ J. ஞானமுத்து „ ... | 10 0 0 | 33 0 0 | ... | 43 0 0 |
| „ N. G. சாலொமோன் „ ... | 2 0 0 | 6 0 0 | 10 0 0 | 18 0 0 |
| „ K. தாஸ் இருஷ்ணையா „ ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| J. E. T. ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| R. E. V. ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| Mr. J. S. முத்தையா அவர்கள் ... | ... | 100 0 0 | ... | 100 0 0 |
| Mrs. டேவிட் சாலொமோன் அம்மாள் ... | ... | 50 0 0 | ... | 50 0 0 |
| Mr. D. அன்பு அவர்கள் ... | ... | 35 0 0 | ... | 35 0 0 |
| „ V. சாமுவேல் „ ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| „ M. D. தாமஸ் „ ... | ... | 2 0 0 | 12 0 0 | 14 0 0 |
| „ J. பாக்கியநாதன் „ ... | ... | 2 0 0 | ... | 2 0 0 |
| Mrs. அன்னம்மாள் ... | ... | 2 0 0 | ... | 2 0 0 |
| Mr. V. தேவசகாயம் அவர்கள் ... | ... | ... | 14 0 0 | 14 0 0 |
| M. ஞானமணி „ Normal School | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| C. M. S. ஹைஸ்கூல் ... | 5 0 0 | 20 0 0 | ... | 25 0 0 |
| எப்பதா பாடசாலை ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| S. T. C. அநாமதேய வரவு ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| மாடல் ஸ்கூல் ... | ... | ... | 10 0 0 | 10 0 0 |
| திருநெல்வேலி. | | | | |
| Mr. S. பாக்கியம் அவர்கள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| „ V, P. மலையப்பன் „ ... | 5 0 0 | 5 0 0 | ... | 10 0 0 |
| „ C. S. யோசேப்பு „ ... | 4 0 0 | 8 0 0 | ... | 12 0 0 |
| „ சத்தியதாஸ் அவர்கள் மூலமாய் ... | ... | 6 0 0 | ... | 6 0 0 |
| „ உமையார் பாகம் அவர்கள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| „ வெங்கிடாசலம் மிட்டாதார் அ-ள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| „ A. சாமுவேல் அவர்கள் ... | 1 0 0 | 1 0 0 | 1 0 0 | 3 0 0 |
| Mrs. சாமுவேல் அம்மாள் புளியங்குடி ... | ... | ... | 10 0 0 | 10 0 0 |
| தென்கலம். | | | | |
| Mrs. G. மேரி லீதியாள் அம்மாள் ... | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| மணற்காடு. | | | | |
| சபைக் காணிக்கை ... | 5 13 9 | 7 2 5 | ... | 13 0 2 |
| மகா-ா-ா-ஸ்ரீ J. சீனிவாசகம் அவர்கள் ... | 1 0 0 | 6 0 0 | 1 0 0 | 8 0 0 |
| „ வே. பாலையா „ ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| „ பா. யோவான் „ ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| P. பரமாயி அம்மாள் B. W. ... | ... | 3 0 0 | ... | 3 0 0 |
| கனம். சீனிவாசகம் ஐயரவர்கள் ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| Mrs. சீனிவாசகம் அம்மாள் ... | ... | ... | 3 0 0 | 3 0 0 |
| மகா-ா-ா-ஸ்ரீ பே. ஆசீர்வாதம் அவர்கள் ... | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| „ சித்தன சீனிவாசகம் „ ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| „ வே. சீனிவாசகம் „ ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| „ பா. தாசன் „ ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| செட்டிகுளம் சபை ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| கான்சாபுரம் „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| கீழப்பாட்டம் „ ... | ... | 2 0 0 | ... | 2 0 0 |
| K. கைலாசபுரம் சபை ... | ... | 0 6 0 | ... | 6 0 0 |
| காலாங்கரை „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| கீழக்கரை ... | ... | 2 10 0 | ... | 2 10 0 |
| கலியாவூர் ... | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| மடத்துப்பட்டி | | | | |
| மகா-ா-ா-ஸ்ரீ P. S. சந்தோஷம் அவர்கள் ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| மொத்தம் ரூ— | 56 13 9 | 340 12 5 | 77 0 0 | 474 10 2 |
| **ஆழ்வானேரி சர்க்கிள்** | | | | |
| ஆழ்வானேரி சபை ... | ... | ... | 40 0 0 | 40 0 0 |
| அம்பலம் | | | | |
| மகா-ா-ா-ஸ்ரீ சித்தர் G. ஏசுதாசன் அவர்கள் ... | ... | 3 0 0 | 3 0 0 | 6 0 0 |
| மொத்தம் ரூ— | ... | 3 0 0 | 43 0 0 | 46 0 0 |
| **செவல் சர்க்கிள்** | | | | |
| செவல் சபை ... | 1 8 6 | ... | ... | 1 8 6 |
| மகா-ா-ா-ஸ்ரீ J. வெற்றிவேல் அவர்கள் ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| „ J. S. ஜியார்ஜ் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| „ S. மார்பாள் அம்மாள் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| கரிசல் சபை ... | ... | 6 8 0 | 13 0 0 | 19 8 0 |
| ஓடைக்கரை சபை ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| மகா-ா-ா-ஸ்ரீ D. சாமுவேல் அவர்கள் ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| „ S. டேவிட் „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| „ S. வேதக்கண் „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| „ சுவாமிதாசன் „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| „ முத்தையா „ ... | ... | 2 0 0 | ... | 2 0 0 |
| „ ஞானபிரகாசம் „ ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| „ M. ஜேக்கப் „ ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| „ N, S. தவமணி „ ... | ... | 8 0 0 | 10 0 0 | 18 0 0 |
| | | | | 35 0 0 |
| ஆனைக்குளம். | | | | |
| மகா-ா-ா-ஸ்ரீ M. ஐசக் அவர்கள் ... | ... | 3 12 0 | ... | 3 12 0 |
| மொத்தம் ரூ— | 10 8 6 | 30 4 0 | 23 0 0 | 63 12 6 |
| **டோனாவூர் சர்க்கிள்.** | | | | |
| தட்டான்குளம் சபை ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| **பண்ணிகுளம் சர்க்கிள்** | | | | |
| பசுவந்தனை சபை ... | 4 1 0 | ... | ... | 4 1 0 |
| **பண்ணைவிளை சர்க்கிள்.** | | | | |
| பண்ணைவிளை சபை ... | 4 9 7 | ... | ... | 4 9 7 |
| V. மேரி அம்மாள் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| சுந்தரி „ ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| G. N. சௌந்திரம் „ ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ஞானம்மாள் ... | 3 0 0 | ... | ... | 3 0 0 |

| | 1911—12 | 1912—13 | 1913—14 | மொத்தம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| பண்டாரவிளை | ... | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. ஜேக்கப் அவர்கள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| கைலாசபுரம் சபை ... | 1 14 2 | ... | ... | 1 14 2 |
| மக-ா-ா-ஸ்ரீ M. தேவசகாயம் அவர்கள் ... | 25 0 0 | 50 0 0 | ... | 75 0 0 |
| கட்டாத்தி சபை ... | 0 4 6 | ... | ... | 0 4 6 |
| கொக்கிரகுளம்(?) சபை ... | ... | 2 11 2 | ... | 2 11 2 |
| புதுக்குடி மக-ா-ா-ஸ்ரீ D. ஏசுதாசன் அ-ள். | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| மொத்தம் ரூ- | 45 12 3 | 57 11 2 | 5 0 0 | 108 7 5 |
| **மெஞ்ஞானபுரம் சர்க்கிள்** | | | | |
| மெஞ்ஞானபுரம். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ M. தேவநேசன் அவர்கள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, ஞா. பாக்கியநாதன் ,, ... | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| Mrs. J. தாவீது அம்மாள் ... | 9 0 0 | ... | 10 0 0 | 19 0 0 |
| ,, வேதமாணிக்கம் ,, ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| சந்தா பாக்கியம் ஞானப்பூ அம்மாள் ... | ... | 3 0 0 | ... | 3 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ பு. ஏ. போவாஸ் அவர்கள் ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |
| E. T. சபை ... | ... | 6 0 0 | ... | 6 0 0 |
| மாணிக்கபுரம் சபை | 7 0 0 | ... | ... | 7 0 0 |
| பசவந்தபுரம் ,, | ... | 4 0 0 | ... | 4 0 0 |
| ஆனந்தபுரம் | | | | |
| கனம். A. மாணிக்கமணி ஐயரவர்கள் ... | 4 0 0 | ... | ... | 4 0 0 |
| Mrs. ஆபிரகாம் அம்மாள் ... | 6 0 0 | ... | ... | 6 0 0 |
| A. P. வடிவமாள் ... | ... | 2 8 0 | ... | 2 8 0 |
| வெள்ளாளன்விளை | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ வேத. ஏசுவடியான் அவர்கள் ... | ... | 4 8 0 | ... | 4 8 0 |
| மொத்தம் ரூ- | 56 0 0 | 31 0 0 | 10 0 0 | 97 0 0 |
| **நாலுமாவடி சர்க்கிள்** | | | | |
| ஆறுமுகநேரி | | | | |
| S. சாரால் அம்மாள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ ஜாண் சாமுவேல் அவர்கள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| திருச்செந்தூர். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. இசரவேல் அவர்கள் | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| மொத்தம் ரூ- | 10 0 0 | 5 0 0 | ... | 15 0 0 |
| **சாத்தான்குளம் சர்க்கிள்** | | | | |
| சாத்தான்குளம். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ சாம்போர்ட் அவர்கள் | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| ,, A. R. தாமஸ் ,, | ... | ... | 25 0 0 | 25 0 0 |
| பனைக்குளம். | | | | |
| அரசமரம் வாவு(?) ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ S. பாக்கேரபு அவர்கள் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| ,, D. கோவிந்பிள்ளை ,, ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |

| | 1911—12 | 1912—13 | 1913—14 | மொத்தம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| ஆசீர்வாதபுரம். | | | | |
| கனம். S. V. தேவதாசன் ஐயரவர்கள் ... | ... | ... | 14 0 0 | 14 0 0 |
| மொத்தம் ரூ- | 2 0 0 | 6 0 0 | 39 0 0 | 47 0 0 |
| **சுவிசேஷபுரம் சர்க்கிள்** | | | | |
| Mrs சிமியோன் அம்மாள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ A. ஆபிரகாம் அவர்கள் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| ,, D. அருளப்பன் ,, ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| மீஞ்சிகாதபுரம் சபை ... | ... | ... | 3 8 0 | 3 8 0 |
| பாப்பாடி Mrs. துரைசாமி அம்மாள் ... | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ செபஞானம் அவர்கள் ... | ... | ... | 2 0 0 | 2 0 0 |
| தந்தை நகரம் ஆசாமிகள் ... | ... | ... | 2 8 0 | 2 8 0 |
| மக-ா-ா-ஸ்ரீ சத்தியநாதன் அவர்கள், மடத்தச்சம்பாடு | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| ,, மாணிக்கம் ,, ,, ... | ... | ... | 0 8 0 | 0 8 0 |
| ,, ஏசுவடியான் ,, பெத்லேகம் | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| ,, க. கே. ஆபிரகாம் ,, தச்சநல்லூர் | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| ,, V. சாமுவேல் ,, ,, ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| J. லீதியாள் அம்மாள் சமாதானபுரம் | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| சமாதானபுரம் சபை ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ சாலொமோன் அவர்கள் அதிசயபுரம் | ... | ... | 0 8 0 | 0 8 0 |
| ,, சீமோன் மனுவேல் ,, ,, ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| ,, S. கொர்னேலியு ,, சவுக்கியபுரம் | ... | ... | 0 12 0 | 0 12 0 |
| ,, அ. சாலொமோன் வகைபறு ,, | ... | ... | 0 6 0 | 0 6 0 |
| திசையன்விளை. | | | | |
| மக-ா-ஸ்ரீ A. D. துரைசாமி அவர்கள் .. | 11 0 0 | ... | ... | 11 0 0 |
| ,, வேதப்பன் ,, ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| ,, ஆசீர்வாதம் ,, ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| சுந்தரம் அம்மாள் ... | ... | ... | 0 12 0 | 0 12 0 |
| மக-ா-ா-ஸ்ரீ சாமுவேல் அவர்கள் of Ewart & Co | ... | ... | 10 0 0 | 10 0 0 |
| மொத்தம் ரூ- | 22 0 0 | 5 0 0 | 31 14 0 | 58 14 0 |
| **நல்லூர் சர்க்கிள்** | | | | |
| நல்லூர். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ A. அந்தோணி அவர்கள் ... | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| பேட்டை | | | | |
| J. D. தங்கரெத்தினம் அம்மாள் ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| மொத்தம் ரூ- | 25 0 0 | ... | 5 0 0 | 30 0 0 |
| **காலடை சர்க்கிள்** | | | | |
| கனம். V. ஆபிரகாம் ஐயரவர்கள்மூலமாய் | ... | 11 0 0 | ... | 11 0 0 |
| ,, D. J. ஞானி ,, | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| மொத்தம் ரூ- | ... | 16 0 0 | ... | 16 0 0 |

| | 1911—12 | 1912—13 | 1913—14 | மொத்தம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| **சாகுபுரம் சர்க்கிள்** | | | | |
| சிவகாசி ஸ்திரீகள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ பாலையா அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| ,, S. இஸ்ரவேல் ,, ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| Mrs. மேரி பவுல அம்மாள் மூலமாய் ... | ... | 6 6 0 | ... | 6 6 0 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ J. ஏசுவடியான் அவர்கள் ... | 7 0 0 | ... | ... | 7 0 0 |
| சாத்தூர். | | | | |
| Mrs. K. A. விசுவாசம் அம்மாள் ... | ... | ... | 20 0 0 | 20 0 0 |
| மொத்தம் ரூ- | 27 0 0 | 16 6 0 | 20 0 0 | 63 6 0 |
| **வாகைக்குளம் சர்க்கிள்** | | | | |
| வாகைக்குளம் | | | | |
| கனம். M. V. ஜாண் ஐயரவர்கள் ... | ... | 2 2 8 | ... | 2 2 8 |
| சங்கரன்கோவில். | | | | |
| கனம். K.T. அருமைநாயகம் ஐயரவர்கள் | 6 4 0 | ... | ... | 6 4 0 |
| Mrs. அருமைநாயகம் அம்மாள் ... | ... | 2 4 0 | ... | 2 4 0 |
| புளியம்பட்டி. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. வேதமுத்து அவர்கள் ... | 3 0 0 | ... | ... | 3 0 0 |
| மொத்தம் ரூ- | 9 4 0 | 4 6 8 | ... | 13 10 8 |
| **நாசரேத் சேகரம்** | | | | |
| நாசரேத் சபை ... | 21 13 5 | ... | ... | 21 13 5 |
| மக-ா-ா-ஸ்ரீ A. மனுவேல் அவர்கள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| Mrs. Y. தேவப்பிரியம் அம்மாள் ... | ... | 28 0 0 | ... | 28 0 0 |
| குலசேகரன்பட்டணம் சபை ... | 3 0 0 | ... | ... | 3 0 0 |
| ஆள்வார்திருநகரி | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ G. ஆசீர்வாதம் அவர்கள் ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| மொத்தம் ரூ- | 29 13 5 | 28 0 0 | 5 0 0 | 62 13 5 |
| **சாயர்புரம் சேகரம்** | | | | |
| சாயர்புரம் செமினேரி மாணுக்கர் கனம். S. காலேப் ஐயரவர்கள்மூலமாய்... | ... | 20 0 0 | 25 0 0 | 45 0 0 |
| **புதியம்புத்தூர் சேகரம்** | | | | |
| தட்டப்பாறை ஸ்திரீகள் ... | .. | 14 0 0 | ... | 14 0 0 |
| Mrs ஞானசுந்தரி ஏசுதாஸ் அம்மாள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| கரிசல்குளம். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. P. ஆபிரகாம் அவர்கள் ... | ... | 1 0 0 | ... | 1 0 0 |

| | 1911...12 | 1912...13 | 1913...14 | மொத்தம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| எத்திரைப்பட்டி. | | | | |
| Mr. & Mrs. P. ஏசுவடியான் ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| மொத்தம் ரூ- | ... | 20 0 0 | 5 0 0 | 25 0 0 |
| **இடையன்குடி சேகரம்** | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ J. ஏசுவடியான் அவர்கள் | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| G. P. A. "In memorium". ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| கூடன்குளம். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. குருபாதம் உபதேசியார் அவர்கள் ... | ... | ... | 1 0 0 | 1 0 0 |
| மொத்தம் ரூ- | 10 0 0 | ... | 1 0 0 | 11 0 0 |
| மதுரை. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. V. சாமுவேல் அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| ,, A. தேவநேசன் ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, ஜாண் அன்பு ,, ... | ... | 12 0 0 | 12 0 0 | 24 0 0 |
| நல்லமுத்து அம்மாள் ... | 1 0 0 | ... | ... | 1 0 0 |
| Mrs. I. கோவில்பிள்ளை அம்மாள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| மொத்தம் ரூ- | 21 0 0 | 12 0 0 | 12 0 0 | 45 0 0 |
| அத்தியக்ஷாதீனத்தின் மொத்தம் ரூ- | 329 4 11 | 595 8 3 | 304 14 0 | 1229 11 2 |
| **சென்னை அத்தியக்ஷாதீனம்** | | | | |
| சென்னை | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ சிரோமணி அவர்கள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, W. T. சிமியோன் அவர்கள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ஓர் சிநேகிதன் ... | 70 0 0 | ... | ... | 70 0 0 |
| ,, J. V. ஐசக் ,, ... | 14 0 0 | ... | ... | 14 0 0 |
| ,, N. S. மாணிக்கம் ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, S. பாலசுப்பிரமணியம் ,, ... | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| ,, N. தானியேல் ,, ... | 4 8 0 | ... | ... | 4 8 0 |
| ,, பால் அப்பாசாமி ,, ... | ... | 75 0 0 | ... | 75 0 0 |
| Mrs. அப்பாவு டேவிட் அம்மாள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. R. ஐசக் அவர்கள் ... | ... | ... | 10 0 0 | 10 0 0 |
| Mrs. சாலொமோன் பாக்கியநாதன் அ-ள். | ... | ... | 9 0 0 | 9 0 0 |
| தஞ்சாவூர் | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. மாசில்லாமணி அவர்கள் ... | ... | 8 0 0 | ... | 8 0 0 |
| புதுக்கோட்டை | | | | |
| Dr. J. B. ஞானஒளிவு அவர்கள் ... | ... | 100 0 0 | ... | 100 0 0 |
| கூடலூர் | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ P. கோவிந்பிள்ளை அவர்கள் ... | 8 0 0 | ... | ... | 8 0 0 |
| சேலம் | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ J. S. கொர்நெலியஸ் அவர்கள் | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| ,, S. V. தேவதாசன் ,, ... | 30 0 0 | ... | ... | 30 0 0 |

| | 1911—12 | 1912—13 | 1913—14 | மொத்தம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| மக-ா-ா-ஸ்ரீ பிரிட்டன் அவர்களுடைய | ... | 27 0 0 | ... | 27 0 0 |
| ,, T. குமரேசன் அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| ,, J. பேச்சு ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, J. D. பொன்னையா ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, J. R. வேதமாணிக்கம் ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, J. S. தேவதாஸ் ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ஞானப்பிரகாசம் அம்மாள் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| தர்மபுரம் | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ J. S. ஆசீர்வாதம் அவர்கள்... | 10 0 0 | 10 0 0 | 50 0 0 | 70 0 0 |
| கோயம்புத்தூர் | | | | |
| Mr. A. தேவசகாயம் அம்மாள் ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| மக-ா-ஸ்ரீ S. V. பொன்னையா அவர்கள்... | ... | ... | 10 0 0 | 10 0 0 |
| ராணிப்பேட்டை | | | | |
| மக-ா-ஸ்ரீ D. பாக்கியநாதன் அவர்கள் ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| உதகமண்டலம் | | | | |
| குப்பம்மாள் ஒர் இந்து ஸ்திரீ ... | ... | 2 0 0 | ... | 2 0 0 |
| குன்னூர் | | | | |
| கனம். D. S. யோசேப்பு ஐயரவர்கள் ... | 3 0 0 | ... | ... | 3 0 0 |
| மொத்தம் ரூ | 234 8 0 | 227 0 0 | 84 0 0 | 545 8 0 |
| **சென்னை அத்தியக்ஷாதீனத்துக்கு வெளியே** | | | | |
| ஓசூர். | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ A. தேவதாசன் அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| வேலூர். | | | | |
| திராவிடமணி சேவர் ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| தோர்ணக்கல் | | | | |
| மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் | 32 8 0 | 46 12 0 | ... | 78 4 0 |
| கனம். S. பாக்கியநாதன் ஐயரவர்கள் ... | 4 0 0 | ... | 5 0 0 | 9 0 0 |
| ,, D. தேவசகாயம் ,, ... | 12 0 0 | ... | ... | 12 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. சிவநேசம் அவர்கள் ... | 5 0 0 | 17 8 0 | ... | 22 8 0 |
| ,, முத்தசாமி ,, ... | 7 8 0 | 7 8 0 | ... | 15 0 0 |
| ,, பாலராயப்பன் ,, ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| ,, A. ஞானமணி ,, ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| ,, A. டேவிட் ,, ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| டப்பாக்கள் காணிக்கை ... | 1 13 0 | ... | ... | 1 13 0 |
| மொத்தம் ரூ | 68 13 0 | 70 12 0 | 5 0 0 | 144 9 0 |
| இலங்கை. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ P. ஆபிரகாம் அவர்கள் ... | 4 0 0 | 11 0 0 | ... | 15 0 0 |
| ,, S. அருமைநாயகம் ,, ... | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| ,, தேவசகாயம் ,, ... | 2 0 0 | ... | ... | 2 0 0 |
| கனம் J. V. தானியேல் ஐயரவர்கள் ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| மக-ா-ா-ஸ்ரீ J. பாக்கியநாதன் அவர்கள் ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| ,, ராஜையா ஞானசிகாமணி ,, ... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| ,, P. நல்லதம்பி ,, ... | ... | 10 0 0 | ... | 10 0 0 |
| ,, D. தேவதாசன் ,, ... | ... | ... | 5 0 0 | 5 0 0 |
| ,, S. W. சாமுவேல் ,, ... | ... | ... | 25 0 0 | 25 0 0 |
| மொத்தம் ரூ | 31 0 0 | 46 0 0 | 30 0 0 | 107 0 0 |
| பர்மா. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ G. பருவேல் அவர்கள் ... | 10 0 0 | ... | ... | 10 0 0 |
| ,, A. வேதக்கண் ,, ... | 5 1 0 | ... | ... | 5 1 0 |
| ,, A. ஏசடியான் ,, ... | 5 0 0 | ... | ... | 5 0 0 |
| ,, A. C. டேவிட் ,, (போக்மேன்) | ... | 7 0 0 | ... | 7 0 0 |
| மொத்தம் ரூ | 20 1 0 | 7 0 0 | ... | 27 1 0 |
| F. M. S. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ D. சீனிவாசகம் அவர்கள் ... | 100 0 0 | ... | ... | 100 0 0 |
| மொத்தம் ரூ | 234 14 0 | 123 12 0 | 35 0 0 | 393 10 0 |
| ஐரோப்பியரால் வரவு. | | | | |
| மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் ... | 100 0 0 | ... | ... | 100 0 0 |
| ,, திருநெல்வேலி ,, ... | 250 0 0 | ... | ... | 250 0 0 |
| ,, நாகை ,, ... | ... | ... | 100 0 0 | 100 0 0 |
| கனம். E. S. கார் ஐயரவர்கள் ... | 100 0 0 | ... | ... | 100 0 0 |
| ,, C. W. உவெஸ்ற்றன் ,, ... | 25 0 0 | ... | ... | 25 0 0 |
| Mrs. உல்லியம்ஸ் அம்மாளவர்கள் ... | 250 0 0 | ... | ... | 250 0 0 |
| மொத்தம் ரூ | 725 0 0 | ... | 100 0 0 | 825 0 0 |
| அநாமதேய வரவு | | | | |
| முதல் மாதச் சம்பளம் ... | ... | 20 0 0 | ... | 20 0 0 |
| Anonymous ... | ... | ... | 3 0 0 | 3 0 0 |
| இடவிபரம் தெரியா வரவு. | | | | |
| மக-ா-ா-ஸ்ரீ S. டேவிட் அப்பன் அவர்கள்... | ... | 5 0 0 | ... | 5 0 0 |
| மொத்தம் ரூ | ... | 25 0 0 | 3 0 0 | 28 0 0 |
| மணியார்டர் கமிஷனுக்காக கிக்கவேண்டியது... | 0 5 0 | ... | ... | ... |
| மொத்த வரவு ரூ | 1523 5 11 | 971 4 8 | 535 14 0 | 3081 8 2 |



அனுப்பினார்கள். தர்ம சகாயத்திற்காக அவர்பணம் சேகரிக்கிறார் என்று அவர்கள் கேள்விபட்டவுடனே அவர் அவர்களைக் கேட்குமுன்னதாக தாங்களே பணம் கொடுத்தனுப்பினார்கள். எல்லா விஷயத்திலும் அவரை ஆதரிக்கவும் அவருக்கு கீழ்ப்படியவும் அவர்கள் தேவ வைராக்கியம் கொண்டவர்களாய் நின்றார்கள். அவரும் அவருடைய கூட்டாளிகளும் தங்களை வெறுத்தவர்களாய் தங்கள் பிராணனையும் எண்ணாதவர்களாய் மிஷனெரி வேலையை நடத்திவந்தார்கள். மக்கேதோனியா நாட்டுச் சபைகள் அவருடைய கைகளைத் தாங்கவும், அவருக்கு அடிமை வேலை செய்யவும், மரணபரியந்தம் அவரை ஆதரிக்கவும் தங்களை அவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். அவர்கள் மெய்யாய் ஒப்புக்கொடுத்திருந்தார்கள் என்பதை அப்போஸ்தலனுடைய சரித்திரம் ரூபிக்கிறதே! தமிழ் நாட்டுச் சபைகளே, நீங்கள் பின்வாங்குகிறதற்கு காரணம் என்ன? தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுப்பது உங்கள் கடமையும் தேவசித்தமுமாயிருக்கிறது. என்று நீங்கள் உணருகிறபடியே, மிஷனெரி வேலையை ஆதரிக்கிறதற்கென்று அதை நடத்துகிறவர்களுக்கு உங்களை ஒப்புக்கொடுப்பதும் தேவசித்தமும் உங்கள் கடமையுமாயிருக்கிறதென்று நீங்கள் உணரவேண்டும். நீங்கள் மனிதனைப் பார்த்து இடறவேண்டாம். தேவனை நோக்கிப் பார்த்து உங்கள் கடமையையும் தேவசித்தத்தையும் அறிந்துகொள்ளுங்கள். ஊழியத்தை நடத்துகிறவர்கள் பரிசுத்த பவுலைப்போல் தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நல்ல மனச்சாட்சியுள்ளவர்களாய் நடக்கவேண்டியது அவர்களுடைய கடமைதான். ஆனால் பரிசுத்த பவுலையுங்கூடப் பார்த்துச் சில சபைகள் இடறலடைந்ததே. அவர்கள் உங்களுக்கு மாதிரிகளாக வைக்கப்படாமல், மக்கேதோனியாச் சபைகள் தான் தேவனால் உங்களுக்கு இவ்விஷயத்தில் மாதிரிகளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருக்குத் தங்களை முந்திப் பிரதிஷ்டை செய்யாதவர்கள்தான் மனிதனைப் பார்த்து இடறுவார்கள். கர்த்தருக்குரிய கடமையை முந்தி நிறைவேற்றாதவன் மனிதருக்குரிய கடமையை எப்படி நிறைவேற்றுவான்? கர்த்தருக்குத் தன்னை முந்தி ஒப்புக்கொடுத்தவன், சுவிசேஷ பிரபல்ய ஊழியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடாதிருப்பது கூடாத காரியம். புறதேசத்துக்குப் புறப்பட்டுப் போகிறவர்களைப் போலவே, அவர்களை ஆதரிக்கிறவர்களும் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். ஊழியஞ்செய்யப் புறப்பட்டுப் போகிறவர்களும், ஊழியத்தின் காரியாதிகளை நடத்துகிறவர்களும், ஊழியத்தை ஆதரிக்கிறவர்களுமாகிய மூவகுப்பாரும் ஒன்றுபோலவே ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களாய் ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். தாவீதை ராஜாவாக்கும்படி தேவசேனையாய் ஒன்று கூடிவந்த இஸ்ரவேலர் யாவரும் 'தங்கள் அணியைக் காத்து நிற்கிறதற்குப் பழகி' யிருந்தபடியே, இந்நாட்டில் மீட்கப்பட்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் யாவரும் மகா மேன்மையான மிஷனெரி வேலையைச் செய்வதற்கு தேவனுக்கும், ஊழியத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்ட தேவசேனையாய் தன்தன் அணியைக் காத்து, ஐக்கியப்பட்டிருக்க அவர்தாம் கிருபைசெய்வாராக.

---

## ஹோம் மிஷனர் கடிதம்.

சுவிசேஷபுரம் சர்க்கிள் முதலாளி கனம். ஜான் அருளானந்தம் ஐயரவர்கள் அன்பான அழைப்பையும் அனுமதியையும் பெற்று, சென்ற செப்டெம்பர் 9உ பாளையங்கோட்டை விட்டு 10உ காலை சுவிசேஷபுரம் சேர்ந்தேன். அன்று காலை மாலை ஆராதனையில் ஆவிக்குரிய போதனை செய்து, மதியம் 12 மணிக்கு நடந்த பரி. நற்கருணை ஆராதனையில் சர்க்கிள் கமிற்றி மெம்பர்களுக்கும் ஆசாமிகளுக்கும் பரி. மத்தேயு 28: 18-20 லிருந்து பெரிய தேவன் கொடுத்த பெரிய கட்டளையும், அதை நிறைவேற்றுவதால் வரும் பெரிய ஆசீர்வாதமும் இன்னதென்று காட்டி, சுவிசேஷ பிரபல்ய வேலையின் சம்மந்தமாயுள்ள பொறுப்பையும் விவரித்துப் பேசினதுமன்றி, பரி. நற்கருணை ஆராதனையிலும் உதவிசெய்தேன். அன்று சர்க்கிள் கமிற்றிக்கூட்டம் நடந்தபின்னர், ஆசாமிகளும் சர்க்கிள் காரியதரிசியுமாக என்னோடு கலந்து ஆய்த்தஞ்செய்த சுற்றுப்பிரயாண ஒழுங்கின்படி தேவகிருபையால் 39 நாள் ஷை சர்க்கிளிலுள்ள ஆசாமிகள் வசிக்கிற ஒவ்வொரு சபையையும் சந்தித்துப் பெரியவர்களுக்குள்ளும் பிள்ளைகளுக்குள்ளும் சுவிசேஷ பிரபல்ய வேலையில் ஜனங்களுக்கு அனுதாபமுண்டாகத்தக்கதாகவும் விசேஷமாய் இந்திய மிஷனெரி சங்கத்தின் சம்மந்தமாயும் தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயத்தின் கட்டுமான விஷயமாயும் அவர்கள்மேலுள்ள பொறுப்பையும் உணர்த்துமாறு ஊழியம் செய்யக் கர்த்தர் கிருபைசெய்த தயவுக்காக அவருக்கே சகல கனமும் புகழும் துதியும் தோத்திரமும் மென்மேலும் பெருகவுண்டாவதாக.

பணம் கொடுக்கவேண்டுமே என்ற பயத்தினால் சில சபைகளிலுள்ள மெம்பர்கள் இந்திய மிஷனெரி சங்கத்தின் வேலை விபரமறிய முதலாய் வேளாவேளைகளில் ஆலயத்துக்கு வரப் பின்னடைந்தபோதிலும், பொதுவாய் எல்லாஜனங்களும் ஆவலோடு கூடி, இந்திய மிஷனெரி சங்க வேலை விபரமறியவும் நான் கேளாமலே ஞாபகார்த்த ஆலயத்துக்குப் பண உதவி செய்யவும் முன்னின்றது வியக்கப்படத்தக்கதும் ஆண்டவருக்கு அதிக நன்றி செலுத்தத்தக்கதுமான விஷயமே. சில சபைகளில் கால்துட்டு சங்கம் ஏற்படுத்த ஆலோசனை சொன்னதின்பேரில், மாதந்தோறும் ஒவ்வொரு வீட்டிலும் ஆள் ஒன்றுக்குக் கால்துட்டு வீதம் காணிக்கை சேகரிக்கச் சம்மதித்திருக்கிறார்கள். திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீன முழுவதுமுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் இம்முறையைக் கையாடினால், இதினாலேமட்டும் ரூ 6000 எழிதில்சேர்ந்துவிடும். கோைக்காரன்தட்டு பள்ளிக்கூடத்தில் நூற்றுக்கணக்கான இந்துப்பிள்ளைகள் மிஷனெரிப் பெட்டி வைத்து, சங்கத்துக்குப் பணம் சேகரிக்க வாக்குப்பண்ணியதை அவ்விடத்திலுள்ள தேவ ஊழியர் ஜாக்ரதையோடு கவனித்துவருவதாய் வாக்குச்சொன்னார்கள். சுவிசேஷபுரம் போர்டிங் பெண் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் உபாத்திமாருமாக அவர்கள் ஆகாரத்தைக்குறைத்து, தோர்ணக்கல்லில் ஒருபோர்டிங் பிள்ளையை ஆதரிக்க வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். சமாரியாவிலுள்ள இரு சகோதரிகள் தங்கள் ஆபரணங்களையும், அந்தச்

சபையிலும் நல்லம்மாள்புரம் சபையிலுமுள்ள ஸ்திரிபந்தரும் ஏழியவர்களுமான சகோதரர் சகோதரிகள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும் அதிகமாகவுமே மனோற்சாகமாய் ஞாபகார்த்த ஆலயத்துக்குக் காணிக்கைகளையும் படைத்ததற்காகக் கர்த்தரை அதிகமாய்த் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பாப்பாடியில் சிறுவரின் மனமகிழ்ச்சிப் பண்டிகையிலும் அதே பாஸ்றரேற்றில் பருவங்கடந்த ஓர் சகோதரிக்கும் சில குழந்தைகளுக்கும் ஞானஸ்நானங் கொடுப்பதிலும் ஊழியஞ்செய்ய, சுவிசேஷபுரம் சர்க்கிளின் இரண்டு குருமாருடைய அனுமதியினாலும் இடம்பெற்றேன். சில விடங்களில் பருவங்கடந்த ஆண்களும் பெண்களும் சில வாலிபரும் ஞானஸ்நானம்பெற வாக்குப்பண்ணினார்கள். அவர்களில் நல்லவிருப்பத்தை யுண்டுபண்ணினவர் செய்கையாக மாற்றுவாராக.

இடையன்குடி கனம். லேம் ஐயர் அவர்களின் அன்பான அழைப்புப்பெற்று, அவ்விடத்திலும் ஓர் ஞாயிறு பின்னிட்டு ஆலயத்தில் சபையாருக்கும் சாயங்காலம் ஐயர்மார் சபையார் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளோடும் வெளிக் கிராமத்திற்குப் போய் இந்துக்களுக்கும் பிரசங்கம் செய்ய இடம்பெற்றேன். கனம். லேம் ஐயர் அவர்களும் கனம். பீற்றர் ஐயர் அவர்களும் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. பர்மா போய் திரும்பிய பின், தங்கள் சேகரத்துச் சபைதோறும் சந்தித்து நான் ஊழியஞ்செய்ய ஏற்பாடுசெய்வதாய் கனம். லேம் ஐயர் அவர்கள் தயவாய் வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். சுவிசேஷபுரம் சர்க்கிளின் குருமாருக்கும், தேவ ஊழியர் சபை மெம்பர்களுக்கும், ஊழியத்திலும் உபசரணையிலும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பாராட்டின எல்லா அன்புக்கும் 'நன்றிசெலுத்தி,' தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி அவர்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்க மன்றாடுகிறேன்.

ஊழியன், ஷோம் மிஷனரி.

---

## பளியர்மிஷன் கடிதம்.

அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

கர்த்தருடைய கிருபையினால் நான் வடக்குப் பளியக்குடியில் குடும்பசகிதம் வசித்து, நானும் என் மனைவியும் பள்ளிக்கூடம் வைத்து, ஜனங்களுக்கு ஆராதனையும் நடத்தி கிறிஸ்துமார்க்கச் சத்தியங்களையும் படித்துக்கொடுத்து வருகிறோம். அதோடு தெற்குப் பளியக்குடி, கோம்பைப் பளியக்குடி, சின்னத்துமன்னக்குடி, தோப்பூரான் மன்னக்குடி இவைகளுக்கும் சக்கூட்போய் சராசரி இரண்டு மாசத்துக்கொருதடவையாவது மேற்படி இடங்களைப் பார்வையிட்டுவருகிறேன் மேற்படி இடங்கள் 15 மைல் 20 மைலுக்கு அப்பாலே இருக்கிறபடியால் மாசாமாசம் அவைகளெல்லாவற்றையும் சந்திக்கக்கூடாமற்போகிறது. மேற்படி குடிகளில் உத்தேசம் 600 ஜனங்களிருந்தும், ஏராளமான பள்ளிப்பிள்ளைகளும் உண்டு. அவர்களில் பெரும்பான்மையோர்: ஐயா, நாங்கள் இயேசுநாதன் கடவுளையே கும்பிடுகிறோம். அவர் சத்துள்ள கடவுளாகத் தெரிகிறது. எங்களுக்கு நிலையாக உபாத்திமார் போட்டால் எங்கள் பிள்ளைகள் படித்துக்கொள்ளும். எங்களுக்கும் நல்ல அறிவுண்டாகும் என்று சொல்லுகிறார்கள். நான் அவர்களுக்குள் வேலைசெய்யும்போது என் பெலத்துக்குத்தக்கதாக கிறிஸ்துநாதருடைய பிறப்பு மரணம் இவைகளைப்பற்றியும் அவர் ஒருவரே ரக்ஷகர் என்பதைப்பற்றியும் வனதேவதைகள் வணக்கத்தை விட்டுவிட்டு இயேசுநாதர் ஒருவரைத்தான் கும்பிடவேண்டுமென்று சொல்லிவருகிறேன். அதற்கு நல்லதையா என்று சொல்லுகிறார்கள். மிருகத்தைப்போன்ற அறிவுடைய அவர்களுக்கு எல்லாம் படித்துத்தான்கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. அக்குடிகளில் ஒன்றாகிய தோப்பூரான்மன்னக்குடியில் 15 பிள்ளைகளும் 5 வாலிபர்களுக்கும் நான் போகுங்காலங்களில் கர்த்தருடைய ஜெபமும் கிறிஸ்துவின் சரித்திரமும் பத்துக் கற்பனைகளின் சுருக்கமும் இயேசு பாவிகளின் ரக்ஷகர் என்பதைப்பற்றியும் கொஞ்சம் அதிகமாய்க் கற்றுக்கொடுத்திருக்கிறேன். பெரியோருக்கு லேசாக கிறிஸ்துநாதரே கடவுள் என்பதைப்பற்றியும் அவர் பிறப்பு மரணச்சங்கதிகளையும் கற்றுக்கொடுத்துவருகிறேன். மேற்படி பிள்ளைகளும் வாலிபரும் பாலகர் பாடத்தில் 10 பாடமும் நன்றாய்ப் படித்திருக்கிறார்கள். அக்குடியில் நிலையாய் ஓர் உபாத்தியாயர் இருந்தால், அது சீக்கிரத்தில் கிறிஸ்துவின் அன்பில் முழுதும் நிலைத்துவிடும். இந்த மன்னக்குடிகளினோமாய் இன்னமும் அநேக மன்னக்குடிகள் இருக்கிறது. அவர்களில் சிலர் என்னை வேளாவேளையில் வழியில் கண்டு: ஐயா எங்களுக்கு இயேசுநாதனைப்பற்றிச் சொல்லுங்கள். எங்கள் பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கிறார்கள் அவர்களுக்கு, நான் பிரதியுத்தரமாக, 'இயேசுநாதரே' எங்கள் குடிக்கு உம்முடைய வெளிச்சம் வரட்டுமென்று செபியுங்கள் என்று சொல்லிவைத்திருக்கிறேன்.

நான் குடும்பசகிதமாயிருக்கிற வடக்குப் பளியக்குடியில் இப்போது 43 பேர் படிக்கிறார்கள். முன் சில தப்பெண்ணங்களைக் கருதி, கலியாணமான பெண்கள் நாங்கள் வந்த துவக்கத்தில் படிப்பை விட்டுவிட்டார்கள். அவர்களில் சிலர் மறுபடியும் படிக்க ஆசைப்பட்டு பாலர் பாடம் துவக்கிப் படிக்கிறார்கள். கர்த்தருக்குத் தோத்திரம். இப்போதும் இங்கே ஒன்பது வாலிபர் படிக்கிறார்கள். அவர்களில் இரண்டுபேர் ஜெபம் நடத்தத்திறமையுள்ளவர்கள். ஐந்துபேரை இன்னும்ஒரு வருஷத்துக்குள் கர்த்தருக்குச்சித்தமானால் உபதேசிமார வேலை பார்க்க லாயக்காக்கிப்போடலாமென்று கர்த்தருக்குள் நம்புகிறேன். சர்க்கார் வேலையினிமித்தமும், தங்கள் சொந்த வேலையினிமித்தமும் அவர்கள் ஒழுங்காய் வந்து படிப்பது தவறாதபடி கர்த்தருக்குள் ஜெபியுங்கள். ஏனென்றால் சர்க்கார் கட்டாய வேலையினிமித்தம் வாலிபர்களை ஒரு வாரத்தில் இரண்டொரு நாள்தான் வீட்டில் காணலாம். மற்ற நாட்களில் வேறு இடங்களில் தங்கிவிடுகிறார்கள். அதனால் படிப்புக் கெடுகிறது. ஐந்து சிறுபிள்ளைகள் இரண்டாவதுவகுப்பில் வாசித்து, மத்தேயு சுவிசேஷமும் வாசிக்கிறது. மற்றப்பேர்கள் பாலகா வகுப்பிலும் முதலாம் வகுப்பிலும் வாசிக்கிறது திருவாங்கூரைச் சேர்ந்த கோட்டையம் சர்க்கிள் அஷிஸ்டாண்டு இன்ஸ்பெக்டரவர்கள் இந்தப் பள்ளிக்கூடத்தை அக்டோபரில் பரீட்சித்தார்கள்: அதன் நிசல்ற்று திருப்திகரமாயிருக்கிறபடியால், சந்தோஷப்பட்டு உடனே டையரெக்டருக்குக் கிராண்டு கொடுக்கும்படி சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த வருஷமுதல் கிராண்டு கிடைக்கும். இக்குடியில் உத்தேசம் 160 ஜனமிருக்கும். அதில் முக்கால்வாசிப்பேர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். மீதப்பேர்களும் மற்றும் சில குடிகளிலுள்ள ஜனங்களும் இன்னும் ஞானஸ்நானத்துக்கேற்ற சரியான அறிவுக்கு வரவில்லை. அவர்களுக்கு எவ்வளவு அளவற்றமட்டில் கொஞ்சங் கொஞ்சமாய் சொல்லிக்கொடுத்துக் கொண்டுவருகிறோம். ஊழியரில்லாக்குறைவுக்காகக் கர்த்தரை மிகவும் கருத்தாய் மன்றாடுங்கள். எல்லாம் கற்றுத்தான்கொடுக்கவேண்டியதாயிருக்கிறது

A. டேவிட்.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

NOVEMBER, 1913

Registered No. M. 481.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - JAN 1914
MADRAS.

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 11] நவம்பர் 1913 [விலை பை 3

## CONTENTS

| | |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 85 |
| The Pastoral letter of the Lord Bishop of Madras ... | 86 |
| Prayers for Missions ... ... ... ... | 87 |
| From the Telugu Field ... ... ... | 88 |
| The Fellowship in the Ministering to the Saints ... | 90 |

## பொருளடக்கம்

| | |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... | 85 |
| மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் நிருபம் ... | 86 |
| மிஷன்களுக்காக ஜெபம் ... ... ... | 87 |
| தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... | 88 |
| தர்ம ஊழியத்தின் பங்கு ... ... ... | 90 |

## பத்திராதிபர் குறிப்புகள்.

விருந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். — தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு கர்த்தராகிய இயேசுவானவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார். பிதாவின் வலது பாரிசத்தி

பரி. அந்திரேயாவின் திருநாள். — இப்பரிசுத்த ஆசாரிய ஊழியத்தில் நாம் அவருடன் பங்குபெற அழைக்கிறார். பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் செய்வோமாக. பரி. அந்திரேயாவின் திருநாளன்று விசேஷித்த பிரகாரம் பிரார்த்திப்பதற்கு திருச்சபை நம்மை அழைக்கிறது. புறதேச மிஷன்களுக்காகவும், விசேஷமாக நாம் ஓர் சபையாக செய்ய ஆரம்பித்திருக்கும் மிஷனெரி ஊழியத்திற்காகவும் ஊக்கமாய் உள்ளக் கனிவுடன் ஆத்திரத்தோடு ஜெபிக்கத்தக்கதாக கர்த்தர் ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் தம் சபையில் பொழிந்தருளுவாராக. மிஷனெரி ஊழியத்தின் முக்கியத்தையும் அதின் சம்பந்தமாய் தேவஊழியர் சபையார் யாவருடைய கடமையையும் நன்குணர்த்தி, மகா கனம். சென்னை அத்தியக்ஷரவர்கள் 'டையாஸீசன்' பத்திரிகையில் பிரசுரித்திருக்கும் 'பாஸ்றரல்' நிருபத்தை தருசுமால்செய்து இச்சஞ்சிகையில் பிரசுரித்திருக்கிறோம். தவிரவும், சில ஜெபங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் யாவற்றையும் கர்த்தர் தம்முடைய நாம மகிமைக்காக உபயோகித்தருள்வாராக. மகா கனம். அத்தியக்ஷரவர்கள் அநுமதி கொடுத்திருக்கும் மிஷனெரி லித்தனியும் ஆராதனை முறையும் விசேஷ பாடங்களும் சங்கீதங்களும் சபைகள் யாவற்றிலும் ஆராதனைகளில் வழங்கும்படி ஞாபகப்படுத்துகிறோம்.

மாட்சிமை தங்கிய காருண்ய சக்கிரவர்த்தியாகிய ஐந்தாவது ஜியார்ஜ் மன்னர் கிறிஸ்தவ ஊழியங்களின்பேரில் தங்களுக்கிருக்கும் அநுதாபத்தை இப்பவும் ஒருமுறை வெளியிட்டிருக்கின்றனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சக்கிரவர்த்தியும் கிறிஸ்தவ ஊழியமும். — உவெஸ்லியன் மிஷனெரி சங்கத்தார் தங்களுடைய நூற்றாண்டு உற்சவங் கொண்டாடும் சமயத்தில், தங்களுடைய ராஜபக்தியையும் விசுவாசத்தையும் அறிக்கைசெய்து ஓர் தந்தி நம் அரசருக்கு அனுப்பினார்கள். கிறிஸ்துமார்க்கத்தின் சிறந்த நோக்கத்தை விர்த்திசெய்வதில் உவெஸ்லியன் சங்கத்தார் உலகமுழுவதும் செய்துவரும் மார்க்க, பரோபகார வேலையைத் தாங்கள் நன்றியறிதலுடன் நன்கு மதிப்பதாகவும், நூறு வருஷக்காலத்தில் சங்கம் நடப்பித்து வந்த ஊழியங்களில் அடைந்த மேலான சித்திகளில் சங்கத்தாரோடு சேர்ந்து சந்தோஷிப்பதாகவும் பதில்ச் சமாச்சாரம் அனுப்பினார்கள். உலகத்தின் நாநா ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைக் கொடுக்கும்படி மிஷனெரி ஊழியத்தை நடத்தும் ஒவ்வொரு சபையும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் 'கிறிஸ்துமார்க்கத்தின் சிறந்த நோக்கங்கள்' என்று நம் சக்கிரவர்த்தியவர்கள் மதிக்கிறார்களென்பது இச்சபைகளுக்குத் தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கவேண்டிய விஷயமல்லவா? சக்கிரவர்த்தியவர்களின் வார்த்தைகளை வாசிக்குங்கால், பெரிய உத்தியோகம் வகிக்கும் நண்பர்களும் மிஷனெரி ஊழியத்திற்கு அதிக உற்சாகமாய் கைகொடுத்து, உதவிபுரிய ஏவப்பட கர்த்தர் அருள்புரிவாராக.

மிஷனெரி ஊழியத்தை ஏனோதானோவென்று இதுவரை அவமதித்து அற்பமாய் எண்ணுகிறவர்களுக்கு சக்கிரவர்த்தியின் வார்த்தைகள் ஓர் எச்சரிப்பாகும்.

**தோர்ணக்கல் ஆலயம்,**

தோர்ணக்கல் ஆலய முயற்சி அடுத்த ஜூன் மாசத்துக்குள் முடிவுபெற வேண்டுமென்பது சங்க உத்தியோகஸ்தர் வாஞ்சை. அத்தியக்ஷர் ஸ்தானத்தில் ஆலயமில்லாக் குறைவு மிகவும் விசனப்படத்தக்கதே. வசதியான நாளில் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடும்படியான ஏற்பாடு செய்யும்படி மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களைக் கமிற்றிமார் கேட்டிருக்கிறார்கள். நண்பர் யாவரும் தாமதமின்றி ஆலயத்திற்காக விசேஷ காணிக்கை உற்சாகமாய்ப் படைக்கக் கோருகிறோம். குருமார், மற்றும் தேவ ஊழியர் யாவரும் இது விஷயத்தில் அதிக அக்கறை எடுக்கும்படி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம். நங்கூன் அத்தியக்ஷரவர்கள் ரூ. 100 காணிக்கையனுப்பியிருக்கிறார்கள். பர்மாவிலுள்ள நண்பரால் நமது ஆலய விஷயம் அவர்களுக்குத் தெரியவந்ததுபோலும், தேவாலயக் கூடாரவிஷயமாயும் எருசலேம் ஆலயக்கட்டுமான விஷயமாயும் இஸ்ரவேல் புத்திரரான புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகளில் விளங்கின உற்சாகம் நமதுசபைகளிலும் காணப்பட கர்த்தர் அருள்புரிவாராக. ஆலய விஷயமாய் அக்கறை கொள்ளும் நண்பர் யாவரும் நாடோறும் ஜெபித்துவர மறவாதிருப்போமாக.

ஆலயத்திற்காகவரும் காணிக்கை நீங்கலாக, சங்கத்தின் பொதுவான தாபரிப்புக்காக வழக்கமாய் வரும் காணிக்கை வருஷா வருஷம் அதிகரிக்கவேண்டியது மிகவும் அவசியம்.

**சங்கப் போக்கிஷம்.**

தெலுங்கு நாட்டிலும் பளியருக்குள்ளும் வேலை விர்த்தியாகி வருகிறது. ஜனுவரிமீ முதல் போர்டிங் பிள்ளைகளுக்கு நெசவு தொழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு நடந்து வருகிறது. ஆலயத்திற்காகக் காணிக்கை கொடுக்கும் நண்பரும் சபைகளும் தங்களுடைய வழக்கமான காணிக்கைகளைப் படைக்கவும் ஞாபகப்படுத்துகிறோம். போன வருஷம் ரூ. 25 கொடுத்த இருவர் இந்த வருஷம் வழக்கமான பொதுவிஷயத்திற்காகத் தங்கள் காணிக்கைகளை இரட்டிப்பாக்கியிருக்கிறார்கள். குன்னூர் சபை ஒரு உபதேசியாரை ஆதரிப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிறது. சில சிறு சபைகள் தங்கள் காணிக்கைகளை இரட்டித்துவரத் தக்கதாக ஒழுங்காய் மாசாமாசம் காணிக்கை சேகரித்து வருகின்றன. இவைகளுக்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக. மற்றும் சபைகளும் நண்பரும் அதிக உற்சாகங்கொள்ளவும், இன்னும் சங்க ஆதரிப்புக்காகத் தங்களை ஒப்புக்கொடுக்கத் தாமதித்துநிற்கிறவர்களும் சங்கத்தை நேசிக்கவும், ஊழியத்தைத் தங்கள்ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்கவும் ஊக்கமாய் ஜெபித்துவரும்படி நண்பரை விரும்பி அழைக்கிறோம்.

---

## மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள்

### தேவ ஊழியருக்கு எழுதும் நிருபம்.

நவம்பர் மாசத்தின் கடைசித் தினமாகிய பரி. அந்திரேயாவின் திருநாள் புறதேச மிஷன்களுக்காக விண்ணப்பஞ் செய்யும் விசேஷ மன்றாட்டு நாளாக ஆங்கிலேயத் திருச்சபை முழுவதிலும் பல வருஷங்களாய் ஆசரிக்கப்பட்டுவருகிறது. இத்திருநாளை இவ்விசேஷித்த நோக்கத்திற்காகப் பிரித்து வைத்திருப்பது தகுதியே. பரி. அந்திரேயா மிஷனெரி சிந்தையுள்ள மனுஷன். கிறிஸ்துவைத் தான் கண்டதற்குப் பின் அவன் செய்த முதற்காரியம் தன் சகோதரனாகிய சீமோனிடத்திற்குப்போய், இயேசுவைக் குறித்து அவனிடத்தில் சொல்லி, அவனை அவரிடத்தில் கொண்டுவந்தான். ஆகவே, இத்திருநாள் சகல காலத்திலும் மிஷனெரி ஊழியத்தை நடத்துவதற்கு முக்கிய ஏதுக்களாக விளங்குகிற்கும் கிறிஸ்துவின்பேரிலுள்ள மெய்யான விசுவாசம், சகோதரத்துவ சிந்தை, நமது உடன் சகோதரருடன் நம்முடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து அனுபவிக்கவேண்டுமென்ற சுயாபமற்ற ஆசை முதலான சிறந்த குணங்களை நமக்கு முன் பரிஷ்காரமாய் வைக்கின்றதல்லவா?

அத்தியக்ஷாதினத்திலுள்ள சகல சபைகளிலும் ஆலயங்களிலும் இத்திருநாள் புறதேச மிஷன்களுக்காக மன்றாடும் விண்ணப்ப நாளாக ஆசரிக்கப்படும்படி விரும்புகிறேன். இவ்வருஷம் இத்திருநாள் ஞாயிற்றுக் கிழமையில் வருகிறது. ஆகவே, மிஷன்களைப்பற்றியும், கிறிஸ்துவின் சிந்தையை அணிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் மிஷனெரி ஆவி நிறைந்தவர்களாய் ஜீவிக்கவேண்டுமென்பதின் அவசியத்தைக் குறித்தும் அந்நாளில் பிரசங்கிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மிஷனெரி ஊழியத்தில் ஜனங்கள் பிரியங்கொள்ளும்படி செய்வது மாத்திரம் போதாது, தங்களுடைய சொந்த ஜீவியம் ஆவிக்குரிய பிரகாரம் பெலப்பட்டுப் பூரணமடைவதற்கு மிஷனெரி ஊழியம் ஓர் பெரிய அவசியமென்று கிறிஸ்தவர்கள் உணரும்படி செய்வதே தற்காலம் பிரசங்கிமார் போதிக்கவேண்டிய முக்கிய சத்தியமென்று எண்ணுகிறேன். சகல ஜாதிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி திருச்சபை முயல்வதின் இரகசியம் இவ்வேலை பிரியமான ஊழியமானதினாலல்ல, இவ்வூழியம் கர்த்தருடைய சித்தமும், கிறிஸ்துநாதர்செய்த ஊழியமும், சபையின் ஞான ஜீவன் பூரணப்படுவதற்குக் கர்த்தரே நியமித்திருக்கும் பிரமாணமுமாயிருப்பதினாலேயே. பரி. பவுல் பெரிய மிஷனெரி ஊழியம் செய்தது சின்ன ஆசியா, மக்கதோனியா, கிரேக்குதேசம், ரோமாபுரிமுதலிய இடங்களிலுள்ள ஜனங்களின்பேரில் அவருக்கிருந்த பிரியத்தினாலல்ல, கிறிஸ்துவின் அன்பு அவரை நெருக்கி ஏவினதினாலேயே சுவிசேஷ வேலை செய்துவந்தார்.

பரி. அந்திரேயாவின் திருநாளைப்போன்ற நாளில் புறதேச மிஷன் வேலையைப்பற்றிப் பிரசங்கிக்கும்போது, மிஷனெரி ஊழியங்களில் ஜனங்கள் பிரியங்கொள்ளும்படி மாத்தி



ரம் கருதாமல், எக்காலத்திலும் திருச்சபையானது மிஷனெரி ஊழியஞ்செய்வதற்கு அதை ஏவி அனல் மூட்டிவிட்டிருக்கும் பெரிய சத்தியங்களை ஜனங்கள் கண்டுகொள்ளும்படி செய் வதே குருமார், மற்றும் தேவ ஊழியரின் நோக்கமாக இருக்க வேண்டும்.

பிரசங்கங்களோடு, ஒவ்வொரு ஆராதனையிலும் மிஷன்களுக்காக விசேஷித்த ஜெபங்கள் சொல்லவேண்டும். தவிரவும், குருமாரும் சபை மெம்பர்களும் தங்களுடைய தனி ஜெபங்களிலும் தியானங்களிலும் புறதேச மிஷன் ஊழியங்களுக்காக விசேஷித்த மன்றாட்டுகள் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தனித்தாவது, ஆராதனையிலாவது உபயோகிக்கத்தக்கதான சில ஜெபங்கள் இத்துடன் பிரசுரித்திருக்கிறேன். மிஷன்களுக்காகப் பிரார்த்திக்கும்படி எழுதப்பட்டிருக்கும் கட்ஸ்டன் என்னும் லித்தனி ஜெபத்திலிருந்து அவைகளைத் தெரிந்தெடுத்திருக்கிறேன். ஜெப புஸ்தகத்திலுள்ள லித்தனி பிரார்த்தனைக்குப்பதிலாக மிஷன்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் லித்தனி முறையையும் இச்செபங்களையும் பரி. அந்திரேயாவின் திருநாளில் ஆராதனைமுறையில் வழங்கும்படி அனுமதி கொடுக்கிறேன். உலகமெங்குமுள்ள ஆங்கிலேய திருச்சபையோடு சேர்ந்து, மிஷனெரி ஊழியங்களுக்காக மெய்யான வல்லமை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் தினமாக இந்த நாள் விளங்கும்படி யாவரும் ஊக்கமாய் முயற்சிக்க விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பரி. அந்திரேயாவின் திருநாளை மிஷன்களுக்காக விண்ணப்ப நாளாய் ஆசரிக்க ஆரம்பித்து நாற்பது சில்வான வருஷங்களாகிறது. அதுமுதல் ஆங்கிலேய திருச்சபை நடத்திவரும் புறதேச மிஷன் ஊழியம் விருத்தியடைந்துகொண்டேவந்திருக்கிறது. இப்போதும் மிஷனெரி ஊழிய விஷயமாய் ஓர் முக்கியமான காலத்தில் பிரவேசித்திருக்கிறோம். புதுப்பெலனும் ஆசீர்வாதங்களும் தேவனுடைய இரக்க ஆசனத்திலிருந்து இன்னும் மதிகமாய்ப் பெற்றுக்கொள்வதற்குச் சபையானது அதிக ஊக்கமாய் ஜெபிப்பது அத்தியாவசியம். ஜெபதூபம் இடைவிடாது எழும்பிக்கொண்டேயிருக்கவேண்டும். இதைச் சிந்தித்து, பெரிய காரியங்களைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பரிந்து பேசும் ஜெபத்தில் தரித்திருக்கக் கர்த்தர் அருள்புரிவாராக.

ஹென்ரி மதுராஸ்.

---

எஸ். பி. ஜி. தாய்ச்சங்கத்தின் செக்ரற்றெரியாகிய மகாகனம். 'மாண்ட் காமரி' அத்தியக்ஷரவர்கள் இந்தியாவில் இப்போது சுற்றுப் பிரயாணஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால், டிசம்பர்மீ 23உ பாளையங்கோட்டைக்கு வந்து, கிறிஸ்மஸ் தினத்தை நாசரேத்தில் பின்னிடத்தக்கதாக 24உ அங்கு போவார்கள். நம் டையாஸிசிலுள்ள முக்கிய எஸ். பி. ஜி. ஸ்டேஷன்களைச் சந்தித்தபின், திருவாங்கூர் மார்க்கமாய் பம்பாய்க்குப் போய், ஜனுவரிமீ 17உ சீமைக்குக் கப்பலேறுவார்கள். கர்த்தர் அவர்களுடைய பிரயாணங்களை வாய்க்கச்செய்வாராக.

---

## மிஷன்களுக்காக ஜெபம்.

### மிஷன்களுக்காக.

குரு. பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல:
மறு. என்னுடையஆவியினாலேயே ஆகும்என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

அறுப்புக்கு எஜமானாகிய கர்த்தாவே, இப்பொழுதே முதிர்ந்திருக்கும் தானியம் எங்களுடைய அஜாக்கிரதையினால் தரையில் விழுந்து அழிந்துபோகாதபடி, அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள்பேரில் பரிசுத்தப்படுத்துகிற உமது ஆவியானவரையும் புறமதஸ்தர்மீது குணப்படுத்தும் உமது கிருபையையும் பொழிந்தருளும்.

உம்முடைய ஜனங்கள் யாவரும் அன்பில் ஒரே சரீரமாக ஒன்றாய் இணைக்கப்பட்டவர்களாவதினால், உமது திருச்சபையானது கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வந்தடைவதற்காக, சுதேச கிறிஸ்தவர்களுக்குள் உத்தம போதகர்கள் எழும்பக் கிருபைசெய்தருளும். எங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்திருக்கும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

### யூதருக்காக

குரு. கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே,நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது:

மறுமொழி. அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்.

தேவனே, ஆபிரகாமின் தேவனே, உம்முடைய நித்திய உடன்படிக்கையை நினைத்தருளி, யூதா, இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்பியருளும். அவர்கள் உம்முடைய ஜனங்கள்; எருசலேமை நேசித்து, அதற்காகத் துக்கிக்கிற யாவரும் அதோடு சந்தோஷிக்கத்தக்கதாக, கர்த்தாவே, யூதரை இரட்சித்தருளும். எங்களுடைய இரட்சகரும் அவர்களுடைய இரட்சகருமான இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

### புறமதஸ்தருக்காக

குரு. யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும் நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பக்காரியமாயிருக்கிறது.

மறுமொழி. நீர் பூமியின் கடைசிபரியந்தம் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்.

பூமியிலுள்ள சகல ஜாதிகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டும், அறியாமையினால் அழிந்துபோகிற திரள் கூட்டமான அஞ்ஞானிகளை நினைத்தருளும். உமது திருச்சபையின் ஜெபங்களினாலும் ஊழியங்களினாலும் அவர்கள் எல்லா அவபக்தியினின்றும் அவிசுவாசத்தினின்றும் விடுதலையடையும்படி உமது திருக்குமாரனு

கிய இயேசுகிறிஸ்துவின் பிராயச்சித்தப்புண்யங்களினிமித்தம் அநுக்கிரகஞ்செய்யும். எங்கள் இரட்சிப்பும், உயிர்த்தெழுதலும், விசுவாசிகளின் ஜீவனுமயிருக்கும்படி நீர் அனுப்பியிருக்கும் உமது குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

பரி. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காக.

குரு. தமது இரக்கத்தின்படியே நம்மை இரட்சித்தார்:

மறுமொழி. மறுஜென்மமுழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

ஆண்டவரே, பரிசுத்த ஞானஸ்நானத்திற்காக அஞ்ஞான தேசங்களில் சுவிசேஷ போதனையடைந்துவரும் யாவரையும் நினைத்தருளும். அவர்கள்மேல் இரக்கம்வைத்து, விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தியருளும். அவர்கள் விட்டுவந்த விக்கிரகாராதனை, வீண்பக்தி அவர்களில் கொஞ்சந்தேனும் காணப்படாதபடி அவைகளை அவர்களுடைய இருதயங்களிலிருந்து அகற்றிவிடும். உமது பிரமாணத்தில் தியானமாயிருப்பதினால், அவர்கள் போதனையடைந்துவரும் வசனத்தில் ஸ்திரமான அறிவுடையவர்களாக வளரவும், பாவமன்னிப்புக்கென்று மறுஜன்மமுழுக்கடைவதினால் பரிசுத்த ஆவியானவரின் வாசஸ்தலமாவதற்குத் தகுதியானவர்களாகவும் அநுக்கிரகம் பண்ணும். இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமேன்.

பரி. ஞானஸ்நானம் பெற்றவர்கள் நிலைத்திருப்பதற்காக.

குரு. அவர்கள் பலத்தின்மேல் பலனடைவார்கள்:

மறுமொழி. சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள்.

தேவனே, முழுச்சரீரமாகிய சபையானது உமது ஆவியினாலே விருத்தியடைந்து, ஆண்டு நடத்தப்படுகிறது. உமது குடும்பத்திற்குள் புதிதாய்ப் பிறந்திருக்கும் பிள்ளைகளில் நீர் அருளிச்செய்திருக்கும் பரிசுத்தமாக்குதலாகிய கிருபை நிலைத்திருக்கும்படி செய்யும். அவர்கள் சரீரத்திலும் மனதிலும் புதிதாக்கப்பட்டவர்களாயும் விசுவாசமாகிய ஐக்கியத்தை ஊக்கமாய்ப் பற்றிப்பிடித்தவர்களாயும், தங்கள் ஆண்டவராகிய உம்மை உத்தமமாய்ச் சேவிக்கும்படி பெலன் அளியும். ஒரே தேவனாக, ஒரே ஆவியின் ஐக்யத்தில், சதா காலங்களிலும் உம்மோடு ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

குரு. கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

மறுமொழி. அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

குரு. இரக்கம் நிறைந்த சர்வவல்லமையுள்ள ஆண்டவர் கிருபையாய் நம் விண்ணப்பங்களைக் கேட்டருளுவாராக.

மறுமொழி. ஆமேன்.

குரு. நமது ஆண்டவர் தமது இரக்கத்தின்படியே, விசுவாசிகளெல்லாரோடும் நமக்கு இளைப்பாறுதலும் சமாதானமும் கட்டளையிடுவாராக.

மறுமொழி. ஆமேன்.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

டையாசீஸ் விசேஷம். இரண்டு வருஷங்களுக்கு முன் தோர்ணக்கல்லில் வேனிற்காலப் பள்ளிக்கூடமென்றொன்று மிஷன் ஆசாமிகளுக்கெல்லாம் வைக்கப்பட்டது கடந்த வருஷம் அது தடைபட்டுப்போய்விட்டது இந்த வருஷமும் அக்கூட்டங்கள் மேய் மாசத்தில் நடத்த ஏதுவில்லாததினால், அக்டோபர்மீ 7உ முதல் 13உ வரை தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்துக்குள்பட்ட தெலுங்கு ஊழியர் யாவருக்கும் கம்மாமேட்டில் நடத்தப்பட்டது. சுமார் 150 பேர் வந்திருந்தார்கள். அந்நாட்களில் ஆவிக்குரிய கூட்டங்கள் மாத்திரமல்ல, சபையிலுள்ள புதுக் கிறிஸ்தவர்களை ஞானஸ்நானத்திற்கும் திடப்படுத்தலுக்கும், எவ்விதமாய் ஆயத்தப்படுத்தவேண்டுமென்றும் போதிக்கப்பட்டது.

தினசரி ஒழுங்கு பின்வருமாறு:—

| | |
|---|---|
| 7. 30—8. 30 | காலை ஆராதனை, பிரசங்கம். |
| 8. 45—9. 45 | ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்தும் முறை. |
| 10—11 | வேதபாடக் கூட்டங்கள்: 2கொரிந்தியர், அப்போஸ்தலர் நடபடிகள். |
| 12—12. 30 | விண்ணப்பக் கூட்டம். |
| 2—4 | ஸ்திரீகள் கூட்டம். |
| 4—5 | வேதாகமப் பாடக் கூட்டங்கள்: ஏசியா, 2 ராஜாக்கள். |
| 5. 15—6. 15 | திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்தும் முறை. |
| 6. 30—8 | மாலை ஆராதனை, பிரசங்கம். |

காலை ஆராதனையில் தனி வேத வாசிப்பு, தனி ஜெபம், பரிந்து பேசும் விண்ணப்பம் முதலிய பொருளின்பேரில் பிரசங்கம் நடந்தது. ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களை ஆயத்தப்படுத்தவேண்டிய விதமெப்படியென்று மகாகனம் அத்தியக்ஷரவர்கள் போதித்தார்கள். வேத பாடங்களுக்கு பிஷப் ஜெல் பரிக்ஷையில் உயர்ந்தபடி, தாழ்ந்தபடிகளுக்குக் குறித்திருக்கும் புஸ்தகங்களையே வைத்துக்கொண்டார்கள். ஆசாமிகள் அனைவரும் பரிக்ஷைகளுக்குப் போகிறவர்கள். கனம். D. S. தாவீது ஐயரவர்கள் 2 கொரிந்தியரையும், கனம் S. பாக்கியநாதன் ஐயரவர்கள் 2 இராஜாக்களையும், மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஏசியா, நடபடிகள் புஸ்தகங்களையும் கற்பித்தார்கள் மத்தியானம் விண்ணப்பம் குருமாரால் நடத்தப்பட்டது. கம்மாமேட்டு கனம். கிரேன்ஸ்விக் ஐயரவர்கள் திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்தவேண்டிய விதத்தைப்பறிக் கற்றுக்கொடுத்தார்கள். சாயந்திர ஆராதனையில் தினந்தோறும் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பிரசங்கம் செய்தார்கள். உபாத்திமார்களின் மனைவிகளுக்கும் ஜெனானா வேலை பார்க்கிறவர்களுக்கும் மதியம் 2-மணி முதல் 4-மணி வரை சங்கை பொருந்திய பிஷப் அம்மாளவர்களும் ஜெனானா துரைசானிமாரும் கூட்டங்கள் நடத்தினார்கள். இக்கூட்டங்களில் ஆசாமிகள் சபையில் புதுக் கிறிஸ்தவர்களை எவ்விதமாய்ப் பயிற்றுவிக்கவேண்டு



மென்று படித்துக்கொண்டது அவர்களுக்கு எவ்வளவோ பிரயோஜனம். புதுக் கிறிஸ்தவர்களுக்கு இதுவரைமுதலில் கர்த்தருடைய ஜெபம், விசுவாசப்பிரமாணம், பத்துக் கற்பனை இவைகளை மனப்பாடமாய்ப் படித்துக்கொடுக்கிறதே இத்தேசத்தில் வழக்கம். இவைகளை மனப்பாடம்பண்ணுவது கஷ்டமானதால், அவர்களுடைய பக்தியைக் குறைந்துபோகப்பண்ணுவதற்கு இது ஏதுவாயிருந்தது நம் தேசத்தார் கண்ட இடமெல்லாம், நினைத்த நேரமெல்லாம், தங்கள் தேவதைகளை நோக்கிக் கூப்பிடுகிறதுபோலவே, அவர்கள் கிறிஸ்தவர்களான பின்னும், இயேசுபெருமானை நோக்கிக் கூப்பிடவும் பிள்ளை தன் தகப்பனிடத்தில் பேசுவதுபோல, ஜெபத்தின் மூலமாய் அவரிடத்தில் சகல காரியங்களைக்குறித்தும் பேசவும் முதலில் பழகிக்கொண்டால், பின்பு மற்றக் காரியங்களைப் படித்துக்கொடுத்து ஆயத்தம்பண்ணி ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது.

இக்கூட்டத்தில் இன்னோர் விசேஷம் நடந்தது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஒருநாள் சொன்ன பாடத்தை மறுநாள் மாதிரிப்பாடமாகக் கொடுக்கும்படி ஒவ்வோர் ஆசாமியைக் கேட்டார்கள். மற்றவர்கள் அவர் கற்றுக்கொடுக்கும் போது, சும்மாயிருந்து பின்னால் நலம் பொலம் சொல்லவேண்டும். அறிவீன சபைகளுக்குப் படிப்பிக்கும் விஷயத்தில் எவ்வளவு குறை இருக்கிறதென்று சகலரும் கண்டுகொள்வதற்கு இதுவே ஏற்ற முறையாயிருந்தது.

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் இதைப் படித்துக்கொடுத்ததுமல்லலாமல், ஒவ்வொருவர் கையிலுமிருக்கத்தக்கதாக காயிதங்களில் அச்சடித்தும் கொடுத்திருக்கிறார்கள். இவ்விதப் படிப்பினால் அதிகமான நன்மையுண்டாகுமென்று நம்புகிறோம். கர்த்தர் தாமே ஒவ்வொருவருடைய பிரயாசத்திலும் நல்ல பலன் உண்டாகச் செய்வாராக.

வேத பாடங்களினாலும் காலை மாலை பிரசங்கங்களினாலும் ஆசாமிகளுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகுந்த பலன் உண்டானதென்று நம்ப இடமுண்டு. அநேகர் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பி, புது ஜீவியம் செய்யத் தங்களை ஒப்புக்கொடுத்துப் போவதாகத் தெரிவித்தார்கள். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை இன்னும் அதிகமாய் இவ்வத்தியக்ஷாதீனத்தின்பேரில் பொழிந்தருளி, இதிலடங்கிய ஒவ்வொரு மிஷனிலும் ஆவிக்கேற்ற ஊழியம் நடக்கும்படி கிருபை செய்வாராக. இதற்காக இதை வாசிப்போர் இன்னும் ஊக்கமாய் ஜெபிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இக்கூட்டங்கள் முடிந்தபின் டையாஸிசன் கான்பரன்ஸ் ஒன்று 15உ நடந்தது. இதற்குக் கம்மாமேட்டு, சிங்கரேணி, தோர்ணக்கல் சுதேச சபை ஆலோசனைச் சங்கத்தின் மெம்பர்களெல்லாரும் வந்திருந்தார்கள். இது முதல்கூட்டமானதால், பிரத்தியேகமான மெம்பர்கள் இதற்கென்று தெரிந்தெடுக்கப்படவில்லை. இனிமேல் அவ்விதமாய் ஏற்படுத்தப் படவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது.

அதிகாலை 7. 30-மணிக்குக் கர்த்தருடைய ராப்போஜனமும் பிரசங்கமும் நடந்தது. அதில் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் 'கூடி வந்திருந்த எங்களுக்கும் பரிசுத்தாவிக்கும் நலமாகத் தோன்றினது' என்ற வாக்கியத்தின்பேரில், ஓர் அத்தியக்ஷாதீனத்தின் பிரதிநிதிகளும், குருமாரும், அத்தியக்ஷரும் கூடிவருவதினாலுண்டாகும் பலன்களை விவரித்துப் பிரசங்கித்தார்கள். அப்பால் 9. 30-மணிக்கு கிராம சபைகளில் வழங்கும் ஆராதனைக் கிரமத்தைப்பற்றி, பிரதிநிதிகளுடன் கலந்து பேசி, தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்துக்குரிய சில விதிகளைக் கொடுத்தார்கள். 10. 30-மணிக்கு குருமார் மாத்திரம் இருக்க அவர்களுக்குச் சொல்லவேண்டிய ஆலோசனை, விதிகள் முதலியவற்றை மகாகனம் அத்தியக்ஷரவர்கள் சொன்னார்கள். மத்தியானம் குருமாரனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டது. மறுபடியும் மாலை 3-மணிக்கு குருமாருக்கு மாத்திரம் தனிமையாய் ஓர் கூட்டம் வைத்தபின், மாலை $4\frac{1}{2}$-மணிக்கு கான்பரன்ஸ் கூடினது. இதில் பிரதிநிதிகள் அனைவரும் கூடியிருந்தார்கள். மொத்தம் சுமார் 50 பேர் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் அழைப்பின்பேரில் வந்திருந்தார்கள். சபையின் பக்திவிருத்திக்கேதுவாக ஓர் டையாஸீசாக என்னசெய்யலாமென்று மகாகனம் அத்தியக்ஷரவர்களுடன் கலந்து ஆலோசிப்பதே இதின் நோக்கம். இச்சமையம் தீர்மானிக்கப்பட்ட சிலவற்றை மாத்திரம் இங்கே எழுதுகிறேன்:—

1. ஜெப விஷயங்கள் அச்சிட்டு, டையாசீஸ் பூராவுக்கும் அனுப்பப்படவேண்டும்.

2. இப்பக்கத்துப் பெண்கள் ஒழுங்காய் ஜெபத்திற்கு வாராமலும் மெய்க் கிறிஸ்தவர்களாகக் காணப்படாமலுமிருக்கிறதினால், சபைகள்தோறும் தாய்மார் கூட்டம் ஏற்படுத்தி, அவர்களை உற்சாகப்படுத்த சங்கை பொருந்திய பிஷப் அம்மாளவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

3. சிறுவர்களுக்குள் வேலை செய்து அவர்களை வேதம் வாசிக்கச்செய்யத்தக்கதாக, கார்டு பஞ்சாங்கம் அச்சடிக்கவும், கூடுமானால் மிஷனர்களை ஏற்படுத்தவும் ஓர் பாலியர் சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

4. இத்துடன் டையாஸீசுக்கும் ஒரு பத்திரிகை அச்சடித்துப் பிரசுரம் செய்யவேண்டுமென்று பேசப்பட்டது.

இவ்வித உற்சாகத்தை ஜனங்களுக்குள் எழுப்பின ஆண்டவர் முற்றுமுடிய அதை நிறைவேற்றும்படி அவரைப் பிரார்த்திப்போமாக.

மிஷன் விசேஷம். மேடுதபல்லியில் வேலைபார்த்து வந்த சத்தியானந்தம் உபாத்தியாயர் அவசரத்தினிமித்தம் மானுக்கோட்டைக்கு மாற்றப்பட்டுப் போனார். அவர் போனபின் நாலு மாசக் காலங்களாக உபாத்தியாயரில்லை, நான் மற்ற இடங்களுக்குப் போகுங்காலத்தில், சுதேச சபை ஆலோசனைச் சங்கத்தின் மெம்பரான யோபும், புதுக் கிறிஸ்தவனான சாலொமோன் என்னப்பட்ட ஒட்டன் ஒருவனும் காலை மாலை ஜெபம் நடத்துகிறார்கள். இவ்விருவரில் யோபு அதிக வயது சென்றவன், கல்வியறிவில்லாதவன். ஆகிலும் இவ்வூர் ஜனங்களுக்கேற்ற புத்திமதிகள் தன்னாலியன்றமட்டும் சொல்லிவருகிறான். சாலொமோன் பகலெல்லாம் தன் சொந்த வேலைக்

குப்போய், இரவில் சமையம் பார்த்து வாசிக்கப் பழகியிருக்கிறான், நானில்லாத சமையம் ஜெப புஸ்தகம் பார்த்து ஜெபம் நடத்துவான். மேடுபல்லியைப் போல மற்ற இடங்களிலும் நடக்கக்கூடுமானால் அதிகப் பிரயோஜனமாயிருக்கும்.

பாபோழி கூடத்தில் 15 பேர் புதிதாக அக்டோபர் 25உ யன்று ஞானஸ்நானம்பெற்றார்கள். முப்பாரத்தில் அநேகர் ஆயத்தமாயிருக்கிறார்கள். சீக்கிரத்தில் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற ஜனுவரி மகாகனம் அத்தியக்ஷரவர்கள் திடப்படுத்தல் கொடுக்கும்படியாக இப்பக்கங்களுக்கு வருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். அப்பொழுது மேடுபல்லி, முப்பாரம் பக்கங்களில் அநேகர் திடப்படுத்துவதற்கு ஆயதமாயிருக்கிறார்கள்.

ஞானஸ்நானம், திடப்படுத்தல் பெறப்போகிறவர்களுக்காக அதிகமாய் ஜெபிக்கும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜான் ஸ்ரீனிவாசகம்.

## 'தர்ம ஊழியத்தின் பங்கு'

(2 கொரி. 8: 4).

ஒவ்வொரு தேசத்திலும் ஊரிலும் இருவகை வியாபாரம் நடக்கிறதுண்டு. ஒன்று புறதேசத்துக்கு அல்லது ஊருக்கு அனுப்பப்படுகிற வியாபாரம். இதற்கு ஏற்றுமதி என்று பேர். அடுத்தது புறதேசம் அல்லது ஊரிலிருந்து வருவிக்கப்படுகிற வியாபாரம். இதற்கு இறக்குமதி என்று பேர். ஏற்றுமதி வியாபாரமும் இறக்குமதி வியாபாரமும் ஏறக்குறைய சமமாயிருக்கவேண்டும் என்று ஒருவர் சொல்லுகிறார். ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாயிருக்கிற தேசம் தரித்திரப்பட்டுப்போம். இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாயிருக்கிற தேசம் வாழ்வடையும். இங்கிலாந்து தேசத்தின் இறக்குமதியைவிட அதின் ஏற்றுமதி அதிக ஜாஸ்தியாயிருப்பதே அந்த தேசத்தின் பெரிய வாழ்வுக்குக் காரணம். எவ்வளவோ சின்ன தேசம்! அதின் தானிய விளைச்சல் அதின் ஜனங்களுக்குப் போதாது. இப்படியிருக்க, அந்தேசத்தார் மகா சுறுசுறுப்புள்ளவர்களாய்த் தங்களுடைய கைத்தொழில் வேலையைப் பெருமிதமாய் அதிகரிக்கச் செய்ததினாலே மற்ற தேசத்தார் அவர்களுக்கு அனுப்புகிறதைவிட அதிக ஜாஸ்தியாய் அவர்கள் மற்றவர்களுக்கு அனுப்பி வாழ்வடைந்திருக்கிறார்கள்.

இதற்கு இணையான ஆவிக்குரிய சத்தியமும் மகா முக்கியமானது. அதை கர்த்தராகிய இயேசுவே முக்கியப்படுத்திச் சொல்லியிருக்கிறார். அவருடைய அப்போஸ்தலர்கள் அதை ஒரு பழமொழிபோல் சொல்லிக்கொண்டு திரிந்ததாகத் தெரிகிறது. 'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்பதே அந்தப் பழமொழி. தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களே, கடந்த சுமார் நூறு வருஷங்களாக புறதேசங்களிலிருந்து வந்த போதகர்மார் இரட்சிப்பின் சத்திய உபதேசத்தை கொடுத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். பொதுவாகச் சொல்லவேண்டுமானால், நாம் வாங்கிக்கொண்டே வந்திருக்கிறோம். அந்த இரட்சிப்பின் சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டுபோய், மற்ற நாட்டாருக்குக் கொடுக்க இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, நம் நாட்டில் சுவிசேஷ இறக்குமதி வியாபாரம்தான் ஜாஸ்தி. சுவிசேஷ ஏற்றுமதியோ மகா சொற்பமென்றே சொல்லவேண்டும். ஆகையால்தான் ஆவிக்குரிய தரித்திரம் இன்னமும் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. சுவிசேஷ சத்தியத்தைப் புறத்தியாருக்கு அதிக அக்கறையோடும் உற்சாகமாயும் அனுப்புவோமாக. அதற்கென்று முதல்தரமானவர்களைப் பிரித்தெடுத்து அனுப்புவோமாக. சொந்த நாட்டின் ஆவிக்குரிய ஊழியத்தைவிட புறதேச ஊழியத்தை மகா மேன்மையாக எண்ணி முக்கியப்படுத்துவோமாக. அதின் முக்கியத்துக்குத் தக்கதாக அதை ஆதரிப்போமாக. அப்போது நம் தரித்திரம் நீங்கும், நம் நாடு உயிரடையும், நம் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும், கர்த்தர் நம் நாட்டின்மேல் பிரியமாய்ப் பார்,நம்நாடுவாழ்க்கைப்படும். கர்த்தருக்கென்று சுவிசேஷவேலை நாம் ஆரம்பிப்பதற்குள்ளாகவே கர்த்தர் கிருபையாய் நம்மை எவ்வளவு ஆசீர்வதித்திருக்கிறாரென்றறிவோமே. பெலவீனங்களோடு நாம் செய்துவரும் மிஷனெரி ஊழியங்களைத் தமது கிருபையின் ஐசுவரியத்தின்படியே எத்தனை பெருக்கமாய் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறாரென்பதற்குப் போந்த அத்தாட்சிகளுண்டே. இவைகளை நன்குணர்ந்து, நம் ஏற்றுமதி அதிகரிக்கத் தக்கதாக புறதேச மிஷன் ஊழியத்திற்காக அதிகநேரங் கொடுத்து ஜெபிப்போமாக. நம் பொருட்களை உதாரமாகப் படைப்போமாக. நம்மையும் நமது பிள்ளைகளையும் தத்தம் செய்வோமாக.

கர்த்தருக்குக் கொடுக்கும் காணிக்கைக்கும் இந்த விதிப் பிரமாணம் செல்லும். இதின் சம்பந்தமாகவே, 'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்பதை பரிசுத்த பவுல் ஞாபகப்படுத்தியிருக்கிறார். கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கும் விஷயத்தில் தமிழ் சபையின் ஜனங்கள் இன்னும் முன்னேறிச் செல்லவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதுவரைக்கும் அவர்கள் மேலும் மேலும் வாங்குகிறவர்களாகவே இருந்திருக்கிறார்கள். தேர்ச்சி நாளுக்கு நாள் காணப்படுகிற போதிலும், இப்பவும்கூட அவர்கள் வாங்குகிறதைப் பார்க்கிலும் அவர்கள் கொடுப்பது சொற்பமாகவே இருக்கிறது. இந்த நாட்டுக்குச் சீக்கிரத்தில் நல்வாழ்வு வரவேண்டுமானால், தமிழ் சபைகளுக்கென்று புறதேசத்திலிருந்து வருகிற பணமும் தமிழ் சபைகள் கொடுக்கிற காணிக்கைகளும் சீக்கிரத்தில் சமமாகிறது மாத்திரமல்ல, இப்போது பெரிதாயிருக்கிறது சிறிதும், சிறிதாயிருக்கிறது பெரிதுமாகவேண்டும். வாங்குகிறது ஒன்றுமேயில்லாமல் தமிழ் சபைகள் கொடுத்துக்கொண்டு மாத்திரம் இருக்கும் காலமே இதற்குப் பேர் வாழ்வின் காலமாயிருக்கும். இதற்கென்று தேவ ஊழியர்கள் யாவரும் முயற்சி செய்யவேண்டும். கர்த்தருடைய திருவசனத்துக்கு ஏற்றபடி மாத்திரம் முயற்சி செய்யவேண்டும். கர்த்தருடைய வசனத்தின் போதனையினால் ஜனத்தைப் பயிற்றுவிக்கவேண்டும். கர்த்தருடைய வசனத்தில் இதற்கு ஏற்பாடுகள் ஏராளமாயிருக்கிறது. விசேஷமாய் கொரிந்தியர் நிருபங்கள் சபையின் சகல ஏற்பாடுகளுக்கும் மிகவும் உபயோகமானவைகள். காணிக்கை கொடுக்கும் விஷயமாய் அங்கே (2 கொரி 8: 1-5) சொல்லப்பட்டிருக்கும் காரியங்களில் ஒரு பாகத்தை இங்கே எடுத்து விளக்கிக் காட்டுவது பிரயோஜனமாயிருக்கலாம்.

1-வது, மனிதர் காணிக்கை கொடுப்பது தேவன் அளிக்கும் கிருபை; அது மனிதர் செய்யும் ஒரு கிரியையல்ல. 'மக்கேதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 வா). கிருபை என்றால் அர்த்தமென்ன? தேவன் இலவசமாய்க் கொடுக்கிற ஈவு என்றுதானே அர்த்தம். நாம் கொடுக்கிறதொன்றும் கிருபை என்று அழைக்கப்படக் கூடாதே. நாம் கொடுக்கிறது கிருபையல்ல, நாம் பெற்றுக்கொள்ளுகிறதுதான் கிருபை. ஆனால் நாம் கொடுக்கிற காணிக்கையை தேவன் அருளுகிற கிருபை என்று எப்படிச் சொல்லலாம்? கொடுக்கும்படி தேவன் மனிதரை ஏவுகிறார். ஆண்டவர் ஏவுகிறபடியினால்தான் மனிதர் கொடுக்கிறார்கள். காணிக்கை கொடுப்பதற்கு வேண்டிய முக்கிய காரியம் தேவ ஏவுதல்தான். தேவனால் ஏவப்பட்டபின் மனிதன் கொடுப்பது இலகுவுதானே. ஆகையால்தான் காணிக்கை கொடுத்தல் தேவன் அளிக்கிற கிருபை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் தேவன் தமிழ்ச் சபைகளை ஏன் இன்னமும் ஏவவில்லை என்று கேட்கலாமே. தேவன் எல்லாரையும் ஏவுகிறதில்லை. அவர் மனிதருக்கு அருளிய சொல்லிமுடியாத ஈவு ஒன்றிருக்கிறது (9: 15). அந்த ஈவைப் பெற்றுப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளத்தக்கதாக மிகுந்த கிருபையையும் அவர் மனிதருக்கு அருளியிருக்கிறார். அந்தக் கிருபையை அவமாக்கி, அந்த ஈவை அலட்சியம் செய்கிறவர்களுக்கு தேவன் வேறொரு கிருபையையும் அருளுவது கூடாத காரியம். தர்ம காணிக்கைக்காக ஏவுகிற அப்போஸ்தலன் கொரிந்து சபையாரைப் பார்த்துச் சொல்லுகிறதென்ன? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே' என்கிறார் (8: 9). ஆம், கர்த்தராகிய இயேசுவின் கிருபையை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுவுக்குள்ளாய், 'எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும் மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருந்தார்கள்' 'Enriched' (1 கொரி. 1: 5). இயேசு சுவாமியின் புண்ணியத்தால் அவர்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகியிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் ஆண்டவர் காணிக்கை கொடுப்பதற்கு வேண்டிய கிருபையையும் அருளிச்செய்தார். மக்கேதோனியா நாட்டுச் சபைகளாகிய பிலிப்பு, தெசலோனிக்கேயா சபைகளின் காரியமும் இப்படியேதான் இருந்தது. முதலாவது அவர்கள் ஆத்தும இரட்சிப்புக்கு வேண்டிய கிருபையை தேவன் அருளினபோது மிகுந்த வாஞ்சையோடு பெற்றுக்கொண்டார்கள். ஆகையால் தேவன் அவர்களுக்கு அதற்குப்பின்பு கர்த்தருக்கு உற்சாகக் காணிக்கை கொடுக்கும் கிருபையையும் அருளினார். தமிழ் நாட்டின் காணிக்கைகள் பெருவேண்டுமென்று பிரயாசப்படுகிறவர்களே, இதை உணர்ந்துகொள்ளுங்கள். எங்கும் ஓடித்திரிந்து இயேசுவின் இரட்சிப்பைக் கூறி அறிவியுங்கள். அந்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள மனிதனை வருந்திக் கெஞ்சுங்கள். தேவன் அருளிய இந்த சொல்லிமுடியாத கிருபையை அவர்கள் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும்போது, காணிக்கை கொடுப்பது முதலான மற்றெல்லாக் காரியங்களுக்கும் வேண்டிய போதுமான கிருபையை ஆண்டவர் ஆச்சரியமானவிதமாய் அருளிச்செய்வார்.

2-வது, காணிக்கை கொடுப்பது தரித்திரருக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். 'அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினால் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்' (2 வா). இந்த நாட்டில் ஏழைகள் தங்களுடைய தரித்திரத்தைப் போக்காகச் சொல்லி காணிக்கை கொடுக்காமல் போய்விடுகிறார்கள். கர்த்தர் அவர்களை ஏவும்படி தமது கிருபையை அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதுதான் அதின் அர்த்தம். அவர்கள் இரட்சிப்பின் கிருபையைப் பெற்றவர்களானால், காணிக்கை கொடுப்பதற்கு வேண்டிய கிருபையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். அந்தக் கிருபையைப் பெறுவார்களானால் தங்கள் தரித்திரத்தை அவர்கள் போக்காகச் சொல்லமாட்டார்கள். மக்கேதோனியா நாட்டாரைப்போல் கொடிய தரித்திர காலத்தில் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுப்பார்கள். மனவருத்தத்தோடும் கவலையோடுமல்ல, பரிபூரண சந்தோஷத்தோடு கொடுப்பார்கள். மனமாறி மீட்பைப்பெற்ற ஏழைகள் கொடுக்கும் காணிக்கைகளால்தான் கிறிஸ்து சபை ஐசுவரியமடைய வேண்டும் என்பது தேவசித்தம். ஏனெனில் ஏழைகள் ஏராளமான பேர் உண்டு. ஐசுவரியவான்களோ மகா சொற்பம். ஏழைகள் எளிதாய் தேவ கிருபையைத் தேடுவார்கள். ஐசுவரியவான்கள் கிருபையை பெற்றுக்கொள்வதோ அரிது ஆகையால் தேவஊழியரே, நாம் ஐசுவரியவான்களை நோக்காமல், ஆண்டவரை நோக்குவோமாக. தரித்திரருக்குத்தான் இரட்சிப்பின் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. அவர்கள்தான் திருச்சபையில் திரளாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். ஆதலால் தரித்திரர்தான் திருச்சபையை ஆதரிக்கவேண்டியவர்கள். இன்றைக்கு மாத்திரமல்ல,என்றும் அப்படியேதான் இருந்து வந்திருக்கிறது. ஆதலால் நமது சபையார் தரித்திரராயிருப்பது தடையாயிருக்கிறதென்று நாம் எண்ணாமல், அவர்கள் தேவகிருபைக்கு அபாத்திரராயிருப்பதே மிகுதியான காணிக்கை சேகரிக்கப்படுவதற்குத் தடையாயிருக்கிறதென்று எண்ணுவோமாக. அவர்கள் பெரிதான இரட்சிப்பின் கிருபையை ஏற்றுக்கொண்டு, காணிக்கை கொடுக்க ஏவும் சிறிதான கிருபையைப் பெற பாத்திரராகும்படி தேவனை நோக்கிப் பிரார்த்திப்போமாக!

3-வது, திராணிக்கு மிஞ்சி தரித்திரர் கர்த்தருக்குக் காணிக்கைக் கொடுக்கக்கூடும். 'அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்' (3 வா). இது நமக்கு விளங்காதிருக்கலாம். ஒரு தரித்திரன் தன் திராணிக்கு

மிஞ்சி எப்படிக் கொடுக்கக்கூடும் என்று நாம் கேட்கலாம். தரித்திரர் கொடுத்துப் பெருக்கமுண்டாக வேண்டுமானால் அவர்கள் தங்கள் திராணிக்கு மிஞ்சித்தானே கொடுக்கவேண்டும். மேலும், திராணிக்குத் தக்கதாகக் கொடுப்பதற்கு ஒருவருக்காகிலும் தேவகிருபையின் ஒத்தாசை வேண்டியதே இல்லை. திராணிக்கு மிஞ்சிக் கொடுக்கத்தான் மனிதருக்கு விசுவாசம் வேண்டும். திராணிக்கு மிஞ்சி கொடுத்தபோதிலும், நான் நஷ்டப்படமாட்டேன், கஷ்டமடையமாட்டேன் என்று உறுதியாய் நம்புவதற்கு தேவகிருபை அவசியம் வேண்டும். சறெப்தா ஊர் தரித்திர விதவையைப் பார்த்து, எலியா அவளுடைய திராணிக்கு மிஞ்சின காரியத்தைக் கேட்டான். அவளுக்கு இருந்த ஒரு அடையையும் தனக்குக் கொடுத்துவிட கேட்டான். அந்த ஒரு அடைக்குரிய மாவு பெருகும் என்று அவள் விசுவாசியாதிருந்தால், அதை எலியாவுக்குக் கொடுத்திருப்பாளோ? அவளை விசுவாசிக்கச் செய்ததென்ன? தேவகிருபைதானல்லவா? மேலும் தனக்குண்டாயிருந்த இரண்டு காசையும் காணிக்கைப் பெட்டியில் போட்டுவிட்ட ஏழை விதவை தன் திராணிக்கு மிஞ்சித்தானே கொடுத்தாள். ஆகையால்தானே புகழப்பட்டாள். சிநேகிதரே, விசுவாசத்துக்கு இடமில்லாத காணிக்கை காணிக்கையாகவுமாட்டாது, கர்த்தரைப் பிரியப்படுத்தவுமாட்டாது. வயிற்றைக் கடிக்கக்கூடிய காணிக்கைதான் விசுவாசத்தோடு கொடுத்த காணிக்கை. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். விசுவாசத்தால் இரட்சிப்பைப் பெற்று பரிசுத்தமாகும்படி பார்க்கிற கிறிஸ்தவர்கள் விசுவாசத்துக்கு இடமில்லாமல் காணிக்கை கொடுப்பது தருமா? மேலும், மிஷனெரி சங்கத்தை ஆதரிக்கும்படி அழைக்கப்படுகிற இக்காலத்தில் கணக்குப் பார்த்து கொடுத்தால் காரியம் ஒன்றும் நடக்கமாட்டாது. வயிறு கடிக்க விசுவாசத்தால் வாரிக்கொடுத்தால் மட்டும் காரியம் நடக்கும். மீட்பைப் பெற்ற ஏழைகளே, இது உங்கள் காரியம். வாரி இறைத்தும் விர்த்தியடைவாருண்டு. விசுவாசத்தால் வாரி இறையுங்கள், ஆண்டவரின் வாக்குப்படியே விர்த்தியடைவீர்கள்.

## கிறிஸ்தவர்களுக்குள் மிஷனெரி ஆவி உண்டாக ஜெபம்.

எவர்களுக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ அவர்களிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்று எங்களுக்கு எச்சரித்தருளிய தேவனே, சிறப்பான சுதந்தரத்தில் பங்குபெற்றிருக்கிற உமது அடியாராகிய நாங்கள், தேவரீருடைய கரத்திலிருந்து சம்பூரணமாய்ப் பெற்றனுபவிக்கிற நன்மைகளை எங்கள் ஜெபத்தினாலும், தானதர்மங்களினாலும், ஊழியத்தினாலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும், மற்றவர்களுடைய பிரயாசங்களில் பிரவேசித்திருக்கிற நாங்கள், ஏற்ற காலத்தில் எங்கள் பிரயாசங்களில் மற்றவர்களும் பிரவேசிக்கத்தக்கதாக பகற்காலமிருக்கும்போதே ஜாக்கிரதையாய் வேலை செய்யவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்—ஆமேன்.

## ஜெப ஸ்தோத்திர விஷயங்கள்.

என்னைக்கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். (சங். 2: 8)

1. தோர்ணக்கல் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் நானதுமீ 16உ நந்தியாலில் நடத்தும் குருப்பட்டாபிஷேகத்திலும், 22—26உ ஐதராபாத்திலும் செக்கந்திராபாத்திலும் கிறிஸ்தவர்களுக்கு நடத்தும்விசேஷித்த போதனைக் கூட்டங்களிலும், 27உமுதல் டிசம்பர்மீ 16உவரை சி. எம். எஸ். பெஸ்வாடா சேகரத்தில் நடப்பிக்கும் திடப்படுத்தல் முதலிய திருப்பணிவிடைகளிலும் தேவாசீர்வாதம் சம்பூரணமாய் அளிக்கப்பட ஜெபம்.

2. தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்தில் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கும் தாய்மார் சங்கம், பாலியர் மிஷன், விண்ணப்ப ஐக்யம் முதலியவைகளுக்காகத் துதி, ஜெபம்.

3. கானாவில் ஞானஸ்நானம் பெற்றிருப்பவர்களுக்காகவும், மற்ற இடங்களில் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காகவும், புது ஊழியருக்காகவும் ஜெபம்.

4. போர்டிங் பிள்ளைகளுக்காகவும், பயிற்சிசாலை மாணாக்கருக்காகவும் ஜெபம்.

5. புறமதஸ்தருக்குள் செய்யப்படும் சுவிசேஷ வேலையை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபம்.

6. தோர்ணக்கல், மானுக்கோட்டை இவ்விடங்களில் மிஷன் பள்ளிக்கூடம் போடவேண்டுமென்று இந்துக்கள், மகம்மதியர் கேட்பதற்காகத் துதி. தகுந்த உபாத்திமார் கிடைக்கும்படியாக ஜெபம்.

7. தோர்ணக்கல் மிஷனில் புதிதாக ஸ்தாபித்திருக்கும் சுவிசேஷ பிரபல்ய சங்கத்திற்காக ஸ்தோத்திரம். ஆவியானவர் புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் இவ்விஷயத்தில் ஏவி விடும்படி ஜெபம்.

8. தோர்ணக்கல்லுக்கு மிஷனெரியாகப் போக ஆயத்தப்படும் Mr. S. V. சுவாமிதாஸ் அவர்களுக்காக ஜெபம்.

9. உதவிக் குருப்பட்டாபிஷேகத்திற்காக ஆயத்தப்படும் கனம். ஜான் சீனிவாசகம் மிஷனெரியவர்களுக்கு இத்திருப்பணிவிடை செய்வதற்கு அவசியமான ஆவியின் வரப்பிரசாதங்கள் அநுக்கிரகிக்கப்பட ஜெபம்.

10. தோர்ணக்கல் ஆலயம் கட்டி முடிப்பதற்கான உற்சாகம் திருநெல்வேலி சபைகளில் காணப்படவும், ஜனங்கள் உள்ளக்கனிவுடன் காணிக்கை படைக்கவும் ஜெபம்

11. ஹோசம் மிஷனருக்காகவும், நவம்பர்மீ 11உமுதல் டிசம்பர்மீ 20உ வரை அவர்கள் பர்மாவில்செய்யும் ஊழியங்களுக்காகவும் ஜெபம்

"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா. 16: 24).

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில்போகும்.

மானேஜர்: வி. எஸ். காலிசன்,
பாளையங்கோட்டை.

Editor:—The Secretary, I. M. S. T.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 2 JAN 1914

Registered No. M. 481.

OCTOBER, 1913

The Missionary Intelligencer

சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

அக்ற்றோபர்மீ 1913 [விலை பை 3

Vol. X. No. 10]

CONTENTS

... ... ... 77
Editorial Notes ... ... ... ... 78
The Acts of the Missionaries ... ... ... 79
From the Telugu Field ... ... ... 81
Arelius Augustine ... ...

பொருளடக்கம்

... ... ... 77
பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 78
மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... 79
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... 81
அரிலியஸ் அகஸ்தீன் ... ...

## பத்திராதிபர் குறிப்புகள்.

மிஷனெரி சங்கம்

நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் (நீர் என்னை உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷரை) அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் என்று மன்றாடினார் அருள்நாதர். சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோவென பரி. பவுல் பிரலாபித்தார். கிறிஸ்து சபை உலகத்தின்கண் நிலைக்கப்பட்டிருக்கும் பிரதம நோக்கம் சிலுவை நாதரின் அன்புக்கு சகலத்திராளையும் வழி நடத்துவதென்பது தேவதாசரான அத்தியக்ஷர்கள், வேதசாஸ்திரிகள் முதலான பக்தர் உறுதிமொழி. இச்சத்தியம் ஆரம்பமுதலே நமது பிள்ளைகளான தெலுங்குநாட்டுக் கிறிஸ்தவர்களுக்குப் புகட்டப்பட்டு வருவது நன்றியறிதலான விஷயம். தவிரவும், நம் எஜமானாகிய ரக்ஷாபெருமானின் ஜீவிய நோக்கம் (லூக் 19:10) அதிக சிரத்தையாய் நம்மிஷனில் நடைபெறத்தக்கதாக 'சுவிசேஷ பிரபல்யசங்கம்' ஒன்று ஸ்தாபகமாகியிருப்பதையறிந்து கர்த்தரைத்துதிக்கிறோம். புருஷரும் ஸ்திரீகளும் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தில் பங்கு பெறும்படியாக, புருஷருக்கு ஒரு சங்கமும் ஸ்திரீ ஜனங்களுக்கு ஒரு சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மானுக்கோட்டைத் தாலுகாவிலும் அதற்கு வெளியேயுள்ள பாகங்களிலும் சுவிசேஷ நற்செய்தியைக்கூறி அறிவித்து, ஒளியின் ராஜ்யத்துக்குள் ஜனங்களைக்கொண்டு வருவதே இச்சங்கங்களின் நோக்கம். அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை செய்யக்கூடும்? கர்த்தரிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்நோக்குவோமாக. நமது ஜெபங்களினாலும் மன்றாட்டுகளினாலும் இம்முயற்சிகளைத் தாங்குவோமாக.

பளியர் மிஷன்

வண்டமேட்டு மலையிலுள்ள பளியர் ஈத்தையினால் ஓர் நேர்த்தியான கோவில் கட்டி, அதில் கர்த்தரை ஆராதித்து வருகிறார்கள். பெரியோர்களில் சிலருக்கு பரி. ஞானஸ்நானமும் பரி. நற்கருணையும் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்வது அவசியம். திருவாங்கூர் சமஸ்தான பளியருக்குள் குடியிருந்து, அவர்களோடு சென்று, சுவிசேஷ ஊழியம் Mr. A. தாவீது மிஷனர் செய்து வருகிறார்கள். அதேபிரகாரம் மன்னாக்கள் குடியிருப்பில் வசித்து, மன்னாக்களுக்குள் ஊழியஞ்செய்ய ஏற்ற ஊழியர் மிகவும் அவசியம். மலைவாசிகளுக்குள் ஊழியம் விர்த்தியாவதற்குப் பொருளும் ஊழியரும் தேவை. Mr. மோசஸ்முத்துமாலை பிரசங்கியாருடைய சுகம் கெட்டிருப்பதாலும், மலைவாசிகளுக்குள் குடும்பசகிதம் மலைமேல் வசித்து, ஊழியஞ்செய்வது அவர்களுக்குச் சாத்தியப்படாததாலும், அவர்கள் முன்போல், சிரிவிலிபுத்தூரில் வசித்து, பிரிட்டிஷ் இலாகாவிலுள்ள பளியருக்குள் சுவிசேஷ வேலை நடத்தும்படி கமிற்றிமார் தீர்மானித்திருக்கிறார்கள். பளியரைக் குடியேற்றுவதற்குப் பற்பல முயற்சிகள் பிரிட்டிஷ் இலாகாவிலும் திருவாங்கூர் சமஸ்தானத்திலும் நடைபெறுவதாக அறிகிறோம். இவைகள் சித்திபெற ஜெபித்துவருவோமாக.

சகல அதிகாரமும் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; கட்டளையிட்டயாவையும் உபதேசம் பண்ணுங்கள்;

சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேன். (மத். 28: 18-20).

## மிஷனெரிமார் நடபடிகள்.

அப். 15: 36—16: 5.

I. பரி. பவுலும் பரி. பர்னபாவும் பிரிதல். அப். 15: 36-41

எருசலேமில் சங்கம் முடிந்தது. புறஜாதிகளைப்பற்றின தீர்மானம் சட்டமாயிற்று. இத்தீர்மானங்களைக் கலாத்தியா நாட்டிலுள்ள தெர்பை, லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா சபைகளுக்கும் அறிவித்து, அவர்களைத் திடப்படுத்தும் நோக்கமாய் பரி. பவுல் மறுபடியும் பிரயாணம்செய்ய எண்ணங்கொண்டார். இவ்வாலோசனையைப் பரி. பர்னபாவிடம் சொல்லவே, அவர் எண்ணம் வேறுவிதமாயிருந்தது.

ஏனென்றால், 'பர்னபா, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானையும் கூட அழைத்துக்கொண்டுபோகவேண்டும் என்றிருந்தான். பவுலோ பம்பிலியா நாட்டிலே அவர்களை விட்டுப் பிரிந்து, அவர்களோடே ஊழியத்துக்குப் போகாதவனை அழைத்துக்கொண்டுபோவது உசிதமல்லவென்று நினைத்தான். இதைப்பற்றி அவர்களுக்குள் கடுங்கோபம் எழும்பினபடியால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து போனார்கள்.' (வா. 37-39).

பரி. பர்னபாவும் மாற்கும் ஒரு பவிஞ்சாகவும், பரி. பவுலும் சீலாவும் வேறொரு பவிஞ்சாகவும் வெவ்வேறு பாகங்களுக்குப் புறப்பட்டார்கள். மாற்கு விஷயம் ஒன்றுதான் இதற்குக் காரணமோ, அல்லது வேறு காரணங்களிருந்தனவோ தெரியாது. கலா. 2: 11-14ல் சொல்லிய சம்பவம் இக்காலத்தில் நடந்திருக்குமானால், அதுவும் ஒரு காரணமாயிருந்திருக்குமோ?

எப்படியிருந்தாலும் சரி. கர்த்தருடைய நடத்துதல் இதில் இருந்ததென்று காணலாம். புறஜாதிகள் விஷயமாய் பரி. பர்னபாவுக்கும் மாற்குவுக்கும் இச்சமயத்தில் கொஞ்சம் மனஸ்தாபம் இருந்திருக்குமானால், மக்கெதோனியா, அகாயா, ஆசியா மாகாணங்களில் நடக்கவேண்டிய வேலைக்கு அவர்களால் இடையூறு நேரிட்டிருக்கக்கூடும். மேலும், பர்னபாவையும் மாற்குவையும் பார்க்கிலும், ரோம சலாக்கியத்தைப்பெற்றிருந்த சீலா, ரோம ராஜ்யத்தில் அலைந்து திரிந்து வேலை செய்ய ஏற்றவனாயிருந்தது நிசந்தான் என்பது நிச்சயம். பரி. பவுலையும் சீலாவையும் அந்தியோகியா சபை, தேவனுடைய கிருபைக்கு ஒப்புவித்து அனுப்பினார்கள் என்பதைக் கவனிக்கும்போது, இவர்கள் இருவரும் பிரிய நேரிட்டதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்லலாம்.

II. கலாத்தியா சபைகளைத் திடப்படுத்தல். அப். 16: 1—5.

கலாத்தியா சபைகளைத் தைரியப்படுத்தி, பலப்படுத்தின சரித்திரத்தில் பரி. லூக்கா விசேஷமாய்ச் சொல்லும் சம்பவம் தீமோத்தேயுவின் அழைப்பும் விருத்தசேதனமுமே. தீமோத்தேயு கிறிஸ்தவ யூதஸ்திரீக்கும், கிரேக்கனுக்கும் பிறந்தவன். இவன் பாட்டியாகிய லோவிசாளும் தாயாகிய ஐனிக்கேயாளும் சிறுவயதுமுதல் பரிசுத்த வேத எழுத்துக்களை இவனுக்குப் படிப்பித்திருந்தார்கள். பால்ய பிராய முதல் இவ்வித போதனையடைந்த தீமோத்தேயு லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள கிறிஸ்தவர்களாலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். இவனைத் தன்னோடு ஊழியத்தில் சேர்த்துக்கொள்ள அப்போஸ்தலன் மனதாயிருந்தார். இதற்கிசைவாகத் தீர்க்கதரிசன வாக்கும் உண்டானது (1 தீமோ. 1: 18). உடனே அப்போஸ்தலனும், அப்போஸ்தலனோடுகூட இருந்த மூப்பரும் சேர்ந்து, தீமோத்தேயுவின்மேல் கைகளைவைத்து, தேவ ஊழியத்திற்கு அவனைப் பிரதிஷ்டை பண்ணினார்கள். அச்சமயத்தில் பரிசுத்த ஆவியின் விசேஷித்த வரமும் அவனுக்களிக்கப்பட்டது (2 தீமோ. 1: 6, 1 தீமோ. 4: 14). இவ்வாறு தீமோத்தேயு பரி. பவுலின் உடன் ஊழியரில் ஒருவனானான்.

தீமோத்தேயுவோ விருத்தசேதனம் பெறாதவன். தாயும் தகப்பனும் ஒன்றுபோல கிரேக்கராயிருந்திருப்பார்களாகில், அவன் விருத்தசேதனமடைவதற்கு பரி. பவுல் ஒருபோதும் சம்மதித்திருக்கமாட்டார். மேலும் இன்னும் கொஞ்சக் காலம் சென்றிருக்குமானால், கிறிஸ்தவ யூதருக்கு விருத்தசேதனம் பிரயோஜனமில்லை என்று இவரே சாதித்துமிருப்பார் (ரோமர் 2; 28. ஆனால் இப்போதோ அவ்வளவு தூரம் போக வழியில்லை. நாலு விஷயங்களில் தவிர, யூதர் யூதர் முறையின்படியும், கிரேக்கர் கிரேக்கர் முறையின்படியும் நடக்கட்டும் என்பதுபோல எருசலேமில் தீர்மானமாகிவிட்டதாலும், தீமோத்தேயு பிறப்பின்படி பாதி யூதனாயிருந்தபடியாலும், அவனுக்கு இச்சமயத்தில் விருத்தசேதனம் கொடுப்பது நியாயம் என்று அப்போஸ்தலன் எண்ணினார். பூரண அறிவு இன்னம் வராத ஜனங்களிடத்தில் நியாயமான விஷயங்களில் எவ்வளவு தூரம் அப்போஸ்தலன் இணங்கிப்போனார் என்பதற்கு இது ஓர் நல்ல அத்தாட்சி. ஜனங்களுடைய அறிவில்லாமைநிமித்தம் தற்காலத்து மிஷனெரிமாரும் சில விஷயங்களில் ஜனங்களுக்கு இணங்கிப்போகக்கூடாதா? என்பது இதிலிருந்தெழும்பும் ஓர் கேள்வி. தெலுங்குநாட்டில் தற்சமயம் இது மகா முக்கியமாயிருக்கிறது.

இத்தேசத்திலிருக்கும் ஜாதிபேதத்தினிமித்தம் சில விஷயங்களில் மிஷனெரிமார் ஜனங்களுக்கு இசைந்து நடந்தால், கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு அநுகூலமாயிராதா என்று யோசிப்பது இயற்கை. உயர்ந்த ஜாதிகளுக்குப் பிரசங்கிக்க உயர்ந்த ஜாதிகளிலிருந்து வந்த ஊழியரை நியமிப்பதும், உயர்ந்த ஜாதிப் பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான பள்ளிக்கூடம் போடுவதும், மேல் கீழ் ஜாதிகளிலிருந்து வரும் கிறிஸ்தவர்களுக்கு வேறு வேறான ஆலயங்கள் கட்டுவதும், வெவ்வேறான கிணறுகள் வெட்டிக்கொடுப்பதும் அப்போஸ்தலன் மாதிரிக்கிசைவாயிருக்கிறதல்லவா என்று கேட்கலாம். சில மிஷன்கள் இவ்வித காரியங்களுக்கு இடங்கொடுத்திருக்கிறார்கள். இவைகளில் ஒரேவித அபிப்பிராயம் இல்லை. ரோமானித்தார் ஞாதனர் முதலானோர் செய்யும் பல காரியங்களை மற்ற மிஷன்கள் ஒப்புக்கொள்ளார்கள். என்றாலும் இவர்களும் வேறு சில விஷயங்களில் அவர்களோடு இணங்கிக்கொள்ளுகிறார்கள்!



இவ்வித காரியங்களில் திட்டமான சட்டத்தை ஏற்படுத்துவது கூடாத காரியம். ஆகிலும், பூர்வத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட விருத்தசேதனமும், இந்துமார்க்கத்தில் பலங்கொண்டிருக்கும் ஜாதிபேதமும் ஒன்றல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். விருத்தசேதனம் தேவன் தமது ஜனங்களோடு பூர்வத்தில் செய்த உடன்படிக்கையின் அடையாளம். ஜாதியோ இந்துமதாச்சாரம். விருத்தசேதனம் யூதருக்கு ஆசீர்வாதமாயிருந்தது. ஜாதிபேதம் இந்தியாவுக்கு சாபமாயிருந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள அநேக சீர்திருத்தக்காரர் ஜாதிபேதம் ஒழியவேண்டும் என்று வாஞ்சித்து, அதற்காகக் கிரியைசெய்யும் இக்காலத்தில், கிறிஸ்து சபையினால் இந்துதேசத்துக்கு வரவேண்டிய ஓர் ஆசீர்வாதம் ஜாதிபேத நிக்கிரகமே. இவ்விஷயத்தில் கிறிஸ்து சபையாவது சுதேச, ஐரோப்பிய மிஷனெரிமாராவது பின்வாங்குவார்களாகில் ஐயோ!

ஆனாலும், இதினிமித்தம் பலாத்காரமான கட்டாயம் பண்ணுவதும், வேண்டுமென்று ஜனங்களைக் கோபப்படுத்தும் விதமாய் நடந்துகொள்ளுவதும் அவசரமல்ல. அப்படியே சத்தியத்தின் விஷயமாய் எள்ளளவாகிலும் பின்வாங்குவது கிறிஸ்துவின் சித்தையல்ல. சத்தியத்தைப்பற்றி சாட்சிகொடுப்பதற்கு இடையூறாயிராத விஷயங்களில் இணங்குவது நியாயம். சத்தியத்தை ஸ்தாபிக்காமல், ஜனங்களை ஆதாயம்பண்ணுவதிலும் லாபம் இல்லை. சத்தியத்தை மாத்திரம் ஸ்தாபித்து, ஜனங்களை உதறித்தள்ளுவதிலும் பிரயோஜனம் இல்லை.

சத்தியத்தை நிலைநிறுத்தும்படி உறுதியாயும் அன்போடும் வேலையை நடத்தும்போது, எக்காலத்திலும் கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு லாபமேயன்றி நஷ்டமல்ல. மனுஷருக்கு இணங்கி, சத்தியத்தைச் சற்று அரைகுறையாக்கும்போது, எக்காலத்திலும் எவ்விடத்திலும் பெரிய நஷ்டம் உண்டாயிருக்கிறதென்பது நிச்சயம். ஏனென்றால் சத்தியமே பெரியது. சத்தியம் ஜெயிக்கும். தற்கால அநுகூலத்தைக் கவனிக்காமல், எக்காலத்துக்கும் லாபத்தையே கருதவேண்டியது நியாயம்.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

தோர்ணக்கல்மிஷன் சுதேச சபை ஆலோசனை சங்கம். திருநெல்வேலி ஸீமைத் தாய்ச் சங்கம் தன் பிள்ளைகளாகிய தெலுங்கு சபை முதிர் வயதாகியும் வெகுநாளாய் யோசித்து, சுதேச சபை ஆலோசனைச் சங்கம் ஏற்படுத்தினார்கள். தோர்ணக்கல் மிஷனிலோ இரண்டு மூன்று வருஷக்காலமாய் இப்படிப்பட்ட ஒரு ஆலோசனை சங்கம் ஏற்படுத்தத் தகுமா தகாதா வென்று மிஷனெரிமார் மெல்ல மெல்ல நினைத்து சந்தேகித்து நிற்கையில், திருநெல்வேலித் தாய்ச் சங்கத்தின் தீர்மானத்தால் சபலமாகி, கடந்த ஜூன்மீ 13உ தோர்ணக்கல் மிஷன் சுதேச சபை ஆலோசனை சங்க முதல்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆரம்ப சங்கத்தில் மகா கனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருக்குஞ் சலாக்கியம் தெலுங்கு நாட்டுக்குக் கிடைத்தது சிரேஷ்டமும் அதிர்ஷ்டமுமே. கூடின மொத்த மெம்பர்கள் பதினொன்று. இதில் சபை மெம்பர்கள் இருவரே. மேடுதப்பல்லியில் வெகு துன்பங்களைக் கடந்து கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தப்பட்ட யோபு என்பவர் ஒருவர். நம் நாட்டிற்கு வந்து வருஷாந்த கூட்டத்தில் சாட்சி பகர்ந்தவரும் தாலுகாவின் முக்கிய பட்டணமான மானுக்கோட்டையின் முதற் பலனானவருமான தோமாஸ் மற்றவர். ஆசாமிகளின் பிரதிநிதி ஒரே ஒருவர். இந்த முதல் காட்சியைக் கண்ணாரக் கண்டு களித்தவர்கள் கனம். A. சவரிமுத்து ஐயரவர்கள். முதல்கூட்டம் எவ்வாறு நடைபெற்றிருக்குமென இப்பத்திரிகை படிப்போர் ஆசிக்கலாம். ஆசையிராதா? ஆசிக்கவேண்டியதே. பிள்ளை நடை முதலில் சப்பட்டம் குழப்பட்டமாயினும் தாய்க்குப் பெருமையே. ஆயினும் எவரும் எதிர்பாராதவண்ணம் காரியம் சந்தோஷப்படத்தக்கதாயிருந்தது. கூட்டம் மிக நேர்த்தியாயிருந்தது. வெகு கிரமமாய் நடைபெற்றது. தைரியமாயும் தாராளமாயும் மெம்பர்கள் பேசினார்கள். சில விஷயங்களில் இரு மெம்பர்களும் தீர்மானங்களை வெகு திட்டமாய், சுருக்கமாய் ஆலோசனையாகச் சொல்லிவிடுவார்கள். எல்லாருக்கும் வெகு உற்சாகமே, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 'இது உங்கள் சங்கம், தெலுங்கரை முன்னுக்குக் கொண்டுவருவது உங்கள் பொறுப்பு; பணமா, கட்டடமா, ஆள் நியமிப்பதில் வரும் லாப நஷ்டமா எல்லாம் உங்களைப்பற்றினதென்ற உத்தரவாதத்தைக் கேட்கையில், நீர் ஆலோசித்துக் காரியத்தைத் தீர்மானிக்கப் பார்க்கிறார்கள். சில மராமத்துகளை யோசிக்கையில்: இது அதிகம், இது போதும் என சீக்கிரம் அவர்கள் தேச வழக்கத்தை அநுபவப்படி சொல்லிவிடுவார்கள்.

இரண்டாம் கூட்டம் கடந்த செப்டெம்பர் 12-ல் நடைபெற்றது. ஆள் நியமிப்பதில் எவ்வளவு தூரம் யோசிக்கிறார்கள் என்பதை பின்வரும் ஓர் திருஷ்டாந்தத்தால் மாத்திரம் காட்டி முடிக்கிறேன். கடந்த வருஷத்தில் மிஷனிலிருந்து தள்ளப்பட்ட ஒரு உபாத்தியார் திரும்ப தனக்கு வேலை வேண்டுமென்ற மனு வாசித்தபின், மகா கனம் கவுன்சல் முதலாளியவர்கள்: இதற்கென்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டபோது, ஒருவர்' 'அவர் காரியம் எல்லாருக்கும் தெரிந்ததே' 'என்று உட்கார்ந்தார். பக்கத்திலிருந்த வயசாளியான மற்றவரைக் கேட்க, தலையைக் கவிழ்ந்துகொண்டு, 'என்னிடம் கேட்கவேண்டாம், ஐயா' என்றார். காரணம் என்ன, தெரியுமா? குற்றத்திலகப்பட்டவன் ஷெ மெம்பருடைய மனைவியின் சகோதரி மகன். இவ்வாறு இன ஜனம் என்ற தயதாக்ஷிண்யம் கிஞ்சித்துமில்லை. சுயாதீனம் எவ்வளவு உத்தரவாதத்தை உண்டாக்குகிறது! காரியம் எவ்வாறு நடக்கிறதென்பதை பரிசோதனை செய்வது மேல் விசாரணைக் கர்த்தாக்கள் கடமை.

மிஷன் பகுதி. மானுக்கோட்டைத்தாலூகா நாலு பாஸ்டரேற்றுகளாக பாகிக்கப்பட்டிருக்கிறது:—தோர்ணக்கல், மேடுதப்பல்லி, மானுக்கோட்டை, மூப்பாரம் என்பவைகளே. மகா கனம்: அத்தியக்ஷரவர்கள் ஏற்பாட்டுப்படி நான் மானுக்கோட்டையிலிருக்கிறேன். இப்பிரிவுகளில் மூப்பாரம் நூதன சபை. மானுக்கோட்டைப் பகுதியில் ஸ்ரீராமகிரி பொஜன்னபேட்

டை, நாராயணபுரம் என்ற கிராமக்கிறிஸ்தவர்கள் இளங்கிறிஸ்தவர்கள். இச்சபைகளில் நாராயணபுரம் தவிர மற்ற இரண்டு இடங்களிலும் 97 ஜனங்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். இன்னும் ஒருவரும் ஞானஸ்நானம் பெறவில்லை. இந்தப் பகுதி கிறிஸ்தவ கிராமங்களின் பழக்க வழக்கங்களை அறியாத ஒரு கோணம். இவர்களை ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்தி வருகிறேன். நான் இவர்கள் மத்தியில் ஆறு நாள் பின்னிட்டபோது பின்வரும் காரியங்களைக் கவனித்தேன்.

(1) அடிமைத்தனம்: ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் பெருத்த சமுசாரிகளுக்குள் கொத்தடிமைகளாயிருக்கிறார்கள். ஒரு முழுக் குடும்பமும் ஒருவன் ஆதீனத்திற்குள்ளாகிப்போகிறார்கள். உதயம் எழுந்துபோகிறவர்களில் சிலர் இரவு 7-மணிக்கு வீடுகளுக்கு வருகிறார்கள். மத்தியான ஆகாரம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. சில பெண்கள் காலை சுமார் 9-மணிக்குப்போய் இரவு 7-மணிக்கு வீடு வந்து சேர்ந்து சமயல் செய்வார்கள். அப்பால் சுமார் 9-மணிக்கு ஜெபம் நடத்தப்படுகிறது. சில ஆண்கள் இதன்பின் இரவும் காவல், மாடு மேய்த்தல் முதலியவற்றிற்குப் போகவேண்டும். என்ன பரிதாபம்! இவர்களின் சிருஷ்டிகர்த்தா ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்யவும், கட்டுண்ட இவர்களை விடுதலையாக்கவும், மடங்கடிக்கப்பட்டவர்களை தூக்கிவிடவும், அவரைப் பிரார்த்திப்போமாக. ஓய்வுநாள் மீறும் பாவம் கொத்தடிமைத்தனத்தால் விளையும் ஓர் பெரிய தீமையே.

(2) குடி. இக்கிராமங்களிலுள்ள பெரியவர்களைக் குடியினின்று திருப்புவது வெகு பிரயாசையாயிருக்கிறது நான் அங்கு பின்னிட்ட நாட்களில் இருவர் பெருமிதமாய்க் குடித்து ஜெபத்திற்கு வந்திருந்தார்கள். துர்வாசனையால் ஜெபம் நடத்தக்கூடாதிருந்தது. அவர்களை மெல்ல ஒரு புறத்தில் சற்றுத் தூரமாய் ஒதுக்கிவைத்து, ஜெபம் முடிந்த பின், அன்பாய்த் தனித்துப் புத்திசொல்லி அனுப்பினேன். நல்லது ஐயா, இனி கள்க்குடியை விட்டுவிடுகிறோம் என்றார்கள். மறுநாள் இரவு அதே சேரில் ஒருவன் வந்தான். அன்றும் புத்திசொல்ல: குடியை விடமுடியாது, ஜெபத்திற்கு வரும்போது குடிக்காமல் வருகிறேன் என்றான். மறுநாள்வேறொரு கிறிஸ்தவ கிராமத்தில் தங்கி, திரும்ப இங்குவந்த நாட்களில் அவன் ஜெபத்திற்கு வரவுமில்லை, மறுபகலில் அவனைக் காணவுமில்லை. இவர்களின் முக்கியபானம் கள்ளே. என்ன பரிதாபம்! கண்மணிகளொத்தவையோபோர் இவ்விம சேரிலிருக்கிறார்களே. கள்க்குடி ஏழை ஜனங்களை முற்றும் பட்சிக்கிறது. குடிகாரர் சுபாபர்களான இவர்களை ஆவியானவரின் கிரியையினாலன்றி, குடியைக் கட்டோடே நிறுத்த முடியாது. இவர்களுக்காக ஊக்கமாய் ஜெபிப்போமாக. வேறு வழி இல்லை. இந்தக் கிராமங்களின் கிறிஸ்தவர்களான சிறுவர்களைப் பற்றி இது விஷயத்தில் நம்பிக்கையுண்டு.

(3) கல்வி: பிள்ளைகளில் சில உபாத்திமார்களின் பிரயாசத்தின்பேரில் படிக்கிறார்கள். தோர்ணக்கல் போர்டிங் பாடசாலைக்கு அனுப்பக்கூடிய பிள்ளைகளுமிருக்கிறார்கள். இந்நாட்டில் சில வருஷங்களுக்கு முன் கொழும்பு முதலிய இடங்களிலுள்ள மலைத் தோட்டக்காரர்களுக்குக் கூலியாள் சேர்த்தனுப்பும் வழக்கம் ஆரம்பித்தது சில நண்பருக்குத் தெரியலாம். இந்த அதிரடி இப்பாகத்தில் இன்னம் தீர்ந்தபாடில்லை. 'எங்களை மெதுவாய்த் தோர்ணக்கல்லுக்குக் கொண்டுபோய், சாப்பாடு துணிமணி கொடுத்து, பிற்பாடு ரெயிலில் ஏற்றி, அந்நிய நாட்டிற்கு அனுப்பிவிடுவீர்களாமே. வேண்டாம் ஐயா, இங்கேயே படிக்கிறது போதும்' என்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிறதற்கும் இது ஒரு பயம். இதையும் கர்த்தரிடம் தெரிவியுங்கள்.

(4) கல்யாணம்: விவாக விஷயங்கள் ஓர் பெரிய இடறல். பிள்ளையைத் தாய்மாமா கலியாணம் கட்டாமலிருப்பதெப்படி? சிறைவிட்டுப்போம் என்கிறார்கள். எங்கள் குருக்கள் வந்து கலியாணச் சடங்கு முடிப்பதுபோலிராதே என்றும் சொல்லுகிறார்கள். இவைகளுக்குச் சமாதானமும் சொல்லி வருகிறோம். மகாகனம் அத்தியக்ஷரவர்களும் இதை நிவிர்த்திக்க வெகுவாய் ஜெபத்துடன் பிரயத்தனிக்கிறார்கள். கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்வாராக.

நாராயணபுரம். இவ்வூருக்கு இம்மாதமுதல் ஒரு புது உபாத்தியாயர் நியமித்திருக்கிறது. ஷை உபாத்தியார் குடும்ப சஹிதம் குடியிருக்க வீடில்லை. இதிலிருக்கிற கிறிஸ்தவர்கள் மாதிக குலத்திலிருந்து வந்தவர்கள். ஷை உபாத்தியார் விசேஷித்த கரிசனையுடன் நடத்த கர்த்தரை மன்றாடுங்கள்.

துதி. சவட்டப்பல்லி அழிம்பனை குத்தகதாரைப்பற்றி முந்தினமாசச் சஞ்சிகையில் வாசித்து, ஜெபிக்கக் கேட்கப்பட்டோமே. ஜெபம்பண்ணுமுன்னே நமது விருப்பத்தை அறிந்த கர்த்தர் நாம் விரும்புகிறதிலும் அதிகமாய் ஜெபத்திற்கு உத்தரவு அருளிச்செய்திருக்கிறார். மானுக்கோட்டைத் தாசில்தார் மூலமாய் ஷையான் எச்சரிக்கப்பட்டு, அவன் செய்த நஷ்டத்திற்குக் காரணமென்னவென்று சர்க்கார் கேட்டிருக்கிறார்கள்

வேனிற்காலப் பள்ளிக்கூடம். வேனிற்காலப் பள்ளிக்கூடம் மாரிகாலமாக மாறி நிற்கிறது ஆசீர்வாதமே. இது தோர்ணக்கல்லில் இரண்டு வருஷங்களுக்கு முன் நமது அத்தியக்ஷரவர்களால் ஏற்பட்டது. இப்போ அது தன் செட்டைகளை விரித்து எங்கள் அத்தியக்ஷாதீனத்தின்கண்ணுள்ள தோர்ணக்கல், கம்மாமேட், சிங்கரேணியக்காரை மிஷன்களிலுள்ள சகலத்திராளும் கூடும் ஆவிக்குரிய கூட்டமாகியிருக்கிறது. கம்மாமேட்டை மத்தியஸ்தானமாக்கி, அக்றோபர்மீ 7உ முதல் 13உ களில் அங்கு நடைபெறும் இக்கூட்டத்தை நடத்துவோர், கூட்டத்திற்கு வருவோர் யாவர்பேரிலும் வான வருஷமாரி பொழியும்படி ஜெபிப்போமாக.

விஜயம் கடந்த செப்றெம்பர் மாசம் 5உ நம் யாவருக்கும் தெரிந்த பால்யர் சிநேகிதரான கனம். R. T. ஆர்ச்பல்டு துரையவர்கள் வந்து கூட்டம்வைத்துப் பிள்ளைகளை உற்சாகப்படுத்தினர். கடந்த மாசம் 13உ சென்னை வேதாகமச் சங்கக் காரியதரிசியாகிய கனம். ஆர்கேன் ஐயரவர்கள் பூர்வ எகிப்து தேசவாசிகளின் விஷயத்தை வேதாகமச் சரித்திரத்துடன் சம்



பந்தப்படுத்தி மந்திரதீபக் காட்சியால் விளக்கிக் காட்டினார்கள். இவர்களிருவருக்கும் மிகுந்த நன்றி சொல்லுகிறோம்.

டேவிட் தேவசகாயம்.

---

## அரிலியஸ் அகுஸ்தின்.

(தொடர்ச்சி)

லௌகீக ஞானபோதகத்தொழில். அகுஸ்தின் தம் படிப்பு முடித்து, முதல் முதல் உத்தியோகம் வகித்தது தம் சொந்த ஊராகிய தாகஸ்தி பட்டணத்திலேயே. அங்கே கொஞ்சக்காலம்தான் கலக்யானபோதகராயிருந்தார். வாலிபர் பலர் அவரை அண்டி, அவர் பாந்தத்தை நாடிநின்றார்கள். இவர்களில் ஒருவர் பிற்காலம் இவருக்கு ஆப்தமான நண்பனும் உத்தம கூட்டாளியுமாய் விளங்கின அலிப்பியஸ் என்னும் ஓர் சாஸ்திரி. சொந்த இடத்தில் ஒரு வருஷம் பின்னிட்ட பின்னர், கார்தேஜ் நகரத்துக்குத்திரும்பி, அவ்விடத்தில் வெகு சீக்கிரத்துக்குள் போதகசிரியராக பிரக்யாதிபெற்றார். என் றாலும், கார்தேஜ் நகரத்தின் மாணாக்கர்மாருடைய சீர் கிர்வாகத் தைப்பற்றி அவருக்குத் திருப்தியில்லை. சகலவிதமான அக்கிரமச் செய்கைகளிலும் துன்மார்க்கத்திலும் அவர்கள் உழன்று வந்ததுமன்றி; அறிவடையவாவது சத்தியத்தை யறியவாவது கிஞ்சித்தேனும் அவர்களுக்கு நாட்டம் கிடையாது. அவர் உபந்நியாசித்துக்கொண்டிருக்கும்போதே, முரட்டுத்தனமாய்க் கூச்சலிட்டு சந்தடிசெய்வார்கள். இது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, கார்தேஜை விட்டு ரோமாபுரி சென்றார். அங்கும் கொஞ்சக்காலம் தானிருந்தார். மாணாக்கர் மனரம்மியம் கொடுக்கவில்லை. அவர்கள் உபந்யாசம் கேட்கத் திரளாய்க் கூடினபோதிலும், சம்பளம்கேட்கும்போது ஒவ்வொருவராய் மறைந்துகொள்ளும் தந்திரவாதிகள். கல்வியிலும் ஆழ்ந்த கருத்திலும் அக்காலத்தில் உலகப் பிரசித்திபெற்ற மனுஷரோடு ரோமாபுரியில் கண்டு பழகி, அவர்களால் பிரயோஜனமடையலாமென்று அகுஸ்தின் ஆவலோடு நம்பிக் காத்திருந்தார். ஆனால் அவர் தேடிப்போனவர்களெல்லாரும் அன்பற்றவர்களெனக் கண்டார். தவிரவும், அவர்களோடு நெருங்கிப் பழகுவதே சாத்தியமான காரியமன்று. ஆயினும் அவர் தேர்ந்த போதகசிரியரும் பிரசங்கியுமாகப் பேர்பெற்றதால், ரோமாபுரியின் வித்தியா அதிகாரியிடம் மிலான்நகரிக்கு வாய்ச்சாதுரிய போதகசிரியராகத்தேர்ச்சிபெற்ற ஒருவரை அனுப்பும்படி கேட்டபோது, அவர் தாமதமின்றி அகுஸ்தினை சிபார்சு செய்தனுப்பினார்

அகுஸ்தின் மனிக்கிய சபை சம்பந்தத்தை விட்டதும், செடுகாலாய்த் தான் நெகிழ விட்டுவிட்ட பரிசுத்த வேதாராய்ச்சியைத் திரும்பவும் ஆரம்பித்தார். ரோமாபுரியிலிருந்த காலமெல்லாம் ஒழுங்காய் வேதப்பயிற்சிசெய்தார். வேதாகமத்தோடு பிளேற்றோவின் பிரபந்தங்களையும் படித்து, அவைகள் தன் மனதில் ஆச்சரியமான அனல் மூட்டிவிட்டதாய் அறிக்கையிடுகிறார். அவருக்குள் ஆழ்ந்த சிந்தையும் ஆவிக்குரிய தன்மையும் பூரணமாய் உயிர்கொண்டு, அவருடைய பாவங்களைக்குறித்து மனச்சாக்ஷியில் கண்டித்துணர்த்தப்பட்டார். இதே சமையம் தன்னிடம் வந்து சேர்ந்துகொண்ட வைப்பாட்டியைத் திரும்பவும் ஆப்பிரிக்காவுக்கனுப்பிவிட்டார். பிளேற்றோவின் சாஸ்திரத்தினால் தாம் முன்னதாகவே அறிந்திருந்த சத்தியங்கள் வேறு வகையாய் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்குமென்றெண்ணி, அவைகளை அதிகமாய்க் கண்டுகொள்ளும் நோக்கமாய் வெகு நேரம் செலவுசெய்து வேதாகமத்தைப் படித்தார். கிறிஸ்துவின் ஜீவியத்தையும் அவரது பிரதான அப்போஸ்தலனாகிய பரி. பவுலின் ஜீவியத்தையும் தியானிக்கவே, அவர்களுடைய சிறந்த ஜீவியமும் பரிசுத்தமும், சாஸ்திரிகள் தாங்கள் அடைந்ததாக எண்ணிய 'உன்னத ஞானம்' அவர்களிருவருக்குள்ளும் இருந்தால்மட்டும் அவ்வளவு மேன்மையாய் ஜீவித்திருக்கக்கூடும் என்று அபிப்பிராயப்படச் செய்தது. வேதத்திலுள்ள சத்தியங்களையும் அவரறிந்த பிளேற்றோவின் சாஸ்திர உபதேசத்தையும் பொருத்த முயன்றும் சாத்தியப்படவில்லை. தான் முன்னதாகவே ஜெயித்துப்போட்டதாக நினைத்த பாவ நினைவுகள் திரும்பவும் திரும்பவும் மேலிட்டுத் தன்னைக் கீழே இழுத்துக் கொண்டுபோவதாகக் காணவும், தன் சொந்த மனச்சாக்ஷியின் ஆக்கினைத் தீர்ப்பினின்றே தன்னை விடுவித்து, தன்னுள்ளத்தில் பரிசுத்தத்தை யுண்டாக்கக்கூடிய சக்தியை தன் ஜீவியத்தில் அளிக்கக்கூடியவரான ஒரு ஜீவனுள்ள தேவனும் ரக்ஷகரும் தனக்கவசியம் என்ற சத்தியம் அவர் மனதில் பலமாய்ப் பதிந்தது. அவரது ஆத்துமத்தில் உண்டான கொடிய போராட்டங்களால் அவர் சுகமுங்கெட்டு, கொடிய நோயில் விழுந்தெழுந்தார். என்றாலும், உடனே தானழைப்புப்பெற்ற உபாத்தியாயர் வேலையைச் செய்ய மிலானுக்குப் புறப்பட்டார்.

இச்சமையம் பெரிய சபைப் பிதாவாகிய அம்ப்ரோஷியஸ் மிலான் அத்தியக்ஷராயிருந்தார். அவர் ஆதித் திருச்சபையில் மகா மேன்மையடைந்தவர்களில் பிரதானமானவர். பிரசங்க சாதுரியத்தில் எவரும் இவருக்கிணையாகார். அத்தியக்ஷரவர்களின் போதனாமுறையின் அலங்காரத்தைப்பற்றி அகுஸ்தின் வியப்படைந்து, அவரது அருமையான பிரசங்கங்களை அடிக்கடி கேட்கப்போனார். சத்தியவசனம் அவரது இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்தது. கூடிய சீக்கிரம் அம்ப்ரோஷியஸ் கண்காணியாரோடு நேர் நேராகப் பழகி, அவர் இவருக்கோர் பிதாவடைவான சிநேகிதனாகி, அவரது நடத்துதலால் கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையையும் அலங்காரத்தையும் அதிகமதிகமாய்க் கண்டுகொள்ளத்தக்கதாக அவருடைய கண்கள் திறக்கப்பட்டன. தன் குறை இன்னதென்று அறிந்துகொள்ள ஆரம்பித்து, மறுபடியும் தன் ஜீவியத்தை முதலிலிருந்து புதிதாய்த் துவக்க வாஞ்சித்ததினால் சத்தியத்தை ஆராயும் ஆராய்ச்சி அவர் ஆத்துமாவைப் பற்றிக்கொண்டது. பணிந்த சிந்தையும் தேவனுடைய சத்தியத்தையறிய தாபந்தமுமுள்ளவராய், அகுஸ்தின் பரிசுத்த ஞானஸ்நானமாகிய சாக்ரமெந்தின் மூலமாய்த் திருச்சபையில் சேர்ப்பதற்கு அத்தியக்ஷர் ஆயத்தம் செய்த ஆராய்ச்சிக்காரர் வகுப்பில்சேர்ந்துகொண்டார். தேவாவியானவர் அவர் இருதயத்தில் பலமாய்க் கிரியை செய்துகொண்டி

ருந்த இச்சமயம் மிலான் நகரத்துக்கு அவர் தாயார் நினையாத பிரகாரம் வந்துசேர்ந்தார்கள். தன் மகன் எங்கேயிருப்பா னென்று தெரியாமல், வெகுகாலம் அவனைத் தேடிக்கொண்டிருந் தார்கள். கடைசியாய்த் திரும்பவும் தன் மகனைக் கட்டித்தழுவும் சமயம் கிடைத்தபோது, அவர்கள் மனம் எப்படி இருந்திருக் குமென்பதை நாம் எளிதில் கிரகித்துக்கொள்ளலாம். அவர் இருதயத்தில் உண்டாயிருந்த மாறுதலை உடனே கண்டு கொண்டு, பேரானந்தம் பொங்கித் துதி செலுத்தினார்கள்.

பரி. அகுஸ்தினுடைய குணப்படுதல். அகுஸ்தினுக்கு இப்போ 31 பிராயம். அவரது சோழிந்த ஜீவியத்தினாலும் அடிக் கடி அவருள்ளத்திலுதித்த பேதலிப்பான எண்ணங்களினாலும் அவரது சரீரம் கெட்டு ஆரோக்கியமாவும் தொய்ந்துபோயிருந்தது. வீண் மகிமைபின்பேரில நாட்டமும், அறிவின்மேலுள்ள தாக மும், மாம்ச இச்சையும், விவரிக்கவொண்ணாப் போராட்டங் களும் நெஞ்சில் வருஷக் கணக்காய் அவரை வாதித்துக் கொண்டுவந்தன. இப்போ தன்னந்தனிமையான இடத்துக் குப்போய், ஜீவ வசனத்தைப் படிக்கவும் ஜெபிக்கவும் ஆரம்பித் தார். அப்போஸ்தலனுகிய பவுலின் நிருபங்களை அதிகக் கவனமாயும் உள்ளான ஆத்ம பரிசோதனையோடும் வாசித்தார். முன்னொருக்காலும் இல்லாத வண்ணம் கிறிஸ்துவின் அன்பு அவருக்கு வெளிப்படுத்தப்படவே, ‘முழு இருதயத்தோடும்’ ரக்ஷிப்புக்காகவும் இரக்கத்துக்காகவும் கெஞ்சிக் கதறினார். இக்காலத்தில் தாயார் மட்டும் அவருடன் இருந்து, அவரது புதிய ஜீவியத்தில் ஆரம்பமாக விதைக்கப்பட்ட விதைகளை நம்பிக் கையுள்ள ஜெபத்தோடும் அனலான பக்தியோடும் பாதுகாத்து வந்தார்கள். அகுஸ்தின் குணப்பட்டபின், தன் தாயாரைப்பற்றி எழுதும் அருமையான வார்த்தைகளாவன:— ‘பாடையில் சுமந்துகொண்டுபோன கைம்பெண்ணின் மகனைப்பார்த்து: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று சொல்ல, அவன் எழுந்து பேசத்தொடங்கவே, அவனை அவன் தாயினிடம் நீர் ஒப்புவித்தவண்ணம் என் மகனையும் எனக்குத் தாருமென்று என் தாயார் ஓயாமல் என்னைத் தங்க ளுடைய ஜெபங்களில் சுமந்துகொண்டு எனக்காக மன்றாடி னார்கள் என்கிறார்.

ஒருநாள் விக்ற்றோரினஸ் என்னும் சாஸ்திரியாருடைய குணப்படுதலைப்பற்றி உபந்நியாசம் நடந்தபோது அதைக் கேட்க அகுஸ்தின் போனார். கீர்த்திபெற்ற இவ்வாசிரியர் அக் காலத்து அஞ்ஞான மார்க்கத்துக்கு ஓர் தூணாக மதிக்கப்பட்டு வந்தார். அவரோ தம் அந்தியகாலத்தில் வேதாகமங்களைக் கவ னமாய்ப் பார்த்து, தன் பழையசிநேகிதர் எவ்வளவோ நியாயங் கள் சொல்லியும் பயமுறுத்திப்பார்த்தும் கூடாமல், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பணிவும் உண்மையுமுள்ள சீஷனாகி விட்டார். உலகஞானத்தின் காணலிதமாதிரூபம்களிலிருந் தும் தாகம் தீரும்படி பானம்பண்ணிப் பார்த்த இவருக்கு சுவி சேஷத்திலுள்ள தெளிவும் இன்பமுமான சத்தியங்களே இவ ரது ஆத்ம தாகத்தைத் திருப்திசெய்யப் போதுமானதாயிருந் தது. இவரது திருஷ்டாந்தம் அகுஸ்தின் மனதில் பலமாய் உணர்வுண்டாக்கினது. அவருடைய ஆத்ம அநுபவம் அகுஸ் தினுடைய ஆத்ம அநுபவத்திற்கு ஒத்ததாய், போராட்டங்கள் நிறைந்துள்ளதல்லவா? ஆகவே, விக்ற்றோரினஸ் என்பவரின் ஜீவியம் பூரண மனச்சமாதானமும் மனத்திருப்தியும் அடைந்துகொள்ளுவதற்கான வழியில் அவரை நடத்தினது.

சிறிது காலத்துக்குப்பின் ஒருநாள் அகுஸ்தினையும் அவரது சிநேகிதனான அலிப்பியுவையும் பார்த்துப்போக பொந்தித்தியா னஸ் (Pontitianus) என்னுமொருவர் வந்தார். அவர் ராஜ அரண்மனையில் உயர்வும் உத்தரவாதமுமான உத்தியோகம் வகி த்துவந்த ஓர் கனவான். அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் பரி. அந்தோனி என்பவ ரின் பெயரைச் சொல்ல நேரிட்டது. அப்போது பொந்தித் தியானஸ் அரமனை உத்தியோகஸ்தரான தம் சிநேகிதரொரு வர் பரி. அந்தோனி என்பவரின் ஜீவிய சரித்திரத்தை வாசித்து குணப்பட்டார் என்று சொன்னார். அச்சரித்திரத்தைக் கேட் கவே, அகுஸ்தினது உள்ளத்தில் அனல்மூண்டு, பலத்த அசைவு காணப்பட்டது. அந்தக்காரணத்தின் போராட்டம் முகத்தில் விளங்கினது. சொல்லவொண்ணா மனவேதனையடைந்தவ ராய், அகுஸ்தின் தம் சிநேகிதன் முகத்தை முதலாய்ப் பார்க் கத் துணியாமல், இதென்ன? நமது இருதயத்தின் சிறையறியா திருக்கிறோமே. நமது காதில் விழும் சத்தியத்தை உணராதிருக் கலாமா? கல்லாதோர் நமக்கு முன்சென்று, பரலோக ராஜ்யத் தைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொள்ளுகையில், கற்றும் கல் நெஞ்சராய் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசித்து, சும் மாயிருப்பது தகுதியோ? மற்றவர்கள் நமக்கு முன் பிரவேசித்து விட்டதால், பிந்திப்போக வெட்கப்படுகிறோமா? அவர்கள் பின்னாலேயாவது நாம் உட்பிரவேசியாதிருப்பது நமக்கு அவ மானம் இல்லையோவென்று பிரலாபித்தார். இப்படிப் பேசி, மனம்நொந்து, சிந்தைகலங்கி நிற்கையில், அலிப்பியஸோ அகுஸ்தினை ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்துக்கொண்டு அம ரிக்கையாயிருந்தார். அகுஸ்தினின் முகத்தோற்றமும் சப்தத் தொனியும் அவர் பேசின வார்த்தைகளைக் காட்டிலும் மிகப்பல மாய் அவரது மனநிலையை வெளிப்படுத்தின. அவர்கள் குடியி ருந்த வீட்டோடு சேர்ந்த தோட்டம் ஒன்றும் அவர்கள் வச மிருந்தது. அவரையறியாமலே அவரின் மனவேதனை அவரை அத்தோட்டத்துக்குள் நடத்திக்கொண்டுபோனது. இருதயப் போராட்டம் முடிவுபெறுமட்டும், ஒருவரும் அவரிடம் வந்து தடங்கல் செய்ய வழி இருக்கவில்லை. ஜீவனடையும்படி மரு ணத்துக்குள்ளானார். தமது முன்னான நிற்பந்த நிலைமையை அறிந்திருந்தும் சீக்கிரத்தில் தமது ஜீவியத்தில் நேரிடப் போகும் நல் மாறுதலையறியாமலிருந்தினாலும் பதைபதைத் தார். அவர் தோட்டத்துக்குள் செல்லவும் அலிப்பியசும் பிறகே சென்றார். அலிப்பியஸ் கூடவிருந்தும், அவர் தனித் திருப்பதுபோலவே நடந்து கொண்டார். அகுஸ்தினின் உள் ளம் குழம்பி அலைகையில், அலிப்பியசுக்கு அவரைவிட்டுப் போக மனம் வருமோ? கூடியமட்டும் வீட்டிலிருந்து தூரமான ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டார்கள். அப்போது: என் தேவனே! உமது சித்தத்துக்கு இசைந்து, உம்மோடு உடன்



படிக்கை பண்ணி, உம்மை வானபரியந்தம் போற்றிப் புகழ ளன் எலும்புகள் முதலாய் என்னை நெருக்கினபோதிலும், அப் படிச் செய்தேனில்லையே என்று அதிகமாய் விசனப்பட்டு, ஆவி யிலே கலங்கி மனத்துயர் அடைந்தார். தமது இருதயத்தின் திருக்கையும் வஞ்சகத்தையும் உள்ளபடி அவர் அறிந்து, பாவத் திரட்சியின் கொடுமையை உணரவே, பிரசண்டமாருதத்திற் குப் பின் மழை பிரளயமாய்ப் பெய்வதுபோல் கண்ணீர் தாரை தாரையாய் கண்களிலிருந்து வடிந்தது. அழுகிறதற்கு ஏகாந்தமே ஏற்ற இடமென, அழும்படி தனித்த இடம் தேடிப் போனார். இருதயத்தை வார்த்தி பாரம் நீங்குவதற்கு சிநேகித னுடைய சமுகம் முதலாய் தடையாயிருக்குமென்று இப்படிச் செய்தார். அலிப்பியஸோ முன்னிருந்த இடத்திலேயே அதிக ஆச்சரியத்தோடு உட்கார்ந்துகொண்டிருந்தார். அகுஸ்தின் ஓர் அத்திமரத்தின் கீழ் தரையில் விழுந்து, தமது மனக்கிலேசத்தை அழுது தீர்த்தார். அவரது கண்ணீர் ஆண்டவருக்கு உகந்த பலியாயிற்று. ‘கர்த்தாவே! எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? பூர்வ நாட்களின் அக்கி ரமங்களை நினையாதேயும். அவைகள் பழுவான சுமைபோல் என்னை அமுக்குகிறதே. எதுவரைக்கும்? எதுவரைக்கும்? கர்த்தாவே, நாளைமட்டும், நாளைமட்டுமோ? ஏன், இப்போது, இப்போதே, இக்ஷிமிஷமே, என் அசுத்த ஜீவியத்திற்கு முடிவு வரக்கூடாது? என்று சத்தமிட்டுப் புலம்பி ஜெபித்தார்.

இப்படிப் புலம்பி, அவர் மனம் வெகுவாய் நொறுங் குண்டு, அழுதுகொண்டிருக்கும் தருணம் பக்கத்து வீட்டிலி ருந்த ஒரு பையனோ அல்லது பெண்ணோ: எடுத்து வாசி, எடுத்து வாசி, என்று திரும்பத் திரும்பப் பாடும் சத்தம் அவர் காதில் விழுந்தது. உடனே அவர் முகத்தோற்றம் வேறு பட்டது. பிள்ளைகள் எப்போதாவது விளையாட்டில் இப்படிப் பாடுகிற வழக்கமுண்டோவென்று யோசித்துப் பார்த்தார். அப்படி அவருக்குத் தென்படவில்லை. தமது கண்ணீரைத் துடைத்து, தமது மனவியாகுலத்தை யடக்கிக்கொண்டு, ‘புத்த கத்தைத் திறந்து, முதலில் வருகிற அதிகாரத்தை தாம் வாசிக்க வேண்டுமென்ற தேவகட்டளையென்று தாற்பரி யம்பண்ணி நெடுஞ்சாண்கிடையாய் கிடந்த இடத்தைவிட்டு எழுந்திருந்தார். அந்தோனி என்பவர் சுவிசேஷத்தை வாசித் துக்கொண்டு போகையில், நீ போய், உனக்குள்ளதையெல் லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத் தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என் னைப் பின்பற்றி வா ‘என்ற வாக்கியங்களை வாசிக்கவே, இவ் வார்த்தைகளடங்கிய எச்சரிப்பு தன்னோடு ஆண்டவர் பேசிய தேவவாக்கு என்று அவர் எண்ணி, உடனே அவர் அருள்நா தரண்டை திரும்பியதை முன்னமே அறிந்திருந்தார். ஆத லால் ஆத்திரத்தோடு அலிப்பியு இருந்த இடத்துக்குத் திரும்பி வந்து, அங்கு தாம் வைத்துப்போன அப்போஸ்தலன் நிரு பத்தை எடுத்துத் திறந்து, முதலாவது தமது கண்ணுக்குத் தென் பட்ட பாகத்தை மெதுவாய் வாசித்தார். ‘களியாட்டும் வெறி யும், வேசித்தனமும், காமவிகாரமும் வாக்குவாதமும் பொரு மையும் உள்ளவர்களாய் நடவாமலும் துர்இச்சைக்கேதுவாக உடலைப் பேணுமலுமிருந்து, ‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வைத் தரித்துக்கொள்ளுங்கள்’ என்கிற வார்த்தைகளை வாசித் தார். அதற்குமேல் வாசிக்க அவசியமுமிருக்கவில்லை. ஏனென் றால் இந்த வாக்கியம் வாசித்து முடிந்ததும், ஒளி பிரவேசித்த விடத்தில் இருள் அகலுவதுபோல அவர் உள்ளத்தில் தெய்வீக ஒளி பிரவேசிக்கவே, அறிவும் அமரிக்கையும் உண்டாகி சந் தேகமென்னும் காரிருள் பறந்துபோயிற்று.

இச்சம்பவம் கி. பி. 386 செப்டெம்பர் மாசத்தில் நேர்ந் தது. இதுமுதல் தனிமையாயும் அமரிக்கையாயும் பரி. ஞான ஸ்நானமாகிய சாக்ரமெந்துக்காக ஆயத்தப்படுத்திக்கொண்டு, தாமும் தமது புத்திரன் (Adeodatus) அடியோடேற்றசும், தமது சிநேகிதர் அலிப்பியசுமாக மறு ஈஸ்றர் நாளில் ஞானஸ் நான தீட்சை பெற்றார்கள். இத்தினம் அவருக்கு ஓர் சந் தோஷ தினமாகவிருந்தது. ஆராதனை நேரத்தில் அனைவரு டையகண்ணும் அவரைநோக்கியிருக்கையில், தம்மை அடக்கிக் கொள்ள முடியாமல், ஆனந்தக் கண்ணீர் பொங்கினார். அவர் இருதயத்தில் தேவசமாதானம் பூரணமாய் ஆண்டுகொண்டது பூரண ரக்ஷிப்பின் நிச்சயமடைந்தவரானார். வயோதிபரான அவரது மாதா அவர் பக்கத்தில் முழங்காலூன்றி தான் மிகுந்த கண்ணீரோடும் அதிக ஜெபத்தோடும் மகா மனவேதனையோ டும் தவித்து நின்ற தமது மகனுக்காக முழு இருதயத்தோடும் தேவனை ஸ்தோத்திரித்து நின்றார்கள். சில வாரங்களுக் குள் அந்த அம்மாள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். ‘அவருடைய இரக்ஷண்யத்தை’ அவளுடைய கண்கள் பூரண வாய்க் கண்டன அல்லவா?.

## பரி அகுஸ்தின் செய்த ஒரு ஜெபம்.

கர்த்தாவே, நீர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவரு மாயிருக்கிறீர். வல்லமையில் பெரியவர், ஞானத்தில் அளவி டப்படாதவர், உமது சிருஷ்டியாகிய மனுஷன் உம்மைத் துதிக்க விரும்புகிறான். உம்மைத் துதித்து ஆனந்திக்க எங்களை எவி எழுப்பிவிடுகிறீர். உமக்கென்றே எங்களை உருவாக்கியிருக்கி றீரே. உம்மில் இளைப்பாறுதலைக் கண்டடையுமட்டும் எங்கள் உள்ளத்தில் அமைதலில்லாதிருப்பதாக. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுவதா உம்மை ஸ்தோத்திரித்துப் புகழுவதா எது முதலாவது என்றும், அப்படியே உம்மை அறிந்துகொள்ளு வதா உம்மை நோக்கிக் கூப்பிடுவதா எது முதலாவது என்றும் அறிந்து உணரும்படி எனக்குப் போதியும், ஆண்டவரே! உம்மையறியாதவர்கள் எப்படி உம்மை தொழுதுகொள்ளக் கூடும்? உம்மையறியாதவன் நீர் இருக்கிறவண்ணம் அல்லாமல் வேறு வகையாய் உம்மைத் தொழுதுகொள்வானே. உம்மை அறிந்துகொள்ளும்படியாகவே, ஒருவேளை உம்மை நோக்கிக் கூப்பிடவேண்டியதாக்கும். அவரை விசுவாசியாதவன் எப் படி அவரைத் தொழுதுகொள்ளக்கூடும்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால், எப்படி விசுவாசிப்பார்கள்? கர்த்தரைத் தேடு கிறவர்களே அவரைத் துதிப்பார்கள். அவரைத் தேடுகிறவர்க ளுக்கல்லவா அவர் தென்படுகிறார். அவரைக் கண்டடைகிற

வர்கள்தான் அவரைத் துதிப்பார்கள். கர்த்தாவே, உம்மைத் தொழுதுகொண்டு உம்மைத் தேடவும், நீர் எங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருப்பதால் உம்மை விசுவாசித்து உம்மைத் தொழுதுகொள்ளவும் அநுக்கிரகஞ் செய்தருளும். கர்த்தாவே' நீர் எனக்கருளியதும் உமது குமாரனின் மனுஷாவதாரத்தின் மூலமாயும் உமது பிரசங்கியின் ஊழியத்தினாலும் எனக்குள் ஊதியதுமான விசுவாசத்தைக்கொண்டு உம்மைத் தொழுதுகொள்ளுகிறேன். ஆமென்.

## தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் சுற்றுப்பிரயாணம்.

'நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்' 2 கொரி. 1: 11.

அக்ட். 29—31உ. கர்னூலில் தேவ ஊழியருக்குக் கூட்டம்.

நவம். 1—12உ. எஸ். பி. ஜீ. முத்தியால்ப்பாடு, நம்மலமடுகு முதலிய சேகரங்களில் நடப்பித்தலும், சில இடங்களில் தேவ ஊழியருக்கு அமரிக்கையான நாட்களும் (Quiet days).

„ 16உ. நந்தியாலில் குருப்பட்டாபிஷேகம்.

„ 22—26உ. ஐதராபாத்திலும் செக்கந்தராபாத்திலும் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த போதனைக்கூட்டம்.

„ 27—டிசம். 15உ. C. M. S. பெஜவாடா சேகரத்தில் நடப்பித்தல்.

## கிறிஸ்தவர்களுக்குள் மிஷனெரி ஆவி உண்டாக ஜெபம்.

எவர்களுக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ அவர்களிடத்தில் அதிகம் கேட்கப்படுமென்று எங்களுக்கு எச்சரித்தருளிய தேவனே, சிறப்பான சுதந்தரத்தில் பங்கு பெற்றிருக்கிற உமது அடியாராகிய நாங்கள், தேவரீருடைய கரத்திலிருந்து சம்பூரணமாய்ப் பெற்றநுபவிக்கிற நன்மைகளை எங்கள் ஜெபத்தினாலும், தானதர்மங்களினாலும், ஊழியத்தினாலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும், மற்றவர்களுடைய பிரயாசங்களில் பிரவேசித்திருக்கிற நாங்கள், ஏற்ற காலத்தில் எங்கள் பிரயாசங்களில் மற்றவர்களும் பிரவேசிக்கத்தக்கதாக பகற்காலமிருக்கும்போதே ஜாக்கிரதையாய் வேலை செய்யவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்—ஆமென்.

## ஜெப ஸ்தோத்திர விஷயங்கள்.

என்னைக்கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் (சங். 2: 8)

1. அக்டோபர் 7உ முதல் 13உ வரை தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்துத் தெலுங்கு ஊழியருக்கு (150 பேர்) நடத்தப்பட்ட பாடக் கூட்டங்களுக்காகவும் ஆவிக்குரிய போதனைக் கூட்டங்களுக்காகவும், 15உ யில் அத்தியக்ஷரவர்களும் குருமாருங்கூடி நடைபெற்ற டையாசேசன் ஆலோசனைக் கூட்டத்திற்காகத் துதி.

2. பேர்டிங் பையன்கள் ராஜாவில் செய்யும் சுவிசேஷப் பிரசங்க வேலைக்காக ஜெபம்.

3. சிரோமணி முதலிய இடங்களில் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காக ஜெபம்.

4. தோர்ணக்கல், மானுக்கோட்டை, இவ்விடங்களில் மிஷன் பள்ளிக்கூடம் போடவேண்டுமென்று இந்துக்கள், மகம்மதியர் கேட்பதற்காகத் துதி. தகுந்த உபாத்திமார் கிடைக்கும்படியாக ஜெபம்.

5. தோர்ணக்கல் மிஷனில் புதிதாக ஸ்தாபித்திருக்கும் சுவிசேஷ பிரபல்ய சங்கத்திற்காக ஸ்தோத்திரம். ஆவியானவர் புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் இவ்விஷயத்தில் ஏவிவிடும்படி ஜெபம்.

6. தோர்ணக்கல்லுக்கு மிஷனெரியாகப் போக ஆயத்தப்படும் Mr. S. V. சுவாமிதாஸ் அவர்களுக்காக ஜெபம்.

7. உதவிக் குருப்பட்டாபிஷேகத்திற்காக மகானம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்குப் பொங்க செய்திருக்கும் சனம். ஜான் சினிவாசகம் மிஷனெரியவர்களுக்கு இத்திருப்பணிவிடை செய்வதற்கு அவசியமான ஆவியின் வரப்பிரசாதங்கள் அநுக்கிரகிக்கப்படவும் ஜெபம்.

8. தோர்ணக்கல் ஆலயம் கட்டி முடிப்பதற்கான உற்சாகம் திருநெல்வேலி சபைகளில் காணப்படவும், ஜனங்கள் உள்ளக்கனிவுடன் காணிக்கை படைக்கவும் ஜெபம்.

9. தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்காகவும், மிஷனெரிமார், பனியர் மிஷனர்கள், கிறிஸ்தவர்கள், பாடசாலை மாணாக்கர் முதலியோருக்காகவும் ஜெபம்.

10. ஹோம் மிஷனருக்காகவும், டிசம்பர் அவர்கள் பர்மாவில் செய்ய யோசித்திருக்கும் ஊழியங்களுக்காகவும் ஜெபம்.

"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா. 16: 24).

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில்போகும்.

மானேஜர்: வி. எஸ். காலிசன்,
பாளையங்கோட்டை.

Editor:—The Secretary, I. M. S. T.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

161408

Registered No. M. 481.

SEPTEMBER, 1913

# The Missionary Intelligencer

OF THE REGISTRAR ... 2 OCT 1913 MADRAS.

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 9] செப்டெம்பர் 1913 [விலை பை 3

CONTENTS

Editorial Notes ... ... ... ... 69
Who is the Greatest? ... ... ... ... 70
The Acts of the Missionaries ... ... ... 72
From the Telugu Field ... ... ... 73
The Home Missioner's Letter ... ... ... 74

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... ... ... 69
எவன் பெரியவன்? ... ... ... 70
மிஷனெரிமார் நடபடிகள் ... ... ... 72
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... 73
ஹோம் மிஷனர் கடிதம் ... ... ... 74

## பத்திராதிபர் குறிப்புகள்.

தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனம் சிங்கரேனி மிஷனும், கம்மமேட்டு மிஷனும், நமது சங்கத் தோர்ணக்கல் மிஷனும் சேர்ந்துள்ளது.

**சிங்கரேனி மிஷன்.** சிங்கரேனி மிஷனில் சுவிசேஷ ஊழியம் செய்யும் மிஷனெரிமார் திருநெல்வேலியின் பிள்ளைகள்தான். இம்மிஷனின் முக்கிய குருவானவர் கனம்: D. S. தாவீது ஐயரவர்கள். இவர்கள் கடந்த பெப்ருவரி மாசம் திருநெல்வேலியிலிருந்து மிஷனெரி ஊழியத்திற்கென்று புறப்பட்டுப்போனார்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஆகஸ்ட்டு 10உ தெலுங்கில் காலை ஆராதனை வாசிக்கவும், சாயங்காலத்தில் 'பாவியான ஸ்திரீ'யின் சரித்திரத்தின்பேரில் சில வார்த்தைகள் பேசவும் கூடியதாயிருந்ததாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 'பிழைகளோடும் தட்டுப்பாட்டோடும்தான் பேசினேன். தெளிவாகப் பேசுவதற்கு வருத்தப்பட்ட இடங்களில் கனம்: சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்கள் உதவிசெய்தார்கள். இந்த வயசில் (அவர்களுக்கு இப்போது 53 வயது) ஓர் புதுப் பாஷை கற்பது பெரிய வருத்தமென்று கண்டுபிடிக்கிறேன். என்னுடைய நண்பரின் ஜெபங்களினால்தான் இவ்வளவுதூரம் தேறக்கூடியதாயிருந்தது. உங்களுடைய ஊக்கமான ஜெபங்கள் இன்னும் அதிகம் எனக்குத் தேவை. எனக்காக எப்போதும் விண்ணப்பமும் வேண்டுதல்களும் ஊக்கமாய்ச் செய்துவர நண்பர் யாவரையும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது 'வர்த்தமானி' பத்திரிகை வாயிலாய், இந்த என் வேண்டுகோளைத் தெரிவிக்க விரும்புகிறேன்' என்று கனம்: ஐயரவர்கள் எழுதுகிறார்கள். ஐயரவர்களுடைய சுவிசேஷ ஊழியத்திற்கு இன்றியமையா 'பாஷைவரம்' அவர்களுக்குச் சம்பூரணமாய் அளிக்கப்படவும், கர்த்தர் அவர்களையும் அவர்களோடு சேர்ந்த மற்றும் மிஷனெரியார் குடும்பங்களையும் தேக சுகத்தினாலும் ஆவிக்குரிய சகல வரப்பிரசாதங்களினாலும் ஆசீர்வதித்து வரும்படி நண்பர் யாவரும் ஜெபித்துவர அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயவிஷயத்தைத் திரும்பவும் நண்பருக்கு ஞாபகப்படுத்துகிறோம். 'ஓடக்கரை' சபையார் தங்களுடைய ஆலயத்தை எடுப்பித்துக் கட்டிக்கொண்டிருக்கின்றபோதிலும், உற்சாகமாய்த் தங்கள் சபையின்பேரால்

**தோர்ணக்கல் ஆலயம்.** நல்ல காணிக்கை ஆலயக் கட்டுமானத்திற்காக அனுப்பியிருக்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்களுடைய சிறந்த மாதிரியை மற்றும் சபையாரும் பின்பற்றினால், ஆலயத்திற்காகவேண்டிய தொகை வருஷ முடிவிற்குள் கைகூடிவிடுமல்லவா? சபையில் உழைக்கும் ஆசாமியும் சபையாரும் ஒன்றுகூடி முயற்சித்தால், கூடாத காரியமுண்டோ! ஏனெனில் கர்த்தர் சபையில் எப்போதும் கிரியை செய்துகொண்டிருக்கிறாரே. சபையார் தங்களைக் கர்த்தருடைய கிரியையின் பாதையில் வைக்கவேண்டியதுமாத்திரம் காரியம். மணக்காட்டு பாஸ்டரேற்று சபைகளும் வருஷமுடிவாகிறதற்குள் தங்களுடைய பாகத்தைக் கொடுத்துவிடுவார்களென்பதற்கு ஐயமில்லை. மிச்சமாய்க் காணிக்கை வந்துவிட்டது; வந்துகொண்டுமிருக்கிறது. ஆழ்வார்நேரி சர்க்கிளார் உற்சாகத்துடன் முயற்சிக்க ஆரம்பித்துவிட்டார்களாம். சீக்கிரம் முடிவாகுமென்று

நம்புகிறோம். மற்றச் சபைகளின் காரியமென்ன? நல்ல காறைக் கோவில்களை ஆலயசமாய்ப் பெற்றிருக்கும் மெஞ்ஞானபுரம், நாசரேத், இடையன்குடி, சுவிசேஷபுரம், சாயர்புரம், கல்லூர், பாளையங்கோட்டை சபைகளில் இவ்விஷயம் இன்னும் உற்சாகமாய்க் கவனிக்கப்படவில்லையென்று அறிந்து துக்கப்படுகிறோம். தோர்ணக்கல் ஆலய விஷயமாய் முதல் தடவை மெஞ்ஞானபுரத்தில் கனம்: D. S. தாவீது ஐயரவர்கள் பேசினபோது, ஜனங்கள் ரூ. 1,000 கொடுக்கும்படி நினைத்தார்களென அறிந்தோம். அவ்வாறே பல பெரிய சபைகள் உற்சாகங்காட்டின. என்றாலும், வார்த்தைகள் செய்கைகளாக மாறக்காணோம். தோர்ணக்கல் ஆலயம் புறமதஸ்தருக்குச் சாட்சியாயிருக்கும். கிறிஸ்துவை வார்த்தையினாலல்ல, தன்னால் அறிவிக்கும். திருநெல்வேலி கிறிஸ்தவர்களின் நன்றியறிதலான தன்மையையும் தேவதாசரிடங்களிலுள்ள உள்ளான அன்பையும் பரிஷ்காரமாய்க் காட்டும். அதிக வறுமையிலிருக்கும் கிறிஸ்துவுக்குள் நமது பிள்ளைகளான தெலுங்கு கிறிஸ்தவர்கள் கர்த்தனை ஆராதிக்கவும் துதிக்கவும் ஞானமிர்த கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவும் கூடிவருவதற்கு உதவியான ஸ்தலமாயிருக்கும். நமது ஒளி எழும்பிப் பிரகாசிப்பதாக. ஒவ்வொரு சபையும், கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் சற்று கரிசனை யெடுத்தால், காரியம் சுளுவில் முடிந்துவிடும். எந்தத் தேவ ஊழியன் இது விஷயத்தில் ஜாக்கிரதை கொள்ளுகிறாரோ, அவருடைய சபை எதிர்பாராதவிதம் சிறந்து விளங்குகின்றது. ஆலய முடிவிற்காக இடைவிடாமல் ஜெபித்துவரும் தேவதாசர் தேவை. யார் இந்தப் பரிசுத்த ஆசாரிய ஊழியத்தைத் தங்கள் ஜோலியாக வைத்துக்கொள்வார்? நீ ஆசிர்வாதமாயிரு, நான் உன்னை ஆசீர்வதிப்பேன்' என்பது தேவவாக்கு.

நமது ஹோம் மிஷனெரியாகிய கனம். A. சவரிமுத்து ஐயரவர்கள் கடந்த மாசம் ஆள்வார்னேரி சர்க்கிளில் ஊழியஞ் செய்தார்கள். குருமாரும், மற்றும் தேவ ஊழியரும் சபையாரும் அவர்களை அன்பாய் ஏற்றுக்கொண்

ஹோம் மிஷனரி.

டார்கள், மகாகனம் அசரியா அத்தியக்ஷர்கள் இயற்றியிருக்கும் சிறந்த நூலாகிய 'இந்தியாவும் மிஷனெரி ஊழியமும்' என்ற புஸ்தகம் வாங்கி அநேகர் வாசித்துவருகிறார்கள். 'ஆலயக் காணிக்கை' விஷயமாய் நாளது வருஷ முடிவிற்குள் இச்சர்க்கிளார் தங்கள் பாகத்தைக் கொடுத்துவிடுவதாக வாக்களித்திருக்கிறார்கள். சங்கத்திற்காக ஜெபிக்கும் கூட்டத்தை எழுப்புவது நம் ஹோம் மிஷனரிகளின் கடமைகளில் முக்கியமானது. பலர் முன்னிலும் அதிகமாக சங்கத்திற்காக ஜெபித்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாவற்றிற்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். நாளது மாசம் சுவிசேஷபுரம் சர்க்கிளில் அவர்கள் ஊழியஞ்செய்வார்கள். முதலில் தேவ ஊழியரின் மாசாந்தரக் கூட்டத்தில் பேசி, ஆசாமிகளுடன் கலந்து, அவர்களுடைய 'வசதிக்குத்தக்கதாகக் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுவருகிறது. ஹோம் மிஷனரையும் அவர்களுடைய ஊழியங்களையும் நமது ஜெபங்களில் நினைக்கவும் மறவாதிருப்போமாக. ஏதாவது கூட்டங்கள் நடத்துவதற்கு ஹோம் மிஷனர் ஊழியத்தை விரும்பும் சர்க்கிள் செயர்மென், குருமார் ஏற்கனவே சங்க செக்ரற்றெரிக்குத் தெரியப்படுத்துவது உத்தமம்.

நமது சங்கத்தின் பத்தாவது அறிக்கை மாச முடிவாகிறதற்குமுன் அச்சுக்கூடத்திலிருந்து வெளியாகுமென்று நம்புகிறோம். நமது வருஷம் மார்ச்சுமாதத்தோடு முடிவடைகிறதென்றபோதிலும், வருஷோற்சவம் ஜூலை மாசம் இரண்டாம் வாரத்தான் நடைபெறுகிறதென்பது நண்பருக்குத் தெரியும். ஆகவே, ரிப்போர்ட்டு அச்சடித்து வெளியாகத்

பத்தாவது அறிக்கை.

தாமதமாவது இயற்கை. சங்கத் தாபரிப்புக்காகத் தங்கள் பெயரால் வருஷக் காணிக்கை ரூ 3-க்குக்குறையாமல் கடந்த வருஷம் கொடுத்திருக்கும் ஒவ்வொருவருக்கும், காணிக்கை சேகரித்து அனுப்பியிருக்கும் சபைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பிரதி அனுப்பப்படும். சங்கத்தில் அநுதாபமுள்ள மற்றும் சகோதரர் ரிப்போர்ட்டு பெற்றுக்கொள்ளப் பிரியமானால், தபால் கூலிக்காக அரை அணா முத்திரையொன்று காரியதரிசிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். கர்த்தர் இந்த அறிக்கையையும் சங்கத்தின் பத்திரிகை முதலிய மற்றப் பிரசுரங்களையும் தமது நாமத்தின் மகிமைக்காகவும், ஜனங்கள் மிஷனெரி ஊழியத்தில் அதிக அக்கரையும் கரிசனையும் எடுத்துக் கொள்ளும்படி வழிநடத்தும் கருவிகளாகவும் உபயோகித்துவர ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## எவன் பெரியவன்?

இது ஒரு பொல்லாத கேள்வி அருள்நாதரின் சீஷர் இந்தக் கேள்வியினால் எத்தனையோ தடவை வாக்குவாதம் பண்ணிக்கொண்டார்களே. மகா பெரிய சற்குருநாதரின் சமுகத்திலுங்கூட இந்தக் கேள்வி மனமாச்சரியங்களை உண்டாக்கிற்றென்றால், இப்பாழுலகில் அது செய்திருக்கும் கிரப்பந்தத்தை என்ன சொல்ல! நானா தேசத்தாருக்குள் நடக்கும் யுத்தத்திற்குக் காரணம் 'எவன் பெரியவன்?' என்ற கேள்விதானல்லவா? ஜாதி வித்தியாசங்கள், ஜாதி அபிமானங்கள், ஜாதிச் சண்டைகள்—இவைகளுக்குக் காரணம் என்ன? இதுதானே. சபைகளில் இருக்கும் கக்ஷிகளுக்கும், கோர்டுகளில் நடக்கும் வியாச்சியங்களுக்கும், ஊர்களில் உண்டாகும் கலகங்களுக்கும் காரணம் யாது? 'எவன் பெரியவன்?' என்ற கேள்வியல்லவா? ஒருவன் மற்றவனை அற்பமாய் எண்ணுவதற்கும், தன்னை உயர்த்துவதற்கும், பெருமையாக நடப்பதற்கும், தன்னை எதிர்ப்பவர்களோடு சண்டைபண்ணுவதற்கும், கோபதாபங்கொள்வதற்கும் காரணம் என்ன? ஒவ்வொருவனும் தான் பெரியவன் என்று எண்ணிக்கொள்வதுதான் அல்லவா?

"எவன் பெரியவன்?"—இதற்கு சாத்தான் கொடுக்கும் உத்தரவும் உண்டு. இயேசுநாதர் அருளும் உத்தரவும் உண்டு. சாத்தான் கொடுக்கும் உத்தரவு என்ன? இயேசு அருளும் உத்தரவு என்ன?



ஐசுவரியவான் பெரியவன் என்கிறான் சாத்தான். வீட்
டோடு வீட்டைக்கட்டி, தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் வேண்
டிய பணத்தைச் சேர்த்துவைத்து, சம்பிரமமாய் வாழ்பவன்
பெரியவனில்லையா? இல்லை, இல்லை—'தேவனிடத்தில் ஐசுவரி
யவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்
கிறவன் இப்படியே இருக்கிறான்" என்று இயேசு சொன்னார்.
சம்பளமென்ன? என்பது தற்காலத்தில் எப்பேர்ப்பட்டவர்க
ளும் கேட்கும் கேள்விகளில் ஒன்று. சம்பளத்திற்குத்தக்க
மதிப்பு. இது இயேசுபெருமானின் மதிப்பல்லவே.
கல்விமான் பெரியவன் என்பார பலபேர். பரீக்ஷைகள்
பாஸ்பண்ணி உத்தியோகம்பெற்று, அறிவாளி எனப்பேர் பெறு
பவர்கள் பெரியவர்களில்லையா? இல்லை, இல்லை. தேவனை அறி
யாமல், தங்கள் புத்தியின்படி தங்களை ஞானிகள் என்று
நினைத்துக்கொள்ளுகிறவர்கள் ஒருபோதும் பெரியவர்களல்ல.
என்ன சோதனை ஒப்பேறியிருக்கிறீர்? என்பதும் தற்காலம்
கேட்கப்படுகிற கேள்விகளில் ஒன்றல்லவா? கல்வி நல்லது
தான். கல்வி மேன்மையுள்ளதுதான். ஆனால் இயேசுவின் பார்
வையில் கல்வி மாத்திரம் ஒருவனைப் பெரியவனாக்கமாட்டாது.
உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் பெரியவன் என்பதும்
சாத்தானுடைய ஓர் உத்தரவு இதையும் மனுஷர் வெகு
விசேஷமாய்க் கேட்கிறார்கள். குலம் என்ன? கோத்திரம்
என்ன? வர்ணம் என்ன? ஜாதிக்குத் தக்கதாக மதிப்பும் உத்தி
யோகமும் கொடுக்கப்படுகிறது. தேவனும் இப்படித்தான் மதி
ப்பரோ? அல்ல, அல்ல. அவர் பார்வையில் ராஜாதி ராஜாவு
டைய ஆத்துமாவும் அவனுடைய அடியானுக்கடியானுடைய
ஆத்துமாவும் ஒன்றுதானே.
தான் நினைத்ததை முடித்துவிடுகிறவனும், ஒன்றுக்கு ஒன்
பது பதில் செய்கிறவனும், கைத் திறமையினால் பழிவாங்கும்
வல்லமை உடையவனும், சட்டதிட்டங்களை மீறி தன்னிஷ்டப்
பிரகாரம் நடக்கிறவனும், கீழ்ப்படியாதவனும், துன்மார்க்க
னும்—தான்தான் பெரியவன் என்று நினைத்துக்கொள்ளுகிறார்
கள். இது சாத்தானுடைய தாறுமாறல்லவோ?
இயேசுவோ இதற்கு முற்றிலும் விரோதமாகப் பேசு
கிறார். 'எவன் பெரியவன்?' என்ற கேள்வி அவரிடத்திலும்
பல தடவைகளிலும் கேட்கப்பட்டது. அவருடைய உத்தரவு
என்ன?

1. தன்னைத் தாழ்த்துகிறவன் பெரியவன். மத். 18: 4.

இருவர் மனஸ்தாபமாயிருக்கிறார்கள். ஒருவன் மன்னிப்
புக் கேட்கிறான். மற்றவன் 'அவன் மன்னிப்புக் கேட்கவாட்
டும்' என்று காத்திருக்கிறான். எவன் பெரியவன்? மற்றவன்
வரட்டும் என்று காத்திருக்கிறவன் அல்ல, தானே முதல் முதல்
போய் மன்னிப்பு கேட்கும்படி தன்னைத் தாழ்த்துகிறவனே
பெரியவன் என்கிறார் இயேசு. ஒருவன் இன்னொருவனுக்கு
அநியாயஞ்செய்கிறான். அவனைத்துன்பப்படுத்துகிறான், அநியா
யமாய் அவன் பேரைத் தூற்றுகிறான். மற்றவன் அவ்வளவை
யும் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கிறான், சகித்துக்கொள்ளு
கிறான். எவன் பெரியவன்? வெளியரங்கமாக ஜெயித்தவன்
போல் காணப்படுகிறவனல்ல, தாழ்ந்துபோகிறவனே பெரிய
வன் என்கிறார் அருள்நாதர். ஒரு கிறிஸ்தவன் இன்னொரு கிறிஸ்தவனை வியாச்சியத்திற்கு இழுக்கிறான். அற்ப விஷயத்தில் சுயலாபத்தைத் தேடி, பிறனை நஷ்டப்படுத்தும்படி பிரயாசப்படுகிறான். கோர்ட்டுக்குப் போய் நியாயத்தை ஸ்தாபித்துவிடு என்று சிநேகிதர் சொல்லுகிறார்கள். விட்டுவிடு என்று கிறிஸ்து சொல்லுகிறார். எவன் பெரியவன்? தன் நியாயத்தை ஸ்தாபிக்கும்படி பார்க்கிறவனல்ல, தாழ்ந்துபோகிறவனே பெரியவன் என்கிறார் திவ்ய ஞானி. முதல் ஆசனத்திற்குப் போகிறவன் அல்ல. கடைசி ஆசனத்தில் உட்காருகிறவனே பெரியவன். தான் உயர்ந்த ஜாதி என்று எண்ணிக்கொள்ளுகிறவனல்ல, தன் எந்த ஜாதியையும் மறந்து, கடைசி ஜாதியாகத் தன்னை எண்ணிக்கொள்ளுகிறவனே பெரியவன். தன்னைப் பெரிய மனுஷன் என்று எண்ணிக்கொண்டு உயர்த்துகிறவனல்ல, 'இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.

2. பணிவிடைக்காரன் பெரியவன். மத். 20: 27.

'பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்' பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்' என்றார் (லூக். 22: 27) அது வாஸ்தவந்தானே. இயேசுவைவிட பெரியவர் உண்டோ? இயேசுவைவிட ஊழியஞ்செய்தவரும் உண்டோ?

சீஷர் தங்கள் கால்களை நீட்டிக் கொடுக்கிறார்கள். பணிவிடைக்காரன் உடையைப் போர்த்தவராய், இயேசுபெருமான் அவர்கள் முன் நடந்து ஒவ்வொருவர் காலையும் கழுவுகிறார். நீட்டிக் கொடுத்தவர்களோ, கழுவினவரோ எவர் பெரியவர்? பணிவிடை செய்தவர் பெரியவர் என்பதே தாழ்மைச் சொரூபியின் தீர்ப்பு. ஒருவன் வீட்டில் சுகமாய் உட்கார்ந்திருக்கிறான், இன்னொருவன் தேசா தேசங்களுக்கோடி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். எவன் பெரியவன்? ஊழியக்காரன் பெரியவன் என்கிறார் இயேசு. ஒருவன் அதிகாரம்பண்ணி வேலை வாங்கி, தன் சொற்படி மற்றவர்களை ஆட்டுகிறான், மற்றவன் சகல அதிகாரத்திற்கும் கீழடங்கி ஊழியஞ் செய்கிறான். எவன் பெரியவன்? அதிகாரம்பண்ணுகிறவனல்ல, ஊழியஞ் செய்கிறவனே பெரியவன் என்பது தேவ மனுஷனுடைய அபிப்பிராயம். வருத்தப்பட்டு வேலைசெய்கிறவர்களே, பெற்றுக்கொள்ளுகிற உபகாரத்திற்கு மிஞ்சி உழைக்கிறவர்களே, அதிகாரத்திற்குக் கீழ்டங்கி ஓடிச்சாடி ஊழியஞ்செய்கிறவர்களே, திடன்கொள்ளுங்கள்; பரலோகத்தில் நீங்களே பெரியவர்கள்.

3. வெறுத்துவிடுகிறவன் பெரியவன். மத். 20: 28. 19: 27-30.

மேன்மையுள்ள ஸ்தானத்தைக் கேட்ட சீஷருக்கு அருமை ரக்ஷகர் சொன்ன உத்தரவு என்ன? 'ஸ்தானத்தைப்பெற உங்களால் கூடுமா?' என்றாரே. அப்படியானால், உயர்ந்த ஸ்தானத்திற்கும் சுயவெறுப்புக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்று தோன்றுகிறதே. இந்த சம்பாஷணையிலேயே அவர் தம்மை

யும் திருஷ்டாந்தமாகக் காட்டினாரல்லவா? 'மனுஷகுமாரனும்...அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார் என்றார்.'

தனக்கு நியாயமாய் உரிய கனத்தையும் மகிமையையும் ஏற்றுக்கொள்ளுகிறவனல்ல, வெறுத்துவிடுகிறவனே பெரியவன் என்பது இயேசுநாதரின் போதனையென்று தோன்றுகிறது. அவர் தீர்ப்பின்படி, தன் இனத்தார் நடுவிலும், சுகமான இடத்திலும், சுயதேசத்திலும் உழைக்கிறவனல்ல; தன் இன ஜனத்தையும், சுய நாட்டையும் விட்டு தூர தேசத்தில் கிறிஸ்துவுக்காக உழைக்கிறவனே பெரியவன். எங்கே அதிக சம்பளம் கிடைக்கும் என்று பார்க்கிறவனல்ல, கிறிஸ்துவினிமித்தம் குறைந்த சம்பளம் வாங்கிக்கொள்வது கூடியதானால், அப்படி வாங்கிக்கொள்கிறவனே பெரியவன். தனக்கு மற்றவர்கள் கும்பிடு போடும்படி காத்திருக்கிறவனல்ல, மற்றவர்கள் சலாம் போடாவிட்டாலும் அதை கவனியாதிருக்கிறவனே பெரியவன். போகும் இடம் எல்லாம் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவனாகத் தன்னைக் காட்டி, தன் ஜாதிக்காரரோடு மட்டும் உறவாடிக் கொள்ளுகிறவனல்ல, தன் ஜாதியை மறந்து, அதைச் சொல்ல மனமற்றுப் போகிறவனே பெரியவன். சொகுசாய் ஜீவிக்கும்படி நாடுகிறவனல்ல, சொகுசை வெறுத்து, சுவிசேஷத்தினிமித்தம் கோதுமை மணியைப்போல நிலத்தில் விழுந்து சாகும்படி தன்னை ஒப்புக்கொடுக்கிறவனே பெரியவன்.

வாசிக்கிற நண்பனே, கடந்துபோகும் உலகத்தில் பெரியவனாக எண்ணப்படும்படி பிரயாசப்படாதே. அதில் தீமையுண்டு. நித்திய உலகத்தில் பெரியவனாக மனத்தாழ்மையினால் பெரியஇடத்தைச் சம்பாதி. பணிவிடை செய்வதினால் முதல் இடத்துக்குரியவனாகும்படி பார். விட்டுவிடுகிறதினால் வலதிடபக்கத்திற்கு ஆளாகு. சம்பாதிக்கிறவனல்ல கொடுக்கிறவனும், அதிகாரம்பண்ணுகிறவனல்ல கீழடங்குகிறவனும், தன்னை உயர்த்துகிறவனல்ல தன்னைத் தாழ்த்துகிறவனுமே பெரியவர்கள். இவைகளிலே பெரியவனாகும்படி பார். அதுவே உனக்கு மெய்யான மேன்மையாகும்.

—⁎—

## மிஷனெரிமார் நடபடிகள்.

(தொடர்ச்சி)

3. திருச்சபையில் பல வகுப்பார் சேரும்போது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு இணங்குவது ஐக்கியத்திற்கு அவசியம்.

யூதர், புறஜாதியார் இருபிரிவார் கிறிஸ்து சபையில் சேர்ந்தார்கள். சரீரம் ஒன்று, சபை ஒன்று என்ற பொதுப்பிரமாணம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இனி அது எவ்வாறு நிலைப்படும்? தலைமுறை தலைமுறையாய் போஜனங்களிலும், பழக்க ஒழுக்கங்களிலும், ஆசாரங்களிலும் வித்தியாசமாய்ப் பழகியிருக்கிறவர்கள் இப்போது கூடுவதெப்படி?

யூதரிலிருந்து வந்தவர்கள் என்ன சொன்னார்களென்றால், புறஜாதியாரிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பண்ணி, மோசேயின் சடங்காசாரப் பிரமாணங்களைக் கைக்கொள்ளுவார்களானால், கூடிக்கொள்ளத் தடையில்லையென்றார்கள். இவைகளைப் புறஜாதியாரான கிறிஸ்தவர்கள்மேல் சுமத்துவது சுவிசேஷ சுயாதீனத்திற்கு விரோதம் என்று பரி. பவுல் சாதித்ததின்பேரில் இவைகளைக் கட்டாயம்பண்ணப்படாதென்பதும் பொது அபிப்பிராயமாகிவிட்டது. ஆனால் இருவகுப்பாரும் அப்பம் பிட்குதலிலும் போஜனத்திலும் கலந்துகொள்ளுவது எப்படி? மனதில் அரோசிகமுள்ள இருவர் அரோசிகமான காரணங்களையாவது நீக்கக்கூடாதா?

போஜனத்திலும் பழக்க ஒழுக்கங்களிலும் யூதருக்கு அரோசிகமாயிருக்கும் யாவற்றையும் புறஜாதி கிறிஸ்தவர்கள் விட்டுவிடவேண்டுமானால், மோசேயின் சடங்காசாரப் பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ளவேண்டியதே. இயேசுநாதர் 'மனுஷனுக்குப் புறம்பேயிருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தாது' (பரி. மாற்கு. 7: 15) என்றும் வெளிப்புறம் சுத்தமாகிறதல்ல, உட்புறம் சுத்தமாகிறதே விசேஷம் (பரி. மத். 23: 26) என்றும் போதித்திருக்க சுத்த அசுத்த ஜெந்துக்கள் என்னும் பிரிவினையையும், தீட்டு சுத்திகரிப்பு முதலிய விதிவிலக்குகளையும் கிறிஸ்தவர்கள்மேல் சுமத்துவது எப்படி நியாயமாகும்? கிறிஸ்துவின் போதனைப்படி சுத்தம் அசுத்தம் என்பது போஜனத்தில் கிடையவில்லையே.

ஆகிலும் யூதருக்கு அருவருப்பான சில விஷயங்கள் யூதருக்கு அருவருப்பாக மாத்திரமல்ல, கிறிஸ்தவர்கள் பக்திக்கும் பரிசுத்தத்திற்கும் இடையூறாகவுமிருந்தால் அவற்றையாவது சமாதானத்தினிமித்தம், புறஜாதியாரிலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் விட்டுவிடக்கூடாதா? (1) விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனங்களை புறஜாதியார் ஐயமின்றி சாப்பிடுவார்கள். இவ்விதபோஜனங்களைத் தங்கள் சிநேகிதர், சுற்றத்தார் வீட்டிலிருந்து ஏற்றுக்கொள்வார்கள். புறஜாதி கசாப்புக்காரரிடத்திலிருந்து இறைச்சி வாங்கிக்கொள்வார்கள். இவைகளை புறஜாதியாரிலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் விட்டுவிடலாகாதா?

(2) இரத்தமும் புறஜாதிகளுக்குப் பிரியமான போஜனம். பலிகொடுக்கும் மிருகத்தின் இரத்தத்தை பலிகொடுக்கிறவர்கள் விருப்பத்தோடு சாப்பிடுவார்கள். யூதருக்கோ இது முற்றிலும் விலக்கப்பட்டிருந்தது. இரத்தம் பாவ நிவிர்த்திசெய்யும்படி நியமிக்கப்பட்டதினால், இரத்தத்தை எப்போதும் தரையிலே சிந்திவிடவேண்டும் என்பது தேவ நியமம். 'உள்ளே போகிறதொன்றும் தீட்டுப்படுத்தாது' என்ற பிரமாணத்தின்படி இரத்தம் தீட்டுப்படுத்தாதென்பது மெய்யானாலும், இரத்த ஆசையினால் விக்கிரக கோவிலுக்கும், பலி செலுத்தும் மேடைகளுக்கும் போக சோதனை நேரிடுமாதலாலும், புது உடன்படிக்கையிலும் இரத்தம் பாவ நிவிர்த்திசெய்யும்படி நியமிக்கப்பட்டிருப்பதினாலும் புறஜாதி கிறிஸ்தவர்களும் இரத்தம் புசிக்காமலிருக்க ஒப்புக்கொள்ளக்கூடாதா?

(3) நெருக்குண்டு செத்ததையும் புறஜாதிகள் தின்பார்கள். தானாகச் செத்ததும் மூச்சு முட்டி சாகும்படி செய்ததுமான மிருகங்களின் மாம்சங்களை புசிக்கலாகாது என்று யூதருக்குக் கண்டிப்பான விதி இருந்தபோதிலும், புறஜாதியாரோ



இதைப்பற்றி அவ்வளவு கண்டிப்பான எண்ணமுள்ளவர்கள்
அல்ல. இறைச்சிக்காகக் கொல்லும் சில மிருகங்களை இரத்தம்
சிந்தாமலே கொல்லும் வழக்கம் நமது தேசத்திலிருப்பதுபோல
வே அங்கும் இருந்திருக்கவேண்டும். தானாய்ச் செத்த மிருகத்
தின் மாம்சம் தவிர, வேறே எவ்வித இறைச்சியையும் வாங்க சக்
தியற்றவர்களுமிருந்திருக்கலாம். இது யூதருக்கு மகா அரு
வருப்பு என்பதற்குச் சந்தேகமில்லை. 'வாய்க்குள்ளே போகிற
தொன்றும் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது' என்பது இதற்கும்
செல்லுமாகிலும், சேர்ந்து பழகவேண்டிய யூதக்கிறிஸ்தவர்கள்
நிமித்தம் புறஜாதியிலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் இதை விட்டு
விடக்கூடாதா?

(4) வேசித்தன விஷயத்திலும் யூதருக்கும் புறஜாதிகளுக்கும் அபிப்பிராய பேதம் உண்டு. புறஜாதியாருடைய விக்கிரகவணக்கம் வேசித்தனம் கலந்துள்ளது. இத்தேசத்தில் எண்ணிறந்தவர்கள் போலவே அங்கும் கோவில் தாசிகள் உண்டு. கோவில் வணக்கத்தில் இதுவும் சேர்ந்ததுபோல் எண்ணி, ஜனங்கள் தங்கள் இச்சைக்கேற்றபடி நடந்துகொள்வதுண்டு. தேவதாசிகள் இடத்தில் போவதை கிறிஸ்தவர்கள் விட்டுவிடுவது நியாயந்தானே. இதுபோக, வேறொரு தப்பறையும் புறஜாதிகளுள்ளிருந்தது. ஏற்ற இனமுறை கவனியாமல் கலியாணங்கள் செய்துகொள்ளுவார்கள். லேவி. 18-ல் சொல்லிய விதிவிலக்குப்பிரகாரம் யூதர் நடந்துகொள்வார்கள். புறஜாதியாருக்கோ இனமுறைவிலக்கு யாதுமில்லை. கொரிந்து சபையில் தன் தகப்பனுடைய இரண்டாந்தார மனைவியைச் சேர்த்துக்கொண்டவன் முதலாய் இருந்தானே. இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களை யூதர் அருவருப்பாகவும் வேசித்தனமாகவும் எண்ணினார்கள். ஆனால் புறஜாதியாரிலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் யூதகிறிஸ்தவர்களோடு ஐக்கியப்பட்டவர்களாய்க் கூடிக்கொள்ளவேண்டியதிருப்பதினால், யூதர் வேசித்தனம் என்று எண்ணக்கூடிய அருவருப்பான தாறுமாறுகளைப் புறஜாதிக் கிறிஸ்தவர்கள் தவிர்க்கவேண்டியது நியாயமல்லவா? எப்படியிருந்தாலும் சரி, இதுவும் புறஜாதியார் யூதருடன் கலந்துகொள்வதற்கு இருந்த ஓர் தடை என்பதற்குச் சந்தேகமில்லை.

இவ்விதத் தடைகளையாவது புறஜாதியார் நீக்குவது உசிதமில்லையா? இவைகள் அவர்களுடைய பக்திக்கும் சன்மார்க்கத்துக்குங்கூட அவசியமானவைதானே. இவைகளை புறஜாதி கிறிஸ்தவர்கள் விட்டுவிடச் சம்மதித்தால், விருத்தசேதனம் பண்ணுவிட்டாலும், அவர்களோடு கலந்துகொள்ளத் தடையில்லை என்று மூப்பர் சொன்னார்கள்.

புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்காக வாதித்தவர்கள் உடனே சம்மதித்தார்கள். விருத்தசேதனமில்லாமலும், யூத சடங்காசார விதிகளைக் கவனியாமலுமிருப்பவர்களோடு சகவாசம் பண்ணவும், கலந்துகொள்ளவும், அப்பம் பிட்கவும் யூதர் சம்மதிக்கும்போது, யூதருக்கு அருவருப்பாகத் தோன்றும் பழக்க வழக்கங்கள் சிலவற்றை விட்டுவிடும்படி புறஜாதியாருக்கு விதிக்க, மறுபக்கத்தார் சம்மதித்தது பெருந்தன்மையே. இவ்வாறு இருபக்ஷத்தாரும் இணங்கினதினால் இத்தீர்மானத்தினாலுண்டாகிய ஆறுதலுக்காக ஆலயத்தார் சந்தோஷப்பட்டார்கள். 'அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின' (அப். 16: 5). சமாதானம் உண்டானது.

'சபை ஒன்றே' என்ற விஷயத்தில் எள்ளளவாயினும் பேதமிருக்க ஒருவரும் இடங்கொடுக்கவில்லை. அதை ஸ்திரமாய் ஸ்தாபித்தபின், சின்னஞ்சிறிய விஷயங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தார்கள், இணங்கிப்போனார்கள்.

இந்து தேசத்தில் இது நமக்கு எவ்வளவு அவசியம் வேண்டிய பாடம்! பலவித ஜாதிகளிலிருந்தும் பாஷைக்காரரிலிருந்தும், அந்தஸ்துடையோரிலிருந்தும் ஜனங்கள் கிறிஸ்துசபையில் சேரும்போது, திருச்சபையின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளத்தக்கதாக ஒருவருக்கொருவர் இணங்கிப்போகவேண்டிய காரியங்கள் பல எழும்புவது இயற்கை. அவ்வாறெழும்பும் சமயத்தில் ஜாஸ்தியாயுள்ள வகுப்பார் தங்கள் அதிகாரத்தையும் நியாயத்தையும், ஆளுகிற ஜாதியைச் சேர்ந்தவர்கள் தங்கள் சுயாதீனத்தையும் பாத்தியதையும், அந்தஸ்துடையவர்கள் தங்கள் ஸ்திதியையும் மேன்மையையும் பாராட்டுவார்களாகில், ஐக்கியம் உண்டாகமாட்டாது. தங்கள் தங்கள் சுய நியாயத்தைச் சொல்லி, தங்கள் சுய காரியத்தைக் கவனித்தும் சுய நயம் சபையில் தோன்றும்போது, கக்ஷிகளும் பிரிவினைகளும் விளையும். ஒரு பக்ஷத்தார் தங்கள் நியாயத்தையும், மறு பக்ஷத்தார் தங்கள் அதிகாரத்தையும், அல்லது ஒரு பக்ஷத்தார் தங்கள் பாத்தியதையையும், மற்றவர்கள் தங்கள் பெலத்தையும் சாதிக்காமல், ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கவனித்து, மற்றவர்களுடைய நியாயத்தைப் பெரிதுபாராட்டி, மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்து, மற்றவர்களுக்கு இணங்கும் போதுமாத்திரம் சமாதானமும் ஐக்கியமும் பலிதப்படும். இவ்வித சிந்தையையும் ஆவியையும் தேவன் தாமே அனுக்கிரகித்தருளுவாராக!

பராபரனே, உம்மாலேயன்றி நாங்கள் உமக்குப் பிரியமாய் நடக்கத் திராணியற்றவர்களாய் இருக்கிறபடியினால், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எல்லாக்காரியங்களிலேயும் உம்முடைய பரிசுத்த ஆவி எங்கள் இருதயத்தை நடத்தி ஆண்டுகொள்ளும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

—⁎—

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

முன் சிலமாதங்களாய் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் சிங்கரேணியில் வாசம்செய்து வந்தார்கள். இப்போது, தோர்ணக்கல்லில் அவர்கள் வசிப்பதற்காக வீடு கட்டும்படி வாங்கப்பட்டிருக்கும் புதுக்கம்பவுண்டில் ஒரு சிறிய பங்களா தற்சமயத்துக்கென்று கட்டி, அதில் குடும்பசகிதமாய் வந்து வசிக்கிறார்கள். அவர்கள் எங்கள் நடுவிலிருப்பது, சகல காரியத்தையும் உடனேக்குடனே கலந்து ஆலோசித்துக்கொள்ளவும் செய்யவும் மிகவும் அனுகூலமாயிருக்கிறது.

இப்போது 2, 3 வாரங்களாய் தோர்ணக்கல்லிலேயே அவர்கள் இருக்கக் கிடைத்ததால், கூடியமட்டும் தினந்தோறும்

சாயந்தரம் கர்த்தருடைய திருப்பந்தியின் தியமனமே, ஆராதனை ஏற்பட்டு ஆசரிக்கப்பட்டு வந்த விவரங்கள் இவைகளை வெகு திட்ட நுட்பமாயும் அவைகளைக் கொஞ்சக்காலத்துக் கிறிஸ்தவர்களும் புது ராப்போஜனக்காரரும் கூட அறிந்து மனதிற் பதித்துக்கொள்ளத்தக்கதாக வெகு தெளிவாயும் சிறந்த திருஷ்டாந்தங்களுடனும் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பந்தியிற் சேரும் நம்முடையவர்கள், இந்த ஆரம்பகாலத்திலிருந்து இப்போதும் இதன்மேல் என்னும் சுத்தக்கருத்தும், ஆழ்ந்த உணர்ச்சியும் பற்றும், ஆவலுமுள்ளவர்களாய், அப்பந்தியிற் சேர, துவர்களை வழி நடத்தும் நல்லேதுவாயிருக்கிறது. நாம் ஏற்றுக்கொண்டு அநுபவித்துவரும் சுத்த சுவிசேஷ உபதேசத்திலும் அநுஷ்டானங்களிலும் பரிசுத்த பயபக்தியிலும் நமது சபையை நிலைநிறுத்துவதற்கு அநுகூலமாயிருக்கும். இந்தத் தினசரிப்பாடங்களைக் கோர்த்து, ஒரு சிறு புஸ்தகமாக மகாசனம் அத்தியட்சரவர்கள் அச்சிடுவார்களானால், மிகுந்த பிரயோஜனமாயிருக்கும்.

நமது மிஷனையும் பள்ளிக்கூடத்தையும் பார்க்கும்படி வந்திருந்த ஒரு மிஷனெரி, தான் பார்த்த சகலத்தையும் குறித்து சந்தோஷப்பட்டதோடு, நம்முடைய பள்ளிக்கூடப் பிள்ளைகள் மிகுந்த சுறுசுறுப்பும் உற்சாகமும் சந்தோஷமுகமுமுள்ளவர்களாயிருப்பதையிட்டு வியந்துபேசி, இதற்குக் காரணமான பலவற்றுள் இவர்கள் காரியங்களைக் கிரமமாய்ச் செய்துவரும்படி பழக்குவிக்கப்படும் வழிவகைகளும், கிரமமாயும் உற்சாகமாயும் செய்யப் படிப்பிக்கப்பட்டிருக்கும் கைத்தொழில் விவசாய முயற்சிகளுமே என்றறிந்து, தமது பள்ளிக்கூடத்திலும் இவ்வாறே செய்யத்தீர்மானித்து, தமது ஆண், பெண் போர்டிங் சாலை தலைமை உபாத்திமார்களைத் தோர்ணக்கல்லுக்கு வந்து, தினம் நமது பிள்ளைகள் செய்துவரும் பற்பல காரியங்களையும் கூட இருந்து கற்றுவரும்படி அனுப்பியிருந்தார்கள். அவர்கள் வந்து பார்த்துப்போயிருக்கிறார்கள். கைத்தொழில் வியவசாய முதலியவைகளில் பிள்ளைகள் காட்டும் உற்சாகத்தையும், பிள்ளைகளுடைய சுறுசுறுப்பையும், மலர்ந்த முகத்தையும் பார்த்த அளவில் கல்வியினறிவையும் வியந்து பேசிக்கொண்டார்கள். தங்கள் பள்ளிக்கூடங்களிலும் இம்முறைகளைக் கையாடுவது உத்தமமென்றுரைத்துப் போயிருக்கிறார்கள்.

உயர்ந்த கல்வி கற்பது மட்டுமல்ல, அதிலும் விசேஷமாய் உற்சாகமும் ஊக்கமும் உண்மையுமுள்ள (citizen) நகர்வாசிகளாகச் செய்வதே நமது தோர்ணக்கல் பள்ளிக்கூடப் பயிற்சியின் நோக்கம்.

"துள்ளப்பட்ட ஊழியன்." "தள்ளப்பட்ட தூதன்", என்ற பழமொழிக்கு இசைய, மிஷன் ஊழியத்திலிருந்து தள்ளப்பட்ட கோரி ஆபிரகாம் உபதேசியார் என்ற மனிதன் சபைகளில் பண்ணும் தாறுமாறும், செய்துவரும் சீர்கேடும், அந்த மனுஷனுடைய முடிவெப்படியிருக்குமோ என்று பயப்படச்செய்யும் காரியமாயிருக்கிறது. இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ என்று நமது கர்த்தரும் சொல்லியிருக்கிறார். இடறல்களும் துன்பங்களும் காற்றுனது அசைப்பதும் அழிப்பதும்போல காணப்பட்டும், மரங்கள் வேர்ப்பலப்பட்டு, தூர் பருத்து வளர்ந்தோங்கச் செய்வதற்கே ஏதுவாய் வாஸ்தவத்திலிருப்பதுபோல, சபை கெட்டு அழிவதற்கானது போல காணப்பட்டும், அவைகள் உயிரும் ஊக்கமுமடைந்து, ஐக்கியத்திலும் ஆவியிலும் வளரவும், ஆண்டவரில் அண்டி ஜீவிக்கவும் செய்யும் ஏதுவாக மாத்திரமிருக்கும். அந்த மனுஷன், நமது உபாத்திமார், விசேஷமாய்ச் சவுடப்பல்லியிலுள்ள சாலோமோன் உபாத்தியார் செய்துவரும் பயிர் செய்யாதபடி தடுத்துக்கொண்டும், இந்துக்கள் துலுக்கர் முதலிய சில வீணரை உற்சாகப்படுத்தி, மிஷன் நிலங்களை அபகரித்துக் கொள்ள முயற்சி செய்துகொண்டும், சபையார் ஜெபத்துக்கு வரவொட்டாதபடி வழிவகைகளைச் செய்துகொண்டும், மாதிக (சக்கிலியர்)ரோடு சேர்ந்து ஒரே ஜாதியாக்கவே இந்த மிஷனெரிமார் வந்திருக்கிறார்கள் என்று போகிற இடமெல்லாம் புகட்டி, புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்துக்கு வருகிறவர்களை வரவொட்டாதபடி தடுத்துக்கொண்டும், அஞ்ஞானக் கிரியைகள்செய்து அவமானம் வருவித்துக்கொண்டும் தோர்ணக்கல்லில் படிக்கும் பிள்ளைகளைப் பெற்றோர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவொட்டாதபடி செய்யும் வழிவகைகளைச் செய்துகொண்டும் வருகிறார்.

கர்த்தர் இவருக்கு நல்லபுத்தி வரும்படிசெய்ய அல்லது நற்புத்தி வருத்தும்படிக்காகவும், இந்த இடைஞ்சல்களினூடும் கிறிஸ்துமார்க்கம் இப்பக்கங்களில் அபிவிருத்தியடையும்படிக்குச் செய்யவும் கர்த்தரை நோக்கி ஜெபிக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்

S. பாக்கியநாதன்

## ஹோம் மிஷனர் கடிதம்

ஆழ்வார்னேரி கனம் G. மாணிக்கம் ஐயரவர்களுடைய அன்பான அழைப்பை ஏற்றுக்கொண்டு, ஆகஸ்று 13 ம், 14-ம் உ களில் அவ்விடத்தில் நடந்த ஆனந்தப்பண்டிகைக்குப் போய், அவ்விரண்டு நாட்களிலும் சர்க்கிள் முழுவதிலுமிருந்து கூடிவந்திருந்த தேவ ஊழியரும் சபையாரும் அறியத்தக்கதாக நம் மிஷன் சம்மந்தமாய் தோர்ணக்கல்லிலும் சுற்றுப்புறங்களிலும் நடக்கிற வேலையைப்பற்றிக் கண்ணாரக் கண்டவற்றைக் குறித்து சாக்ஷிகூறி, தற்காலம் அவசியங்களையும் எடுத்துக்காட்டி நம் சங்கத்தின்பேரில் அனுதாபமுண்டாக ஏவி எழுப்பிவிட்டேன் அச்சர்க்கிள் முதலாளியாகிய கனம் கார் ஐயர் அவர்களும் உபத்திரவ காலங்களில் தோர்ணக்கல் சபைகளுக்கு தேவன்பேரில் இருக்கிற மேலான நம்பிக்கையும் ஆரம்பமுதலே சுயஆதரவு சுயஆளுகை விஷயமாய் அந்த சபைகள் காட்டுகிற உற்சாகமும் ஊக்கமும் நம் நாட்டுச் சபைகளுக்கு சிறந்த முன்மாதிரி என வற்புறுத்திப் பேசினார்கள். மறுநாளில் அந்த சர்க்கிளில் நான் செய்யவேண்டும் சுற்றுப் பிரயாணம் வெகு ஒழுங்காயும் செவ்வையாயும் திட்டம் செய்யப்பட்டது. அப்படியே கனம் மாணிக்கம் ஐயரவர்கள் தேவ கிருபைக்கொப்புவித்து ஜெபித்து வழிவிட்டனுப்ப, பெரிதும் சிறிதுமான 19



சபைகளை சந்தித்து சுவிசேஷ பிரபல்ய ஆவியை ஏவி எழுப்பி விடத்தக்கதாகவும், அந்தந்த சபைகளின் ஆவிக்குரிய ஜீவியத் தில் உதவியாயிருக்கத்தக்கதாகவும், இந்திய மிஷனெரி சங்கத் தில் அதிக அனுதாபமும் கரிசனையும் உண்டாகத்தக்கதாகவும் ஆலயங்களில் பிரசங்கித்ததுமன்றி, வீடுகளில் சந்தித்தும், தனித் தனியான ஆள்களோடு சம்பாஷித்தும் ஊழியம் செய்யக் கர்த் தர் அருளின பெரிய கிருபைக்காக அவருக்கு அந்தியந்த பணி வோடு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். சுவிசேஷ பண்டிகை தினத்தை கோடங்குளம் சபையாரோடு வெகு எழுப்புதலாய் ஆசரிக்க இடம்பெற்றேன். சபையில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமாக 112 பேருடன் காலை 8 மணிமுதல் மாலை 8 மணிவரை 10 மைல் சுற்றளவுள்ள ஆறு கிராமங்களில் சுவி சேஷத்தைக் கூறியறிவித்தோம். மத்தியானம் 3 மணி நேரம் போல் இளைப்பாறி சாப்பிட்டு சுருக்க ஆராதனையும் நடத்தி னோம். காலை ஒரு சுருக்கமான ஆராதனையோடு துவக்கி, மாலை 8 மணிக்கு ஸ்தோத்திர ஆராதனையோடு முடித்தோம். முன்னோர்களுமில்லாத விதமாய் பண்ணையாரான பெரியோர் கள் சுவிசேஷத்தைக் கவனமாய்க் கேட்டதோடு மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் எழுதின 'இந்தியாவும் சுவி சேஷ பிரபல்யமும்' என்ற புத்தகத்தின் சில குறிப்புகளைச் சொன்னபோது மெத்தப் பரிதாபப்பட்டு, நம் தேசத்துக்காகப் பெருமூச்சுவிட்டார்கள் இப்புஸ்தகத்தில் கிட்டத்தட்ட 80 புஸ்தகங்கள் சர்க்கிள் முழுவதிலும் ஆசாமிகளுக்குள்ளும் சபை யாருக்குள்ளும் விலையாகியிருப்பதே நம் தேசத்தின் நிர்ப்பந்த நிலைமையைப்பற்றி நன்றாயறியவும், ஜெபிக்கவும், உழைக்கவும், கொடுக்கவும் ஏவி எழுப்பப் போந்த ஏதுகரம் என்பதற்குச் சந் தேகமில்லை. சில சபைகளில் அதிகமான சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி பத்திரிகைகளை வாங்கவும், ஒழுங்கான உழைப் போர் ஐக்ய சங்கங்களின் கிளைகள் ஏற்படுத்தவும், எல்லா சபைகளிலும் தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயக் கட்டுமானத் துக்காக சுமார் ரூ. 200 வரை கொடுப்பதாகவும் வாக்குப்பண் ணியிருக்கிறார்கள். இது கடைபெறும் பொறுப்பும் உத்தரவா தமும் அந்தந்த இடத்து ஆசாமிகள் சர்க்கிள் கமிற்றி மெம்பர்க ளின் அனுதாபத்தையும் சிரத்தையையும் சார்ந்திருக்குமென் பதையும் தெளிவாய்க் காட்டியிருக்கிறது. தேவாவியானவர் தாமே வாக்குச்செய்தவர்களெல்லாரும் நிறைவேற்றும்படி யான மனதையும் பெலத்தையும் அனுக்கிரகிப்பாராக. இந்த சுற் றுப்பிரயாணம் முழுவதிலும் என் ஊழியம் சித்தியாய் நடை பெறத்தக்கதாக சகல வசதிகளும் ஒழுங்குகளும் உற்சாகமா யும் மனப்பூர்வமாயும் செய்துமுடித்த எல்லா தேவனுடைய பிள்ளைகளுக்கும் அதிக நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன்.

A. S.

'சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.'

## சந்தா வரவு.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| Rev. வியாகப்பன் | ... N. அச்சம்பட்டி | 1 | 15 | 2 |
| ,, சத்திநாதன் | ... குலசேகரபட்டணம் | 1 | 2 | 0 |
| ,, S. M. தேவதாஸ் | ... பண்ணைவிளை | 10 | 4 | 0 |
| ,, J. N. பெரியநாயகம் | ... For இடையன்குடி | 3 | 0 | 0 |
| ,, R. விசுவாசம் | ... முதலூர்குளத்தூர் | 1 | 2 | 0 |
| ,, D. பாக்கியநாதன் | ... சாயர்புரம் | 8 | 8 | 0 |
| Mr. K. S. சுப்பாராவு | ... காஞ்சிகோயில் | 0 | 6 | 0 |
| ,, ஜெபமணி நாடார் | ... குலசேகரபட்டணம் | 0 | 6 | 0 |
| ,, S. சுவிசேஷமுத்து | ... ஆதிச்சப்பேரி | 1 | 14 | 0 |
| ,, G. தர்மக்கண் | ... நாகபட்டணம் | 0 | 12 | 0 |
| ,, P. S. செல்லையா | ... சேலம் | 0 | 6 | 0 |
| ,, G. Z. தாமஸ் | ... தூத்துக்குடி | 2 | 0 | 0 |
| ,, பாலையா சாமுவேல் | ... சாக்ஷியாபுரம் | 1 | 2 | 0 |
| ,, M. G சிமியோன் | ... கவுண்டபாடி | 0 | 6 | 0 |
| Dr. ஞானஒளிவு | ... திருச்சிறுப்பள்ளி | 2 | 4 | 0 |
| Mrs. M. ஐசக் | ... ஆனைக்குளம் | 1 | 0 | 0 |
| ,, சீனிவாசகம் | ... ஒட்டப்பிடாரம் | 0 | 14 | 0 |
| Luke சாமுவேல் | ... Pannier Bridge | 1 | 12 | 0 |
| Rev. P. ஜேக்கப் | ... ஜப்பல்பூர் | 1 | 0 | 0 |
| ,, J. C. பன்னியன் | ... சென்னை | 1 | 8 | 0 |
| ,, K. T. அருமைநாயகம் | ... சங்கரன்கோயில் | 3 | 9 | 0 |
| ,, V. J. டேயர் | ... சாத்தான்குளம் | 10 | 0 | 0 |
| Mr. G. யோசேப்பு | ... மூனூர் | 1 | 2 | 0 |
| ,, R. A. வேடா | ... ரெங்கூன் | 1 | 2 | 0 |
| ,, K. B. வேதமுத்து | ... சிலோன் | 0 | 6 | 0 |
| ,, அப்பாத்துரை | ... ரெங்கூன் | 1 | 0 | 0 |
| ,, S. முத்துசாமி | ... பேட்டை | 0 | 12 | 0 |
| ,, J. யோசுவா | ... Maymyo | 1 | 8 | 0 |
| ,, அருள் சாம் செல்லையா | ... திருச்சிறுப்பள்ளி | 0 | 6 | 0 |
| ,, ஜாண் ஞானயுதம் | ... சிதம்பரபுரம் | 1 | 0 | 0 |
| ,, அடைக்கலம் | ... | 0 | 2 | 0 |
| ,, D. முத்தையா | ... கொங்கந்தான்பாறை | 2 | 4 | 0 |
| ,, M. சாமுவேல் | ... இடையன்குடி | 0 | 6 | 0 |
| ,, N. ஞானையா | ... சிலோன் | 0 | 12 | 0 |
| ,, இன்பநாயகம் நாடார் | ... மானூர் | 0 | 6 | 0 |
| ,, S. மாசிலாமணி | ... தஞ்சாவூர் | 0 | 6 | 0 |
| ,, M. பாக்கியநாதன் | ... கொடைக்கானல் | 1 | 2 | 0 |
| ,, G. C. தங்கையா நாடார் | ... குலசேகரப்பட்டணம் | 0 | 6 | 0 |
| ,, K. T. பால் | ... சேலம் | 0 | 12 | 0 |
| ,, P. ஆபிரகாம் | ... சிலோன் | 1 | 2 | 0 |
| ,, J. S. ஆசீர்வாதம் | ... உடுமால்பெட் | 0 | 8 | 0 |
| ,, J. M. டேவிட் | ... ரெங்கூன் | 2 | 0 | 0 |
| S. T. C. காலேஜ் | ... பாளையங்கோட்டை | 2 | 7 | 0 |
| மடத்துப்பட்டி | ... | 2 | 1 | 0 |
| Rev. R. K. ஆபிரகாம் | ... F. M. S. | 0 | 9 | 0 |
| Mr. I. தேவசகாயம் | ... வாகைக்குளம் | 3 | 0 | 0 |
| ,, T. Y. ஞானைய்யா | ... கூடலூர் | 0 | 6 | 0 |
| ,, V. அருமைநாயகம் | ... திருப்பூர் | 0 | 6 | 0 |
| ,, K. பாக்கியநாதன் | ... மண்டவி | 0 | 6 | 0 |
| மருதகுளம் | ... | 1 | 11 | 0 |
| Rev. ஜாண் ஆபிரகாம் | ... பனையடிபட்டி | 5 | 4 | 0 |
| Mr. J. அருமைநாயகம் | ... திருவண்ணாமலை | 0 | 7 | 3 |
| Mrs. N. S. மதுரம் | ... தர்மவரம் | 0 | 6 | 0 |
| ஆறுமுகனேரி பாஸ்டரேட்டு | ... | 6 | 8 | 0 |
| Rev. J. V. தானியேல் | ... கொழும்பு | 2 | 4 | 0 |
| Mr. P. ஆபிரகாம் | தட்டான்குளம் For 1910 & 10 | 3 | 9 | 0 |
| ,, P. ஆபிரகாம் | ... பெரும்பத்து | 0 | 12 | 0 |
| ,, P. ஆசீர்வாதம் | ... சென்னை | 1 | 2 | 0 |
| கரிசல் | ... | 3 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| Rev S. நயனசஞ்சீவிநற்றன் | ... தர்மநகரம் | 8 | 0 | 0 |
| ,, D. S. ஜோசப் | ... குன்னூர் | 8 | 9 | 0 |
| ,, S. V. தேவதாசன் | ... ஆசீர்வாதபுரம் | 9 | 6 | 0 |
| ,, N. ஞானப்பிரகாசம் | ... தஞ்சாவூர் | 0 | 12 | 0 |
| ,, G. மாணிக்கம் | ... ஆழ்வார்நேரி | 6 | 0 | 0 |
| ,, M. சேவிவாசகம் | ... மனோற்காடு | 4 | 11 | 0 |
| Mr. A. K. தாமஸ் | ... நூர்தக்குடி | 0 | 6 | 0 |
| ,, மதுரம், | D. D. School பாளையங்கோட்டை | 2 | 4 | 0 |
| ,, V. M. தாமஸ் | ... குன்னூர் | 1 | 0 | 0 |
| Mr. J. D. ஜெரெமியா | ... குன்னூர் | 0 | 6 | 0 |
| ,, உபதேசியார் | ... கொங்கராயகுறிச்சி | 1 | 8 | 0 |
| ,, A. சுவாமியடியான் | ... ரங்கூன் | 1 | 2 | 0 |
| ,, K. S. தங்கையா | ... ,, | 0 | 6 | 0 |
| ,, V. P. பர்ணபாஸ் | ... மேலூர் | 1 | 0 | 0 |
| ,, P. துரைப்பாண்டியன் | ... சேர்வைகாரன்மடம் | 0 | 8 | 0 |
| Mrs. T. S. ஐசர் | ... காட்டுமா | 1 | 6 | 0 |
| Rev. S. வேதமுத்து | ... Ootacamund | 5 | 0 | 0 |
| Rev. சாமு. யோசேப்பு | ... அறப்புக்கோட்டை | 0 | 6 | 0 |
| Mr. சீநிதாசன் | ... பாளையங்கோட்டை | 8 | 8 | 0 |
| தருமநகரம் பாண்டுரேற்று | ... | 0 | 12 | 0 |
| மெஞ்ஞானபுரம் சர்க்கிள் | ... | 40 | 10 | 0 |
| Mr. N. S. தவமணி | ... நடுக்கரை | 1 | 8 | 0 |
| ,, யோசாமி | ... சமாதானபுரம் | 5 | 3 | 0 |
| ,, H. R. ஹார்வீக்டன் | ... நாங்குநேரி | 0 | 8 | 0 |

## நோட்டீஸ்.

நமது சந்தாதாரரில் அநேகர் இவ்வருஷ சந்தாவை இன்னும் அனுப்பாதிருக்கிறார்கள். சிலர் சென்ற வருஷத்திற்கும் பாக்கி வைத்திருக்கிறார்கள். பில், ஞாபகக் கார்டு முதலியவைத் திரும்பத் திரும்ப அனுப்பியும் பணம் அனுப்பாதிருக்கிறார்கள். நமது பத்திரிகை செலவில்லாமல் பிரசுரமாகுமா? திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்தை நேசிக்கிற யாவரும் தம் சந்தாவை 'உடனே' அனுப்பிவைக்கும்படி அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வி. எஸ். காலிசன்.

நீளதுமாசம் மூன்றும் வாரத்தில் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் அத்தியக்ஷர் மகாசபையில் ஆஜராயிருக்கும்நோக்கமாய், மகாகனம் நமது அருமை அத்தியக்ஷரவர்கள் ஆகஸ்ற்றுமீ 14உ பாளையங்கோட்டையிலிருந்து மகாகனம் திருவாங்கூர் அத்தியக்ஷரவர்களுடன் புறப்பட்டுப் போனார்கள். நாளதுமீ 10உ சுகபத்திரமாய் ஆஸ்திரேலியா சேர்ந்தார்களென அறிந்து கர்த்தரைத் துதிக்கிறோம். கர்த்தர் அவர்களைச் சுகபத்திரமாய்க் காப்பாற்றி, நல்ல சுகமும் புஷ்டிபெலனும் அநுக்கிரகித்து, திரும்பும் வழியிலும் சுகபத்திரமான பிரயாணம் கட்டளையிட பிரார்த்திக்க உம் நண்பரை ஞாபகப்படுத்துகிறோம். கர்த்தருக்குச் சித்தமானால், நவம்பர்மீ ஆரம்பத்தில் தங்கள் அத்தியக்ஷாதீனத்திற்குத் திரும்பிவிடுவார்கள்.

## ஜெபஸ்தோத்திர விஷயங்கள்.

1. கனம். D. S. தாவீது ஐயரவர்கள் தெருக்கு பாதையில் ஆராதனை வாசிக்கவும் பிரசங்கம் செய்யவும் கூடியதாயிருப்பதற்காகவும்;

2. உதகமண்டலத்திலிருக்கும் Mr. S. V. சுவாமிதாஸ் அவர்களும் மனைவியும் மிஷனெரி ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருப்பதற்காகவும்;

3. மெஞ்ஞானபுரம் சபை மெம்பரொருவர் ஆயுள்கால அங்கத்தினரின் காணிக்கை படைத்திருப்பதற்காகவும் ஸ்தோத்திரம்.

1. மகாகனம். தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்காகவும், அக்டோபர்மீ 6உமுதல் 15உவரை தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்து ஆசாரிகள் ஆவிக்குரிய விஷயங்களில் தேர்ச்சியடையும் நோக்கமாய் வைக்கப்படும் (Summer School) வகுப்புகளுக்காகவும், டையோஸிஷன் என்னும் அத்தியக்ஷாதீன முதல் கான்பெரன்ஸ் (Diocesan Conference) கூட்டத்திற்காகவும்;

2. அபாத்திர ஊழியருக் கண்டுபிடிக்கப்பட்டு, தள்ளப்பட்ட சேரி ஆபிரகாம் தோர்ணக்கல் மிஷன் சபைகளில் செய்துவரும் இடைஞ்சல் நீங்கும்படியாகவும்;

3. தோர்ணக்கல் ஆலயம் கட்டிமுடிப்பதற்கான உற்சாகம் திருநெல்வேலி சபைகளில் காணப்படவும், ஜனங்கள் உள்ளக்கனிவுடன் காணிக்கைபடைக்கவும்;

4. தெலுங்குநாட்டில் சுவிசேஷ ஊழியஞ்செய்வதற்குத் தேவையான மிஷனெரிமார் திருநெல்வேலி சபை ஊழியரிலிருந்து அநுக்கிரகம் பண்ணப்படும்படியாகவும்;

5. தோர்ணக்கல் மிஷன், சிங்கரேணி மிஷன், பனியர் மிஷன் மிஷனெரிமார், பள்ளிக்கூடங்களில் வாசிப்போர், ஆசாரிகள், மற்றவர்கள், ஆராய்ச்சியாளர் யாவருக்காகவும்;

6. நேமாம் மிஷனருக்காகவும் அவருடைய ஊழியங்களுக்காகவும்; வருஷாந்தர அறிக்கை, வர்த்தமானி முதலிய பிரசுரங்கள் கர்த்தரால் உபயோகிக்கப்படவும் ஜெபம்.

## கிறிஸ்தவர்களுக்குள் மிஷனெரி ஆவி உண்டாக ஜெபம்.

எவர்களுக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ அவர்களிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்று எங்களுக்கு எச்சரித்தருளிய தேவனே, சிறப்பான சுதந்தரத்தில் பங்கு பெற்றிருக்கிற உமது அடியாராகிய நாங்கள், தேவரீருடைய கரத்திலிருந்து சம்பூரணமாய்ப் பெற்றனுபவிக்கிற நன்மைகளை எங்கள் ஜெபத்திலும், தானதர்மங்களிலும், ஊழியத்திலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும், மற்றவர்களுடைய பிரயாசங்களில் பிரவேசித்திருக்கிற நாங்கள், ஏற்ற காலத்தில் எங்கள் பிரயாசங்களில் மற்றவர்களும் பிரவேசிக்கத்தக்கதாக பகற்காலமிருக்கும்போதே ஜாக்கிரதையாய் வேலை செய்யவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.—ஆமென்.

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணு 3. தபாற்கூலி உட்பட அணு 6. ஒன்பது பிரதிகள் ½ அணு முத்திரையில்போகும்.

மானேஜர்: வி. எஸ். காலிசன்,
பாளையங்கோட்டை.

Editor:—The Secretary, I. M. S. T.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

AUGUST, 1913 Registered No. M. 481.

# The Missionary Intelligencer

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 2 OCT 1913

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 8] ஆகஸ்ற்றுமீ 1913 [விலை பை 3

CONTENTS


| | |
|---|---|
| | 61 |
| Editorial Notes | 62 |
| The Acts of the Missionaries | 63 |
| Aurilineus Augustinus | 66 |
| The Annual letter of Missionaries | |


பொருளடக்கம்


| | |
|---|---|
| | 61 |
| பத்திராதிபர் குறிப்புகள் | 62 |
| மிஷனெரிமார் நடபடிகள் | 63 |
| அரிலியஸ் அகஸ்தீன் | 66 |
| மிஷனெரிமாரின் வருஷாந்தரக் கடிதம் | |


## பத்திராதிபர் குறிப்புகள்.

தேவசமுகம்.

இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்பது மிஷனெரி ஊழியஞ்செய்யும் மிஷனெரிமாருக்கும் சபைக்கும் அருள்நாதரின் வாக்கு. கர்த்தர் விசேஷித்தபிரகாரம் நம்மோடிருக்கிறாரென்பது என்ன சிறந்த சலாக்கியம்! எத்தனை ஆசீர்வாதமானது! இந்திய மிஷனெரி சங்கத்தையும் அதின் ஊழியங்களையும், அதின் மூலமாய்க் கர்த்தர் கட்டளையிட்டிருக்கும் சபைகளையும், இந்த ஊழியத்தில் பங்கு பெற்று வரும் திருநெல்வேலி சபையையும், கிறிஸ்தவர்களையும் கர்த்தர் தமது சமூகத்தினால் ஆசீர்வதித்து வருவதைப் பார்க்கும் கிறிஸ்தவர்கள் யாவரும் "கர்த்தர் இந்த ஸ்தலத்தில் (இந்த சங்கத்தில்) இருக்கிறார்" என்று அதிக உற்சாகத்துடன் கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக. நமது சங்கத்திற்காக அதிகமாக ஜெபிக்க ஏவப்படுவோமாக, முன்னிலும் அதிகமாய் உழைப்போமாக. "உயிரோடிருக்கும் சபையானது மிஷனெரி சபையாக இருக்கவேண்டும்" என்பது சர்வலோக மிஷனெரி சங்கக்கூட்டத்தின் தீர்மானம். "மிஷனெரி ஊழியமே சபையின் பிரதான ஊழியம்" என்பது ஆங்கிலேய திருச்சபை அத்தியக்ஷர்கள் அனுபவ சாட்சி. நமது சபைகள் வளர்ந்தோங்கவேண்டுமானால், அதிலுள்ள குறைவுகள் நீங்கவேண்டுமானால், கர்த்தருடைய வாக்குப்படி அவருடைய சமூகம் தங்கத்தக்கதாக மிஷனெரி ஊழியத்தை அதிகமதிகமாக நேசித்து, அதைத் தாங்கும்படி உள்ளக்கனிவுடன் முயற்சிப்போமாக.

நூற்றாண்டு.

மிஷனெரி வீரராகிய ஜட்சன் போதகர் பர்மாவிலிருந்து கஷ்டநஷ்டங்களுடன் சுவிசேஷ ஊழியஞ்செய்து தம் ஜீவனை அந்நாட்டிற்காக விட்டதை அறிவோமே. அவர் பர்மாவில் கால்மிதித்தது ஜூலைமீ 13உ ஜட்சன் நூறு வருஷமாகிறது. அதோடு அமெரிக்கன் பாப்டிஸ்டு புறதேச மிஷனெரி சங்கம் ஆரம்பித்தும் ஒரு நூற்றாண்டாகிறதாம். ஆகவே, நூற்றாண்டு மஹோற்சவம் ஒன்று ரங்கூனில் நாளது டிசம்பர்மீ 10உ முதல் 12-ம்உ வரையும் மூல்மினில் 14உ முதல் 16உ வரையும் மந்தலேயில் 19உ முதல் 21உ வரையும் கொண்டாடும்படி ஷை சங்க தாய்க்கமிற்றிமார் தீர்மானித்து, ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. பர்மா கவர்னர் துரை அவர்கள் ரங்கூன் மஹோற்சவக் கூட்டத்தில் பீடம் வகிப்பார்கள். அமெரிக்காவிலிருந்தும் பர்மாவிலுமுள்ள சகல வகுப்பாரான கிறிஸ்தவர்களிலிருந்தும் பிரதிநிதிகள் அக்கூட்டங்களுக்கு வருவார்கள். மிஷனெரி ஊழிய சம்பந்தமான பொருட்காட்சிகளும் நடத்தப்படும். மிஷனெரி சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் நூற்றாண்டு உற்சவத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நாமும் ஒரு பிரதிநிதி அனுப்பும்படி அமெரிக்காவிலிருந்து அழைப்புப் பெற்றிருக்கிறோம். இக்கூட்டங்களினால், மிஷனெரி ஆவியும் சிந்தையும் பர்மா கிறிஸ்தவர்களுக்குள்ளும் மற்றவர்களுக்கும் அனல் மூளவும், ஜட்சன் போதகரின் சுயவெறுப்பான ஜீவியத்தைச் சுதேச கிறிஸ்தவர்கள் பின்பற்றி, தங்கள் சுயதேசத்திற்காகத் தங்களையும் தங்களுடைய பொருட்களையும் அதிகமாய்ப் பிரதிஷ்டை செய்யவும் கர்த்தர் அருள்புரிவாராக. இந்த நூற்றாண்டுக் கூட்டங்கள் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாகவும் அவருடைய ராஜ்யவிர்த்திக்கு அநுகூலமாகவும் இருக்கும்படி கர்த்தர் அநுக்கிரகம்பண்ண நண்பர் ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

**தோர்ணக்கல் ஆலயம்.**

மெங்கோவில் ஓர் அத்தியக்ஷர் ஆலயம் கட்டுவதற்கு உகண்டா நாட்டு கிறிஸ்தவர்கள் எவ்வளவு உற்சாகமாய் உதவி புரிந்தார்கள்! புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் அந்த ஆலயக் கட்டுமானத்தில் தங்களுக்குப் பங்கு இருக்க வேண்டுமென்று ஆசித்து, உழைத்தார்கள். லக்ஷத்து சில்வானம் ரூபாய் சீக்கிரத்துக்குள் சேர்ந்தது. ஆலயமும் கட்டி முடிவானது. ஸ்தோத்திர ஆராதனையும் நடந்து, தேவாலயமும் பிரதிஷ்டையானது. திருநெல்வேலி கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்கும் சிலாக்கியங்களுக்குப் பதில் ஈவாக, தோர்ணக்கல் கிறிஸ்தவர்களுக்கு ஒரு நல்ல ஆலயம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று யோசித்து, பொருள் சேகரிக்க ஆரம்பித்தோம். அதற்குள்ளாக கர்த்தர் தோர்ணக்கல் ஒரு அத்தியக்ஷாதீனமாகவும், திருநெல்வேலி கிறிஸ்தவரொருவர் அதின் முதல் அத்தியக்ஷராகவும் அநுக்கிரகம் செய்தார். இதை நன்றியறிதலுடன் நாம் நன்குணர்ந்தவர்களென்பது மெய்யானால், ஓர் ஆலயமல்ல, ஓர் அத்தியக்ஷர் ஆலயம் சீக்கிரம் கட்டி முடிக்க வேண்டியது நமதுபேரில் விழுந்த கடமையல்லவா? நிலம் இனாமாகக் கிடைத்தது கர்த்தருடைய பெரிய கிருபை. ஆலயம் கட்டுவதற்கு சர்க்கார் அநுமதி கொடுத்திருப்பது கர்த்தருடைய சமுகம் நம்முடன் இருக்கிறதென்பதற்கு இன்னோர் அத்தாக்ஷி. கர்த்தருக்குச் சித்தமானால் முதல் இந்திய பிஷப் அபிஷேக தினமாகிய டிசம்பர்மீ 29உ நமது முதல் அத்தியக்ஷாலயத்திற்கு அஸ்திபாரம் போடவேண்டுமென்று நண்பர் பலர் ஆலோசனை சொல்லுகிறார்கள். இந்திய மிஷனெரி சங்கத்தை நேசிக்கும் யாவரும் சபையாகவும் தனிமையாகவும் தங்களுடைய காணிக்கைகளை உதாரமாகவும் உற்சாகமாகவும் கைமேல் அனுப்பிவிக்கக் கர்த்தர் அருள்புரிவாராக. "இறைக்கிற கிணறு ஊறும்" என்பது நமது அநுபவமே.

---

## மிஷனெரிமார் நடபடிகள்.

எருசலேமின் சங்க நடபடியைக் கவனிக்கும்போது, எக்காலத்துக்குமுரிய பாடங்கள் அதிலிருந்து தோன்றுவதைக் காணலாம். நான்கு விசேஷித்த சத்தியங்களைமட்டும் இங்கே சுருக்கமாய்க் கூறுவோம்.

1. புறஜாதிகளிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு சுயாதீனம் பிறந்தது.

"புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலக்கப்பண்ணலாகாது." பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது (அப். 15: 19, 29). இவ்வசனங்களே புறஜாதியாரின் சுயாதீனப் பட்டயம். யூதமார்க்க ஒழுக்காசாரங்கள் கிறிஸ்து சபைக்குச் செல்லமாட்டாது என்று ஒரே நீர்மையாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதினால், புறஜாதிகளில் கிறிஸ்தவர்களானவர்கள்மேல் விதிக்கப்படாதவை எவையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது நலம். விருத்தசேதனம் இவர்களுக்கில்லை. விட்டாசாரங்களைப்பற்றிய பழைய ஏற்பாட்டு விதிகளைக் கிறிஸ்தவர்கள் அநுசரிப்பது கட்டாயமில்லை. சுத்தமான மிருகம், அசுத்தமான மிருகம், தீட்டுகள், விலக்குகள், ஸ்நானங்கள், சுத்திகரிப்புகள் முதலியவற்றைப்பற்றிய பிரமாணங்களைக் கைக்கொள்ளாமலே, புறஜாதிகள் கிறிஸ்தவர்களாயிருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. தினசரி பலி, குற்றநிவாரண பலி, பாவ பலியைப்பற்றிய சட்டங்கள், தசமபாகத்தைப் பற்றிய கண்டிப்பான ஏற்பாடு, லேவியர் தர்மம், ஆசாரியர் பங்கு முதலியவற்றைப்பற்றிய பிரமாணங்கள் இவர்கள்மேல் செல்லாது. ஓய்வுநாளைப்பற்றிய கட்டளைகளும் சிக்ஷைகளும் புறஜாதிகளிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கில்லை. இதினால்பழைய ஏற்பாட்டில் சொல்லிய ஓய்வுநாள் பிரமாணம் தங்கள்மேல் விழுந்த கடமையென்று, புறஜாதியாரிலிருந்து வந்த சபைகள் ஒருகாலத்திலும் நினைக்கவுமில்லை, அவ்வாறு அநுசரிக்கவுமில்லை. கொலோ. 2. 16-ல் பரி. பவுல் இதைத் தெளிவாய் உரைக்கிறார். இக்னேஷியஸ் என்ற சபைப் பிதா கி. பி. சுமார் 100-ல் "நாம் ஓய்வுநாளை ஆசரிக்கிறதில்லை, கர்த்தருடைய நாளை ஆசரிக்கிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். புறஜாதிக் கிறிஸ்தவர்கள், யூதரைப்போல சனிக்கிழமையை ஓய்வுநாளாக அநுசரித்தார்கள் என்பதற்கு வேதத்திலாவது பூர்வ சபைப் பிதாக்களின் நூல்களிலாவது எவ்வித ஆதாரமுமில்லை. [1617-ல் இங்கிலாந்தில் எழும்பி, 1681-ல் அமெரிக்காவுக்குச் சென்ற ஓர் கூட்டத்தாரும் தென் இந்தியாவில் எழும்பிய சட்டம்பிள்ளை வகுப்பாருமே முதல் முதல் யூத ஓய்வுநாள் ஆசரிப்பைப் புறஜாதியாரான கிறிஸ்தவர்களுக்குள் ஆரம்பித்தவர்கள்]. 17-ம் நூற்றாண்டின் கடைசியில்தான் ஏழாம் நாள் வகுப்பார் என்ற பேர் ஆரம்பமாயிற்று.

மேற்சொல்லிய யூதப் பிரமாணங்களிலொன்றும் கிறிஸ்தவர்களான புறஜாதியார்மேல் விதிக்கப்படவில்லையென்பதும் இவைகளை அநுசரிக்காமலிருப்பது பாவமல்ல என்பதும் நிசமானால், இவைகளில் எதையும் கிறிஸ்தவர்கள் கவனிக்கவேண்டியதில்லையா? இக்கேள்விக்குப் பலவிதமான உத்தரவு உண்டு. யூதருக்கு விதிக்கப்பட்ட விதிகளில் சில சுகாதார விதிகள். இவ்வித ஒழுக்கங்களை அநுசரித்துவந்திருக்கும் யூதர் ஜனப்பெருக்கமுள்ளவர்களாயும், பல வியாதிகள் நீங்கினவர்களாயும், பொதுவாய் நற்சுகதேகிகளாயும் இருப்பதாக வைத்தியர் சொல்லுவதைப் பார்க்கும்போது, இந்த ஜாதியார் அநுசரித்துவரும் பழக்க ஒழுக்க போஜன விதிகளை மற்ற ஜாதியார் அநுசரித்தாலும், அதினால சரீரப்பிரகாரமான நன்மை உண்டென்று தீர்மானிக்கலாம். வேறு சில விதிகளை கிறிஸ்துநாதர் தமது திருச்சபைக்கு வேறுவிதமாய்க் கட்டளையிட்டிருக்கிறார். தர்ம விதிகள் இவ்விதமானவை. தசமபாகம் கிறிஸ்தவர்களுக்கு ஏன் கட்டாயமில்லையென்றால், கிறிஸ்துநாதர்மேலுள்ள அன்பினால் தன்னுடையதெல்லாவற்றையும் கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணுவது இப்போது கிறிஸ்தவனுடைய கடமையாயிருப்பதினாலேயே.

மேலும், ஏழாம் நாளைப்பற்றிய ஓய்வு விதிகளுக்கு புறஜாதிகளிலிருந்து வந்த கிறிஸ்தவர்களாகிய நாம் அடிமைப்பட்டவர்களில்லை என்பது தெளிவாயிருக்கிறது. பூர்வமுதல் வாரத்தின் முதலாம் நாள் கர்த்தருடைய நாளாகக் கொண்டாடப்பட்டது என்றும், இவ்வாறு ஏழாம் நாள் ஆசரிப்பைத் தள்ளின திருச்சபை நாலாம் கற்பனையை ஏற்றுக்கொண்டதைப் பார்க்கும்போது, அக்கற்பனையில் காட்டிய கட்டளை ஏழாம் நாளை மாத்திரம் பற்றின தேவசித்தத்தைக் காட்டும் கற்பனை என்று ஆதித் திருச்சபை நினைக்காமல், வாரத்தில் ஓர் நாளைத் தேவனுக்கென்று பரிசுத்தம்பண்ணவேண்டும் என்ற கருத்தே அதில் அடங்கியிருக்கிறதாக அர்த்தம்பண்ணினார்கள் என்று தோன்றுகிறது. இதோடு, அருள்நாதர் உயிர்த்தெழுந்து காணப்பட்டதும் பரிசுத்த ஆவியைப் பொழிந்ததும் வாரத்தின் முதலாம் நாளானபடியால், அந்த நாளே கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்கப்பட்ட கர்த்தருடைய நாளென்று அநுசரித்தார்கள். ஆகவே, நாம் இப்போது ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தமாய் ஆசரிப்பதற்குக் காரணம்: அது யூதருடைய ஓய்வுநாள் போன்ற ஓய்வுநாளாகவிருக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறதினால் அல்ல, அதாவது அந்நாளில் வேலை செய்வோமானால், நாம் கல்லெறிந்து கொலைசெய்யப்படவேண்டுமென்று நமக்குக் கட்டளையிட்டிருப்பதினாலல்ல, வாரத்தின் ஆறு நாளில் கஷ்டப்பட்டு வேலைசெய்தபின் ஒருநாளை தேவனுக்குப் பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டுமென்பது தேவசித்தமாயிருப்பதினாலும், இதற்கிசைவாக நமதாண்டவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்து, தமது ஆவியைப் பொழிந்தருளின வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை கர்த்தருடைய நாளாக அன்போடும் சந்தோஷத்தோடும் ஆசரிக்கும்படி அப்போஸ்தலர் காலத்து சபையும் ஆதித் திருச்சபையும் ஆரம்பித்ததினாலேயுமே. யூதர் தங்கள் ஓய்வுநாளை அவ்வளவு கண்டிப்பாய் ஆசரித்தார்களானால், நமக்காக உயிர்துறந்த நமது கர்த்தருடைய நாளை எவ்வளவு அருமை பெருமையாய்க் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம்!

II. திருச்சபையின் ஒருமைப்பாடு ஸ்தாபிக்கப்பட்டது. யூதர் புறஜாதியார் என்று இரு வகுப்பார் புறஜாதியாரான போது, ஒரு ஜாதியார் ஒரு சபை மற்றவர்கள் வேறு சபை, ஒருவருக்கு ஒரு பிரமாணம் மற்றவர்களுக்கு வேறு பிரமாணம், ஒருவருக்கு ஒரு நற்கருணை மற்றவர்களுக்கு வேறே நற்கருணை இருக்கலாம் என்பது சங்கத்தில் கூடின ஒருவர் உள்ளத்திலும் உதிக்கவில்லை. யூதர்முறையில் வைராக்கியமுள்ள பரி. பேதுருவே இதைக் குறித்துப் பலத்த சாக்ஷி கூறினார். 'இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் .... யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார். அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோம்' என்கிறார்.

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் ஜாதியினிமித்தமாவது, தேசத்தினிமித்தமாவது, பாஷையினிமித்தமாவது பிரிவினையிருக்கக்கூடாதென்ற பிரமாணம் பரிஷ்காரமாய்க் கூறப்பட்டது. எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை.

எத்தேசத்தார் சேர்ந்தாலும்
  சபை ஒன்றே ஒன்றாம்.
ஒரே விஸ்வாசத்தாலும்
  ஒரே இரட்சிப்புண்டாம்.
ஒரே தெய்வீக நாமம்
  சபையை இணைக்கும்.
ஓர் திவ்ய ஞானாகாரம்
  பக்தரைப் போஷிக்கும்.

பாஷையினிமித்தமும், ஆசாரத்தினிமித்தமும், போஜன பதார்த்தங்களினிமித்தமும், ஜாதியினிமித்தமும், நிறத்தினிமித்தமும் பேதங்களும் பிரிவினைகளும் கக்ஷிகளும் நிறைந்த இந்த தேசத்தின் நடுவில் ஐக்கியத்தை வற்புறுத்தி ஸ்தாபிக்கும் ஸ்தம்பமாக கிறிஸ்துசபை நிற்கிறது. சபை ஒன்று, ஏனென்றால் சரீரம் ஒன்று. ஆகவே, பரிசுத்த ஞானஸ்நானத்தால் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கும் அவயவங்களாயிருக்கிறார்கள். மேல் குலத்தவரானாலும் கீழ்குலத்தவரானாலும், ஐரோப்பியரானாலும் இந்தியரானாலும், 'சபை ஒன்றே ஒன்றாம்'. இச்சத்தியத்தை வெளியரங்கமாய்க் காட்டவேண்டியது கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவர் பேரிலும் விழுந்த கடமை. சிலர் ஈனஜாதியிலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் என்று சொல்லி, அவர்களை அவமதிப்பதும், ஆலயத்திற்கு வர இடங்கொடாதிருப்பதும் பரிசுத்த பந்தியில் முன் பின் என்று முறை வைப்பதும், பூர்வ குலங்களின் பிரிவின்படி சேர்ந்துகொள்வதும், கக்ஷி பாராட்டுவதும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒருமைப்பாட்டிற்கு விரோதமான பாவங்கள் என்பதை மறந்துபோகாதிருப்போமாக. கிறிஸ்துவுக்குள், அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஐக்கியம் கூடிய காரியம் என்று இந்துக்கள் அறியவேண்டும். கிறிஸ்துசபை இதற்குச் சாட்சியாகவும், அடையாளமாகவும், பிரிவினைகள் நிறைந்துள்ள இந்த தேசத்தில் முதலாய் ஐக்கிய ஐக்கியத்தை அடையும் வழி ஒன்றிருக்கிறது என்றும், கிறிஸ்து சபையின் மூலமாய் இவ்வைக்கியம் உண்டாகும் என்றும் திருச்சபை காட்டவேண்டும்; இதற்காக ஜெபிப்போமாக. இதற்காக கிரியை செய்வோமாக. இதற்கு ஒவ்வாத காரியங்களை அகற்றுவோமாக. தேவன் நம்மோடிருக்கிறார்.

---

## அரிலியஸ் அகஸ்தீன்.

(1) கிறிஸ்துசபையில் இவருக்கிருக்கும் கனம்:—தேவனுடைய சபையின் பிதாக்களும் வழிகாட்டிகளுமாகப் பிரசித்திபெற்றவர்களில் எவரும் அகஸ்டினைப்போல அவ்வளவு நன்றாய் அறிந்து, மதித்து நேசிக்கப்பட்டவரில்லை. மார்க்க சம்பந்தமான விஷயங்களைப் போதிப்பதிலும், அவற்றில் ஆலோசனை பகர்வதிலும் உலகமெங்குமுள்ள கிறிஸ்து சபையின் பல பிரிவுகளிலும் இவருக்கு வெகு மதிப்புண்டு. கத்தோலிக்க சபையாரும், புரோட்டெஸ்ற்றன்ற சபையாரும், லுதரன், கல்வின்ஸ் சபையினரோரும் இவர்மேல் உரிமை பாராட்டுகிறார்கள். கிறிஸ்துமார்க்க சத்தியத்தைப் பரிபாலிக்க இவர் கருதி

னதற்காக அல்ல, தேவனுடைய சபையில் விசுவாசத்தின் ஒருமைப்பாட்டுக்காகவும், பலத்த ஏற்பாடுகளுக்காகவும், கண்டிப்பான சிக்ஷா முறைகளுக்காகவும் அதிகக் கரிசனையுள்ளவராதலால்தான் கதோலிக் சபையின் அங்கத்தாரனைவரும், இவரை அதிகமாய் நேசித்தார்கள். ஆனால் சீர்திருத்தக் காரரும் புரோட்டஸ்டன்ற் மகாத்மாக்களும் இவரைத் தங்கள் போதகராகவும் எஜமானாகவும் அங்கீகரித்த காரணம்: மனிதனுடைய உள்ளத்தை ஆழ்ந்தறியத்தக்கதாக இவருக்கிருந்த சாமர்த்தியமும், ரக்ஷிப்பின் ரகசிய மகத்துவங்களைப்பற்றி இவருக்கிருந்த நுட்பமான அறிவும், தேவகிருபையைப்பற்றி இவருடைய சொந்த அநுபவத்தில் காணப்பட்ட ஆழ்ந்த அநுபவமுமே. உத்தமமான ஒவ்வொரு கிறிஸ்தவ ஆத்துமாவும் அவரில் அன்பு பாராட்டுவதற்குக் காரணமாயிருக்கதெல்லாம் கூடி, தேவனோடு ஐக்யப்பட்டு ஜீவிக்க அவருக்கிருந்த பேராவலும், சத்தியத்தை ஆராய்ந்தறியப்பயப்படாத குணமும், உள்ளத்திலுண்டான போராட்டங்களும், அவருக்கு நேரிட்ட துக்கங்களும் சோதனைகளும், நான் என்ற எண்ணத்தின்மேல் அவர் அடைந்த மகிமையான வெற்றியுமே என்கலாம்.

(2) பெற்றோர், பிறப்பிடம். பரி: அகஸ்ற்றின் கி. பி. 354 நவம்பர் 13-ல் ரோம ராஜ்யத்தைச் சேர்ந்த நியுமிடியா மகாணத்திலுள்ள தாகஸ்தி (Tagaste) என்னும் சிறிய பட்டணத்தில் பிறந்தவர். இம்மாகாணம் செழிப்புக்கும் ஐசுவரியத்துக்கும் பயிர்த்தொழிலுக்கும் பேர்போனது. ஜனங்களில் அறிவாளிகளும் சொற்சக்தியுள்ளவர்களும் லத்தின் பாஷை பேசக்கூடும். நீகிரியர், கிரேக்கர், நியுமிதியர் முதலான பல வகுப்பாரிலிருந்து தோன்றினவர்களாதலால் சற்று மங்கின நிறமுள்ளவர்களாயிருந்தார்கள். பேட்ரிஷியஸ் என்னும் இவருடைய தகப்பனார் தம் சொந்தப்பட்டணத்தில் மாஜிஸ்திரேட் உத்தியோகம் வகித்துவந்ததாகத் தெரிகிறது. அகஸ்ற்றின் தாமே சொல்லுகிறபடி அவர் பிறக்கும் சமயம் தகப்பனார் அஞ்ஞானியாயும், அப்பொழுதும் பின்னால் வெகுகாலமுமாக அஞ்ஞானியைப்போல் பாவத்திலேயேயும் ஜீவித்துவந்தார். கோபக்காரனென்றாலும், நுணமுள்ளவராயுமிருந்தார். ஓயாத உழைப்பும் பிரயாசையுமுள்ளவராதலால், இம்மைக்குரிய மகிமையையும் கனத்தையும் மட்டும் கூடியவரை சம்பாதிக்க முயன்றாரேயொழிய, மறுமையைப்பற்றிய எண்ணமும் கவலையும் கொஞ்சமேனும் கிடையாது. தன் நம்பிக்கையெல்லாம் தனக்கு அதிப்பிரியமான பிள்ளை அகுஸ்ற்றின் பேரிலேயே யிருந்ததாகத் தோன்றுகிறது. என்றாலும், கடைசியில் அவர் மனைவியின் ஓயாத ஜெபத்தின் பலனாகவும் அவளுடைய பரிசுத்தமான கிறிஸ்தவ ஜீவியத்தின் உத்தமமான மாதிரியையும் பார்த்து, அவன் சாகிறதற்கு சில காலத்துக்கு முன் மனைவியின் மார்க்கத்தையே நேசித்து ஞானஸ்நானத்தினால் சபையின் ஐக்கியத்தில் சேர்க்கப்பட்டார்.

மோனிக்கா என்னும் அவர் தாயாரோ உண்மையான கிறிஸ்தவளும் தேவபக்தியுள்ளவளுமா யிருந்தாள். அவளுடைய அமர்ந்த குணமும், ஆழ்ந்த பக்தியும், அழகிய விசுவாசமும், மார்க்க வைராக்கியமும், பொறுமையுள்ள ஜெபமும், தனக்கருமையானவர்களின் ஆத்தும வாழ்க்கைப்பற்றி அவளுக்கிருந்த தீராத வாஞ்சையும் "இஸ்ரவேலுக்குத் தாயானவள்' என்று சொல்லத்தக்க ஓர் சிறந்த மாதிரியாக அவளை மற்றவர்களுக்குக் காட்டுவதுமன்றி, திருச்சபைக்கு எக்காலமும் அவள்மேல் அருமையும் உரிமையும் உண்டாக்கியிருக்கிறது. தன் மகனுடைய ஜீவிய ஓட்டத்தை அதிகக் கவலையோடு கவனித்துவந்தாள். அவன் எவ்வளவோ தவறினாலும், பாவத்தில் மிதமிஞ்சிப் போனாலும், எப்படியாவது பின்னால் குணப்படுவான் என்பதைப்பற்றி மட்டுக்குமிஞ்சி நம்பிக்கையுள்ளவளாயிருந்து, தன் நம்பிக்கைக் கதிகமாய் காரியம் கைகூடி வருவதைக் காணவும் கிருபை பெற்றாள்.

(3) படிப்பும், பாலியத்தின் தவறுதல்களும்: பரி: அகிஸ்ற்றினுக்குப் பிரதமபயிற்சிசாலை அவர் சொந்த வீடே. அவரது பிரதம ஆசிரியர் பெற்ற தாயாரே. அவள் இளமையில்தானே தன் மகனை இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும் அன்பிலும் போதித்து வந்தாள். இவர்தாமே சொல்லுகிறது போல், தாய்ப்பாலுண்ணும்போதே கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய அறிவையும் அடைந்துகொண்டார். அவளுடைய போதனை சிலகாலம் அவரில் ஆழமாய்ப் பதிந்ததுமல்லாமல், அவளுடைய இன்பமான வல்லமையும் அவருடைய ஜீவியத்தில் நன்மைக்கேதுவாய் கிரியைசெய்தது. தகப்பனாரின் ஆக்ஷேபனையினிமித்தம் அகுஸ்தின் சிறுபிராயத்தில் ஞானஸ்நானம் பெறவில்லை. இளம்பிராயத்தில்தானே கொடிய வியாதியில் அகப்பட்டபோது, மறு ஜனனமாகிய சாக்ரமெந்தின் மூலமாய் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க ஆசைப்பட்டார். என்றாலும் வியாதி நீங்கியதும் சாக்ரமெந்தைத் தாமதப்படச்செய்ததைக்குறித்து அகுஸ்தின் பிற்காலம் அதிகமாய் துக்கித்து, பாவத்தோடு தனக்குள்ளிருந்த போராட்டத்தில் அதிகமாய்த் தனக்குண்டான அபஜெயத்திற்கும் பெலவீனத்துக்கும் இது தான் காரணமென்கிறார்.

அகுஸ்தின் கலாசாலைப் பயிற்சி முதல்முதல் தன் சொந்தப்பட்டணத்திலேயே பெறலானார். மகனது சாமர்த்தியத்தை இளமையில்தானே கவனித்த தகப்பனார் அதிக வருப்படி கற்கக்கூடியதும் கண்ணியமானதுமான வாய்சாதுரியன் வேலைக்கென்று அவரை நியமித்தார். அவர் ஜீவியத்தின் வேலைக்கென்று அவரை ஆயத்தப்படுத்த எந்தக் கஷ்டத்தையும் செலவையும் பெரிதாக எண்ணவில்லை. சிலகாலம் சமீபத்திலுள்ள மடௌரா நகரிலும் அதன்பின் கார்தேஜிலும் படித்தார். லத்தின் பாஷையை அதிக விருப்பத்தோடு கற்று, அதன் காவியங்களிலும் தேர்ச்சியடைந்தார் என்பதை அவருடைய பிரபந்தங்களினாலறியலாம். கிரேக்க பாஷையில் அவரது அறிவும் திறமையும் குறைவுள்ளதுதான். இக்காலத்தில் அவரது மாதாவின் பக்தியுள்ள கட்டுப்பாட்டிலும் சொல்வருகியிலுமிருந்து படிப்படியாய் விலகி, பிடிவாதமும் சோம்பலும், பாடங்களைப் பற்றிய அசட்டையும், அவமானத்தை எண்ணாமையும் தலையெடுத்து, அஞ்ஞான விளையாட்டுகளுக்கு முழுவதுமாய் தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டார். மூர்க்ககுணமும் கவலையீனமும் அதிகரிக்க, விளையாட்டுக்கென்றும் மற்றவர்கள் பார்த்து அதிசயிக்கவுமே பாவத்தைச்செய்யப் புகுந்தார். ஒருநாள்



த்து அதிசயிக்கவுமே பாவத்தைச்செய்யப் புகுந்தார். ஒருநாள்
இரவு தன் பள்ளித்தோழரோடு சேர்ந்து பக்கத்திலுள்ள தோட்
டத்தில் கொள்ளையடித்து, ஒரு மூடை பழங்களை எவரும் அறி
யாது திருடிக்கொண்டுவந்து, ஒன்றையும் அவர்களில் ஒருவ
ரும் ருசி பாராமலே பன்றிக்கூட்டங்களுக்கு எறிந்துவிட்டார்
கள். வாதப்பிரியனாயும் சன்மார்க்கத்தைக் கெடுக்கக்கூடிய
சந்தோஷங்களில் சாதாரணமாய் உழன்றுகொண்டு மிருந்தார்.
17 வயதில் படிப்பை முடிக்க கார்தேஜ் நகர் சென்ற
போது, அவர் அதிகமாய்க் கெட்டுப்போனார். நாடகக் கார
ரோடு கூடி, அவர்கள் கெட்ட நடக்கையைப் பின்பற்றி, அசுத்
தமும் அவலக்ஷணமுமான அன்பில் மூழ்கி, 18 பிராயத்தி
லேயே முறைகேடாய் ஒரு பெண்ணிடத்தில் ஆண் குழந்தை
ஒன்றைப்பெற்று, 'தேவ ஈவு'' என்ற கருத்துள்ள பெயரும்
அதற்கிட்டு, அதன்மேல் அதிகப் பற்றுதலுள்ளவரானார். இந்தத்
தவறுதலான ஜீவியம் செய்தகாலமெல்லாம் அவர் மனதுக்கு
அமைதலில்லை. தன்னை முற்றிலும் கடினப்படுத்தாத எந்த
மனுஷனுடைய உள்ளத்திலும் இருக்கக்கூடியபடி அவரிலும்
வேளா வேளைகளில் சொற்பமாயாவது அதிகமாயாவது தேவ
னைத் தேடவேண்டுமென்ற தீரா ஆவல் இல்லாமல் போக
வில்லை. இவ்வளவு தவறுதல்களின் மத்தியிலும் சத்தியத்தை
யறிய உண்மையாய்ப் பிரயாசப்பட்டு வந்தார். வெகுசாதுரி
யத்தோடு எழுதப்பட்ட "ஹார்ற்றென்ஷியஸ்'' (Hortensius)
என்ற ஓர் புஸ்தகத்தை வாசிக்கவே, சத்தியத்தை அறியும் அவா
வில் புது உயிர் கொண்டார். இப்புஸ்தகம் சத்தியத்தையும்
ஞானத்தையும் நேசிக்க வழி எழுப்பிவிட்டது. என்றாலும்,
சத்தியத்தையறியக் கவலைப்பட்டபோதுதானே அதிகமாய் வழி
விலகி, மனிக்கேயருடைய தப்பறையான கொள்கைகளுக்குள்
சிக்கிக்கொண்டார்.
(4) அகுஸ்தின் ஜீவியத்தில் மனிக்கேயருடைய தப்ப
றையான உபதேசம் மேற்கொள்ளல். இக்காலத்தில்
தனக்கு ஆத்தும சமாதானமும் மன ஆறுதலுமுண்டாக அகுஸ்
தின் தேடிப்போன கூட்டத்தார் "மனி'' என்பவரிலிருந்துண்
டான ஓர் கிறிஸ்தவ வகுப்பாரே. இந்த மனி என்பவர் 216-ம்
வருஷத்தில் பிறந்தவர். இவருடைய மார்க்கத்தில் கிறிஸ்து
மார்க்க உபதேசங்களோடு ஸோராஸ்ற்றர்மார்க்கத்திலும் இந்து
மார்க்கத்திலுமுள்ள தப்பறைகளும் சேர்ந்திருந்தது. தேவ
னுடைய ராஜ்யமும் பிசாசின் ராஜ்யமும் ஆதிமுதல் இரண்டு
ஆதி நித்யவஸ்துக்களாய், தெய்வத்தில் கலந்திருந்ததாகப்போதித்
தார். இருளையும் வெளிச்சத்தையும் ஓர் ராஜ்யமாகப் பாவித்து,
ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்தும் ஓரிடத்தில் இரண்டும்
ஒன்றையொன்றடுத்திருந்ததாகவும், தேவனிலிருந்து வெளிப்
படும் அம்சங்களால் தேவனுடைய ராஜ்யம் காக்கப்படுவதாயும்,
அந்தகார ராஜ்யத்திலிருந்து சாத்தானும் அசுத்தாவிகளும்
வெளிப்படுவதாயும் போதித்தார்கள். வெளிச்சமும் இருளும்
சேர்ந்திருந்ததிலிருந்து இப்போதிருக்கும் உலகத்தின் அம்சங்
கள் வெளிப்பட்டனவாம். எல்லாவற்றிற்கும் மேலாக "மனி''
என்பவர்தான் மீட்புக்கும் விடுதலைக்கும் காரணர் என்றும்,
அவரை 'தலைவர்'' என்றும் "வெளிச்சத்தின் ஸ்தானபதி
என்றும்'' 'தேற்றரவாளன்'' என்றும் அழைக்கிறார்கள்.

மனிக்கேயர் கொள்கைப்படி இயேசு ஒரு மாயாத் தோற்றம். ஆகவே, சுவிசேஷத்திலுள்ள இயேசுகிறிஸ்துவை அவர்கள் தள்ளிப்போடுகிறார்கள். இரட்சிப்பின் மார்க்கம் உழைப்பிலும் உபத்திரவத்திலும்தான் இருக்கிறதென்கிறார்கள். சன்னியாசத்துவத்தினால்மட்டும் அந்தகார அணுக்களிலிருந்து விடுதலை பெறலாமாம். முக்கியமாய் எவ்வகையான சிற்றின்ப உல்லாசங்களினின்றும் விலகுவதுதான் அவசியம். இந்த ஜீவியத்தில் இந்த அந்தகார அணுக்களிலிருந்து விடுதலை பெறக்கூடாதவர்கள், மரணத்துக்குப்பின் இன்னோர் சுத்திகரிப்பின் கஷ்டத்தையனுபவித்தபின்தான் மோக்ஷம் சேரக்கூடும் என்று போதித்துவந்தார்கள். சிற்றின்பத்துக்குத் துணைசெய்யும் எவ்வகையான போஜனமும் வியாபாரமும் இவர்களால் விலக்கப்பட்டது. விவாகமும்கூட, இந்தப்போதகர்களால் கூடாதென்று தடுக்கப்பட்ட ஓர் விஷயம்.

இக்கொள்கைக்காரருடைய ஏற்பாடுகள் வெகு பலமாயிருந்தன. மெம்பர்களை இரு வகுப்பாகப் பிரித்து, அவர்களெல்லாருக்கும் மேலாக மனி என்பவராவது அவர் பின்னடியாராகத் தெரிந்தெடுக்கப்படுபவராவது பாப்புவானவரைப் போல் முழுச்சபைக்கும் தலைவராகவும் அதிகாரியாகவும் நியமுகம் பெற்றார். மனிக்கேயருடைய ஆராதனை ஆவிக்குரியதாயும் வெகு சாதாரணமாயுமிருந்தது. முழுவதும் பாட்டும் ஜெபமும், பிரசங்கமும், ஆராதனையும்தான். ஒரு நாளில் நாலுதரம் ஜெபம் செய்வார்கள். ஒவ்வொரு நேரமும் ஸ்நானம் செய்துகொள்வார்கள். ஞானஸ்நானம் நற்கருணை என்னும் முறைமைகளையனுசரிப்பதில் "மனி'' என்பவரால் சேர்க்கப்பட்ட பல சடங்குகளுண்டு. ஞானஸ்நானத்தில் தண்ணீருக்குப் பதிலாய் எண்ணெயும் ராப்போஜனம் பரிமாறுதலில் அப்பம்மட்டும் வழங்கிவந்தார்கள்.

இச்சங்கத்தாரின் சட்டவார்த்தைகள் "புத்தி,'' "சாஸ்திரம்,'' "ஞானம்'' என்பவைதான். ஆகவே, அகுஸ்தின் இவர்களால் இழுப்புண்டது ஆச்சரியமல்ல. இவரது இயல்பான தன்மைக்கு இம்மார்க்கம் முழுவதும் பொருந்தினதுபோல் காணப்பட்டது. மனிக்கேயரைச் சேரும்பொழுது அகுஸ்தினுக்கு உத்தேசம் 19 வயது. கிட்டத்தட்ட 8 வருஷம் அவர்கள் வலையில் சிக்குண்டு, அவர்கள் உபதேசத்தில் திருப்திகொண்டு, நாள் செல்லச்செல்ல சத்தியத்தைப்பற்றி யதிகத் தெளிவும் அறிவுமுண்டாகுமென்று நம்பினார். இந்தக் காரியம் அவர் தாயாருக்கு அதிக மன நோவுக்கேதுகரமாயிருந்தது. தன் மகன் முன் ஒர்காலுமில்லாதபடி தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமாய் விலகிப்போனதாயும் அநேகமாய்த் தொலைந்தே போனார் என்றும் தோன்றிற்று. இச்சமயம் அவளுக்குக் கிடைத்த ஓர் தரிசனம் அதிக ஆறுதலாயிருந்தது. அதை அகுஸ்தின் பின்வருமாறு விவரிக்கிறார்: —

"தாய் மோனிக்காள் ஓர் மரப்பலகையின்மேல் நிற்பதாயும், அவளுடைய மனம் நொந்து உடைந்துபோயிருக்கும் போது ஓர் பிரகாசமான வாலிபன் சந்தோஷத்தோடும் புன்னகையோடும் அவளண்டைவந்து, வழக்கம்போல தான் அறிய வேண்டுமென்ற நோக்கத்தோடல்ல, அவளுக்குப் போதிக்க

வேண்டுமென்ற நோக்கமாய், அவனுடைய துக்கத்துக்கும் அன்றுடைக் கண்ணீருக்கும் காரணம் என்ன என்று வினவ, அவன் தன் மகனது அழிவைக்குறித்துப் புலம்புவதாய்ச் சொல்ல, “அகலேப் பார்த்து அமரிக்கையாயிரு, நீ இருக்கிற இடத்தில் உன் மகனும் இருப்பதைக் கவனித்துப் பார்,” என்று சொன்னதாகவும், அப்படியே அவன் பார்த்தபோது அவன் நிற்கும் அதே பலகையில் மகனும் நிற்கக் கண்டதாகவும், மகனிடம் மறுநாள் காலையில் அதிக சந்தோஷத்தோடு சொற்பனத்தைச் சொல்ல, அவன் சிரித்துக்கொண்டு, அதற்கு அர்த்தம்: தன் தாயாரும் மனிக்கேயர் சங்கத்தைச் சேரவேண்டுமென்பதுதான் என்பதற்குச் சந்தேகமில்லை என்றான். அதே சமயம் தன் மனநோவை வயோதிபரான தன் அத்தியக்ஷருக்குத் தெரிவித்து, அவர் மறுமொழியாக “அவ்வளவு கண்ணீரும் ஜெபமும் பெற்றபிள்ளை இழந்துபோவது கூடாதகாரியம்” என்ற வார்த்தைகளினாலும் அதிக ஆறுதலடைந்தாள்.

அகுஸ்தீன் மனிக்கேயரிடம் தான் தேடின சமாதானம் அடையவில்லை. அவர் ஆத்துமாவில் தேவனுடைய பரிசுத்தாவியானவர் இன்னும் கிரியை செய்ததால், படிப்படியாய் அவர் கண்கள் திறக்கப்பட்டன. தன் போதகர்கள் வெளியிட்ட உபதேசங்கள் ஒன்றுமில்லை யென்பதையும் மானிக்கேயரில் மேலானவர்களிடமிருந்து தான் எதிர்பார்த்த பரம ஞானமெல்லாம் வெறும் பொய்யும் அபத்தமுமென்று மிகுந்த மனநோவோடு கண்டுபிடித்தார். அல்லாமலும் கடந்த பலசம்பவங்களினால் தன் மார்க்கத்தலைவர்களது உத்தமம், உண்மை, சாமர்த்தியத்தைப்பற்றியும், அவருக்கிருந்த நம்பிக்கை குறைந்துபோயிற்று. தனக்குத் திருப்தியுண்டாகும்படி மனிக்கேயரத்தியக்ஷரான பாஸ்றஸ் (Faustus) என்னும் சாதுரியவானோடு பலமுறை சம்பாஷித்துக் கடைசியாய் ஏமாந்துபோனார். அதினால் மனிக்கேயருடைய சம்பந்தத்தை ஒழிக்கும்படி நிர்மானித்து, ஞானத்தையும் சத்தியத்தையும் தேடிக் கண்டுபிடிக்க, வீணாய் அநேக வருஷங்களை ஒரு பலனுமில்லாமல் கழித்துவிட்டதைப்பட்டு அதிக வெறுப்பும் மனக்கிலேசமுமுள்ளவராய், வெகு சீக்கிரத்தில் அந்த சங்கத்தைவிட்டு நீங்கிக்கொண்டார்.

---

## மிஷனெரிமாரின் வருஷாந்தரக் கடிதம்.

### I

கடந்த வருஷத்தின் ஆரம்பத்தில் ஏப்ரல் மீ தொடங்கி, ஆகஸ்ற்று மீ வரையுமுள்ள ஐந்து மாதக்காலம் நான் என் குடும்பத்தாருடன் திருநெல்வேலியிற் பின்னிட்டேன். திருநெல்வேலிக்குப் புறப்படுமுன் டைபாய்ட் என்ற விஷ சுரத்தால் அங்கு வருகையில் ஒரு பர்லாங்குதூரம் நடப்பதும் கஷ்டமாயிருந்தது. மேமாத ஆவிக்குரிய கூட்டத்துக்குப்போய்த் திரும்புகையில், டக்கரம்மாள்புரத்துக்கும் மருதகுளத்துக்கும் இடையில் நின்று நின்றும், உட்கார்ந்து இளைப்பாறியும், நிறைவேற்றிய 4½ மைல் பிரயாணமே அச்சுகவீனத்துக்குப்பின் அதுவரையும் செய்த நீண்ட பிரயாணம்.

இந்த அளவில் பெலவீனமாயிருந்தாலும், நியாயமாய்க் கிடைக்கவேண்டிய 6 மாத ரஜாவையும் திருநெல்வேலியிற் பின்னிடாமல், 5 மாதத்திலேயே தோர்ணக்கல்லுக்குத் திரும்பிவிடவேண்டியதவசியமாயிருந்ததால், திருநெல்வேலியில் சற்றுப்பிரசங்க வேலை செய்யாதபடியிருக்கக் கமிற்றிமார் தீர்மானித்தார்கள்.

மருதகுளத்திலும் அதின் சமீபத்திலுள்ள சில இடங்களிலும் ஒருவிசை டக்கரம்மாள்புரம் ஆவிக்குரிய கூட்டத்திலும் மிஷனெரி ஊழியத்தின் சம்பந்தமாய் வேலைசெய்ததுபோக வேறு வேலை சங்க சம்பந்தமாய்ச் செய்யவில்லை.

ஆகஸ்ற்று மாதக் கடைசியில் திருநெல்வேலியைவிட்டு, செப்றெம்பர் துவக்கத்தில் தோர்ணக்கல் வந்துசேர்ந்தேன். கனம் அசரியா ஐயரவர்கள் அத்தியட்ச பட்டாபிஷேகத்துக்கு முன் ஆயத்தம் செய்வதற்கென்று குடைக்கானலுக்குப் புறப்பட சகல பிரயத்தனத்துடனுமிருந்ததால், நான் வந்தவுடன் பள்ளிக்கூடங்களையும், மிஷன் கணக்குகளையும், தான் செய்துவந்த சபை வேலைகளையும் என்னிடத்தில் ஒப்புவித்து கொடைக்கானலுக்குப் புறப்பட்டார்கள்.

நான் செய்யும்படி விதிக்கப்பட்ட வேலைகள், (1) பள்ளிக்கூடங்கள் சம்பந்தமானவை, (2) சபை சம்பந்தமானவை, (3) மிஷன் சம்பந்தமானவை.

(1) பள்ளிக்கூட சம்பந்தமாய்:—போர்டிங் ஆண் பெண் பாடசாலைகளையும், உபாத்திமார் அப்பியாசப் பாடசாலையையும் மேற்பார்ப்பதும், கூடுமானபோதெல்லாம் அவர்களுக்குப் படிப்பிப்பதும்.

(2) சபை சம்பந்தமாய்:—(a) தோர்ணக்கல் வட்டத்துச் சபைகளை மேற்பார்ப்பதும், (b) மானுக்கோட்டைத் தாலுகா முழுவதிலுமுள்ள இந்திய மிஷனெரி சங்கத்தைச்சேர்ந்த ஞானஸ்நானம், பரி. இராப்போஜனம், விவாகம் முதலியவை நடத்துவதும்.

(3) மிஷன் சம்பந்தமாய்:—(a) கணக்குகளை வைத்துக்கொள்வதும், (b) செக்றெறிக்குரிய மினிற் முதலிய எழுத்துகளும், (c) கடிதப் போக்குவரவுகளும் செய்யவேண்டியவைகள்.

என்னைப்போலொத்த ஒரு சாமானியமான மனிதனுக்கு இம்மூன்று வேலைகளில் ஒன்றைமட்டும் சரிவரச்செய்தாலுமே போதும். இம்மூன்றையும் சேர்த்து நான் பார்த்துவந்தபோது அந்தந்த ஊழியமும் மகா குறைவாய்மட்டும் செய்யப்படக் கூடியதாயிருந்தது.

பள்ளிக்கூடம்:—

தொகை:—போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தில் 26 பையன்களும், பெண்கள் பள்ளிக்கூடத்தில் 22 பிள்ளைகளும், உபாத்திமார் அப்பியாசப் பாடசாலையில் ஆண்கள் 7 பேரும் பெண்கள் 4 பேரும் படித்துவருகிறார்கள்.

வகுப்பு:—போர்டிங் பள்ளிக்கூடங்களில் 1-ம் படியில் 17 பிள்ளைகள், 2-ல் 12 பேர், 3-ல் 6 பேர், 4-ல் 9 பேர், 5-ல்



3 பேர், ஆக மொத்தம் 43 பேர் படிக்கிறார்கள். கீழ்வகுப்புகளில் அதிகப் பிள்ளைகளும் மேல்வகுப்புகளில் கொஞ்சப்பேர் மட்டும் படிக்கிறதாகக் கணக்கினால் அறியும் யாரும், பிள்ளைகள் உயர்ந்த வகுப்புகளுக்கு வரவர உத்தியோகமளிக்கப்பட்டு, அல்லது பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டுப் போய்விடுகிறார்களோ என்று எண்ண இடமுண்டாகும். ஆனால் காரியமப்படியல்ல. ஒருதரம் பள்ளிக்கூடத்துக்கு வந்து திரும்பவும் நின்றுவிடுகிறவர்கள் மிச்சமாய் 1-ம் வகுப்பிலிருந்தே. 4, 5 வருஷங்களுக்குமுன் 4 பிள்ளைகளுடன் ஆரம்பித்திருக்கும் இப்பள்ளிக்கூடங்கள் வரவர வளர்ந்து, இப்போது 47 பிள்ளைகளாகப் பெருகியிருப்பதாலும், அதிலும் முக்கியமாய் இத்தொகை கடந்த இரண்டு வருஷங்களிலேயே மிகவும் அதிகப்பட்டிருப்பதாலும், கிராமங்களிலிருந்து இவ்வாறாகச் சேர்க்கப்படும் பிள்ளைகள் மிச்சமாய்ப் பாலர் அல்லது 1-ம் படியில் சேர்க்கப்பட மட்டும் தகுதியுள்ளவர்களாயிருப்பதாலும் கீழ்வகுப்புகளில் அதிகத் தொகையான பிள்ளைகள் படிக்க நேரிட்டிருக்கிறது. கடந்த வருஷம் 2-ம் வகுப்பில் படித்த 3 பிள்ளைகள் விவாகத்தால் பள்ளிக்கூடத்தை விட்டதாலும், 3-ம் வகுப்பிலுள்ள ஒருவன் சுகவீனத்தால் படிக்க ஏதுவற்ற ஸ்திதியிலிருப்பதாலும், 3-ம் வகுப்பில் படிப்பவர்களின் தொகை குறைந்திருக்கிறது.

உபாத்திமார் அப்பியாசச் சாலையில் படிக்கிற 11 பேரையும் வேதபாடம் தவிர, மற்றப்பாடங்களுக்கு 2 வகுப்பாகப் பிரித்துப் படிப்பிக்கவேண்டியிருக்கிறது. 5 பேர் உயர் வகுப்பு, மீந்த 6 பேரும் 2-ம் வகுப்பு, 11 பேருக்கு 2 வகுப்பு வைப்பது கஷ்டமும் நஷ்டமுமான ஏற்பாடாகத் தோன்றினபோதிலும், கிராமங்களில் உபாத்திமார் குறைவாயிருப்பதாலும், புதிது புதிதாய்ச் சபைகள் சேர்ந்துகொண்டிருந்தும் உபாத்திமாரின் குறைவால் சபைகளில் உபாத்திமாரில்லாமல் எடுத்துப்போடவும் அடிக்கடி மாற்றவும் நேரிடுவதாலும், கிராமங்களிலுள்ள சபைகளில் வாசிப்பு முதலிய படிப்புத் திருப்திகரமாய் நடத்த வழியில்லாததால், இதினிமித்தம் போதுமான அளவில் திறமையுள்ள பலரை நமது உபாத்திமார் அப்பியாசச் சாலையில் சேர்த்துக்கொள்வது சாத்தியப்படவில்லை. ஆதலின் வெவ்வேறு திறமையுள்ள பலரையும் சேர்க்கவேண்டியதும் பல வகுப்புகளாய் வைத்துப் படிப்பிக்கவேண்டியதும் இன்றியமையா விஷயமாகிறது. உபாத்திமார் குறைவு இருந்துகொண்டேவருமளவும் அப்பியாசச் சாலைக்குரிய இக்கஷ்டமும் நடந்தேவரும்.

பாடங்கள்:—சகல வகுப்புகளுக்கும் வேதபாடம், தெலுங்கு வாசிப்பும், எழுத்தும், கணக்கும், கைத்தொழிலும் படிப்பிக்கப்படுகிறது. 3-ம் வகுப்பிலிருந்து போர்டிங் ஆண்களுக்கு இங்கிலீஷ் பாடமும், 4-ம் வகுப்பிலிருந்து போர்டிங் பிள்ளைகளுக்கு இந்துதேச சரித்திரமும் பூமிசாஸ்திரமும், எல்லாருக்கும் கிருஷி சாஸ்திரமும் படிப்பிக்கப்பட்டுவருகிறது.

உபாத்திமார்:—போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தில் 4 உபாத்திமாரிருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் நமது போர்டிங் பள்ளிக்கூடத்தில் தேறியவர். இவரே இல்லகத்து உபாத்தியாயரிருந்து, பையன்களைக் கவனித்துக்கொள்ளுகிறார். இவர் பேர் இஸ்ரவேல் பெரியநாயகம் என்பது, இஸ்ரவேல் என்பது ஞானஸ்நானப் பேர்; பெரியநாயகம் என்பது ஆதரிப்போரின் ஞாபகார்த்தப் பேர். இவரை ஆதரித்தோர் கனம் ஹென்றி கூக்ஸ்லி ஐயரவர்களும் அவர்கள் குடும்பத்தாரும். கனம் ஐயரவர்கள் மரித்தும் இன்னமும் இந்த இஸ்ரவேல் பெரியநாயகம் உபாத்தியாயர் மூலமாய் இந்தத் தெலுங்குநாட்டில் பேசுகிறார்கள். மேலும், கனம் ஐயரவர்களுக்கு ஏதாவது ஞாபகசின்னமுண்டாக்க யாராவது எப்போதாவது நினைத்ததுண்டோ என்னவோ தெரியாது. தெலுங்குநாட்டிலோ அவர்களுடைய உதார ஜீவியத்துக்கு ஞாபகஸ்தம்பமாய் ஜீவியஸ்தம்பம் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அது இஸ்ரவேல் பெரியநாயகம் உபாத்தியாயரும் அவர் செய்துவரும் ஊழியமுமல்லவா? கனம் கூக்ஸ்லி ஐயரவர்கள் நினைக்காமலே தங்கள் ஞாபகஸ்தம்பத்துக்கு ஜீவனுள்ள ஒரு கல்லைப் பதித்துப்போனார்கள். இப்போதும் இனிமேலும் இந்த இஸ்ரவேல் பெரியநாயகம் உபாத்தியார் தட்டிக் கொட்டி உருப்படுத்திப் பண்படுத்தும் சற்களாகிய பள்ளிப்பிள்ளைகள் யாவரும், அந்த ஞாபகஸ்தம்பம் வரவர உயர்ந்தோங்கும்படி இணைக்கப்படும் ஜீவனுள்ள சற்களாகுமல்லவா? தங்கள் தங்களுக்கு அதிலும் விசேஷமாய்த் தங்களுக்கு அருமையானவர்களுக்கு ஞாபகஸ்தம்பங்களுக்கு அஸ்திபாரம் போட்டுக்கொள்ளுவதற்குப் போதுமான இடம் தோர்ணக்கல்லிலிருக்கிறது. அஸ்திபாரமட்டும் போட்டுவைத்துவிடுங்கள். கட்டடம் தன்னால் தானே வளரும். இவ்வாறாகத் தோர்ணக்கல்லில் போடப்படும் அஸ்திபாரக் சற்கள் தங்களால் தாங்களே வளருவதற்கு வளப்பமான ஸ்தலம் தோர்ணக்கல்.

மேலும் கனம் கூக்ஸ்லி ஐயரவர்களாவது அவர்கள் குடும்பத்தில் யாருமாவது இவ்விடத்துக்கு மிஷனெரிகளாய் வந்து, இந்த இருண்ட பிரதேசத்தில் சுவிசேஷத்தைப் போதிக்கும் சலாக்கியத்தை இன்னும் பெறவில்லை. என்றாலும், அவர்கள் தாங்கள் போக ஏலாதிருந்த ஸ்தலத்திலும் இயேசு மகா சேனாதிபதியின் கொடியின்கீழ் இவ்விடத்தில் நின்று யுத்தம் செய்யவும், செய்யும் ஆட்களைத் திரட்டிச்சேர்க்கவும் இஸ்ரவேல் பெரியநாயகத்தை ஏற்படுத்திக்கொண்டார்களல்லவா? மிஷனெரி ஊழியத்தில் இவ்வாறாகவாயினும் பாத்தியமடைந்துகொள்வது நல்லதல்லவா?

போர்டிங் பெண் பள்ளிக்கூடத்தில் 3 உபாத்திமார். இவர்களில் இருவர் நமது பள்ளிக்கூடங்களில் பயிற்சிக்கப்பட்டவர்கள்.

ஆண்கள் பெண்கள் போர்டிங் பள்ளிக்கூடங்களின் உயர்ந்த வகுப்பாருக்கு வேதபாடமும், பெண்களில் 4-ம் வகுப்பாருக்குக் கணக்குப் பாடமும், பெண்கள் யாவருக்கும் கைத்தொழிலில் தையல் பாடமும் Mrs. பாக்கியநாதன் படிப்பிக்கிறார்கள். போர்டிங் முதலியதுகளை விசாரிப்பதும் இவர்களே.

உபாத்திமார் அப்பியாசச் சாலைக்கு சிங்கரேணி மிஷன் மிஷனெரிமாரில் கனம் ஞானமணியவர்கள் படித்துக்கொடுக்கும்படி மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் தயவுசெய்திருந்தார்கள். இப்போது கனம் ஞானமணியவர்கள் பாக்காலா தாலுகாவில் ஊழியம் செய்யப்போய்விட, அவர்களுக்குப் பதிலாக அவர்களிலொருவராகிய கனம் ஏ. தாவீது அவர்களை

அளித்திருக்கிறார்கள். முன் கனம் ஞானமணிடவர்களும் இப்போது கனம் எ. தாவீது அவர்களும் செய்துவந்ததும் வருவதுமான ஊழியம் மிகவும் அருமையானது மிகுந்த அன்புடனும் திறமையாகவும் கிரமமாகவும் கல்வி கற்பித்துவருகிறார்கள்.

நான் தோர்ணக்கல்லிலிருக்கக்கூடிய நாட்களில் போர்டிங் ஆண்களில் 3-ம் வகுப்புக்கு இங்கிலீஷ் படிப்பித்துவருகிறேன் இதுதவிர, கிரமமாய் வகுப்பு உபாத்திமாரைப்போல் செய்யும் வேலை வேறில்லை. அடிக்கடி வகுப்புகளுக்குச் சென்று உபாத்திமார் படிப்பிப்பதையும், பிள்ளைகளும் உபாத்திமாரும் நடந்துகொள்ளும் விதத்தையும், பிள்ளைகள் பாடம் ஒப்புவிப்பதையும் கவனித்து, உற்சாகப்படுத்தவேண்டியவைகளை உற்சாகப்படுத்தி, திருத்தவேண்டியவைகளைத் திருத்திவருகிறேன். இதுதவிர, கிருஷி சாஸ்திரமும் கைத்தொழிலும் படிப்பித்துவருகிறேன். மேலும் எல்லா வகுப்புகளிலும் படிப்பிக்கத்தக்கதாக வேதபாடங்களை ஆயத்தப்படுத்திக்கொடுத்தும் உபாத்திமார் அவைகளைத் தங்கள் தங்கள் வகுப்புகளில் படிப்பிக்கத்தக்கதாய்ப் படிப்பித்தும் வருகிறேன். நான் அடிக்கடி கிராமங்களுக்கும் வேறிடங்களுக்கும் போகவேண்டியதிருப்பதால், இவைகளையன்றி வேறே கிரமமான வேலை வகுப்புகளில் செய்யக்கூடியதாயில்லை.

இம்மூன்று பள்ளிக்கூடங்களுக்கும் உபாத்திமார் போதாது. இன்னமும் 2 உபாத்திமார் அதிகமாய் வைக்கப்பட்டால் உத்தமம் என்றெண்ணுகிறோம். ஆட்களோ கிடைப்பதாயில்லை.

நம்முடைய பள்ளிக்கூடங்களிலிருந்து தேவ ஊழியத்துக்குப் போயிருக்கிறவர்கள்:—

கைத்தொழில் வேலைசெய்து, தங்கள் ஜீவனோபாயத்துக்கு வேண்டியதைச் சம்பாதித்துக்கொண்டு, அபார சபைகளில் தேவஊழியம் செய்துவருகிறவர்கள் ஆண்கள் 3, பெண்கள் 2. சம்பளம் பெற்றுக்கொண்டு, தேவஊழியம் செய்துகொண்டிருப்பவர்கள் ஆண்கள் 8 பேர், பெண்கள் 2 பேர். சம்பளமின்றி தேவஊழியக்காரருக்குச் சகாயமாய் தேவஊழியம் செய்கிற ஸ்திரிகள் 7. இவர்களெல்லாரும் தங்கள் தங்களால் கூடிய மட்டும் நல்ல வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்த ஆண்கள் 2, பெண்கள் 2 பயிற்சி சாலையில் படித்துவருகிறார்கள்.

படிப்பவர்களுக்கு ஆதரவு. போர்டிங் பள்ளிக்கூடங்களில் படிக்கிற 48 பிள்ளைகளில் 30 பேருக்கு ஆதரிப்போரிருக்கிறார்கள் ஆதரிப்போர் தாங்கள் ஆதரிக்கும் ஒவ்வொரு பிள்ளைக்காகவும் மாதா மாதம் ரூ. 3 செலுத்திவருகிறார்கள். மீதியான 18 பிள்ளைகளுக்கும் ஆதரிப்போர் தேவை.

சபை வேலை. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள், தங்களின் அத்தியக்ஷ அபிஷேகத்துக்கு முன் ஆயத்தப்படும் நோக்கமாய் இவ்விடத்து ஊழிய சம்பந்தத்தைவிட்டு சில மாதக்காலம் நீங்கியிருக்கவேண்டியதிருந்தது.

கனம் தேவசகாயம் அவர்கள் பட்டத்துக்குரிய பாடங்களைப் படிப்பதற்காக ஊழியத்தில் சம்பந்தப்படாமல் சில மாதக்காலமிருக்க நேரிட்டிருந்தது; பள்ளிக்கூடத்தை மேல்பார்க்க ஒரு மிஷனெரி இன்னமும் வரவில்லை சபை வேலையில் அதிகப் பாகமும், பள்ளிக்கூட மேற்பார்வை, மிஷன் கணக்குகள் முதலியவை யாவும் நானே பார்க்கவேண்டியதிருந்தது. ஆதலால் சபையின் சம்பந்தமான என் வேலை கடந்த வருஷம் குறைவாகவே இருந்தது மேற்சொல்லிய காரணத்தாலும் உபாத்திமார் உபதேசிமார் குறைவினாலும் குறைவான ஊழியம் செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும், மற்றப்படி நாம் செய்யக்கூடியதற்குக் குறைவென்பதேயல்லாமல், சபைகள் அபிவிருத்தியும் தேற்சியுமடையாமல் குன்றிப்போய்விட்டன வென்பது கருத்தல்ல. சபைகள் அறிவுக்குரியவைகளிலும் பக்திக்குரியவைகளிலும் கூடியமட்டும் வளர்ந்துகொண்டே வருகின்றன.

கடந்த வருஷத்தின் விசேஷ சம்பவம் 1912-ம் வருடிசம்பர்மீ 29உ கல்குத்தாவில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்கு நடந்த பட்டாபிஷேகம். நமது இந்தியன் மிஷனெரி சங்கம் ஸ்தாபகமாகிறதற்கு மூல கர்த்தாக்களில் சிரேஷ்டமானவர்களும், நமது மிஷனில் அதின் ஆரம்ப முதலே சில காலம் செக்றத்தெரியாய் அதின் காரியாதிகளைக் கரிசனையோடு நடத்தினவர்களும், தோர்ணக்கல் மிஷனில் சிலவருஷங்களாய் அதின் விசாரணைக்குருவும் மிஷனெரியுமாயிருந்து திறமையாய்க் காரியாதிகளை நடத்தியவர்களும், இச்சங்கத்தின்மீது மிகுந்த அனுதாபமுள்ளவர்களுமான கனம் அசரியா ஐயரவர்களை அத்தியக்ஷராக அபிஷேகித்ததும், நமது மிஷன் ஸ்தாபனமாகிய தோர்ணக்கல் போலவே ஒரு அத்தியக்ஷாதீன ஸ்தானம் ஏற்பட்டு, அதற்கு மகாகனம் அசரியா அத்தியட்சரவர்களே அத்தியட்சராகவும் கர்த்தர் செய்தது பெரிய கிருபையே. அவர்களுடைய ஞானமுள்ள ஆலோசனைகளும், அனுதாபமுள்ள நடத்தைகளும் நமது சங்கத்துக்கு மிகுந்த ஆசீர்வாதத்துக்கு ஏதுவாயிருக்கின்றன. கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய அத்தியட்சாதீனத்தையும், அவர்கள் விசேஷ ஆளுகைக்குட்பட்ட நமது மிஷனையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிப்போமாக.

சாமுவேல் பாக்கியநாதன்.

---

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் 1 அணா முத்திரையில்போகும்.

மானேஜர்: வி. எஸ். காலேசன்,

பாளையங்கோட்டை.

சந்தா, பத்திரிகை சரியானபடி கிடைக்காத விஷயமான கடிதங்கள் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

Editor:—The Secretary, I. M. S. T.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

JULY, 1913

Registered No. M. 481.

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2-OCT 1913 MADRAS

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 7] ஜுலைமீ 1913 [விலை பை 3

CONTENTS

Editorial Notes ... 53
President's Message at the Anniversary Meeting ... 55
The Ordination by the Bishop of Dornakal ... 56
From the Telugu Field ... 57
The Home Missioner's Letter ... 58
Greeting to the Church in Tinnevelly from the Bishop of Dornakal ... 60

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... 53
கனம்: பிரசிடென்று அவர்களுடைய செய்தி ... 55
பட்டாபிஷேகம் ... 56
தெலுங்குநாட்டுக் கடிதம் ... 57
ஹோம் மிஷனெர் கடிதம் ... 58
திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள கிறிஸ்து சபைக்கு வந்தன நிருபம் ... 60

## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது சங்க காரியகர்த்தா சபையார் அழைப்பை அங்கீகாரஞ்செய்து, மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இரண்டு வாரம் திருநெல்வேலியில் பின்னிட்டார்கள் வருஷாந்தரக் கூட்டத்தில் மிகவும் எழுப்புதலுண்டாகப் பேசினார்கள். தூத்துக்குடி, சாயர்புரம், பண்ணைவிளை, நாசரேத், மெஞ்ஞானபுரம் முதலிய மிஷன் ஸ்தானங்களைச் சந்தித்து, நமது அருமையான மிஷனெரிசங்க சம்பந்தமாய் ஜனங்களை அனல்மூட்டி எவினர். பாளையங்கோட்டையிலிருந்த நாட்களெல்லாம் மகாகனம் திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷரவர்களின் விருந்தினராக, அவர்களுடைய மாளிகையில் இருந்தார்கள். மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் நமது முதல் இந்திய அத்தியக்ஷரவர்களை ஓர் உடன் சகோதரராக ஏற்றுக்கொண்டு, அவர்கள்பேரால் ஓர் உபசார விருந்து சகலத்திராளுக்கும் அளித்தார்கள். பிராமணர், மற்றும இந்துக்கள், மகமதியர், இந்திய கிறிஸ்தவர்கள், ஐரோப்பியரான சகல கனவான்களும் சந்தோஷமடையும்படியான பக்ஷணங்கள், விளையாட்டுகள், வாணவேடிக்கைகள் தயாரித்துவைத்திருந்தன. யாவரும் பூர்த்தியாய் அருந்தி, அகமகிழ்ந்தார்கள். மகாகனம் அத்தியக்ஷரவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் ஸ்டேஷனில் இறங்க, கீதவாத்தியங்கள் முழங்கின. மகாகனம் திருநெல்வேலி அத்தியக்ஷரவர்களும் சுதேசக் கிறிஸ்தவர்களும் அவர்களைச் சந்தித்து, மாலையிட்டு, வாழ்த்தினார்கள். ஸ்டேஷனில் தேயிலைப்பானம் அருந்தியபின்னர், பவனிசென்று, பாளையங்கோட்டை திரித்துவ ஆலயம் சேர்ந்தார்கள்.

**ஸ்தோத்திர ஆராதனை.** ஓர் ஸ்தோத்திர ஆராதனை நடந்தேறினது. "தேவனே உம்மைத் துதிக்கிறோம்" என்னும் கீதம்பாடி, மிஷனெரி விர்தனி வாசிக்கப்பட்டது. அப்பால் மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் முதல் இந்திய பிஷப் அவர்கள் பாளையங்கோட்டைக்கு விஜயமானது நன்றியறிதலான விஷயமென்றும், அவர்களுடைய அத்தியக்ஷாபிஷேகம் திருநெல்வேலிக்கு மகிமையென்றும், கிறிஸ்தவர்கள் யாவரும கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துவதுமன்றி, புது அத்தியக்ஷரவர்களுக்காக இடைவிடாமல் ஜெபஞ்செய்யவேண்டுமென்றம் மொழிந்தார்கள். அப்பால் பொதுவான ஸ்தோத்திர ஜெபம் சொல்லப்பட்டது. மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதங்கூறி ஜனங்களை அனுப்பினார்கள்.

ஜுலைமீ 6உ காலை 7½-மணிக்கு பரி. நற்கருணை ஆராதனை நடந்தது. "சபையின் அஸ்திபாரம் கிறிஸ்துவே" என்னும் கீதம் முடிய, 1 கொரி. 13-ல் ஓர் அருமையான பிரசங்கம், கேட்டோர் மனம் பரவசமடைய

**கிறிஸ்தவ ஐக்கியம்.** மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்கள் செய்தார்கள். கொரிந்து சபையின் சிறந்த சலாக்கியங்கள், அச்சபையின் குறைகள் யாவற்றையும் பரிஷ்காரமாய் ஜனங்கள்முன் நிறுத்தினார்கள்.

அன்பின் மாட்சிமையையும் அதின் தன்மையையும் அருர்திறமையுடன் வர்ணித்தார்கள். ரக்ஷாபெருமானின் சிலுவையின் அன்பையும் கிறிஸ்து சபையின் ஒற்றுமை ஐக்யம் இவைகளின் மகத்துவத்தையும் தெளிவுற விளக்கிக்காட்டினார்கள். பின் இரண்டொரு வார்த்தைகளினால் மாத்திரம் பாளையங்கோட்டை சபையின் சிலர எடுத்துக்காட்டி, கிறிஸ்து சபையிலுள்ள ஒவ்வொருவரும் தன் தன் காரியத்தைப் பெரிதாகப் பாராட்டாமல், கிறிஸ்து சபையின் ஒற்றுமையைப் பேணிநடக்கிறதாயிருந்தால், வர்த்தமானிப் பத்திரிகைகளில் பாளையங்கோட்டையைப்பற்றி தூற்றுகிற வார்த்தைகளுக்கு நிமித்தமிராதென்று பகர்ந்தார்கள். தவிரவும், கர்த்தர் தமது குமாரனுடைய திருரத்தத்தினால் சொந்தத்துக்குக்கொண்டிருக்கும் திருச்சபையில் தம்முடைய ஆவியினால் இடைவிடாமல் கிரியை நடப்பித்துக்கொண்டிருக்கிறார் என்னும் சத்தியத்தை ஞாபகப்படுத்தினார்கள். கிறிஸ்தவர்களோவ்வொருவரும் தனது சொந்தக் காரியம், தனது குடும்பவிஷயம், அல்லது தனது குலத்தின் க்ஷேமம் விசேஷம் என்று பாராட்டாமல், மற்றவர்களுக்காக மாத்திரம் கரிசனைப்படவேண்டுமென்றும், சபை ஐக்கியம் குறைவதற்கேதுவான ஒரு வார்த்தையையாவது செய்கையையாவது நான் பேசவும் செய்யவுமாட்டேனென்று தீர்மானம்பண்ணவேண்டுமென்றும் அன்பாய் வேண்டிக்கொண்டார்கள். மறுநாள் அதிகாலையில் தங்கள் போதனையைச் சாதனையினால் காட்டினார்கள். சமீபகாலத்தில் மரணத்தினால் பெருந்துக்கத்துக்குட்பட்டிருக்கும் ஏழு எட்டுக் குடும்பங்களைச் சந்தித்து, ஆறுதலான வார்த்தைகள் மொழிந்து ஜெபித்தார்கள். இரண்டொரு தினங்களுக்குப்பின்னர், ஜாதி சம்பந்தமான இரு சங்கத்து மெம்பர்களையும் இரண்டு வீடுகளில் கூடிவரச்செய்து, அவர்களோடு மிகுந்த அன்புடன் பேசி, இருதிறத்தாரும் கடந்தகாலத்து நடவடிக்கைகளை மறந்துவிடவும், இனிமேலும் அன்புக்கடுத்த காரியங்களையே செய்யும்படியாகவும் வாக்குவாங்கிக்கொண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். முதல் இந்திய அத்தியக்ஷகர்கள் செய்த ஊழியத்தின் பலன் இவ்வளவென்பதை காலந்தான் அறிவிக்கும். என்றாலும், இருவருணத்தாரான கிறிஸ்தவர்களுடைய விரோதம் தணிய ஆரம்பித்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. கோர்ட்டிலிருக்கும் கேஸ் ராஜிநாமா செய்தாயிற்றும். சமீபத்தில் வரும் முனிசிப்பல் கவுன்சலர் தெரிந்துகொள்ளும் விஷயமாயும் ஒரு சிநேகபாவமான ஏற்பாடு முடிவாயிற்றென்றறிகிறோம். கர்த்தர் இருதயங்களில் கிரியை நடப்பித்து, தமது நாம மகிமை விளங்கப்பண்ணியிருப்பதற்காக அவருக்கே சகல கனமும் புகழும் மகிமையும் சதாகாலங்களிலுமுண்டாவதாக. சமாதானமும் ஐக்யமும் நிலைபெற்றுவரத்தக்கதாக, பேதமுண்டாக்கக்கூடிய காரியங்கள் ஏற்படுங்கால், அவைகளை நிவிர்த்திக்கத்தக்கதாக ஓர் கமிட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தற்சமயம் ஒருவர்பேரில் ஒருவருக்கு அதிக நம்பிக்கையில்லாததால், இக்கமிட்டி மெம்பர்கள் குலத்துக்கு அவ்வாறு பேர் என்று தீர்மானித்து, அந்தந்தக் குலத்தார் தங்கள் தங்கள் மெம்பர்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். செக்ரடெரி ஒருவரே. இந்தக் கமிட்டி மெம்பர்கள் இருதயத்தைக் கர்த்தர் ஆண்டு நடத்தவும், பாளையங்கோட்டை சபையில் அதிக ஒற்றுமை நிலையாய் விளங்கவும் கர்த்தர் அருள்புரிவாராக.

வருஷாந்தரக் கூட்டம்.

நாளது ஆண்டு வருஷாந்தரக் கூட்டத்தில் பேசுவதற்கு எவரை அழைக்கலாமென வெகுவாய் ஆலோசிக்கையில், முதல் இந்திய பிஷப் அவர்களைக் கேட்பது நன்மையாயிருக்குமென்று கண்டது, எவ்வளவோ அசௌகரியமிருந்தபோதிலும், மகாகனம்: தோர்ணக்கல் அத்தியக்ஷகர்கள் தங்களுடைய சொந்தச் செலவில் வந்து, வருஷாந்தரக் கூட்டத்தில் பேசுவதாக வாக்களித்தார்கள். அவர்களுக்கு நண்பர் யாவரும் உள்ளக் கனிவுடன் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தோர்ணக்கல் போர்டிங் ஸ்கூலிலுள்ள இரு பையன்களும், பயிற்சிசாலையில் பயிலும் ஒரு உபாத்தியாரும், கனம்: சுவேன்சன் அம்மாளவர்கள் மூலமாய் கிறிஸ்தவளாகி தோர்ணக்கல்லிலிருக்கும் Mr. தேவதாசம் வருஷாந்தக் கூட்டத்திற்காக வந்திருந்தார்கள். மகாகனம்: திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷகர்கள் பீடம் வகித்தார்கள். கனம்: K. B. அருளானந்தம் ஐயரவர்கள் இரண்டாம் சங்கீதம் வாசித்து, கனம்: P. J. ஹாரிஸ் ஐயரவர்கள் ஊக்கமாய் ஜெபிக்கக் கூட்டம் ஆரம்பித்தது. கனம்: பிரசிடென்று அவர்களுடைய வாழ்த்துதல் உபந்யாசம் வழக்கம்போல ஒரு சகோதரரால் வாசிக்கப்பட்டது. வருஷாந்த அறிக்கையின் சுருக்கம் வாசிக்கப்பட, சங்கத்தின் கடந்த வருஷ ஊழியங்களைக் கர்த்தருடைய பாதத்தில் கனம்: S. M. தேவதாஸ் ஐயரவர்கள் ஜெபத்தில் படைத்தார்கள். தெலுங்கு பாட்டு ஒன்று தெலுங்கு பிள்ளைகளால் இன்பமாய்ப் பாடப்பட்டது. உபதேசிமார் வகுப்பில் பயிற்சியடையும் தோமாஸ் தன்னுடைய சாட்சி பகர்ந்தான். அவனுடைய வார்த்தைகள் கேட்டோர் மனதில் மிகுந்த எழுப்புதலுண்டாக்கின. இன்னோர் கீதம் தெலுங்கு பிள்ளைகள் மகா உருக்கமாய்ப் பாடினபின், மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷகர்கள் பிரசங்கஞ் செய்தார்கள்.

பிரசங்கம்.

பிரசங்கத்திற்காக எடுத்துக்கொண்ட வாக்கியங்கள்: வல்லமையுடையவர் மகிமையானவைகளைச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்பது. இந்திய மிஷனெரி சங்க ஊழியத்தைக் கர்த்தர் நடத்துகிறாரென்பதற்குப் பல அத்தாக்ஷிகள் சொல்லி, தாங்கள் முதலாய் ஆரம்பத்தில் இச்சத்தியத்தைச் சரியானபடி அறியாதிருந்ததாகச் சொன்னார்கள். சபைச் சங்க விஷயமாய்க் கொடுத்திருக்கும் உற்சாகக் காணிக்கைகளுடன் ஜனங்கள் நமது இந்திய மிஷனெரி சங்கத்திற்காக மனப்பூர்வமாய்க் கொடுத்துவரும் காணிக்கைகளையும்; அநேக மிஷன்கள் முப்பது நாற்பது வருஷ ஊழியங்களுக்குப் பின் பலன் காணக் கர்த்தர் அருள் புரிந்தபோதிலும், நம்முடைய மிஷனில் எட்டு வருஷ ஊழியங்களுக்குள் கர்த்தர் கிருபை



யாய்க் கட்டளையிட்டிருக்கும் 2000 தெலுங்கு கிறிஸ்தவர்களை
யும்; இக்கிறிஸ்தவர்களுடைய ஜீவியத்தில் கர்த்தர் ஆவிக்குரிய
பிரகாரமாய்ச் செய்திருக்கும் பெரிய மாறுதல்களையும்; சங்கம்
ஆரம்பித்த பத்து வருஷங்களாகக் கர்த்தர் திருநெல்வேலி கிறிஸ்
தவர்களை லௌகிக வைதிகப் பிரகாரமாய் உயர்த்திவருகிறதை
யும் கவனிக்குங்கால், மெய்யாவே கர்த்தர் இந்திய மிஷனெரிச்
சங்கத்தில் இருக்கிறார், இம்மிஷன் ஊழியங்களை நடத்திவருகி
றார். ஆகவே, இதுவரையும் மிஷனெரிச் சங்கத்தில் அனுதா
பங்காட்டாமல், தூரத்தில் நின்றுகொண்டிருந்தவர் இனிமே
லாவது சங்க ஊழியத்தில் தங்களுக்கும் பங்கு இருக்கும்படி
பார்த்துக்கொள்ளவும், சங்கத்தைத் தாபரித்துவருகிறவர்கள்
முன்னிலும் அதிக உற்சாகமாய்க் கைகொடுத்துதவிபுரியவும்
ஏவி எழுப்பிவிட்டார்கள். தெலுங்குப் பிள்ளைகள் வருஷாந்
தக் கூட்டத்தில் பாடவும், நம்முடைய மிஷன் ஊழியத்தினால்
குணப்பட்ட மனுஷன் நமது நடுவில் வந்து தன் சாட்சி சொல்
லவும், ஓர் திருநெல்வேலிக் கிறிஸ்தவரான நமது சங்கத்து
மிஷனெரி முதல் இந்திய அத்தியக்ஷராகி வருஷாந்தரப் பிர
சங்கம் செய்யவும், மிஷனில் மாத்திரமல்ல, சர்க்காரிலும் நெல்
லையின் பிள்ளைகள் ராஜதானியின் சகல பாகங்களிலும் டெப்
டிக் கலெக்டர்கள், தாசில்தார்கள், டெப்டி தாசில்தார்கள், சப்
ஜட்ஜ், என்ஜினியர் முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் வகிக்
கவும் கர்த்தர் தமது மிகுந்த காருண்யத்தினால் அனுக்கிரகஞ்
செய்திருக்கிறார். ஆதலால் வல்லமையுடையவர் மகிமையான
வைகளைச் செய்திருக்கிறார் என்று, அவரைத் துதித்து, அவரு
டைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்தி, கர்த்தர் மிஷனெரி ஊழி
யமாகிய இந்த ஸ்தலத்தில் இருக்கிறாரென்று மகா கனபக்தியு
டன் நம்மைத் தாழ்த்தி, இப்பரிசுத்தருடைய ஊழியத்திற்கு
நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று
மிகுந்த வைராக்கியத்துடன் பேசினார்கள். வருஷாந்தக் கூட்
டத்தில் விழுந்த காணிக்கை ரூ. 101.

ஞாபகார்த்த ஆலயம்.

ஜுலை 8உ செவ்வாய் மாலை 5-மணிக்கு திருநெல்
வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள சி. எம். எஸ்; எஸ்.
பி. ஜி. சபைகள் ஒன்றுசேர்ந்து, மகாகனம் தோர்ணக்கல் அத்
தியக்ஷரவர்களுக்கு ஓர் வந்தனோபசாரப் பத்
திரம் அளித்தார்கள். அதற்கு முதல் இந்திய
பிஷப் அவர்கள் ஏற்ற உத்தரம் பகர்ந்தார்
கள். அக்கிராசனபதியாயிருந்த மகாகனம்
திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷரவர்கள் கூடிவந்திருந்த
பெருங்கூட்டத்தாரைப் பார்த்து, திருநெல்வேலி கிறிஸ்தவர்
களின் ஜெபம் தங்களுடைய முதல் பிஷப் அவர்களின் பின்
னிருந்து அவர்களைத் தாங்குகிறது. ஓர் அத்தியக்ஷர் ஆலயம்
கட்டிமுடிக்கவேண்டிய கடமை திருநெல்வேலி கிறிஸ்தவர்க
ளைப் பொறுத்தது. ஓர் மகமதிய கனவான் ஆலயங் கட்ட நிலம்
இனமளித்திருக்கிறார். ஆலயங் கட்டுவதற்கு சர்க்கார் அநுமதி
எதிர்பார்த்ததற்கு சீக்கிரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. திரு
நெல்வேலியில் மகிமையான ஆலயங்கள் பல நமக்கு இலவச
மாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப்பதில் ஈவாக
தோர்ணக்கல்லில் ஓர் ஆலயம் கட்டுவதற்கு நாம் வாக்குக்கொ

டுத்திருக்கிறோம். பதினாயிரம் ரூபாய் திருநெல்வேலியின் பிள்ளைகளுக்கு வருத்தமான காரியமல்ல. சபையாகவும் தனித் தனி ஆட்களாகவும் ஜனங்கள் உள்ளக்கனிவுடன் போந்த காணிக்கை இவ்விஷயத்திற்காகவும் படைக்கும்படி ஏவி எழுப்பிவிட்டார்கள். வருஷாந்தரக் கூட்டத்தில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களும் ஞாபகார்த்த ஆலய விஷயமாய் நம் கிறிஸ்தவர்கள் சற்று பிரயாசம் எடுத்து, ஆலயம் கூடியசீக்கிரத்தில் முடிவுபெறும்படி வழிவகை செய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். இக்குறைவு நீங்கும்படி கர்த்தர் தமது ஜனங்களின் இருதயத்தை ஏவியருள நண்பர் ஊக்கமாய் ஜெபித்துவர விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்கொடை சாமான்விற்பனை.

வழக்கம்போல வருஷாந்தக் கூட்டத்தன்று நன்கொடை சாமான் விற்பனை நடந்தேறியது. மனோற்சாகமான காணிக்கைகளை நண்பர் அனுப்பினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். விற்பனையின் பலன் சுமார் ரூ. 200. நானாவித சாமான்கள் அனுப்பிய நண்பர்களுக்கும், விற்பனைக்குவந்து, சாமான்கள் வாங்கி, உதவிபுரிந்த கனவான்களுக்கும், விற்பனையை நடத்தின சகோதரர் சகோதரிகளுக்கும் நன்றி சொல்லுகிறோம்.

## வருஷாந்தரக் கூட்டத்தில்
## கனம் பிரசிடேன்று அவர்களுடைய செய்தி

நமது இந்திய மிஷன் சங்கத்து 10-ம் வருஷத்து மகோத்சவம் கொண்டாட நாமெல்லாம் மனோர்ச்சாகமாய்க் கூடிவந்திருக்கிறோம். இங்குவந்திருக்கும் சகலருக்கும் என் வந்தன வாழ்த்துதல் சொல்லுகிறேன். நான் ஒரு வண்ணமும் பொழுது ஒரு மேனியாய்ப் பிள்ளை வளர்ந்ததென்ற முதுமொழிப்படி, நமது சங்கமும் தெய்வ கடாட்சத்தினால் நாளுக்கு நாள் விருத்தியடைந்திருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லலாம். அதற்கொரு பெரிய திருஷ்டாந்தம். நமது மிஷன் வேலையை டோர்ணக்கல்லில் ஆரம்பித்தோம். அதின் துவக்கத்தில் நமது முதல் மிஷனெரிபோய் வேலை செய்தார்கள். அந்த மிஷனெரி அப்பால் ஒரு போதகப்பட்டம் பெற்றதினால், அது ஒரு போதகஸ்தானமாயிற்று. இப்போ அது அத்தியக்ஷாதீனமாக விருத்தியடைந்திருக்கிறது. இவ்வாறு அத்தியக்ஷாபிஷேகம் நடந்தது இந்தியாவில் இதுவரை நடைபெறாத சம்பவமே. அவ்வத்தியக்ஷரும் டோணக்கல் அத்தியக்ஷரென அழைக்கப்பெற்றோம். அவர்கள் நம் நடுவில் இக்கூட்டத்தின்கண் வந்திருப்பதும் நமக்கு சந்தோஷத்தை யளிக்கும் ஓர் சம்பவம் அன்றோ?

இச்சங்கம் ஆரம்பிக்கும்போது "எங்கே ஆரம்பிக்கிறது? எவ்விதமாய் ஆரம்பிக்கிறது" எனப் பல சந்தேகங்கள் இருந்தன. ஜெபத்தில் கர்த்தரிடத்தில் காத்திருந்து தெய்வகடாக்ஷத்தால் இந்த ஸ்தானத்தைத் தெரிந்துகொண்டோம். அந்த ஸ்தானம் தேவ அனுக்கிரகமுள்ளதென்பது பல ஏதுக்களால்

கம்ப இடமாகிறது. இச்சங்கம் ஆரம்பித்த மூன்றுவருஷங்களுக்குள் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவர்களின் தொகை 41. அப்பொழுது வேலைபார்த்த தெலுங்கு ஊழியர்கள் 5. போதகர்கள் இல்லை. கிராமப்பள்ளிக்கூடப் பிள்ளைகள் 17. போர்டிங்: 2 ஆண் 2 பெண். இப்பொழுது சபைத்தொகை 1536. ஞானஸ்நானம் பெற்றவர்கள் 505. பட்டம் பெற்ற மிஷனெரிகள் 3. உபதேசிமார் உபாத்திமார்25. ஆணும் பெண்ணுமாயுள்ள கிராமப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் 228. போர்டிங் பிள்ளைகள் 48. ஆயிரக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்துவை பேற்றுக்கொள்ள ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கட்குப் போதிக்க உபதேசிமார் வாத்திமார் தேவை. "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ சொற்பம்"என நமது பரம எஜமான் சொன்ன வசனங்கள் இச்சங்கத்திற்கு இச்சமயம் உரியதே. மேலும் முதல் மூன்றுவருஷத்தில் கிறிஸ்தவர்களால் இம்மிஷன் விருத்திக்காகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 7000. இந்த ஒரே வருடத்தில் காணிக்கை ரூ. 12,000.

இப்பொழுது ஆரம்பமாகும் 11வது வருஷத்துக்குதவியாக நமது ரக்ஷகர் திருவாக்கருளிய இரண்டு வசனங்களை மாத்திரம் கூறி முடிக்கிறேன். அவர் தம்மைக் குறித்து: நான் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யும்படி வந்தேன் என்றும், அவர் பிள்ளைகளாகிய நம்மைக் குறித்தும்: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்கவிரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாவது முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்றும் கற்பித்தார். இச்சங்கத்திற்காக தெலுங்கு நாட்டிலும் இவ்விடத்திலும் வேலை செய்கிறவர்களும் அதின்பேரிலுள்ள நேசத்தால் அதின் வளர்ச்சியை அபேக்ஷிக்கிறவர்களும் இந்த ஊழியத்தின் ஆவியினால் நிறைந்திருக்குமாறு நாம் ஜெபத்தில் காத்திருக்கவேண்டும். பரலோகத்தில் நாம் நிறுக்கப்படுகிற நிறைகள் இப்பூலோகத்தின் நிறைகளல்ல. இங்கு மேன்மையாய் எண்ணப்படும் யாவும் அங்கு இழிவாயிருக்கும். இங்குள்ள அற்ப ஊழியர்கள் அங்கு மேன்மையாயிருப்பார்கள். தெய்வ நாமத்தின் மகிமைக்கென்று தந்நயத்தை நாடாது ஊக்கமாயுழைக்கும் நண்பர்கள் உன்னதத்தில் மகிமையில் வீற்றிருப்பவர்களாய்க் காணப்படுவோர்கள். பேருக்கு விருதாவாய் தேவ ஊழியம் செய்கிறவர்களாயுமல்ல, தன் அபாத்திர நிலைமையை உணராது தான் கர்த்தருடைய ஊழியத்திற்கு இன்றியமையாமல் வேண்டியவன்போலும், அவருக்குச் செய்யும் ஊழியத்தில் தான் பெரியவன்போலும் நினைக்கிறவர்களாயுமல்ல, அவருக்கு முழு இருதயத்தோடும் ஊழியத்தின் ஆவியினால் நிறைந்து வேலை செய்கிறவர்களே சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்படுவோர்கள். இவ்வுலகத்திலுங்கூட நமது சொந்த இருதயங்களில் மகிழ்ச்சியை நாடினோமென்றால், அதற்கு ஒரே வழி மட்டும் உண்டு. அதுவும் நாமெல்லாரும் ஊழியத்தின் ஆவியினால் நிறைந்து தாழ்மையோடும் ஊக்கத்தோடும் வேலை செய்துவருவதே. ஆகையால் நாமனைவரும் முன்போலும் பொருளுதவியும் ஜெப உதவியும் செய்கிறவர்களாய் மாத்திரமல்ல, நமது இரக்ஷகரில் காணப்பட்ட ஊழியத்தின் ஆவியினாலும் நிறையும்படி அவரே நமக்குக் கிருபை புரிவாராக.

ஆமென்.

---

## பட்டாபிஷேகம்

கனம் தேவசகாயம் ஐயரவர்கள் பட்டாபிஷேகத்திற்கு முன் மூன்று நாளாக தோர்ணக்கல் சிங்கரேனி மிஷனிலுள்ள தமிழ் ஊழியர்களாகிய எங்களுக்கு மகாகனம் அத்தியட்சரவர்கள் தியானக் கூட்டங்கள் (Quiet days) வைத்தார்கள். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் இரண்டு தடவை ஆவிக்குரிய எழுப்புதலான போதனைகள் செய்தார்கள். இது தவிர, ஜெபக்கூட்டங்களும் நடந்தது. சிங்கரேனிக்கு நாங்கள் போயிருந்த மூன்று நாட்களிலும் நாங்களடைந்த போதனை, தியானங்கள் எங்கள் ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் மிகுந்த பிரயோஜனமாயிருந்தது.

பரி. பேதுருவின் திருநாளில் கனம் தேவசகாயமவர்களுக்கு சிங்கரேனி பரி. திவ்யவாசகனாகிய யோவான் ஆலயத்தில் பட்டாபிஷேகம் நடந்தது. மகாகனம் அத்தியட்சரவர்கள் வீட்டில் 6½-மணிக்கு காலை ஆராதனையும் கனம் தேவசகாயம் அவர்களுக்காக ஆயத்த ஜெபமும் நடந்தது. பின்பு 7½-மணிக்குப் பட்டாபிஷேக ஆராதனை ஆலயத்தில் நடந்தது. அந்த ஆலயம் கிரமமாய் ஒழுங்குபடுத்தியும் நன்றாய் அலங்கரித்தும் இருந்தது. தோர்ணக்கல்லிலிருந்து போர்டிங் ஆண், பெண் பிள்ளைகளும், பயிற்சிசாலை மாணவரும், போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொடுக்கிற உபாத்திமாரும், சபையிலிருந்து சில உபாத்திமார்களும், கம்மாமேட்டு மிஷன் உபாத்திமாரில் சிலரும், சிங்கரேனி மிஷனிலுள்ள தமிழ் தெலுங்கு சபையாரும் வந்திருந்தார்கள். தோர்ணக்கல் பள்ளிப்பிள்ளைகள் பட்டாபிஷேகத்திற்குப் போவதற்கு ரெயில் வண்டியில் பாதிசகாயம் பெற்று, ஒரு வண்டி அதற்காக காலிசெய்திருந்தது. நிலக்கரிக்கேணி மானேஜர் இவர்களுக்கு மத்தியான விருந்து செய்தார். விருந்து வெகு நேர்த்தியாய்ச் செய்தார். பட்டாபிஷேக ஆராதனையின் ஆரம்பத்தில் கனம் பாக்கியநாதன் ஐயரவர்களும், கனம் D. S. தாவீது ஐயரவர்களும், கம்மாமேட்டு மிஷனிலிருந்து வந்த கானங்கி யோவான் ஐயரவர்களும், மகாகனம் அத்தியட்சரவர்களுமாக பவனிவந்தார்கள். கனம் D. S. தாவீது ஐயரவர்கள் 1 தீமோத்தேயு 6: 11 லிருந்து எழுப்புதலான பிரசங்கம் செய்தார்கள். கம்மாமேட்டிலிருந்து வந்த கானங்கி யோவான் ஐயர் லித்தானி ஜெபம் செய்தார். பின்பு மகாகனம் அத்தியட்சரவர்கள் கனம் தேவசகாயமவர்களுக்கு உதவிக் குருப்பட்டாபிஷேகம் கொடுத்தார்கள். இந்த நாளைப்போலுள்ள பரி. பேதுருவின் நாளில்தான் கனம் பாக்கியநாதன் ஐயரவர்கள் டீக்கன் பட்டமும், மகாகனம் அத்தியட்சரவர்கள் டீக்கன் பட்டமும் பெற்றதால், இந்த நாள் நம் மிஷனுக்கு விசேஷித்த நாளே. பட்டாபிஷேகம் நடந்த சமயம் மிகவும் பயபக்தியாயிருந்தது. அதற்கேற்றபடி தெலுங்கு பாட்டுகளும் பாடப்பட்டது. அபிஷேகம் முடிந்த



பின் பரி. நற்கருணை பரிமாறினார்கள். 75 பேர் பரி. நாப்போஜனம் பெற்றுக்கொண்டார்கள். நம் பிஷப் அவர்களால் நம் மிஷனில் நடந்த முதலாம் பட்டாபிஷேகம் இதுவே.

சாயந்திரம் 4½-மணிக்கு மாலை ஆராதனை நடந்தது. அதில் சிங்கரேனி தெலுங்கு சபையில் இரண்டு பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது கனம் தேவசகாயம் ஐயரவர்கள் பரி. யோவான் சுவிசேஷம் 21: 15-ன்பேரில் பிரசங்கம் செய்தார்கள்.

கர்த்தர் இந்தப் பட்டாபிஷேகத்தை நன்றாய் நிறைவேறச் செய்ததற்காகவும், நம்மிஷனுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கவும் செய்ததற்காகவும் அவருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக. இனி, அவர்களுடைய வேலையிலும் மிகுந்த ஆசீர்வாதமுண்டாகக் கர்த்தனைநோக்கி ஜெபிப்போமாக.

ஜான் ஸ்ரீனிவாசகம்.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

மாற்றுதல். கமிற்றிமார் தீர்மானப்படி கடந்த ஜனுவரிமீ 7உ முதல் என் குடும்பத்துடன் மேட்டப்பல்லியிலிருந்து தோர்ணக்கல் வந்துசேர்ந்தேன். அன்று நமது சங்கத்துப் பொக்கிஷதாரான கனம்: G. தேவதாசன் B. A. அவர்கள் தோர்ணக்கல் வந்து நமது மிஷன் காரியாதிகளையறிந்து திருநெல்வேலி போனார்கள்.

மறுநாள் மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் தோர்ணக்கல் அத்தியக்ஷ மண்டலத்தை மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்குக் கையளித்துப்போன கூட்டத்திற்கென்று கம்மாமேட்டுக்குப்போய் வந்தோம். "ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே" ஆமென்.

பயிற்சி "ஒரே காரியத்திற்கு ஒரே நோக்கமாயிரு" என்பது ஜப்பானியர் பழமொழி. ஆகவே ஜனுவரி மாசம் 9உ முதல் பெப்புருவரிமீ 11உ வரை சுமார் ஒருமாசம் உதவிக் குருப்பட்டத்திற்குரிய பாடம் தோர்ணக்கல்லில் படித்துக்கொண்டிருந்தேன். படிக்கும்போதே பற்பல எண்ணங்களும் வந்துபோம். "ஆடிப்பட்டம் தேடி விதை" கல்விக்குக் காலம்வேறு. எட்டு வருஷங்களுக்குமுன் இதற பாஷையான பாலர் புஸ்தகத்தையெடுத்து க—ண்டா=கண்டா; க—ம்—ப=கம்பா என்ற வார்த்தைகள் படித்து பின் 2-ம் மாசம் தெலுங்கு பாஷை வராது என்ற எண்ணம் வந்ததுண்டு. எனக்கு முன்வந்த கனம்: பாக்கியநாதன் ஐயரவர்களும் இப்படி நினைத்தார்களாம். இப்போ படிக்க வசதியில்லாத சந்தடியுள்ள இடத்தில் இவ்வளவு பாடங்களையும் 5 மாதத்திற்குள் எப்படிப் படிக்க என்றும் நினைப்பேன். இப்படியிருக்கையில் தோர்ணக்கல் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் தாங்களிருக்கும் சிங்கரேனியில் வந்திருந்து படிக்க தயவாய் உத்தரவு கொடுத்தார்கள். இதன்பின் ஒரு வாரம் என்னை கம்மாமேட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

ஒரு வார ஆயத்தம். பெப்புருவரிமீ 16உ கம்மாமேட்டில் உதவிக் குருப்பட்டம் பெறுவோருக்கு வைத்த கூட்டங்களில் (Quiet days) நானும் பங்குபெறும் கிருபை பெற்றேன். 8 பேருக்குத் தெலுங்கில் கூட்டம் நடந்தது. நம் அருமை அத்தியக்ஷரவர்கள் வெகு ஸ்பஷ்டமாய் அநேக சத்தியங்களை எடுத்துக்காட்டினார்கள். அச்சமயம் அவர்கள் சுதேச சபையின் குறைவு ஊழியரின் தாழ்ந்த ஸ்திதி அதை நிவிர்த்திக்க வேண்டிய வழிவகைகள் ஒரு சுதேச பிஷப்புக்கு எவ்வளவு நன்றாய்த் தெரியக்கூடியதாயிருக்கிறதென்றார்கள்

பயிற்சிசாலை. சிங்கரேனியில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சரவர்கள் பங்களாதான் என் பயிற்சிசாலை. கனம்: பிஷப் அவர்கள் எனக்குக் கொஞ்சம் படித்துத்தருவார்கள் என்று நான் முன் சொன்னபடி அவர்கள் உத்தரவுப்பிரகாரம் சற்று தைரியத்துடன் போனேன். போனபின் அவர்களுக்கிருந்த வேலை நெருக்கத்தைப்பார்த்தாலோ கிட்டநெருங்க வழி இல்லை எனக்குச் சற்று ஆயாசமே. ஆகிலும் ஒருநாள் எனக்குப் பாடம் எடுத்தார்கள். மற்றொருநாள் ஒரு பரீட்சையும் வைத்தார்கள். எனக்கு மனசுக்கு நன்றாயிருந்தது. பெப்புருவரிமீ 18உ போனேன். என் அதிர்ஷ்டம் 21உ நந்தியால் பக்கம் போய் ஒருமாசத்திற்குப்பின் வந்துசேர்ந்தார்கள். காரியம் இப்படியிருந்ததால், நானே ஒண்டியாயிருந்து படித்தேன். "கல்விக்கிருவர்" என்பார்கள். அதுவும் இல்லை. ஆனால் என்னோடு பிஷப் அவர்கள் பங்களாவில் கல்வி கற்கும் மாணவர் மூவரிருந்தோம். இந்த மூவர் யார்? மூவரிருந்தென்ன? ஒவ்வொருவரும் வித்தியாசமான வித்தியார்த்திகள். ஒருவர் நம்மெல்லாருக்கும் தெரிந்த கனம் D. S. டேவிட் ஐயரவர்கள். பாலர் புஸ்தகம் சீக்கிரம் முடித்து முதலாம் புஸ்தகமும் முடிந்தது. பேசவும் அப்பியாசித்தார்கள். நான் எனக்குத் தெரியாதவைகளைப்போய் அவர்களிடம் கேட்கப்போனால், அவர்களது ஆத்திரப் படிப்பால் ஒரு தெலுங்கு வார்த்தையைச் சொல்லிக்கொண்டு, தம்பி, "பசா" என்றால் என்ன என்று என்னைக் கேட்பார்கள். சற்று பொறுத்து நான் போய், ஐயா: இந்த வசனத்தின் கருத்தென்ன, அந்த ரூபிரிக்கின் அர்த்தமென்ன என்பேன். காரியம் இவ்வாறு இருந்தது.

மற்றொரு மாணுக்கர் நமது பிஷப்அவர்கள் வைற்றர் Mr. மனுவேல் அவர்கள்தான். சிலவேளைகளில் இவர்களிருவரும் சேர்ந்து என்னிடம் வருவார்கள். தெலுங்கில் சம்பாஷணைக்கு வந்துவிடுவார்கள். சிலவேளைகளில் அநுதாபப்பட்டு சரி சரி உங்கள்பாடங்களைப் படியுங்கள் என்றும் சொல்வார்கள். இவ்விதமாய் 3 மாணவரும் படித்தோம். சகல ஞானத்துக்கும் ஊற்றும் காரணரும் நமது பரமபிதாவே.

பரீட்சை. ஜுன்மாசம் முதலாம் வாரம் பரீட்சை நடந்தது. இதன்பின் தோர்ணக்கல்லில் சில நாளிருக்கலாம் என்று வந்தேன். ஆகிலும் சில பல அவசரங்களைப்பற்றி சிங்கரேணி, தோர்ணக்கல், மானுக்கோட்டை போகவேண்டியதாயிருந்தது. இதன்பின் C. M. S. ஆபீசிலிருந்து கனம்பொருந்திய கார் ஐயரவர்களும். கனம் R. V. ஆசீர்வாதம் ஐயரவர்களும் என் ஞானஸ்நான சர்ட்டிபிக்கட்டுக்காக பிரயாசப்பட்டுத் தேடியும்

நான் ஞானஸ்நானம் பெற்றகாலத்திற்கு முன்னும் பின்னும் 3 வருஷ ரெஜிஸ்தர் இல்லையென்று வந்தது. அப்பால் சிக்கந்தராபாத்து ஐரோப்பிய மேஜிஸ்திரேட்டார் (Magistrate) முன் ஞானஸ்நானம் பெற்றதை அறிக்கையிட்டு காரியம் முடிந்தது. பயிற்சிசாலையின் ஓர்விசேஷ காரியம்: தோர்ணைக்கல் அத்தியட்சரவர்கள் பங்களாவில் ஒருநாளில் 3 முறை உச்சரிக்கிறமன்றாட்டு என்னவானால், மிஷன்வர்த்தனைக்காக வாஞ்சையோடு ஜெபிக்கிற ஜெபமே. நம் அருள்நாதரின் கடைசிக்கட்டளையும் இதுதானே. நம் நாட்டில் எங்கும் தினசரி ஒருதடவையாவது ஜெபிப்போமாக. நம் நாட்டின் பக்தர்கள் செய்யும் அந்தரங்க வெளியரங்க ஜெபவல்லமை நீங்கள் கண்ணால் பாராத தெலுங்குநாட்டில் ஜொலிக்கிறதென்பதைக் காட்டப்போந்த திருஷ்டாந்தங்களுண்டு. இதைப் பத்திரிகை மூலமாய் காளடைவில் நீங்கள் வாசித்தும் கண்கண்ட சாட்சிகளின் அத்தாட்சியால் அறிந்துமிருப்பதால் இங்குகாட்ட அவசரமன்று. அவருக்கே சகலகனமும் புகழுமுண்டாவதாக, ஆமென்.

திருநெல்வேலிப்பாலம் (சுலோசனமுதலியார் பாலம்) கீழ்பாகமாகிய பாளையங்கோட்டையையும் மேல்பாகமாகிய வீரராகவபுரம் திருநெல்வேலியையும் இணைத்து அநேக சொல்லரிய பிரயோஜனகரமான காரியங்கள் நடைபெற்று வருகிறதென்பது நம் நாட்டாருக்குத் தெரியும். ஹோம் மிஷனர் என்று கனம் சவரிமுத்து ஐயரவர்களை பத்திரிகையின் வாயிலாக அழைக்கிறோம். அவர்கள் ஹோம் மிஷனராக நம் நாட்டுக்குமாத்திரமன்று. திருநெல்வேலியையும் தெலுங்கு நாட்டையும் இணைக்கும் பாலம் என்னலாம். அவர்கள் இங்குவந்திருந்த காலத்தில் இவ்விடத்திய சங்கதிகளை வெகு திட்பநுட்பமாகப் படித்துப்போயிருக்கிறார்கள். கர்த்தர் மெய்யாய் அவர்கள் ஆவிக்குரிய பாலமாயிருக்க ஜெபிப்போமாக.

ஓர் விண்ணப்பம். நான் புதிதாய் ஆரம்பிக்கப்போகும் என்னுடைய ஊழியத்திற்காகவும், என் குடும்பத்திற்காகவும் எல்லா மிஷனெரிகளுக்காகவும், ஊக்கமாய் உங்கள் கைகள் விரிக்கப்பட்டு மன்றாடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஜெபத்தினால் நீங்கள் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.

D. தேவசகாயம்.

ஹோம் மிஷனர் கடிதம்.

அழைப்பு: சென்னை C. M. S. சுதேச ஆலோசனைச் சங்கத்தார் 1909-ம்௵ கடைசியில் தங்களுக்குத் தீராத அவசியம் பரங்கிமலைச் சேகரத்தை மேல்பார்த்துத் திருப்பணிவிடைசெய்ய ஓர் சுதேச குரு அவசியம் என்றும் அது தேவ அழைப்பு என்றும் எனக்கு எழுத, நான் சில மாதங்களாய் ஜெபத்தோடு யோசித்து அவ்வேலையை ஒப்புக்கொண்டு வாக்குக் கொடுத்து திருநெல்வேலி கவுன்சலாரும் விட்டுவிடச் சம்மதித்ததின் பின்னர், I. M. S. கமிற்றியார் தங்களுக்கு ஹோம் மிஷனர் வேலைசெய்ய என்னை விரும்பி யழைத்தபோது நான் முன் கொடுத்த வாக்கை மாற்ற முடியாது என்று கர்த்தருடைய நடத்துதலுக்கு ஒப்புவித்துச் சென்னை கவுன்சலில் பரங்கிமலை சேகரத்துக்குப் போய் 3 வருஷம் 4 மாதமும் தேவஊழியம் செய்துவரும் சலாக்கியம்பெற்றேன். அந்த ஊழியத்தின் அவசியத்தையும் I. M. S. கமிற்றியாருடைய அவசியத்தையும் குறித்து அடிக்கடி நினைத்து ஜெபித்தும் வந்தேன். கடந்த வருஷக் கடைசியில் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பட்டாபிஷேகத்துக்குப்போகும் சலாக்கியம் பெற்றேன். அப்பொழுதும் I. M. S கமிற்றியின் பிரதிநிதிகளும் கர்த்தருக்குள் எனக்கு அருமையான சிநேகிதர்களுமான சிலர் திரும்பவும் என்னை அதிகமாய் விரும்பி, I. M. S. சங்கத்தின் வாழ்வைக் கருதித் திரும்பவும் ஜெபத்தோடு யோசித்து ஹோம் மிஷனர் வேலையை ஒப்புக்கொள்ளச் சொன்னதின்பேரில், ஜெபத்தோடு சென்னை ஆலோசனைச் சங்கத்தின் அதிகாரிகளான கனம் கிளார்க் ஐயர் அவர்களும் கனம் ஹென்ஸ்மன் அவர்களும் இந்திய மிஷனெரி சங்கத்தின் அவசியத்தை சிந்தாக்கி, மனப்பூர்வமாய் என்னை விட்டுவிடச் சம்மதித்ததால், இது தேவ அழைப்பென்று நம்பி, மே௴ 1உ இந்த ஊழியத்தைக் கர்த்தரை நம்பி ஒப்புக்கொண்டேன். இன்னும் பலர்: சென்னையில் என் ஊழியம் அதிக அவசியம் என்றும் பலர் இங்குதான் என் ஊழியம் அதிக அவசியம் என்றும் சொன்னாலும், கர்த்தருக்குள் அவருடைய தீர்மானமும் நடத்துதலும் இதுதானென்றும் அநேக தேவனுடைய பிள்ளைகளுடைய விசுவாசமும் ஊக்கமுமான விண்ணப்பங்களின் உதவியையும் அதிகமாய்ப் பெறலாமென்றும் நம்பி, என் பெலத்தையும் சாமர்த்தியத்தையும் சாராமல் கர்த்தருடைய சகாயத்தையே சார்ந்து இந்த உத்தரவாதமான வேலையை ஒப்புக்கொண்டிருக்கிறேன். "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்". என்றவாக்கும் என்றைக்கும் மாறாததே.

ஆயத்தம். இவ்வளவு அருமையான ஊழியத்துக்கு அழைப்புப் பெற்றவன் தகுந்த ஆயத்தமின்றி அவ்வூழியத்தில் பிரவேசிப்பது தகுதியல்லவென்று கர்த்தரும் அவருடைய பிள்ளைகளும் கண்டு, மேய் மாசத் துவக்கத்திலிருந்து 3 வாரமாவது ஜெபத்திலும் வேதாராய்ச்சியிலும் பின்னிட்டு, அதன்மேல் நம் மிஷன் ஸ்தானமாகிய தோர்ணக்கல் முதலிய இடங்களைச் சுற்றிப்பார்க்கும்படி தீர்மானித்த செக்ரற்றேரியவர்களுடைய கடிதம் வந்தது. அதற்காகவும் அதிகமாய்க் கர்த்தரைத் துதித்து, மேய்மாசமுதல் 3 வாரங்கள் பரங்கிமலையில்தானே தங்கி, கனம் உவாக்கர் ஐயர் அவர்கள் அப்போஸ்தலர் நடபடிகளின் மேல் எழுதிய அருமையான புஸ்தகத்தையும் மகாகனம் அசரியா அத்தியக்ஷர் அவர்கள் எழுதிய India & Missions என்ற புஸ்தகத்தையும் மிஷனெரிவீரர் என்ற புத்தகத்தையும் விசேஷமாய்ப் படித்து, அதிகமாய்த் தனித்தியானம் வேத வாசிப்பிலும் மாற்கு சுவிசேஷத்தைப் படிப்பதிலும் பின்னிடக் கிடைத்த பெரும் சலாக்கியத்துக்காக அதிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். "அறையிலாடி அம்பலத்திலாடு" என்னும் பழமொழிப்படி இவ்வித ஆயத்தமில்லாமல் இப்பெரும் ஊழியத்தில் பிரவேசித்திருந்தால், பெரிய தீமையாகவே இருந்திருக்கும்!



இதை நன்குணர்ந்து இவ்வித ஏற்பாடு செய்யக் கருவியாயிருந்த கர்த்தருடைய பிள்ளைகளனைவருக்கும் கர்த்தருக்குள் நன்றி செலுத்துகிறேன்.

மறிவு. இவ்வூழியத்துக்குக் கர்த்தருடைய அழைப்பை பெற்று அவருக்குள் ஆயத்தம் செய்துகொண்டாலும், இந்திய மிஷனெரி சங்கத்தின் வேலை நடக்கும் ஸ்தானமாகிய தோர்ணக்கல்லையும் அதன் சுற்றுப்பாகங்களையும் அங்குள்ள சபைகள் முதலியவற்றையும்பற்றி போந்த அறிவில்லாவிட்டால், ஹோம் மிஷனர் வேலையை திருப்திகரமாய் நடத்தக்கூடாதாகையால், கர்த்தரை முன்னிட்டு மே௴ 23உ இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு, 24உ காலை 10½-மணிக்கு தோர்ணக்கல் போய்ச்சேர்ந்தேன். அங்குள்ள நம் மிஷனரிமாரும் சபையாரும் பாராட்டின அன்பும் உபசாரமும் கொஞ்சமல்ல: நான் போனகாலம் கொடியவேனல் தணிந்துவிட்ட காலமென்று லும், முதல் இரண்டு நாளும் சூரியனின் கடுமையும் வெப்பமும் இவ்விடங்களைவிட சற்று அதிகமாதலால் தாங்குவது கஷ்டமாய்த்தானிருந்தது. என்றாலும் கர்த்தர் பெலன் சுகம் தந்து, மறுநாள் ஓய்வுநாளானபடியால் இருமுறையும் ஆராதனையை கனம் சாமுவேல் பாக்கியநாதன் ஐயர் அவர்கள் நடத்த நான் பிரசங்கித்தேன். போர்டிங் பிள்ளைகளில் மிகுதியானவர்களும் பயிற்சிசாலையிலுள்ள அநேகரும் ரஜாவுக்குப் போய்விட்டதால், சொற்பமான பிள்ளைகள்தான் இருந்தார்கள். என்றாலும் ஆராதனையில் அவர்கள் பாடியபாட்டுகளும் காட்டிய பக்தி வினயமும் காணிக்கை செலுத்திய உற்சாகமும் மனதைப் பரவசப்படுத்தக்கூடியதாயிருந்தது. நம்மிஷன் நிலங்கள் கட்டடங்கள் முதலியவற்றைமட்டும் பார்வையிட்டு திங்கள்கிழமை சிங்கரேணியில் கனம் D. S. தாவீது ஐயர் அவர்களிடம் போய் சில ஆலோசனைகள் செய்ததின்பேரில், மழைகாலத்துக்குமுன் 75 மைலுக்கப்பாலுள்ள நம்மிஷனின் அந்தமான முப்பாரம் கேசமுத்திரம்வரை ஒரு வாரம் சுற்றித்திரும்பிவிட்டால் நலமென்று தீர்மானித்து, கனம் ஸ்ரீனிவாசகம் மிஷனெரியவர்களுடன் ஒருவாரம் மேட்டபல்லி சவட்டப்பள்ளி தட்லப்பாடு, முப்பாரம், ஸ்ரீராமகிரி, கேசமுத்திரம் முதலிய இடங்களில் சுற்றித்திரிந்து, அங்குள்ள சபைகளுடைய சீர் நிர்வாகங்களை அறிந்து, ஆங்காங்கு அவர்களுக் கெழுப்புதலான கூட்டங்கள் நடத்தி, கர்த்தருடைய பெரிதானகிருபையால் தோர்ணக்கல் சுகமாய்த் திரும்பிவந்தோம். அதற்குள் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் சிங்கரேணி திரும்பிவிட்டதால், அவர்களுத் தாவுப்படி ஒருவாரம் அவர்களோடு தங்கி, ஆத்துமாவுக் கெழுப்புதலான பல ஞான நன்மைகளையும் ஊழியத்துக்கனுகூலமான பல ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு, கடைசி வாரத்தை மறுபடியும் தோர்ணக்கல்லில் பின்னிட்டு போர்டிங் பிள்ளைகள் சரித்திரத்தையும் கைத்தொழில் சாலையின் விர்த்தியையும் படிக்கும் சலாக்கியம் பெற்றேன். சிங்கரேணியில் மகாகனம் அத்தியக்ஷர் அவர்களும் அருமை அம்மாளும் பாராட்டின பக்ஷமும் உபசாரமும் அதிகம். அவர்களுக்கும் அருமையான மிஷனெரிமார் குடும்பங்களுக்கும், சபையிலுள்ள அனைவருக்கும் அங்கு பின்னிட்ட நாள்களை எனக்குப் பிரயோஜனமும் எழுப்புதலுமாயிருப்பதற்காக அவர்கள் பட்ட பிரயாசங்களை நினைத்து உள்ளக்கனிவோடு நன்றிசொல்லுகிறேன்.

திரும்பும் வழியில் சென்னை கனம் பனியன் ஐயரவர்கள் விருப்பப்படி ஞாயிறு காலை ஆராதனையில் ஓர் மிஷனெரி பிரசங்கம்செய்து நம்மிஷன் வேலையையும் சுருக்கமாய் விவரித்து, பரி. நற்கருணை ஆராதனையில் கனம் ஐயர் அவர்களுக்கு உதவிசெய்தேன். அவர்களும் சபையாரும் அதிக அன்பு பாராட்டி, நம் சங்கத்துக்கு இன்னும் அதிகமாய் உதவி செய்யவும், இன்னொரு சமயம் பல மிஷனெரிக்கூட்டங்கள் வைக்க ஒழுங்குசெய்யவும் வாக்குப்பண்ணினதற்காகவும் அதிக நன்றி சொல்லுகிறேன். நம் மிஷன் காரியங்களை விபரமாய் அறிய விரும்பும் யாரானாலும் காரியதரிசியாகிய கனம் J. அன்புடையான் ஆசிரியரவர்களுக்கெழுதி, என்னை அழைத்து மிஷனெரிக் கூட்டங்கள் நடத்தும்படி கேட்டால், கர்த்தருடைய நடத்துதலின்படியே ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் ஊழியன்,

A. சவரிமுத்து.

போர்டிங் ஸ்கூலுக்கு மிஷனெரி.

ஒதகமண்டலத்திலிருக்கும் கனம் S. V. சுவாமிதாஸ் அவர்கள் ஓர் மிஷனெரியாகப் போவதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இவர்களும் அவர்களுடைய மனைவியும் மெட்டிகிலேஷன் பரீக்ஷை தேறினவர்கள், போதனாசக்தி சர்ட்டிபிக்கெட் பெற்றவர்கள். Mr. சுவாமிதாஸ் மெஞ்ஞானபுரம் ஹைஸ்கூலிலும், மனைவி மெஞ்ஞானபுரம் ஸ்கூலிலும் சேராடக்கர் காலேஜிலும் வாசித்தவர்கள். கடந்த பல வருஷங்களாக நல்ல ஊழியம் செய்து வருகிறவர்களாக நற்சாக்ஷி பெற்றிருக்கிறவர்கள். கடந்த கமிற்றிக் கூட்டத்தில் காரிய நிர்வாக சபையார் இவர்களை மிஷனெரியாக அங்கீகாரஞ்செய்து, பள்ளிக்கூடவேலைக்கு நியமுகஞ்செய்திருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை மிஷனெரி ஊழியத்திற்கென்று தமது ஆவியானவரால் விசேஷித்தபிரகாரம் நிரப்பியருளவும், இவர்கள் புறப்பட்டுப்போவதற்கு இருக்கக்கூடிய தடைகள் யாவும் நீங்கும்படியாகவும் ஜெபித்துவர நண்பரை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஓர் உதார நன்கொடை.

ஓர் திருநெல்வேலி கிறிஸ்தவரிடமிருந்து கடந்த ஜூன்௴ ரிஜிஸ்டர் கடிதமொன்று நம் சங்க பொக்கிஷதாருக்கு வந்தது. அதில்: தேவ கிருபையினால் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்திற்கு ரூ. 1650 பெறுமான நோட்டுகள் இத்துடன் அனுப்பியிருக்கிறது. என் பெயரை எவருக்கும் தெரிவிக்கலாகாது. இந்திய மிஷனெரி சங்கம் கர்த்தருடைய சித்தத்தின்படி ஊழியங்களை நடத்தவும் அநேக ஆத்துமாக்களைக் கர்த்தருடைய பாதத்தண்டைக்குக் கொண்டுவரவுந் தக்கதாக அதைத் தமது கருணாகடாட்சத்தினால் ஆசீர்வதித்தருளுவாராக என்று கண்டிருந்தது. திரும்பவும், அதே சகோதரர் மூன் கூறிய வார்த்தைகளுடன் நாளது௴ ரூ. 825 அனுப்பியிருக்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இவர்களுடைய சிறந்த மாதிரி மற்றும் நண்பரையும் அனல் மூட்டுவதாக.

## திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள கிறிஸ்து சபைக்கு வந்தன நிருபம்.

கர்த்தருக்குள் பிரிய சிநேகிதரே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

நான் உங்கள் நடுவில் பின்னிட்ட இரண்டு வாரமும் நீங்கள் எனக்குப் பாராட்டின அருமையையும் அன்பையும் நினைத்து உங்களெல்லாருக்கும் முழு இருதயத்தோடே நன்றி சொல்லுகிறேன். பாளையங்கோட்டை, ஆத்தூர்குடி, சாயர்புரம், பண்ணைவிளை, நாசரேத், மெஞ்ஞானபுரம், முதலிய முக்கிய ஸ்தானங்களுக்கு நான் வந்திருந்த சமயத்திலும், விருதுப்பட்டி, சாத்தூர், கோவில்பட்டி, மணியாச்சி, கல்லைகொண்டான், தட்டப்பாறை, புதுக்கோட்டை, சிவத்தியாபுரம், சுப்பிரமணியபுரம், கட்டாரத்தி, செவலை, புதுக்குடி, மதுரை முதலிய இடங்கள் வழியாய்ப் பிரயாணம்பண்ணினபோதும் நீங்கள் காட்டின உற்சாகமும், சந்தோஷமும், அன்பும் என் கண்முன் எப்போதும் நிற்கிறது. இடையன்குடி, வெள்ளாளன்விளை, சிரிவைகுண்டம், நல்லூர் முதலிய பல இடங்களிலிருந்தும் அன்பான அழைப்பு வந்தபோதிலும், அங்கேபோகக் கூடாமலிருந்ததை நினைத்து விசனப்படுகிறேன். இவையெல்லாவற்றிற்காகவும் உங்களெல்லாருக்கும் உள்ளக்கனிவுடன் வந்தனம் சொல்லுகிறேன்.

பரி. பவுலைப்போல நானும் உங்களைக் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்து, தைரியமடைந்து என் பணிவிடைக்குத் திரும்புகிறேன். கடந்த இரண்டு வாரங்களாய் திருநெல்வேலி எங்கும் விளங்கின இச்சந்தோஷமானது நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு அதிக உண்மையான நன்றியறிதலையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அதிக உத்தமமான பிரதிஷ்டையையும், பரிசுத்த ஆவியின்மேல் அதிக உறுதியான விசுவாசத்தையும், மிஷனெரி ஊழியத்தின்மேல் அதிக ஊக்கமான வாஞ்சையையும் உண்டாக்குமென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன்.

உற்சாகத்தையும் புதுப்பெலனையும் எனக்குத் தருவதற்கேதுவாயிருந்த இந்தப் பிரயாணத்தை ஒழுங்குசெய்து என்னை அழைப்பித்த இந்திய மிஷனெரி சங்கக் கமிற்றிமாருக்கும், மகாகனம் திருநெல்வேலி அத்தியக்ஷரவர்களுக்கும், நான் அங்கங்கே தங்கின நாட்களில் என்னை மகா அன்பாய் உபசரித்த அருமையான மிஷனெரி குருமார் அம்மாள்மார் அவர்களுக்கும் என் அன்பான நன்றிசொல்லுகிறேன்.

இப்பிரயாணத்தைச் சுகமாய் முடிக்கச்செய்த கிரியேச தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இப்படிக்கு,

உங்கள் இரட்ச கன்மையை வாஞ்சித்து ஜெபிக்கும்,
கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் ஊழியன்,

20—7—13. V. S. Dornakal.

## மிஷனெரிமார் தேவை.

தோர்ணக்கல் மிஷனில் பல இடங்களில் ஜனங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆவலாயிருக்கிறார்கள். அவர்களைப் போதித்து இப்போது சபையில் சேர்த்துக்கொள்ளாவிட்டால், பின்னர் நல்ல சமயம் வாய்க்காது போகலாமே. ஆகவே, நாலு புது இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு நாலு தமிழ் ஊழியரைச் சடிதியில் அனுப்பும்படி கமிற்றிமார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இம்மிஷனெரிமார் நமது சகோதர மிஷனான சிங்கரேனி மிஷனில் ஊழியம் நடந்தேறுகிற முறைப்பிரகாரம் சுவிசேஷ வேலை செய்வார்கள். அதாவது, கிறிஸ்தவர்களாக விரும்புகிற ஓர் கிராமத்தில் ஓர் மிஷனெரி குடியிருந்து, அதிலும் அதைச் சுற்றிலுமுள்ள இரண்டொரு கிராமங்களுக்கு விசேஷ கவனஞ்செலுத்தி, ஜனங்கள் ஆரம்பமுதலே இரட்சகரோடு நெருங்கிப் பழகவும், அவர்களில் விற்பனமான கிறிஸ்தவர்களை அதிக அக்கரையுடன் பாடம் கற்பித்து, அவர்கள் மிஷனில் சம்பளம் எதிர்பாராமல், சபைவேலை செய்யவும் பழக்குவிப்பது அவர்களுடைய ஊழியமாகும். இம்மிஷனெரிமாருடைய ஊழியமுறை எவ்வாறு புதிதோ அவ்வாறே இவர்களுக்குக் கொடுக்கும் உபகாரமும் இருக்கும். மாதம் ரூபாய் 25-ம் போர்டிங் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் பீஸ்பணமும் உபகாரமாகக் கொடுக்கப்படும். தெலுங்கு பாஷை கற்பதற்கு உதவியாகவும் தெலுங்கான நமது ஊழியருக்குச் சிறந்துவிளங்கத்தக்கதாகவும், இம்மிஷனெரிமார் போர்டிங்ஸ்கூலில் வாசித்து, லோயர்செக்கண்டரி (வலிமென்றரி ஹையர்) போதனு அப்பியாச பரிக்ஷை தேறினவர்களாயிருக்க வேண்டுமென்று மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் விரும்புகிறார்கள். வேதசாஸ்திர பாடசாலையில் கற்றிருப்பதாவது, ஜெல்பிஷப் வேதாகம பரிக்ஷையில் பரிசுபெற்றிருப்பதாவது உசிதம்.

கடந்த சவ்வெஷன் கூட்டத்தில் இவ்விஷயத்தைத் தெரிவித்ததின் மூலமாய், ஐந்து சகோதரர் தங்களை ஒப்புவித்தார்கள். மூன்றுபேர் ஒரே சர்க்கிளிலுள்ளவர்கள். ஆகவே சர்க்கிள் முதலாளி எல்லாரையும் அனுப்பிவிட விரும்பவில்லை. இருவர் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் விருப்பப்படி இங்கிலீஷ் அறிவுள்ளவர்களல்ல.

தெலுங்குநாட்டில் நிறைந்திருக்கும் அநுகூலமான வாசலை நாம் ஆதாயப்பண்ணிக்கொள்ளத்தக்கதாக, அங்கு புறப்பட்டுப் போக ஆசிக்கும் ஊழியர் தேவை. எவர் தம் மனைவியுடன் புறநாட்டு ஊழியத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்? விருப்பமுள்ளவர்கள் சங்க செக்ரட்டேரிக்கு எழுத அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். கனம் கவுன்சல் முதலாளியவர்கள் திருநெல்வேலி சபை ஊழியருக்கு உத்தரவு கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில்போகும்.
மானேஜர். வி. எஸ். காலிசன்,
பாளையங்கோட்டை.

சந்தா, பத்திரிகை சரியானபடி கிடைக்காத விஷயமான கடிதங்கள் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

Editor:—The Secretary, I. M. S. T.

இந்த மாச சஞ்சிகைப் பிந்தினதற்காக விசனப்படுகிறோம்.

J. A.

Printed at the C. M. S. Press, Palamcottah and Published by the Indian Missionary Society of Tinnevelly.

Registered No. M. 481.

JUNE, 1913

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 OCT 1913 MADRAS

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X.- No. 6] ஜூன்மீ 1913 [விலை பை 3

CONTENTS

Editorial Notes ... 45
The Lord Bishop of Tinnevelly's Letter ... 46
The Chinese Republic ... 47
Studies in the Acts of the Missionaries ... 49
From the Telugu Field ... 51
The Dornakal Memorial Church ... 52

பொருளடக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... 45
திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷரவர்களின் கடிதம் ... 46
சீனதேசத்து சுயராஜ்ய ஆளுகை ... 47
மிஷனெரிமார் நடபடிகள் ... 49
தெலுங்குநாட்டுக் கடிதம் ... 51
தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயம் ... 52

கர்த்தருக்குச் சித்தமானால், ஜூலைமீ 10உ வியாழக்கிழமை சாயந்தரம் 6 மணிக்கு நமது சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டம் பாளையங்கோட்டை நூற்றாண்டு சபாமண்டபத்தில் நடைபெறும். மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் உபந்நியாசம் செய்வார்கள். நமது அருமை அத்தியக்ஷரவர்கள் பீடம் வகிப்பார்கள்.

**வருஷாந்தரக் கூட்டம்.**

வழக்கம்போல அன்று காலை 7—11 மணி வரையும், 2—5 மணி வரையும் மண்டபத்திற்குமுன் சமர்ப்பித்திருக்கும் பந்தலில் நன்கொடை சாமான் விற்பனை நடந்தேறும். வருஷாந்தக்கூட்டம் முடிவுபெற, புதுவருஷத்து கமிற்றி மெம்பர் தெரிந்துகொள்ளுதல் நடைபெறும். தேவஊழியரும் சபையாரும் வருஷாந்தரக் கூட்டத்துக்கு வரவும், நன்கொடை ஜாமான் விற்பனை சித்தியாய் நடந்தேறத்தக்கதாக சாமான்கள் சபைகள்தோறும் அனுப்பப்படும்படி பார்க்கவும், தாங்களே பந்தலுக்கு வந்து சாமான்கள் வாங்கி சிறப்பிக்கவும், சங்க கமிற்றி மெம்பர்கள், உத்தியோகஸ்தர் தெரிந்துகொள்ளும் கூட்டத்துக்கு ஆஜராகி உதவிசெய்யவும் அன்பாய் அழைக்கிறோம். இக்கூட்டங்களைத் தங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ள அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். நன்கொடை சாமான் விற்பனையின் பலனைக்கொண்டு ஐந்து பிள்ளைகள் தோர்ணக்கல் போர்டிங் பாடசாலையில் படிப்பதற்கு வழியுண்டாகியிருக்கிறது. இம்முயற்சி நடந்தேறத்தக்கதாக நண்பர் பழவர்க்கங்களோ, பலகாரங்களோ, சட்டை, உடுப்பு, கைக்குட்டை முதலியனவோ, பெட்டி, கருப்பட்டியோ அனுப்பி, உற்சாகமாய் உதவிபுரிய வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறோம். மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் ஜூலைமீ 5உ சாயந்தரம் பாளையங்கோட்டை வந்துசேர்ந்து, 15உ வரை நமது நடுவிலிருப்பார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**தெலுங்கு மிஷனெரிமார் தேவை.**

தெலுங்குநாட்டிலுள்ள ஜனங்கள் இயேசுரக்ஷாபெருமானைப்பற்றியறிய மிகுந்த தாபந்தமாயிருக்கிறார்கள். அருள்நாதனின் அன்பைப்பற்றிச் சொல்ல, ஸ்தானாபதிகள் தேவை. நமக்கு கர்த்தருடைய வசனமுண்டு. அதை வாசித்து அறிந்துகொள்ளலாம். தெலுங்கு ஏழை ஜனங்களுக்கோ வாசிப்புத் தெரியாது. ஆகச்சே புஸ்தகத்தை வாசித்து, சுவிசேஷ நற்செய்தியறிவது கூடாத காரியம். நம் சபைகளில் ஊழியஞ்செய்யும் நாலு சகோதரரை அனுப்பும்படி கமிற்றிமார் தீர்மானித்திருக்கிறார்கள். கர்த்தரால் அழைப்புபெறும் ஊழியரை அனுப்புவதற்கு டிஸ்ரிக்டு சர்ச்சகவுன்சல் முதலாளியவர்களால் தடையில்லை. நாலு ஐந்து சகோதரர் புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கனம். சர்க்கிள் க்ஷேயர்மன்கள் சம்மதித்தால், தேவையான நாலுபேரையும் ஜூலைமீ வருஷாந்தரக்கூட்டத்தில் பயனுபசாரங் கூறி, அனுப்ப வழியுண்டாகும். அப்படியானால், ஜூலைமீ 11உ வெள்ளிக்கிழமை சாயரட்சை இச்சகோதரருக்குப் பயனுபசாரம் கொடுக்கப்படும். தடைகளை நீக்கும் கர்த்தர் தம் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்புவதற்கு இருக்கும் சகல தடைகளையும் நீக்கும்படி ஊக்கமாய் ஜெபிக்க நண்பரை மன்றாடுகிறோம். ஜெபமே பெலன், ஜெபமே ஜெயம்.

நமது ஹோம் மிஷனாகிய கனம். A. சவரிமுத்து ஐயரவர்கள் தெலுங்குநாட்டில் நமது மிஷனெரிமாரோடும் சிங்கரேனி மிஷனெரிமாரோடும் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களோடும் சில வாரங்கள் பின்

**ஹோம் மிஷனரி.**

விட்டு, தெலுங்குநாட்டுக் காரியாதிகளை நேரில் அறிந்து, ஆகஸ்டுமீ மூன்றும் வாரம் திருநெல்வேலிக்குத் திரும்புவார்கள். குருமாருக்கும் மற்றும் தேவ ஊழியருக்கும் மிஷனெரி ஊழிய சம்பந்தமாய் உதவிபுரிய அவர்கள் எப்போதும் ஆயத்தமாயிருப்பார்கள். மிஷனெரி கூட்டங்கள் வைப்பதற்கும், தவச உற்சவ முதலிய விசேஷ சமயங்களில் மிஷனெரி ஊழியத்தைப் பற்றிச் சொல்லவும் அவர்களுடைய உதவி பெற்றுக்கொள்ளலாம். அவர்களுக்காகவும் அவர்களுடைய ஊழியத்திற்காகவும் நண்பர் ஜெபித்துவரக் கோருகிறோம்.

## திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷாதீனத்து குருமார் முதலான ஊழியர்களுக்கு,

எனதன்பிற்குரிய உடன் ஊழியர்களே!

தற்சமயம், 'திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கத்திற்கு' உங்களின் சகாயமும் ஜெபமும் மிக்க அவசியமாயிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னை பாலகிரிமலையில் திருப்பணி விடைசெய்துவந்த கனம் A. சவரிமுத்து ஐயரவர்கள் அந்த வேலையை விட்டுவிட்டு இச்சங்கத்தின் உள்நாட்டு மிஷனெரி வேலை பார்க்க நியமனம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரத்தில் இவ்வூழியத்தை ஆரம்பிப்பார்கள். இம்மிஷனைப்பற்றிய வாஞ்சையும் அநுதாபமுமுள்ள யாவரும் தங்கள் ஊக்கமான ஜெபத்தால் அவர்களைத் தாங்குவார்களென்று நம்புகிறோம். இச்சங்கத்தைப்பற்றிய கரிசனையை ஜனங்களுக்குள் உண்டாக்கும்படி இந்த அத்தியக்ஷாதீனத்திலுள்ள பற்பல ஸ்தானங்களுக்குச்சென்று, கூட்டங்கள் வைத்தும், பிரசங்கங்கள் நடத்தியும், சபையின் ஆட்களைச் சந்தித்தும் சங்கத்தின் வளர்ச்சி, விர்த்தியைப்பற்றிப்பேசி, ஜனங்கள் இந்த மகிமையுள்ள ஊழியத்தில் பங்கு பெறுவது அவர்களது கடமை என்றும், அதற்குடன் பங்காளிகளாவதின் சிலாக்கியம் எத்தனை மகத்தானதென்றும் எடுத்துக்காட்டிவருவதே ஐயரவர்கள் இங்கு செய்யப்புகும் விசேஷ ஊழியம். இவ்வத்தியக்ஷாதீனத்திலுள்ள குருமார், மிஷன் ஆசாமிகள் முதலான சகலரும் நன்கு ஏற்று, மிஷனெரிக் கூட்டங்கள் முதலான கூட்டங்கள் வைப்பதற்கு உங்களாலியன்ற உதவி புரிவதோடு தங்களுடைய ஆலயங்களில் பிரசங்கிக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளவும், அதினால் இச்சங்கத்தைப்பற்றிய அறிவு சபைகள்தோறும் உண்டாகும்படி வழிவகை செய்யவும். சபைகள் சங்கவேலையில் அநுதாபங்கொண்டு முயற்சிக்கவும் வேண்டுமென்று கோருகிறோம்.

இச்சங்கம் நாளொருவண்ணம் விர்த்தியாகி வருகிறது. மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்களின் ஞானமுள்ள கண்காணிப்புக்குள் அது முன்னிலுமதிகமாய் விர்த்தியடையுமென்று எதிர் நோக்குகிறோம். திருநெல்வேலி கிறிஸ்தவர்கள் அதன் விர்த்தியைக் கவனித்து, பூரித்து மகிழ்வது நியாயமே. இந்தியாவில் சுதேசிகளின் முயற்சியால் ஆரம்பித்து நடத்தப்படுகிற முதற் சங்கமிதுவே. வேலை எவ்வளவுக்கு வளர்ந்து பெருகிறதோ அவ்வளவிற்கு பொருளுதவியும் அவசியமாகும். ஆகையால் திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷாதீனத்திலுள்ள ஒவ்வொரு சபையும் இச்சங்கத்தின் உபசங்கங்களாகி, அதன் விர்த்திக்குத்தகும் உதவிபுரியவேண்டுமென்பதே எனதுள்ளான வாஞ்சையும் ஆவலுமாயிருக்கிறது. இச்சங்கம் இவ்வத்தியக்ஷாதீனத்தின் மிஷனெரி ஊழியத்தைக் காட்டுகிறது. நமது மிஷன் ஸ்தானங்கள் பலதிலிருந்து நல்ல பொருள் சகாயம் வருகிறது. தனித்தனியான கிறிஸ்தவர் பலர் போக்த சகாயம் புரிகிறார்கள். ஆனால் நமக்கு வேண்டியதென்ன? நம் கிறிஸ்தவர்களனைவரின் சமுதாய பாத்தமும் சகாயமுமே. சங்கமின்னும் பாலியதசையிலிருப்பினும், மிக்க ஆசீர்வாதம் பெற்றிருக்கிறது. தெலுங்கு ஆசாமிகள் பயிற்சிக்கப்பட உதவிவேண்டும். ஊழியம் செய்வதற்கு புதுமுறையான ஏற்பாடாகியிருக்கிறது. இளைஞரைச்சேர்த்து, கிறிஸ்தவ சகவாசத்திலும் அறிவிலும் வளர்க்க, போர்டிங் பள்ளிக்கூடங்களுக்கு உதவி வேண்டும். இதுபோக சங்கத்தின் பொதுவான வேலைகளுக்கும் சகாயம் வேண்டும்.

திருநெல்வேலி கிறிஸ்தவர்கள், தாங்கள் இங்கிலாந்திலிருந்து தங்கள் நடுவில் வந்து ஸ்தாபகமான மிஷன்களின் மூலயமாய் இற்றையவரை பல்லாண்டுகளா யநுபவித்துவரும் நன்மைகளை உணர்ந்தவர்களாய், அதின் ஞாபகார்த்த சின்னமாக தோர்ணக்கல்லில் கட்ட நினைத்திருக்கும் புதுதேவாலய சங்கதியையும் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம். இச்சிறந்த விஷயத்தைக் கைகூடி வரப்பண்ணுவதில் தங்களுக்கும் ஒரு பங்குகிடைப்பது பெரும் சிலாக்கியமென்றுணர்ந்தவர்களாய்க் கிறிஸ்தவரனைவரும் ஊக்கமான முயற்சி உடன் எடுப்பார்களென்றுநம்புகிறோம். அவ்வாலயம் கட்டி முடிவு பெறும்போது, அது தெலுங்கு நாட்டிற்கும் திருநெல்வேலிக்குமுள்ள பாத்தத்துவத்தை விளக்கும் சின்னமாய் நிற்பதோடு, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஊழியர்கள் அதிக உற்சாகத்தோடு பிரசங்கிக்க அவர்களுக்கு மனோதைரியத்தையும் பெலனையும் உண்டாக்கும் சாதனமாகவும் இருக்கும். அதைக்கட்டி முடிக்க உத்தேசம் ரூ. 10,000 வேண்டுமென மதிப்பிட்டிருக்கிறார்கள். இது நன்றியறிவும் உதாரத்துவமுமுள்ள இருதயமுள்ளவர்களால் சேகரிக்க முடியாத பெருந்தொகையல்ல. இந்த ஆலயமும், பின்னாலவசியமென்று காணும் கட்டிடங்களும் கட்டப்போதுமான 12 ஏக்கர் நிலம் இனாமாகக் கிடைத்திருக்கிறது. ஆகவே கட்டிட வேலையை ஆரம்பிக்க பொருள்தானவசியம், அது வந்த உடனே பிளான் போட்டு, செல்லும் தொகைகண்டு, தடையின்றி வேலை ஆரம்பிக்கவேண்டியதுதான். இம்முயற்சி காரியமநுகூலமானதாகுமென்று நம்புகிறேன்.

பரிசுத்தாவியின் திருநாளை இப்போதுதான் கடந்துவந்திருக்கிறோம். இந்நாட்கள் பெந்தெகொஸ்தின் வருஷமாரிகையையும், அதினால் ஜனங்களுள்ளத்திலுண்டான விசேஷ பலன்களையும், அதன் மூலமாய் நாம் தேவனிடத்தில் எவ்வளவு பெரியகாரியங்களைத் தைரியமாய் எதிர்நோக்கலாம் என்றும் இத்தகைய காரியங்களையும் நம்முள்ளத்தில் நினைப்பூட்டுகின்றன அல்லவா? அவ்வாவியானவரே இக்காலத்திலும் கிரியை நடத்திவருகிறவர். ஆகவே நம் விசுவாசம் பலத்ததாயும், நம் ஜெபங்கள் ஊக்கமும் விடாப்பிடியுள்ளவையும் இருப்பின், அவர் வானத்தின் மதகுகளைத்திறந்து இடங்கொள்ளாதே போகுமட்டும் தமதாசீர்வாதத்தைப் பொழிந்தருளுவாரல்லவா?

மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்கள் கூடிய சீக்கிரம் திருநெல்வேலிக்கு வருவார்களென்று நம்புகிறேன். வருகிற ஜூலை மாதத்தில் பாளையங்கோட்டையில் நடந்தேற இருக்கும் இந்திய மிஷனெரி சங்க வருஷோற்சவ தினத்தில் அவர்கள் நம் நடுவிலிருந்து, வருஷாந்தரப் பிரசங்கஞ் செய்வார்களென நம்புகிறோம். தோர்ணக்கல் அத்தியக்ஷாசனபின் முதல் விசாரவருகையில், அவர்களது வரவை ஏற்கனவே எதிர்பார்த்திருக்கும் அவர்களது பல இஷ்டர்களும் நன்கேற்றுக்கொள்வார்களென நம்புகிறோம்.

A. அச்சிஸன் உல்லியம்ஸ்,
திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷர்.



---

## சீனதேசத்து சுயராஜ்ய ஆளுகை.

'இரத்த சாக்ஷிகள் திருச்சபைக்கு மூலவித்தாயிருக்கிறார்கள்'. கிறிஸ்து மார்க்கத்திற்கு மகிமையாய், மரணசாக்ஷியாய் தங்கள் ஜீவனைக் கொடுத்தவர்கள் திருச்சபை உற்பத்திக்கு வித்தாயிருக்கிறார்கள் என்னு முதுமொழியை, சீனதேசத்தில் தற்காலத்தில் உண்டாயிருக்கிற மாறுதல்கள் பரிஸ்காரமாய் ருஜூப்படுத்துகின்றது.

சீனதேசத்து துஷ்டரான பாக்ஸர் கலகம். இதற்கு
சமார் 10 வருஷங்களுக்குமுன் சீனதேசத்தில் இருந்த அந்நியர்
களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும் விரோதமாய், அங்கே அப்
போயிருந்த இராஜாங்கத்து அந்தரங்க அநுமதியினால் மூரட்
டாட்டமுள்ள துஷ்ட சீன ஜனங்களால் பெருங்கலகம்,
கொள்ளை, கொலை முதலிய ஆபத்துகள் உண்டாயிற்று. சிலகா
லங்களாய் அவர்கள் சகல அந்நியதேசத்தவரையும் துன்பப்படுத்
தினார்கள். சீனதேசத்து சுதேச கிறிஸ்தவர்களையும், அவர்கள்
மனைவி மக்களையும், அங்கே கிறிஸ்தவப் பிரசங்கஞ்செய்து
மிஷன்வேலை நடத்திவந்த சகல மிஷனெரிமார்களையும், அவர்
கள் மனைவிமக்களையும் ஈவிரக்கமின்றித் தாக்கி உதைத்துக் கொலை
செய்தார்கள். வெகு கஷ்டப்படுத்தினார்கள். கிறிஸ்து மார்க்
கத்தை விடமாட்டோமென்ற சுதேச கிறிஸ்தவர்களை வாளுக்
கிரையாக்கினார்கள். அனேக கிறிஸ்தவர்களை அதம்பண்ணி
னார்கள். சங்காரஞ்செய்தார்கள். அதனால் மாண்டவர்கள்
ஆயிரமாயிரம்பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆச்சரிய மாறுதல். இப்படியாக சீனதேசத்தில் இருந்த
கிறிஸ்தவர்களுக்கும் அந்நியதேச மிஷனெரி ஊழியருக்கும்
மிகுந்த துன்பங்கள் உண்டாயிருந்தபோதிலும்; கிறிஸ்தவர்க
ளான ராஜாங்கங்களால் எச்சரிக்கப்பட்டு, சீன ராஜாங்கத்தார்
அந்த பாக்ஸர்களுடைய துஷ்ட நடத்தையை வேரோடே
தொலைத்துவிட்டார்கள். அந்தக் கலாபம் முற்றிலும் நின்று
விட்டது. அந்நிய தேசத்து மிஷனெரிமார் மேற்கண்ட துன்
பத்தினால் பின்னடையாமல் முன்னையப்பார்க்கிலும் அதிக
மானபேர்கள் அந்த ஊழியத்திற்குவந்து ஏற்பட்டார்கள். தங்
கள் ஜீவனை ஒரு பொருட்டாய் எண்ணாமல் பல இடங்களி
லும் அநேகம்பேர் கிறிஸ்தவர்களாகத் தலைபட்டு சீனதேசத்
தில் கிறிஸ்துமார்க்கம் அதிக விர்த்திக்கு வந்துகொண்டிருந்தது.

இந்த ஸ்திதியில் இருக்கையில், ஒரு வருஷத்திற்குமுன் சீனதேசத்து ஜனங்கள் எழும்பி, அப்பொழுது அங்கிருந்த மஞ்சு ராஜாங்க இராணுவத்திற்கு எதிர்த்துப் போராடி, அந்த ராஜாங்கத்தை முற்றிலும் தொலைத்துவிட்டு, சீனதேசம் முழுவதையும் சுய ராஜ்ய ஆளுகையாக்கிவிட்டார்கள். அதுமுதல் வெகு ஆச்சரியமான மாறுதல்கள் நடந்தேறி வருகின்றன.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்முடைய அபீஷ்டம் நிறைவேறும் பொருட்டு மனோதிருப்தியான பல ஆவிக்குரிய மாறுதல்கள் உண்டாயிருக்கிறது.

சீனதேசத்திலிருக்கிற மிஷனெரிமார்களும் சீனதேசத்து சுதேச கிறிஸ்தவர்களான யாவரும் சேர்ந்து எப்பிரல்மீ 27ம்உ நடத்துகிற தேவாராதனைக்கு சகல மாகாணத்து அதிகாரிகளின் பிரதிநிதிகளும் கூட ஆஜராயிருந்து ஆராதிக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவில் பிரதிநிதிகளின் கூட்டத்திற்கும், இப்போது உண்டாயிருக்கிற புதிய கவர்ன்மெண்டுக்கும், ராஜ்ய பரிபாலனத்தாருக்கும், இனி தெரிந்துகொள்ளப்படப்போகிற ராஜ்யத்தலைவருக்கும் கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய ஜெபமுறைகள் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அதை அனுசரித்து லண்டன்மாநகரில் வசிக்கும் சீனதேசத்து மந்திரி அவ்விடத்திலுள்ள சமாச்சாரப் பத்திரிகைகளுக்கு எழுதுகிற விபரமாவது:—சீனதேசத்தில் ஜெபம் நடக்கிறதுபோல் இங்கிலாந்து தேசத்திலுள்ள சகல கிறிஸ்தவர்களும் செய்வார்களானால், அதை ராஜாங்கத்தார் மிகவும் நன்குமதித்து நன்றியறிதல் செலுத்துவார்கள் என்று கண்டிருக்கிறது. அதை ஒப்புக்கொண்டு, எப்பிரல்மீ 27-ம் தேதி விசேஷித்த ஜெபம் செய்யும்படி கன்றர்ப்ரி (Canterbury) மாகாணப் பிரதிமை அத்தியக்ஷரும் லண்டன் பட்டணத்து அத்தியக்ஷரும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்தத் தலைமுறையில் மிஷனெரி ஊழியத்திற்கு இது ஒரு ஆச்சரியமும் அனுகூலமுமான சம்பவமென்று லண்டன் அத்தியக்ஷர் பிரஸ்தாபித்திருக்கிறார்கள்.

ஒரு விசேஷ ஞானஸ்நானம். இன்னொரு மகா விசேஷித்த சம்பவம் என்னவென்றால், சீனதேசத்து சுயாதீன ஆளுகை அதிபதியின் மருமகள் (President Yuan Sikai's Niece), கிறிஸ்து மார்க்கத்தை பகிரங்கமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றிருக்கிறாள்.

சீனதேசத்தில் பெரிய மாறுதலுண்டாக மூலகாரணமாயிருந்தவர் மேற்சொல்லப்பட்ட (Yuan Sikai) யூயான் சிக்காய் என்ற பிரபுதான். அவர் இங்கிலாந்து அமெரிக்கா தேசத்திற்குப்போய் நன்றாய்ப்படித்து அங்குள்ள கல்வி, நாகரீகம், சுயாதீனம் முதலியவற்றை வெகுவாய் அறிந்தவர். அப்படிப்பட்ட சீர்திருத்தங்களைத் தம் சுயதேசத்திலும் உண்டாக்க வேண்டுமென்று மிகவும் விருப்பமுற்றவர்.

தம்முடைய முந்திய கன்ப்யூஷியானிசம் (Confusicianism) என்ற மதத்தையும் கிறிஸ்து மார்க்கத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து, கிறிஸ்து மார்க்கத்தின் சிலாக்கியத்தை நன்குணர்ந்தவர். முந்திய மஞ்சு ராஜாங்கத்தார் அவர் அபிப்பிராயங்களை அறிந்து, அவரால் தங்கள் ராஜ்யத்திற்குப் பெருங்கெடுதி நேரிடும் என்று எண்ணி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள். அவர் இங்கிலாந்திற்குப்போய் மறைந்திருந்தார். அங்

சேயுங்கூட ஆள்களை அனுப்பி அவரைக் கொலைசெய்ய வகை பார்த்தார்கள். அவருடைய உத்தம சிநேகிதர்கள் அந்த விக்கினத்திற்கு விலக்கி அவரைத் தப்புவித்தார்கள். என்றாலும் அவருடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் அறிந்த சில சீனர்கள் அவருடனே சேர்ந்துகொண்டு தங்கள் தேசத்து சுயாதீனத்திற்காகவும் நன்மைக்காகவும் உழைத்தார்கள். இந்த காரணத்தைக்கொண்டு ஜனங்கள் ஏகோபித்தெழும்பி முந்திய ராஜாங்க சேனைகளை முறியடித்து ஜெயித்து, சுயாதீன ராஜாங்கத்தை ஸ்தாபித்தார்கள். ஸ்தாபித்து இப்பொழுது ஏறக்குறைய ஒருவருஷகாலமட்டும் ஆகிறது. என்றாலும் அநேக மாறுதல்கள் நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்து ரக்ஷகரால் உலக முழுவதிற்கும் இரக்ஷிப்பும் பெரிய நன்மையும் உண்டானதுபோல், யூயான் சிக்காய் என்பவரால் சீனதேச முழுமைக்கும் பெரிய நன்மை உண்டாயிற்று. சீன சுயராஜ்ய ஆளுகை விதிகளும், அவைகளை ஐரோப்பியக் கண்டத்து சகல அதிகாரங்களும் ஒப்புக்கொண்டு அங்கீகாரஞ்செய்ததும் சகல கிறிஸ்தவ கூட்டங்களுக்கும் வெகு திருப்தியையும் ஆநந்தத்தையும் உண்டாக்கிற்று. சீன ராஜாங்கத் தலைநகரியான பெக்கின் பட்டணத்தில் வெகு காலமாய் வசிக்கிற அந்நிய குடித்தனக்காரர்கள், இராஜ்ய பரிபாலன ஆளுகையினால் உண்டான மாறுதலுக்குப் பிறகு ஆச்சரியப்படத்தக்க விதமாய் நடக்கிற மாறுதல்களுக்கு இந்த ஜெப உத்திரவு வெகு ஆச்சரியமான ருஜுவாக மதிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மாறுதல்கள், சீர்திருத்தங்கள் எல்லாம் நடந்தேறிவரும் சீன தேசத்தின் முந்திய தன்மை, விஸ்தீரணம், நாகரீகம், குறைகள் குணங்கள் என்னென்னவென்று கவனிப்பது நலமாயிருக்கும். நம்முடைய இந்துதேசம் கன்னியாகுமரியிலிருந்து இமாலயமலைபரியந்தம் வெகு விஸ்தீரணமான தேசம் என்று அறிவீர்களே. சீனதேசமோ 40 லக்ஷம் சதுரமைலுக்குமேல் ஈற்றளவுள்ளது. இந்தியாவை பார்க்கிலும் பெரியது, ஐரோப்பாக்கண்டத்தைவிட பெரியது. அதில் 40 கோடி ஜனங்கள் வசிக்கிறார்கள். வெகுகாலம் நாகரீகத்தில் தேர்ந்தவர்கள். உயர்ந்த கைத்தொழில், கல்வி முதலியவற்றில் வெகு நிபுணர். புராதீன வழக்கங்களை அனுசரித்து வந்தவர்கள். ஐரோப்பியரை வெகு இழிவாய் நினைப்பார்கள். அவர்களுடைய ஸ்திரீகள் தங்கள் பாதங்கள் சிறிதாயிருப்பது அழகென்றெண்ணி வெகு பிரயாசப்பட்டுக் கட்டி வருத்தப்படுத்தி அதைச் சிறிதாக்குவார்கள். அதனால் உயர்ந்த வகுப்பைச்சேர்ந்த பெண்கள் நன்றாய் நடக்க ஓட முடியாது. குந்திக்குந்தி நடப்பார்கள். கல்வி கற்க முயலுகிறதில்லை. நம் தேசத்து ஸ்திரீகள் வருத்தப்பட்டு தங்கள் காதுகளைக்குத்தி வருத்தப்படுத்தி பெரிதாக்கி அதிக கனத்த நகை போடப் பிரயாசப்படுகிறதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு ஒத்த மாதிரி கால்கட்டி குறுக்குகிறது சீனர் வழக்கம் என்னலாம். அங்குள்ள ஆண்பிள்ளைகள் நம் தேசத்தவர்களைப் போல் நீண்ட சிறு குடுமி உச்சந்தலையில் வைத்திருப்பார்கள். தங்களுடைய பெண்களுக்கு மாப்பிள்ளை தெரிந்துகொள்ளுகிறது பூராவும் பெற்றோர்களாலேயே. கல்யாணச் சடங்குகள் சில நாளாய் நடக்கும். அதில் கடைச்சடங்கு பெண் முகத்தில் போடப்பட்டிருக்கிற முக்காட்டை எடுத்துவிட்டு மாப்பிள்ளையைப் பார்க்கச்சொல்லுகிறதாம். இது விநோதமான செய்கையல்லவா? இந்துதேசத்தில் நடக்கிறதைப் போலவே பெற்றோர்கள் பெண்பிள்ளைகளைப்பார்க்கிலும் ஆண் பிள்ளைகளையே சிலாக்கியமாக எண்ணுகிறார்கள்.

சீனதேசத்தில் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்ற சுயாதீனம் 1860-ம் வருஷம் கவர்ன்மென்டால் கொடுக்கப்பட்டது. இப்பொழுது அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் கிறிஸ்துமார்க்கம் பரவியிருக்கிறது. ரோமான்மார்க்கமும் புரோட்டஸ்டன்டு மார்க்கமும் உண்டு. ரோமான் மார்க்கத்திலுள்ள ஜனங்கள் மாத்திரம் 10 லக்ஷம் என்றும், புரோட்டஸ்டன்ட் மார்க்கத்தைச்சேர்ந்தவர்கள் 2,50,000 பேர் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது

சீனதேசத்தில் மிஷன் விர்த்தியாவதற்குக் காரணம். சீனதேசத்திலுள்ள உள்நாட்டு மிஷனில் வேலைநடத்துகிற மாதிரி ஆரம்பமுதல் சுய ஆதரவு, சுய ஆளுகை பயிற்சிசெய்விக்கப்பட்டு வருகிறது. அதனால் சுதேச கிறிஸ்தவர்களே சுவிசேஷப் பிரபல்யத்திற்கு ஆதாரமாயிருக்கிறார்கள். இதற்கு ஒரு முக்கிய திருஷ்டாந்தம் பாஸ்டர் ஷி என்பவர். இவர் பெருங்கல்விமான். வெகு ஆராய்ச்சியின்பேரில் தன்னுடைய முக்கிய மதமாகிய கன்வ்பூஷியானிசத்தை விட்டு விட்டு கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர். அவர் நாட்டு வைத்தியத்தில் தேர்ந்தவர். வைத்தியஞ்செய்து தான் ஜீவித்துக்கொண்டு பிறருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்து வந்தார். அபின்குடிகாரர்கள் அநேகரை அக்குடியை விடும்படி செய்து தேவகிருபையினால் குணப்பட்ட கிறிஸ்தவர்களாகிறதற்கு ஏதுவாயிருந்தார்.

முடிவுரை. சீனதேசத்தில் மார்க்க சம்பந்தமாயும், தேச சம்பந்தமாயும், நாகரீகம் ஒழுக்கம் பழக்க வழக்கங்கள் சம்பந்தமாயும் அநேக மாறுதல்கள் நடந்தேறினதாக வாசிக்கிறோம். கிறிஸ்து நாமத்திற்கு மகிமையான இவ்வித ஆச்சரிய மாறுதல்கள் அங்கு நடந்துவருகிறதைப்பற்றி வாசிக்கிற இத்தேசத்துக் கிறிஸ்தவர்களாகிய நாம் மெத்தவும் சந்தோஷப்படக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வளவு பெரிய மாறுதல்களுக்கும் காரணம் சீன கிறிஸ்தவர்களுடைய ஊக்கமான ஜெபமே. இந்தியாவில் முன் கிறிஸ்து மார்க்கத்திற்கு விரோதமாயிருந்தவீண் அபிப்பிராயங்கள்மாறி, கிறிஸ்து பகவானால் இரக்ஷிப்புண்டாகும் என்று அநேகர் நம்புகிறார்கள். ஆனால் தங்களுடைய மார்க்கத்தில் இரக்ஷிப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை முற்றிலும் நீங்கவில்லை. சீனதேசத்தில் நடந்தேறினதற்கொத்த விசேஷித்த எழுப்புதல் நம்முடைய இந்தியா தேச முழுவதிலும் உண்டாகும்படிக்கும், இயேசு இரக்ஷகரால் மட்டும் ஆத்மரக்ஷிப்படையலாம் என்ற விசுவாசம் விர்த்திக்கும்படிக்கும் நாம் தேவனைநோக்கி ஊக்கமாய் பிரார்த்திப்போமாக.

A. S. அப்பாசாமி.

---



## மிஷனெரிமார் நடபடிகள்.

### அப்போஸ்தலர் 15-ம் அதிகாரம்.

கலாத்தியா மகாணத்தில் சுவிசேஷம் பிரபலமாகி சபை ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றை 14-ம் அதிகாரத்தில் கவனித்தோம். அப்போஸ்தலர் அப்பிரயாணத்திலிருந்து திரும்பி அந்தியோகியாவுக்கு வந்தபோது ஆரம்பித்த விவாதமும் சபை அவ்விஷயத்தில் நடந்துகொண்ட விதமும் 15-ம் அதிகாரத்தில் காட்டியிருக்கிறது.

இவ்வதிகாரத்துக்கு 'எருசலேம் சங்கம்' என்று பேரிடலாம்.

1. சங்கம் கூடின காரணம் 15: 1—5.
2. சங்கம் நடந்த விபரம் வ. 6—29.
3. சங்கத்தினாலுண்டான முடிவு வ. 30—35.

I. எருசலேம் சங்கத்திற்குக் காரணம் 1—5.

கிறிஸ்து சபை புறஜாதிகளுக்குள் வளர்ந்தோங்கவே மூன்று பிரதான விஷயங்கள் தீர்மானிக்கப்படவேண்டியதிருந்தது. இவற்றில் இரண்டு யூதமார்க்க சடங்காசாரங்களையடுத்த பிரமாணம். மற்றது கிறிஸ்து சபையின் ஐக்கியத்தைப்பற்றிய விதி வேறுவிதமாகச் சொல்லின், மூன்று கேள்விகளுக்கு உத்தரவு வேண்டியதாயிருந்தது:—

(1) புறஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் யூதமார்க்க சடங்காசாரங்களை நிறைவேற்றவேண்டுமோ?

(2) கிறிஸ்தவர்களாகிற யூதர்கள் இச்சடங்காசார விதிகளுக்கு உட்பட்டவர்களா?

(3) யூத கிறிஸ்தவர்களும் புறஜாதி கிறிஸ்தவர்களும் ஒரே சபையின் அங்கங்கள்தானா?

(1) யூதமார்க்க சடங்காசார விதிகளை கிறிஸ்தவர்களாகும் புறஜாதியார் கைக்கொள்ளவேண்டுமோ? உதாரணமாக, புறஜாதியார் கிறிஸ்தவர்களாகும்போது விருத்தசேதனம் பெற வேண்டியதவசியமா; பழக்க ஒழுக்கங்களுக்கேற்ற தீட்டு விதிகளை இவர்களும் அனுசரிக்கவேண்டியது கட்டாயமா; சுத்த அசுத்த போஜன விதிகளை இக்கிறிஸ்தவர்களும் கைக்கொள்ள வேண்டுமோ என்னும் கேள்விகள் ஒருபக்கம்.

(2) புறஜாதியாரிலிருந்து வரும் கிறிஸ்தவர்கள் விஷயம் எவ்வாறாயிருந்தாலும் யூதர் காரியம் எப்படி? கிறிஸ்து சபையில் சேரும் யூதர் தங்கள் பழைய ஆசாரங்களை இனிமேலும் கைக்கொள்ளவேண்டியதவசியமா? உதாரணமாக சபையில் சேர்ந்திருக்கும் ஓர் யூதன் சேர்ந்தபின் தன் வீட்டில் பிறக்கும் பிள்ளைக்கு விருத்தசேதனமும் செய்யவேண்டுமோ? அல்லது ஞானஸ்நானம் கொடுத்தால் அது போதுமா? யூதராயிருந்து கிறிஸ்தவர்களானவர்கள் தங்கள் பழக்க ஒழுக்கங்களிலும் போஜனங்களிலும் இன்னும் பழைய விதிகளைக் கைக்கொள்ள வேண்டியது கட்டாயமா? அல்லது அவற்றை நெகிழ்ந்துவிடத்தகுமா? என்பவை மறுபக்கம்.

(3) கிறிஸ்து சபையின் ஐக்கியத்தைப்பற்றியும் பல கேள்விகள் எழும்பின. யூதரிலிருந்தும் புறஜாதியாரிலிருந்தும் கிறிஸ்து சபையில் சேருகிறவர்கள் ஒரே சபையில் அங்கங்களாயிருக்கவேண்டியது அவசியமா? அவர்களெல்லாரும் ஒன்றாய் அப்பம் பிட்டு பரிசுத்த பந்தியை ஆசரிக்கவேண்டியது கட்டாயமா? பழக்க வழக்கங்களிலும், போஜனங்களிலும் ஒருவருக்கொருவர் தலைமுறை தலைமுறையாய் வித்தியாசமுள்ளவர்களானதால், அவர்கள் தங்கள் ஆசார பேதத்தினிமித்தம் திருச்சபையிலும் பிரிவு பிரிவாயிருந்துகொள்ளக்கூடாதா என்பவைகளே.

இக்கேள்விகளுக்கு எருசலேம் நகரில் கூடின சங்கத்தார் எவ்வாறு விடைபகர்ந்தார்கள் என்று பார்ப்போம்.

நடந்த சரித்திரத்தை அப். 15: 1—5 ல் காணலாம். இது தெளிவாய் விளங்கவேண்டுமாகில் கலா. 2: 1—10 ஐயும் வாசிக்வேண்டும். இரண்டும் ஒரே சம்பவத்தையே குறிக்கிறது.

கலாத்தியா மாகாணத்தில் வேலைமுடித்து பரி. பவுலும் பரி. பர்னபாவும் அந்தியோகியாவில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது (அப். 14: 28) யூதேயாவிலிருந்து சிலர் அங்கே போய் புறஜாதியிலிருந்து சபையில் சேர்ந்தவர்களைப்பார்த்து நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்களென்று போதகம்பண்ணினார்கள் (15: 1). பீஸன் பிரதியைப் பார்த்தால் இவ்வாறு போதித்தவர்கள் பரிசேய வகுப்பிலிருந்து விசுவாசிகளானவர்கள் என்று தோன்றுகிறது. 15: 5 ஞல் இது ரூபகாரமாகிறது. நீங்கள் விருத்தசேதனமடைந்து மோசேயினுடைய முறைமையின்படி நடவாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்றுசொல்லி ஞானஸ்நானத்தினால் கிறிஸ்து சபையைச்சேர்ந்து விருத்தசேதனம் பெறாமலிருந்தவர்களை இவர்கள் கலக்கினார்கள். கலாத்தியா மாகாணத்தில் புறஜாதிகளுக்குள் இப்போதுதான் சபையை ஸ்தாபித்துவந்த பரி. பவுல் இதைக் கேட்டு சும்மா இருப்பாரா? 'மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும்' உண்டானது இயற்கையே.

பீஸன் பிரதியில் இவ்வாக்கியம் சற்று விவரமாயிருக்கிறது. 'மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானது எனெனில், அவர்கள் விசுவாசித்தபோது இருந்தபடியே இருக்கவேண்டும் என்று பவுல் ஊக்கமாய்ச் சாதித்தான். ஆனால் எருசலேமிலிருந்து வந்தவர்களோ எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலர் மூப்பரால் இவ்விஷயம் விசாரித்துத் தீர்க்கப்படுவதற்காக பவுலும் பர்னபாவும் அவர்களிடத்தில் போகவேண்டுமென்று வற்புறுத்தினார்கள்' என்று சொல்லியிருக்கிறது. இது நிசமானால், அப்போஸ்தலரால் விசாரிக்கப்படுவதற்கென்று பரி. பவுல் எருசலேமுக்குப் போக ஒருபோதும் சம்மதித்திருக்கமாட்டார் என்பது நிச்சயம். தான் போதிக்கும் உபதேசத்தைப்பற்றி விசாரணைசெய்ய மற்ற அப்போஸ்தலருக்கு அதிகாரம் உண்டென்று அவர் ஒரு நிமிஷமாகிலும் ஒப்புக்கொள்ளமாட்டாரே. ஆகிலும் தேவ தரிசனத்தினால் நடத்தப்பட்டபொழுது போகச் சம்மதித்தார் என்று தோன்றுகிறது. 'நான் தேவ அறிவிப்பினாலே போனேன்' என்று கலா. 2: 2-ல் சொல்லுகிறார்.

வாக். 2. 'அவர்களைச்சேர்ந்த வேறு சிலரும் போனார்கள். அதில் தீத்து ஒருவன் என்று கலா. 2: 1-ல் காணலாம். இவர்கள் அந்தியோகியாவிலிருந்து புறப்பட்டபோது சபையார் வழிவிட்டனுப்பினதையும் வழிநெடுக பேனிக்கே சமாரியாவிலுள்ள சபைகள் (11: 19 பார்க்கவும்) சந்தோஷத்தோடு அவர்களை உபசரித்தனுப்பினதையும் கவனிக்கும்போது தர்க்க விஷயத்தைப்பற்றி இப்பிராந்தியங்களிலுள்ள சபைகளின் அபிப்பிராயம் இன்னதென்பதை அநுமானித்துக்கொள்ளலாம்.

எருசலேம் சேரவே, சபையாரும், மூப்பரும் அப்போஸ்தலருங்கூடி அவர்களுக்கு வந்தனோபசாரம் செய்தார்கள். அச்சமயத்தில் மிஷனெரிமார் இருவரும் தாங்கள் கலாத்தியா நாட்டில் செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள் (வாக். 4). இவர்கள் பேசி உட்கார்ந்தவுடனே அப்போஸ்தலரைக் குற்றஞ்சாட்டும்படி அந்தியோகியாவிலிருந்து அவர்கள் பிறகாலேயே வந்த பரிசேய விசுவாசிகள் கூட்டத்தில் எழுந்து: 'இந்த புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம்பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் சொன்னார்கள்.

வந்தனோபசாரக் கூட்டத்தில் அதிகத் தர்க்கம் உண்டாகாதபடி அப்போஸ்தலர் உடனே சம்பாஷணையை நிறுத்திக் கூட்டத்தை முடித்திருக்கவேண்டும். கூட்டம் முடிந்தபின் அப்போஸ்தலரில் முக்கியமானவர்களிடத்தில் பரி. பவுல் தனிமையாய் தன் போதனையைச் சொல்லிக் கலந்துகொண்டார். கலா. 2: 2 பார்க்கவும். 'நான் ஓடுகிறதும், ஓடினதும் வீண் என்று எண்ணிக்கையுள்ளவர்களுக்குத் தனிமையாய்க் காண்பித்தேன், என்கிறார். அவர்களோ, அவருடைய போதனைக்கு விரோதமாக ஒன்றும் சொல்லவில்லை. விருத்தசேதனம் பெறாத தீத்து கூடஇருந்தபோதிலும் அவனுக்கு அச்சடங்கை நிறைவேற்றும்படி அவர்கள் கட்டாயம்பண்ணவில்லை. அப்படிச் செய்தால் நல்லது என்பதாகச் சிலர் சொல்லியிருக்கக்கூடும். பரி. பவுலோ 'ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.' இவ்வாறு தனிமையாய் அவரவருடைய அபிப்பிராயங்களைக் கலந்துகொண்டபின் மொத்தமான தீர்மானத்திற்கு வருவதற்காக பொதுக்கூட்டம் நடந்தது.

II. சங்கம் நடந்த விபரம். வா. 6—29.

அப்போஸ்தலர், மூப்பர் (வா. 6); சபையார் (வா. 22). ஆகிய மூவகுப்பாரும் சங்கத்தில் கூடியிருந்ததாகத் தெரிகிறது. அவர்கள் ஆலோசித்த கேள்விகள் இரண்டுமாத்திரம்: புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பெற்று மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமோ? என்பது ஒன்று. இருவகுப்பான கிறிஸ்தவர்களும் ஒரே சபையின் ஐக்கியத்தில் சேர்ந்திருக்கவேண்டுமோ என்பது மற்றது. முன் நாம் குறிப்பிட்ட இரண்டாம் கேள்வியை ஒருவரும் தொடவில்லை.

(1) பரி. பேதுருவின் சாட்சியையும் (வா. 7-11), பரி. பவுல் பர்னபாவின் சாட்சியையும் (வா. 12), கேட்ட சங்கத்தார் ஏகமனதாய், இவ்வித நுகத்தடியையும் பாரத்தையும் ஒரு போதும் புறஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள்மேல் சுமத்தலாகாது என்று ஏகசம்மதமாய்த் தீர்மானித்தார்கள். பரிசேய வகுப்பிலிருந்து வந்த விசுவாசிகள் நின்ற மும்முரத்தைப் பார்க்கும்போது, இவ்வித ஏகசம்மதத்திற்கு அவர்கள் வந்தது பரிசுத்த ஆவியின் செயலினாலேயேயன்றி வேறல்ல. ஆகையால் பரி. யாக்கோபு: 'பரிசுத்தாவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது' என்பது உள்ளபடி வாஸ்தவமே.

(2) யூதக்கிறிஸ்தவர்கள் பழைய சடங்காசாரங்களைக் கைக்கொள்ளவேண்டுமோ என்ற கேள்வியை ஒருவரும் தொடவில்லை. பரி. பேதுருவின் மனதில் இது சற்றே தென்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது. எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே' என்றார். அப்படியானால் யூதகிறிஸ்தவர்கள் இனி விருத்தசேதனத்தை நிறுத்திவிடலாமா, சுத்தம் அசுத்தம் என்று தீட்டுகளைத் தள்ளிவிடலாமா என்று யாராகிலும் பரி. பேதுருவையாவது மற்ற அப்போஸ்தலரையாவது கேட்டால் அவர்கள் மாறுத்தரம் எப்படியிருந்திருக்குமோ? கலா. 2: 11 முதல் கண்டிருக்கிற விஷயம் சங்கத்துக்குப்பின் நடந்திருக்குமேயாகில் பரி. பேதுரு புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்குச் சடங்காசாரங்கள் அவசியமில்லையென்று திட்டமாய்ச் சாதித்தபோதிலும், யூதக்கிறிஸ்தவர்கள் அவைகளை அனுசரிப்பது நல்லதென்றே எண்ணியிருப்பார் என்று நிதானிக்கலாம். தங்கள் ஆசாரங்களை விட்டுவிட்டாலும் பரவாயில்லை என்னும் எண்ணம் இன்னம் ஒருவருக்கும் உண்டாகவில்லை. பரி பவுலும் தற்சமயத்தில் அதை வற்புறுத்தவில்லை. பிற்காலத்தில் நிருபங்களில் அதைப் போதுமானபடி சாதித்தார். ரோமர், கலாத்தியர், எபேசியர் நிருபங்களில் இதை விசேஷமாய்க் காணலாம். (ரோ. 2: 28, 29; 7: 6; கலா 3: 24, 25; 5: 1, 2; எபே. 2: 14-16-ல் காண்க).

(3) மூன்றாம் கேள்வி எல்லார் மனதிலும் இருந்திருக்கலாம். யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவின் சபையைச் சேரும்போது, ஒரே சரீரமாகிறார்கள் என்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் போஜன பழக்கவழக்கங்களில் கூடிக்கொள்வதற்கு சில தடைகள் இருந்ததாகத் தெரிந்தது. சமாதானத்தினிமித்தம் புறஜாதிகளிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட தடைகளை நீக்கிக்கொள்ளுவது நலம் என்று தீர்மானித்தார்கள். அவை யாதெனில்: (1) விக்கிராராதனையையடுத்த அசுத்தங்கள், அதாவது விக்கிரகங்களுக்குப் பலியிடப்பட்டவைகளை புசித்தல். (2) கற்புவிவாகம் முதலியவற்றின் சம்பந்தமான முறைகேடுகள் (3) இரத்தம் சிந்தப்படாமல் மாண்டவற்றைத் தின்னல். (4) இரத்தத்தைப் புசிக்குதல்—இவை நாலும் யூதருக்கு அருவருப்பாகவும், ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்படுகிற மோசேயின் ஆகமங்களில் மகா திட்டமான கட்டளைகளுக்கு விரோதமாகவும் இருக்கிறபடியால் இவற்றினின்று புறஜாதி கிறிஸ்தவர்கள் விலகிக்கொள்வது அவர்களுக்கு நலம் என்று தீர்மானித்தார்கள். (வா. 29. R. V).



இவ்விதிகள் சபையின் சமாதானத்தினிமித்தம், அக்காலத்திற்கென்று, யூதர்—புறஜாதி கிறிஸ்தவர்களுக்காக மாத்திரம் ஆலோசனையாகச் சொல்லப்பட்டது.

இத்தீர்மானத்தை ஓர் நிருபரூபமாக எழுதி பரி. பவுல் பர்னபாவுடன் யூதா, சீலா என்னும் இருவரையும் அனுப்பினார்கள்.

III. சங்கத்தினாலுண்டான முடிவு வாக். 30—35.

இத்தீர்மானம் சபைகளுக்குச் செல்லவும் உடனே ஆறுதலும் சந்தோஷமும் உண்டானது. ஆனாலும் தொந்தரவும் துன்பமும் இதோடே முடிந்துபோகவில்லை. மோசேயின் சடங்காசார விதிகளின் தன்மை, வேலை அதிகாரம் எத்தன்மையுள்ளதென்று ஆழமாய் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படாததால் பின்னும் குழப்பம் நேரிட்டது. யூத கிறிஸ்தவர்களில் பலர் கலாத்தியா நாட்டிற்குச் சென்று அங்குள்ளவர்களைக் கலக்கினார்கள். பரி. பவுல் பின்னால் எருசலேமுக்கு வந்தபோது சில யூத ஆசாரங்களை நடப்பிக்கவேண்டுமென்று இவரையுங்கூட கட்டாயம்பண்ணினார்கள். அதினால் அவர் சிறையிருப்புக்குங்கூட சென்றாரே. சபை ஒன்று: ஜாதிப்பிரகாரமாயினும், தேசாசாரபேதத்தினிமித்தமாயினும், பழக்கவழக்க வித்தியாசங்களினாலாகிலும் அதில் பிரிவினைக்கு இடங்கொடுப்பது தேவசித்தத்திற்கு விரோதம், என்ற இந்தப்பெரிய சத்தியம் இச்சங்கத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுவும் பரிசுத்த ஆவியானவருடைய செயலே.

---

## தெலுங்குநாட்டுக் கடிதம்.

தோர்ணக்கல் போர்டிங் ஆண் பெண் பாடசாலைகளில் 49 பிள்ளைகள் படித்துவருகிறார்கள். பையன்கள் 25பேர். இவர்கள் படித்துவரும் பாடங்களோடு இவர்களில் 12 பேர் தச்சுவேலையிலும் மற்றெல்லாரும் விவசாயத்தொழிலிலும் பயிற்சியடைந்துவருகிறார்கள். தச்சுவேலைப் பயிற்சியடையும் பையன்களைக் கூப்பிட்டு நீங்கள் உங்கள் தச்சுவேலையில் சம்பாதித்துக்கொள்ளக்கூடியது எவ்வளவு சொல்லுங்கள் என்று கேட்டேன். முதலாம் வகுப்புப் பிள்ளைகளில் சிலர் தினம் அணா 2 என்றும் ஒருவன் 3 என்றும் ஒருவன் காலென்றும் சொன்னார்கள். இரண்டாம் வகுப்பார் ஒரு அணா முதல் இரண்டு அணா வரையுமுள்ள தொகைகளைச் சொன்னார்கள். இவர்கள் அபிப்பிராயம் இப்படியிருக்க இவர்களைப்பயிற்சிப்பவர்களிடம் கேட்டபோது இவர்களில் முதல் வகுப்பார் தினசரி 3 அணாவும் 2-ம் வகுப்பார் $1\frac{1}{2}$ அணாவும் சம்பாதித்துக்கொள்வார்களென்று சொன்னார்கள். இவர்கள் கூலிக்காரராய் ஜீவிப்பவர்கள் பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கப்பட நேரிட்டாலும் ...பணம் வாங்கி ஜீவிக்கிறவர்களாய் மாத்திர மிருப்பார்கள். ...டு கிட்டத்தட்ட அடிமை ஸ்திதியேயல்லவா? நமது மிஷ...னே...ா பள்ளிப்பிள்ளைகளெல்லாரையுங்கூடுமானால் சபையார்...பார்...யும் தங்கள் தங்கள் கைத்தொழில்களால் பிழைக்கக்...லை. சுயாதீனராக்க முயலுகிறோம்.

மேலும் இந்தப் பையன்களில் ஒவ்வொருவனுக்கும் இவ்விடங்களில் அதிகமாய்க் கொடுக்கப்பட்டால் மாதம் ரூபாய் 1 மட்டும் கூலியாகக் கிடைக்கும். இவர்களோ இப்போது சுயாதீனராய் உத்தேசம் ரூபாய் 4, $4\frac{1}{2}$ சம்பாதிக்கத்தக்க ஸ்திதியடைந்திருக்கிறார்கள். அதாவது பெற்றோர் மற்றோரையும் சார்ந்தல்லாமல் தாங்களே சுயாதீனராக தங்கள் தங்களின் ஜீவனத்திற்கு அவசியமானதெவ்வளவோ அவ்வளவாவது சம்பாதிக்கும் ஸ்திதியடைந்திருக்கிறார்கள்.

இவ்விதமாகவே தொடர்ந்தேர்ச்சியாய் சில வருஷங்கள் பயிற்சிக்கப்பட்டபின் நமது சபைகளுக்கும் ஊழியருக்கும் எவ்வளவு நன்மையுண்டாகக்கூடியது. பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை விடுவிப்பது நமது விசேஷித்த ஊழியம் பிறரின் அடிமைத்தனத்திலிருந்தும் தங்களை விடுவித்துக்கொள்ளும் வழிவகைகளைச் செய்வதும் ஒரு பெரிய வேலையே என்பதை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே தோர்ணக்கல் பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளையை ஆதரிக்கும்போது இருளிலிருந்த அப்பிள்ளையை பெரிய வெளிச்சத்தைக் கண்டடையச்செய்கிறதுமட்டுமல்ல அடிமைத்தனத்திலிருந்து அப்பிள்ளையை விடுவிக்கவும் செய்கிறோம்.

முன்னொரு சஞ்சிகையில் பிள்ளைகளை ஆதரிப்போர் வேண்டிய விஷயத்தையிட்டு எழுதியபின் 2 பிள்ளைகளை நாசரேத்தூர் பிள்ளைகளும் 1 பையனை பட்டணத்திலுள்ள ஒரு சகோதரனும் ஆதரிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவர்களை முன்னேற்பட்டவர்களுடன் கூட்டிக்கொண்டால் மொத்தம் 30 பிள்ளைகளுக்கு மட்டும் ஆதரிப்போரிருக்கிறார்கள். இன்னமும் 20 பிள்ளைகளுக்கு ஆதரிப்போர் வேண்டியதாயிருக்கிறது.

கட்டடங்கள்:— தோர்ணக்கல் மிஷன் பழைய கம்பவுண்டு ரெயில்வே ஸ்டேஷன் கம்பவுண்டுக்கு மேல்புறத்திலிருக்கிறது. இதுவரையும் கட்டப்பட்ட நமது மிஷன் சம்பந்தமான கட்டடங்களெல்லாம் இந்தப் பழைய கம்பவுண்டிலேயேயிருக்கின்றன. மிஷன் புதுக்கம்பவுண்டு ரெயில்வேக்கு கீழ்பக்கமாயிருக்கிறது. இதில் உபாத்திமார் அப்பியாசமடையும் குடும்பத்தாரிருக்க வீடுகள் கட்டி கிட்டத்தட்ட முடிவாகிறது. பள்ளிக்கூடங்களை மேல்பார்க்கும் ஒரு மிஷனெரிக்கும் வீடு கட்டப்பட்டுவருகிறது. இந்தக் கம்பவுண்டுக்கு அருகில் அதின் தென்புறமாய் மகாகனம் அத்தியக்ஷரவர்களுக்கென்று வாங்கப்பட்ட கம்பவுண்டு இருக்கிறது. இதிலே அத்தியக்ஷரவர்களுக்கு ஸ்திரமான வீடு கட்டப்படும். அதின்முன் வந்து தற்சமயத்திற்கென்று வசிப்பதற்கு ஒரு வீடு கட்டப்பட்டு வருகிறது

சபை: கடந்த மாதம் தெட்லப்பாட்டில் 6 ஆத்துமாக்களடங்கிய ஒரு குடும்பத்தாருக்கு ஞானஸ்னானம் கொடுத்தேன், ஞானஸ்நானம் பெறுவதற்கு மிகுந்த ஆத்திரம் காட்டினார்கள். அவர்களைப் பரீக்ஷித்து தகுந்த விசுவாசமுள்ளவர்களாகக்கண்டு ஞானஸ்நானம் கொடுத்தேன். இந்த குடும்பத்தைச்சேர்ந்த பிள்ளைகள் சிலர் சில வருஷங்களுக்கு முன்னதாகவே ஞான

...பிமேச்
...ன்.

ஸ்நானம் பெற்றவர்கள். பெற்றோரும் மூத்தமகன் குடும்பத்தாரும் அப்போது ஞானஸ்நானம் பெறவாவது ஜெபத்துக்கு வரவாவது எண்ணமற்றவர்களாயிருந்தவர்கள். வரவர ஜெபத்துக்கு வர அப்பியாசமடைந்து இப்போது ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சிறீராமபுரம், மூப்பாவரம் பக்கங்களில் வேலை விருத்தியடைந்துகொண்டுவருகிறது. இப்போதும் சில இடங்களில் புதிதாய் கிறிஸ்தவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இருக்கிற ஆட்களைக்கொண்டு செய்யக்கூடியதை அவர்களைப் படிப்பிக்கும் விஷயத்தில் செய்துவருகிறோம்.

கர்த்தருக்குச்சித்தமானால் கனம்: தேவசகாயமவர்களுக்கு எலத்தரப்பாட்டில் உதவிக் குருப்பட்டாபிஷேகம் நடப்பதாயிருக்கும் அவர்களுக்காக ஜெபிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. பாக்கியநாதன்.

## தோர்ணக்கல் 'ஞாபகார்த்த ஆலயம்'

கடந்த ஜனுவரிமாசத் துவக்கத்தில் நான் தோர்ணக்கலுக்குப் போய் அங்கு நடக்கும் தேவ ஊழியத்தைப் பார்க்க எனக்கு சலாக்கியம் கிடைத்ததற்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன். டில்லி டர்பார் கொண்டாட்ட இனமாக புதிதாய் நமக்குக் கிடைத்திருக்கும் இடத்தை 2, 3 மணிநேரம் செலவழித்து சுற்றிப்பார்த்தேன். நம்முடைய பழைய மிஷன் கம்பவுண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபமாய் ஒரு பக்கத்திலும், இப்புதிய நிலம் ஸ்டேஷனுக்கு மறுபக்கத்திலுமிருக்கிறது. இரண்டுக்குமுள்ள தூரம் குறுக்காக சுமார் 2 பர்லாங்குக்குள்ளும் வண்டிப் பாதையாக 4 பர்லாங்குக்குள்ளுமிருக்கலாம்.

இப்புதுக் கம்பவுண்டு ஒரு சிறுகுன்றின் சரிவோடு அதின் ஓரமாய் இருக்கிறது. அதில் கைத்தொழில் பயிற்சிசாலை மாணவருக்கென்று 10 வீடுகள் போல் கட்ட வாணம் தோண்டிப் போட்டிருந்தது (ஒரு நல்ல கிணறும் நிலத்தின் மத்தியிலிருக்கிறது). அவ்வீடுகள் ஒரே பத்தியாய் இதற்குள் கட்டி முடிந்திருக்குமென்று நம்புகிறேன். இன்னும் பெண்பிள்ளைகள் போர்டிங் ஸ்கூல் ஒன்றும், நம் மிஷனெரிமாரில் ஒருவருக்கு வீடு ஒன்றும் இவ்வருஷம் முடியுமுன் கட்டியாகுமென்று நினைக்கிறேன். இதற்குச் செலவாகும் மிச்சமான பணம் பான் ஆங்கிலிக்கன் பண்டிலிருந்து கிடைத்ததற்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். (காலியான இடத்தில் ஆமணக்கும் கம்பும் நன்றாய்ச் செழித்து வளர்ந்திருந்தது). நிலம் கிடைத்திருக்கிறது, கட்டடங்கள் கட்ட கவர்ன்மென்ற் உத்தரவு கிடைத்திருக்கிறது, தடையெல்லாம் நம் நண்பரின் ஜெபங்களால் ஒருவாறு நீங்கிவிட்டது. ஆலயம் கட்ட தடையென்ன?

கடந்தமாதம் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பங்களாக் கட்டும்படி நம் புது நிலத்திற்கு அடுத்தாற்போல் போதுமான நிலம் கிடைத்திருக்கிறதென்று கேள்வியுற்று சந்தோஷிக்கிறோம். அவர்களுடைய பங்களாவின் ஓர் பாகம் காளது வருஷம் கட்டிமுடியுமென்று நம்ப இடமுண்டு. கைத்தொழில் பயிற்சிசாலை மாணவருக்கு இருப்பிடம், போர்டிங் பெண்பள்ளிக்கூடம், மிஷனெரிமார் வீடு, அத்தியக்ஷரவர்கள் பங்களா யாவும் தயாரானால், அவசியமான ஒன்று இன்னும் கட்டப்படவில்லை. அது நாம் கட்ட ஆலோசித்திருக்கும் ஞாபகார்த்த ஆலயமே!

'கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று நம்முடைய சிறுபிள்ளைகள் இளம்பிராயத்தில் படித்திருக்கிறார்கள். கடந்த பத்துவருஷமாய் இன்னுமோர் ஆலயமும் தோர்ணக்கல்லில் கட்டப்படவில்லை. முதலாவது 'மாதிரி ஆலயம்' அல்லது 'அத்தியக்ஷ தேவாலயம்' கட்டுவிக்கவேண்டியது நம்மேல் விழுந்த கடமையல்லவா? இது நாம் பெற்றிருக்கும் ஓர் விசேஷித்த சலாக்கியமல்லவா? தாவீது இராஜாவைப் போல (சங். 132: 2-5). ஷை தேவாலயத்தைக் கட்ட வைராக்கிய வாஞ்சைகொண்ட சிலர் நமக்குள் இல்லையா? இரண்டொருவர் அதிக உற்சாகமாய் இதற்கென்று ஊழியஞ்செய்ய எழும்பியிருக்கிறார்கள் என்று அறிந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

இதுவரை ரூ. 2,400 ஷை ஆலயத்திற்கென்று கைக்கு வந்திருக்கிறது. அதோடு சுமார் 1,200ரூபாய் போல் வாக்காகியிருக்கிறது. இன்னும் ரூ. 6,600 தேவை. சபை சபையாகவும், தனிமை தனிமையாகவும் உற்சாகங்கொண்டு தேவையான பணத்தைச் சேகரிக்கும்படி நண்பர் யாவருடைய உதவியையும் கோருகிறோம்.

1911-ம் வரு டிசம்பர் மீ 1௳ அனுப்பின அப்பீலில் கண்டிருக்கும் முறையாய்ப் பணம் சேகரிப்பதில் 250 ரூ. கொடுக்கக்கூடிய ஒருவரும், 3 சபையும்; 100 ரூ. கொடுக்கக்கூடிய 10 பேரும், 18 சபையும்; 50 ரூ. கொடுக்கக்கூடிய 6 பேரும், 20 சபையும் 25 ரூ. கொடுக்கக்கூடிய 16 பேரும் 40 சபையும் தேவை. அதோடு 10 ரூ, 5 ரூ, 1 ரூ, ½ ரூ. கொடுக்கும் ஏராளமான பேர் வேண்டும்.

தேவன் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளை நன்குணர்ந்தவர்களாய், நம்முடைய நன்றியறிதலைக் காட்ட நாம் முன்னுக்கு வரவேண்டிய நல்ல சமயமும் இது. கூடிய சீக்கிரத்தில் சபை மொத்தமாய் அல்லது பேர்போராய்க் கொடுக்கக் கூடிய தொகையை செக்ரற்றேரியவர்களுக்கு, அல்லது பொக்கிஷதாருக்குத் தெரிவித்து அதன்பின் ஷை தொகைகளை கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்துவிட அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். பணம் வந்து சேரச்சேர, மாதாமாதம், நம் வர்த்தமானியிலும், மற்றும் தமிழ் பத்திரிகைகளிலும் அதைப் பிரசுரிப்போம்.

மனப்பூர்வமாய்க் கொடுக்கக் கர்த்தர் யாவருடைய இருதயத்தையும் ஏவுவாராக. நாளது 1913-ம் வருஷம் முடியுமுன் ஷை ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட கர்த்தர் நம்மை வழிநடத்தும்படி யாவரும் ஜெபித்து ஊக்கமாய்க் கிரியை நடப்பிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொக்கிஷதார்.

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்பட அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகும்.

ச. பி. வ. மானேஜர்: வி. எஸ். காஸிகன்,
பாளையங்கோட்டை.

Editor:—The Secretary, I. M. S

Printed at the C. M. S. Press, Palamcottah and Pul
by the Indian Missionary Society of Tinneve"

MAY, 1913 Registered No. M. 481.

# The Missionary Intelligencer

# சுவிசேஷ பிரபல்ய வர்த்தமானி

சட்டவாக்கியம்:—"நீங்கள் போய், தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."
"யுத்தம் உங்களுடையதல்ல, கர்த்தருடையது."

Vol. X. No. 5] மேமீ 1913 [விலை பை 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 ... 1913 MADRAS.

CONTENTS

The Day of His Power ... ... ... 41
From the Telugu Field ... ... ... 42
The Treasurer's Notes ... ... ... 44

பொருளடக்கம்

உமது பராக்கிரமத்தின் நாள் ... ... 41
தெலுங்குநாட்டுக் கடிதம் ... ... ... 42
பொக்கிஷதாரின் குறிப்புகள் ... ... ... 44

## 'உமது பராக்கிரமத்தின் நாள்.'

'உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமும் உள்ளவர்களாயிருப்பார்கள்.' சங். 110: 3.

கர்த்தர் என்னும் ஒன்றுபோல பராக்கிரமம் உள்ளவராகவே இருக்கிறார். எல்லாரும் இதை ஒத்துக்கொள்ளுவார்கள். ஏனென்றால், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார். அப்படியிருக்க உமது பராக்கிரமத்தின் நாள் என்று சொல்லி ஒரு விசேஷித்த நாளைக்குறித்துச் சொல்லுவானேன்? உமது பராக்கிரமத்தின் நாள் என்பதை உமது சேனையின் நாள் என்று சொல்லலாம். (See R. V. Margin). கர்த்தர் தம்முடைய பராக்கிரமத்தில் குறைவில்லாதவராய் என்னும் இருக்கிறார். ஆனால் விசேஷித்த ஊழியத்தைச் செய்வதற்கென்று சில காலங்களில் அவர் தமது சேனைத்தை ஏவி எழுப்புவதுண்டு. தாம் குறிக்கிற மனிதனைப் பொறுத்தெடுத்து அந்த ஊழியத்திற்கென்று ஐக்கியப்படுத்துவதுண்டு. அப்படி ஐக்கியப்படுத்தப்பட்டவர்களைத் தமது பலத்தினால் இடைகட்டி அந்த ஊழியத்தில் உபயோகிப்பதுண்டு. ...னேல், அக்காலத்தை அவர் தமது வீரரான சேனையை ...பார்புசெய்கிற அவருடைய பராக்கிரமத்தின் காலமென்று ...ல்லலாம். இப்பேர்ப்பட்ட காலத்தையே இந்த வாக்கி...கிறே...யம் குறிக்கிறது. உதாரணமாக, கர்த்தராகிய இயேசு பரமேறிப் போனபோது, தமது சீஷர் உலகமெங்கும் புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்று அவர் கட்டளை கொடுத்தார். அதற்கென்றே பெந்தெகொஸ்தேநாளில் ஆவியானவரையும் பொழிந்தருளினார். சீஷரோ ஆவியானவரைப் பெற்று, ஆயிரக்கணக்கான பேரை குணப்படுத்தின பின்பும் கூட சுவிசேஷவேலைப் புறதேசங்களில் செய்ய தாங்களாய்ப் புறப்பட்டுப்போகவில்லை. உபத்திரவங்களினால் ஆண்டவர் அவர்களைச் சிதறடிக்கவேண்டியதாயிருந்தது. உபத்திரவத்தின் நோக்கத்தை முதலாய் அவர்கள் உணர்ந்துகொண்டதாக விளங்கவில்லை. சகல ஜாதிக்கும் சுவிசேஷத்தை அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குள் வரவே இல்லை. பின்பு அந்த ஊழியத்திற்கென்று கர்த்தர் தமது சேனையைச் சேர்க்கும் நாள் வந்தது. அந்தியோகியாவிலே ஆவியானவரைப் பெற்ற யாவரும் ஒன்றுகூடி ஜெபிக்க ஆண்டவர் அவர்களை ஏவினார். அவர்களில் தாம் தெரிந்துகொண்டவர்களைப் பிரித்தெடுத்தார். தமது பராக்கிரமத்தால் அவர்களை இடைகட்டி அனுப்பினார். இதுவே கர்த்தருடைய பராக்கிரமத்தின் நாளாயிருந்தது. இக்காலம் தமிழ் நாட்டிலும் கர்த்தர் தமது சேனையைச் சேர்க்கிற அவருடைய பராக்கிரமத்தின் காலம் என்று சொல்லலாம். புறதேச மிஷன் வேலையைச் செய்ய அவருக்கு வீரர்கள்தேவை. அந்த மிஷன் வேலையை ஆதரிக்க எண்ணிறந்த தேவனுடைய பிள்ளைகள் தேவை. ஊழியத்தை ஆரம்பிக்கச்செய்த தேவனே, சேனையையும் அணிவகுப்பார் என்று நம்புகிறோம்.

தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களே, இக்காலத்தின் விசேஷத்தை உணருகிறீர்களா? இந்தியாவை ஜெயிக்க இயேசுவானவர் சேனையைச் சேர்க்க வந்திருக்கிறார். இதற்கென்று அவர் குறித்த காலம் இதோ வந்திருக்கிறது. ஆனால் இக்காலத்திலே யாராகிலும் சுயமேன்மைக்கென்று இந்த உன்னத ஊழியத்தைச்செய்யவும் அல்லது இதற்கு உதவிசெய்யவும் மாம்சத்தால் ஏவப்படாதபடிக்கு, அப்படிப்பட்டவர்களுக்கு இருக்கவேண்டிய மூன்று இலட்சணங்களைக் கவனித்துக்கொள்வது நலமாயிருக்கும்.

முதலாவது, தேவனுடைய சேனை, அவருடைய சொந்தப் பிள்ளைகளிலிருந்தே சேர்க்கப்படவேண்டும். 'உம்முடைய ஜனங்கள்' உமது பராக்கிரமத்தின் நாளிலே மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமும் உள்ளவர்களாயிருப்பார்கள். புறதேச மிஷன்வேலையைச்செய்ய குணப்படாதவனும் வேண்டாம், அவனுடைய பணமும் வேண்டாம். தன் சொந்த ஊர் சபையிலே எழும்பி நின்று, கர்த்தர் கிருபையாய் என் பாவங்களையெல்லாம் மன்னித்திருக்கிறார் என்று சாட்சி சொல்லத் துணியாதவன் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பற்றி புறதேசத்தில் சாட்சியாகப்போய் எப்படி அறிவிப்பான்? முதலாவதாகத் தன்னைத்தானே கர்த்தாவுக்கு ஒப்புக்கொடாதவன் பண உதவி செய்வதற்கென்று தேவ சேனையில் வந்து சேரவேண்டியதில்லை. தேவனுடைய மெய்ப் பிள்ளைகளிலிருந்தே ஊழியத்தைச் செய்யப்போகிறவர்களும் அதற்குப் பண உதவி செய்கிறவர்களும் எழும்பவேண்டும். தமிழ் நாட்டு தேவதாசரே, இயேசு எஜமான் உங்களைப்பார்த்துப் பேசுகிறார். என் பிள்ளைகளே, இந்தியாவுக்கென்று நான் சேனையைச் சேர்க்க வந்திருக்கிறேன். யார் என்னைப் பின்பற்றி ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறீர்கள்? யார் பண உதவி செய்ய வாக்குக்கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்.

இரண்டாவது, அவருடைய சேனையைச் சேருகிறவர்கள் யாவரும் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். இவ்வொந்த இராஜ்யத்தில் இராணுவ சேவகத்திற்கென்று கட்டாயமாய் ஒருவனையும் சேர்க்கிறதேயில்லை. எல்லாரும் சுய இஷ்டமாகவே அதில் வந்துசேரவேண்டும். ரோமர் நிருபத்தில் குணப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று இருமுறை சொல்லியிருக்கிறது. முதலாவது தேவனால் அவர்கள் பரிசுத்தமாக்கப்படும்படி ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று 6-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. அவர்கள் ஜெயங்கொள்ளும் ஜீவியத்திற்கு வந்தபின்பு கிறிஸ்துவின் ஊழியத்திற்கென்று தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறார் (12: 1). சொந்த ஜீவியத்தைப் பரிசுத்தத்திற்கென்று தீவிரமாய் ஒப்புக்கொடுத்தவர்கள் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்திற்கென்று ஒப்புவிக்கத் தாமதிப்பது தகுதியல்ல. சிநேகிதரே, இதற்கு நம்மைக் கர்த்தர் வேண்டிக்கொள்ளும்படி வைத்துக்கொள்ளலாமா?

மூன்றாவது, தேவ சேனையின் வீரர்கள் பரிசுத்த அலங்காரத்தைத் தரித்தவர்களாயிருக்கவேண்டும். பரிசுத்த அலங்காரம் என்ற வாசகம் பரிசுத்த உடுப்பு என்றும் திருப்பப்பட்டு, ஆசாரியன் முற்காலத்தில் தரித்திருந்த அலங்கார வஸ்திரங்களைக் குறிக்கக்கூடும். பரிசுத்த அலங்காரம் என்னும் வாசகமே பிரதான ஆசாரியனுடைய உடுப்புகளைக் குறிக்குது. இதின் அர்த்தத்தைக் கவனியுங்கள். இயேசுவின் யுத்தவீரன் ஆசாரியனின் உடுப்புகளைத் தரித்துக்கொள்ள வேண்டுமாம். அவைகளே அவனுடைய ஆயுதவர்க்கம். அவன் செய்யவேண்டிய முக்கிய ஊழியமும் ஆசாரிய ஊழியந்தான். 'நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியன்' என்று பரிசுத்த பவுல் தம்மைக்குறித்து எழுதுகிறார் (ரோ 15: 15). ஆசாரியனுடைய உடுப்புகளை யாத். 28: 4-லும், அவைகளின் ஞான அருத்தத்தை எபே. 6: 13-17லும் பார்க்கலாம். அந்த வஸ்திரங்களை உடுத்த பின்பு செய்யவேண்டிய ஆசாரிய ஊழியமென்ன? 'எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்'' (எபே. 6: 18). என் சகோதரரான இயேசுவின் சேனைவீரரே, நாம் இந்த அலங்கார வஸ்திரங்களான ஆயுதங்களைத் தரித்திருக்கிறோமா? அவைகளை உடுத்திக்கொண்டு இந்தியாவுக்காக இடைவிடாத ஜெபத்தில் இதுவரைக்கும் தரித்திருந்து வந்திருக்கிறோமா? ஜெபத்தில் ஆண்டவரோடு போராடாத ஒருவரும் வெளியாக இந்த ஊழியத்தில் பங்கெடுத்துக்கொள்ளாதிருப்போமாக! இயேசு எஜமான் தமது சேனையை அணிவகுக்க வந்திருக்கிற இக்காலத்தில் இம்மூவகை இலட்சணம் பொருந்தியவர்கள்மட்டுமே ஊழியத்திற்கு ஏற்படவும், உதவியுரிய உற்சாகங்கொள்ளவும் அவர்தாமே அருள்புரிவாராக.

## தெலுங்கு நாட்டுக் கடிதம்.

கனம்: தேவசகாயமவர்கள் உதவிக் குருப்பட்டாபிஷேகத்திற்கு ஆயத்தப்படும்படியாக தோர்ணக்கல் போனதால் அவர்கள் பார்த்த வேலையைப் பார்க்கிறதற்கு நான் கமிற்றியாரின் உத்தரவுப்படி மேதெப்பல்லிக்குக் கடந்த ஜனுவரி மாசம் வந்தேன். நான் இது பரியந்தம் இவ்விதப் பொறுப்பான வேலை செய்ததில்லை. மற்றவர்களின் உதவியைப் பெற்று சபைகளைப் பார்த்துவந்தேன். மேதெப்பல்லியைச் சுற்றி 10 சபைகள் போல் பார்க்கவேண்டியதிருக்கிறது. அந்தச் சபைகளை அடிக்கடி போய்ப் பார்க்கவும் அவர்களுக்கு நேரிடும் துன்பங்களில் ஏற்றபடி சமாதானம் சொல்லவும், அங்கங்கே உள்ள உபாத்திமாருக்குச் சபைகளை நடத்தும் மாதிரியைப் படிப்பிக்கவும் வேண்டியவனாயிருக்கிறேன். சில சபைகள் இங்கிருந்து எட்டாறு மைல் பக்கத்திலும், மற்றவை 20 மைலுக்கப்பாலுமிருக்கிறது. கர்த்தர் தாமே எனக்கு ஏற்றபடி தமது கிருபையைத் தந்தருள மன்றாடும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

சௌட்டப்பல்லியில் கடந்த வருஷம் பயிற்சிசாலையிலிருந்து வேலைக்குப்போன மெண்டம் சாலொமோன் விவசாய வேலை செய்துகொண்டு, ஜனுவரி மாசம முதல் சம்பளமும் வாங்காமல் சபையில் ஜெபம் நடத்திக்கொண்டுவருகிறான். இவ்வித வேலை செய்வதில் அவன் சிறிதும் சோர்ந்துபோகாமல் சந்தோஷமாயிருக்கிறான்.

மூப்பாரம் கிறிஸ்தவர்களில் சிலருக்கு முன்னமே லியன் மிஷன்காரர் ஞானஸ்நானம் கொடுத்துப்போயிருக்கிறார்கள். நம்மிஷனுக்குட்பட்ட பிற்பாடு சிலருக்கு ஞா



னம் கொடுக்கப்பட்டது. கடந்த மார்ச்சு மாசம் கனம்: பாக்கியநாதன் ஐயரவர்களும் நானுமாக அங்கே போயிருக்கும்பொழுது பன்னிருவர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இன்னும் சிலர் வேலையினிமித்தம ஆயத்தமில்லாததால் அச்சமையம் தடைப்பட்டார்கள். இதுவரை சபையில் சேர்க்கப்பட்டவர்கள் 74 பேர். சபையின் மொத்தத் தொகை 284. அங்கிருந்து இரு குடும்பத்தார் தோர்ணக்கல் பயிற்சிசாலைக்குப் படிக்கப்போயிருக்கிறார்கள். அங்குள்ள உபாத்தியார் மனைவி தாப்பள்ளிக்கூடம் போட்டுச் சிறுவர்களுக்குப் படித்துக்கொடுக்கிறாள். 50 பிள்ளைகள்போல் படிக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தினால் தெலுங்கு, வேதபாடம் படிக்கிறது மாத்திரமல்ல, சிறு பிராயமுதலே பழகும் குடிவெறி முதலிய கெட்ட வழக்கங்களை நிறுத்திவிடவும் ஏதுவுண்டாகிறது. நான் அங்கிருந்த சமையத்தில் சில பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள் குடிக்கச் சொன்னபோது வேண்டாமென்பதையும், இன்னும் சிலர் தங்கள் வீட்டிலாவது அயல் வீட்டிலாவது கள் வாங்கினால் அதைப் பார்த்துவந்து உபாத்தியாயரிடம் சொல்வதும் கண்டேன். விசேஷமாய் மூப்பாரம் பக்கத்தில் பனைமரங்கள் மிகுதியாகையாலும் ஆரம்பமுதலே குடிப்பது அவர்கள் வழக்கமானதாலும் அதை நிறுத்துவது பெரிய கஷ்டமாயிருக்கிறது. ஒரு மிஷனெரி அவர்கள் பக்கத்திலேயேயிருந்து கொடுக்கும் காலத்தில்தான் சபை முன்னுக்கு வரக்கூடும். அங்கே ஒருவரிருக்கவேண்டுமானாலும் வீடில்லை. மாசம் ஒரு தடவை அவர்களைப் பார்க்கப்போனாலும், உபாத்தியாயரோடு முன் சாரியிலிருந்துகொண்டு ஜனங்களுக்குப் படித்துக் காண்பித்துவிட்டு வருகிறோம். இத்தாலுகாவின் மேற்குப் பகுதியில் இதுவே பெரிய சபையாகையால், இது நல்ல நிலைக்கு வந்துவிட்டால் இதர சபைகளுக்குப் பிரயோஜனமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

[illegible]ரோலில் ஒட்டர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். இதுவரை வந்த ஒட்டர்களில் கிறிஸ்து மார்க்கத்தில் நிலைத்திருக்கவர்கள் அநேகமில்லை. இவர்கள் இதுவரை ஜெபத்திற்கு ஒழுங்காய் வந்து வேதபாடம் படிக்கிறார்கள். தெலுங்கு வாசிப்பும் படிப்பிக்கப்படுகிறது. சீக்கிரம் ஞானஸ்நானம் பெறுவார்களென்றெண்ணுகிறேன். ஜாதி வித்தியாசமே இவர்களை அதிகமாய்க் கெடுக்கிறது. இவ்விதமாய் வந்த ஒட்டர்களில் ஒரு குடும்பத்தார் கடந்த பெப்ருவரி மாசம் மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களால் திடப்படுத்தல் பெற்றார்கள். சீக்கிரத்தில் பரிசுத்த போஜனம் சேருவார்கள்.

பூக்கால் தாலுகாவிலிருந்துவந்த மாதிகா ஒருவன் தன் குடும்பத்துடன் பயிற்சிசாலையிலிருக்கிறான். அவர்கள் தங்களோடிருப்பதைப் பற்றி, பயிற்சிசாலையிலுள்ளவர்களாவது பார்டிங் பிள்ளைகளாவது யாதொரு வித்தியாசம் பாராட்டவில்லை. ஆனால் பிள்ளைகளை அனுப்பின பெற்றோரில் சிலர் இனிமேல் பிள்ளைகளைப் படிக்கவிடக்கூடாதென்றெண்ணுகிறார்கள். ஏனென்றால் கிறிஸ்தவர்களல்லாத மற்றவர்களை தங்கள் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாதென்றும், அவர்கள் சம்பந்தம் கலக்கக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் மேதெப்பல்லிக் கிறிஸ்தவர்களிருக்கும் தைரியத்தைப் பார்த்து இங்கே அஞ்ஞானிகள் ஒன்றும் செய்கிறதில்லை.

முன் தோர்ணக்கல்லில் படிக்க அனுப்பப்படமாட்டோமென்றும் பிள்ளைகள் போகமாட்டோமென்றும் சொன்னகாலம் போக, இப்போ தானமாய்ப் போய்ப் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நான் தோர்ணக்கல் வந்த துவக்கத்தில் 2 பையன்களும் 2 பெண்களுமாத்திரமிருந்தார்கள். இப்போ 50 பிள்ளைகளிருக்கிறார்கள். மேதெப்பல்லியில் சிறு பிள்ளைகளைக் காண்பது அரிதாகிப்போய்விட்டது. கிராமப்பள்ளிக்கூடத்தில் தெலுங்கு பாலபாடப் புஸ்தகம் படித்து முடித்தவர்களைத்தான், ஜனவரி மாசமுதல் சேர்ப்பதாக ஏற்பாடு செய்தாயிற்று. இவ்விடத்தில் முதலாம் வாசகப் புஸ்தகம் படித்து முடித்த ஒரு பையன் பெற்றோர்கள் அவனை வேலையினிமித்தம் படிக்கும்படி அனுப்பச் சம்மதியாததால், அவன் ஒருநாள் அதிகாலமே எழுந்து ஒருவருக்குந் தெரியாமல் தோர்ணக்கல் போர்டிங் பாடசாலைக்கு ஓடிப்போய்விட்டான். அப்படியே மற்றும் இடங்களிலும் படிப்பைப் பற்றி முன்னிராத ஆசை அநேகருக்குண்டாயிருக்கிறது.

இதுவரை இத்தாலுகாவின் தென்பாகத்திலும், கிழக்கிலும் மாத்திரம் கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். இப்போ வடபாகத்திலும் மேற்பாகத்திலும் அநேகர் கிறிஸ்தவர்களாக விரும்புகிறார்கள். மூப்பாரம் பக்கத்தில் ராமபுரம், கேசபலகிரி, சித்ருயபாளையம் என்ற இடங்களிலும், சிரிசைகிரி பக்கத்தில் பொஜ்ஜன்னபேட்டை, நயிநாலை என்ற ஊர்களிலுமுள்ளவர்கள் சபையில் சேருவதாக ஒப்புக்கொண்டு ஜெபத்திற்கு வருகிறார்கள். கர்த்தர் இப்பொழுது அந்தப்பக்கத்திலும் வாசலைத்திறந்திருக்கிறார். அவர்கள் மத்தியில் ஊழியஞ் செய்ய ஊழியர்கள் தான் தேவை. தெலுங்கு ஊழியர் மாத்திரமல்ல இங்குள்ள ஒரு மிஷனெரி அந்தப் பக்கங்களையெல்லாவற்றையும் மேல்பார்ப்பது அதிகக் கஷ்டமாகையால் மிஷனெரிமாரும் அதிக அவசியமாயிருக்கிறது. யார் வருவார்?

முன் நம்மிஷனுக்கு நிலம் கொடுத்த தாலுக்தாரே, மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்களுக்கு ஓர் மாளிகை கட்ட 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார். கட்டடம் கட்ட ஆரம்பித்திருக்கிறது. நயமிதன் நிலத்திலும் பயிற்சிசாலையாளுக்கருக்கு 10 வீடுகள் கட்ட முடிவாகப்போகிறது. இன்னும் இரண்டு மாதத்திற்குள் ஒரு மிஷனெரிக்கும் வீடுகட்டி முடிவாகும்.

ஜான் சீனிவாசகம்.

தோர்ணக்கல்லுக்கு வடபாகத்தில் [illegible] பலவிடங்களில் ஜனங்கள் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள ஆவலாயிருக்கிறார்கள். இந்த நல்ல சமயத்தைத் தவறவிட்டால் பின்னால் இப்படிப்பட்ட சமயம் கிடைக்குமோ என்னவோ, உடனே நமது ஊழியர்களை திருநெல்வேலியிலிருந்து அனுப்ப கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு குறிப்பாக ஐந்து [illegible] அங்கிடம் புறப்படவேண்டுமென்பது நமது வாஞ்சை. அழைப்புக்கு [illegible] நமது அழைப்புக்கு [illegible] அனுப்பும்படி ஊக்கமாய் ஜெபித்துவருகிறோம். [illegible] அழைக்கப்பட்டு, இவ்வூழியத்திற்குத் தங்களை ஒப்புவிக்கிறவர்களை நம் மிஷனுக்குக்கொடுக்கத் தடையில்லையென்று கனம். கார் ஐயரவர்கள் அன்பாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

161408

## பொக்கிஷ குறிப்புகள்.

1. கடந்த வருஷத்தில் வந்த சில விசேஷித்த நன்கொடைகளை இங்கு குறிக்கிறோம். ஒரு சகோதரன் தனக்குப் புரொமோஷன் கிடைத்த ரூ. 80ஐ நம் சங்கத்திற்குக் கொடுத்தார்; ஒரு சகோதரி தன் முதற் சம்பளம் 20 ரூபாயையும், சாயர்புரம் பாடசாலை மாணவர் லெந்துநாட்களில் ஆட்டுக்கறியை நிறுத்தினதினாலுண்டான ரூ. 20 ஐயும் தோர்ணக்கல் ஆலயத்திற்காகக் கொடுத்தனர்; ஒரு சகோதரி ரூ. 75 பெறுமான மணிக்கோர்வையையும், இன்னோர் சகோதரி ரூ. 58 பெறுமான மணிக்கோர்வையையும் தோத்திரக் காணிக்கையாயனுப்பினர். இலங்கையிலுள்ள ஒரு சகோதரன் 'கிருஷிமுயற்சி'க்காக (Farm Scheme), ரூ. 250 கொடுத்திருக்கிறார். தவிரவும், மேயீ 12உ முதல் 16உ வரை பாளையங்கோட்டையில் கூடின 'கன்வென்ஷன்' கூட்டத்திற்கு இக்கனவான் வந்திருந்தபோது, கமலை, மாடு முதலிய சாதனங்களுக்காக ரூ. 100-ம் நன்கொடையளித்தனர். ஓர் நண்பர் ஸ்தோத்திரக் காணிக்கையாக ரூ. 1000 (ஆயிரம்) படைத்ததும் தெரிந்த விஷயமே. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

2. கடந்த மார்ச்சு மாசத்தில்மட்டும் ரூ 5,300 போல் கைக்கு வந்தது. நமது செலவோ மாதா மாதம் ரூ. 900. கடந்த வருஷக் கையிருப்புப் பணம் 3 மாசச்செலவைத் தாங்கினது. முதல் 6 மாச வரவு பின்னும் 3 மாசச் செலவுக்கு உதவினது அதன்பின் ஒரு சிநேகிதருடைய விசேஷித்த நன்கொடை முதலியவற்றால் பணக்குறைவின்றி இரண்டொரு மாசம் வேலை நடந்தது. என்றாலும் கடைசிக்கு முந்தின சில மாசங்களில் மற்றவகைப் பணங்களையே உபயோகிக்க நேரிட்டது. ஆதலால் தயவுசெய்து நமது நண்பர் யாவரும் ஏற்கனவே தங்கள் வருஷாந்த காணிக்கைகளை அனுப்பிவைத்தால் அதிக உதவியாயிருக்கும். பர்மா சிநேகிதர் அப்படியே செய்வதாய் எழுதியிருக்கிறார்கள். மாதாமாதம் அனுப்பும் முறையை சபைகள் கையாடினால் நமக்கு வரும் காணிக்கை லேசாய் அதிகரித்துவிடும்.

3. இந்த வருஷக் கையிருப்பைப் பார்ப்போம். கடந்த வருஷத்தைவிட 700 ரூபாய் அதிகமே. என்றாலும்இந்த வருஷம் கூடுமானால் டிசம்பர்மீ 29உ போல் (முதல் இந்திய அத்தியக்ஷர் பட்டாபிஷேக தினத்தன்று) நம்முடைய நன்றியைக் காட்டும் ஞாபகார்த்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடவேண்டாமா? அதற்குமுன் அஸ்திபாரம் போட்டாலும் நல்லது. அப்படியானால் ரூபாய் 2400 போல் அதற்குப் போய்விடும். கையிருப்பு ரொம்ப சொற்பமாகும். பணக்கஷ்டம் அதிகமிருக்கும். இதை உத்தேசித்தே மாதாந்தர செலவு இருப்புக்காக ரூபாய் 6000 (Working balance) தேவையென்று நம் கமிற்றிமார் தீர்மானித்ததைக் கொண்டுசெலுத்த முடியாதிருக்கிறோம் கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்வாராக.

4. நாளது வருஷ விசேஷித்த ஊழியமென்ன? ஞாபகார்த்த ஆலயம் கட்ட ஒழுங்கு செய்வதல்லவா? ரூபாய் 7500 இன்னும் தேவை. இதைக்குறித்துக் கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த சஞ்சிகையில் விஸ்தரித்து எழுதுவோம்.

## நன்கொடை சாமான் விற்பனை 1913.

கடந்த வருஷத்தில் நடந்ததுபோல் நாளது வருஷத்திலும் இந்திய மிஷனெரிசங்கத்திற்காக ஓர் நன்கொடை சாமான் விற்பனை (Fancy Sale) ஜூலைமீ 10உ வியாழக்கிழமை நடத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. சாதாரண சட்டைகள், பாவாடைகள், ரவிக்கைகள் பூத்தையல்கள், தைத்த கைலேஞ்சுகள், மேசைத் துப்பட்டிகள், கம்பிளி நூலினால் செய்யப்பட்டவைகள், ஞானஸ்நான உடுப்புகள், கிண்ணிப்பெட்டிகள், பாய்கள், விசிறிகள், நார்க்கயிறுகள், தோண்டிப்பட்டைகள், பழவர்க்கங்கள், கருப்புக்கட்டி, பலகாரமுதலிய தின்பண்டங்கள் முதலியன எளிதில் விலையாகக்கூடும். நண்பர் யாவரும் இதுவிஷயத்தில் உதவிசெய்யும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம். ஏற்கனவே தையல்வேலைகள், நூதன சாமான்கள் ஆயத்தம்பண்ணும்படி ஞாபகப்படுத்துகிறோம். இவ்விற்பனையின் வருமானத்தைக்கொண்டு பல வருஷங்களாக ஐந்து பிள்ளைகள் தோர்ணக்கல் போர்டிங் பள்ளிக்கூடத்தில் ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள். இம்முயற்சியின் சித்திக்காக ஜெபிக்கும்படி அன்பாய் அழைக்கிறோம்.

## ஜெப விஷயங்கள்.

1. தோர்ணக்கல் மிஷனில் சபை சுவிசேஷப் பிரசங்கத்திற்கு நாலு தமிழ் ஊழியர் தேவை. திருநெல்வேலி சபையில் செய்கிறவர்களில் திறமையான நால்வர் இவ்வூழியத்திற்குத் த[illegible]புக்கொடுக்கவும்;

2. தெலுங்கு கிறிஸ்தவர்களும் பழையக் கிறிஸ்தவர்களுனால் நிரப்பப்பட்டு, ஆரம்பமுதலே ஆத்துமாக்களை ஆதாயம் கிறிஸ்தவர்களாக விளங்கும்படியாகவும்;

3. போர்டிங், பயிற்சாலை, கைத்தொழிற்சாலை இவைகளில் பயடைந்து வருகிறவர்களுக்காகவும், இவர்களை ஆதரிக்கும் [illegible]களுக்காகவும்;

4. ஜூன்மீ 29உ உதவிக் குருபட்டாபிஷேகம் பெறப்படும் கனம்: தேவசகாயம் மிஷனெரி அவர்களுக்காகவும், மற்ற[illegible]னெரிமாருக்காகவும்;

5. தோர்ணக்கல் ஞாபகார்த்த ஆலயம் கட்டுவதற்கு வே[illegible] பொருளுதவி சீக்கிரம் கைகூடுவதற்காகவும்;

6. தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்திற்காகவும், மகாகனம் [illegible]யக்ஷரவர்களுக்காகவும்;

7. தெலுங்கு படித்துவரும் கனம் D. S. தாவீது ஐயரவர்களுக்காகவும் அவர்களுடன் ஊழியஞ்செய்யும் 'செங்கரேணி' ஊழியருக்காகவும், அவர்களால கர்த்தரை விசுவாசித்திருக்கும் ஜனங்களுக்காகவும் அவர்களுடைய சுவிசேஷ ஊழியங்களுக்காகவும்;

8. திருவாங்கூர் மலைகளில் மிஷன் ஸ்தானத்திற்காக ஏற்ப[illegible]யும் நிலம் கிடைக்கும்படியாகவும் அங்கு நடக்கும் பள்ளிக்கூட [illegible] சேஷப் பிரசங்க ஊழியங்களுக்காகவும், புதிய மிஷனர்களுக்காகவும்;

9. 'ஹோம் மிஷனரி' ஊழியத்தை அங்கீகரித்திருக்கும் கனம் [illegible] சவரிமுத்து ஐயரவர்களைக் கர்த்தர் இவ்வூழியத்திற்கென்று தமது ஆ[illegible]யினவரால் நிரப்பவும், அவர்கள் ஊழியத்தினால மிகுந்த ஆசீர்வாதம் உண்டாகவும்;

10. ஜூலைமீ 10உ வியாழன் நடக்கும் சங்கத்தின் வருஷாந்தக் கூட்டங்களுக்காகவும், அன்று நடைபெறும் நன்கொடை சாமான் விற்பனையில் நண்பர் யாவரும் உற்சாகங்கொள்ளவும்

ஜெபம்.

தனிப்பிரதிக்கு வருஷ சந்தா அணா 3. தபாற்கூலி உட்ப[illegible] அணா 6. ஒன்பது பிரதிகள் ½ அணா முத்திரையில் போகு[illegible]

சு. பி. வ. மானேஜர்: வி. எஸ் காலிசன்,
பாளையங்கோட்டை

Editor:—The Secretary, I. M. S

Printed at the C. M. S. Press, Palamcottah and Pu[illegible]
by the Indian Missionary Society of Tinnev[illegible]